தெய்வத்தின் குரல்
இரண்டாம் பாகம்

குழந்தை ஸ்வாமி 8
கிழவியும் குழவியும் 8
தமிழ் நாட்டின் சிறப்பு 14
உலகுக்கெல்லாம் சொந்தமானவர் 18
குரு நம்மை நாமாக்குகிறவர் 25
ஒரு ராஜா-ராணிக் கதை 25
குரு பரம்பரை 35
த்ராவிட விஷயம் 45
வேடனே ராஜா; ஜீவனே பிரம்மம் 51
குரு பக்தி 56
குருகுல வாஸம் 66
சரணாகதியே முக்கியம் 93
அத்வைதம் 100
அத்வைதம் 100
உலகம் எப்படிப் பொய்? 112
வேறு வேறாவது எப்படி? 122
வேதத்தின் முடிவும் சங்கரரின் முடிவும் ஒன்றே 126
சங்கர சம்பிரதாயம் 146
அத்வைதமோ த்வைதமோ? அதுவும் பராசக்தி வசமே! 194
மூன்றாவது வழி 215
வேத மதம் ஹிந்துமதத்தின் ஆதார நூல்கள் 233
நம் அறியாமை 233

மதம் எதற்கு 245
14 பிரமாண நூல்கள் 248
பழைய பெருமையும் இன்றைய அவநிலையும் 251
வேதம் 256
மதத்தின் மூலாதாரம் வேதமே 256
அநாதி – அபௌருஷேயம் 260
ஒலியும் படைப்பும் 274
வெள்ளையர் ஆராய்ச்சி; நல்லதும் கெட்டதும் 286
கால ஆராய்ச்சி சரியல்ல 289
அத்யயன முறைகள் 299
தெய்வ வாக்கு 305
வேதங்கள் அனந்தம் 306
மந்திர யோகமும் மந்திர ஸித்தியும் 312
ஒலியின் பயனும் பொருளின் பயனும் 316
வேதத்தின் மகிமை 320
யக்ஞம் 323
மற்ற மதங்களில் இல்லாதது 325
வேள்வியின் மூன்று பயன்கள் 329
தேவகுல – மனிதகுல பரஸ்பர சகாயம் 332
காரிய சக்தியும் காப்புச் சக்தியும் 340
தேவகாரியமும் பித்ரு காரியமும் 344
வேள்வியின் தாத்பரியம் 348
ஜீவஹிம்ஸை செய்யலாமா ? 349
முறை வேறாயினும் முடிவு ஒன்றே 358
கலியில் ஜீவபலி உண்டா ? 359
யாகம் செய்பவர்கள் 363
ரிக்-யஜுஸ்-ஸாமம்-அதர்வம் 368
பொதுவான பெருங் கருத்து 382
பிராம்மணம், ஆரண்யகம் 384
உபநிஷதங்கள் 386
பிரம்ம ஸூத்ரம் 392
வேதமும் வேதாந்தமும் முரணானவையா ? 396
தசோபநிஷத்துக்கள் 422

வேதங்களின் முக்கிய தாத்பரியம் என்ன ? 456
உபதேச ஸாரம் 488
வேதமும் தமிழ்நாடும் 495
வேத சாகை 534
பிராம்மணரல்லாதார் விஷயம் 536
சாகைகளின் பிரிவினையும் வழக்கில் உள்ளவையும் 540
பிராம்மணர் கடமை 555
வேத ரக்ஷணத் திட்டங்கள் 560
வேத பாஷ்யம் 567
என் கடமை 576
முடிவுரை 581
ஷடங்கங்கள் 588
ஷடங்கங்கள் 588
கல்வெட்டும் செப்பேடும் 589
ஆறு அங்கங்கள் 592
சிக்ஷை: வேதத்தின் மூக்கு 593
மூச்சு அவயவம் 593
விஞ்ஞான பூர்வமான யோகம் 596
மூல பாஷை ஸம்ஸ்கிருதமே 599
உச்சரிப்பு விதிகள் 602
பல மொழிகளின் லிபிகள் 606
எல்லா சப்தங்களும் உள்ள மொழி 620
சுதேச-விதேச மொழிகளும், லிபிகளும் 624
அக்ஷமாலை 627
உச்சரிப்பின் முக்யத்துவம் 628
சில சிறிய வித்யாஸங்கள் 630
வேத சப்தமும் பிரதேச மொழிச் சிறப்பும் 632
வேத உச்சரிப்பால் பிரதேச மொழி விசேஷமா? பிரதேச மொழியை வைத்து வேத உச்சரிப்பா ? 651
மாதப் பெயர்கள் 654
சீக்ஷா சாஸ்திரத்தின் மற்ற சிறப்புகள் 659
வியாகரணம் : வேதத்தின் வாய் 661
இலக்கணத்தின் பெருமை 661

வியாகரணமும் சிவபெருமானும் 663
இலக்கண நூல்கள் 681
வடமொழி வியாகரணமும் தமிழிலக்கணமும் 683
ஸம்ஸ்கிருதம் சர்வதேச மொழி 685
மொழி ஆராய்ச்சியும் சமய சாஸ்திரமும் 687
சந்தஸ் : வேதத்தின் பாதம் 692
செய்யுளிலக்கணம் 692
பாதம் – அடி – FOOT 695
கணக்கிடுவது எப்படி ? 697
காவிய சந்தம் பிறந்த கதை 699
சில சந்த வகைகள் 703
சந்தஸ் சாஸ்திரத்தின் உபயோகம் 707
வேதத்தின் பாதம், மந்திரத்தின் மூக்கு 709
நிருக்தம் : வேதத்தின் காது 711
ஜ்யோதிஷம் : வேதத்தின் கண் 714
கண் என்பது ஏன்? 714
வான சாஸ்திரமும் ஜோஸ்யமும் 717
புராதன கணித நூல்கள் 719
கிரஹமும், நக்ஷத்திரமும் 726
கிரஹங்களும் மனித வாழ்வும் 729
சகுனம், நிமித்தம் 731
புராதன நூல்களில் நவீனக் கண்டுபிடிப்புக்கள் 734
மூடநம்பிக்கையல்ல; ஆதார பூர்வமான உண்மைகளே ! 742
ப்ரத்யக்ஷ நிரூபணம் 754
கல்பம் : வேதத்தின் கை 755
மீமாம்ஸை : கர்ம மார்க்கம் 766
வேதத்தின் சட்ட விளக்கம் 766
கடவுட் கொள்கை இல்லை 772
பௌத்தத்தை வென்ற நியாமும் மீமாம்ஸையும் 777
பௌத்தமும் பாரத ஸமுதாயமும் 780
சங்கரரும் இதர ஸித்தாந்தங்களும் 784
ஸாங்கியம் 785
மீமாம்ஸையும் ஆதிசங்கரரும் 793

அர்த்த நிர்ணயம் எப்படி? 797
மீமாம்ஸைக் கொள்கைகள் 801
சங்கரர் தரும் பதில் 816
வேதாந்த மதங்களும் மீமாம்ஸையும் 820
பண்டிதருலகில் மீமாம்ஸையின் மதிப்பு 822
நியாயம் : யுக்தி சாஸ்திரம் 823
அநுமானம் முக்யமான பிரமாணம் 824
பதார்த்தம் 828
பிரமாணங்கள் 837
பகவானைக் காட்டவே பகுத்தறிவு 839
எல்லாவித அறிவும் வேண்டும் 842
தர்க்க சாஸ்திர நூல்கள் 843
உலகப் படைப்பின் காரணம் 845
சில கதைகளும் வாதங்களும் 849
புராணம் 856
வேதத்தின் பூதக் கண்ணாடி 856
புராணமும், சரித்திரமும் 857
புராணங்கள் பொய்யா, உருவகமா ? 862
கற்பனையேயானாலும் கருத்துள்ளதே ! 873
வியாஸர் தந்த செல்வம் 876
உப புராணங்களும் பிற புராணங்களும் 881
இதிஹாஸம் – புராணம் : பெயர் விவரம் 882
இதிஹாஸங்களின் பெருமை 884
தெய்வங்களுள் பேதம் ஏன் ? 886
ஒன்றே பலவாக 890
வழிகள் பல; குறிக்கோள் ஒன்றே 895
புராணத்தை போதித்தவர் 897
நண்பனாகப் பேசுவது 898
உபந்நியாஸமும் திரைப்படமும் 900
ஸ்தல புராணங்கள் 903
ஸ்தல புராணங்களின் ஸத்தியத்வம் 904
பல வரலாறுகளிடை தொடர்பு 910
ஸ்தலபுராணங்களின் சிறப்பு 926

காத்துத்தருவது நம் கடமை 928
சுவடிகள், நூலகங்கள் 929
தர்ம சாஸ்திரம் (ஸ்மிருதி) 936
புராண லக்ஷியத்துக்கு நடைமுறை வழி 936
ஸ்மிருதிகளும், துணை நூல்களும் 944
வைத்யநாத தீக்ஷிதீயம் 947
சுயச்சையும் கட்டுப்பாடும் 949
சின்னங்கள் 954
ஸ்மிருதிகள் சுதந்திர நூல்கள் அல்ல 956
வேதமே ஸ்மிருதிகளுக்கு அடிப்படை 959
ச்ருதி-ஸ்மிருதி;ச்ரௌதம்-ஸ்மார்த்தம் 966
ஸம்ஸ்காரம் 970
நாற்பது ஸம்ஸ்காரங்கள் 971
தேவலோகம் அல்லது ஆத்ம ஞானத்துக்கு வழி 971
மூன்றுவிதமான லோகங்கள் 975
ஸம்ஸ்காரம் என்பதன் பொருள் 979
அஷ்ட குணங்கள் 982
குணமும் காரியமும் 989
அக்னியின் முக்யத்வம் 993
ஸம்ஸ்காரங்களின் பெயர்கள் 995
பெற்றோர் செய்யும் ஸம்ஸ்காரங்கள் 998
சிலருக்கு ஏன் இல்லை? 1006
பிரம்மசரியம் 1008
பிரம்மசரிய ஆசிரமம் 1008
சாஸ்திர விதியும், பொது வழக்கும் 1014
மூலாதாரம் வீணாகக் கூடாது 1017
பிரம்மச்சாரியின் லக்ஷணம் 1019
நைஷ்டிக பிரம்மசரியம்;இல்லற வாழ்க்கை 1022
உபநயன காலம் 1029
உபநயன உதாரண புருஷர்கள் 1032
வயசு நிர்ணயத்துக்குக் காரணம் 1033
இயற்கையை மதிக்கும் இல்லறம் 1036
காயத்ரீ 1037

வேதியரின் தேகத்தூய்மை 1038
காயத்ரீ மந்திர மகிமை 1042
ஸந்தியாவந்தனத்தின் இதர அம்சங்கள் 1049
பெண்கள் விஷயம் என்ன? 1055
பெண்களின் உயர்ந்த ஸ்தானம் 1058
விவாஹம் 1060
தர்மத்துக்காகவே ஏற்பட்டது 1060
குடும்பக் கட்டுப்பாடும் பெண் தொகைப் பெருக்கமும் 1066
விவாஹமே பெண்டிருக்கு உபநயனம் 1068
விவாஹ வயதும் சட்டமும் 1071
விவாஹ வயது குறித்த விவாதம் 1073
எட்டு வித விவாஹங்கள் 1078
ஏன் பாலிய விவாஹம்? 1090
நாம் இப்போதே செய்ய வேண்டியது 1098
விவாஹத்தில் எளிமை 1099
தாய்குலத்தின் பெருமை 1100
மணப்பிள்ளையின் கடமை 1103
மடத்தில் செய்துள்ள ஏற்பாடு 1104
வாஸ்தவமான சீர்திருத்தம் 1107
பெண்கள் உத்தியோகம் பார்ப்பது 1108
எடுத்துச் சொல்லிப் பயனுண்டா? 1114
செலவில் சாஸ்திரோக்தம் 1118
உற்றமும் சுற்றமும் செய்யவேண்டியது 1123
சிக்கனத்துக்கு மூன்று உபாயம் 1123
விவாஹத்தின் உத்தேசங்கள் 1125
கிருஹஸ்தாச்ரமம் (இல்லறம்) 1127
இல்லறத்தான்; இல்லாள் 1127
ஔபாஸனம் 1130
புது பிராம்மண ஜாதி உண்டாக்கலாமா? 1131
ஸ்திரீகளின் ஒரே வைதிகச் சொத்து 1141
அக்னியின் சிறப்பு 1144
அக்னி காரியங்கள் 1144
மற்ற ஸம்ஸ்காரங்கள் 1160

உடன்கட்டை ஏறுதல் 1161
ஸம்ஸ்கார லக்ஷியம் 1165
அந்தணனின் அன்றாடம் 1168
வித்யாஸ்தானம்: முடிவுரை 1173
உபவேதங்கள் 1173
சுதேசம்-விதேசம்; பழசு-புதிசு 1177
பிறகு போகவே முதலில் வேண்டும் 1180
ஜாதிமுறை 1186
நவீனர்களின் கருத்து 1186
வேதம், கீதை இவற்றின் கருத்து 1189
பிறப்பாலேயே குணமும் தொழிலும் 1193
குணப்படித் தொழில் தேர்வு நடைமுறையில் இல்லை 1196
அதிக ஸௌகர்யம் கூடாது 1200
ஒரு பெரிய தப்பபிப்ராயம் 1202
ஸம வாய்ப்பு விஷயம் 1206
ஐக்கிய சக்தி 1207
பிற மதங்களில் 1209
ஹிந்து மதத்தின் சிரஞ்சீவித்வம் 1210
சலுகை இல்லை 1212
அனைத்தும் அனைவர் பொருட்டுமே! 1215
நாலாம் வர்ணத்தவரின் அநுகூல நிலை 1217
மரியாதைக் குறைவல்ல;அஹம்பாவ நீக்கமே! 1218
நான் சொல்வதன் நோக்கம் 1222
ஸர்வரோக நிவாரணி 1224
ஒழியணும் மறைந்து வளரணும் வளரட்டும்! 1226
மங்களாரத்தி 1228
முதலுக்கு முதல் : முடிவுக்கு முடிவு. 1228

குழந்தை ஸ்வாமி

கிழவியும் குழவியும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

மங்களாரம்பம்

குழந்தை ஸ்வாமி

கிழவியும் குழவியும்

கிழப் பாட்டி ஒருத்தி. பாட்டி என்றால் காலை நீட்டிக் கொண்டு இருந்த இடத்திலேயே கிடப்பவள். ஆனால் இந்தப் பாட்டி அப்படி இல்லை. இவள் நின்ற இடத்தில் நிற்காமல் இந்தத் தமிழ்நாடு முழுக்கச் சுற்றிக்கொண்டே இருந்தாள் ஒரு குக்கிராமம் பாக்கியில்லாமல் ஊர் ஊராக, தெருத் தெருவாக ஓடிக்கொண்டேயிருந்தாள். அந்தப் பாட்டிக்கு அப்படி ஒரு உற்சாக சக்தி இருந்தது. பாட்டி விஷயம் இப்படி இருக்கட்டும்.

குழந்தை ஒன்று. 'கஷுக் முஷுக்' என்று நல்ல ஆரோக்கியமாக இருக்கிற குழந்தை அது. குழந்தை என்றால் பொதுவாக என்ன பண்ணும்? துள்ளி விளையாடும். ஒரு க்ஷணம்கூட இருந்த இடத்தில் இருக்காமல் 'துரு துரு' என்று ஓடிக்கொண்டேயிருக்கும். ஆனால் இந்தக் குழந்தை இதற்கு நேர்மாறுதல். உட்கார்ந்த இடத்தைவிட்டு அது அசைவதில்லை.

வேடிக்கையான பாட்டி. வேடிக்கையான குழந்தை! குழந்தை மாதிரி பாட்டி ஓடிக் கொண்டிருக்கிறாள். பாட்டி மாதிரி குழந்தை இருந்த இடத்தைவிட்டு நகராமல் உட்கார்ந்திருக்கிறது.

ஆனால் அந்தப் பாட்டி தள்ளாத வ்யசிலும் அத்தனை உற்காசத்தோடு ஓடி ஆடிக் கொண்டிருந்ததற்கு இந்த்க்

குழந்தைதான் காரணம். இந்தக் குழந்தை கொடுத்த சக்தியினால்தான் அவள் அவ்வளவு காரியம் செய்தாள்.

இந்தப் பிள்ளை யார்?

"பிள்ளை" என்றாலே அவர்தான். மரியாதையாகப் "பிள்ளையார்" என்கிறோமே, அவர்தான் அந்தக் குழந்தை. யாராவது ஒருத்தர் இடத்தைவிட்டு நகராமல் இருந்தால் 'கல்லுப் பிள்ளையார் மாதிரி" என்று சொல்வது வழக்கம்!சகல உலகங்களுக்கும் தாய் தந்தையான பார்வதி பரமேச்வரர்களின் மூத்த பிள்ளை அவர். அதனால்தான் தமிழ் நாட்டில் அவரைப் "பிள்ளையார்" என்று சொல்கிறோம்.மற்ற இடங்களில் இவரை கணேஷ் (கணேசர்), கணபதி என்பார்கள். சிவபெருமானின் படைகளுக்கு ஈசர், பதி. அதனால் கணேசர், கணபதி என்று பெயர். இவருக்கு மேலே தலைவர் யாரும் கிடையாது. எல்லாவற்றுக்கும் முந்தியவராக, முதல்வராக, மேலாக இருப்பவர் அவர். அவருக்கு மேலே இன்னொரு தலைவர் (நாயகர்) இல்லை. அதனால் 'வினாயகர்' என்றும் பெயர்.'வி' என்பது சில சமயங்களில் ஒன்றை உயர்த்தி காட்டுவதற்கும் சில சமயங்களில் ஒன்றுக்கு எதிர்மறையானதைக் (opposit) குறிப்பிடவும் வார்த்தைக்கு முதலில் வரும். இங்கே "நாயகன் இல்லதவர்" என்று எதிர்மறையாக வருகிறது. தமக்குமேல் ஒரு நாயகன் இல்லாதவர் என்று அர்த்தம்.

அவர் செய்யாத அநுக்கிரஹம் இல்லை. குறிப்பாக, நமக்கு வருகிற விக்கினங்களை எல்லாம் அழிக்கிறவர் அவர்தான். ஆகையால் 'விக்நேஸ்வரர்' என்றும் அவரை சொல்கிறோம்.

எந்த காரியத்துக்கும் தடை வராமல் இருப்பதற்காகவே முதலில் இவரை பிரார்த்திர்க்கிறோம். முதல் பூஜை இவருக்குத்தான்.

கஜமுகன், கஜராஜன் இப்படி எல்லாம் அவ்ருக்கு பெயர் இருக்கிறது. யானை முகத்தோடு அவர் விளங்குவதால் இந்தப் பெயர்கள் வந்திருக்கின்றன.

யானைக்கு தேகபலம் மிகவும் அதிகம். ஆனாலும் அது சிங்கம், புலி போல் மற்ற பிராணிகளை ஹிம்சிப்பதில்லை. பர்மா, மலையாளம் மாதிரி இடங்களில் ஜனங்களுக்காக யானைகள் தான் பெரிய பெரிய காரியங்களை செய்கின்றன. பிள்ளையாரும் இப்படிததான் ரொம்ப சக்திவாய்ந்தவர்; ஆனாலும் அதைக் காட்டி கெடுதல் செய்யாமல் நமக்கெல்லாம் நன்மையே செய்துகொண்டிருப்பார். யானைக்கு புத்திகூர்மை ஞாபகசக்தி எல்லாம் மிகஅதிகம். பிள்ளையார் அறிவே வடிவானவர்.

யானை என்ன செய்தாலும் அழகாயிருக்கிறது. அது அசக்கி அசக்கி நடப்பது, சாப்பிடுவது, காதை ஆட்டுவது, தும்பிக்கையைத் தூக்குவது எல்லாம் பார்க்க ஆனந்தமாயிருக்கிறது. அதன் முகத்தைப் பார்த்தாலே பரமசந்தோஷமாக இருக்கிறது. சின்ன கண்களானலும், அமைதியாக, அன்பாக இருக்கின்றன. மிருகவர்க்கத்தில் நாம் பார்த்துக்கொண்டேயிருப்பது யானையைத்தான்.

மனிதவர்க்கத்தில் குழந்தை என்றால் அதைப் பார்க்துக்கொண்டே இருக்க வேண்டும் போல் தோன்றுகிறது. கெட்ட எண்ணமே இல்லாது குழந்தை.

ஆனந்தமாக விளையாடிக்கொண்டு இருப்பது குழந்தை. அதைப்பார்த்தாலே நமக்கு சந்தோஷமாக இருக்கிறது.

பிள்ளையார் யானைக்கு யானை; குழந்தைக்கு குழந்தை. அதனால் அவரை எத்தனைப் பார்த்தாலும் போதும் என்ற திருப்தி உண்டாவதில்லை. கள்ளம் கபடம் இல்லாத குழந்தை மன்சு அவருக்கு. குழந்தை போல் நல்ல உள்ளம்; யானைமாதிரி தேக பலம், புத்திகூர்மை; எல்லாவற்றுக்கும் மேலாக தெவிட்டாத அழகு; ஆனந்தம் பொங்கிக்கொண்டிருக்கின்ற ரூப்ம்.

சேராததெல்லாம் அவரிடம் ஸ்வபாகமாக சேருகிறது. கழுத்துக்கு கீழே குழந்தை; மனிதவர்க்கம். மேலே முகம் யானை; மிருகவர்க்கம். ஆனால், அவர் வாஸ்த்தவத்தில் தேவவர்க்கம். தேவர்களுக்குள் முதல் பூஜை பெறும் தெய்வமாக இருக்கிறார்.

குழந்தையாக இருந்துகொண்டே மஹா பெரிய தத்வங்களுக்கு ரூபமாக (Personification) இருக்கிற பிள்ளையாரிடம் பல தினுசான மாறுபாடுகள் (Contrasts). இதிலே ஓர் அழகு. வித்தியாசமானதெல்லாம் அவரிடம் சேர்ந்திருப்பதாலேயே அவரிடம் எல்லாம் ஐக்கியம் என்றாகிறது. உதாரணமாக, ஒரு கையில் ஒடிந்த தந்தம் என்றால், இன்னொரு கையிலே கொழுக்கட்டை வைத்திருக்கிறார். அதற்குள் தித்திப்பாக இருக்கின்ற வஸ்துக்கு பெயர் பூரணம். பூரணம் என்றால் முழுமை. ஒரு கையில் இருக்கின்ற தந்தம் மூளி. இன்னொன்றிலோ முழுமை. எல்லாம் நிறைந்த பூரண பொருள் பிள்ளையாரேதான். இதை அறிந்துகொள்வதுதான்

பேரானந்தம். ஆனந்தத்திற்கு இன்னொரு பேர் மோதம், மோதகம். கொழுக்கட்டைக்கும் மோதகம் என்றே பெயர்.

இன்னொரு மாறுபாடு: பிள்ளையார் குழந்தை. அதனால் பிரம்மச்சாரி. ஆனால் இவர் யானையாக வந்து வள்ளியை விரட்டியதால்தான் அவள் சுப்பிரமண்ய ஸ்வாமியை கல்யாணம் செய்துகொண்டாள். இன்றைக்கும் கல்யாணம் ஆகவேண்டுமானால் இந்த கட்டை பிரம்மச்சாரியை வேண்டிக்கொள்கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்? அவர் இருக்கிற நிலையில் அவருக்கு வேண்டாததையெல்லாம் கூட அவர் நிலைக்கு மாறாக இருக்கின்ற நமக்கு பரம கருணையோடு கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாக தூக்கிவிடுக்கிறார்.

'கல்லுப் பிள்ளையார்' என்பதற்கேற்பத் தாம் உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையாமலே இருந்தாலும் பக்தர்களை ஒரே தூக்காக தூக்கி உச்சத்தில் சேர்த்து விடுவார். அவ்வையாரை இப்படிததான் கடைசியில், தாம் இருக்கிற இடத்தில் இருந்தே தும்பிக்கையால் ஒரு தூக்கு தூக்கி கைலாசத்திலேயே கொண்டு சேர்த்து விட்டார்!

பிள்ளையாரைப் பார்க்கப் பார்க்க நமக்கு மேலே மேலே இப்படி பல தத்துவம் தோன்றுகிறது. இதுவும் நம் அறிவின் அளவிற்கு எவ்வளவு எட்டுகிறதோ அவ்வளவுதான். வாஸ்த்தவத்தில் நமக்கு தெரிவதற்க்கும் அதிகமாக, அவரிடம் பெருமைகள் அளவிட முடியாமல் இருக்கின்றன.

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்பார்கள். தெய்வமே குழந்தையாக வந்துவிட்டது

பிள்ளையாரில். அதனால் குழந்தை ஸ்வாமியாக கொண்டடுகிற தமிழ்நாட்டில், ஒரு மூலை முடுக்கு பாக்கியில்லாமல் எங்கு பார்த்தாலும் உட்கார்ந்து கொண்டு அநுக்கிரஹம் பண்ணிக்கொண்டிருக்கிறார்.

அவர் செய்த அநுக்கிரஹத்தினால்தான் அந்தப் பாட்டி ஓடிக்கொண்டிருந்தாள்.

அந்தப் பாட்டி யார் என்றால் அவள்தான் அவ்வையார்.
தமிழ் நாட்டின் சிறப்பு

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

குழந்தை ஸ்வாமி

தமிழ் நாட்டின் சிறப்பு

அவ்வையாரைவிடத் தமிழ் நாட்டுக்கு உபகாரம் செய்தவர் இல்லை. ஆயிரம் காலமாக இந்தத் தேசத்தில் ஒழுக்கமும் பக்தியும் இருந்து வந்திருக்கிறதென்றால் அது முக்கியமாக அவ்வையாரால்தான்.

முளைக்கிறபோதே, குழந்தைகளாக இருக்கிறபோதே, நல்ல ஒழுக்கத்தையும், பக்தியையும், உண்டாக்கி விட்டால்தான் பிறகு அவை நிலைத்து நிற்கும். தமிழ் நாட்டில் எத்தனையோ ம்காகவிகள், பக்தர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பாடியது முக்கியமாகப் பெரியவர்களுக்குத்தான். அவ்வையாருக்கு அவர்களைவிடக் கவிதா சக்தியோ, பக்தியோ குறைச்சல் இல்லை. அவள் ரொம்பப் பெரியவள; ஞானி; யோக சாஸ்திரத்தில் கரை கண்டவள். ஆனாலும் அவள்

குழந்தைகளை நல்லவர்களாக்க வேண்டும் என்பதில் முக்கியமாகக் கவனம் வைத்து, அவர்களுக்கு நல்ல குணங்களையும் போதனை செய்து பாடினாள்.

பேரக் குழந்தைகள் நன்றாக இருக்க வேண்டுமே என்ற கரிசனத்தோடு ஒரு பாட்டி நல்லது சொல்வது மாதிரி அவ்வைப் பாட்டி அத்தனை தமிழ்க் குழந்தைகளுக்கும் உபதேசம் செய்தாள். அவளுடைய அன்பின் விசேஷத்தால் அவளுக்கப்புறம் எத்தனையோ தலைமுறைகள் ஆனபிறகு, இப்போதும் நாம் குழந்தையாகப் படிக்க ஆரம்பிக்கிற போதே, அவளுடைய 'ஆத்திச்சூடி'தான் முதலில் வருகிறது.

முதல் பூஜை பிள்ளையாருக்கு; முதல் படிப்பு அவ்வையார் பாடல்.

இத்தனை ஆயிரம் வருஷங்களாக அவளுடைய வார்த்தை எப்படி அழியாமல் தொடர்ந்து வருகிறது என்றால் அதற்குக் காரணம் அவளுடைய வாக்கின் சக்திதான். பரம சத்தியமான ஒன்றை, நிறைந்த அன்போடு சொல்லிவிட்டால், அப்படிப்பட்ட சொல் ஆயிரம் காலமானாலும் அழியாமல் நிற்கிறது. அவ்வை இப்படி அன்போடு உண்மைகளை உபதேசித்தாள். நம்மில் கம்பர், புகழேந்தி, இளங்கோ போன்ற கவிகளைப் படிக்காதவர்கள் இருக்கலாம். ஆனால் அவ்வை வாக்கு ஒன்றாவது தெரியாதவர் இருக்க முடியாது.

அவ்வையாருக்கு இத்தனை வாக்கு சக்தி எங்கேயிருந்து வந்தது? வாக்குச் சக்தி மட்டும் இல்லை; அவளுக்கு ரொம்ப தேக சக்தியும் இருந்திருக்கிறது. அதனால்தான் 'ஐயோ, தமிழ்க் குழந்தை ஒன்றுக்குக்கூட நம் வாக்கு

கிடைக்காமல் போகக் கூடாதே! ஒவ்வொரு குழந்தைக்கும் நாம் இந்த உபதேசங்களைக் கொடுக்க வேண்டுமே!' என்ற பரிவோடு அந்தப் பாட்டி ஒரு கிராமம் மிச்சம் இல்லாமல் ஓடி ஓடிப் போய் குழந்தைககளைத் தேடி தேடி அவர்களுக்குத் தன் நூல்களைப் பரிந்து பரிந்து போதித்தாள். இந்த தேக சக்தி அவளுக்கு எப்படி வந்தது? பிள்ளையார்தான் அவளுக்கு இந்தச் சக்திகளையெல்லாம் கொடுத்தார்.

அவ்வையார் பெரிய பிள்ளையார் பக்தை. அந்தக் குழந்தை ஸ்வாமியை வேண்டிக் கொண்டுதான் அவள் சின்ன வயசிலேயே கிழவியாகிவிட்டாள். ஏன் அப்படிச் செய்தாள்? வாலிபமாகவும், நடுத்தர வயதாகவும் இருந்தால் ஒருத்தனைக் கல்யாணம் செய்து கொண்டு குடித்தனம் நடத்த வேண்டியிருக்கும். பக்திக்குக் குடும்ப வாழ்க்கை இடையூறு என்பதாலேயே, இடையூறுகளை எல்லாம் போக்கும் விக்நேச்வரரை வேண்டிக்கொண்டு கிழவியாகிவிட்டாள்.

ஸுப்ரம்மண்ய ஸ்வாமிக்குக் கல்யாணமாக ஸ்ஹாயம் பண்ணின பிள்ளையார் இவளைக் கல்யாணமேயில்லாத பாட்டி ஆக்கினார்! யாருக்கு எதைத் தரவேண்டுமோ அதைத் தருவார். இவளைச் சிறு பிராயத்திலேயே கிழவியாக்கிவிட்டார். ஆனால் அவர் குழந்தை ஸ்வாமி அல்லவா? அதனால், இவள் தன்னிடம் மட்டும் எப்போது பார்த்தாலும் பக்தியாக இருந்தால் போதாது, இவளால் எல்லக் குழந்தைகளும் நன்மை பெற வேண்டும் என்று நினைத்தார். ஒரு சின்னக் குடும்பம் வேண்டாம் என்று கிழவி ஆனவளை, அத்தனை குழந்தைகளையும் கொண்ட

பெரிய தமிழ் நாட்டுக் குடும்பத்துக்கே உபதேசம் செய்கிற பாட்டியாக்கிவிட்டார்!

அவளும் ஸந்தோஷமாக அந்தக் காரியத்தைச் செய்தாள். மாறி மாறி பிள்ளையாரைத் தியானித்துப் பூஜிப்பதும், குழந்தைகளுக்கெல்லாம் உபதேசம் பண்ணுவதுமாகத் தன் வாழ்க்கையைக் கழித்தாள்.

அந்தப் பாட்டி அன்றைக்குச் சுற்றினாள். இன்றைக்கு நானும் எத்தனையோ சுற்றியிருக்கிறேன். அவள் தமிழ் நாடு மட்டும் சுற்றினாள். நான் இன்னும் மலையாளம், தெலுங்குதேசம், பெங்கால், ஹிந்துஸ்தானி தேசம் என்று பல இடங்கள் சுற்றியிருக்கிறேன். அங்கெல்லாம் நான் பார்க்காமல் இந்த தமிழ் நாட்டில் மட்டும் பார்க்கும் விசேஷம் என்னவென்றால், தமிழ்நாடு ஒன்றிலேயே இப்படிச் சந்து பொந்து, மரத்தடி, ஆற்றங்கரை எங்கே பார்த்தாலும் ஒரு பிள்ளையார் உட்கார்ந்திருப்பதுதான்! தமிழ் நாட்டைவிட்டுக் கொஞ்சம் தாண்டிப் போனால்கூட இப்படிக் காணோம்!

பிள்ளையார் தமக்குப் பெரிசாக ராஜகோபுரம், பிராகாரம் கட்டிக் கோயில் எழுப்பவேண்டும் என்று நினைக்கவில்லை. சின்னதாக ஒரு சந்நிதி வைத்துவிட்டாலும் அவருக்குத் திருப்திதான்! தகரக் கொட்டகை போட்டால்கூட அவருக்குத் திருப்திதான். அதுகூட வேண்டாம். ஒரு கட்டிடமும் கூரையும் இல்லாமல் வானம் பார்க்க அரசமரத்தடியில் அவர்பாட்டுக்கு அமர்ந்து அநுக்கிரஹம் பண்ணிக்கொண்டிருப்பார். ஆற்றாங்கரையில் எங்கே

பார்த்தாலும் நன்றாக உட்கார்ந்து கொண்டு ஆனந்தமாக இருப்பார்.

இந்தத் தமிழ்த் தேசத்தில் மட்டும் ஏன் இந்த விசேஷம் என்று கேட்டால், அவ்வையாருடைய விசேஷம்தான் இது என்று தோன்றுகிறது. அவள் தமிழ் நாட்டில் ஓடாத இடமில்லை அல்லவா? அவள் போன இடத்திலெல்லாம் அவளுடைய இஷ்ட தெய்வமான பிள்ளையாரும் வந்து உட்கார்ந்து கொண்டு விட்டார்!

தமிழ் நாட்டின் சிறப்புக்கள் என்று புஸ்தகங்களில் எத்தனையோ விஷயங்கள் போடுகிறார்கள். ஆனால் எனக்குத் தெரிகிற பெரிய சிறப்பு இங்கே எங்கு பார்த்தாலும் பிள்ளையார் கோயில் கொண்டிருக்கிறதுதான்.
உலகுக்கெல்லாம் சொந்தமானவர்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

குழந்தை ஸ்வாமி

உலகுக்கெல்லாம் சொந்தமானவர்

பிள்ளையார் ஏழை எளியவர்களுக்கெல்லாம் ஸ்வாமி. மஞ்சள் பொடியிலும், களிமண்ணிலும், சாணியிலும் கூட எவரும் ஒரு பிள்ளையாரைப் பிடித்து பூஜை செய்துவிடலாம். அவர் எளிதில் ஸந்தோஷப்படுகிறவர். எங்கே, எப்படி, எதில் கூப்பிட்டாலும் உடனே வந்து அந்தக் கல்லோ, களிமண்ணோ அதற்குள்ளிருந்துகொண்டு அருள் செய்வார். அவரை வழிபட நிறைய சாஸ்திரம் படிக்கவேண்டும் என்பதில்லை. ஒன்றும்

படிக்காதவனுக்கும், அவன் கூப்பிட்ட குரலுக்கு வந்துவிடுவார்.

'மற்ற தேவதா விக்கிரஹங்களில் ஸாங்கோபாங்கமாகப் பிராணப் பிரதிஷ்டை என்று பண்ணி, அவற்றில் அந்தந்த தேவதைகளின் ஜீவ கலையை உண்டாகுவது போல் பிள்ளையாருக்குப் பண்ணவேண்டுமெனபதில்லை. பாவித்த மாத்திரத்தில் எந்த மூர்த்தியிலும் அவர் வந்துவிடுகிறார்'. என்று சொல்வதுண்டு.

மற்ற ஸ்வாமிகளைத் தரிசனம் செய்வது என்றால், நாம் அதற்காக ஒரு காலம் பார்து, குளித்து முழுகி, அர்ச்சனை சாமன்கள் வாங்கிக் கொண்டு கோயிலுக்குப் போக வேண்டியிருக்கிறது. கோயிலுக்குப் போனாலும் நேரே அந்த ஸ்வாமியிடம் போய்விட முடியாது. பிராகாரம் சுற்றிக்கொண்டு உள்ளே போகவேண்டும். அப்பொதும் கூட ஸ்வாமிக்கு ரொம்பப் பக்கத்தில் போகக் கூடாது. கொஞ்சம் தள்ளித்தான் நிற்க வேண்டும். பிள்ளையார் இப்படி இல்லை. எந்த சமயமானாலும் சரி, நாம் ஆபீஸுக்கோ, ஸ்கூலுக்கோ, கடைக்கோ போய் வருகிறபோதுகூட, தெருவிலே தற்செயலாகத் தலையைத் தூக்கினால், அங்கே ஒரு முக்கில் பிள்ளையார் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்! அவரைப் பார்த்தமாத்திரத்தில் நாமாக நெற்றியில் குட்டிக் கொண்டு ஒரு தோப்புக்கரணம் போட்டுவிட்டு நடையைக் கட்டுகிறோம். இதிலேயே நமக்குச் சொல்லத் தெரியாத ஒரு நிம்மதி, ஸந்தோஷம் உண்டாகிறது.

அவருக்குக் கோயில் என்று இருப்பதே ஒரு அறைதான். அதனால் ஒரு பேதமும் இல்லாமல் யாரும் கிட்டே போய்த் தரிசிக்க முடிகிறது. எல்லோருக்கும் அவர் ஸ்வாதீனம்! பிராகாரங்கள் எல்லாம் தாண்டி உள்ளூக்குள்ளே உட்கார்ந்திருக்கிற ஸ்வாமிகளைவிட, இப்படி எங்கே பார்த்தாலும் நட்ட நடுவில் உட்கார்ந்திருக்கிற பிள்ளையார்தான் தப்பாமல் ஜனங்களை இழுத்து தோப்புக் கரணம் வாங்கிக் கொண்டுவிடுகிறார்!

பிள்ளையார் வழிபாடுக்கென்றே சில அம்சங்கள் இருக்கின்றன. சிதறு தேங்காய் போடுவது, நெற்றியில் குட்டிக்கொள்வது, தோப்புக் கரணம் போடுவது ஆகியவை பிள்ளையார் ஒருவருக்கே உரியவை.

பிள்ளையார் சந்நிதியில், இரண்டு கைகளையும் மறித்து நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ளவேண்டும். இப்படியே இரண்டு கைகளையும் மறித்துக் காதுகளைப் பிடித்துக்கொண்டு, முட்டிக்கால் தரையில் படுகிற மாதிரி தோப்புக்கரணம் போடவேண்டும். இவை எதற்கு என்றால்:

யோக சாஸ்திரம் என்று ஒன்று இருக்கிறது. அதிலே நம் நாடிகளில் ஏற்படுகிற சலனங்களால் எப்படி மனஸையும் நல்லதாக மாற்றிக்கொள்ளலாம் என்று வழி சொல்லியிருக்கிறது. நம் உடம்மைப் பல தினுசாக வளைத்துச் செய்கிற அப்பியாஸங்களால், சுவாஸத்தின் கதியில் உண்டாக்கிக்கொள்கிற மாறுதல்களால் நம் உள்ளம் உயர்வதற்கான வழி அந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நெற்றிப்பொட்டில் குட்டிக் கொள்வது, தோப்புக்கரணம் போடுவது இவற்றால் நம்

நாடிகளின் சலனம் மாறும்; மனஸில் தெய்விகமான மாறுதல்கள் உண்டாகும். நம்பிக்கையோடு செய்தால் பலன் தெரியும்.

குழந்தைகளுக்காக நீதி நூல்களைச் செய்த அவ்வையார் பெரியவர்களுக்குக்கூட எளிதில் புரியாத பெரிய யோக தத்துவங்களை வைத்துப் பிள்ளயார் மேலேயே ஒரு ஸ்தோத்திரம் செய்திருக்கிறாள். அதற்கு "விநாயகர் அகவல்" என்று பெயர். அளவில் சின்னதுதான் அந்த அகவல் ஸ்தோத்திரம்.

பிள்ளையாரை நினைக்கிறபோது அவ்வையாரையும் நாம் சேர்த்து நினைத்தால் இரட்டிப்பு அநுக்கிரஹம் கிடைக்கும். 'விநாயகர் அகவலை'ச் சொன்னால் இரண்டு பேரையும் ஒரே சமத்தில் நினைத்ததாகும். எல்லோரும் இதைச் செய்யவேண்டும். வெள்ளிக்கிழமைதோறும் பக்கத்திலுள்ள பிள்ளையார் கோயிலுக்குப் போய் "விநாயகர் அகவல்" சொல்லி விக்நேச்வரனுக்கு அர்ப்பணம் பண்ணவேண்டும்.

பிள்ளையாருக்கு எல்லோரும் சொந்தம்; பிள்ளையார் எல்லோருக்கும் சொந்தம். ஏழை எளியவருக்கும், சாஸ்திரம் படிக்காத சாமானிய ஜனங்களுக்கும்கூடச் சொந்தம். மற்ற ஸ்வாமிகளின் நைவேத்திய விநியோகத்தில் பெரிய மநுஷ்யர்களுக்குத்தான் முதலிடம். பிள்ளையாரோ தமக்குப் போடுகிற சிதறுகாய் எவர்களுக்குப் போகாமல் ஏழைக் குழந்தைகளுக்கே போகும்படியாக வைத்துக் கொண்டிருக்கிறார்! எல்லோரும் "அகவல்" சொல்லி அவரை வழிபட வேண்டும். பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் இதில் அதிக உரிமை

உண்டு. அவ்வை பெண்ணாகப் பிறந்ததால், பெண்கள் எல்லோருக்கும் அவளுடைய இந்த ஸ்தோத்திரத்தில் பாத்தியதை ஜாஸ்தி. அவள் குழந்தைகளுக்கு உபதேசித்த பாட்டி. விநாயகரும் குழந்தை தெய்வம் அதனால் அவளுடைய அகவலைக் குழந்தைகள் யாவரும் அவர்முன் பாடி ஸமர்ப்பிக்கவேண்டும். கொஞ்சம் 'கடமுட' என்றிருக்கிறதே, அர்த்தம் புரியவில்லையே என்று பார்க்க வேண்டாம். அர்த்தம் புரிந்தாலும், புரியாவிட்டாலும் 'அவ்வையின் வாக்குக்கே நன்மை செய்கிற சக்தி உண்டு' என்று நம்பி அகவலைப் பொட்டை நெட்டுருப் போட்டுச் சொன்னாலும் போதும்; அதனால் நாமும் க்ஷேமம் அடைவோம். நாடும் க்ஷேமம் அடையும்.

அழகான பெட்டி ஒன்று கிடைக்கிறது. அதற்குள் நிறைய ரத்தினங்கள் இருக்கின்றன. ஆனாலும் பெட்டியைத் திறக்கச் சாவியைக் காணோம். அதனால் பெட்டி வேண்டாம் என்று விட்டு விடுவோமா? "சாவி கிடைக்கிறபோது கிடைக்கட்டும்" என்று பெட்டியை வைத்துக் லொள்வோம் அல்லவா? இப்போது பெட்டியை விட்டுவிட்டால் பிறகு சாவி கிடைத்தாலும் பிரயோஜனமில்லையே? "விநாயகர் அகவல்" அப்படிப்பட்ட அழகான பெட்டி. அதற்குள்ளே யோக சாஸ்திர விஷயங்கள் ரத்தினம் மாதிரி உள்ளன. அவற்றைப் புரிந்துகொள்கிற புத்தி (சாவி) இப்போது நம்மிடம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. இப்போதே பிடித்து அதச் சொல்லிக்கொண்டிருப்போம். சொல்லச் சொல்ல, தானே அர்த்தமும் புரிய ஆரம்பிக்கும். பிள்ளையாரே அது புரிவதற்கான அநுக்கிரஹத்தைச் செய்வார்.

பிள்ளையார் எல்லாருக்கும் நல்லவர்; எல்லாருக்கும் வேண்டியவர்; சொந்தம். சிவ சம்பந்தமான லிங்கம், அம்பாள், முருகன் முதலிய விக்கிரஹங்களைப் பெருமாள் கோயிலில் பார்க்க முடியாது. ஆனால், பிள்ளயாரும் சிவ குடும்பத்தைதான் சேர்ந்தவர் என்றாலும், விஷ்ணு ஆலயங்களில்கூடப் பிள்ளையார் மட்டும் இருப்பார். 'தும்பிக்கை ஆழ்வார்' என்று அவருக்குப் பெயர் சொல்லுவார்கள்.மத்ச்சண்டைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் அவர்.

அதனால்தான் புத்தமதம், ஜைனமதம் எல்லாவற்றிலும்கூட அவரை வழிபடுகிறார்கள். தமிழ் நாட்டிலிருப்பதுபோல் மற்ற ராஜ்யங்களில் தடுக்கி விழுந்த இடமெல்லம் விநாயகர் இல்லவிட்டாலுங்கூட, பாரத தேசத்திலுள்ள அத்தனை ஸ்தலங்களிலும் ஓரித்திலாவது அவர் இருப்பார். "கன்னியாகுமரியிலும் பிள்ளையார்; ஹிமயத்தின் கோடியில் கேதாரத்திலும் ஒரு பிள்ளையார்" என்று ஒரு கணபதி பக்தர் என்னிடம் பெருமைப்பட்டுக் கொண்டார்.

நம் தேசத்தில் மட்டும்தான் என்றில்லை. ஜப்பானிலிருந்து மெக்ஸிகோ வர உலகத்தின் எல்லத் தேசங்களிலும் விநாயகர் விக்கிரஹம் அகப்படுகிறது! லோகம் பூராவும் உள்ள ஸகல நாடுகளிலும் அவரப் பல தினுசான மூர்த்திகளில் வழிபடுகிறார்கள்.

அப்படி லோகம் முழுவதற்கும் சொந்தமாக இருக்கப்பட்டவரை நாம் எல்லோரும் தவறாமல் ஆராதிக்க வேண்டும். வசதி இருப்ப்பவர்கள் அவருக்கு

மோதகமும், மற்ற பக்ஷணமும், பழங்களும் நிறைய நிவேதனம் செய்து, குழந்தைகளுக்கு விநியோகம் பண்ணவேண்டும். அவர் குழந்தையாக வந்த ஸ்வாமி. குழ்ந்தை என்றால் அது கொழுகொழு என்று இருக்கவேண்டும். அதற்கு நிறைய ஆகாரம் கொடுக்க வேண்டும். பிள்ளையாரின் தொப்பை வாடாமல் அவருக்கு நிறைய நிவேதனம் செய்யவேண்டும்.
வெள்ளிக்கிழமைதோறும் அவருக்கு சிதறுகாய் போட்டுக் குழந்தைகளை ஸந்தோஷப்படுத்த வேண்டும்.
பெரியவர்கள் இவ்வாறு மற்றக் குழந்தைகளை மகிழ்வித்தால், ஈசன் குழந்தையான பிள்ளையாரும் மகிழ்ந்து, பெரியவர்களையும் குழந்தைகளாக்கித் தம்மோடு விளையாடச் செய்வார்.

பெரியவர்களானால் துக்கமும், தொல்லையும் தான். குழந்தை ஸ்வாமியோடு சேர்ந்து இந்தத் துக்கத்தை தொலைத்து அவரைப்போல் ஆனந்தமாகிவிட வேண்டும். அவர் எப்போதும் சிரித்த முகமுள்ளவர். 'ஸுமுகர்', 'பிரஸன்ன வதனர்' என்று பெயர் பெற்று எப்போதும் பேரானந்தத்தைப் பொங்க விடுபவர். நாம் உண்மையாக பக்தி செய்தால் நம்மையும் அப்படி ஆக்குவார்.

தமிழ் நாட்டின் பாக்கியமாகத் திரும்பிய இடமெல்லாம் அமர்ந்திருக்கும் அவரை நாம் எந்நாளும் மறக்கக் கூடாது. நாம் எல்லோரும் தவறாமல் பிள்ளையார் கோயிலுக்குப் போவது, தேங்காய் உடைப்பது, 'விநாயகர் அகவல்' சொல்வது என்று வைத்துக்கொண்டால் இப்போதிருக்கிற இத்தனை ஆயிரம் கோயிலுங்கூடப் போதாது; புதிதாகக் கட்ட வேண்டியிருக்கும்

புதிதாகப் பிள்ளையார் கோயில் கட்டி மூர்த்திப் பிரதிஷ்டை செய்வதில் வேடிக்கையாக ஒரு உலக வழக்கு இருக்கிறது. அதாவது புதிதாகப் பிள்ளையார் விக்கிரஹம் அடிக்கக் கொடுக்காமல், ஏற்கனவே ஒரு கோயிலில் இருக்கிற பிள்ளையாரைத் திருடிக் கொண்டு வந்துதான் புதுக்கோயில் வைக்கவேண்டும் என்பார்கள். 'இது என்ன, சாதாரண விஷயங்களிலேயே திருட்டு கூடாது என்றால், தெய்வக் காரியத்தில் போய்த் திருட்டுச் செய்யலாமா' என்று தோன்றுகிறதல்லவா? பிள்ளையாரைத் திருடலாம் என்றால்தான், ஒவ்வொரு கோயிலைச் சேர்ந்தவர்களும், 'நம் பிள்ளையார் எங்கே திருட்டுப் போய்விடுவாரோ?' என்ற பயத்தால், அவரை அல்லும் பகலும் கவனித்துக் கொள்வார்கள். இப்போது ப்ல ஊர்களில் கவனக் குறைவால், 'ஸ்வாமியைக் காணோம்' என்று செய்தி வருகிற மாதிரி நடக்காமல் இருக்கும். அதற்காகவே இப்படி ஒரு திருட்டு வழக்கத்தைச் சொல்லி வருகிறார்கள் போலிருக்கிறது. பிள்ளையார் நினைப்பு நம் ஜனங்களுக்கு நீங்கவே கூடாது என்றுதான் இம்மாதிரியான ஏற்பாடுகளை நம் பெரியவர்கள் செய்து வைத்திருக்கிறார்கள். நமக்கு எப்போதும் துணை அவர்தான்.

நமக்கும், நாட்டுக்கும், உலகுக்கும் எல்லா க்ஷேமங்களும் உண்டாவதற்கு அவ்வையார் மூலம் பிள்ளையாரைப் பிடிப்பதே வழி.

குரு நம்மை நாமாக்குகிறவர்

ஒரு ராஜா-ராணிக் கதை

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

குரு

ஒரு ராஜா ராணி கதை

ராஜா ஒருத்தன். ராஜா என்றிருந்தால் சத்ரு ராஜா, யுத்தம் எல்லாமும் இருக்கத்தானே செய்யும்? இந்த ராஜாவை எதிர்த்து எதிரி ராஜா வந்தான். இவனுடைய துரதிருஷ்டம், யுத்தத்தில் இவன் தோற்றுப் போனான்.

'வெற்றி; இல்லாவிட்டால் வீர ஸ்வர்க்கம்!' என்று சில ராஜாக்கள் யுத்த பூமியிலேயே உயிரை விட்டு விடுவார்கள். இன்னும் சில ராஜாக்கள் தோற்றுப் போனால் ஓடி ஒதுங்கிப் பதுங்கிக் கொள்வார்கள். இவர்கள் எல்லோருமே வீரத்திலோ மானத்திலோ குறைந்தவர்கள் என்று அர்த்தம் இல்லை. பாய்கிற புலி பதுங்கும் என்கிற மாதிரி இவர்கள் பதுங்குவது பிற்பாடு படையெடுத்துப் பழி வாங்குவதற்காகத்தான். மகாசூரர்களும், மானஸ்தர்களுமான ராஜபுத்ர ராஜாக்கள் கூட, இப்படி முஸ்லீம்களின் படையெடுப்பின் போது ஓடிப்போய், பிறகு பெரிய சைனியம் திரட்டிக் கொண்டு வந்து சண்டை போட்டிருக்கிருக்கிறார்கள்.

என் 'கதை- ராஜாவும்' தோற்றுப் போனவுடன் பிராணஹத்தி பண்ணிக் கொள்ளாமல் ஓடிப்போய்விட்டான்.

அவன் மட்டுமாக ஓடவில்லை.

அவனது பத்தினியையும் குதிரை மேல் வைத்துக் கொண்டு ஓடினான்.

அப்போது அவள் நிறை கர்ப்பிணி.

இந்த நாளில் 'அண்டர் க்ரவுண்ட்'டாகப் போவது என்ற மாதிரி அப்போதும் உண்டு. இந்த ராஜாவுக்கு ரொம்பவும் அபிமான மந்திரி இப்படித்தான் தலைமறைவாகிவிட்டான். ராஜாவும் ராணியும் தப்பித்து ஓடியது அவனுக்கு மட்டும் அப்போதே தெரியும்.

ராஜாவின் குதிரை வனப் பிரதேசத்தில் போய்க் கொண்டிருந்தது.

அவனைத் தேடிப் பிடித்து வர, சத்ரு ராஜா நாலாபக்கமும் குதிரைப் படையை அனுப்பியிருந்தான்.

அவர்களில் சிலர் இந்தக் காட்டுக்கே வந்துவிட்டார்கள். ராஜா போவதைத் தூரத்தில் பார்த்து அவனைப் பின் தொடர்ந்து துரத்தி வந்தார்கள்.

இவனைத் துரதிருஷ்டமும் துரத்திக் கொண்டு வந்தது. சத்ருக்கள் கிட்டே கிட்டே வந்து விட்டார்கள்.

பக்கத்திலே ஒரு வேடன் குடிசை இருந்தது. அதைப் பார்த்ததும் ராஜாவுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. குதிரையை நிறுத்தி, அதிலிருந்து இறங்கினான். ராணியையும் இறக்கினான்.

"சத்ருக்கள் என்னை விடமாட்டார்கள். அவர்கள் ஏராளமான பேர்கள் இருப்பதால் நான் எதிர்த்து எதுவும்

பண்ணுவதற்கில்லை. என் முடிவு நிச்சயம். ஆனால் என்னோடு நீயும் போய்விடக்கூடாது. ஏன் சொல்கிறேன் என்றால், என்னால் பழி வாங்கமுடியாவிட்டாலும், இப்போது நீ கர்ப்பவதியாக இருக்கிறாயல்லவா? உனக்கு நம் குலம் விளங்க ஒரு புத்திரன் பிறந்தாலும் பிறக்கலாம்; பிறக்கப் போகும் பிள்ளையாவது சத்ருவை ஜயித்து ராஜ்யத்தை மறுபடியும் நம் பரம்பரையின் கைக்குக் கொண்டு வரவேண்டும். ஆகையால் நீ பதிவிரதை என்பதற்காக என்னோடு செத்துப் போவதை விட, என் மனோரதத்தைப் பூர்த்தி பண்ணுவதற்காகவே உயிரோடிருந்து பிள்ளையைப் பெற்று வளர்க்கவேண்டும். இந்த வேடன் குடிசையில் அடைக்கலம் புகுந்து பிழைத்துக் கொள்" என்று ராணியிடம் ராஜா சொன்னான்.

அவளுக்கு அது தாங்க முடியாத கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் ராஜதர்மம் என்ற ஒன்று, அதற்கென்றே மானம், கௌரவம் என்றெல்லாம் இருந்ததால், பதியின் வார்த்தையை அவளால் தட்டமுடியவில்லை. 'புருஷன் சொல்வதுதானே நமக்கு வேதம்? அவன் சா என்றால் செத்துப் போகத் தயாராக இருக்கிற மாதிரியே, செத்துப் போவதுதான் சந்தோஷம் என்கிற ஸ்திதியில் அவன், 'சாகாதே. நீ உயிரோடுதான் இருக்கவேண்டும்' என்றால் அதையும் நாம் கேட்டுத்தானாக வேண்டும்' என்று தன்னைத் தானே ஒரு மாதிரி தேற்றிக் கொண்டு குடிசைக்குள் போய் மறைந்து கொண்டு விட்டாள்.

சத்ரு வீரர்கள் வந்து ராஜாவைப் பிடித்துக் கொண்டார்கள்.

அவன் கதை அதோடு முடிந்தது.

அவர்களுக்கு ராணியையும் இவன் கூட அழைத்து வந்தது தெரியாது. 'தனக்கு என்ன ஆபத்து வந்தாலும் வரட்டும்;அவளுக்கு வரக்கூடாது' என்று தான் இவன் குதிரையில் அவளை முன்னே உட்கார வைத்து மறைத்துக் கொண்டு ஓட்டினான். பின்னாலிருந்து வந்த எதிரிகளுக்குக் குதிரை மேல் இவனுக்கு முன்னால் அவள் உட்கார்ந்திருந்தது தெரியவில்லை.

அதனால் ராணியைத் தேடிப் பார்க்காமலே அவர்கள், வந்த காரியம் முடிந்தது என்று சந்தோஷமாகப் போய்விட்டார்கள்.

வேடன் குடிசையில் வேடனின் அம்மாக் கிழவி இருந்தாள். பூர்ண கர்ப்பினியாகத் தஞ்சம் என்று வந்த ராணியை மனஸார வரவேற்று வைத்துக் கொண்டாள்.

படித்தவர்கள், நாகரிகக்காரர்கள் என்கிற நம்மை விட,பாமரமான ஏழை ஜனங்களிடம் உபகாரம் செய்கிற ஸ்வபாவம், விஸ்வாசப் பண்பு எல்லாம் எக்காலத்திலும் ஜாஸ்திதான்.

ராஜ ஸ்திரீயை வேட ஸ்திரீ தன் வயிற்றில் பிறந்த மகளைப் போல் வைத்துப் பராமரித்தாள்.

ராணி வயிற்றில் ஒரு பிள்ளை பிறந்தது.

அதோடு தன் கடமை ஆகிவிட்டது என்கிற மாதிரி பிரஸவத்திலேயே ராணி மரணம் அடைந்து விட்டாள்.

பத்துப் பன்னிரண்டு வருஷங்கள் ஆகிவிட்டது.

சத்ரு ராஜாவே பரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தான்.

ஆனாலும் ஜனங்களுக்கு அதில் திருப்தியில்லை. ஒரு ராஜ்யம் தோற்றுப் போனால்கூட ஜனங்களுக்குத் தங்கள் பழைய பாரம்பரிய ராஜா இல்லையே என்று தாபம் இருந்து கொண்டே தான் இருக்கும்.

இந்த 'கதை-ராஜ்ய'த்திலிருந்த ஜனங்களுக்கு ராஜாவோடு ராணியும் தப்பித்துப் போனதோ, காட்டிலே அவளுக்குக் குழந்தை பிறந்ததோ தெரியாது. அதனால் தங்கள் கஷ்டத்தை யெல்லாம் அடக்கிக் கொண்டு பொறுமையோடு இருந்தார்கள்.

மந்திரிக்கு மட்டும் ராஜ தம்பதி இரண்டு பேருமே ஓடியது தெரியுமல்லவா?அதனால் அவன் யோசித்தான். 'ஈச்வர கிருபையில் ராணிக்குப் பிள்ளைக் குழந்தையாகவே பிறந்திருந்து, அது இப்போது எங்கேனும் வளர்ந்துவந்தால் பன்னிரண்டு வயசு இருக்கும் அல்லவா? பாரம்பரியமான யுவராஜா என்றால் சைன்யத்தை நடத்தி யுத்தம் பண்ணவும், மந்திரிகளின் ஆலோசனையோடு ராஜ்ய பாரம் பண்ணவும் பன்னிரண்டு வயசு போதுமே! அதனால், ராஜகுமாரன் கிடைக்கிறானா என்று தேடிக் கண்டுபிடித்து அவனை கொஞ்சம் தநுர்வேதத்தில் [போர்ப்பயிற்சியில்] தேற்றிவிட்டால், ஜனங்கள் ஒரு மனஸாக அவன் கீழ் சேர்ந்து சத்ரு ராஜாவை அப்புறப்படுத்துவார்களே!' என்று நினைத்தான்.

ரகசியமாக கோஷ்டி சேர்த்து, அவன் பழைய ராஜாவின் சந்ததி இருக்கிறதா என்று தேடினான்.

வேடனின் குடிசைக்கு வந்து சேர்ந்தான்.

அங்கே அநேக வேடப் பசங்களோடு ராஜாவின் பிள்ளையும் ஒரு கோவணத்தைக் கட்டிக் கொண்டு, தலையை முடிந்து இறக்கை சொருகிக் கொண்டு, குந்துமணி மாலையும் புலிநகமும் போட்டுக்கொண்டு அணில் குத்தி விளையாடிக் கொண்டிருந்தான். ஆனாலும் வம்சவாரியான ராஜ களை, பழைய ராஜாவின் ஜாடையெல்லாம் அவனுக்கு இருந்ததால், புத்திசாலியான மந்திரிக்கு ஊகமாகப் புரிந்தது.

அந்த கிழவி இப்போதும் உயிரோடு இருந்தாள்.

அவளிடம் கேட்டான்.

காட்டு ஜனங்களுக்கு சூது, வாது, பொய், புரட்டு தெரியாது. அதனால் அவள் உள்ளபடி சொன்னாள். ரொம்ப வருஷம் முந்தி ஒரு கர்ப்பிணி இங்கே வந்து அடைக்கலம் கேட்டாள். அவளை நான் என் மகள் மாதிரி வளர்த்தேன். ஆனாலும் அவள், தான் யார், என்ன என்று சொல்லிக்கொள்ளாமலே இந்தப் பிள்ளையை பெற்றுப் போட்டுவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டு போய்விட்டாள். அதற்கப்புறம் இந்தப் பிள்ளைக்கு நானே அம்மாவாக இருந்து வளர்த்து வருகிறேன். ராஜகுடும்பம் மாதிரியான பெரிய இடத்து வாரிசு என்று ஊகிக்க முடிந்தாலும் இன்னார் என்று எங்களுக்கு நிச்சயமாகத் தெரியாது.

எங்களில் ஒருத்தனாக எங்களோடேயே வைத்துப் பராமரித்துக் கொண்டிருக்கிறோம்" என்றாள்.

மந்திரிக்கு உடனே இரண்டும் இரண்டும் நாலு என்கிற மாதிரி 'நம் ராஜகுமாரன்தான் இங்கே வளர்வது' என்று புரிந்து விட்டது.

அதை அவன் சொல்லி, பிள்ளையை அழைத்துப் போக முன்வந்தவுடன், கிழவி, வேடன் எல்லோருக்கும் ரொம்பவும் கஷ்டமாகி விட்டது. வளர்த்த பாசம்! ஆனானப்பட்ட கண்வ மஹரிஷி, ஜட பரதர் மாதிரியானவர்களையே வளர்த்த பாசம் ஆட்டி வைத்திருக்கிறதே! ஆனாலும் ராஜ்யகாரியம் என்பதால், இந்த வேடர்கள் தியாக புத்தியோடு ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனால் வேடப்பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டிருந்த ராஜகுமாரனை மந்திரி கூப்பிட்டதும், அவன் விழுந்தடித்துக் கொண்டு ஓடப் பார்த்தான். அவனுக்கு வேட சகவாசம்தான் பிடித்ததே தவிர, இந்தப் பெரிய மநுஷ சம்பந்தம் பிடிக்கவேயில்லை.

வேடப்பிள்ளை மாதிரியே, "இவங்கள்ளாந்தான் என் ஜாதி ஜனங்க, இவங்களைவிட்டு வரமாட்டேன்" என்று ஓடினான்.

அப்புறம் அவனைப் பிடித்து வந்து மந்திரி அவனுக்கு வாஸ்தவத்தையெல்லாம் விளக்கிச் சொன்னான். "நீ ராஜகுமாரன். நீ பிறக்கும் முன்பே, சத்ருக்களிடமிருந்து தப்பி இங்கே ஓடிவந்த உன் தகப்பனார் கொல்லப்பட்டார்.அதற்கப்புறம் வேடர் குடிசையில்

உன்னைப் பிரஸவித்து விட்டு உன் அம்மாவும் போய்விட்டாள். அதிலிருந்து நீ இங்கே வளர்ந்து வருகிறாய். ஆனாலும் நீ ராஜ்யத்தையெல்லாம் ஆள வேண்டியவன். உன்னைத் தலைவனாக வைத்துக் கொண்டு தான் நாங்கள் அதை சத்ருவிடமிருந்து மீண்டும் ஜயிக்க ஆலோசனை செய்திருக்கிறோம். இப்போது நீ இருப்பதைவிடக் கோடி மடங்கு உயர்ந்த ஸ்திதியில் இருக்க வேண்டியவன். 'மாட்டேன்' என்று சொல்லலாமா?" என்று எடுத்துச் சொல்லி விளக்கினான்.

அந்தப் பிள்ளைக்கு வீரம், பித்ருபாசம், அதற்காக எதிர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற ஆர்வம் எல்லாவற்றையும் மூட்டி விட்டான்.

தான் ராஜகுமாரன் என்று தெரிந்தவுடனேயே, அந்தப் பிள்ளைக்கு ரொம்ப சக்தி, தேஜஸ், காம்பீர்யம் எல்லாம் உண்டாகிவிட்டது. அப்புறம் அவனுக்கு அஸ்திர சஸ்திர அப்பியாஸம், கொஞ்சம் சொல்லிக் கொடுத்தவுடனேயே அவற்றை நன்றாகப் பிடித்துக் கொண்டான்.

வேட ஜனங்களை விட்டுப் போனான். மந்திரியின் சகாயத்துடன் நாட்டில் சைனியம் திரட்டினான். ராஜ விச்வாஸம் கொண்ட ஜனங்கள், தங்கள் பழைய பாரம்பரிய வாரிசு வந்திருக்கிறான் என்றவுடன் உத்ஸாகமாக அவன் கீழ் ஒன்று சேர்ந்தார்கள்.

இப்போதெல்லாம் குடியரசு யுகத்தில் ஒருத்தரைத் தலைவர் என்று ஸ்தோத்திரம் பண்ணி ஊரையெல்லாம் இரண்டு படுத்துகிற மாதிரி டெமான்ஸ்டரேஷன்கள் பண்ணிவிட்டு, கொஞ்ச காலமானால் அவரை எவரும்

சீந்தாமல் தூக்கிப் போடுகிற மாதிரி இல்லை, ராஜ விஸ்வாசம் என்பது. அது நின்று நிலைத்து ஹ்ருதயபூர்வமாக இருந்து வந்த விஷயம். ராஜாக்களும் இந்த விஸ்வாசத்தைப் பெறுவதற்குப் பாத்திரர்களாகவே ரொம்பவும் ஒழுக்கத்தோடு குடிஜனங்களைத் தம் பெற்ற குழந்தைகளைப் போலப் பரிபாலனம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று அதிகாரம் வந்து, அந்த ருசியில் கண்டது காணாதது போல் ஒழுங்கு தப்பிப போகிற மாதிரி இல்லை, பாரம்பரிய ராஜயாதிகாரம் என்பது. இந்தக் கதையில் வரும் பையன் மாதிரி திடீர் அதிகாரம் வந்தால்கூட பாரம்பரியப் பண்பு அவர்கள் தலைதெறிக்கப் போகாமலே கட்டுப்படுத்தும். புராணங்களைப் பார்த்தால் வேனனையும் அஸமஞ்ஜனையும் போல் எங்கேயாவது நூற்றிலே ஒரு ராஜாவோ ராஜகுமாரனோ முறை தப்பிப் போனால் அப்போது ஜனங்களே அவனைத் தொலைத்து முழுகியிருக்கிறார்கள். மொத்தத்தில் 'யதா ராஜா ததா ப்ரஜா' [அரசன் எவ்வழி; மக்கள் அவ்வழி] என்ற மாதிரி, அப்போது இரண்டு பக்கத்திலும் தர்மத்துக்குப் பயந்தவர்களாக இருந்தார்கள். சட்டம் என்று வெறும் ராஜாங்க ரீதியில் போடுகிறபோது, முதலில் அதைப் பண்ணுகிறவர்கள் சரியாகயிருக்கிறார்களா என்ற கேள்வி வருகிறது. இந்த சட்டங்களுக்கெல்லாம் மேலான த்ரிலோக ராஜாவான பரமேச்வரனின் சட்டமான தர்மசாஸ்திரத்துக்கு அடங்கியே ஆளுகிறவர்கள், ஆளப்படுகிறவர்கள் ஆகிய இருவரும் இருந்தால்தான் லோகம் நன்றாயிருக்கும். பூர்வகாலங்களில் ஆளப்படுகிறவர்களுக்கும் ஆளுகிறவர்களே இப்படி

தர்மத்துக்கு அடங்கியிருந்து வழி காட்டியிருக்கிறார்கள். இதனால்தான் ஜனங்களுக்கு ஸ்வபாவமாக, ராஜவிஸ்வாசம் என்ற ஆழ்ந்த, நிஜமான பற்று இருந்து வந்திருக்கிறது.

'இவர்கள் தன் ஜனங்கள்' என்ற பாந்தவ்யம் ராஜாவுக்கும், 'இவன் நம் ராஜா' என்ற அன்பு ஜனங்களுக்கும் இருந்து வந்தது.

கதையில் சொன்ன பையன், சத்ருவை ஜயிக்க மந்திரியின் ஏற்பாட்டில் ஆயத்தம் பண்ணுகிறான் என்றவுடன் ஜனங்களெல்லாம் அவன் கட்சியில் சேர்ந்து யுத்தத்துக்கு கிளம்பிவிட்டார்கள்.

சுலபத்தில் சத்ருவை ஜயித்தும் விட்டார்கள்.

பையனுக்கு பட்டாபிஷேகம் பண்ணி ராஜா ஆக்கினார்கள்.

அவனுக்குத் தான் வேடனாக இருந்த எண்ணமே அடியோடு மறந்து போய்விட்டது. பூர்ண ராஜாவாகவே இருந்தான்.

இந்தக்கதையை நான் சொல்லவில்லை. பெரிய ஆசார்யர் ஒருத்தர், அத்வைத ஸம்பிரதாயத்தின் ஆதிகாலப் பிரவர்த்தகர்களில் ஒருத்தர் சொல்லியிருக்கிறார். குரு தத்வத்தைச் சொல்லும்போது இப்படிக் கதை சொல்லியிருக்கிறார். நான் கொஞ்சம் காது,மூக்கு வைத்தேன்.

குரு பரம்பரை

குரு

குரு பரம்பரை

அத்வைத ஆசார்யர் என்றால் உடனே எல்லோரும் நம்முடைய ஸ்ரீ சங்கர பகவத் பாதாளைத் தான் நினைத்துக் கொள்வீர்கள். அவர் தான் பரமேச்வராவதாரமாக வந்து, அத்வைதத்தை நன்றாக விளக்கி, என்றைக்கும் பெயர்க்க முடியாமல் ஸ்தாபனம் செய்துவிட்டுப் போனவர். ஆனால் அவர்தான் அத்வைத ஸித்தாந்தத்தை முதலில் கண்டுபிடித்தார் என்றில்லை. அவருக்கு ரொம்ப முன்னாடி லோகத்தின் முதல் கிரந்தமான வேதத்திலேயே - இப்படிச் சொல்வதுகூட தப்பு. லோகத்தையே பிரம்மா வேதத்தை guide ஆக வைத்துக் கொண்டுதான் சிருஷ்டி பண்ணியிருக்கிறார். அதனால் அதை லோகத்தின் முதல் கிரந்தம் என்கிறது கூட சரியில்லைதான். அப்படிப்பட்ட, லோக சிருஷ்டிக்கும் முந்தியதான வேதத்திலேயே - அத்வைத தத்துவம் சொல்லியிருக்கிறது. வேத சிரஸ் (மறைமுடி) என்கிற உபநிஷத்துகளிலெல்லாம் இந்தத் தத்துவம் நிறைய சொல்லப்பட்டிருக்கிறது. கிருஷ்ண பரமாத்மா பகவத் கீதையில் முடிவாக இதைத்தான் சொல்லியிருக்கிறார். 'கீதை' என்றால் 'பகவத் கீதை' என்றே இப்போது பிரஸித்தமாயிருந்தாலும், ஒவ்வொரு ஸ்வாமிக்குமான புராணத்தைப் பார்த்தால் 'தேவி கீதை', 'சிவ கீதை' என்றெல்லாம் வரும். அந்த தெய்வங்களும் முடிவாக அத்வைத உபதேசமே செய்திருக்கின்றன. அப்புறம்

ஆசார்யாள் [ஆதிசங்கரர்] வரையில் அநேக குருக்கள் வந்திருக்கிறார்கள்.

தக்ஷிணாமூர்த்தி, தத்தாத்ரேயர், நாராயணன், பிரம்மா ஆகியவர்களை அத்வைத சம்பிரதாய ஆசாரிய வரிசையில் முதலில் சொல்வது வழக்கம். இந்தத் தெய்வக்குருக்களுக்கு அப்புறம் வசிஷ்டர்,சக்தி, பராசரர், வியாஸர் என்ற ரிஷிகள் அத்வைதத்தை அப்பாவிடமிருந்து பிள்ளையாகப் பெற்று உபதேசம் செய்திருக்கிறார்கள். இவர்கள் ரிஷிகள்.

ரிஷிகளை மநுஷ்ய ஆசார்யர்களோடு சேர்க்கக் கூடாது. மநுஷ்யர்கள் அறியமுடியாததை அறிகிற, மநுஷ்யர்கள் கேட்காததைக் கேட்கிற , மநுஷ்யர்களால் செய்யமுடியாததைச் செய்கிற அதீந்திரிய சக்திகள் உள்ளவர்களே ரிஷிகள். ஆகாசத்தில் பரவியுள்ள பரமாத்மாவின் சுவாஸ சலனங்களான சப்தங்களை மந்திரங்களாகப் பிடித்துத் தரக்கூடிய மகாசக்தி படைத்தவர்கள். அதனால் இவர்களை சாதாரணமாக மநுஷ்ய இனத்தோடே சேர்ப்பதில்லை.

உதாரணமாக, கோவில்களில் பிரதிஷ்டையாகியிருக்கிற மூர்த்திகளை நாலைந்து தினுசாகப் பிரித்திருக்கிறார்கள் – ஸ்வயம்வியக்தம், தைவிகம், மாநுஷம், ஆஸுரம், ஆர்ஷம் என்று.

ஸ்வாமி தானாகவே ஒரு இடத்தில் லிங்கமாகவோ, விக்ரஹமாகவோ ஆவிர்பவிப்பதற்கு "ஸ்வயம் வியக்தம்" என்று பெயர். "ஸ்வயம்பு", "சுயம்பு", "தான்தோன்றி " (

"தாந்தோணியம்மன் "என்கிறதில் வரும் "தாந்தோணி ") என்பதெல்லாம் அதைத்தான்.

சிவ ஸ்தலங்கள் பலவற்றில் ஸ்வயம்பு லிங்கம் இருப்பதைப் பார்க்கிறோம். வைஷ்ணவர்கள் ஸ்ரீரங்கம், திருப்பதி, பத்ரிநாத், ஸ்ரீமுஷ்ணம், நைமிசாரண்யம், [புஷ்கரம், ஸாளக்ராமம், நான்குநேரி] என்று எட்டை ஸ்வயம்வியக்த க்ஷேத்ரங்களாகச் சொல்கிறார்கள்.

தேவர்கள் பிரதிஷ்டை பண்ணினது தைவிகம். காஞ்சீபுரத்தில் அம்பாளே மண்ணை லிங்கமாகப் பிடித்துவைத்தாள். திருவீழிமிழலையில் மஹாவிஷ்ணுவே லிங்கப் பிரதிஷ்டை செய்தார். அநேக ஸ்தலங்களில் இந்திரன் தோஷம் நீங்குவதற்காக ஈச்வரனையோ, விஷ்ணுவையோ பூஜை பண்ணினதாகச் சொல்வார்கள். இதெல்லாம் " தைவிகம் ". இதற்கு நேர் எதிர் வெட்டாக திரிசரன், ஓணன் மாதிரியான அசுரர்கள் ஸ்வாமியைப் பிரதிஷ்டை செய்த இடங்கள்தான் திரிசிரபுரம் என்ற திருச்சினாப்பள்ளி, காஞ்சீபுரத்தில் உள்ள ஓணகாந்தன் தளி முதலிய இடங்கள். அஸுரர் பிரதிஷ்டை செய்ததுதான் "ஆஸுரம் ".

மநுஷ்யர்கள் - அநேக ராஜாக்களும் பக்தர்களும் - பிரதிஷ்டை பண்ணினதுதான் "மாநுஷம்" என்று நீங்களே புரிந்துகொண்டிருப்பீர்கள்.

இன்னொன்று "ஆர்ஷம்" என்று சொன்னேனல்லவா? "ஆர்ஷம்" என்றால் "ரிஷிகள் பண்ணினது" என்று அர்த்தம். குற்றாலத்தில் அகஸ்திய மஹரிஷி மூர்த்திப் பிரதிஷ்டை பண்ணியிருக்கிறார். சிக்கலில் வஸிஷ்ட

மஹரிஷி, திருக்களரில் துர்வாஸர், ஜம்புகேச்வரம் என்ற திருவானைக்காவலில் ஜம்பு மஹரிஷி என்றிப்படி அநேக க்ஷேத்திரங்களில் ஆர்ஷப் பிரதிஷ்டைதான். ஏதோ, இப்போது நினைவில் வருவது, வாயில் வருவதை மட்டும் சொன்னேன்.

இதை எதற்கு சொல்ல வந்தேன் என்றால் பொதுவாக தேவ ஜாதி, அஸுர ஜாதி, மநுஷ்ய ஜாதி என்ற மூன்றைத்தான் நாம் சொன்னாலும், இங்கே ஆர்ஷம் என்று ரிஷிகளை மநுஷ்யர்களோடு சேர்க்காமல் தனி இனமாக வைத்திருக்கிறது என்று காட்டத்தான்.

மாநுஷ லிங்கம் என்று ராஜ ராஜ சோழன் பிருஹதீச்வரப் பிரதிஷ்டை பண்ணும் போதுகூட நேராக அவனே பண்ணாமல் கருவூர்ச் சித்தரைத்தான் பிராணப் பிரதிஷ்டை செய்ய வைத்திருக்கிறான். இதே மாதிரி "ரிஷிகள்" என்று சொல்லுகிற அளவுக்கு திவ்ய சக்தி இல்லாதவர்களானாலும் அந்தந்தக் காலத்தில் உள்ள மஹான்களை, ஸித்த புருஷர்களைக் கொண்டே மாநுஷ லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இப்போதுகூட காலனிக்குக் காலனி புதுக்கோயில் கட்டுகிறபோது யாராவது ஒரு ஸ்வாமிகளைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டுதானே கும்பாபிஷேகம் பண்ணுகிறீர்கள்? ஆனால் பிராணப் பிரதிஷ்டை முதலானதுகளை சிவாச்சாரியர்களோ, பட்டர்களோதான் செய்கிறார்கள். இவர்கள் நியமத்தோடு செய்தால், மந்திரங்களுக்கே ஸ்வயமான வீர்யம் உண்டாதலால், மந்திரவத்தாக இவர்கள் செய்யும் பிரதிஷ்டையிலும்

தெய்வ ஸாந்நித்யம் உண்டாகி லோகத்துக்கு க்ஷேமம் உண்டாகும்.

ரிஷிகள் தனி இனம் மாதிரி என்று சொல்ல வந்தேன்.

தேவ தர்ப்பணம், பித்ரு தர்ப்பணம், ரிஷி தர்ப்பணம் என்னும் போதும் ரிஷிகளைத் தனி இனமாகத்தான் வைத்திருக்கிறது.

அத்வைத ஸம்பிரதாயத்தில் தக்ஷிணாமூர்த்தி, தத்தர், நாராயணர், பிரம்மா ஆகிய தேவர்களுக்கு அப்புறம், வஸிஷ்டர், சக்தி, பராசரர், வியாஸர் என்ற ரிஷிகள் குருமார்களாக வந்தார்கள். வியாஸரின் பிள்ளை சுகர். அவர் மநுஷ்யர், ரிஷி, தேவர் எல்லாரையும்விடப் பெரியவர். சுகப்பிரம்மம் என்றே சொல்லப்பட்டவர். பிரம்மமாக இருந்த சுகர் பிரம்மச்சாரி. அதனால் அவருக்கப்புறம் பிள்ளை வழியில் சம்பிரதாயம் போகவில்லை. சிஷ்யர் வழியில் போயிற்று.

சுகருக்கு அப்புறம்தான், ரிஷிகள் என்று சொல்லமுடியாத ஸந்நியாஸிகளான கௌடபாதரும், அவருக்கப்புறம் அவருடைய சிஷ்யரான கோவிந்த பகவத்பாதரும் அத்வைத ஆசார்யர்களாக வந்தார்கள். ரிஷிகள் எல்லோரும் ஸந்நியாஸிகள் அல்ல. அவர்கள் பத்னிகளோடு இருந்திருக்கிறார்கள். அருந்ததி வஸிஷ்ட மஹரிஷிக்குப் பத்தினி, அநஸூயை அத்ரி மஹரிஷிக்குப் பத்தினி என்றெல்லாம் படிக்கிறோமல்லவா? யக்ஞம், யக்ஞோபவீதம் (பூணூல்) முதலியவை ரிஷிகளுக்கு உண்டு. ஸந்நியாஸிகளுக்கு இவை இல்லை. ஸந்நியாஸிகளான கௌடபாதருக்கும் கோவிந்த

பகவத்பாதர்களுக்கும் அப்புறம்தான் "ஆசார்யாள்" என்ற மாத்திரத்தில் குறிப்பிடப்படும் ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள் வந்தார்கள். சுகர் முதல் வருகிற துறவிகளான ஆசார்யர்களுக்குப் "பரிவ்ராஜகர்கள்" என்று பெயர். "பரமஹம்ஸ பரிவ்ராஜக" என்பது வழக்கம்.

பரமேச்வரனானாலும் மநுஷ்ய ரூபத்திலேயே இருந்து கொண்டு, மநுஷ்யர் மாதிரியே காரியம் செய்து காட்டினவர் நம் ஆசார்யாள். மநுஷ்யராக இருந்து கொண்டே ரொம்பவும் சக்தியோடு வைதீக தர்மத்தை, அத்வைதத்தை நிலை நாட்டியதுதான் அவர் பெருமை.

ஆசார்யாளுடைய நேர் குரு என்பதால் கோவிந்த பகவத்பாதருக்குப் பெருமை. ஆசார்யாளே "பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம்" என்று மூன்று தரம் சொல்லும்போது, கிருஷ்ணனோடு கூடத் தம் குருவையும் நினைத்துக் கொண்டுதான் சொல்லியிருக்கிறார். பகவானுக்கு எத்தனையோ நாமாக்கள் இருந்தாலும், ஆசார்யாள் 'கோவிந்த' நாமத்தையே 'ஸெலக்ட்' பண்ணினதற்குக் காரணம், அது தம் குருவின் பெயராகவும் இருக்கிறது என்பதுதான்.

நாராயணம், பத்மபுவம், வஸிஷ்டம்

சக்திம் ச தத்புத்ர பராசரம் ச |

வ்யாஸம் சுகம் கௌடபதம் மஹாந்தம்

கோவிந்த யோகீந்த்ரம் அதாஸ்ய சிஷ்யம்||

ஸ்ரீ சங்கராச்சார்யம் அதாஸ்ய பத்ம

பாதம் ச ஹஸ்தாமலகம் ச சிஷ்யம்।

தம் தோடகம் வார்த்திககாரம் அன்யான்

அஸ்மத் குரூன் ஸந்ததம் ஆனதோஸ்மி॥

என்கிற ச்லோகத்தில், அத்வைத ஆசார்ய பரம்பரையை முழுக்க சொல்லி, 'இப்படிப் பட்ட எல்லோரையும் நமஸ்காரம் பண்ணுகிறேன்' என்று முடித்திருக்கிறது. அத்வைத குரு பரம்பரையை 'பிரம்ம வித்யா ஸம்பிரதாய கர்த்தா'க்கள் என்றே சொல்வார்கள். இதில் முதலில் நாராயணன். அதாவது மஹாவிஷ்ணு. அப்புறம் " பத்மபுவன்" என்றது பிரம்மா;தாமரையில் உண்டானவர் என்று அர்த்தம். அதற்கப்புறம் வஸிஷ்டர், சக்தி, பராசரர், வியாஸர், சுகர், கௌடர், கோவிந்த பகவத் பாதர் இவர்களைச் சொல்லி, இப்படிச் சொல்லும்போதே கௌடபாதருக்கு மஹான் ('மஹாந்தம்') என்றும் கோவிந்தருக்கு யோகீந்திரர் என்றும் சிறப்புக் கொடுத்திருக்கிறது. ஆசார்யாளுக்கு மட்டும் "ஸ்ரீ" போட்டுத் தனி மரியாதை கொடுத்து "ஸ்ரீ சங்கராசார்யம்" என்று "ஆசார்ய" பதத்தையும் கொடுத்து கௌரவம் சொல்லியிருக்கிறது. அதற்கப்புறம், ஆசார்யாளின் முக்கியமான சிஷ்யர்களாக இருக்கப்பட்ட பத்மபாதர், ஹஸ்தாமலகர், தோடகர், ஸுரேச்வரர் ஆகியவர்களை சொல்லியிருக்கிறது. ஸுரேச்வரர் என்று சொல்லாமல் "வார்த்திககாரர்" என்று சொல்லியிருக்கிறது. "வார்த்திகம்" என்ற விளக்கவுரை எழுதியவர் ஸுரேச்வரர். அதனால் இப்படிச் சொல்லியிருக்கிறது. "வார்த்திகம்" என்றால் பாஷ்யம், வியாக்யானம், விரிவுரை என்ற மாதிரியான

விளக்கம். உபநிஷதங்களை விளக்கி ஆசார்யாள் பாஷ்யம் எழுதினாரென்றால், அவற்றில் பிருஹதாரண்யம், தைத்திரீயம் இவற்றுக்கான பாஷ்யங்களையும் இன்னும் விரிவாக விளக்கி "வார்த்திகம்" எழுதினவர் ஸுரேச்வராச்சாரியாள். இவர் வரையில் பேரைச்சொல்லி, அப்புறம் தனியாகப் பேர் சொல்லாமலே, "அவர்களுக்கப்புறம் இன்றுள்ள எங்கள் குருவரைக்கும் வந்துள்ள எல்லா ஆசார்யார்களுக்கும் நமஸ்காரம் பண்ணுகிறேன்" என்று ச்லோகம் முடிகிறது.

இங்கே சொன்னது ஸ்ரீ சங்கர பகவத் பாதர்களை ஆசார்யராகக் கொண்டவர்களின் குரு பரம்பரா ச்லோகம். மற்ற ஸம்பிரதாயத்தவர்களும் தங்கள் தங்கள் குரு பரம்பரையைத் தெரிந்து கொண்டு,அவர்கள் பெயரைச் சொல்லி நமஸ்காரம் பண்ண வேண்டும்.

ஆத்ம ஜ்யோதிஸை [ஜோதியை]ப் பூர்ணமாகப் பிரகாசிக்கக் செய்யவும், துக்கமில்லாமல் இருப்பதற்குரிய ஸாதனங்களைச் சொல்லவும் நமக்கு ஆசாரிய பரம்பரை வேண்டும். ஒரு ஆசாரியர் தமக்குப் பிற்காலத்தில் தம் காரியத்தைச் செய்ய மற்றொருவருக்கு அதிகாரம் கொடுக்கிறார். இப்படி வருபவர்களின் வரிசைதான் ஆசாரிய பரம்பரை. அந்தப் பரம்பரை விஷயத்தில் நாம் நிரம்ப நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். ஆத்ம ஜ்யோதிஸை அடையவேண்டிய மார்க்கமாகிய நிதியைக் காப்பாற்றித் தந்தவர்கள் அவர்களே! யார் யார் மூலமாக இந்த நிதியானது லோகத்தில் இன்றுவரையில் வந்திருக்கிறதோ, அவ்வளவு பேரையும் த்யானித்தால் அதிக அநுக்கிரஹம் உண்டாகும். ஆகவே குரு பரம்பரா

ஞானமானது ஆத்ம தத்வத்தில் நாட்டமுடையவர்களுக்கு அவசியம் இருக்க வேண்டும்.

சாச்வத ஐச்வர்யமான ஆத்ம ஸாம்ராஜ்யத்தை நமக்குக் காட்டிக் கொடுத்த இந்த எல்லா ஆசார்யர்களின் பெயரையும் தினமும் சொல்லி, இந்த ச்லோகத்தால் அவர்களையெல்லாம் அனைவரும் நமஸ்கரிக்க வேண்டும்.

இங்கே ஆத்ம ஸாம்ராஜ்யம் என்று சொன்னேன். முதலில் ஒரு வேடப் பையனுக்கு ஸாம்ராஜ்யம் கிடைத்த கதையில் ஆரம்பித்தேன். அப்புறம் எங்கேயோ அத்வைத குரு பரம்பரை என்று கொண்டு போய்விட்டேன்! அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? சொல்கிறேன் :

ஆசார்யாளுக்கு முந்தி மநுஷ்ய ரூபத்தில் இருந்து கொண்டு அத்வைதோபதேசம் செய்தவர்களில் அவருடைய குருவான கோவிந்தர், குருவுக்கு குருவான பரமகுரு கௌடபாதர் ஆகிய இரண்டு பேரை மட்டும் ச்லோகத்தில் சொல்லியிருந்தாலும், லோகத்திலும் பொதுவாக இந்த இருவரின் பேர் மட்டும் கொஞ்சம் தெரிந்திருந்தாலும் வேறு சில மநுஷ்ய ரூப அத்வைத ஆசார்யர்களும் நம் பகவத்பாதாளுக்கு முந்தியே, சுகருக்கு அப்புறம் இருந்திருக்கிறார்கள்.

நாராயணணிலிருந்து சுகர் வரையிலானவர்களை, அத்வைதிகளைப் போலவே மற்ற ஸித்தாந்திகளும் தங்கள் தங்கள் கொள்கைகளுக்கு மூல புருஷர்களாக வைத்துக் கொண்டு நமஸ்காரம் செய்கிறார்கள். ஆனால் கௌடபாதர், கோவிந்த பகவத்பாதர் இருவரும்

அத்வைதந்தான் தத்வம் என்று, மற்ற ஸித்தாந்தங்களை நிராகரித்துத் தீர்மானம் பண்ணியிருப்பதால், இவர்கள் அத்வைதிகளுக்கு மட்டுமே ஆசார்யர்கள் ஆவர். இப்படி exclusive- ஆக அத்வைதத்துக்கு மட்டுமே கிரந்தங்கள் உபகரித்தவர்களில் ஆசார்யர்களுக்குப் பூர்வத்தில் வேறு சிலரும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் பேரையாவது உங்கள் காதில் போட்டு வைக்கிறேன். ஆத்ரேய பிரம்மநந்தி என்பவர் ஒருத்தர்; ஸுந்தர பாண்டியர்கள் என்று ஒருத்தர் (ஏதோ தெற்கத்தி ராஜா பேர் மாதிரி இருக்கிறது!); பர்த்ரு ப்ரபஞ்சர் என்று இன்னொருவர்; பர்த்ருஹரியும் ஒருவர். ப்ரம்மதத்தர் என்று ஒருத்தர் ஸூத்ர பாஷ்யமே பண்ணியிருப்பதாகத் தெரிகிறது. இந்த த்ரவிடாசாரியரை விசிஷ்டாத்வைதிகளும் தங்கள் ஸித்தாந்தத்தை ஆதரிப்பவர் என்று சொல்லிக் கொள்வதுண்டு.

இவர்களுடைய கிரந்தம் எதுவும் இப்போது பூர்ணமாக நமக்குக் கிடைக்காவிட்டாலும், ஸாக்ஷாத் நம் சங்கர பகவத்பாதாள் உள்படப் பிற்கால அத்வைத கிரந்த கர்த்தாக்கள் இவர்களை மேற்கோள் காட்டியிருக்கிறார்கள்.

இவர்களில் த்ரவிடாசார்யார்தான் நம் கதைக்கு சம்பந்தப்பட்டவர்.

[த்ராவிட விஷயம்]

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

குரு

த்ராவிட விஷயம்

தமிழ் என்பதுதான் 'த்ரவிட' ('திராவிடம்' என்பது). முதல் எழுத்தான 'த' என்பது 'த்ர' என்று இருக்கிறது. இப்படி 'ர' காரம் சேருவது ஸம்ஸ்க்ருத வழக்கு. மேலே சொன்ன ச்லோகத்தில் வருகிற 'தோடகர்' என்ற பேரைக்கூட 'த்ரோடகர்' என்ற சொல்லுகிற வழக்கம் இருக்கிறது. இதனால் சிலபேர் ஸம்ஸ்க்ருதத்தையே "ரொம்ப' ஸம்ஸ்கிருதமாக்கி 'தேகம்' என்பதைக்கூட 'த்ரேகம்' என்று சொல்கிறார்கள்!

த–மி–ழ் என்பதில் 'த', 'த்ர' வாயிருக்கிறது. 'மி' என்பது 'வி' என்றாயிருக்கிறது. 'ம' வும் 'வ' வும் ஒன்றுக்கொன்று மாறுவதற்கு ஃபைலாலஜிக்காரர்கள் [மொழி ஒப்பு இயல் நிபுணர்கள்] நிறைய உதாரணம் கொடுப்பார்கள். ஸம்ஸ்கிருதத்துக்குள்ளேயே இதில் ஒன்று மற்றதாகும். உதாரணமாக 'சாளக்ராவம்' என்பதுதான் 'சாளக்ராமம்' என்றாயிருக்கிறது . சம்ஸ்க்ருதத்தில் 'மண்டோதரி' என்பதைத் தமிழில் 'வண்டோதரி' என்கிறோம். 'த்ரவிட' என்பதையே 'த்ரமிட' என்றும் சொல்வதுண்டு. 'ழ' வும் 'ள' வும் மாறுவது சகஜம். மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் போனால் 'வாளைப்பளத்தில் வளுக்கி விளுந்திடப்போறே' என்று சொல்வார்கள். 'ழ' வுக்கும் 'ள' வுக்கும் ரொம்பக் கிட்டத்தில் உள்ளதுதான் 'ட' வும். வேதத்திலேயே 'அக்னிமீடே' என்று வருவது 'அக்னிமீளே' என்றும் மாறுகிறது. இப்படித்தான் 'தமிழ்' என்பதில் உள்ள 'ழ்' 'த்ரவிட்' என்பதன் 'ட்' ஆக இருக்கிறது.

த – 'த்ர'வாகவும், மி – 'வி' யாகவும், ழ் – 'ட்' டாகவும் – மொத்தத்தில் 'தமிழ்' என்பது 'த்ரவிட்' என்றிருக்கிறது.

இப்போது எல்லாவற்றிலும் தமிழ் சம்பந்தம் காட்டினால் ஒரு ஸந்தோஷம் உண்டாவதால், த்ரவிடாசார்யாரைச் சொல்லும்போது அவருக்குத் தமிழ் சம்பந்தம் காட்டி நாமுந்தான் ஸந்தோஷப்படுவோமே என்று தோன்றிற்று; சொன்னேன்.

பகவத்பாதாளே 'ஸௌந்தர்யலஹரி'யில் "அம்மா, நீ தமிழ்க் குழந்தைக்குப் பால் கொடுத்தாயே?" என்கிறபோது, "த்ரவிட சிசு" என்று பதப் ப்ரயோகம் செய்திருக்கிறார்.

'தமிழ்' தான் 'த்ரவிட்' என்றால், ஆர்யன் – திராவிடன் 'ரேஸ் தியரி' (இனக்கொள்கை)யை வைத்துக் கொண்டு தப்பர்த்தங்கள் பண்ணிக்கொள்ளக் கூடாது.

வேத சாஸ்திரங்களைப் பார்த்தால் ஆரிய, திராவிட என்று இரண்டு வேறு வேறு 'ரேஸ்' (இனம்) என்பதற்குக் கொஞ்சம் கூட ஆதாரம் இல்லை. ஆனால் வெள்ளைக்காரர்களின் Divide-and-rule (பிரித்து ஆள்கிற) கொள்கைப்படி, அவன் இந்த ரேஸ் – தியரியைக் கட்டி விட்டுவிட்டான்.

சாஸ்திரப் பிரகாரம் என்ன சொல்லியிருக்கிறது? ஆரிய இனம் என்று ஒன்றைச் சொல்லவேயில்லை. 'ஆர்ய' என்றால் மதிப்புக்குரிய என்று அர்த்தம். அவ்வளவுதான். இன்றைய ரேஸ் கொள்கைப்படி, ஆரியனான அர்ஜுனனைப் பார்த்தே பகவான் கீதையிலே, "நீ என்ன இப்படி பேடி மாதிரி மனத்தளர்ச்சி அடைந்து அநார்யனாகி விட்டாயே !" என்கிறார். அநார்யன் என்றால் ஆர்யன் அல்லாதவன் என்று அர்த்தம். (முன்னே அன் சேர்த்தால் எதிர்ப்பதமாகிவிடும். இதையே இங்கிலீஷிலும் எடுத்துக்

கொண்டிருக்கிறார்கள். ஹாப்பிக்கு எதிர்ப்பதம் அன்-ஹாப்பி.') 'மதிப்பிற்குரியவனாக அல்லாமற் போய்விட்டாயே !' என்பதுதான் இங்கு பகவான் சொல்வதன் அர்த்தமே ஒழிய, இனரீதியில் இங்கே அர்த்தம் பண்ணமுடியாது. பழங்காலக் காவியங்களை நாடகங்களைப் பார்த்தால் ராணிகள் தங்கள் பதியான ராஜாவை 'ஆர்ய புத்ர' என்று அழைக்கிறார்கள். இப்போதைய கொள்கைப்படி 'ஆர்ய' என்பது ஒரு இனமானால், 'ஆர்யபுத்ர' என்று அழைக்கும் ராணிகள் அதற்கு மாறாக 'திராவிட புத்ரி'களாக அல்லவா இருக்க வேண்டும்? ஐயர் ஜாதிப் பெண்ணொருத்தி ஒரு ஐயங்கார்ப் பையனைக் கல்யாணம் செய்து கொண்டால்தான் அவனை 'ஐயங்கார் வீட்டுப் பிள்ளையே!' என்று கூப்பிடலாம். இவளும் ஐயங்காரானால் அப்படிக் கூப்பிடுவாளோ ? மாட்டாள். ஸீதை ராமரை 'ஆர்ய புத்ர' என்று கூப்பிட்டபோது 'ஆர்ய'வுக்கு ரேஸ் அர்த்தம் கொடுத்தால் அவள் திராவிட ஜாதி என்றாகிவிடும். இது அபத்தம். இதனால் என்ன ஏற்படுகிறது ? இங்கேயும் ஆர்ய என்றால் 'மதிப்புக்குகந்த' என்றுதான் அர்த்தம். 'ஆர்ய புத்ர' என்றால் 'மதிப்புகுகந்த குடிமகனே' என்று அர்த்தம்.

ஆர்ய என்பது ஒரு இனத்தைக் குறிப்பிடுவதாக சாஸ்திரங்களில் எங்குமே சொல்லவில்லை.

'த்ராவிட' என்பதும் இனப்பெயராக வரவில்லை.

ஒரே இனத்தைச் சேர்ந்த பாரத ஜனங்களைத் தான் விந்தியத்துக்கு வடக்கே உள்ளவர்களை கௌடர்கள் என்றும் தெற்கே உள்ளவர்களை திராவிடர்கள் என்றும்

சொல்லியிருக்கிறது. ஆர்ய-திராவிட இன வேற்றுமை இல்லை, கௌடர்- திராவிடர் என்பதாக, இனத்தை வைத்துப் பிரிக்காமல், ஒரே இனக்காரர்களைப் பிரதேச ரீதியில் பிரித்திருக்கிறார்கள். ஆதியில் விந்திய மலைக்கு வடக்கே உள்ள தேசம் முழுதும் கௌட தேசம்; அதற்குத் தெற்கில் உள்ளது முழுவதும் திராவிட தேசம் என்று இருந்தது. கௌட தேசத்தில் வசித்த கௌடர்களை மேலும் பிரதேச ரீதியில் ஐந்தாகப் பிரித்தார்கள். அப்படியே திராவிடத்தில் வசித்தவர்களையும் ஐந்தாகப் பிரித்திருக்கிறது. இவர்களைப் பஞ்ச கௌடர், பஞ்ச த்ராவிடர் என்பார்கள். பஞ்ச கௌடர்களில் ரொம்பவும் வடக்கே காச்மீரத்தில் இருந்தவர்களை ஸாரஸ்வதர்கள் என்றும் அதற்கு தெற்கே பஞ்சாபில் இருந்தவர்களை கான்யகுப்ஜர்கள் என்றும், பிறகு கிழக்குவாக்காக உத்தரப்ரதேஷ், பிஹாரில் உள்ளவர்களை மைதிலர்கள் என்றும் அப்புறம் தெற்கே ஒரிஸாவில் இருப்பவர்களை உத்கலர் என்ரும் பிரித்துவிட்டு கடைசியாகக் கிழக்குக்கோடியில் வங்காளத்தில் இருப்பவர்களுக்கு தனியாகப் பெயர் தராமல் கௌடர்கள் என்றே விட்டு விட்டார்கள். ஆக, ஸாரஸ்வதர், கான்யகுப்ஜர், மைதிலர், உத்கலர், கௌடர் ஆகிய ஐவரும் பஞ்ச கௌடர்கள். இப்படியே விந்தியத்திற்குத் தெற்கே ஐந்தாகப் பிரிக்கப்பட்ட பிரிவுகள், கூர்ஜரர் (குஜராத்தி) , மஹாராஷ்ட்ரர், ஆந்திரர், கர்நாடகர், கடைசியில் தெற்குக் கோடியில் வேறு பேர் இல்லாமல் திராவிடர் என்றே வைக்கபட்ட தமிழ் தேசத்தவர். இதிலே கேரளீயர்களான மலையாளிகளைச் சொல்லாததற்குக் காரணம், மலையாள பாஷை ஆயிரம் வருஷங்களுக்கு உள்ளாகத்தான் தனி

ரூபம் கொண்டிருக்கிறது. அதற்கு முந்தி அதுவும் தமிழ் தேசமாகத் தான் இருந்தது.

இரண்டு வெவ்வேறு இனமில்லை; பிரதேச ரீதியில் ஒரே இனத்தில் பத்துப் பிரிவுகள். இரண்டு பாதிகளுக்குப் பேராக இருந்த கௌடம், திராவிடம் என்பன குறிப்பாக கிழக்குக்கோடி, தெற்குக் கோடிப் பிரதேசங்களுக்கு மட்டும் பேர் ஆகிவிட்டது.

இன்று கௌடர்கள் என்றாலே வங்காளிகள் என்றாகி விட்டது. ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் அந்தத் தேசத்தவர்தான். அதனால் தான் அவர்களுடைய மடத்தை கௌடீய மடம் என்கிறார்கள். அப்படியே திராவிடர்கள் என்றால் முக்கியமாகத் தமிழர்கள்தான் என்று ஆகிவிட்டது. இதிலே ஒரு வேடிக்கை. வங்காளத்திலும், தமிழ்த் தேசத்திலும் தான் வெள்ளைக்கார நாகரிகமும் இங்கலீஷ் படிப்பும் முதலிலேயே வேகமாகப் பரவிற்று; பிரிட்டிஷ் ராஜ்யத்தில் எங்கே பார்த்தாலும் குமாஸ்தாக்களாகப் போனவர்களும் இந்த இருவர்தான்.

ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொன்றுக்குப் போனவர்களை அந்தப் பிரதேசப் பேரை வைத்தே குறிப்பிடுவார்கள். மஹாராஷ்டிரத்தில் இப்போது பலருக்கு டிலாங் என்று (இயற்) பெயருக்குப் பின்னால் வருகிறதைப் பார்க்கிறோம். இவர்களுடைய முன்னோர்கள் தெலுங்கு தேசத்திலிருந்து மஹாராஷ்டிராவிற்குப் போய் அங்கேயே 'ஸெட்டில்' ஆகிவிட்டார்கள். 'தெலுங்கு' என்பதன் திரிபுதான் 'டிலாங்'. இதேமாதிரி காசி முதலான அநேக உத்தரதேச ஸ்தலங்களில் இருக்கிற சில பிராம்மணர்களுக்கு த்ரவிட்

என்று வம்சப் பெயர் இருக்கிறது. ஆதிகாலத்தில் தமிழ் தேசத்திலிருந்து அங்கே போய் குடியேறினவர்களின் வம்சத்தில் வந்தவர்களே இந்த 'த்ரவிட்'கள். இப்படி 'திராவிடர்' என்று பெயர் கொண்ட வடக்கத்தியார் எல்லாரும் பிராம்மணர்களே என்பதைக் கவனிக்க வேண்டும். ரேஸ் தியரிப்படி பிராம்மணர்கள் திராவிடர்களுக்கு மாறானவர்கள், விரோதிகள், எதிரிகள் என்று கூடச் சொல்கிறார்கள். ஆனால் வாஸ்தவத்திலோ இன்றைக்கு வடதேசத்தில் தமிழ் நாட்டுப் பிராமண வம்சத்தவர்களுக்கே தான் 'த்ரவிட்' அடைமொழி இருக்கிறது. இதிலிருந்தே 'திராவிட' என்பது பிரதேசத்தைக் குறிப்பதேயன்றி இனத்தைக் குறிக்கவேயில்லை என்று தெரிகிறதல்லவா?

தமிழ் தேசத்தின் உச்சாரண வழக்குப்படி 'த்ரவிட்' என்பது தமிழ் என்று இருக்கிறது. 'த்ர' என்பது போல ஸம்ஸ்க்ருதத்தில் ஒற்றெழுத்தோடு சேர்ந்து வருகிற 'ர'காரம் தமிழில் உதிர்ந்து விடும். ஸம்ஸ்கிருத 'ச்ரமண' தமிழில் 'சமண' ஆகிறது; 'ப்ரவாள' என்பது 'பவள'மாகிறது. இப்படியே 'த்ர' என்பது த என்று இருக்கிறது.

திரவிடாச்சார்யாரைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்ததில் இத்தனை ஊர்க்கதை வந்து சேர்ந்து விட்டது! அவர் ஆசார்யாளுக்கு முன்னால் வாழ்ந்த அத்வைத ஸித்தாந்தி என்று சொன்னேன்.

வேடனே ராஜா; ஜீவனே பிரம்மம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

குரு

வேடனே ராஜா; ஜீவனே பிரம்மம்

ஆசார்யாளும் பின்னால் வந்தவர்களும் சாந்தோக்ய உபநிஷத்துக்கு பாஷ்யம் பண்ணும்போது, அதில் மூன்றாவது, நாலாவது அத்தியாயங்களில் வரும் 'மதுவித்யை', 'ஸம்வர்க வித்யை' முதலானவற்றை விளக்கும் போது த்ரவிடாச்சார்யாளை quote செய்திருக்கிறார்கள்.

இந்த சாந்தோக்ய உபநிஷத்தில்தான் 'தத்-த்வமஸி' என்ற மஹா வாக்கியம் வருகிறது. "நீயேதானப்பா அந்த பிரம்மமாயிருக்கிறாய்" என்று ச்வேதகேதுவுக்கு அவனுடைய பிதாவும் குருவுமான உத்தாலக ஆருணி திரும்ப திரும்ப ஒன்பது தடவை செய்த உபதேசம் அது.

'தத்-த்வம்-அஸி' என்பதில் 'தத்' என்பது பரமாத்மாவான பிரம்மம்; 'த்வம்' என்பது ஜீவாத்மா : அதற்கு 'பெர்ஸானிபிகேஷனா'க உள்ள ச்வேதகேது; 'அஸி' என்றால் 'இருக்கிறாய்.' "நீ பிரம்மமாக இருக்கிறாய்" என்று தகப்பனார் உபதேசிக்கிறார் - "ஸாதனைகளெல்லாம் செய்து என்றைக்கோ ஒருநாள் பிரம்மமாக ஆகப்போகிறாய்" என்று அல்ல! எதிர்காலத்தில் இல்லை; இப்போதும் எப்போதும் எல்லோரும் எல்லாமும் பிரம்மம்தான். இனிமேலேதான் பிரம்மமாக வேண்டும் என்பதில்லை.

'அப்படியானால் ஸாதனை எதற்கு?' என்றால்... பிரம்மமாக இருந்தாலும் அதை நாம் தெரிந்து கொள்ளவில்லையே! தெரிந்து கொண்டிருந்தோமானால் இத்தனை அழுகை,

இத்தனை காமம், கோபம், இத்தனை பயம் நமக்கு இருக்கவே இருக்காதே! அலையே எழும்ப முடியாமல் ஆகாசம் வரை முட்டிக்கொண்டு நிற்கிற ஆனந்த சமுத்திரமாக அல்லவா பிரசாந்த நிலையில் இருந்து கொண்டிருப்போம்? அப்படி ஒரு நிலை உண்டு என்று கூடத் தெரியாதவர்களாக அல்லவா இப்போது நாம் தடமாடிக் கொண்டிருக்கிறோம் ? இப்படிப்பட்ட நம்மிடம், 'நீ இப்போதும் பிரம்மம் தானப்பா' என்றால் எப்படி ஒப்புக் கொள்வது?

இதை ஒப்புக்கொள்ள வைப்பதற்காகத்தான் த்ரவிடாச்சார்யாள் வேடப் பையன் மாதிரி இருந்த ராஜகுமாரனின் கதையைச் சொல்லியிருக்கிறார்.

ப்ருஹதாரண்யக உபநிஷத் பாஷ்யத்தின் நடுவிலே (II-1-20) சங்கர பகவத் பாதாள், சிலந்தி தன்னிலிருந்தே நூலை இழுத்து வலை பின்னுகிற மாதிரியும், அக்னி தன்னிலிருந்தே பொறிகளை உதிர்க்கிற மாதிரியும், ஆத்மாவிலிருந்தே அத்தனை பிரபஞ்சமும் தோன்றியிருக்கிறது என்ற மந்திரத்துக்கு ரொம்ப விஸ்தாரமாக அர்த்தம் பண்ணிக்கொண்டு போகிற போது, இந்தக் கதையை மேற்கோள் காட்டுகிறார். இது திரவிடாச்சார்யாள் சொன்னது என்று பேரைச் சொல்லாமல் ரொம்பவும் மரியாதையுடன், "ஸம்பிரதாயமறிந்த பெரியவர்களின் கதை இப்படியொன்று இருக்கிறது" – அத்ர ச ஸம்ப்ரதாயவித ஆக்யாயிகாம் ஸம்ப்ரசக்ஷதே – என்கிறார். ஆசார்யாளின் பாஷ்யத்தை மேலும் விரித்து உரை எழுதின ஆனந்தகிரி என்பவரே

இது திராவிடாசார்யார்கள் சொன்ன கதை என்று பேரை வெளியிட்டிருக்கிறார்.

கதையிலே வேடப் பையனாக இருந்தவன் ராஜ குமாரனாக உருமாறவா மாறினான்? Transform ஆனானா என்ன? வேடப் பையனாகவே தன்னை நினைத்துக் கொண்டிருந்த காலத்திலும் அவன் ராஜா பிள்ளைதானே? இதை முதலில் தெரிந்து கொள்ளாதிருந்தான். அதனால் வேடன் மாதிரி வாழ்க்கை நடத்தினான். உண்மையைத் தெரிந்து கொண்டு விட்டவுடன், ராஜகுமாரனாகவே எப்போதும் இருந்தவன், ராஜகுமாரனாகவே அநுபவத்தில் வாழ்ந்து காட்டினான். இரண்டுபேர் இல்லை; ஒருத்தன் இன்னொருத்தனாக மாறவில்லை. ஒரே பேர்வழிதான் முதலில் தன்னைத் தானே புரிந்து கொள்ளாமல் இருந்தான். அப்புறம் புரிந்துகொண்டு விட்டான். புரியாத நிலையில் வேடனாக எங்கேயோ கீழ்நிலையில் கிடந்தவன் புரிந்து கொண்டவுடன் ராஜகுமாரனாக உயர்வு பெற்றுவிட்டான். அப்புறம் சண்டை போட்டு ஸாம்ராஜ்யாதிபதியாகவே ஆகிவிட்டான்.

வேட வேஷத்தில் (வேட வேடத்தில்: 'வேஷம்' என்பது தமிழில் 'வேடம்' என்றாகும்) இருந்த ராஜகுமாரன் மாதிரித் தான் நாமெல்லாம் ஜீவாத்மா என்ற வேஷத்தில் ஸம்ஸாரிகளாகவே நம்மை நினைத்துக் கொண்டிருந்தாலும் வாஸ்தவத்தில் நாமும் பரமாத்மாவேதான். வேஷம் இப்படியானாலும் நமக்கு உள்ளே இருக்கிற வஸ்து இப்போதும் பரமாத்மாதான். இந்திரியங்கள் இழுக்கிற வழியில் ஓடி வேட்டையாடிக் கொண்டிருக்கிறோம். நாம் பிரம்மம் என்று தெரிந்து

கொள்ள வேண்டும். தெரிந்து கொண்டாலும் அதை அநுபவத்தில் கொண்டுவர முடியாதபடி இந்திரியங்கள் இழுத்துக் கொண்டே இருக்கும். ராஜகுமாரனாகவே இருந்தாலும் வாஸ்தவத்தில் அரசத்தன்மையை அடைவதற்காக அவன் அஸ்திர சஸ்திர அப்பியாஸம் பண்ணி எதிரிகளை ஜயித்து ஸாம்ராஜ்யாதிபதியான மாதிரி, நாமும் பிரம்மமாகவே எப்போதும் இருந்தாலும் அதை உணராமலிருப்பதால் கர்மத்தில் ஆரம்பித்து பக்தி வழியாக, ஞான சாதனைகளைச் செய்து, உட்பகைகளையெல்லாம் ஜயித்து, ஆத்ம ஸாம்ராஜ்யத்தில் ராஜாவாக ஆகவேண்டும். 'ஸம்ராட்' - அதாவது ராஜா – என்றே உபநிஷத்தில் ஆத்ம ஞானியைச் சொல்லியிருக்கிறது.

ஜஸும் ஸ்படிகமும் ஒரே மாதிரித்தான் வெளிப்பார்வைக்கு இருக்கின்றன. ஆனால் ஜஸ்தான் உருகி ஜலமாகுமே தவிர, ஸ்படிகம் ஜலமாகாது. ஏனென்றால் எது ஜலமாகவே இருந்து அப்புறம் உறைந்து வேறே வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறதோ அதுதான் உருகி மறுபடியும் தன் ஸ்வயமான பூர்வ ரூபத்தை அடைய முடியும். பிரம்மமே ஜீவனாக உறைந்து போயிருப்பதால்தான், இந்த ஜீவாத்மாவும் உருகிப் போனால் மறுபடியும் பிரம்மமாகவே அநுபவத்தில் ஆக முடிகிறது.

ஜஸ் தானாக கரைகிறது. நாம் கரைய மட்டோம் என்கிறோம்.

கல்லேனும் ஜய ஒரு காலத்தில் உருகும்

என் கல்நெஞ்சம் உருகவில்லையே!

என்று தாயுமான ஸ்வாமிகள் நம் நிலைக்கு இறங்கி வந்து நமக்காகத்தான் பாடியிருக்கிறார்.

நம்மை உருக வைக்க ஒன்று தேவைப்படுகிறது. கதையில் ராஜகுமாரனை practical- ஆக ராஜகுமாரனாக்குவதற்காக ஒரு மந்திரி வந்த மாதிரி, நம்மை உருக்கி 'நிஜ நாமாகப்' பண்ண ஒருத்தர் வேண்டும். அவன் 'வரமாட்டேன்' என்று முரண்டு செய்தாலும் வலிய இழுத்த மந்திரி மாதிரி, பாரமார்த்திகத்தின் பக்கமே போகமாட்டேன் என்ற அடம்பிடிக்கிற நம்மைக் கட்டி இழுக்க ஒருத்தர் வேண்டும். அப்படி ஒருத்தர் இருக்கிறாரா? நம்மை நம்முடைய நிஜ நாமாக ஆக்கக்கூடிய ஒருத்தர் இருக்கிறாரா?

இருக்கத்தான் செய்கிறார்.

வேடப் பையனுக்கு "நீதானப்பா ராஜகுமாரன்" என்று சொல்லிப் புரிய வைத்து, அவனுக்கு அஸ்திரப் பயிற்சி தொடுத்து, அவனை ராஜாவாக்குவதற்காக அவனை விட ஜாஸ்தி உழைத்த மந்திரி இந்த ஒருத்தருக்குத்தான் ரூபகம் [உருவகம்]. நமக்கு நம் பரமாத்மத்வத்தை எடுத்துச் சொல்லி, அதை நாம் அநுபவமாக்கி கொள்வதற்கான ஸாதனைகளைச் செய்ய வைத்து, நம் கர்மா பாக்கி தீருவதற்காக தாமே தபஸைச் செலவு செய்து உபகாரம் பண்ணும் அந்த ஒருத்தர் தான் குரு என்பவர்.

குரு பக்தி

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

குரு

குரு பக்தி

'ஈச்வரனைக் காட்டிலும், குரு பெரியவர்; ஈசுவர பக்தியைக் காட்டிலும் குருபக்தி விசேஷம் என்கிறார்களே, ஏன்?' என்று கேட்டால்: ஈசுவரனை யாரும் பார்க்கவில்லை. பிரத்தியக்ஷமாக நாம் பார்க்கக்கூடிய ஒரு மனிதர் எப்போதும் சுத்தமாய், ஞானம் உடையவராய், அசைவு இல்லாத சித்தம் உடையவராய், அப்பழுக்கு இல்லாமல் நமக்குக் கிடைத்து விட்டால் நாம் எந்த மனச்சாந்திக்காக ஈசுவரனிடத்தில் போகிறோமோ அந்த சாந்தி இவரிடம் பக்தி செலுத்தினாலே கிடைத்து விடுகிறது. அதனால் தான்,

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு: குருர் தேவோ மஹேச்வர:।

என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ச்லோகத்தில் குருவுக்கும் பரமாத்மாவுக்கும் அபேதம் சொல்லியிருப்பது ஒரு விசேஷம். Incidental - ஆக இதிலேயே இன்னொரு விசேஷம், இதில் விஷ்ணு, சிவன் இருவரையும் சொல்லியிருப்பதால் இந்த ச்லோகத்தைச் சொல்லி நாம் குருவந்தனம் பண்ணினால் நமக்கு சிவ– விஷ்ணு அபேத பாவமும் உண்டாகி விடும்.

ஜகத்தை ஸ்ருஷ்டிப்பது, பரிபாலிப்பது போன்ற பல காரியங்கள் ஈசுவரனுக்கு இருக்கின்றன. அவை எல்லாம்

குருவுக்கு இல்லை. அவனுக்கு ஆபீஸ் உண்டு; இவருக்கு ஆபீஸ் இல்லை. ஆபீஸ் இருக்கிறவனிடம் போய்த் தொந்தரவு கொடுப்பதைவிட ஆபீஸ் இல்லாமல் சும்மா இருக்கிறவரிடம் நம் காரியத்தை மிக எளிதாக முடித்துக் கொண்டு விடலாம். ஈச்வரனுக்கு என்ன என்ன உத்தமமான குணங்கள் எல்லாம் இருக்கின்றனவோ அவை எல்லாம் இந்த குருவிடத்தில் இருக்கின்றன. இவர் சுத்தமானவர், பொய் சொல்லாதவர்; வஞ்சனை தெரியாதவர்; இந்திரியங்களை எல்லாம் வென்றவர்; கருணை நிறைந்தவர்; மகா ஞானி. இவரைப் பிரத்யக்ஷமாக பார்க்கிறோம். பகவானையோ பிரத்யக்ஷத்தில் பார்க்க முடியவில்லை. ஆகவே குருவின் திருவடிகளைப் பற்றிக்கொண்டு பக்தி செய்ய ஆரம்பித்துவிட்டால், ஈசுவர பக்தியினால் நமக்கு என்ன அனுகூலங்கள் உண்டாகின்றனவோ அத்தனையும் சுலபமாக உண்டாகிவிடும். அதனால் தான் குருபக்தி உயர்ந்தது என்று சொன்னார்கள்.

ஆனால் தெய்வ பக்தியை மறக்கக்கூடாது. இந்த குருவை இவனோடு சேர்த்து வைப்பதே தெய்வந்தானே? தெய்வ அநுக்ரஹம் இல்லாவிட்டால் இந்த குருவை இவன் எப்படி அடைவான்?

துர்லபம் த்ரயமேவைதத் தேவாநுக்ரஹ ஹேதுகம்|

மநுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷ ஸம்ச்ரய:||

"தெய்வாநுக்ரஹத்தாலேயே ஒருத்தனுக்குக் கிடைக்கிற மூன்று பெரிய வாய்ப்புகள்: ஒன்று, மநுஷ்ய ஜன்மா கிடைப்பது. இரண்டு, ஸத்ய தத்துவத்தைத் தெரிந்து

கொள்ள வேண்டும் என்ற ஆசை பிறப்பது; மூன்று, மஹா புருஷனான ஒரு குரு கிடைப்பது" என்று ஆசார்யாள் 'விவேக சூடாமணி' ஆரம்பத்தில் சொல்லியிருக்கிறார்.

எல்லோருக்கும் எக்காலத்திலும் குரு ஈச்வரன்தான்: தக்ஷிணாமூர்த்தி தான்.

ஸ பூர்வேஷாமபி குரு: காலேநாநவச்சேதாத்|| *

நம் குருவுக்கும் அந்த குருவுடைய குருவுக்கும் அவருடைய குருவுக்கும் ஞானம் எப்படிப் பூர்ணமாக ஏற்பட்டிருக்கும்? இப்படி ஒவ்வொருவருக்கும் ஒரு குருவைச் சொல்லிக்கொண்டே போனால் கடைசியில் ஒருத்தருக்கு ஸாக்ஷாத் ஈசுவரனேதான் குருவாக இருந்து ஞானத்தை தந்திருக்க வேண்டும் என்று தெரியும். அதனால்தான் தெய்வத்தை மறக்கக் கூடாது என்றார்கள்.

இதையே வேறு விதமாகவும் சொல்வதுண்டு. குரு, ஈசுவரன் என்ற இரண்டு பேர் என்று வைத்துக் கொள்ளாமல் ஈசுவரனே குருவாக வந்திருக்கிறான் என்று வைத்துக் கொண்டு விட்டோமானால் குரு பக்தி, ஈசுவர பக்தி என்ற இரண்டு தனித்தனியாகப் பண்ணவேண்டாம். குருவே ஈசுவரன் என்று கருதி அந்த குருவான ஈசுவரன் ஒருத்தனிடத்திலேயே பூர்ண சரணாகதி பண்ணிவிடலாம். குரு பரம சுத்தமானவராக, உத்தமமானவராக இல்லாவிட்டாலும்கூட, இவர் மூலமாக நாம் நித்திய சுத்தனும் உத்தமோத்தமனுமான ஈசுவரனையே பக்தி பண்ணுவதால், அந்த ஈச்வரனே இவர் மூலமாக நமக்கு அநுக்கிரஹம் பண்ணிவிடுவான். இதனால் தான் குருவையே ப்ரம்மா, விஷ்ணு, சிவன், இந்த மூன்றுக்கும்

ஆதாரமான பரப்பிரம்மம் என்று எடுத்த எடுப்பில் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு : குருர் தேவோ மஹேச்வர :|

குருஸ் ஸாக்ஷாத் பரப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம :||

பிரம்ம வித்யா ஆசார்யர்களில் முக்கியமான வியாஸரைப் பற்றிச் சொல்கிறபோது 'குருர் ப்ரம்மா' சுலோகத்தின் தாத்பரியத்தையே இன்னும் ரஸமாகச் சொல்வதுண்டு.

அசதுர்வதநோ ப்ரஹ்மா த்விபாஹுரபரோ ஹரி :|

அபாலலோசந சம்பு: பகவாந் பாதராயண :||

என்பார்கள். பாதராயணர் என்று வியாஸருக்குப் பெயர். அவர் 'அசதுர்வதநோ ப்ரஹ்மா', அதாவது நான்கு முகம் இல்லாத ஒரு முக பிரம்மா; 'த்விபாஹு: அபரோ ஹரி:', நாலு கையில்லாமல் இரண்டு கையுள்ள ஹரி, அதாவது விஷ்ணு; 'அபால லோசந:சம்பு:', நெற்றிக் கண் இல்லாத போதிலும் சிவன்!

குருவைவிட சிரேஷ்டமானவர் இல்லை. நமக்கு அவரிடத்தில் பூர்ணமான நம்பிக்கை ஏற்பட வேண்டும். அது நிஜமான நம்பிக்கையாக இருக்க வேண்டும். நமக்கு அவரிடத்தில் ஈசுவரனே இப்படி வந்திருக்கிறான் என்ற நம்பிக்கை வந்துவிட்டால், அப்புறம் தனியாக ஸ்வாமிகூட வேண்டாம். இந்த நம்பிக்கையே, அவரிடத்தில் நாம் வைக்கிற பக்தியே நம்மைக் கடைத்தேறச் செய்து விடும்.

வைஷ்ணவர்களுக்கு ஆசார்ய பக்திதான் மிகவும் பிரதானம்.

ஈசுவர அபராதம் பண்ணினால் ஈசுவரனிடத்திலேயே போய் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்பது இல்லை; ஆசார்யன் மன்னித்து விட்டாலே போதும். ஈசுவரனுடைய கோபம் தணிந்து விடும். ஆனால் குருவினிடத்தில் அபசாரம் பண்ணிவிட்டு ஈசுவரனிடத்தில் போனாலும் ஒன்றும் நடக்காது. குருவிடத்திலேயே போய்த்தான் அந்த அபசாரத்துக்கும் நிவிருத்தி தேடிக்கொள்ள வேண்டும் என்று ஸ்வாமியே சொல்லி விடுவார்.

சிஷ்யனுக்காக குருவே பரமாத்மாவிடம் சிபாரிசு பண்ணினால் அவருக்குக் கோபம் போய் இவனுக்கு அநுக்கிரஹம் பண்ணிவிடுவார். ஆனால் குருவுக்கே கோபம் வந்து விட்டால் ரக்ஷிக்கிறவர் எவருமே இல்லை. இப்படி ஒரு ச்லோகம் கூட இருக்கிறது. 1

அதனால்தான் குரு பக்தியை மிகவும் விசேஷமாக சாஸ்திரங்கள் சொல்கின்றன. உத்தமமான குரு கிடைக்கவில்லை என்றால், அறைகுறையாக ஒரு குரு இருந்தாலும் அவரை வழிகாட்டியாக வைத்துக்கொண்டு ஈசுவர பக்தி செய்ய வேண்டும்.

நாம் பக்தி செய்வதால் ஈசுவரனுக்கோ குருவுக்கோ ஒரு லாபமும் இல்லை. நமக்கேதான் பெரிய லாபம், என்ன லாபம் என்றால் :

நாம் அழுக்கு உடையவர்களாக இருக்கிறோம்; சஞ்சலம் உடையவர்களாக இருக்கிறோம். மனஸை ஒரு

நிமிஷங்கூட ஓர் இடத்தில் நிறுத்த முடியாதவர்களாக இருக்கிறோம். எப்போதும் சுத்தமாக, நிரம்பிய ஞானம் உடையவனாக, அசங்காமல், ஆடாமல், பட்ட கட்டை மாதிரியாக இருக்கிறவனை நாம் நினைத்தால்தான், நாம் நினைக்கிற அவனது நிச்சலனமான நிலை நமக்கும் வரும். நாமே அவனாக ஆகிவிடுவோம். ஈசுவரனைத்தான் அப்படி நினைக்க வேண்டும் என்பது இல்லை. இப்படிப்பட்ட குணங்கள் உடையதாக எதை நினைத்துக் கொண்டாலும், நம்மைப் போன்ற ஒரு மனிதரையே இவ்வளவு குணங்கள் உடையவராகக் கருதி அவரையே குருவாக நினைத்து பக்தி செய்தாலும் நாம் அப்படியே ஆகிவிடுவோம். மனஸ் நின்றால்தான் ஆத்மா பிரகாசிக்கும்; அதாவது நமது நிஜமான ஆனந்த நிலை தெரியும். மனஸை நிறுத்துவதற்காகத்தான் குரு பக்தி வேண்டும், ஈசுவர பக்தி வேண்டும் என்று நம் சாஸ்திரங்கள் சொல்கின்றன.

குருவின் அநுக்கிரஹத்தில்தான் ஞானம் கிடைக்கும் என்ற விஷயம் சாந்தோக்ய உபநிஷத் சொல்லியிருக்கிறது. ஆசார்யவான் புருஷோ வேத - ஆசார்யனைப் பெற்ற புருஷன் தான் ஞானத்தை அடைகிறான் - என்று அதில் இருக்கிறது. ஒரு சின்னக் கதை போல இதைச் சொல்லியிருக்கிறது. கந்தார தேசத்தை (இந்த நாள் காண்டஹார் என்பது அதுதான்) சேர்ந்த ஒருத்தனின் கண்ணைக் கட்டிக் கொண்டு போய் ஜனசஞ்சாரமில்லாத ஒரு இடத்தில் விட்டு விட்டால் எப்படியிருக்கும்? அவன் எப்படித் தன் ஊருக்குத் திரும்புவான்? கிழக்கா, மேற்கா, தெற்கா, வடக்கா என்று தெரியாமல்தானே தவித்துக்

கொண்டிருப்பான்? இந்த மாதிரிதான் மாயை நம் கண்ணைக் கட்டி இந்த லோகத்தில் விட்டிருக்கிறது. அப்புறம் கண்ணைக் கட்டிக் காட்டில் விடப்பட்டவனிடம் ஒருவன் வருகிறான். கட்டை அவிழ்த்து விடுகிறான். கந்தார தேசத்துக்குப் போகிற வழியையும் சொல்லிக் கொடுக்கிறான். அதற்கப்புறம் இவன் அழவில்லை. பயப்படவில்லை. அவன் சொன்ன மாதிரியே போய்த் தன் ஊரை அடைகிறான். இந்த மாதிரிதான் ஆசார்யனின் உபதேசத்தால், நாம் எங்கேயிருந்து வந்தோமோ அந்தப் பரமாத்ம ஸ்தானத்துக்கு வழியைத் தெரிந்து கொண்டு அங்கே போய்ச் சேருகிறோம் என்று சாந்தோக்யம் சொல்கிறது.

ஜகத்குரு என்று பிரஸித்தி பெற்ற ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் எங்கு பார்த்தாலும் குருவின் பெருமையைச் சொல்கிறார். "ஒருவனுக்கு எத்தனைதான் பெருமை இருந்தால் என்ன? குருவின் சரணாரவிந்தங்களில் அவன் தன் மனஸைக் கட்டிப் போட்டிருக்காவிட்டால் என்ன பிரயோஜனம்?' என்று கேட்கிறார். 'என்ன பிரயோஜனம்?' என்று ஒரே ஒரு தரம் தரம் கேட்கவில்லை. நாலு தரம், " தத:கிம்? தத:கிம்? தத:கிம்? தத:கிம்?' 'என்று கேட்கிறார். "குர்வஷ்டகம்" (அதாவது குரு ஸ்துதியான எட்டு ச்லோகங்கள்) என்ற ஸ்தோத்தரத்தில், ஒவ்வொரு அடி முடிவிலும் இப்படி நான்கு தரம், மொத்தம் முப்பத்திரண்டு தடவை கேட்கிறார்.

முடிவில், தம் சரீரத்தைவிட்டு அவர் புறப்படுவதற்கு முந்திப் பண்ணின உபதேசத்திலும்,

ஸத் வித்வான் உபஸ்ருப்யதாம் ப்ரதிதினம் தத்பாதுகா ஸேவ்யதாம்

ப்ரஹ்மைகாக்ஷரம் அர்த்யதாம் ச்ருதிசிரோவாக்யம் ஸமாகர்ணயதாம்
என்கிறார். "ஸத்தான வித்வானை ஆசார்யனாக வரிப்பாயாக! தினந்தோறும் அவருக்குப் பாத பூஜை பண்ணுவாயாக! அவரிடமிருந்து உபதேசம், பிரணவ உபதேசம், உபநிஷத மஹாவாக்ய உபதேசம் எல்லாம் வாங்கிக் கொள்வாயாக!" என்கிறார். ("ப்ரதி தினம் தத்பாதுகா ஸேவ்யதாம்" என்று சொன்ன பகவத் பாதாளின் பாதுகைக்கு, இன்றைக்கும், ஒரு நாள் விடாமல் பிரதி தினமும் மடத்தில் பாத பூஜை நடந்து கொண்டிருக்கிறது!)

இங்கே சொன்னது ஸந்நியாஸம் தருகிற ஸந்நியாஸ குருவைப் பற்றி ஆகும். அந்த ஆசிரமத்தில்தான் பிரணவோபாஸனை, மஹாவாக்ய அநுஸந்தானம் இவற்றின் மூலம் மோக்ஷத்தைத் தேடுவது. இது நாலு ஆச்ரமங்களில் கடைசி. முதலில் பிரம்மச்சரிய ஆச்ரமத்தில் ஒரு கிருஹஸ்த குருவை அடைந்து வேதாத்யயனமும், வேதகர்மாநுஷ்டானமும் பண்ணுவதிலிருந்து ஆரம்பித்து, கடைசியில் இந்த ஸந்நியாஸ நிலைக்கு வருமாறு ஆசார்யாள் உபதேசித்திருக்கிறார்.

முதலில் வேத கர்மா எதற்கு? மனமடங்கிப் பரமசாந்தமாக இருந்து கொண்டு கேட்டால்தான் குருமூலமாகப் பெறுகிற பிரணவமும் மஹாவாக்யமும் பரம புருஷார்த்தமான மோக்ஷத்தைக் கொடுக்கும். மனம் ஒருமைப்பட்டு

கேட்காவிட்டால் பிரயோஜனம் இராது. உழுத இடத்தில் ஊன்றினால் தான் விதை பிரயோஜனப்படும். நாம் எவ்வளவோ உபந்நியாஸம் கேட்கிறோம்; கீதை முதலானதுகளை நிறைய வாசிக்கிறோம். ஆனாலும் நமக்கு ஏன் துக்கம் போக வில்லை? ஞானம் உண்டாகவில்லை?நாம் சித்த சுத்தி பண்ணிக்கொள்ளாமலே கேட்பதாலும் படிப்பதாலும்தான் அது நிரந்தரமாக நின்று பலன் தருவதில்லை. "வைதிக கர்மாக்களை நிறையப் பண்ணி ஈச்வரார்ப்பணம் செய். பலனை எதிர்பார்க்காமல், அதை பகவத் ஆராதனமாக நினைத்துக் கொள்" என்று ஆசார்யாள் இந்த உபதேசத்தின் ஆரம்பத்தில் சொன்னது, சித்த சுத்தியை, மனஸின் அமைதியை உண்டாக்கி கொள்வதற்காகத்தான். கர்மாவல் மனஸை உழுதாக வேண்டும். அது முதல் காரியம். அப்புறம் ஜலம் பாய்ச்ச வேண்டுமல்லவா? அதுதான் பக்தி. நம் ஹ்ருதயத்தில் ஜலம் பாய்ச்சுவது பக்திதான். ஈச்வரனிடமும், ஆசார்யனிடமும் பக்தி செலுத்த வேண்டும். குரு பக்தி இருந்தால் மனது தானாக சாந்தத்தை அடைகிறது. பெரியவர்களுக்கு, மஹான்களுக்கு முன் ஒன்றை வாசித்தாலும் கேட்டாலும் அல்லது அவர்களே ஒன்றைச் சொன்னாலும், அது மனஸில் நன்றாகப் பதிகிறது. ஏனென்றால் அவர்கள் ஸந்நிதானத்தில் நம் மனஸ் ஒரு விதமான சாந்தத்தோடு இருக்கிறது. கிளப்பலும், லைப்ரரியிலும் இப்படி இருக்கவில்லை. அதனால்தான் அங்கெல்லாம் படிப்பதும், கேட்பதும் நிற்காமல் ஓடிப்போய்விடுகிறது. மனஸ் குரு பக்தியில் நனைத்தால் உடனே பலன் உண்டாகும். அதனால்தான் மஹான்களாக இருக்கிறவர்களிடமும்

உபதேசம் கேட்க வேண்டும், எதையும் குருமுகமாக கற்க வேண்டும் என்பது. நாம் எவ்வளவோ படித்திருக்கிறோம். ஆனாலும் நமக்குள்ள அஞ்ஞான தடிப்பு கொஞ்சம் கூட குறையவில்லை. அது எந்த இடத்தில் குறையுமோ அங்கே போய்ச் சேர்ந்தால் அஞ்ஞானத் தடிப்புத் தேய்ந்து போய், ஞானம் உதயமாகத் தொடங்கும். அப்படிப்பட்ட இடம் தான் ஆசார்யனின் சந்நிதி.

பிரம்மசரிய ஆசிரமத்தில் இப்படிச் சித்த சுத்திக்காக ஒரு குருவிடமிருந்து வேதங்களைத் தெரிந்து கொண்டபின், கிருஹஸ்தாச்ரமத்தில் அந்த வேதத்தில் சொன்ன கர்மாக்களைப் பண்ணி மனஸின் அழுக்குக்களையெல்லாம் போக்கடித்துக் கொண்டபின், ஸந்நியாஸ ஆசிரம குருவிடம் மஹாவாக்ய உபதேசத்தை வாங்கிக் கொண்டால் அது பயிராக விளைகிறது. அதாவது ஜீவன் பிரம்மத்தோடு ஐக்கியத்தைப் பெறுகிறான். அதற்கு வழி பண்ணுவது, ஆரம்பித்திலும் சரி, முடிவிலும் சரி குரு தான். இதனால் தான் குருபக்தியை எங்கு பார்த்தாலும் சிறப்பித்துச் சொல்லியிருக்கிறது.

* "காலத்தில் கட்டுப்படாதவனானதால் ஈசனே ஆதி குருவுக்கும் குரு." (யோக ஸூத்ரம் I.26)

1. சிவே ருஷ்டே குருஸ்த்ராதா குரௌ ருஷ்டே ந கச்சன || (-"குரு கீதை")

[குருகுல வாஸம்]

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

குரு

குருகுல வாஸம்

ராஜாங்கம் என்பது இந்த லோகத்தில் இருக்கும் பொழுது நாம் நன்றாக இருப்பதற்காக ஏற்பட்டது. துஷ்டர்களால் ஸாதுகளுக்குக் கஷ்டம் ஏற்படக் கூடாது, பலிஷ்டர்களால் துர்பலர்களுக்குக் கஷ்டம் உண்டாகக் கூடாது. இந்த ரக்ஷணையைத் தருவதற்கும், ஜனங்களுடைய மற்ற இகலோக ஸௌக்கியங்களை ஏற்படுத்தி தருவதற்காகவும், ராஜா என்று ஒருத்தனை வைத்தார்கள். இப்போது மந்திரி சபை என்று வைத்துக் கொண்டிருக்கிறோம். எதுவானாலும் நமக்கு இந்த ரக்ஷணையையும் வசதிகளையும் தருகிற ராஜாங்கத்துக்குப் பிரதியாக நாம் சேவை செய்கிறோம்; பலவிதமான வரிகள் செலுத்துகிறோம்.

இந்த லோகம் சாச்வதமல்ல. சாச்வதமான இன்னொரு லோகத்தில் நாம் இடம் பிடித்தாக வேண்டும். அதற்கு நாம் போகவொட்டாமல் உட்பகை என்று சொல்லுகிற ஆறு துஷ்டர்கள், பலிஷ்டர்கள் நம்மைத் தடுக்கிறார்கள் * . இவர்களிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொண்டு, பக்தி, த்யான, ஞானாதிகளில் நாம் முன்னேறினால்தான் அந்த சாச்வத லோகத்துக்குப் போய் சேரலாம். இப்போதும் எப்போதும் நமக்குள்ளேயே இருப்பதுதான் அந்த சாச்வத லோகம் என்றால்கூட, அதற்குப்போய்ச் சேருவதுதான் பிரம்மப் பிரயத்தனமாக இருக்கிறது. அங்கே போவதற்கு நமக்கு ராஜாவாக, ராஜாங்கமாக ஸஹாயம் செய்கிறவரைத்தான் ஆசார்யர் என்பது. இந்த லோகத்தில்

ஸுகமாக இருப்பதற்காக ராஜா (அல்லது மந்திரி ஸபை) வேண்டியிருக்கிறது போலப் பரலோகம் (என்கிற உள்ளுலகமான ஆத்ம லோகம்) போகும் படியான காரியத்துக்கு ஆசார்யர் வேண்டும். இந்த லோகத்தில் மட்டும் நன்றாக இருந்தால் போதாது. இந்த லோகத்தில் நன்றாக இல்லாமலே போனால்கூடப் பரவாயில்லை. ஆனால் இங்கேயிருந்து போன பிறகு மறுபடி திரும்பி வராமல் அந்த சாச்வத லோகத்தில் சேர வேண்டியது ரொம்பவும் அவசியம்.

இந்த நச்வரமான [அழியும் தன்மை வாய்ந்த] லோக வாழ்க்கையின் போதேதான் நாம் அந்த சாச்வத வாழ்க்கைக்கு வழி பண்ணிக்கொள்ள வேண்டும்.

வாழ்க்கையைத் தொடங்குகிற போதே இந்த முக்கியமான காரியத்துக்கு ஏற்பாடு பண்ணிவிடவேண்டும். அதற்காகத்தான் பாலப் பருவத்திலேயே பிரம்மச்சரிய ஆச்ரமம் என்று ஆரம்பித்து குருகுல வாஸம் பண்ணவைத்தார்கள்.

இப்படி வைத்ததால், அந்தச் சின்ன வயசிலேயே இந்த லோகம் பொய், பரமாத்மா தான் நிஜம் என்று அதனிடமே ஒரு ஜீவனைத் திருப்பி விட்டார்கள் என்று அர்த்தமில்லை.

குருகுலத்தில் ஆத்ம வித்யா சாஸ்திரங்களைச் சொல்லிக் கொடுத்தது வாஸ்தவம். ஆனால் அதற்காக அப்போதே மாணாக்கனை லோக வாழ்க்கையை விட்டு ஓட்டி விடுவதாக அர்த்தமில்லை. மற்ற ஸகல வித்தைகளையும், சாஸ்திரங்களையும் (இவற்றில்

இக்காலத்திய ஸயன்ஸ்களில் அநேகம் வந்துவிடும்) , காவியங்களையும் நாடகங்களையும் கூட குருகுலத்தில் கற்றுக் கொடுத்தார்கள். இந்தப் பெரிய லோக நாடகத்தில் அரும்பு பூவாகி, பூ பிஞ்சாகி, பிஞ்சு காயாகி, அந்தக் காய்தான் கனிந்து பழமாகும் என்ற நியாயம் நம் பூர்விகர்களுக்கு நன்றாகத் தெரியும். அபூர்வமாக எங்கேயோ எவரோ பால்யத்திலேயே பரம ஞானியாக வைராக்யத்தோடு மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்காரலாமே ஒழிய, மற்றவர்கள் படிப்படியாகத்தான் ஏறவேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும்.

ஆனால் இது படிப்படியாகத்தான் இருந்தாலும் ஏற்றிவிடுவதாக இருக்க வேண்டும். இறக்கிவிடுவதாக விட்டுவிடக்கூடாது என்றுதான் பிரம்மசரியத்துக்கு அப்புறம் கிருஹஸ்தாச்ரமமும், அதிலே தாம்பத்யம், சந்ததி விருத்தி எல்லாவற்றையும் வைத்து அப்புறம் ஓரளவு வைராக்யத்தோடு குடும்பத்தைவிட்டு, ஆனாலும் வைதீக கர்மாவை விடாமல் நடத்துகிற வானப்ரஸ்த ஆச்ரமத்தை விதித்து, கடைசியில் பூவை இயற்கையாக முதிரவிட்டுக் காயாகிக் கனிகிற நிலையில் ஸந்நியாஸத்தை வைத்தார்கள். லோக வாழ்க்கையை எடுத்த எடுப்பிலே விட்டுவிட முடியாது. அதனாலே அப்படிச் செய்ய வேண்டாம். ஆனால் அதே சமயத்தில் சாச்வதமான பரலோக வாழ்க்கையையும் மறக்கக்கூடாது. இவன் ஒரேடியாக ஏறாவிட்டால் பரவாயில்லை; ஆனால், ஒரே உருளலாக உருண்டு கீழேயும் போய் விடக்கூடாது – என்றுதான் தர்ம சாஸ்திரங்களை இவனுக்கு வழிகாட்டியாக வைத்து, இவன் எந்த ஸ்டேஜில், எந்த

ஆசிரமத்திலிருந்தாலும், எப்போதும் இவனுக்குக் கொஞ்சம் ஆத்ம சிந்தனை, தெய்வ பக்தி, நல்லொழுக்கம், பரோபகார பண்பு எல்லாம் இருக்கும்படி சீர்படுத்திக் கொடுத்தார்கள். ஆரம்பித்திலேயே வாழ்க்கையின் லக்ஷ்யமான பரம தத்வத்துக்கு விதையைப் போட்டுவிட வேண்டும்; அப்போதுதான், ஒருவன் உடனே அதற்கென்று தன்னை அர்ப்பணம் பண்ணிக்கொள்ளாவிட்டாலும், அவன் லோக வாழ்க்கை நடத்துகிற போதுகூடக் கெட்டுப்போய்விடாமல், இருக்கிற நிலையிலிருந்து இறங்கி விடாமல், கொஞ்சம் கொஞ்சமாக மேலே போவான் என்று தான் அவனுக்கு பிரம்மச்சரிய ஆசிரமத்திலேயே வேத உபநிஷத்துகளை உபதேசித்து விட்டார்கள். அதை உடனே உபயோகித்துக் கொண்டு [practical -ஆக apply பண்ணிக்கொண்டு] ஆத்ம விசாரம் பண்ணி ஜீவன் முக்தனாகிவிட வேண்டும் என்றில்லை. அது பாங்கில் போட்ட டிபாஸிட் மாதிரி. இவன் பக்குவம் அடைகிற வரையில் அதிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் வட்டி மாதிரி வந்து கொண்டிருந்தால் போதும். அப்புறம் உரிய பருவத்தில் அதைப் பூராவாக draw பண்ணி எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த டிபாஸிட்டை வாழ்க்கை ஆரம்பிக்கிறபோதே போட்டு இந்த வட்டி கிடைக்கிற மாதிரியாகப் பண்ணிவிடவேண்டும். இல்லாவிட்டால் இவன் யௌவனத்தின் வேகத்திலும், நடுத்தர வயசின் உணர்ச்சி விகாரங்களிலும், ஏற்ற தாழ்வுகளிலும், விருத்தாப்பியத்தின் அசக்தத்திலும் [பலவீனத்திலும்] வீணாகவே போய்விடுவான்.

தற்போது பள்ளிக்கூடங்களிலும் காலேஜ்களிலும் ஒருத்தனின் ஜீவனோபாயத்துக்காக உதவுகிற படிப்பைச்

சொல்லிக் கொடுப்பதுபோல, ஆதி காலத்திலும் இவனுக்குத் தொழிலைச் சொல்லிக் கொடுத்தார்கள். ஆனாலும் தொழிலைச் கொடுக்கிறபோதே அதோடு நிறுத்திக் கொள்ளாமல் அத்யாத்ம சாஸ்திரங்களையும் சொல்லிக் கொடுத்தார்கள். இதனால் இப்போது நடக்கிறமாதிரி வயிற்றுப்பாட்டுக்கு மட்டும் வழி செய்து விட்டு, ஜனங்களின் நன்னடத்தை (மொராலிடி) , ஆத்மாபிவிருத்தி இவற்றுக்கு ஒன்றுமே செய்யாத மாதிரி அப்போது இல்லை. பரலோக லக்ஷ்யம், தர்மம்- மொராலிடி இவற்றைக் கெட்டியான அஸ்திவாரமாக வைத்துக்கொண்டே ஜீவன விருத்தி நடக்க வழி செய்தார்கள்.

ஒரேடியாக மநுஷ்ய ஸ்வபாவத்தைக் கவனிக்காமல் இவனை அத்யாத்ம மார்க்கம், வைராக்யம் என்று சின்ன வயசிலேயே கட்டுப்படுத்தவுமில்லை; ஒரேடியாக இவனைத் தறுதலையாக அறுத்துவிட்டிருக்கவும் இல்லை.

ரொம்பவும் sympathy, understanding என்று சொல்கிறார்களே அப்படி மநுஷ்ய இயல்பை அனுதாபத்தோடு புரிந்து கொண்டு, ஆனாலும் ஆத்மா வீணாகப் போகாதபடி, அதை ஹிதமாகப் பக்குவம் பண்ணுகிற தினுசில், ஆச்ரம தர்மங்களை விபாகம் செய்திருக்கிறார்கள் [வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.] காளிதாசன் வாக்கிலே இது தெரிகிறது1. முதலில் 'சைசவே அப்யஸ்த வித்யானாம்' என்கிறான். அப்படியென்றால், பாலப் பிராயத்திலேயே சகல வித்தைகளையும் கற்றுக்கொள்ள ஆரம்பித்துவிடவேண்டும். வேதம், உபநிஷத்துக்களைக் கூட அப்போதே தெரிந்து கொண்டுவிட வேண்டும். எதுவும்

மனஸில் பதிந்து ஏறுகிற காலம் அதுதான். ஆனால் இதற்காக உடனே ஆத்மவிசாரம் என்று ஓடிப்போய் மூக்கைப் பிடித்துக் கொள்ளவேண்டுமா என்றால், அப்படி இல்லை. அடுத்தபடியாக 'யௌவனே விஷயைஷிணாம்' என்கிறான். யௌவனத்தில் கிருஹஸ்த தர்மத்தை மேற்கொண்டு இல்லற ஸுகங்களை (துக்கங்களையும்தான்) அநுபவிக்க வேண்டும். இந்த ஸுகமும் உண்மையில் துக்கம் தான் என்ற பேச்சு இந்த ஸ்டேஜில் எடுபடாது. ஆனாலும் இவன் குருகுலவாஸத்தின் போது அநுஷ்டித்த பிரம்மச்சரிய நியமமும், படித்த வேத உபநிஷத்துகளும் இவனை ஒரேடியாக விஷய ஸுகங்களில் தலைதெறித்துப் போகாதபடி கட்டுப்படுத்தும். இது இவன் ஓரளவுக்கு பொருள் சேர்த்து ஸம்பாத்தியம் செய்கிற சமயமும் ஆகும். ஆனாலும் பொருளாசையே பேராசையாகி விடாது. இவன் தர்மத்தை ஒருக்காலும் மீறாதபடி, முன்னே செய்த வித்யாப்யாஸம் இவனை ரக்ஷிக்கும். அதோடு இவனுக்கு இருக்கிற கர்மாநுஷ்டானம், அத்யாபனாதிகள், ஏராளமான யாகங்கள், யக்ஞங்கள் இவை யாவும் இவனை ஒரு நெறியில் (discipline --ல்) வைத்துச் சித்தம் ரொம்பவும் விகாரப்பட்டுப் போகாமல் காப்பாற்றும்.

இது பிராம்மணனுக்குச் சொன்னது. எந்த ஜாதியாரானாலும் அவரவர்களுக்கேற்பட்ட தொழிலைச் செய்து, பேராசையும் பொறாமையும் இல்லாமல் செய்து, ஈச்வரார்ப்பணம் பண்ணினால் அதுவே சித்த சுத்தி தந்துவிடும். தர்மாவிருத்தோ பூதேஷு காமோஸ்மி என்று பகவானே சொன்னதுபோல்2, தர்மம் தப்பாமலே சில

இயற்கையான ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்வது யௌவனத்துக்கென்று சாஸ்திரமே அங்கீகரித்தது. நாளடைவில் கர்மாநுஷ்டானங்களின் பலம் ஏறி ஏறி ஆசை, கோபம் முதலான வேகங்களெல்லாம் தாமாகக் குறைந்து கொண்டு வர ஆரம்பிக்கும். இப்போது கொஞ்சம் கிழத்தனமான வயசும் வந்திருக்கும். இந்த ஸமயத்தில் வார்த்தகே முனிவ்ருத்தீனாம் என்கிறான் காளிதாஸன். கிழப்பருவம் ஆரம்பிக்கிற காலத்தில் முனிவர்களை, தபஸ்விகளை அடுத்து உபதேசங்களைப் பெற்று, ஆசைகளைப் போக்கிக்கொண்டு, (விராகம், வீதராகம் என்று சொல்வார்கள் - ஆசை போன நிலையை, அப்படிப்பட்ட விரக்தியுடன்) நிறைய பகவத் த்யானம், தபஸ், ஆத்ம சிந்தனையென்று ஈடுபடவேண்டும். வானப்ரஸ்தம் என்ற இந்த ஆச்ரமத்தில் வீடு வாசலையும், பிள்ளை குட்டிகளையும் விட்டுவிட்டுப் பத்தினியை மட்டும் கூட அழைத்துக் கொண்டுபோய்க் காட்டிலே வைதீக கர்மாக்களை அநுஷ்டானம் பண்ண வேண்டும். அந்த அநுஷ்டானத்துக்கு ஸஹாயம் செய்வதற்காகத்தான் பத்தினி வேண்டும்; விஷய ஸுகத்துக்காக அல்ல. அப்புறம் கடைசி ஸ்டேஜ். யோகேனாந்தே தநுத்யஜாம் - அதாவது வைதீக கர்மாக்களையும் விட்டு விட்டு ஸந்நியாஸியாகி, சரீரத்தை விடுகிறபோது கொஞ்சம் கூட அழுகையில்லாமல் பேரானந்தமாக பரமாத்மாவுடன் இரண்டறச் சேர்ந்து விடுகிற யோகமாக மரணத்தை ஆக்கிக் கொண்டு விடவேண்டும்.

அந்தப் பேரானந்த மோக்ஷத்துக்கு எங்கே அஸ்திவாரம் போட்டிருக்கிறது என்றால் "சைசவே

அப்யஸ்தவித்யானாம்" என்று பாலபருவத்தில் படிக்கிறபோதே போட்டிருக்கிறது. அப்பொழுது போட்டுக் கொடுத்த moral foundation (தர்ம நெறி அடிப்படை) தான் அப்புறம் ஜன்மா முழுக்க கை கொடுத்துக் கொண்டே வந்து, குழந்தையாக இவன் படித்த உபநிஷத்தின் லக்ஷ்யமான ஜீவப் பிரம்ம ஐக்கியத்தை இவன் முடிவிலே சாதிக்கத் துணை செய்கிறது. குழந்தை பருவத்திலேயே ஒழுங்கில் கொண்டு வந்து விடவேண்டும். ஒழுக்கத்திற்கு முதல் அங்கமாக என்ன வேண்டும்? பணிவு ; அடக்கம்; விநயம்; கட்டுபாடு இருந்தால்தான் ஒழுக்கத்தோடு முன்னேற முடியும். கட்டுப்பட்டு நடப்பதற்கு அடக்கம் முதலில் வேண்டும். அஹங்காரம் போனால்தான் அடக்கம் வரும். ஸகல சீலங்களுக்கும் அடிப்படையாக இருக்கவேண்டியது விநயம்தான்.

மருந்தைவிட பத்தியம் முக்கியம். கல்வி என்கிற மருந்தைவிட விநயம் என்ற பத்தியம் முக்கியமானது. இந்த விநயத்தைத்தான் பழைய காலத்தில் மாணாக்கனின் பிரதான லக்ஷணமாக வைத்தார்கள். 'விநயமுடையவன்' என்ற பொருள் கொண்டதான 'விநேயன்' என்றே மாணாக்கனுக்குப் பேர். இந்த விநயகுணம் வருவதற்காகவேதான் முக்கியமாக அவனை குருகுலவாஸம் என்று ஒரு ஆசார்யனிடத்திலேயே வாழும்படியாகக் கொண்டு விட்டார்கள். எட்டு வயசுக்குள் உபநயனம் (பூணூல் கல்யாணம்) பண்ணி குருகுலத்துக்கு அனுப்பினார்கள்.

உபநயனம் என்றால் என்ன? 'நயனம்' என்றால் 'அழைத்துப் போவது'. கண்ணில்லாதவனை இன்னொருத்தன் தான்

அழைத்துப்போக வேண்டியிருக்கிறது. இதிலிருந்து கண்தான் நம்மை அழைத்துப் போகிறதென்று தெரிகிறது. எனவேதான் அதற்கு நயனம் என்று பேர். 'உப' என்றால் 'ஸமீபத்தில்' என்று ஒரு அர்த்தம். 'உபநயனம்' என்றால் 'ஸமீபத்தில் அழைத்துப் போகிறது'. எதற்கு, அல்லது யாருக்கு ஸமீபத்தில்? குருவுக்கு ஸமீபத்தில்தான். அதாவது, குருகுலத்தில் கொண்டு விடுவதற்குப் பூர்வங்கம்தான் உபநயனம்.

இதுவரை குழந்தையாக மனம் போனபடி விளையாடிக் கொண்டு இருந்தவன் இப்போதுதான் ஒரு பொறுப்போடு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதான ஒரு ஆச்ரமத்தை ஏற்கிறான். இங்கே ஆச்ரமம் என்றால் பர்ணசாலை என்று அர்த்தமில்லை. வாழ்க்கையில் ஒரு நிலை – stage of life - என்று அர்த்தம். இந்த முதல் ஆச்ரமத்துக்கு பிரம்மசர்ய ஆச்ரமம் என்று பெயர். இங்கே குருதான் முக்கியம்.

முதல் ஆச்ரமத்தில் இவனுக்கு ஸகலமுமாக இருப்பது குருதான். கடைசியில் ஸந்நியாஸ ஆச்ரமத்திலும் இன்னொரு குரு வருகிறார். இப்போது போட்ட பூணூலைக் கத்தரித்துப் போடுவதற்கு அந்த குரு வந்தாக வேண்டும். முதல் குரு சொல்லிக் கொடுத்த உபநிஷத் லக்ஷ்யமான பிரம்மத்தை இவன் ஸாக்ஷாத்காரம் பண்ணுவதற்கு ஸஹாயம் செய்வதற்காக அந்தத் துறவியான குரு வருகிறார். "குரு பரம்பரை" என்று நாம் நமஸ்காரம் பண்ணுவதெல்லாம் அந்த ஸந்நியாஸி குருமார்களைத்தான்.

ஆனால், அந்த குருவிடம் அந்தியத்திலாவது நாம் போகிறதற்கு யோக்யதையை உண்டாக்கித் தருபவர் யாரென்றால் பிரம்மச்சரிய ஆச்ரமத்தில் நமக்கு ஸகல வித்தைகளையும் தரும் இந்த குரு தான். இவர் அவரைப் போல சந்நியாஸி அல்ல. கிருஹஸ்தர்தான். கடைசி குரு பிரம்மவித் (பிரம்மத்தை அறிந்தவர்) என்றும் முதல் குரு வேதவித் (வேதத்தை அறிந்தவர்) என்றும் சொல்வதுண்டு. இந்த வேதவித்துக்கு பிரம்மத்தைப் பற்றிப் படிப்பறிவு நிறைய உண்டே தவிர அநுபவ ஞானம் இருக்கும் என்று சொல்லமுடியாது. இவரும் ஒரு பிரம்மவித்திடம் போய் இனிமேல்தான் ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு பிரம்மத்தை அநுஸந்தானம் பண்ணவேண்டும்.

இதனால் இவர் மட்டம் என்று இல்லை. ஆச்ரம தர்மப்படி வாழ்க்கையின் எந்த ஸ்டேஜில் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி அப்படியிருப்பவர் இவர். மாணாக்கண் விநேயனாக இருக்க வேண்டும் என்றால் அப்படிப்பட்ட விநயத்தை அவனுக்கு ஊட்டுபவராக, அவனது இயல்பான மரியாதைக்கு பாத்திரராக இவர் வாழ்ந்தாக வேண்டும். நல்ல கர்மாநுஷ்டாதாவாக இருக்கவேண்டும். தர்மிஷ்டராக இருக்க வேண்டும். மாணாக்கனிடம் கண்டிப்பாக இருந்து திருத்தும் போதே, மாதா பிதாக்களை விட்டுத் தன்னிடம் வாஸம் செய்ய வந்திருக்கிற அந்தக் குழந்தையிடம் பரிவுள்ளவராக இருக்க வேண்டும். 'விநேயன்' என்பது போலவே மாணாக்கனுக்கு 'அந்தேவாஸி' என்று இன்னொரு பெயர் இருக்கிறது. 'அந்தேவாஸி' என்றால், 'உடன் வஸிக்கிறவன்' என்று அர்த்தம் சொல்கிறார்கள். 'உபநயனம்' என்னும் போது

'ஸமீபத்தில் அழைத்துப் போகிறது' என்பதை 'குருவுக்கு ஸமீபத்தில் அழைத்துப் போகிறது' என்று பொருள் கொண்டது போலவே, அந்தேவாஸி ('உடன் வஸிக்கிறவன்') என்றாலும் 'குருவுடன் வஸிக்கிறவன்' என்று அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். வாஸ்தவத்தில் 'அந்தே' என்றால் 'உடன்' என்றோ 'பக்கத்தில்' என்றோ அர்த்தம் இல்லை. 'அந்தே' என்றால் 'உள்ளுக்குள்ளே' என்றுதான் அர்த்தம். அந்தரங்கம், அந்தராத்மா, அந்தர்யாமி என்றெல்லாம் சொல்லும்போது 'அந்த' என்றால் 'ஹ்ருதயத்துக்குள்ளே' என்றே அர்த்தம். அம்மாதிரி ஆச்சார்யன் தன் ஹ்ருதயத்துக்கு உள்ளேயே சீஷப்பிள்ளைகளை அழைத்து வைத்துக் கொண்டு விட வேண்டும். அத்தனை அன்பு காட்ட வேண்டும்.

சிஷ்யனிடம் இவருக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது. அதை ஆற்றாவிட்டால் இவருக்கே பெரிய ஹானி உண்டாகும். இந்தக் காலத்தில் உபாத்தியாயர்கள், 'பையன் உருப்பட்டால் என்ன? உருப்படாவிட்டால் என்ன? நம் சம்பளம் எப்படியும் வருகிறது' என்று இருக்கலாம். அந்த மாதிரி குருகுலம் நடத்துகிறவர் இருக்க முடியாது. ஏனென்றால் அங்கே குரு-சிஷ்ய உறவு வெறும் வியாபார ஒப்பந்தம் (பிஸினெஸ் கான்ட்ராக்ட்) மாதிரி இல்லை. இப்போதுள்ள படிப்புமுறை பிஸிநெஸ் காண்ட்ராக்ட்டுக்கும் ஒரு படி கீழே! பிஸினஸில்கூட ஒரு விலை கொடுத்தால் அதற்கான ஒரு வஸ்துவைத் தரத்தான் வேண்டும். ஆனால் இங்கேயோ சம்பளம் (விலை) கொடுத்த ஒரு மாணாக்கன் ஃபெயில் ஆனால் கூட அது உபாத்தியாரைப் பாதிப்பதில்லை. குருகுலம்

நடத்துகிற பழைய கால குருவோ ஒரு மகத்தான பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார். அது என்ன?

"சிஷ்ய பாபம் குரும் வ்ரஜேத்" என்று நீதிசாஸ்திரம் சொல்கிறது. அதாவது சிஷ்யன் பண்ணுகிற பாபம் குருவையே போய்ச் சேருகிறது. இவனுக்கு வெறும் படிப்பை மட்டும் சொல்லித் தராமல், இவனை ஒழுக்கமுள்ளவனாக்கவும் அவர் பொறுப்பு எடுத்துக் கொள்கிறார். எடுத்துக் கொண்ட பொறுப்பை சரியாக நிறைவேற்றாவிட்டால், அதற்கு தண்டனை உண்டு. சிஷ்யனை இவர் யோக்கியனாக்க முடியவில்லை, அவன் ஒரு பாபம் செய்கிறான் என்றால், அந்தப் பாபம் சிஷ்யனைத் தாக்காது; அவனைச் சீர்திருத்தத் தவறிய குருவையே சென்றடையும்.

ஒரு குடும்பத்தில் பத்தினி ஒழுங்கு தப்பி நடந்தால் அதன் பாப பலன் அவளைத் தாக்காது; அவளை நல்வழிபடுத்தத் தவறிய புருஷனைத்தான் சேரும். தேச காரியத்திலே ஒரு பிரஜை தப்பு பண்ணினால், அதற்கான பாபம் அவனைத் திருத்தி வைக்காத ராஜாவைத்தான் சேரும். அந்த ராஜாவே பண்ணும்படியான பாபம், அவனை நல்வழிப்படுத்தத் தவறிய ராஜப் புரோஹிகிதரைச் சேரும். நீதி சாஸ்திரத்தில் இப்படியாக ஒரு பர்த்தாவுக்கும், ராஜாங்கம் நடத்துகிறவனுக்கும், ஆசார்யனுக்கும் ரொம்பப் பெரிய பொறுப்பைத் தந்திருக்கிறது.

ராஜா ராஷ்ட்ர க்ருதம் பாபம் ராஜபாபம் புரோஹிதம்।

பர்த்தாரம் ஸ்த்ரீக்ருதம் பாபம் சிஷ்ய பாபம் குரும் வ்ரஜேத்॥

ஒரு பர்த்தா என்றால் மனைவியும், ராஜாவானவன் குடிமக்களையும், குரு என்கிறவன் சிஷ்யனையும் அதட்டி அதிகாரம் பண்ணிக் கொண்டிருப்பதற்காக ஏற்பட்டவர்கள் அல்ல. இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஆதீனத்தில் உள்ளவர்களை நல்வழிப்படுத்தக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். அந்த கடமையை நிறைவேற்றத் தவறினால் தங்கள் ஆதீனத்தில் இருக்கிறவர்களின் பாபத்தைத் தாங்களே வாங்கிக்கொள்ள வேண்டியவர்கள் ஆவார்கள். "சிஷ்ய பாபம் குரும் வ்ரஜேத்" என்று தெரிந்து கொண்டிருந்த பழையகால குரு எப்படியிருந்திருப்பார்? சிஷ்யனை நல்வழிப்படுத்துவதற்கான ஆத்ம சக்தி பெற்றவராகத் தம்மைப் பண்ணிக் கொண்டிருப்பார். அதாவது தாமே முன்னுதாரணமாக (example ஆக) அந்த நல்வழியில் நடந்து காட்டிக் கொண்டிருப்பார். "எங்களிடத்திலுள்ள நல்ல நடத்தைகளை (அஸ்மாகம் ஸுசரிதானி) நீ பின்பற்று" என்று தைத்திரீய உபநிஷத்தில் குரு சிஷ்யனிடம் சொன்னது இதைத்தான்.

அப்படிப்பட்டவரிடத்தில் ஒரு ஜீவனை பால்யத்திலேயே கொண்டு சேர்த்து விடவேண்டும்.

அந்தக்காலத்தில் ஒவ்வொரு பிதாவுக்கும் வேத சாஸ்திரங்கள் நன்றாகத் தெரிந்துதான் இருந்தது. இருந்தாலும் அவரவரும் தம் பிள்ளைகளுக்குத் தாங்களே கற்றுக் கொடுக்காமல் இன்னொரு குருவிடம் கொண்டுபோய் விட்டார்கள். ஏன்? அப்பா- பிள்ளை என்றால் ரொம்பவும் ஸ்வாதீனம் கொடுத்துப் போய்விடும். அப்பாவும் செல்லம் கொடுத்து விடுவார். பிள்ளையும்

ஸ்வாதீனத்தினால் அவருக்கு ரொம்பவும் அடங்கி நடக்காமல் ஸ்வாதந்திரியமாக இருக்கப் பார்ப்பான். அடக்கம் (விநயம்) என்பதான வித்யையின் ஆதாரப் பண்பே இல்லாவிட்டால் இவன் என்ன படித்துதான் என்ன பிரயோஜனம்?

உபநிஷத்துக்களைப் பார்த்தால் இது தெரியும். பாரத்வாஜர் மஹா பெரியவர். ஆனாலும் அவருடைய புத்ரரான ஸுகேசர் என்பவர் ஸமித்தும் கையுமாக குருவைத் தேடிப்போய் பிப்பலாதரை அடைந்தார் என்று "பிரச்சனோபநிஷத்" ஆரம்பிக்கிறது. (ஸமித்து என்றால் சுள்ளி. எளிதில் பிரீதி அடைந்துவிடும் அந்தக்கால குருமாருக்கு இதுதான் பெரிய காணிக்கை. அவருடைய யக்ஞ அநுஷ்டானத்துக்கு சுள்ளி தானே முக்கியம்?) இப்படி இன்னம் பல பேரையும் சொல்லியிருக்கிறது. ச்வேதகேது என்ற பிரம்மச்சாரியைப் பற்றி சாந்தோக்ய உபநிஷத்தில் சொல்லியிருக்கிறது. இவன் தகப்பனாரிடமே வித்யாப்யாஸம் பண்ணிவிட்டு ராஜ சபைக்குப் போகிறான். அங்கே ராஜாவாயிருந்த ஸத்வித்வானான ப்ரவாஹணர் இவனைக் கேள்விகள் கேட்கிறார். இவனுக்கு ஒரு கேள்விக்குக் கூட பதில் சொல்லத் தெரியவில்லை. பிதாவிடமே வித்யாப்யாஸம் பண்ணினால் பிரயோஜனமில்லை என்று இங்கே indirect ஆக (மறைமுகமாக) சொல்லுகிற மாதிரி இருக்கிறது.

அடக்க குணம் வருகிறது ரொம்பவும் கஷ்டம். அதுவும் கல்வி கற்கக் கற்கத் "தான் அறிவாளி" என்ற அஹங்காரமும் ஏறிக்கொண்டே தான் வரும் என்பது இந்த ச்வேதகேதுவின் இன்னொரு கதையிலிருந்து தெரிகிறது.

இதுவும் சாந்தோக்கியத்திலேயேதான் வருகிறது. இவன் பன்னிரண்டு வருஷங்கள் பிதாவைவிட்டு வெளி ஆசார்யர்களிடம் படித்துவிட்டுத் திரும்புகிறான். தனக்கு எல்லாம் தெரிந்துவிட்டது என்ற கர்வத்துடன் திரும்புகிறான். அப்போது இவனுடைய பிதாவே கர்வத்தை ஒடுக்குகிறார். பிரம்மத்தைப் பற்றி அவனிடம் கேட்டு, அவனுக்கு அது அடியோடு தெரியவில்லை என்று அவனே உணர்ந்து, தலைகுனிந்து, தம்மிடம் உபதேசம் வேண்டும்படி பண்ணுகிறார்.

அடக்கம் வேண்டும் என்பதற்காகவேதான் "குருகுல வாஸம்" என்று வைத்து, வீட்டைவிட்டுப் பிள்ளைகளை அங்கே அனுப்பி வைத்தார்கள். இப்போது வீட்டை விட்டு ஹாஸ்டல் என்று வெளியே போகிறபோது, வீட்டில் வளருவதைவிட இவன் இன்னம் ஒழுங்கு தப்பிப் போகிறதைத்தான் அதிகம் பார்க்கிறோம். அந்த நாளில் இப்படி இல்லாமலிருந்ததற்கு முதல் காரணம் ஆசார்யனாக இருக்கப்பட்டவனின் வாழ்க்கை உதாரணம். இரண்டாவதாக, பிரம்மசாரிக்கு வைத்த அநேக நியமங்கள். குறிப்பாக பிக்ஷாசர்யம். பிக்ஷாசர்யம் என்றால் பிக்ஷை எடுப்பது என்று அர்த்தம்.

பூணூல் போட்டவுடன் பாலனைப் பார்த்துத் தகப்பனார் "பிக்ஷாசர்யம் சர" என்கிறார். 'பிச்சை வாங்கி குருவிடம் கொடுத்து, அதில் அவர் கொடுப்பதைச் சாப்பிடும் நியமத்தை மேற்கொள்ளு' என்று அர்த்தம்.

நாற்பது வேலி ஐம்பது வேலி நிலக் குடித்தனக்காரனாலும், தன் புத்திரனை இப்படி பிக்ஷாசர்யம் பண்ணும்படி குருகுலத்தில் கொண்டு விட்டுவிட வேண்டும்.

பிதா "பிக்ஷாசர்யம் சர" என்றவுடன் "பாடம்" என்று இதற்குப் புதுப் பூணூல்காரன் பதில் சொல்லவேண்டும். "பாடம்" (Baadham) என்றால் "அப்படியே செய்கிறேன்" என்று அர்த்தம்.

எத்தனை பணக்காரன் வீட்டுப்பிள்ளையானாலும் குருகுலவாஸத்தின் போது ஒரு கோவணத்தைக் கட்டிக் கொண்டு வீடுவீடாகப் போய் "பவதி பிக்ஷாம் தேஹி" என்று பிச்சை வாங்க வேண்டும். ஏன் இப்படி வைத்தார்கள்? இவனுடைய அஹங்காரத்தைக் குறைக்க வேண்டும். இவனுக்குப் படிப்பாளி என்ற கர்வம் வந்துவிடக் கூடாது. படிப்பின் வாஸ்தவமான பயனை இவன் அடைய வேண்டுமானால் இவனை விநயமுள்ளவனாக்க வேண்டும் என்பதற்கே இப்படி பிக்ஷாசர்யம் என்பதை வைத்திருக்கிறது.

சிஷ்யன் பிக்ஷை வாங்கி வந்ததை குருவிடம் சேர்த்து விடுவான். அவர் பத்தினியிடம் கொடுத்துப் போடச் செய்வார். அதாவது சிஷ்யர்களுக்கு குரு போட்டுத்தான் சாப்பாடு கிடைத்தாக வேண்டும்.

இவன் அகத்திலே சாப்பிட்டுக் கொண்டு, ஸ்கூலிலோ, காலேஜிலோ போய்ப் படிக்கிறபோது, "வாத்தியார் கிடக்கிறார்"என்று அலக்ஷ்ய புத்தியோடு நினைக்கிறான். அவர் போட்டுத்தான் இவன் சாப்பிட்டாக வேண்டும்

என்கிற போது இப்படி நினைக்க மாட்டான். அவருக்கு அடங்கித்தான் நடப்பான்.

சிஷ்யர்கள் வாங்கிவரும் பிக்ஷை இவர்களுக்கு மட்டுமின்றி குருவின் குடும்பத்துக்கும் போதுமானதாக இருக்கும். ஆனாலும் அப்போதிருந்த ஏற்பாட்டில் சிஷ்யன் குருவுக்குச் சோறு போடுகிறான் என்கிற மாதிரித் தெரியாமல், குருவே சிஷ்யனுக்குப் போடுகிறார் என்கிற மாதிரியாகத்தான் ஒழுங்கு செய்திருந்தது.

பிரம்மச்சாரி சாப்பிடுவதற்குக் கணக்கு இல்லை. வயிறு நிறைய சாப்பிடலாம். ஆனாலும் நாக்கு ருசிக்காக ஆத்மாபிவிருத்தியைப் பாதிக்கும்படியான பதார்த்தங்களை தின்னக்கூடாது. இப்போது ஹாஸ்டலில் சுதந்திரமாக இருக்கிற மாணாக்கண் எதை வேண்டுமானாலும் தின்கிறான். அதனால் மனோவ்ருத்தி [மனத்தின் போக்கு] கெட்டுப் போகிறது. குருகுல வாஸத்தில் குரு இப்படிப்பட்ட அபக்ஷயங்களை [உண்ணக் கூடாதவற்றை] சிஷ்யனுக்குப் போடமாட்டார்.

சாதாரணமாக ஒரு வேதத்தையும் அதன் அங்கங்களையும் மற்ற வித்யைகளையும் கற்பதற்குப் பன்னிரண்டு வருஷங்கள் பிடிக்கும். அதாவது எட்டு வயசுக்கு குருவிடம் வந்த பையன் சுமார் இருபது வயசு வரையில் குருகுலவாஸம் பண்ணியாக வேண்டும். பதினாலு பதினைந்து வயசுக்கு மேல் மனஸில் விகாரங்கள் ஏற்படக்கூடிய பருவம். "காளைப் பருவம்"என்று சொல்கிறபடி காளை மாதிரி இஷ்டப்படி ஓடவேண்டும் என்று வேகம் ஏற்படுகிற சமயம். இப்படிப்பட்ட

சமயத்திலே சாந்தராகவும், பிரியராகவும், நல்ல சீலமுள்ளவராகவும் இருக்கிற குருவிடத்திலே படித்துக் கொண்டு பிக்ஷாசர்யம் பண்ணி வருவதானது பிரம்மசாரியின் இந்திரியங்களைக் கட்டுப்படுத்தி, அவனை நல்ல பிரம்ம தேஜஸ் உள்ளவனாக ஆக்குகிறது. சரியாக இந்த விகாரங்கள், வேகங்கள் தோன்றுகிற காலத்திலேயே இவனுக்கு குருகுல வாஸத்தையும், பிக்ஷாசர்யத்தையும் ஏற்படுத்தினால் அது விபரீதமாகத்தான் ஆகும். பெரிதாக வெள்ளம் வருகிறபோது கரைபோடப் பார்த்தால், கரையையும் கரைபோட வருகிறவர்களையும்கூட அது அடித்துக் கொண்டு போய் விடும். அந்த மாதிரிதான் இதுவும். அதனால்தான் இவனை இதற்கெல்லாம் ரொம்பவும் முந்தி, ஒரு ஆறு ஏழு வருஷத்துக்கு முந்தியே, எட்டு வயசுக் குழந்தையாக இருக்கிறபோதே, குருகுல வாஸத்துக்கும், பிக்ஷாசர்யத்துக்கும் பழக்கப்படுத்திவிடச் சொல்கிறது நம் சாஸ்திரம். காமம் உள்ளே புகுமுன்பே காயத்ரி புகுந்து இவனைச் சுத்தப்படுத்த ஆரம்பித்து விட்டது. அதுவும் இதரப் பிரம்மசர்ய ஆசிரம நியமங்களும், எல்லாவற்றுக்கும் மேல் பிக்ஷாசர்யமும் இவனுக்கு அடக்கத்தை உண்டாக்கி விடுகின்றன. இதில் இந்திரிய அடக்கமும் சேர்ந்துவிடுகிறது. பிரம்மசாரி என்பவன், பேருக்கு அப்படியில்லாமல், வாஸ்தவமாகவே அப்படி இருப்பான்.

இகலோகத்துக்கு ராஜா (ராஜாங்கம்) மாதிரிப் பரலோகத்துக்குக் குரு என்று சொன்னேன். நேராகப் பரலோகத்தைக் காட்டிக் கொடுக்கிற ஸந்நியாஸ ஆசிரம குருவைப் போலவே, இதற்கு ஆதியில் அஸ்திவாரம்

போட்ட வித்யாப்யாஸ குருவும் முக்கயமானவர் என்று சொன்னேன். ராஜாங்கத்துக்கு சேவை செய்கிறோமல்லவா? வரி கொடுக்கிறோமல்லவா? இப்படியே ஆரம்ப ஆசார்யர், அந்திம ஆசார்யர் இரண்டு பேருக்கும் பண்ணவேண்டும். பணிவிடை புரிய வேண்டும். தக்ஷிணை தர வேண்டும். நாம் ஒருத்தருக்கு ஒன்றைத் தராமல், அவரிடமிருந்து மட்டும் பிரயோஜனத்தை அடைந்துவிட முடியாது. எந்த வஸ்துவானாலும் அதற்கு விலை கொடுத்து வாங்கினால்தான் நம்மிடம் நிலைத்து நிற்கும். ஸந்நியாஸ குருவுக்கு தக்ஷிணை என்று அதிகம் வேண்டாம். பணிவிடையே முக்கியம். வித்யாப்யாஸ குருவுக்கு இரண்டும் வேண்டும். அவருக்குக் குடும்பம் உண்டு. அதற்கு பிக்ஷாசர்யம் செய்து பெற்றுவந்த அன்னம் மட்டும் போதாது. இந்தக்குரு யக்ஞாதி கர்மாநுஷ்டங்கள் பண்ணவேண்டியவர். எனவே இதற்கு வேண்டிய திரவியத்தை அவருக்கு தக்ஷிணையாகத் தரவேண்டும். இப்போது படிக்கிற காலத்திலேயே ஃபீஸ் கட்டுகிற மாதிரி தக்ஷிணை கொடுத்தால், 'நாம் கொடுத்துதான் வாத்தியார் பிழைக்கிறார்' என்ற திமிர் வந்து, குரு பக்தி போய்விடும். இதனால்தான், ஒருவன் கல்வியை முடித்துவிட்டு, குருகுல வாஸத்தைப் பூர்த்தி பண்ணிவிட்டுத் திரும்புகிறபோதுதான், அவர் கேட்கிற தக்ஷிணையைத் தர வேண்டும் என்று சாஸ்திரத்தில் வைத்திருக்கிறது. குரு செய்ததற்கெல்லாம் பிரதி செய்யவே முடியாது என்றாலும், முடிந்த மட்டும் சேவை செய்து காணிக்கை கொடுக்க வேண்டும்.

சாந்தமும் விநயமும் இருந்த வரையில் வித்யை வளர்ந்தது. இப்போது சாந்தத்தைக் கெடுத்து சலனத்தைக் கொடுத்துத் தடுமாற வைக்க எத்தனை உண்டோ அத்தனை ஸினிமாவும் கதைப் புஸ்தகங்களும், ஸ்கூலில் படிக்கிற நாளிலேயே வந்து சேர்ந்து விடுகிறது. காமம் புகுந்து விகாரப் படுத்தாத பிரம்மச்சரியம் என்பது படிக்கிறவனுக்கு இல்லை. சாந்தத்தைக் கெடுத்துச் சலனத்தைப் பெரிதாகக்கொடுக்கிற இன்னொரு சத்ரு குரோதம். அதைத்தான் பள்ளிக்கூட நாளிலிருந்தே இன்றைய அரசியல் கட்சிகள் பசங்களுக்கு ஊட்டி வருகிறது. சாந்தம் போய், விநயம் போய், அகம்பாவமும் கர்வமும் வந்தபின் அவற்றோடுகூட உண்மையான வித்யையும் போய்விட்டது.

பையன் வீட்டிலேயே ட்யூஷன் கற்றுக் கொண்டால் பையன் யஜமான், வாத்தியார் சேவகன் என்றே அர்த்தம். ஹாஸ்டலிலும், காலேஜிலும்கூடத் 'தான் யஜமான்' என்பதால் தான் ஸ்டிரைக் பண்ணுகிறான். வார்டனையும் ப்ரொபஸரையும் அடிக்கப் போகிறான். ஏனென்றால் இங்கெல்லாமும் முதலில் பையனிடம் கையை நீட்டிப் பணத்தை வாங்கிக் கொண்டு விடுகிறார்கள். குருகுலத்திலோ கடைசியாகத் தான் தக்ஷிணை. இம்மாதிரி விஷயங்களில் நம் பூர்விகர்களின் ஸைகாலஜி – நுட்பம் ஆச்சரியமாயிருக்கிறது! பல வருஷம் அவரோடு சேர்ந்து அன்பாகப் பழகினபின் சிஷ்யனுக்கே "எதைத் தருவோம், எதைத்தான் தரக் கூடாது?" என்று நன்றியும் ஆர்வமுமாக இருக்கும். இம்மாதிரி சந்தர்ப்பத்தில் "இந்திராணியின் குண்டலத்தைக் கொண்டு வா!

நாகரத்தினத்தைக் கொண்டு வா! என்று கேட்ட குருமாரும் உண்டு. ஆனால் இப்படிக் கேட்டவர்கள் அபூர்வமே. சிஷ்யனால் இம்மாதிரி அஸாத்யத்தையும் சாதிக்க முடிகிறது என்று காட்டி அவனைப் பெருமைப்படுத்தவே இவர்கள் இப்படிக் கேட்பார்கள். பொதுவில் எந்த குருவும் துராசை பிடித்து எதுவும் கேட்கமாட்டார். அல்ப ஸந்தோஷியாக எதிலும் த்ருப்திப் பட்டு விடுவார்.

தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரச்னேன ஸேவயா।
உபதேக்ஷ்யந்தி தே ஞானம் ஞானின: தத்வதர்சின: ॥

என்று பகவான் கீதையில் சொல்கிறார். "பரமாத்ம தத்வத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அப்படித் தெரிந்து கொண்டவர்களான ஞானிகளிடம் போ. அவர்களிடம் வணக்கத்தோடு, பணிவோடு (ப்ரணிபாதேன) நடந்து கொள்; அவர்களுக்கு சேவை பண்ணு (ஸேவயா) ; கவனமாகக் கேட்டுக் கேட்டு (பரிப்ரச்னேன) உபதேசங்களைப் பெற்றுக் கொள். நீ இப்படியெல்லாம் இருந்தால், அவர்கள் நிச்சயம் ஞாநோபதேசம் தருவார்கள்" என்கிறார்.

தத்வதர்ஷிகளான ஞானிகளைப் பற்றி சொன்னதால் இங்கே தக்ஷிணையை பற்றிச் சொல்லவில்லை. சேவையை மட்டும் சொல்லியிருக்கிறது. தைத்ரிய உபநிஷத்தில் 'வித்யாப்யாஸம் செய்விக்கிற குரு இஷ்டப்படும் தக்ஷிணையை அவருக்கு கொடுக்க வேண்டும்' என்று தெளிவாக சொல்லியிருக்கிறது: ஆசார்யாய ப்ரியம் தனம் ஆஹ்ருத்ய.

"இஷ்டப்பட்ட தக்ஷிணையைக் கேள்" என்றதால், அந்த குருவானவன் துராசை பிடித்துப் பெரிதாக எதுவும் கேட்டு விடமாட்டான். சிஷ்ய லக்ஷணம் மாதிரியே குரு லக்ஷணமும் உண்டல்லவா?

தைத்திரீயோபநிஷத்தில் ஒரு ஆசார்யரானவர் சிஷ்யன் படிப்பை முடித்துவிட்டு அகத்துக்குத் திரும்பும் போது அவனுக்குப் பண்ணும் உபதேசத்தைச் சொல்லியிருக்கிறது. இதை உபநிஷத் காலத்திய கான்வகேஷன் அட்ரஸ் [பட்டமளிப்பு விழா உரை] என்று வேடிக்கையாகச் சொல்கிறார்கள்! அதில் "ஸத்யம் பேசு; தர்மப்படி நட; வேத அத்யயனத்தை ஒரு நாளும் விட்டுவிடாதே (அவரவரும் ஸவதர்மப்படியான தொழிலை விடக்கூடாது என்று அர்த்தம்); இந்த வேத தர்மம் என்றைக்கும் நடக்க வேண்டியதாதலால் கிருஹஸ்தாச்ரமம் ஏற்று, ஸந்ததியை உண்டாக்கி, அதற்கு இந்த வேதச் செல்வத்தை (அல்லது வேத விதிப்படி அவரவருக்கும் லோக க்ஷேமார்த்தமாக ஏற்பட்ட கர்மாவைக்) கொடு. தேவ, பித்ரு காரியங்களை ஒரு நாளும் விடாதே. தாயை தெய்வமாகக் கொள்ளு: தந்தையை தெய்வமாகக் கொள்ளு: ஆசார்யனை தெய்வமாகக் கொள்ளு: அதிதியை தெய்வமாக கொள்ளு: வேதவிதி மீறாத கர்மாக்களையே பண்ணு" என்றெல்லாம் சொல்லி விட்டு, குருவானவர், "எங்களிடம் நீ எப்பேர்ப்பட்ட நல்ல நடத்தையை (ஸுசரித்தை)ப் பார்த்திருக்கிறாயோ அதன்படியே நீயும் நட; வேறு விதமாகப் போகாதே" என்று சொல்கிறார்.

இதிலிருந்து குருவாகப்பட்டவர் மிகுந்த நல்லொழுக்கத்துடன் இருந்திருக்க வேண்டும் என்று ஏற்படுகிறது.

இப்படி தங்களுடைய நன்னடத்தையைத் தாங்களே சொல்லிக் கொள்வதும் கூட அஹங்காரமாகிவிடும் என்பதால் உடனேயே, "எங்களைவிட சிரேஷ்டமான பிராமணர்கள் எவர்களோ" என்று ஆரம்பித்து, அப்படிப்பட்ட பெரியவர்களிடம் நடந்து கொள்ள வேண்டிய விதத்தைச் சொல்கிறார். சிஷ்யன் மாதிரியே ஆசார்யனுக்கும் விநயம் இருக்கவேண்டும் என்பதால் சொன்ன வார்த்தைதான் இது; உபதேசம் பண்ணுகிற ஆசார்யரும் வாஸ்தவத்தில் ரொம்ப சிரேஷ்டர் தான் என்றே வைத்துக் கொள்ள வேண்டும்.

என்ன செய்வது, எப்படிச் செய்வது என்கிற விஷயங்களில் சிஷ்யனுக்கு சந்தேகம் வந்தால், அவன் யாருடைய உதாரணத்தைப் பார்த்து அதன்படி செய்யவேண்டும் என்பதைச் சொல்கிறார். "தீர விசாரித்துத் தெளிவு பெறும் திறமை வாய்ந்தவர்களும், சாஸ்திர முறைப்படியே ஒழுகுபவர்களும், பிறத்தியார் ஏவுதலுக்குக் கட்டுப்படாதவர்களும், குரூர ஸ்வபாவம் இல்லாதவர்களும், அதாவது அன்புள்ளம் படைத்தவர்களும், வெறும் விஷயகாமிகளாக இல்லாமல் தர்மகாமிகளாக, அதாவது அறவழியிலேயே பற்றுள்ளவர்களுமான வேத வித்துக்கள் எப்படி நடப்பார்களோ அப்படி நட" என்கிறார். இங்கே சொன்ன யோக்கியதாம்சங்கள் எல்லாம், உபதேசிக்கிற ஆசார்யருக்கும் இருப்பவை, இருக்க வேண்டியவை என்று அர்த்தம் பண்ணிக்கொள்ள வேண்டும். இத்தனைக் காலம் இவன் குருகுலவாஸம்

பண்ணி ஆசார்யரோடேயே இருந்து, அவர் நடக்கிற முறைகளைப் பார்த்துக் கொண்டுவிட்டான். இப்போது அவரைவிட்டு, வீட்டுக்குத் திரும்புகிறான். இனிமேலும் அவன் இதே ஒழுக்கங்களையே பின்பற்ற வேண்டும் என்பதைத்தான் உபநிஷத்தில் ஆசார்யரானவர் எடுத்துச் சொல்கிறார்.

இப்படி நல்ல சீலங்களுடன் இருக்கிற குருவிடம் சிஷ்யனுக்கு ஏற்படுகிற பக்திதான் குருகுல வாஸத்தின் உயிர் நிலை. சிஷ்யனுடைய விநயம், இந்திரிய நிக்ரஹம், பிற்பாடு இவன் படிப்படியாகப் பெறப்போகிற ஈசுவர பக்தி, ஆத்மாபிவிருத்தி எல்லாவற்றுக்கும் மூலதனம் இந்த குரு மூலதனம் இந்த குரு பக்திதான்.

இம்மாதிரி பக்தியைத் தாமாகப் பெறக்கூடிய ஸ்வயயோக்யதை இல்லாத குருவாக இருந்தாலும் சரி, சின்ன வயசில், "இவர்தான் உனக்கு தெய்வம் மாதிரி" என்று ஒரு குருவிடம் சேர்த்துவிட்டு, இவனை பிக்ஷாசர்யம் பண்ண வைத்து, பிக்ஷான்னத்தை அந்த குரு போட்டுத்தான் இவன் சாப்பிட்டாக வேண்டும் என்று ஒரு ஏற்பாட்டையும் பண்ணி விட்டால் இதுவே ஒரு பக்தியை உண்டாக்கிவிடும். இப்படி குருபக்தியோடு கல்வி கற்றால், இப்போது பார்க்கிற மாதிரி அடங்காமை (பல தினுசிலும் அடங்காமை) இல்லாமல், ஒருத்தன் கற்ற கல்வி அவனுக்கும் வாஸ்தவமாக க்ஷேமத்தைத் தரும்; லோகத்துக்கும் அவனால் க்ஷேமத்தை உண்டு பண்ணும்.

இதனால்தான், தற்போது போய்க் கொண்டிருக்கிற போக்கு என் ஆசைக்கு முற்றிலும் எதிரிதிசையில் இருந்துங் கூட,

குருகுலவாஸக் கல்வி முறையை எப்படியாவது உயிர்ப்பிக்க முடியுமா என்பதில் நான் ரொம்பவும் விசாரமாயிருக்கிறேன்.

என் ஆசை – பள்ளிக்கூடத்தில் ஒரு வருஷம் fail-ஆகி விட்டதாகவாவது நினைத்துக் கொண்டு ஒவ்வொருத்தரும் தங்கள் குழந்தைகளை ஒரே ஒரு வருஷமாவது குருகுல வாஸம், பிக்ஷாசர்யம் பண்ண வைக்க வேண்டும். பன்னிரண்டு வருஷம் என்றால் அடியோடு ஒருத்தரும் கேட்கமாட்டீர்கள். அதனால்தான் ஒரு வருஷம் என்று கேட்கிறேன். சின்ன வயஸில் ஒரு வருஷம் இந்தப் பழக்கம் இருந்தாலுங்கூட அதற்கு ஓரளவு நல்ல பலன் ஏற்படும். ஃபெயில் ஆன மாதிரி என்று நான் சொன்னாலும் வாஸ்தவத்தில் இது 'வேஸ்ட்'டாகப் போகாது. ஒரு வருஷ பிக்ஷாசர்ய குருகுலவாஸத்தில் மாணாக்கனுக்கு மூன்று வருஷத்து புத்தி தீக்ஷண்யம் உண்டாகும். அடுத்த வருஷமே பள்ளிக்கூடத்தில் ஒரு 'டபுள் பிரமோஷன்' வாங்கி ஈடு பண்ணி விடுவான். அதோடு குருவிடம் ஒரு வருஷம் தங்கியதில் பிராதஸ்நானம் (விடியற்காலக் குளியல்) , ஸந்தியாவந்தனம் முதலான வழக்கங்கள் படிந்து ஆயுள் பூராவும் நிலைத்திருக்கும்.

இப்போது ஸ்கௌட் காம்ப் (சாரண முகாம்) என்று, குழந்தைகளை ஒரு மாஸம், அரை மாஸம் வெளியூருக்கு அனுப்புகிறீர்கள் அல்லவா? இதையே கொஞ்சம் விஸ்தரித்து ஒரு ஆசார்யனிடத்தில் ஒரு வருஷமாவது கூட வசித்து, பிக்ஷாசர்யம் பண்ணி வரும்படியாக ஏற்பாடு பண்ணுங்கள் என்று சொல்கிறேன். இதனால் அநேக நல்ல

பழக்கங்கள், கட்டுப்பாடுகள் உண்டாகும்; குரு பக்தி என்பதன் த்வாரா [வழியாக] இத்தனையும் ஏற்படும்.

குழந்தைகளைத் தங்களோடு வைத்துக்கொண்டு பாடம் சொல்லிக் கொடுக்கப் பிரியப்படுகிற குருமார்களையும், அவர்களிடம் குழந்தைகளை அநுப்பி வைக்கக் கூடிய பெற்றோர்களையும் சமூக உணர்ச்சியின் மூலம்தான் உண்டாக்க வேண்டும். இந்த ஸஹாயத்தைச் செய்யும்படியாக உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். படிப்பு முடிந்தபின் தக்ஷிணை தர முடியாத ஏழைக் குடும்பத்தினருக்காகவும் மற்றவர்கள் தரவேண்டும். அநேகமாக இப்படிப்பட்ட வசதியில்லாதவர்கள்தான் குழந்தைகளைக் குருகுல வாஸத்துக்கு அனுப்பக் கூடியவர்கள். அவர்களுக்கான ஸஹாயத்தை அங்கங்கே பத்துப்பேர் சேர்ந்து பண்ணினாலும் போதும். தனியாகப் பெரிய ஸ்தாபனம் என்று ஏற்படுத்தக் கூட வேண்டாம். ஸ்தாபனம் கூடவே கூடாது என்று சொல்வதாக அர்த்தமில்லை. ஆனால் அப்படி பெரிய ஸ்கேலில் நடப்பதற்காக நாம் காத்துக் கொண்டிருக்க வேண்டாம் என்கிறேன். இப்போது நம்மளவில் சாத்யமான அளவுக்கு ஆரம்பித்துவிடவேண்டும் என்கிறேன். நாம் ஒவ்வொருவரும் சொந்த அக்கறை (personal interest) காட்டி, தன்னாலானதைச் செய்ய வேண்டும் என்பதே முக்கியம். இந்த மனோபாவம் வருவது தான் அவசியம்.

ஜாஸ்தி படிக்க படிக்கத்தான் ஜாஸ்தி நாஸ்திகம், ஜாஸ்தி அடங்காமை, ஜாஸ்தி அநாசாரம் என்று இப்பொழுது கொண்டுவிட்டிருக்கிறது. இந்த நிலைமை மாற வேண்டுமானால் அதற்கு வழி – ஒரு உதாரணத்துக்குக்

காட்டவாவது, ம்யூசியக் காட்சி வஸ்து மாதிரியாகவாவது – குரு பக்தி என்பதை ஏற்படுத்திக் காட்ட வேண்டும். குருகுலவாஸப்படிப்பு முறையில்தான் குருபக்தி இருந்திருக்கிறது.

போன தலைமுறை வரையில் ஸங்கீதம் ஒன்றிலாவது குருகுலவாஸம் இருந்தது. இப்போது அங்கேயும் போய்விட்டது.

எனவே நாம் இதில் முயற்சி எடுக்கவேண்டும். யார் வருவார்கள் என்று முயற்சி பண்ணாமலே இருந்து விடக்கூடாது. மனப்பூர்வமாக முயற்சி பண்ணினால் பத்துப் பேராவது பலன் அடையாமல் போகமாட்டார்கள்.

ஈசுவர பக்தியும், அந்த ஈசுவர பக்தி வாஸ்தவமாக ஏற்பட்டு நிலைத்து நிற்பதற்கு வழி செய்கிற குருபக்தியும் அழிந்து போகாமல் இருப்பது லோக க்ஷேமத்துக்கு ரொம்ப அவசியம்.

* காமம், குரோதம், லோபத்தனம், மோஹம், மதம் (செருக்கு), மாத்ஸர்யம் (பொறாமை) எனும் ஆறு.

1. ரகு வம்சம் I.8

2. கீதை VII.1.1

சரணாகதியே முக்கியம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

குரு

சரணாகதியே முக்கியம்

குருவுடைய யோக்யதாம்சங்களை (Qualifications) பற்றி நிறையச் சொன்னேன். ஆரம்பகால வித்யா குருவான வேதவித்தானாலும் சரி, நம் ஆத்மாவைப் பரமாத்மாவிடம் சேர்க்கிற ஞான குருவான பிரம்மவித்தானாலும் சரி, இரண்டு பேருக்கும் ஒழுக்கம், பக்தி இரண்டும் முக்கியம் என்று சொன்னேன். பரலோகத்துக்கு வழி காட்டுகிற குரு பிரத்யக்ஷ ஈச்வரன் மாதிரிச் சித்தம் கொஞ்சம் கூடச் சலிக்காதவராக, மஹா ஞானியாக, கிருபா மூர்த்தியாக, பரம சுத்தராக இருக்க வேண்டும் என்றேன். இப்படிப்பட்ட குரு கிடைத்துவிட்டால் ஈசுவரனே கூட வேண்டாம் என்றேன்.

ஆனால் இந்த மாதிரி ஒழுக்கமுள்ள வித்யாப்யாஸ குருவோ, ஈச்வரத்வம் நிறைந்த ஆத்ம உபதேச குருவோ எல்லோருக்கும் கிடைக்க முடியுமா என்று ஒரு யோஜனை பிறக்கிறது. சுத்தியாக வேண்டுமென்று நிஜமான தாபம் இருந்தால், அப்படித் தாபப்படுகிறவர்களிடம் பகவானே குருவை அனுப்பித் தீருவான் என்றுதான் சாஸ்திரங்கள் சொல்கின்றன. மாணிக்கவாசகருக்கு ஈசுவரனே குருவாக வந்து குருந்த மரத்தடியின் கீழே இருந்து கொண்டு உபதேசம் பண்ணினான். திருவாசகத்தில் அநேக இடங்களில் மாணிக்கவாசகரே இதைச் சொல்லியிருக்கிறார். இதெல்லாம் நமக்குத் தெரிந்தாலும் சஞ்சலம் உண்டாகின்றது.

குரு என்று நாம் தேடிப் போகிறவர் வாஸ்தவத்தில் ஒரு போலியாக இருந்துவிட்டால் என்ன பண்ணுவது? அவர்

சுத்தரா இல்லையா என்று நமக்கு எப்படி நிச்சயமாகத் தெரியும்? சுத்தர் என்றே போகிறோம், அப்புறம் வேறு தினுஸாகத் தோன்றுகிறது என்றால் என்ன பண்ணுவது? இன்னோரிடத்துக்குப் போகலாம் என்றால், அங்கேயும் இதே மாதிரி ஏமாந்து போகமாட்டோம் என்று என்ன நிச்சயம்? இப்படி குழப்பமாயிருக்கிறது. லோகம் பொல்லாதது. நாலு தினுஸாகப் பேசும். ஒரு சுத்தரைப் பற்றியே அபவாதமாக சொல்லிவிடுகிறது. அது நிஜமாக இருந்துவிட்டால் நம் கதி என்ன ஆவது என்று அவரை ஆச்ரயித்தவர்களுக்கு பயம் உண்டாகிறது.

இதற்கு என்ன பண்ணலாம்? வித்யாப்யாஸ குரு விஷயத்தில் இது பெரிய பிரச்சனை இல்லை. அவரிடம் மநுஷ்யர்களுக்குள் நல்ல சிஷ்டர்களால் முடியக்கூடிய ஒழுக்கங்களைத் தான் எதிர்ப்பார்க்கிறோம். இதை அநேகமாக அவர் பூர்த்தி பண்ணிவிடுவார். அவர் கிருஹஸ்தாச்ரமிதான் என்பதாலேயே ஸந்நியாஸ குருவுக்கு ரொம்பவும் களங்கமாகிற தப்புக்கள் இவருக்கு ஏற்படுவதற்கே இடமில்லாமல் போகிறது. அதுவும் தவிர இவரிடம் சிஷ்யனாக இருப்பது பால்யத்தில்தான். அப்போது மனஸ் தோண்டித் தோண்டி எதையும் 'ஜட்ஜ்' பண்ணாது. அதனால் இவரையும் ஜட்ஜ் பண்ணாது. இவர்தான் தெய்வம் மாதிரி என்று ரொம்பவும் இளமனஸில் ஏற்றிவிட்டதால், அது அப்படியே நினைத்துக் கொண்டு பக்தியோடு இருந்துவிடும்.

ஆத்மசுத்திக்கும், மோக்ஷத்துக்கும் என்றே ஏற்பட்ட இன்னொரு குருவைப்பற்றித்தான் பிரச்சனை (problem). அவர் பூர்ணமானவர் என்று நாம் எப்படி நம்புவது? அவரிடம்

தோஷம் தெரிந்தால் என்ன பண்ணுவது? குரு என்று வந்தோம். தப்பானவர் என்று விட்டுப் போனால், அது குருத்ரோஹமா, பாவமா? தப்பானவர் என்று நாம் நினைத்ததே தப்பாக இருந்துவிட்டால்?

இந்த மாதிரி சங்கட நிலையில் என்ன செய்யலாம் என்று எனக்குத் தோன்றுகிறதைச் சொல்கிறேன். குருவின் யோக்யதாம்சம் பற்றி முன்னே சொன்னதையெல்லாம் இப்போது நானே வாபஸ் வாங்கிக்கொண்டுவிடப் போகிறேன்! அதாவது, குருவுடைய யோக்யதாம்சத்தையே பார்க்காதீர்கள் என்கிறேன். வித்யாப்யாஸ குருவிடம் குழந்தை சிஷ்யன் இருக்கிற மாதிரியே, மோக்ஷ மார்க்கத்தைக் காட்ட வேண்டிய இவரிடம் வயதான சிஷ்யர்களும் இருந்துவிட வேண்டும் என்கிறேன். அதாவது அவரிடத்தில் முழு நம்பிக்கை வைத்து விட வேண்டும். அது கண்மூடித்தனம் என்று மற்றவர்கள் சொன்னாலும் சொல்லிவிட்டுப் போகட்டும்.

குரு வேண்டும் என்று தேடினோம். சுத்தமானவர், பூர்ணமானவர் என்று நம்பித்தான் இவரை ஆச்ரயித்தோம். இவரிடம் வந்தபோது இவர் அசுத்தமானவர், அபூர்ணமானவர் என்று நாம் நினைக்கவில்லை. அப்படி நினைத்தால் வந்தேயிருக்க மாட்டோம். வந்தபின் இப்போது சந்தேகம் ஏற்பட்டு விட்டதென்றால் என்ன செய்யலாம்? இன்னொருவரிடம் போவதென்றால் அவர் கதையும் பிறகு எப்படியாகுமோ என்று ஒரு பயம். இன்னொரு பயம், குரு என்று இவரை வரித்துவிட்டு, இன்னொருவரிடம் போனால் பாதிவ்ரத்ய தோஷம்

[கற்பில் தவறுவது] போல், குருத்ரோஹம் என்ற பாபம் ஸம்பவிக்குமோ என்பது.

இந்த நிலையில் ஒரே 'ஸொல்யூஷன்' [தீர்வு], யோக்யதாம்சத்தைப் பார்க்காமலிருந்து விடுவதுதான் என்று தோன்றுகிறது. நாம் குருவைத் தேடினபோது, இவர்தான் கிடைத்து, இவரைத்தான் வரணம் செய்ய வேண்டியிருந்தது என்றால், ஈச்வரனே இவரைத்தான் நமக்கு குருவாக அனுப்பி வைத்திருக்கிறான் என்றுதானே அதற்கு அர்த்தம்? அப்படியே வைத்துக் கொள்வோம். குருவை ஈச்வரன் அனுப்பினான் என்று மட்டுமில்லாமல் ஈச்வரனே குருவாக வந்திருக்கிறான் என்று பாவிக்கும் படி தானே சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது! இவர் மநுஷ்ய குரு என்கிற வரையில்தான் இவர் நிர்தோஷமானவரா, தோஷமானவரா என்ற கேள்வி வருகிறது. இவரே ஈச்வரன் என்று நம்பிவிட்டால், இந்தக் கேள்விக்கே இடமில்லை. தோஷமுள்ள ஈச்வரன் என்று உண்டா என்ன? ஈச்வரனிடத்தில் தோஷம் மாதிரி ஏதாவது தெரிந்தால்கூட, அதுவும் நம் திருஷ்டி தோஷம் தானே? இப்படியே குருவைப் பற்றியும் நினைத்துவிட்டால் போகிறது. இவர் ஈச்வரனே என்று வைத்துவிட்டால் இவரைவிட்டு இன்னொருவரிடம் போவதற்கும் இடமில்லை. ஈச்வரன் ஒருத்தன் தானே? ஒரு ஈச்வரனை விட்டு இன்னொரு ஈச்வரனிடத்தில் போவது என்பது பரிஹாஸமான விஷயமல்லவா?

அதனால் குரு என்று ஒருத்தரை அடைந்த பிறகு, அவர் எப்படியானாலும் இருக்கட்டும் என்று நாம் நம் பக்தியில் இறங்காமல், சலிக்காமல் அவரையே உபாஸித்து

வரவேண்டும்; சுஸ்ரூஷை பண்ண வேண்டும். இப்படிப் பண்ணினால் கடைசியில் ஈச்வரன் அவர் மூலமே நமக்கு சுத்தியை, ஞானத்தைக் கொடுத்துவிடுவான். அவர் மோக்ஷத்துக்குப் போனாலும் போகாவிட்டாலும் நாம் போய்விடுவோம்!

தூர்த்த குணம், கெட்ட பழக்கமுள்ள குருவை உபாஸிக்கிறோம் என்று உலகம் பரிஹாஸம்தான் செய்யும். செய்துவிட்டுப் போகட்டும். இதனால் நமக்கு எந்த அளவுக்கு நஷ்டம் வந்தாலும் வந்துவிட்டுப் போகட்டும். முடிவில் இதற்கெல்லாம் ஈடு செய்வதான பரம லாபம் கிடைக்காமற் போகாது. நமக்கென்று லாப-நஷ்டம், மானாவமானம் பார்க்காமல், ஓரிடத்தில் நம்பி சரணாகதி பண்ணிவிட்டால், முடிவில் அதற்காக ஈச்வரன் பரம லாபமான ஆத்ம ஞானத்தைக் கொடுத்து விடுவான்.

லோகத்தில் லாப நஷ்டம் என்பவை உண்மையில் நிரந்தரமாக இல்லை. அவை கொஞ்ச நாள் இருப்பதுபோலத் தோன்றுவதுதாம். ஆதலால் பாக்கி இடங்களில்தான் லாபநஷ்டம் பாரத்தாலும் பார்க்கலாம்; குருவிடத்தில் மட்டும் லாப நஷ்டம் பாராமல் சரணாகதி பண்ணிவிடவேண்டும்.

பூமௌ ஸ்கலித பாதானாம் பூமிரேவ (அ)வலம்பனம்।

த்வயி ஜாத (அ)பராதானாம் த்வமேவ (ஆ)லம்பனம் குரோ॥

மாடியிலிருந்து விழுந்தால் பூமி தாங்கும்.மரத்திலிலுந்து விழுந்தாலும் தாங்கும். பூமியிலேயே தடுக்கி விழுந்தால்? அப்போதும் பூமிதான் தாங்கும். ஈச்வராபசாரத்தை

குருவினிடம் சொல்லித் தீர்த்துக்கொள்ளலாம். குருவிடம் அபசாரம் பண்ணினால், எங்கே அபசாரம் பண்ணினோமோ அங்கேயே தான் நிவர்த்திக்கும் போகவேண்டும்.

குரு ஒருவரைத் தேடவேண்டுவது நமது கடமை. மனம் மாறாமல் இருக்கவேண்டுமென்று பெரியவர்களை நாம் தேடுகிறோம். மனஸை அர்ப்பணம் பண்ணுவதைப் பிரதானமாக வைத்துக் கொண்டால் யாராயிருந்தாலும் சரி; போதும். இன்னம் சொல்லப் போனால், குரு நல்லவராக இருந்தால் அவரிடம் பக்தியாய் இருப்பதில் நமக்கு என்ன பெருமை? யோக்கியதை இல்லாத ஒருவர் குருவாக இருந்தும் அவரிடம் அடங்கியிருந்தாலே மனது நல்ல பக்குவம் அடையும். 'ஈச்வரன் நம்மைப் பரீக்ஷித்து மனஸின் பக்குவத்தைத் திடப்படுத்தவே இப்படி ஏற்பட்டிருக்கிறது; இதனால்தான் அதிகப் புண்ணியம் உண்டு' என்று வைத்துக்கொள்ள வேண்டும். மஹாமகக் குளத்தில் ஊற்றுப்போட்டு ஜலம் இறைத்தால் அதில் வெள்ளைக்காரன்கூட ஸ்நானம் பண்ணுவான். எவ்வளவு சேறானாலும் "இது புண்ணிய தீர்த்தம்" என்று முழுகினால் தான் உண்மையான பக்தி இருக்கிறதென்று அர்த்தம். இப்படி நம்மையே பரீக்ஷித்துக் கொள்ளலாம். மஹான்களை அடைகிறது நம்முடைய மனோபக்குவத்தைப் பரீக்ஷிக்க விரும்பாத சோம்பலால்தான். அவர்கள் பெரியவர்களாக இருந்தால் நமக்கு ஒரு பெருமையும் இல்லை. நம்முடைய பக்தியும் பிரயோஜனப் படவேண்டும். ஒரு மஹாக்ஷேத்திரத்தின் கோயிலில் அர்ச்சகர் மிகவும் அசுத்தியாக இருக்கிறாரென்று வைத்துக் கொள்ளுவோம். அதற்காக

நாம் தரிசனம் செய்யாமல் இருக்கிறோமா? நாம் அர்ப்பணம் பண்ணுவதுதான் லாபம். குரு மஹானாக இல்லாவிட்டாலும் நாம் பக்தியில் திடமாக இருந்தால் அதிகப் பண்ணியம் உண்டாகிறது.

நம் மனம் போகிற வழியில் விடாமல் எங்கேயோ ஓரிடத்தில் அதை அடக்கிப் போட்டு சரணாகதி பண்ணிவிட்டால் போதும். நம்மைக் காப்பாற்றப் போகிறவர் என்று முதலில் ஒருத்தரை நம்பினபோது அவரிடம் பண்ணின சரணாகதியை எக்காலத்திலும் மாற்றிக்கொள்ளாமலிருந்து விட்டால் எந்த ப்ரயோஜனத்துக்காக இந்த குருவிடம் நாம் வந்தோமோ அது ஈச்வர ப்ரஸாதமாகக் கிடைத்துவிடும்.

அத்வைதம்

அத்வைதம்

தெய்வத்தின் குரல்

(இரண்டாம் பாகம்)

அத்வைதம்

அத்வைதம் என்பது என்ன? அதனால் நமக்கு என்ன உபயோகம்? வாஸ்தவமாகவே நாம் அதிலிருந்து பிரயோஜனம் அடையலாமா? முடியாதா? இவ்வளவும் பெரிசாக தத்வம், தத்வம் என்று அளவில் மட்டும் உள்ளதா? அநுபவத்தில் தத்வம் ஆகுமா? - என்பவற்றை ஆலோசிப்போம்.

'அத்வைதம்' என்பதன் அர்த்தம் என்ன? "இரண்டாவது இல்லாதது" என்பதுதான் அர்த்தம். இரண்டாவது இல்லை என்பது நமக்கு நடைமுறை அநுபவமல்ல. ஆயிரக்கணக்கான வஸ்துக்கள்தான் நமக்குத் தெரிகின்றன. அப்படி இருக்க இரண்டாவது வஸ்துவே இல்லை என்று ஏன் சொல்ல வேண்டும்? அப்படி இரண்டாவது இல்லாததனால் நமக்கு என்ன லாபம்?

நாம் எதற்காகப் பிரயத்தனம் செய்கிறோமோ அது அத்வைதத்தால்தான் கைகூடும். நாம் எதற்காகப் பாடுபடுகிறோம்? நமக்கு வரும் கஷ்டமெல்லாம் நிவர்த்தியாக வேண்டுமென்று பாடுபடுகிறோம். நாம் செய்யும் அத்தனை காரியமும் கஷ்டம் போய் ஸுகம் உண்டாக வேண்டும் என்பதற்குத்தானே? அந்தக் கஷ்ட நிவர்த்தி இந்த அத்வைதத்தால்தான் சாச்வதமாக உன்டாகும். தரித்ரம், பசி, அவமானம், வியாதி, வியவஹாரம், மனஸ்தாபம் முதலியவைகளை நிவர்த்தி செய்வதற்காக நாம் கஷ்டப்படுகிறோம். ஆனால் எந்த ஊரிலாவது இந்தக் கஷ்டம் இல்லாமல் இருக்கிறதா? இல்லை. ஒரு கஷ்டம் போனால் இன்னொன்று வரத்தான் செய்கிறது. எப்போதும் சௌக்கியமாக இருப்பதென்பது நாம் செய்கிற பிரயத்தனங்களால் ஸாத்யமே இல்லைதான். ஆனாலும், நாம் துக்க நிவர்த்திக்காகப் பிரயத்தனம் பண்ணிக் கொண்டேயிருக்கிறோம். நம்முடைய லௌகிக பிரயத்தனங்களால் தற்கால சாந்தி மட்டும் உண்டாகிறது. ஒரு வியாதிக்கு மருந்து கொடுத்து அதை நிவர்த்தி செய்துவிட்டால் வேறொரு வியாதி வருகிறது. இப்படி உள்ள கஷ்டங்களை நீக்குவதற்கான நிரந்தரமான உபாயம்

அத்வைதம்தான். அத்னால் பசி, வியாதி, சாவு, அவமானம், வியவஹாரம், கோபம், தரித்திரம் முதலியவை என்றென்றைக்கும் வராமலிருக்கும்படியாகப் பண்ணிக் கொண்டு விடலாம்.

இப்படியெல்லாம் நான் ஏன் துக்கப்படுகிறோம்? தரித்திரம், பசி, மானம், கௌரவம் முதலிய எல்லாம் நமக்கு இருப்பதுதான் காரணம். இவை இல்லாமல் இருந்தால் நல்லது. துக்கமே தெரியாது. ஆனால் இவை இருக்கின்றனவே! சரி, இவை ஏன் வருகின்றன? இவை வரும் வழி எது என்று பார்ப்போம். நமக்குத் துன்பம் தரும் பசி, வியாதி முதலானவைகளெல்லாம் உடம்பு இருக்கும் வரைக்கும் இருக்கும். உடம்பு இருப்பதால்தான் இவை வருகின்றன. இந்த உடம்பு போய்விட்டால் மற்றோர் உடம்பு வருகிறது. அந்த உடம்புக்கும் பசி, தாகம், வியாதி முதலியவையெல்லாம் வருகின்றன. அதாவது உடம்பு இருக்கிற வரையில் கஷ்டமுண்டு. துக்கம் உண்டு. ஆகவே உடம்பில்லாமல் பண்ணிவிட்டால் நமக்கு இந்தக் கஷ்டங்களெல்லாம் இல்லாமல் போகும்.

நமக்குப் பல பிறவிகள் உண்டாகின்றன. அந்தப் பிறவிகளுக்கெல்லாம் காரணம் என்ன? உடம்பு எதனால் வருகிறது? முன் ஜன்மத்தில் பண்ணிய பாப புண்ய பலன்களை நான் அனுபவிக்கவேண்டும். ஆத்மாவால் பாப புண்யங்களை அனுபவிக்க முடியாது. ஆத்மாவை நெருப்பால் சுடமுடியாது. சந்தனத்தை அப்பிக் குளிரச் செய்து விடமுடியாது. ஆகையால் கர்மாவை அனுபவிப்பதற்காக ஓர் உடம்பு வேண்டியிருக்கிறது. நாம் செய்த பாப புண்ய பலனாகக் கடவுள் நமக்கு உடம்பைக்

கொடுத்து அதையே 'நான்' என்று நினைக்கச் செய்து தண்டிக்கிறார். நாம் செய்த பாபத்திற்காக ஈச்வரன் உடம்பைக் கொடுத்து நம்மை சிக்ஷை செய்கிறார். இந்த உடம்பு போனதோடு பாபம் போகாவிட்டால் மறுபடியும் உடம்பைக் கொடுத்து சிக்ஷிக்கிறார். ஆகையால் நாம் பண்ணுகிற பாபம்தான் உடம்புக்குக் காரணம். இனிமேல் பாபம் பண்ணாமல் இருந்தால் உடம்பு வராது. 'பாபம் பண்ணக்கூடாது' என்ற நினைவு தினமும் இருக்க வேண்டும்.

பாப புண்யத்துக்குக் காரணம் என்ன? அவற்றைச் செய்யாமல் நிறுத்த இஷ்டமிருக்கிறது; ஆனால் முடியவில்லை. ஒரு மரத்தை தழைக்காமற் செய்ய வேண்டுமானால் கிளைகளை வெட்டினால் முடியாது; அடி மரத்தை வேரோடு வெட்டவேண்டும். வீட்டுக் கூரையிலே திரும்பத் திரும்பக் கறையான் புற்று உண்டாகிறது என்றால் மேலெழுந்த வாரியாக அந்தக் கூட்டை பெயர்த்தால் போதுமா? போதாது. இன்னொரிடத்தில் புற்று முளைக்கத்தான் செய்யும். கறையான் வைக்கும் தாய்ப்பூச்சியைப் பிடித்து அழித்தால்தான் புற்று எங்கும் எழும்பாமலே போகும். அதுபோலப் பாபத்துக்கு மூல காரணத்தை அறிந்து அதையே அழிக்க வேண்டும். பாபத்துக்கு மூலம் என்ன? கெட்ட காரியத்தினுடைய பலன்தான் பாபம்.கெட்ட காரியம்தான் பாப மூலம். கெட்ட காரியம் எதனால் செய்கிறோம்? நமக்கு ஒரு வஸ்து வேண்டும் என்ற ஆசையிருக்கிறது. அதை அடைவதற்குக் குறுக்கு வழிகளில் போகிறோம். அது பாபம். அதாவது,பாபம் செய்யக் காரணம் ஆசை. ஒரு வஸ்து

அழகாக இருந்தால் ஆசை உண்டாகிறது. நல்ல பதார்தங்களை கண்டால் நமக்கு வேண்டுமென்று ஆசை தோன்றுகிறது. அது நல்லது என்று இச்சை உண்டாகிறது. இந்த இச்சையைப் பூர்த்தி பண்ணக் காரியங்கள் செய்கிறோம். இந்திரியங்கள் ஒன்றை அழகானதென்று அறிவதுதான் ஆசைக்குக் காரணம்.

இத்தனை நாழி நான் சொன்னதிலிருந்து ஏற்படுவது என்னவென்றால்:

நாம் செய்யும் பாபத்துக்கு உடம்பு தண்டனை. பாபத்துக்கு மூலம் கெட்ட காரியம். கெட்ட காரியத்துக்கு மூலம் ஆசை. ஆகையால் நம் கஷ்டம் அனைத்துக்கும் மூல காரணமாகிய ஆசையை நிவர்த்தி பண்ணினால்தான் நிரந்தரமான துக்க நிவர்த்தி உண்டாகும். ஆசையை எப்படி நிவர்த்திப்பது?

வேதத்துக்குச் சிகரமாக இருக்கும் வேதாந்தம் இந்தத் துக்க நிவர்த்திக்குத் தக்க வழியைச் சொல்கிறது.

ஆசையும் த்வேஷமும் நமக்கு அன்யமாக, நம்மைவிட வேறாக, இரண்டாவதாக இருக்கும் வஸ்துக்களிடத்தில்தான் உண்டாகின்றன. நம்மிடத்திலேயே நமக்கு ஆசையும் உண்டாவதில்லை; வெறுப்பும் உண்டாவதில்லை. ஆனபடியால் இப்போது வேறேயாக உள்ள பொருள்களிடத்தில் ஆசை உண்டாவதால், அவைகளையும் நாமாகவே பண்ணி விட்டால் ஆசை உண்டாகாது அல்லவா? நம்மிலும் வேறாக ஒன்று இல்லாமல் எல்லாவற்றையும் நாமாகப் பண்ணினால் ஆசை உண்டாகாது. ஆசை இல்லாவிட்டால்

கெட்ட பிரயத்தனம் இல்லை. அதனால் பாபம் இல்லை. பாபம் இல்லாத பொழுது தேகம் இல்லை. அது இல்லாவிட்டால் துக்கம் இல்லை. வாழ்நாள் பூராவும் நாம் பல பிரயத்தனங்கள் பண்ணியும் சாச்வதமாகப் போக்கிக் கொள்ள முடியாத துக்கமானது, இப்படி நமக்கு வேறாக இரண்டாவது வஸ்து இல்லை என்று ஆக்கிக் கொள்வதனால்தான் கைகூடுகிறது. இப்படி "இரண்டு இல்லை" என்பது தான் அத்வைதம்.

இரண்டாவது ஒன்று இருந்தால், அது நம்மைவிடச் சக்தி உள்ளதாக இருந்தால், பயம் உண்டாகிறது. அழகாக இருந்தால் ஆசை உண்டாகிறது; சித்த விகாரம் உண்டாகிறது. இரண்டாவது இல்லாவிட்டால் ஆசை இல்லை; த்வேஷம் இல்லை; பயம் இல்லை. இப்படி இரண்டாவது இல்லாமல் பண்ணுவது தான் அத்வைதம். இரண்டாவது இல்லையானால் பயம் நீங்குகிறதென்று உபநிஷத் சொல்கிறது. இரண்டாவதாக ஒன்றை நினைத்து விட்டாயோ பயத்துக்கு விதை போட்டு விட்டாய் என்கிறது: "த்விதீயாத்வை பயம் பவதி" (–பிருஹதாரண்யக உபநிஷத்.)

பிரபஞ்சத்தில் பலர் இருக்கிறார்களே, இவர்களெல்லாம் ஒன்றாக எப்படி ஆகமுடியும்? இரண்டாவது இல்லாமல் எப்படிப் பண்ணுகிறது?

வேதாந்தம் இந்த லோகத்தில் நாம் பல வஸ்துக்களாகக் காண்பவைகளெல்லாம் பொய் என்கிறது. எல்லாம் ஈச்வர ஸ்வரூபம் என்று சொல்கிறது. நமக்கு அப்படி தோன்றவில்லையே! எல்லாம் ஈஸ்வரன் என்பது

நிஜமானால், நமக்குத் தோன்றுவது பொய்யாக வேண்டும். நமக்குத் தோன்றுவது நிஜமானால், எல்லாம் ஈஸ்வரன் என்பது பொய்யாக இருக்க வேண்டும். நமக்குத் தோன்றுவது நிஜமாக இருந்தால் நமக்கு கஷ்டம் வரக்கூடாது. ஆனால் கஷ்டம் வருகிறது. வேதாந்தத்தை அனுபவமாக்கிக் கொண்ட மஹான்கள், ஞானிகள்தான் நம் மாதிரித் திண்டாடாமல் ஸதாவும் ஆனந்தமாக இருக்கிறார்கள்; கஷ்டமே தெரியாமல் இருக்கிறார்கள். ஆகையால் வேதாந்தம் சொல்வது தான் நிஜம். அது உண்மையானால், எல்லம் ஈச்வர ஸ்வரூபம் என்பது உறுதியாக வேண்டும்.

லோகமெல்லாம் மெய்யான ஒரே வஸ்துவென்று அத்வைதம் சொல்கிறது. நமக்கு வஸ்துக்களாகத் தோன்றுவதெல்லாம் பொய். இந்தத் தோற்றங்களுக்கெல்லாம் ஆதாரமான வஸ்துவொன்றே மெய்.

மெய்யான வஸ்துவை பிரம்மம் என்றும், ஆத்மா என்றும் அத்வைதம் சொல்லும். லோக வழக்கில் ஈஸ்வரன் என்கிறோம். பிரம்மம் நிர்குணமானது, ஈஸ்வரன் ஸகுணமானவன் என்கிற பாகுபாடு இங்கே நான் சொல்லவில்லை.

எல்லாம் ஈஸ்வரன் என்றால் நாம் மட்டும் வேறேயா? நம்மையும் அந்த ஈஸ்வரனாகக் கரைக்க வேண்டும். அப்பொழுது இரண்டாவது என்பது இல்லை. நாம் இப்பொழுது வெவ்வேறாகப் பார்க்கிறோம். எல்லம் ஈச்வரனாகப் பார்ப்பது தான் நிஜப் பார்வை. இரண்டாவது

இல்லாமல் நாமும் கரைந்துவிட்டால் நல்லது உண்டாகும். துக்கம் இல்லாமல் போகும். லோகத்தில்கூட இரண்டு மனஸுகள் ஒன்றானால் சண்டையில்லை. அதுபோல எல்லாம் ஈச்வரனாகி ஒன்றாகி விட்டால் எந்தக் கிளர்ச்சியும் இல்லை. ஒரே சாந்திதான். அப்போது எல்லாம் நாமாக ஆகிறோம். நமக்கே நம் மேல் ஆசை அப்பொழுது ஏற்படாது. ஆசையில்லாவிட்டால் பாபம் இல்லை. பாபம் இல்லையென்றால் தேகம் இல்லை. இந்த தேகம் இருக்கிறபோதே அது இல்லை என்ற ஞானம் உண்டாகிவிடும். இது போனபின் இன்னொரு தேகம் வராது. அப்படியே அத்விதீயமான ஆனந்தத்தோடு ஒன்றாகியிருப்போம். தேஹம் இல்லாவிட்டால் துக்கமே இல்லை. அந்த துக்க நிவர்த்திக்கு அத்வைதம் மருந்து. இரண்டாவது இல்லாமற் பண்ணுவது அத்வைதம். எல்லாம் பகவானாகப் பார்ப்பது அத்வைதம். உள்ளதை உள்ளபடி பார்ப்பதுதான் அத்வைதம்.

நாம் தூங்குகிறோம்; தூங்கி விழிக்கிறோம். தூங்கும் போதே சில சமயங்களில் ஸ்வப்பனம் உண்டாகிறது. விழித்துக்கொண்டிருப்பது ஜாக்ரத் அவஸ்தை. கனவு காண்பது ஸ்வப்னாவஸ்தை. நன்றாக தூங்குவது ஸுஷுப்தி. இப்படி மூன்று அவஸ்தைகள் இருக்கின்றன. 'நாம் விழித்துக் கொண்டிருப்பது வேலை செய்வதற்காக. நன்றாக தூங்குவது வேலை செய்த சிரமமெல்லாம் போவாதற்காக. இந்த இரண்டுமே போதுமே. ஸ்வப்னம் எதெற்காக இருக்கிறது?' என்று யோசித்துப் பார்த்தேன். ஈச்வரன் எங்கும் இருக்கிறார், அவர் அத்வைத ப்ரம்மம், எல்லாம் ஆத்ம ஸ்வரூபம் என்பதை நிரூபித்துக்

காட்டுவதற்கு த்ருஷ்டாந்தமாகவே இந்த ஸ்வப்னத்தை அவர் உண்டாக்கி இருக்கிறார் என்று தோன்றியது. கனவு காண்பதற்கு வேறு ஒரு பிரயோஜனமும் இல்லை. இந்த லோகம் நமக்குப் பலவாகத் தோன்றுவது ஸ்வப்னத்தைப் போல இருக்கிறது. ஸ்வப்னத்தில் என்ன என்னவோ கஷ்டங்களும் ஸுகங்களும் வருவதாக தோன்றுகின்றன. ஸ்வப்னம் முடிந்தால் ஒன்றும் இருக்கிறதில்லை. ஸ்வப்னம் பார்த்தபொழுது இருந்தாகத் தோன்றிய உடம்பு கூட இருப்பதில்லை. இப்படி ஸ்வப்னம் கண்டோம் என்று அறிந்துகொண்ட ஒருவன் தான் மிச்சம். இந்த ஒரே ஒருவனின் எண்ணந்தான் கனவுலகில் அவன் கண்ட அத்தனை பேர்களும், அத்தனை வஸ்துக்களும்! ஸ்வப்னத்தில் இருந்த இவை எல்லாம் விழிப்பிலே போய்விடுகின்றன. இதே மாதிரி ப்ரபஞ்ச ஸ்வப்னத்திலிருந்து நாம் விழித்துக்கொண்டால், பிரபஞ்சத்திலுள்ள ஸகல வஸ்துக்களும் பொய்யாகப் போய், அவற்றைக் கண்ட அறிவு ஒன்றுதான் மிச்சம். ஸத்யமான வஸ்து அதுதான். அதற்குத்தான் அத்வைதம் என்று பெயர். ஆயிரக்கணக்காகப் பார்ப்பது த்வைதம். நாமெல்லாரும் அத்வைதத்தை நம்புகிறவர்கள். ஆயினும் இப்போது அநுபவத்தில் த்வைதமாகிய கனவு காண்கிறோம்.

இதிலிருந்து விழித்தால் அது அத்வைத நிலை. அந்த ஸித்தாந்தம் நினைவிலாவது இருந்தால் லக்ஷத்தில் ஒருவனாவது அந்த நிலையை அடையப் பிரயத்தனம் பண்ணுவானென்றுதான் பெரியவர்கள் அத்வைத சாஸ்திரங்களை எழுதி வைத்திருக்கிறார்கள். காசியில்

கங்கையிருக்கிறது என்று தெரிவது மட்டும் போதாது. டிக்கெட் வாங்கிக் கொண்டு ரயில்வே ஜங்க்ஷனெல்லாம் தாண்டி, ரயிலில் தூங்காமல் போய்க் காசியை சேர்ந்து கங்கா ஸ்நானம் செய்து அனுபவத்தில் நாம் சுத்தியாக வேண்டும்.

அத்வைத நிலை வாக்கும் மனமும் அடைய முடியாமல் திரும்புமிடம் என்று வேதமானது சொல்கிறது.

யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ। (தைத்திரீயோபநிஷத்)

என்று வேத வாக்யம் சொல்கிறது. மனஸால் நினைக்க முடியாவிட்டால் எப்படித் தெரிந்துகொள்வது? வேதம் சொல்வதன் அர்த்தம் என்ன? அத்வைத ஸத்தியம் மனஸால் நினைக்கக் கூடியதல்ல என்பதன் அர்த்தம் என்ன? பரமாத்வவை மனஸால் நினைக்கலாம், அறியலாமென்றால், அந்தப் பரமாத்மா அறியப்படும் பொருள் ஆகிறது. இப்படி சொன்னாலே அறிபவன் அதற்கு வேறு ஆவான் என்று ஆகிவிடுகிறது. இது தப்பு. அறிகிற ஜீவாத்மா, அறியப்படும் பரமாத்மா என்று இரண்டு பேர்வழிகள் இருந்துவிட்டால் அது த்வைதம் தான். அறிகிறவனும் அறியப்படுபவனாகி விட்டால் தான் அத்வைதம். இதனால் தான் 'பரமாத்வாவை எனக்குத் தெரியும் என்பவனுக்குத் தெரியாது; தெரியவில்லை என்பவன் தான் தெரிந்தவன்' என்று சொல்லப்படுகிறது.

யஸ்ய அமதம் தஸ்ய மதம், மதம் யஸ்ய ந வேத ஸ: ॥ (கேனோபநிஷத்)

அறியப்படவில்லை யென்றால் என்ன? அது வேறாக இருந்து அறியப்படுவதில்லை என்பதே அர்த்தம். விளக்கைக் காட்ட வேறு விளக்கு கொண்டு வந்தால் அதற்கு அர்த்தமில்லை. விளக்கைத் தெரிந்து கொள்ள வேறு ஒன்று வேண்டாம். அது போல் பிரம்ம ஞானம், பிரம்மமாகிற ஞானம் அறிவு ஸ்வப்ரகாசமானது. அதை ஜீவாத்மா என்று நினைக்கப்படுகிற சிறிய அறிவால் அறிய முடியாது. அறிவே உருவாக இருப்பது ஈச்வர ஸ்வரூபம். தேவாரம், திருவாசகம், தாயுமானவர் பாடல் முதலிய தமிழ்நூல்களில் பலவிடங்களில் ஈஸ்வரன் 'அறிவே', 'அறிவுருவே' என்று சொல்லப்படுகிறார். அந்த அறிவிலேயே அறியப் போகிறவனும் கரைந்து விடுவதாலே இவன் அதை அறியமுடியாது.

மனஸாலே அது ஆலோசிக்கப்படுவதில்லை. மனஸ் அதனால் ஆலோசிக்கிறது. மனஸ் ஆலோசிக்கிறதெல்லம் பொய். எதனால் அது ஆலோசிக்கறதோ அது ஒன்றே மெய்.

யன் மனஸா ந மதுதே யேநாஹுர் மனோ மதம் । (கேனோபநிஷத்)

கனவில் காணப்படுவதெல்லாம் பொய். பார்க்கிற அறிவொன்றுதான் மெய். இந்த ஆத்மாவே பார்க்கப்படும் அவ்வளவு வஸ்துக்களாகவும் கனவில் இருந்தது. கனவு நீங்கினால் ஒன்றே மிச்சம் இருப்பது தெரியும். கனவிலே வருபவன், கனவு காண்கிறவனை மனஸால் ஆலோசித்து, அறிய முடியுமா? ஆதலால் வேறாக இல்லாவிட்டால் ஒன்றை அறியவும், அதைப்பற்றிச் சொல்லவும் முடியாது.

எனவேதான் அத்வைத ஸத்யமானது வாக்காலும் மனத்தாலும் பிடிபடாதது என்பது.

இப்பொழுது முடிவாக நாம் அறிந்து கொண்டது– நிஜம் ஒன்றுதான் இருக்கிறது; எல்லாம் அந்த ஒன்றான 'ஈஸ்வர ஸ்வரூபம்' என்பதே. மாயையால் வேறு வேறாகத் தோன்றுகிறது. எல்லாவற்றையும் ஒன்றாக்கவேண்டும். 'நாம்' என்பதையும் அந்த ஒன்றிலே கரைக்க வேண்டும். அதற்கு வேண்டிய சாஸ்திரங்களைப் படிக்கவேண்டும். இதற்கு ஸாதனம் ச்ருதி (வேதம்), ஸ்மிருதி (தர்ம சாஸ்திரம், புராணம், கோயில் தரிசனம், பூஜை, பரோபகார கர்மா, ஸ்வதர்மம் முதலியவைகள். உலகத்தில் உள்ள வஸ்துக்களுக்காக எவ்வளவோ தியாகம் பண்ணுகிறோம். நமக்கு ஸ்திரமான ஆனந்தத்தைத் தரும் அத்வைத நிலை அடைவதற்கு எந்தத் தியாகமும் பண்ணலாம். ஞானோபதேசம் செய்த யாக்ஞவல்கியரிடம் ஜனகர், "விதேஹ ராஜ்யம் முழுவதும் கொடுத்தேன்; என்னையும் கொடுத்தேன்" என்றாராம்:

"விதேஹான் ததாமி மாம் சாபி ஸஹ தாஸ்யாய" (பிருஹதாரண்யகம்).

கூரையில் எத்தனை தரம் உடைத்தாலும் பத்து நாளுக்கு ஒரு தரம் கறையான் புற்று தோன்றிக் கொண்டேதான் இருக்கும். கூரை மூங்கிலுக்குள் இருக்கிற தாய்ப் பூச்சியை எடுத்துப் போட்டால்தான் அப்புறம் புற்று முளைக்காது. இந்த மாதிரி ஸாதனை, மார்க்கம் எதில் போனாலும் சரீரம், துக்கம் மறுபடி மறுபடி முளைத்துக் கொண்டுதான் இருக்கும். இதற்கெல்லாம் ஆதிகாரணமான

தாய்ப்பூச்சியான த்வைதப் பூச்சியை எடுத்துப் போட்டால்தான் நமக்கு வேறான இன்னொன்றால் ஏற்படும் காமமும், க்ரோதமும், இதுகளை அநுபவிப்பதற்காக மறுபடி மறுபடி உடம்பு எடுப்பதும் தீர்ந்து போகும்.

இந்த நிலைக்கு வருவதற்கு ஸுலபமான ஸாதனம் பக்தி உபாஸனை என்று அப்பைய தீக்ஷிதர் சொல்லியிருக்கிறார். அதை எல்லோரும் அநுஸரித்து அத்வைத ஸித்தியை அடைய வேண்டும்.

உலகம் எப்படிப் பொய்?

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

அத்வைதம்

உலகம் எப்படி பொய் ?

அத்வைதத்தில் உலகம் பொய், மாயை என்று சொல்லியிருப்பது பல பேருக்குப் புரிவதில்லை. அதை ஆக்ஷேபிக்கிறார்கள். கண்டனம் பண்ணுகிறார்கள். "இத்தனை ஜீவஜந்துக்களுக்கும் லோகம் தெரிகிறது. அதில் இப்படி ஒரு காரியம் செய்தால் இப்படி விளைவு ஏற்படுகிறது என்று ஏராளமான காரண காரிய விதிகள் இருப்பதால்தான் நாம் அநேக விதமான காரியங்களை செய்யமுடிகிறது. பலனை அடைய முடிகிறது. பொய், மாயை என்றால் எப்படி ஒப்புக்கொள்வது?" என்று கேட்கிறார்கள்.

ஆசார்யாள் [அத்வைத ஸ்தாபகரான ஸ்ரீசங்கர பகவத்பாதாசாரியாள்] லோகத்தைப் பொய் என்று

சொன்னார் என்றால், அது அப்படியே அஸத்தியம் என்று சொன்னார் என்று தப்பாக அர்த்தம் பண்ணிக் கொள்வதால்தான் இப்படிப்பட்ட கண்டனம் எழுகிறது.

"இதென்ன வேடிக்கையாயிருக்கிறது! அப்படியானால் லோகம் பொய், ஆனால் அஸத்தியமில்லை என்றா ஆசார்யாள் சொல்லியிருக்கிறார்? இப்படி சொல்வது கொஞ்சம்கூடப்புரியாத விசித்திரமாக இருக்கிறதே!" என்று தோன்றும்.

ஸத்யம்..அஸத்யம்..பொய் என்ற மூன்றைப் பற்றி ஆசார்யாளின் அபிப்பிராயத்தை, அவர் செய்திருக்கிற பாகுபாட்டைப் (distinction) பார்க்கலாம்.

ஸத்ய வஸ்து என்றால் அது அவருக்கு ஏகமான ஆத்மா ஒன்றுதான். பிரம்மம் என்றும் அதையே சொல்வது. ஒரே ஸத்ய வஸ்துவைத்தான் ஒரு ஜீவனுக்கு ஆதாரமாக இருக்கிற போது ஆத்மா என்றும், ஸர்வ ஜீவராசிகளுக்கும் ஸர்வ லோகத்துக்கும் ஆதாரமாக இருக்கிறபோது பிரம்மம் என்றும் சொல்வது. எக்காலும் மாறாமல் இருப்பது அது ஒன்றுதான். அதனால் ஸத்தியம்.

லோகம் மாறிக்கொண்டேதானே இருக்கிறது? நாம் மாறிக் கொண்டேதானே இருக்கிறாம்? நம் மனஸ், எண்ணங்கள் க்ஷணத்துக்கு க்ஷணம் மாறிக் கொண்டேதானே இருக்கின்றன? அதனால் இவற்றுக்கு 'ஸத்யம்' என்ற லக்ஷணத்தை (definition) ஆசார்யாள் தரமாட்டார்.

அஸத்யம் என்பாரா? அப்படியும் சொல்ல மாட்டார். ஸத்யத்துக்கு முன்னாடி 'அ' போட்டு 'அஸத்யம்' என்று

சொன்னால், இது ஸத்யத்துக்கு முற்றிலும் எதிரானது என்றாகிவிடும். அதாவது அடியோடு இல்லை என்று ஆகிவிடும். லோகத்தை இப்படி அடியோடு இல்லாத அஸத்யம் என்று ஆசார்யாள் சொல்லவே இல்லை. அதே சமயத்தில் அது ஸத்யமும் அல்ல, சாச்வதமான உண்மையும் அல்ல என்பதால், மித்யை, மித்யை என்றார். மித்யை என்றால் பொய் என்று நாம் எடுத்துக் கொள்கிறோம்.உண்மையில் அது சாச்வத ஸத்தியமாகவும் இல்லாமல் அடியோடு அஸத்தியமாகவும் இல்லாமலிருக்கிற நடுவாந்தர நிலை.

நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்கள் ஸத்யத்தை மூன்று விதமாகப் பிரித்திருக்கிறார்கள். இந்த மூன்றிலும் சேராததையே அஸத்தியம் என்று அடியோடு தள்ளி விட்டார்கள். (1) பாரமார்த்திக ஸத்யம், (2) வ்யாவஹாரிக ஸத்யம் , (3) ப்ராதிபாஸிக ஸத்யம் என்று ஸத்யத்தை மூன்றாக பிரித்தார்கள். (4) அஸத்யம் என்பது இந்த மூன்றிலும் சேராது.

இவைகளுக்குள் பாரமார்த்திக ஸத்தியமென்பதுதான் சாச்வத உண்மையான பிரம்ம ஸ்வரூபம்.

வ்யாவஹாரிக ஸத்தியம் என்ன என்றால், நடைமுறையில், விவகாரத்தில் நிஜம் என்று நாம் நினைப்பதுதான். லோக வாழ்க்கை நிஜம் என்று நாம் நினைப்பதுதான் வ்யாவஹாரிக ஸத்தியம். தகர டப்பியின் மூடி கீழே வெயிலில் கிடந்தால் அது வெள்ளி ரூபாயைப் போலத் தோன்றுகிறது. அது ப்ராதிபாஸிக ஸத்தியம். கொஞ்ச நாழிகை அப்படித் தோன்றுகிறது. ஆனால் அது

உண்மையல்ல. கனவும் இப்படியே. இந்த மூன்று மாதிரியின்றி, ஒரு நாளும் இல்லாதது அஸத்தியம். மலடி மகன், குதிரைக் கொம்பு முதலியவை ஒரு நாளும் ஸம்பவிக்காதவை. இவை அஸத்தியம். இதை விகல்பமென்று யோக ஸூத்திரம் சொல்லும்:

சப்த ஞானானுபாதீ வஸ்து சூன்யோ விகல்ப: ।

'மலடி மகன்' என்கிற சப்தம் (வார்த்தை) மாத்திரம் இருந்து, அதற்கான வஸ்து இல்லாதது விகல்பம் என்று சொல்லப்படுகிறது. இந்த அஸத்தியத்தைத் துச்சமென்றும் அத்யந்த அஸத்தென்றும் சொல்லுவார்கள்.

வைக்கோலால் செய்யப்பட்ட பழுதை சாயங்கால அரை இருட்டில் பாம்பாகத் தோன்றுகிறது. அது பாம்பு என்பது பொய். ஆனால் பாம்பு மாதிரியாகத் தெரிவது நிஜம். அப்ப்படித் தெரியும்போது பொய்யும் நிஜமும் கலந்திருக்கின்றன. கிட்டே போனால் பொய்யகி விடுகிறது. அனால் நடுவில் கொஞ்ச நாழி நிஜம் மாதிரியே இருந்தது. அது ப்ராதிபாஸிக ஸத்தியம்.

வ்யாவஹாரிக ஸத்தியமும் ப்ராதிபாஸிக ஸத்தியமும் உண்மையறிவு ஏற்படுகிறபோது பொய்யாகி விடுபவை.உண்மை அறிவு இல்லாதபோது மெய்யாக இருப்பவை. வேதாந்தத்தில் இப்படிப்பட்ட பொய்க்கு மித்யை என்று பெயர். ஒரு போதும் மெய்யாகத் தெரியாதது மட்டுமே அஸத்தியம்.

விவகார ஸத்தியம் (வ்யாவஹாரிக ஸத்தியம்) என்று நாம் சொல்கிற லோகமும் உண்மையில், நமக்கு ஞானம்

வந்தால் ப்ராதிபாஸிகமாக மறைந்து விடும் என்கிறார் ஆசார்யாள். பாஸம் என்றால் ஒளி. ப்ரதிபாஸம் என்றால், ஒளி ஒன்றிலே பட்டு அங்கே பிரதிபலிப்பால் ஏற்படுகிற சிறிது பிரகாசம் (reflection). தகர மூடியில் சூரிய வெளிச்சம் ஏற்பட்டது. அதனால் அது வெள்ளி மாதிரித் தெரிந்தது. ஆனாலும் வெள்ளியில்லை. இது பிராதிபாஸிகம். அப்படியே லோகம் என்பது பிரம்மத்தின் சைதன்யத்தால் ஸத்தியம் மாதிரி மினுமினுக்கிறது. வெயிலில் கிடந்த ஒரு கிளஞ்சலில் வெள்ளியின் மினுமினுப்பு வாஸ்தவமாகத்தான் தெரிந்தது. அது முழுப் பொய்யில்லை; நம் கற்பனை இல்லை. அது வெள்ளியென்று நினைத்தபோது, நிஜ வெள்ளி ஏற்படுக்துகிற எண்ணத்தை யெல்லாம் அடைந்தோம். அவ்வளவு ஸந்தோஷம் அடைந்தோம். அந்த வெள்ளியை பாஸம் என்றால் ஒளி. ப்ரதிபாஸம் என்றால், ஒளி ஒன்றிலே பட்டு அங்கே பிரதிபலிப்பால் ஏற்படுகிற சிறிது பிரகாசம் (reflection). தகர மூடியில் சூரிய வெளிச்சம் ஏற்பட்டது. அதனால் அது வெள்ளி மாதிரித் தெரிந்தது. ஆனாலும் வெள்ளியில்லை. இது பிராதிபாஸிகம். அப்படியே லோகம் என்பது பிரம்மத்தின் சைதன்யத்தால் ஸத்தியம் மாதிரி மினுமினுக்கிறது. வெயிலில் கிடந்த ஒரு கிளஞ்சலில் வெள்ளியின் மினுமினுப்பு வாஸ்தவமாகத்தான் தெரிந்தது. அது முழுப் பொய்யில்லை; நம் கற்பனை இல்லை. அது வெள்ளியென்று நினைத்தபோது, நிஜ வெள்ளி ஏற்படுக்துகிற எண்ணத்தை யெல்லாம் அடைந்தோம். அவ்வளவு ஸந்தோஷம் அடைந்தோம். அந்த வெள்ளியைக் கொண்டு இன்ன நகை பண்ணலாம், அல்லது

விற்று இவ்வளவு பணம் பண்ணலாம் என்றெல்லாம் ப்ளான் போட்டோம். இதே மாதிரிப் பழுதையைப் பாம்பாக பார்த்தபோது நிஜப் பாம்பை பார்க்கிற அதே பயப் பிராந்தி, மயக்கம், வயிற்றுக் கலக்கல் எல்லாம் உண்டாகிவிட்டது. மலடி மகன், முயல் கொம்பு என்று சொன்னால், அது இப்படிப்பட்ட உணர்ச்சிகளை உண்டாக்குமா? அடியோடு பொய் என்று தள்ளிவிடுவோம். அது நம்மை இன்னொன்று மாதிரித் தோன்றி ஏமாற்றாது.

இப்படி இன்னொன்று மாதிரித் தோன்றி ஏமாற்றுவதற்குத்தான் மாயா சக்தி என்று பெயர். வெயிலில் தகரம் வெள்ளியாகத் தெரிந்தது போல, மாயாசக்தியால் பிரம்மம் ஜகத்தாகத் தெரிகிறது.

பிரம்மம் லோகம் மாதிரித் தோன்றுகிறது. இந்த லோகமே பரம ஸத்தியம் என்று ஏமாந்து போகிறோம். நமக்கு ஞானம் வந்துவிட்டால் என்ன ஆகிறது? 'பிரம்மத்தைத் தவிர இரண்டாவதாக எதுவுமே இல்லை. அதைத் தவிர இந்த லோகமும் இல்லை. இது அது மாயையால் போட்டுக்கொண்ட வேஷம்தான்' என்று தெரிந்து விடுகிறது. பழுதைக்குக் கிட்டே போனால் அது பாம்பு என்று நினைத்த எண்ணம் ஓடிப்போய் விடுகிற மாதிரி, தகர மூடியையோ, கிளிஞ்சலையோ எடுக்கப் போய் அது வெள்ளியில்லை என்று தெரிந்து கொள்கிற மாதிரி, ஞான நிலையில் அதற்கு முன்னாடி லோகம் நிஜம் என்று நினைத்தது ஓட்டம் பிடிக்கிறது. வெள்ளியாகத் தெரிந்தவரையில் தகர மூடியும் பாம்பாகத் தெரிந்தவரையில் பழுதையும் ஏற்படுத்திய எண்ணங்கள் எல்லாம் அப்புறம் இருந்த இடம் தெரியாமல்

போய்விடுகிற மாதிரி, ஞானம் வந்துவிட்டால் லோகம் நிஜம் என்று நினைத்தபோது நமக்கு ஏற்பட்ட அத்தனை எண்ணமுமே நின்று போய்விடுகிறது. அதாவது, அனேக விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டதால் விவகார ஸத்தியம் என்று நாம் ஒத்துக் கொண்ட லோகம், அத்வைதமாக ஸமாதி நிலையில் இருக்கிற போது பிராதிபாஸிகம் மாதிரியே மறைந்து விடுகிறது. ஆனாலும் இப்படி ஞானியானவன் தவிர, மற்ற அத்தனை பேருக்கும் அது காரியம்-விளைவு என்கிற விதிகளோடு தெரிந்து கொண்டு, அதிலே அவர்கள் பல தினுஸான பிரயத்தனங்களைப் பண்ண முடிவதால், லோகத்தை வ்யாவஹாரிக ஸத்தியம் என்று ஒரு Status கொடுத்து வைத்திருக்கிறார்.

விவகார-பிரதிபாஸ ஸத்யங்களைத் தவிர "ஸத்யதரம்" இன்று இருக்கிறது. அதுவே எப்போதும் ஸத்தியமான பிரம்மம்.ஆகவே ஸத்தியமானது ஒன்று, அஸத்தியம் ஒன்று. பொய் இரண்டு உள்ளன. ஸத்தியமாவது பிரம்மம் என்கிற ஸ்வாமி, அஸத்தியம் மலடிமகன். ஈச்வரன் ஒரு நாளும் இல்லையென்று போகமாட்டார். அவர் ஸத்தியம். மலடிமகன் ஒரு நாளும் இருப்பவனாக மாட்டான். அவன் அஸத்தியம். சில பதார்த்தங்கள் மிந்தி இல்லாமல் போகும்; பிந்தி வரும்; இப்பொழுது இல்லாமல் அப்புறம் உண்டாகும். அவைகள் எப்பொழுதாவது இல்லை என்ற ஒரு காலம் இருக்கும். எப்பொழுதுமே இல்லை என்பதில்லாமல் இருக்கிறது ஸத்தியம். அப்படியிருப்பவர் பரமாத்மா. அஸத்தியம் முக்காலத்திலும் இருக்கிறது என்பது இல்லாதது அதாவது ஒரு நாளும் இல்லாதது. நடுவில் உள்ள இரண்டு விதமான மித்யைகள் ஸத்திய

அம்சம் கொஞ்சம், அஸத்திய அம்சம் கொஞ்சம் கலந்து உள்ளவை. அவைதான் பொய். வியாவஹாரிகம், பிராதிபாஸிகம் என்பவை இரண்டும் மித்யை அல்லது பொய். அவை ஒரு காலத்தில் மட்டும் இருக்கிறாற்போல இருந்து இன்னொரு காலத்தில் இல்லாமல் போய்விடுபவை.

நாமெல்லாம் எப்படிப்பட்டவர்கள்? நம் தேஹம் கொஞ்ச நாளுக்கு முன்பு இல்லை, பின்பும் இது இல்லாமல்தான் போகப்போகிறது. ஸத்தியம் இல்லை. கொஞ்சகாலம் இருப்பதால் அஸத்தியமும் இல்லை. முழு ஸத்தியமாக இருந்தால் முக்காலத்திலும் நாசம் அடையாமல் இருக்க வேண்டும். அப்படியும் இல்லை. இது "சுக்தி ரூப்யம்" போன்றது. அதாவது வெயில் அடிக்கும்போது கிளிஞ்சலில் (சுக்தி) வெள்ளி (ரூப்யம்) தோன்றுவதைப் போன்றது. ரூப்யம் என்பது வெள்ளி. அதிலிருந்து ரூபாய் (Rupee) என்ற வார்த்தை வந்தது. கிளிஞ்சலில் வெள்ளி தோன்றுவது ஸத்தியமா? அஸத்தியமா?

கிளிஞ்சல் மினுமினு என்று மின்னும்போது ஒரு நிமிஷமாவது அதிலே வெள்ளி இருக்கிறதென்று தோன்றுகிறது. மலடிமகன் ஒரு ஸெகண்டாவது தோன்றுவதுண்டோ? இல்லை. அதைப் போன்றதில்லை இது. "இருக்கிறது" என்னும் அம்சம் இதில் கலக்கிறது. அது குதிரைக்கொம்பு என்பதில் கலக்காது. குதிரைக் கொம்பு என்பதை வார்த்தையாக மட்டும் சொல்லலாம். வஸ்துவே கிடையாது. இதுவோ இருக்கிறதென்ற அம்சம் கொஞ்சம் தோன்றுவதனால் அஸத்தியம் அல்ல. சரி, ஸத்தியமா என்றால் ஸத்தியமானால் இந்தத் தோற்றம்

எப்பொழுதும் இருக்க வேண்டும். கிளிஞ்சலென்று தெரிந்தால், வெள்ளியானது இல்லாமற் போய்விடுகிறது. எப்பொழுதும் அந்த வெள்ளி இல்லை.ஆனாலும் அப்படித் தோற்றம் மட்டும் உண்டாயிற்று. வெயில் போன பிறகு தோற்றமும் போயிற்று. வெள்ளி போனாலும் அதற்கு ஆதாரமாகக் கிளிஞ்சல் இருக்கிறது. பாம்பு என்ற ஒரு தோற்றம் அதற்குக் காரணமான வஸ்து-அதாவது பழுதை-தோன்றியவுடன் போய்விட்டது. அந்தத் தோற்றம் ஸத்தியமாக இருந்தால் பின்னால் இல்லாமல் போகாது. ஆகையால் இது ஸத்தியத்துக்கு வேறானது. அதுதான் பொய். இந்த மித்யைக்கு ஆதாரமாக ஒரு ஸத்தியம் உண்டு. பாம்புத் தோற்றம் என்ற மித்யைக்கு பழுதை ஆதாரம். பாம்புத் தோற்றம் போன பின்பும் பழுதை நிற்கிறது. இப்படியே வெள்ளி என்ற எண்ணம் போன பின்பும், ஆதாரமாக கிளிஞ்சல் இருக்கிறது. பழுதை, கிளிஞ்சல் என்ற ஸத்தியங்களை ஆதாரமாகக் கொண்டே பாம்பு, வெள்ளி ரூபாய் என்ற தோற்றங்கள் ஏற்பட்டன. அப்படியே மித்யா லோகத்துக்கு ஆதாரம் பிரம்மம். லோகத் தோற்றம் போனால் எல்லாம் சூன்யமாகி விடாது. ஆதாரமான பிரம்மம் அப்போதும் ஸத்தியமாக இருக்கும். பாம்பு பொய் என்ற எண்ணம் போன பிறகும் பழுதை இருந்ததல்லவா?

ஸத்திய பிரம்மத்தை மித்யலோகம் மாதிரிக் காட்டுவது மாயை. மாயையை "அநிர்வசனீயம்" என்று ஆசார்யாள் சொல்லுவார்கள். "விளக்க வொண்ணாதது" என்று அர்த்தம். அது ஸத்தும் அன்று. அஸத்தும் அன்று. இன்னதென்று சொல்ல முடியாதது; உள்ளதென்றும்

இல்லதென்றும் சொல்ல முடியாதது. ஒரு சமயம் தோன்றுகிறது. அப்புறம் ஞானம் வந்துவிட்டால் இல்லாமாலும் போகிறது."பொய்ம்மாயப் பெருங்கடலில்" என்று தமிழ் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது*. மாயை என்றால் பொய் என்று அது சொல்லுகிறது. ஸத்தியமும் இல்லாமல் அஸத்தியமும் இல்லாத மூன்றாவது பொருளாக இருக்கிறது அது. இல்லையென்று சொல்லிவிட்டால் தோன்றுகிறதே! அதற்கு என்ன செய்வது? இருக்கிறது என்றால், போய்விடுகிறதே!

இது பரமாத்வாவைவிட வேறு என்றால், அவருக்கு வேறாக ஏதும் இல்லையாதலால் அப்படிச் சொல்ல முடியாது. பரமாத்மாவேதான் மாயை என்பதும் ஸரியல்ல. ஞானம் வந்தால் மாயை போய்விடுகிறதே! பௌத்தர்கள் சொல்லுகிற சூனியமும் அன்று. பரமார்த்திக ஸத்தியமுமன்று. அதனால்தான் விளக்கவொண்ணாத 'அநிர்வசனீயம்' என்று சொல்லுகிறார்கள்.

பழுதை தோன்றினால் பாம்பு போய்விடும். பழுதை அதிஷ்டானம். பாம்பு ஆரோப்யம். அதிஷ்டானம் நமக்கு ஸாக்ஷாத்காரமானால் ஆரோப்யம் போய்விடும். எதில் ஒரு தோற்றத்தை ஏற்றி வைத்திருக்கிறோமோ அது தெரிந்தால், ஏற்றி வைத்திருந்த தோற்றம் போய்விடும். இந்தத் தோற்றமே பிராதிபாஸிக ஸத்தியம். நாம் அடியோடு எப்பொழுது இல்லாமல் போவோம்? நம்மை எந்த வஸ்துவின்மேல் ஆரோபித்து வைத்திருக்கிறோமோ அது தெரிந்தால், 'நாம்' என்பது போய்விடும். ஸூர்ய சந்திராதிகள், பஞ்ச பூதங்கள், பிரபஞ்சம் முதலியவைகளை நாம் எதில் வைத்திருக்கிறோமோ அந்த ஸத்தியமான

வஸ்து தெரிந்தால், இந்தப் பிரபஞ்சமெல்லாம் போய்விடும். அப்போது லோகம் பொய் ஆகிறது. நாமும் பொய்யாகிறோம். இதுதான் ஆசார்யாள் சொன்னது. "விவகார தசையில் லோகம் நிஜமே; ஞான தசையில் அது மறைந்துவிடும்" என்றார். இதைச் சரியாகப் புரிந்து கொள்ளாததாலேயே, 'கண்ணுக்குத் தெரிகிற – காரிய, காரணச் சட்டத்துக்குக் கட்டுப்பட்ட – லோகத்தை அவர் எப்படிப் பொய் என்று சொல்லலாம்?' என்று சண்டைக்கு வருகிறார்கள். அடியோடு புளூகாக உள்ள அஸத்தியமாகவும் இல்லாமல், முழுக்க நிஜமாக இருக்கிற ஸத்யமாகவும் இல்லாமல், இரண்டும் கலந்திருக்கிற விவகார ஸத்யமாகவே லோகத்தை அவர் வைத்து, இதற்கே மித்யை அல்லது பொய் என்று பேரைக் கொடுத்தார் என்று புரிந்து கொண்டால் சண்டை வராது.

*அப்பர் ஸ்வாமிகளின் திருவாரூர் திருத்தாண்டகம்.

வேறு வேறாவது எப்படி?

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

அத்வைதம்

வேறு வேறாவது எப்படி?

"அஹம் ப்ரம்மாஸ்மி", "சிவோஹம்" என்று சொல்லுகிறீரே? நீரே பிரம்மம், நீரே சிவம் என்றால் எப்படி? வேறுமாதிரி தானே தெரிகிறது? - என்று மற்ற ஸித்தாந்திகள் அத்வைதியைக் கேட்கிறார்கள். எல்லாம் பிரம்மம் என்றாலும் தனியாக ஜீவன்கள் மாதிரி தெரியத்தானே செய்கிறது? இதற்கு அத்வைதி பதில் சொல்லியாக

வேண்டும். அத்வைத சாஸ்திரங்களில் இரண்டு விதமாக விடை சொல்லியிருக்கிறது.

ஸ்வாமி நாமாவதெப்படி யென்றால் அது இரண்டு தினுசு. ஒன்று: ஸூரியன் நன்றாகப் பிரகாசமாக இருக்கும் பொழுது தண்ணீரில் கையைத் தோய்த்துக் கீழே தெளித்தால் ஆயிரம் துளிகள் விழுகின்றன. அந்த ஆயிரம் துளிகளிலும் ஆயிரம் ஸூரியர்கள் தெரிகிறார்கள். ஒரே ஸூரியன் அப்படி ஆயிரமாகத் தோன்றுகிறான். எந்தப் பதார்த்தத்தில் தெரிகிறானோ அதற்குத் தக்கபடி அவனுடைய அளவும் இருக்கின்றது. இது போலவேதான் பிரம்மாகிற ஒரே சைதன்யம் (அறிவு) பலவிதமான மனிதர்கள், பிராணி வர்க்கங்களில் பலவாறான அறிவுகளாகப் பிரதிபலித்து வேறு வேறு என்ற எண்ணத்தை உண்டாக்குகிறது. வாஸ்தவத்தில் ஒரே ஸூரியன் மாதிரி ஒரே சைதன்யம்தான். இந்த வாதத்தை "பிம்பப்ரதி பிம்ப வாதம்" என்று சொல்லுவார்கள்.

அந்தத் துளிகளையெல்லாம் அழித்து விட்டால் அப்பொழுது பிம்பம் ஒன்றும் இராது. நம்முடைய மனஸில்தான் பேதமாகத் தோன்றுகிற பிரதிபிம்பங்கள் உண்டாகின்றன. இவை போய்விடும். ஆனால் ஸூரியன் இருக்கும். பவர் ஹவுஸில் யந்திரம் ஓடினால் எலெக்ட்ரிஸிடி உண்டாகிறது; அதனால் வெளிச்சம் உண்டாகிறது. யந்திரம் நின்றால் எலெக்ட்ரிஸிடி நின்றுவிடும். வெளிச்சமும் இராது. ஓட்டந்தான் மனஸ். அந்த ஓட்டத்தை நிறுத்திவிட்டால் மனஸ் இல்லாமற் போய்விடும். அப்பொழுது பிரதி பிம்பமும் இல்லை. பிரதிபிம்ப ஸூரியன் மாதிரி துளித்துளி அறிவோடு

இருக்கிற நாம், அசல் ஸூரியனாக அறிவுமயமாகி விடலாம்.

பரமாத்மாவும் ஜீவாத்மாவும் பிம்பமும் பிரதிபிம்பமும் என்கிறபோது, அந்தத் துளி வற்றிப்போனால் பிம்பம் மறைகிறதே தவிர ஸூரியனாகிவிட்டதா என்ற கேள்வி வருகிறது. இதற்குப் பதிலாகத்தான் இன்னொரு விதமான வாதத்தையும் அத்வைத சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. இது "அவச்சின்னவாதம்" என்பது. கிணற்றில் நிறைய ஜலம் இருக்கிறது. ஒரு செம்பை முழுகவைத்து இழுத்துக் கொண்டே போகிறோம். செம்புக்குள் இருக்கும் ஜலமும் கிணற்றுக்குள் இருக்கும் ஜலமும் ஒன்றேதான். இரண்டுக்கும் வித்தியாசம் இல்லை.ஆனால் செம்பைக் கிணற்று ஜலத்துக்குள் இழுத்துக் கொண்டு போகும் பொழுது, அதற்குள் இருக்கும் ஜலம் தனியாக வருகிறது போல் இருக்கிறது.

ஒரே ஆகாசம் எங்கும் நிறைந்திருக்கிறது. ஆகாசம் எல்லாவற்றிற்கும் இடம் கொடுக்கிறது. எங்கும் பரவி இருக்கிற இந்த ஆகாசத்திற்கு 'மஹாகாசம்' என்று பெயர். திறந்த வெளியில் காலியாகப் பல குடங்களை வைத்தால் அவற்றுக்குள்ளும் ஆகாசம்தான் இருக்கிறது. குடத்திற்குள் இருக்கிற ஆகாசத்திற்கு 'கடாகாசம்' என்று பெயர். கடம் என்றால் குடம். கடம் உடைந்து போனால் கடாகாசமும் போய்விடுமா? போகாது. கடாகாசமாகத் தனியாகத் தெரிந்தது மஹாகாசத்தில் கலந்துவிடும். கடம் உடையாத பொழுது அந்த ஆகாசம் தனியாகச் சின்னதாக இருக்கிறது போல நமக்குத் தோன்றுகிறது. உடைந்து விட்டால் கடாகாசம் மஹாகாசமே ஆகிவிடுகிறது. கடம் இருக்கிற

அளவு எதுவோ அதற்கு தகுந்தபடி இப்படிப்பட்ட பேதங்கள் ஏற்படுகின்றன. அதே மாதிரி பரமாத்மா அந்தந்த மனஸுக்குத் தக்கபடி வித்தியாஸமாகத் தோன்றுகிறார். செம்பில் இருக்கிற ஜலம் பெரிய செம்பாயிருந்தால் பெரியதாகவும் சின்னச் செம்பாயிருந்தால் சின்னதாகவும் தோன்றுகிறது. செம்பை உடைத்து விட்டால் அந்த பேதங்களெல்லாம் போய்விடுகின்றன. அதைப்போல மனஸ் போய்விட்டால் பேதபுத்தியும் போய்விடுகிறது. இப்படிச் சொல்லுவதுதான் அவச்சின்ன வாதம் என்பது. பரமாத்மாவே ஜீவாத்மா மாதிரி தோன்றுவதை இப்படி இரண்டு விதங்களில் விளக்கியிருக்கிறது.

துளிக்குள் ஸூரியன் தெரிந்தால் அங்கே நிஜ ஸூரியனுக்கு வேறாக இன்னொரு ஸூரியன் உண்டாகி விட்டான் என்று அர்த்தமில்லை. மஹாகாசத்துக்கு வேறாக இன்னொரு ஆகாசத்தையா குடத்துக்குள் யராவது பிடித்துக் கொண்டுவிட்டார்கள்? கிணற்று ஜலம் தவிர வேறு ஜலம் அந்தக் கிணற்றுக்குள்ளேயே முழுகின குடத்துக்குள் இருந்ததா என்ன? ஆக பிரம்மத்துக்கு வேறாக ஒன்று இருக்கவே இல்லை. பரமாத்மாவுக்கு வேறானவனில்லை ஜீவாத்மா. பரமாத்மாவே தான் வேறு மாதிரியான ஜீவாத்மாவாக நம்முடைய அஞ்ஞானம் மறைக்கிற வரையில் தோன்றுகிறான். ஸூரியனின் பிரதிபிம்பம் மாதிரி, அல்லது சின்ன அளவைக்கு உட்பட்டது போலத் தோன்றுகிற மஹாகாசம், கிணற்று ஜலம் இவை மாதிரி நமக்குள்ளும் ஏக சைதன்யம் தவிர வேறு எதுவுமே இல்லை. பிரம்மம், சிவம் என்பதெல்லம் அதைத்தான். வேறு வேறு போலத் தெரிந்தாலும், இப்படி

இருக்கிற எல்லமும் அந்த ஒன்றே என்ற ஞாபகத்தை உண்டாக்கிக் கொள்வதற்காகத்தான், "அஹம் ப்ரஹ்மாஸ்மி", "சிவோஹம்" என்று சொல்லுவது.

வேதத்தின் முடிவும் சங்கரரின் முடிவும் ஒன்றே

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

அத்வைதம்

வேதத்தின் முடிவும் சங்கரரின் முடிவும் ஒன்றே

"வேதாந்தம்" என்று சொன்னால் அதற்கு "வேதத்தின் முடிவு" என்று அர்த்தம்."வேதத்தின் முடிவு" என்றால் அதற்கு இரண்டு அர்த்தம் உண்டாகிறது. வேதம் என்கிற புஸ்தகத்துக்கு முடிவான பாகமாக இருப்பது என்பது ஒரு அர்த்தம். வேதத்தின் முடிந்த முடிவான அபிப்பிராயம் எதுவோ, வேதத்தின் பரம தாத்பரியம் எதுவோ, அதற்கும் "வேதத்தின் முடிவு" என்றே பெயர் கொடுக்கலாம். "உன் தீர்மானம் என்ன?" என்று கேட்பதற்கு பதில், "உன் முடிவு என்ன?" என்று கேட்கிறோம் அல்லவா? இப்படி, வேதத்தின் முடிவு என்றால் வேதத்தின் தீர்மானமான் கருத்து, வேதத்தின் உத்தேசம், வேதத்தின் லக்ஷயம் என்றும் அர்த்தமாகிறது.

உபநிஷத்துக்களுக்குத்தான் "வேதாந்தம்" என்ற பெயர் இருக்கிறது. மேலே சொன்ன இரண்டு அர்த்தங்களிலும் அது வேதாந்தமாக, அதாவது வேதத்தின் முடிவாக, இருக்கிறது.

வேத புஸ்தகத்தை எடுத்துக் கொண்டால் முதலில் ஸம்ஹிதை, அப்புறம் பிராம்மணம், அதற்கப்புறம் ஆரண்யகம் என்று மூன்று பகுதிகள் வந்து, கடைசியாக, ஆரண்யகத்தின் முடிவுலேயே உபநிஷத்துக்கள் வருகின்றன.

வேதத்தின் கருத்தை, அர்த்தத்தை, அபிப்பிராயத்தை எடுத்துக்கொண்டாலும், முன்னே சொன்ன ஸம்ஹிதை, பிராம்மணம், ஆரண்யகம் இவற்றில் வருகிற கர்மா, விசாரணை எல்லாவற்றுக்கும் முடிவான மோக்ஷத்தைப் பற்றி நேராக (direct-ஆக) எடுத்துச் சொல்கிற தத்வோபதேசமாக இருப்பவை உபநிஷத்துக்கள்தான்.

இப்படிப்பட்ட உபநிஷத்துக்கள் நூற்றுக்கு மேல் ஏராளமாக இருந்தாலும், முக்கியமானதாகப் பத்தை பொறுக்கி எடுத்து, ஆதிசங்கர பகவத்பாதாள் பாஷ்யம் (விரிவுரை) எழுதினார். ஈசம், கேனம், கடம், பிரச்னம், முண்டகம், மாண்டூக்யம், தைத்திரீயம், ஐதரேயம், சாந்தோக்யம், ப்ருஹதாரண்யகம் என்ற அந்தப் பத்துக்குப் பெயர்.

நம் மதத்தின் வேராக, ஆதார ஸ்தம்பமாக இருக்கப்பட்ட வேதத்தின் முடிந்த முடிவாக, இந்த உபநிஷத்துக்கள் தெரிவிக்கிற தத்வம் அத்வைதந்தான் என்று ஆசார்யாள் தம்முடைய பாஷ்யங்களின் மூலம் விளக்கியிருக்கிறார். 'இல்லை, அவை விசிஷ்டாத்வைதத்தைத்தான் சொல்கின்றன' என்பதாக, நம் ஆசார்யாளுக்குப் பிந்தி வந்த ஸ்ரீ ராமானுஜாசாரியார் பாஷ்யம் செய்திருக்கிறார். அவருக்குப் பிறகு வந்த ஸ்ரீ மத்வாசாரியார் வேதாந்தத்தின் தாத்பரியம் த்வைதம்தான் என்று பாஷ்யம்

எழுதியிருக்கிறார். இப்படியே வேதத்தை ஒப்புக்கொள்ளும் அநேக ஹிந்து மதப் பிரிவுகளின் ஆசார்யர்களும், உபநிஷத் தாத்பரியம் தங்கள் தங்கள் கொள்கையைத்தான் சொல்கிறது என்கிறார்கள்.

உபநிஷத்துக்கள் அத்வைதத்தைச் சொல்லவில்லை என்ற தங்கள் அபிப்பிராயத்துக்கு ஆதரவாக, மற்ற சம்பிரதாய ஆசார்யர்கள் முக்கியமாக என்ன சொல்கிறார்களென்றால், நம் ஆசார்யாள் லோகமெல்லாம் மாயை என்று சொல்வதற்கு மேற்படி தசோபநிஷத்துக்களில் (பத்து உபநிஷத்துக்களில்) நேராக ஆதாரம் இல்லை என்பதுதான்.

ஜகத்தை மாயை என்று அத்வைதத்தில் சொல்கிறதற்கு உபநிஷத்துப் பிரமாணமில்லை என்று இவர்கள் சொல்லுகிறார்கள்.

இது பிசகு.

ஒவ்வொரு உபநிஷத்தையும் ஆரம்பிக்கும் போதும் முடிக்கும் போதும் சாந்தி மந்திரம் என்று ஒன்று சொல்ல வேண்டும். ஈசாவாஸ்யத்தில் ஆரம்பித்து பிருஹதாரண்யகத்தோடு முடிப்பதாகப் பத்து உபநிஷத்துக்களையும் பாராயணம் பண்ணும்போது, ஈசாவாஸ்யத்தின் முதலில் ஆரம்பமாகவும், பிருஹதாரண்யகத்தை முடிக்கும் போது கடைசியாகவும் வருகிறது ஒரே சாந்தி மந்திரம்தான். அதற்கு என்ன அர்த்தம் என்றால், "பூர்ணமான பிரம்மத்திலிருந்து பூர்ணமான உலகம் வந்திருக்கிறது. இப்படி இந்த உலகம் வந்த பின்பும் பிரம்மம் பூர்ணமாகவே இருக்கிறது" என்று அர்த்தம்.

பிரம்மம் என்பதை "அத:" என்றும், உலகம் என்பதை "இதம்" என்றும் இந்த மந்திரத்தில் சொல்லியிருக்கிறது. "அத:" என்பது அது - அதாவது தூரத்தில் இருப்பது. "இதம்" என்பது இது - அதாவது கிட்டத்தில் இருப்பது. தமிழில் இருக்கிற மாதிரியேதான் ஸம்ஸ்கிருதத்திலும் இருக்கிறது. இப்போது நாம் இருக்கிற ஸ்திதியில் பிரம்மம் நமக்குத் தூரத்திலுள்ள விஷயமாகத்தான் இருக்கிறது; நமக்குத் தெரிவது கிட்டத்திலுள்ள உலகம்தான்.

தூரத்தில் இருப்பவனைக் கட்டை விரலுக்கு அடுத்த விரலை நீட்டிக் காட்டுகிறோம். இதனால் அதற்கு ஆள்காட்டி விரல் என்று பெயர். பெருமாளும் இப்படியே அது என்று தூரத்திலே காட்டப்பட வேண்டியவராகத்தான் இருக்கிறார். அதனால் அதைப் 'பெருமாள் காட்டி விரல்' என்று கூடச் சொல்லிவிடலாம். இதே விரலை ஆட்டினால் ஒருத்தனை மிரட்டுவதாக அர்த்தம் ஏற்படுகிறது. "உன்னை என்ன பண்ணுகிறேன் பார்!" என்று சொல்லிக்கொண்டு இந்த விரலைத்தான் ஆட்டுகிறார்கள். ஸம்ஸ்கிருதத்தில் 'தர்ஜனம்' என்றால் மிரட்டுவது, அதட்டுவது என்று அர்த்தம். அதனால் இந்த விரலுக்குத் 'தர்ஜனீ' என்றே பேர் வைத்திருக்கிறது. ஆனால் எனக்கென்னவோ இப்படி அதட்டுவதை வைத்துப் பேர் கொடுக்காமல், தமிழில் 'அது' என்று எட்டத்தில் இருக்கிற பெருமாளை இது காட்டுவதாக வைத்து, "ஆள்காட்டி விரல்" என்று சொல்லியிருப்பதுதான் பிடித்திருக்கிறது.

பேர் "தர்ஜினீ" என்றிருந்தாலும், பரம்பொருளைக் காட்டுகிறது என்ற அபிப்பிராயம் நம் சாஸ்திரங்களிலும்

இருக்கிறது. வேதத்திலும், அதைவிட அதிகமாக மந்திர தந்திர ஆகமங்களிலும் அநேக முத்திரைகள் பிரயோஜனப்படுகின்றன. விரல்களால் செய்கிற அபிநயங்களுக்கு முத்திரை என்று பெயர். இப்படிப்பட்ட முத்திரைகளில் ஒன்றில், தர்ஜினீ என்ற விரலை ஆளைக் காட்டுகிற மாதிரியே வெளியே நீட்டி, அங்குஷ்டத்தை (கட்டை விரலை) உள்பக்கமாகத் தன்னை நோக்கி நீட்டிக்கொள்வதாக ஒரு முத்திரை உள்ளது. இதற்கு தத்வார்த்தம், "அது என்று எங்கேயோ இருப்பதாக நினைக்கப்படும் பரமாத்மாவேதான் ஜீவனுக்கு உள்ளேயும் இருக்கிறது" என்பது. இங்கே தர்ஜினீ அதட்டலுக்கு இல்லாமல் பெருமாளைக் காட்டவே உபயோகிக்கப்படுகிறது. இந்த முத்திரையில் வரும் தத்வத்தையே ஈசாவாஸ்யத்தில் "தத்தூரே தத்வந்திகே", "தூரத்தில் உள்ளதே கிட்டத்தில் உள்ளே யிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறது."அப்பாலுக்கு அப்பாலை, உள்ளிலங்கு சோதியை" என்று இதை தேவாரத்திலும் சொல்லியிருக்கிறது.

நான் மேலே சொன்ன சாந்தி மந்திரத்தில் 'அது' என்று பிரம்மத்தையும், 'இது' என்று ஜகத்தையும் சொல்லியிருக்கிறது. இந்த இடத்தில் 'இது' என்பது ஜீவனைக் குறிக்காமல் ஜகத்தைக் குறிக்கிறது. இப்போது பரமாத்மா நமக்குத் தெரியாமல், ஜகத்துதான் பார்வைக்கு நிஜம் மாதிரித் தெரிவதால், இதையும் பூர்ணம் என்று சொல்லியிருக்கிறது. ஆனாலும் இது வாஸ்தவத்தில் நிஜமில்லை, பூர்ணமில்லை என்பது பின்னால் வருகிற வார்த்தைகளைப் பார்த்தால் நிஸ்ஸந்தேஹமாக

[ஜயமற]த் தெரிகிறது. இந்த ஜகத்தான பூர்ணத்தைக் கழித்த பிறகும் அந்தப் பிரம்மம் பூர்ணமாகவே இருக்கிறது என்று பின்னால் வருகிறது. ஜகத் வாஸ்தவமாகவே பூர்ணமாக இருப்பதால் இது ஸாத்யம் இல்லை. பூர்ணம் மைனஸ் பூர்ணம் என்பது ஸைபராகத்தான் வேண்டும். அப்படியில்லாமல் பூர்ணம் மைனஸ் ஜகத் என்பது பூர்ணமே என்றால் அப்போது ஜகத்துதான் ஸைபர் என்று ஏற்படுகிறது. ஸைபர் என்றால் இல்லாதது. இதைதான் மாயை என்பது. 'இறுதி நிலையில் இல்லாமல் போவது; பார்வைக்கு மட்டும் நிஜம் மாதிரித் தெரிவது' - இதுதான் ஆசார்யாள் மாயைக்குக் கொடுத்திருக்கிற லக்ஷணம் (Definition). பார்வைக்கு நிஜம் மாதிரி இருப்பதைத்தான் வியாவஹாரிக (விவகாரத்தில் உள்ள) ஸத்யம் என்று ஆசார்யாள் ஓரளவுக்கு அங்கீகாரம் கொடுத்தார்கள். இதே அபிப்பிராயத்தில்தான் விவகாரத்தின் view-விலிருந்து [கோணத்திலிருந்து] உபநிஷத்தும் ஜகத்தைப் "பூர்ணம்" என்றது. ஆனாலும் இதை இல்லாமல் பண்ணிக்கொண்டு பாரமார்த்திக ஸத்யமான (எப்போதும் உயர்ந்த ஸத்யமாக மாறாமலிருக்கிற) பிரம்மத்தில் சேரவேண்டும் என்ற ஆசார்யாளின் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிற ரீதியிலேயே, உபநிஷத்திலும், இந்த ஜகத்தைக் கழித்த பின்னும் குறைவில்லாமலே பூர்ணமாக இருக்கிற, "அது"வை விசேஷித்துச் சொல்லியிருக்கிறது. "இது" போனபின்னும் "அது" அதுவாகவே கொஞ்சம்கூடக் குறைவில்லாமலிருக்கிறது என்று சொன்னால், அப்படிப்பட்ட "அதில்"தான் சேரவேண்டும் என்று உபதேசம் பண்ணுவதாகவே ஆகும்.

உபநிஷத் பாராயணத்தில் ஆரம்பம், முடிவு இரண்டிலும் வருகிற மந்திரமே மாயைக் கொள்கைக்கு ஆதரவாக இருக்கிறது என்று சொல்ல வந்தேன்.

* * *

தசோபநிஷத்துக்களும், இன்னம் அதில் சேராத ச்வேதாச்வதரம், கௌஷீதகி, ந்ருஸிம்ஹதாபினி போன்ற நீண்டகால வழக்கிலே வந்திருக்கின்ற மற்ற உபநிஷத்துக்களும் பொதுவாக ஒரே உத்தேசத்தில் ஏற்பட்டு, ஒரே லக்ஷ்யத்துக்கு அழைத்துப் போகிறவைதான்.

ஜீவர்கள் என்று நான் இருக்கிறோம். நாம் வாழ்க்கை நடத்துகிற ஜகத் என்று ஒன்று இருக்கிறது. இந்த இரண்டையும் உண்டாக்கி, நடத்திக் கொண்டிருக்கிற ஈச்வரன் என்று ஒருத்தம் இருக்கிறான். 'ஜீவ-ஜகத்-ஈச்வரன் என்கிற இந்த மூன்றும் என்ன? இந்த ஜகத் வியாபாரத்தில் ஜீவன் இன்பத்துக்கும் துன்பத்துக்குமிடையே ஊசலாடிக் கொண்டிருப்பது போல் இல்லாமல், இவன் சாச்வதமான இன்பத்திலேயே இருக்க வேண்டுமானால் அதற்கு என்ன செய்ய வேண்டும்?' என்று ஆராய்ந்து, அனுபவ ரீதியில் பதில் சொல்வதுதான் உபநிஷத்துக்கள் எல்லாவற்றுக்கும் பொதுவான லக்ஷ்யம். இவை முடிவாகச் சொல்வது என்ன?

பிரம்மம் என்கிற ஒரு பரம்பொருள்தான் ஜீவன், ஜகத் இரண்டுக்கும் காரணம். அந்தக் காரணமும் அதன் விளைவான ஜீவ-ஜகத்துக்களும் வேறு வேறு இல்லை. ஏனென்றால் பிரம்மத்துக்கு வேறாக எதுவுமே இருக்கமுடியாது. இப்போது ஜகத்தையே நிஜம் என்று

நினைக்கிற ஜீவாத்மா, அதை ஒதுக்கிவிட்டு, தன்னையே யார் என்று விசாரம் பண்ணிப் பார்த்து கொண்டால், 'உடம்பு நானில்லை, இந்திரியங்கள் நானில்லை, மனஸ் நானில்லை, புத்தி நானில்லை, பிராணன் நானில்லை' என்று ஒவ்வொன்றும் கழன்று போய் கடைசியில் 'தான் பிரம்மமே' என்று கொள்வான். 'பரமாத்மா என்று ஒன்று ஜீவாத்மாவைப் படைத்தது என்று சொல்வதுகூட ஒரு மாயைதான். ஜகத்தெல்லாம் அந்த மாயையின் விளையாட்டுதான். வாஸ்தவத்தில் பரமாத்மா ஜீவாத்மா என்ற பேதமில்லாமல் ஆத்மா என்று ஒன்றுதான் இருக்கிறது. அந்தே ஒன்றே ஸத்தியம் என்று தெரிந்து கொள்வான். அப்படி சத்தியத்தோடு இரண்டற (அ-த்வைதமாக) இருக்கிற போதுதான் சுக-துக்க ஊசலாட்டம் போய் ஒரே சாச்வத இன்பமாக, சாந்தியாக ஆகிறது. அது தான் மோக்ஷம்.

இருப்பது ஒன்றுதான். பார்ப்பது பலவாக இருந்தாலும் உள்ளது ஒன்றே என்று அனுபவத்தில் ஆக்கிக் கொள்ள வேண்டும். அதனால் சாச்வத சாந்தியை, ஸதானந்தத்தைப் பெற வேண்டும். இதுதான் உபநிஷத்துக்களின் லக்ஷ்யம்.

இப்படி நான், அத்வைதந்தான் வேதாந்தத்தின் முடிவான ஸித்தாந்தம் என்று சொன்னால், மற்ற த்வைத, விசிஷ்டாத்வைத ஸித்தாந்திகள் ஆக்ஷேபம் பண்ணக்கூடும். அந்த ஸித்தாந்தங்களின் பெரியவர்களும் இதே உபநிஷத்துக்களுக்குத்தான் பாஷ்யம் செய்திருக்கிறார்கள். தங்கள் தங்கள் கொள்கையே ஔபநிஷதமானது என்று அவர்கள் சொல்கிறார்கள்.

அதனால் அத்வைதந்தான் உபநிஷத்துக்களின் உபதேசம் என்றால் எப்படி ஏற்பது?

அத்வைதம் என்பது த்வதம், விசிஷ்டாத்வைதம் ஆகியவற்றையும் தழுவி முதல் படிகளில் ஒப்புக் கொள்கிறது என்பதைப் புரிந்துகொண்டால் இந்த ஆக்ஷேபனை வராது.

உபநிஷத்துக்களில் அநேக விஷயங்கள் அத்வதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்று சொல்லும்படியாக மாறுபட்டு இருக்கத்தான் செய்கின்றன. ஓர் இடத்தில் 'ஜீவாத்மா வேறே, பரமாத்மா வேறே, ப்ரபஞ்சம் வேறே' என்பதாகவும், இன்னோரிடத்தில் 'நான் என்கிற உயிர் ஜீவாத்மா; அந்த உயிருக்குள் உயிர் பரமாத்மா; எங்கும் நிறைந்திருக்கும்படியான பரமாத்மா இப்படி ஸர்வாந்தர்யாமியாக இருக்கிறார்' என்பதாகவும், வேறு ஒரு இடத்தில் 'இரண்டும் ஒன்றுதான்' என்பதாகவும், இப்படி அநேக வாக்கியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனாலும் உபநிஷத்துக்களில் நடுநடுவே சொல்லியிருக்கும்படியான சில வாக்கியங்களை எடுத்துக் கொண்டு, ஒன்றுக்கொன்று விரோதம்போல் இருக்கிற விஷயங்கள் எல்லாம் முரணானவை அல்ல என்றும், அவை எல்லாமே சரிதான் என்றும் காட்டுகிறார்கள். அத்வைத பிரகாரமாகப் பார்த்தால், பரமாத்மாதான் ஸர்வாத்மகனாக இருக்கிறான் என்றும், விசிஷ்டாத்வைதப் பிரகாரம் பார்த்தால் அவன்தான் அந்தர்யாமியாக உடலில் உயிர்போல் இருக்கிறான் என்றும் அர்த்தம் பண்ணித் தீர்மானம் செய்கிறார்கள். இப்படி இரண்டுக்கும் மத்தியஸ்தம் பண்ணி வைக்கும்படியான வாக்கியங்களை

'கடக வாக்கியங்கள்' என்பார்கள். இந்தக் கடக வாக்கியங்களை எடுத்துக் கொண்டு உபநிஷத்துக்களில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத விஷயங்களே சொல்லப்படவில்லை என்று தீர்மானம் பண்ணுகிறார்கள்.

இதிலே புரிந்துகொள்ள வேண்டியது என்ன என்றால் 'இந்த ஆத்மாவே பிரம்மம்தான்; 'இந்த ஸர்வமும் பிரம்மமே அல்லவா?'; 'நான் பிரம்மமாக இருக்கிறேன்'; 'நீ அதுவாகவே (பிரம்மமாகவே) இருக்கிறாய்' என்கிற மாதிரிப் பளீர் பளீர் என்று அத்வைதத்தைச் சொல்கிற உபநிஷத் மந்திரங்களை, மஹாவாக்கியங்களை, மற்ற ஸித்தாந்திகள் ஒப்புக் கொள்வதற்கு அவர்களுடைய ஸித்தாந்தம் இடம் கொடுக்காததால், எப்படியெப்படியோ சுற்றி வளைத்து, வார்த்தைகளைத் திருப்பி, அக்ஷரங்களையும் பதங்களையும் வேறு விதமாகச் சேதம் பண்ணி வேறே அர்த்தத்தை கற்பிக்க வேண்டியதாகிறது. ஏனென்றால் ஜீவாத்ம பரமாத்ம அபேதத்தை (ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே என்ற அத்வைதத்தை) எந்த நிலையிலும் அவர்கள் ஒத்துக் கொள்ளமுடியாமல் இருக்கிறது. அப்படி ஒப்புக் கொண்டுவிட்டால் அந்த ஸித்தாந்தங்கள் அப்புறம் நிற்க முடியாது. ஆனால் அத்வைதியின் விஷயம் இப்படியில்லை. இப்போது விவகாரத்தில் இது பேத பிரபஞ்சமாகத்தான் தெரிகிறது என்பதால், ஆரம்ப நிலையில் அவன் த்வைதத்தையும் ஒப்புக் கொள்கிறான். அப்புறம் இத்தனை பேதங்களுக்குள்ளும் உயிருக்குயிராக ஒரே பொருள் இருக்கிறது என்பதாகப் பேதப் பிரபஞ்சம் – பேதமற்ற சைதன்யம் இரண்டையும் ஏற்கிற விசிஷ்டாத்வைதத்தையும் ஒப்புக் கொள்கிறான். இந்தப்

படிகளில் ஏறித்தான் அபேதமாக ஜீவப்பிரம்ம ஐக்கியத்தை அடைய வேண்டும் என்கிறான். அகையால் த்வைத, விசிஷ்டாத்வைத பரமாக வருகிற உபநிஷத் மந்திரங்களுக்கு அவன் வலிந்து அத்வைத பரமாக அர்த்தம் பண்ண வேண்டியிருக்கவில்லை. அவையும் ஒரு ஸ்டேஜில் வாஸ்தவமே என்று, உள்ளபடியே அர்த்தம் பண்ண அத்வைதியால் முடிகிறது.

பிருஹதாரண்யகத்தில் (III.7) விசிஷ்டாத்வைதமாக அந்தர்யாமித்வத்தைச் சொல்லியிருக்கிறது. "எவர் பிருதிவியில் இருந்து கொண்டு பிருதிவியினுள்ளும் உறைகிறாரோ, எவரைப் பிருதிவி அறிந்து கொள்ளவில்லையோ, எவருக்குப் பிருதிவி சரீரம் ஆகிறதோ, எவர் பிருதிவிக்கு உள்ளே நின்று அதை ஆளுகிறாரோ அவர்தான் உன் ஆத்மாவான அந்தர்யாமி; அமரமாக இருப்பவர். எவர் எல்லா ஜந்துக்களிடமும் இருந்துகொண்டு, அவை எல்லாவற்றுக்கும் உள்ளேயும் உறைகின்றாரோ, ஆனால் எவரை அவை தெரிந்து கொள்ளவில்லையோ, எவருக்கு எல்லா ஜந்துக்களும் சரீரமாகின்றனவோ, எவர் அவை எல்லாவற்றுக்கும் உள்ளே நின்று ஆட்டிப் படைக்கிறாரோ அவர்தான் உன் ஆத்மாவான அந்தர்யாமி; அமிருத ஸ்வரூபமாயிருக்கிறவர்" என்று இங்கே வருகிறது. இம்மாதிரி ஒன்று வந்துவிட்டால் அந்தந்த ஸித்தாந்திகள், "இதுதான் முடிவு, அத்வைதமில்லை" என்கிறார்கள். அப்புறம் பார்த்தால் அத்வைதமாகத்தான் வருகிறது! அதை இவர்கள் மாற்றி அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டியிருக்கிறது. விசிஷ்டாத்வைதப்படி அந்தர்யாமியும்

ஜீவாத்மாவும் வித்யாஸமானவர்கள். ஆனால் இங்கேயோ ஏஷ த ஆத்மா அந்தர்யாமி என்று சொல்லியிருக்கிறது. ஜீவாத்மா, பரமாத்மா என்ற இரண்டு இல்லை; பொதுவாக ஒரே ஆத்மாதான். அதுவேதான் ஒரு நிலையில் ஜீவன் மாதிரியும், அவனுக்கு உள்ளே புகுந்து இயக்குகிற அந்தர்யாமி மாதிரியும் இருக்கிறது என்றே இதிலிருந்து ஏற்படுகிறது.

இப்படியே "த்வைதம்" என்று உபநிஷத்தில் வந்தால் மேலே என்ன வருகிறது என்று பார்க்காமல், அதுவே தாத்பரியம் என்கிறார்கள்.

முடிந்த முடிவாக மாண்டூக்ய உபநிஷத்தில், பிரணவ ஸ்வரூபத்தைத் தீர்மானம் பண்ணுகிற இடத்தில், அது "மூன்று நிலைகளையும் தாண்டிப் பிரபஞ்சம் ஒடுங்கி லயிக்கும் இடம், அதுவே சிவம் (உயர்ந்த க்ஷேமம்), அத்வைதம், இப்படியிருக்கிற அந்த ஓங்காரம் ஆத்மாவேதான். எவன் இதை அறிந்தவனோ அவனே அறிந்தவன்" என்று தெளிவாக அத்வைத நிலைதான் ஆத்மஸாக்ஷாத்காரம் என்று சொல்லியிருக்கிறது. த்வைதம் என்பதை இப்படி முடிந்த நிலையாகவா நிர்த்தாரணம் பண்ணியிருக்கிறது? இல்லை. 'த்வைதம்' என்ற வார்த்தை பிருஹதாரண்யகத்தில் வருகிறது."த்வைதம்" போல எந்த நிலை இருக்கிறதோ, அந்த நிலையில்தான் ஒருத்தன் இன்னொன்றை முகர்கிறான், இன்னொன்றைப் பார்க்கிறான், இன்னொன்றை அறிகிறான். எந்த நிலையில் (த்வைதம் போய்) எல்லாம் ஆத்மாவாகவே விளங்குமோ அப்போது எதனால் எதை முகர்வான், பார்ப்பான், அறிவான்? எதனால் இது எல்லாம்

அறியப்படுகிறதோ அதை எதைக் கொண்டு அறிய முடியும்? என்று வருகிறது (II.4.14;IV.5.15). இதிலிருந்து 'எல்லாவற்றையும் அறிகிற ஆத்மாவை த்வைதமாக இருந்துகொண்டு அறியவே முடியாது. அத்வைதமான அப்படிப்பட்ட நிலையைத்தான் அடைய வேண்டும்' என்றே உபநிஷத் சொல்கிறது என்று ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. த்வைதத்தை அது நிர்த்தாரணம் பண்ணவில்லை (நிலை நாட்டவில்லை). விவகாரத்தில் [நடைமுறையில்] எல்லாம் பேதப்பட்டு த்வைதமாகத் தெரிந்தாலும், இந்த விவகாரம் நிஜமில்லை என்பதால்தான், "எங்கே த்வைதம் போல இருக்கிறதோ": "யத்ர ஹி த்வைதம் இவ பவதி" என்று சொல்கிறது. த்வைதமாகவே இருந்தால் அது நிஜம். த்வைதம் போல இருக்கிறது என்றால் அது நிஜமில்லை; வேறு நிஜமான ஒன்றுதான் இது போலத் தெரிகிறது என்றே அர்த்தமாகும். த்வைதத்துக்கு வேறான ஒன்று என்றால் அது அத்வைதம்தான். அதனால், அத்வைதம்தான் நிஜமென்றாகிறது. இதை ஒட்டியே "யத்ர வா ஸர்வம் ஆத்மா ஏவ அபூத்" அதாவது "எப்பொழுது எல்லாம் ஆத்மாவாகவே ஆகிவிட்டதோ" என்றும் அத்வைதத்தை ஸந்தேஹமறச் சொல்லியிருக்கிறது. 'த்வைதத்தைப் போல' என்று சொல்லப்பட்டாலும் 'ஆத்மாவைப் போல' என்றில்லை! 'போல' என்ற இடத்தில் த்வைதமும், 'ஆத்மாகவே ஆகிவிட்டதோ' என்ற இடத்தில் அத்வைதமும் சொல்லப்படுகிறது. 'ஏவ' என்று ஒரு பதம் அத்வைதமான ஆத்மாவைச் சொல்லுமிடத்தில் இருக்கிறது. ஒரு பதத்துக்குப் பிறகு 'ஏவ' வந்தால் அதற்கு மேலே முடிவாக வேறொன்று சொல்வதற்கில்லை என்று கொள்ள வேண்டும். ஆத்மா 'ஏவ' என்ற இடத்தில், 'எல்லாம்

ஆத்மாவாகவே ஆகிவிட்டதோ' என்று சொல்லப்படுகிறது. 'ஆத்மாவாக' என்று மட்டும் சொல்லாமல் 'ஆத்மாவாகவே' என்பதனால் முடிவு ஆத்மஸ்வரூபமே என்று தெரிந்து கொள்ள வேண்டும். "போல" என்றால் தோற்றமே யொழிய ஸத்யமில்லை. "அவனைப்போல" என்றால் அவன் இல்லை என்று தெரிகிறது. ஆகவே "த்வைதம் போல" என்றால் 'த்வைதம் இல்லை' என்பதுதான் ஸித்தாந்தம். நம்முடைய கண்ணுக்குத் தோன்றுகிறது த்வைதம். அது வெறும் தோற்றம். சாஸ்திரத்தைக் கொண்டு தெரிந்து கொள்வது அத்வைதம். அதுதான் ஸித்தாந்தம். 'ஸர்வம் ஆத்மைவ' என்பதே ஸத்யம்.

'இங்கே ஆத்மா என்றிருக்கிறதே, பரமாத்மா என்றல்லவா இருக்கவேண்டும்?' என்று கேட்கலாம். பரமாத்மா என்றால் அல்பாத்மா வேறு இருக்க வேண்டும். அப்படி ஒன்று இல்லை. ஆதலினால் பரமாத்மாவும் இல்லை. எல்லாம் ஒரே ஆத்மாதான். த்வைத நிலையில்தான் பரமாத்மா, ஜீவாத்மா என்று இரண்டாகச் சொல்வது. அத்வைதமாக மாறினால் ஒரே ஆத்மாதான்.

மோக்ஷம் என்பது பயமில்லாத இடம். அது பயமுள்ள இடமானால் அங்கே போவதற்கு நாம் பாடுபட வேண்டியதேயில்லை. அத்வைதிகளைத் தவிர மற்றவர்களுக்கு மோக்ஷத்திலும் பரமாத்மா, ஜீவாத்மா என்று இரண்டு (த்வைதம்) உண்டு. இரண்டில்லாமல் ஆவதை அவர்கள் சொல்வதில்லை.

உபநிஷத் என்ன சொல்கிறது? த்வைதம் இருந்தால் அங்கே பயம் இருக்கத்தான் செய்கிறது என்கிறது 1. 'பரம்

பொருளில் ஒருவன் கொஞ்சம் பேதத்தை (த்வைதத்தை) கல்பித்துவிட்டாலும், உடனே பயத்துக்கு இடம் ஏற்பட்டுவிடுகிறது' என்று சொல்கிறது. 'த்வைதத்தால் பயமும் துக்கமும் உபத்ரவமும் உண்டாகின்றன' என்று பல இடங்களில் உபநிஷத்துக்கள் சொல்கின்றன. இரண்டு வித்யாஸமான வஸ்துக்கள் இருந்தால்தான் ஆசை, பயம், துக்கம் முதலியவை உண்டாகின்றன.

நமக்குப் பிரியமானவர்கள் இறந்துபோனால் துக்கம் உண்டாகிறது. நாமே போனால் துக்கமிருக்காதே என்று நினைக்கிறோம். நாம் போவதில் நமக்கு துக்கம் கிடையாது. ஆகையால் எல்லாரும் நாமாக இருந்துவிட்டால் துக்கமே இல்லை. துக்கம் தோன்றினால் பேத நினைவு இருக்கிறது. பிரியம் எதனால் உன்டாகிறது? இரண்டு என்னும் நினைவில்தான். நமக்கு இன்னொன்றாக இருப்பதிலேதான் பயமும், ப்ரியமும், துக்கமும் உண்டாகின்றன. பகவானே இப்படி வேறாக இருந்தாலும் இவை உண்டாகும்.ஆகவே அவரே நாமாகி விட்டால்தான், துக்கமே இல்லை, பயமே இல்லை, ஆசை த்வேஷங்களுக்கும் இடம் இல்லை. மோக்ஷத்தில் அப்படி இரண்டற்று ஆகிவிட்டால்தான் அது நிஜமான விடுதலை.

ஆகையினால்தான் இரண்டாவது வேண்டாம், அத்வைதந்தான் ஸத்யமென்று வேதாந்தம் முறையிடுகிறது. இந்த விஷயத்தை நம் ஆசார்யாள் தீபம்போல் எடுத்துக்காட்டி, 'மறவாதீர்கள்' என்று விளக்கியிருக்கிறார். "பாஷ்ய தீபம்" என்று பாஷ்யத்திற்குப் பெயர்.

வேதத்தில் 'த்வைதம்' என்று வந்திருக்கிறது என்றவுடன், 'த்வைதம்'தான் வேத முடிவு என்று சொல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். அது எந்த இடத்தில், எதற்காக, எந்த முடிவுக்கு முன்பு சொல்லப்பட்டிருக்கிறது என்று ஆலோசிப்பதில்லை.

மோக்ஷத்திலும் ஸ்வாமி வேறு, ஜீவன் வேறு என்று இருந்தால், "எவன் தனக்கு அந்நியமாக தேவதையை உபாஸிக்கிறானோ அவன் பசுப் பிராயமானவன்" என்று உபநிஷத்தில் சொன்ன நிலையே 2 மோக்ஷத்திலும் நீடிக்கிறது என்றுதான் அர்த்தம்! மோக்ஷத்திலும் பகவான், பக்தன் என்ற பேதமுண்டு என்கிற சைவர்களும், வைஷ்ணவர்களும் இதற்கு வேறுவிதமாக அர்த்தம் பண்ணுவார்கள். 'அந்யாம் தேவதாம் உபாஸ்தே' என்று மூலத்தில் இருப்பதற்கு 'தனக்கு அந்நியமாக தேவதையை உபாஸிக்கிறவன்' என்று பொருள் கொள்ளாமல், 'சிவன் அல்லது விஷ்ணு என்ற தேவதைக்கு அந்நியமாக ஒன்றை எவன் உபாஸிக்கிறானோ அவன் பசுவுக்கு ஸமானம்' என்று அர்த்தம் சொல்வார்கள். சிவன்தான் பரதெய்வம், அல்லது விஷ்ணுதான் பரதெய்வம் என்கிற அபிப்பிராயத்தின் பேரில், மற்ற தேவதைகளின் உபாஸனையை இப்படிக் கண்டனம் செய்து தங்கள் தேவதைகளின் உபாஸனையை மோக்ஷ உபாயம் என்று சொல்வார்கள். "அந்யாம் தேவதாம்" என்றால் ஒரு தேவதைக்கு அன்னியமான இன்னொரு தேவதை என்று அர்த்தம் ஏற்படத்தானே செய்கிறது? இதை எப்படித் தப்பு என்று சொல்லலாம்?" என்று கேட்கலாம்? ஆனால் மந்திரத்தில், "அந்யாம் தேவதாம் உபாஸ்தே"

என்றவுடனேயே, மேலே இன்னம் விளக்கமாக, அந்யோஸௌ அந்யோஹம் அஸ்மீதி (அந்ய: அஸௌ அந்ய: அஹம் அஸ்மி இதி) என்று வருகிறது - அதாவது 'இந்த தேவதை வேறு; நான் வேறு; நாங்கள் ஒருவருக்கொருவர் அன்னியமானவர்கள்' என்ற எண்ணத்தோடு எவன் உபாஸிக்கிறானோ (அவன் பசுவுக்கு ஸமானம்) என்று ஸ்பஷ்டமாக வருகிறது. ஒரு தேவதைக்கு அன்னியமாக இன்னொரு தேவதையை உபாஸிப்பதைப்பற்றி இல்லை, உபாஸகனான தனக்கு அன்னியமாகவே தேவதை இருப்பதாக நினைத்து உபாஸிப்பதைத்தான் பசுத்தனம் என்று சொல்லியிருக்கிறது. அதனால் இங்கேயும் அத்வைத மோக்ஷம்தான் குறிக்கப்படுகிறது. இங்கே பகவான், பக்தன் என்ற பேதமில்லை. தேவதை, அதன் உபாஸகன் என்ற பேதம் இல்லை.

முக்கியமாக நம் மதம் சைவம், வைஷ்ணவம் என்றுதான் இரண்டாகப் பிரிந்திருக்கிறது. சிவன்தான் உசத்தி, விஷ்ணுதான் உசத்தி என்று இந்த இரண்டு சம்பிரதாயக்காரர்களும் நீண்ட காலமாகச் சண்டை போட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், பிரம்மத்துக்கும், ஜீவனுக்கும் பேதம் சொல்லாத நம் ஆசார்யாள் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பேதம் சொல்வாரா? சொல்லவே மாட்டார். ஸகல தேவதைகளும் அவருக்குப் பரமாத்ம ஸ்வரூபந்தான். ஆனால் மற்ற ஸித்தாந்திகள் எல்லோரும் பேதம் சொல்கிறவர்கள்தான். சில பேர் சிவன்தான் [பரமாத்மா] என்பார்கள்; சிலர் விஷ்ணுதான் பரமாத்மா என்பார்கள். இந்த விஷயத்தில்

உபநிஷத் என்ன சொல்கிறது என்று பார்த்தால், இங்கேயும் நம் ஆசார்யாளின் அபிப்பிராயந்தான் உபநிஷத்தின் அபிப்பிராயம் என்று தெரிகிறது. அதாவது உபநிஷத் அபிப்பிராயத்தையேதான் ஆதி சங்கரர் சொன்னார் என்று தெரிகிறது.

நம் மதத்துக்கு ஆதாரமான வேதங்களுக்கு அந்தமாக இருக்கப்பட்ட முக்கியமான பத்து உபநிஷத்துக்களில் சிவ..விஷ்ணு ஏற்றத் தாழ்வுகள் எங்குமே சொல்லியிருக்கவில்லை. அவற்றில் ஒரே ஒரு இடத்தில்தான் "விஷ்ணு" என்ற சொல்லே வருகிறது. அதே போல் "சிவ" என்ற சப்தமும் ஒரு தரம்தான் வருகிறது. மாண்டூக்ய உபநிஷத் முடிவில், மூன்று ஸ்திதிகளைக் கடந்த துரீயமான அத்வைத நிலை சிவமாக இருக்கிறது என்று வருகிறது. ஆகவே இங்கே சொன்னது 'சிவம்' என்கிற பரம மங்களமான பரமாத்ம தத்வமே தவிர 'சிவன்' என்கிற மூர்த்தியில்லை. கடோபநிஷத்தில் 3 ஜீவனானவன் விவேகமுள்ள புத்தி என்கிற ஸாரதியைக் கொண்டு நன்றாக அடக்கப்பட்ட மனஸ் என்ற கடிவாளத்தால், இந்திரியக் குதிரைகளைக் கட்டுப்படுத்தி நடத்தி, ஸம்ஸாரத்தைக் கடந்து மோக்ஷ எல்லைக்குச் செல்கிறான் என்று சொல்லி, அதுவே விஷ்ணுவான பரமபதம் என்று சொல்லியிருக்கிறது. தத் விஷ்ணோ: பரமம் பதம் என்று இருக்கிறது. இதே வார்த்தை ஸம்ஹிதையிலும் வருகிறது – ஸூரிகள் எனப்படும் ஞானிகள் விஷ்ணுவான பரமபதத்தை ஸதா காலமும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று வருகிறது 4. வைஷ்ணவர்கள் "தத் விஷ்ணோ: பரமம் பதம்"

என்பதற்கு அர்த்தம் செய்யும்போது விஷ்ணுவை சங்க சக்ர கதா பாணியான மூர்த்தியாகச் சொல்லி, அவர் இருக்கிற வைகுண்டலோகமே பரமபதம் என்கிற மோக்ஷம் என்று இங்கே உபநிஷத்தில் நிலை நாட்டப்படுவதாகச் சொல்கிறார்கள். "விஷ்ணுவுடைய பரமபதம்" என்பது அவர்களுடைய பாஷ்யம். "விஷ்ணுவாகிய பரமபதம்" என்பது அத்வைதிகளுடைய பாஷ்யம். அத்வைதிகள் சொல்வது போல் அர்த்தம் செய்யாவிட்டால், ஞானிகள் விஷ்ணு இருக்கிற ஒரு இடத்தைத்தான் பார்க்கிறார்கள், விஷ்ணுவையே பார்க்கவில்லை என்று ஆகும். அப்படிச் சொல்வது ஞானிகளைக் குறைத்துச் சொல்வதாகும். விஷ்ணுவைத்தான் அவர்கள் பார்ப்பார்கள். பார்ப்பது என்றால் அநுபவிப்பது, தன்னில் தானாக அநுபவிப்பது என்றே அர்த்தம்.

உள்ள அனைத்தையும் எவன் தன் ஆத்மாவுக்குள்ளேயே இருப்பதாகப் பார்க்கிறானோ ('அநுபச்யதி'), அனைத்துக்குள்ளும் தன் ஆத்மாவே இருப்பதாகப் பார்க்கிறானோ ('அநுபச்யதி') அவனுக்குத்தான் எதனிடமும் வெறுப்பில்லை. அவனுக்கு மோஹமும் இல்லை, சோகமும் இல்லை' என்று ஈசாவாஸ்ய உபநிஷத்தில் அத்வைத திருஷ்டியைச் சொல்கிறபோது, 'அநுபவிக்கிறான்' என்ற அர்த்தத்தில்தான் "பச்யதி" (பார்க்கிறான்) என்ற வார்த்தை வந்திருக்கிறது. அத்வைத திருஷ்டி என்று இப்போது நான் சொன்னதில்கூட, திருஷ்டி (பார்வை) என்பது அநுபவத்தைத்தானே சொல்கிறது? இதே போலத்தான் "விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி"

என்றால் விஷ்ணுவான பரமபதத்தை (பிரம்மத்தை) எப்போதும் அநுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சரியாகப் பொருள் கொள்ளவேண்டும்.

வேறாகப் பார்த்தால் பயம் உண்டாகிவிடும் என்று உபநிஷத்திலேயே இருக்கிறதே! எனவே வேறாக இன்றி இப்படித் தானாக ஆகி விஷ்ணுவை அநுபவிப்பது என்றால், விஷ்ணு என்பது மாண்டூக்யத்தில் சொன்ன சிவம் மாதிரி ஒரு மூர்த்தியாக இல்லாமல் பரமாத்ம தத்வமாகத்தான் இருக்கவேண்டும். அதனால்தான் விஷ்ணுவைப் "பரமம் பதம்" என்று சொல்லியிருக்கிறது. "பரமம் பதம்" என்றால், 'மிகவும் உத்தமமான ஸ்தானம்' என்று ஆசார்யாள் பாஷ்யம் செய்திருக்கிறார். ஆத்மா தன்னைத் தானே உணர்ந்து கொள்வதுதான் பரமோத்தம ஸ்தானம். அது ஒரு இடமில்லை. ஒரு இடம் என்றால், மற்ற இடங்களில் அது இல்லை என்றல்லவா ஆகிவிடும்? அது ஸர்வ வியாபகமானது. 'விஷ்ணு' என்ற வார்த்தைக்கு root meaning-ஏ 'எங்கும் வியாபிப்பது' என்பதுதான். 'வ்யாபன சீலம்' என்றே இங்கு ஆசார்ய பாஷ்யத்தில் இருக்கிறது. எங்கேயும் வியாபித்தது என்றால் கை கால் உள்ள மூர்த்தியாக இருக்கமுடியாது; பரம்பொருள் என்ற ஸத்ய தத்வமாகத்தான் இருக்கவேண்டும்.

இப்படியாக உபநிஷத்துக்களில் சிவ, விஷ்ணு என்ற இரண்டும் ஒரே ஸத்ய வஸ்துவைத்தான் சொல்கின்றன, ஆக, ஜீவனும் பிரம்மமும் ஒன்றென்பது; ஜகத்து மாயை என்பது; சிவன், விஷ்ணு என்ற இரண்டில் ஏதோ ஒன்றுதான் பரமாத்மா என்று பேதம் சொல்லாமலிருப்பது – என்றிப்படி நம் சங்கர பகவத் பாதர்கள்

சொல்லியிருக்கிற முடிவுகள்தான் வேதாந்தத்தின் முடிவும் என்று தெரிகிறது. 5

1.தைத்திரீயம் II.7; ப்ருஹதாரண்யகம், I.4.2

2. ப்ருஹதாரண்யகம், I.4.10

3. III.9

4. ரிக்வேதம் I.22.20

5. வேதாந்தமெனப்படும் இவ்வுபநிஷதக் கருத்துக்களை, "வேத மதம்" என்ற பிரிவிலுள்ள "வேதம்" என்ற உரையில் வரும் "உபநிஷதங்கள்", "வேதமும், வேதாந்தமும் முரணானவையா?", "தசோபநிஷத்திக்கள்", "வேதங்களின் முக்ய தாத்பரியம் என்ன?" என்ற பகுதிகளிலும் பார்க்க.

சங்கர சம்பிரதாயம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

அத்வைதம்

"சங்கர சம்பிரதாயம்"

ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர்களை அனுஸரிக்கிற அத்வைதிகளுக்கு "ஸ்மார்த்தர்கள்" என்ற பெயரே இருக்கிறது. இப்போது ஸ்மார்த்தர்களாக இருக்கப்பட்ட இளைஞர்களிலேயே பலபேருக்கு இந்த [ஸ்மார்த்தர் என்ற] பெயர் தெரியவில்லை! தங்களை "ஐயர்" என்றே சொல்லிக் கொள்கின்றார்கள்.

வைஷ்ணவர்கள், விசிஷ்டாத்வைதிகள் என்றால் ஐயங்கார். த்வைதிகள் ராவ்ஜிகளாக இருக்கிறார்கள், அதாவது பேருக்குப் பின்னால் 'ராவ்' போட்டுக் கொள்கிறார்கள். அல்லது 'ஆச்சார்' போட்டுக் கொள்கிறார்கள். இவர்கள் ஸ்ரீ மத்வாச்சாரியாரைப் பின்பற்றுவதால் 'மாத்வர்' என்கிறோம். இவர்களும் விஷ்ணு பக்திகாரர்கள்தான். ஆனால் வைஷ்ணவர்கள் என்றால் ஸ்ரீ ராமானுஜாசாரியாரின் மதத்தை சேர்ந்தவர்கள் என்றே நினைக்கிறோம். மத்வர்கள் 'ஆச்சார்' போட்டுக் கொள்வதுபோல், ஸ்ரீ வைஷ்ணவர்களும் 'ஆசாரியார்' என்று போட்டுக் கொள்கிறார்கள். 'ராஜகோபால ஐயங்கார்' 'ராஜகோபாலாசாரியார்' இப்படி இரண்டு தினுசாகவும் போட்டுக் கொள்கிறார்கள். மத்வர் என்று ஸ்ரீ மத்வாசாரியார் பெயரை வைத்தே அந்த மதஸ்தவரை சொல்வது போல், ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர் இவர்களின் சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்களை அந்தந்த ஆசார்யார் பெயரால் குறிப்பிடக் காணோம். 'சங்கராத்வைதின்' என்று ஏதாவது இங்கிலீஷ் ஃபிலாஸஃபி புஸ்தகத்தில் வேண்டுமானால் இருக்கும்; லெக்சரில் இந்த வார்த்தை அடிபடலாம். நடைமுறையில் இல்லை. த்வைதிகள் ராவ், விசிஷ்டாத்வைதிகள் ஐயங்கார், அத்வைதிகள் ஐயர் என்று இப்போது வைத்துக்கொண்டிருக்கிறோம்.

பொதுவாக ஸ்மார்த்தர்கள்தான் சாஸ்திரி, சர்மா என்றெல்லாமும் போட்டுக் கொள்கிறார்கள். தீக்ஷிதர்கள் என்று போட்டுக் கொள்பவர்களும் நம் பக்கத்தில் பெரும்பாலும் ஸ்மார்த்தர்களில் சிலர் மட்டும்தாம். யாகம் பண்ணினவருக்கும், அவர் குடும்பத்துக்கும் ஏற்பட்டது இந்த 'தீக்ஷிதர்' பட்டம். (சிதம்பரத்து தீக்ஷிதர்கள் ஸமாசாரம்

வேறு.) பொதுவில் அத்வைதிகள் ஐயர் ஜாதி என்றே இப்போது தங்களை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பேருக்குப் பின்னாடிப் போட்டுக் கொள்கிற ஜாதியைக் கொண்டு இப்படிச் சொல்லிக்கொள்கிறோம். இந்தத் தலைமுறைக்காரர்கள் ஜாதிப் பெயர் போட்டுக் கொள்வதில்லை. அது நிஷித்தமாகிவிட்டது! போன தலைமுறையிலும் ராவ்ஜிகளின் அளவுக்கு மற்றவர்கள் போட்டுக்கொள்ளவில்லை. ஆனால் தாத்தா காலத்துக்குப் போனால் நாம் எல்லோரும் ஒரு ஐயருக்கோ, ஐயங்காருக்கோ, ராவ்ஜிக்கோ பேரன் என்று ஆகும். 'ஆச்சார்' போட்டுக் கொண்டவர்களும், 'நாங்கள் ஆச்சார் ஜாதி' என்று சொல்லவில்லை. ராவ் அல்லது மாத்வர் என்றுதான் சொல்லிக் கொள்வார்கள். அப்படியே, 'ஆசாரியார்' என்று போட்டுக் கொள்ளும் வைஷ்ணவர்களும் தங்களை ஆசாரியார் ஜாதி என்று சொல்லிக் கொள்வதில்லை. ஐயங்கார் என்றுதான் சொல்லிக் கொள்கிறார்கள். ஸ்மார்த்தர்கள் ஐயர் என்கிறோம். சர்மா ஜாதி, சாஸ்திரி ஜாதி என்று சொல்ல்லிக் கொள்வதில்லை.

சங்கர பகவத்பாதாளை அநுஸரிக்கிறவர்கள் தங்களுக்குப் பெயர் ஸ்மார்த்தர் என்பதையே தெரிந்து கொள்ளாத மாதிரி, இன்னொரு முக்கியமான விஷயமும் தெரிந்து கொள்ளாமலே இருக்கிறார்கள். தங்களுக்கென்று ஆசாரியாள் இதுதான் தெய்வம் என்று எந்த ஒரு தெய்வத்தையும் வைக்காமல், எல்லா தெய்வங்களையும் ஸமமாகப் பார்க்கச் சொன்னார் என்பது அத்வைதிகளில் பலபேருக்கே தெரியவில்லை. தங்களுடைய உபாஸனா

மூர்த்தியாகப் பரமசிவனைத்தான் ஆசார்யாள் வைத்திருக்கிறார் என்று நினைத்துக்கொண்டு தங்களை சைவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். இப்படி நினைப்பதற்கு ஒரு காரணம் தோன்றுகிறது

த்வைதி, விசிஷ்டாத்வைதி இரண்டு பேருமே விஷ்ணுவை உபாஸிக்கிறார்கள். இதனால்தான் அத்வைதியாக இருக்கப்பட்ட இந்தக் காலத்து ஸ்மார்த்தர்கள், தாங்கள் அந்த இரண்டு பேருக்கும் மாறுபட்டவர்களாதலால், தங்களை சைவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள் என்று தோன்றுகிறது. ஆனால் இது தப்பு.

ஐயர், ஐயங்கார், ராவ் என்பன ஸம்ஸ்கிருதப் பெயர்களாக இல்லை. எனவே ஸம்ஸ்கிருத்தில் தன் ஜாதியைச் சொல்கிறபோது ஐயங்கார் தன்னை வைஷ்ணவர் என்று சொல்கிறார். ராவ்ஜி மாத்வர் என்று சொல்கிறார். அப்படி அவர்கள் சொல்வதில் தப்பு இல்லை. ஆனால் அத்வைதியான இந்த ஐயர் ஜாதிக்காரன் மட்டும் தப்பாகத் தன்னை சைவன் என்று சொல்லிக் கொள்கிறான். மற்றவர்களுக்கும் இப்படியேதான் தப்பபிப்பிராயம் இருக்கிறது.

என்னைக்கூட ரொம்பப் பேர் சைவ ஆசாரியர் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜப்பானிலிருந்து ஒரு ப்ரொஃபஸர் [Hajime Nakumura] என்பவர் என்னிடம் வந்திருந்தார். அவர், "ஆசார்யாளுடைய ஸூத்ர பாஷ்யம், கீதா பாஷ்யமெல்லாம் படித்திருக்கிறேன். அதிலெல்லாம் அத்வைதம்தான் சொல்லியிருக்கிறதே தவிர சிவனைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே. ஆனால் நீ ஏன்

சைவமாக இருக்கிறாய்?" என்று என்னைக் கேட்டார். 'என்னை எதனால் சைவன் என்கிறாய்?' என்று நான் அவரைத் திருப்பிக் கேட்டேன். அதற்கு அவர், "நீ விபூதிதானே இட்டுக் கொள்கிறாய்? சிவ பூஜை (சந்திர மௌளீச்வர பூஜை) தானே பண்ணுகிறாய்? எல்லா சங்கராசாரியார்களுமே இப்படித்தானே சைவமாக இருக்கிறீர்கள்? அத்வைதத்தில் சிவன், விஷ்ணு என்ற பேதமே ஆசாரியாள் சொல்லாதபோது நீயும், இன்னும் மத்த சங்கர மடத்துக்காரர்களும் ஏன் சிவச் சின்னங்களைப் போட்டுக்கொண்டு சிவபூஜை பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அவருக்கு நான் பதில் சொன்னேன்.

சில சரித்திர பூர்வமான உண்மைகளுக்குப் போனால்தான் இதற்குப் பதில் கிடைக்கும்.

ஆசார்யாள் அவதாரம் பண்ணுவதற்கு முந்தி தேசத்தில் என்ன மதம் அல்லது மதங்கள் இருந்தன? வைதிக மதமான ஸநாதன தர்மமும், எழுபத்திரண்டு துர்மதங்களும் இருந்தன என்று "சங்கர விஜய" புஸ்தகங்களிலிருந்து தெரிகிறது. ஆனால் வைதிக மதத்துக்கு மாறானவற்றில் முக்கியமானதாக பௌத்தம்தான் இருந்தது. பொது மக்களிலும் சரி, பெரும்பாலோர் ஸநாதன வைதிக தர்மத்திலோ, இல்லாவிட்டால் பௌத்தத்தைச் சேர்ந்தவர்களாகவோதான் இருந்தார்கள். மற்ற மதங்களுக்கு ஏதோ அங்கங்கே ஒரு கூட்டத்தில் (group-ல்) மட்டும் following (பின்பற்றுதல்) இருந்தது. அந்தச் சின்னக் கூட்டத்துக்காரர்கள், அந்தச் சில்லறை மதங்களை ரொம்பவும் தீவிரமாகப் பின்பற்றினாலும் கூட (இப்போது

கூட இப்படிப் பல "இஸம்'கள் 'ஸ்கூல்'களுக்கு ஆள்பலம் கொஞ்சமாக இருந்தாலும், அவர்கள் ரொம்பவும் தீவிரமாக அந்தந்தக் கொள்கையைப் பிடித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோமல்லவா?) பொதுவில் வைதிக மதம், பௌத்த மதம் என்று இரண்டாகவே பெரிய அளவில் பிரித்து விடும்படியாக இருந்தது.

இந்த ஸநாதன தர்ம வைதிக மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு "ஸ்மார்த்தர்கள்" என்றே பேர். ஸ்மார்த்தர்கள் என்றால் ஸ்மிருதியைப் பின்பற்றுகிறவர்கள் என்று அர்த்தம் ஸ்மிருதி என்றால் தர்ம சாஸ்திரங்கள். வேதத்தில் அங்கங்கே பரவலாகச் சொன்ன தர்மங்களை ஒரே இடத்தில் ஒன்று சேர்த்து, இன்னும் அதில் வெளிப்படையாகச் சொல்லாத விஷயங்களையும் அதற்கு அநுஸரணையாகவே சேர்த்து, நன்றாக வகை தொகை பண்ணி, பாகுபடுத்தி, சமூகத்தில் இன்னின்னார் இப்படியிப்படி நடக்கவேண்டும் என்று – ஒரு ஜீவனானது மாதாவின் கர்ப்பத்தில் வைக்கப்படுவதிலிருந்து, அது பிறந்து, வளர்ந்து, வித்யாப்யாஸம் பண்ணி, விவாஹம் செய்து கொண்டு, புத்திரோத்பத்தி பண்ணி, கடைசியில் மரணமடைந்து தஹனம் ஆகிறவரைக்கும் என்னென்ன செய்யவேண்டும் என்று – 'ரூல்' களைப் போட்டுக் கொடுப்பது தர்ம சாஸ்திரம்தான். அவையே ஸ்மிருதிகள். அவற்றை பின்பற்றுபவர்களே ஸ்மார்த்தர்கள். இப்போது "ஹிந்து" என்ற பெயரில் சொல்லப்படுகிற வேத மதஸ்தர்களுக்கு ஆதியில் இதுதான் பெயர்.

தர்ம சாஸ்திரங்களில் விஷ்ணுவைத்தான் உபாஸிக்கவேண்டும் என்றோ, சிவனைத்தான் உபாஸிக்க

வேண்டும் என்றோ சொல்லவில்லை. வேதப் பிரதிபாத்யமான [வேதத்தில் சொல்லப்பட்ட] எல்லா தெய்வங்களும் இங்கே சமம்தான். எதை உபாஸித்தாலும் தப்பில்லை. எல்லாவற்றையும் ஒன்றே என்று புரிந்துகொண்டு உபாஸிப்பது விசேஷம். 'ஆதித்யம்-அம்பிகாம்-விஷ்ணும்-கணநாதம்-மஹேச்வரம்' என்பதாக ஸூரியன், அம்பாள், மஹாவிஷ்ணு, பிள்ளையார், பரமேச்வரன் ஆகிய ஐந்து மூர்த்திகளையும் ஸ்மார்த்தர்கள் பூஜை பண்ணுவார்கள். ஐந்து மூர்த்திகளை வழிபடுவதால் இதற்குப் 'பஞ்சாயதன பூஜை' என்று பேர். இஷ்ட தெய்வம் என்று ஒன்றிடம் அதிகப் பிரீதி வைக்கலாம். ஒரே வீட்டிலேயே அண்ணனுக்கு பரமசிவன் இஷ்ட தெய்வமாயிருக்கும். தம்பிக்கு மஹாவிஷ்ணு இஷ்ட தெய்வமாயிருக்கும். இதற்காக சைவர் - வைஷ்ணவர் என்று இரண்டு மதமாக பிரிந்து போகமாட்டார்கள். சிவ உபாஸனைக்காரர்களும், விஷ்ணு உபாஸனைக்காரர்களும் தனிஜாதியாக இல்லாமல், பரஸ்பரம் விவாஹ ஸம்பந்தமும் வைத்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் எல்லோருக்கும் பொது, வேதம். அதில் சொல்லியிருக்கப்பட்ட கர்மாநுஷ்டானங்கள் எல்லோருக்கும் பொது.

வேதத்தில் எல்லாரும் யக்ஞ கர்மாநுஷ்டானம் பண்ணி ஹோம பஸ்மாவை இட்டுக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. தர்ம சாஸ்திரங்களிலும் இப்படிச் சொல்லியிருக்கிறது. அதனால் ஆதியில் எல்லா ஸ்மார்த்தர்களும் பஸ்மதாரணம் [விபூதி இட்டுக் கொள்ளுதல்] தான் செய்து கொண்டார்கள் --

விஷ்ணுவை இஷ்ட தெய்வமாக உபாஸிக்கிறவர்களும் கூடத்தான். இப்போதும், வைஷ்ணவர்களும், மாத்வர்களும் யாகம் செய்கிறபோது, ஹோம பஸ்மா இட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

நாமம் போடுவது, அதில் பாதம் வைத்துப் போடுவது, பாதம் இல்லாமல் போடுவது இதெல்லாம் பிற்பாடு வந்த வைஷ்ணவ ஆசாரியர்கள் பண்ணின ஏற்பாடுதான் என்று வைஷ்ணவர்கள் சொல்கிற குரு பரம்பரைக் கதைகளிலிருந்தே தெரிய வருகிறது. பிற்பாடு விஷ்ணுவை மட்டும் முழுமுதல் தெய்வமாக வைத்து, அந்த அடிப்படையின் மேல் தனி மதம், தனி ஜாதி என்றே பிரித்தபோது, அதில் சேர்ந்தவர்களுக்கு புது அடையாளம் தரும்படி ஆகிவிட்டது. இதே போல் மத்வாசாரியாரின் மதஸ்தர்களுக்கும் கோபிசந்தனம், சாந்து என்று புதிதாக அந்த ஸம்பிரதாயம் தனி ஸமூகமாக உருவானபோது ஏற்பட்டது. இந்த ஸம்பிரதாயங்களில் பிரிந்து போகாமல் பகவத்பாதர்களை அநுஸரித்து ஆதியான வைதிக வழியிலேயே நின்றுவிட்டவர்களுக்கு வைஷ்ணவர், மாத்வர் என்பது போன்ற பெயர்கள் ஏற்படவில்லை. ஸ்மார்த்தர் என்ற பழைய பெயரே நீடித்தது. அதே போல, ஆதியிலிருந்து, வேதத்திலேயே சொல்லப்பட்டு, வழி வழியாக வந்த பஸ்மதாரணம் ஸ்மார்தர்களிடம் நிலைத்து நின்றுவிட்டது. விபூதியை குழைத்துப் போட்டுக்கொள்வதற்குதான் வேதத்திலேயே மந்திரம் சொல்லியிருக்கிறது.

அதாவது, ஸ்மார்த்தர்கள் விபூதி இட்டுக் கொள்வதால், அவர்களெல்லோரும் சைவர்கள் என்று தற்காலத்தில்

தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருந்தாலும், வாஸ்தவத்தில் ஸ்மார்த்தர்களின் விபூதி தாரணம் சிவ சம்பந்தம் உடையதல்ல; வேத சம்பந்தம் உடையது என்றே சொல்ல வேண்டும்.

ஸ்ரீ ராமாநுஜர் விசிஷ்டாத்வைதத்தைத் தனி சம்பிரதாயமாக ஆக்கியதற்கு முந்தி பரம பக்தியோடு விஷ்ணுவையே இஷ்ட தெய்வமாக ஆராதித்த வைதிகர்களும், ஸ்மார்த்தர்களாக இருந்து பஸ்மதாரணம்தான் பண்ணியிருப்பார்கள். ஸந்நியாஸிக்கு யக்ஞம் பண்ணும் அதிகாரம் இல்லை. அதனால் அவன் ஹோமம் பண்ணி பஸ்மா தரிப்பதற்கில்லை. ஆயினும் விபூதியே இட்டுக் கொள்வான்.

இப்போதும் வைஷ்ணவர்களின் பாஞ்சராத்ர தீக்ஷையில் அவர்கள் ஹோம பஸ்மத்தை இட்டுக் கொண்டாக வேண்டும்.

புத்தர் வேத மதத்தை ஆட்சேபித்தார். யக்ஞாதி கர்மாநுஷ்டானங்கள் கூடாது என்றார். புத்தர் ஈச்வரனைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அதனால் பௌத்ததில் வைதிக கர்மமும் இல்லை. பக்தியும் இல்லை. அவர் காலத்தில் ஸ்மார்த்தர்கள் ஏராளமாக கர்மாநுஷ்டானம் செய்தார்கள். புத்தர் ஈச்வரனைச் சொல்லவில்லை என்றால், இந்த கர்ம மார்கக்காரர்களும், "ஈச்வரன் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? நமக்கு வேதம் சொன்ன கர்மா இருக்கிறது. அதைச் செய்துவந்தாலே சிரேயஸ்" என்று நினைத்தவர்களாக இருந்தார்கள். இவர்களைப் பூர்வ மீமாம்ஸகர் என்பார்கள். இவர்களுக்குக்

கர்மா மட்டும் தான் உண்டு. பக்தியும் கிடையாது, ஞானமும் கிடையாது. பரம ஸத்தியத்தை நினைத்து நினைத்து தியானம் பண்ணுவது, ஆத்ம விசாரம் பண்ணுவது, சகல கர்மாக்களையும் விட்டு விட்டு ஸந்நியாஸியாகி எப்போதும் பரமாத்ம சிந்தனையிலேயே இருப்பது – என்கின்ற அத்வைத ஞான மார்க்கம் இவர்களுக்குப் பிடிக்காது. இந்த பூர்வ மீமாம்ஸகர்களில் குமாரில பட்டர் என்பவர் மஹா பெரியவராக வந்து பௌத்ததைத் தீவிரமாகக் கண்டித்து, வேத கர்மாக்களை நிலைநாட்டினார். பௌத்தம் கர்மாவைச் சொல்லாததற்காக அதை இவர் கண்டித்தார். இதே மாதிரி, பௌத்தம் ஈச்வரனை, பக்தியைச் சொல்லாததற்காக அதை இன்னொரு பெரியவர் கண்டனம் செய்தார். அவர் பெயர் உதயனாசாரியர் என்பது. நியாய சாஸ்திரம் எனப்படும் தர்க்க சாஸ்திரத்தில் அவர் வல்லவர். லோக விவகாரங்களுக்குக் காரணமாக ஈச்வரன் என்று ஒன்று இருந்தேயாக வேண்டும் என்பதை இவர் யுக்தி மூலமாக வாதம் பண்ணி நிலைநாட்டி ஏராளமாக எழுதினார். இப்போது பள்ளிக்கூடப் புஸ்தகங்களிலிருந்து ஆரம்பித்து, எங்கேயும் புத்தரைப் பற்றித்தான் சொல்லியிருக்கிறதே தவிர குமாரில பட்டர், உதயனாசாரியார் முதலானவர்களின் பேர்கூட ஒருத்தருக்கும் தெரியாதபடி செய்திருக்கிறது! வெள்ளைக்காரர்களின் ஆட்சியின் போது இப்படி வேண்டுமென்றே செய்து விட்டார்கள். அவர்களுக்கு வைதிக மதத்தை எப்படியாவது மட்டம் தட்டி, எல்லாரையும் கிறிஸ்துவ மதத்துக்கு இழுத்து விடவேண்டும் என்பது ஆசை. 'கிறிஸ்துவ மதத்துக்கு இழுக்க முடியாவிட்டால் கூடப் பரவாயில்லை.

வைதிகத்தை எப்படியாவது மட்டம் தட்டிவிட வேண்டும். நம்மால் ஆளப்படுகிற இந்த ஹிந்துக்களுக்குத் தங்கள் மதத்தையும், கலாசாரத்தையும் பற்றிப் பெருமிதம் இல்லாமல் பண்ணிவிடவேண்டும்' என்று அவர்களுக்கு எண்ணம். தங்களுக்கு நாகரிகமே தெரியாத ஆதிகாலத்தில் இப்போது தங்களால் ஆளப்படும் ஹிந்துக்கள் ம்ஹோன்னதமான நாகரிகம் படைத்தவர்களாக இருந்தது அவர்களை ரொம்பவும் உறுத்திக் கொண்டிருந்தது. அதனால் இப்படி நினைத்தார்கள். வைதிக மதத்தின் பெருமைகள், அதில் வந்த பெரியவர்கள் ஆகியனபற்றி ஹிந்துக்களுக்கு ஒன்றுமே தெரியாமல் செய்யும் விதத்தில், எலிமென்டரி ஸ்கூல் பாட கட்டத்திலிருந்து ஆரம்பித்து விட்டார்கள்! அதனால்தான் வேத விருத்தமாக [வேதத்துக்கு முரணாக] புத்தர் மதம் ஸ்தாபனம் செய்ததை மட்டும் குழந்தைகள் படிக்கிற காலத்திலேயே அவர்கள் தெரிந்து கொள்ளும்படியாகப் பெரிசாகப் பிரபலப்படுத்தினார்கள். வேதமதத்தில் வந்த மஹான்களைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் விட்டு விட்டார்கள். குமாரில பட்டர் வேதப் பிராமாண்யத்தை [வேதமே பிரமாண நூல் என்பதை]யும், வேத கர்மாக்களின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி, இந்த இனங்களில் மாறுபட்ட பௌத்தத்தைக் கண்டித்தார். உதயனர் பௌத்தர்களின் நிரீச்வரவாதத்தைக் கண்டித்து ஈச்வரன் உண்டு என்பதை நிலை நாட்டினார். கர்மம்-பக்தி-ஞானம் என்ற மூன்றில் இப்படிக் கர்மத்தையும் பக்தியையும் பற்றிய பௌத்தக் கொள்கையை இருவர் நிராகரணம் பண்ணின பிறகே, ஞானமார்க்கத்தை வேத வழிப்படிப்

புதுப்பித்துக் கொடுத்த நம் பகவத்பாதாள் அவதாரம் பண்ணினார்.

ஞானரீதியில் பௌத்தமும் அத்வைதமும் ஒரே மாதிரிதான் என்று இவ்விரு ஸித்தாந்தகளையும் சேர்த்து ஆக்ஷேபிக்கிற விசிஷ்டாத்வைதிகள், த்வைதிகள் ஆகியோர் சொல்வதுண்டு. நம் ஆசார்யாளையே மாறுவேஷத்திலிருக்கிற பௌத்தர் -- "ப்ரச்சன்ன பௌத்தர்" -- என்று அவர்கள் சொல்வதுண்டு. ஆனால், இந்த அபிப்பிராயம் சரியே இல்லை. பௌத்தம், அத்வைதம் இரண்டும் லோகத்தை மாயை என்று சொல்வதாலும், அத்வைதத்தில் ரொம்பவும் ஞானநிலை அடைந்தபோது அங்கே ஈச்வர உபாஸனையும் நின்றுவிடுவதாலும் இப்படி ஆசார்யாளையே "மாறுவேஷ பௌத்தர்" என்று சொல்பவர்கள் சொன்னாலும், கொஞ்சம் யோசனை பண்ணிப் பார்த்தாலும் இது ரொம்பப் பிசகு என்று தெரியும். லோகம் மாயை என்கிறபோது, ஆசாரியாள் பௌத்தர்கள் மாதிரி எல்லாம் ஒரே சூன்யம் என்று சொல்லிவிடவில்லை. லோகம் தாற்காலிக உண்மைதான். அதையே பரம ஸத்தியமாக எண்ணிவிடக் கூடாது என்றுதான் சொன்னார். மாயையான இந்த லோகம் சூனியத்தில் கரைந்து போய்விடுவதல்ல; மாறாக லோகம் நிரந்தர ஸத்யமல்ல என்று தெரிந்து கொள்கிறபோது, இந்த லோகமும் அதை மாயையாகத் தெரிந்துகொள்கிற நாமும்கூடப் பரம ஸத்யமும் பூர்ணமுமான பிரம்மமே என்று தெரியும் என்றார். பௌத்தர்களின் மோக்ஷமான நிர்வாணம் என்பது எதுவுமே இல்லாத சூனிய நிலை. ஆசாரியாளின் மோக்ஷமான அத்வைதமோ

பேருண்மையாகவும், பேரறிவாகவும், பேரானந்தமாகவும், அதாவது ஸத்-சித்-ஆனந்தமாக ஆகிவிடுகிற பரிபூரண நிலை. இந்த இரண்டையும் ஒன்றென்பது தப்பு.

ஆசாரியாளின் பெருமை என்ன? அவர் எல்லா மார்க்கங்களையும், ஸித்தாந்தங்களையும் ஒவ்வொரு 'லெவலி'ல் ஒப்புக்கொண்டு, இவை எல்லாமும் சேர்ந்து உச்சத்தில் ஞானமார்க்கத்தில் கொண்டு விடுகிற்து என்று காட்டியதுதான். பௌத்தர்கள் வேதகர்மாக்களை விட்டவர்கள்; ஆக்ஷேபித்தவர்கள். ஆசாரியாளோ வேத கர்மாக்களை விசேஷமாக ஆதரித்தவர். "வேதோ நித்யம் அதீயதாம்; தத் உதிதம் கர்மாஸு அநுஷ்டீயதாம்" என்பதுதான் அவருடைய 'உபதேச ஸார'த்துக்கு ஆரம்பமே ஆகும். ஞானம் வரும் முன்பு மனஸ் ஒருமைப்பட வேண்டும். இதற்கு பக்தி உபாஸனை அவசியம். பகவானிடம்தான் மனஸ் அப்படியே ஒருமுகப்பட்டு நிற்கும் என்பதால், பக்தியைப் பூர்வாங்கமாக விதித்தார். அதற்கும் முந்திக் கர்மாநுஷ்டானம் ரொம்பவும் அவசியம். வேதம் சொன்னபடி, கர்மாவிலேயே ஈடுபட்டிருக்கிறபோதுதான் சித்தத்தின் அழுக்குகள் போகும் என்றார். கர்மா செய்யச் செய்யத்தான் சித்த சுத்தி ஏற்படும். சித்த சுத்தி ஏற்பட்டபின் செய்கிற பக்தியால் அந்தச் சித்தமானது ஒருமுகப்படும். அப்புறம்தான், இப்படி ஒருமுகப்பட்ட மனம் தன்னையே இழந்து கொண்டு பரம ஸத்தியமான ஞானத்தில் கரைய முடியும் என்று ஆசார்யாள் வரிசைப்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

கர்மாவைச் சொல்லும் பூர்வ மீமாம்ஸை, ஈச்வரனைச் சொல்லும் நையாயிக மதம் [நியாயக் கொள்கை],

கர்மாவும் ஈச்வரனுமில்லாத பௌத்தத்தின் தியான விசாரம், எல்லாம் ஆசார்யாளின் அத்வைதத்தில் இருக்கின்றன. ஆனாலும் இவர்கள் ஒவ்வொரு லெலவலை மட்டும் பிடித்துக் கொண்டு, அந்த லெவலோடு நின்று விட்டபோது, ஆசார்யாள்தான் எல்லாவற்றையும் ஸமன்வயப்படுத்தி [இசைவித்துக்] கொடுத்தார். மற்ற ஸித்தாங்கள்கள் ஒரு லெவலில் மட்டும் நின்று விடுவதால் அவற்றோடு சண்டையும் போட்டார். வைதிக கர்மா ஆசார்யாளுக்கு ஸம்மதம்தான். ஆனாலும், 'பக்தியும் வேண்டாம், ஞானமும் வேண்டாம்' என்று பூர்வ மீமாம்ஸகர்கள் இருந்தது அவருக்கு ஸம்மதமில்லை. 'நீங்கள் செய்கிற கர்மா தானாக பலன் தந்துகொள்ள முடியாது. கர்மா ஜட வஸ்து. ஆனதால் கர்மாவுக்குப் பலன் தருவது ஈச்வரனே. அவன்தான் லோக வியாபாரம் ஒரு ஒழுங்காக நடப்பதற்காக வேதத்தின் மூலம் கர்மாக்களையே கொடுத்திருக்கிறான். எந்தக் கர்மா செய்தாலும், அந்தப் பலனை அவனிடம்தான் ஒப்பிக்க வேண்டும் லோக க்ஷேமத்துக்காக நமக்கு அவன் தந்திருக்கிற கர்மாவை, நாம் நிஷ்காம்யமாக [ஆசை வாய்ப்படாமல்] செய்து, அவனுக்கே அர்ப்பணம் பண்ணவேண்டும், அப்படிப் பண்ணினால்தான் கர்மாவால் நமக்குக் கிடைக்கிற பலனைவிடப் பெரிதாக, இந்தக் கர்மபலத் தியாகத்தால் சித்த சுத்தி என்ற மஹா பெரிய பலன் கிடைக்கும்" என்று மீமாம்ஸகர்களுக்கு ஆச்சர்யாள் எடுத்துச் சொன்னார். அதே மாதிரி, நையாயிகர்களிடமும், "ஈச்வரன் இருக்கத்தான் வேண்டும் என்று தர்க்க ரீதியில் நிரூபித்து மட்டும் பிரயோஜனம் இல்லை. அந்தத் தர்க்கம் அநுபவமாக வேண்டும். ஈச்வரனை நேருக்கு நேர்

அநுபவிப்பது என்பது, கடைசியில் அவனைத் தவிர வேறொன்றுமில்லை என்ற அநுபவத்தில்தான் கொண்டு விட்டாக வேண்டும். அதாவது, அவனுக்கு பேதமாக நாமும் இல்லை என்கிற அத்வைதாநுபவம்தான் ஈச்வர பக்தியின் முடிவு" -- என்று வாதம் பண்ணி ஸ்தாபித்தார்.

"நாம் என்ன, ஸத்தியம் என்ன, துக்கம் என்பது என்ன?" என்றெல்லாம், ஆசாபாசங்களை விட்டு விட்டு, எப்போது பார்த்தாலும் விசாரணை பண்ணிக் கொண்டே, தியானம் பண்ணிக் கொண்டேயிருந்தால், புத்தருக்கு வந்த மாதிரி நமக்கும் ஒரு தெளிவு பிறக்கத்தான் செய்யும். 'புத்தர் நேராக ஈச்வரனைப் பற்றி சொல்லவில்லையே தவிர அவர் ஈச்வரனை ஆக்ஷேபிக்கவும் இல்லை. ஆனதால், அவர் அத்வைத ஞானம் அடைந்தும் இருக்கலாம். ஆனால் அதை அவருக்கு வார்த்தைகளில் சொல்லத் தெரியவில்லை. அவ்வளவுதான்' என்றுகூடச் சொல்வதுண்டு. ஆனாலும் இப்படித் தியானமும் விசாரமும் எல்லாரும் பண்ணமுடியுமா? அதற்கு ஒரு பக்குவம் வேண்டாமா? வேண்டும். இதற்காகத்தான் வேத தர்மத்தில் கர்மா, பக்தி என்று முதலில் வைத்திருக்கிறது. இத்களால் சித்த சுத்தியும், ஐகாக்ரியமும் [ஒருமைப்பாடும்] ஏற்பட்ட அப்புறம்தான் ஸத்ய தத்வத்தைப்பற்றி ஞான வழியில் நின்று விசாரம் பண்ண முடியும். கர்மாவை லோக க்ஷேமார்த்தமாகவும், பல தினுசான ஜீவர்களின் பக்குவத்தைப் பொறுத்தும் வர்ண தர்மம், ஆசிரம தர்மம் என்றெல்லாம் வேதமும், ஸ்மிருதிகளும் பிரித்துக் கொடுத்திருக்கின்றன. அதாவது இன்னின்னார் இன்னின்ன மாதிரி செய்தால்தான், அவரவருக்கும் சிரேயஸ்,

லோகத்துக்கும் க்ஷேமம் என்று 'அதிகாரி பேதம்' பார்த்துப் பல கர்மாக்களையும், உபாஸனா மார்க்கங்களையும் பிரித்து வைத்திருக்கிறது. இதையெல்லாம் புத்த மதம் மாதிரி அலக்ஷ்யம் பண்ணி, வேத கர்மா, உபாஸனை எல்லாவற்றையும் தள்ளிவிட்டு, அதிகாரி பேதம் பார்க்காமல் எல்லோருக்கும் தியானம்_விசாரம் என்று விதித்தால், லோக காரியம் கெட்டுப் போகும். புத்தர் மாதிரி யாரோ இரண்டொருத்தரைத் தவிர யாருக்கும் தெளிவு உண்டாகிவிடாது. முன்னேயே சொன்ன மாதிரி ஏற்கனவே குமாரில பட்டரும், உதயனாசாரியாரும் பெரிய அளவுக்குச் செய்திருந்த பௌத்த மத கண்டனத்தை ஆசார்யாள் பூர்த்தி பண்ணினார்.

பௌத்தம் என்பது இம் மூவராலும் நலிந்த பிறகு, தேசத்தில் நம் ஆசார்யாளின் வழியே நிலைப்பட்டது. அதாவது ஸ்மார்த்த ஸம்பிரதாயம் என்கிற ஸநாதன வேதமதம் மட்டுமே மறுபடியும் நிலைப்பட்டு விட்டது. உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டு, ஆசார்யாளால் விஸ்தாரமாக விளக்கி நிலைநாட்டப்பட்ட அத்வைத ஞானம்தான் அதன் உச்சநிலை.

ஆனால் அத்வைதாநுபவம் என்பது எல்லாருக்கும் ஸாத்யமானதல்ல. பெரும்பாலும் பொதுஜனங்கள் வைதிக கர்மாக்களைப் பண்ணிக் கொண்டும் ஈச்வர உபாஸனை செய்து கொண்டுந்தான் இருந்தார்கள். ஆனால், பூர்வ மீமாம்ஸகர்களைப் போல், "கர்மாவேதான் எல்லாமும்; ஸ்வாமி கூட வேண்டாம்" என்று நினைத்து இவர்கள் கர்மா செய்யவில்லை. ஆசார்யாள் காட்டியபடி, ஈச்வரனை

ஒப்புக் கொண்டு, ஈச்வரார்ப்பணமாகவே கர்மாக்களைச் செய்தார்கள்.

இப்போது எந்தக் கர்மா செய்தாலும், ஆரம்பத்தில் நாம் அது பரமாத்மாவின் பிரீதிக்காகவே ("பரமேச்வர ப்ரீத்யார்த்தம்") செய்யப்படுவதாக ஸங்கல்பத்தில் சொல்கிறோமல்லவா? இந்த ஸங்கல்பம் நம் ஆசார்யாள் செய்து கொடுத்ததுதான். அவருக்கு முந்தி அப்படியில்லை. கர்மா பண்ணினால் கிடைக்கிற பலன் நமக்குத்தான் என்றும், அந்தப்பலனை ஈச்வரன் தராமல், தானாகவே பெற்றுக்கொண்டுவிடலாம் என்றும் நினைத்துவிடக் கூடாது என்றே ஆசார்யாள் இப்படி வைத்தார். ஸாதாரண கர்மாவிலிருந்து யாக யஜ்ஞம் உட்பட எல்லாவற்றையும் ஈச்வரார்ப்பணம் பண்ண வைத்தார்

ஆதியிலிருந்த வேத மதம், பிறகு வேதத்தை தழுவி ஏற்பட்ட ஸ்மிருதிகளை தர்ம சாஸ்த்திரங்களை அநுசரித்தபோது ஸ்மார்த்த மதம் என்று பெயர் பெற்றது. இரண்டும் வேறு அல்ல. வேத மதமேதான் ஸ்மார்த்தம். வேதத்தில் கர்மாவானது சித்த சுத்திக்காக ஈச்வரார்ப்பணமாகத்தான் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. பின்னால் வந்த பூர்வ மீமாம்ஸகர்கள்தான் குழறுபடி செய்தார்கள். அதை ஆசார்யாள் சரி பண்ணிவிட்டார். அதாவது 'ஒரிஜினலா'ன பழைய ஸ்மார்த்த மதத்தையேதான் நன்றாகப் புத்துயிரூட்டி நிலைநாட்டினார்.

இதேபோல, உபாஸனை என்று எடுத்துக்கொண்டாலும் வேதத்தில் விஷ்ணுதான் உசத்தி, சிவன் தாழ்த்தி என்றோ,

சிவன்தான் உசத்தி, விஷ்ணு தாழ்த்தி என்றோ இல்லை. வேதத்தில் ஸகல தெய்வங்களையும் ஒரே பரமாத்மாவாகத்தான் ஏற்றத்தாழ்வில்லாமல் சொல்லியிருக்கிறது. ருத்ரத்தில் எல்லாம் சிவஸ்வரூபமே என்று சொல்லியிருக்கும். புருஷ ஸூக்தத்தில் எல்லாம் விஷ்ணுஸ்வரூபமே என்று இருக்கும். இன்னோரிடத்தில் வருணனையே பரமாத்மா என்று சொல்லியிருக்கும். இந்திரனையே பரமேச்வரன் என்று சொல்லியிருக்கும்; அக்னிதான் முழு முதற் கடவுள்; சூரியன் முழுமுதற் கடவுள் _ என்றிப்படி எந்த தெய்வத்தைச் சொல்லும்போதும், வேத ஸூக்தங்கள் அதைப் பரமாத்மாத்வாகவேதான் சொல்லும். முடிவாக, ஒரு ஸத்யம்தான் இருக்கிறது. அதற்குத்தான் ஞானிகள் பல பேர் கொடுத்திருக்கிறார்கள்: 'ஏகம் ஸத் விப்ரா: பஹுதா வதந்தி' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டது.

வேதத்தை அப்படியே பின்பற்றும் தர்மசாஸ்திரங்களும் (ஸ்மிருதிகளும்), இந்த தெய்வம்தான் பெரிசு என்பதாக சிவனையோ, விஷ்ணுவையோ, அம்பாளையோ, வேறு எந்த தெய்வத்தையோ சொல்லவில்லை.

ஆனாலும், இஷ்ட மூர்த்திக் கொள்கை என்பதாக, அவரவரும் தங்கள் மனஸ் விருப்பத்தோடு எந்த மூர்த்தியில் அன்பாக லயிக்கிறதோ, அந்த மூர்த்தியையே முழுமுதல் தெய்வமாக வழிபடுவதை வேதமும் ஸ்மிருதிகளும் ஆதரிக்கின்றன. இப்படியே ஸ்மார்த்தர்கள் இஷ்ட தேவதையை விசேஷமாக உபாஸிக்கிறபோதே, மற்ற தேவதைகளை நிந்திக்காமல் பஞ்சாயதனமாகப் பூஜித்து வந்தார்கள்.

வேதத்தின் கர்மக் கொள்கை குழறுபடியாகி, "கர்மாதான் எல்லாமும்" என்று பூர்வ மீமாம்ஸகர்கள் வைத்துவிட்ட மாதிரி, வேதத்தின் உபாஸனா மார்க்கமும் பிற்காலத்தில் குழறுபடியாகி, அவரவரும் தங்கள் இஷ்ட தெய்வந்தான் பெரிசு என்று சண்டை போடுகிற ஸ்திதியும் ஏற்பட்டது.

இப்படி கர்மா, பக்தி இரண்டும் குழம்பி, பௌத்தர்களினால் ஞானமார்க்கமும் குழறுபடியான சமயத்தில்தான் ஆசார்யாள் அவதாரம் பண்ணி, எல்லாவற்றையும் சீர்பண்ணி, ஒன்றுக்கப்புறம் ஒன்று என்று வரிசைப்படுத்திக் கொடுத்தார். பழையபடிதான் ஆசார்யாள் சீர் பண்ணிக் கொடுத்தாரேயொழிய தாமாக புது வழி ஒன்றை ஏற்படுத்தவே இல்லை. ஸ்மார்த்த ஸம்பிரதாயம் என்ற ஸநாதன வேததர்ம வழியில் கல்லும் முள்ளும் மண்டிப் போனபோது கல்லையும் முள்ளையும் அப்புறப்படுத்தி, அந்த ஸ்மார்த்த வழியையேதான் சுத்தப்படுத்திக் கொடுத்தாரேயன்றி, புதிதாக ஒரு வழி போடவில்லை.

வேதம் சொல்கிற இஷ்ட தெய்வ வழிபாட்டு முறையை ஒப்புக்கொண்டு, பிள்ளையாரையே முழுமுதற் கடவுளாக வழிபடும் காணபதர்கள், ஸுப்ரம்மண்யரை அப்படி வழிபடும் கௌமாரர்கள், அம்பாளை வழிபடும் சாக்தர்கள், ஈச்வரனை வழிபடும் சைவர்கள், விஷ்ணுவை வழிபடும் வைஷ்ணவர்கள், ஸூரியனை வழிபடும் ஸௌரர்கள் ஆகிய இவர்களுக்கு, இந்த ஆறு வழிகளை சுத்தப்படுத்தி வைதிகமாக ஆக்கிக் கொடுத்தார். இதனால் தான் அவரை "ஷண்மத ஸதாபகர்" என்பது. இன்னொரு தெய்வத்தை நிந்திக்காமல் தங்கள் இஷ்ட தெய்வத்தை அவரவரும்

வழிபடவே ஷண்மத ஸ்தாபனம் பண்ணினார். ஸ்மார்த்தர்கள் யாவரும் பழையபடி -- 'ஆதித்யம் - அம்பிகாம் - விஷ்ணும் - கணநாதம் - மஹேச்வரம்' என்றபடி -- ஐந்து மூர்த்திகளையும் வைத்துப் பஞ்சாயதன பூஜை பண்ணும்படியாகச் செய்தார். அக்னி சம்பந்தமான வைதிக கர்மாநுஷ்டானங்களெல்லாம் ஸுப்ரமண்யருக்குப் போய்ச் சேருகிறது என்பதால், ஷண்மதங்களில் விட்டுப் போன ஸுப்ரமண்யரைப் பஞ்சாயனத்தில் சேர்க்காமல் விட்டு விட்டார் என்று வைத்துக் கொள்ளலாம்.

ஆதலால் சங்கர சம்பிரதாயம் என்று ஒன்று புதிதாக ஏற்படவே இல்லை. பழைய ஸ்மார்த்த ஸம்பிரதாயம் என்கிற வேத நெறியேதான், நடுவே சிதிலமடைந்தபோது சங்கரரால் முன்னைவிட ஜீவசக்தியுடன் புத்துயிரூட்டப்பட்டது. ஆகையால், "சங்கர சம்பிரதாயம்" என்று யாராவது சொன்னால் தப்பு; நானே சொல்லியிருந்தாலும்கூடத் தப்பு.

இப்போது எப்படி நம்மில் சிஷ்டர்களாக இருப்பவர்கள், 'புதிதாக எவரேனும் எதாவது கொள்கையைச் சொன்னால் எடுத்துக் கொள்ளக்கூடாது; மரபுப்படி, சம்பிரதாயப்படி வந்ததா என்று பார்க்கவேண்டும்' என்கிறார்களோ அப்படியேதான் நம் ஆசார்யாளும் தாம் எழுதிய பாஷ்யம் நெடுகிலும் சம்பிரதாயத்தைப் போற்றி வந்திருக்கிறார். அங்கங்கே, இதுதான் சம்பிரதாயம்; இப்படித்தான் சம்பிரதாயிகர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்; அதனால் இதுவே ஏற்கத்தக்கது என்று ரொம்பவும் மரியாதையுடன் சொல்வார். இயேசு கிறிஸ்துவைப் பற்றி, அவர் 'பழைய மதங்களை அழிக்க வரவில்லை; அவற்றைப் பூர்த்தி

பண்ணவே வந்தார்' என்று சொன்னதாகச் சொல்கிறார்கள். ஆசார்யாளும் பழைய வைதிக ஸ்மார்த்த ஸம்பிரதாயத்தை உள்ளபடி ஸ்திரப்படுத்தத்தான் வந்தாரே தவிர, தாமாக ஒன்றை ஸ்தாபிக்கவில்லை. "சங்கர சம்பிரதாயம்" என்று சொன்னால், அதை அவர் அபசாரமாகவே நினைப்பார்.

அவரது முடிந்த முடிவான அத்வைதக் கொள்கையைக்கூட அவர் சம்பிரதாயமாக் வந்த உபநிஷத்துக்கள், கீதை, பிரம்மஸூத்திரம் இவற்றின் பிரமாணத்தில்தான் முழுக்க முழுக்க நிலைநாட்டியிருக்கிறாரே தவிர, தம்முடைய சொந்தக் கொள்கை என்று தப்பித் தவறிக்கூடச் சொல்லமாட்டார்.

இதனால்தான் நம் ஆசார்யாளை அநுஸரிக்கிறவர்களுக்குப் புதுப்பெயர் ஒன்றும் ஏற்படாமல் ஸ்மார்த்தர் என்ற பெயரே நின்றுவிட்டது. ஸ்ரீ ராமாநுஜர், ஸ்ரீ மத்வர் முதலியவர்கள் தோன்றுவதற்கு முன்பு ஸ்மார்த்தர்களிலேயே விஷ்ணுவை இஷ்ட தெய்வமாகக் கொண்டவர்களும் இருந்தார்கள்.

இதிலே ஒரு வேடிக்கை: ஆசார்யாள் சொன்ன மாதிரி பரதெய்வ நிந்தை பண்ணாமல் பஞ்சாயதன பூஜையுடன் இஷ்ட தெய்வத்தை விசேஷமாக உபாஸிக்கிற அளவுக்குப் பக்குவம் இல்லாதவர்களும் ஸ்மார்த்தர்களில் இருந்திருக்கிறார்கள். அதாவது தங்கள் தெய்வம் ஒன்றே முழுமுதல் தெய்வம் என்று நினைத்தவர்களும், ஃபிலாஸஃபி என்று வரும்போது அத்வைதத்தை ஒப்புக் கொள்பவர்களாக இருந்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்களில் தீவிர வைஷ்ணவர்களும் அத்வைதிகளாக இருந்திருக்கிறார்கள். இது எப்படித் தெரிகிறதென்றால், உங்களுக்கு தெரியாத ஒரு விஷயம் சொல்கிறேன். இப்படிப்பட்ட அத்வைத வைஷ்ணவர்களின் பரம்பரையில் வந்தவர்கள் சில பேர் இப்போதும் இருக்கிறார்கள். இவர்கள் என்னைத்தான் ஆசார்யராக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஸித்தாந்தம் என்ன என்று கேட்டால் அத்வைதம்தான். இவர்கள் நாமம் போட்டுக்கொள்ள மாட்டார்கள். விபூதிக்கு என்ன இருந்தாலும் சிவசம்பந்தம் சேர்ந்துவிட்டது என்பதால் விபூதியும் இட்டுக் கொள்ளமாட்டார்கள். நாமமும் இல்லாமல், விபூதியும் இல்லாமல் கோபி சந்தனம்தான் இட்டுக்கொள்வார்கள். இன்னும் சில பேர் வடகலை, தென்கலை இரு நாமமுமாக இல்லாமல் "கீற்று நாமக்காரர்கள்" என்ற பேரோடு அத்வைதிகளாக இருக்கிறார்கள்! ஆனாலும் அத்வைதிகளான இவர்கள் ஸ்ரீ ராமாநுஜ ஸம்பிரதாயத்தில் வந்த வைஷ்ணவர்களைக் காட்டிலும் வீர வைஷ்ணவர்களாக இருக்கிறார்கள்! ராமாநுஜ – வைஷ்ணவர்கள்கூட சிவன் கோவிலுக்குப் போகிற இந்தக் காலத்திலும், என்னை ஆசாரியராக வைத்துக் கொண்டிருக்கிற இந்த அத்வைத – வைஷ்ணவர்கள் சிவன் கோவிலுக்குப் போவதில்லை! "இதிலிருந்தே என்னை சைவனாகச் சொல்வது எவ்வளவு தப்பு என்று தெரிகிறது பார்!" என்று அந்த ஜப்பான் ப்ரொஃபஸருக்கு எடுத்துக் காட்டினேன். இதேமாதிரி வீரசைவர்களிலும் அத்வைதிகள் உண்டு. தத்துவம், Philosophy என்று வருகிற போது ஆசார்யாளின் அத்வைத ஸிந்தாந்தத்தை இவர்கள் ஏற்றுக்கொண்டாலும்,

உபாஸனை, Theology என்கிறபோது அவர் சொன்ன ஸாமரஸ்யத்தை [ஸமரஸபாவத்தை] ஏற்கமுடியாமல் விஷ்ணுவோ, சிவனோதான் ஒன்றைக் காட்டிலும் மற்றது பெரிசு என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனாலும், பொதுவாக, அத்வைதிகள் என்றால் சைவர் என்ற எண்ணம் ஏற்பட்டதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. பகவத்பாதாளுக்குப் பிற்பாடு ஸ்ரீ ராமாநுஜாசாரியார் விசிஷ்டாத்வைதத்தைப் பிரசாரம் பண்ணினார். 'ஜீவனும் பிரம்மமும் ஒன்றாகப் போய் அத்வைதமாகிவிட முடியாது. ஜீவன் தனக்குள் அந்தர்யாமியாக பிரம்மமே இருந்து இயக்கி வைக்கிறது என்பதைக் கொஞ்சம் பேதமாக இருந்துதான் மோக்ஷ நிலையிலும் அநுபவிக்கிறான். பிரம்மம் என்பதும் சங்கரர் சொன்னபடி குணம் குறியில்லாத, காரியமில்லாத நிர்குண வஸ்துவல்ல. அது ஸகுணமானதுதான் [குணத்தோடு கூடியதுதான்]. காரியம் பண்ணுவதுதான். ஜீவனையும் காரியம் பண்ணவைப்பது அந்தர்யாமியாக உட்புகுந்திருக்கிற அதுதான்' என்ற கருத்துக்களை உடையவர் ஸ்ரீ ராமாநுஜர். இது வரைக்கும், எந்த தெய்வத்தை வழிபடுபவர்களுக்கும் பொதுவான மாதிரி, ஃபிலாஸஃபியாக, தத்வமாக மட்டும் இருக்கிறது. ஆனால் இங்கே அப்படிப்பட்ட ஸகுணப்பிரம்மம் மஹாவிஷ்ணுதான்; சிவனோ வேறு தெய்வமோ இல்லை என்றும் சொல்லி, ஸ்ரீ ராமாநுஜர் 'தியாலஜி'ப்படி ஒரு குறிப்பிட்ட இஷ்ட தெய்வக்காரர்கள் மட்டுமே விசிஷ்டாத்வைதத்தை ஏற்கும்படிப் பண்ணிவிட்டார்.

ராமாநுஜ ஸிந்தாந்தத்தை ஏற்றுக்கொண்டவர்கள், அதுவரை ஸ்மார்த்தர்களாக இருந்தவர்கள்தான். வைதிக மதம், ஹிந்து மதம் என்பதே அவர் நாள்வரையிலும் ஸ்மார்த்த மதம்தானே? ஆகையினால், விஷ்ணு தான் பரதெய்வம் என்று அவர் ஏற்படுத்திய ஸிந்தாந்தத்துக்குப் போனவர்கள் ஸ்மார்த்தர்களிலிருந்துதானே போயிருக்க வேண்டும்? விசிஷ்டாத்வைத தத்வத்தை (Philosophy) ஏற்றுக் கொண்டு அதில் போனவர்கள் போயிருப்பார்கள். அது தவிர தங்களுடைய இஷ்ட தெய்வமான மஹாவிஷ்ணுவுக்கு உத்கர்ஷத்தை [மேன்மையை]ச் சொல்லியிருக்கிறது என்பதற்காகவே, தத்வத்தைவிட வழிபாட்டுமுறை (Theology)யை முக்கியமாகக் கவனித்தும், விஷ்ணுவை இஷ்ட தெய்வமாகக் கொண்ட பல ஸ்மார்த்தர்கள் ஸ்ரீ ராமாநுஜ சம்பிரதாயத்தைத் தழுவியிருக்கக் கூடும். பிற்பாடு ஸ்ரீ மத்வாசாரியார், ஸ்ரீ வல்லபாசாரியார், ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் முதலானவர்கள் வந்து, தத்வரீதியில் வெவ்வேறு ஸித்தாந்தங்களைப் பிரசாரம் செய்தார்கள். அந்தர்யாமியாக ஜீவாத்மாவுக்குள் பரமாத்மா இருக்கிறதைக் கூடச் சொல்லாமல். இரண்டும் அடியோடு வேறானவை என்றே மத்வர் ஸித்தாந்தம் செய்தார். அதுதான் த்வைதம். வல்லபாசாரியார், சைதன்யர் ஆகியவர்களின் ஃபிலாஸஃபியைச் சுருக்கமாகச் சொல்லிப் புரியவைப்பது சிரமம். அந்த 'டிஸ்கஷன்' இப்போது வேண்டாம். மொத்தத்தில் நான் சொல்ல வந்த விஷயம் என்னவென்றால், இந்த மூன்று பேருங்கூட தத்வம் என்று ஒன்றை வைக்கிறபோதே வழிபாட்டிலும் "இதுதான் தெய்வம்" என்று ஒன்றை வைத்துவிட்டார்கள். மத்வ மதத்திலும் விஷ்ணுதான் பரமாத்மா. மற்ற இருவருக்கும்

பிரம்மம் அல்லது பரமாத்மா என்பது க்ருஷ்ணன்தான். அதனால், இதெல்லாமும் விஷ்ணுவை உபாஸிக்கும் மதங்கள்தான். இந்த சம்பிரதாயங்களுக்கும் ஸ்மார்த்தர்களிலிருந்துதானே போயிருக்கிறார்கள்? இவர்களிலும் தத்வத்துக்காகப் போனவர்கள் மட்டுமில்லாமல், தங்களுடைய விஷ்ணுவுக்கு உத்கர்ஷம் தந்திருக்கிறது என்பதற்காகவே போன ஸ்மார்த்த வைஷ்ணவர்களும் இருந்திருப்பார்கள் அல்லவா?

ஆக, ஸ்மார்த்தர்களிலிருந்துதான் பிற்பாடு ராமாநுஜ ஸித்தாந்தம், மத்வ ஸித்தாந்தம், வல்லப ஸித்தாந்தம், சைதன்ய சம்பிரதாயம், (நிம்பார்க்கர் என்று ஒருத்தர் உண்டு - அவரும் கிருஷ்ண பக்திக்காரர்தான். அவருடைய ஸித்தாந்தம்) ஆகிய இத்தனை வைஷ்ணவ பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் போயிருக்கிறார்கள். இதனால் ஸ்மார்த்தர்களாகவே தங்கிவிட்டவர்களில் விஷ்ணுவை இஷ்ட தெய்வமாகக் கொண்டவர்கள் குறைந்து போய், ஈச்வரனை [சிவனை] இஷ்ட தெய்வமாகக் கொண்டவர்களே அதிகமாகியிருப்பார்களல்லவா? இதனால்தான் அத்வைதிகள் சிவமதஸ்தர் என்று நினைக்கும்படியாகி விட்டிருக்கிறது.

வெள்ளைக்காரர்கள் ஆட்சி தொடங்கி பத்திரங்கள் எழுதும் நாளிலிருந்தே, ஸ்மார்த்தர்கள் தங்களை ஸ்மார்த்தர் என்று போட்டுக் கொள்ளாமல் "சிவ மதம்" என்று போட்டுக் கொள்ளும்படியாக ஆகியிருக்கிறது !

ஏதோ இந்தக் காலத்தில், நம் மதத்தைப்பற்றி அடியோடு அறிந்து கொள்ளாத புதுத் தலைமுறை ஸ்மார்த்தர்கள்தான்

தங்களை சைவர்களாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதில்லை. போன நூற்றாண்டிலேயே ராஜாங்கத்தில் செல்லுபடியாகிற பத்திரங்களில்கூட இப்படியே குறித்து வந்திருக்கிறார்கள்!

அது மட்டுமில்லை. இதற்கெல்லாம் ரொம்பக் காலம் முந்தி, ராமாநுஜர் வைஷ்ணவ சம்பிரதாயத்தை பலப்படுத்திய நாளில், ஸ்மார்த்தர்களில் விஷ்ணு பக்தர்களாக்கப்பட்டவர்களில் அநேகர் அந்த வழியை அநுசரிக்க ஆரம்பித்தபோதே, அத்வைதிகள் என்றால் சைவர்கள் என்று நினைக்கும்படியாக ஆனதாகத் தோன்றுகிறது. ஏன் இப்படி சொல்கிறேன் என்றால், ஸ்ரீ ஸ்ரீகண்டாசார்யார் என்பவர் ராமாநுஜர் காலத்தை ஒட்டியே வந்தவர் என்று சொல்கிறார்கள். தத்வரீதியில் இவரும் விசிஷ்டாத்வைதம் மாதிரித்தான் சொல்கிறார். ஆனால் முக்தி நிலையைச் சொல்லும்போது அத்வைதத்துக்கு இன்னம் கொஞ்சம் கிட்டே போயிருக்கிறார். உபாஸனா ரீதியில் இவருக்கு சிவன்தான் பிரதானம். ராமாநுஜருக்கு எப்படி நாராயணந்தான் பரமாத்மாவோ, அப்படி இவருக்குப் பரமசிவன்தான் பரமாத்மா. இப்படி இவர் ஒரு சைவ..விசிஷ்டாத்வைத மதத்தை ஸ்தாபித்த போதிலும், ஸ்மார்த்த வைஷ்ணவர்கள் ராமாநுஜ ஸித்தாந்தத்தைத் தழுவிய அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மிகமிகக் குறைவாகத்தான் ஸ்மார்த்த சைவர்கள் (அதாவது பரமேச்வரனை இஷ்டமூர்த்தியாகக் கொண்ட ஸ்மார்த்தர்கள்) ஸ்ரீகண்டரின் சைவமான ஸித்தாந்தத்தை தழுவியிருக்கிறார்கள். ஏனென்றால், ராமாநுஜருடன் பல வைஷ்ணவர்கள் பிரிந்து போனவுடனேயே, ஸ்மார்த்தர்கள்

தங்களை முக்கியமான சைவர்கள் என்றே நினைத்திருக்க வேண்டும். அதனால்தான் சைவமான ஸித்தாந்தமாகவே ஒரு மதத்தை ஸ்தாபித்தபோது அதற்கு மாறவேண்டும் என்று இவர்கள் நினைக்கவில்லை போலிருக்கிறது. இந்த சைவ விசிஷ்டாத்வைதத்தின் மோக்ஷமும் அத்வைதத்துக்கு கிட்டவே இருந்ததால், தங்களுடைய அத்வைதத்தை விட்டுவிட்டு, அதே மாதிரியான ஸித்தாந்தத்துக்கு ஏன் போகவேண்டும் என்றும் நினைத்திருக்கலாம்.

தத்வம் ரொம்பக் கொஞ்சம் பேருக்குத்தான் முக்கியமாக இருப்பது; அப்பீல் ஆவது. பெரும்பாலாருக்கு பக்தியும், உபாஸனா மூர்த்தியும்தான் முக்கியம். அதனால்தான் விஷ்ணு உத்கர்ஷம் கூறப்பட்ட ஸித்தாந்தங்களுக்கெல்லாம் ஸ்மார்த்த மதத்திலிருந்து தீவிர விஷ்ணு பக்திக்காரர்கள் போயிருக்கிறார்கள். இதனாலேயே அத்வைதம் சிவ..உத்கர்ஷத்துக்கு ஏற்பட்டது என்ற அபிப்பிராயம் உண்டாகி, சிவ உத்கர்ஷத்திற்கென்றே ஒரு ஸித்தாந்தம் ஏற்பட்டபோது, அதில் விசேஷமாக ஸ்மார்த்தர்கள், அதாவது ஸ்மார்த்த மதத்திலிருந்த தீவிர சிவபக்திக்காரர்கள் சேராதபடி ஆகியிருக்கிறது. இப்போதுள்ள அடியோடு விஷயம் தெரியாதவர்களோ, அத்வைதிகள் என்றாலே சைவர் என்று நினைத்துவிடுமளவுக்கு ஆகியிருக்கிறது!

(ஸ்ரீ சங்கர)மடங்களில் சந்திர மௌளீச்வர பூஜைதானே நடக்கிறது என்றால், அது ஒரு காரணத்தினால் ஏற்பட்டது. ஆசார்யாளுக்கு பரமேச்வரனே ஐந்து ஸ்படிக லிங்கங்களைக் கொடுத்து, அவற்றின் ஆராதனை

லோகத்தில் எந்நாளும் இருக்கும்படியாகப் பண்ணவேண்டும் என்றார். அவற்றில் இரண்டை ஆசார்யாள் சிருங்கேரியிலும், காஞ்சீபுரத்திலும் உள்ள மடங்களில் வைத்தும், பாக்கி மூன்றை நேபாளம், கேதாரிநாத், சிதம்பரம் ஆகிய இடங்களில் ஆலயங்களில் வைத்தும், அவிச்சின்னமாக (முறிவு படாமல்) ஆராதனை நடக்க வழி செய்தார். சங்கர மடம் என்றால், எல்லா மடங்களிலும் யூனி:பார்மிடி இருக்க வேண்டாமா? அதனால் மடங்களில் சந்திர மௌளீச்வர பூஜையை வைத்தார். ஆசார்யாளுக்கு லக்ஷ்மீ நிருஸிம்ம மூர்த்தி ஒரு சாளக்ராமம் கொடுத்தார். ஈசுவரனே தம் ஸ்வரூபமான ஸ்படிக லிங்கம் தந்ததுபோல, நரஸிம்மமூர்த்தி தன் ஸ்வரூபமான சாளக்ராமத்தைக் கொடுத்தார். ஸ்படிக லிங்கத்தைப் பூஜையில் வைத்த மாதிரியே இந்த சாளக்ராமத்தையும் ஆசார்யாள் மடத்துப் பூஜையில் வைத்திருக்கிறார்.

அவருக்கு சிவ - விஷ்ணு பேதம் கொஞ்சமும் கிடையாது. சிதம்பரத்தில் ஸ்படிக லிங்கம் ப்ரதிஷ்டை பண்ணின மாதிரியே, பத்ரிநாத்தில் நாராயணனைப் பிரதிஷ்டை பண்ணியிருக்கிறார். அங்கேயே ஒரு மடம் ஸ்தாபித்திருக்கிறார். அவர் மடங்களை ஸ்தாபித்த இடங்களில் புரி ஜகந்நாதமும், த்வாரகையும் விசேஷமான கிருஷ்ண க்ஷேத்ரங்களே. அவர் சிவ ஸஹஸ்ரநாமத்துக்கு பாஷ்யம் பண்ணவில்லை; விஷ்ணு ஸஹஸ்ர நாமத்துக்குத்தான் பாஷ்யம் பண்ணியிருக்கிறார். சிவகீதை, தேவிகீதை எல்லாம்கூடப் புராணங்களில் இருந்தாலும் கிருஷ்ண பரமாத்மா உபதேசித்த பகவத் கீதைக்குத்தான்

நம் ஆசார்யாள் பாஷ்யம் பண்ணியிருக்கிறார். ஈசுவரனையும் அம்பாளையும் போலவே மஹாவிஷ்ணு, ராமர், கிருஷ்ணர், மஹாலக்ஷ்மி எல்லாரைக் குறித்தும் ஸ்தோத்திரங்கள் செய்திருக்கிறார். இதையெல்லாம் சரியாக கவனிக்காததால், அவரை சைவர் என்று சொல்லிவிடுகிறார்கள்.

ஆசாரியாளின் மடத்தில் நடப்பது வெறும் சிவபூஜை மட்டுமில்லை. ஆரம்பத்திலேயே சொன்னேனே, அந்தப் பஞ்சாயதன பூஜைதான் மடத்துப் பூஜையும். ஆசாரியாள் ஈச்வரனும் அம்பாளும் சேர்ந்து எடுத்த அவதாரம்; உமாமஹேச்வரர்களே அவருக்கு கைலாஸத்தில் பஞ்சலிங்கங்களைக் கொடுத்தார்கள்; ஆகையால் அவர் நடுநாயகமாக ஈச்வரனையும் அம்பாளையும் மடத்துப் பூஜையில் வைத்தார். ஆனாலும் சிவ பஞ்சாயதன முறைப்படி மஹாவிஷ்ணு, கணபதி, சூரியன் ஆகியோர்களும் பூஜையில் இடம் பெற்றிருக்கிறார்கள். இங்கே சிவராத்ரி, நவராத்ரி மாதிரி, ராமநவமி, கோகுலாஷ்டமி, நரசிம்ம ஜயந்தி முதலானவற்றையும் கொண்டாடுகிறாம்.

மடத்தில் ஸ்ரீமுகம் அனுப்பும்போது என்ன சொல்கிறோம்? இன்ன காரியத்தைக் குறித்து, "க்ரியதே நாராயண ஸ்மிருதி:" என்று ஸ்ரீமுகத்தில் சொல்கிறோம். அதாவது எந்தப் புஸ்தகத்துக்கு அல்லது காரியத்துக்கு ஆசீர்வாதமாக இந்த ஸ்ரீமுகம் அனுப்பப்படுகிறதோ அது நல்லபடியாக நடப்பதற்காக நாராயணனை ஸ்மரிக்கிறோம் என்று சொல்கிறோம். சிவனை ஸ்மரிப்பதாகச் சொல்லவில்லை. நீங்கள் எனக்கு நமஸ்காரம்

பண்ணும்போது என்ன சொல்கிறேன்? "நாராயண நாராயண" என்றுதான் சொல்கிறேன். எல்லா சங்கராசாரியர்களும் இப்படித்தான் சொல்கிறோம். அது ஆதி ஆசார்யாளே பண்ணின ஏற்பாடு. ஜகத் பரிபாலன கர்த்தா என்கிற ரீதியில், லோகத்தில் நல்லது நடப்பதற்கெல்லாம் நாராயணனைத்தான் ஸ்மரிக்க வேண்டும் என்று வைத்திருக்கிறார்.

இத்தனை நாழி, அத்வைதிகள் என்றால் சைவர் என்று அபிப்பிராயம் ஏற்பட்டிருப்பதைப் பற்றிச் சொன்னேன். இதற்கு நேர்மாறாக சங்கரர் மஹாவிஷ்ணுவைத்தான் உபாஸித்தவர் என்கிறவர்களும் உண்டு. அவர்கள் இந்த நாராயண ஸ்மரணம், விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம் முதலான விஷயங்களை தங்களுக்கு ஆதரவாகச் சொல்கிறார்கள். இதோடுகூட, ஆசார்யாள் பாஷ்யங்களில் இந்த லோக வியவகாரத்தை எல்லாம் செய்யும் ஸகுணப் பிரம்மமான ஈச்வரனைப் பற்றிப் பிரஸ்தாபிக்கிறபோது, அவனை 'நாராயணன்' என்றே சொல்லியிருப்பதையும் எடுத்துக்காட்டுகிறார்கள்.

ஆனாலும் ஆசாரியாளை சைவர் என்றோ, சாக்தர் என்றோ, வைஷ்ணவர் என்றோ எப்படிச் சொன்னாலும் அது அவரை குறுக்குகிற காரியம்தான். அப்படியெல்லாம் ஏதோ ஒரு தெய்வத்துக்கு மட்டும் அவர் பக்தர் என்பது சரியில்லை ஏன் அத்வைத பாஷ்ய கிரந்தங்களில் ஸகுணப் பிரம்மம் என்றால், நாராயணன் என்று சொன்னார் என்றால், முத்தொழில் என்று பிரித்துக் கொடுக்கிறபோது மஹாவிஷ்ணுவுக்குத்தான் லோக ரக்ஷணப் பொறுப்புத் தந்திருக்கிறது. எவன் ரக்ஷிக்கிறானோ அவனையே

பிரபஞ்சத்தையெல்லாம் நடத்தும் சக்தியாகச் சொன்னார் என்றுதான் சொல்லவேண்டும்.

ஆசாரியாள் சைவர், வைஷ்ணவர், சக்தர் எல்லாம்தான். அவருடைய சிஷ்யர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஸ்மார்த்தர்களான நாமும் அப்படித்தான் இருக்க வேண்டும். ஸ்மார்த்தர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருப்பவர் முத்துஸ்வாமி தீக்ஷிதர். அவர் மாரியம்மனும், ஐயனாரும், நவக்கிரஹங்களும் உள்பட அத்தனை தெய்வங்களையும் பரமாத்ம ஸ்வரூபமாகப் பார்த்து கீர்த்தனங்களால் ஸ்தோத்திரம் செய்திருக்கிறார். அத்தனை தெய்வங்களுமான ஏக பரமாத்மாதான் நமக்கு உபாஸ்யம். அதை அத்தனை ரூபங்களிலும் ஏற்றத்தாழ்வில்லாமல் பாவிக்கிற மனப்பான்மை நமக்கு வரவேண்டும். ஆதிகாலத்திலிருந்து அத்வைதிகளிலேயே வீரசைவர்களும், வீரவைஷ்ணவர்களும் இருந்திருக்கிறார்கள் என்று சொன்னாலும், அது ஆசார்யாளின் மனோபாவத்துக்கும், அவர் நமக்கு போட்டிருக்கிற ஆக்ஞைக்கும் சம்மதமானதல்ல. அத்வைதிகளிலேயே அப்பைய தீக்ஷிதர் பரம சாம்பவராகவும் [சிறந்த சிவபக்தராகவும்] லீலாசுகர் பரம பாகவதராகக் கிருஷ்ணனிடமே பரம ப்ரீதியும் வைத்திருந்த மாதிரி, நாம் ஏதாவது ஒரு இஷ்ட தெய்வத்திடம் அதிக பக்தி வைப்பதில் தப்பில்லை. ஆனால் இந்த மஹான்கள் எப்படி இன்னொரு தெய்வத்தை நிந்திக்காமலே தங்கள் இஷ்ட தெய்வத்திடம் பக்தியில் உருகினார்களோ, அப்படி நாமும் எந்த ஒரு

தெய்வத்தையும் நிந்திக்காமல், நம் இஷ்ட மூர்த்தியிடம் விசேஷ பக்தியோடு இருக்கவேண்டும்.

வேத மதம் என்ற ஸ்மார்த்த மதத்தின் மூலக் கொள்கைகளில் இது ஒன்று: இன்னொரு தெய்வத்தைத் தாழ்த்திச் சொல்லித் தன் தெய்வம்தான் தெய்வம் என்று சொன்னால் அப்போது அது வேத ஸம்மதம் உடையதாகாது. இந்த 'டெஸ்ட்'படிப் பார்த்தால் ஆசார்யாளை அனுஸரிக்கிற ஸ்மார்த்த மதஸ்தர்களான நாம்தான் பூரண வைதிகர்கள். இப்படி நான் சொல்லவில்லை. நான் சொன்னால் அது தப்பு. இது என் சம்பிரதாயம் என்பதற்காக உயர்த்திச் சொல்கிறேன் என்றாகிவிடும். ஆதலால் இது என் அபிப்பிராயமில்லை. மூன்று பூர்வகாலப் பெரியவர்களுடைய அபிப்பிராயம் இப்படி இருந்திருக்கிறது.

த்வைதி, அத்வைதி, விசிஷ்டாத்வைதி எல்லோருக்கும் மூல புருஷரான வியாஸ மஹரிஷியின் அபிப்பிராயமே இப்படித்தான் இருந்திருக்கிறது. பாரதத்தில் அநுசாஸனபர்வாவில் பீஷ்ம பிதாமஹரின் வாயிலாக அவர் பிராசீனமாக இருந்து வந்த ஐந்து மதங்களின் பெயரைச் சொல்லும்போது, ஸாங்க்யம், யோக: பாஞ்ராத்ரம் வேதா: பாகபதம் ததா என்கிறார். இவற்றில் 'வேதா:' என்பதுதான் வேத மதம்; பிற்காலத்திய ஸ்மார்த்த மதம். அதில் ஸகல தெய்வ ஆராதனையும் உண்டு. கர்மம்-பக்தி-ஞானம் மூன்றும் உண்டு. தத்வங்களை ஆராய்ச்சி பண்ணுகிற ஸாங்கியமும் அதில் அடக்கம். யோக ஸாதனையும் அதிலே தியானத்தின் அங்கமாக வருவதுதான். இது அத்தனையும் ஆசார்யாளினால்

புத்துருப்பெற்ற ஸ்மார்த்த ஸம்பிரதாயத்திலும் உண்டு. 'சிவானந்த லஹரி', 'ஸௌந்தர்ய லஹரி', ஸ்ரீ மஹாவிஷ்ணுவைக் குறித்த 'ஷட்பதி' ஸ்தோத்திரம் முதலானவற்றில் நம் அத்வைத ஆசாரியாளே த்வைதம், விசிஷ்டாத்வைதம் முதலியவற்றையும் ஒவ்வொரு நிலையில் ஒப்புக் கொண்டிருக்கிறார். "யோக தாராவளி" என்ற நூலில் ஒரேடியாகப் பாதஞ்ஜல யோக நுட்பங்களைக் கொட்டியிருக்கிறார். ஸாங்கியர்களின் இருபத்து நாலு தத்துவங்களையும் அவர் பாஷ்யங்களின் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். வியாஸர் சொன்ன ஐந்தில் வேதம், ஸாங்கியம், யோகம் போக மீதமுள்ளவை பாஞ்சராத்ரமும், பாசுபதமும். பாஞ்சராத்ரத்தில் விஷ்ணு மட்டும்தான் தெய்வம் என்று சொல்லியிருக்கிறது. பாசுபதத்தில் பரமேச்வரன் மட்டும்தான் தெய்வம் என்று சொல்லியிருக்கிறது. இவை மற்ற தெய்வங்களை மட்டம் தட்டி இப்படி ஒவ்வொரு தெய்வத்துக்கு மட்டும் உத்கர்ஷம் சொல்கின்றன. அதனால் இவை வேத மதத்தைச் சேர்ந்தவை ஆகா என்று வியாஸாசார்யாள் அபிப்பிராயப்படுகிற மாதிரிதான் "வேதா:" என்று வேத மதத்தைச் சொல்லிவிட்டு, 'பாஞ்சராத்ரம், பாசுபதம்' என்று இவற்றை வேதத்திற்கு வேறான சம்பிரதாயங்களாகத் தனியே சொல்லிவிட்டார். ஸாங்கியம் வெறும் தத்வ வாதம்தான். அதில் கர்மாவுமில்லை; பக்தியுமில்லை; அநுபவ ஞானத்துக்கும் வழியில்லை. யோகம் ரொம்பவும் உசந்தது என்றாலும், அதிலும் வைதிக உபாஸனை, கர்மா எல்லாம் பூர்ணமாக வரவில்லை; ஞானம் என்று எடுத்துக்கொண்டாலும், உபநிஷத்தில் சொன்ன மாதிரி அதில் பரமாத்ம தத்வத்தைப் பற்றி தெளிவாகச்

சொல்லவில்லை. அதனால்தான் இந்த நாலுமே ஏதோ ஒரு தினுசில் அபூர்ணம் என்பதால், எல்லாவற்றையும் எடுத்துக் கொண்ட பூர்ணமான வேதத்திலிருந்து அவற்றைப் பிரித்துச் சொல்லிவிட்டார்.

வியாஸர் மஹரிஷி, பரமஞானி. அவர் அபிப்பிராயம் இப்படி என்றால், இன்னொருத்தர் கந்தர்வராக இருந்து அம்பாள் சாபத்தால் மநுஷ்யராகப் பிறந்து மிகப் பெரிய சிவபக்தராகி ஈஸ்வரனை ஸ்தோத்திரம் பண்ணி அதன் பலனாக ஈச்வரனையே அடைந்து நித்ய கைலாஸ வாஸம் செய்தவர். அவருக்கு புஷ்பதந்தர் என்று பேர். அவர் பண்ணின ஸ்தோத்திரத்துக்கு "சிவ மஹிம்ன ஸ்தோத்திரம்" என்று பேர். 'சிவனின் மஹிமையைக் கூறும் துதி' என்று அர்த்தம். புனாவுக்கு அப்புறம் கொஞ்சம் வடக்கே போய்விட்டால் போதும். வடஇந்தியா முழுக்க பக்தர்கள் என்றால் சிவ மஹிம்ன ஸ்தோத்திரம் தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். (நான் எத்தனையோ சொல்லியும், புஸ்தகமாகவே அச்சுப்போட்டுக் கொடுத்தும்கூட, நம் பக்கங்களில் திருப்பாவை..திருவெம்பாவையோ, திருமுருகாற்றுப்படையோ, விநாயகர் அகவலோ அந்த அளவுக்கு பிரபலமாகவில்லை.) அந்த "சிவ மஹிம்ன" ஸ்தோத்திரத்திலேயும், வியாஸர் சொன்ன மாதிரிப் பல மதங்களைப் பற்றிய பிரஸ்தாவம் வருகிறது. மஹாபாரத சுலோகத்தை நினைத்துக்கொண்டே புஷ்பதந்தர் பாடின மாதிரி இருக்கிறது:

த்ரயீ ஸாங்க்யம் யோக: பசுபதி மதம் வைஷ்ணவம் இதி

'த்ரயீ' என்றால் வேதமதம். அப்புறம் ஸாங்கியம், யோகம். பசுபதி மதம் என்பதுதான் மற்ற தெய்வங்களை மட்டம் தட்டி சிவனே பெரிசு என்கிற பாசுபத மதம். இதே மாதிரி பரதெய்வ நிராகரணம் பண்ணி விஷ்ணு உத்கர்ஷம் சொல்வது வைஷ்ணவம். வியாஸர் இதைத்தான் பாஞ்சராத்ரம் என்றார்.

வியாஸரும் சரி, புஷ்பதந்தரும் சரி இந்த ஐந்து மதங்களையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவை ஒரே சமுத்திரத்தில் கொண்டு சேர்க்கிற ஐந்து நதிகள் மாதிரி என்று சிறப்பித்தே பேசுகிறார்கள். 'எங்கள் தெய்வம்தான் உசத்தி' என்கிறவர்களையும் ஒப்புக் கொண்டுதான் பேசியிருக்கிறார்கள். ஆனாலும்கூட இந்த மனோபாவம் வேதமதத்துக்கு உகந்ததல்ல என்பதால், இவற்றை வேதத்திலிருந்து வேறாகவே சொல்லியிருக்கிறார்கள். புஷ்பதந்தர் விஷயத்திலே இது ரொம்பவும் ரஸமாயிருக்கிறது. ஏனென்றால் அவரே பரம சாம்பவர்தான். சிவ மஹிமைதான் அவருடைய ஸ்தோத்திரத்தின் விஷயம். ஐந்து மதங்களும் பரமேச்வரன் என்கிற ஒரே ஸமுத்திரத்தில் கலக்கும் நதிகள்தான் என்றே இந்த ச்லோகத்தில் சொல்லியிருகிறார். அப்படியிருந்தும் பசுபதி மதமான சைவமே நம்முடைய ஸநாதன தர்மமான வேதமதம் என்று அவர் சொல்லவில்லை. எதையும் தள்ளாததுதான் வேதமதம். எல்லாவற்றையும் கொள்ளுவதுதான் வேதமதம் என்பதால், இப்படி அதைப் பாசுபதத்துக்கு வேறானதாகச் சொல்லியிருக்கிறார்.

மூன்றாமவர் ஒரு கவி. மும்மதஸ்தருக்கும் முக்கியஸ்தரான வியாஸர் வாக்குக்கு ஒரு மதிப்பு உண்டு என்றால், சைவரான புஷ்பதந்தரே சிவனை மட்டும் சொல்லும் மதத்தை வேதத்துக்கு வேறாகச் சொல்வதில் ஒரு விசேஷம் உண்டென்றால், எந்த மதத்தையும் சேராமல், எந்த தெய்வத்தையும் பெரிசு சின்னது என்று சொல்லாமல், நடுநிலைமையிலிருந்து பார்க்கிற கவி வாக்குக்கும் ஒரு அலாதிச் சிறப்பு இருக்கத்தான் செய்கிறது. அப்படிப்பட்ட ஒரு கவியின் கருத்தை இங்கே பார்ப்போம். அந்தக் கவி யார்? நைஷதம் என்கிற நள சரித்திரத்தை எழுதிய ஸ்ரீஹர்ஷர். ரொம்பவும் காவிய ரஸம், இலக்கியச் சுவை நிரம்பிய ஒரு கட்டத்தில் உபமானம் சொல்கிறபோது அவரும் ஐந்து மதப் பிரஸ்தாவம் பண்ணுகிறார்.

தமயந்திக்கு ஸ்வயம்வரம் நடக்கிறது. அவளுக்கு நளன்மேல்தான் பிரேமை. ஸ்வயம்வரத்துக்கு வந்துள்ள நளனுக்கே மாலை போடவேண்டும் என்பது அவளுடைய உத்தேசம். தமயந்தியின் மேல் இந்திரன், வருணன், அக்னி, யமன் ஆகிய நாலு தேவர்களுக்குங்கூட ஆசை. அவள் தங்கள் பத்னியாக வேண்டும் என்று ஆசை. இவளுக்கோ நளனிடம்தான் பிரியம் என்று அவர்களுக்குத் தெரியும். அதனால் அவர்களும் (அவர்களின் ஒவ்வொருவரும்) தத்ரூபம் நளனைப் போலவே வேஷம் போட்டுக் கொண்டு வந்துவிட்டார்கள். ஐந்து நளன்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் – ஸ்வயம்வர மண்டபத்திலே. எது நிஜ நளன் என்று தமயந்தி எப்படித் தெரிந்து கொள்ள முடியும்?

இந்த இடத்திலேதான் ஸ்ரீஹர்ஷர் ஐந்து மதங்களுக்கு நடுவே ஸத்யதரமான அத்வைதம் இருக்கிற மாதிரி, ஐந்து நளன்களுக்கிடையே இருந்த ஸத்யமான நளனைப் புரிந்து கொள்ள முடியாமல் தமயந்தி திகைத்து நின்றாள் என்கிறார்: பஞ்சம கோடி மாத்ரே.... மதானாம் அத்வைத தத்வ இவ ஸத்யதரேபி லோக:

'தரம்' என்றால் ஒப்பிட்டு உயர்த்தி கூறுகிற comparitive degree. மற்ற நாலு மதங்களும் தப்பானவை என்று கவி சொல்லவில்லை. வியாஸர், புஷ்பதந்தர் மாதிரி இவரும் அவற்றை ஸத்தியமானவை என்று ஒப்புக் கொள்கிறார்.ஆனாலும் அவற்றோடு ஒப்பிட்டு, அவற்றினும் ஸத்தியத்தில் உயர்ந்தது அத்வைதமே என்பதால் "ஸத்யதர அபி அத்வைத" என்று அதைச் சிறப்பித்துச் சொன்னார். எப்படி நம் ஆசார்யாள் ஸத்யத்திலேயே மூன்று தினுசு பிரித்தாரோ* அப்படியே ஸ்ரீஹர்ஷரும் சாதாரண ஸத்யம், உத்தமமான ஸத்யம் என்று பிரித்து, பாரதத்தில் சொல்லப்பட்ட ஐந்து மதங்களில் மற்ற நாலும் ஸாதாரண ஸத்தியம், அத்வைதமே உத்தம ஸத்தியம் என்கிறார்.

பாரதத்தில், பீஷ்ம வசனத்தில் "அத்வைதம்" என்று இல்லை. "வேதா:" என்றுதான் இருக்கிறது. ஆனாலும் விஷ்ணுதான் தெய்வம், சிவன்தான் தெய்வம் என்று கட்சி கட்டினால், அந்த மதம் வேதத்துக்கு வேறானது என்கிற அபிப்பிராயம் அங்கு வந்து விட்டது. புஷ்பதந்தர் வாக்கிலும் இதே கருத்து வந்திருக்கிறது. அங்கும் "த்ரயீ" என்று வேதத்தைச் சொல்லியுள்ளதே தவிர, "அத்வைதம்", என்றில்லை. ஆசார்யாளுக்குப் பிந்தி சைவம்,

வைஷ்ணவம் என்று ஒன்றைத் தாழ்த்தி இன்னொன்றை உயர்த்திச் சொல்கிற மதங்கள் வந்துவிட்ட நிலையில், அத்வைதிகளின் ஸ்மார்த்த மதம்தான் எல்லாவற்றையும் ஒத்துக்கொள்கிற பூர்ண வேதமாக ஆகிவிட்டது. அதனால்தான் ஸ்ரீ ஹர்ஷர் 'வேதமதம்' என்று போடுவதற்குப் பதில் 'அத்வைதம்' என்றே போட்டு விட்டார்!

ஒரு பக்கத்தில் அத்வைதிகள் சைவர்கள் என்ற தப்பபிப்பிராயம் வந்து கொண்டிருந்தாலும், பிற்கால ஆசார்யர்கள் அத்வைதத்துக்கு மாறான ஸித்தாந்தங்களை ஏற்படுத்திய நாளாக அத்வைதந்தான் பூர்ணமான வேதமதம் என்கிற ஒரு அபிப்பிராயமும் இருந்திருக்கிறது. அத்வைதிகளுக்கே ஸ்மார்த்தர் என்ற பொதுவான ஆதிப் பெயர் நீடித்து வந்திருப்பது இதற்கு ஒரு அத்தாட்சிதான்.

ஸ்மார்த்தர் என்ற வார்த்தைக்கு 'அத்வைத ஸித்தாந்தத்தை மேற்கொண்டவர்' என்றோ, 'சங்கரரை அநுஸரிப்பவர்' என்றோ root meaning இல்லை.; அர்த்தமில்லை. பூர்ண வைதிகமான தர்மசாஸ்திர ஸ்மிருதிகளைப் பின்பற்றுபவர் என்றுதான் அர்த்தம். இதே மாதிரி சர்மா, சாஸ்திரி முதலான பொதுப்பேர்களும் முக்கியமாக ஸ்மார்த்தர்களுக்குத்தான் நீடித்திருக்கிறது. ஆசார்யாள் தோன்றுவதற்கு ரொம்பவும் பூர்வ காலத்திய சாஸ்திரங்களிலிருந்தும் 'சர்மா' என்பதே பிராம்மணனுக்குரிய ஜாதிப் பெயர் என்று தெரிகிறது. பிராம்மணனை 'சர்மா' என்றும், க்ஷத்ரியனை 'வர்மா' என்றும் சொல்வது பிராசீனமான வேதமத வழக்கு. ரவிவர்மா என்று சைத்ரிகர் இருந்தார் என்றால் அவர்

க்ஷத்ரியர் என்று அர்த்தம். இப்போதும் ஒரு பிராம்மணப் பிள்ளைக்கு உபநயனம் ஆனால், தனது வேதசாகையையும், ஸூத்திரத்தையும், கோத்திரத்தையும் சொல்லி அவன் நமஸ்காரம் பண்ணும்போது, "என்ன சர்மன்?" என்று கேட்கிறோம். "இன்ன சர்மன்" என்றே அவன் பெயரைச் சொல்கிறான். ஐயங்கார், மாத்வர் எல்லோருக்கும் இப்படித்தான். ஆனாலும் எப்போதும் தன் பேரின் பின்னாடி ஜாதிப் பெயராக சர்மா போட்டுக் கொள்கிறவன் பெரும்பாலும் அத்வைதிதான். இது, இவன்தான் பூர்ணமாக வேத மதஸ்தன் என்று காட்டுகிறது.

'சாஸ்திரி' என்றால் 'சாஸ்திரத்தை அநுசரிப்பவன்'. சாஸ்திரம் என்றால் வேத - தர்ம சாஸ்திரங்கள்தான். இந்தப் பெயரையும் அத்வைதியான ஸ்மார்த்தந்தான் போட்டுக்கொள்கிறான்.

விதிவிலக்காக, அபூர்வமாக ஒரு மத்வரோ, வைஷ்ணவரோ சர்மா என்று போட்டுக் கொள்ளலாம். ஆனால் D.S. சர்மா, ரைட் ஆனரபிள் சாஸ்திரி என்கிற மாதிரி பேரைச் சொன்னாலே அவர்கள் ஸ்மார்த்தர்கள்தான் என்று எடுத்துக்கொள்கிறோம்.

ஒருத்தர் ராமாநுஜ ஸித்தாந்தத்தைச் சேர்ந்தவர், அல்லது மத்வ ஸித்தாந்தத்தைச் சேர்ந்தவர், அல்லது தமிழ் தேசத்திலுள்ள சைவ ஸித்தாந்த மடங்களுக்கு மூல புருஷராக இருக்கப்பட்ட மெய்க்கண்டாரைச் சேர்ந்தவர் என்றால், அது ஒருத்தருடைய பிறப்பையும், இந்த வழிகளில் ஒன்றில் அவருக்கு இருக்கிற நம்பிக்கையையும் மட்டும் குறித்த விஷயமல்ல. ஐயங்காருக்குப்

பிள்ளையாகப் பிறந்தவன், ராவ்ஜியின் புத்திரன், சைவ மடாலயத்தைச் சேர்ந்த குடும்பத்தில் பிறந்தவன் என்பதால் மட்டும் ஒருத்தன் அந்த சம்பிரதாயத்தை அநுசரித்தவனாக ஆகிவிடமாட்டான். அந்தக் கொள்கையை மனமார ஏற்றுக் கொண்டு நம்புகிறேன் என்றாலும் அந்த சம்பிரதாயக்காரனாக ஆகிவிடமாட்டான். இப்படி நான் சொல்லவில்லை. அந்த சம்பிரதாயங்களைச் சேர்ந்த ஆசார்ய புருஷர்களே சொல்லுவார்கள். "ஐயங்காராகப் பிறந்தால் மட்டும் போதாது; விசிஷ்டாத்வைதத்தை நம்பினால் மட்டும் போதாது; அப்படி பிறந்த ஒருத்தன் உடம்பிலே சங்க சக்ரங்களை முத்ராதாரணம் பண்ணிக் கொள்ள வேண்டும். மஹாவிஷ்ணுக்குரிய மந்திரத்தை உபதேசம் செய்து கொள்ள வேண்டும். இப்படி 'ஸமாச்ரயணம்' செய்து கொண்டால்தான் ஒருத்தன் விசிஷ்டாத்வைதி ஆகிறான்" என்று வைஷ்ணவ ஆசார்யர்கள் சொல்வார்கள். வைஷ்ணவ சம்பிரதாயத்தில் இப்படி ஒரு முறை ஸமாச்ரயணம் செய்து கொண்டால் போதும். மத்வ ஸித்தாந்தப்படியோ தங்கள் ஆசார்யரைப் பார்க்கிற போதெல்லாம், பஞ்ச முத்ராதாரணம் பண்ணிக் கொள்ளவேண்டும். இவர்களுக்கும் மந்திர உபதேசம் உண்டு. சைவ சித்தாந்தப்படி சூல – இடபக்குரிகளை முத்ராதாரணம் செய்து கொள்வது 'கம்பல்ஸரி' இல்லாவிட்டாலும், பஞ்சாக்ஷர உபதேசம் நிச்சயம் பெற்றாக வேண்டும். தீக்கை" என்று இதைச் சொல்வார்கள். "தீக்ஷை" என்பதன் திரிபே அது. இதர ஸம்பிரதாயத்திலும் இப்படி ஏதாவது ஒரு ஸம்ஸ்காரம் செய்யப்பட்டால்தான் ஒருவன் அதைச் சேர்ந்தவனாகக் கருதப்படுவான். பிறப்பும், நம்பிக்கையும் மட்டும்

ஒருத்தனை வைஷ்ணவனாகவோ, மாத்வனாகவோ, சைவனாகவோ ஆக்கிவிடாது. அதற்கென்று ஒரு ஸம்ஸ்காரம் செய்து கொண்டாக வேண்டும். இது அந்தந்த ஆசார்யர்களே சொல்வது.

அப்படியானால், நாமம் போட்டுக் கொள்பவர்களிலும், விபூதி இட்டுக் கொள்பவர்களிலும், ஸமாச்ரயணம், முத்ராதாரணம், தீக்ஷை முதலியன பெறாதவர்களாகப் பல பேர் இருக்கிறார்களே, இவர்களை என்ன சம்பிரதாயத்துக்காரர் என்று சொல்வது?

இவர்கள் எல்லாரும் ஸ்மார்த்தர்கள்தான். இது ரொம்பப் பேருக்கு தெரியாத விஷயம்.

இப்போது ஒருவன் ஹிந்துவாக இருக்கிறான். அவன் கிறிஸ்துவ மதத்துக்கு மாறுகிறான். எப்படி மாறுகிறான்? அந்த மதத்துப் பாதிரி ஞான ஸ்நானம் (Baptism) என்று பண்ணி வைக்கிறார். அது பண்ணப்பட்டால்தான் இவன் கிறிஸ்துவனாகக் கருதப்படுவான். இல்லாவிட்டால் ஹிந்து தானே?

இப்படியே சிவ தீக்கை அல்லது ஸமாச்ரயணம் அல்லது முத்ராதாரணம் செய்யப்பட்டால்தான் ஒருத்தன் சைவ ஸித்தாந்தியாகவோ ஸ்ரீ வைஷ்ணவனாகவோ மாத்வனாகவோ ஆகிறான்.

கிறிஸ்துவ மதத்துக்கு போகிறவன் நம் வேத சாஸ்திரங்களை விட்டுவிட்டுப் போகிறான். அத்வைதம் தவிர மற்ற ஸித்தாந்தங்களுக்குப் போகிறவன், வேத சாஸ்திரங்களையும் வைத்துக் கொண்டே அந்த

ஸித்தாந்தத்துக்குப் போகிறான். இந்த ஸம்பிரதாயத்து ஆசார்யர்களும் வேதங்களையும் ஸ்மிருதிகளையும் பிரமாணமாக ஒப்புக்கொண்டவர்கள்தாம். ஆனாலும் அவற்றுக்கும் அதிகமாகச் சில சடங்குகளைப் பண்ணச் சொல்கிறார்கள். அதைப் பண்ணினால்தான் ஒருத்தன் வைஷ்ணவனாகவோ, சைவனாகவோ, மாத்வனாகவோ ஆனதாக அர்த்தம்.

அல்லாது போனால் அவன் ஸ்மார்த்தந்தான்; அதாவது சங்கர பகவத் பாதாளைச் சேர்ந்தவன்தான் என்று சொல்லிவிடலாம். இபபடிச் சொல்லி நான் ஏகப்பட்ட பேரை என் சம்பிரதாயத்துக்கு வளைத்துக் கொள்கிறேனா என்ன? அத்வைதி என்பவனுக்கு ஏதாவது புது ஸம்ஸ்காரம் பண்ண வேண்டும் என்று ஆசார்யாள் சொல்லியிருந்தால் நான் சொல்வது தப்புதான். ஆனால் ஆசார்யாள் அப்படிச் சொல்லவே இல்லை. அத்வைதி என்று ஒரு மதஸ்தனை அவர் பிரிக்கவே இல்லை. அநாதிகாலமாக வந்த ஸ்மார்த்த ஸம்பிரதாயத்தவராகவேதான், பூர்ண வைதிக மதஸ்தராகவேதான் தம்மை அநுஸரிப்பவர்களை வைத்து விட்டார். அத்வைதிக்குத் தனி ஸம்ஸ்காரம் எதுவும் வைக்கவில்லை. ஆகையால் வேறாகப் புது ஸம்ஸ்காரமாகாத எல்லோரும் அவரைச் சேர்ந்தவர்கள்தான்.

வேதத்தில் இந்த தீக்ஷை, முத்ராதாரணம், ஸமாச்ரயணம் எதுவும் சொல்லியிருக்கவில்லை. நேராக வேதத்தில் அதிகாரம் உள்ள மூன்று வர்ணங்களுக்கு, அந்த அதிகாரத்தைப் பெறுமுன்னர் உபநயனம் பண்ணி காயத்ரி உபதேசம் பண்ணவேண்டும் என்றுதான்

சொல்லியிருக்கிறது. பிரம்ம - க்ஷத்ர - வைச்யர்களுக்கு உபநயனந்தான் சொல்லியிருக்கிறது. நாலாவது வர்ணத்துக்கு அதுவும் இல்லை. அதுவும் இல்லாமலே அவனை வேத மதஸ்தனாக ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆசார்யாளும் இதே வழிமுறையைத்தான் வைத்துக்கொண்டார். புதிதாக எந்த ஸம்ஸ்காரத்தையும் சொல்லவில்லை.

புதிதாக நமக்கென்று ஒன்றும் இல்லையே என்று ஸ்மார்த்தர்கள் குறைப்பட்டுக் கொள்ளவே கூடாது. வேதத்தில் எது சொல்லியிருக்கிறதோ அது நமக்குப் போதும். ராமசந்திரமூர்த்தியும், க்ருஷ்ண பரமாத்மாவும் முத்ராதாரணம், ஸமாச்ரயணம் பண்ணிக் கொண்டதாகவோ, சிவ தீக்ஷை எடுத்துக் கொண்டதாகவோ ராமாயண, பாகவதாதிகளில் சொல்லியிருக்கிறதோ? இல்லை. அவர்கள் அவதார புருஷர்களானதால் அவர்களுக்கு இவை இல்லை என்று அந்த ஸித்தாந்திகள் சொன்னால், அது வாதத்துக்கு சரியாக வராது. ஏனென்றால் ராமாயணத்திலே ராமர் தம்பிகளோடு கூட வேதாத்யயனம் பண்ணினார் என்று சொல்லியிருக்கிறது1. உபநயனமானால்தான் அத்யயனம் பண்ண முடியும். அதனால் அவருக்கு உபநயனம் ஆனது தெரிகிறது. இப்படியே பாகவதத்திலும் கிருஷ்ண வஸுதேவரும் தேவகியும் காராக்ருஹத்திலிருந்து விடுதலையாகி வந்தவுடன் உபநயனம் பண்ணினார்கள் என்று சொல்லியிருக்கிறது2. அப்புறம் கிருஷ்ணர் ஸாதாரணப் பசங்களைப் போலவே, ஸாந்தீபனி என்ற பிராம்மணரிடம் குருகுலவாஸம் பண்ணி, வேதத்தை அத்யயனம்

பன்ணினதாக இருக்கிறது. அவதார புருஷர்களுக்கு இதெல்லாம் மட்டும் என்னத்துக்கு? நினைத்த மாத்திரத்தில் அவர்களே சகல வேத சாஸ்திரங்களையும் தெரிந்துகொள்ள முடியாதா? ராமர் விசுவாமித்ரரிடமிருந்து எதற்காக அஸ்திர சஸ்திர அப்யாஸம், பலை, அதிபலை மந்திரங்கள் முதலானதுகளைக் கற்க வேண்டும்? ஆகையால் மநுஷ்யர்கள் எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிருப்பதற்கு வழிகாட்டியாகத்தான் அவர்கள் உபநயனம் செய்து கொண்டு, அத்யயனம் பண்ணினார்கள் என்று அர்த்தமாகிறது. அவர்கள் பண்ணினதே நமக்குப் போதும். வேதத்திலும், அதை அநுசரித்து மஹரிஷிகள் செய்த ஸ்மிருதிகளிலும் இருப்பதற்கு அதிகமாக நமக்கு எதுவும் வேண்டியதில்லை என்று ஸ்ரீ பகவத்பாதாள் வைத்து விட்டார்.

மற்ற ஸம்பிரதாய ஆசார்யர்கள் வேத, சாஸ்திரங்களை ஒப்புக்கொண்டே அதிகப்படி ஸம்ஸ்காரங்களை வைத்தாலும், அவர்கள் கொள்கை காரணமாக, சிவ – விஷ்ணு பேதமின்றி வேத சாஸ்திரங்கள் விதித்திருக்கிற அநேக விஷயங்களை அவர்களுடைய ஸம்பிரதாயக்காரர்கள் விடும்படி இருக்கிறது. ஆகவே புதிதாகச் சிலது சேர்ந்தாலும், பழசான சிலது விட்டுப் போகிறது. நமக்கு இரண்டும் இல்லை என்று திருப்தியாக இருக்கலாம். 'அநாதியான சாஸ்திரத்துக்கு அதிகமாக எதுவும் சேர்க்காதே! அதில் இருப்பதை ஒன்றைக்கூட விட்டும் விடாதே!' என்று நம் ஆசார்யாள் வைத்துவிட்டார். இருந்ததையேதான், புதிதாக நடுவில் வந்த தோஷங்களை அகற்றிவிட்டு, பழைய மூல ரூபப்படி சுத்தமாக்கி

வைத்தார்.<>புதிதாக ஒன்றைச் சொல்ல வரவில்லை; உள்ளதை சரிப்படுத்தித் தரத்தான் அவர் வந்தார் என்பது ஒரு புராண வாக்கிலிருந்தும் தெரிகிறது.

ஆசார்யாளைப் பரமேச்வர அவதாரமாகச் சொல்கிற புராணங்கள், இதிஹாஸங்கள் பல இருக்கின்றன. அவற்றில் "கூர்ம புராண"த்தில், கலியின் கோலாஹலம் முற்றிய சமயத்தில், ஈச்வரன் தானே அவதாரம் பண்ணி அதர்மப் பிரவாஹத்தை அடக்கப் போகிறான் என்று சொல்கிற இடத்தில்,

கரிஷ்ய(தி) அவதாரம் ஸ்வம் சங்கரோ நீல லோஹித: |

ச்ரௌத ஸ்மார்த்த ப்ரதிஷ்டார்த்தம் பக்தானாம் ஹித காம்யயா ||

என்று ச்லோகம் வருகிறது. "ச்ரௌத" என்றால் "ச்ருதி" என்னும் வேதத்தை அநுசரித்தது என்று அர்த்தம். "ஸ்மார்த்த" என்றால் அந்த வேதத்தையே ஸ்மரித்து நினைவுக் குறிப்பாகக் கொண்டு ரிஷிகள் செய்த தர்மசாஸ்திரம். இந்த வேத..தர்ம சாஸ்திரத்தைப் பிரதிஷ்டை செய்வதற்காகவே ("ச்ரௌத ஸ்மார்த்த ப்ரதிஷ்டார்த்தம்") பக்தர்களுக்கு நல்லது செய்கிற ஆசையினால் ("பக்தானாம் ஹித காம்யயா") நீலகண்டனான சங்கரன் தானே அவதரிக்கிறான் ("கரிஷ்யத்வதாரம் ஸ்வம் சங்கரோ நீல லோஹித:") என்று கூர்மபுராண வாக்கு இருக்கிறது. அத்வைதத்தைப் பிரதிஷ்டை பண்ணினார்; ஷண்மதப் பிரதிஷ்டை பண்ணினார் என்றெல்லாம் (இப்போது நாம் ஆசார்யாள் என்ற மாத்திரத்தில் எவற்றை முக்கியமாக

நினைக்கிறோமோ அந்த இரண்டையும்) சொல்லாமல், ச்ரௌத ஸ்மார்த்த பிரதிஷ்டையையே இங்கே சொல்லியிருப்பது விசேஷமானது. இப்படியேதான் ஆசார்ய வந்தனமாக இருக்கப்பட்ட ச்லோகத்திலும்,

ச்ருதி-ஸ்மிருதி-புராணானாம் ஆலயம் கருணாலயம் ।

நமாமி பகவத்பாத சங்கரம் லோக சங்கரம் ॥

என்றுதான் வருகிறது. இங்கேயும் அத்வைதம், ஷண்மதம் இவற்றைப் பற்றிச் சொல்லவில்லை. ஆனால் ஆசார்யாள் வேதத்துக்கும் (ச்ருதி), தர்ம சாஸ்திரங்களுக்கும் (ஸ்மிருதி), புராணங்களுக்கும் உறைவிடமானவர் என்று சொல்லியிருக்கிறது. வேதத்தில் சொன்னதை விதிகளாகச் சட்டம் மாதிரிப் போட்டுக் கொடுப்பது ஸ்மிருதி என்றால், இவற்றையே கதைகளாக மனஸில் ஏற்றுவதுதான் புராணங்களின் லக்ஷ்யம். அப்படிப்பட்ட வேதம், ஸ்மிருதி, புராணம் மூன்றுக்கும் ஆலயமாக இருப்பவர் ஆசார்யாள் என்று சொல்லியிருக்கிறது.

வேத மதம், ஸ்மார்த்த ஸம்பிரதாயம் என்று சொல்லிவிட்டாலே போதும். அதுதான் ஜீவபிரம்ம அபேதத்தைச் சொல்லும் அத்வைதம்; இந்த அத்வைதத்திலேயே ஒரு அங்கமாக வருவதுதான் ஸகல தேவதைகளுக்கிடையும் அபேதத்தைச் சொல்லும் ஷண்மதக் கருத்து என்பதால்தான், இந்த ச்லோகத்திலும், கூர்ம புராணத்திலும் தனியாக அத்வைதம் பற்றியும் ஷண்மதம் பற்றியும் சொல்லவில்லை என்று தோன்றுகிறது. அத்வைதத்தில் ஷண்மதம் அங்கம்தான். அத்வைதத்தைச் சொன்னால் ஷண்மதத்தைத் தனியாகச்

சொல்லக்கூட வேண்டாம்.ஏனென்றால் ஜிவனும் பிரம்மமுமே ஒன்றுதான் என்கிறபோது, ஷண்மத ஏற்பாட்டின் தாத்பர்யமான சகல தெய்வங்களும் ஒன்றுதான் என்பதும் அதிலேயே உட்கட்டை(implied) தானே? ஷண்மதம் எப்படி அத்வைதத்தில் அங்கமோ, அப்படியே அத்வைதம் ஸ்மார்த்தத்தில், வைதிகத்தில் அடக்கம்தான். வேதத்தில் சகல தத்வங்களுக்கும் உச்சாணியில் அத்வைதத்தைத்தான் வைத்திருக்கிறது. சகல தெய்வங்களயும் ஒரே பரமாத்மாவாக ஆராதிப்பதுதான் வேதத்தில் நாம் பார்ப்பது. ஆகவேதான் ஷண்மதம், அத்வைதம் எல்லாமே வைதிகத்தை, ஸ்மார்த்த ஸம்பிரதாயத்தைப் பூரணமாக அநுசரிப்பதன்றி வேறில்லை. அநுசரிப்பதென்ன? அதுவேதான் இது. வைதிக மதம் என்றாலே அத்வைதிகளின் சம்பிரதாயந்தான். அத்வைதம் என்றாலே வைதிகம்தான், ஸ்ரீஹர்ஷன் இப்படித்தானே நைஷதத்தில் 'வேதம்' என்று சொல்ல வேண்டிய இடத்தில் 'அத்வைதம்' என்று சொல்லியிருக்கிறான்?

ஆகையால் த்வைதம், விசிஷ்டாத்வைதம், சைவ ஸித்தாந்தம் முதலிய சம்பிரதாயங்களுக்கென்று தனியாக ஏற்பட்ட ஸம்ஸ்காரத்தைச் செய்துகொள்ளாத எல்லாரும் ஸ்ரீ சங்கர பகவத் பாதர்களைச் சேர்ந்தவர்கள்தான். வேறு சம்பிரதாயத்துக்குப் போய்விட்டாலும் கூட, அவர்கள் ஆசார்யாளை விட்டு விட்டாலும், ஆசார்யாள் அவர்களை விட்டுவிட்டதாக ஆகாது. அந்த ஸித்தாந்தங்களையும் ஒவ்வொரு லெவலில் ஒப்புக்கொள்வதுதான் ஆசார்யாளின் ஸித்தாந்தம். ஆசாரியாளின் பரமகுருவான (அதாவது

குருவுக்கு குருவான) கௌடபாதர், 'மாண்டூக்ய உபநிஷத் காரிகை' என்று செய்திருக்கிறார். 'காரிகை' என்றால் பாஷ்யத்தில் ஒருவகை... தமிழில்கூட "யாப்பருங்கலம்" என்று ஒரு புஸ்தகம் உண்டு; அதற்கு விளக்கமாக எழுதப்பட்ட ஒரு புஸ்தகத்துக்கு "யாப்பருங்கலக் காரிகை" என்று பெயர் வைத்திருக்கிறது...மாண்டூக்ய காரிகையில் ஒரு இடத்தில் கௌடபாதர், "பல ஸித்தாந்தங்கள் ஒன்றுக்கொன்று வித்யாஸப்பட்டு பரஸ்பரம் விரோதித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் நம்முடைய அத்வைதமானது அவற்றில் எதனிடமும் விரோதபாவம் பாராட்டவே இல்லை" என்று சொல்லியிருக்கிறார்:

பரஸ்பரம் விருத்யந்தே தைரயம் ந விருத்யதே ।

இந்த விரோதமில்லாத மனோபாவம், ஐக்ய உணர்ச்சி, ஸமரஸம்தான் நமக்கு ஆசார்யாள் தந்திருக்கிற வழி. இதை நாம் எந்நாளும் பின்பற்றி வரவேண்டும். வேதமும், ஸ்மிருதிகளும் அப்புறம் ஆசார்யாளும் வகுத்துக் கொடுத்த மாதிரி காரியங்களிலும், அந்தக் காரியங்களுக்கு ஏற்ற ஆசாரங்களிலும் நாம் பிரிந்திருந்தாலும், மனஸால் மட்டும் ஒருத்தருக்கொருத்தர் கொஞ்சம்கூட பிரிந்திராமல், எல்லாரும் ஆசார்யாளின் குழந்தைகளாகவே அன்போடு ஒன்று சேர்ந்திருக்க வேண்டும். இந்த அநுக்கிரஹத்தையும் பண்ணும்படி ஆசார்யாளையே பிரார்த்தனை பண்ணுவோம்.

* "உலகம் எப்படிப் பொய்?" என்ற உரையில் காண்க.

1. வைதிகாத்யயனே ரதா: (ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் பாலகாண்டம்..பதினெட்டாவது ஸர்கம்)

2. அத சூரஸூதோ ராஜன் புத்ரயோ ஸமகாரயத்| புரோதஸா ப்ராஹ்மணைச்ச யதாவத் த்விஜஸம்ஸ்க்ருதிம் (ஸ்ரீமத் பாகவதம் – 10வது ஸ்கந்தம் – 45வது ஸர்கம்)

அத்வைதமோ த்வைதமோ? அதுவும் பராசக்தி வசமே!

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

அத்வைதம்

அத்வைதமோ த்வைதமோ ? -- அதுவும் பராசக்தி வசமே !

ஜலத்துக்கு நிறைவு சமுத்திரம். டம்பளரில், செம்பில், குடத்தில், அண்டாவில், கிணற்றில், குளத்தில், நதியில் என்று ஒன்றைவிட ஒன்று ஜாஸ்தியாக இருக்கிற ஜலம் கடைசியில் சமுத்திரம் என்று முடிகிறது. இப்படியே ஞானத்துக்கும் கிருபைக்கும் நிறைவான சமுத்திரம் பராசக்தி. நமக்குக் கொஞ்சம் அறிவு, கொஞ்சம் அன்பு இருக்கிறது. பிராணிகளுக்கு நம்மைவிடக் குறைவு. நம்மை விட ஜாஸ்தி அறிவுள்ள, ஜாஸ்தி கிருபா சக்தி உள்ள தேவ ஜாதிகள் இருக்கின்றன. நம்மிலேயே மஹான்களானவர்கள் மகா ஞானிகளாக, பரம காருண்யத்தோடு இருக்கிறார்கள். இந்த ஞானம், கிருபை பூரணமாக நிறைந்த இடத்தைத்தான் ஸ்வாமி, பரமாத்மா, பராசக்தி என்று சொல்வது.

எல்லாவற்றையும் அறிகிற ஞானம் அது; அறிகிறது மட்டுமில்லை, அறியப்படுகிற எல்லாமுமே அதுதான். அதற்கு வேறாக இன்னொன்று இருந்து, அதை இது அறிகிறது என்றில்லை. அப்படி இன்னொன்று இருப்பதற்கு

இடம் இருந்து விட்டால், இது எங்கும் நிறைந்த பூரணம் ஆகாது. இன்னொன்று துளித்துளி இருந்து விட்டால் கூடச் சரி, இதற்குக் குறைதான் – இது அந்தத் துளியில் இல்லாததால் இது பூரணமில்லை; நிறைந்த ஒரே நிறைவில்லை என்றுதானே அர்த்தம்? இதனால் என்ன முடிவாகிறது என்றால், பரமாத்மாவைத் தவிர அறியப்படுகிற வஸ்து என்று இரண்டாவது பதார்த்தமே கிடையாது என்பதுதான்.

அப்படியானால் இத்தனை ஜீவாத்மாக்கள் வேறு வேறாக இருப்பத்தாக நினைத்துக் கொண்டிருக்கிறோமே இது என்ன? இது ஒரு பெரிய வேஷம்தான், மாயா நாடகம்தான். வேஷம் கலைந்து விட்டால், நிறைந்த நிறைவான ஒன்றே ஒன்றுதான். அதுவே அறிவாக நிற்கும். 'சித்தமிசை குடி கொண்ட அறிவான தெய்வமே' என்று தாயுமான ஸ்வாமிகள் சொல்கிற அறிவு ! அது பூரணமானதால், அதனால் அறியப்பட வேண்டிய வஸ்து என்று வேறு எதுவுமே இல்லை. தன்னையே அறிந்து கொண்டிருக்கிற அறிவு அது.

இப்படி இரண்டாவதாக வேறே இல்லாமல் ஜீவாத்மாவை அந்தப் பரமாத்ம சமுத்திரத்தில் கொண்டு போய்க் கரைப்பதுதான் வாஸ்தவமான நிறைவு. இன்னொன்று என்று கொஞ்சம் இருந்தாலும் அதற்குக் குறைவுதானே? இன்னொன்றாக வேஷம் போட்டுக் கொண்டிருப்பதும் அதுதான். "இதம் ஸர்வம் புருஷ ஏவ" என்று வேதம் சொல்கிறது 1. இப்படி வாஸ்தவமாக நிறைவதுதான் அத்வைதம், அத்வைதம் என்பது.

ஜீவாத்மாவானவன் அத்வைதமாக, பூரணமாக, நிறைந்த நிறைவாக ஆகிவிடுவதைப் பற்றி உபநிஷத்துக்கள் சொல்கின்றன. உபநிஷத்துக்கள் சொல்வதை ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யாள் பல தினுசான பிரமாணங்களோடு தம்முடைய அநுபவத்தை சேர்த்து, லோகமெல்லாம் கொண்டாடுகிற சாஸ்திரமாக அநுக்கிரஹம் செய்திருக்கிறார். இதை புத்தி ஆராய்ச்சியால் (intellectual-ஆக) அலசிப் பார்த்தலும் ஒப்புக் கொண்டே ஆகவேண்டும் என்று தெரிகிறது. ஸயன்ஸிலும் இப்போது 'வேறு வேறு எலிமென்ட்ஸ் இல்லை. எல்லாம் ஒரே எனர்ஜி. மாட்டரும் எனர்ஜியும் கூட வேறு இல்லை' என்று அத்வைதத்தில் கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள். எல்லாம் சரி, ஒன்றுதான் இருக்க முடியும் என்பது intellectual-ஆக தீர்மானமாகித்தான் விட்டது. ஆனால் – இது ரொம்பப் பெரிய 'ஆனால்' - காரியத்தில் துளிக்கூடத் தெரியவில்லையே! இத்தனை வித்தியாஸங்கள் லோகத்தில் பிரத்தியக்ஷமாகத் தெரிந்துகொண்டுதானே இருக்கின்றன? ஒன்றுக்கொன்று இருக்கிற வித்தியாஸங்களைப் பாராட்டினால்தானே வாழ்க்கையே நடக்கிறது? ஒவ்வொரு காரியத்திலும் ஒன்றைச் சேர்க்க வேண்டும், இன்னொன்றை தள்ள வேண்டும் என்றுதானே இருக்கிறது? 'வித்தியாஸமே இல்லை; எல்லாம் ஒன்று' என்று சொல்லிக் கொண்டு, சேர்க்கக் கூடாததை சேர்த்தால் காரியமே கெட்டல்லவா போகிறது?

இதனால் என்ன தெரிகிறது? காரியம் என்று இருக்கிற வரையில் 'அத்வைதம் அத்வைதம் என்று சொல்லிப் பிரயோஜனமில்லை என்றுதான் தெரிகிறது! "காரியம்

இருக்கிற வரையில் வித்தியாஸம் பார்த்துத்தான் ஆகவேண்டும்; காரியமேயில்லாத நிலையில் எல்லாம் ஒன்றாகவே பிரகாசிக்கும். காரியத்தில் வித்தியாஸம் பார்க்கும்போதுகூட, மனசுக்குள் எல்லாம் ஒன்று என்ற பாவத்தை வைத்துக் கொள்ளு. 'ஸாரத்தில் எல்லாம் ஒன்றே; அந்த ஒன்றுதான் நாமும்! அதனால் நாம்தான் எல்லாமும்' என்று எல்லாவற்றையும் ஆத்ம ஸ்வரூபமாகப் பார். அதாவது மற்ற வித்தியாஸங்களைப் பாராட்டினாலும் எல்லாவற்றிடமும் அன்பில் மட்டும் கொஞ்சங்கூட வித்தியாஸமில்லாமல், சகல ஜீவராசிகளிடமும் ஒரே மாதிரி அன்போடு பிரேம ஸ்வரூபமாக இருந்து கொண்டிரு" என்றுதான் ஞானிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆகக்கூடி காரியத்தில் அத்வைதம் இல்லை என்றாகிறது.

காரியம் என்றால், நினைப்பது கூடக் காரியம்தான். நினைப்பது மனசின் காரியம். மனசு ஒரு க்ஷணங்கூட நிற்காமல் எதையாவது நினைத்துக் கொண்டே இருக்கிறது. இது நடக்கிறவரை காரியம் தான், அத்வைதம் இல்லை. 'நினைக்கிறது' என்றால், 'நினைக்கப்படுகிற வஸ்து', 'நினைக்கிற வஸ்து' என்று இரண்டு வித்தியாஸமான வஸ்துக்கள் இருக்கத்தானே செய்கின்றன? இது த்வைதம் தானே? நினைப்பே போய்விட வேன்டும்; மனசு அப்படியே நின்று விட வேண்டும்; அப்படி ஆனால்தான் அத்வைதம் அநுபவமாக ஸித்திக்கும்.

சரி, ஆனால் மனசு நிற்கமாட்டேன் என்கிறதே! என்ன பிரம்மப் பிரயத்தனம் பண்ணினாலும் அதுபாட்டுக்கு ஓடிக் கொண்டிருக்கிறதே! அது ஏகப்பட்ட

வித்தியாஸங்களைத்தானே பார்த்துக் கொண்டிருக்கிறது? வெளிக்காரியத்தை நிறுத்திவிடுவது, மனஸின் காரியத்தையும் நிறுத்திவிடுவது, நிறுத்தாவிட்டால் கூட பிரேம ஸ்வரூபமாகி விடுவது என்றால் இதெல்லாம் நடைமுறையில் (practical-ஆக) கொஞ்சங்கூடச் சாத்தியமில்லாமல் இருக்கிறதே? என்ன பண்ணலாம்?

என்ன பண்ணுவது? எது சாத்தியமோ அதைத்தானே பண்ணமுடியும்? அத்வைதம்தான் பரம தாத்பரியமாக இருக்க முடியும் என்று புத்தியால் ஒத்துக் கொண்டது அப்படியே இருக்கட்டும். அந்த நினைப்பே (conviction-ஏ) உள்ளுக்குள்ளே கொஞ்சம் இருந்து கொண்டிருந்தால், இத்தனை காரியம், இத்தனை ஓயாத எண்ணத்துக்கும் நடுவிலே ஏதோ லவலேசம் ஒரு தெளிவு, சாந்தம் இருக்கும்.

ஆனால் இந்த அல்ப சாந்தி திருப்தி தரமாட்டேன் என்கிறதே! 'நமக்கு நிறைவில்லாமல் இருக்கிறதே! நிறைந்து விட வேண்டும்' என்று தாபமாகவும் இருக்கிறது! ஆனால் மனஸையும், காரியத்தையுமோ விடமுடியவில்லையே! அன்புருவாகவும் முடியவில்லை! இப்படி இரண்டுங்கெட்டானாகத்தான் நம்மில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் இருக்கிறோம். இப்போது என்ன பண்ணலாம்? ஒன்றுமே பண்ணாமலிருக்கிற அத்வைதம் அநுபவமாகிற வரைக்கும் ஏதாவது பண்ணத்தானே வேஎண்டும்?

அதனால் மனஸினால் எது சாத்தியமோ அதையே பண்ணலாம். இப்போது லோகம் என்று வேறாகத்தானே

ஒன்று தெரிகிறது? அதிலே இருக்கிற பெரிய ஒழுங்கைப் (Order)ப் பார்க்கிறபோது, இதை எல்லாம் ஒரு பேரறிவுதான் உண்டாக்கி, நடத்திவருகிறது என்று தெரிகிறது. உண்டாக்குவது, நடத்துவது எல்லாம் மாயை என்ற சமாசாரம் இப்போது நமக்கு வேண்டாம். அதைச் சொல்லி கொண்டிருப்பதால், நமக்குத்தான் ஒரு பிரயோஜனமும் இல்லையே! 'லோகத்தை நடத்துகிற ஒரு மஹாசக்தி இருக்கிறது; நமக்கு வேறாக இருக்கிறது; நாம் அற்பசக்தர்; அது மஹாசக்தி; நாம் சிற்றறிவு படைத்த கிஞ்சித்ஞர்; அது பேரறிவான ஸர்வக்ஞ சக்தி', என்றே வைத்துக் கொள்வோம். 'வைத்துக் கொள்வது' என்ன? நாம் இருக்கிற நிலையில் இப்படித்தானே ஸ்பஷ்டமாகத் தெரிகிறது? இப்போது அந்தப் பேரறிவைத் தவிர அறியப்படுகிற வஸ்து இல்லை என்ற அத்வைத ஸமாசாரமெல்லாம் நமக்கு வேண்டாம். அது நமக்கு வேறாக இருந்தாலும் நம்முடைய சகல சமாசாரங்களையும் தெரிந்து கொள்கிறது, நம்முடைய கஷ்டங்கள் எல்லாம் அதற்கு தெரியும் என்ற அளவோடு நிறுத்திக் கொள்வோம். ஈ, எறும்பிலிருந்து யானை வரைக்கும் ஒவ்வொன்றுக்கும் ஒரு விதமான புத்தியைக் கொடுத்து, ஆஹாரத்தைக் கொடுத்து, ரக்ஷித்துக் கொண்டிருக்கிற பராசக்திக்கு சகல ஜீவராசிகளின் கஷ்டமும் தெரியத்தானே வேண்டும்? எல்லாம் தெரிந்து கொண்டிருக்கிற ஞான சமுத்திரமாக மட்டும் அது இல்லை; கிருபா சமுத்திரமாகவும் அது இருக்கிறது. நம் ஒவ்வொருத்தருக்கும் ஒன்றிடம் அன்பு, பிரியம் இருக்கிறதென்றால், இந்த அன்பு அத்தனைக்கும் மூலம் அந்தப் பராசக்தியிடமிருந்து தானே வந்திருக்கிறது? அதனால் அது கிருபா சமுத்திரமாகத்தான் இருந்தாக

வேண்டும். அப்பேர்ப்பட்ட கிருபா சமுத்திரத்திடம், நாம் கஷ்டத்தைச் சொல்லி, குறையைச் சொல்லி, 'ஐயோ! நிறைந்த நிறைவாக இல்லாமல், நான் இப்படி ரொம்பக் குறைந்து நிற்கிறேனே, என்னை நிறைந்து போகும்படி பண்ணு; குறையே இல்லாதபடி பண்ணு' என்று பிரார்த்தித்துக் கொண்டே இருப்போம். இப்படிச் செய்து கொண்டே இருந்தால், அந்தப் பராசக்தி, அல்லது பரமாத்மாவே நமக்கு நிறைவான அத்வைதத்தை அநுக்கிரஹம் பண்ணிவிடும்.

இப்படிப் பிரார்த்திப்பதுகூட இரண்டாம் பட்சம்தான். நம் குறையையெல்லாம் தானாகவே அறிந்திருக்கிற ஞான சமுத்திரமாகவும், நாம் பிரார்த்திக்காமலே நம் குறையைப் போக்கக்கூடிய கருணா ஸமுத்திரமாகவும் இருக்கிற பரமாத்மாவிடம், இப்படி நாம், 'அத்வைதத்தைக் கொடு, ஞானத்தை கொடு, நிறைவைக் கொடு' என்று கூடப் பிரார்த்திக்க வேண்டியதில்லைதான். இப்படியெல்லாம் குறைப்பட்டு அழாமல், சந்தோஷமாக பக்தி பண்ணிக்கொண்டிருந்தாலே போதும். 'நம்மை போல் இப்படி ஓயாமல் சஞ்சலித்துக் கொண்டிருக்காமல், நிச்சலனமக, பரம சாந்தமாக ஒரு பரமாத்மா இருக்கிறார். அவர் கருணா சமுத்ரமாக இருக்கிறார்' என்று நினைத்துக் கொள்ளும்போதே, நமக்கு ஆனந்தமாக இருக்கிறதல்லவா? அதனால், அவரை நினைத்துக்கொண்டு, இப்படி ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தால் போதும்! இந்த ஆனந்தத்தைக் கொடுத்துக் கொண்டு, 'இதைக் கொடு', 'அதைக் கொடு' என்று அழ வேண்டாம். அவரே நமக்கு

எதைக் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்துவிட்டுப் போகிறார்!

இப்போது நமக்கு அவருடைய ஆக்ஞையாக வேதங்கள் போட்டிருக்கிற கடமைகள் இருக்கின்றன. இந்தக் கடமைகளை ஸந்தோஷமாகச் செய்து கொண்டிருப்போம். கடமை எல்லாம் காரியம்தான். காரியம் த்வைதம்தான். அதற்காக அழவேண்டாம். 'இதுவும் ஸ்வாமி ஆக்ஞைதானே?' என்று சந்தோஷமாகச் செய்வோம். மனசு ஒடுங்கமாட்டேன் என்கிறதா? பரவாயில்லை; அதற்காக அழ வேண்டாம். ஆனால் எதையாவது, கண்ட கண்டதுகளை நினைத்துக் கொண்டிருக்காமல், பராசக்தியுடைய கிருபையை நினைத்துக் கொண்டிருப்போம். அவளுடைய எல்லையில்லாத அழகை நினைத்துக் கொண்டிருப்போம். இம்மாதிரி காரணமேயில்லாத பக்தியைப் பண்ணிக்கொண்டு, கடமையை சுத்தமாக நடத்திக் கொண்டிருந்தால் அதுவே மனசுக்கு நிறைவாகத்தான் இருக்கும்.

மனஸே இல்லாமற் போய்விட்ட பெரிய நினைவு – நிறைந்த நிறைவு என்று முடிவான ஒன்று – இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும். அதுதான் நம் கைக்கு வராத வஸ்துவாக இருக்கிறதே! அதை நினைத்து இப்போது ஏன் அழவேண்டும்? ஏற்கனவே இருக்கிற குறைகள் போதாது என்று இந்த அழுகையும் ஒரு குறைதான்! எனவே, நம்மைப் பரமாத்மா இப்போது வைத்திருக்கிற ஸ்திதியிலேயே நமக்கு நிறைவாக, ஆனந்தமாக இருக்கிற வேத கர்மாநுஷ்டானம், பக்தி இவை நமக்குப் போதும். வேதத்தில் சொன்னபடி காரியங்களைப் பண்ணி,

ஈசுவரார்ப்பணம் பண்ணிக்கொண்டு, அவரை அன்போடு நினைத்து, பக்தி பண்ணி ஆனந்தமாக இருந்தோமானால், நமக்குக் குறைப்பட்டுக் கொள்ளவே தோன்றாது.

இப்படி நாம் ஈச்வராக்ஞையாகக் கர்மாக்களைப் பண்ணிக்கொண்டு, அவரிடம் காரணமேயில்லாத பக்தியை .. இது வேண்டும், அதுவேண்டும் என்று அழாமல் ஆனந்தமாகச் செய்கிற பக்தியை .. பூரணமாக வளர்த்துக் கொண்டே போவோம். அப்புறம் அவரே, 'இவனை நமக்கு வேறே மாதிரி தனியாக விட்டுவைத்தது போதும்; நமக்குள்ளேயே கொஞ்சங்கூட பேதமில்லாமல் கரைத்துக் கொண்டு விடுவோம்' என்று கருணை கொண்டு அத்வைத மோக்ஷம் கொடுத்து விடுவார். அது அவருடைய காரியம். அவருடைய காரியம்தான். அதிலே நாம் செய்கிறதற்கு எதுவும் இல்லை. நம்மால் முடியாத காரியத்தில் நாம் உபத்திரவப் படுத்திக்கொண்டு ஒரு பிரயோஜனமும் இல்லை. இப்போது நமக்குத் தெரிவது, நம்மை வேறுமாதிரி விட்டிருக்கிறார் என்பதுதான். இருக்கட்டுமே! அவர் இஷ்டப்பட்டுத்தானே இப்படி விட்டிருக்கிறார்? இப்படி தனித்தனி ஜீவனாக இருக்க வேண்டும் என்று நாமாக உத்தேசம் பண்ணியா இந்த மாதிரி ஆகியிருக்கிறோம்? இல்லை. அவர்தான் தன்னையே நாமெல்லாமாக ஆக்கி, தன்னிடமிருந்தே அவிழ்த்து விட்டாற்போல, இப்படி ஒரு பெரிய நாடகம் போட்டிருக்கிறார். அவர் நமக்கு வேறு மாதிரி நம்மை விட்டிருந்தால், அப்படியேதான் வைத்துக் கொள்வோமே! இந்த ஸ்திதியிலும் நம்மால் முடிகிற காரியம், ஒரே அன்போடு அவரைக் கிருபா சமுத்திரமாக, ஸகல கல்யாண குணநிலயமாக நினைத்து நினைத்து

நினைத்து அதிலேயே உருகி உருகி பக்தி செய்து கொண்டு ஆனந்தமாயிருப்பது. இந்த ஆனந்தம் போதுமே!

ஒரு குணமும், ரூபமும் இல்லாத அத்விதீய நிர்குண ப்ரம்மத்தை மனஸினால் பிடிக்க முடியாது. ஸகுணமான மூர்த்திதான் மனசுக்கு விஷயம். அதனிடம் செலுத்துவதுதான் பக்தி. இது த்வைதம்தான். இருக்கட்டுமே! அணுவுக்குள் அணுவாக இருக்கிறவர், நாம் பக்தி செலுத்துகிற மூர்த்திக்குள் மட்டும் இல்லையா என்ன? அவர் அணுவுக்குள் அணுவாயிருப்பது நமக்கு அநுபவத்தில் ஸித்திக்க வேண்டுமென்றால், அவரே அப்படிப் பண்ணிவிட்டுப் போகட்டும். அவர் ஸர்வ வியாபகர், நீக்கமற நிறைந்தவர் என்றால், நாம் அன்போடு பூஜிக்கிற ரூபத்திலும் இருக்கத்தானே வேண்டும்? அவரே எல்லாமும் என்று நாம் அநுபவித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், இதை அவரே தெரிவித்துவிட்டுப் போகிறார்! தெரிவிக்கிறார், தெரிவிக்காமல் போகிறார், அது அவர் காரியம். அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. நமக்கு இப்போது அவரை பக்தியோடு ஸ்மரித்துக் கொண்டிருக்கிற ஆனந்தமே போதும். இதில் உண்டாகிற நிறைவே போதும்.

அவர் வாஸ்தவத்தில் நிறைந்த நிறைவாக இருக்கட்டும், நிர்குணமாக இருக்கட்டும், அத்வைதமாகத்தான் இருக்கட்டும். அதைப்பற்றி நமக்கு என்ன வந்தது? நம்மால்தான் அதைத் தெரிந்துகொள்ள முடியவில்லையே! வாஸ்தவத்தில் அவர் எப்படியிருந்தாலும், நமக்கு த்வைதமாகத் தெரிகிற இத்தனை அழகு, இத்தனை அன்பு, இத்தனை அறிவு எல்லாமும் அவரிடமிருந்து

வந்திருப்பதால், அவரை அத்தனை ஸௌந்தர்யமும், கருணையும், ஞானமும் உள்ள மூர்த்தியாக வைத்துக் கொண்டு பக்தி செலுத்துவோம். பிறகு அவரே அவருடைய வாஸ்தவ ஸ்வரூபத்தைக் காட்டிவிட்டுப் போகிறார். அவருடைய வாஸ்தவ ஸ்வரூபத்தை அவரேதான் காட்டமுடியும். நாம் செய்யக் கூடியது, நம் மனசுக்கு அந்த ஸ்வரூபம் எப்படி வந்தால் ஆனந்தமாக இருக்கிறதோ அப்படி நினைத்து பக்தி செலுத்துவதுதான். அதைச் செய்ய ஆரம்பிப்போம்.

பகவானே கீதையில் இப்படித்தான் சொல்லியிருக்கிறார்:

பக்த்யா மாம் அபிஜானாதி யாவான் யச்சாஸ்மி தத்வத:

ததோ மாம் தத்வதோ ஜ்ஞாத்வா விசதே தத் அனந்தரம்|| 2

"ஒருத்தன் என்னிடம் பக்தி செலுத்திக் கொண்டேயிருந்தால், நான் யார், எப்படிப்பட்டவன் என்று உள்ளபடி தெரிந்துகொள்கிறான். அம்மாதிரி என்னை உள்ளபடி தெரிந்து கொண்டபின், எனக்கு வேறாக இல்லாமல் என்னுள்ளேயே புகுந்து விடுகிறான்" என்கிறார்.

அவருக்கு வெளியிலே நாம் இருக்கிற மட்டுந்தான் அவரை பார்த்து பக்தி பண்ணலாம். உள்ளேயே புகுந்து விட்டால்? அப்போது அவர் வேறு, நாம் வேறு இல்லை. ஒன்றாக, அத்வைதமாக, ஆகிவிடுவோம். ஆனால் இப்படி ஆவது எப்போது ஸாத்யம் என்றால், 'என்னிடம் பக்தி செய்து, உள்ளபடி என்னைத் தெரிந்து கொண்டபின் தான்' என்கிறார். 'ததோ மாம்' என்பதில் உல்ள 'ததோ', 'தத:',

என்பதற்குப் 'பின்னால்', 'அப்புறம்' என்று அர்த்தம். இப்போது பண்ணக் கூடியது பக்தி; அப்புறம் நடக்க வேண்டியது அந்த சமயத்தில் நடக்கட்டும்! 'பக்தி பண்ணிக்கொண்டேயிரு: அப்புறம் நான் உள்ளபடி எப்படியிருக்கிறேன் என்பதை நானே காட்டி, உன்னை அத்வைதமாக கரைத்துக் கொள்கிறேன்' என்கிறார்.

'தத்வத:', 'தத்வத:' என்று இரண்டு தடவை சொல்கிறார். அதாவது 'பக்தியினால் என்னை உள்ளபடி தெரிந்து கொண்டபின் நானே ஆகிவிடுகிறான்' என்கிறார்.

பக்தியினால் அவரை உள்ளபடி தெரிந்து கொள்கிறோம் என்றால், பக்தி செய்கிறபோது அவரை உள்ளபடி தெரிந்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தமாகிறது. பக்தி செய்ததற்குப் பலனாகத்தான் அவர் தமது வாஸ்தவ ஸ்வரூபத்தைத் தெரிவிக்கிறார். அப்படியென்றால், பக்தி செய்யும்போது அவரை நமக்கு உள்ளபடி தெரியவில்லை என்றுதானே அர்த்தம்?

'தெரியாதவரிடம் எப்படி பக்தியை செலுத்துவது?' என்றால் பக்தி ஆரம்பிக்கிற சமயத்திலும் அவர் அடியோடு தெரியாதவரல்ல; உள்ளபடி, அதாவது அவருடைய பூர்ண ஸ்வரூபம்தான் இப்போது நமக்குத் தெரியவில்லை. அந்தப் பூர்ணம்தான் அத்வைதமாக, ஒரே நிறைவாக, மனசுக்கு எட்டாமல் இருக்கிறது. அந்த வாஸ்தவ ஸ்வரூபம் நமக்குத் தெரியாவிட்டால் போகட்டும். அதனால் பாதகமில்லை. அது தெரிந்து விட்டால் தான் பகவான், பக்தன் என்ற பேதமேயில்லையே! அப்புறம் பக்திக்கு இடம் ஏது? பக்திக்கு விஷயம் அபூர்ணமாகத்தான்

இருக்க முடியும். பக்தன் வேறு, பகவான் வேறு என்கிறபோதுதான் பக்தி உண்டு. அதாவது பக்தியின்போது பக்தனையும் தாமேயாகக் கரைத்துக் கொள்ளாத மாதிரிதான் பகவான் இருக்கிறார். அந்த அளவுக்கு அபூர்ணமாகத்தான் இருக்கிறார். அவர் பக்தன் மனஸுக்குப் பிடிபடுவதாலேயே அபூர்ணம்தான். இருந்துவிட்டுப் போகட்டும். நம்மையும் அதற்குள்ளேயே கரைத்து கொண்டு விட்ட பூர்ணத்தை நாம் நினைக்காததால் பரவாயில்லை. நினைக்க முடியாததை எப்படி நினைப்பது? ஆனாலும், அந்த பூர்ணத்தையே கொஞ்சம் அபூர்ணமாக்கி, அனந்த கல்யாண குண நிலயமாக, ஒரே அழகும், கிருபையுமாக ஒரு ஸ்வரூபத்தை நம் மனஸினால் நினைத்துப் பார்க்க முடிகிறதல்லவா? இந்த ஸ்வரூபத்திடம் பக்தி பன்ணி, நெக்குருகி நெக்குருகி ஆனந்திக்க முடிகிறதல்லவா? இம்மாதிரி பக்தி பண்ணினால் அப்படியே அவர் பரம அழகோடு கிருபையோடு வருகிறார். பிறகு வாஸ்தவ ஸ்வரூபத்தைத் தானே பிரகாசித்துவிட்டுப் போகிறார்; அவரோடு நம்மை அபேதமாக ஆக்கிக் கொள்கிறார்.அதெல்லாம் அவர் வேலை.

பக்தி செய்கிறபோது, நாம் நினைப்பது அவருடைய வாஸ்தவ ஸ்வரூபத்தை இல்லைதான். ஆனால் அந்த யதார்த்த ஸ்வரூபத்தை அறிய இந்தப் பக்தியை விட்டால் வேறு வழியில்லை.

'பக்த்யா மாம் அபிஜானாதி': 'பக்தியினால் என்னை அறிந்துகொள்கிறான்'. ஏதோ கொஞ்சம் தெரிந்து கொள்வது மட்டுமில்லை – 'ஜானாதி மட்டுமில்லை; அபிஜானாதி –

நன்றாக, முழுக்க, அதாவது வாஸ்தவ ஸ்வரூபத்தையே அறிந்து கொண்டு விடுகிறான். பிறகு ஒன்றாகி விடுகிறான்.

அது பிற்பாடு நடக்க வேண்டிய கதை. இப்போது பரமாத்மாவை வேறாகவே வைத்து பக்தி செய்வோம். நிறைந்த நிறைவான முழு ஸ்வரூபமாக இல்லாமல் ஸகுணமாகவே பக்தி செய்வோம். இதில் நமக்குக் கிடைக்கிற நிறைவிலேயே திருப்தியாக இருப்போம்.

அத்வைத சாஸ்திரங்களில்கூட, "ஈச்வர அநுக்ரஹாத் ஏவ பும்ஸாம் அத்வைத வாஸனா" என்று சொல்லியிருக்கிறது. ஈச்வர அநுக்ரஹத்தால்தான் ஒருத்தனுக்கு அத்வைத வாஸனை, அத்வைதத்தில் ஒரு ருசி, பிடிமானமே உண்டாகும் என்று அர்த்தம். இப்படி ஈச்வரன்தான் ஒரு ஜீவனுக்கு அத்வைதத்தில் ருசியை உண்டாக்குகிறான் என்றாலே, அப்படு ஒருத்தன் இந்த ஜீவனுக்கு வேறாக உட்கார்ந்திருக்கிறான் என்று ஆகிவிடுகிறது! ஈச்வரன் தனக்கு வேறாக எதுவுமே இல்லை என்ற பாவத்திலேயே இருந்தால், எப்படி, எதனிடம் கருணை கொண்டு அநுக்ரஹம் பண்ண முடியும்? தனக்கு வேறாக இன்னொன்று இருப்பதாக நினைக்கிறபோது தானே அவன் அநுக்ரஹம் என்ற ஒன்றைச் செய்யவே இடம் ஏற்படுகிறது? ஆகையினால், இந்த மாயா நாடகத்தில் ரொம்பவும் வேடிக்கையாக, ஜீவாத்மா மாதிரி இருக்கிற நாம் மட்டும்தான் நமக்குப் பரமாத்மா வேறு என்று நினைக்காமல், அந்தப் பரமாத்மாவும் இப்படி நம்மை வேறாக நினைத்து விளையாடுவதாக ஆகிறது! 'இந்த ஜீவன் தானாக அத்வைதத்துக்கு ஆசைப்படவில்லை;

ஈச்வரன்தான் அந்த ஆசையை உண்டாக்குகிறான்' என்றால் ஜீவனுக்கு வேறுமாதிரி அவன் இருக்கிறான்; அப்புறம் வேறாக இருக்க வேண்டாமே என்ற ஆசையை ஜீவனுக்கு அநுக்ரஹம் பண்ணுகிறான் என்றுதானே அர்த்தம்? அநுக்ரஹம் பண்ணுகிறவன், அநுக்ரஹத்தைப் பெற்றுக் கொள்கிறவன் என்று இரண்டு பேர்வழிகள் இருந்துவிட்டால் த்வைதம்தான். 'அநுக்ரஹம் பெறுவதற்காக ஒருத்தன் இருக்கிறான். அவனுக்கு அதைச் செய்கிறேன்' என்று ஈச்வரனே வேறு மாதிரி இருக்கிறபோது, அவனை வேறாகவே நினைத்து பக்தி செய்வதில் பிசகே இல்லை.

அநுக்ரஹம் செய்வதற்காக அவன் வேறு மாதிரி இருக்கிறான். அத்வைத வாஸனையையும் அவனே ஏற்படுத்துகிறான் என்றபின், அந்த அநுக்ரஹ மூர்த்தியே அத்வைத அநுபவத்தையும் கொடுத்துவிட்டுப் போகட்டுமே! வாஸனையை உண்டாக்கினவன்தான், அதைப் பூர்த்தி பண்ண முடியும். பூர்த்தி பண்ணுவதற்காகத்தானே வாஸனையை உண்டாக்குகிறான்? இப்படி ஒரு நல்ல ஆசையை உண்டாக்கினவன் அப்புறம் கைவிட்டு விடுவானா? தான் ஆரம்பித்த காரியத்தை அவனே செய்து முடித்துக் கொள்கிறான். முடிக்கிறான், முடிக்கவில்லை. அது அவன் சமாசாரம். அதில் நம் காரியம் எதுவும் இல்லை.

நம் காரியம் அவனை ஸகுணமாக உபாஸிப்பது. இதனால் அவனுக்குக் குறை உண்டாக்கி விட்டோமே என்று துக்கப்பட வேண்டாம். அவனேதான் சொல்கிறானே, "முதலில் நீ என்னை என்னவென்று நினைத்து பக்தி

பண்ணினாலும் அப்படியே ஒரு மாதிரி இருப்பேன். அப்புறம் வாஸ்தவத்தில் நான் என்னவோ அதுவாக நானே பிரகாசித்துவிடுவேன்" என்கிறானே!
பிரகாசிப்பது அவர் காரியம். அவரை நாம் பிரகாசிக்கப் பண்ண முடியாது. முடியாததற்கு நாம் பிரயத்தனப்படுவது வியர்த்தம்தான்; இருக்கிற குறையை ஜாஸ்தியாக்கிக் கொள்வதுதான்.

அவனைத் தவிர வேறு அடியோடு இல்லை என்பது அத்வைதம். உயிர் என்று, ஜீவாத்மா என்று ஒன்று இருந்தாலும், உயிருக்குயிராக, அந்தர்யாமியாக அவன் ஒருத்தனே இருக்கிறான் என்பது விசிஷ்டாத்வைதம். அவன் வேறு, நாம் வேறுதான்; ஆனால் அவன்தான் ஆட்டிவைத்துக் கொண்டிருக்கிறான் என்பது த்வைதம். த்வைதம்தான் நமக்கு நன்றாகத் தெரிகிறது. தெரிந்ததைப் பிடித்துக் கொண்டோமானால், மேலே மேலே தெரிந்து கொள்ள வேண்டியதை அவனே தெரியப்படுத்துவான். அப்போது அணுவுக்குள் அணுவாக, உயிருக்கு உயிராக அவனை அநுபவிப்போம். அப்புறம் நாம் அநுபவிக்கிறோம், அவனை அநுபவிக்கிறோம் என்ற வித்தியாசம் கூட இல்லாமல், அத்வைதமாகி விடுவோம். இதெல்லாம் பரமாத்மாவின் அநுக்கிரஹத்தினால் நடக்கவேண்டியவை.
<>நம்மால் நடத்திக் கொள்ள முடிவதாகத் தெரிவது, கடமையைப் பண்ணுவது; கூடிய மட்டும் நம்முடைய ஆசைக்காக இல்லாமல், ஈசுவர ஆக்ஞை இப்படி என்று காரியம் பண்ணுவது; அவனிடம் பக்தியோடு இருப்பது; இதுதான். ஸ்வாமியை நினைக்காமல், வெறுமே 'அன்புருவமாக இரு', 'பிரேமஸ்வரூபமாக இரு' என்றால்,

நம்மால் முடியவில்லை. காரியம் உள்ள மட்டும் கோபமும் த்வேஷமும் வரத்தான் செய்கின்றன, ஆனால் அன்புருவான ஸ்வாமியிடம் நாம் அன்பு வைத்து, காரியங்களை அவருக்கே அர்ப்பணம் செய்யத் தொடங்கினால், தானாகவே எல்லாரிடமும் அன்புமயமாகிறோம். இந்த அன்பே பெரிய ஆனந்தம், நிறைவு.

மனஸை ஆடாமல் நிறுத்தி, அத்வைதமாக ஸத்யத்தை அநுபவிக்க முடியாத நாம், 'நீ வேறு, நான் வேறு' என்றே த்வைதமாக பக்தி பண்ணி, அந்த ஸந்தோஷத்திலேயே திருப்தியாக இருப்போம். அப்புறம் அவனே விசிஷ்டாத்வைதமாக உயிருக்குயிராகப் பிரகாசிக்கட்டும்; அல்லது அத்வைதமாக ஆக்கிக் கொள்ளட்டும்.

முக்கியமாக ஒரு சரீரம்தான் நம்மை அவனுக்கு வேறு மாதிரி ஆக்கியிருக்கிறது. இந்த சரீரத்துக்குள் அந்தர்யாமி என்றுகூட அவனை வைத்துக் கொள்ளாமல், சரீரத்தோடு நின்று, வேறு வேறாகவே இருந்து விட்டால் த்வைதம். அப்படி த்வைதமாக இருந்தால்கூட, அழகுப் பிரவாஹமாக, கருணா ஸமுத்திரமாக ஒரு பராசக்தியை நினைத்து பக்தி செய்ய முடியும்; அதிலிருந்து கிடைக்கிற ஆனந்தத்தைப் பெறமுடியும். ஆகையினால், உயிர் – உயிருக்குயிர் என்ற பேதம் அடிப்பட்டுப்போன அத்வைதத்துக்கோ, 'உயிர் நாம், உயிருக்குயிர் அவர்' என்ற விசிஷ்டாத்வைதத்துக்கோ தவிக்காமல், த்வைதமாகவே, 'நாம் இப்படி உடல் எடுத்திருக்கிறோம்; இந்த உடம்புதான் நாம்; இதை வைத்துக்கொண்டும் அந்தப் பரமாத்மாவை, பராசக்தியை நினைத்து ஆனந்திக்க முடிகிறதோ இல்லையோ?

இப்படியே தான் இருப்போமே ! இந்த உடம்பு என்ன, இன்னும் புழு உடம்பு வந்தாலும் வந்துவிட்டுப் போகட்டுமே! அந்தப் புழு அவனுக்கு வேறாகவே இருந்தாலுங்கூட அவனை நினைக்க முடியுமானால், அவன் அதை மோக்ஷ லோகத்தில் சேர்த்துக் கொள்வானானால், அப்படித்தான் வேறாகவே ஆனந்தமாக இருந்துவிட்டுப் போவோமே! என்று நம்மைத் திருப்தர்களாக ஆக்கிக் கொள்ளவேண்டும்.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே

வழுவாதிருக்க வரம் தரவேண்டும்

என்று அப்பர் ஸ்வாமிகள் சொன்ன மாதிரி, பகவத் ஸ்மரணம் எப்போதும் இருக்கவேண்டும் என்பது தான் விஷயம். அது இருப்பதே அலாதி ஆனந்தம். இந்த ஆனந்தம் நன் அஞ்ஞான நிலையிலேயே காரிய சாத்தியமாக இருக்கும் போது, 'உடம்பு இருக்கிறதே, மனசு இருக்கிறதே, இதெல்லாம் தொலைந்து ஆத்மா மட்டும் பிரகாசிக்கவில்லையே!' என்று துக்கப்பட வேண்டாம்.

அப்பர் ஸ்வாமிகள் பக்தர். ஆதலால் அவர் இப்படிச் சொன்னது பெரிசில்லை. ஞான மார்க்கத்துக்கு, அத்வைதத்துக்கு பரமாசாரியாளாக இருக்கிற நம் சங்கர பகவத்பாதர்களே, 'சிவானந்த லஹரி'யில், 'நான் புழுவாகத்தான் பிறந்துவிட்டுப் போகிறேனே! இல்லை, கொசுவாகத்தான் பிறந்துவிட்டுப் போகிறேனே! அதனாலெல்லாம் என்ன மோசம் போய்விட்டது? இல்லை, ஒரு மாடாகத்தான் ஜன்மா எடுத்தால் என்ன? உன்னுடைய பாதத்தை ஸ்மரிக்கிற பரமானந்த வெள்ளத்தில் மட்டும்

ஹ்ருதயம் தோய்ந்து கிடக்குமானால், அப்போது எந்த உடல் வாய்த்தால்தான் என்ன?" என்கிறார்.

நரத்வம் தேவத்வம் நகவன ம்ருகத்வம் மசகதா பசுத்வம் கீடத்வம்.....
கீடம் – புழு. 'கீடத்வம்' தான் அப்பர் சொன்ன 'புழுவாய்ப் பிறக்கினும்'. மசகதா – கொசுத்தன்மை; Mosquito இதிலிருந்து வந்ததுதான். கொசுவாக இருந்துங்கூட பக்தி பண்ணமுடியுமானால், அந்த ஜன்மா எடுக்கக்கூட பயப்படவேண்டாம்.

மநுஷ்ய உடம்பாக இருந்தாலும், அதை வைத்துக் கொண்டே ஆனந்தமாக பக்தி பண்ணிக்கொண்டு, ஸமஸ்த ப்ராணிகளிடமும் நிறைந்த அன்போடு கர்மாவைச் செய்யமுடிகிறபோது, 'உடம்பு வேண்டாம், புனர் ஜன்மா வேண்டாம்' என்றெல்லாங்கூட ப்ரார்த்திக்க வேண்டியதில்லை.

எந்த உடம்பு வந்தாலும், எப்படிப்பட்ட ஜன்மா வாய்த்தாலும், அந்த பரமாத்மாவை அன்பே உருவான தாயாக பாவித்து, ஸாக்ஷாத் அந்தப் பரதேவதையின் சரணாரவிந்தத்தில் நீங்காத நினைவை வைத்து விட்டால் போதும். அவள் ஞானாம்பிகை. ஞானப்பால் கொடுப்பவள். கர்மாவினாலும், பக்தியினாலும் நம் மனஸிலிருக்கிற அழுக்கை எல்லாம் துடைத்து விடுவாள். அது பளிச்சென்று ஸ்வச்சமாக கண்ணாடி மாதிரி ஆகி, அதன் ஆட்டமெல்லாம் நின்று போனால் பூர்ண ஸ்வரூபம் தானே அதில் பிரகாசித்துவிடும். அந்த நிலையை அவளே அநுக்ரஹிப்பாள். இப்படித்தான் அநுக்ரஹிக்க வேண்டும்

என்று நாம் சொல்ல வேண்டாம். வைகுண்டம், கைலாசம் மாதிரி தன் லோகம் என்பதாக ஏதோ ஒன்றில் நம்மைப் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துக்கொண்டு சேவா பாக்யம்தான் தரட்டும்; அல்லது அது வேறு, நாம் வேறு இல்லை என்று பூர்ணமாக நிறைந்து விடுகிற நிலையைத்தான் தரட்டும். எதுவானாலும் சரி.

அந்த நிலை நமக்குத் தெரியாதது, அதைத் தரப்போகிறதும் இன்னொருத்தர். நமக்குத் தெரிந்தது த்வைதம். ஏன் த்வைதம் தெரிகிறது என்றால் மனசு நிற்கவில்லை. மனசு ஏன் நிற்கவில்லை என்றால் ஆசாபாசம், த்வேஷம், பயம், துக்கம் எல்லாம் நமக்கு இருக்கின்றன. இவற்றிலேயே அலைந்து கொண்டு மனசு அசுத்தமாகி விட்டதால் நிற்கமாட்டேன் என்கிறது. அதனால் நமக்கு முதலில் சித்தசுத்தி வரவேண்டும். அதற்குக் கடமையைச் செய்து கொண்டு பரமாத்மாவை பக்தியோடு நினைத்துக் கொண்டிருப்பதுதான் வழி. இதை சந்தோஷமாகச் செய்வோம்.

செய்து பார்த்தால் இதுவே ஆனந்தமாயிருக்கும். சித்தசுத்தி அது இது என்ற லக்ஷ்யங்களைக்கூட அப்போது நாம் நினைக்க மாட்டோம். ஆனந்தமாக பக்தி பண்ணிக் கொண்டு, அன்பாகக் காரியங்களைச் செய்து கொண்டு, நாம் பாட்டுக்கு நிம்மதியாக இருக்க ஆரம்பித்துவிடுவோம். அநுக்ரஹத்தை பராசக்தி தானாகப் பண்ணுவாள். அது இப்படித்தான் இருக்கவேண்டும் என்று நாம் கட்டாயப்படுத்த முடியாது. நமக்கு நிஜமான பக்தி உண்டாகி ஆனந்தமாக இருக்கத் தெரிந்து கொண்டோமானால், கட்டாயப்படுத்தவும் தோன்றாது.

அதனால் அவளுக்கு எப்படி இஷ்டமோ அப்படி த்வைதமாகவே வைத்து அநுக்ரஹம் செய்யலாம்; அல்லது அந்த அநுக்ரஹம் விசிஷ்டாத்வைதமாக இருக்கலாம்; அத்வைதமாக இருந்தாலும் இருக்கலாம். எதுவானாலும் சரி என்று அந்தப் பராசக்தியின் கையில் விட்டுவிட்டு, நாம் பக்திப் பண்ணிப் பண்ணியே பரமானந்தமாக இருந்து கொண்டிருப்போம்.

அத்வைதந்தான் பரம ஸத்தியம். நாம் மனஸை நிறுத்திவிட்டு அந்த ஸத்தியத்தை அநுபவிக்க முடியுமானால் விசேஷந்தான். ஞான மார்க்கம் இதற்காக ஏற்பட்டதுதான். 'ஆனால் நம்மில் பெரும்பாலாருக்கு அதில் போக முடியவில்லைய ! இதற்காக அழுது கொண்டேயிருக்க வேண்டியதுதானா? என்று தோன்றியது. அப்புறம், 'அழவேண்டாம். நம்மால் முடிந்த கர்மத்தையும் பக்தியையும் அழாமல் பண்ணிக் கொண்டிருந்தாலே போதும். ஸகலப் பிரபஞ்சங்களின் வியவகாரங்களையும் நடத்திக் கொண்டிருக்கிற பராசக்தியின் சித்தப்படிதான் நமக்கு அத்வைத சித்தி உள்பட எந்த லக்ஷ்யமும் ஸித்திக்குமாதலால், நாம் இருக்கிற நிலையிலேயே நமக்கு ஒரு நிறைவையும், இதற்கு மேலே நிறைந்த நிறைவான அத்வைதத்தையுங்கூட அந்தப் பராசக்தியின் அநுக்ரஹத்தால் பெற்றுவிடலாம்' என்ற தெளிவு உண்டாயிற்று. அதைத்தான் சொன்னேன்.

1. 'புருஷஸூக்த'த்தில் வரும் பதங்களை முன்பின்னாக மொழிந்தது.

2. XVIII.55

மூன்றாவது வழி

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

அத்வைதம்
மூன்றாவது வழி

எந்தக் காரியத்தையும் முறையுடன் செய்ய வேண்டும். முறை தப்பி ஒரு காரியத்தைச் செய்தால் கஷ்டந்தான் உண்டாகும். 'நியாயம்' என்றாலும் முறை என்றே பொருள். சாலையில் செல்லும்போது இடது பக்கம் போகவேண்டும் என்றால், எல்லோரும் இடது பக்கமாகப் போவதுதான் முறையாகும். பெரியோர்கள் ஒவ்வொரு காரியத்துக்கும் ஒரு பொதுவான முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் போட்டிருக்கும் வழியில் செல்வதுதான் நல்லது.

பகவானிடம் போவதற்கு இரண்டு முறைகளை – நியாயங்களை – வகுத்துத் தந்திருக்கிறார்கள். ஒன்று குரங்குக்குட்டி முறை; மற்றொன்று பூனைக் குட்டி முறை. ஸம்ஸ்கிருதத்தில் பூனை என்பதற்கு மார்ஜாரம் என்றும், குரங்கு என்பதற்கு மர்க்கடம் என்றும் பெயர். கிசோரம் என்றால் குட்டி என்று அர்த்தம். ஆகவே ஸம்ஸ்கிருதத்தில் இவை மர்க்கட கிசோர நியாயம் என்றும், மார்ஜார கிசோர நியாயம் என்றும் வழங்குகின்றன.

பூனை குட்டி போட்டால், அக்குட்டியானது தானாக நடந்து ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போகும் சக்தி பெறும் வரையில் அதைத் தாய்ப் பூனையே தன் வாயினால் கவ்விக் கொண்டு தூக்கிச் செல்கிறது. இதே

போலத்தான் புலியும். புலிக்குப் பூனை மாமா முறை ஆகவேண்டும் என்பார்கள். புலிக்கு வேட்டையாடுதல், தாண்டுதல், பதுங்கிப் பாய்தல் ஆகிய எல்லாவற்றையும் பூனை சொல்லிக்கொடுத்ததாம். ஒன்றை மட்டும் சொல்லித் தரவில்லை. தானோ மிகவும் சிறியவன், எல்லாவற்றையும் சொல்லித் தந்தால் தனக்கே ஆபத்து வந்துவிடும் என எண்ணி, மரத்தில் ஏறுதல், சுவரில் ஏறுதல் முதலியவற்றைப் புலிக்குச் சொல்லித் தரவில்லையாம்! புலிக்கும் பூனைக்கும் தன் குழந்தைகளிடத்தில் வாத்ஸல்யம், பிரியம் அதிகம்.

பகவான் எல்லாக் குழந்தைகளுக்குமே தாயை மயக்கக்கூடிய சக்தியைத் தந்திருக்கிறார். இக்குழந்தை வாழ வழி உண்டு என்பதாலேயே மாயாவியாகிய பகவான் அதற்கு ஏமாற்றும் வித்தையைச் சொல்லித் தந்திருக்கிறார். நம் கர்மாவை அனுபவிப்பதற்கு உடம்பு வேண்டும்; அந்த உடம்பு வளர உணவு வேண்டும். இதற்காகவே, (நமக்கு இந்த உண்மை தெரியாவிட்டாலும்) நாம் நம் வயிற்றில் ஆகாரத்தைப் போடுகிறோம். உடல் வளர்கிறது. இதற்காக நாக்கு என்ற ஓர் உறுப்பு இருக்கிறது. நாக்கில் நமக்கு ருசி தெரிகிறது. ருசி இல்லையென்றால் நாம் சாப்பிடமாட்டோம். உடலுக்குள் உணவு செல்லாது. ஆகவேதான் நாக்கில் ருசியைக் கொடுத்து அதன் மூலம் உடலானது உணவைப் பெற்றுக் கர்மாவை அனுபவிக்கும்படி பகவான் செய்திருக்கிறார். இவ்வாறெல்லாம் நாம் கர்மாவை அனுபவிக்கப் பண்ணுவதற்காகவே பகவான் பல தந்திரங்கள் செய்திருக்கிறார். பகவான் குழந்தைகளுக்கு மயக்கும்

சக்தியைக் கொடுத்து அதை நாம் பிரியத்துடன் வளர்க்க வைத்து, நம்மை ஏமாற்றுகிறார். ஆனாலும் பகவானின் ஏமாற்றுவித்தை சாதாரண மக்களிடம்தான் பலிக்கும். ஞானியை பகவான் ஏமாற்ற முடியாது. ஞானி பகவானையே ஏமாற்றிவிடுவான்.

"சிக்ஷா சாஸ்த்ர"த்தில் வேத அக்ஷரங்களுக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அதில் வேதத்தை எப்படிக் கற்கவேண்டும், எப்படி உச்சரிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. "எப்படிப் பெண் புலியானது தன்னுடைய குட்டியை ஆபத்திலிருந்து காக்கத் தன் வாயில் கவ்விச் செல்கிறதோ, அப்படி வேதத்தை உச்சரிக்க வேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது*. புலி தன்னுடைய குட்டியை வாயில் கவ்விக் கொண்டு போகும்போது, குட்டியின் உடலிலே பற்காயம் ஏற்பட்டு விடக்கூடாது, குட்டி கீழே விழுந்து விடவும் கூடாது. அதுமட்டுமின்றி ஆபத்திலிருந்து தப்புவதற்காகத் தாய்ப்புலி வேகமாகவும் ஓட வேண்டியிருக்கும். இந்நிலையில் புலி குட்டியை எவ்வளவு ஜாக்கிரதையாக வாயில் பதமாகக் கவ்விக் காக்கிறதோ, அவ்வளவு சர்வ ஜாக்கிரதையாக வேதத்தை உச்சரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதே போலத்தான் பூனையும். பூனைக்குக் 'கிராமப் புலி' என்றே பெயர். ஆகவே வேதத்தை மார்ஜார கிசோர நியாயமாக உச்சரிக்கவேண்டும் என இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

இரண்டு வகை பக்தியில் பூனைக் குட்டி முறை ஒன்று. அதாவது பக்தர்களில் ஒரு வகையினர், இந்தப் பூனைக்குட்டி தன் முயற்சியின்றி, தாய்விட்ட வழி என்றிருப்பது போலவே பகவானை சரணடைந்து இருப்பர்.

அவரைப் பணிவுடன் வேண்டி அவரைத் துதித்துப் புகழ்பாடி அவருடைய அருளை வேண்டுவார்கள். அவருடைய பொற்பாத கமலங்களில் தங்களது உள்ளத்தைக் கிடத்துமாறு செய்து, தம்மை ஆட்கொள்வது பகவானது பொறுப்பே என்று கருதி, பூனைக்குட்டி சுயமுயற்சியின்றித் தாயை நம்பி இருப்பதுபோல் இருப்பார்கள். இவ்வித பக்திக்கு மார்ஜார கிசோர நியாயம் என்று பெயர்.

பூனைக்குட்டிக்கு நேர் மாறு குரங்குக் குட்டி. இந்தக் குரங்குக் குட்டி போன்றவர் இன்னொரு வகை பக்தர்கள். குரங்கின் குட்டியானது அதன் தாயின் வயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கும். தாய் மரத்துக்கு மரம் தாவும்போது தன் குட்டியைப் பற்றி யாதொரு கவலையும் கொள்ளாது. குட்டிதான் தன்னைக் காத்துக் கொள்ளத் தாயின் வயிற்றை மிகவும் இறுக்கமாகப் பிடித்துக் கொள்ளவேண்டும். இந்தக் குட்டிக்கு பகவான் அப்படிப்பட்ட ஒரு பிடிக்கும் சக்தியைக் கொடுத்திருக்கிறார். "கடித்ததெல்லாம் கரும்பு; பிடித்ததெல்லாம் இரும்பு" என்று பகவான் அதற்கு வரம் கொடுத்திருக்கிறாராம். அது எதையும் பலத்துடன் பற்றிக் கொள்ளும். குரங்குப் பிடி என்றே சொல்வதுண்டே!

இப்படிப்பட்ட குரங்கின் ரீதியிலேயே, மர்க்கட கிசோர நியாயமாக, சில பக்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பகவானை இறுக்கமாகப் பிடித்துக் கொள்வார்கள். பகவானே அருள் செய்யட்டும் என்று காத்திராமல், அவன் உதறித் தள்ளினாலும் விடுவதில்லை என்று அவனைப் பிடித்துக் கொள்வார்கள். 'சிக்கெனப் பிடித்தேன்' என்று

மாணிக்கவாசகர் பாடியுள்ளார். அவரே சிவபுராணத்தில் 'பக்தி வலையில் படுவோன்' என்று கூறுகிறார். அப்பிடியானால் பக்தர்கள் பகவானைச் சிக்கென்று பிடிக்கிறார்களா, பகவான் பக்தரிடம் சிக்கிக் கொல்கிறானா என்ற கேள்வி வருகிறது. பக்தன் சிக்கென்று பிடித்துவிட்டால், அப்புறம் பகவானே அவனிடம் சிக்கிக்கொண்டு விடுகிறான். பக்தர்கள் கையிலிருந்து பகவான் தப்ப முடியாமல் வலையில் விழுந்த மீன்போலச் சிக்கிவிடுகிறார்.

வைஷ்ணவர்களில் வடகலை, தென்கலை என்று இரண்டாகப் பிரித்திருப்பதே இந்த இரண்டு வித சரணாகதி வித்தியாஸத்தினால்தான். ஸ்ரீ வேதந்ததேசிகனைப் பின்பற்றும் வடகலைக்காரர்கள் மர்க்கட கிசோர நியாயத்தை அநுஸரித்து நான்தான் விடாமுயற்சியுடன் ஸ்வாமியை விடாமல் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்கிறார்கள். ஸ்ரீ மணவாள மாமுனிகள், ஸ்ரீ பிள்ளை லோகாசாரியார் ஆகியவர்களைப் பின்பற்றும் தென்கலைக்காரர்கள், மார்ஜார கிசோர நியாயப்படி நாம் எந்த முயற்சியும் இல்லாமல் கிடந்துவிட்டால் போதும், ஸ்வாமியே நம்மை ஆட்கொண்டுவிடுவார் என்கிறார்கள். இப்போது வடகலை, தென்கலை என்றால் நாமம் போட்டுக் கொள்வதில் இருக்கிற வித்தியாஸத்தைத்தான் நினைத்துக் கொள்கிறோம். இங்கிலீஷ் 'யு' (U) மாதிரி நாமம் போட்டுக் கொண்டால் வடகலை; 'ஒய்' (Y) மாதிரி அடியிலே பாதம் வைத்துப் போட்டுக் கொண்டால் தென்கலை என்று புரிந்து கொள்கிறோம். வாஸ்தவத்தில் அவர்களுக்குள்ளே வித்தியாஸம் சரணாகதியில் இருவிதமான தத்வங்களை

அநுசரிப்பவர்கள் என்பதே. வழியிலே இன்னார் இன்ன தத்வக்காரர் என்று தெரிவிப்பதற்கே வடகலைக்காரர் U மாதிரியும், தென்கலைக்காரர் அதற்குப் பாதம் வைத்து Y மாதிரியும் நாமம் போட்டுக் கொள்கிறார்கள். சரணாகதி என்பதைப் "பிரபத்தி" என்பார்கள்.

ஸர்வ தரமான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ

என்று பகவான் கீதையின் முடிவில் சொல்லியிருக்கிறதுதான் சரணாகதி சாஸ்திரத்துக்குத் தாரக மந்திரம் மாதிரி. ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி விபீஷன சரணாகதியின் போது, 'ராமா, நான் உன்னுடையவன்; அபயம்!' என்று எவன் வந்தாலும் அவனை ரக்ஷிப்பதே என் ஜன்ம விரதம்:

ஸக்ருதேவ ப்ரபன்னாய தவாஸ்மீதி ச யாசதே ।

அபயம் ஸர்வ பூதேப்யோ ததா(மி) எதத் வ்ரதம் மம ॥

என்று சொன்னதையும் வைஷ்ணவர்கள் ரொம்பவும் சிறப்பித்துச் சொல்வார்கள். கீதை, ராமாயணம் இரண்டுமே சரணாகதி சாஸ்திரங்கள் என்பார்கள்.

தத்வங்கள், ஸித்தாந்தங்கள் இருக்கட்டும். நடைமுறையில் நாம் எப்படியிருக்கிறோம்? அவன் விட்ட வழி என்று நம்பிக்கையோடு கிடப்பதற்கு நம்மால் முடிகிறதா? அத்தனை பக்தி, வைராக்யம் நமக்கு இருக்கிறதா? இல்லவே இல்லை. சரி, அப்படியானால் நாம்தான் முயற்சி பண்ணி அவன் அருளை வலியப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று ஸதாவும் அவனையே பிடித்துக்

கொண்டிருக்கவாவது நம்மால் முடிகிறதா? இதுவும் முடியவில்லை.

'நல்லதோ பொல்லாததோ நமக்கென்று என்ன இருக்கிறது? அம்மாக்காரி செய்கிறபடி ஆகட்டும்' என்பதாக, சுயமுயற்சியே இல்லாமல் மார்ஜார கிசோரமாகக் கிடக்கவும் நமக்குப் பக்குவம் இல்லை. 'அம்மாவை விடாமல் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும்; பிடிவாதமாக அவள் ரக்ஷணையைப் பெற்றே தீரவேண்டும்' என்று மர்க்கட கிசோரமாக சரணாகதி பண்ணவும் நமக்குப் பக்குவம் போதவில்லை.

இரண்டும் இல்லாவிட்டால், இப்படி இரண்டுங் கெட்டனாக இருந்தால் எப்படித்தான் உருப்படுவது? அதற்கு என்ன வழி? இரண்டு வழிகள், முறைகள், நியாயங்கள் மேலே சொன்னேன். இரண்டும் முடியாது என்றால் என்ன செய்வது? யாரிடம் போவது? எந்த விழியிலானாலும் சரணாகதி செய்வதற்குரிய பக்குவமில்லாத நாமும் போகக்கூடிய மூன்றாவது வழியைச் சொல்பவர் யாராவது இருக்கிறார்களா?

இருக்கிறார். நம் சங்கர பகவத் பாதாள்தான் அவர்.

"இரண்டுவித சரணாகதியும் பக்தியில் வருவது. இந்த பக்தியே நமக்கு எட்டமாட்டேன் என்கிறது. ஆசார்யாளோ இதைவிடக் கஷ்டமான ஞானத்தைச் சொல்கிறவரல்லவா? 'பக்தனும் இல்லை, பகவானும் இல்லை என்று அப்படியே ப்ரம்மமாக இருந்துவிடு' என்கிறவரல்லவா? நாம் இருக்கிற ஸ்திதியில், அது கொஞ்சங்கூட ஸாத்யமில்லாத விஷயமல்லவா?" என்று தோன்றலாம்.

ஆசார்யாள் ஞானத்தைச் சொன்னவர்தான். ஆனால் அவர், அதிகாரி பேதம் பார்த்து இன்னார் இருக்கிற நிலைக்கு இன்ன வழிதான் ஸாதனம் என்று உணர்ந்து கர்மம், பக்தி இவற்றைக்கூட அங்கீகாரம் பண்ணி இந்த மார்க்கங்களிலும் வழி காட்டியிருக்கிறார். இவற்றில் போனாலே, ஒற்றையடிப்பாதை ஹைரோட்டில் கொண்டு சேர்க்கிற மாதிரி, இவை ஞானத்தில் கொண்டு போய் விட்டுவிடும் என்று சொல்லியிருக்கிறார். இப்படித்தான், பக்தியிலும் மேலே சொன்ன இரண்டு வழிகளைத் தவிர, பக்குவம் போதாத நமக்கும் கொஞ்சத்தில் கொஞ்சம் ஸாத்யமாக ஒரு மூன்றாவது வழியைச் சொல்லியிருக்கிறார்.

மர்க்கட கிசோரம், மார்ஜார கிசோரம் ஆகிய இவ்விரண்டு முறை, அல்லது நியாயத்தைத் தவிர மூன்றாவதாக ஒரு நியாயத்தை ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்கள் தமது சிவானந்த லஹரியில் கூறுகிறார்.

இங்கே மனத்தை அவர் குரங்காகத்தான் சொல்கிறார். ஓயாமல் அலை பாய்வதில் அது குரங்காகத்தான் இருக்கிறது. ஆனால் ஸ்வாமி என்ற தாயைத் தானாகக் கட்டிக் கொள்கிற விஷயத்தில் மட்டும் நம் மனம் குரங்காக இருக்கவில்லை. எனவே, ஸ்வாமியே குரங்காட்டியாக வந்து இந்தக் குரங்கைக் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார், நம் ஆசார்யாள். இந்த மனக் குரங்கு சில சமயம்தான் முறையான வழியில் போகிறது. திடீரென அடர்ந்த காட்டுக்குள் போய் வழி இன்றித் தவிக்கிறது; அலைகிறது. அப்படிப்பட்ட இந்தக் குரங்கை

யாராவது ஒரு குரங்காட்டியிடம் கொடுத்துவிட வேண்டியதுதான் முறையாகும். அதனால் குரங்கும் பிழைக்கும்; குரங்காட்டிக்கும் பிழைப்பு நடக்கும்.

"நீயோ கபாலக் கப்பரையை வைத்துக்கொண்டு பிச்சைக்காரனாக, பிக்ஷாடனனாகத் திரிகிறாய். உனக்கு ஏற்ற குரங்கு இருந்தால் அதைக்கொண்டு நீயும் பிழைக்கலாம். குரங்கும் உன்னால் அடக்கப்பட்டுச் சீரடையும். உனக்குத் தகுந்த குரங்கு ஒன்று உண்டென்றால், அது என்னுடைய மனம்தான். என் மனமானது குரங்குக் குட்டியாக இருந்தாலும், நீ அதற்குத் தாயாக இருப்பதை அறிந்து அது உன்னைப் பற்றிக் கொள்ளவில்லை. மனம் பூனைக் குட்டியாகவும், நீ தாய்ப் பூனையாகவும் இருந்தாலாவது நீயாகவே அதைத் தூக்கிச்சென்று காப்பாற்றுவாய். ஆனால் இதுவோ அடங்காத குரங்கு. நீயும் பூனையாக இல்லாமல் பிச்சைக்காரனாக இருக்கிறாய். ஆகவே, நீ ஒரு கயிற்றைக் கொண்டு இந்தக் குரங்கைக் கட்டிப் போட்டுத்தான் அடக்க வேண்டும். இதனால் நீயும் வெறுமே பிச்சை கேட்கிற தடியாப் பிள்ளையாக இல்லாமல், குரங்காட்டு வித்தை என்று ஒரு பொழுதுபோக்கைக் காட்டி, கலைஞன் என்ற ஹோதாவில் ஸம்பாவனை கேட்பதாக ஒரு கௌரவம் பெறுவாய். இந்தப் பொல்லாத குரங்கு உன்னிடமிருந்து தப்புவதற்குப் பலவாறு முயற்சி செய்யும். நீ அன்பு என்கிற கயிற்றால் அதைக் கட்டி இழுத்துச் செல்வாயாக!" என்கிறார் ஸ்ரீ ஆதி சங்கரர்.

பகவானிடம் நாம் செல்வம், ஆரோக்கியம், புகழ் இப்படி எது எதையோ வேண்டுகிறோம். உண்மையில், மனமானது

கண்டப்படி அலையாமல் அதைக் கட்டுப்படுத்துவதற்குத்தான். ஸ்வாமியின் அருளை நாம் கோரவேண்டும். மனம் அவசியமற்றவைகளையெல்லாம் செய்யத் தூண்டும். கண்ணால் காணக் கூடாதவைகளைக் கண் பார்க்கிறது. காதால் கேட்கக் கூடாதவற்றைக் காது கேட்கிறது. நாக்கினால் ருசிக்கக் கூடாதவைகளை நாக்கு ருசிக்கத் துடிக்கிறது. இதற்கெல்லாம் காரணம், மனம் பல பொருட்களைக் கண்டு மயங்குவதுதான். இதற்கெல்லாம் மேலான அழகுள்ள பொருள் கிடைத்துவிட்டால், மனமானது இவற்றை விட்டுவிட்டு அந்த ஒரு அழகு வஸ்துவையே பற்றிக் கொண்டு திருந்திவிடும். ஒரு குழந்தைக்குப் பொரி உருண்டையின் மேல் மிகவும் பிரியம். ஆனால் லாடு கிடைத்தால், அதே குழந்தை பொரி உருண்டையைத் தூக்கி எறிந்துவிட்டு லாடுவை எடுத்துக் கொள்கிறது. அதுபோல் மற்ற எல்லாவற்றையும் விட அழகான பொருள் கிடைத்தால் மனம் அதில் மயங்கிக் கட்டுண்டு கிடக்கும். அப்பேற்பட்ட அனைத்திலும் அழகிய வஸ்து ஈசுவரனே! 'பிச்சைக்காரனான நீ, மிக அழகுடையவனான நீ, இந்த மனக்குரங்கைக் கட்டிப் பிடித்துக் கொண்டு போய் விடுவாயாக!':

கபாலின்! பிக்ஷோ! மே ஹ்ருதய கபிம் அத்யந்த சபலம்

த்ருடம் பக்த்யா பத்த்வா சிவ, பவத் அதீனம் குரு விபோ!

என்று ஆசார்யாள் சிவானந்த லஹரியில் கூறுகிறார்.

'கபி' என்றால் குரங்கு. ஹ்ருதய கபி: மனக் குரங்கு.

பகவானிடம் புதிதாக ஒன்றும் நாம் கேட்டுப் பெற வேண்டியதில்லை. நம்மிடம் இல்லாமல் அவனிடம் உள்ள ஏதோ ஒன்றைக் கேட்கவேண்டியதில்லை. நம்மிடமே இருக்கும்படியான நம் உண்மை ஸ்வரூபத்தை நாம் அறியவில்லை. நம்முடைய உண்மை ஸ்வரூபம் ஆனந்த மயமானது. பகவானேதான் அது. பரமாத்மாவேதான் அது. அப்படிப்பட்ட நம் நிஜ ஸ்வரூபத்தை மனத்தால் மறைத்துக்கொண்டு ஓயாமல் துக்கப்படுகிறோம். "என் உண்மை நிலையை உணர அருள்வாயாக! என்னை நான் அறிய முடியாதபடி, இந்த மனசு ஆட்டிப் படைக்கிறது. இதை அன்பினாலே கட்டி, கட்டுப்படுத்தி என்னிடம் கொடுத்தால் போதும். என் ஸ்வரூபத்தையே நான் காண முடியாமல் கெடுக்கும் இந்தக் கெட்ட மனப்போக்கை நீ எடுத்துப் போ. என் ஸ்வரூபத்தையே எனக்களித்து அதைக் காக்க வேண்டிய காவலன் நீ!" என்று பிரார்த்திப்போம்.

'தாய் விட்டபடி' என்றிருக்கும் பூனைக் குட்டிபோல் பகவானை சரணமடைய நமக்குப் பக்குவமில்லை. குரங்காகத் திரிகிறது நம் மனசு. ஆனாலும் குரங்குக் குட்டிபோல் அவனை பற்றிக்கொள்ளவும் நமக்குப் பக்குவமில்லை. குரங்கு குட்டியாக இருந்துகொண்டே, பூனயம்மாவின் ரக்ஷணையைக் கேட்பவர்களாக இருக்கிறோம்! ஆகவே, ஆசார்யாளின் மூன்றாவது வழியைப் பின்பற்றி நாமும் "மனத்தை நீயே அடக்கி அருள்வாய்" என்று பிரார்த்திப்போம்.

இது முதலில் ஸதாகாலப் பிரார்த்தனையாக இருக்காது. ஸதாவும் பிரார்த்திக்கிறோம் என்றால், எப்போதும் அவனை விடாமல் பிடித்துக்கொண்டு மார்க்கட கிசோரமாக

இருக்கிறோம் என்றாகிவிடுமே! நமக்குத்தான் அவ்வளவு யோக்கியதை இல்லையே! ஆனாலும் ஏதோ கொஞ்சம் தவிப்பு, உருப்படவேண்டும் என்ற கவலை உண்டாகிவிட்டதல்லவா? ஏதோ ஒரு நிலையில், இரண்டு நிமிஷமாவது பிரார்த்தனை என்று பண்ணத் தோன்றுகிறதல்லவா? அப்போது இந்தப் பிரார்த்தனையைப் பண்ணிக்கொள் என்று ஆசார்யாள் வழி காட்டுகிறார்.

"நான் முழுதும் குரங்காக இல்லை. மற்ற எல்லா விஷயத்திலும் மனசு குரங்காகத் திரிந்து கொண்டிருந்தாலும் உன்னைப் பிடித்துக்கொள்கிற விஷயத்தில் மட்டும் அப்படி இல்லை. வரனுக்கு எல்லா qualifications-வும் [தகுதியும்] இருக்கிறது; ஆயுள் பாவம் மட்டுமில்லை என்கிற மாதிரி, எதில் முக்கியமாகக் குரங்காக இருக்க வேண்டுமோ, அது ஒன்றைத் தவிர பாக்கி எல்லாவற்றிலும் குரங்காக இருக்கிறேன்! அதனால் இந்த விஷயத்தில் நீதான் தாய்ப் பூனை மாதிரி செய்யவேண்டும். ஆனாலும் நான் முழு குரங்குக்குட்டியாக இல்லாதபோது உன்னை மட்டும் முழு தாய்ப்பூனையாக இருக்கச் சொன்னால் அது நியாயமில்லை. உன்னிடம் அவ்வளவு பெரிய அநுக்ரஹம் எதிர்பார்க்க எனக்கு யோக்கியதை இல்லை. அதனால் ஒரேயடியாக நீ என்னை ஆட்கொண்டு நடத்திக்கொண்டு போ என்று நான் சொல்லவில்லை. ஆனால் என் அலைபாயும் குரங்கு மனஸையும் ஏதோ கொஞ்சம் சரிபண்ணிக் கொண்டு நான் இந்த நிமிஷம் உன்னைப் பிரார்த்திக்க வந்திருக்கிறேன் அல்லவா? இந்தப் பிரார்த்தனை இன்னம் வலுப்பதற்குப் பக்திக் கயிற்றால்

சற்று என்னைக் கட்டிப் போடு. உன்னை விட்டுவிட்டு அந்த கயிற்றின் நீளத்திற்கு நான் ஓடிக்கொண்டுதான் இருப்பேன். நீயும் அந்த அளவுக்கு ஆட்டம் பார். ஆனால் ஒரேயடியாக உன்னிடமிருந்து நழுவிப் போவதற்கு விடாதே. இம்மாதிரி, உன்னுடனேயே ஒட்டிக்கொண்டிராவிட்டாலும், உன்னை விட்டு ஒரே ஓட்டமாக ஓடாமல் நீ என்னைக் கொஞ்சம் விட்டுப் பிடித்தால், அதுவே இந்த ஸ்டேஜில் எனக்குப் போதுமானது. உன்னை நான் விடாமல் மார்க்கட கிசோரமாகப் பிடித்துக் கொள்வதோ, நீ என்னை விடாமல் பிடித்துக்கொள்வாய் என்று பூர்ணமாக நம்பி நான் எந்த பாரமும் இல்லாமல் மார்ஜார கிசோரமாகக் கிடப்பதோ – இந்த இரண்டில் எதுவோ ஒன்று எப்போது வாய்க்கிறதோ அப்போது வாய்த்துவிட்டுப் போகட்டும். இப்போதைக்கு ஒரு நிமிஷம் நான் குரங்குக் குட்டியாக இந்த பிரார்தனையாவது பண்ணுகிறேன் அல்லவா? இதற்குப் பிரதியாக நீயும் கொஞ்சம் தாய்ப் பூனையின் ஸ்வபாவத்தைக் காட்டி என்னை இன்னம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறப் பண்ணுவதற்கு எண்ணு. அதாவது, எனக்கு உன்னிடம் உள்ள அன்பை, பக்தியைக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்துக் கொண்டு போகப் பண்ணு" என்றிப்படிப் பிரார்த்தனை பண்ண வேண்டும்.

முதலில், நாமிருக்கிற நிலையில், "பக்தியைத் தா" என்று பிரார்த்தனை பண்ணுவோம். பக்தி வந்தபின் பிரபத்தியில் எது, மர்க்கட கிசோரமா, மார்ஜார கிசோரமா என்பதைப் பார்த்துக் கொள்ளலாம். அந்த இரண்டுக்குமே மூலாதாரமாக பக்தி அல்லவா இருந்தாக வேண்டும்?

இரண்டுமே கலந்து கலந்துதான் வருகிறது என்கிறமாதிரி, ஆசாரியாள் ச்லோகத்திலிருந்து தொனிக்கிறது. பிரார்த்தனை என்று ஒன்றைப் பண்ணுகிறோம் என்ற அளவுக்கு நாம் குரங்குக் குட்டியாக அவனைத் துளி பிடித்துக் கொள்ளத்தான் செய்கிறோம். ஆனால் பிடிப்பு உறுதியாக இல்லை. பிடி நழுவி நாம் விழுந்துவிடுகிற ஸ்திதியில்தான் இருக்கிறோம். இப்போது, அதாவது நம் முயற்சி போதாதபோது, அவனே பூனையம்மாவைப்போல் நமக்கு உறுதி தர வேண்டியிருக்கிறது என்ற உணர்வைப் பெற வேண்டும். "நான் நழுவி விழாமல் பக்திக் கயிற்றைப் போட்டுக் கட்டிப் பிடித்துக் கொள் -- த்ருடம் பக்த்யா பத்த்வா பவத் அதீனம் குரு" -- என்று வேண்டிக் கொள்ள வேண்டும்.

"உன் அருள் என்ற கயிற்றால் கட்டிப் போடு" என்று ஆசார்யாள் சொல்லவில்லை. அப்படிச்சொன்னால், அவனே பூனை கவ்விக் கொள்கிற மாதிரி நம்மைக் கயிற்றால் தன் வசத்தில் வைத்துக் கொண்டு, நம்மை உய்விக்கிற பொறுப்பைத் தானே வைத்துக்கொண்டு விடுகிறான் என்று ஆகிவிடும். பக்த்யா பத்த்வா என்றே சொல்கிறார். அதாவது "உன் அருளால்" கட்டு என்று சொல்லாமல், "என் பக்தியாலேயே என் மனஸைக் கட்டு" என்கிறார். "பக்தி வலையில் படுவோன்" என்று மாணிக்கவாசகர் சொன்ன மாதிரி ஆசாரியாள் சொல்லவில்லை. அதாவது நம்மை விட்டு ஓடிக்கொண்டிருக்கிற அவனையே நாம் பக்திக் கயிற்றால் கட்டுகிறோம். அல்லது பக்தி என்ற வலைக்குள் பிடித்துவிடுகிறோம் என்று சொல்லவில்லை. இப்படிச்

சொல்லியிருந்தால் அது முழுக்க மர்க்கட கிசோர நியாயமாக ஆகிவிடும்.

இரண்டும் இல்லாமல், இரண்டும் கலந்த மாதிரி ஆசாரியாள் சொல்கிறார். பக்தியால் அவனைக் கட்டுகிற பக்குவந்தான் நமக்கு இல்லையே! அதனால் இப்போது இந்த ஆரம்ப நிலையில் பக்தியையே அவன்தான் தரவேண்டும். நாம் பக்தியே செய்யாமல் அவனே நம்மை ஒரேயடியாக உய்வித்து மோக்ஷத்தில் சேர்த்துவிட வேண்டும் என்றும் எதிர்பார்க்கக்கூடாது. அது ரொம்பவும் தகாத ஆசை. அதனால் 'பக்தியைக் கொடு; அப்படிக் கொடுப்பதே உன் அருள்தான்' என்று வேண்டிக் கொள்ள வேண்டும். "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்று மாணிக்கவாசகரும் சொல்கிறது போல, அவன் தன் அருளால் நேரே மோக்ஷத்துக்குத் தூக்கிவிடாமல், முதலில் நாம் அவனை பக்தி பண்ணுகிறதற்கே அருள்செய்ய, அப்புறம் நம் பக்திக்கு இரங்கி மோக்ஷம் தரவேண்டும். இப்படிப் புருஷப் பிரயத்தனமும், தெய்வாநுக்ரஹமும் கலந்து வந்தால்தான் நன்றாயிருக்கிறது.
நியாயாமயிருக்கிறது. இப்போது நமக்குச் சுரக்க வேண்டிய அன்பை (பக்தியை)யே அவன் ஒரு கயிறாகத் தரட்டும். பக்தியால் நாம் அவனைக் கட்டுவதும் கட்டாததும் பிற்பாடு நடக்கிறபடி நடக்கட்டும். இப்போதைக்கு அவனே நாம் பக்தியை விட்டுவிடாத மாதிரி, அதனால் நம்மைச் சுருக்குப் போட்டுக் கட்டிவிடட்டும் –என்றிப்படி மார்க்கட கிசோர நியாயமாகவும் இல்லாமல், மார்ஜார கிசோர நியாயமாகவும் இல்லாமல், ஒரு வழியை ஆசார்யாள் சொல்லிக் கொடுக்கிறார்.

"பிரபத்தியில் இப்படியா அப்படியா? குரங்குக் குட்டியாகப் பற்றிக்கொள்ள வேண்டுமா, அல்லது பூனைக் குட்டியாகத் தன் செயல் இல்லாமல் கிடக்க வேண்டுமா?" என்று வாதம் செய்து சண்டை போட்டு, ஏதாவது ஒன்றை நிலைநாட்டி விடலாம். ஆனால் அது வெறும் வாதமாகத்தான் இருக்குமே தவிர, காரியத்தில், நம்மில் அபூர்வமாக லக்ஷத்தில் ஒருத்தனைத் தவிர எவராலும் இரண்டு விதங்களில் எதிலும் சரணாகதி பண்ண ஸாத்யப்படாது. இதற்காக நாம் மனம் தளர்ந்து விடாமல், நம் நிலையிலும் ஸாத்யப்படுகிறமாதிரி, "பக்தி வரம் தா அப்பா!" என்று பிரார்த்திக்க, ஆசார்யாள் வழி சொல்லிக் கொடுக்கிறார்.

இப்போதைக்கு இந்த மூன்றாவது வழியில், நிஜ பக்தியைக் கொடு என்று பிரார்த்தனை பண்ண முடிந்த மட்டும் பண்ணுவோம். அப்புறம் அது முதலில் சொன்ன இரண்டு வழிகளில் எதில் கொண்டு சேர்க்கிறதோ, அல்லது பகவத்பாதாளின் ஞான மார்க்கத்தில்தான் சேர்கிறதோ, அப்படிச் சேர்த்துவிட்டுப் போகட்டும். எந்த நதியானாலும் முடிவில் அதை ஸமுத்ரம் எடுத்துக்கொள்கிற மாதிரி எந்த வழியானாலும் அதன் முடிவில் ஒருவனேயான பரமாத்மா நம்மை எடுத்துக்கொள்வான்.

"என் மனஸைக் கட்டி உன் ஆதீனத்திலேயே வைத்துக்கொள்ளு" என்று இங்கே நம்முடைய பக்தி பாவத்தை ஈச்வரப் பிரஸாதமாகவே ஆசார்யாள் விட்டுவிடுகிறார். அவரது பாஷ்யங்களிலும், அத்வைத பிரகரண கிரந்தங்களிலும் ஈச்வர ஆராதனத்தை மனம் ஒருமைப்படுவதற்காக அவர் உபாயமாகச் சொல்லியிருந்தாலும், ஈச்வரனின் அருளாலேயே பக்தியும்

ஸம்பாதித்துக் கொள்ளப்படவேண்டும் என்று சொல்லவில்லை. அந்த அத்வைத நூல்கள், ஞானவிசாரமும், ஆத்ம தியானமும் செய்யக்கூடிய பக்குவம் பெற்றவர்களுக்கு ஏற்பட்டது. இங்கே "சிவானந்த லஹரி"யில் நம் எல்லோராலும் முடிந்த பக்தி மார்க்கத்தைக் காட்டுவதால் இந்த மாதிரி சொல்கிறார். பக்தியினால் (உபாஸனையால்) ஸாதகனே மனஸைக் கட்டவேண்டும் என்று ஞானப் புஸ்தகங்களில் சொன்னார். இங்கே ஈச்வரனிடம், "அப்பா, பக்தியைத் தந்து, அதனால் எங்கள் மனஸைக் கட்டிப்போடு" என்று அவனிடமே விட்டுவிடுகிறார் ஆசார்யாள்.

"ஹ்ருதய கபிம் அத்யந்த சபலம்" என்று ஆசார்யாள் சொல்கிறபடி, மகா சபலத்துடன் தாவிக்கொண்டேயிருக்கிற மனக் குரங்கை ஈச்வரன் கட்டி வைத்து, முதலில் அது கயிற்றின் நீளத்துக்குத் தாவுகிற மாதிரி விட்டுப் பிடித்தாலும், அப்புறம் அது அவன் ஆட்டினால்தான் ஆடுவது என்று குரங்காட்டியின் குரங்கு மாதிரிச் சும்மா இருக்கிறபடி செய்துவிடுவான். மனஸ் இப்படித் துளிக்கூடத் தானாக நகராதபோது, அதை அவனும் ஆட்டி வைக்காவிட்டால், அதுதான் மனமே அழிந்துபோய் ஆத்மா மட்டும் பிரகாசிக்கற அத்வைத சித்தியான மோக்ஷம். இப்படிப்பட்ட அத்வைதத்தைத் தருவதும் பரமாத்மாவின் கையில்தான் இருக்கிறது என்கிற மாதிரி இங்கே கயிற்றை அவன் கையிலேயே கொடுத்திருக்கிறார்! இந்த ச்லோகம் பக்திப் பிரார்த்தனையாக இருக்கும்போதே அதற்குப் பலனாகப் பரமாத்மா ஞான மோக்ஷத்தைக்

கொடுக்கவும் செய்யலாம் என்கிற அபிப்பிராயத்தையும் கொடுக்கிறது.

பின்னாடி ஒரு ச்லோகத்தில் இந்த அபிப்பிராயம் இன்னம்கூட ஸ்பஷ்டமாக வருகிறது. அந்த ச்லோகத்தில் மனஸை ஒரு மதயானைக்கு ஒப்பிட்டுவிட்டு, "இந்த யானையை ஞானம் என்கிற கருவியால் உன் பாதமான தறியில் கட்டிவிடு" என்கிறார்: "ஹ்ருதய மதேபம் பதான சித்யந்த்ரை:

இங்கே "பக்த்யாபத்த்வா" (பக்தியினாலே கட்டி) என்றவர் அங்கே "பதான சித்யந்த்ரை:" (ஞானத்தால் கட்டு) என்கிறார். பக்தியைத் தருவது, ஞானத்தைத் தருவது, அதனால் முடிவில் அத்வைதத்தையே தருவது ஆகிய எல்லாமும் பரமாத்மப் பிரஸாதமாகவே கிடைக்கக் கூடியவை என்று இதிலிருந்து தெரிகிறது. நமக்கு அவன் பக்தியைத் தந்து, நாம் அவனை பக்தி பண்ணிக் கொண்டிருந்தாலே, அவன் ஞான மோக்ஷாதிகளைக் கொடுத்துவிடுவான் என்ற தாத்பரியம் ஏற்படுகிறது.

அந்த பக்தியை முதலில் பிரார்த்திப்போம். அதனால் இரண்டில் ஒரு தினுஸான சரணாகதி ஸித்திக்கும். அவன் விட்ட வழி என்று, நம் மனஸுக்கென்று ஆசையும் ப்ளானும் இல்லாமல் விட்டுவிடுவதுதானே சரணாகதி? இதுவும் ஞான மார்க்கத்தில் மனஸின் ஓட்டமே இல்லாத நிலை என்று சொல்லப்படுகிறதும் ஒன்றேதான். ஆத்ம விசாரத்தால் மனஸை நிறுத்துவதற்குப் பதில் இங்கே பக்தியால், அன்பினால் நிறுத்துகிறோம்.

பக்தி மார்க்கத்திலே சொல்லப்படும் இரண்டு விதமான சரணாகதிகளானாலும் சரி, ஞான மார்க்கத்திலே சொல்லப்படும் மனோ நாசமானாலும் சரி, எதற்கும் முதலிலே வழியாக இருப்பது பக்திதான். அதனால், ஆசார்யாள் சொல்லிக் கொடுக்கிற மாதிரியே --நாம் இப்போதுள்ள ஸ்திதியில் --"இந்த என் மனக்குரங்கை பக்தி என்ற கயிற்றால் திடமாகக் கட்டி, உன் ஆதீனத்தில் வைத்துக் கொள்ளப்பா" என்று பரமாத்மாவிடம் பிரார்த்தனை செய்வோம்.

மே ஹ்ருதயகபிம் அத்யந்த சபலம்

த்ருடம் பக்த்யா பத்த்வா

சிவ பவத் அதீனம் குரு விபோ ||

* * "சிக்ஷை : வேதத்தின் மூக்கு" என்ற உரையில் "உச்சரிப்பு விதிகள்" என்ற பிரிவு பார்க்க

வேத மதம் ஹிந்துமதத்தின் ஆதார நூல்கள்

நம் அறியாமை

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேத மதம்

இந்து மதத்தின் ஆதார நூல்கள்

நம் அறியாமை

உலகத்தில் புஸ்தகங்கள் நிறைய இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விஷயத்தைச் சொல்லுகிறது. ஒவ்வொரு மதத்தினரும் ஏதாவது ஒரு

புஸ்தகத்தைத்தான் நிரம்பவும் கௌரவமாக வைத்திருக்கிறார்கள். எல்லாம் புஸ்தகங்களேயானாலும், ஒரு புஸ்தகத்தை விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். அதில்தான் ஜன்மம் கடைத்தேறும் வழிகள் சொல்லப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தப் புஸ்தகத்துக்குப் பூஜை செய்கிறார்கள்; நமஸ்காரம் செய்கிறார்கள். சில மதஸ்தர்கள் அந்தப் புஸ்தகத்திற்கே தனியாகக் கோயில்கட்டி வணங்குகிறார்கள். ஸீக்கியர்கள் அவ்வாறு செய்து வருகிறார்கள். அவர்களுடைய மதப் புஸ்தகத்தை அவர்கள் "கிரந்த ஸாஹேப்" என்று மரியாதையாகச் சொல்லுவார்கள். இப்படி ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் தங்கள் ஆத்ம க்ஷேமத்திற்கு வேண்டிய மார்க்கங்களைச் சொல்லும் ஒவ்வொரு புஸ்தகத்தைப் பெற்றிருக்கிறார்கள். இவை எல்லாம் ஒரு மதஸ்தாபகரின் பெயரில் இருந்தாலும், வாஸ்தவத்தில் பரமாத்வாவின் வாக்கேதான், பகவானின் ஆக்ஞைதான் அந்தந்த மதஸ்தாபகர் வழியாக வந்தது என்கிறார்கள். இதனால் இவற்றை Revealed Text என்கிறார்கள். இதையே நாமும் "அபௌருஷேயம்" என்கிறோம். புருஷர்கள் (மனிதர்கள்) தாமே செய்வது பௌருஷேயம். இப்படியில்லாமல் பரமாத்மாவே மனிதனைக் கருவி மாத்திரமாகக் கொண்டு வெளியிடுவது அபௌருஷேயம்.

சரி, நம்முடைய வைதிக மதத்திற்கு ஆதாரமாக எந்தப் புஸ்தகம் இருக்கிறது? மற்ற மதஸ்தர்களை 'உங்கள் மதப்புஸ்தகம் எது?' என்று கேட்டால் அவர்களுக்கு சந்தேகமில்லாமல், இன்னது என்று தெரியும். கிறிஸ்தவர்கள் பைபிள் என்பார்கள். முஹம்மதியர்கள்

குரான் என்பார்கள். பௌத்தர்கள் த்ரிபிடகம் என்பார்கள். பார்ஸியர் ஜெண்டவஸ்தா என்பார்கள். நம்மைக் கேட்டால் – இந்த காலத்தில் சைவர், வைஷ்ணவர், த்வைதி, அத்வைதி இன்னும் நம் தேசத்திலிருக்கப்பட்ட பல ஸம்பிரதாயத்தினருக்கும் பொதுவாக எந்த மதப்புஸ்தகம் இருக்கிறதென்றால் – எல்லோரும் சேர்ந்து எந்த ஒன்றைச் சொல்லலாம் என்பதே தெரியாமல் விழிக்கிறோம்! இதற்கு என்ன காரணம்?

முக்கியமான காரணம் ஒன்று இருக்கிறது. மற்ற ஜனங்களுக்கு எந்த மதத்தில் ஜனனம் ஏற்பட்டிருக்கிறதோ, அந்த மதத்தைப் பற்றிப் பள்ளிக்கூடத்திலேயே சொல்லிக் கொடுக்கிறார்கள். அல்லது மதப் படிப்பை முதலில் இரண்டு அல்லது மூன்று வருஷங்கள் படித்துவிட்டு அப்புறம் லௌகிகப் படிப்பைப் படிக்கிறார்கள். அதனால் சிறு பிராயத்திலேயே அவர்களுக்கு மதத்தைப் பற்றிய ஞானம் ஏற்பட்டு விடுகிறது. நம்முடைய மதத்தில் மதத்தைப்பற்றிப் படிப்பதே கிடையாது. அப்படி படிக்காததனால் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது? வேறு எந்த மதத்துக்காவது ஆள் வேண்டுமானால் நம்முடைய மதத்திலிருந்து பிடித்துக் கொண்டு போகிறார்கள். மற்ற மதஸ்தர்கள் தங்கள் மதத்திலிருந்து வேறொரு மதத்திற்கு போவதில்லை. காரணம் பால்யத்திலிருந்தே மத சாஸ்திரங்களை அவர்கள் படிக்கிறார்கள். அதனால் அதனிடம் பற்று ஏற்படுகிறது. நாமோ பால்யத்தில் கொஞ்சம்கூட எட்டிப் பார்ப்பது இல்லை. என்ன வாசித்தாலும் ஏறாத வயதில் நாம் வாசிக்கிறோம்.

நம்முடைய மதப்புஸ்தகங்களை நாமே தூஷிக்கிறோம், அழிக்கிறோம்.

நம் படிப்பெல்லாம் வெள்ளைக்கார முறையில் உள்ள படிப்பு. பேச்சு, டிரஸ், நடவடிக்கை எல்லாமே வெள்ளைக்காரர்களைப் போல இருக்க வேண்டுமென்பதுதான் நம் ஆசை. சுதந்திரம் வந்த பிறகும் இப்படியேதான் இருந்து கொண்டிருக்கிறோம். முன்னைவிட அதிகமாக வெள்ளைக்கார நாகரிகத்தையே நம் வாழ்முறையாக்கிக் கொண்டிருக்கிறோம். ஸ்வதேசியம், பாரத நாகரிகம், நம்முடைய தனிப்பண்பாடு என்று பேசுவதில் மட்டும் குறைவில்லை. உள்ளே பரதேசியாக இருந்துகொண்டு வெளியில் சுதேசிப் பேச்சுப் பேசி என்ன பிரயோஜனம்? உள்ளும் புறமும் சுதேசியமாக இருப்பதென்றால், நம் தேசத்துக்கு முதுகெலும்பாக அநாதிகாலம் தொட்டு இருந்து வருகிற மதவிஷயங்களை பால்யத்திலேயே சொல்லிக் கொடுத்தால்தான் அது ஸாத்யமாகும். 'ஸெக்யூலர் ஸ்டேட்'டில் [மதச்சார்பற்ற ராஜாங்கத்தில்] இதற்கு வழி பண்ணித் தரமுடியவில்லை! அதனால் பழைய வெள்ளைக்காரப் படிப்பே தொடர்ந்து வந்திருக்கிறது. அதில் சொல்லிக் கொடுப்தெல்லாம் நம்முடைய சாஸ்திரங்கள் 'ஸூப்பர்ஸ்டிஷன்' (மூட நம்பிக்கை) என்பதுதான்! இதனால், "நம் மதத்துக்கு ஆதாரமான புஸ்தகம் என்ன? ஹிந்துக்கள் என்ற பெயருள்ள ஸகலருக்கும் பொதுவாக என்ன இருக்கிறது?" என்று கேட்டால் கூட பதில் சொல்லத் தெரியாத நிலையில் இருக்கிறோம்.

விஷயம் தெரியாதவர்கள் மட்டந் தட்டினாலும், இதர தேசங்களிலுள்ள விஷயம் தெரிந்தவர்களும் ஆத்ம ஸாதகர்களும் நமது ஆத்ம வித்யையை (லௌகிகம் என்று தோன்றுகிற வித்யைகள்கூட நம் தேசத்தில் ஆத்மாபிவிருத்திக்கே ஸாதனமாக இருப்பதால் நம்முடைய அரசியல் சாஸ்திரம், எகனாமிக்ஸ், நாட்டிய சாஸ்திரம் உள்பட எல்லாம் ஆத்மவித்யை தான்) பாராட்டுகிறார்கள். தேடித் தேடி எடுத்துக் கொண்டு தர்ஜுமா (ட்ரான்ஸ்லேட்) பண்ணி வைத்துக் கொள்கிறார்கள். எனவே லோகத்தில் நமக்கு ஒரு கௌரவம் வேண்டுமானால், அது எதனால் நமக்குத் தன்னால் பிறரது மரியாதை கிடைக்கிறதோ அந்த சாஸ்திரங்களில் நம் அறிவை விருத்தி பண்ணிக் கொள்வதால்தான் ஏற்படும். ஸயன்ஸிலும் டெக்னாலஜியிலும் மற்றவர்களுக்கு மேல் நாம் பண்ணிக் கௌரவம் பெறமுடியாது. அப்படியே இரண்டொருத்தர் நம்மில் நோபல் பிரைஸ் வாங்கினாலும், இதனால் நாம் பூரிக்கலாமே தவிர லோகம் பூரிக்காது. "ஸயன்ஸும் டெக்னாலஜியும் நிறைவு தரவில்லை என்று நாம் ஹிந்துக்களிடம் போனால், அவர்கள் ஃபிலாஸஃபியை விட்டு விட்டு இதில் வந்து விழுந்திருக்கிறார்களே!" என்றுதான் நினைக்கிறார்கள். இந்தியாவில்தான், மற்ற அத்தனை தேசங்களின் மஹான்களைக் கூட்டினாலும், அதைவிட ஜாஸ்தியான மஹான்கள் தோன்றி ஆத்மானந்தத்தை அடைந்திருக்கிறாரகள் என்பதுதான் நம் பெருமை. அதற்கு ஆதாரமாக அவர்கள் கொடுத்துப் போயிருக்கிற சாஸ்திரங்களை நாம் தெரிந்து கொள்ளாமலிருப்பது ரொம்பக் குறைவான காரியம்.

நமக்கு ஆதாரமான மதப் புஸ்தகத்தின் பேரே தெரியவில்லை. "தெரியாததால் என்ன மோசம்? தெரிந்து கொள்வதால் என்ன லாபம்?" என்றுகூடக் கேட்கிறோம்.

பாரத நாகரிகம் என்று லோகம் பூராவும் கொண்டாடுகிற பெரிய ஸம்பிரதாயத்தின் வாரிசுகளாக வந்திருக்கிற நாம் இப்படி இருக்கலாமா? "நம் பண்பாடு என்னவானால் என்ன? பணம் தான் பெரிசு" என்று கண்டம் கண்டமாகப் பறந்து கொண்டிருக்கலாமா? இப்படி மற்ற தேசங்களுக்குப் போனவர்கள் பல பேர் என்னிடம் வருகிறார்கள். "நாங்கள் போயிருக்கிற தேசங்களில் உள்ளவர்கள் எங்களிடம் நம் மதத்தைப் பற்றி கேட்கிறார்கள். வேதத்தைப் பற்றி, உபநிஷத்தைப் பற்றி, கீதையைப் பற்றி, யோகத்தைப் பற்றி, கோயில்களைப் பற்றி, புராணங்களைப் பற்றி, இன்னம் இப்படி நம் மதத்திலுள்ள அநேக தத்வங்களைப் பற்றி ஆர்வத்துடன் கேட்கிறார்கள். எங்களுக்கு ஒன்றும் பதில் சொல்லத் தெரியவில்லை. அவர்களுக்குத் தெரிந்த அளவுகூட நம் மதத்தைப் பற்றி எங்களுக்குத் தெரியவில்லை. ரொம்பவும் அவமானமாக இருக்கிறது. அதனால் நீங்களாவது சுருக்கமாக நம் மத ஸித்தாந்தங்களை, தத்வங்களைப் புஸ்தகமாகப் போட்டுக் கொடுங்களேன்!" என்று கேட்டுக் கொள்கிறார்கள். அதாவது விதேசியமாக இருப்பதுதான் நமக்குப் பெருமை என்று நாம் நினைத்தாலும், அந்த விதேசிகள் நாம் இப்படியிருப்பதைப் பார்த்து மட்டமாகத் தான் நினைக்கிறார்கள். லோகத்துக்கெல்லாம் பழமையான ஒரு நாகரிகத்தவர்களுக்கு அதனிடம் பற்று போய்விட்டதே

என்ற நம்மைப்பற்றிக் குறைவாகத்தான் மற்றவர்கள் நினைக்கிறார்கள்.

நாம் எதையுமே படிக்காமல், எதுவுமே தெரிந்து கொள்ளாமல் இருந்தால்கூடப் பரவாயில்லை. ஏதோ அறிவு போதாத ஜனங்கள் என்று வைத்து விடுவார்கள். ஆனால் இப்போது நாம் படிப்பதும், பேசுவதும், எழுதுவதும் கொஞ்சநஞ்சமல்ல. அத்தனையும் ஸயன்ஸ், டெக்னாலஜி, அரசியல், வேறு தினுசான ஆராய்ச்சிகள், ஸினிமா, கண்ட கண்ட நாவல் என்று இப்படித்தான் இருக்கின்றன. அறிவு இல்லாத ஜனங்களாக இல்லாமல், நிறைய புத்தியைச் செலவழித்து நாம் இத்தனை படித்த போதிலும், எழுதிய போதிலும், நம் தேசத்துக்கே விசேஷமாயுள்ள அத்யாத்ம சாஸ்திரங்களைப் புறக்கணிக்கிறோம் என்பதாலேயே நம்மைப் பிற தேசத்தார் மிகவும் குறைவாக நினைக்கிறார்கள்.

ஏராள நூல்கள் நம் மத விஷயமாக உள்ளன. நமக்கு அதெல்லாம் வேண்டியிருக்கவில்லை. நாமும் நிறைய படிக்கிறோம். ஆனால் எல்லாம் தேசாந்தர புஸ்தகங்கள்தான். மில்டன், வேர்ட்ஸ்வொர்த் எழுதினதெல்லாம் நமக்குத் தெரியும். பவபூதி என்ன எழுதினார், ஒட்டக்கூத்தர் என்ன எழுதினார் என்றால் தெரியாது. லூயி டைனாஸ்டி, ஃஜார் டைனாஸ்டி நமக்குத் தெரியும்; ஸூர்ய வம்சம், சந்திர வம்சம் தெரியாது. ஏன், நம் கோத்ர ரிஷிகம் பேரே தெரியாது. நமக்கு ஸம்பந்தமில்லாதவை கட்டுக்கட்டாகத் தெரியும். ஆனால், எதைக் கண்டு லோகம் பிரமிக்கிறதோ, அதற்கு ஆதாரமான நம் சாஸ்திரங்களின் பேர்கூடத் தெரியாது.

சாஸ்திரக்ஞர்கள் சொல்ல வந்தாலும், நாம் காது கொடுத்துக் கேட்பதில்லை. அசட்டை செய்கிறோம். நம் தேசம் இப்படியொரு ஹீன ஸ்திதியில் இருக்கிறதே என்று ரொம்பவும் வேதனையாக இருக்கிறது.

'நம் பண்பாட்டைப் பற்றித் தெரிந்து கொண்டால் பணம் வருமா?' என்று நாம் கேட்டுக் கொண்டிருப்பதால் இப்படி ஆகியிருக்கிறது. வாஸ்தவத்தில் நாம் பணம் சம்பாதிப்பது, வாழ்க்கை நடத்துவது முதலான ஸகல விஷயங்களும் அந்தப் பண்பாட்டை நாம் பூரணமாகத் தெரிந்துகொண்டு, அநுஷ்டித்து, நிறைவு பெறவேண்டும் என்பதற்குத்தான்! என்ன காரணத்துக்காக நம் மதத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது தப்பான கேள்வி. அதற்கு காரணம், பிரதி பிரயோஜனம் எதிர்பார்ப்பது முழுப் பிசகு. நாம் செய்கிற எல்லாக் காரியங்களுக்கும் பிரயோஜனமாக இருப்பதுதான் மதமே தவிர, இதனால் வேறு பிரயோஜனம் வேண்டும் என்பதில்லை. மதானுஷ்டானத்தால்தான் எல்லாவற்றையும்விட மிகப் பிரயோஜனமான சாந்தமும், பிரேமையும், மோக்ஷமும் கிடைக்கிறது என்பதை மறந்துவிட்டு, அதனால் பணம் வருமா, வசதி கிடைக்குமா என்று மட்டும் பார்த்து, 'என்ன பிரயோஜனம்?' என்கிறோம். பற்று, பிரேமை இருந்துவிட்டால் இப்படி பிரதிப் பிரயோஜனம் எதிர்பார்க்கும் எண்ணமே எழாது. எதற்கு இது காரணமாக இருந்தால் நாம் இதை விரும்புவோமோ, அந்தப் பணம், வசதி முதலானவற்றையெல்லாம் இதற்கு காரணமாக வைத்துக் கொண்டு விடுவோம்.

சாஸ்திரத்தில் இப்படித்தான் சொல்லியிருக்கிறது.ப்ராஹ்மேணன நிஷ்காரணோ தர்ம:

ஷடங்கோ வேத அத்யேயோ ஜ்ஞேயச்ச என்று இருக்கிறது*. அதாவது, பிராம்மணனானவன் ஒரு காரணமும் இல்லாமலே வேதங்களையும், சாஸ்திரங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. சின்ன வயதில்தான் இப்படிக் காரணம் கேட்காமல், பிரயோஜனத்தை எதிர்பார்க்காமல் ஒன்றைச் சொல்லிக் கொடுத்தால் கற்றுக் கொள்ளத் தோன்றும். 'சரித்திரம் எதற்குப் படிக்கிறோம்? பூகோளம் எதற்குப் படிக்கிறோம்?' என்று கேட்காமலே ஒரு குழந்தை ஸ்கூலில் படிக்கிறபோதே, நம் மதக் கிரந்தங்களையும் சொல்லிக் கொடுக்க வேண்டும். பிற்பாடு காலேஜுக்குப் போகிறபோது இவன் ஒரு உத்தேசத்தை, பிரயோஜனத்தை நினைத்துத்தான் படிக்கிறான். வக்கீலாக வேண்டும் என்றுதான் பி.எல் படிக்கிறான்; வாத்தியாராக வேண்டும் என்றுதான் எல்.டி. படிக்கிறான்; டாக்டராக வேண்டுமென்றுதான் எம்.பி.,பி.எஸ் படிக்கிறான். லௌகிகமான பிரயோஜனத்தில் இப்போது ஆசை வந்துவிட்டது. அதனால் "மதப் புஸ்தகத்தை தெரிந்து கொண்டு என்ன ஆக வேண்டும்? தெரிந்து கொள்வதால் என்ன லாபம்?" என்றுதான் கேட்பான். அதனால் இந்தக் கேள்வி முளைப்பதற்கு முன்பே, பால்யத்திலேயே இந்த விஷயங்களை ஆரம்பித்து விடவேண்டும். அப்போது தானே பற்று ஏற்பட்டுவிடும். அப்புறமும் விடமாட்டான். பணம் காசைக் கொடுக்காவிட்டாலும் Sports-ல் (விளையாட்டில்) ஆசை உண்டாகிற மாதிரி, ஸங்கீதத்திலோ ஸினிமாவிலோ ஆசை உண்டாகிற மாதிரி, மதவிஷயத்திலும் ஏற்பட்டுவிடும். தாற்காலிகமான இன்பத்தைக் கொடுக்கிற விளையாட்டு,

விநோதங்களிலேயே இப்படி பிரதிப் பிரயோஜனம் எதிர்பார்க்காத பற்று உண்டாகிறது என்றால், சாச்வத சௌக்யத்தைக் கொடுக்கக் கூடியதான மதவிஷயத்தில் உண்டாகாமல் போகாது. ஆதாரக் கல்வி (Basic Education)யை நாம் சரியாக அமைத்துத் தராததில்தான் தோஷம் இத்தனையும் இருக்கிறது.

'மதத்தை பற்றித் தெரிந்துகொண்டால் அது சோறு போடுமா?' என்று கேள்வி கேட்கிற நிலைமை இன்று இருப்பது ரொம்ப அவமானம். 'அத்யயனம் [வேதப்பயிற்சி] சாப்பாடு போடுமா என்று கேட்காதே! நாம் சாப்பிடுவதும் உயிர் வாழ்வதும் அத்யயனம் பண்ணத்தான் என்று ஆக்கிக் கொள்ளு' என்று சாஸ்திரம் சொல்லியிருக்கிறது. காரணம் கேட்காமல் சாஸ்திரங்களைத் தெரிந்துகொள் என்கிறது.

இப்படிக் காரணம் கேட்காமல் படிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிற மதத்தில் குழந்தை பிறந்தவுடன் நம்முடைய வித்தையை அறிய முடியாமல் கத்தரித்துவிடுகிறோம்! லௌகிக வித்தையை எடுத்தவுடன் வாசிக்கச் செய்கிறோம். பால்யப் பருவத்திலிருந்தே குழந்தைகளுக்கு ஆஸ்திக புத்தி வரும்படி நாம் பழக்கலாம். இந்த விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்களில் குழந்தைகளுக்காக எவ்வளவோ செலவு செய்கிறோம். ஒரு தகப்பனார், தம்முடைய குழந்தைக்கு உபநயனம் செய்வதாயிருந்தால் டாம்பீக அம்சங்களுக்காக நூற்றுக் கணக்கில் செலவழிக்கிறார்.அந்தச் செலவில் பத்தில் ஒரு பங்கு உபநயனத்திற்காக ஏற்பட்ட காரியத்தில் செலவழித்து, அந்தப் பையனை நல்ல பிரம்மசாரியாக

உருவாக்கினால் நம்முடைய மதநம்பிக்கை போகாது. உபநயன வைபவத்தின் செலவைவிட உபநயன லக்ஷ்யத்திற்காகச் செலவு செய்வது விசேஷம். இந்த விஷயங்களில் பிரைவேட் டியூஷன் வைத்து குழந்தைகளுக்குச் சொல்லி வைக்கவேண்டும். அந்த விஷயங்களை அறிந்த வாத்தியார் மட்டும் ஏன் ஒருவித லாபமும் இன்றி இருக்க வேண்டும்? அவருக்கும் உபயோகமாக இருக்கும். மத விஷயங்கள் பால்யத்திலேயே தெரிந்திருந்தால் ஸந்தேஹமே வராது. நம் மதத்துக்கு ஆதாரமான புஸ்தகமே இன்னதென்று தெரியாத கேவல நிலை வராது.

அப்படி படிக்காததனால் பலவித அபிப்பிராயங்கள் நம்மவர்களிடத்தில் இருக்கின்றன. ஒருவர் ஆஸ்திகராக இருக்கிறார். வேறொருவர் நாஸ்திகராக இருக்கிறார். மற்றொருவர் பக்தி இல்லாமல் வெறும் கர்மாநுஷ்டானம் மட்டும் செய்கிறார். வேறொருவர் அநுஷ்டானமின்றி பக்தி மட்டும் பண்ணிக்கொண்டு இருக்கிறார். இவர்களுக்குள் ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதங்கள் ஏகப்பட்ட விதமாக இருக்கின்றன. இதற்காகச் சண்டை வேறு! ஸந்தேஹங்களோ ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. மதப்படிப்பை இளம் பருவத்திலேயே படித்திருந்தால் எல்லாருடைய அபிப்பிராயமும் ஒன்றாக இருக்கும். ஸந்தேஹம் இருக்காது. மதப்படிப்பைப் படிக்கிற மற்ற மதங்களில் இத்தனை கக்ஷிகள் இல்லை என்பதைப் பிரத்யக்ஷமாகப் பார்க்கிறோம்.

நம்முடைய மதப் புஸ்தகம் என்ன? புஸ்தகத்தைத் தீர்மானம் பண்ணுவதே இந்தக் காலத்தில் சிரமமாக

இருக்கிறது. நம்முடைய புஸ்தகம் எதுவோ அதில் சொல்லியிருக்கிறபடி நாம் அநுஷ்டானம் செய்து வந்தால் நமக்கு க்ஷேமம் உண்டாகும்.

மத க்ரந்தங்களில் எது சொல்லியிருக்கிறதோ அதே விஷயம் வேறு புஸ்தகங்களில் சொல்லியிருந்தாலும் தமது மதப் புஸ்தகம் இதுதான் என்று ஒன்றையே ஒவ்வொரு மதஸ்தர்களும் கொண்டாடுகிறார்கள். இன்றைக்கு ஒருவன் ஒரு புஸ்தகம் எழுதுவான்; நாளைக்கு ஒருவன் வேறு எழுதுவான். அவைகளில் நல்லதும் இருக்கலாம்; தப்பும் இருக்கலாம். ஆகையால் ஏதாவது ஒன்றை ஸ்திரமாக ஏற்படுத்திக் கொண்டால் நல்லதல்லவா? அதற்காகத் தான் பல மதஸ்தர்களும் தங்கள் தங்களுக்குப் பிரமாணமாக ஒவ்வொரு புஸ்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நமது மதம் என்ன என்பதை எந்த மதப் புஸ்தகங்களிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டும்? லைப்ரரிகள் கொள்ளாமல் லக்ஷக்கணக்கில் நம் மத விஷயமாக புஸ்தகங்கள் இருக்கின்றன. விஷயங்களும் அதிகமாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் பார்த்தால் மூளை குழம்பிப் போகும் போல் இருக்கிறது. ஒன்றுக்கொன்று அப்படி வித்யாஸம் இருக்கும். ஆனாலும், இதற்கெல்லாம் ஆதாரமாகப் பொதுவான ஒரு சில நூல்கள் உண்டு.

நம்முடைய மத அநுஷ்டானத்தால் நல்ல அனுபவத்தையடைந்தவர்கள் இருக்கிறார்கள். உலகத்தையே மறந்து ஆனந்தமாக ஏகாந்த நிஷ்டையில்

இருந்து கொண்டு, என்ன பன்னினாலும் பொருட்படுத்தாமல், சாந்த ஸமாதியில் சாகாமற் கிடந்தவர்கள் எத்தனையோ பேர். அவர்களை நாம் பிரத்தியக்ஷமாகவும் பார்க்கிறோம். புஸ்தகங்களின் மூலம் ஸதாசிவ பிரம்மேந்திரர்கள், பட்டினத்தார் முதலியவர்களைப் பற்றிக் கேட்டிருக்கிறோம். இவ்வளவு அநுபவிகள் மற்ற மதங்களில் மிகவும் குறைவு. இத்தகைய மதத்திற்குப் பிரமாண க்ரந்தங்கள் இல்லாமலா போகும்?

*வ்யாகரண மஹா பாஷ்யம், ப்ரதம பஸ்பசாந்ஹிகம்.

மதம் எதற்கு

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேத மதம்

மதம் எதற்கு?

மதம் எதற்கு? ஒரு மதகுரு சொல்லுவதை நாம் ஏன் கேட்கப் போகிறோம்? நமக்கு கஷ்டம் போவதற்காகவும் குறை நீங்குவதற்காகவும் போகிறோம். குறையில்லாவிட்டால் வேண்டியதில்லை. குறை அதிகமானால் அதிகமாகக் கோயிலுக்குப் போகிறோம்; அதிகமாகப் பெரியவர்களை தரிசிக்கிறோம்; உபதேசம் கேட்கிறோம். குறையில்லாவிட்டால் உபதேசம் வேண்டாம். நமக்குள்ள ஸந்தேஹங்களையும் கஷ்டங்களையும் போக்கிக் கொள்வதற்காக நாம் பெரியவர்களிடம் போகிறோம்; புஸ்தகங்ளை வாசிக்கிறோம்; நல்லவர்களிடம் உபதேசம் பெறுகிறோம்;

மஹாக்ஷேத்திரங்களுக்குப் போகிறோம்; தீர்த்த ஸ்நானம் செய்கிறோம். அப்படி செய்வதால் மனது கொஞ்சம் கொஞ்சமாக சாந்தி அடைகிறது. முழுவதும் சாந்தி அடைந்தவர்கள் வெட்டினாலும் குத்தினாலும் பூஷித்தாலும் தூஷித்தாலும் ஆனந்தமாக இருக்கிறார்கள். புஸ்தகம் வாசித்தல், குரு தரிசனம் செய்தல் முதலியவற்றால் மற்றவர்களுக்கும் தாற்காலிகமாவது இந்த சாந்தி ஏற்படுகிறது. எல்லா ஜாதிகளிலும் மஹான்கள் கிளம்புகிறார்கள்; மனதில் சாந்தி அடைகிறார்கள். இந்த சாந்திக்குரிய மார்க்கத்தைத்தான் "மதம்" என்பது. இதன் இன்னொரு பேர் "தர்மம்" என்று சொல்வார்கள். தர்மமானது சிரேயஸுக்கு ஸாதனம். அதுதான் மதம்.

தர்மம் என்பது பின்பு லோகத்திலேயே க்ஷேமமாக இருக்கவேண்டி அநுஷ்டிப்பது. பின்பு இது வேண்டும் என்ற ஆசையில்லா விட்டால், லோகத்தில் க்ஷேமத்தை எதிர்பார்க்காமல் அநுஷ்டித்தால் அதுவே மோக்ஷத்தைத் தரும். அதுதான் மதம்.

மதத்தை "தர்மம்" என்றே சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. வாழ்க்கை பூர்ணத்வம் அடைவதற்கான அறநெறிகள் என்னவோ அவைதான் "தர்மம்" என்பது. அப்படிப்பட்ட தர்மம் என்ன என்று சொல்கிற நூல்கள் நமக்கும் இருக்கின்றன. நாம்தான் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறோம். தர்மத்துக்கு ஆதாரமான விஷயங்களைச் சொல்வதால், இந்த நூல்களுக்கு தர்ம பிரமாணங்கள் என்று பெயர்.

பிரமாணம் என்றால் இதுதான் 'அதாரிடி'யானது, சரியானது, ஸத்தியமானது என்று நிலைநாட்டிச் சொல்வது. இப்படி, ஹிந்து மதம் என்று தற்போது வழங்குகிறதும், ஸநாதனமாக வேத காலத்திலிருந்து வந்திருப்பதுமான தர்மம் என்ன என்பதை எடுத்துச் சொல்கிற, ஆதார நூல்கள், சாஸ்திரங்கள் பதினான்கு இருக்கின்றன.

தர்மம் அல்லது மதம் என்பதன் கொள்கை என்ன, அநுஷ்டானம் என்ன என்று ஸத்தியமாகத் தெரிவிக்கிறது தான் தர்ம ப்ரமாண புஸ்தகங்கள். அவை இன்னவென்று நமது சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது:

அங்கானி வேதாச் சத்வாரோ மீமாம்ஸா ந்யாய விஸ்தர:|

புராணம் தர்ம சாஸ்த்ரம் ச வித்யா ஹ்யேதாச் சதுர்தச ||
(மனு ஸ்ம்ருதி)

புராண-ந்யாய-மீமாம்ஸா-தர்ம-சாஸ்த்ர-அங்க மிச்ரிதா:|

வேதா: ஸ்தானானீ வித்யானாம் தர்மஸ்ய ச சதுர்தச ||
(யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி)

'சதுர்தச' என்று இந்த இரண்டு ச்லோகங்களிலும் முடிவாக வருகிறது, 'சதுர்தச' என்றால் பதினான்கு. நமக்கு பிரமாண நூல்கள் பதினான்கு என்று இவற்றிலிருந்து தெரிகிறது. அறிவு இந்தப் பதினான்குக்குள் அடங்கியிருக்கிறது.

'வித்' என்றால் 'அறிவது' என்று அர்த்தம். நாம் ஸத்யமான தத்வத்தை அறியும்படியாகப் பண்ணும் அறிவு நூலே வித்யா. இப்படிப் பதிநாலு இருப்பதுதான் இந்த இரண்டு ச்லோகங்களில் "வித்யா ஹ்யேதாச் சதுர்தச" என்றும்,

"வித்யானாம் தர்மஸ்ய ச சதுர்தச" என்பதாகவும் சொல்லப்பட்டிருகிறது. அறிவு நூலுக்கு அறிவு நூல்; அற நூலுக்கு அற நூல். அதனால் தான் இந்தப் பதிநாலும் வித்யா ஸ்தானம், தர்ம ஸ்தானம் என்ற இரண்டு பேரையும் பெற்றிருக்கின்றன: "ஸ்தானானி வித்யானாம் தர்மஸ்ய ச சதுர்தச". 'வித்' - 'அறிவது' - என்றால், இங்கே கண்ட கண்ட விஷயத்தைத் தெரிந்து கொள்வது என்று அர்த்தமில்லை. ஸத்யத்தை அறிகிற ஞானமே 'வித்யா'வில் வரும் 'வித்'; 'வித்வான்' என்பதில் வரும் 'வித்', Wit, Wisdom என்பதெல்லாம் இந்த ரூட்டிலிருந்து வந்தவைதான். 'வித்' தாதுவிலிருந்தே 'வேதம்' என்பதும் வந்திருக்கிறது. வேதம் என்றால் நேர் அர்த்தம் Book of Knowledge என்று சொல்லலாம். அறிவைத் தருவதால் இந்தப் பதினான்குக்கும் வித்யாஸ்தானங்கள் என்று பெயர். "அறிவிற்கு இருப்பிடம்" என்பது அதன் அர்த்தம். அறத்துக்கு இருப்பிடமானதால் தர்ம ஸ்தானமாக இருப்பதே இப்படி அறிவுக்கும் இடமாயுள்ளது.

14 பிரமாண நூல்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேத மதம்

14 பிரமாண நூல்கள்

அந்தப் பதினான்காவன:- நான்கு வேதங்கள்; வேதங்களின் ஆறு அங்கங்கள்; அதோடு, மீமாம்ஸை, நியாயம், புராணம், தர்மசாஸ்திரம் என்ற நாலு.

வேதத்தைப் பற்றியும் ஆறு அங்கங்களைப் பற்றியும் reference-ஆவது கேட்டிருப்பீர்கள்.

"வேதமோ டாறங்க மாயினானை"

என்று தேவாரம் சொல்லுகிறது. நாலு வேதமும், ஆறு அங்கமுமான இந்தப் பத்தும் ஈச்வர ஸ்வரூபம் என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. இவை போக பாக்கி நான்கு: மீமாம்ஸை, ந்யாயம், புராணம், தர்மசாஸ்திரம்.

'சதுர்தசம்' என்றால் பதினான்கு. சதுர்–நான்கு; தசம்–பத்து, ஆகவே பதினான்கு தர்மப் பிரமாணங்களை "சதுர்தச வித்யா" என்பார்கள். இந்தச் சதுர்தச வித்தைகளை நளன் கற்றுக் கொண்டான் என்று [நள சரித்திரமாகிய] "நைஷத"த்தில் சொல்லி இருக்கிறது. அங்கே சிலேடையாக அந்த விஷயம் சொல்லப்படுகிறது. "நளன் சதுர்தச வித்தைகளுக்குச் சதுர்தசையைக் கொடுத்தான்" என்று வார்த்தை விளையாட்டுப் பண்ணியிருக்கிறார் கவி! சதுர்–தசமான இந்தப் பதினான்கு வித்தைகளுக்கும் நான்கு தசைகளை (சதுர்தசைகளைக்) கொடுத்தானாம்! அந்த நான்கு தசைகள்: படிப்பது, படித்ததை புரிந்து கொள்ளுவது, படித்ததன்படி நடப்பது, மற்றவர்களை நடக்கச் செய்வது என்பவை.

சதுர்தசத்வம் க்ருதவான் குத: ஸ்வயம்

ந வேத்மி வித்யாஸு சதுர்தசஸ்வபி||

(நைஷத காவ்யம், I)

இந்தப் பதினான்கு வித்தைகளிலே அறிவு அடங்கி இருக்கிறது.

இன்னும் நான்கு வித்தைகள் இருக்கின்றன. அவைகளையும் சேர்த்துக் கொண்டால் பதினெட்டாகும். அஷ்டாதசம் என்றால் பதினெட்டு. இந்த அஷ்டாதச வித்தைகளில் அடங்காதது ஒன்றுமேயில்லை. லோகத்திலுள்ள ஸகல வித்தைகளும் அவைகளுக்குள்ளே அடங்கிவிடும். இந்தப் பதினெட்டில் நேராக தர்மத்தைச் சொல்லுபவை முன்பு சொன்ன பதினான்குதான். மீதமுள்ள ஆயுர்வேதம், அர்த்த சாஸ்திரம், தநுர்வேதம், காந்தர்வ வேதம் ஆகிய நான்கும் நேராக தர்மத்தைச் சொல்வன அல்ல. ஆயினும் அவையும் அறிவு தருவதால் வித்யா ஸ்தானங்களாக மட்டும் உள்ளன. மேலே சொன்ன பதினாலோ தர்ம ஸ்தானம், வித்யா ஸ்தானம் இரண்டாகவும் இருப்பவை.

ஆத்ம லோகத்தில் இன்பத்தை அடைவதற்கு ஏற்பட்ட ஸாதனங்கள் இவை.

தர்ம ஸ்தானம், வித்யா ஸ்தானம் என்பதோடு இவற்றை எல்லாம் பொதுவில் "சாஸ்திரம்" என்கிறோம். சாஸ்திரம் என்பதற்கு அர்த்தம் 'கட்டளையாக இடப்பட்டிருப்பது' என்பது. ராஜாங்க சாஸனம் என்கிற போது, சாஸனம் என்றால் கட்டளை என்று அர்த்தம். தர்மபுத்திரருக்கு பீஷ்மர் தர்மக் கட்டளைகளையெல்லாம் எடுத்துச் சொல்கிற பர்வத்துக்கு மஹாபாரதத்தில், 'அநுசாஸன பர்வா' என்றே பெயர். ஐயனார் என்பவரை சாஸ்தா என்று சொல்வது, அவர் உத்தரவு போட்டுப் பரமேச்வரனின்

பூதகணங்களை எல்லாம் அடக்கி வைத்துக் கொண்டிருப்பதாலேயே! நம்மை ஒரு கட்டுப்பாட்டில், நெறியில் கொண்டு வந்து அடக்கி வைக்கிற கட்டளைப் புஸ்தகங்களே சாஸ்திரங்கள் எனப்படுபவை.

இந்தப் பதினாலும் நமக்கு ஆதார நூல்கள் என்றாலும், இவற்றில் வேதம்தான் தலைமையானது. மற்ற மதஸ்தர்கள் பைபிளை, குரானை, ஜெண்டவஸ்தாவை, த்ரிபிடகத்தை, க்ரந்த ஸாஹேபைத் தங்கள் மூல நூல் என்கிற மாதிரி நம் மதத்துக்கு எது என்றால், முக்கியமாக அது வேதம்தான்.

நாலு வேதத்தை மையமாகக் கொண்டு மற்ற பத்து வித்யைகளும் ஏற்பட்டிருக்கின்றன. இந்தச் சதுர்தச வித்யைகளுமே பூர்ணமாக நம் மதத்துக்கு சாஸ்திரங்களாகின்றன.
[பழைய பெருமையும் இன்றைய அவநிலையும்](#)

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேத மதம்

பழைய பெருமையும், இன்றைய அவநிலையும்

இந்தச் சதுர்தச வித்யைகளும் ஆதிகாலத்திலிருந்து வெள்ளைக்கார ஆட்சி ஏற்படுகிற வரையில் நம் தேசத்தில் போதிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இதிலே ஒரு ரஸமான சங்கதி சொல்கிறேன். ஃபாஹியன் என்றும் ஹுவான்(த்) ஸாங் என்றும் இரண்டு சீன யாத்ரீகர்கள், பல நூற்றாண்டுகளுக்கு முன் வெவ்வேறு சமயங்களில்

இந்தியாவுக்கு வந்து சஞ்சாரம் செய்து, இங்கே தாங்கள் பார்த்ததை எல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள் என்று உங்களுக்குச் சரித்திர புஸ்தகங்களிலிருந்து தெரிந்திருக்கும். இவர்கள் நாலந்தா, தக்ஷசீலம் ஆகிய இடங்களிலிருந்த பெரிய பெரிய வித்யாசாலைகளைப் பற்றி கொண்டாடி எழுதியிருக்கிறார்கள். புதைபொருள் ஆராய்ச்சியிலிருந்தும் இந்தப் பழைய யூனிவர்ஸிடிகளைப் பற்றித் தெரிகிறது. இவை முக்கியமாக மிகவும் பிரகாச நிலையில் இருந்தது பௌத்த மதம் செழிப்பாக இருந்த காலத்தில்தான். ஆனால் இவற்றில் என்ன பாடத்திட்டம் (syllabus) என்று பார்த்தால், சதுர்தச வித்யைதான்! புத்தமதப் புஸ்தகங்களையும் சொல்லிக் கொடுத்தார்கள். ஆனால் முதலில் வைதிக ஹிந்து மதத்தின் இந்த ஆதார புஸ்தகங்களை சொல்லிக் கொடுத்துவிட்டு அப்புறம்தான் புத்தமத நூல்களைப் போதித்திருக்கிறார்கள். அறிவு, அறம் இரண்டும் விருத்தியாவதற்கு இந்த வைதிகமான சாஸ்திரங்கள் எந்த மதஸ்தருக்கும் உதவுகின்றன என்பதாலேயே இப்படிச் செய்திருக்கிறார்கள். கல்விக்குக் கல்வி என்ற பேர் இருக்கவேண்டுமானால், இந்தப் பதினாலு வித்தைகளும் தெரிந்திருக்க வேண்டும் என்று பௌத்தர்களும் கருதியிருக்கிறார்கள்!

இங்கே நம் தக்ஷிணதேசத்தில் பார்த்தாலும், தமிழ் மன்னர்கள் ஏற்படுத்திய கடிகா ஸ்தானம், வித்யா ஸ்தானம் எனப்பட்ட கலாசாலைகளில் சதுர்தச வித்தைகள் போதிக்கப்பட்டிருக்கின்றன. கடலூருக்கும் பாண்டிச்சேரிக்கும் நடுவே 'பாகூர்' என்ற இடத்தில் இருந்த வித்யா சாலை பற்றி கி.பி. 868-ம் வருஷத்தியச்

செப்பேடுகள் ஐந்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே சதுர்தச வித்தைகள் சொல்லிக் கொடுக்கப்பட்டதாக இருக்கிறது. இதே போல், விழுப்புரத்துக்கும் திண்டிவனத்துக்கும் நடுவில் உள்ள 'எண்ணாயிரம்' என்ற ஊரிலும் 340 மாணாக்கர்கள் படித்த ஒரு வித்யசாலை இருந்ததாகவும், அங்கே இந்தப் பிராசீன சாஸ்திரங்களைச் சொல்லிக் கொடுத்ததாகவும் பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் ராஜேந்திர சோழனின் சாஸனம் ஒன்றிலிருந்து தெரிகிறது. இப்படிப் பல.

தமிழ் சரித்திரத்தை ரொம்பவும் ஆராய்ச்சி பண்ணி, அதைப் பற்றியே இப்போது கதைகள், நாவல்கள்கூட எழுத ஆரம்பித்திருந்தாலும், நான் விசாரித்துத் தெரிந்து கொண்ட மட்டில், தமிழ் மன்னர்கள் வேதசாஸ்திரங்களை ரொம்பவும் ஆதரித்துப் போஷித்தார்கள் என்பதை மட்டும் யாரும் எடுத்துச் சொல்வதாகத் தெரியவில்லை. Scientific outlook (பட்சபாதமில்லாமல், நடுநிலைமையாகச் சொல்வது) என்று பெரிதாகப் பேசுகிறார்கள்; ஆனாலும் வாஸ்தவத்தில் அப்படிக் காணோம்! வைதிகத்தை எதிர்த்து சண்டை போட்ட பௌத்தர்களே புத்தி வளர்ச்சிக்கும், தர்ம வளர்ச்சிக்கும் இந்தப் பதினாலு சாஸ்திரங்கள் அவசியம் என்று கற்றுக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் இப்போது நம் ஊரில் ஆஸ்திகர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் கூட (இப்போது இவர்கள் வேதசாஸ்திரங்களை அபிவிருத்தி பண்ணா விட்டால் போகட்டும்), எப்போதோ தமிழ் ராஜாக்கள் வேத சாஸ்திரங்களை ஆதரித்து விருத்தி பண்ணினதைக்கூடச் சொல்லக்கூடாது என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

ஆக, இப்போது நாம் இருக்கிற ஸ்திதி என்ன என்றால், "உங்கள் வித்யைகள் என்ன? என்று கேட்டால், சொல்லத்தெரியாதது மட்டுமில்லை. வித்தை என்றாலே என்ன என்று தெரியவில்லை. செப்படி வித்தை, மாந்திரீகம், magic தான் வித்தை என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்!

வித்யையும் கலையும் ஒன்றே. சந்திர கலை மாதிரி எப்போதும் வளர்ந்து கொண்டேயிருக்கிற அறிவுதான் கலா, கலை எனப்படுவது. இப்போது கலை என்றால் டான்ஸைத் தான் நினைத்துக் கொள்கிறோம்!

இப்படி நாம் இருக்கக்கூடாது; நம்மவரை கொஞ்சமாவது நம்மவராக்க வேண்டும் என்றே இந்தப் பதினாலு – அல்லது பதினெட்டு – வித்யைகளைப் பற்றி கொஞ்சம் சொல்லலாம் என்ற உத்தேசம். நிறையச் சொல்லவில்லை. பேராவது தெரியட்டும் என்று சிறிது சொல்கிறேன். அதனாலேயே சிரத்தை ஏற்படலாம்; மேலே தெரிந்து கொள்ள ஆர்வம் உண்டாகலாம்.

இந்தப் பதினாலிலே மீமாம்ஸை, வியாகரணம், சிக்ஷை, நியாயம் என்று சில விஷயங்களைச் சொல்லும்போது அலுப்பாக இருக்கலாம். இதனால் எல்லாம் என்ன பிரயோஜனம், வெறும் knowledge (அறிவு) ஆக இருக்கிறதே தவிர, ஆத்மார்த்தமாக இல்லையே என்று தோன்றலாம். இப்போது நாம் செய்கிறதெல்லாம் ஆத்மார்த்தமாகவா செய்கிறோம்? மணிக்கணக்காகப் பார்க்கிற நியூஸ் பேப்பரில் என்ன இருக்கிறது? அதிலே முழுசாக ஒரு பக்கம், இரண்டு பக்கம் "ஸ்போர்ட்ஸ்' என்று போடுகிறான்.

ஏதோ தேசத்தில் எவனோ விளையாடினான் என்று போடுகிறான். அதனால் நமக்கு என்ன லாபம்? ஆத்மார்த்தமாகத்தான் லாபம் உண்டா? அன்றாட வாழ்க்கைக்காவது பிரயோஜனம் உண்டா? ஆனாலும் விழுந்து விழுந்து படிக்கிறீர்கள், இல்லையா! ஒரு நாள், நான் பாட்டுக்கு நல்ல மத்தியான வேளையில் ரோடோடு வந்து கொண்டிருந்தேன். ஒரு கடை வாசலில் ஏகப்பட்ட கூட்டம். ரேடியோவில் நியூஸ் சத்தம் போட்டுக் கொண்டிருந்தது. அதற்காகத் தான் இத்தனை கூட்டம் என்று தெரிந்தது. [நியூஸ்] என்னவோ ஏதோ என்று விசாரித்தேன். எங்கேயோ பதினாயிரம் மைலுக்கு அப்பால் ஒரு தேசாந்தரத்தில் நடக்கிற கிரிக்கெட் நியூஸ்தான் என்று பதில் சொன்னார்கள். இப்படியெல்லாம் இந்த லோக வாழ்க்கைக்குகூட பிரயோஜனம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று, உங்களுக்குப் பிடித்த அநேக விஷயங்களுக்காகப் பொழுதையும், பணத்தையும், அறிவையும் செலவழிக்கிறீர்கள் அல்லவா? சிரமப்படுகிறீர்கள் இல்லையா? இதையெல்லாம் விட நிச்சயம் பிரயோஜனப்படுகிற நம் வித்யைகளைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்ளுங்கள் என்கிறேன். அவற்றிலே நேராக ஆத்மார்த்தமாகப் பலன் தருவதாக தோன்றாததும் கூட, அதிலே கொண்டுவிடுவதற்காக ஏற்பட்டதுதான். அறிவு வளர்ச்சிக்கு இதெல்லாம் அவசியம்; மனஸை பண்படுத்திக் கொள்ள இவை உதவுபவை. பகவான் கொடுத்திருக்கிற ஒரு செல்வம் நம் அறிவு என்பது. அதை நல்ல கல்வியாலும், ஆராய்ச்சியாலும் சாணை தீட்டித் தீக்ஷணமாக்கிக் கொண்டால், அதற்கப்புறம் அதில் பரமாத்ம ஸத்யம் பளிச்சென்று ஸ்புரிப்பதும் சுலபமாகும். இப்படியே

வாக்கு என்பதும் பகவத் பிரஸாதமாக மநுஷ்ய இனத்துக்கு மட்டுமே கிடைத்திருப்பது. அதைச் சரியாகப் பிரயோகிப்பதாலேயே பல க்ஷேமங்களை அடையலாம் என்பதால்தான் வாக்கைப் பற்றிய, சப்தத்தைப் பற்றிய வியாகரணம், நிருக்தம், சிக்ஷை, முதலிய சாஸ்திரங்கள் தோன்றியிருக்கின்றன. இவை எல்லாவற்றையும் பற்றி ஒரு அடிப்படை அறிவு (basic knowledge) எல்லோருக்கும் இருக்க வேண்டும் என்று என் ஆசை. அதனால் நம் வித்யாஸ்தானங்கள் ஒவ்வொன்று பற்றியும் சிறிது சொல்கிறேன்.

வேதம்

மதத்தின் மூலாதாரம் வேதமே

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

மதத்தின் மூலாதாரம் வேதமே

தர்ம பிரமாணங்கள் பதிநான்கில் பிரதானமானது வேதம். ரிக்-யஜுஸ்-ஸாமம்-அதர்வம் என்ற நாலு வேதங்களுந்தான் பதினான்கில் முதல் நாலாகும்.

பாக்கியுள்ள பத்தில் ஆறை வேதத்தின் அங்கம் என்றும், மிகுதியுள்ள நாலை உபாங்கம் என்றும் சொல்வார்கள்.

ஒரு மனிதன் என்றால், பல அங்கங்கள் இருக்கின்றன அல்லவா? இப்படியே வேதத்தை வேத புருஷன் (வேதமாதா என்றும் சொல்வதுண்டு) என்று உருவகப்படுத்தினால், அந்த புருஷனுக்கு ஆறு அங்கங்கள்.

இப்படி அங்கம் மாதிரி நேராக வேதத்தில் இருப்பவை என்று இல்லாவிடினும், வேத புருஷனுக்குத் துணை அங்கமாக இருக்கிற நாலும் உபாங்கங்கள். நேர் அங்கம் ஆறை ஷடங்கம் (ஷட்-ஆறு) என்பார்கள். இவை சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம் (ஜோதிடம்) , கல்பம் என்பவை. உபாங்கம் நாலு. மீமாம்ஸை, நியாயம், புராணம், தர்ம சாஸ்திரம் என்பவை.

ஆகக்கூடி வேதம்தான் முக்கியம். வேதத்துக்கு அங்கம், வேதத்துக்கு உபாங்கம் என்பதால்தான் மற்றப் பத்தும் வித்தைகளாக, சாஸ்திரங்களாக அந்தஸ்துப் பெறுகின்றன. பதினெட்டு வித்தைகள் என்கிறபோது மிச்சமிருக்கிற ஆயுர்வேதம், அர்த்த சாஸ்திரம், தநுர்வேதம், காந்தர்வ வேதம் இவற்றுக்கும் உப-வேதங்கள் என்றே பெயர் இருப்பதிலிருந்து, வேத அடிப்படையில்தான் இவையும் உண்டானவை என்று தெரிகிறது.

அங்கம், உபாங்கம் இவற்றோடுகூட வேதத்தைக் கற்க வேண்டும். அதற்கு 'ஸ அங்க உபாங்க அத்யயனம்' என்று பெயர். இதுவே "ஸாங்கோபாங்கம்" என்பது. இப்போது எந்த விஷயமாயினும், அரசியல் கட்சி விஷயமானாலுங் கூட, ஒருத்தர் அந்த விஷயத்தை அடியிலிருந்து நுனி வரை எல்லாப் பாயின்டுகளையும் எடுத்துக் காட்டிப் பேசினால் 'ஸாங்கோபாங்கமாகப் பேசினார்' என்கிறோம் அல்லவா? இந்த ஸாங்கோபாங்கம் என்ற சொல் பழைய சதுர்தச வித்யையைக் குறிப்பதுதான். அந்த வித்யாப்யாஸத்தை நாம் இப்போது அடியோடு மறந்துவிட்டாலும், வழிவழியாக அந்த பயிற்சிமுறை நம் நாகரிகத்தோடு கரைந்து விட்டதால் இன்றைக்கும்

பூர்த்தியாக ஒரு விஷயத்தை விளக்குவதனால் "ஸாங்கோபாங்கமாக" என்று சொல்கிறோம். இதிலிருந்தே வேதம், அதன் ஆறு அங்கங்கள், நாலு உபாங்கங்கள் ஆகியவற்றின் அப்பியாஸமானது ஸாதாரண ஜனங்களுக்கும் தெரிகிற அளவுக்கு எவ்வளவு சிறப்பாக நம் தமிழ் நாட்டில் இருந்திருக்கிறது என்று புரிந்துகொள்ளலாம். அப்படியெல்லாம் இருந்தும், இன்று அவற்றின் பேர் கூடத் தெரியாத நிலைக்கு வந்துவிட்டதுதான் இன்னம் ஜாஸ்தி துக்கத்தைத் தருகிறது. இது இருக்கட்டும்.

வேதந்தான் பிரதானம்; மையமானது. அதை வைத்துத்தான் மற்றவை. நேரான தர்மப் பிரமாணம் நம் மதத்துக்கு எது என்றால் வேதம்தான். அதுதான் நம் பைபிள், குரான், கிரந்தஸாஹேப். இப்போது நான் இப்படி அந்த மற்ற மத நூல்களின் பெயர்களை வேதத்துக்குச் சூட்டினாலும் வேதம்தான் அவை யாவற்றிலும் முந்தையது. அவை எல்லாமுங்கூட வேதத்தின் ஒரு சில தத்வங்களிலிருந்து உண்டானவை தான் *. எனவே வேதம் என்றால்தான் பிரமாணநூல் என்றே அர்த்தமாகி விட்டது. நான் இப்போது மாற்றிச் சொன்னாலும் பைபிளையும், குரானையும் – மற்ற மதங்களின் ஆதார நூல்களையும்தான் – கிறிஸ்துவ வேதம், முஹம்மதியர் வேதம், ஸீக்கியர் வேதம், பார்ஸியர் வேதம் என்று சொல்கிற வழக்கம் இருக்கிறது. கிறிஸ்துவர்கள் நம் ஊரில் தங்கள் பைபிளை "ஸத்ய வேதம்" என்றே சொல்கிறார்கள்.

வேதத்தைப் பற்றிச் சொல்வதென்றால், எங்கே ஆரம்பிப்பது, எங்கே முடிப்பது என்று மலைப்பாக இருக்கிறது. அத்தனை விஸ்தாரமான மகிமை வாய்ந்தது அது.

ப்ரமாணம் வேதாச்ச என்று ஆபஸ்தம்ப தர்ம ஸூத்திரத்தில் சொல்லியிருக்கிற மாதிரி, எல்லாத் தர்மங்களுக்கும் மூலமான பிரமாணம் நாலு வேதங்களும்தான்.

மநு தர்ம நூல், மநு தர்ம நூல் என்று ஒன்றைத் தமிழ் தேசத்து மஹான்கள் ஆதிகாலத்திலிருந்து போற்றி வந்திருக்கிறார்கள். பாரத தேசம் முழுவதிலுமே நீதிகளை எடுத்துச் சொல்வதில் மநுவின் தர்ம சாஸ்திரம்தான் முதல் ஸ்தானம் பெற்றிருக்கிறது. தமிழ் நாட்டில் மநுநீதிச் சோழன் என்றே ஒருவன் மஹா நீதிமானாக இருந்து கொண்டு, தன் பிள்ளையின் தேர்ச் சக்கரத்தில் மாட்டிக் கொண்டு உயிரை விட்ட ஒரு கன்றின் தாய்ப்பசுவுக்கு நியாயம் வழங்குவதற்காக, அந்த பிள்ளையையே தேர்க்காலில் பலி கொடுத்தான் என்று கதை இருக்கிறது. தர்ம விஷயங்களுக்கு மநுநீதி சாஸ்திரந்தான் பிரமாணம் என்றே வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த மநு தர்மசாஸ்திரத்தில் என்ன சொல்லியிருக்கிறது? இந்த நூல்தான் தர்மத்துக்கெல்லாம் மூலாதாரம் என்றா சொல்லியிருக்கிறது? இல்லை. "வேதோ (அ)கிலோ தர்ம மூலம்" –ஸகல தர்மங்களுக்கும் மூலம் வேதம்தான் – என்றே மநு சொல்லியிருக்கிறார் 1. எல்லாக் காலத்துக்கும் பொதுவான சாச்வத தர்மங்களைச் சொல்வது வேதம்தான் என்று அவர் சொல்லிவிட்டார். வேதம் எப்படி சொல்கிறதோ அப்படித்தான் செய்யவேண்டும். அது

சொல்வதை மீறக்கூடாது. ஏனென்றால், அதுதான் தர்மமூலம். யாராவது ஒன்றைச் சொல்லி அதை நாம் துளிக்கூட ஆக்ஷேபிக்காமல் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்றால், "அது என்ன வேதவாக்கோ?" என்று கேட்கிற வழக்கம் இன்றும் நம்மிடம் இருக்கிறது. அதாவது, வேத வாக்கு என்றால் எதிர்க் கேள்வி கேட்காமல் அதன்படி செய்துதான் ஆகவேண்டும் என்று அத்தனை பொது ஜனங்களும் நம்பி வந்ததைத்தான் "வேத வாக்கோ?" என்று கேட்கிற வழக்கு நிரூபிக்கிறது. இப்படி எத்தனையோ ஆயிரம் வருஷங்களாக அதுதான் நமக்கு பெரிய சட்டமாக இருந்திருக்கிறது. அதனாலேயே, வைரம் பாய்ந்த மரம் என்கிறோமே, அது மாதிரி, வேதம் வைரம் பாய்ந்ததாக இருக்கிறது. அநாதியாக வந்து கொண்டிருக்கும்படியான சட்டப் புஸ்தகம் அது.

* தெய்வத்தின் குரல் - முதற்பகுதியில் "பெயரில்லாத மதம்", "நம் மதத்தின் தனி அம்சங்கள்" என்ற உரைகள் பார்க்க.

1. மனு தர்ம சாஸ்திரம் II.6

அநாதி - அபௌருஷேயம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

அநாதி - அபௌருஷேயம்

அநாதியாக என்றால் என்ன அர்த்தம்? வேதத்துக்குக் காலமே சொல்ல முடியாது; அதற்கு முந்தையதாக, அதற்கு

ஆதியாக எதுவும் இல்லை என்பதுதான் 'அநாதி' என்ற வார்த்தைக்கு அர்த்தம். அப்படியானால் அது என்றுமே இருந்திருக்கிறது என்று அல்லவா அர்த்தமாகும்? இப்படிச் சொன்னால் எப்படிப் பொருந்தும்? ஒரு புஸ்தகம் என்றால் அதை ஒருவரோ பல பேரோதான் எழுதியிருப்பார்கள். "ஓல்ட் டெஸ்ட்மென்டில்" பல ப்ரா:ஃபெட்கள் சொன்னதைச் சேர்த்துப் போட்டிருக்கிறது. "நியூ டெஸ்ட்மென்டி"ல் கிறிஸ்துவின் உபதேசங்களைச் சொல்லியிருக்கிறது. முகமது நபி சொன்னதைத் குரான் தெரிவிக்கிறது. இவர்கள் யாவரும் ஏதோ ஒரு காலத்தில் இருந்தவர்கள்தான். அவர்களுக்கு முந்தி அந்த உபதேசம் இல்லை. இப்படியே வேதத்தையும் யாரோ ஒருத்தரோ, பல பேரோ எழுதியிருக்கவேண்டும். அவர்கள் ஒவ்வொரு காலத்தில் இருந்திருப்பார்கள். அது ரொம்ப ரொம்ப முந்தைய காலம், பதினாயிரம் வருஷத்துக்கு முந்தயை காலம், அல்லது லக்ஷம், பத்து லக்ஷம் வருஷத்துக்கு முந்தயை காலம் என்று வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனாலும் 'அநாதி' என்று சொல்லிவிட்டால் தப்புத்தானே? அந்தப் பத்து லக்ஷம் வருஷத்துக்கு முந்தி வேதம் இல்லாமல்தானே இருந்திருக்க வேண்டும்?

இந்த மாதிரி கேள்விகள் எழும்புகின்றன.

வேதங்களை யாரோ மநுஷ்யர்கள் எழுதினார்கள் என்றால் இப்படிக் கேட்பது நியாயம்தான். அதை அநாதி – ஆதியற்றது – என்பது தப்புத்தான். ஆனால் இது சரிதானா?

சரியாகத்தானே இருக்கவேண்டும்? ஒரு புஸ்தகம் என்றால் அதை யாரோ மநுஷ்யர்கள்தான் எழுதியிருக்க வேண்டும்.

அவர்கள் ஏதோ ஒரு காலத்தில்தான் தோன்றியிருக்க வேன்டும். அதனால் அநாதி என்பது சரியில்லைதான் – இப்படித் தோன்றுகிறது.

வேதத்தை ரிஷிகள் என்ற மநுஷ்யர்கள் பண்ணினார்கள் என்றுதான் நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். நாம் படித்த சரித்திர புஸ்தகத்தில் அப்படித்தான் போட்டிருக்கிறது. அதில் போட்டிருப்பது மட்டுமில்லை.

வேதம் என்பது பல ஸூக்தங்களைக் கொண்டது. ஞானஸம்பந்தரின் தேவாரம் என்றால் அதில் பல பதிகங்கள் இருக்கிற மாதிரி வேதத்தில் பல ஸூக்தங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பதிகத்திலும் பத்துச் செய்யுள்கள் இருக்கிற மாதிரி, ஒவ்வொரு ஸூக்தத்திலும் பல மந்திரங்கள் இருக்கின்றன. ஸு+உக்தம் என்பதே 'ஸூக்தம்'. 'ஸு' என்றால் 'நல்ல' என்று அர்த்தம். 'ஸுகுணம்', 'ஸுலோசனா' என்றெல்லாம் சொல்லுகிறோம் அல்லவா? 'உக்தம்' என்றால் 'சொல்லப்படுவது', அதாவது வாக்கு. ஸூக்தம் என்றால் நல்லவாக்கு என்று அர்த்தம்.

சாஸ்திரோக்தமாக வேதத்தைச் சொல்கிறபோது, அதிலிருக்கிற ஒவ்வொரு ஸூக்தத்துக்கும் இன்னார் ரிஷி, அது இன்ன மீட்டரில் (சந்தஸ்) இருக்கிறது, அது இன்ன தேவதையைக் குறித்தது என்று சொல்லிவிட்டுத்தான் ஆரம்பிக்கிறோம். இப்படி அநேகம் ரிஷிகளின் பெயர்களிலேயே வேத மந்திரங்கள் இருப்பதால், இந்த ரிஷிகள்தான் இவற்றைப் பண்ணியிருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். ஒவ்வொரு ரிஷியும் இன்னார் பிள்ளை, இன்ன கோத்திரம் என்று அவர்களுடைய மூதாதைகளைக்

குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறது. "அகஸ்த்யோ மைத்ராவருணி:" என்றால், மித்ரா வருணர்களின் பிள்ளையான அகஸ்தியர் என்று அர்த்தம். "மதுச்சந்தா வைச்வாமித்ர:" என்றால், விச்வாமித்ர கோத்திரத்தில் வந்த மதுச்சந்த ரிஷி என்று அர்த்தம். இப்படி ஒவ்வொரு ரிஷியின் பேரில் மந்திரங்கள் இருக்கின்றன என்றால், அகஸ்தியர் பேரில் இருப்பது அவரது தகப்பனாரான மித்ரா வருணர்கள் காலத்தில் இல்லை, மதுச்சந்தரின் பேரில் இருப்பது விச்வாமித்ரர் காலத்தில் இல்லை என்று தானே அர்த்தமாகும்? அப்படியானால் அநாதி என்பது சரியில்லைதானே?

இப்படியெல்லாம் கேட்கிறபோது, ஒவ்வொரு ரிஷியின் பேரில் வேத மந்திரங்கள் இருப்பதால் அந்த ரிஷியே அதைச் செய்தார், இயற்றினால், compose பண்ணினார் என்று தப்பாக நினைத்து விடுகிறோம். உண்மையில் அந்த ரிஷிகள் மந்திரங்களைத் தாங்களே இயற்ற வில்லை.

வேதத்துக்கு "அபௌருஷேயம்" என்றுதான் லக்ஷணம் சொல்லியிருக்கிறது. ஒரு புருஷன் அல்லது மநுஷ்யன் செய்திருந்தால் அது பௌருஷேயம். எந்த மனிதருமே செய்யாததனால் வேதம் அபௌருஷேயம். ரிஷிகள் இயற்றிருந்தாலும் அது பௌருஷேயமாகிவிடும். ஆனால் அபௌருஷேயம் என்பதால் ரிஷிகளும் வேத மந்திரங்களைப் பண்ணவில்லை என்று ஆகிவிட்டது. மந்திரங்களை ரிஷிகள் இயற்றியிருந்தால் அவர்களுக்கு அவர்களுக்கு "மந்திரகர்த்தா" என்றே பெயர் இருக்கும். ஆனால் வாஸ்தவத்தில் அவர்களுக்கு "மந்திரத்ரஷ்டா" என்றுதான் பெயர் இருக்கிறது. இதற்கு "மந்திரங்களைக்

கண்டவர்கள்" என்றே அர்த்தம்; செய்தவர்கள் என்று அர்த்தமில்லை.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார் என்றால் என்ன அர்த்தம்? அமெரிக்காவை அவரா உண்டு பண்ணினார்? இல்லை. ஏற்கெனவே இருந்த அமெரிக்காவை அவர் உலகுக்குத் தெரியும்படியாகப் பண்ணினார். இப்படியே தான் நியூடன், ஐன்ஸ்டீன் முதலிய எந்த விஞ்ஞானியும் புதுசாகச் சொல்கிற விதிகளை அவர்கள் செய்யவில்லை. நியூடன் சொல்லித்தானா ஒரு வஸ்துவை எறிந்தால் அது பூமியில் விழுகிறது? இல்லை. ஏற்கெனவே இருக்கிற விதிகளை இவர்கள்தான் புரிந்துகொண்டு லோகத்துக்குத் தெரிவித்தார்கள். அதே மாதிரி ஏற்கெனவே இருந்த மந்திரங்களைத்தான் அத்தனை ரிஷிகளும் கண்டுபிடித்து லோகத்துக்குக் கொடுத்தார்கள். அந்த மந்திரங்கள் இவர்களுடைய அப்பா, தாத்தா காலத்துக்கும், அதற்கும் முந்தியுங்கூட இருக்கத்தான் செய்தன. ஆனால் அப்போது அவை உலகுக்குத் தெரியவில்லை. இவர்கள்தான் அவற்றைக் கண்டுபிடித்தார்கள். அதனால் இவர்கள் பேரிலேயே அவற்றைச் சொல்வது வழக்கமாகிவிட்டது. ஒருத்தன் புஸ்தகம் எழுதுகிறான். இன்னொருவன் பப்ளிஷ் பண்ணுகிறான்; ஒருத்தன் ஸினிமா எடுக்கிறான்; இன்னொருத்தன் ரிலீஸ் பண்ணுகிறான். இப்படி மந்திரங்களை லோகத்துக்கு வெளியிட்டவர்கள் மட்டுமே தான் ரிஷிகள். ஏற்கெனவே அவை இருந்தாலும், நமக்குப் ப்ரயோஜனமாகிறபடி வெளிப்படுத்தி பரம உபகாரம்

பண்ணினது ரிஷிகள்தான். அதனால் அவர்கள் பெயரைச் சொல்லி நமஸ்காரம் பண்ணுவது நியாயம்தான்.

ரிஷிகள் மந்திரங்களைக் கண்டார்கள் என்றால், அதற்கு முந்தி அவை எங்கே இருந்தன? அநாதி என்றால் சிருஷ்டியின் போதே அவையும் தோன்றினவா? மநுஷ்யர்கள் தோன்று முன்பே தோன்றி விட்டனவா? எப்படித் தோன்றின? இவர்கள் கண்டுபிடிக்கிற வரையில் எங்கே இருந்தன?

வேத மந்திரங்கள் சிருஷ்டியின் ஆரம்பத்தில் தோன்றின என்றால், பரமாத்மா லோகத்தில் சிருஷ்டி பண்ணுகிறபோதே இதையும் தாமே பண்ணிவிட்டார் என்று அர்த்தம் ஆகும். பரமாத்மாவே வேதங்களை எழுதி எங்கேயாவது போட்டுவிட்டாரா? அப்புறம் ஒவ்வொரு ரிஷிகள் அதில் ஒவ்வொரு பாகத்தைக் கண்டெடுத்தார்களா? ஆனால் இப்படி சிருஷ்டி ஆரம்பத்திலேயே வேதம் இருந்ததாகச் சொன்னால்கூட அது அநாதியாகிவிடாது. ஏனென்றால் இப்போதிருக்கிற பிரம்ம சிருஷ்டி எப்போது உண்டாயிற்று என்பதற்கே கணக்கு இருக்கிறது. க்ருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் என்று ஒவ்வொன்றுக்கும் இத்தனை வருஷங்கள் என்று சொல்லியிருக்கிறது. இம்மாதிரி ஆயிரம் சதுர்யுகம் கொண்டது பிரம்மாவுக்கு ஒரு பகல்; ஆயிரம் சதுர்யுகம் ஒரு இரவு. இந்தக் கணக்குப்படி அவருக்கு இப்போது ஐம்பது வயசுக்கு மேல் ஆகிவிட்டது என்று திருத்தமாக இன்றைய வயசை சொல்லியிருக்கிறது. எந்தக் கர்மாவுக்கும் சங்கல்பம் செய்து கொள்ளும்போது, ஒரு பத்திரம் எழுதினால் அதில் தேதி போடுகிற மாதிரி,

அன்றைய தினத்தைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். இப்படிச் சொல்லும்போது பிரம்மாவின் இத்தனாவது வயசில், இத்தனாம் மாசத்தில், இன்ன பக்ஷத்தில், இன்ன நாளில், இன்ன யாமத்தில் என்று சொல்கிறோம். இதிலிருந்து என்ன ஏற்படுகிறதென்றால் சிருஷ்டி கர்த்தாவான பிரம்மா எப்போது உண்டானார் என்பதற்கே கால வரையறை இருக்கிறது. இத்தனை கோடி கோடி வருஷங்களுக்கு முந்தி பிரம்மா உண்டானார் என்றால் அவரே அநாதியில்லை. அதனால் அவரால் உண்டான லோக சிருஷ்டியும் அநாதியில்லை. சிருஷ்டியே அநாதியில்லை என்று சொல்லிவிட்டு வேதம் அநாதி என்றால் என்ன அர்த்தம்?

சிருஷ்டி தோன்றுவதற்கு முன்பும் பரமாத்மா இருந்தார். பிரம்மா இல்லை. ஆனால் பிரம்மம் என்று சொல்லப்படுகிற பரம்பொருள் அல்லது பரமாத்மா எப்பொதுமே இருந்திருக்கிறது. அதுதான் அநாதி. பிரபஞ்சம், ஜீவ ஜந்துக்கள் எல்லாம் அதிலிருந்துதான் உண்டாயின. பரமாத்மா தாமே நேரே இவற்றைப் பண்ணாமல் பிரம்மா மூலமாகப் பண்ணினார். விஷ்ணு மூலமாக பரிபாலித்தார். ருத்ரன் மூலம் ஸம்ஹாரம் பண்ணினார். அப்புறம் அந்த பிரம்ம, விஷ்ணு, ருத்ரர் எல்லாரையுங்கூட ஸம்ஹாரம் பண்ணிவிடுகிறார். இதனால் தான் பிரம்மாவுக்கும் ஆயுஸ் சொல்லியிருக்கிறது. இப்போதிருக்கிற பிரம்மாவுக்கு நூறு வயஸானபின் அவர் பரமாத்மாவோடு சேர்ந்துவிடுவார். அவர் ஆயுஸ் முடிந்துவிடும். மறுபடி இன்னொரு பிரம்மா வருவார். அவர் மறுபடியும் சிருஷ்டியை ஆரம்பிக்க

வேண்டும். இம்மாதிரி இன்னொரு பிரம்மாவை உண்டு பண்ணுவதற்கு முந்தியே பரமாத்மா வேதங்களை உண்டு பண்ணி விடுவாரா?

சிருஷ்டிக்கு முந்தியே வேதம் இருந்தது என்று சாஸ்திரங்களிலிருந்து தெரிகிறது. ஏனென்றால், பிரம்மாவே வேத மந்திரங்களைக் கொண்டுதான் சிருஷ்டியே செய்தார் என்று சொல்லியிருக்கிறது. வெறும் சப்தங்களேயான மந்திரத்தைக் கொண்டு சிருஷ்டி பண்ணினார் என்றால் என்ன என்று பிறகு சொல்கிறேன். இங்கே சொல்ல வந்தது, ரிஷிகளுக்கு முந்தி, லோகமே ஏற்படுவதற்கு முந்தி, வேதங்கள் இருந்தன என்பதுதான். பிரம்மாவே வேதங்களின் உதவி கொண்டுதான் சிருஷ்டி பண்ண முடிந்தது என்று பாகவதாதி புராணங்களில் ஸர்க (சிருஷ்டி) வர்ணனை பண்ணும் இடங்களில் சொல்லியிருக்கிறது.

இதனால்தான் வேதத்தை அநாதி என்கிறார்களா? வேதம், ஈச்வரன் என்று இரண்டுமே அநாதி என்றால் இப்படி அர்த்தம் பண்ணிக்கொள்ளலாமா? யோசித்துப் பார்த்தால் இதுவும் தப்புதான்! சிருஷ்டி தோன்றா விட்டாலும், ஈச்வரன் வேதத்தை உண்டு பண்ணினார் என்று சொல்லி விட்டாலே அது உண்டாகாத ஒரு காலமும் உண்டு என்று அர்த்தமாகும். லோகமும் ஜீவஜந்துக்களும் சிருஷ்டியாகா விட்டாலும், பரமாத்மாவிடம் காலம் என்ற தத்துவம் உண்டான பிற்பாடுதான் வேதம் உண்டாயிற்று என்று அர்த்தமாகிவிடும். அதாவது அது அநாதி என்பது பொய்யாகிவிடும்.

வேதமும் அநாதி, ஈச்வரனும் அநாதி என்றால் இதை அவரும் பண்ணயிருக்கக் கூடாது. ஈச்வரன் வேதத்தை உண்டு பண்ணினார் என்றால் அது ஆதியுடையதாகிவிடும். ஈச்வரனிலிருந்து தோன்றியதுதான் ஸகலமும். அவருக்குப் புறம்பாக எதுவுமே கிடையாது. ஆகையால் வேதம், ஈச்வரன் என்று இரண்டு அநாதிகள் இருந்தன என்றாலும் தப்பு. இப்படி ஒரே குழப்பமாயிருக்கிறது.

ஈச்வரனாலும் பண்ணப்படாமல், ஈச்வரனுக்கு தனியாகவும் இல்லாமல், வேதம் அநாதியாக இருக்க வேண்டும் என்றால் அது எப்படி?

இந்தப் பெரிய ஸந்தேஹத்துக்கு வேதமே பதில் சொல்லியிருக்கிறது. வேதத்தில் ஒரு பகுதியான ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் (II.4.10) "ரிக் -யஜுஸ்-ஸாம-அதர்வ வேதங்கள் ஈச்வரனின் சுவாஸமாகும்" என்று சொல்லியிருக்கிறது. "நிச்வஸிதம்" - மூச்சுக்காற்று - என்ற வார்த்தையை இந்த இடத்தில் போட்டிருக்கிறது.

நமக்கு ச்வாஸமில்லாவிடில் நாம் உயிரோடு இருக்க முடியுமா? முடியாதல்லவா? அப்படித்தான் பரமாத்மாவுக்கு உயிராக இருக்கிற ச்வாஸமே வேதம். அநாதியான அவர் என்றென்றும் உயிரோடு இருந்திருக்கிறார் என்பதால், வேதமே அவருடனேயே, அவரது ச்வாஸமாக, அநாதியாக இருந்திருக்கிறது என்று ஆகிவிடுகிறது!

இதிலே கவனிக்க வேண்டிய விஷயம், ஈச்வரனைக்கூட வேதத்தை உண்டாக்கினவர் என்று சொல்கிற வழக்கமில்லை. நம்முடைய ச்வாஸத்தை நாம் உண்டாக்கினதாகச் சொன்னால் தப்புத்தானே? நாம்

எப்போதிலிருந்து இருக்கிறோமோ அப்போதிலிருந்து ச்வாஸமும் இருக்கத்தானே செய்கிறது? இப்படியேதான் ஈச்வரனும் வேதமும். அவரும் அதைப் பண்ணினார் என்று சொல்ல முடியாது.

வேதங்களுக்கு பாஷ்யம் [விரிவுரை] எழுதிய வித்யாரண்ய ஸ்வாமிகள், தம் குருவையே ஈச்வரனாக பாவித்து ஸ்தோத்திரம் பண்ணும்போது,

யஸ்ய நி:ச்வஸிதம் வேதா:

என்கிறார்1. 'எவருக்கு வேதங்கள்தான் சுவாஸமோ' என்று அர்த்தம். உபநிஷத்தில் போட்ட அதே 'நிச்வஸிதம்' இங்கே வந்திருக்கிறது. வேதத்தைப் பண்ணினார் என்று இங்கேயும் இல்லை.

பகவானும் கீதையில் சொல்கிறபோது2, "நானே எல்லா வேதங்களாலும் அறியப்படுகிறவன் (வேதைச்ச ஸர்வை: அஹம் ஏவ வேத்ய:) " என்று சொல்லிவிட்டு தன்னை "வேத க்ருத்" (அதாவது வேதத்தை பண்ணினவன்) என்று சொல்லிக் கொள்ளாமல், "வேதாந்த க்ருத்" என்றே, அதாவது வேதங்களுக்கு முடிவான தத்வத்தை உண்டு பண்ணினவன் என்றே சொல்லிக் கொள்கிறார். தன்னை வேதம் அறிந்தவனாக (வேதவித்) சொல்லிக் கொள்கிறாரே அன்றி "வேத க்ருத்" என்று சொல்லவில்லை. வேதாந்தம் என்கிற தத்வ ரூபத்தில் ஜீவர்களுக்குப் பிரயோஜனமாகப் பிரகாசிப்பதற்கு முந்தியே, ஜீவ சிருஷ்டிக்கு முன்னாலுங்கூட சப்த ரூபத்தில் இந்த வேதங்கள் ஈச்வரனோடு ஈச்வரனாக அவனது மூச்சாக இருந்திருக்கின்றன.

கீதையில் சொன்ன மாதிரியே பாகவதத்திலும் வேதங்களை பகவான் பண்ணினதாகச் சொல்லவில்லை. அவனுடைய ஹ்ருதயத்தில் வேதங்கள் ஸ்புரித்ததாகத் தான் சொல்லியிருக்கிறது. ஏற்கெனவே உள்ள ஒரு ஸத்தியம் நமக்குள் தானாகப் பளீரென்று வெளியிடப்படுவதுதான் ஸ்புரணம் என்பது. இல்லாத ஒன்றைப் புதிதாகப் பண்ணினால் அதை "ஸ்புரித்தது" என்று சொல்ல முடியாது. 'ஸகல மந்திரங்களையும் கண்டுகொண்ட ஆதிரிஷி பிரம்மா. அவருக்குப் பரமாத்மாதான் இவற்றைக் காண்பித்துக் கொடுத்தார். எப்படி? வாயினால் சொல்லி உபதேசம் பண்ணினாரா? இல்லை, ஹ்ருதயத்தினால் வேதங்களைக் கொடுத்தார்' - "தேனே ப்ரஹ்ம ஹ்ருதாய ஆதி கவயே" என்று பாகவதத்தின் முதல் ச்லோகம் சொல்கிறது. அதனால் பரமாத்மாவின் ஹ்ருதயத்தில் எப்போதுமே வேதம் இருந்து கொண்டிருக்கிறது, அதை அவர் இயற்றவில்லை என்று தெரிகிறது. அவர் சங்கல்பம் பண்ணின மாத்திரத்தில் பிரம்மாவுக்கு அத்தனை வேதங்களும் தெரிந்துவிட்டன. அந்த சப்தங்களை வைத்துக் கொண்டு அவர் ஸ்ருஷ்டி பண்ண ஆரம்பித்து விட்டார்.

தேவாரம் ஈச்வரனை "வேதியா, வேதகீதா" என்கிறது. "சந்தோக ஸாமம் ஓதும் வாயானை", "பௌழியின் காண்" என்று வேதசாகைகளின் (வேதக் கிளைகளின்) பெயர்களைச் சொல்லி, அவற்றை பகவான் பாடிக் கொண்டிருக்கிறான் என்கிறது. பாடுகிறான் என்றால் என்ன? மூச்சு விடுவதே பெரிய பாட்டுத்தான். நாம் விடுகிற மூச்சை "ஹம்ஸ கீதம்" என்று சொல்லியிருக்கிறது.

இப்படி ஈச்வரனுடைய ச்வாஸ ஸங்கீதமாக இருப்பதுதான் வேதம். ஈச்வரன் பூணூல் போட்டுக் கொண்டு, விபூதி இட்டுக் கொண்டு, ஓயாமல் ஸ்நானம் பண்ணிக் கொண்டு, வேதத்தைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார். என்று தேவாரம் சொல்வதைப் பார்த்தால், பரமசிவன்தான் பெரிய கனபாடிகள் என்று தோன்றுகிறது! "பவளம் போல் மேனியில் பால் வெண்ணீரும்", "வெண்ணூல் உண்டே, ஓதுவதும் வேதமே" என்றெல்லாம் அப்பர் ஸ்வாமிகள் வர்ணிக்கிறார்! இங்கேயும், "வேதம் ஓதுகிறார்", "வேதம் இசைக்கிறார்", என்றுதான் இருக்கிறதே தவிர, வேதத்தை இயற்றுகிறான் என்று ஓரிடத்தில் கூட இல்லை.

வேதங்களைப் பற்றியும், வைதிகமான யாக, யக்ஞாதிகளைப் பற்றியும் தேவாரத்தைப் போலவே வைஷ்ணவர்களின் திவ்யப் பிரபந்தங்களிலும் நிறையச் சொல்லியிருந்தாலும், எதனாலோ பெருமாள் வேதம் ஓதுவதாக எங்கும் சொல்லியிருக்கிறதாக எனக்கு நினைவில்லை.

புகழேந்தி புலவர், கஜேந்திர மோக்ஷத்தின் போது யானை 'ஆதிமூலமே' என்று அழைத்தவுடன் 'என்ன?' என்று கேட்டு வந்த மஹாவிஷ்ணுவை,

வேதத்தின் முன் நின்றான்; வேழம் முதலே என அழைப்ப என் என்றான் எங்கட்கிறை

என்று சொல்கிறார். இங்கே "வேதத்தின் முன்" என்றதால், "காலத்திலே வேதத்துக்கு முந்தி", என்று அவர் சொல்வதாக எனக்குத் தோன்றவில்லை. ஒருவர் வீட்டு வாசலில் நின்றால் "வீட்டின் முன் நின்றான்" என்றுதானே

சொல்வோம்? அப்படிச் சகல வேதங்களுக்கும் ஆரம்பத்தில் அவன் இருக்கிறான் என்பதையே "வேதத்தின் முன் நின்றான்" என்று சொல்லியிருப்பார். இன்னொன்று தோன்றுகிறது. பெருமாள் புறப்பாடு எப்படி நடக்கிறது? முதலில் திருவாய்மொழி கோஷ்டிக்காரர்கள் வருகிறார்கள். அப்புறம் பெருமாள் (உத்ஸவர்) வருகிறார். அவருக்குப் பின்னால் வேத பாராயணக்காரர்கள் வருகிறார்கள். இங்கேயும் ஸ்வாமி வேதத்தின் முன்னே நிற்கிறார்.

வைஷ்ணவமான ஆகமங்களின்படியும், புராணங்களின் படியும் மஹாவிஷ்ணுவையே விசேஷமாக யக்ஞ ஸ்வரூபி, வேதஸ்வரூபி என்று சொல்லியிருக்கிறது; கருடனை வேத ஸ்வரூபம் என்றும், அதன்மேல் பகவான் இருப்பதாகவும் சொல்கிறதும் உண்டு. ஆனால் வேதத்தைப் படைத்ததாகச் சொன்னதாகத் தெரியவில்லை.

வேதத்திலேயே இருக்கப்பட்ட "புருஷ ஸூக்தம்" ஒன்றில் தான் வேதங்கள் பிறந்தன (அஜாயத) என்ற வார்த்தையே வந்திருக்கிறது. ஆனால் "புருஷ ஸூக்த"மானது ரொம்பவும் symbolical-ஆகவும், allegorical - ஆகவும் [உருவக அணி கொண்டதாகவும், ஆழ்ந்த உள்ளுறைபொருளை சம்பவம் போல் சொல்லுவதாகவும்] இருப்பதால், அதிலே, "வேதம் பிறந்தது" என்று சொல்லுவதை அப்படியே நேர் அர்த்தம் பண்ணிக் கொள்ள முடியாது. பரம புருஷனையே பசுவாக பலி கொடுத்த ஒரு யக்ஞத்தில்தான் ஸ்ருஷ்டியெல்லாம் உண்டாயிற்று என்று சொல்லி, அப்போதுதான் வேதங்களும் உண்டானதாக அதில் சொல்லியிருக்கிறது. பரமபுருஷனை யக்ஞ பசுவாகப் பலி கொடுப்பது என்றால்

என்ன? அதை நேர் அர்த்தம் பண்ணிக் கொண்டால் சரியாகாது அல்லவா? இந்த யாகத்திலே வஸந்த காலத்தை நெய்க்கு பதில் ஆஹுதியாக விட்டார்கள், கோடைக்காலம் ஸமித்துக் கட்டாயிற்று, சரத்காலம் ஹவிஸ் ஆயிற்று என்றெல்லாம் சொல்வதைப் புரிந்து கொள்ள முடிகிறதா? இதெல்லாம் மந்திர அர்த்தத்தைத் தியானம் பண்ணி, அதிலேயே ஊறினவர்களுக்குத்தான் அநுபவ ரூபத்தில் அர்த்தமாகும். நாம் வார்த்தைகளின் அர்த்தத்தை மட்டும் பார்த்துப் புரிந்து கொள்ள முடியாது. அதனால் வேதங்கள் பிறந்ததாக அதில் சொன்னதையும் அப்படியே பொருள் கொள்வதிற்கில்லை.

மொத்தத்தில் சாஸ்திர அபிப்ராயம், வேதம் அநாதி; அது அநாதியாக ஈச்வரனின் சுவாஸமாக இருக்கிறது என்பதுதான்.

ஈச்வரனின் சுவாஸம் இந்த மாதிரி சப்த ரூபத்தில் இருக்கிறது என்றால், இந்த சப்தங்களைக் கொண்டுதான் பிரம்மா சிருஷ்டி பண்ணினார் என்றால், நாகரிக மூளைக்கு "இதெல்லாம் சுத்த நான்-சென்ஸ்" என்று தோன்றுகிறது.

நன்றாக ஆராய்ந்து பார்த்தால், பெரிய விஞ்ஞான உண்மையே இதில் இருக்கிறதென்று தெரிகிறது.

இப்படிச் சொல்லும்போது இன்றைய விஞ்ஞானத்துக்கு acceptable-ஆக (ஏற்புடைத்தாக) இருந்தால்தான் மத விஷயங்களை நாம் ஒப்புக் கொள்ளலாம் என்று நான் சொல்வதாக அர்த்தமில்லை. நம் ஸயன்ஸும், ஸயண்டிஸ்டுகளும் எங்கே போக முடியாதோ அந்தப் பரமாத்ம தத்துவத்தைச் சொல்கிற வேதத்தை, ஸயன்ஸின்

லிமிட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அதிலுள்ள அநேக விஷயங்கள் ஸயன்ஸுக்கு ஒத்துவராமல்கூட இருப்பதாகத் தோன்றலாம். அதனால் அவை தப்பு என்று ஆகிவிடாது. ஆனால் இங்கே எடுத்துக் கொண்ட விஷயம் - மூச்சு எப்படி சப்தகோவைகளான மந்திரமாக இருக்க முடியும், அதை வைத்துக் கொண்டு எப்படி லோக ஸ்ருஷ்டி உண்டாக முடியும் என்ற விஷயம் - ஸயன்ஸுக்கும் ஒவ்வியதாகவே இருக்கிறது என்று மட்டும் சொன்னேன்.

1.ஜீவன்முக்தி விவேகம் முதல் ச்லோகம்

2.XV 15

ஒலியும் படைப்பும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

ஒலியும் படைப்பும்

சப்தம் என்பது என்ன? vibration தான் (அதிர்வுதான்) என்று இன்றைய ஸயன்ஸில் சொல்கிறார்கள். அணுவிஞ்ஞானமும், ஐன்ஸ்டீன் கொள்கையும் என்ன சொல்கின்றனவென்றால், 'அணுவுக்குள் புகுந்து பார்த்தால் எல்லா வஸ்துவும் ஒன்றுதான், அத்வைதம்தான். லோகமெல்லாம் ஒரே சக்தி வெள்ளம்தான். எல்லாம் ஒரே electro-magnetic (மின்-காந்த) பிரவாஹம்தான். ஆனால் ஏன் இப்படி வேறு வேறு வஸ்துக்களாகத் தெரிகிறது என்றால்,

அந்த ஒரே சக்தியில் தோன்றுகிற வெவ்வேறு விதமான vibrationகளால்தான்' என்று சொல்கின்றன.

அதிர்வு உண்டானால் சப்தம் உண்டாகிறது. இதையே திருப்பிச் சொன்னால், சப்தம் உண்டாக வேண்டுமானால் அதற்கான அதிர்வு ஏற்பட்டாகவேண்டும்.

ஒரே சக்தியில் பலவித vibration ஏற்படுவதால் லோக சிருஷ்டி உண்டாவதாகச் சொல்கிற விஞ்ஞானக் கருத்தும், பரமாத்மாவின் சுவாஸமான வேத சப்தத்திலிருந்து லோகம் வந்தது என்பதும் முழுக்க ஒன்றேதான்.

மநுஷ்யர்கள், பிராணிகள் இருக்கிறோம். நம்முடைய ஆரோக்யம், உணர்ச்சிகள் முதலியன எப்படி ஏற்படுகின்றன்? நம்முடைய ச்வாஸ கதியிலிருந்துதான். நாடிகளில் ச்வாஸம் போகிறபோது ஏற்படுகிற vibration-களால்தான் தேகத்தின் பல பகுதிகளுக்கும் ஆரோக்யம், அல்லது ஆரோக்ய குறைவு ஏற்படுகிறது. யோக ஸாதனங்களால் ச்வாஸப் பயிற்சி மூலம் மூச்சை நாடிகளில் ஒழுங்குப்படுத்திக் கொள்கிறவர்களுக்கு ஆச்சர்யப்படும்படியான ஆரோக்யம் இருக்கிறது. அவர்களுடைய ரத்தக் குழாய்களை நறுக்கினால்கூட ரத்தம் கொட்டாமலிருக்கிறது. நாடித்துடிப்பு, ஹ்ருதயத்துடிப்பு இவற்றைக் கூட நிறுத்திவிட்டு, அவர்களால் பூமிக்கடியில் உயிரோடு ஸமாதியில் இருக்க முடிகிறது. பாம்பும் தேளும் கடித்தாலும் விஷம் அவர்களைப் பாதிப்பதில்லை. மூச்சினால் உண்டாகும் நாடி சலனத்தை அவர்கள் ஒழுங்கு படுத்தியிருப்பதால்தான் இப்படி இருக்கிறது.

உடம்புக்கு மட்டும் தான் மூச்சு முக்கியம என்றில்லை. மனஸுக்கும் மனஸின் ஆரோக்யத்திற்கும் அதுவே முக்கியமாயிருக்கிறது. எண்ணங்களுக்கு மூலமான மனஸும், மூச்சுக்கு மூலமான பிராணசக்தியும் ஒன்றாகவே இருப்பதால்தான் இப்படியிருக்கிறது. நாடி சலனத்தாலேயே ஆரோக்யமான (நல்ல) அல்லது ஆரோக்யக் குறைவான (கெட்ட) எண்ணங்களும் உண்டாகின்றன. நீங்களே கவனித்துப் பார்த்தால் தெரியும். ஒரு தெய்வ ஸந்நிதானத்தில் அல்லது மஹானின் அருகில் மனஸ் சாந்தமாக இருக்கிறபோது மூச்சு எப்படி சஞ்சரிக்கிறது; காமத்தினால், கோபத்தினால் வேகம் உண்டாகிறபோது ச்வாஸகதி எப்படியிருக்கிறது என்று பார்த்தால், ஒன்றுக்கொன்று நிரம்ப வித்யாஸமாயிருக்கும். ஸந்தோஷம் என்பதிலேயேகூட தெய்வ விஷயமாக ஒரு பஜனையில் அல்லது உத்ஸவத்தில் உண்டாகிறதற்கும், இந்திரிய சுகத்தை தருகிற விஷயங்களில் உண்டாவதற்கும் நாடி சலனத்தில் வித்யாஸம் தெரியும். பொதுவாக உத்தமமான ஸந்தோஷத்தில் மூச்சு வலது நாசித்துவாரத்தில் வரும்; வெறும் இந்திரிய ஸந்தோஷம் (புலனின்பம்) என்றால் இடது நாசித் துவாரத்தில் வரும். இத்தனை உணர்ச்சிகளுக்கும் ஆதாரமான சாந்தமான ஸத்வஸ்துவில் தியானம் வலுவாகிற போது, ஒரே சீராக, மிக மெதுவாக, இரு நாசிகளிலும் ஸமமாக மூச்சு வரும். இத்தனை உணர்ச்சிகளிலும் ஆதாரமான சாந்தமான ஸத்வஸ்துவில் தியானம் வலுவாகிற போது, ஒரே சீராக, மிக மெதுவாக, இரு நாசிகளிலும் ஸமமாக மூச்சு வரும். தியான லக்ஷயத்தில் ஒன்றுபட்டுவிடுகிறபோது மூச்சே

நின்றுவிடும். மனஸும் நின்றுவிடும். ஆனால் உயிர் இருக்கும். ஞானம் என்ற பேருணர்வு பூரித்து இருக்கும்.

ஆக, ஜீவன் என்று எடுத்துக் கொண்டால், அவனுடைய ஜடமான சரீரம், சைதன்யமான அறிவு இரண்டும் ச்வாஸகதியால் உண்டாகி வளர்கிறவைதான்; அல்லது அழிகிறவைதான். முறையான ச்வாஸகதி என்பது நம் உள்-vibration-களை ஒழுங்கு பண்ணிக் கொள்வதுதான்.

பரமாத்மாவிடமிருந்துதானே இத்தனை ஜட வஸ்துக்களும் சைதன்ய வஸ்துக்களும் தோன்றி விருத்தியாகின்றன? அழிவதும் வளர்வதுமாக இருக்கின்றன? இதற்கெல்லாம் ஏற்ற சலனங்கள் பரமாத்மா வஸ்துவில் ஏற்பட்டுத்தானே ஆகவேண்டும்?

பிரம்மம் நிர்குணமானது, சலனமற்றது என்கிற அத்வைதம் இருக்கட்டும். அந்த அத்வைதத்தின்படியும், இன்னதென்றே சொல்ல முடியாத (அநிர்வசனீயமான) மாயாசக்தியுடன் கூடி பிரம்மம் பலவான இந்த பிரபஞ்சமாக வேஷம் போட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்லித்தானே இருக்கிறது? வேஷமோ, கீஷமோ, இப்படி ஜடமான லோகமென்றும், சைதன்யமுள்ள ஜீவர்கள் என்றும் விவகார தசையில் இருக்கிறமாதிரி ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. மாயை என்று சொன்னாலும், அதற்கும் ஆதாரமான "மாயின்" என்று ஈச்வரனேதான் இருக்கிறான். ஆகக்கூடி மாயாசக்தி என்று சொல்லிவிட்டாலும், இது அத்தனையும் பரப்பிரம்ம வஸ்துவில் தோன்றின சலனங்கள் தான்; Vibration கள் தான். இத்தனை சலனங்களாலும் அது சலனமடையாமல்,

உள்ளூர நிர்குண சாந்த வஸ்துவாகவே இருக்கிறது. ஆனாலும் நம் பார்வையில் சலனங்கள் உண்டுதான். அதுவும் கன்னாபின்னா என்று இல்லாமல் பெரிய பெரிய சூரியன் முதலான கிரஹங்களின் ஸஞ்சாரத்திலிருந்து ஆரம்பித்து, ஒரு சின்ன புல், பூண்டு அல்லது கொசு உண்டாகிற வரை, எல்லாம் ஒரே மாதிரி நியதிப்படி, ஒழுங்குப்படி நடந்து வருகிறது.

லோக வாழ்க்கை க்ஷேமகரமாக நடக்க இந்த ஒழுங்குதான் ஒத்தாசை பண்ணுகிறது. இயற்கைச் சக்திகளை எல்லாம் ஒழுங்குப்படுத்தித்தான் பரமாத்மா லோக வாழ்க்கையை உண்டாக்கியிருக்கிறார். ஆனாலும் இதிலே கொஞ்சம் கொஞ்சம் ஒழுங்கு தப்பிப்போகிற மாதிரியும் நடக்கவிட்டு வேடிக்கை பார்க்கிறார்! வாழ்க்கைக்கு அநுகூலம் செய்யவேண்டிய இயற்கைச் சக்திகள் அப்படிச் செய்யாமலிருக்கிறதையும் பார்க்கிறோம். காலத்தில் மழை பெய்யமாட்டேன் என்கிறது; அல்லது வெள்ளம் வருகிறது. வேறு ஏதாவது உத்பாதம் உண்டாகிறது.

ஒழுங்கு தப்பிப் போவதில் இந்த மநுஷ்ய மனஸ் இருக்கிறதே, அது எவ்வளவு தூரம்தான் போகும் என்றே சொல்ல முடியாமல், குட்டிச் சாத்தனாக அலைகிறது! பிரபஞ்ச வாழ்க்கை முழுதிலும் எத்தனையோ ஒழுங்கு, கட்டுப்பாடு, நியதி இருந்தாலும், இந்த மனஸை எடுத்துக் கொண்டால், இது மட்டும் ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் வெறிநாயாகத் திரிகிறது.

இயற்கைக் சக்திகள் நமக்குப் பிரதிகூலமாக இருக்கிற போது, அவற்றைச் சரிப்படுத்த வழி உண்டா? நம்

மனஸைக் கன்னாபின்னா என்று விடாமல் கட்டுப்பாட்டில் கொண்டு வர ஏதாவது வழி இருக்கிறதா?

சலனம் – சப்தம் இதனால்தான் சகல காரியமும் ஏற்பட்டிருக்கிறது என்றால், லோக சக்திகளை அநுகூலம் பண்ணித் தரவும், நம் சித்தத்தையே சுத்தம் பண்ணிக் கொடுக்கவும் கூடச் சப்தங்கள் இருக்கத்தான் வேண்டும். அவைதான் வேதம், வேதம் என்பது.

நம்முடைய ச்வாஸகதியாலேயே, நாம் யோக மார்க்கத்தின் மூலம் பரமாத்மாவின் ச்வாஸத்தைப் பிடித்து, லோகோபகாரமாகவும், ஆத்ம க்ஷேமகரமாகவும் உள்ள காரியங்களை நடத்திக் கொள்ளலாம். இங்கே நாடி சலனம் இருந்தாலும் அது மநுஷ்யக் காதுக்கு எட்டக் கூடிய சப்தமாக இருக்கவில்லை. ஸயன்ஸிலேயே மநுஷ்யனின் காதுக்கு எட்ட முடியாத சப்தங்கள், மநுஷ்யக் கண்ணின் லென்ஸுக்கு அகப்படாத ஒளி அலைகள் எல்லாம் உண்டு என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இது மட்டுமில்லை. எட்ட முடியாததை நமக்கு எட்டுகிற மாதிரி மாற்றிக் கொடுக்கவும் முடிகிறது. ரேடியோவில் ஒருத்தன் பாடுகிறான் என்றால், முதலில் அவன் பாடுகிற சப்தங்கள் மின்சார சக்தியினால் ஒரு விதமான காந்த அலைகளாக மாறிவிடுகின்றன. இப்படி மாறின அலைகள்தான் ஆகாசத்தில் விடப்படுகின்றன. அப்போது இவற்றை நம் காதால் கேட்க முடிகிறதா? இல்லை. ஆனாலும் ரேடியோப் பெட்டியில் உள்ள கருவிகள் ஆகாசத்தில் இருக்கிற அந்த மின்சாரக் காந்த

அலைகளைப் பிடித்து, மறுபடி நம் காதுக்கு எட்டுகிற மாதிரியே சப்த அலைகளாக்கிப் பாட்டாகக் கொடுக்கிறது.

இதைச் சொல்லும் போது விஞ்ஞானம் மதத்துக்கு விரோதியே இல்லை; மதத்தை வளர்க்க அதுவேதான் ரொம்ப ஒத்தாசை செய்கிறது என்று தோன்றுகிறது. ஒரு நூற்றாண்டுக்கு முன் டெலிபோன், ரேடியோ ஆகியன வருவதற்கு முந்தி, "வேதசப்தமாவது, ச்வாஸமாவது?" என்று யாராவது நாஸ்திகர்கள் ஆக்ஷேபணை கிளப்பியிருந்தால், அவர்களுக்குப் பதில் சொல்லவே முடியாமல் இருந்திருக்கும். இப்போது இந்த ஸயன்ஸ் discoveries (கண்டுபிடிப்புகள்) தான் நமக்குக் கை கொடுக்கின்றன.

ஜடமான ரேடியோப் பெட்டிக்கு இருக்கிற சக்தியை சைதன்யமுள்ள ஜீவர்களும் சம்பாதித்துக்கொள்ள முடியும். அதற்கு மேலும் செய்ய முடியும். தபஸ்தான் இந்த சக்தியைத் தருவது. ஒரு ஸத்தியத்தைத் தெரிந்து கொண்டுதான் ஆவது என்று, அதற்காக அன்ன ஆகாரத்தை விட்டு, வீடு வாசலை விட்டு, எப்போது பார்த்தாலும் அதே சிந்தனையாக மனஸை ஒருமுகப்படுத்தி விட்டால், அதுதான் தபஸ். இத்தனையிலும், 'நான் இத்தனை பிரயாசைப்படுகிறேன் அல்லவா? அதனால் எனக்கு ஸத்தியம் தெரிந்தே ஆகவேண்டும்' என்ற அஹம்பாவம் இருக்கக்கூடாது. நாம் எத்தனை பிரயாஸைப் பட்டாலும், பகவத் பிரஸாதமாகத்தான் எந்த ஸத்தியமும் பிரகாசிக்கும் என்ற விநயம் எப்போதும் இருக்கவேண்டும். இம்மாதிரி தபஸ் பண்ணி, யோக நிலையில் உச்சிக்குப் போனவர்கள்தான் ரிஷிகள்.

ரிஷிகளுக்கு லோக ஸ்ருஷ்டியிலே ஏற்படும் சகல சலனங்களும் –அதாவது பரமாத்மாவின் ச்வாஸகதிகளும் – தெரிந்தது. தெரிந்தது மட்டுமில்லை; மின்சார அலையை சப்த அலையாக convert பண்ணுவது (மாற்றுவது) போல, அந்த சலனங்களுக்குரிய சப்தங்கள் மநுஷ்யக் காதுக்கு எட்டுகிற சப்தங்களாகவும் அவர்களுக்குத் தெரிந்தன. அப்படிப்பட்ட சப்தங்களையே வேத மந்திரங்கள் என்று தந்திருக்கிறார்கள்.

ஒன்று தோன்றுகிறது. வேதத்துக்கு "ச்ருதி" என்று ஒரு பேர். கேட்கப்படுவது எதுவோ அதுவே ச்ருதி. ச்ரோத்ரம் என்றால் காது. புஸ்தகத்தில் எழுதிப் படிக்காமல், குரு சிஷ்ய பரம்பரையாக வாயால் சொல்லிக் காதால் கேட்டே வேதம் தலைமுறை தலைமுறையாக வந்திருப்பதால் அதற்கு "ச்ருதி" என்று பேர் ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். எழுதிப்படிக்கக் கூடாது என்று ஏன் வைத்தார்கள் என்றால் வேத சப்தங்களை இப்படி எழுத முடியாது என்பதால்தான். 'ழ'வுக்கும், 'ள'வுக்கும் நடுவிலுள்ள சப்தம் மாதிரி, லிபியில் கொண்டு வர முடியாத பல சப்தங்கள் வேதத்தில் உண்டு. காதால் கேட்டுத்தான் இவை வரவேண்டும். அதோடுகூட உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் என்றெல்லாம் வேத மந்திரங்களுக்கு ஸ்வரமும் உண்டு. அதாவது ஒரு அக்ஷரத்தை உயர்த்த வேண்டும். இன்னொன்றைத் தாழ்த்திச் சொல்ல வேண்டும். சிலதை ஸமமாகச் சொல்ல வேண்டும். புஸ்தகத்தில் எத்தனைதான் diacritical mark போட்டு காட்டினாலும், அச்சுப்பிழை வந்து விட்டால், உச்சாரணக் கோளாறாகும்; உச்சரிப்பு தப்பினால் பலனே போய்விடும்*.

ஓர் அக்ஷரத்தை அழுத்தி அல்லது மெல்லிசாகச் சொல்லுகிறதால் ஏற்படுகிற சலனத்துக்கும் இன்னோர் அக்ஷரத்தை அப்படிச் சொல்வதால் உண்டாவதற்கும் நிறைய வித்யாஸமிருக்கும். நம்முடைய உணர்ச்சிகள், இயற்கையை நடத்தி வைக்கும் தேவசக்திகள், இவையும் இந்த வித்யாஸத்துக்கு ஏற்ப மாறிப் போகும்.

ஒன்றுக் கொன்று உச்சாரணம் மாறுபட்டால் எத்தனை விபரீதம் உண்டாகிவிடும் என்பதற்கு, வேதத்திலேயே தைத்ரீய ஸம்ஹிதையில் ஒரு கதை இருக்கிறது. இந்திரனை வதைக்கக்கூடிய பிள்ளை தனக்குப் பிறக்க வேண்டும் என்பதற்காக த்வஷ்டா என்ற தேவதச்சன் ஒரு மந்திரத்தை ஜபம் பண்ணினான். அப்போது அக்ஷரங்களின் உச்சரிப்பில் உதாத்தம், அநுதாத்தம் என்று சொன்னேனே, இந்த உயர்த்தல் – தாழ்த்தலில் அவன் தப்பு பண்ணியதாலேயே, அவன் விரும்பின பலனுக்கு நேர்மாறாக, "இந்திரனை வதைக்கக் கூடிய பிள்ளை"க்கு நேர்மாறாக, "இந்திரன் வதைக்கக்கூடிய பிள்ளை, அதாவது இந்திரனால் வதைக்கப் படக்கூடிய பிள்ளை" தனக்கு வேண்டும் என்று அவன் பிரார்த்தித்ததாக ஆகிவிட்டது. கதையும் அப்படியே பிற்பாடு நடந்தது!

ரேடியோவில் ஒரு wave-length (அலைவரிசை) கொஞ்சம் தப்பினால்கூட, வேறு ஏதோ ஸ்டேஷனை அல்லவா பிடித்து விடுகிறது? மயிரிழை தப்பாமல் ரேடியோவில் வேவ்–லெங்க்த் வைத்தால்தானே சரியாகக் கேட்கிறது? இப்படியேதான் வேத உச்சாரணமும். கொஞ்சம்கூட ஸ்வரம் தப்பிப் போகக் கூடாது. வேவ் – லெங்க்த்

மாறினால் ஸ்டேஷன் மாறிவிடுகிற மாதிரி, வேத சப்தம் மாறினால் பலனே மாறிவிடும்.

இதனாலெல்லாந்தான் வேதத்தைக் காதால் கேட்டுப் பாடம் பண்ணவேண்டும் என்று வைத்தார்கள். "ச்ருதி" என்று ஸம்ஸ்கிருதத்திலும், "எழுதாக் கிளவி" என்று தமிழிலும் வேதத்துக்கு பேர் ஏற்பட்டது.

"ச்ருதி" என்ற பெயருக்கு இன்னொரு காரணமும் தோன்றியதைச் சொல்ல வந்தேன். மற்ற சாதாரண ஜனங்களுக்குக் கேட்காத இந்த திவ்ய சலனங்களின் சப்தங்கள் ரிஷிகளுக்குக் கேட்கத் தானே செய்தது? அதை அவர்கள் புஸ்தகத்திலே படித்தார்களா? அல்லது அவர்களாக இயற்றினார்களா? இரண்டுமில்லாமல் ஆதியிலேயே கேட்கப் பட்டு லோகத்துக்கு வந்ததாலும் "ச்ருதி" என்று சொல்லலாம் என்று தோன்றிற்று.

ரிஷிகளுக்கு "மந்த்ர த்ரஷ்டா"க்கள் என்று பெயர் என்று சொன்னேன். 'த்ரஷ்டா' என்றால், பார்ப்பவன். "பார்ப்பான்" என்பதற்குக் கூட அதுதான் அர்த்தம். மந்திரங்களைப் "பார்த்தவர்கள்" என்றால், அவர்கள் மந்திரங்களைக் "கேட்கவில்லை" என்று ஆகும். மந்திரங்கள் அவர்களுடைய கண்ணுக்கு அகண்ட ஆகாசத்தில் கூட்டங்கூட்டமாக தெரிந்தன என்று "மந்த்ர த்ரஷ்டா" என்பதற்கு அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம்.

இதில் எது சரி? பார்த்தார்களா? கேட்டார்களா? பார்த்தார்கள் என்றால் வேதமந்திரங்கள் எந்த லிபியில் எழுதியிருந்தது? தேவநாகரி, கிரந்தம், எல்லாவற்றுக்கும் மூலமான ப்ராம்மி முதலான எந்த லிபியும் இல்லாத காலத்தில், எந்த

எழுத்தில் மந்திரங்கள் தெரிந்தன? வேத சப்தங்களையும், ஸ்வரங்களையும் உள்ளது உள்ளபடி எந்த லிபியிலும் எழுதி முடியாதே!

இதற்கெல்லாம் பதில் என்னவென்றால், பார்த்தார்கள், கேட்டார்கள் என்றெல்லாம் சொன்னாலும், வாஸ்தவத்தில் வேத மந்திரங்கள் ரிஷிகளுடைய உயர்ந்த தியான நிலையில் அவர்களுடைய ஹ்ருதயத்திலே ஸ்புரித்தன, அதாவது flash ஆயின என்பதுதான். அந்த நிலையில் அவர்களுடைய கண் பார்க்காமலும், காது கேட்காமலுங்கூட இருந்திருக்கும். அப்படி அப்படியே உள்மனஸில் மந்திர ஸப்தங்கள் flash ஆகியிருக்கும்.

காண்பது, பார்ப்பது என்பது கண்ணால் செய்கிற காரியத்தை மட்டும் குறிப்பதல்ல. எல்லா உணர்ச்சியையும் அது குறிக்கும். "ஒருத்தன் வாழ்க்கையில் பல இன்ப துன்பங்களைக் கண்டான்" என்று சொல்கிற இடத்தில், 'கண்டான்' என்றால் கண்ணால் பார்த்தான் என்று மட்டுமா அர்த்தம்? 'அநுபவித்தான்' என்பதுதானே அதன் பொருள்? 'மந்த்ர த்ரஷ்டா' என்றாலும், இப்படியே அநுபவித்தில் தெரிந்து கொண்டதாக வைத்துக் கொள்ளலாம்.

வேதம் சப்த ரூபத்தில் இருப்பதால் அதை நம்முடைய காதுகளுக்கு மேற்பட்ட திவ்ய சக்தி பெற்ற காதுகளால் (திவ்ய ச்ரோத்ரத்தால்) ரிஷிகள் கேட்டுக் கொண்டார்கள் என்றும் சொல்வதுண்டு.

அர்ஜுனன் பகவானின் விச்வரூபத்தைப் பார்க்க ஆசைப்பட்டான்; அப்போது கிருஷ்ண பரமாத்மா, 'இந்த உன் கண்ணால் என் விச்வரூபத்தை பார்க்க முடியாது. உனக்கு

அதற்கான வேறு திருஷ்டியை, தெய்விகமான பார்வையைத் தருகிறேன் என்று சொன்னதாகக் கீதையில் இருக்கிறது (XI.8).

"திவ்யம் ததாமி தே சக்ஷு:"

அர்ஜுனனுக்கு திவ்ய சக்ஷுஸ் [தெய்விக ஆற்றல் வாய்ந்த கண்] உண்டானது போல், ரிஷிகளுக்கு பரமாத்மாவிடமிருந்து தோன்றி அகண்ட ஆகாசத்தில் வியாபித்திருந்த மந்திர சப்தங்களைக் கிரஹிக்கக் கூடிய திவ்ய ச்ரோத்ரம் [தெய்வீக சக்தி வாய்ந்த காது] உண்டாகியிருந்தது.

லோக ச்ருஷ்டிக்கும் லோக வாழ்க்கைக்கும் வேண்டிய சப்த சலனங்களை மட்டும்தான் வேதம் கொடுக்கிறது என்றில்லை. இதைத் தாண்டி பரமாத்ம ஸத்யத்தோடு ஒன்றாகப் போய் விடவும் அதில் மந்திரங்கள் இருக்கின்றன. ஒருத்தன் வந்த வழியாகவே திரும்பிப் போனால் புறப்பட்ட இடத்துக்கே போய் சேரந்து விடுவான் அல்லவா? அந்த மாதிரி, ஸ்ருஷ்டி எப்படி வந்தது என்று பார்த்துக் கொண்டே போகிற போது, கடைசியில் சலனமே எழும்பாத ஸ்தானத்துக்கு அது கொண்டு விட்டுவிடுகிறது. சில மந்திரங்களினால் ஏற்படும் நாடி சலனமே அங்கே அழைத்துப் போகிறது. உபநிஷத் மஹா வாக்யங்கள், பிரணவம் எல்லாம் இப்படிப் பட்டவைதான்.

இவ்வளவும் எதற்குச் சொல்ல வந்தேன் என்றால், வேதத்தை யாரும் இயற்றவில்லை; ரிஷிகளும் இயற்றவில்லை; பரமாத்மாவுமேகூட யோசித்து யோசித்து

ஓலைச் சுவடியும், எழுத்தாணியும் வைத்துக் கொண்டு வேதத்தை எழுதவில்லை என்று விளக்குவதற்குத்தான். * வேதத்தை ஏன் எழுதிப் படிக்காமல், வாயால் சொல்லிக் காதால் கேட்டே பயில வேண்டும் என்பதற்கான விளக்கத்தை "தெய்வத்தின் குரல் - முதற்பகுதி"யில் "வேத ரட்சணம் ஏன் ஆயுட்காலத் தொழிலாக வேண்டும்?" என்ற உரையில் காணவும்.

வெள்ளையர் ஆராய்ச்சி; நல்லதும் கெட்டதும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

வெள்ளையர் ஆராய்ச்சி : நல்லதும் கெட்டதும்

இப்போது தேசம் இருக்கிற துர்த்தசையில், 'ஓரியன்டலிஸ்ட்', 'இன்டாலஜிஸ்ட்' எனப்படுகிற வெள்ளைக்காரர்களும், அவர்களுடைய வழியைப் பின்பற்றுகிற நம்முடைய ஆராய்ச்சியாளர்களும் சொல்லுகிறதிலிருந்துதான் வேதங்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. வேதங்களைப் பற்றி ரொம்பவும் உபயோகமான பல ஆராய்ச்சிகளை வெள்ளைக்காரர்கள் பண்ணியிருப்பதை ஒப்புக் கொள்கிறேன். அவர்களுடைய தொண்டுக்கு நாம் நன்றி சொல்லத்தான் வேண்டும். மாக்ஸ்முல்லர் போலப் பலர் வாஸ்தவமாகவே வேதத்திலுள்ள கௌரவ புத்தியினாலேயே எத்தனையோ பரிச்ரமப்பட்டு தோண்டித் துருவிச் சேகரம் பண்ணி, ஆராய்ந்திருக்கிறார்கள்.

வால்யூம் வால்யூமாகப் புஸ்தகம் போட்டிருக்கிறார்கள். ஸர் வில்லியம் ஜோன்ஸ் என்று இருநூறு வருஷங்களுக்கு முந்திக் கல்கத்தா ஹைகோர்ட் ஜட்ஜாக இருந்தவர் ஆரம்பித்த "ஏஷியாடிக் ஸொஸைட்டி" போட்டிருக்கும் வைதிக புஸ்தகங்களைப் பார்த்தாலே பிரமிப்பாயிருக்கும். மாக்ஸ்முல்லர், ஈஸ்ட் இன்டியா கம்பெனி உதவியுடன் ஸாயண பாஷ்யத்தோடு ரிக் வேதத்தையும், இன்னும் பல ஹிந்து மத நூல்களையும் ஸீரியஸாக அச்சிட்டிருக்கிறார். இப்படி இங்கிலீஷ்காரர்கள் மட்டுமின்றி, ஜெர்மனி -பிரான்ஸ்-ருஷ்யா தேசத்தவர்களும் நிரம்ப உழைத்து ஆராய்ச்சி பண்ணியுள்ளனர். "கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததைவிட, ஹிந்துக்களின் வேதங்களை நாம் கண்டுபிடித்ததுதான் பெரிய டிஸ்கவரி" என்று கூத்தாடிய வெள்ளைக்காரர் உண்டு. தேசம் முழுவதும் சிதறிக் கிடந்த வேத வேதாங்கங்களைக் கண்டு பிடித்து, தர்ம-க்ருஹ்ய-ச்ரௌத ஸூத்ரங்களோடு மொழி பெயர்த்து 'பப்ளிஷ்' பண்ணியிருக்கிறார்கள். வைதிக சாஸ்திரங்கள் மட்டுமின்றி குண்டலினீ தந்திரம் பிரபலமானதே 'ஆர்தர் அவலான்' என்கிற ஸர் ஜான் உட்ரா ஃபின் புஸ்தகங்களால்தான். நம் கலாசாரத்தின் மற்ற அம்சங்களுக்கும் உதவிய வெள்ளைக்காரர் உண்டு. கர்ஸன் வைஸ்ராயாக இருந்தபோது Protection of Ancient Monuments என்று சட்டம் கொண்டு வந்தால்தான் நம்முடைய கோயில்கள் முதலியவற்றை யார் வேண்டுமானாலும் இடிக்கலாம் என்ற நிலை மாறிற்று. ஃபெர்கூஸன் தேசம் முழுவதும் உள்ள நம் சிற்பச் செல்வங்களை ஃபோட்டோ எடுத்துப் பிரச்சாரம் பண்ணினான். கன்னிங் ஹாம்,

மார்ட்டிமர் வீலர், ஸர் ஜான் மார்ஷல் முதலானவர்கள் ஆர்க்கியாலஜியில் [தொல் பொருளியலில்] நிரம்பச் செய்திருக்கிறார்கள். மெக்கென்ஸி தேசம் முழுவதும் ஏட்டுச் சுவடிகளை சேகரித்தால்தான் நம் பழைய சாஸ்திரங்களில் பலவற்றை இன்று தெரிந்து கொள்ள முடிகிறது. எபிக்ரா ஃபிக்கென்றே [சாசனங்களுக்கென்றே] இலாகா வைத்ததும் வெள்ளைக்கார ஆட்சியில்தான்.

இப்படியாக, நமக்கு எத்தனையோ கெடுதலை உண்டு பண்ணின வெள்ளைக்கார ஆட்சியிலும் சில நன்மைகள் விளைந்தன. ஆனாலும் இந்த நன்மைக்குள்ளேயே கூடச் சில கெடுதல்களும் உண்டாயின. ஏனென்றால் ஓரியன்டலிஸ்ட், இன்டாலஜிஸ்ட் என்கிறவர்களில் பலருடைய உத்தேசம், வேதத்திலிருந்து சரித்திரத்தை நிர்மானிப்பது, அப்படிச் சொல்லிக்கொண்டு ஆரியர்–திராவிடர் என்று துவேஷம் உண்டாக்குவது முதலானவைதான். அவர்கள் 'பகுத்தறிவுக் கொள்கை' என்பதன்படி அதீந்திரியமானதையெல்லாம் allegory (உருவகம்) என்று தப்பர்த்தம் செய்வார்கள். இவல்யூஷன் தியரி (பரிணாமக் கொள்கைப்) படி வேதரிஷிகள் நம்மைவிட தாழ்ந்த Primitive -கள் என்றே வைத்து இவர்கள் பெரும்பாலும் வியாக்கியானம் செய்வார்கள். கிறிஸ்துவ மதத்தைப் பரப்பும் உள்நோக்கத்திலேயே நம் மதநூல்களை ஆராய்ச்சி செய்து, நடுநிலைமை மாதிரி காட்டிக் கொண்டே நம்மை மட்டந்தட்டியவர்களும் உண்டு. தங்கள் பாஷைக்கும் ஸம்ஸ்கிருதத்துக்கும் உள்ள ஒற்றுமையைப் பார்த்து comparitive philology [மொழி ஒப்பு இயல்] –காகவே ஆராய்ச்சி பண்ணினவர் அநேகர்.

அவர்கள் செய்த ரிஸர்ச், பிரசாரம், உழைப்புக்கெல்லாம் அவர்களை நாம் சிலாகிக்கலாம். ஆனால் வேதங்களின் முக்கிய நோக்கம் (purpose) லோக க்ஷேமார்த்தம் வேத சப்தத்தை பரப்பி அத்யயனம் பண்ணுவது, யக்ஞம் முதலான வைதிக கர்மாக்களைப் பண்ணுவது என்பனவே. இந்த இரண்டையும் தள்ளிவிட்டு, புத்திக்கு அதீதமான வேதத்தை புத்தியால் ஆராய்ந்து, ஜனங்களின் வாக்கிலும் காரியத்திலும் உயிரோடு வாழ வேண்டிய வேதத்தைப் பெரிய புஸ்தகங்களாக்கி லைப்ரரியில் வைப்பது, ஜூ (Zoo) வில் இருக்க வேண்டிய ஜீவ ஜந்துக்களைச் 'செத்த காலே'ஜில் [மியூசியத்தில்] வைக்கிற மாதிரித்தான்.

கால ஆராய்ச்சி சரியல்ல

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

கால ஆராய்ச்சி சரியல்ல

வெள்ளைக்காரர்கள் விஷயத்துக்கு ஏன் வந்தேன் என்றால், வேதம் அநாதி என்பதைப் பற்றிச் சொல்லும்போது, வெள்ளைக்காரர்களின் அபிப்ராயத்தைச் சொல்ல வந்தேன். வேதம் அநாதி என்றால் அவர்களுடைய மனப்பான்மைக்கு அது ஏற்கும்படியாக இல்லை. என்னதான் நடுநிலைமை, scientific research என்றாலும், 'இந்த ஹிந்துக்களின் புஸ்தகத்துக்கு இப்படி ஒரு ஏற்றம் தருவதா? என்று அவர்களில் சிலருக்கு மனஸுக்கு ஸம்மதப்படவில்லை. இன்னம் சில பேர் இப்படியில்லாவிட்டாலும் பகுத்தறிவுப்படி, ஸயன்டி:பிக்காக ஆராய்ச்சி பண்ணித்தான் எதையும்

ஒப்புக்கொள்ளலாம் என்ற அபிப்ராயத்தில் ரிஸர்ச் செய்திருக்கிறார்கள். அநாதி என்கிற வாதத்தை ஏற்கமுடியாமல், இதே ரீதியில் அநேகம் படித்த ஹிந்துக்களும் ஆராய்ச்சி பண்ணியிருக்கிறார்கள்.

இவர்கள் ஆராய்ச்சி மூலம் காலம் கணிப்பதில் முக்யமாக இரண்டு தினுசு இருக்கிறது. ஒன்று வானசாஸ்திர ரீதியில் (astronomical -ஆகப்) பண்ணுவது. இன்னொன்று பாஷையின் ரூபத்தை வைத்து நிர்ணயம் பண்ணுவது. இப்படிச் செய்து வேதத்துக்கு கால நிர்ணயம் பண்ணுவதில் முடிந்த முடிவாக ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்கிறார்களா என்றால், அதுதான் இல்லை. ஒவ்வொரு அறிஞர் ஒவ்வொரு அபிப்ராயத்தைச் சொல்கிறார். திலகர் கி.மு.6000-ல் வேதம் உண்டாயிற்று என்கிறார். வேறு சிலர் கி.மு. 3000 என்கிறார்கள். அதைவிடக் கிட்டத்தில் கி.மு. 1500-க்கு வேதகாலத்தை இழுத்து விட்டிருக்கிறவர்களும் உண்டு.

மற்ற மதப் புஸ்தகங்களைப் பற்றி இப்படி அபிப்ராய பேதம் இல்லை. பௌத்தர்களின் த்ரிபிடகத்தை எடுத்துக் கொண்டால் அது அசோகன் காலத்தில் எழுதப்பட்டது என்றும், ஆனாலும் அதிலுள்ள புத்தரின் உபதேசங்கள் அசோகருக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முந்தி, அதாவது இன்றைக்கு 2500 வருஷத்துக்கு முன் புத்தர் சொன்னவை என்றும் ஏகமனதாக அபிப்ராயப்படுகிறார்கள். பைபிளின் ந்யூ டெஸ்ட்மென்ட் உண்டாகிக் கிட்டத்தட்ட 2000 வருஷம் ஆகிறது என்பதிலும் ஏகோபித்த அபிப்ராயம் இருக்கிறது. குரான் உண்டாகி சுமார் 1300 வருஷம் ஆகிறது என்று ஸகலரும் ஒப்புக் கொள்கிறார்கள். நம் வேதத்தின்

விஷயத்தில் மட்டும் இப்படி ஒரு முடிவான தீர்மானம் ஏற்படாமலிருக்கிறது.

இரண்டு தினுசான காலக்கணக்கு என்று சொன்னேனே, அதைக் கொஞ்சம் விளக்க வேண்டும். வேதத்திலே சில இடங்களில், அப்போதிருந்த கிரஹங்களின் நிலைமை பற்றிச் சொல்லியிருக்கிறது. இப்படிப்பட்ட astrological conjunction (கிரஹச் சேர்க்கை) எப்போது ஏற்பட்டிருக்கும் என்று வான சாஸ்திரப்படிக் கணக்குப் பண்ணி கி.மு. 6000, அல்லது வேறு ஏதோ ஒரு வருஷம் என்ற கணக்குக்கு வருகிறார்கள்.

ஆனால் இந்த மாதிரியான கிரஹச் சேர்க்கை ஒரே ஒரு தடவை கி.மு. 6000-ல் தான் ஏற்பட்டது என்று எப்படிச் சொல்ல முடியும்? அதற்கு முந்தியும் பல தடவை இதே மாதிரி இருந்திருக்கும். இந்த சிருஷ்டியில் மட்டுமில்லாமல், இந்த சிருஷ்டிக்கு முற்பட்ட பிரளயத்துக்கு முந்தியிருந்த சிருஷ்டிகளிலும் இதே கிரஹ நிலைமைகள், planetary positions எத்தனையோ தடவை இருந்திருக்கும். வேதத்திலே குறிப்பிட்டிருப்பது இவற்றில் எது என்று எப்படித் தீர்மானமான முடிவு பண்ணுவது? ஆகையால், காலத்தையெல்லாம் துளைத்துக் கொண்டு பார்க்கக்கூடிய அதீந்திரிய சக்தி வாய்ந்த ரிஷிகள் சேர்த்துக் கொடுத்த வேதங்களில் இப்படிப்பட்ட கணக்குகள் பொருந்தாமல்தான் இருக்கின்றன. வேதத்திலேயே இருக்கப்பட்ட உட்சான்று (internal evidence) என்று ஆராய்ச்சிக்காரர்கள் பெரிதுபடுத்துகிற வானசாஸ்திரக் கணக்கு, வாஸ்தவத்தில் விஷயத்தைத் தெளிவுபடுத்தவேயில்லை.

இன்னொரு, கணக்கு, பாஷையை வைத்துச் செய்வது என்று சொன்னேன். பாஷையில் மொழி, லிபி (script) என்று இரண்டு இருக்கின்றன.

இப்போது நம் தேசத்தில் இருக்கப்பட்ட லிபிகளுக்கெல்லாம் ஆதிமூலமாக பிராம்மி லிபி இருக்கிறது. இப்போது பார்த்தால் தமிழ் எழுத்துக்கும், தேவநாகரி [ஸம்ஸ்கிருத] எழுத்துக்கும் சம்பந்தமே இல்லாத மாதிரி இருக்கிறது. ஆனால் – பல நூற்றாண்டுகளாக வந்திருக்கிற சாஸனங்களை ஆராய்ச்சி பண்ணிப் பார்த்து, நூற்றாண்டு வாரியாக பிராம்மி லிபியில் ஏற்பட்ட மாறுதல்களுகளுக்கு சார்ட் (chart) போட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்தால் மூலமான பிராம்மியிலேயே தான் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு காலத்தில் ஒருவிதமான மாறுதல்கள் ஏற்பட்டு, இப்போது பார்த்தால் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமேயில்லாமல் தோன்றும் லிபிகள் எல்லாம் அந்த ஒரே மூலத்திலிருந்து வந்திருக்கின்றன என்று தெரிகிறது. இப்போது இருப்பதெல்லாம் பிராம்மியில் மீசை போட்டுக் கொண்ட எழுத்துக்கள், கொம்பு முளைத்த எழுத்துக்கள் என்றுதான் எனக்கு வேடிக்கையாகத் தோன்றும். சார்ட்டைப் பார்த்தால் உங்களுக்கும் அப்படித்தான் தோன்றும். சில சமயங்களில் பிராம்மி எழுத்தின் நடுவிலே மீசை மாதிரி ஒன்று சேர்கிறது. தேவநாகரி உ, ஊ எல்லாம் இப்படித்தான் இருக்கின்றன. தமிழ் எழுத்துக்கள் அநேகம் கொம்பு போட்டுக்கொண்டு தோன்றியிருக்கின்றன. இம்மாதிரியான ஒவ்வொரு மாறுதலும் ஏற்பட இத்தனை காலம் ஆகிறது என்று

நன்றாக நிர்ணயமான சரித்திர காலச் சாஸனங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்த அடிப்படையில் கணக்குப் பண்ணியே இதுவரை காலம் தெரியாதிருக்கிற ஒரு சமயத்தைச் சேர்ந்த சாஸனத்தின் லிபியைப் பார்த்து, அது இன்ன காலத்தைச் சேர்ந்தது என்று நிர்ணயம் பண்ணுகிறார்கள்.

வேதத்தைப் பொறுத்தமட்டில் அதை எங்கேயும் கல்வெட்டில் எழுதிவைக்கவில்லை. ஆனபடியால் லிபியைப் பார்த்து காலநிர்ணயம் பண்ண வேண்டிய பிரச்சனை இல்லை.

பாஷை ரீதியில் உள்ள இன்னொரு விதமான அடிப்படையில்தான் வேத காலத்தை ஆராய்கிறார்கள். அது என்னவென்றால் : வார்த்தைகளில் ரூபம், ஒலிகளின் வடிவம் மாறிக் கொண்டே வந்திருக்கிறது. சங்க காலத்தில் இருந்த அநேக தமிழ் வார்த்தைகள் இப்போது ரொம்பவும் உருமாறியிருக்கின்றன. ஒவ்வொரு பாஷையிலும் இப்படியேதான். சில சப்தங்கள் தேய்ந்து, உதிர்ந்து போகின்றன. சப்தம் மட்டுமின்றி அர்த்தமும் மாறுகிறது. இப்போது 'வெகுளி' என்றால் 'அப்பாவி' என்று அர்த்தம் பண்ணிக் கொள்கிறோம். ஆனால் ஆதியில் 'வெகுளி' என்றால் கோபம், கோபிஷ்டன் என்று அர்த்தம் இருந்தது. இப்போதுங்கூட 'வெகுண்டு எழுந்தான்' என்கிறபோது பழைய அர்த்தத்தில் தான் சொல்கிறோம். பழைய காலத்தில் 'மாண்ட' என்றால் 'செத்துப் போன' என்ற அர்த்தமே கிடையாது; 'புகழுடைய' என்பதே அதன் அர்த்தம் என்று ஒரு தமிழ்ப் புலவர் சொன்னார். இதே மாதிரி ஸம்ஸ்க்ருதத்திலும் உண்டு. பிற்கால காவியங்களைப்

புரிந்து கொள்கிற மாதிரி வேதங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. எல்லா பாஷையிலுமே இப்படி உண்டு. இதில் நம் தேச பாஷைகள் எவ்வளவோ தேவலை. இங்கிலீஷ் பாஷையில் ஒரு ஆயிர வருஷத்துக்கே உட்பட்ட Anglo-Saxon என்கிற ஓல்ட் இங்கிலீஷில் ஒரு வரிகூட இன்றைய வெள்ளைக்காரர்களுக்குப் புரியாது. ஒரு முந்நூற்று சொச்சம் வருஷத்திலேயே அமெரிக்காவில் இங்கிலீஷ் ரொம்பவும் மாறி 'அமெரிக்கன் இங்கிலீஷ்' என்று தனியாகப் பெயர் வைக்கிற அளவுக்கு ரூபபேதம் அடைந்திருக்கிறது.

சிறுகச் சிறுக ஒரு ஒலி ஜனங்களிடத்தில் புழக்கத்தால் தேய்ந்து தேய்ந்து உருமாறுவதற்கு எத்தனை காலமாகிறது என்று கணக்கு பண்ணியிருக்கிறார்கள்.

அர்த்தம் மாறுவதற்கு எத்தனை காலமாகிறது என்பதை ஆராய்ச்சியின் மூலம் இவ்வளவு தெளிவாக நிர்ணயம் பண்ணியிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆகையால் சப்த ரூபத்தைப் பார்க்கிற ரீதியிலேயே வேதவாக்யங்களைப் பார்த்துக் காலம் கணிக்கிறார்கள். "ஒவ்வொரு இருநூறு வருஷத்துக்கும் ஒரு சப்தம் இப்படியிப்படி மாறுகிறது. இதன்படி பிற்கால சப்தமொன்று வேதத்தில் இப்படி இருக்கிறதென்றால் அது இத்தனை முறை மாறியிருக்க வேண்டும்; இத்தனை mutation ஏற்பட்டிருக்கிறது என்று அர்த்தம். வேத சப்தம் ஒன்றுக்கும் பிற்கால சப்தத்துக்கும் நடுவே பத்து மாறுதல்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்றால் 10 * 200 = 2000 வருஷத்துக்கு முந்தி வேதம் உண்டாயிற்று என்று அர்த்தம். ரொம்பவும் அதிகமாகப் போனால் இன்னொரு

சப்தம் முப்பது தரம் மாறியிருப்பதாகத் தெரிகிறதென்றால், வேதம் உண்டாகி 30 * 200=6000 வருஷம் ஆகிறது என்று அர்த்தம். அதாவது கி.மு. 4000-க்கு முந்தி வேதம் இல்லை" - என்கிற மாதிரி பல அபிப்ராயங்களைச் சொல்கிறார்கள்.

இந்த அடிப்படை தப்பு என்பதை ஒரு திருஷ்டாந்தத்தால் புரியவைக்க முடியும்.

நம் அகங்களில் அநேக விதமான பாத்திரங்கள் இருக்கின்றன. சிலவற்றை ஜாஸ்தி உபயோகிப்போம். சிலதை அவ்வளவுக்கு உபயோகிக்க மாட்டோம். வெண்கலப் பானையில் தினம் தினம் சாதம் வடிக்க வேண்டும். தினமும் அதை இரண்டு வேளையும் நன்றாகத் தேய்க்க வேண்டும். அதனால் அது சீக்கிரத்தில் தேய்ந்து போகிறது. இன்னொரு பெரிய அண்டா இருக்கிறது. அது சாமான் ரூமிலேயே புழங்காமல் கிடக்கிறது. அதற்கு தினப்படி உபயோகமேயில்லை. எப்போதாவது ஒரு கல்யாணம், கார்த்திகை வந்தால்தான் அதற்கு உபயோகம். அதைத் தேய்ப்பதும் அப்போதுதான். ஆகையால், வெண்கலப் பானை தேய்கிற மாதிரி இந்த அண்டா தேயுமா? வெண்கலப் பானை போன வருஷம்தான் வாங்கியிருக்கலாம். ஆனாலும் ஏகமாகத் தேய்ந்திருக்கும். அண்டா நம் பாட்டிக்குச் சீராகக் கொடுத்ததாக இருக்கலாம். ஆனாலும் கொஞ்சம்கூடத் தேயாமலே கிண்டாக இருக்கிறது. இதைப் பார்த்து வெண்கலப்பானைதான் முந்தி வாங்கினது, அண்டா பிந்தி வாங்கினது என்று முடிவு பண்ணலாமா? கல்யாணத்தின்போது ஒரே ஸமயத்தில் தான் சாப்பிடுகிற தட்டு, பன்னீர்ச்செம்பு இரண்டும் சீராகக்

கொடுத்திருப்பார்கள். பத்து வருஷத்தில் தட்டு நசுங்கி, தேய்ந்து, மறுபடி அழித்துப் பண்ணுகிற அளவுக்கு வந்துவிடுகிறது. பன்னீர்ச் செம்போ புதுக் கருக்கே போகாமல் மெருகோடு இருக்கிறது.

இப்படித்தான் அன்றாடம் பழக்கத்தில் புழங்குகிற லௌகிக சப்தங்களும், வேத சப்தங்களும் இரண்டு வகையான பாத்திரங்களைப் போல் வித்யாஸமாக இருக்கின்றன. தினந்தினமும் பேசிக்கொண்டிருக்கிற வார்த்தைகளின் சப்தங்கள் பல விதங்களில் தேய்கினறன, மாறுகின்றன. வேதமும் தினம் தினம் ஓதப்படுவதுதான். ஆனாலும் அதன் மூல சப்தம் மாறாமலே ஓதப்படுவதுதான் அதன் தனிச்சிறப்பு. வேதத்தின் அங்கங்களில் சிக்ஷை, வியாகரணம் என்பவை பற்றிப் பிற்பாடு நான் சொல்லும்போது, ஒவ்வொரு வேத அக்ஷரத்தையும் மூல ரூபம் சிதையாமல் ரக்ஷித்து அப்படியே சுத்தமாக கொடுப்பதற்கு எத்தனை கட்டுத்திட்டமான ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்வீர்கள். ஆகையினால் நித்யப்படி புழக்கத்திலுள்ள பாத்திரங்கள் தேய்கிற மாதிரி அன்றாட வழக்குச் சொற்கள் மாறுகிறதென்றால், வேத சப்தம் மாறாது; மாறவுமில்லை. அது கல்யாண காலங்களில் மட்டும் உபயோகமாகிற அண்டா மாதிரி இருக்கிறது.

"வேதங்களுக்குள்ளேயே ரிக்வேதம் முந்தியது; அப்புறம் யஜுஸ் வந்தது; கடைசியிலே அதர்வம்; ஒவ்வொரு வேத சாகையிலும் ஸம்ஹிதா பாகம் முந்தையது; பிராம்மணம் அதற்குப் பின்னாலும், ஆரண்யகம் கடைசியாகவும் வந்தது" என்றெல்லாம் சொல்லிக் கொண்டு, இவற்றுக்கிடையே

உள்ள பாஷா வித்யாஸங்களைப் பார்த்து, மேலே சொன்ன மாதிரி காலக் கணக்கு போடுகிறார்கள். எத்தனைதான் ஆராய்ச்சி பண்ணினாலும் நான் சொன்ன அடிப்படை வித்யாஸத்தைக் கவனிக்காததால், இது எதையும் சரியென்று ஒப்புக் கொள்வதற்கில்லை. எத்தனையோ கட்டுத் திட்டங்கள் பண்ணியும் வேத சப்தங்கள் கொஞ்சம் மாறி இருக்கின்றன என்றால், அந்த மாறுதல் 200 வருஷத்துக்கு ஒரு தரம் ஏற்படும் மாறுதலாக இருக்காது என்பதையும், பல ஆயிரம் வருஷத்தில் தான் இப்படிப்பட்ட மாறுதல் ஏற்பட்டிருக்க முடியும் என்பதையும் கவனிக்கவேண்டும். Wear and Tear என்று சொல்வது [புழக்கத்தினால் ஏற்படும் தேய்மானம்] வேதத்தின் விஷயத்தில் மற்ற இலக்கியம் அல்லது பேச்சு மொழிக்கான மாதிரி இல்லை என்பதைப் புரிந்துகொண்டால், இந்தக் கால நிர்ணயமும் தப்புதான் என்று புரியும்.

ஹிந்தி என்று ஒரு பாஷையாக ஏற்படுத்தி வைத்தே சில நூற்றாண்டுகள்தான் ஆகின்றன. ஆனாலும் அது ஒரு பெரிய பிரதேசத்தில் பரவியிருப்பதாலும், அதில் ஸம்ஸ்கிருதம், அராபிக், பெர்ஷியன், இங்கிலீஷ் முதலிய பல பாஷைகள் கலப்பதாலும் இந்தச் சிறிது காலத்துக்குள்ளேயே அது ரொம்பவும் மாறிவிட்டது. ஒரு சின்னப் பிரதேசத்திலேயே வளர்ந்த தமிழ், இப்படி அதிவேகமாக மாறவில்லை என்றாலும் தாயுமானவர் பாடல் புரிகிற அளவுக்குக் கம்ப ராமாயணம் புரியாது, கம்ப ராமாயணம் புரிகிற அளவுக்கு ஞானசம்பந்தர் தேவாரம் புரியாது, தேவாரம் புரிகிற அளவுக்குத்

திருமுருகாற்றுப்படை புரியாது என்கிற ரீதியில், தமிழ் பாஷையும் மாறிக் கொண்டேதான் வந்திருக்கிறது. ஸம்ஸ்கிருதம் ஹிந்தியைப் போல, ஹிந்தியை விடவும், விரிவாக தேசம் பூராவிலும் பரவியிருந்தாலும், அது ஹிந்தியைப் போலவும், தமிழ் போலவும் பேச்சு மொழியாக இல்லாமல் இலக்கிய பாஷையாகவே நெடுங்காலமாக இருந்திருப்பதால் தமிழின் அளவுக்குக்கூட மாறவில்லை. அதிலும் காவியங்களை விடப் பரம ஜாக்ரதையுடன் ரக்ஷிக்கப்பட்ட வேதங்களில் மாறுதல் ஏற்படுவது ரொம்பவும் அபூர்வம்தான். ஆகையால் இப்போது ஆராய்ச்சிக்காரர்கள் மற்ற பாஷைகளின் விஷயத்தில் ஆயிரம் வருஷம் என்று கணக்குப் பண்ணும் மாறுதல், வேதத்தில் ஏற்படுவதற்கு லக்ஷம் வருஷம் வேண்டியிருக்கும்!

அக்ஷர சுத்தத்தால்தான் மந்திரங்களுக்கு சக்தியே ஏற்படுகிறது என்ற கொள்கையின் பேரில் வேத சப்தங்கள் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றன. அதில் தவறுதல் ஏற்பட்டுவிடக் கூடாது என்றே தனியாக ஒரு ஜாதி உட்கார்ந்து கொண்டு, அதைத் தலைமுறை தலைமுறையாக மூல ரூபத்திலேயே காப்பாற்றிக் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறது. இந்தப் பெரிய உண்மையைக் கவனிக்காமல் பண்ணுகிற ஆராய்ச்சிகளினால் யதார்த்தம் ஒரு நாளும் தெரியாது.

வேதம் அநாதியில்லை என்று இந்த ஆராய்ச்சிகள் நிரூபிக்கவேயில்லை. அத்யயனத்தில் எத்தனை விதங்களை வைத்து வேத சப்தத்தை உள்ளபடி

காப்பாற்றியிருக்கிறார்கள் என்பதை ஆலோசித்தோமானால் இது புரியும்.

அத்யயன முறைகள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

அத்யயன முறைகள்

எழுதி வைக்காமலே வேதத்தைத் துளிக்கூடப் பிழை வராமல் காப்பாற்றிக் கொடுப்பதற்காக நம்முடைய ஆன்றோர் பல வழிகளை வகுத்து வைத்தார்கள். ஒரு அக்ஷரம்கூட மாறிவிடாமல், ஒரு ஸ்வரம்கூட ஏற்றல் இறக்கலில் வித்தியாஸப் பட்டுவிடாமல், மந்திர சக்தியானது பூரணமாகப் பலன் தருவதற்காக அத்யயனத்தில் பல விதிகளை ஏற்படுத்தி வைத்தார்கள்.

ஒவ்வொரு பதத்திலுள்ள ஒவ்வொரு அக்ஷரத்தையும் சொல்வதற்கு இத்தனை கால அளவை வேண்டும் என்று "மாத்ரா" கணக்கு வைத்திருக்கிறார்கள். மூச்சை எப்படி விடுவதால் சரீரத்தில் எந்தப் பகுதியிலே வைப்ரேஷன் ஏற்பட்டு சுத்தமான அந்த அக்ஷரம் பிறக்குமோ, அதைக் கூட சிக்ஷா என்ற வேதாங்கத்தில் நிர்ணயம் பண்ணிக் கொடுத்திருக்கிறார்கள். ஸங்கீத ஸ்வரத்துக்கும் வேத ஸ்வரத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை, மிருகங்கள், பக்ஷிகள் முதலியவை எழுப்பும் ஒலிகளுக்கும் வேத ஸ்வரங்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை

ஆகியவற்றைச் சொல்லி, சரியாக வேத ஸ்வரங்களை உச்சரிப்பதற்கு வழி காட்டியிருக்கிறார்கள்.

வார்த்தைகளும் அக்ஷரங்களும் மாறிப் போகாமலிருப்பதற்குச் செய்த ஒரு பெரிய உபாயம் என்னவென்றால், ஒரு மந்திரத்திலுள்ள பதங்களைப் பல தினுசில் கோத்து வாங்கி வாக்யம், பதம், க்ரமம், ஜடா, மாலா, சிகா, ரேகா, த்வஜம், தண்டம், ரதம், கனம் ஆகிய பலவிதமான முறைகளை (patterns) ஏற்படுத்தியிருப்பதுதான். இப்போது கனபாடிகள் என்று சிலபேரைச் சொல்கிறோம் அல்லவா? இவர்கள் "கனம் என்கிற முறையில் வேதம் ஓதுவது வரைக்கும் பாடம் படித்தவர்கள்" என்று அர்த்தம். 'பாடி' என்றால் பாடம் படித்தவன். 'கனம்' வரையில் பாடம் படித்தவன் "கனபாடி". ஒரு கனபாடி கனம் சொல்லும்போது கேட்கிறோம். ஒரு சில பதங்களையே அவர் அப்போது பல தினுஸாக மாற்றி மாற்றி, மடக்கி மடக்கி சொல்கிறார் என்று தெரிகிறது. இது கேட்பதற்கே பரமானந்தமாக கர்ணாம்ருதமாக இருக்கிறது. வேத மந்திரங்களுக்குப் பொதுவாகவே உள்ள காம்பீர்யம் இதனால் மேலும் ஜாஸ்தியானாற் போலிருக்கிறது. இப்படியேதான் க்ரமம், ஜடை, சிகா, மாலா முதலான மற்ற முறைகளிலும் பதங்களை ஒவ்வொரு விதமாகச் சேர்த்துக் சேர்த்துத் திருப்பித் திருப்பிச் சொல்கிறபோது ரொம்பவும் கம்பீரமாக, தெய்விகமாக இருக்கிறது. ஆனால் இந்த ஓதுமுறைகளின் முக்யமான உத்தேசம் வேத மந்திரங்களின் அக்ஷரம் கொஞ்சம் கூட மாறிவிடாமலிருப்பதற்காக அவற்றைக் குறுக்கும் நெடுக்குமாய் பின்னிப் பின்னித் தரவேண்டும் என்பதே.

வாக்ய பாடம் அல்லது ஸம்ஹிதா பாடம் என்பதுதான் மந்திரங்களை உள்ளபடி அப்படியே பாடம் பண்ணுவது. வாக்ய ரூபமாக மந்திரங்கள் வரும்போது, அதிலுள்ள பதங்கள் ஸந்தியில் ஒன்று கூடுவதுண்டு. இங்கிலீஷைவிடத் தமிழில் இம்மாதிரி ஸந்தியில் வார்த்தைகள் ஒன்று சேர்வது ஜாஸ்தி. இங்கிலீஷில் வார்த்தைகள் தனித்தனியாகவேதான் இருக்கும். தமிழில் பழைய தேவாரம், திருவாசகம், திருக்குறள், திவ்யபிரபந்தம் மாதிரியானவற்றில் நமக்கு தனித்தனியாக வார்த்தைகள் தெரியாத மாதிரி ஸந்தி சேர்த்திருப்பதைப் பார்க்கிறோம். ஸம்ஸ்கிருதத்தில் தமிழைவிடவும் தனித்தனி வார்த்தைகளின் ரூபம் தெரியாமல் ஸந்தி சேர்த்திருக்கும். இப்படி ஒவ்வொரு வேத வாக்யத்திலும் உள்ள பதங்களைத் தெளிவாகப் பிரித்துப் பிரித்துப் பாடம் பண்ணுவதற்குத்தான் 'பத பாடம்' என்று பெயர்.

ஸம்ஹிதா பாடத்துக்கு அடுத்தது பத பாடம். இதற்கு அடுத்தது க்ரம பாடம். இதிலே ஒரு மந்திரத்தின் முதல் வார்த்தையை இரண்டாவது வார்த்தையுடன் சேர்த்தும், இரண்டாவது வார்த்தையை மூன்றாவதுடன் சேர்த்தும் மூன்றாவதை நாலாவதுடன் சேர்த்தும், இப்படியே அந்த மந்திரம் முடிகிறவரைக்கும் சொல்லிக் கொண்டு போக வேண்டும்.

பழைய கால சாஸனங்கள் சிலதில் உள்ள ஊர் பிரமுகர்களின் பெயர்களில் சில பெயருக்கு முடிவில் "க்ரம வித்தன்" என்று போட்டிருக்கும். "வேதவித்" என்கிற மாதிரி (வேதவித்து என்று தமிழில் சொல்கிறோம்) ,

'க்ரமவித்' அல்லது 'க்ரமவித்தன்' என்றால், வேதத்தைக் கிரமம் என்ற அத்யயன முறையில் சொல்லத் தெரிந்தவன் என்று அர்த்தம். தமிழ் நாட்டில் இப்படி ஊருக்கு ஊர் பலர் இருந்திருப்பதைத்தான் சாஸனங்களிலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

இதற்கப்புறம் ஜடா பாடம். இதிலே முதல் வார்த்தையை இரண்டாவது வார்த்தையுடன் சேர்த்துச் சொன்னவுடன், அதை மாற்றி இரண்டாவதை முதல் வார்த்தையுடன் சேர்க்க வேண்டும்; மறுபடியும் முதலை இரண்டாவதோடு சேர்க்க வேண்டும். அப்புறம் இரண்டாவது வார்த்தையை மூன்றாவதோடும், அதை மாற்றி மூன்றாவதை இரண்டாவதோடும் திரும்பவும் இரண்டாவதை மூன்றாவதோடும்; இப்படியே பின்னால் வருகிற வார்த்தைகளையும் மாற்றி மாற்றிச் சேர்த்துக் கொண்டு போக வெண்டும். இப்படிச் சொல்ல வல்லவர்களையே 'ஜடா வல்லபர்' என்பது.

இங்கே இரண்டு வார்த்தைகளைக் கோத்து வாங்கின மாதிரியே, மூன்று வார்த்தைகளை முன்னும் பின்னுமாக மாற்றுவது சிகா பாடம்.

இதைவிட சிரமமானது கனபாடம். இதிலே நாலு தினுசு உண்டு. முன்னும் பின்னுமாக வார்த்தைகளைப் பல விதங்களில் permutation, combination என்று சேர்த்துச் சொல்லும் அத்யயன முறையே அது. அதையெல்லாம் விளக்கினால் கணக்கு க்ளாஸ் மாதிரி மண்டையை உடைக்கும்.

உயிரைக் காப்பாற்றுகிற ஒரு அபூர்வ மருந்தைக் காப்பாற்றுவதற்கு லாபரட்டரியில் எத்தனையோ ஜாக்ரதை

செய்து வைத்திருப்பது போல, லோகத்தை ரக்ஷிக்கிற வேத சப்தங்களை எழுதி வைக்காமலே வாய் வார்த்தையில் லவலேசம் கூட மாறிப் போய் விடமால் காப்பாற்றித் தருவதற்காக, நம் பூர்விகர்கள் இப்படிப்பட்ட பாட முறைகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

ஸம்ஹிதா பாடத்திலும், பத பாடத்திலும் மந்திரத்திலுள்ள வார்த்தைகளை அதே ஆர்டரில், ஒவ்வொன்றையும் ஒரே தரம் மட்டும் சொல்வதால் இவை ப்ரகிருதி (இயற்கையான) பாடம் எனப்படுகின்றன. மற்றவை விக்ருதி (செயற்கையான) பாடம் எனப்படும். க்ரமத்திலே வார்த்தைகள் ஒன்று - இரண்டு - மூன்று அசல் பிரகிருதியாகவே போகாவிட்டாலும், இரண்டுக்கப்புறம் ஒன்று, மூன்றுக்கப்புறம் இரண்டு என்று தலைகீழாகத் திரும்பாததால், அதைப் பூரணமான விக்ருதி என்று சொல்ல முடியாது. முழு விக்ருதியானவை க்ரமம் தவிர எட்டுப் பாட வகைகள் ஆகும். அஷ்ட விக்ருதி என்ற இந்த எட்டு விதமான பாடங்களின் பெயர்களையும் ஒரு ச்லோக ரூபமாக நினைவில் வைத்துக் கொள்கிற மாதிரிச் சொல்வதுண்டு:

ஜடா மாலா சிகா ரேகா த்வஜோ தண்டோ ரதோ கன :|

இத்-யஷ்ட-விக்ருதய: ப்ரோக்தா, க்ரம: பூர்வா மஹர்ஷிபி :|

ரொம்பவும் ஆதிகாலத்தில் மஹரிஷிகளாலேயே இந்தப் பாடமுறைகள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன.

வேதம் வாய்மொழியாக மட்டுமே (புஸ்தகத்தில் எழுதி வைக்காமல்) வரும்போது, அதன் ரூபம் கொஞ்சமும் மாறக்கூடாது என்றால், அதற்கு இத்தனை விதமான பாடமும் இருந்ததாக வேண்டும் என்று வைத்தார்கள். பதத்தில் வார்த்தை வார்த்தையாகவும், க்ரமத்தில் இரண்டிரண்டு வார்த்தையாகவும், ஜடையில் அதை முன்பின்னாகவும் இப்படியெல்லாம் பல தினுசில் சொல்வது ஒன்றுக்கொன்று tally ஆவதால் [ஒத்துப்போவதால்] மூலரூபம் மாறவே இல்லை என்று நிச்சயமாகிறதல்லவா? அதனால் இத்தனை விதமான பதச் சேர்க்கை முறைகளும் இருக்க வேண்டும் என்று வைத்தார்கள். இதில் ஒன்றைவிட இன்னொரு தினுசில் அத்யயனம் பண்ணுவதற்குப் பலனும் இத்தனை மடங்கு ஜாஸ்தி என்று கூடச் சொல்வதுண்டு.

ஸம்ஹிதா பாட மாத்ரேண யத் பலம் ப்ரோச்யதே புதை:।

பதேது த்விகுணம் வித்யாத் க்ரமேது ச சதுர் குணம்।

வர்ண க்ரமே சதகுணம் ஜடாயாந்து ஸஹஸ்ரகம் ।

(ஸம்ஹிதா பாடத்தைவிட இருமடங்கு பலன் கொண்டது பத பாடம்; நான்கு மடங்கு பலனளிப்பது க்ரம பாடம்; நூறு மடங்கு பலன் வாய்ந்து 'வர்ண க்ரமம்' என்ற பாடமுறை; ஆயிரம் மடங்கு பலனளிப்பது ஜடா பாடம்.)

அநாதியான வேதம் மாறவே கூடாது என்பதற்காக இத்தனை ஜாக்ரதையாக நம் முன்னோர்கள் அதன் ரூபத்தை ரக்ஷித்துக் கொடுத்திருக்கும்போது, வேத சப்தங்கள் எப்படி மாறின என்பதைப் பார்த்து வேதத்துக்குக்

கால நிர்ணயம் பண்ணுகிறோம் என்று நவீன கால ஆராய்ச்சியாளர்கள் கிளம்பியிருப்பது, ஒரு போதும் யதார்த்தத்தை உள்ளபடி அறியப் பிரயோஜனப் படாது.

தெய்வ வாக்கு

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

தெய்வ வாக்கு

அபௌருஷேயம் (மனிதர் செய்யாதது) என்றால், நம்ப மாட்டோம் என்பது சரியேயில்லை. நம் தேசத்தில் மட்டுமில்லாமல் மற்ற மதஸ்தர்களும் இப்படித்தான் சொல்கிறார்கள். கர்த்தரின் வார்த்தையையே தாம் சொல்வதாகவும், தாமாக எதையும் சொல்லவில்லை என்றும் இயேசு சொல்கிறார். முகமது நபி அல்லாவின் ஆக்ஞைகளையே வெளியிட்டதாக அந்த மதஸ்தர்கள் சொல்கிறார்கள். நாம் அபௌருஷேயம் என்பதைத்தான் அங்கே Revealed Text என்கிறார்கள். தெய்வவாக்கே மஹான்கள் மூலம் மத நூல்களாக வந்திருக்கின்றன.

மதப் புஸ்தகமில்லாமல், எந்த துறையிலும் ஆழ்ந்து ஐகாக்ரியத்தோடு (ஒருமுனைப்பாட்டோடு) புகுந்து விட்டால், அதில் உள்ள உண்மைகள் தாமாகவே ஒருத்தருக்கு வெளிப்பட்டுவிடுகின்றன. அந்த ஸத்யமே ஸ்புரித்தது, flash ஆயிற்று என்கிறார்கள். இதை intuition என்கிறார்கள். ஐன்ஸ்டீன் கூடத் தம்முடைய பிரசித்தமான 'ரிலேடிவிடி தியரி'யைத் தம் புத்தியால் யோசித்து யோசித்துப் பண்ணவில்லை என்றும், அந்த ஈக்வேஷன்

அப்படியே இன்ட்யூஷனில் ஃப்ளாஷ் ஆயிற்று என்றுதான் சொல்லியிருக்கிறார் என்றும் ஒரு ப்ரொஃபஸர் தெரிவித்தார்.

இதையெல்லாம் ஒப்புக்கொள்ளும்போது, பரம சுத்தமான அந்தஃகரணத்தை உடைய ரிஷிகளின் ஹ்ருதய ஆகாசத்தில் வேத மந்திரங்கள் தாமாகவே, அதாவது அபௌருஷேயமாக வெளிப்பட்டன என்பதை நம்பமாட்டோம் என்பது நியாயமில்லை.

வேதங்கள் அனந்தம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

வேதங்கள் அனந்தம்

சிருஷ்டி அத்தனையும், சிருஷ்டிக்கு அப்பாற்பட்டதும் கூட சப்தப் பிரபஞ்சத்தில் இருக்கிறதென்றால், அது ரொம்ப ரொம்ப பெரிதாக அல்லவா இருக்க வேண்டும்? இப்போது வேதங்கள் என்று சொல்லப்படுகிற புஸ்தகங்கள் என்னதான் பெரிதாக இருந்தாலும், விச்வ வியாபாரத்தின் அத்தனை காரியங்களும் இந்த மந்திரங்களுக்குள் வந்துவிட்டன என்றால் சரியாக இருக்குமா என்று தோன்றலாம்.

இப்போது நமக்கு வந்திருக்கிற வேதங்கள் கொஞ்சம்தான். வேதத்திலேயே என்ன சொல்லியிருக்கிறதென்றால், வேதங்களுக்கு அளவே இல்லை – "அனந்தா வைவேதா:"– என்று இருக்கிறது. ரிஷிகளுக்கு அத்தனை வேதங்களும்

ஸ்புரித்துவிட்டன என்று சொல்ல முடியாது. நாலு வேதங்களின் ஆயிரத்துச் சொச்சம் சாகைகளே (சாகை என்றால் கிளை) அவர்களுக்குத் தெரிந்தவை.

லோகம் முழுக்க சிருஷ்டித்த பிரம்மாவுக்கே வேதம் முழுக்கத் தெரிந்தது. இந்த பிரம்மாவுக்கு முன் ஒரு மஹாப் பிரளயம் நடந்தது. அதற்கு முந்தி இன்னொரு பிரம்மா இருந்தார். அதே மாதிரி அவருக்கும் முந்தி உண்டு. எல்லாவற்றுக்கும் முதலில் பரமாத்மாவின் எந்த ச்வாஸ சலனத்தால், சிருஷ்டிக் கிரமம் முதல் பிரம்மாவின் தொழிலாகத் தூண்டப்பட்டதோ, அந்தச் சலனம் மட்டும் ஆகாசத்தில் இத்தனை பிரளயங்களிலும் இருந்து கொண்டேதான் இருக்கிறது. அதற்கு மட்டும் அழிவே இல்லை. ஒவ்வொரு மஹாபிரளயத்துக்கும் அப்புறம் வருகிற புது பிரம்மா இந்த சலன சப்தங்களைக் கொண்டுதான் மறுபடி ஸ்ருஷ்டி முழுதையும் பண்ணுகிறார்.

நாம் எழுப்புகிற ஒலிகள் அழிகிறதேயில்லை! இரண்டாயிரம் வருஷத்துமுன் கிறிஸ்து பேசினதை, அவர் குரலிலேயே இப்போதும் பிடித்துத் தரமுடியும்; அதற்காக முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்று படித்ததாக ஞாபகம். அப்புறம் அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. ஆனால் இப்படி ஒரு possibility [சாத்தியக்கூறு] இருக்கிறது என்று தெரிகிறது. ஒரு ஒலி உண்டானபின், என்றுமே அது அழியாமல் ஆகாசத்தில் இருக்கிறது என்று தெரிகிறது.

இம்மாதிரி, பிரளயத்திலும் அழியாமலிருந்த வேத சப்தங்களைக் கொண்டுதான் பிரம்மா மறுபடி லோக சிருஷ்டி பண்ணியிருக்கிறார். கல், மண், மரம், இரும்பு முதலியவற்றை வைத்துக் கொண்டு, நாம் ஒரு ஊரை நிர்மாணம் பண்ணுகிறோம். ஆனால் இந்தக் கல், மண், மரம், இரும்பு எல்லாமே பரமாத்மாவின் எண்ணத்தில் இருந்து, எண்ணுகிற மனஸுக்கும் ச்வாஸத்திற்கும் மூலம் ஒன்றாயிருப்பதால், அவருடைய ச்வாஸ சலனத்தினால் ஏற்பட்டவைதான். அந்த சலனங்களுக்குரிய சப்த ரூபத்தை, பிரம்மா வேதங்களாகக் கண்டு அத்யயனம் பண்ணின மாத்திரத்தில் சிருஷ்டி முழுக்க வந்து விட்டது.

இப்போது அடிக்கடி பேப்பரில் [செய்தித்தாளில்] பார்க்கிறோம். பலவிதமான 'ஸௌண்ட் வைப்ரேஷன்'களை [சப்த அதிர்வுகளை] செடிகளுக்கு அருகிலே உண்டு பண்ணினால், சில விதமான வைப்ரேஷனினால் செடி நன்றாக வளர்ந்து நிறையக் காய்க்கிறது. சிலவகை வைப்ரேஷனால் வளர்ச்சி குன்றுகிறது என்று நியூஸ் வருகிறது. சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார சக்தி எல்லாம் சப்தத்துக்கு உண்டு என்பது இதிலிருந்து நிதர்சனமாகிறது.

பிரம்மாவின் தபோ மகிமையால், power of concentration-ஆல் லோகம் முழுவதையும் வேத சப்தத்தால் அவர் உண்டாக்க முடிந்தது. நாம் தினமும் ஜபிக்கிற அதே பஞ்சாக்ஷர மந்திரத்தை ஒரு தரம் சொல்லி ஒரு ஸித்தர் விபூதி பூசினால், உடனே ஒரு வியாதி சொஸ்தமாகிறது என்றால், அது எப்படி? நம்மைவிட அவருக்கு உள்ள கான்ஸென்ட்ரேஷன் [மன ஒருமைப்பாட்டு] –

சக்தியால்தான். அதோடுகூட மந்திரத்தை அக்ஷரம், ஸ்வரம் கொஞ்சங்கூட தப்பாமல் சுத்தமாகச் சொல்ல வேண்டும். அப்போதுதான் பலன் உண்டாகும். ஜகத் ச்ருஷ்டிக்குக் கருவியாகவே பிரம்மா பரமாத்மாவிடம் தோன்றியதால், அவருக்கு இவற்றில் பூர்ண சக்தி இருந்தது.

ஒன்றுமில்லாத ஆகாசத்திலிருந்து எலெக்ட்ரிஸிடியால் எவ்வளவோ காரியங்கள் செய்யப்படுகின்றன. அதைப் போல, எல்லாம் நிர்குணப் பிரம்மமான சைதன்ய வஸ்துவிடமிருந்து உண்டாகும். பிரளய ஸமயங்களில் அந்தச் சைதன்யம் தூங்கும். ஒரு ஸாண்டோ இருக்கிறான். அவன் தூங்கினால் அவனுடைய சக்தி ஒன்றும் வெளியே தெரிவதில்லை. குஸ்தி முதலிய காரியங்களைப் பண்ணும்பொழுது அவனுடைய சக்தி தெரிகிறது. அது போல சிருஷ்டி காலத்தில் சைதன்ய வஸ்துவின் சக்தி பல காரியங்களைச் செய்கிறது. நிர்குண வஸ்துவினிடத்திலிருந்து முதலில் ஒரு கான்ஸென்ட்ரேஷன் சக்தி (தபஸ்) கிளம்புகிறது. அதன் வழியே உண்டானவர் பிரம்மா. அவர் தபோரூபமாக உண்டானதால் சகல வேதங்களையும் பூர்ண சக்தியோடு கிரஹித்துக் கொண்டார். வேத சப்தத்திலிருந்து லோகத்தைச் சிருஷ்டித்தார். வேதங்கள் அளவிறந்தன; சிருஷ்டியும் பலவிதம்.

பரத்வாஜ மஹரிஷி மூன்று ஆயுஸ் பரியந்தம் வேதாத்தியயனம் செய்தார். பரமேச்வரன் அவருக்குப் பிரத்தியக்ஷமானார். "உமக்கு நாலாவது ஆயுஸ் கொடுக்கிறேன். அதைக் கொண்டு என்ன செய்வீர்?" என்று

கேட்டார். பரத்வாஜர், 'அந்த ஆயுஸை வைத்துக் கொண்டும் வேதாத்தியயனமே பண்ணிக்கொண்டிருப்பேன்' என்று சொன்னார். எத்தனை ஆயுஸ் கிடைத்தாலும் வேதங்களைப் பூர்ணமாக அத்யயனம் பண்ணுவது ஸாத்தியமில்லையாதலால், இந்த அஸாத்ய விஷயத்தில் ரிஷி பிரயத்னப்படுவதைப் பார்த்து பரிதாபம் கொண்ட பரமேச்வரன், அவர் மனஸை மாற்ற வேண்டும் என்று எண்ணினார். அங்கே மூன்று பெரிய மலைகளைத் தோன்றப் பண்ணி, ஒரு பிடி மண்ணை எடுத்துக் காட்டி, 'நீ இவ்வளவு வருஷக் கணக்காக அத்யயனம் பண்ணின வேதங்கள் இந்தப் பிடி மண்ணுக்கு ஸமானம். நீ இன்னும் தெரிந்து கொள்ளாதவை இந்த மலைகளைப்போல் இருக்கின்றன' என்று சொன்னார்.

வேதகிரி என்னும் திருக்கழுக்குன்றம் தான் இப்படி வேதமே மலையான இடம் என்பார்கள். நான் அங்கே கிரி பிரதக்ஷிணம் பண்ணினபோது, கூட வந்தவர்கள் "தேவ தேவ தேவ மஹாதேவ" என்று பஜனை பண்ணினார்கள். நான் அதை "வேத வேத வேத மஹாவேத" என்று மாற்றிக் கொடுத்தேன்!

பரத்வாஜ ரிஷியின் இந்தக் கதை வேதத்திலேயே "காடக"த்தில் இருக்கிறது.

அதனால் அனந்தமான வேதங்கள் உண்டு என்று தெரிகிறது. நாலுவேதம், ஆயிரத்து சொச்சம் சாகை என்பதெல்லாம் பிற்பாடு ஏற்பட்ட அமைப்புகள்தான்.

பிரம்மா உண்டானவுடன் அவருடைய ஹிருதயத்தில் வேத சப்தமெல்லாம் தோன்றின. அவருக்கு ஸ்ருஷ்டி

செய்வதற்கு அந்த வேதம் வழி காட்டிற்று. எங்கே பார்த்தாலும் வேத சப்தம் நிறைந்திருந்ததை அவர் அறிந்தார். அவருக்கு எல்லா வேதங்களும் தோன்றும்.

ரிஷிகளுக்குச் சிலசில மந்திரங்களே தோன்றும். இப்படி ரிஷிகளுக்குத் தோன்றிய மந்திரங்கள்தான் நமக்கு கிடைத்துள்ள வேதமாக இருக்கிறது.

நாம் மந்திரங்களுக்கு ரிஷி, சந்தஸ், தேவதை என்னும் மூன்றையும் சொல்லுகிறோம். எல்லா மந்திரங்களுக்கும் ரிஷி, சந்தஸ், தேவதை உண்டு. தெலுங்கு தேசத்தில் எல்லா மந்திரங்களுக்கும் அவைகளைச் சொல்லிவருகிறார்கள். தபஸ் பண்ணின ரிஷிகள் மூலமாக அறியப்பட்டவையே மந்திரங்கள். அந்தந்த ரிஷிகள்தான் அந்தந்த மந்திரங்களுக்குரிய ரிஷிகள். அவர்களுக்கு அந்த மந்திரங்களைக் கேட்கும் திவ்விய சுரோத்திரம் உண்டு. யோகசாஸ்திரத்தில் பெரிய ஆகாசமும் மனஸிலுள்ள ஆகாசமும் ஒன்றாக ஆகிவிட்டால் பெரிய ஆகாசத்திலுள்ள சப்தமெல்லாம் நமக்குக் கேட்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்கும் நிறைந்து அபேதமான நிலையை அடைந்தவர்களுக்கே அந்த சப்தங்கள் தெரியும். இம்மாதிரி ரிஷிகள் மந்திரங்களை லோகத்தில் பிரசாரத்துக்குக் கொண்டு வந்தவர்களேயன்றி, அவற்றை இயற்றியவர்களல்ல. ஆனாலும், ஏற்கனவே உள்ளதை வெளிப்படுத்தியதாலேயே நமக்குப் பரம உபகாரத்தைப் புரிந்திருக்கிறார்கள். ஒருவர் நமக்கு கங்கா தீர்த்தம் கொண்டு வந்து கொடுத்தால், கொடுத்தவரையே நமஸ்காரம் பண்ணி வாங்கிக் கொள்கிறோம். அவரா கங்கையை உண்டு பண்ணினார்?

இல்லாவிட்டாலும், ஆயிரம் மைலுக்கு அப்பாலிருக்கும் கங்கை நமக்குக் கிடைக்கும்படி அவர் செய்த உபகாரத்தைப் போற்றுகிறோம். நம் காதுக்கு எட்டாத மந்திரங்களை நமக்காகப் பிடித்துக் கொண்டு வந்து கொடுத்த ரிஷிகளை எவ்வளவு பூஜித்தாலும் போதாது. அதனால்தான் ஒரு மந்திரத்தைச் சொல்லும்போது, எந்த ரிஷி மூலமாக அது லோகத்துக்கு வந்ததோ அவர் பெயரைச் சொல்லி தலையைத் தொடுகிறோம். அவருடைய பாதங்களை சிரஸில் வைத்துக் கொள்கிறோம் என்பதற்கு இது அறிகுறி.

வேதங்கள் ஆதியற்ற அநாதி. அவை மநுஷ்யர்களால் செய்யப்படாத அபௌருஷேய கிரந்தம் என்பதெல்லாம் எப்படி என்று நான் இவ்வளவு நாழி சொன்னதிலிருந்து கொஞ்சங் கொஞ்சம் தெளிவாகியிருக்கலாம்.

மந்திர யோகமும் மந்திர ஸித்தியும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

மந்திர யோகமும் மந்திர ஸித்தியும்

பதினான்கு உலகங்களும் ஒரு ராஜ்யம். இந்த ராஜ்யத்திற்கு ஒரு சக்ரவர்த்தி. அந்த சக்ரவர்த்திக்கு எல்லா ஜீவராசிகளும் பிரஜைகள். ராஜ்யமும் அநாதி, சக்ரவர்த்தியும் அநாதி. ராஜ்யமும் சக்ரவர்த்தியும் பிரஜைகளும் இருந்தால் அதற்கு ஒரு சட்டம் வேண்டும். இவைகள் எல்லாம் அநாதியானால், சட்டமும்

அநாதியாகத்தானே இருக்கணும்? அந்த அநாதிச் சட்டமே வேதம். இவற்றில் ராஜ்யமான பிரபஞ்சத்தை "அநாதி" என்றாலும், அவ்வப்போது அதற்கு உற்பத்தி உண்டு; அழிவும் உண்டு. சக்ரவர்த்தியான பரமாத்மாவும், சட்டமான வேதமும் ஸர்வ சாச்வதம்.

உலகம் உற்பத்தி ஆகிறது, வளர்கிறது, பிரளயம் அடைகிறது. திரும்பவும் உற்பத்தி ஆகிறது, வளர்கிறது, பிரளயம் அடைகிறது. இப்படியே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. சக்ரவர்த்தியும் சட்டமும் மாத்திரம் ஸ்திரம். ஒவ்வொரு ஸ்ருஷ்டியின் ஆரம்பித்திலும், அந்த சக்ரவர்த்தி அதிகார புருஷர்களை ஸ்ருஷ்டி செய்கிறான். அந்த அதிகாரிகளுக்கு வேண்டிய யோக சக்தியைக் கொடுக்கிறான். யோக சாஸ்திரத்தில் தன் ச்ரோத்திரத்திற்கும் வெளி ஆகாசத்திற்கும் அபேதமான ஒரு ஸாம்யம் (ஸம நிலை) உபதேசிக்கப்பட்டிருக்கிறது. அதை அநுஷ்டிக்கும் போது திவ்ய ச்ரோத்திரம் கிடைக்கிறது. அந்த திவ்ய ச்ரோத்திரத்தைக் கொண்டு வெளி ஆகாசத்தில் ஸ்திரமாய்க் கிடக்கும் அநாதி சப்த அலைகளை ஈச்வனுடைய அருள் சகாயத்தால் அந்த அதிகார புருஷர்கள் அடைகிறார்கள். அவர்களே முதல் முதலில் வேதத்தை அறிந்தவர்களாகிறார்கள். அவர்களே மந்திரங்களுக்குக்கான மஹரிஷிகள்.

வேதாத்யயனம் ஒரு மந்திர யோகம். ஒவ்வொரு நாடி அசைவத்தினால் சித்தத்திற்கு ஒவ்வொரு விதமான விகாரங்கள் ஏற்படுகிறது. சில நாடி அசைவுகளால் காம விகாரங்களும், சில நாடிகளால் சோம்பல் விகாரங்களும், சில நாடிகளால் கோப விகாரங்களும் உண்டாகின்றன.

இதை மாற்றிச் சொன்னால், காம விகாரம் ஏற்படும்போது சில நாடிகளில் அசைவும், கோப விகாரத்தின்போது சில நாடிகளில் அசைவும், இப்படியே ஒவ்வொரு உணர்ச்சிக்கும் ஒரு விதமான நாடி அசைவும் உண்டாகின்றன. இவை பிரத்யக்ஷமாகவே அநுபவத்தில் காணப்படுகின்றன. சாந்தம் ஏற்படும்போது முகத்தில் ஒரு களை உண்டாகிறது. அந்தக் களை சில நாடிகள் குளிர்ந்ததன் பலனேயாம். இப்படியே காமம், குரோதம் ஒவ்வொன்றும், 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்றபடி முகத்திலேயே பிரதிபலிக்கின்றன. நாடி சலனம்தான் இந்த அடையாளங்களை உண்டாக்குவது. இவ்விதம் மனோவிகாரங்களால் நாடிகளில் சில விகாரங்கள் ஏற்படுவதால், அந்த நாடிகளை வசப்படுத்தி விட்டால், காமக் குரோதங்களையோ, சாந்தத்தையோ நமது இஷ்டப்படி வரவழைத்துக் கொள்ளலாம். அதற்கு வெளிப் பொருள்கள் தேவையில்லை. இப்படி நாடிகளை ஸ்வாதீனப்படுத்த ப்ராணாயாமத்தை முக்கியமாகக் கொண்ட ராஜயோகம் ஒரு மார்க்கம். அதே விதமாய் மந்திரயோகம் ஒரு மார்க்கம். ஒரு எழுத்தை நாம் உச்சரிக்கும்போது நமது நாக்கு, உதடு, மேல்வாய், கீழ்வாய், கண்டம் முதலியவைகளின் இடைவெளி வழியாக ப்ராணவாயு வெளிப்படுகிறது. அப்பொழுதுதான் அக்ஷர த்வனி உண்டாகிறது. அந்த அக்ஷர த்வனிக்குக் காரணமாக எந்தெந்த உறுப்புகளில் ப்ராணவாயு ஸஞ்சரிக்கிறதோ அந்தந்த இடம் ஸம்பந்தப்படும் நாடிகளில் சலனம் ஏற்படுகிது. நாடிகளில் சலனத்தினால் மனஸில் எந்த விதமான விருத்திகள் ஏற்பட்டு இகலோக க்ஷேமமும் பர லோக க்ஷேமமாகிய மோக்ஷம் முதலிய புண்யமும்

ஏற்பட வேண்டுமோ, அதற்கு அநுகுணமாக உள்ள உச்சாரணங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு, வேறுவிதமான உச்சாரணங்களை விலக்கி அமைந்தனவே வேத மந்திரங்கள்.

மந்திரத்துக்கு Definition (லக்ஷணம்) "மனனாத் த்ராயதே" என்று சொல்லியிருக்கிறது. அதாவது திரும்பத் திரும்ப மனனம் செய்து உருப்போடுவதால் காப்பாற்றுவதே மந்திரம்.

அவைகளின் ஆவ்ருத்தியால் எந்தெந்த நாடிகளில் திருப்பித் திருப்பி சலனம் ஏற்பட்டு ஆத்மக்ஷேமம் கிட்டுமோ, அந்த க்ஷேமத்தைத் தானும் அடைந்து, தன் மந்திர சக்தியால் உலகத்தோரும் க்ஷேமம் அடையச் செய்வதே வேதியரின் பிறவிக் கடமை.

மந்திரங்களில் ஸித்தி பெற்றுப் பூரண பலனைப் பெற வேண்டுமானால் அவற்றை எப்படி ஓத வேண்டும் என்று ['சிக்ஷா' சாஸ்திரத்தில்) சொல்லியிருக்கிறது:

கீதீ சீக்ரி சிர: கம்பீ ததா லிகித பாடக:|

அனர்த்தக்ஞ: (ஹி) அல்பகண்டச்ச ஷடைதே பாடகாதமா: ||

"இப்படி யெல்லாம் வேதத்தைத் தப்பாகப் பயில்பவர்கள் அதமர்கள்" என்று சொல்லி, இந்த ச்லோகத்தில் ஆறு தினுசான தப்புகளைச் சொல்லியிருக்கிறது. "கீதீ" என்றால் வேதத்தை பாட்டு (கீதம்) மாதிரி இஷ்டப்படி ராகம் போட்டுப் பாடுகிறவன். இப்படிப் பண்ணக்கூடாது. வேதத்துக்கே உரிய ஸ்வரத்தில்தான் அதைச் சொல்ல

வேண்டும். "சீக்ரி" என்றால் வேகமாகச் சொல்லிச் சீக்கிரத்தில் முடிக்கிறவன். இதுவும் பிசகு. வேத அக்ஷரங்களை அவற்றின் காலப் பிரமாணப்படி சொன்னால்தான் பூர்ண பலன் உண்டாகும். "சிர:கம்பீ" என்றால் தலையை ஆட்டிக்கொண்டு சொல்கிறவன். ஆடாமல் ஸமநிலையில் உட்கார்ந்து கொண்டு, மந்திரங்களால் தானாக ஏற்படும் நாடி சலனங்களைத்தான் உண்டாக்கிக் கொள்ளவேண்டும். பாட்டுப் பாடுகிறவர் மாதிரி சிர:கம்பம் பண்ணினால் நாடி சலனம் வித்யாஸப்படும். 'லிகித பாடகன்' என்றால் எழுதி வைத்துக் கொண்டு படிப்பவன். இது தப்பு. வாயால் சொல்லிக் காதால் கேட்டே பாடம் பண்ண வேண்டும் என்று முன்பே சொன்னேன். "அனர்த்தக்ஞ:" என்றால் அர்த்தம் தெரியாதவன். அர்த்தம் தெரிந்துகொண்டுதான் மந்திரங்களைச் சொல்ல வேண்டும்....

ஒலியின் பயனும் பொருளின் பயனும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

ஒலியின் பயனும் பொருளின் பயனும்

இந்த இடத்தில் எனக்கு வேடிக்கையாக ஒன்று தோன்றுவதைச் சொல்ல வேண்டும். ஸம்ஸ்கிருதத்தில் ஒன்றைச் சொல்லி, அதற்குப் பின்னால் தரம் என்று சேர்த்தால் முதலில் சொன்னதைவிட (comparitive degree) இது சிலாக்யமாகிறது என்று அர்த்தம். 'வீர்யவத்' என்றால் 'சக்தியுள்ள' என்று அர்த்தம். 'வீர்யவத்தரம்' என்றால் 'அந்த

சக்தி மேலும் அதிகமான' என்று அர்த்தம். சாந்தோக்ய உபநிஷத்தில் (1.1.10) ஓம்காரத்தின் தத்துவத்தை அறிந்து உபாஸிக்கிறவர்களுக்கே 'வீர்யவத்தர'மான பலன் கிடைக்கிறது என்று சொல்லியிருக்கிறது. இப்படித் 'தரம்' போட்டு சொன்னதாலேயே அர்த்தம் தெரியாமல் ஓம்கார உபாஸனை பண்ணுகிறவர்களுக்கும் 'வீர்யவத்'தான பலன் கிடைக்கிறது என்று ஆகிறது. அறிந்து பண்ணுகிறவர்களின் அளவுக்கு இல்லாவிடினும் மற்றவர்களுக்கும் சக்தி வாய்ந்த பயன் ஏற்படுகிறது என்று ஆசார்யாளும் பாஷ்யத்தில் சொல்கிறார்.

ஏன் என்றால், அர்த்தம் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், 'பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்', 'நம் பூர்விகர்கள் பண்ணியிருக்கிறார்கள்' என்பதற்காகவே ஒரு கர்மாவை ஒருத்தர் பண்ணினாலும், அந்த மனோபாவத்துக்கே நல்ல பலன் உண்டுதான். மற்ற கர்மாக்களை விட மந்திர உபாஸனையில் இதே விசேஷமாகச் சொல்ல வேண்டும். ஏனென்றால் மந்திரத்தில் சரியான அக்ஷர உச்சாரணத்தினால் ஏற்படுகிற சலனம்தான் முக்கியமாக க்ஷேமத்தைத் தருவது. சப்தம் உண்டாக்கும் பலன்தான் இங்கே விசேஷம். அர்த்தத்தின் விசேஷம் அதற்கப்புறம் வருவதுதான்.

இதைப்பற்றி யோசிக்கும்போது, எனக்கு அர்த்தம் தெரியாமல் செய்வதில்தான் "வீர்யவத்தர"மான பலன்; அர்த்தம் தெரிந்து பண்ணினால் வெறும் "வீர்யவத்" தான் என்றுகூட வேடிக்கையாகத் தோன்றுவதுண்டு. அர்த்தம் தெரிந்து கொள்ளாமல் மந்திர ஜபம் பண்ணினால் அதிகப்

பிரயோஜனம் உண்டு; தெரிந்தால் அவ்வளவு இல்லை என்று தோன்றுகிறது. அது எப்படி?

ஒரு கலெக்டர் இருக்கிறார். அவருக்கு ஒரு படிப்பாளி வக்கீலை வைத்து மனு எழுதுகிறார். ஓரெழுத்துக்கூடத் தெரியாத ஒரு குடியானவன் யாராவது ஒருவரிடம் எழுதி கலெக்டரிடம் நேரில் கொடுக்கிறான். எப்படியாவது நல்லது பண்ணவேண்டும் என்று வேண்டிக்கொண்டு மனுவைக் கொடுக்கிறான். கலெக்டர் பார்த்தால், 'பாவம்! ஒன்றும் தெரியாது! நம்பிக்கை மாத்திரம் இருக்கிறது என்று எண்ணி நல்லது பண்ணுவார்.

அதைப் போன்றதுதான் மந்திரமும். மந்திரத்துக்கு அர்த்தம் ஈச்வரனுக்குத் தான் தெரியும். நாம் போக்கிரித்தனமாக இருக்கக்கூடாது. வக்கீல் வைத்துப் பேசினால், அதில் குற்றம் ஏற்படுமானால், கலெக்டர் கோபித்துக் கொள்வார். தெரிந்து தப்பாகப் பண்ணினால் அதிகக் கோபம் உண்டாகும். தெரியாமல் தப்பாக இருந்தால், தெரியாமல் பண்ணுகிறான் என்று மன்னிக்கிற எண்ணம் ஏற்படும். "என்ன ஸார்! அர்த்தம் தெரியவில்லை; அதைப் பண்ணி என்ன பிரயோஜனம்?" என்று சொல்வது தப்பு. அர்த்தம் தெரியாமல் பண்ணுவது தான் வீர்யவத்தரமாக எனக்குத் தோன்றுகிறது!

இது வேடிக்கைக்குச் சொன்னது. தற்காலத்தில் புத்தியின் கர்வமும், கிருத்ரிமமும் ஜாஸ்தியாகிவிட்டதையும், இதில் பாமரர்களுக்குள்ள விநய ஸம்பத்து பறிபோய் விடுவதையும் பார்க்கிறபோது, புத்தியே இல்லாமல் வெறும்

நம்பிக்கையின் பேரில் பண்ணினால் சிலாக்யமாய் இருக்குமோ என்று பட்டதால் இப்படிச் சொன்னேன்.

வாஸ்வத்தில் புத்தியும் இருந்து விநயமாகவும் இருக்க வேண்டும். மந்திரங்களுக்கு அர்த்தம் சப்தத்துக்கு அடுத்தபடிதான் முக்கியம் என்றாலும் மந்திரங்களே நமக்கு தர்ம சாஸ்திரச் சட்டமாகவும் இருப்பதால் அவற்றின் அர்த்தமும் தெரிந்தால்தான் அந்தச் சட்டப்படி நடக்க முடியும்...

வேத அப்யாஸத்தில் சொன்ன ஆறு தப்புகளில் கடைசியில் வரும் 'அல்ப கண்டன்' என்றால், 'மெல்லிய குரலில் வேதம் சொல்லுகிறவன்' என்று அர்த்தம். இவனும் அதமன்தான். Full-throated என்று சொல்லுகிற மாதிரி நன்றாக கம்பீரமாக, உரக்க, வாய்விட்டு வேத சப்தம் எவ்வளவு தூரம் வியாபிக்கும்படியாகச் சொல்ல முடியுமோ அப்படிச் சொல்ல வேண்டும்.

வேத மந்திர சப்தம் அதைச் சொல்கிறவனுக்குள்ளே நல்ல நாடி சலனங்களை உண்டு பண்ணுவதோடு, கேட்கிறவர்களுக்கும் அப்படிப்பட்ட சலனத்தை உண்டு பண்ணுவது. அட்மாஸ்ஃபியரில் அது பரவியிறுருப்பதாலேயே இஹலோகத்துக்கும் பரலோகத்துக்கும் க்ஷேமமான பலன்கள் ஏற்படும். ஆகையால் அட்மாஸ்ஃபியரில் அது எவ்வளவு தூரம் வியாபிக்கும்படிப் பண்ண முடியுமோ அவ்வளவுக்கு பலமாகக் கோஷிக்க வேண்டும்.

மந்திரத்திலிருந்து முழுப் பிரயோஜனத்தை அடைய வேணடுமானால், இந்த ஆறு விதிகளைப் பின்பற்றினால் தான் முடியும்.

வேதத்தின் மகிமை

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

வேதத்தின் மகிமை

வேதம் அநாதியானது, அபௌருஷேயமானது, ஸகல ஸ்ருஷ்டிக்கும் அதுவே மூலம் என்பது மட்டும்தானா அதன் மகிமை? இல்லை. வேறு பல பெருமைகளும் சிறப்புகளும் வேதத்துக்கு உண்டு.

அதன் சப்தம் நம்முடைய நாடிகளிலும், வெளி லோகத்திலும் (atmosphere) ஏற்படுத்தும் சலனங்களால் ஆத்ம க்ஷேமமும் லோக க்ஷேமமும் உண்டாகிறது. லோக க்ஷேமம் என்றால் மநுஷ்யர்களின் க்ஷேமம் மட்டுமில்லை. ஸகல பிராணி வர்க்கங்களும் நன்றாக இருக்கவேண்டும் என்று வேதம் சொல்கிற மாதிரி வேறெந்த மதத்திலும் சொல்லியிருக்கவில்லை. "தே த்விபாத் சதுஷ்பாத்" – இரு கால் பிராணி, நாலுகால் பிராணி எல்லாம் க்ஷேமமாக இருக்க வேதம் பிரார்த்திருக்கிறது. புல், புண்டு, விருக்ஷம், மலை, நதி ஆகிய எல்லாவற்றின் நன்மையையும் கோருகிறது. இந்த ஸமஸ்தப் பிராணிகளின் க்ஷேமம் வேதத்தின் சப்த விசேஷத்தாலேயே நடந்து விடுகிறது.

சப்த விசேஷத்தோடு அர்த்த கௌரவமும் வேதத்துக்கு அளவிட முடியாததாக இருக்கிறது. வேதக் கருத்துக்களைப் பார்த்து இதர மதஸ்தர்களும், வெளி நாட்டு அறிவாளிகளும் கூட ஆச்சர்யப்படுகிறார்கள். காவிய ரீதியில் இருக்கிற அழகு, சமூக வாழ்வு முறைகளை நுட்பமாகச் சொல்லியருக்கிற அழகு, அத்யாத்ம தத்வங்கள், நன்னெறி உபதேசங்கள் (moral instructions), ஸயன்ஸ் கருத்துக்களுங்கூட வேதங்களில் கொட்டிக் கிடக்கிறது என்று ஆச்சர்யப்படுகிறார்கள்.

சப்த சலனமான மந்திரங்களுக்கெல்லாம் அர்த்தம் இருக்க வேண்டும் என்பதே இல்லை. பிரகிருதத்தில் [நடைமுறை வாழ்க்கையில்] பார்த்தாலும், வார்த்தையோ அர்த்தமோ இல்லாமலே ஒரு ராகத்தை ஆலாபனம் பண்ணிக் கேட்கிறபோது, அதன் வெறும் சப்தம் மட்டுமே நமக்கு ஆனந்தம், துக்கம் முதலான உணர்ச்சிகளைத் தருகிறது. வாத்திய ஸங்கீதத்தினால் ஏற்பட்ட Vibration-களினாலேயே கறிகாய்ச் செடிகளைத் தூண்டி யதேஷ்டமாகக் காய்க்க வைத்திருக்கிறோம் என்று ஸமீபத்தில்கூட ஒரு யூனிவர்ஸிடியில் பரிசோதனை பண்ணித் தெரிவித்திருக்கிறார்கள். சப்தத்துக்கு சிருஷ்டி சக்தி உண்டு என்பதற்கு இது ஒரு proof. அது ஒரு பக்கம் இருக்கட்டும். இங்கேயும் வாத்ய ஸங்கீதம் என்பதாலேயே வார்த்தையோ அர்த்தமோ முக்கியமில்லை என்று தெரிகிறது.

வேதத்தில் என்ன விசேஷம் என்றால் அதன் சப்தத்துக்கே தனியாக சக்தி இருப்பது மட்டுமின்றி, வார்த்தைகளாகவும் அதற்கு மிக உயர்ந்த அர்த்தம் இருக்கிறது.

தமிழில் அநேக உத்தமமான ஸ்தோத்திரங்கள் இருக்கின்றன. அவற்றைப் படித்தால் மனஸ் உருகுகிறது. ஆனாலும் குறிப்பிட்ட பிரயோஜனம் வேண்டுமென்றால், அதில் சிலதை மட்டும்தான் உருவேற்றுவது என்று வைத்துக் கொண்டிருக்கிறோம். "திருமுருகாற்றுப்படை", வியாதி தீருவதெற்கென்று ஒரு திருப்புகழ் ("இருமலுரோக") ,தேவாரத்தில் மழை வேட்டல் பதிகம் என்றிப்படி சிலதை மட்டும் விசேஷமாகப் பல ஆவிருத்தி ஜபிக்கிறோம். இதே நக்கீரரும், அருணகிரிநாதரும், ஸம்பந்தமூர்த்தி ஸ்வாமிகளும் இவற்றை விட நெஞ்சை உருக்கும்படியான வேறு ஸ்தோத்திரங்கள் பண்ணியிருக்கக்கூடும். ஆனால் அவற்றை விட்டு இவற்றை மட்டும் ஏன் எடுத்துக் கொள்கிறோம் என்றால் சப்த விசேஷந்தான். இந்தப் பாடல்களில் உள்ள சப்தங்களுக்கு மந்திர சக்தி இருக்கிறது. ஆசார்யாளேதான் "ஸௌந்தர்ய லஹரி", "சிவானந்த லஹரி" இரண்டும் செய்திருக்கிறார். ஆனால் "ஸௌந்தர்ய லஹரி"யில் ஒவ்வொரு ச்லோகத்தை ஜபிப்பதற்கும் ஒவ்வொரு விதமான பலன் சொல்லியிருக்கிற மாதிரி, "சிவானந்த லஹரி" க்குச் சொல்லவில்லை. காரணம் என்னவென்றால் சப்தங்களுக்கே உள்ள மந்திர சக்திதான்.

அர்த்தமே இல்லாத வெறும் சப்தமான மந்திரங்களும் உண்டு. அர்த்தத்தில் ரொம்ப உயர்வாக இருந்தாலும், விசேஷமாக மந்திர சக்தி இல்லாத மந்திரங்களும் உண்டு. வேதத்தின் மஹிமை என்ன என்றால் சப்தத்தின் மந்திர சக்தி, அர்த்தத்தின் கௌரவம் என்ற இரண்டும் கொண்ட மந்திர சமூகமாக அது இருப்பதுதான். ஒரு மருந்து

கசப்பாக இருந்து கொண்டு தேகத்துக்கு நல்லது பண்ணுகிறது. ஒரு பக்ஷணம் வாய்க்கு ருசியாக இருந்தாலும் தேகத்துக்குக் கெடுதலை உண்டாக்குகிறது. மதுரமான ருசி, தேக புஷ்டி இரண்டையும் தரக்கூடிய கூச்மாண்ட லேஹ்யம் மாதிரி ஒன்று கிடைத்தால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது? வேதத்தில் இப்படி இரட்டைப் பலன்: மந்திர சக்தி, தத்வ உபதேசம் என்று இரண்டும் இருக்கின்றன.

தத்வம் என்று எடுத்துக் கொள்கிறபோதும், லோக வாழ்க்கை, அத்யாத்ம வாழ்க்கை இரண்டுக்குமான உபதேசங்கள் அதில் இருக்கின்றன. ஒவ்வொரு ஜீவனும் ஒரு ஜன்மாவில் உண்டாகிறதிலிருந்து சாகிறவரையில் எப்படிச் செய்தால் அவனுடைய ஆத்மா க்ஷேமம் அடையும் என்பதற்கு அதில் உபதேசம் இருக்கிறது. இப்படி indiviual salvation (தனிமனிதனின் உய்வு) –ஐச் சொல்வதோடு மட்டுமில்லாமல், சமூக வாழ்க்கை எப்படி நடக்க வேண்டும், பொது ஜனங்களின் கடமைகள் என்ன, பிராம்மணன் எப்படி இருக்க வேண்டும், ராஜா எப்படி ராஜாங்கம் நடத்த வேண்டும், ஸ்திரீகள் எப்படியிருக்க வேண்டும், பொது ஜனங்கள் எப்படிச் செய்ய வேண்டும் என்பதையெல்லாம் அது சட்டம் மாதிரி நமக்குப் போட்டுக் கொடுத்திருக்கிறது.

சட்ட புஸ்தகங்களுக்கெல்லாம் உச்சாணி வேதந்தான் என்பது அதன் விசேஷங்களில் ஒன்று.

[யக்ஞம்]

வேதம்

யக்ஞம்

வேதத்தின் பல சிறப்புகளைச் சொன்னேன். அதிலே முக்கியமாகச் சொல்ல வேண்டிய இன்னொன்று யக்ஞம் என்ற வேள்வியாகும்.

மந்திரங்களை வாயால் சொல்லிக் கொண்டு, அதோடு கூட அதற்கான ஒரு காரியத்தையும் அக்னி முகமாகப் பண்ணுவதுதான் யக்ஞம்.

"யஜ்" என்கிற வேர்ச் சொல்லிலிருந்து வந்தது "யக்ஞம்". அதனால் 'யக்ஞம்' என்பதை விஷயம் தெரிந்தவர்கள் 'யஜ்ஞம்' என்றே எழுதுகிறார்கள். 'யஜ்' என்றால் வழிபடுவது, பக்தி செலுத்துவது என்று அர்த்தம். பரமாத்மாவிடமும், தேவதைகளிடமும் ப்ரீதி பூர்வமான உணர்ச்சியுடன் ஒரு வழிபாடாகச் செய்யப்படுகிற கர்மமே யக்ஞம்.

யக்ஞம் என்பதை யாகம் என்றும் சொல்கிறோம்.

"மனனாத் த்ராயதே இதி மந்த்ர:" என்பது மந்திரத்துக்கு ஏற்பட்ட லக்ஷணம் (definition) . அதாவது, "மனனம் செய்தால் எது காப்பாற்றுகிறதோ அதுவே மந்திரம்" என்பது லக்ஷணம். 'த்ராணம்' என்றால் காப்பாற்றுவது. "பரித்ராணாய ஸாதூனாம்" ("நல்லவர்களை நன்றாகக் காப்பாற்றுவதற்காக") என்ற கீதா வாக்கியம் எல்லாரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். மனனம் செய்வதால் த்ராணம் (காப்பு) தருவதே மந்த்ரம். மனனம் என்றால் மனசுக்குள் உருட்டிக் கொள்வதுதான். வாய்விட்டுச் சொல்லக்கூட

வேண்டாம். மனசுக்குள் மந்திர சப்தங்களைச் சொல்லிக் கொள்வதாலேயே உள்ளுக்குள்ளே (நான் முன்னே சொன்ன) க்ஷேமகரமான vibration -கள், நாடி சலனங்கள் உண்டாகும். அதையே வாய்விட்டு வேத கோஷமாகப் பண்ணினால், அர்த்தம் புரியாவிட்டாலும் அதன் காம்பீர்யமே கேட்கிறவர்களுக்கெல்லாம் ஒரு திவ்ய ஆனந்தத்தைத் தருகிறது. அந்த சப்தங்களுக்கு லோக க்ஷேமத்தை விளைவிக்கக் கூடிய சக்தியும் இருக்கிறது.

மனனமாக, மானஸிகமாக இருப்பது வாசிகமாக வாக்கில் வெளிவருவதோடு, காயிகமாக காயம் எனப்படும் சரீரத்தால் ஒரு கர்மாவோடு சம்பந்தப்பட்டு வருகிறபோது மனோ, வாக்கு, காயம் மூன்றும் வேதத்தில் அர்ப்பணிக்கப்பட்டதாக ஆகிறது. இப்படிப்பட்ட வேத கர்மாக்களில் முக்கியமானதுதான் யாகம் எனப்படுகிற யக்ஞம்.

மற்ற மதங்களில் இல்லாதது

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

மற்ற மதங்களில் இல்லாதது

உலகத்திலே பிரஸித்தமாயிருக்கும் மற்ற பெரிய மதங்களில் இல்லாதது இந்த யக்ஞம் என்கிற தத்வம்.

வேதத்தை ஆதாரமாக கொண்டதாலேயே நம் மதத்துக்கு வைதிக மதம் என்ற பெயர் இருக்கிறது. இந்த வைதிக மதத்துக்கும் லோகத்தில் இன்று இருக்கும் பாக்கிப் பெரிய

மதங்களுக்கும் ஒரு பெரிய வித்யாஸம் இருக்கிறது. கிறிஸ்துவம், இஸ்லாம் முதலான மதங்களில் ஒரே ஒரு கடவுளையே அனைவரும் வழிபடுவதைத்தான் சொல்லியிருக்கிறது. வேதங்களிலும், 'இருப்பது ஒரே கடவுள்தான்; அவனேதான் இந்த ஜீவனும்கூட' என்று சொல்லியிருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட ஒரே பரமாத்ம வஸ்துவை ஞானமார்க்கத்தில் ஆத்ம விசாரம் பண்ணி பண்ணித்தான் அநுபவத்தில் தெரிந்து கொள்ள முடிகிறது. அந்த நிலை அடைவதற்கு ரொம்பவும் பக்குவம் வேண்டியிருக்கிறது. ஒரே கடவுளோடு நாம் ஐக்கியமாகி விடுகிற போது லோகமே நம் பார்வையிலிருந்து போய்விடுகிறது. அப்படிப்பட்ட நிலை வருவதற்கு நம்மை எப்படிப் பக்குவப்படுத்திக் கொள்வது என்றால், இந்த லோக வாழ்க்கையில் நாம் நன்றாக ஈடுபட்டிருக்கிற இப்போதைய நிலையிலேயேதான். இதிலே இருந்து கொண்டே தர்மமாக வாழ்க்கை நடத்தி, கர்மாக்களைப் பண்ணிக் கொண்டேயிருந்தால், அதனால் நாம் சித்த சுத்தி அடைந்து பக்குவமாகிக் கொண்டே போகிற போது லோகம் நம்மை விட்டுப் போய்விடும். இதற்கான தர்மங்களையும் கர்மங்களையும் வேதம் யதேஷ்டமாக நமக்குக் கொடுத்திருக்கிறது. இவற்றிலே ரொம்ப முக்கியமான கர்மாதான் யக்ஞம், யக்ஞம் என்பது. யாகம் என்று பொதுவிலே சொல்கிறது இதுதான். 'வேள்வி' என்று இதற்கு ரொம்பவும் பழைய தமிழ்ப் பெயர் இருக்கிறது. ஒரே பரமாத்மாவுக்காக இல்லாமல், பல தேவதைகளுக்கு ஆஹுதிகளை அர்ப்பணம் பண்ண வைப்பதே யக்ஞம். இந்த யக்ஞம் என்பதுதான், பாக்கி உலகப் பெரிய மதங்களில் இல்லாமல் நமக்கு மட்டும் இருப்பதாகும்.

கிறிஸ்துவம், இஸ்லாமில் உள்ள தெய்வக்கொள்கையும் இல்லாதது பௌத்தம். அந்த பௌத்தத்திலும் யக்ஞம் இல்லை.

யக்ஞத்திலே அநேக விதமான திரவியங்களை மந்திர பூர்வமாக அக்னியில் போடச் சொல்லியிருக்கிறது. இப்படிப் போடுவதற்கு ஹோமம் என்று பெயர். அக்னியில் போட்டாலும் அக்னிக்கே இந்தத் திரவியங்களை ஸமர்ப்பணம் பண்ணுவதாக அர்த்தமில்லை. அக்னியை உத்தேசித்த மந்திரங்களைச் சொல்லி அதில் போடுவது மட்டுந்தான் அக்னியைச் சேர்கிறது. ஆனால் மற்றத் தேவதைகளான ருத்ரன், விஷ்ணு, இந்திரன், வருணன், மாதரிச்வன் (வாயு) , ஸோமன் முதலானவர்களுக்கான ஆஹுதிகளையும் அக்னியில்தான் போட வேண்டும். அக்னி இவற்றைத் தானே எடுத்துக் கொள்ளாமல், இவற்றின் ஸாரத்தை அந்தந்த தேவதைக்கு அனுப்பி வைப்பான். பல அட்ரஸ்களுக்கு எழுதின கடிதங்களை ஒரே தபால் பெட்டியில் போடுகிற மாதிரி பல தேவதைகளுக்குமான ஹவிஸ்களை (அவிகளை) அக்னியொன்றிலேயே ஆஹுதி பண்ணவேண்டும்.

மற்ற மதங்களுக்கும் வைதிக மதத்துக்கும் இருக்கிற பெரிய வித்யாஸம் ஒரே ஒரு கடவுள் என்று சொல்லி அவருக்கு மட்டும் வழிபாடு பண்ணுவது என்றில்லாமல், பல தேவர்களுக்கு அக்னிமுகமாக ஆஹுதி பண்ணுவதுதான். தேவர்கள் என்பவர்கள் பகவத் ஸ்ருஷ்டியில் உயர்ந்த சக்தி படைத்த ஒரு இனம்.

லோகத்தில் மநுஷ்யர்களான நாம் ஒருத்தருக்கொருத்தர் சேவை செய்து கொண்டால் பகவான் பிரீதி அடைகிறார் என்று சொல்கிறோமல்லவா ? பூஜை, சடங்கு ஆகியவற்றை விட்டுவிட்ட சீர்த்திருத்தக்காரர்கள் கூட, " மக்கள் சேவையே மஹேசன் சேவை" என்கிறார்களல்லவா? இதே மாதிரி பரமாத்மாவின் படைப்பினத்தைச் சேர்ந்த தேவர்களுக்கு நாம் யக்ஞத்தின் மூலம் சேவை பண்ணினாலும், அவர் அநுக்ரஹம் பண்ணி விடுகிறார்.

ஒரே கடவுள்தான், ஒரே ஸத்வஸ்துதான் அத்தனை தேவதைகளாகவும் ஆகியிருக்கிறது என்று வேதத்தில் அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறது. ஒவ்வொரு தேவதையைப் பற்றிச் சொல்லும்போதும், அதுவே பரமாத்மா என்று சிலாகித்துச் சொல்லியிருப்பதாலும் வேதம் ஒரே-கடவுட்-கொள்கை (monotheism) உடையதுதான் என்று தீர்மானமாகிறது. பல தேவதைகளைச் சொல்லியிருப்பதால், 'வேதம் பல கடவுள்கள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறது. Polytheism- ஐச் சொல்கிறது' என்று நினைப்பது பிசகு. ஒரே கடவுள் பல தேவதைகளாயிருப்பதைத்தான் அது சொல்கிறது. பிரபஞ்ச வியாபாரத்தை நடத்துவதற்காக ஒரே பரமாத்மாதான் தன்னுடைய சக்தியைக் கொண்டே இந்தத் தேவதைகள் என்ற அதிகாரிகளை உண்டாக்கியிருக்கிறார். இயற்கை என்று நாம் சொல்கிறதில் உஷ்ணம், மழை, காற்று, உணவு, ஸந்ததி, செல்வம், மநுஷ்யனின் உணர்ச்சிகள் முதலான பல விஷயங்களையும் நிர்வாகம் பண்ணுவதற்காக இந்த தேவதைகளை நியமித்திருக்கிறார். நம்மைப் படைத்தது போலவே தேவதைகளையும் படைத்திருக்கிறார். நம்மைத்

தன்னிலிருந்தேதான் படைத்தார். அதாவது அவரேதான் நாமாக ஆனார். அதனால் தான் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே என்று அத்வைதத்தில் சொல்வது. இதே மாதிரி தேவர்களாகவும் அவரேதான் ஆகியிருக்கிறார். ஆனாலும் நாம் அத்வைதத்துக்கு நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்கிற வரையில், நம்மை வேறு வேறாக நினைத்துக் கர்மாக்களைப் பண்ணி நமக்குள் பரஸ்பர ஸஹாயம் செய்து கொள்வதால், தேவர்களையும் தனித்தனியாக நினைத்து, அவரவர்களுக்குரிய யக்ஞ ஆராதனையைப் பண்ணத்தான் வேண்டும் என்பது வேதம் போட்ட சட்டம். லோக வாழ்க்கை நமக்கும் ஸகல ஜீவகுலத்துக்கும் அநுகூலமாக இருக்க வேண்டுமானால் பிரபஞ்ச சக்திகளைப் பரமாத்மாவின் உத்தரவின்படி நிர்வாகம் பண்ணி வரும் தேவதைகளின் அநுக்ரஹம் நமக்கு இருக்கவேண்டும் என்று சொல்லி, அவர்களின் அநுக்ரஹத்தைப் பெற்றுத் தரவே அவர்களுக்குப் பிரீதியாக யக்ஞங்களைப் பண்ணவேண்டும் என்று வேதம் சொல்கிறது * . ஞானம் வந்தபின் இந்த தேவர்கள் வேண்டாம். நேராகப் பரமாத்மாவை உபாஸிக்கலாம். ஆனால் த்வைதப் பிரபஞ்சத்திலிருந்து கொண்டே, இதிலிருந்து விடுபடுவதற்கான முயற்சிகளை நாம் செய்கிற காலத்தில், வேறு வேறாக தேவதைகளையும் உபாஸிக்கத்தான் வேண்டும் என்று வைத்திருக்கிறது.

* தேவஜாதியைப் பற்றிய விவரங்களுக்கு 'தெய்வத்தின் குரல்: முதற்பகுதி'யில் 'தேவர்கள்' என்ற உரை பார்க்க.

வேள்வியின் மூன்று பயன்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

வேள்வியின் மூன்று பயன்கள்

யக்ஞத்துக்கு மூன்று விதமான பிரயோஜனங்கள்.
ஒன்று இங்கே உயிர் வாழ்கிற போதே நமக்கும் ஸமஸ்தப் பிராணிகளுக்கும் தேவர்களின் அருளினால் க்ஷேமத்தைப் பெறுவது.

இரண்டாவது, செத்துப் போன பிறகு நாம் தேவலோகம் போய் ஆனந்தமாக இருப்பது. தேவலோக வாஸம் நிரந்தரமானதில்லை. நம் புண்ணியம் தீருகிற வரைதான் அங்கு இருக்க முடியும். தேவலோக இன்பம் என்பது பரம பக்தர்கள், ஞானிகள் ஆகியவர்கள் அடைகிற ஆனந்தத்தைப் போல் பூர்ணமானதுமல்ல. ஸ்வர்க்க ஸௌக்கியம் என்பது ஆத்மானந்தம் அல்லது ஈச்வரனை அநுபவிக்கிற இன்பத்துக்கு ஸமதையே இல்லை.

இந்திரனின் இன்பமும் ஆத்மானந்தத்தில் துளித்துளிதான் ("லேச லேசம்"தான்) என்று ஆசார்யாள் "மநீஷா பஞ்சக" த்தில் சொல்லியிருக்கிறார் . ஆனாலும் இந்த மநுஷ்ய லோகத்தில் ஓயாமல் அழுதுகொண்டிருப்பதைக் காட்டிலும் ஸ்வர்க்க வாஸம் என்பது எத்தனையோ ஆயிரம் மடங்கு உயர்ந்தது தான். இப்படி தேவலோக வாஸத்தை விரும்பி நாம் யக்ஞ கர்மாநுஷ்டானம் பண்ணினால், விரும்பிய அந்தப் பலனை அது கொடுக்கிறது என்பது யக்ஞத்தின் இரண்டாவது பிரயோஜனம்.

மூன்றாவதுதான் முக்கியமானது. அது என்னவென்றால் பலனை நினைக்காமல் கீதையில் சொன்னபடி நிஷ்காம்யமாக யக்ஞம் புரிவதால் ஏற்படுவது. இந்த லோகத்தில் நமக்கு க்ஷேமம் வேண்டும், பிறகு தேவலோகம் போகவேண்டும் என்பதெல்லாம் பலனை உத்தேசித்துதான். இப்படி உத்தேசிக்காமல், "லோக க்ஷேமத்துக்காக இது நமக்குக் கடமையாக வந்திருக்கிறது" என்று ஒரே உணர்ச்சியோடு, சொந்தப் பலனில் பற்றில்லாமல் யக்ஞங்களைப் பண்ணினால், அது விரைவிலேயே சித்த சுத்தியைக் கொடுத்து, நம்மை ஞான மார்க்கத்தில் சேர்த்து, முடிவிலே சாச்வத ஆனந்தமான மோக்ஷத்தில் சேர்த்துவிடும். அதாவது பரமாத்மாவோடு பரமாத்மாவாக நாம் கரைந்திருக்கிற நிலைக்குக் கொண்டு போய்ச் சேர்ந்து விடும்.

ஆத்ம ஸாஷாத்காரத்தையும் ஞானத்தையுமே சொன்ன ஆதிசங்கர பகவத்பாதாள், "வேதோ நித்யம் அதீயதாம் : தத் உதிதம் கர்ம ஸுஅநுஷ்டீயதாம்- தினமும் வேதம் ஓதுங்கள்; அதில் சொல்லியிருக்கிற யக்ஞாதி அநுஷ்டானங்களை நன்றாகப் பண்ணுங்கள்" என்று சொன்னது* இந்த மூன்றாவது பிரயோஜனத்தை உத்தேசித்துத் தான் . இந்த லோக வாழ்க்கை நன்றாக இருப்பற்காகவோ, பிறகு தேவலோகம் என்றும் ஸ்வர்க்கலோகம் என்றும் சொல்லப்படும் கேளிக்கை உலகத்தில் நாம் போய் இருப்பதற்காகவோ அவர் இப்படிச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட அல்ப பலன்களை நினைக்காமல், ஆத்மாவைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே வேத கர்மாக்களை நிஷ்காம்யமாகப்

பண்ணினால், அது சித்த சுத்தி தரும் என்பதால்தான் ஆசார்யாளும் யக்ஞாநுஷ்டானம் பண்ணவேண்டும் என்று ஆக்ஞை போட்டிருக்கிறார்.

* 'சோபாந (அல்லது, உபதேச) பஞ்சக'த் தொடக்கம்.

தேவகுல - மனிதகுல பரஸ்பர சகாயம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

தேவகுல - மனிதகுல பரஸ்பர சகாயம்

இப்படிப்பட்ட யக்ஞமானது நம் வேத மதத்துக்கே முக்கியமானதாக உள்ளது. கீதையிலே பகவான் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். ஆதியில் பிரம்மா மநுஷ்யர்களை சிருஷ்டித்தபோதே அவர்களுக்கான இந்த யக்ஞங்களையும் உண்டாக்கி விட்டாராம். "யக்ஞங்களைப் பண்ணிக் கொண்டு வாழுங்கள். இதனால் சகல நன்மைகளையும் பெற்று வாழுங்கள். நீங்கள் விரும்பியதையெல்லாம் கொடுக்கிற காமதேனுவாக இந்த யக்ஞங்கள் இருக்கட்டும்" என்று மநுஷ்யர்களுக்கு பிரம்மா ஆக்ஞை செய்து விட்டார் - என்று கீதையில் (III.10) சொல்லியிருக்கிறது.

ஸஹ யஜ்ஞா : ப்ரஜா ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி: |

அனேன ப்ரஸவிஷ்யத்வம் ஏஷ வோ(அ)ஸ்(து) இஷ்டகாமதுக்: ||

'பிரஜைகளோடு யக்ஞங்களை சிருஷ்டித்தார்' என்றால் முதலில் மனிதர்களையும் அப்புறம் வேள்விகளையும் உண்டு பண்ணினார் என்று அர்த்தமாகலாம். ஆனால் இங்கே, "யக்ஞங்களோடு பிரஜைகளை உண்டாக்கினார் (ஸஹயஜ்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா) என்பதாக முதலில் யக்ஞத்தைச் சொல்லி, அப்புறம் மநுஷ்ய இனத்தைச் சொல்லியிருக்கிறது!

சிருஷ்டிக்கே மூலம் வேத மந்திரங்கள்தான். அந்த வேத மந்திரங்களைச் சொன்னாலே சிருஷ்டியில் பலவித அதிகாரங்களைப் பெற்றிருக்கும் தேவ சக்திகளை அந்த sound vibration-கள் (ஒலி அதிர்வுகள்) பிடித்துக் கொண்டு வரும். யக்ஞத்தில் இப்படிப்பட்ட மந்திரங்களைச் சொல்வது கடிதத்தில் அட்ரஸ் எழுதுகிறமாதிரி. இப்படி அட்ரஸ் பண்ணி ஹோமம் செய்தால்தான் ஆஹுதியை அக்னி தேவர்களிடம் சேர்க்கிறார்.

மிருகங்களில் பூனையைவிட நாய், நாயைவிடக் குதிரை, குதிரையைவிட யானை, யானையைவிடச் சிங்கம் என்று ஒன்றைக் காட்டிலும் இன்னொன்று அதிக சக்தி உடையதாக இருக்கிறதல்லவா? இப்படியே சிருஷ்டியில் மநுஷ்யர்களைவிட அதிக சக்தி உடையவர்களும் இருக்கிறார்கள். அவர்களையே தேவர்கள் என்பது. அவர்கள் இந்த லோகத்தில் பஞ்ச பூதங்களில் கரைந்து இருப்பதோடு, கண்ணுக்குத் தெரிகிற ரூபத்தில் தேவலோகத்தில் இருந்துகொண்டிருக்கிறார்கள். மந்திரங்களை நன்றாக ஜபித்து ஸித்தி அடைந்தால், ஸூக்ஷ்ம ரூபத்தினால் அவர்கள் செய்கிற அநுக்ரஹங்களைப் பெறுவதோடு, தேவ லோகத்தில்

அவர்களுக்கு உள்ள ஸ்தூல ரூபங்களையும் தரிசனம் பண்ணலாம். இந்த மந்திரங்களுக்கு ஆதாரமான மூல சப்த சலனங்களால்தான் அவர்கள் பரமாத்மாவில் தோன்றியது. எனவே இதையே திருப்பிச் சொல்வதானால் மந்திரங்களை தேவதைகளின் சப்த ரூபம் என்று சொல்லலாம்.

யக்ஞத்தில் ஒவ்வொரு தேவதை பற்றியும் மந்திரம் சொன்னால் அந்த தேவதை அங்கு ஆவிர்பாவமாகிறது. நல்ல பக்குவிகளுக்கு இது பிரத்யக்ஷமாகவே தெரியும். தெரியா விட்டாலும் அந்த தேவதா சக்தி அங்கு ஸூக்ஷ்மமாக வெளிப்பட்டிருக்கும். ஆனாலும், நேரே அதற்கு ஆஹுதி தரக்கூடாது. பத்திரம் எழுதினால், Bond எழுதினால் அதில் ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும், ரிஜிஸ்திரார் முத்திரை போடவேண்டும் என்றெல்லாம் இருப்பது போல் வேதத்தில் சொல்லியிருக்கிற விதிகளின்படி அக்னியில் போட்டால்தான் அது அவர்களுக்கு எந்த விதத்தில் ஏற்கத்தக்கதோ அந்த விதத்தில் போய்ச் சேரும்.

'அக்னி எரிந்துவிட்டதே, மிஞ்சியதை யக்ஞ சிஷ்டமாக (பிரஸாதமாக) யாகம் பண்ணினவர்களே சாப்பிட்டு விட்டார்களே, அது எப்படி தேவர்களை அடைய முடியும்?' என்று ஸந்தேஹப்படக் கூடாது. தேவர்கள் நம் மாதிரி பாஞ்ச பௌதிகமான (பஞ்சபூத மயமான) சரீரம் படைத்தவர்களலல்ல. எனவே நமக்குள்ள மாதிரி ஸ்தூலமான ஆஹாரம் அவர்களுக்குத் தேவை இல்லை. நமக்குங்கூட ஆஹாரங்களை வயிற்றிலுள்ள ஜாடராக்னி எரித்து, அதன் ஸத்தை மட்டும்தானே ரத்தமாக்கி அனுப்புகிறது! இப்படியே யக்ஞ அக்னியானது

ஆஹுதிகளின் ஸூக்ஷமமான ஸாரத்தை தேவர்களுக்கு அனுப்புகிறது.

யக்ஞம் வரையில் போக வேண்டும் என்பதில்லை. இந்தக் காலத்திலும் டின்னர், ஃபீஸ்ட் நடத்துகிறார்கள். வெள்ளைக்கார நாகிரிகப்படி நடத்தினால் அதில் இன்னொருத்தனின் ஸௌக்கியத்துக்காகச் சாப்பிடுவதாகச் சொல்லிக் கொண்டு 'டோஸ்ட் ப்ரபோஸ்' பண்ணுகிறார்கள். சாப்பிடுவது இவர்கள்; அதன் பலன் இன்னொருவனுக்கு என்கிறார்கள்! ஒருத்தன் சாப்பிட்டால் அது அவனுக்குத் தானே புஷ்டி தரும்? இன்னொருத்தனைப் பார்த்து, 'உன் புஷ்டிக்காக நான் சாப்பிடுகிறேன்' என்று இவன் டோஸ்ட் சொன்னால், எப்படி அது அந்த இன்னொரு ஆசாமிக்குப் போய்ச் சேரும்? இந்த மாதிரி கேட்பது தப்பு. இதெல்லாம் ஒருவகையான நல்ல மனோபாவம். மனஸார இப்படி நினைத்து நல்லதைப் பண்ணினாலே, எண்ணத்தின் சக்தியால் (thought-power-ஆல்) மற்றவனுக்கு அது க்ஷேமம் தரும் என்று தான் இப்படிப் பண்ணுகிறார்கள்.

ஸாக்ஷாத் பரமாத்மாவின் சக்தியே எண்ண அலைகளாகி, அவையே சப்த அலைகளாகி மந்திரம் என்று நமக்கு வந்திருக்கிற போது, அவை வாஸ்தவமாகவே மிகுந்த க்ஷேமசக்தி நிரம்பியதாகத்தான் இருக்கும். இப்படி மந்திர பூர்வமாகத் தரும் ஆஹுதி தேவர்களின் சக்தியை விருத்தி பண்ணுகின்றன. மநுஷ்யர்களைவிட தேவர்கள் ஜாஸ்தி சக்தி பெற்றவர்களென்றாலும், அவர்களும் பூரண சக்தர்களல்ல! நிறைந்த நிறைவாக நிரம்பி விட்டவர்களல்ல. அவர்களுக்கும் ஆசைகள் உண்டு. தேவைகள் உண்டு. அவற்றை இந்த யக்ஞங்களே பூர்த்தி

செய்கின்றன. லோக வாழ்க்கையை நமக்கு அவர்கள் அநுகூலமாகித் தருகிறார்கள் என்றால், நாமும் அவர்களுடைய சக்தியை விருத்தி செய்து, அவர்களுடைய இஷ்டங்களை நிறைவேற்றித் தருகிற உபகாரத்தை யக்ஞத்தின் மூலம் பண்ணவேண்டும். அவர்கள் நன்றாக இருக்க வேண்டும் என்ற மனோபாவத்தோடு நாம் யக்ஞங்களைப் பண்ணினால், தேவர்களும் அப்படியே நாம் க்ஷேமமாக இருக்க வேண்டும் என்று பாவித்து நமக்கு அநுக்ரஹம் செய்வார்கள். இப்படி பகவான் கீதையில் (III.11) சொல்லியிருக்கிறார்.

"தேவான் பாவயதாநேந தே தேவா பாவயந்து வ: |

பரஸ்பரம் பாவயந்த: ச்ரேய: பரமவாப்ஸ்யத ||"

இப்படி நம்முடைய மதத்தில் பல யக்ஞங்கள் செய்து தேவர்களைப் ப்ரீதி செய்வித்து ஈச்வராநுக்கிரஹத்திற்குப் பாத்திரராவதைச் சொல்லியிருக்கிறது.

'தேவர்கள்தான் லோகத்தில் மழை பெய்விக்கிறார்கள். மநுஷ்யர்களுக்கு தன தான்யங்களை, ஆரோக்ய ஐச்வரியங்களைத் தருகிறார்கள்' என்று சொல்லிவிட்டு, அவர்களுக்கு மநுஷ்யர்கள் யாகம் பண்ணி, ஆஹுதி கொடுத்து ஆஹாரம் போடவேண்டும் என்று சொன்னால், "நம்மையெல்லாம் அன்ன வஸ்திரம் தந்து ரக்ஷிக்கிற அத்தனை சக்தி படைத்த தேவர்களுக்கு நாம் எதற்குச் சாப்பாடு போட வேண்டும்? அவர்களே தங்கள் ஆஹாரத்தைக் கவனித்துக் கொள்ள மாட்டார்களா?" என்று தோன்றுகிறது. எதற்காக 'பரஸ்பரம் பாவயந்த:' என்று பகவான் சொன்னார்? அவர்களைப் பெரியவர்களாக வைத்து

நாம் பூஜிக்கவேண்டும் என்றால் சரி. அவர்களை நமஸ்காரம் பண்ணுவோம்; பிரார்த்தனை பண்ணுவோம். அதிலேயே அவர்கள் பிரீதி அடைந்து அநுக்ரஹம் செய்யட்டுமே! இப்படியில்லாமல், நம்மையும் கொஞ்சம் அவர்களுக்கு ஸமதையாகவே உயர்த்துகிற மாதிரி, equal footing கொடுத்த மாதிரி, "நீங்கள் அவர்களை பாவியுங்கள்; அவர்கள் உங்களை பாவிக்கட்டும் – நீங்கள் அவர்களுக்கு (யாகத்தால்) சாப்பாடு போடுங்கள்; அவர்கள் உங்களுக்கு (மழையால்) சாப்பாடு போடட்டும்" என்று சொன்னால் எப்படி ? - இப்படிக் கேள்விகள் தோன்றுகின்றன.

இதைப்பற்றி நினைக்கிறபோது, எனக்கு, தேவலோகம் இங்கிலாந்து மாதிரி, தேவர்கள் இங்கிலீஷ்காரர்கள் மாதிரி என்று தோன்றுகிறது. இங்கிலீஷ் தேசத்தில் வயல் உண்டா? தான்ய ஸம்ருத்தி [தானிய வளம்] உண்டா? கிடையாது. பின்னே அவர்கள் லோகத்திலேயே கொடிகட்டிப் பறந்தார்களே! 'எங்கள் ராஜ்யத்தில் சூரியனே அஸ்தமிப்பதில்லை' என்கிறார்களே! இத்தனை ஆதிக்கம் அவர்களுக்கு எப்படி வந்தது?

இங்கிலாந்து தேசத்திலே சாப்பாட்டு வசதியில்லை. சரி, அங்கே வேறே என்ன இருக்கிறது என்று பாரத்தால், ஒரே நிலக்கரியும், சாக்குக் கட்டியும்தான். கன்னங்கரேல் என்று நிலக்கரி, வெள்ளை வெளேரென்று சாக்குக் கட்டி –இந்த இரண்டுந்தான் அந்தத் தேசத்தில் முக்கியமாக இருக்கின்றன. இவற்றை அவர்கள் சாப்பிட முடியாது.

சாப்பிடக்கூடிய தானியங்களை நிறைய விளைவிக்கிற தேசங்களிலே, பெரிய மெஷின்களை வைத்து

ஃபாக்டரிகளை ஏற்படுத்த வேண்டுமானால், அதற்கு நிலக்கரியும் சாக்குக் கட்டியும்தான் வேண்டியிருக்கிறது. நிலக்கரி இன்டஸ்ரிகளுக்கு அவசியம் என்பது எல்லோருக்கும் தெரியும். (பிற்பாடுதான் பெட்ரோல், எலெக்ட்ரிக் பவர்; இப்போது 'அடாமிக் பவர்' முதலியன வந்திருக்கின்றன.) நிலக்கரியின் அளவுக்கு இல்லாவிட்டாலும் ஸிமென்ட் முதலான பல தொழில்களுக்குச் சாக்குக்கட்டி தேவைப்படுகிறது.

இதனால் வெள்ளைக்காரர்கள் பெரிய யுக்தி செய்தார்கள். மெஷின்களை வைத்துச் செய்கிற ஆலைத் தொழில்களில் மற்ற தேசங்களையும் இழுத்து விட்டுவிட்டு – தங்களுடைய கரிக்கட்டியையும் வெள்ளைக்கட்டியையும் அங்கெல்லாம் விலை போகும்படியாக வியாபார ஸாமர்த்தியம் செய்தார்கள். விலையாகத் தானியம், தனம், பருத்தி என்றிப்படி எல்லாவற்றையும் யதேஷ்டமாகப் பெற்றார்கள். தேசம் தேசமாகத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்துவிட்டார்கள்.

தேவலோகத்தில் வயல் கிடையாது. தேவர்களுக்குச் சாப்பாட்டுக்கு வழி இல்லை! துர்பிக்ஷம் தேவலோகேஷு மநுநாம் உதகம் க்ருஹே என்று வேதத்திலேயே [தைத்திரீய ஆரண்யக முதல் ப்ரச்னத்தில்] சொல்லியிருக்கிறது. மேல் மட்டத்தில் இருக்கிற மேகங்கள் மழையாக பூமியில் பெய்து, பூலோகத்தில்தான் ஜலம் ஆறு, ஏரி, கிணறு என்று எடுத்துப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளும்படி இருக்கிறது. உதகம் (ஜலம்) நம் லோகத்து மநுஷ்யனின் கிருஹத்தில்தான் உண்டு. ஜலத்தைக் கொண்டு பயிர் பண்ணி ஸுபிக்ஷம்

அடைவது பூலோகத்தில்தான். வயல் இல்லாத தேவலோகத்தில் துர்பிக்ஷம்தான். இப்படி அந்த வேதவாக்கியம் சொல்கிறது. ஆனால், மேலேயிருக்கிற மேகம் நமக்கு ஜலமாக வரவேண்டுமானால், அது தேவர்களின் அநுக்ரஹத்தாலேயே நடக்கும். நாம் யக்ஞம் செய்தால்தான் அவர்கள் அந்த அநுக்ரஹத்தை செய்வார்கள். இல்லாவிட்டால் மழை பெய்யாது. பஞ்சம் தான் வரும். பூமியில் பெய்யாமல் ஸமுத்திரத்திலேயே எல்லா மழையும் பெய்துவிடும். அல்லது, பயிரெல்லாம் அழுகி அடித்துக் கொண்டு போகும்படி பேய்மழையாகப் பெய்யும். ஒன்று அதிவ்ருஷ்டி- அளவுக்கு மீறிப் பெய்து வெள்ளத்தில் பயிர்நாசமாவது. இன்னொன்று அநாவ்ருஷ்டி-மழையே பெய்யாமல் பஞ்சம் ஏற்படுவது. இந்த இரண்டும் ஏற்படாமல், ஸுபிக்ஷத்துக்கு உரிய மழையை அளவாக அனுப்பி வைக்கிற சக்தி தேவலோகவாஸிகளுக்கே இருக்கிறது. இங்கிலீஷ் தேசத்தில், வயல் இல்லாவிட்டாலும் நிலக்கரி இருப்பதுபோல, தேவர்களிடம் தாங்களே பயிர் பண்ணிக் கொள்ள முடியாவிட்டாலும், அநுக்ரஹ சக்தி என்ற சரக்கு இருக்கிறது. அந்த அநுக்ரஹ சக்தியை வைத்துக் கொண்டு, அவர்கள் சாப்பிட்டுக் கொள்ள முடியாது. ஆனால் நம் சாப்பாட்டுக்கு வேண்டிய மழையை அனுப்ப முடியும். அவர்களுக்கு இப்படிப்பட்ட அநுக்ரஹ சக்தியை நாமே வேத மந்திரங்களால் விருத்தி பண்ணுகிறோம். அந்த மந்திரங்களோடு செய்கிற ஹோமம், அவர்களுக்கு ஆஹாரமாகிறது.

நம்மூரில் பருத்தி விளைகிறது. இங்கே நூற்பு ஆலைகள் விருத்தியாகாதபோது நம்மூர்ப் பருத்தியை வெள்ளைக்காரன் லங்காஷயருக்கு எடுத்துக் கொண்டு போய், 'நைஸ்' துணியாக்கி நம் தலையிலேயே நாலு மடங்கு விலை வைத்துக் கட்டினான். தேவர்கள் நம் லோகத்து ஸமுத்ரத்திலிருந்து ஆவியாகி மேலே போகிற மேகத்தையேதான் நமக்கு மழையாகத் திருப்பி அனுப்புகிறார்கள். ஆனால், வெள்ளைக்காரன் செய்த மாதிரிக் கொள்ளை லாபம் அடிக்காமல், நாம் செய்வதற்கு அதிகமாகவே திருப்பி அநுக்ரஹம் பண்ணுவார்கள். ஆனாலும் நாம் அவர்களுக்குக் கொடுத்தால்தான், திரும்ப நாலு மடங்காக நமக்கு நல்லது செய்வார்கள். நம்மைவிட அவர்களுக்குக் கொடுத்தால்தான், திரும்ப நாலு மடங்காக நமக்கு நல்லது செய்வார்கள். நம்மைவிட அவர்களுக்குச் சக்தி அதிகம். ஆனாலும் பகவான் யக்ஞ கர்மாநுஷ்டானத்தை நமக்கே கொடுத்து, நாம் செய்கிற கர்மாநுஷ்டானத்திலேயே அவர்கள் திருப்திப்படும்படியாக வைத்து, நம்மையும் அவர்களுடைய ஸ்தானத்துக்கே உயர்த்தி விட்டது போல வைத்திருக்கிறார். அதனால்தான், 'பரஸ்பரம் பாவயந்த:' என்று தட்டிக் கொடுத்துப் பேசுகிறார்.

காரிய சக்தியும் காப்புச் சக்தியும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

காரிய சக்தியும் காப்புச் சக்தியும்

காரிய சக்தியை நம்மிடமும், ரக்ஷண சக்தியை தேவர்களிடமும் பகவான் கொடுத்திருக்கிறார். லோகத்திலும் இப்படியே இரண்டு பிரிவுகள் இருக்கன்றன.

வயல், ஃபாக்டரி இவை காரியம் பண்ணும் இடம். போலீஸ், கோர்ட், மற்ற ஆபீஸ்கள் எல்லாமே ஒருவிதத்தில் ரக்ஷணை (காப்பு) தருகிற இடங்கள்தான். வயலிலும் ஃபாக்டரியிலும் காரியம் பண்ணி உண்டாக்கினது வீட்டுக்கு நியாயமாக வந்து சேரும்படி செய்வதற்குத்தான் ஆபீஸ்கள் இருக்கின்றன. ஆபீஸில் பதார்த்தங்கள் (ப்ராட்யூஸ்) இல்லை; சாகுபடியில்லை. மெஷின் சத்தமும், மாட்டுச் சாணியும், புழுதியும், இல்லை. நகத்தில் அழுக்குப் படாமல் பங்களா, ஃபான், நாற்காலி என்ற சௌகரியங்கள் ஆபீஸில் இருக்கின்றன. உடம்பால் உழைக்க வேண்டியதில்லை. எல்லாம் பேனா வேலைதான். தேவலோகம் இப்படித்தான் இருக்கிறது. அது ஸர்வலோகங்களுக்கும் ரக்ஷணைக்கான ஆபீஸ். ஆபீஸ்காரர்கள் உழவில்லை, மிஷினைப் பிடித்துச் சுற்றவில்லை என்று நாம் குற்றம் சொல்வோமா ? அவர்கள் இதைச் செய்ய ஆரம்பித்தால், நம் ரக்ஷணை போய்விடுமே! தேவர்கள் இப்படி அதிகாரிகளாக இருக்கிறார்கள்.

பூலோகம்தான் வயல், ஃபாக்டரி. ஒரே சேரும் சகதியும்; இல்லாவிட்டால் கடாமுடா என்று சத்தம்! எண்ணெய்ப் பிசுக்கு, தூசி, தும்பு எல்லாம்! உடம்பு வருந்த உழைத்துக் கொட்டவேண்டும். இப்படித்தான் நாம் எல்லோரும்

கர்மாநுஷ்டானம் பண்ணவேண்டும். ஹோமப்புகை, பசி, பட்டினி, எல்லாவற்றோடும் வேர்த்துக் கொட்டிக் கொண்டு பண்ணவேண்டும்.

இதனால் தேவர்கள் உசத்தி, நாம் தாழ்த்தி என்று பகவான் நினைக்கவில்லை. ஆபீஸில் ஜோராக உட்கார்ந்திருப்பவனுக்கு இந்த விவசாயியும், (ஃபாக்டரி) தொழிலாளியும்தான் சாப்பாடும், மற்ற ஸாமான்களும் உற்பத்தி பண்ணிக் கொடுக்கிறார்கள். இவர்கள் இல்லாவிட்டால் அவன் பட்டினிதான்; அவனுக்கு ஒரு ஸாமானும் கிடைக்காது. அதே மாதிரி அவனுடைய ரக்ஷணையால்தான் இவன் உழவு பண்ணின தானியமும், உற்பத்தி பண்ணிய சரக்கும் இவன் வீட்டுக்கு வருகிறது; சமூகத்திலும் எல்லாருக்கும் அவை கிடைக்கின்றன. ஆபீஸில் உட்கார்ந்திருக்கிற என்ஜினீயர் தான் வயலுக்கான கால்வாய் வெட்ட உத்தரவு போடுகிறார். விவசாய அதிகாரி பூச்சி மருந்து கொடுக்கிறார். ஒரு ஃபாக்டரி என்றால், லைசென்ஸ் தருவதிலிருந்து அதற்கான மூலச்சரக்குகளை வரவழைப்பது முதலான எல்லாம் ஆபீஸ் அனுமதியால்தான் நடக்கிறது. அப்புறம் சர்க்காரும், போலீஸும், கோர்ட்டும்தான் இவை நியாயமாக எல்லாருக்கும் விநியோகமாகும்படி சகாயம் பண்ணுகின்றன. (நடைமுறையில் எப்படியிருந்தாலும், ராஜாங்கம் என்பது இதற்காக இருப்பதாகத்தான் பேர்.) இப்படி ஒருத்தரை ஒருத்தர் நம்பி, இவனால் அவனுக்கு ஸுகம், அவனால் இவனுக்கு ஸுகம் என்றிருக்கிறது.

இதனாலெல்லாந்தான் "பரஸ்பரம் பாவயந்த:" என்றார். ஆனாலும், தேவர்கள் நம்மை எதிர்ப்பார்ப்பவர்களாக

இருந்தாலும், அவர்கள் நம்மைவிட உயர்ந்த உயிரினம் என்பதை நாம் மறக்கக்கூடாது. அவர்களிடம் மரியாதையுடன் இருக்கவேண்டும்.

பிற மதங்கள் எல்லாம், ஒரே ஸ்வாமியையத்தான் நேராக வழிபடும். ஒரே கடவுளிடத்தில் நேராகப் பிரார்த்தனை செய்யும். பல தேவசக்திகளைப் பிரீதி செய்கிற யாக யக்ஞங்கள் மற்ற மதங்களில் இல்லை.

நம்முடைய மதத்தில் சந்நியாசிகள்தாம் சாக்ஷாத் பரமாத்மாவையே நேராக வழிபடலாம். மற்றவர்கள் தேவதைகளைப் பிரீதி பண்ணி தெய்வங்களுடைய அனுக்கிரகத்தினால் நன்மை அடைய வேண்டும். தேவதைகளைப் பிரீதி பண்ணித்தான் பல ஹோமங்கள், யக்ஞங்கள் எல்லாம் பண்ணுகிறோம்.

ஒரு பெரிய ராஜா இருந்தால், எல்லாரும் ராஜாவிடமே நேரில் போக முடியுமா? அந்த ராஜாவின் பரிபாலனத்திற்கு உட்பட்ட உத்யோகஸ்தர்களிடம் குடிமக்கள் நெருங்கித் தங்களுக்கு வேண்டிய அநுகூலங்களைப் பெறுகிறார்கள். உத்தியோகஸ்தர் தாங்களாகச் செய்வதில்லை; அரசன் உத்தரவுப்படிதான் ஜனங்களுக்கு அநுகூலம் செய்கிறார்கள். ஆனாலும் 'அரசன்தானே செய்கிறான்?' என்று அரசனிடத்தில் குடிமக்கள் நேராக போகமுடியாது.

அப்படித்தான் நம் மதத்தில் சில வழக்கங்கள் இருக்கின்றன. பரமேச்வரன் மகாசக்ரவர்த்தி. ஸகல ஜனங்களும் குடமக்கள். வருணன், அக்கினி, வாயு போன்ற பல தேவதைகள் சக்ரவர்த்தியின் உத்தியோகஸ்தர்கள். இவர்கள் மூலமாக நாம் பல நன்மைகளை

அடையவேண்டும். அதற்காகவே, தேவர்களுக்குச் சக்தி அளிக்க யாகம் பண்ணுகிறோம். அக்னி முகமாக நாம் கொடுக்கிற ஹவிஸ்கள் தேவர்களுக்குச் சேர்ந்து ஆஹாரமாகின்றன: "அக்னிமுகா: தேவா:".

'நம்முடையது அன்று' என்று நாம் கொடுக்கிற பொருள்கள் தேவதைகளுக்குப் போய்ச் சேருகின்றன. அக்கினியில் போடுவதுதான் நம்முடையது இல்லை என்று து போகும். போடும்போது 'ந மம' என்று சொல்லிப் போடுகிறோம். 'ந மம' என்றால், எனனுடையது அல்ல என்று அர்த்தம். தேவர்களுக்கு ஆகாரம் போய்ச் சேருகிற வழிதான் அக்னி.

இப்படியே நாம் எந்த வம்சத்தில் பிறந்தோமோ அந்த வம்சத்திலுள்ள பித்ருக்களைப் பிரீதி செய்யப் பல காரியங்களைச் செய்கிறோம். இதற்கும் வேதத்தில் வழி சொல்லியிருக்கிறது.

தேவகாரியமும் பித்ரு காரியமும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

தேவ காரியமும் பித்ரு காரியமும்

தெய்வ காரியங்களுக்கு பக்தி வேண்டும். பித்ரு காரியங்களுக்கு சிரத்தை வேண்டும். பக்தியோடு செய்வது யக்ஞம்; சிரத்தையோடு செய்வது சிராத்தம்.

தெய்வகாரியங்களைப் பண்ணும்போது சிகையை நன்றாக முடிந்து கொண்டு, யக்ஞோபவீதம் (பூணூல்) இடது தோளில் இருக்கும்படியாக, பக்தியோடு செய்ய வேண்டும். பித்ரு காரியங்களைச் செய்யும்போது சிகையை முடியாமல், யக்ஞோபவீதம் வலது தோளில் இருக்கும்படியாக, சிரத்தையோடு செய்ய வேண்டும்.

இதற்காகத்தான் சிகை, யக்ஞோபவீதம் இரண்டும் இருக்கின்றன. சந்நியாசிகளுக்கு இவை இரண்டும் இல்லை. பித்ரு காரியத்தையும், பல தேவதைகளின் உபாஸனையையும் விட்டுவிட்டு, நேரே பரமாத்ம உபாஸனையை எந்தவிதமான லௌகிக அபேக்ஷையும் இன்றிச் செய்பவர்கள் அவர்கள். நேராகவே கடவுளிடம் போகிற பிற மதஸ்தர்களுக்கும் சிகை, யக்ஞோபவீதம் இல்லை.

ஏன் இப்படித் தேவர்களுக்கு இடது தோளில் பூணூலோடும், பித்ருக்களுக்கு வலது தோளில் பூணூலோடும் காரியம் பண்ண வேண்டும் என்று சொல்கிறேன்:

கிழக்கு முகமாக இருந்து கொண்டே காரியங்களைச் செய்ய வேண்டும். வடக்கு தேவர்களிடம் போகிற திசை, உத்தராயனம் என்பது அதுதான். உத்தரம் என்றால் வடக்கு. தெற்குதான் பித்ருக்கள் இருக்கும் பக்கம். 'தென்புலத்தார்' என்று திருவள்ளுவர்கூடச் சொல்கிறாரல்லவா? தக்ஷிணம் என்றால் தெற்கு. தக்ஷிணாயனம் என்பது பித்ரு லோக மார்க்கம்..... ' உத்தராயணம்' என்பதில் மூன்று சுழி 'ண ' போட்டும், '

தக்ஷிணாயனம் ' என்னும்போது இரண்டு சுழி 'ன' போட்டும் சொல்ல வேண்டும். 'அயனம்' என்றால் மார்க்கம், வழி என்றும் அர்த்தம். 'உத்தர' என்பதில் வருகிற 'ர' காரத்தினால் 'ன' என்பது ' ண ' வாக மாறிவிடும். இது வியாகரண விதி. தற்காலத்தில் மனம் போனபடி பத்திரிகைகளில் எழுதுவதால் இதைச் சொல்ல நேர்ந்தது...

உத்தராயண தேவ மார்க்கத்தையும், தக்ஷிணாயன பித்ரு மார்க்கத்தையும் பற்றிப் பகவான் கீதையில் சொல்லியிருக்கிறார். நாம் கிழக்குமுகமாக இருந்துகொண்டு பித்ரு காரியம் பண்ணும்போது, எந்தத் தோள் தெற்குப் பக்கமாக இருக்கிறது? வலது தோள்தான். அதனால்தான் பித்ரு காரியத்தில் யக்ஞோபவீதம் அந்தத் தோளின்மேல் இருக்கும்படியாகப் போட்டுக்கொள்ள வேண்டும் என்பது.

"பிரதக்ஷணம் பண்ணுவது" என்கிறோமே, இதற்குக் கூட தக்ஷிண (தெற்கு) திசையை நோக்கிப் போவது என்றுதான் அர்த்தம். முக்காலே மூன்றுவாசிக் கோயில்களில் ராஜகோபுரம் கிழக்குப் பார்க்கத்தான் இருக்கும். அதற்குள் நுழைந்து நாம் பிரதக்ஷிணம் ஆரம்பிக்கும்போது, முதலில் தெற்குப் பார்க்கத்தான் போவோம்.

இதே மாதிரி, நாம் கிழக்குமுகமாக இருந்துகொண்டு தேவகாரியம் பண்ணும்போது, தேவர்களின் திசையான வடக்கு திசையைப் பார்க்க இருப்பது நம்முடைய இடது தோள்தான். அதனால்தான், தேவ காரியங்களில் பூணூல் இடது தோள்மேல் இருக்க வேண்டும் என்பது.

தேவகாரியம், பித்ரு காரியம் இரண்டும் செய்யாத மற்ற வேளைகளில், அதாவது உத்யோக வேளை முதலானதுகளின் போது, பூணூலை ஒரு தோளின் மேலேயும் இல்லாமல், கழுத்திலிருந்தே மாலைமாதிரித் தொங்கவிட்டுக் கொள்ள வேண்டும். இதை யாரும் அனுஸரிக்கக் காணோம். பித்ரு காரியம் தவிர மற்ற எல்லா ஸமயங்களிலும் இடது தோள் மேலேயே யக்ஞோபவீதத்தைப் போட்டுக் கொள்கிறார்கள்.

தேவ காரியத்தின் போது இடது தோளுக்கு மேல் பூணூல் இருப்பதற்கு 'யக்ஞோபவீதம்' என்றும், பித்ரு காரியத்தின் போது வலது தோளுக்கு மேல் இருப்பதற்கு 'ப்ராசீனாவீதம்' என்றும், மநுஷ்யர்களுக்கான லோக காரியங்கள் செய்யும் மற்ற எல்லா ஸமயத்திலும் மாலை மாதிரித் தொங்குவதற்கு 'நிவீதம்' என்றும் பெயர். பிருஹதாரண்யக உபநிஷத்தில் ஒரு ஞானி இந்த எல்லாத் தினுஸுக் கர்மாக்களையும் விட்டு விட்டுப் பிச்சைக்கார ஸந்நியாஸியாகப் புறப்படுவதைப் பற்றி வருகிறது. (III.5.1). அதற்கு ஆசார்யாள் பாஷ்யம் பண்ணும் போது, தேவ–பித்ரு–மநுஷ்ய கர்மாக்களை பண்ணுவதற்காகவே க்ருஹஸ்தனுக்குப் பூணூல் இருக்கிறதென்றும், எனவே, இந்த கர்மாக்களை விட்டுவிட்ட ஸந்நியாஸிக்குப் பூணூல் கிடையாதென்றும் ச்ருதி வாக்யங்களைக் காட்டி ஸ்தாபிக்கிறார். அந்த அலசலில், "நிவீதம் மநுஷ்யாணாம்" – "மநுஷ்யர்களுக்கான காரியத்தின்போது [பூணூலை] மாலையாக[ப் போட்டுக்கொள்ள வேண்டும்] " என்று ச்ருதி ப்ரமாணமே இருப்பதாகக் காட்டியிருக்கிறார். ஆனாலும்

நடைமுறையில் பஹுகாலமாகவே அந்த வழக்கம் எடுபட்டுப் போயிருக்கிறது.

வேள்வியின் தாத்பரியம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

வேள்வியின் தாத்பரியம்

நம் மதத்தில் மட்டும் ஏன் யக்ஞம் இருக்கிறது என்று ஆலோசிக்கிற போது, இவ்வுலகில் மனிதர்களாகிய நம்முடைய ஜீவனரீதியைக் கவனிப்போம். ஒரு ஊரில் ஒரு ஸாமான் அதிகமாக விளைந்தால், அதை அந்த ஸாமான் விளையாத ஊருக்கு அனுப்பி, நம் ஊரில் விளையாததும் அந்த ஊரில் விளைவதுமான மற்றொரு ஸாமானை வாங்கிக் கொள்கிறோம். தச்சன், கொல்லன் முதலியவர்கள் நமக்காகச் சில காரியங்களைச் செய்கிறார்கள் ; நாம் அவர்களுடைய காலக்ஷேபத்திற்கு வேண்டியவைகளைக் கொடுக்கிறோம். பசுக்களுக்குப் புல் போடுகிறோம் ; அவை நமக்குப் பால் கொடுக்கின்றன. நாம் ராஜாங்கத்தினருக்கு வரி கொடுக்கிறோம். அவர்கள் நமக்குத் தீங்கு வராமல் காவல் கட்டுச் செய்கிறார்கள். இப்படி உலக முழுவதுமே பரிவர்த்தனை க்ரமத்தில் (exchange) நடந்து வருகிறது. இப்படியே நாம் லோகாந்தரங்களுடன் சில பரிவர்த்தனை செய்து

கொண்டிருக்கிறோம். இஞ்ஜினியர் முதலியவர்கள், பெய்த மழை நீரை ஒழுங்காகப் பிரித்து ஆறு முதலியவைகளில் பாயும்படி விடுவார்களே யொழிய, மழை பெய்யும்படிச் செய்ய அவர்களால் முடியாது. மழை பெய்ய வேண்டுமானால், நாம் சில ஸாமான்களைத் தேவலோகத்திற்கு அனுப்ப வேண்டும். இந்த பரஸ்பர பரிவர்த்தனையே கீதையில் சொல்லியிருக்கிறது.

தேவான் பாவயதாநேந தே தேவா பாவயந்து வ: |
பரஸ்பரம் பாவயந்த ச்ரேய: பரம் அவாப்ஸ்யத ||

இதன் அர்த்தம்: "யாகத்தைக் கொண்டு நீங்கள் தேவர்களைத் திருப்தி செய்து வையுங்கள். அந்த தேவர்கள் மழை முதலியவற்றால் உங்களுக்கு க்ஷேமத்தைச் செய்யட்டும்; இப்படியே நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு, மேலான க்ஷேமத்தை அடையுங்கள்."

ஜீவஹிம்ஸை செய்யலாமா ?

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

ஜீவஹிம்ஸை செய்யலாமா ?

யாகம் என்பது மந்த்ரம், தேவதை, ஹவிஸ் என்ற மூன்று ஸ்வரூபமாக உள்ளது. அவைகளுள் மந்த்ரம் என்பது வாயால் சொல்லப்பட வேண்டும். தேவதையை மனஸால் தியானம் செய்ய வேண்டும். ஹோமம் செய்வதற்கு முக்கியமாக வேண்டிய திரவியமே ஹவிஸ். அது காரியத்தில் ஆஹுதியாக அக்னியில் செலுத்தப்பட வேண்டியது. இவ்வாறு மனோ-வாக்-காயம் என்ற மூன்றும் ஒருமுகப்படுத்தப் பெறுகின்றன.

ஹவிஸ்ஸில் நெய் முக்கியம். வெறும் நெய்யே ஹோமம் செய்யப்படுவது மட்டுமின்றி, வேறு எதை ஹோமம் செய்தாலும், அதை நெய்யால் சுத்தி செய்தே ஆஹுதி பண்ண வேண்டும்.

பல யாகங்களில் ஆஹுதியாகப் பிராணிகளின் வபையைக் கொடுக்கச் சொல்லியிருக்கிறது.

யக்ஞம் பண்ணுவது பாபமா? புண்ணியமா? மிச்ரமா (இரண்டும் கலந்ததா)? மத்வாசாரியர், 'பசுவைக் கொன்று யாகம் பண்ணக்கூடாது; மாவால் பசுவின் வபையைப் போல் பண்ணி ஆஹுதி பண்ண வேண்டும்' என்று கருணையால் ஏற்பாடு பண்ணினார். (பசு என்றால் மாடு என்று அர்த்தமில்லை; எந்தப் பிராணிக்கும் ஸம்ஸ்கிருதத்தில் பசு என்றே பெயர்).

வியாஸர் "பிரம்ம ஸூத்திரம்" செய்தார். அதில் ஆத்ம ஸ்வரூபத்தைப் பற்றி வேதத்தின் ஞானகாண்டத்திலுள்ள உபநிஷத் சொல்வதன் தாத்பர்யத்தைச் சொல்லியிருக்கிறார். யக்ஞப் பிரயோகம் வேதத்தின் கர்மகாண்டமான பூர்வ மீமாம்ஸையில் இருக்கிறது.

அதனுடைய பிரயோஜனம் வேதத்தின் ஞானகாண்டமான உத்தர மீமாம்ஸையில் இருக்கிறது. அதாவது யாகம் என்ற கர்மா செய்வதால் ஏற்படும் சித்த சுத்தியே ஒருவனை ஞானமார்க்கத்தில் சேர்க்கிறது.

"அசுத்தமிதி சேந்ந சப்தாத்" என்று அந்த பிரம்ம ஸூத்ரம் சொல்கிறது. ஆத்ம ஞான அங்கமாக ஸாக்ஷாத் வேதமே விதித்தது யக்ஞம். இது அசுத்தமான கர்மாவாக எப்படி ஆகும்? அசுத்தம் என்று நாம் தீர்மானம் பண்ணுவதும், நல்லது கெடுதல் என்று தீர்மானம் பண்ணுவதும், எதனாலே ? சாஸ்திரங்களைக் கொண்டு நாம் செய்கிறோம். வேதந்தான் பெரிய சாஸ்திரம்; வேதந்தான் பெரிய பிரமாணம். "யக்ஞம் 'சப்தம்' எனப்படும் வேத ப்ரமாணத்திலேயே ஏற்பட்டதாதலால் பாபம் இல்லை", என்று வியாஸர் பிரம்ம ஸூத்ரத்தில் சொல்கிறார். சுத்தம் அசுத்தம் ஆகியவை வேதம் என்ற சப்தப் பிரமாணத்தால் அறியப்படுகின்றன. 'கள் குடிக்காதே!' என்று வேதம் சொன்னால், அது அசுத்தம் என்று தெரிகிறது. வேத அபிப்ராயம் யக்ஞம் அசுத்தம் என்பதாக இருந்தால் வியாஸர் அதை அங்கமாகச் சொல்லமாட்டார். மத்வாசாரியார் சொல்கிறபடி மாவினால் பசு பண்ணினாலும், அதில் பிராண பிரதிஷ்டை பண்ணுகிறோம். மந்திர பூர்வமாகப் பிராணப் பிரதிஷ்டை பண்ணிவிட்டால், அதுவும் உயிருள்ள பிராணிக்கு ஸமம்தானே? எனவே, அப்பொழுதும் அதற்கு ஹிம்ஸை உண்டாகிறது என்றுதானே ஆகும் ?....

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்

உயிர்செகுத் துண்ணாமை நன்று

என்று திருக்குறளில் ஒரு செய்யுள் இருக்கிறது. ஹவிஸை அக்கினியில் ஆஹுதி பண்ணி ஆயிரம் யக்ஞம் பண்ணுவதைக் காட்டிலும், ஒரு பிராணியையும் வதைத்து உண்ணாமல் இருக்கிறது நல்லதென்பது இதன் அர்த்தம். இப்படிச் சொன்னதால், திருவள்ளுவர் யக்ஞத்தை நிந்திக்கிறார் என்று அர்த்தமாகாது.

தர்மத்துக்காகச் செய்யவேண்டியது, எப்படியிருந்தாலும் பண்ணவேண்டும்; ஹிம்ஸையென்றும் பார்க்கக் கூடாது. யுத்தத்தில் சத்ருவதம் பண்ணுவதை ஸகல ராஜ நீதிப் புஸ்தகங்களும் ஒப்புக்கொள்ளவில்லையா? கொலைகாரனுக்குத் தூக்குத்தண்டனையை சட்ட புஸ்தகமே விதிக்கிறதல்லவா? அப்படி, லோகத்தில் பல பேருக்குப் பெரிய க்ஷேமத்தை தேவர்கள் செய்யவேண்டுமென்ற உசந்த நோக்கத்தில் அவர்களுக்கு பசு ஹோமம் பண்ணுவதிலும் தப்பேயில்லை.

ஆயிரம் யக்ஞத்தைக் காட்டிலும், ஒரு பிராணியை ஹிம்ஸை பண்ணாமல் இருப்பது நல்லது என்பதால் யாகத்தைத் திருவள்ளுவர் நிந்தித்திருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். மற்ற யக்ஞங்கள் ஆயிரத்தைவிட, ஒரு அச்வமேத யாகம் செய்வது உயர்ந்தது என்று மனுவே ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார். ஆயிரம் அச்வமேதத்தைவிட ஒரு ஸத்யம் உயர்ந்தது என்றும் மனு சொல்கிறார். ஒன்றைவிட ஒன்று உசத்தி என்றால், எல்லாமே உசத்திதான்! யக்ஞம் பாபமாக இருந்தால், ஆயிரம் பாபத்தைக் காட்டிலும் ஒரு புண்ணியம்

உத்கிருஷ்டமானது [உயர்வானது] என்று சொல்லுவார்களா? 100 ஏகாதசி உபவாஸத்தைவிட ஒரு சிவராத்திரி உபவாஸம் உத்கிருஷ்டமானது என்று சொல்லலாம். 100 கசாப்புக் கடைகள் வைப்பதைக் காட்டிலும், ஒரு சிவராத்திரி உபவாஸம் உத்கிருஷ்டம் என்று சொல்லுவார்களா? புண்ணிய கர்மாக்களுள்தான் இதைவிட இது உத்கிருஷ்டமானது என்று சொல்லுவார்கள்.

சாந்தோக்யோபநிஷத்தின் முடிவில், அஹிம்ஸையைச் சிறப்பிக்கும்போதுகூட, "அன்யத்ர தீர்த்தேப்ய:" என்ற விதிவிலக்குச் சொல்லியிருக்கிறது. அதாவது, வேதத்தில் சொல்லப்பட்ட கர்மாக்களைத் தவிர, மற்ற இடங்களில் அஹிம்ஸையை அநுஷ்டிக்க வேண்டும் என்று அர்த்தம்.

யக்ஞம், யுத்தம், நீதிப்படி தண்டனை தருவது முதலிய இடங்களில் ஹிம்ஸை என்று நினைக்கக் கூடாது.

யக்ஞத்தைவிட அஹிம்ஸை சிரேஷ்டமென்றால், "யக்ஞமும் சிரேஷ்டந்தான்; அதைவிட அஹிம்ஸை சிரேஷ்டம்" என்றுதான் அர்த்தமாகும். ஆயிரம் யக்ஞங்கள் மிகவும் உயர்வானவை; அவைகளிலும் அஹிம்ஸை உயர்வானது என்ற அர்த்தத்தில்தான் அந்தக் குறள் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும் இந்தக் குறள் துறவற இயலில் சொல்லப்பட்டிருகிறது. 'கிருஹஸ்தன் ஆயிரம் யக்ஞங்களைச் செய்வதைக் காட்டிலும், ஸந்நியாஸி ஒரு பிராணிக்கும் ஹிம்ஸை செய்யாமலிருப்பது நல்லது' என்ற அபிப்ராயத்தில் இந்தக் குறளைச் சொல்லியிருக்கிறார். சாஸ்திரப்படியும் துறவிக்கு யக்ஞம் செய்யும் அதிகாரம்

கிடையாது; அவனுக்கே பூர்ண அஹிம்ஸை விதித்திருக்கிறது.

யாகங்களில் பலவிதம் உண்டு. அதைப்பற்றிப் பின்னால் வேதாங்கங்களில் ஒன்றான "கல்ப"த்தைப் பற்றியும், கிருஹஸ்தாச்ரமம் பற்றியும் சொல்லும்போது சொல்கிறேன். இங்கே சொல்ல வந்தது, எல்லா யாகத்திலும் பசுபலி செய்யப்படவில்லை என்பதே. ஆஜ்யம் என்று நெய்யை மட்டும் ஹோமம் செய்வது, ஹவிஷ்யான்னத்தை (நெய்ச் சாதத்தை) ஹோமம் செய்வது, 'சரு' என்ற நன்றாகப் பக்குவமான (cooked) தானியத்தை ஹோமம் செய்வது, 'புரோடாசம்' என்பதான அடைமாதிரியான (baked) தானிய பக்ஷயங்களை ஹோமம் செய்வது, அக்னிஹோத்ரம் என்பதில் பாலை ஹோமம் செய்வது, ஔபாஸனத்தில் அக்ஷதையை ஹோமம் செய்வது, ஸமிதா தானத்தில் சுள்ளியை மட்டும் ஹோமம் செய்வது என்றிப்படிப் பல இருக்கின்றன. பசுபலி உள்ளதிலும், யக்ஞப் பிரஸாதமாக ஹோமம் செய்து மிஞ்சியதில் ரொம்பக் கொஞ்ச அளவே சாப்பிட வேண்டும்.

ஒருத்தன் செய்ய வேண்டியதாக 21 யக்ஞங்கள் விதிக்கப் பட்டிருக்கின்றன. பாக யக்ஞம், ஹவிர் யக்ஞம், ஸோம யக்ஞம் என்று மூன்று விதமான யக்ஞங்களில், ஒவ்வொன்றிலும் ஏழு வீதம் மொத்தம் 21 சொல்லியிருக்கிறது. இவற்றிலும் பாக யக்ஞம் ஏழிலும் பசு பலி இல்லை. ஹவிர் யக்ஞங்களிலும் முதல் ஐந்தில் பசுபலி இல்லை. 'நிரூட பசுபந்தம் ' என்ற ஆறாவது யக்ஞத்திலிருந்துதான் பசுபலி ஆரம்பிக்கிறது.

'கூட்டம் கூட்டமாகப் பசுக்களைப் பலிகொடுத்து, பிராம்மணர்கள் ஏகமாக மாம்ஸம் சாப்பிட்டார்கள். புத்தர் கூட இப்படி யாகத்துக்காக ஓட்டிக்கொண்டு போகப்பட்ட மந்தைகளை ரக்ஷித்தார்' என்றெல்லாம் இப்போது புஸ்தகங்களில் எழுதி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இம் மாதிரி ஏகப்பட்ட பசுக்களை பலி கொடுப்பதாக, வாஸ்தவத்தில் எந்த யாகமும் இல்லை. பிராம்மணர்கள் செய்வதில் மிகவும் உயர்ந்ததான வாஜபேயத்துக்கும் 23 பசுக்களே சொல்லப்படுகின்றன. சக்ரவர்த்திகளே செய்கிற மிகப் பெரிய அச்வமேதத்துக்குக்கூட 100 பசுக்கள்தான் சொல்லியிருக்கிறது.

மாம்ஸ போஜனத்தில் இருந்த ஆசையினாலேயே பிராம்மணர்கள் "தேவ ப்ரீதி" என்று கதை கட்டி, யாகம் பண்ணினார்கள் என்று சொல்வது ரொம்பவும் பிசகாகும். ஒரு பசுவின் இன்னின்ன அங்கத்திலிருந்து மட்டுமே இத்தனை அளவுதான் மாம்ஸம் எடுக்கலாம். அதில் இடாவதரணம் என்பதாக ரித்விக்குகள் இவ்வளவுதான் புஜிக்க வேண்டும் என்பதற்கெல்லாம் சட்டம் உண்டு. அது துவரம் பருப்பளவுக்குக் கொஞ்சம் அதிகம் தானிருக்கும். இதிலும் உப்போ, புளிப்போ, காரமோ, தித்திப்போ சேர்க்காமல், ருசி பார்க்காமல் அப்படியே முழுங்கத்தான் வேண்டும். ஆகையால், வேறு என்ன காரணம் சொல்லி யக்ஞத்தை கண்டித்தாலும் சரி, 'பிராம்மணர்கள் இஷ்டப்படி மாம்ஸம் தின்னுவதற்கு யக்ஞம் என்று பெரிய பெயர் கொடுத்து ஏமாற்றினார்கள்' என்றால் கொஞ்சங்கூட சரியில்லை.

இப்போது ஒரு மருந்தைப் பரீக்ஷிப்பது என்பதற்காக லாபரட்டரிகளில் எத்தனை ஜீவன்களைக் கொல்கிறார்கள்? இப்படியே ஒரு பெரிய க்ஷேமத்துக்காகச் சின்ன ஹானியையும் உண்டாக்கலாம் என்றே யக்ஞங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வாஸ்தவத்தில் ஹானியும் இல்லை; அந்தப் பசு ஸத்கதி பெறுகிறது என்பதே நம்பிக்கை.

இன்னொரு புரளி, 'ஸோம யாகம்' என்று சொல்லிக்கொண்டு ஸோமரஸம் குடித்தது மதுபானம் மாதிரிதான்' என்பது. ஸோமரஸம் போதைப் பொருள் அல்லவே அல்ல. அது intoxicating அல்ல. "அர்த்த வாதம்" என்கிற முறையில், மிகைப்படப் பேசும்போது, வேதத்தில் ஓரிடத்தில், இந்திரன் ஸோமரஸத்தால் மதமடைந்து சத்ருவதம் பண்ணினான் என்று வருவதை வைத்துக்கொண்டு இப்படிக் குயுத்தி பண்ணுகிறார்கள். தேவ சரீர தத்வமே மநுஷ்ய தர்மங்களுக்கு மாறானது. அது மட்டுமின்றி, ரித்விக்குகள் ஏதோ பாட்டில் பாட்டிலாகவோ மொந்தை மொந்தையாகவோ குடித்த மாதிரிப் பேசுவது அடியோடு விஷயம் தெரியாத பேச்சு. ஒரு யாகத்தில், உரல் மாதிரியான ரூபத்தில் ரொம்பச் சின்னதாக உள்ள க்ரஹம் என்ற ஒரு பாத்திரத்தில், இத்தனை ஸோமரஸம் வடித்து ஹோமம் செய்ய வேண்டும், அதில் மீறுவதை 'ஹுத சேஷம்' என்று சாப்பிட வேண்டும் என்ற சட்டம் இருக்கிறது. இம்மாதிரி ஒரு யாகத்தில் துளிதுளியாக செய்கிற ஸோம பானத்தையெல்லாம் சேர்த்தால்கூட ஒரு அவுன்ஸுக்குமேல் வராது. இப்படிச் சாப்பிட்டு எவரும் மயக்க மடைந்ததும் கிடையாது. ஸோமரஸம் என்பது

அப்படியொன்றும் ருசியாக இருக்கவும் இல்லை என்கிறார்கள் *.

ஸோம பானத்தை அந்தக் காலத்துக் காபி என்று சிலர் வியாக்யானம் பண்ணிவிட்டார்கள்! ஸோம ரஸம் உண்டாக்குகிற ஸந்தோஷத்தைப் பற்றி வேத மந்திரங்கள் இருப்பதால், இப்படி தப்பர்த்தம் பண்ணிவிட்டார்கள். காபி சித்த விருத்தியைக் கெடுக்கிற வஸ்து. ஸோம ரஸம் சித்த சுத்தியை உண்டாக்குகிற வஸ்து. இரண்டையும் ஒன்று என்பது கொஞ்சங்கூட பொருந்தாது. அந்தக் காலத்தில் ஸம்ருத்தியாகக் கிடைத்து வந்த ஸோமலதை இப்போது கிடைப்பதே ரொம்பவும் அபூர்வமாகிக் கொண்டு வருகிறது. வேத தர்மங்கள், ஆசாரங்கள் எல்லாம் நசித்து வருவதற்கு ஏற்றாற்போல், ஸோம யாகங்களுக்கு ஜீவாதாரமாக இருக்கப்பட்ட கொடியும் க்ஷீணித்துக் கொண்டே வந்திருக்கிறது. ஸமீபத்தில் கொல்லங்கோடு ராஜா, ஸோமயாகம் எங்கே நடந்தாலும் அதற்கு ஸோமலதை கொடுப்பதென்று வைத்துக் கொண்டிருந்தார். காபிக்கும் இந்த ஸோமலதைக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை.

* இப்பகுதியில் உள்ள விஷயங்களில் சில ஸ்ரீ அக்னிஹோத்ரம் தாதாசாரியரவர்களின் விளக்கத்தில் வெளியானவை.

முறை வேறாயினும் முடிவு ஒன்றே

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

முறை வேறாயினும் முடிவு ஒன்றே

சுருக்கமாக, யக்ஞங்கள் என்றால் ஒவ்வொரு தேவதைக்கும் மந்திர த்வாரா ஆஹுதிகளை அர்ப்பணம் பண்ணுவது என்று அர்த்தம். ஒரு விதத்தில் அந்த மந்திரங்களே தேவதா ஸ்வரூபமாகவும் இருக்கின்றன. இன்னொரு விதத்தில் ஆஹுதி செய்யப்படும் திரவியங்களைப் போலவே, இந்த மந்திராக்ஷரங்களும் தேவதைகளுக்கு 'ஆஹாரம்' மாதிரி ஆகி, அவற்றின் சக்தியை விருத்தி பண்ணுகின்றன. மந்திரம் என்பது இப்படி multipurpose (பல நோக்கங்கள்) உள்ளதாக இருக்கிறது.

நாம் வரி கொடுக்கிறோம். அவையெல்லாம் ஒரே ராஜாங்கத்துக்குப் போகிறவைதான். ஆனாலும் தொழில் வரி, நிலவரி, மோட்டார் வரி என்று பல வரிகளைச் செலுத்தும்போது ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் இடம் இருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் தனியாக முத்திரைக் கடிதாசு இருக்கிறது. அதுபோல ஒவ்வொரு கர்மாவுக்கும் மந்திரம், தேவதை, திரவியம், காலம் எல்லாம் தனித்தனியே இருக்கின்றன. இப்படி ஒவ்வொன்றுக்கும் கிரமம் வேறுவேறாக இருந்தாலும், எல்லாவற்றுக்கும் பரம தாத்பர்யம் பரமேச்வரனுக்கு அர்ப்பணம் பண்ணுவதுதான். வெவ்வேறு ஆபீஸில் டாக்ஸ்களைக் கட்டினாலும், ஒரே

கவர்மென்டுக்குப் போகிறது என்ற அறிவு நமக்கு இருக்கிற மாதிரி, பல தேவதைகளை உத்தேசித்து வெவ்வேறு யக்ஞங்கள் செய்தாலும், எல்லாம் ஒரே பரமேச்வரனைச் சேர்கிறது என்ற ஞானத்தோடு, பாவத்தோடு செய்ய வேண்டும். நாம் செலுத்துகிற வரிக் கணக்குகளையும், இப்படி வரி செலுத்துகிற நம்மையுமேகூட ராஜாவுக்கு (அல்லது குடியரசானால் ராஜாங்கத் தலைவருக்கு) தெரியாது. பரமேச்வரனாகிய ராஜாவுக்கோ நம் ஒவ்வொருவர் விஷயமும் நமக்கே தெரிவதைவிட நன்றாகத் தெரியும். யக்ஞ ரூபமான நம்முடைய கர்மா வரியைச் சரியாகக் கொடுக்கிறோமா என்ற கணக்கும் அவனுக்குத் தெரியும். அவனை ஏமாற்ற முடியாது.

ஒவ்வொரு யாக கர்மாவுக்கும் இவ்விதமாக மந்திரம், திரவியம், தேவதை என்று மூன்று உள்ளன. வாயில் மந்திரம், கையில் [ஆஹுதி பண்ண வேண்டிய] திரவியம், மனஸில் தேவதை[யின் தியானம்].

கலியில் ஜீவபலி உண்டா ?

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

கலியில் ஜீவபலி உண்டா ?

ஒரு வாதம் உண்டு. அதாவது:

பூர்வ யுகங்களில் மநுஷ்யர்கள் ரொம்பவும் உயர்ந்த சக்தியோடும் பண்புகளோடும் இருந்தார்கள். மனஸிலே பரமப் பிரியத்தை வைத்துக் கொண்டே லோகக்ஷேமார்த்தமாக அவர்களால் ஜீவபலி கொடுக்க முடிந்தது. அதனால் அவர்கள் அசுவம், கோ இவற்றைக்கூட யக்ஞங்களில் பசு பலியாகத் தந்தார்கள். சிராத்தத்தில் மாம்ஸம் சேர்த்தார்கள். இப்படி மனஸில் பட்டுக்கொள்ளாமல், தேவ சக்திகளை லோகநலனுக்காகப் பிரீதி பண்ணும் பொருட்டே அவர்கள் நடுத்தர வயஸில் கிருஹஸ்தர்களாகக் கர்ம மார்க்கத்தில் இருந்து கொண்டு நிஷ்காம்ய கர்மம் செய்தார்களென்றால், பிற்பாடு விருத்தாப்யத்திலோ ஸகல கர்மாவையும் விட்டு விட்டு பூஜை புரஸ்காரங்களும் ஆசாரங்களுங்கூட இல்லாமல், அப்படியே செயலற்ற ஆத்மாராமர்களான ஸந்நியாஸிகளாக இருக்கவும் அவர்களால் முடிந்தது. அவர்களுக்கு எப்பேர்ப்பட்ட உத்தமப் பண்பு இருந்தது என்றால், ஒரு ராஜ்யத்திலே தன் சகோதரனான ராஜா, வாரிசு இல்லாமல் செத்துப் போய்விட்டால், 'அராஜகம் வராமல் தேசம் க்ஷேமமாக இருக்கவேண்டுமே' என்ற ஒரே எண்ணத்துக்காக, தங்களுக்கென்று காமமே இல்லாமல் தங்களுடைய பிரம்மசரியம் குலையாமலே, ஸஹோதரனின் ஸ்தானத்தில் தாங்களே இருந்துகொண்டு புத்ரோத்பத்தி பண்ணக்கூட முடிந்தது. நம்முடைய கலியுகத்தில் இப்படிப்பட்ட நிஷ்காம்ய கர்ம பாவனையோ, பிரேமையோடேயே கொலைகூடச் செய்கிற பாவனையோ,

ஸகல கர்மாவையும்விட்டு மனஸையும் அடக்கி ஸந்நியாஸியாக இருக்கிற தகுதியோ, ஸ்திரீ ஸங்கத்திலும் பிரம்மசர்ய பாவனை நழுவாத தன்மையோ எவருக்கும் இருக்க முடியாது. அதனால் அச்வமேதம், கோமேதம், சிராத்தத்தில் மாம்ஸம், ஸந்நியாஸம், ஸஹோதரன் ஸ்தானத்தில் புத்ரோத்பத்தி செய்வது ஆகிய இந்த ஐந்தும் கலியில் வர்ஜமாகும் (விலக்கத் தக்கதாகும்) என்பது ஒரு வாதம்:

அச்வாலம்பம் கவாலம்பம் ஸந்-ந்யாஸம் பல பைதருகம் |
தேவரேண ஸுதோத்பத்திம் கலௌ பஞ்ச விவர்ஜயேத் || 1

இந்த ஸ்லோகத்தில் "அச்வாலம்பம்" என்பதற்குப் பதில் "அக்ன்யாதானம்" (அக்னி ஆதானம்) என்று சிலர் சொல்கிறார்கள். இப்படிச் சொன்னால் பசுபலி இல்லாத ஏராளமான யாகங்கள், இஷ்டிகள் இருக்கின்றனவே, அவற்றைக்கூடக் கலியில் செய்யக்கூடாது; அதாவது கலியில் வேள்வி என்பதற்கே total prohibition (முழு விலக்கு) என்று அர்த்தமாகி விடும். ஹவிர் யக்ஞங்களில் முதலாவதாக வருவதே இந்த அக்ன்யாதானம். அதுவே இல்லை என்றால் 'பாக யக்ஞம்' என்ற ஏழு சின்ன யக்ஞங்களைத் தவிர யாக, யக்ஞாதிகளே அடியோடு இல்லை என்று அர்த்தமாகி விடும்.

ஆனால் இப்படிச் சொல்வது சரியல்ல என்பதே பெரியவர்களான சிஷ்டர்களின் அபிப்பிராயம். வேத மார்க்கத்தைப் பிரதிஷ்டை செய்யவே வந்த சங்கர பகவத் பாதாள் "வேதோ நித்யம் அதீயதாம்" (வேதத்தை தினுமும் ஓதுங்கள்) என்று சொன்னதோடு நிறுத்தாமல், அதை

ஓதினால் மட்டும் போதாது, அதில் சொன்ன கர்மங்களை அநுஷ்டிக்க வேண்டும் என்று தொடர்ந்து சொல்கிறார்: தத் உதிதம் கர்மஸ்வநு:ஷ்டீயதாம் என்று. வேதகர்மா என்றால் முக்கியமாக யாகந்தான். அதை விட்டுவிட்டு வேறெந்த வேத கர்மாவைப் பண்ணுவது? ஆதலால் சில விதமான யாகங்களை வேண்டுமானால் கலியில் விடலாமே தவிர, முழுக்க விட்டுவிடக் கூடாது.

அக்னியாதானம் கூடாது; அதாவது எந்த விதமான பெரிய யாகமுமே கூடாது என்று இந்த ச்லோகத்தில் முதலில் சொல்லியிருந்தால், அப்புறம் யாகத்தில் ஒருவிதமான (கோமேதம் என்ற) கவாலம்பம் கூடாது என்று வேறு ஏன் பிரித்துச் சொல்ல வேண்டும்? அக்னியாதானம் போய் விட்டால், அதனுடன் தானே கவாலம்பமும் போய்த்தானே விடும்? ஆனபடியால் சில தினுஸானவை தவிர, மற்ற வேள்விகள் எக்காலத்திலும், எல்லாக் காலத்திலும் நடக்க வேண்டியவைதான்.

தர்ம சாஸ்திரங்களிலிருந்தே இன்னொரு ச்லோகமும் சொல்லப்படுகிறது. இதன்படி, கொஞ்சமாவது கலியில் வர்ணாச்ரம பேதங்கள் இருக்கிறவரையில், கொஞ்சமாவது வேத சப்தம் இருந்து கொண்டிருக்கிற வரையில் (யாவத் வர்ண விபாகோஸ்தி, யாவத் வேத ப்ரவர்த்ததே)2 அக்னியாதானமான யாக கர்மாவும், ஒரு கர்மாவும் இல்லாத ஸந்நியாஸமும் இருக்கலாம் என்று ஏற்படுகிறது. சில வகையான பசுபலி, சிராத்தத்தில் மாம்ஸம், ஸஹோதரனுக்காகப் புத்திரோத்பத்தி என்பவை மட்டும் கலியில் கூடாது.

1 'நிர்ணய ஸிந்து' என்ற தர்ம சாஸ்திரத் தொகுப்பு நூலில் கலியுக விலக்குகள் குறித்த அத்யாயத்தின் மூன்றாம் பிரிவில் முதற் பகுதியில் காணும் மேற்கோள். வியாஸ ஸ்மிருதியில் உள்ளது.

2 தேவலர் எழுதிய தர்ம சாஸ்திர நூலிருந்து மேற்கோளாக 'நிர்ணய ஸிந்து'வில் (முந்தைய அடிக்குறிப்புக் கூறும் இடத்திலேயே) காண்பது.

யாகம் செய்பவர்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

யாகம் செய்பவர்கள்

யாகம் பண்ணுகிறவர்களைப் பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும். எவன் பொருளைச் செலவழித்து தக்ஷிணை கொடுத்து யக்ஞம் செய்கிறானோ அவனுக்கு யஜமானன் என்று பெயர். 'யஜ்' என்றால் 'வழிபடுவது' என்று அர்த்தம். யஜமானன் என்பதற்கு root meaning யக்ஞம் பண்ணுபவன்

என்பதே. இப்போது நம் தமிழ் தேசத்தில் முதலாளியை 'யஜமான்' - எசமான் – என்கிறோம். முதலாளிதானே சம்பளம் தருகிறான்? அதனால் யக்ஞத்திலே தக்ஷிணை கொடுத்து வந்த யஜமானனின் ஸ்தானத்தில் இவனை வைத்து விட்டோம். ஸாதாரண மக்களும் இப்படி முதலாளியை யஜமான் என்பதிலிருந்து, இந்த தேசத்தில் வேதவழக்கம் எவ்வளவு ஆழ வேரோடியிருக்கிறது என்று தெரிகிறது.

இன்னொரு வார்த்தையும் நம் தேசத்தின் ஆழ்ந்த வைதிகப் பிடிமானத்தைக் காட்டுகிறது. தமிழ் நாட்டில் ஒருத்தனுக்கு இலவசமாகச் சாப்பாடு போடுகிற இடத்துக்கு "சத்திரம்" என்று பேர் சொல்கிறோம். வடக்கே போனால், சத்திரம் என்று சொல்லமாட்டார்கள். "தரம்சாலா" என்பார்கள். "தர்ம சாலை" என்பதன் திரிபு அது. இங்கே தக்ஷிணத்தில் மட்டும் ஏன் சத்திரம் என்கிறார்கள்? சத்திரம் என்றால் என்ன? "ஸத்ரம்" என்பதுதான் 'சத்திரம்' என்றாயிருக்கிறது. ஸத்ரம் என்பது ஒரு வகை யாகத்தின் பெயர். அந்த யாகத்திற்கும் மற்ற யாகங்களுக்கும் என்ன வித்யாஸம் என்றால் மற்ற யாகங்களில் யஜமானன் என்கிற ஒருவன் தன் திரவியத்தைச் செலவு செய்து, தக்ஷிணை கொடுத்து, யாகம் பண்ணுகிறான்; ரித்விக்குகள் என்ற பிராம்மணர்கள் (புரோஹிதர்கள்) யஜமானனிடம் தக்ஷிணை வாங்கிக்கொண்டு அவனுக்காக யக்ஞத்தை நடத்தித் தருகிறார்கள். ஸத்ர யாகங்களில் மட்டும் யாகம் பண்ணும் அத்தனை பேருமே யஜமானர்கள். ஒரு யக்ஞத்தினால் லோக க்ஷேமமும், அதில் கலந்து கொள்கிற எல்லோருக்கும் சித்தசுத்தியும், அதைத் தரிசிப்பவர்களுக்குக்

கூட நன்மையும் ஏற்படுகின்றனவென்றாலும், இதனால் விசேஷமாகப் புண்ணியம் அடைவது யஜமானன் தான். ஸத்ர யாகங்களில் ரித்விக்குகளே யஜமானர்களாக இருப்பதால் அத்தனை பேருக்கும் ஸமமான புண்ணியம். 'இந்த யக்ஞம் தன்னுடையது' என்ற உரிமை எல்லோருக்கும் இருக்கிற ஸோஷலிஸ யக்ஞம் இது! இதை வைத்தே, எவரானாலும் உரிமையோடு வந்து, யஜமானர்கள் மாதிரி வயிறாரச் சாப்பிட்டுப் போகிற இடத்துக்கு "சத்திரம்" என்று பேர் வந்துவிட்டது. இந்த வார்த்தையிலிருந்து, சத்திரத்தில் சாப்பிடுகிறவனைவிடச் சாப்பாடு போடுகிறவன் தன்னை உயர்வாக நினைக்கவில்லை என்ற உயர்ந்த பண்பும் தெரிகிறது. தமிழ் நாட்டில் ஸத்ர யாகங்கள் விசேஷமாக நடந்திருக்க வேண்டும் என்றும் தெரிகிறது.

யஜமானன் தரும் தக்ஷிணையை யக்ஞ முடிவிலே பெற்று அவனுக்காக அதை நடத்தித் தருகிற மற்ற பிராம்மணர்களுக்கு ரித்விக் என்று பெயர். ரித்விக்குகளில் ஹோதா, உத்காதா, அத்வர்யு என்ற மூன்று பிரிவுகள் உண்டு. ஹோதா என்பவர் ரிக் வேத மந்திரங்களைச் சொல்லி, தேவதைகளை ஸ்துதித்து ஆஹுதிகளை ஏற்பதற்காக அவர்களைக் கூப்பிடுகிறவர். இவருக்கு உள்ள உயர்ந்த ஸ்தானத்தினால்தான், இன்றைக்கும் யாராவது நல்ல ஸ்தானத்தில் இருந்தால், "ரொம்பவும் ஹோதாவுடன் இருக்கிறார்" என்று சொல்கிறோம். ரிக் வேதத்தில் தேவதாபரமான ஸ்தோத்திரங்கள் நிரம்பியுள்ளன. காரிய ரூபத்தில் செய்யவேண்டிய யக்ஞ முறைகள் யஜுர் வேதத்தில் அதிகமாக இருக்கின்றன. இவற்றின்படி

யக்ஞத்தை நடத்திக் கொடுப்பவர் அத்வர்யு. ஸாம கானம் என்பதாக ஸாம வேதத்தில் உள்ள மந்திரங்களை கானம் செய்வது, தேவதைகளை விசேஷமாக பிரீதி செய்விப்பதாகும். இதைச் செய்பவர் உத்காதா. இப்படி நடக்கிற யாகத்தை ஒருவர் மேற்பார்வை (ஸூபர்வைஸ்) பண்ணுகிறார். அவருக்கு 'பிரம்மா' என்று பெயர்.

பிரம்ம என்றே வேதத்துக்கும் பேர். வேதமான 'பிரம்ம'த்தில் விசேஷமாக ஸம்பந்தப்பட்டவருக்கே 'வேதியர்' என்பது போல 'பிராம்மணர்' என்ற பேரும் ஏற்பட்டது. வேதம் பயில்பவனை பிரம்மசாரி என்பதும் இதனால்தான். இங்கே யாகத்தில் ஸூபர்வைஸருக்கு பிரம்மா என்று பேர். அவர் அதர்வ வேதப்படி இந்தக் காரியத்தைப் பண்ணுகிறார். இப்படியாக, ஹோதா, அத்வர்யு, உத்காதா, பிரம்மா என்ற நாலு பேர் நாலு வேதங்களை represent பண்ணுகிறார்கள். இப்படிச் சொன்னாலும் ஹோதாவுக்கும், அத்வர்யுவுக்கும், உத்காதாவுக்கும், முறையே ரிக், யஜுஸ், ஸாம வேதங்களில் இருக்கிற ஸம்பந்தம், பிரம்மாவுக்கு அதர்வத்தில் இல்லை என்கிற அபிப்ராயமும் பிற்காலத்தில் கொஞ்சம் வந்திருக்கிறது. பிரகிருதத்தில் [நடைமுறையில்] பார்த்தாலும், யக்ஞங்களில் பங்கெடுத்துக் கொள்பவர்கள் மற்ற மூன்று வேதங்களை அத்யயனம் செய்திருக்கிறார்களே தவிர அதர்வ அத்யயனம் செய்தவர்கள் இருக்கவில்லை. அதனால் ரிக், யஜுஸ், ஸாம என்ற மூன்று வேதங்களையும் கொண்டே ஸோமயாகம் முதல் அச்வ மேதம் வரையில் எல்லா யக்ஞங்களும் செய்யப்படுகின்றன என்றும் அபிப்ராயம் இருக்கிறது *.

அதர்வ வேதத்துக்கு என்று தனிப்பட்ட யக்ஞங்கள் இருக்கின்றன. அதர்வத்தில் சொல்லியுள்ள யாகத்தை இந்திரஜித் நிகும்பிலையில் பண்ணினான் என்று வால்மீகி ராமாயணத்தில் சொல்லியிருக்கிறது.

மற்ற மூன்று வேதங்களுமே அதிகம் பிரசாரத்தில் இருப்பவை. நாலு வேதங்கள், சதுர்வேதங்கள் என்று வித்யாஸ்தானங்களில் சொன்னாலும் அதர்வத்தை நீக்கி மற்ற மூன்றையுமே "த்ரயீ" என்ற பெயரில் வேதங்களாக விசேஷித்துச் சொல்வது வழக்கம்.

("சாந்திகம்" என்பதாக சாந்தியையும், "பௌஷ்டிகம்" என்பதாக புஷ்டியையும், சத்ருக்களுக்குக் கெடுதலை உண்டாக்குகிற "ஆபிசாரகம்" எனப்படுபவையுமான மூன்று வித யாகங்கள் அதர்வத்தில் ஏராளமாக உள்ளன.)
* யாகங்களில் பிரம்மாவின் மேற்பார்வைக்கான கர்மா மிகக் குறைவானதே. கர்மாக்கள் செய்கையில், அவ்வப்போது அத்வர்யுவானவர் பிரம்மாவை அனுமதி கேட்பார். அதற்கு பிரம்மா 'ஓம்' என்று சொல்லி அனுமதி தருவார். ஸோமயாகங்களில் பிரம்மாவுக்குச் சற்று அதிகப் பங்கு உண்டு. இவைகளை அதர்வ வேதம் விதிக்கிறது. ஸோமயாகத்தில் ப்ராம்மணாச்சம்ஸி, ஆக்னீத்ரன், போதா என்ற மூன்று ரித்விக்குகளுக்குத் தலைவராக பிரம்மா வருகையில் அவருக்கான காரியங்கள் அதர்வவேத ஸம்ஹிதையில் 19-20 காண்டங்களிலுள்ளன.

அவ்வப்போது யக்ஞத்தில் ஏற்படக்கூடிய தவறுகளுக்கான பிராயச்சித்தத்தைக் கூறுவதும் பிரம்மாவின் பொறுப்பே.

அதர்வ வேதப்படியே பிரம்மாவின் ஸ்தானம் அமைந்திருப்பதாக அவ்வேதமே கூறுகிறது. மற்ற மூன்று வேதங்களைக் கொண்டு மட்டும் யக்ஞம் நடத்த முடியாது என்று அதர்வ வேதத்தின் 'கோபத ப்ராம்மணம்' கூறுகிறது. அதர்வ வேதியாக இல்லாதவன் ப்ரம்மாவாக இருக்கக்கூடாது என்றும் அந்த ப்ராம்மணம் சொல்கிறது.

ஆயினும் எக்காரணத்தாலோ ஆபஸ்தம்பர் முதலிய தர்ம சாஸ்திரக்காரர்கள் அதர்வ வேதத்தை விலக்கி பிரம்மாவின் காரியங்களையும் மந்திரங்களையும் மற்றவர்களே செய்யும்படி இடமளித்து விட்டார்கள். ஆனால் அதர்வவேதி வேண்டாம் என்றே சொல்லி விடவில்லை. (இவ்விவரங்கள் ஸ்ரீ அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாசாரியார் உதவியவை.)

ரிக்-யஜுஸ்-ஸாமம்-அதர்வம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

ரிக்-யஜுஸ்-ஸாமம்-அதர்வம்

"அனந்தா வை வேதா:" – வேதங்கள் எண்ணிறந்தவை என்றாலும், ரிஷிகள் சிலவற்றைத்தான் நமக்குப் பிடித்துக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய இஹ, பர நலனுக்கும் லோக க்ஷேமத்துக்கும் இதுவே போதும். அத்தனை வேதங்களையும் நாம் தெரிந்துகொண்டு பிரம்மா மாதிரிப் பிரபஞ்சங்களை சிருஷ்டிக்க வேண்டுமா என்ன? சிருஷ்டியாகிவிட்ட இந்த லோகம் நன்றாக இருக்கச் செய்வதற்கான அளவுக்கு நமக்கு வேதங்கள் தெரிந்தாலே போதும். இப்படிப் பல வேதங்களை ரிஷிகள் நமக்குத் தந்திருக்கிறார்கள். நாலு வேதம் என்று சொல்கிறோம். ஆனால் இது ஒவ்வொன்றிலும் பலவிதமான பாடங்கள், பாட பேதங்கள் உண்டு. பாடாந்தரம் என்று இதைச் சொல்வார்கள். ஒரே கீர்த்தனமானாலும், ஒரே ராகமானாலும் அதிலே மஹா வைத்யநாதய்யர் பாணி, கோனேரிராஜபுரம் பாணி, சரப சாஸ்திரி பாணி என்று வெவ்வேறு தினுசு இருக்கிறது. சில பாணியில் அதிகம் சங்கதிகள் பாடுகிற மாதிரி, சில ஸூக்தங்கள் ஒரு பாடத்தில் அதிகம் இருக்கும். ஒன்றுக்கொன்று மந்திரங்கள் முன்பின்னாக இருக்கும்.

இந்த பாடாந்தரம் ஒவ்வொன்றையும் ஒரு சாகை என்று சொல்வார்கள். சாகை என்றால் கிளை. வேத விருக்ஷத்தில் இவை ஒவ்வொன்றும் ஒரு கிளை. அநேக கிளைகளுடன் கப்பும் கவடும் விட்டுக்கொண்டு ஒரு மஹா விருக்ஷம் மாதிரி, அடையாறு ஆலமரம் மாதிரி, வேதம் இருக்கிறது. இத்தனை சாகைகள் இருந்தாலும், இவற்றை ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம் என்ற நாலில் ஒன்றை சேர்ந்ததாகவே பிரித்திருக்கிறது.

இப்போது ஆராய்ச்சியாளர்கள் ரிக்வேதம் முந்தியது. யஜுர்வேதம் பிந்தையது என்றெல்லாம் சொன்னாலும், சாஸ்திரப்படி எல்லாம் அனாதிதான். சிருஷ்டித் தொடக்கத்திலேயே பிரம்மாவால் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டதான யக்ஞத்தில் நாலு வேதங்களுமே பிரயோஜனமாகின்றன என்பதைப் பார்க்கும்போது, இந்த முந்தி பிந்தி ஆராய்ச்சிகளெல்லாம் எடுபடவில்லை.

இப்படித்தான் ஒரு வேத சாகை என்றால், அதில் இருக்கப்பட்ட ஸம்ஹிதை, ப்ராம்மணம், ஆரண்யகம் என்ற பகுதிகளில் இதற்கு இது முந்தியது என்கிற ஆராய்ச்சியும் சரியில்லை. ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டது வேதம்; காலாதீதமான நிலையிலிருந்துகொண்டு திரிகாலங்களையும் பார்க்ககூடிய ரிஷிகள் கண்டுபிடித்துக் கொடுத்தது வேதம் என்பதை நம்பிவிட்டோமானால், எந்தக் காலக் கணக்கு ஆராய்ச்சியும் அதற்குப் பொருந்தாது என்று தெரியும்.

ரிக் வேதத்திலேயே பல இடங்களில் யஜுர் வேதம், ஸாம வேதம் முதலியவற்றைப் பற்றிய பிரஸ்தாவம் இருக்கிறது. ரிக்வேதம் பத்தாம் மண்டலத்தில் [தொண்ணூறாவது ஸூக்தமாக] வருகிற புருஷ ஸூக்தத்தில், இப்படி மற்ற வேதங்களைப் பற்றியும் வருகிறது. இதனாலேயே வேதங்களில் ஒன்று முன்னாடி, இன்னொன்று பின்னாடி என்றில்லை என்று தெரிகிறதல்லவா?

ஒவ்வொரு சாகையிலும் ஸம்ஹிதை, பிராம்மணம், ஆரண்யகம் என்ற மூன்று உண்டு என்றேன். பொதுவாக

'வேத அத்யயனம்' என்னும்போது இவற்றில் ஸம்ஹிதா பாகத்தின் அத்யயனம் என்று மட்டுந்தான் அர்த்தம் பண்ணிக்கொள்கிறோம். ரிக்வேத ஸம்ஹிதையை மட்டும் புஸ்தகமாகப் போட்டு, அதற்கு "ரிக் வேதம்" என்று பெயர் கொடுத்து விடுகிறோம். ஏனென்றால் ஸம்ஹிதைதான் ஒரு சாகைக்கு ஆதாரமாக, உயிர் நாடியாக இருப்பது.

ஸம்ஹிதா என்றால், "ஒழுங்குபடுத்திச் சேர்த்து வைத்தது" என்று அர்த்தம். ஒரு வேதத்தின் தாத்பர்யம் என்னவோ, அவ்வளவையும் 'ஸிஸ்டமாடிக்'காகச் சேர்த்து மந்திரங்களாகக் கொடுத்திருப்பதுதான் ஸம்ஹிதை.

ரிக் வேத ஸம்ஹிதை முழுக்கவும் பொயட்ரி (செய்யுள்) ரூபத்தில் இருப்பது. பிற்காலத்தில் ச்லோகம் என்று சொல்லப்பட்ட செய்யுளுக்கே வேதகாலத்தில் 'ரிக்' என்று பெயர். பிற்கால ச்லோகத்திற்கும் வேத ரிக்குக்கும் பெரிய வித்யாஸம் என்னவென்றால் ரிக்குகளைத்தான் ஸ்வரப்படி ஏற்றி, இறக்கி, அல்லது ஸமமாகச் சொல்ல வேண்டியிருப்பது. 'ரிக்' என்றால் ஸ்தோத்திரம் என்றும் அர்த்தம். ரிக் வேத ஸம்ஹிதை முழுக்கவும் இப்படிப்பட்ட ஸ்தோத்திரங்களாகவே இருக்கிறது. பல தேவதைகளைப் பற்றின ஸ்தோத்திரங்கள். ஒவ்வொரு ரிக்கும் ஒரு மந்திரம். ஒரு தேவதையைப் பற்றிப் பல ரிக்குகள் சேரந்து ஒவ்வொரு ஸூக்தமாக ஏற்பட்டிருக்கின்றன.

1 ரிக் வேதத்தில் – அதாவது ஸம்ஹிதையில் – பத்தாயிரத்து சொச்சம் [10170] ரிக்குகள் (மந்திரங்கள்) உள்ளன. [1028 ஸூக்தங்கள்] . ரிக் வேதத்தைப் பத்து மண்டலங்களாகவும், எட்டு அஷ்டகங்களாகவும் இரண்டு

விதத்தில் பிரித்திருக்கிறது. அக்னியைப் பற்றிய ஸூக்தத்தோடு ஆரம்பித்து, அக்னியைப் பற்றிய ஸூக்தத்தோடேயே அது முடிகிறது. வேதங்களுக்குள்ளே தேவதா ஸ்தோத்ர ரூபமாயிருப்பது ரிக் வேதம். அதில் உபக்ரமம் (ஆரம்பம்) , உபஸம்ஹாரம் (முடிவு) இரண்டிலும் அக்னியைச் சொல்லியிருப்பதால், அக்னி உபாஸனைதான் (Fire worship) வேத தாத்பர்யம் என்றே கொள்கிறவர்களும் உண்டு. அக்னி என்றால் ஆத்ம சைதன்யத்தின் பிரகாசம் (ஸத்ய தத்துவத்தைப் பற்றிய அறிவொளி) என்றால், இதுவும் சரிதான். ரிக் வேதத்தின் கடைசி ஸூக்தம் அக்னியைப் பற்றியதாக இருந்தாலும் அதில்தான் இப்போது தேசியகீதம் – National Anthem - என்று சொல்வதற்கு மேலாக, ஸர்வ தேசத்திற்குமான ஒற்றுமைப் பிரார்த்தனை – International Anthem - இருக்கிறது! " எல்லா ஜனங்களும் ஒன்று சேர்ந்து ஏக மனஸாக இணைந்து ஆலோசனை பண்ணட்டும். எல்லோருக்கும் ஒரே லக்ஷ்யமாக இருக்கட்டும். எல்லா ஹ்ருதயங்களும் அன்போடு ஒன்று சேரட்டும். இப்படி ஏகோபித்த எண்ணத்தோடு எல்லாரும் ஆனந்தமாக இருக்கட்டும்" என்று ரிக் வேதம் முடிகிறது.

'யஜ்' - வழிபடுவது – என்ற தாதுவிலிருந்து யஜுஸ், யக்ஞம் என்ற இரண்டும் வந்திருக்கின்றன. 'ரிக்' என்றாலே எப்படி ஸ்தோத்திரம் என்று அர்த்தமோ, அதே மாதிரி 'யஜுஸ்' என்றாலே யக்ஞ ஸம்பந்தமான வழிபாட்டுக் காரியக்ரமத்தை விவரிப்பது என்று அர்த்தம் ஆகிறது. இதற்கேற்றாற்போல் ரிக்வேதத்திலுள்ள ஸ்துதி ரூபமான மந்திரங்களை யக்ஞம் என்கிற காரியத்தில் பொருத்திக்

கொடுப்பதே (practical application) யஜுர்வேதத்தின் முக்கியமான லக்ஷ்யமாக இருக்கிறது. ரிக்வேதத்தில் உள்ள பல மந்திரங்கள் இதிலும் கூறப்படுகின்றன. அதோடு கூட, ப்ரோஸில் (உரை நடையில்) யக்ஞம் முதலான வேத கர்மாநுஷ்டானங்களைச் சொல்கிறது. வாயால் ஸ்தோத்திரம் செய்ய ரிக் வேதம் உபகரிக்கிறது. காரியத்தில் வழிபாடு பண்ண யஜுர்வேதம் முக்கியமாக உபகாரம் செய்கிறது.

ஒவ்வொரு வேதத்திலும் பல சாகைகள் இருக்கிற மாதிரி மட்டும் இல்லாமல், யஜுர் வேதம் தனக்குள்ளேயே நிரம்ப மாறுபாடுகள் உள்ள இரண்டு தனி வேதங்களாகவே பிரிந்திருக்கிறது. இந்தப் பிரிவுகளுக்கு சுக்ல யஜுர் வேதம், கிருஷ்ண யஜுர் வேதம் என்று பெயர். 'சுக்லம்' என்றால் வெளுப்பு. 'கிருஷ்ணம்' என்றால் கறுப்பு. சுக்ல யஜுர் வேத ஸம்ஹிதைக்கு "வாஜஸநேயி ஸம்ஹிதா" என்றும் பெயருண்டு. "வாஜஸநி" என்பது சூரியனுடைய பெயர். சூரியனிடமிருந்தே யாக்ஞவல்கிய ரிஷி இந்த ஸம்ஹிதையை உபதேசிக்கப் பெற்று, லோகத்துக்குக் கொண்டு வந்ததால், இதற்கு வாஜஸநேயி ஸம்ஹிதா என்று பேர் ஏற்பட்டது.

இதைப்பற்றி ஒரு பெரிய கதை உண்டு. சுருக்கமாகச் சொன்னால், யாக்ஞவல்கியருக்கு முன்னால் யஜுர் வேதம் ஒன்றாகத்தான் லோகத்துக்கு வெளி வந்திருந்தது. அந்த யஜுர் வேதத்தை வைசம்பாயனரிடமிருந்து யாக்ஞவல்கியர் கற்றுக்கொண்டார். அப்புறம் வைசம்பாயனருக்கும் யாக்ஞவல்கியருக்கும் மனஸ்தாபம் உண்டான போது, குருவானவர் சிஷ்யரிடம், "நான் கற்றுக்

கொடுத்ததை எல்லாம் திரும்ப கக்கி விடு" என்றார். அவர் சொல்வது நியாயம்தான் என்று அப்படியே யாக்ஞவல்கியர் கக்கிவிட்டு, சூரியனை குருவாக ஏற்றுக்கொண்டு சரணாகதி செய்தார். அனந்தமான வேதங்களில் அதுவரை லோகத்துக்கு வராதிருந்த இன்னொரு வித யஜுர் வேதத்தை சூரிய பகவான் அவருக்கு உபதேசித்தார். அது வாஜஸநேயி என்றும், சுக்ல யஜுஸ் என்றும் பேர் அடைந்தது. இது 'சுக்லம்' என்பதால், ஏற்கெனவே வைசம்பாயனர் உபதேசித்தது, இதற்கு மாறாக 'கிருஷ்ண' யஜுர்வேதம் என்று பெயர் பெற்றது.

கிருஷ்ண யஜுர் வேதத்தில் ஸம்ஹிதை, பிராம்மணம் என்று முழுக்கத் தனித்தனியாகப் பிரிக்காமல், ஸம்ஹிதா மந்திரங்களுக்கு அங்கங்கேயே ப்ராம்மண பாகங்களைச் சேர்த்திருக்கிறது. கலந்து போனதை 'கிருஷ்ண' என்று சொல்வது வழக்கமாதலாலேயே இந்த வேதத்திற்கு அப்படிச் பெயர் வந்ததாகவும், கலக்காமல் தனித்தனியே ஸ்வச்சமாயிருப்பதை 'சுக்லம்' என்று சொல்லும் வழக்கப்படி மற்றது அந்தப் பேர் பெற்றதாகவும் சொல்கிறார்கள்.

அத்தனை தேவதைகளுக்குமான ஸ்தோத்திர மயமாக இருப்பது ரிக்வேதத்தின் பெருமை. அதோடு சமூக வாழ்க்கை முறைகளையும் அதுவே நன்றாக எடுத்துச் சொல்கிறது என்று அறிஞர்கள் கொண்டாடுகிறார்கள். உதாரணமாக ஸூரியனுடைய புத்திரியின் கல்யாணத்தைப்பற்றி அது சொல்லியிருப்பதை அனுஸரித்துத்தான் விவாஹச் சடங்கே உருவாகியிருக்கிறது. புரூரவஸ்- ஊர்வசி ஸம்வாதம்

[உரையாடல்] போன்ற பல நாடக விசேஷமுள்ள பகுதிகளும் ரிக்வேதத்தில் உண்டு. பிற்காலத்தில் காளிதாஸாதிகள் இவற்றை விஸ்தரித்து எழுதியிருக்கிறார்கள். உஷஸ் [விடியற்காலையின் அதிதேவதை] பற்றிய வர்ணனை போன்ற ரிக் வேதப் பகுதிகளை, மிக உத்தமமான கவிதை என்று ரிஸிகர்கள் கொண்டாடுகிறார்கள்.

வேதங்களில் முதலாவதாக ரிக் வேதத்தை வைத்ததாலேயே, அதற்கு ஒரு ஏற்றம் இருக்கத்தானே வேண்டும்? யஜுர் வேதத்தில் உள்ள கர்மா, ஸாம வேதத்தில் பண்ணப்பட வேண்டிய (ஸாம) கானம் இவற்றிற்கும் தாய்ச் சரக்கு ரிக்வேத ரிக்குகள்தான்.

கர்மயோகத்தை நன்றாக அமைத்துக் கொடுத்திருப்பது யஜுர் வேதத்தின் பெருமை. தர்ச பூர்ண மாஸம், ஸோம யாகம், வாஜபேயம், ராஜஸூயம், அச்வமேதம் முதலான அநேத யக்ஞங்களைப் பற்றியும், பலவிதமான ஸத்ர யாகங்களைப் பற்றியும் விரிவாக நமக்குத் தெரிவிப்பது கிருஷ்ண யஜுஸில் உள்ள தைத்ரீய ஸம்ஹிதைதான். அதோடு கூட ரிக் வேதத்தில் இல்லாத சில உயர்ந்த ஸ்தோத்திர பூர்வமான மந்திரங்களும் இதில்தான் வருகின்றன. உதாரணமாக, இப்போது பெரும்பாலும் வழக்கில் சொல்லப்படும் ஸ்ரீருத்ரம் யஜுர் வேதத்திலிருந்து எடுத்ததுதான். ரிக் வேதத்திலும் பஞ்சருத்ரம் என்று ஐந்து ஸூக்தங்களை எடுத்திருந்தாலும், இன்று 'ஸ்ரீருத்ரம்' என்ற மாத்திரத்தில் யஜுர் வேதத்தில் வருவதைத்தான் குறிப்பிடுவதாயிருக்கிறது. இதனால்தான் பரம சாம்பவரான அப்பய தீக்ஷிதர் தாம் யஜுர் வேதத்தில்

பிறக்காமல் போனதற்காக விசனப்படுகிறார்! அவர் ஸாம வேதி.

இன்றைக்கு அதிகம் பேர் அநுஸரிப்பது யஜுர் வேதத்தைத்தான். யஜுர் வேதிகள் தான் மெஜாரிட்டி. வடக்கே இருப்பவர்களில் பெரும்பாலோர் சுக்ல யஜுர் வேதிகளாகவும், தெற்கத்திக்காரர்களில் பெரும்பாலோர் கிருஷ்ண யஜுர் வேதிகளாகவும் இருக்கிறார்கள். உபாகர்மா (ஆவணி அவிட்டம்) என்று கவர்மெண்டில் லீவ் விடுவதானால்கூட ரிக்வேதிகளுக்கோ, ஸாம வேதிகளுக்கோ என்றைக்கு உபாகர்மமோ அன்றைக்கு விடுவதில்லை; யஜுர் உபாகர்மாவுக்குத்தான் லீவ் விடுகிறார்கள். யஜுர்வேதிகள் மெஜாரிட்டியாக இருப்பதாலேயே இப்படியிருக்கிறது.

ரிக் வேதத்திலுள்ள 'புருஷ ஸூக்தத்'திலேயே சில மாறுதல்களோடு யஜுர் வேதத்திலும் வருகிறது. இன்று 'புருஷ ஸூக்தம்' என்றால் பொதுவாக யாஜுஷமானது (யஜுர் வேதத்திலுள்ளது) தான் என்றாயிருக்கிறது.

அத்வைதிகள் விஷயத்திலும் யஜுர் வேதத்துக்கு ஒரு விசேஷம் இருக்கிறது. எந்த ஸித்தாந்தமானாலும் அதற்கு ஸூத்ரம், பாஷ்யம், வார்த்திகம் என்ற மூன்று இருக்கவேண்டுமென்பது வித்வான்கள் சொல்வார்கள். ஸூத்ரம் என்பது ஸித்தாந்ததத்தை ரத்தினச் சுருக்கமாகச் சொல்வது. பாஷ்யம் என்பது அதற்கு விரிவுரை. இந்த விரிவுரையையும் ஸாங்கோபாங்கமாக விஸ்தரித்து விளக்குவதுதான் வார்த்திகம். அத்வைத ஸித்தாந்தத்தில் "வார்த்திககாரர்" என்றால் ஸுரேச்வராச்சார்யாள்

என்பவரையே குறிக்கும். அவர் எந்த பாஷ்யத்துக்கு வார்த்திகம் செய்தார்? உபநிஷத்துக்களை ஸூத்திரத்தின் ஸ்தானத்தில் வைத்தால், ஆசார்யாள் (சங்கரர்) அந்த உபநிஷத்துக்களுக்கு பாஷ்யம் பண்ணினார். பிரம்ம ஸூத்ரம் என்பதற்கும் பாஷ்யம் செய்தார். இந்த பாஷ்யங்களை மேலும் விளக்கியே, ஆசார்யாளின் நேர் சிஷ்யரான ஸுரேச்வரர் வார்த்திகம் எழுதினார். அப்படி எழுதும்போது, ஆசார்யாள் செய்த பத்து உபநிஷத பாஷ்யங்களையும் எடுத்துக் கொள்ளாமல், அவற்றில் இரண்டை மட்டுமே எடுத்துக் கொண்டு, அவற்றுக்கு வார்த்திகம் எழுதினார். அந்த இரண்டு, தைத்ரீய உபநிஷத்தும், பிருஹதாரண்ய உபநிஷத்தும் ஆகும். இவற்றில் தைத்திரீயம் கிருஷ்ண யஜுஸைச் சேர்ந்தது; பிருஹதாரண்யகம் சுக்ல யஜுஸைச் சேரந்தது. ஆக இரண்டுமே யஜுர் வேதம்தான்.

தசோபநிஷத்துக்கள் என்கிற முக்கியமான பத்து உபநிஷத்துக்களில் முதலாவதான 'ஈசாவாஸ்யம்', முடிவான 'ப்ருஹதாரண்யகம்' இரண்டுமே சுக்ல யஜுர் வேதத்தில் உள்ளவையே என்பதும் இந்த வேதத்துக்கு ஒரு பெருமை.

'ஸாமம்' என்றால் மனஸை சாந்தப்படுத்துவது, சந்தோஷப்படுத்துவது என்று அர்த்தம். ஸாம–தான–பேத–தண்டம் என்கிறபோது, முதலில் எதிரியைக்கூட அன்பினாலே ஸ்நேஹிதமாக்கிக் கொள்வதற்கு 'ஸாமம்' என்று பெயர் இருக்கிறது. இப்படி தேவ சக்திகளையும் பரமாத்மாவையும் நமக்கு அந்நியோந்நியமாகப் பண்ணித் தருவது ஸாம வேதம். ஒருத்தரை சந்தோஷப்படுத்த

என்ன வழி? ஸ்தோத்திரம் செய்தால் அது சந்தோஷப்படுத்துகிறது. அல்லது பாட்டு பாடினால் சந்தோஷப்படுத்துகிறது. ஸ்தோத்திரத்தையே பாட்டாகவும் கானம் செய்து விட்டால் இரட்டிப்பு ஸந்தோஷம் உண்டாக்கும் அல்லவா? இம்மாதிரிதான் ரிக் வேதத்தில் ஸ்துதிகளாக இருக்கப்பட்ட மந்திரங்களில் பலவற்றையே ஸாம கானமாக ஆக்கித் தருவது ஸாம வேதம். ரிக் வேத மந்திரமேதான். ஆனால் ரிக்கில் முன்னே சொன்ன உதாத்தம், அநுதாத்தம் முதலான ஸ்வரங்கள் மட்டுமே இருக்க ஸாமத்திலோ கானமாகவே அவற்றை நீட்டி நீட்டிப் பாட விதிகள் செய்திருக்கிறது. பிற்பாடு உண்டான ஸப்த ஸ்வர ஸங்கீதத்துக்கு மூலம் ஸாம கானம்தான். ஸாமகானத்தினால் ஸகல தேவதைகளும் பிரீதி அடைந்து விடுகிறார்கள். யக்ஞங்களில் ஆஹுதி தருவது மட்டுமின்றி, உத்காதா என்பவர் ஸாம கானம் பண்ணுவதாலேயே தேவதாநுக்கிரஹம் ஸித்திக்கிறது 2.

ஸோம யக்ஞங்கள் என்பதாக, ஸோம ரஸத்தைப் பிழிந்து ஆஹுதி கொடுத்துப் பண்ணுகிற யக்ஞங்களுக்கு ஸாமகானம் ரொம்ப முக்கியமாகும்.

ரிக்வேத மந்திரங்களேதான் என்றாலும், ஆத்ம சிரேயஸையும் தேவதா ப்ரீதியையும் விசேஷமாக அளிக்க வல்ல கானரூபத்தில் அமைந்துவிட்டதால், ஸாம வேதத்துக்குத் தனிச் சிறப்பு சொல்லப்படுகிறது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே, கீதையில் "வேதானாம் ஸாமவேதோஸ்மி" என்கிறார்: "வேதங்களுக்குள் ஸாமவேதமாக இருக்கிறேன்" என்கிறார். நல்லது, கெட்டது எல்லாமே அவர்தான். இருந்தாலும் தன்னுடைய

தெய்வீகம் விசேஷமாகப் பிரகாசிக்கிற இடங்களை அர்ஜுனனுக்குச் சொல்லிக் கொண்டு வரும் போது, ஸாம வேதத்தையே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். அம்பாளுக்கு "ஸாம கான ப்ரியா" என்றே லலிதா ஸஹஸ்ர நாமத்தில் ஒரு பேர் வருகிறது. 'ரிக்வேத ப்ரியா', 'யஜுர்வேத ப்ரியா' என்று இல்லை. சியாம சாஸ்திரிகளும் "ஸாம கான விநோதினி" என்று மீனாக்ஷியைப் பாடியிருக்கிறார். சிவ அஷ்டோத்திரத்தை எடுத்துக் கொண்டால், அங்கேயும் "ஸாம ப்ரியாய நம:" என்று வருகிறது. 'சந்தோக சாமம் ஓதும் வாயான்' என்று தேவாரமும் போற்றுகிறது. ஈச்வரன், அம்பாள், விஷ்ணு என்று மூன்று – பேரையும் 'ரத்ன த்ரயம்' என்பதாக, தேவதைகளின் உச்சஸ்தானத்தில் இருக்கப்பட்டவர்களென்று அப்பய தீக்ஷிதர் நிர்த்தாரணம் பண்ணியிருக்கிறார் (நிலை நாட்டியிருக்கிறார்) . அப்படிப்பட்ட மூவருக்கும் ஸாம வேத ஸம்பந்தமே விசேஷமாகச் சொல்லியிருக்கிறது.

அதர்வன் என்றால் புரோஹிதர் என்று அர்த்தம். அந்தப் பெயரிலேயே ஒரு ரிஷி இருந்தார். அதர்வா என்ற அந்த ரிஷியின் மூலம் பிரகாசமானது அதர்வ வேதம். அதிலே பலவிதமான ஆபத்துக்களைப் போக்கிக் கொள்வதற்கும், சத்ருக்களை அழிப்பதற்கும் மந்திரங்கள் இருக்கின்றன. ப்ரோஸ், பொயட்ரி இரண்டும் கலந்து இருக்கின்றன. மற்ற வேத மந்திரங்களுக்கும் இந்த பிரயோஜனம் உண்டு. ஆனால் மற்ற வேதங்களில் இல்லாத அநேக தேவதைகள், இன்னம் கோரமான பல வித ஆவிகள் இவற்றைக் குறித்தும் மந்திரங்கள் அதர்வத்தில்தான் இருக்கின்றன.

மாந்திரீகம் என்று இப்போது சொல்கிற அநேக விஷயங்கள் அதர்வ வேதத்திலிருந்து வந்தவைதான்.

ரொம்ப உயர்ந்த தத்வங்களைக் கொண்ட மந்திரங்களும் அதர்வத்தில் இருக்கின்றன. லோகத்தில் இருக்கப்பட்ட ஸ்ருஷ்டி விசித்ரத்தை எல்லாம் கொண்டாடுகிற 'ப்ருத்வீ ஸூக்தம்' இந்த வேதத்தில் தான் வருகிறது.

யக்ஞத்தை மேற்பார்வை இடுகிற பிரம்மாவை அதர்வ வேதத்துக்குப் பிரதிநிதியாகச் சொல்லியிருப்பது இதற்கு ஒரு பெருமை. இதன் ஸம்ஹிதா பாகத்தின் அத்யயனம் வடக்கே ரொம்ப ரொம்பத் தேய்ந்து போய் தெற்கே அடியோடு இல்லாமல் போய்விட்டாலும் பிரஸித்தமான பத்து உபநிஷத்துக்களுக்குள், 'பிரச்னம்', 'முண்டகம்', 'மாண்டூக்யம்' என்ற மூன்று உபநிஷத்துக்கள் அதர்வ வேதத்தைச் சேர்ந்தனவாகவே உள்ளன.
முமுக்ஷுவானவன் (ஞான சாதகன்) மோக்ஷம் பெறுவதற்கு மாண்டூக்ய உபநிஷத் ஒன்றே போதும் என்று வசனம் இருக்கிறது. அப்படிப்பட்ட உபநிஷத் அதர்வத்தைச் சேர்ந்ததாகவே இருக்கிறது.

பிற்காலத்தில் அதர்வ அத்யயனம் விட்டுப் போனாலும், நீண்ட காலம் அது வழக்கில் இருந்திருக்கிறது என்று கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது. திண்டிவனத்திற்குப் பக்கத்தில் பேரணிக்குக் கிட்டே எண்ணாயிரம் என்ற ஊரிலும், காஞ்சீபுரத்திற்குப் பக்கத்திலுள்ள வாலாஜாபாத் ஸமீபத்திலேயும் கிடைத்திருக்கிற கல்வெட்டுக்களில், ஆங்காங்கே இருந்த பெரிய வித்யாசாலைகளைப் பற்றித் தகவல்கள் இருக்கின்றன. இவற்றைப் பார்த்தால், பிற்காலச்

சோழர் ஆட்சி காலத்திலுங்கூடத் தமிழ் தேசத்தில் அதர்வ வேத அத்யயனம் இருந்திருக்கிறது என்று தெரிகிறது.

வடக்கே ஒரிஸாவில் இருக்கும் பிராமணர்களில் பதினெட்டுப் பிரிவுகள் உள்ளன. அவர்களில் 'ஆதர்வணிகர்' என்றே ஒரு பிரிவுக்குப் பெயர். அதர்வ வேதிகள் என்பதே இதற்கு அர்த்தம். இப்போதும் குஜராத், ஸௌராஷ்டிரம், கோசலம் முதலான தேசங்களில், ரொம்பவும் அபூர்வமாக அதர்வ வேதிகள் இருக்கிறார்கள் 3.

மந்திரங்களுக்குள் மஹா மந்திரமாக விளங்கும் காயத்ரி மூன்று வேத ஸாரம் என்று கருதப்படுகிறது. மூன்று வேதம் என்பதால் இங்கே அதர்வத்தைச் சேர்க்கவில்லை என்றாகிறது. இதனால் அதர்வ வேதத்தை அத்யயனம் பண்ணுமுன் புனருபனயனம் (இரண்டாம் முறை பூணூல் கல்யாணம்) பண்ணவேண்டும் என்ற அபிப்பிராயமும் இருக்கிறது. பொதுவாக பிரம்மோபதேசத்தில் உபதேசிக்கப்படும் காயத்ரிக்கு "த்ரிபதா காயத்ரி" என்று பெயர். அது மூன்று பாதம் உடையதாக இருப்பதால் இப்படிப் பெயர். ஒவ்வொரு பாதமும் ஒரு வேதத்தின் ஸாரமாகும். அதர்வ வேதத்துக்கு வேறு காயத்ரி உண்டு. இப்போது அதர்வ வேதிகள் என்று யாரும் இல்லாதபோது, அந்த வேதத்தை மற்ற வேதக்காரன் அத்யயனம் பண்ண வேண்டுமானால் இன்னொரு முறை உபநயனம் செய்து கொண்டு அதர்வ காயத்ரியை உபதேசம் வாங்கிக் கொண்டு, பிறகு அந்த வேதத்தைக் கற்க வேண்டும். மற்ற மூன்று வேதங்களைச் சேர்ந்தவர்கள் அந்த மூன்றில் மற்ற இரண்டை அத்யயனம் பண்ண வேண்டுமானால், இப்படி புனருபனயனம் செய்து கொள்ள வேண்டியதில்லை.

ஏனென்றால், இந்த த்ரிவேதிகளுக்கும் பொதுவாக ஒரே காயத்ரி இருக்கிறது.

1 நான்கு வேத ஸம்ஹிதைகளும் சேர்ந்து 20,500 மந்திரங்கள்.

2 ஸாமவேத ஸம்ஹிதையில் ரிக் வேத ஸ்தோத்திரங்கள் உள்ள 'அர்ச்சிக' என்ற பாகமும், 'கானம்' என்ற பாகமுமாக இரண்டு பிரிவுகள் உள்ளன. கானங்களில் க்ராம கானம், அரண்ய கானம், ஊஹ கானம், ஊஹ்ய கானம் என்ற நாலுவகை உள்ளன.

3 ஸ்ரீ பெரியவர்கள் மேற்கொண்ட நன்முயற்சிகளால் அதர்வ வேத அத்யயனம் மீளவும் பொலிவு பெற வாய்ப்புள்ளது. தமிழக வித்யார்த்திகளும் குஜராத்தில் உள்ள ஸினோருக்குச் சென்று அதர்வ வேதப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

பொதுவான பெருங் கருத்து

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

பொதுவான பெருங் கருத்து

இப்படி வேதங்கள் பலவாக இருந்தாலும், அதில் ஒவ்வொன்றைச் சேர்ந்தவர்களிடையே ஆசாரங்களில் சில வித்தியாஸங்கள் இருந்தாலும், எல்லா வேதங்களும் ஒரே லக்ஷ்யத்தை உடையவைதான். ஸமஸ்த லோகத்திற்கும், ஸகல ஜீவ ஜந்துக்களுக்கும் க்ஷேமத்தைக் கோருவதும், அவனவன் ஆத்மாவை அபிவிருத்தி பண்ணிக்கொண்டு, ஸத்ய தத்வத்தோடு சாச்வதமாகச் சேர்ந்து விடுவதும்தான் எல்லா வேதங்களுக்கும் பொதுவான லக்ஷ்யம்.

வேதங்களில் பொதுவான இன்னொரு பெருமை, 'இது ஒன்றுதான் வழி', 'இது ஒன்றுதான் தெய்வம்' என்று அது சொல்லாமல், சிரத்தையோடு எந்த மார்க்கத்தை அனுஸரித்து, எந்தத் தேவதையை எப்படி உபாஸித்தாலும், அதுவே சத்தியமான ஒரு வழியில் கொண்டு விட்டுவிடும் என்பதுதான். வேதம்தவிர இந்த மாதிரிப் பல வழிகளை ஆதரித்துப் பேசுகிற மதப் பிரமாண நூல் வேறெதுவுமே லோகத்தில் இருக்கவில்லை. தன் வழி ஒன்றே மோக்ஷ மார்க்கம் என்றுதான் அந்தந்த மதத்தின் மூலநூலும் சொல்லும். ஒரே ஸத்தியத்தைப் பல பேர் பல தினுசாகக் கண்டு கொள்ளலாம் என்று விசால மனப்பான்மையோடு சொல்வது வேதம் மட்டும்தான்.

பிராம்மணம், ஆரண்யகம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

பிராம்மணம், ஆரண்யகம்

இதுவரைக்கும் நான் வேதம் என்று சொன்னதெல்லாம், அநேகமாக ஒரு வேத சாகையின் ஸம்ஹிதா பாகத்தைத்தான். ஸம்ஹிதைதான் வேதத்தின் main text. இதைத் தவிர, ஒவ்வொரு வேதத்திலும் ப்ராஹ்மணம் என்று ஒரு பாகமும், ஆரண்யகம் என்று ஒரு பாகமும் உண்டு.

ப்ராஹ்மணம் என்ற பாகத்தில் வைதிகமான கர்மாக்கள் இன்னின்ன வென்று விதிக்கப்படுகின்றன. அவற்றை இப்படி இப்படிச் செய்யவேண்டும் என்றும் அவற்றில் விளக்கியிருக்கிறது. வேத ஸம்ஹிதையில் வருகிற மந்திரங்களை யக்ஞம் என்ற காரியமாக்குகிறபோது இன்னின்ன வார்த்தைக்கு இப்படி அர்த்தம் பண்ணிக்கொள்ளவேண்டும் என்றும் பிராம்மணத்தில் சொல்லியிருக்கும். யக்ஞாதி கர்மாக்களைப் பண்ணுவதற்கு இவை guide-book என்றும் சொல்லலாம்.

ஆரண்யகம் என்பதில் 'ஆரண்ய' என்ற வார்த்தை இருக்கிறது. தண்டகாரண்யம், வேதாரண்யம் என்றெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். அரண்யம் என்றால் காடு. வேத ஸம்ஹிதையிலோ, பிராம்மணத்திலோ "வீட்டை விட்டுக் காட்டுக்குப் போ" என்று சொல்லியிருக்கவில்லை. வீட்டிலே வாழ்ந்து கொண்டு கிருஹஸ்த தர்மத்தை [இல்லற வாழ்நெறியை] நடத்திக் கொண்டு வரும்போது பண்ண வேண்டியதுதான் யக்ஞம் முதலான வைதிக கர்மாநுஷ்டானங்கள். ஆனால், இவற்றால் சித்த சுத்தி ஏற்பட்டபின், காட்டுக்குப் போய் மூக்கைப் பிடித்துக் கொண்டு உட்காரத்தான் வேண்டும். அதற்கான பக்குவத்தை அடைவதற்குத்தான் அத்யயனமும், யக்ஞ கர்மானுஷ்டானமும் பூர்வாங்கம். காட்டுக்கு ஓடுவதற்குத் தயார் பண்ணுவதுதான் ஆரண்யகம்.

ஸம்ஹிதையில் மந்திரமாகவும், பிராம்மணத்தில் கர்மாவாகவும் இருப்பதன் தத்வார்த்தம் என்னவோ, உள்பொருள் என்னவோ அந்த ஸித்தாந்தங்களை, ஃபிலாஸஃபியை, விளக்குவதற்கே ஆரண்யகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மறை பொருளாகவும், உருவகமாகவும் வேதத்தில் சொல்லியிருப்பதை ஆரண்யகம் விண்டு விளக்கும். யாகம் பண்ணுவதைவிட அதன் உள்ளர்த்தத்தை விசாரணை செய்வது தான் ஆரண்யகங்களுக்கு முக்கியம். காட்டிலே (ஆரண்யகங்களிலே) ஆசிரமவாஸிகள் சேர்ந்து பண்ணின இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் ரூபமாகவே ஆரண்யகங்களை இக்கால அறிவாளிகள் கருதுகிறார்கள்.

ஆரண்யகமாகவும் உபநிஷத்தாகவும் சேர்ந்து இருக்கப்பட்ட ப்ருஹதாரண்யக உபநிஷத், அச்வமேத யாகத்தைப் பற்றிய இப்படிப்பட்ட தத்வ விளக்கத்தோடுதான் ஆரம்பிக்கிறது.

உபநிஷதங்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

உபநிஷதங்கள்

இந்த ஆரண்யகங்களுக்கு முடிவிலேதான் உபநிஷதங்கள் வருகின்றன. ஸம்ஹிதை மரம் என்றால், அதற்கு பிராம்மணம் பூ, ஆரண்யகம் காய், உபநிஷதந்தான் முடிவான பழம் (பலம்–பலன்). ஞானமார்க்கத்திலே ஜீவாத்ம பரமாத்ம அபேதத்தை ஸாதித்துக் கொடுப்பதற்காக ஏற்பட்ட நேர் ஸாதனம் உபநிஷத்துதான். இதில் நம்மைச் சேர்ப்பதற்கே ஸம்ஹிதையும், பிராம்மணமும், ஆரண்யகமும் இருக்கின்றன.

உபநிஷத்துக்களில் பலதரப்பட்ட வித்யைகள், யக்ஞங்கள், தேவதா உபாஸனைகள் அங்கங்கே சொல்லியிருந்தாலும், முக்கியமாக அது தத்வ விசாரம்தான். கர்மா எல்லாம் விட்டுப் போகிற நிலையைச் சொல்வதுதான் உபநிஷதங்களின் பரம தாத்பரியம்.

இதை வைத்துத்தான் வேதத்தையே கர்மகாண்டம், ஞான காண்டம் என்று இரண்டாக பிரித்திருக்கிறது. இதையே (முறையே) பூர்வ மீமாம்ஸை, உத்தர மீமாம்ஸை என்று சொல்வதுண்டு.

கர்ம காண்டத்தை ஆராய்ச்சி பண்ணி, அதுவே முடிந்த முடிவான பலன் என்று ஜைமினி மஹரிஷி செய்திருக்கிற சாஸ்திரத்துக்குப் "பூர்வ மீமாம்ஸை" என்று பெயர். இம்மாதிரியே ஞானகாண்டத்தை விசாரித்து அதையே பரம தாத்பரியமாக முடிவு பண்ணி, வியாஸர் செய்த பிரம்ம ஸூத்ரம் "உத்தர மீமாம்ஸை" எனப்படுகிறது. கர்ம காண்டத்தோடு பார்க்கும்போது, உபநிஷத் பாகமான ஞானகாண்டம் ரொம்பச் சின்னதுதான். இதற்கேற்பவே ஜைமினி ஸூத்ரம் ஆயிரம் ஸெக்ஷன் கொண்ட, "ஸஹஸ்ர அதிகரணி"யாகவும், பிரம்ம ஸூத்ரம் இருநூறுக்கும் குறைவான அதிகரணமுள்ளதாகவும் இருக்கின்றன. ஒரு விருக்ஷத்தில் இலைகள் நிறைய இருந்தாலும் புஷ்பமும் பழமும் கொஞ்சமாகவே இருக்கிறாற்போல், வேத விருக்ஷத்தில் கர்மகாண்டம் நிறையவாகவும், உபநிஷத் பாகம் கொஞ்சமாகவும் இருக்கிறது.

உபநிஷத்தின் தத்வ விசாரம் என்பது இதர தேசங்களில் ஃபிலாஸஃபிகார்கள் புத்தி பூர்வமாக ரொம்பவும் ஆழமாக ஸத்யத்தை ஆராய்கிற மாதிரி மட்டும் முடிந்து விடவில்லை. புத்தியினால் ஆராய்ந்ததை அநுபவத்தில் தெரிந்து கொள்வதுதான் முக்கியம். ஹல்வா தித்திக்கிறது என்று தெரிந்து கொண்டால் மட்டும் என்ன பிரயோஜனம்? அதைச் சாப்பிட்டுத் தித்திப்பை அநுபவிக்க வேண்டும். மற்ற ஃபிலாஸஃபிகளுக்கு இல்லாமல் உபநிஷதங்களுக்கு மாத்திரம் இருக்கிற பெருமை, அது மந்திராக்ஷரங்களைக் கொண்டதாதலால், எந்த தத்வங்களைச் சொல்கிறதோ அதை மந்திர சப்தத்தின் சக்தியால் அநுபவத்துக்குக் கொண்டு வந்து கொடுத்து விடுகிறது. மற்ற தேசத்து ஃபிலாஸஃபிகள் போல் வெறும் அறிவாராய்ச்சியாக அதை அநுபவத்தில் உறைக்கும்படியாகப் பண்ணுவதற்கு எப்பேர்ப்பட்ட வாழ்முறை வேண்டுமோ அப்பேர்ப்பட்ட தர்மங்கள் நிறைந்த ஒழுக்கமான வாழ்க்கையை வேதத்தின் கர்மகாண்டம் சொல்லியிருக்கிறது. அதன்படி வாழ்ந்து, தன்னைச் சுத்தப் படுத்திக் கொண்டு, அப்புறம் கர்மாக்களை விட்டுவிட்டு, இந்த உபநிஷத்துக்களை ஒருத்தன் அநுஸந்தானம் பண்ணும்போது, அதிலுள்ள தத்வங்கள் வெறும் புத்திவாதமாக இல்லாமல் அவனுடைய அநுஷ்டானத்திலேயே ஜீவனோடு பிரகாசிக்கின்றன. இந்த தத்வங்களுக்கெல்லாம் உச்சியில்தான் ஜீவப் பிரம்ம அபேதம் இருக்கிறது.

பரமாத்மாவும் ஜீவாத்மாவும் இரண்டறக் கலக்கும் அந்த உச்சஸ்தானத்தைப் பிடிப்பதற்காகத்தான், கர்மாக்களால் பக்குவம் பெற்ற ஒருத்தன், ஸகல கர்மங்களையும்

விட்டுவிட்டு ஸந்நியாஸம் வாங்கி கொள்வது. அப்படி வாங்கி கொள்கிற ஸமயத்தில் அவனுக்கு மஹா வாக்யங்கள் என்று நாலு மந்திரங்கள் உபதேசிக்கப் படுகின்றன. இந்த நாலும் ஜீவப்பிரம்ம அபேதத்தைச் சொல்லுபவையே. அவற்றை மனனம் பண்ணி, நிதித்யாஸனம் என்ற பெயரில் ஆழ்ந்து தியானம் செய்தால், அபேத நிலை பிரத்யக்ஷமாகவே ஸித்தித்துவிடும். இப்படிப்பட்ட நாலு மஹாவாக்கியங்களும் நாலு உபநிஷத்துக்களில்தான் இருக்கின்றன. எத்தனையோ கர்மா, தினுசு தினுசான பிரார்த்தனை, வாழ்க்கை விதிகள் எல்லாம் ஸம்ஹிதை, பிராம்மணம் முதலான பாகங்களில் இருந்தாலும், முடிந்த முடிவாகப் பரம லக்ஷ்யத்தைப் பிடிக்க வேண்டும் என்று வருகிறபோது, அதை ஸாதித்துக் கொடுப்பதாக இருப்பது உபநிஷத் மஹாவாக்கியங்கள் தான்.

"உயர்ந்த அநுபவ ஞானமேதான் பிரம்மம்" என்ற தாத்பரியத்தில் ஐதரேய உபநிஷத்தில் ஒரு மஹா வாக்கியம் இருக்கிறது. இது ரிக்வேதத்தைச் சேர்ந்த உபநிஷத்து. "நான் பிரம்மமாக இருக்கிறேன்" என்று அர்த்தமுள்ள ஒரு மஹாவாக்யம் ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் வருகிறது. இது யஜுர் வேதத்தைச் சேர்ந்தது. "நீயும் பரமாத்மாவும் ஒன்றுதான்" என்று சிஷ்யனுக்கு குரு உபதேசிக்கிற ரூபத்தில் சாந்தோக்ய உபநிஷத்திலே ஒரு மஹா வாக்கியம் இருக்கிறது. இதுதான் ஸாம வேதத்துக்கான மஹா வாக்கியம். 'இந்த ஆத்மா என்பது பிரம்மமேதான்' என்று சொல்கிற மஹாவாக்யம், மாண்டூக்ய உபநிஷத்தில் வருகிறது. இது

அதர்வ வேதத்தைச் சேர்ந்தது. இப்படியாக நாலு வேதங்களிலும் விசேஷமாக இருக்கப்பட்ட மஹாவாக்கியங்கள் அந்தந்த வேதத்தைச் சேர்ந்த உபநிஷத்துக்களிலேயே வருகின்றன.

ஆசார்யாள், கடைசியில் உபதேச ஸாரமாகச் சொன்ன "ஸோபான பஞ்சக"த்தில், வேதத்தை (ஸம்ஹிதையை) அத்யயனம் பண்ணுங்கள், அதில் (பிராம்மணத்தில்) சொல்லியுள்ள எல்லா கர்மாக்களையும் பண்ணுங்கள் என்று ஆரம்பித்து, இந்த மஹாவாக்யங்களில் உபதேசம் வாங்கிக் கொண்டு, அவற்றையே அநுஸந்தானம் செய்து பிரம்ம பாவத்தை அடையுங்கள் என்று முடிக்கிறார்.

அத்தனை வேதங்களுக்கும் முடிவான நிலை உபநிஷத்தில் சொன்னதுதான். உபநிஷத்துக்களுக்கே "வேதாந்தம்" என்ற பெயர் இருக்கிறது. அந்தம் என்றால் முடிவு; வேதத்துக்கு அந்தமாக இருப்பது வேதாந்தம்.

உபநிஷத்துக்கள் இரண்டு விதத்தில் வேதத்துக்கு முடிவாக இருக்கின்றன. ஒவ்வொரு சாகையை எடுத்துக் கொண்டாலும் முதலில் ஸம்ஹிதை, அப்புறம் பிராம்மணம், பிறகு ஆரண்யகம் என்று வந்து, அந்த ஆரண்யகத்தின் கடைசியில் உபநிஷத்து வருகிறது. அதனால் ஒவ்வொரு சாகைக்கும் முடிவாக இருக்கிறது. அதோடுகூட வேதங்கள் சொல்லும் தாத்பரியத்துக்கும் முடிவாக, லக்ஷ்யமாக இருப்பது உபநிஷத்துக்கள்தான். இப்படியாக புஸ்தகங்களில் அமைப்பு (order of texts), தாத்பரியம் என்ற இரண்டு விதத்திலும் வேதங்களுக்கு முடிவாக இருப்பவை உபநிஷத்துக்கள்.

ஊருக்குக் கோயில், கோயிலுக்குக் கோபுரம், கோபுரத்துக்குச் சிகரம் என்று உயர்ந்துகொண்டே போகிற மாதிரி, நம்முடைய தத்துவங்களுக்கு சிகரமாக, வேத முடிவாக இருப்பது உபநிஷத்துக்களே.

'உப-நி-ஸத' என்றால் பக்கத்திலே உட்கார்ந்து கொள்வது என்று அர்த்தம். சிஷ்யனை இப்படி உட்கார்த்திவைத்துக் கொண்டு குருவானவர் செய்த உபதேசம்தான் உபநிஷத்துக்கள். 'பிரம்மத்துக்குப் பக்கத்திலேயே போய்ச் சேரும்படியாகச் செய்வது' என்றும் அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம். 'உபநயனம்' என்றால், 'குருவிடம் கொண்டு விடுவது', 'பரமாத்மாவிடம் கொண்டு விடுவது' என்று இரண்டு விதமாகவும் அர்த்தம் பண்ணிக் கொள்ள இடம் இருப்பதுபோல, 'உபநிஷத்' என்றாலும் இப்படி இரட்டைப் பொருள் கொள்ளலாம்.

பக்கத்தில் வைத்துக் கொண்டு செய்கிற உபதேசம் என்றால். அது ரஹஸ்யமானது என்று அர்த்தம். மதிப்புத் தெரியாத அபக்குவிகளுக்கு அது சொல்லத் தக்கதல்ல. இதனால்தான் உபநிஷத்துக்களுக்குள்ளேயே கதா பாகங்களாக இல்லாமல் ரொம்பவும் ஸூக்ஷ்மமான தத்தவங்களைச் சொல்கிறபோது, 'இது உபநிஷத், இது உபநிஷத்' என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கும். வேதத்தில் மறை பொருளாக இருக்க வேண்டியவற்றை 'ரஹஸ்யம்' என்பார்கள். வேதாந்தமான உபநிஷத்தில் அப்படிப்பட்ட ரஹஸ்யங்களையே 'உபநிஷத்' என்று சொல்லியிருக்கும்.

பிரம்ம ஸூத்ரம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

பிரம்ம ஸூத்ரம்

ஒவ்வொரு ஸித்தாந்தந்துக்கும் ஸூத்ரம், பாஷ்யம், வார்த்திகம் என்ற மூன்று உண்டு என்று சொன்னேன். இப்போது நம் தேசத்திலிருக்கப்பட்ட சங்கரர், ராமாநுஜர், மத்வர், ஸ்ரீகண்டர் (சைவ சம்பிரதாய ஆசாரியர்) முதலியவர்களின் ஸித்தாந்தங்களுக்கெல்லாம் வேதாந்த மதங்கள் என்றே பொதுப்பெயர். இந்த ஆசார்யர்கள் எல்லோருமே உபநிஷத்துக்களில் தங்கள் தங்கள் கொள்கையைத்தான் சொல்லியிருக்கிறது என்று ஆதாரம் காட்டுகிறார்கள். உபநிஷத்துக்களில் பத்தை முக்கியமாக எடுத்து அவற்றுக்குத் தங்கள் ஸித்தாந்தப் பிரகாரம் பாஷ்யம் பண்ணியிருக்கிறார்கள் * . அதனால் வேதாந்த மதத்துக்கு ஸூத்ரத்தின் ஸ்தானத்தில்

உபநிஷத்துக்களையே சொல்ல வேண்டும். "ஸ்தானத்தில்"தான்; வாஸ்தவமாக உபநிஷத்துக்கள் ஸூத்ர ரூபத்தில் இல்லை.

ஸூத்ரம் என்றால் எப்படியிருக்க வேண்டும்? ரொம்ப ரொம்பச் சுருக்கமாகத் தத்வங்களைச் சொல்லிக் கொண்டே போக வேண்டும். மினிமம் (அதம பக்ஷமான) வார்த்தைகளில் சொல்லிக் கொண்டு போகிறதை (aphorism-என்பதை)த் தான் ஸூத்திரம் என்பது. இந்த definition படி, உபநிஷத்துக்களை நேராக ஸூத்திரம் என்று சொல்லமுடியாது. ஆனாலும் வேதாந்த ஸம்பிரதாயங்கள் எல்லாவற்றுக்கும் ஆதார நூலாக (basic text -ஆக) ஒரு அசல் ஸூத்ர புஸ்தகமும் இருக்கிறது. அதுதான் 'ப்ரஹ்ம ஸூத்ரம்' என்பது.

ப்ரஹ்ம ஸூத்ரத்துக்கு ஒவ்வொரு ஸம்பிரதாயத்தை ஒட்டியும் பாஷ்யம் உண்டு. இந்த பிரம்ம ஸூத்ரம் என்பது என்னவென்றால், உபநிஷத்துக்களில் சொல்லியிருக்கிற தத்வங்களின் ஸாரத்தை ரத்தினச் சுருக்கமாக ஸூத்ர ரூபத்தில் வியாஸ மஹரிஷி எடுத்துச் சொல்லியிருப்பதுதான்.

பதரி என்னும் இலந்தை மரத்தடியில் இருந்ததால், வியாசருக்கு பாதராயணர் என்றும் ஒரு பேர் உண்டு. அதனால், இதற்கு பாதராயண ஸூத்ரம் என்ற பெயரும் இருக்கிறது.

ஜீவன் யார்? அவன் வாழ்கிற ஜகத் என்பது என்ன? இதற்கெல்லாம் காரணமான ஸத்ய தத்துவம் என்ன?- என்கிற மூன்று விஷயங்களை முக்கியமாக விசாரிக்கும்

வேதாந்த ஸம்பிரதாயங்களுக்கெல்லாம் ஆதார நூலாக பிரம்ம ஸூத்ரம் இருக்கிறது.

ஆனால் அதுவும் வியாஸரின் சொந்த அபிப்ராயங்களைச் சொல்வதல்ல. ஏற்கெனவே இருந்த வேதாந்த சாஸ்திரமான உபநிஷத்துக்களின் அர்த்தத்தை விசாரித்து வியாஸர் பண்ணினதுதான் அது. வேதத்தின் பிற்பகுதியில் வரும் உபநிஷத்தை ஆராய்வதால், "உத்தர மீமாம்ஸை" என்று அதற்குப் பேர்.

அதில் ஐந்நூற்றுச் சொச்சம் (555) ஸூத்ரங்கள் இருக்கின்றன. அந்தப் புஸ்தகம் நாலு அத்யாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அத்யாயமும் நாலு பாகங்களாக இருக்கிறது. மொத்தம் எல்லாவற்றிலும் சேர்ந்து, 'அதிகரணம்' என்கிற சுமார் இருநூறு (191) ஸெக்க்ஷன்கள் இருக்கின்றன.

ஸந்நியாஸ லக்ஷயத்தை முடிவாகச் சொல்வதால் "பிக்ஷு ஸூத்ரம்" என்றும், சரீரத்துக்குள் இருக்கிற ஆத்மாவைப் பற்றி விசாரிப்பதால் "சாரீரகம்" என்றும் பிரம்ம ஸூத்ரத்துக்குப் பெயர்கள் உண்டு.

ஸூத்ரம் என்றால் கயிறு என்று ஒரு அர்த்தம். மங்கள ஸூத்ரம் என்று தாலிக்கயிற்றைச் சொல்கிறோம் அல்லவா? இந்த அர்த்தத்தை வைத்து ஆசார்யாள் தம்முடைய பாஷ்யத்தில் (I.1.2) சிலேடையாகச் சொல்கிறார்.

வேதாந்த வாக்ய குஸும க்ரதனார்த்தத்வாத் ஸூத்ராணாம்

வேதம் என்ற விருக்ஷத்தில் பூத்த உபநிஷத் புஷ்பங்கள் உதிரி உதிரியாக இருந்தால் நாம் எப்படி அதை மாலையாகப் போட்டுக்கொள்ள முடியும்? அதற்காக உபநிஷத் புஷ்பங்களையெல்லாம் ஒன்றாகத் தொடுத்துத் தருகிற கயிறாக இந்த பிரம்ம ஸூத்ரம் இருக்கிறது என்று ஆசார்யாள் சொல்கிறார். இன்றைக்கு ஹிந்து மதம் என்ற பெயரில் உள்ள எல்லா ஸம்பிரதாயங்களுக்கும், ஸித்தாந்தங்களுக்கும், ஆதாரமான ஸூத்ரம் பிரம்ம ஸூத்ரம் என்றால், அந்த பிரம்ம ஸூத்ரத்திற்கு ஆதாரமாக இருப்பது உபநிஷத்துக்கள்தான். இதனால் தான் வைதிக மதங்களை எல்லாமே "ஔபநிஷத மதங்கள்" என்று சொல்கிற வழக்கமும் இருக்கிறது.

"Vedanta, Vedanta" என்று மேல்நாட்டு அறிவாளிகள் கொண்டாடுவது உபநிஷத்துக்களைத்தான். இஹலோகத்தின் அல்ப விஷயங்களை விட்டுக் கொஞ்சம் வைராக்யமாக, ஞானமாக யாராவது ஏதாவது சொன்னாலும், "என்னடா வேதாந்தம் பேசுகிறாய்?" என்றுதான் பொது வழக்கில் கேட்கிறோம்! அப்படியாக, ஞானத்தைப் பூரணமாக வைத்து இந்த உபநிஷத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

வேதத்தின் முடிவு என்கிற மாதிரியே வேதத்தை ஒரு புருஷனாகச் சொன்னால், அந்த வேத புருஷனுக்கு சிரஸாக இருப்பது உபநிஷத்துக்களே என்ற அர்த்தத்தில், அதற்கு 'ச்ருதி சிரஸ்' என்றும் பெயர் இருக்கிறது. 'சு(ரு)தி முடி' என்றும், 'மறை முடி' என்றும் தமிழில் பெயர் இருக்கிறது.

* ராமானுஜர் நேராக உபநிஷத் பாஷ்யம் செய்யாவிடினும், அவற்றின் கருத்துக்களைத் தெரிவிப்பதாக நூல்கள் எழுதியுள்ளார். அவரது கொள்கை வழியில் பிற்காலத்தே ரங்கராமானுஜர் என்பவர் நேர் பாஷ்யம் எழுதியுள்ளார்.

வேதமும் வேதாந்தமும் முரணானவையா ?

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

வேதமும் வேதாந்தமும் முரணானவையா ?

வேதத்தின் கர்மகாண்டத்தில் என்ன காரியங்களை எல்லாம் சொல்லியிருக்கிறதோ, அதை எல்லாம் இல்லாமல் பண்ணுவதாக இருக்கிறது அதே வேதத்தின் ஞானகாண்டமான உபநிஷத்து! கர்ம காண்டத்தில் தேவதைகளை உபாஸிக்கச் சொல்லி, அதற்கு ஏகப்பட்ட

வழிபாட்டு முறைகளைக் கொடுத்துவிட்டு, இங்கே உபநிஷத்தில் அதே வேதம், "தேவ பூஜை பண்ணுகிறவன் அசடு, அவன் பசுவுக்கு ஸமானம்" என்று கேலி பண்ணுகிறது!

இது இப்படி ரொம்பவும் விசித்ரமாக இருக்கிறது. ஒரே வேதத்தின் ஆரம்பத்தில் என்ன இருக்கிறதோ, அதற்கு முழுக்க மாறாக அதன் முடிவு இருக்கிறது! ஒரு பக்கம் கர்ம மயமாகவும், இன்னொரு பக்கம் ஞான மயமாகவும் வித்யாஸமாக இருக்கிறது. இந்த வித்யாஸத்தினால், "வேதம்" என்றாலே கர்மகாண்டம் என்றும், "வேதாந்தம்" என்றால் ஞான காண்டமான உபநிஷத் என்றும் பிரித்து அர்த்தம் பண்ணிக்கொள்கிற அளவுக்கு ஆகியிருக்கிறது.

வேதாந்தத்தைத்தான் கீதையில் பகவான் சொல்லியிருக்கிறார். அவரே அதே கீதையில் (கர்ம காண்டமான) வேதத்தைத் திட்டுத் திட்டு என்று திட்டுகிறார். புத்தரும், மஹாவீரரும்தான் முதலில் வேதத்தைத் திட்டினார்கள் என்று பொதுவில் சொல்கிறார்கள். இது சரியில்லை. ஸாக்ஷாத் கிருஷ்ண பரமாத்மாதான் இவர்களுக்கு முந்தியே வேதத்தை நன்றாக வைதிருக்கிறார். ஓரிடத்தில் (II.42-45) "வேதமெல்லாம் ஸத்வ-ரஜோ-தமோ குண ஸம்பந்தமானதுதான். இந்த முக்குணங்களையும் கடந்த நிலையை நீ அடையவேண்டும்" என்று அர்ஜுனனிடம் சொல்கிறார். "காமாத்மாக்களாக ஸ்வர்க்கத்தில் ஆசை வைத்து, போகத்தையும் ஐச்வர்யத்தையுமே நினைத்துக் கொண்டு, இந்த வேத கர்மடர்கள் மறுபடி மறுபடி ஜன்மா எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு ஸமாதியில்

உண்டாகிற நிச்சயமான புத்தி ஏற்படாது" என்றெல்லாம் நிந்திக்கிறார். இன்னோரிடத்தில் (XI-48) "வேத யக்ஞ அத்யயனங்களால் நான் அடையத் தக்கவனில்லை" என்கிறார்.

வேதம்தான் ஸகல தர்மத்துக்கும் மூலம் என்று இத்தனை நேரம் நான் நீள நெடுக அளந்துவிட்டு, இப்போது இப்படிச் சொன்னால் முரணாக இருக்கும்!

தீர விசாரித்துப் பார்த்தால், இதிலே முரணாக ஒன்றும் இல்லை என்று தெரியும். சாதாரணமாக நாம் இருக்கப்பட்ட நிலையில், முக்குணங்களையும் கடந்து மனஸை ஆடாமல் அசையாமல் நிறுத்தித் தியானம் பண்ணுவது, உபநிஷத்தில் சொல்கிற ஆத்மாவின் ஸத்ய நிலையைத் தெரிந்து கொள்வது என்றால், துளிக்கூட முடியாமல்தானே இருக்கிறது? அந்த நிலையில் நம்மைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு சேர்ப்பதற்காகத்தான் வேத கர்மாநுஷ்டானங்கள் யாவும் இருக்கின்றன. லோகம் என்பது நிஜம் என்று நினைத்துக் கொண்டிருக்கிற வரையில், இதிலே நாம் க்ஷேமமாக இருப்பதற்காகத் தேவதைகளை உபாஸிக்கிறோம். லோகம் நிஜம் என்று நினைப்பதால், அந்த லோகத்துக்கும் தேவர்களால் க்ஷேமத்தை உண்டு பண்ணுகிறோம். இந்த லோகம் மாதிரியே தேவலோகம் நிஜம், தேவதைகளும் நிஜம் என்று வைத்துக் கொண்டு அந்த தேவதைகளுக்கு உபகாரம் பண்ணி, அவர்களிடமிருந்து பிரத்யுபகாரமாகப் பல நன்மைகளை பெறுகிறோம். இந்த லோகத்தில் ஸந்தோஷமாக வாழ்க்கை நடத்துவது போலவே, தேவலோகத்துக்குப் போய் ஸ்வர்க்க போகங்களை

அநுபவிக்க ஆசைப்படுகிறோம். இதெல்லாம் சரிதான். ஆனால் இதோடேயே நின்றுவிட்டால், முக்கியமான லக்ஷ்யத்தைக் கோட்டை விட்டதாக அல்லவா ஆகிவிடுகிறது? வாஸ்தவத்தில் நாம் பரமாத்மாவை சாச்வதமாகச் சேர்ந்திருப்பதுதானே லக்ஷ்யம்? அதை விட்டுவிட்டு, மற்றவற்றை மட்டும் பிடித்துக் கொண்டிருந்தால் அது அசட்டுத்தனந்தானே?

நாம் இருக்கிற நிலையில் லோகத்தைப் பொய்யென்று நினைத்துக் கொள்ள முடியவில்லை என்பதால், "சரி, மெய்யென்றுதான் வைத்துக் கொள்" என்று சொல்லி, லோக க்ஷேமத்துக்கான கர்மாக்களை வேதம் கொடுத்திருக்கிறது. நாம் உள்ள நிலையில் அரூபமான ஒரே பரமாத்மாவை அபேதமாக உபாஸிக்க முடியவில்லை என்பதால், அநேகம் தேவதைகளின் உபாஸனைகளை அது கொடுத்திருக்கிறது. ஆனால் இப்படிக் கர்மாவும் உபாஸனையும் பண்ணும் போதே, 'லோகமெல்லாம் அடிபட்டுப்போய், கர்மாவும் நின்று விடுகிற ஞானநிலை நமக்கு வர வேண்டும்; பல தேவதைகளை உபாஸிப்பதாக இல்லாமல், பரமாத்மாவுக்கு அன்னியமாக நாம் என்றே ஒன்று இல்லை என்று கரைகிற நிலை வரவேண்டும். அதற்கு ஆரம்பப் படிகளாக சித்தசுத்தியும், மனஸின் ஐகாக்ரியமும் (ஒருமுனைப்பாடும்) ஏற்படுவதற்காகவே இந்த கர்மாக்களையும், உபாஸனைகளையும் வேதம் கொடுத்திருக்கிறது' என்ற அறிவோடு பண்ண வேண்டும். அப்படியில்லாமல், வெறுமே லௌகிகமான க்ஷேமத்தை உண்டாக்கிக் கொள்வது, தேவதைகளிடம் கொடுக்கல்–

வாங்கல் வியாபாரம் மாதிரி யக்ஞம் கொடுத்து நன்மை பெறுவது என்று இதோடேயே நிறுத்திக் கொண்டால், ஸத்ய ஸாக்ஷாத்காரம் கிடைக்கவே கிடைக்காது. தேவலோகத்துக்குப் போனாலும், ஆத்மஸுகம் என்ற ஸத்ய ஸாக்ஷாத்கார ஆனந்தம் அதில் கிடைக்காது. மேலும், தேவலோக வாஸமும் நம் புண்ணியம் தீர்ந்தவுடன் முடிந்து, நாம் மறுபடி பூலோகத்தில் கர்ப்ப வாஸம் பண்ணுவதற்காகத் திரும்பித்தானாக வேண்டும். ஒரு அளவுக்கு நம் இப்போதைய மனப்பான்மைக்கு விட்டுக்கொடுத்தும், நம்மை இன்றுள்ள நிலையிலிருந்தே சிறுகச் சிறுக (gradual-ஆக)ப் பக்குவப்படுத்தவுமே கர்மாவும், உபாஸனையும் வேதத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதனால், இதோடேயே நின்றுவிடுவேன், மேலே போக மாட்டேன் என்றால், அது தப்பு.

முதலில் வேத கர்மாநுஷ்டானங்களைப் பண்ண மாட்டேன் என்பதும் தப்பு. அப்புறம், அதை ஒருநாளும் விடமாட்டேன் என்பதும் தப்பு. இந்தக் காலத்தில் எல்லோரும் முதலிலேயே, 'யக்ஞமாவது? அத்யயனமாவது? இதெல்லாம் வேண்டவே வேண்டாம், நேரே உபநிஷத்துக்குப் போகிறோம்' என்கிறார்கள். இதனால் புத்தி பூர்வமாக (intellectual) உபநிஷத்தைப் பற்றி நிறையப் பேசுகிற ஸ்திதிதான் வந்திருக்கிறதே தவிர, அநுபவத்தில் சாந்தர்களாக, வைராக்யசாலிகளாக, ஆத்ம ஞானிகளாக யாரும் வரக்காணோம்! ஆரம்பகாலத்திலேயே அதற்கான ஸாதனைகளான கர்மாநுஷ்டானங்களை விட்டுவிட்டதன் கோளாறுதான் இதற்கு காரணம். இது ஒரு விதத்தில் தப்பு என்றால் ஞானத்துக்கே வரமாட்டேன் என்று

கர்மடர்களாகவே நின்று விடுவது, இன்னொரு விதத்தில் தப்பாக இருக்கிறது.

முதல் கிளாஸ், இரண்டாம் கிளாஸ் என்று ஒவ்வொன்றாகப் படித்துதான் பி.ஏ.வுக்குப் போக வேண்டும். எடுத்தவுடனேயே பி.ஏ.போவேன் என்றாலும் தப்பு; ஆரம்ப க்ளாஸ்களிலேயே ஃபெயிலாகிக் கொண்டு அப்படியே இருப்பேன், மேல் கிளாஸுக்குப் போக மாட்டேன் என்றால் அதுவும் தப்பு.

ஆதிகாலத்தில் பிந்திய கோஷ்டி நிறைய இருந்தது; இப்போது முன்னால் சொன்ன மாதிரியானவர்கள் அதிகம் இருக்கிறார்கள். கிருஷ்ணபகவான் காலத்தில், கர்மாநுஷ்டானத்தைவிட்டு ஞானத்துக்கு வராதவர்கள் அதிகம் இருந்தார்கள். அவர்களைத்தான் அவர் திட்டினார். வேதத்தை அவர் திட்டியதாகத் தோன்றுவதெல்லாம், வாஸ்தவத்தில் வேத தாத்பர்யத்தை சரியாகப் புரிந்து கொள்ளாமல், வேத கர்மாவோடு நின்றுவிட்டவர்களைக் குறித்து அவர் திட்டியதுதான்! உள்ளபடி வேதத்தை அவர் ஒரு நாளும் திட்டமாட்டார். வேதங்களை ரக்ஷித்துக் கொடுப்பதற்காகவே தான், அவர் திரும்பத் திரும்ப அவதாரம் பண்ணினது.

அவருடைய காலத்தை ஒட்டி, கிருஷ்ண பரமாத்மா இப்படி கர்ம மார்க்கக்காரர்களைத் திட்டினார். இப்போது அவர் புதிதாக கீதை சொன்னால், இன்றைக்கு வேத கர்மாவே வேண்டாம் என்று நேராக உபநிஷத்துக்களுக்குப் போகிறவர்களைத்தான் திட்டியிருப்பார். கீதையிலே

கர்மடர்களைத் திட்டுவதைவிட இன்னம் கடுமையாகத் திட்டியிருப்பார் என்றுகூடத் தோன்றுகிறது!

ஏனென்றால் அதைவிட இதுதான் பெரிய தப்பு. முதல் கிளாஸ், இரண்டாம் கிளாஸ் எப்படியும் படித்துத்தான் ஆக வேண்டும். அவனுக்கு நன்றாகச் சொல்லிக் கொடுத்து மேல் கிளாஸுக்கு பிடித்துத் தள்ளிவிடலாம். ஆனால் முதலிலேயே பி.ஏ. போகிறேன் என்பவன் ஒரு வழிக்கும் வரவில்லை; அவனை ஒரு வழிக்கும் கொண்டு வரவும் முடியாது. ஆரம்ப கிளாஸில் படிக்கிறவன் கொஞ்சமாவது விஷயம் தெரிந்து கொள்கிறான். இவனோ ஒன்றும் தெரிந்து கொள்ளமுடியாது.

வேதத்துக்கும் வேதாந்தத்துக்கும் முரண்பாடே இல்லை. வேதாந்தத்துக்குப் பக்குவப்படுத்துவதற்காகவே வேதம் (கர்ம காண்டம்) இருக்கிறது. அது லோக ஸம்பந்தமானதுதான், பல தேவதைகளின் ஸம்பந்தமானதுதான், முக்குண ஸம்பந்தமானதுதான். ஆனாலும் லோகத்தைவிட்டு, தேவதையும் உபாஸனையும் வேறில்லை என்று குணம் கடந்த நிலைக்குப் போவதற்குப் பூர்வாங்கமாகவே அது அப்படியிருக்கிறது என்று புரிந்துகொண்டு, அதை அநுஷ்டித்தால் அது தானாக ஞானகாண்டத்தில் கொண்டு சேர்த்து விடும்.

"ஸ்வய நன்மை மட்டுமில்லாமல், லோகத்திலுள்ள ஸமஸ்த பிராணிகளுக்கும் வேத சப்தமும், யக்ஞமும் க்ஷேமம் கொடுப்பதாயிற்றே! இவன் லோகம் பொய் என்று ஞானியாக போய்விட்டால், லோக க்ஷேமம் என்ன ஆவது?" இப்படித் தோன்றுகிறது. "அவனுக்கு லோகம் பொய்யாக

போய்விட்டாலும் நமக்கு அது நிஜம் மாதிரித் தானே இருந்து கொண்டு உபத்ரவப்படுத்துகிறது? இந்த உபத்ரவம் தீருவதற்கு யக்ஞம் மாதிரியான அநுஷ்டானம் எதுவும் ஞானி பண்ணவில்லையே!" என்று தோன்றுகிறது. ஆனால் ஞானி இருக்கப்பட்ட உத்தமமான ஸ்திதியைப் பார்த்தால், அவன் யக்ஞம் என்ற ஒன்று பண்ணித்தான் லோக க்ஷேமத்தை உண்டுபண்ணவேண்டும் என்றே இல்லை. அவன் வாழ்க்கை முழுக்கவே யக்ஞமாகத்தான் இருக்கிறது. அவன் லோகத்தை அடியோடு பொய்யென்று நினைத்தாலும் சரி, அல்லது இந்த லோகம் பகவானின் லீலை என்று நினைத்தாலும் சரி, அவன் மூலமாக இந்த லோகத்துக்குப் பகவானின் அநுக்ரஹம் ஓயாமல் வெளிப்பட்டுக் கொண்டேதான் இருக்கிறது. ஞானிகளிடம் ஜனங்கள் கூட்டங் கூட்டமாகப் போவதற்குக் காரணம் என்ன? அவர்கள் ஜனங்களை விட்டுப் போனாலும் கூட, இவர்கள் போய் அவர்களுடைய காலில் விழுவதற்கு காரணம் என்ன? அவர்கள் செய்கிற அநுக்ரஹந்தான் காரணம். அவர்கள் உத்தேசித்துச் செய்கிறார்களோ இல்லையோ, அவர்கள் மூலமாக ஈச்வராநுக்ரஹம் லோகத்துக்குப் பாய்கிறது. அவர்களது சந்நிதானத்திலேயே ஜனங்களுக்கு ஒரு தாப சாந்தி கிடைக்கிறது. லோக ரீதியான வேண்டுதல்கள்கூட நிறைவேறுகின்றன. தனக்கு அன்னியமாக தேவதை இல்லை என்ற ஞானத்தை அடைந்துவிட்ட ஞானியே தேவதைகளுக்கெல்லாம் மேலே பெரிய அநுக்ரஹத்தைப் பண்ணி விடுகிறான். அதனால், அவன் யக்ஞம் செய்யவில்லையே, லோக க்ஷேமத்துக்கு எதுவும் செய்யவில்லையே என்று நினைப்பது தப்பு.

பிற்காலத்திய வேதாந்த (ஹிந்து) மதத்தை, வேத கர்மாநுஷ்டான காலத்திலிருந்து பிரித்து, "இந்த ஹிந்துக்களுக்கு individual salvation (தனி மநுஷ்யனின் மோக்ஷம்) தான் முக்யம்; லோக க்ஷேமத்தை இவர்கள் கவனிப்பதேயில்லை; தியானம், யோகம், ஸமாதி எல்லாம் இன்டிவிஜுவல் ஸால்வேஷனையேதான் மையமாகக் கொண்டவை" என்று பிற மதஸ்தர்கள் சொல்கிறார்கள். "கிறிஸ்து, நபி, புத்தர் மாதிரி அன்பு (love) ஸஹோதரத்வம் (brotherhood) இவற்றைச் சொல்லி social consciousness [சமூக உணர்வை] ஹிந்து மதம் வளர்க்கவில்லை" என்கிறார்கள். ஆனால் நம் மதத்தைச் சரியாக புரிந்து கொண்டால் வேத மதம், வேதாந்த மதம் என்று பிரிப்பதே முழுப் பிசகு. கடைசியில் ஸந்நியாஸாச்ரமத்தில் எவன் வேதாந்தியாக ஞானவிசாரம் பண்ணி, இண்டிவிஜுவல் ஸால்வேஷன் அடைகிறானோ, அவனேதான் அதற்கு முந்திய ஆச்ரமங்களில் அத்யயனமும், கர்மாநுஷ்டானமும் பண்ணும் வைதிகனாக இருந்துகொண்டு, இவற்றால் லோக க்ஷேமத்தை உண்டு பண்ணுகிறான். அப்படிப் பண்ணியதே தான் இவனுக்கு சித்த சுத்தியைக் கொடுத்து, தன்னுடைய சொந்த மோக்ஷத்துக்கு நேர்வழியான வேதாந்தத்தில் சேர்க்கிறது. அதிலே ஸித்தி அடைந்து ஞானியான பிறகும், இவன் காரியம் என்று பண்ணாமலே, தன் ஸந்நிதான விசேஷத்தாலேயே லோகாநுக்ரஹம் பண்ணிக் கொண்டிருக்கிறான். தனி மநுஷ்யனின் விமோசனம் (individual salvation), சமூக க்ஷேமம் (collective welfare) என்ற இரண்டில், எது மதத்துக்கு முக்கியமாக இருக்க வேண்டும் என்ற பெரிய கேள்வியை இங்கே நான் ஆராயவில்லை. அது தனி விஷயம். சமூகம் ஷேமம் அடைவதும்,

அடையாததும் ஒரு பக்கம் இருக்கட்டும். ஒரு மதத்தைச் சேர்ந்தவன் பரமாத்ம தத்வத்தை அநுபவத்தில் தெரிந்து கொள்கிற ஞானியாகாவிட்டால் அந்த மதம் இருந்தாலென்ன, இல்லாவிட்டால் என்ன?

இந்த ஞானநிலைக்கு வருவதற்காகத்தான் அத்தனை கர்மாவும் உபாஸனையும் வைத்திருக்கிறது. வித்யாஸமே இல்லாமல் எல்லாம் ஒன்றாகிப் போய்விடுகிற ஞான நிலையை அடைவதற்கு வழியாகவேதான் நூறாயிரம் வித்யாஸமுள்ள வர்ணாச்ரம தர்மங்கள், இன்னார்தான் இன்ன பண்ணலாம் என்ற அதிகார பேதங்கள் எல்லாம் பூர்வாங்கமாக வைத்திருக்கிறது. வெறும் கர்மாவோடு, வித்யாஸத்தோடு நின்றுவிட்டால் தப்பு. 'கர்மாவைச் சொல்கிற வேத பாகம்தான் அர்த்தமுள்ளது. ஞானத்தைச் சொல்கிற பாகம் அர்த்தமில்லாதது' என்று சொன்ன பூர்வ மீமாஸகர்களைத் திட்டுகிற உத்தேசத்தில்தான், கிருஷ்ண பரமாத்மா வேதத்தையே திட்டுகிற மாதிரிப் பேசுகிறார். அவர் வாஸ்தவத்தில் திட்டினது 'வேத வாத ரதா: என்று அவரே சொல்கிறபடி, வேதத்தைப் பற்றி வெறும் வாய்ச்சவடாலில் அர்த்தம் பண்ணிக்கொண்டு அதிலேயே சந்தோஷப்பட்டுவிட்டு, அதன் லக்ஷ்யமான அநுபவ ஞானத்துக்கு யத்தனம் பண்ணாதவர்களைத் திட்டினதுதான்.

முதலில் கர்மா வேண்டும். அதாவது வேதம் சொன்னபடி காரிய ரூபத்தில் கடமைகளைப் பண்ண வேண்டும். ஆனாலும் கர்மா இல்லாமல் போகிற பெரிய ஆத்மாநுபூதி நிலைக்குப் போவதற்கே இது ஆரம்பப் படி என்று தெரிந்து கொண்டு பண்ண வேண்டும். இதே மாதிரி, முதலில்

தேவதா உபாஸனை வேண்டத்தான் வேண்டும். ஆனாலும், உபாஸிக்கப்படும் தேவதையும் உபாஸகனான தானும் வேறில்லை என்று ஆகிறதற்கு ஆரம்ப ஸாதனமாகவே உபாஸிக்கிறோம் என்று புரிந்துகொள்ள வேண்டும். முதலில் வித்யாஸங்கள் பார்க்கத்தான் வேண்டும். லோக வியாபாரம் ஒழுங்காக நடக்க வேண்டுமானால், நமக்குள் காரியங்களைப் பல தினுஸாகப் பிரித்துக்கொண்டு, அந்தந்த காரியத்தையும் சுத்தமாகப் பண்ணுவதற்கு என்ன தனிப்பட்ட ஆசார அநுஷ்டானாதிகள் உதவி செய்யுமோ, அப்படிப் பிரிந்துதான் அவரவருக்கான தர்மங்களைக் கடைபிடிக்கவேண்டும். ஆனாலும் இதுவும், கடைசியில் ஸகல வித்யாஸமும் போய், எல்லாமும் எல்லாரும் "தானே" என்று தெரிந்து கொள்வதற்குத்தான் என்ற அடிப்படை உணர்ச்சி இருக்க வேண்டும். வேத அத்யயனம், வேத கர்மாநுஷ்டானம் எல்லாம் அந்த வேதமே அவசியமில்லாமல் போய்விடுகிற அகண்டமான மஹா அநுபவத்துக்கு வழிதான் என்று வைத்துக் கொண்டு, அவற்றை அப்பியாஸம் பண்ண வேண்டும். புஷ்பம் இருந்தால்தான் பிறகு பழம் உண்டாகும். புஷ்பம் பார்க்க ரொம்ப அழகாக இருந்தாலும், அது காய்ந்து போய் விழுந்தால்தான் பழம் உண்டாகும். பூவே இல்லாமல் காய்க்க வேண்டும் என்று, இந்த நாளில் வைதிகாநுஷ்டானமே இல்லாமல் வேதாந்தத்துக்கு போகிறவர்கள் நினைத்தால், அது யதார்த்தத்துக்குச் சரியாக வராது. இதனால் பூவோடேயே நின்றுவிட வேண்டும் என்று நினைத்து, வேதாந்த ஞானத்துக்கு யத்தனம் செய்யாமல் கர்மடர்களாக நின்றுவிட்டால், அதுவும் தப்புத் தான். எதிலும் sense of proportion வேண்டும்.

கீதையில் சொன்ன மாதிரியே, பிருஹதாரண்யக உபநிஷத்திலும் (IV.3.22) "எவன் ஆத்ம ஸ்வரூபத்தை உணர்ந்து கொண்டு விட்டானோ அவனுக்கு அந்த நிலையில் வேதம் அத்தனையும் வேதமில்லாமல் போய்விடும்; தேவர்கள் யாவரும் தேவரல்லாமல் போய்விடுவார்கள்; பிராமணர்கள் பிராமணரில்லாமல் ஆகிவிடுவார்கள்; சண்டாளன் சண்டாளனில்லாதவனாகி விடுவான் என்று சொல்லியிருக்கிறது.

"ச்ருதி" என்று வேதத்தைச் சொல்கிற போது அதில் ஸம்ஹிதை மட்டுமின்றி பிராம்மணமும், ஆரண்யகமும் (உபநிஷத்துக்களும்) அடக்கந்தான். கீதை 'ச்ருதி' இல்லை. அது 'ஸ்மிருதி'யைச் சேர்ந்ததாகவே சொல்வது வழக்கம். ஸ்மிருதிகளைப் பற்றிப் பிறகு பதினாலு வித்யையகளில் ஒன்றான தர்மசாஸ்திரத்தைப் பற்றி சொல்கிறபோது சொல்கிறேன். "வேதகர்மாவும் உபாஸனையும் ஞானத்தில் கொண்டு போய் விடாவிட்டால் பிரயோஜனம் இல்லை" என்று கீதையான ஸ்மிருதி சொல்கிறது. 'ச்ருதி–ஸ்மிருதி–புராணம்' என்கிற மூன்று பிரமாணங்களில், புராணத்திலும் அநேக இடங்களில் வெறும் கர்மாநுஷ்டானத்தோடு நின்று விடுவதைக் கண்டித்திருக்கிறது. தாருகா வனத்தில் ரிஷிகள் கர்ம மார்க்கமே ஸகலமும் என்று தங்களுடைய யக்ஞோபாஸனையிலேய கர்வப்பட்டுக் கொண்டிருந்தபோது, பரமேச்வரன் அவர்களுடைய அஹங்காரத்தை அழித்த கதையை சைவமான புராணங்கள் சொல்கின்றன. பாகவதத்திலும் இப்படியே யக்ஞபத்தினிகளின் உபாக்யானத்தில், ஒன்றுமே தெரியாமல் innocent-ஆக இருந்த அந்தப் பிராம்மண

ஸ்திரீகளுக்குத்தான் யக்ஞபுருஷனான மஹாவிஷ்ணுவே பாலகிருஷ்ணனாக வந்திருக்கிறான் என்று தெரிந்தது என்றும், அவர்களுடைய புருஷர்களான கர்மமார்கக்காரர்கள் இதைத் தெரிந்து கொள்ள முடியாமல், பிறகு ரொம்பவும் பச்சாதாபப் பட்டார்கள் என்றும் வருகிறது.

ஆனாலும், பிரமாணங்களில் ச்ருதிப் பிரமாணத்துக்குப் பிறகுதான் ஸ்மிருதி-புராணப் பிரமாணங்களைக் கொள்ள வேண்டும். கர்மா மட்டும் போதாது என்பதற்கு ச்ருதிப் பிரமாணமும் இருக்கிறது என்பதற்கு இங்கே பிருஹதாரண்யக உபநிஷத்தை quote செய்தேன். ஆனாலும் "ச்ருதியை கர்மகாண்டம், ஞான காண்டம் என்று பிரிக்கிறபோது, இது ஞான காண்டமான உபநிஷத்தில் வருவதுதானே? ஞான காண்டத்தில் ஞானத்தைச் சிறப்பித்துச் சொல்லி, கர்மாலக்ஷயம் இல்லை என்று சொல்லியிருப்பதில் விசேஷம் ஒன்றுமில்லையே!" என்று கேட்கலாம். ஆகையால் கர்ம காண்டத்திலேயே, 'கர்மாவே எல்லாம், அதுவே லக்ஷயம்' என்று நினைப்பதைக் கண்டனம் பண்ணியிருக்கிறது என்பதையும் காட்டுகிறேன். வேதத்தில் சொல்லியிருக்கிற பல விதமான யக்ஞங்களையுமே அதன் நோக்கமறிந்து செய்வது சிலாக்கியந்தான் என்று பகவான் கீதையிலே "ஏவம் பஹுவிதா யக்ஞா விததா ப்ரஹ்மணோமுகே" என்று பாராட்டிச் சொல்லிவிட்டு, ஆனால் இந்த ஸகலவிதமான கர்மாநுஷ்டானங்களும் ஞானத்தில் தான் பூர்த்தியடைகின்றன -

ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஞானே பரிஸமாப்யதே

-என்றதை 1, வேதத்தின் கர்மகாண்டத்திலேயே ஒரு அழுத்தமான திருஷ்டாந்தத்தால் சொல்லியிருக்கிறது. "வெறும் கர்மாநுஷ்டானங்களை மாத்திரம் செய்து கொண்டு, ஈச்வரனை எவனொருவன் உணராமல் இருக்கிறானோ, அவன் நெருப்பிலே விறகைப் போட்டுப் புகையை மாத்திரம் எழுப்பிக் கொண்டிருக்கிறான். அவன் மூடன், அவன் ஆத்ம ஸ்வரூபத்தை ஒருநாளும் அறிந்து கொள்ளமாட்டான்" என்று ச்ருதியில் கர்மகாண்டத்திலேயே தைத்திரீய காடகத்தில் (முதல் ப்ரச்னம், கடைசி அநுவாகம், 4-ம் வாக்யம்) வருகிறது. விறகை மூட்டினால் அதன்மேல் வெண்கலப் பானையை வைத்துச் சாதம் வடிக்க வேண்டும். அப்படித் தன்னையே ஞானத்தில் பக்குவம் பண்ணிக்கொள்ளப் பிரயத்தனப்படாமல் ('பக்குவம்' என்றால் சமைக்கப்படுவது என்றே அர்த்தம். நமக்குள்ளே இப்படி முழுமை பெற்று, அரிசி சாதமாகிறாற்போல் நன்றாகக் குழைந்து விடுவதையும் 'பக்குவம்' என்று ஸம்ஸ்கிருதத்தில் சொல்கிறோம்) வெறுமே யக்ஞாதிகள் செய்கிறவன், வெண்கலப் பானையை ஏற்றாமலே அடுப்பை எரிய விடுகிறவன்தான். இப்படி வேதமே சொல்கிறது. யக்ஞத்திலே நெருப்பில் ஹவிஸைப் போடாமலே பெரிசாக அக்னியை வளர்த்து என்ன பிரயோஜனம்? புகை ஜாஸ்தியாவதுதான் பலன்! இநத மாதிரிதான் கர்ம பலனையே ஹவிஸாகப் போட்டு எரிக்கிற புத்தியோடு யக்ஞத்தைச் செய்யாவிடில், அது வெறும் புகையாகப் போய் விடுகிறது. "பிரம்மாக்னியில் ஆத்மாவை ஹவிஸாகத் தர வேண்டும். ஸம்யமம் என்ற புலனடக்க

அக்னியில் இந்திரிய நுகர்ச்சிகளை ஹோமம் பண்ண வேண்டும்; பஞ்சப் பிராணன்களை ஒன்றிலொன்று ஹோமம் பண்ணவேண்டும்" என்றெல்லாம் பகவான் கீதையில் சொன்ன ஸ்திதிக்குப் போவதற்காகத்தான் திரவ்ய ரூபமான, காரிய ரூபமான வைதிக யக்ஞங்கள் எல்லாம் இருக்கின்றன. இதைத் தெரிந்து கொள்ளாமல் எத்தனை யக்ஞம் செய்தாலும் ஒருவன் கொஞ்சங்கூட புத்திசாலியே இல்லை; அவனுக்குப் புத்தியே இல்லை என்று வேதமும் சொல்கிறது. அவனுடைய புத்தி எங்கே போகும்? ஹோமப் புகை போலத்தான் அதுவும் போகிற இடமெல்லாம் கருப்பாகப் பண்ணிக் கொண்டு, கடைசியில் பிசுபிசுவென்று ஒன்றுமில்லாமலாகிவிடும்.

வேத கர்மாவை ஈச்வரார்ப்பணம் பண்ணினால், அது கட்டுவதற்குப் பதில், கட்டிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக அவிழ்ந்துவிட ஆரம்பிக்கும். நிஷ்காம்யமாக, பகவத் பிரீதிக்காகவே கர்மாவைப் பண்ணப்பண்ண அது சித்தசுத்தியைத் தந்து, முக்குணங்களுக்கு அப்பாற்பட்ட ஸ்தானத்துக்கு அழைத்துக்கொண்டு போகும்.

யக்ஞம் என்ற பெயர் இதைத்தான் குறிப்பிடுகிறது. இங்கிலீஷில் இதை "sacrifice" என்றுதானே சொல்கிறார்கள்? யாகம் என்றால் தியாகம் என்றுதான் அர்த்தம். "ந மம" ("எனதில்லை") என்று ஒன்றை நெருப்பிலே போடுகிற தியாக சித்தம்தான் யக்ஞத்தின் உயர்நிலை. நெருப்பிலே போட்டதை எடுக்க முடியுமா? எடுத்தாலும் அது க்ஷண காலத்தில் உருச் சிதைந்துதானே போகிறது? அந்த மாதிரி அஹங்கார மமகாரங்களை பஸ்மமாக்க வேண்டும். இப்படி உயர்ந்த அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதான "யக்ஞம்"

என்பதை, அதன் பேருக்கு நேர் விரோதமாக ஸ்வர்க்கப் பிராப்தி முதலான சொந்த லாபங்களுக்காக, அல்ப பலன்களுக்காக, ஒருத்தன் பண்ணினால் அவன் முட்டாள்தானே?

கர்ம காண்டம், ஞான காண்டம் என்பனவற்றுக்குள் முரண்பாடு (contradiction) இல்லை. கர்மகாண்டத்திலேயே அநேக இடங்களில் கர்மாவின் லிமிடேஷனைச் சொல்லி, ஞானத்தையே விசேஷித்திருக்கிறது. ரொம்பவும் உயர்ந்த ஞானப் பிரதமான தத்துவங்களைச் சொல்கிற நாஸாதீய ஸூக்தம், புருஷ ஸூக்தம், திரயம்பக மந்திரம் முதலியவை வேதத்தின் ஸம்ஹிதா பாகத்திலேயே வருகின்றன. உபநிஷத்துக்களில் இல்லை. இதற்கு எதிர் வெட்டாக உபநிஷத்துக்களிலும் நாசிகேதாக்னி முதலான பல கர்மாக்களைச் சொல்லியிருக்கிறது. கர்மாநுஷ்டானங்களில் விசேஷமாகப் பிரயோகமாகிற மந்திரங்கள், தைத்திரீய உபநிஷத்திலிருந்தே கிடைக்கின்றன. ஒன்றுக்கொன்று விரோதமானது என்றால் இப்படியிருக்குமா? ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குப் போக வேண்டும் என்பதே தாத்பரியம்.

கர்மாவை ஈச்வரார்ப்பணமாகப் பண்ணினால், அதுவே ஞானத்துக்கு உபாயம் என்று ஸ்மிருதியான கீதையில் சொன்னதற்கு ஆதாரம் ச்ருதியான உபநிஷத்தில் இருக்கிறது. தசோபநிஷத்துக்கள் என்ற பத்தில், முதலாவதாக வைக்கப்பட்டிருக்கிற ஈசாவாஸ்யத்தில் இதைத்தான் எடுத்தவுடனேயே உபதேசித்திருக்கிறது. 'நூறு வருஷம் வேத கர்மாக்களைப் பண்ணிக் கொண்டிரு. ஆனாலும் ஈச்வரார்ப்பண புத்தியோடு பண்ணு. அப்போது

அது உன்னைக் கட்டிப்போடாது' என்கிறது. ஆகையால் உபநிஷத் என்றாலே inaction (காரியமில்லாமலிருப்பது), கர்மாவுக்கு விரோதமானது என்று நினைத்தால் சரியில்லை.

கர்மாதான் லக்ஷ்யம் என்று நினைத்துவிடக் கூடாது. லோக க்ஷேமத்தை உண்டு பண்ணுவதற்காகவும் சித்த சுத்திக்காகவும் தேவதைகளை உபாஸித்தாலும் அதோடு நின்று விடக்கூடாது. ஞானத்தை அடைந்து பரமாத்மாவைத் தவிர தான் என்று ஒன்றில்லை, லோகமென்று ஒன்று இல்லை, தேவதைகள் என்று வேறு இல்லை என்கிற நிலையை அடையவேண்டும். இந்த நிலையை அடைந்தால் வேதமும் வேதம் இல்லாமல் போய்விடும் என்று, அந்த வேதமே சொல்கிறது 2.

வேதம் என்பது என்ன? பரமேச்வரன் போட்ட சட்டம். அந்த சட்டத்தைப் பிரஜைகளான சகல ஜனங்களும் மதித்து நடக்க வேண்டும். ஆனால் ஞானியாகி ஸதா ஸர்வகாலமும் பரமாத்ம ஸத்யத்திலே ஒருவன் உள்ளும் புறமும் ஊறியிருக்கிற போது, அவன் இந்த வேத சட்டத்தைப் பார்த்துப் பார்த்துக் காரியங்களைப் பண்ண வேண்டும் என்பதில்லை. அதனால்தான், 'வேதம் வேதமில்லாமல் போகிறது' என்று சொல்லியிருக்கிறது. நாமும்தான் வேதத்தைச் சட்டமாக மதிக்கவில்லை. நமக்கும் வேதம் வேதமாக இல்லாமல் தானிருக்கிறது! ஆனால் ஞானம் என்றால் என்ன என்றுதான் நமக்கு வாஸனைக்கூடத் தெரியவில்லை.

உபநிஷத்துக்கள் என்கிற பரவித்தையில் கொண்டு சேர்க்கிற உபாயமே கர்மகாண்டம் என்பதைத் தெரிந்து கொள்ளாவிட்டால், வேதமானது (அதாவது, அதன் கர்மகாண்டம்) மற்ற ஹிஸ்டரி, ஜாகரஃபி மாதிரி அபர வித்தையாகத்தான் (அதாவது லௌகிக அறிவு நூலாகத்தான்) நின்றுவிடும். முண்டக உபநிஷத்தில் (I.5) வேதத்தையும் அபரவித்தையோடு சேர்த்திருப்பதற்கு இதுதான் அர்த்தம். இம்மாதிரி தாற்காலிக சௌக்கியத்தோடு வேதத்தின் பயனை நிறுத்திக் கொண்டு விடுபவனை உபநிஷத் வெறும் பசுப்பிராயமானவன் என்றே சொல்லியிருக்கிறது.

ஸகல தேவதைகளும் எதில் தோன்றியிருக்கின்றனவோ, அந்தப் பரமாத்மாவோடு ஐக்கியமாகி விடுகிற ஞானிக்கு அந்தத் தேவதைகளும் அந்நியமில்லை. பரமாத்மோவோடு பரமாத்மாவாக இவன் இரண்டறக் கலந்துவிட்ட பிறகு, தேவதைகளுங்கூட இவனுக்குள் இருக்கிறவர்களே. தேவதைகளை உபாஸிக்கிற காலத்திலேயே இவனுக்கு இது அநுபவத்தில வராவிட்டாலுங்கூட, 'நாம் வெளியே நமக்கு வேறாக தேவதை என்று ஒன்றை உபாஸனை பண்ணுகிறோமே, இதுவுங்கூட ஆத்மாவுக்கு அந்நியமானதில்லை' என்ற எண்ணம் இருந்துகொண்டேயிருக்க வேண்டும். வெளிக்காரியத்தில் பிரிந்து பிரிந்து வித்யாஸமாகத்தான் செய்ய வேண்டுமென்றாலும், இந்த வித்யாஸங்கள் எல்லாம் ஒடுங்கிப் போகிற ஒரே மூல தத்வத்தில் நாம் கடைசியிலே சேரவேண்டும் என்ற எண்ணம் எப்போதும் இருக்க வேண்டும். இப்படியில்லாமல் "எவனொருவன்

தேவதையைத் தனக்கு முழுக்க வேறானது என்றே நினைத்து உபாஸித்திருக்கிறானோ, அவன் ஸத்தியத்தைத் தெரிந்து கொள்ளாதவன், அவன் தேவர்களுக்குப் பசு மாதிரியானவன்" என்று பிருஹதாரண்ய உபநிஷத்தில் (I.4.10) சொல்லியிருக்கிறது.

பசு என்று சொன்னதற்கு நிரம்ப அர்த்தமுண்டு. மநுஷ்யனுக்கு உள்ள ஆறாவது அறிவு இல்லாமல், வெறும் மிருகப் பிராயமாக இருப்பவன் என்பது மேலெழுந்தவாரியான அர்த்தம். உள்ளர்த்தத்தைச் சொல்கிறேன்: நாம் எதற்குப் பசுவைப் போஷிக்கிறோம்? அது நமக்குப் பால் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான். நமக்கு அது க்ஷீரத்தைக் கொடுக்கிறது என்பதற்காகத்தான் நாம் அதற்குப் புல்லும், வைக்கோலும், புண்ணாக்கும், பருத்திக் கொட்டையும் போடுகிறோம். இதே மாதிரி நாம் யக்ஞத்தில் ஹவிஸ்ஸுகளை ஹோமம் கொடுத்து தேவதைகளுக்குப் பிரீதியைச் செய்கிறோம். இப்படி நாம் செய்வதற்குப் பிரதியாகத்தான், அவர்கள் நமக்கு மழை, தான்ய விருத்தி முதலான பல அநுக்ரஹங்களைச் செய்கிறார்கள். நாம் முன்னேயே சொன்ன மாதிரி இந்தத் தேவதைகள் மநுஷ்ய இனத்தைவிட உயர்ந்தவர்களானாலும், இவர்களும் நிறைந்த நிறைவான ஆனந்தத்தை அடைந்தவர்கள் இல்லை. மநுஷ்ய ஜன்மா எடுத்தே ஞானியாக ஆகிவிட்ட ஒருவன் அடைகிற பிரம்மானந்தத்தில் லக்ஷத்தில் ஒரு பங்கு கூட தேவர்களுக்குக் கிடையாது.

தைத்திரீய உபநிஷத்திலும் (II.8) பிருஹதாரண்யக உபநிஷத்திலும் (IV.3.33) மநுஷ்ய லோக ஆனந்தம், பித்ரு

லோக ஆனந்தம், தேவலோக ஆனந்தம், அந்த தேவர்களுக்குள்ளேயே இந்திரனின் ஆனந்தம், பிருஹஸ்பதியின் ஆனந்தம், பிரஜாபதியின் ஆனந்தம் என்று ஒன்றைவிட ஒன்று நூறு மடங்கானது என்று ஒரு பெருக்கல் வாய்ப்பாடு சொல்லிக்கொண்டே போய், கடைசியில்தான் பிரம்மானந்தம் என்ற ஞானியின் ஆனந்தத்தைச் சொல்லியிருக்கிறது. ஆதலால், தேவர்களும் குறையுள்ளவர்கள்தான். அதோடுகூட, எல்லாக் குறையையும் பூர்த்தி செய்கிற ஞானத்துக்காக அவர்கள் பாடுபடுவதும் இல்லை. தங்களுக்கு மநுஷ்யர்களால் உண்டாகிற லாபங்களை எதிர்பார்த்துக் கொண்டு, நாம் செய்கிற யக்ஞம் முதலான உபாஸனைகளை எதிர்பார்த்துக் கொண்டுதான் அவர்கள் இருக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு மநுஷ்யர்கள் ஞானிகளாகி விடுவதும் பிடிக்கவில்லை. ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் இப்படி வியக்தமாகச் சொல்லியிருக்கிறது. 'மனிதர்கள் ஆத்மாவை அறிந்து கொள்வது தேவர்களுக்குப் பிரியமாக இல்லை' என்று அந்த உபநிஷத்தில் (I.4.10) சொல்லியிருக்கிறது. காரணம் என்ன? ஆத்ம ஞானியாக ஆகிவிட்டால் அப்புறம் ஒருவன் தேவர்களைத் திருப்திப் படுத்துகிற யக்ஞாதி கர்மங்களைப் பண்ணமாட்டான்.

நம்முடைய வீட்டு வேலைக்காரன் ஒருவன் இருக்கிறான். அவனுக்கு ஸ்வல்ப சம்பளம் கொடுத்து வருகிறோம். வேறு புது வேலைக்காரன் வந்தால் அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டும். நமது வேலைக்காரன் மேலே பரீக்ஷைகளில் பாஸ் பண்ணி வேறு வேலைக்குப் போய் விருத்தியாக எண்ணுகிறான். பரீக்ஷைக்குப் போகிறான்.

நாம் அவன் பரீக்ஷையில் தேறவேண்டுமென்று நினைப்போமா? மாட்டோம். தேறக் கூடாதென்றுதான் நினைப்போம். தேறிவிட்டால் அவனுக்குக் கௌரவம் வந்துவிடும்; வேறு வேலைக்குப் போய் விடுவான். அவன் போய்விட்டால் அவனைப் போல் ஸ்வல்ப சம்பளத்தில் ஒரு வேலைக்காரனும் நமக்குக் கிடைக்க மாட்டான். இதைப் போலத்தான் இங்கேயும் இருக்கிறது. மநுஷ்யன் ஞானியாக உயர்ந்து, தங்கள் உபாஸனையை விட்டுவிடுவது தேவர்களுக்குப் பிடித்தமில்லை!

ஞானி தேவர்களுக்குப் பிரியமில்லாதவன் என்றால் ஞானியாக இல்லாதவன்தான் அவர்களுக்குப் பிரியன் என்றாகி விடுகிறது. ஆகையால் தேவர்களுக்குப் பிரியமானவன் அஞ்ஞானி, அறியாதவன் என்றாகிறது. அதனால்தான், மூர்க்கன் என்பதற்கே 'தேவனாம் ப்ரியன்', அதாவது தேவர்களுக்குப் பிரியமானவன் என்று வியாகரணத்தில் இன்னொரு பெயர் கொடுத்திருக்கிறது! இந்த பெயருக்கு உபநிஷத்தில் மூலம் இருக்கிறது.

சங்கர பகவத்பாதாள் பிரம்ம ஸூத்ர பாஷ்யத்தில்[I.2.8] பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்று என்றால் ஜீவாத்மாவின் கஷ்ட ஸுகங்கள் பரமாத்மாவுக்கும் உண்டாகும் என்று நினைக்கிறவனுக்கு பதில் சொல்லும்போது, "நீ என்ன ரொம்ப அசடாயிருக்கிறாயே!" என்ற அர்த்தத்தில், 'தேவானாம் ப்ரியனாக இருக்கிறாய்!" என்கிறார்: இதம் தாவத் தேவானாம் ப்ரிய ப்ரஷ்டவ்ய: .

தேவர்களுக்குப் பிரியமானவன் – "தேவானாம் பிரியன்" – என்ற பெயரைக் கேட்டால், இதோ பெரிய டைட்டில்

மாதிரித் தோன்றுகிறது. ஆனால், அதற்கு நிஜ அர்த்தத்தை பார்த்தால் 'அசடு' என்று இருக்கிறது.

அசோக சக்ரவர்த்தியின் கல் வெட்டுத் தூண்களில் அவரை "தேவானாம் ப்ரிய" என்றே சொல்லியிருக்கிறது. அசோகர் காலத்துக்கு முந்தியே, பாணினி தமது வியாகரண புஸ்தகத்தில் தேவானாம் ப்ரியன் என்றால் மூர்க்கன் என்று எழுதி வைத்திருக்கிறார். ஆகையால், பௌத்தனான அசோகனை மட்டம் தட்டவே பிற்காலத்து வைதிகர்கள் அவன் சாஸனத்தில் போட்டுக் கொண்டிருக்கிற டைட்டிலுக்கு அசடு என்று அர்த்தம் பண்ணிக் களங்கம் உண்டாக்கிவிட்டார்கள் என்று நினைப்பது தப்பு. வேத தாத்பரியம் தெரியாதவனைத்தானே நம் ஆசாரியாள் ஸூத்ர பாஷ்யத்தில் தேவானாம் ப்ரியன் என்கிறார்? அசடு என்ற அபிப்ராயத்தில் இப்படிச் சொன்னார். ஆனால் அந்த அபிப்ராயத்தை விட்டுவிட்டு, வேதத்தை ஆட்சேபிக்கிறவன் எப்படிப்பட்டவனானாலும் அவனுக்கு இந்தப் பெயரைக் கொடுத்து விடலாம் என்ற எண்ணத்தில், அவைதிக மதமான பௌத்தத்தைச் சேர்ந்த அசோக சக்ரவர்த்திக்கு 'தேவானாம் ப்ரிய' என்ற பெயரைக் கொடுத்திருக்கிறார்கள் போலிருக்கிறது.

வைதிக மார்க்கத்தை அநுஸரித்து உபநிஷத் வாயிலாக ஞானியாக ஆன ஒருவன், தேவதைகளைப் பீரிதி பண்ணும் யக்ஞத்தை விட்டு விடுவதால் அவன் தேவர்களுக்குப் பிரியமில்லாதவனாகி விடுகிறானென்றால், பௌத்தத்திலோ யாருமே யக்ஞம் பண்ணக் கூடாதாகையால், அவர்கள் எல்லோரையுமே தேவருக்குப் பிரியமாகாதவர்களாகத்தான் சொல்ல வேண்டும். ஆனாலும், "அவைதிக பௌத்தத்தை

விசேஷமாக ஆதரித்த அசோகனை, 'தேவானாம் ப்ரிய' என்று சொல்லியிருக்கிறதே, ஏன்?" என்றால், அவன் வேதாந்தத்தின்படியான ஞானத்தை அடைந்து, தேவர்களுக்கு அப்பிரியமாக ஆகமாட்டான் என்பதை மட்டும் நினைத்து, இப்படிச் சூசகமாகப் பெயர் கொடுத்த மாதிரி இருக்கிறது. அதாவது நல்ல புத்தி சாதுர்யமுள்ளவனாகவும், தேவர்களுக்குப் பிரீதியாக உள்ள யக்ஞ கர்மாக்களைப் பண்ணாதவனாகவும் ஒருவன் அவைதிக பௌத்தம் போன்ற மதத்தில் இருந்தாலும் கூட, அவன் வேதாந்தம் சொல்லுகிறபடி ஞானியாக மாட்டான் என்ற அளவில், அவனையும் தேவானாம் ப்ரியன் என்று சொல்லுகிற வழக்கம் வந்திருக்கலாம்.

அல்லது, விஷயம் தெரியாத சில்பியோ ராஜாங்க அதிகாரியோ, 'தேவானாம் ப்ரியன்' என்றால் நல்ல பேராக, நல்ல அர்த்தமாகத் தெரிகிறதே என்று நினைத்து சாஸனத்தில் அப்படி வெட்டியிருக்கலாம்...

தேவானாம் ப்ரியனாக யக்ஞம் பண்ணிக் கொண்டிருப்பவன் ஞானியாக ஆகிக் கர்மாநுஷ்டானத்தை விட்டுவிட்டால் 'நமக்கு ஒன்றும் கிடைக்காதே' என்று தேவதைகள் பிரதிபந்தங்கள் (இடையூறுகள்) செய்வார்கள். ரிஷிகளின் தபஸைக் கலைப்பதற்கு ரம்பை, மேனகை முதலியவர்களை அனுப்புவார்கள் என்று புராணங்களில் பார்க்கிறோம்.

ஞானியாகும்வரையில் மனிதன் தேவதைகளுக்குரிய கர்மாக்களைச் செய்து கொண்டிருக்கிறான். அதற்காக, அவர்கள் மனிதனுக்கு நல்லது பண்ணுகிறார்கள். மழை

பெய்யச் செய்கிறார்கள். அதற்காக ஹவிர்பாகம் கொடுக்க வேண்டும். நமக்கு இந்த உலகத்தில் ஒருவர் ஓர் உபகாரம் செய்தால் பிரதி உபகாரம் செய்ய வேண்டுமல்லவா? அதைப்போல மழைக்கும் செய்யவேண்டும். அதற்காகத்தான் யக்ஞம் செய்கிறோம். யாராவது ஒரு பிராம்மணர் தேவதைகளுக்கு ஹவிர்பாகம் கொடுக்கிறார். அவர் எல்லோருக்கும் பிரிதிநிதியாக இருந்து கொடுக்கிறார். யாராவது ஒருவர் வரி கொடுப்பதைப் போல் அவர் கொடுக்கிறார்.

ஆகவே ஞானியாகும் வரைக்கும் மனிதன் தேவதைகளுக்குப் பிரியமான கர்மாக்களைச் செய்து அவர்களுக்குப் பிரியமானவனாக இருக்கிறான். மாடு கறந்து பால் பெற்றுக் கொள்வது போலத் தேவர்கள் அவன் மூலம் லாபத்தை அடைகிறார்கள்.

மாடு கறப்பது இல்லையானால், அந்த மாட்டால் மனிதனுக்கு என்ன பிரயோஜனம்? அதுபோல மனிதன் பசுவைப்போல இருக்கிறவரையிலும் தேவதைகள் அவன் மேல் பிரியமாக இருப்பார்கள்; பசுவாயில்லாமற்போனால் வெறுப்பார்கள்: உபத்திரவப் படுத்துவார்கள். அதாவது இரண்டு அர்த்தப்படியும் மனிதன் தேவதைகளுக்குப் பசுவாக இருக்கிறான். அறிவில்லாதவன் என்ற அர்த்தத்தில் மாடு மாதிரி இருப்பதால்; கறவை நின்ற பசுவை நாம் ரக்ஷிக்காத மாதிரி கர்மாவை நிறுத்தினவனைத் தேவர்கள் ரக்ஷிக்காமல் விடுவதாலும் பசு மாதிரி!

தேவதை தனக்கு வேறல்ல என்று அறிவதே ஞானம். அதற்குத்தான் வேதாந்தம் வழி சொல்லிக் கொடுக்கிறது. கர்மாவும் தேவதா உபாஸனையுங்கூட நின்று போய், அனைத்தும் தானாகிவிடுகிற நிறைந்த நிலைக்கு வழி சொல்கிறது. அந்த வேதாந்தத்துக்கு நம் தேசத்தில் எத்தனை கௌரவம் இருந்திருக்கிறது என்பதற்கு ஒரு பெரிய அத்தாட்சி சொல்கிறேன்.

அனந்தமாக இருந்த வேதங்களில் ரிஷிகள் பிடித்துக் கொடுத்ததே ஓரளவுதான். ஆனால் அதுவுங்கூட கலிகால அற்பசக்தர்களால் அப்பியஸிக்க முடியாதது என்பதால், 1180 சாகைகளாகப் (கிளைகளாக) பிரித்து, இதில் ஒவ்வொன்றிலும் ஸம்ஹிதை, பிராம்மணம், ஆரண்யகம், முடிவிலே உபநிஷத் என்று வைத்து, இதில் ஒன்றையாவது ஒருத்தன் அத்யயனம் பண்ணவேண்டும் என்று வைத்தார்கள். பிற்காலத்தில், இதிலும் அநேகம் வழக்கொழிந்து போய்விட்டன. பாக்கியையும் தீர்த்துக்கட்டிவிடுகிற நிலைமைக்கு இந்தத் தலைமுறையைச் சேர்ந்த நாம் புண்ணியம் கட்டிக் கொண்டிருக்கிறோம்! அது இருக்கட்டும். நான் சொல்ல வந்தது, ஒவ்வொரு சாகையிலும் ஒரு உபநிஷத் இருக்கிறது. அம்மாதிரி, இப்போது பூர்ணமாக உள்ள சாகைகளில் இருக்கிற உபநிஷத்துக்களோடுகூடத் தற்போது பிரசாரத்தில் வேறு பல உபநிஷத்துக்களும் இருக்கின்றன. இந்த உபநிஷத்துக்கள் எந்தச் சாகையைச் சேர்ந்தனவோ, அந்தச் சாகையில் ஸம்ஹிதை, பிராம்மணம் முதலிய பாகங்கள் தற்போது அத்யயனம் செய்யப்படவில்லை. அவற்றில் பலவற்றின் 'டெக்ஸ்ட்'

கூட நமக்கு அகப்படவில்லை. ஆனாலும், அவற்றைச் சேர்ந்த அந்த உபநிஷத்துக்கள் மட்டும் இன்று வரை அழியாமல் வந்திருக்கின்றன. உதாரணமாக ரிக் வேதத்தில் 'சாங்காயன சாகை' என்பதன் ஸம்ஹிதா பாகம் இப்போது அத்யயனத்தில் இல்லை; அதை இழந்து விட்டோம். ஆனாலும் அந்த சாகையின் முடிவிலே வருகிற கௌஷீதகீ உபநிஷத் மட்டும் இன்றைக்கும் நம்மிடையே ஜீவனோடு இருந்து வருகிறது. ரிக் வேதத்திலேயே 'பாஷ்கல மந்த்ரோபநிஷத்து' என்று ஒன்று நமக்கு வந்திருக்கிறது. அடையாறு லைப்ரரியில் இதன் சுவடிகள் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இது எந்தச் சாகையின் முடிவில் வருகிறதோ, அந்த "பாஷ்கல சாகை" என்பதன் ஸம்ஹிதையைப் பற்றியோ பிராம்மணத்தைப் பற்றியோ நமக்கு ஒன்றும் தெரியவில்லை. 'கடோபநிஷத்' என்பது கிருஷ்ண யஜுர் வேதத்தில் கடசாகை என்பதைச் சேர்ந்தது. உபநிஷத் என்பது ஆரண்யகத்தின் கடைசியில் வருவது என்று முன்பே சொன்னேனல்லவா? ஆனால் இன்றைக்குக் கடோபநிஷத்து மிகவும் பிரஸித்தமாக, தசோபநிஷத்துக்களிலேயே ஒன்றாக இருந்த போதிலும், இதற்கான ஆரண்யகம் நமக்குக் கிடைக்கவில்லை. அதர்வ அத்யயனம் வட இந்தியாவில் சில பாகங்களில் கொஞ்சம் மூச்சைப் பிடித்துக் கொண்டிருப்பது தவிர, தக்ஷிண தேசத்தில் அடியோடு மறைந்து போய்விட்டிருக்கிறது. ஆனாலும், பத்து உபநிஷத்துக்களில் மூன்று ('ப்ரச்னம்', 'முண்டகம்', 'மாண்டூக்யம்') அதர்வ வேதத்தைச் சேர்ந்தவைகளாகவே இருக்கின்றன.

அதாவது கர்மாக்களுக்குப் பிரதானமாக இருக்கிற சாகா (சாகையின்) பாகங்கள் மறைந்து போகும்படி விட்டுவிட்டாலும், தத்வத்தை மட்டும் விடக்கூடாது என்று, நம் தேசத்தில் இப்படி ஞான உபாயமான உபநிஷத்துக்கள் பலவற்றை விசேஷமாகக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள்.

உபநிஷத்துக்கள் ஏகப்பட்டன இருந்திருக்கின்றன. இருநூறு வருஷங்களுக்கு முன் காஞ்சீபுரத்திலே இருந்த ஒரு யதிகள் 108 உபநிஷத்துக்களுக்கு பாஷ்யம் எழுதியிருக்கிறார். அவருக்கு 'உபநிஷத் பிரம்மேந்திராள்' என்றே பேர் ஏற்பட்டுவிட்டது. இன்னமும் அங்கே அவர்களுடைய மடம் இருக்கிறது.

1 IV.32-33.

2 ப்ருஹதாரண்யகோபநிஷத் IV.3.22

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

தசோபநிஷத்துக்கள்

"தசோபநிஷத்" என்ற பத்தைப் பொறுக்கி ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் அத்வைத பரமாக பாஷ்யம் பண்ணினார். பின்னால் வந்த விசிஷ்டாத்வைதம், த்வைதம் முதலியவற்றை சேர்ந்த பெரியவர்களும் இதே பத்துக்குத் தங்கள் தங்கள் ஸித்தாந்தப் பிரகாரம் பாஷ்யம் செய்தார்கள். இந்த பத்தையும் சுலபமாக ஞாபகத்தில வைத்துக் கொள்வதற்காகப் பெயர்களை ஒரு ச்லோக ரூபத்தில் கோத்துச் செல்வதுண்டு.

ஈச-கேன-கட-ப்ரச்ன-முண்ட-மாண்டூக்ய-தித்திரி|

ஐதரேயம் ச சாந்தோக்யம் ப்ருஹதாரண்யகம் தச||

ச்லோகத்தில் சொல்லியிருக்கிற order (வரிசைக் கிரமப்) படித்தான் ஆசார்யர்கள் பாஷ்யம் பண்ணியிருக்கிறார்கள்.

இதிலே ஈசம் என்பது ஈசாவாஸ்ய உபநிஷத். அது சுக்ல யஜுர் வேதத்தில் ஸம்ஹிதையிலே முடிவாக வருவது. "ஈசாவாஸ்யம்" என்ற வார்த்தையோடு ஆரம்பிப்பதால் இந்த உபநிஷத்துக்கு இப்படிப் பெயர். "கேன" என்று ஆரம்பிக்கும் அடுத்த உபநிஷத்துக்கு "கேனோபநிஷத்" என்றே பேர். 'ஈச்வரனால்தான் இந்த லோகம் முழுக்கவும் வியாபிக்கப்பட்டிருக்கிறது. அவனுக்கே கர்மாக்களை அர்ப்பணம் பண்ணிப் பரமாத்ம தத்வத்தை நாம் அடைய வேண்டும்' என்று ஈசாவாஸ்யோபநிஷத்து கூறுகிறது.

மரயானைப் பொம்மையைப் பார்த்தால் குழந்தை அது யானை என்றே எண்ணுகிறது. பெரியவர்களுக்கு அது யானை மாதிரி இருந்தாலும் மரம்தான் என்று தெரிகிறது. குழந்தைக்கு மரம் மறைந்து யானை தெரிகிறது. பெரியவர்களுக்கு யானை மறைந்து மரம் தெரிகிறது. இப்படியே பார் (உலகம்) முதலாக பஞ்ச பூதங்களும் பரமாத்மா என்ற மரத்தால் பண்ணின பொம்மைதான். பரமாத்மாதான் இத்தனையும் என்று நாம் பார்க்கவேண்டும்.

மரத்தை மறைத்தது மாமத யானை

மரத்தில் மறைந்தது மாமத யானை

பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்

பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்

என்று திருமூலர் சொன்னபடி, பஞ்ச பூதங்களையே பார்த்துக்கொண்டு, அதன் காரணமான பரமாத்மாவை மறந்திருப்பதை விட்டு, இவற்றால் பரமாத்மா மறைந்துப்போகவிடாமல், இவற்றிலும் வியாபித்திருப்பது பரமாத்மாதான் என்று, அனைத்தையும் ஈச்வர வியாபகமாகப் பார்க்க வேண்டும். திருமூலர் சொன்னதையே அச்சடித்தாற்போல் "தந்தினி தாரு விகாரே" – மரத்தின் மாற்று ரூபத்தில் யானை – என்று ஆசார்யாள் சொல்கிறார் 1. இவற்றில் எது முந்தி, எது பிந்தி என்ற வாதத்துக்கு நான் வரவில்லை. மஹா புருஷர்களுக்கு ஒரே மாதிரித்தான் தோன்றும்.

'கேனம்' என்பது கேனோபநிஷத். அது ஸாம வேதத்தில் ஜைமினி சாகையில், தலவகார பிராம்மணத்தில் வருவதால் 'தலவகார உபநிஷத்' என்றும் சொல்வதுண்டு. 'கெட்டதைக் கேனத்தில் தேடு' என்று வசனம் இருக்கிறது. அடிமுடி தெரியாத பரம்பொருளை, அஹம்பாவம் பிடித்த தேவர்கள் தெரிந்து கொள்ள முடியாமல் தேடினபோது, ஸாக்ஷாத் அம்பிகையே தேவேந்திரனுக்கு ஞானோபதேசம் செய்ததை இந்த உபநிஷத் சொல்கிறது. நம்முடைய சகல சக்திகளும் ஒரே மஹாசக்தியிடமிருந்து வந்ததுதான் என்று ஸாக்ஷாத் பராசக்தியே உபதேசிக்கிறாள். இதற்கு ஸ்ரீ பகவத்பாதாள் மற்ற உபநிஷத்துக்களுக்கு பாஷ்யம் செய்த மாதிரிப் பதம் பதமாக எடுத்துக்கொண்டு பாஷ்யம் செய்ததோடு நிற்காமல், வாக்கியம் வாக்கியமாகவும் எடுத்துக் கொண்டு இன்னொரு பாஷ்யம் செய்திருக்கிறார். அதாவது இந்த உபநிஷத்து ஆசார்யாளின் இரட்டை பாஷ்யத்தைப் பெற்றிருக்கிறது. ஸௌந்தர்ய லஹரியிலும் ஆசார்யாள் இந்த உபநிஷத்தை முக்கியமாக நினைத்துக் கொண்டே, "வேதமாதாவின் சிரஸில் வைக்கப்பட்ட உன் திருவடிகளை என் தலை மேலும் வையம்மா" என்று அம்பாளை பிரார்த்தனை பண்ணுகிறார் 2. வேதாந்தம் என்ற மாதிரியே வேத சிரஸ், ச்ருதி சிரஸ் என்ற பெயரும் உபநிஷத்துக்களுக்கு உண்டு. சிரஸ் என்றால் தலை. 'முடி' என்றும் தமிழில் சொல்கிறோம். வேதத்தின் அந்தமாக, முடிவாக இருப்பதோடு அதன் சிரஸான முடியாகவும் இருப்பவை உபநிஷத்துக்களே. வேத மாதாவின் சிரஸில் அம்பாள் பாதம் இருக்கிறது என்றால், அது உபநிஷத்தில் இருக்கிறது என்றே அர்த்தம். இந்தக் கேனோபநிஷத்தில்தான் அம்பாள் ஞானாம்பிகையாக

வருகிறாள். "ஸாமகான ப்ரியா" என்று லலிதா ஸஹஸ்ர நாமத்தில் அவளுக்கு ஒரு பெயர் சொன்னதற்கு ஏற்றாற்போல், இந்த ஸாமவேத உபநிஷத்தில் அவளுடைய பெருமை விசேஷமாகத் தெரிகிறது.

ஒரு வஸ்துவை நாம் பார்க்கிறோம் என்றால், பார்க்கப் படுகிற object என்றும், பார்க்கிறவனான subject என்றும் இரண்டு ஏற்பட்டுவிடுகின்றன. நம் உடம்பை நம்மால் object-ஆகத் தெரிந்து கொள்ள முடிகிறது. "என் உடம்பு நன்றாயிருக்கிறது; அல்லது நன்றாக இல்லை" என்று நாம் அதைப் பற்றித் தெரிந்து கொள்கிறோம் என்றால், அப்போது அது object-ஆகி விடுகிறது. அதிலிருந்து வேறாக, 'நாம்' என்ற ஏதோ ஒன்று subject-ஆக இருந்து கொண்டு, அதைப் பார்க்கிறது என்று ஏற்படுகிறது. அப்படிப் பார்ப்பது எதுவோ அதுதான் ஆத்மா. இந்த subject-ஐ எதனாலும் தெரிந்து கொள்ள முடியாது. அப்படித் தெரிந்துகொள்ள முடிந்து விட்டால் அதுவும் object-ஆகி, அதைப்பார்க்கிற இன்னொரு subject-தான் நிஜ நாம் என்று ஆகிவிடும். நிஜமான நாமான ஆத்மா subject-ஆகத்தான் இருக்கமுடியுமே தவிர object ஆகாது. எனவே சரீரம் முதலான object-களைத் தள்ளிவிட்டு, இந்த subject-ஆக நாம் அநுபவத்தில் தனித்து இருந்து கொண்டுதான் இருக்க முடியுமே தவிர, அதை அறிந்து கொண்டு இருக்க முடியாது. அறிவது என்றால், இதைவிட இன்னொன்று இதை object-ஆக்கி ஆராய்ந்தால்தான் முடியும். ஆத்மாவின் விஷயத்தில் இது அஸம்பாவிதம். ஆத்மாதான் நிஜமான நாம், அதை அறியவேண்டும் என்றால், அப்படி அறிகிற வஸ்து ஆத்மாவுக்கு வேறானதாகத்தான் இருக்க வேண்டும்.

நம்மில் நம்முடைய நிஜமான ஸ்வரூபத்துக்கு வேறாக என்ன இருக்கமுடியும்? ஆத்மாவுக்கு அந்நியமாக அதை அறிய எது உண்டு? எதுவும் கிடையாது. அதனால், "ஆத்ம ஞானம்", "ஆத்மாவை அறிவது" என்ற வார்த்தைகளைச் சொன்னால்கூட, இங்கெல்லாம் ஞானம், அறிவது என்பதற்கு ஒரு ஸப்ஜெக்ட் இன்னொரு ஆப்ஜெக்டை அறிகிறது என்று அர்த்தமில்லை. தன்னைத்தானே அநுபவித்துக் கொள்வதைத்தான் இந்த இடங்களில் 'ஞானம்', 'அறிவது' என்ற வார்த்தைகளால் சுட்டிக் காட்டுகிறோம். இதனால் தான் கேனோபநிஷத், "எவன் ஆத்மாவை அறிந்துவிட்டேன் என்கிறானோ அவன் அறியவே இல்லை; எவன் அறியவில்லை என்ற நிலையில் இருக்கிறானோ அவன்தான் அறிகிறான். தெரியும் என்று நினைக்கிறவனுக்குத் தெரியாது; தெரியாது என்ற நிலையில் இருக்கிறவனுக்கே தெரிந்தது" என்கிறது. "கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்" என்று சொல்வதும் இதைத்தான்.

"கட" என்றது கடோபநிஷத். க்ருஷ்ண யஜுஸில் கடஸாகையில் வருவது. அதிலே, செத்தபின் ஜீவன் என்ன ஆகிறான் என்பதைப்பற்றி நசிகேதஸ் என்ற பிரம்மச்சாரிக்கு யமதர்மராஜா பண்ணின உபதேசம் வருகிறது. கதை மாதிரி ஆரம்பித்துப் பெரிய தத்வத்தில் கொண்டு போய்விடும். கீதையில் பகவான் முக்கியமாக இந்த உபநிஷத் வாக்யங்களைத்தான் எடுத்துக்கொண்டு, திருப்பிச் சொல்லியிருக்கிறார்.

முன்னே ஸப்ஜெக்ட் – ஆப்ஜெக்ட் பற்றி நான் சொன்னது இந்த உபநிஷத்தின் கடைசியில் ரொம்பவும் அழுத்தமாக,

உபதேசிக்கப் பட்டிருக்கிறது. பயிர்த் தண்டிலிருந்து கதிரை உருவி எடுக்கிறோம் அல்லவா? ஒரு ஈர்க்குச்சியில் மேல் தோலிலிருந்து உள்ளேயிருக்கும் ஈர்க்கை அப்படியே உருவி விடுகிறோம் அல்லவா? அந்த மாதிரி, ஆப்ஜெக்டான சரீரத்திலிருந்து ஸப்ஜெக்டான ஆத்மாவைத் தைரியமாக உருவி எடுத்துக்கொண்டு, அதுவாகவே இருக்கவேண்டும் என்று அந்த மந்திரம் (VI:17) சொல்கிறது. 'காமம், க்ரோதம், த்வேஷம், பயம் எல்லாம் மனஸை சேரந்தனவே ஒழிய, ஆத்மாவான எனது அல்ல. பசி, தாகம் முதலியன உடம்பைச் சேர்ந்தனவே, தவிர என்னுடையன அல்ல, என்று ஆத்மாவைச் சேராத எல்லா அநாத்மவஸ்துக்களையும் objectify பண்ணி, வெளியே தள்ளுவதற்கு ஸதா பழகிக் கொண்டேயிருக்க வேண்டும். இம்மாதிரி எப்பொழுதும் அநுஸந்தானம் செய்து வந்தால், உடம்பும் மனஸும்தான் நாம் என்பதாக வேரூன்றியிருக்கும் அபிமானம் கொஞ்சம் கொஞ்சமாக நலிந்து, மறைந்தே போய்விடும். உடம்புக்கும் மனஸுக்கும் இருக்கப்பட்ட அழுக்குகள் எதுவுமில்லாத சுத்தமான ஆத்மாவாக நாம் இருக்கலாம். இப்படி, சரீரத்திலிருந்தும் மனஸிலிருந்தும் ஆத்மாவைப் பிரிப்பதற்கு, முஞ்சம் புல்லுக்குள்ளிலிருந்து ஈர்க்கு பளிச்சென்று சுத்தமாக வழவழவென்று பிரிந்து வருவதைத் திருஷ்டாந்தமாகச் சொல்லியிருக்கிறது. இதோ பக்கத்தில் இருக்கிற இந்த வாழைக்கட்டை வாடி வதங்கிப் போனால், நாம் வாடி வதங்குகிறோமா? அந்த வாழைக்கட்டையை விட, இன்னம் கொஞ்சம் கிட்டேயிருக்கும் மாம்ஸக் கட்டை என்றே இந்த சரீரத்தை எண்ணவேண்டும். அந்த வாழைக்கட்டை ஸப்ஜெக்டான நாமாக இல்லாமல் 'ஆப்ஜெக்'டாக இருக்கிற

மாதிரியே, ஆத்மா என்ற ஸப்ஜெக்டுக்கு இந்த நம் உடம்பையும் வேறான ஆப்ஜெக்டாகப் பார்க்கப் பழக வேண்டும்.

இந்த லோகத்தில், நாம் சரீரத்தில் இருப்பதாகத் தோன்றும் இப்போதே, இப்படி சரீரத்தை 'நானல்ல', 'என்னுடையதல்ல' என்று பண்ணிக்கொள்ள வேண்டும். அப்போது, செத்துப் போனபின் தான் வேறு ஏதோ கைலாஸ வைகுண்டாதி லோகங்களுக்குப் போய் மோக்ஷம் அடையலாம் என்று இல்லாமல், இங்கேயே மோக்ஷமாகி விடும்! மோக்ஷம் என்றால், எந்த பாரமும் இல்லாமல் விடுபட்ட ஸதாநந்தம் என்றே அர்த்தம். அப்படி இந்த லோகத்திலேயே சரீரப் பிரக்ஞையை விட்டு, ஆத்மாராமனாக இருப்பவனைத்தான் ஜீவன் முக்தன் என்பது. வேத வேதாந்தங்களின் பரம தாத்பர்யம் ஒருத்தனை இப்படி ஜீவன் முக்தனாக்குவதுதான். கீதையில், பகவான் ப்ராக் சரீர விமோக்ஷணாத் (சரீரத்திலிருந்து உயிர் வெளியே போகிறதற்கு முந்தியே), இந்த லோகத்தில் இருக்கும்போதே –இஹைவ– எவன் காம க்ரோத வேகங்களை அடக்கி விடுகிறானோ அவனே யோகத்தில் நிலைத்து நித்ய ஸுகத்தை அநுபவிக்கிறவன் என்று, இதே கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார்3. இஹைவ – இஹ ஏவ – அதாவது இங்கே இந்த பூலோகத்தில் இருக்கிற போதே, இப்படி ஆத்மாவைத் தெரிந்து கொண்டுவிட்டால் (அதாவது அநுபவித்து விட்டால்), சரீரம் போனாலும் போகிறது தெரியாது. சரீரம் இருக்கிறபோதேதான் அது தன்னுடையதல்ல என்று போக்கிக் கொண்டாகி விட்டதே! ஆகையால், சாவு என்று ஒன்று வந்து சரீரத்தைப்

போக்கடிக்க வேண்டுமா என்ன? சரீரம் (சரீரம் என்கிறபோது மனஸையும் சேர்த்துத்தான் சொல்வதாக அர்த்தம்) தனதல்ல என்றாக்கி விட்டால், அப்புறம் சாவே இல்லை. தனதில்லாத சரீரத்துக்கு வருகிற சாவு தன்னை எப்படி பாதிக்கும்? ம்ருத்யுவான சாவு இல்லாததால், இவன் அமிருதமாகி விடுகிறான். "இஹைவ" இவன் இப்படி அமிருதமாவதைத்தான் கர்மகாண்டத்திலே வருகிற புருஷஸூக்தாதி மந்திரங்களும் சொல்கின்றன. உபநிஷத்துக்களில் இந்த கருத்து விசேஷமாகத் திரும்பத் திரும்பக் கூறப்படும்.

நமக்கு துக்கஹேதுவாக இருப்பது சரீரமும் அதன் மூலம் செயல்படுகின்ற மனஸும்தான். துக்கம் போய் ஸதா ஆனந்தமாக இருப்பதைத்தான் எல்லா மதத்திலும் மோக்ஷம் என்று சொல்லியிருக்கிறது. அதற்காக வேறு ஏதோ பரலோகம், மோக்ஷலோகம் என்ற ஒன்றுக்குப் போகவேண்டும் என்றுதான் அத்வைதத்தைத் தவிர மற்ற ஸம்பிரதாயங்களெல்லாம் சொல்கின்றன. அந்த லோகங்களில் கிடைப்பதைவிட நிறைவான ஆனந்தம், நிஜமான மோக்ஷம், இந்த லோகத்தில் இருக்கும்போதே, சரீர அபிமானத்தை அடியோடு தள்ளி விட்டு ஆத்மாவில் வேரூன்றி நிற்பதால் கிடைக்கிறது என்று சங்கர பகவத் பாதாள் ஸ்தாபித்திருக்கிறார்.

ததேதத் அசரீரத்வம் மோக்ஷாக்யம்

என்று ஸூத்ர பாஷ்யத்தில் (I.1.4) சொல்கிறார். 'அசரீரி' என்றால் நாம் என்ன நினைத்துக் கொண்டிருக்கறோமென்றால், ஆள் தெரியாமல் ஒரு குரல்

மட்டும் கேட்பது என்று. அசரீரி என்றால் சரீரம் இல்லாமலிருப்பது என்பதே அர்த்தம். "சரீரம் நான்" என்கிற பிரக்ஞை போகிறதுதான் அசரீரத்வம். அதுதான் மோக்ஷம் என்று ஆசார்யாள் லட்சணம் கொடுக்கிறார். சரீரம் இல்லாமல் அசரீரியாகப் பண்ணிக் கொள்வது என்றால், தற்கொலை செய்துகொள்வது என்று அர்த்தமில்லை. தற்கொலையும் ஸாதாரணச் சாவும் ஸ்தூல தேஹத்திற்குத்தான். இது போனபின்னும் மனோமயமான ஸூக்ஷ்ம தேஹம் இருந்து கொண்டு கஷ்டப் படுத்தும். ஆசைகளை குறைத்துக் கொண்டே வந்து, அடியோடு தேய்த்து விட்டால்தான் சரீராபிமானம் முற்றிலும் போய், அபிமானிக்கிற மனஸும் போய்விடும். உள்ளேயிருக்கிற ஆத்மா மட்டுமே பிரகாசிக்கும். இதற்காக, வேறு எந்த லோகத்துக்கும் போகத் தேவையில்லை. இதைத்தான் வேத வேதாந்தங்கள் இஹைவ, இஹைவ என்பது.

இந்த அம்ருத நிலையை அடைவதற்கு முக்யமான இரண்டு சத்ருக்கள் காம, க்ரோதம் என்று கீதையான ஸ்மிருதியில் சொல்லியிருக்கிறது. அதற்கு ஆதாரம் ச்ருதியான சாந்தோக்யத்தில் உள்ள (VIII.12.1) 'ப்ரிய அப்ரியம்' என்ற வாக்கியம்: 'விருப்பு வெறுப்பு' என்று அர்த்தம். விருப்பு தான் காமம்; வெறுப்பு க்ரோதம். சரீரம் இல்லாதவனை விருப்பு வெறுப்புகள் தொடமாட்டா என்று சாந்தோக்யம் சொல்கிறது. அதாவது, "நீ விருப்பு வெறுப்பிலிருந்து விடுபட வேண்டுமானால் உயிரோடு இருக்கிறபோதே சரீரம் நானில்லை என்று ஆக்கிக்கொள்" என்கிறது.

ஒரே ஜீவாத்மாவின் அஹங்கார - மமகாராதிகளை ஒட்டி [நான் எனது என்ற பாவனைகளை ஒட்டி] கௌணாத்மா, மித்யாத்மா, முக்யாத்மா என்று மூன்றாகப் பிரித்துச் சொல்வது வழக்கம். பெரியோர்கள் இந்த விஷயத்தை ச்லோகமாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த ச்லோகமானது பகவத்பாதாளால் ப்ரம்ம ஸூத்ர பாஷ்யத்தில் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது.

கௌண-மித்யாத்மனோ (அ) ஸத்வே புத்ர தேஹாதி பாதனாத்।

ஸத் -ப்ரஹ்மாத்மாஹம் இத்யேவம் போதே கார்யம் கதம் பவேத்॥

(ஸூத்ர பாஷ்யம் I.1.4)

புத்ர மித்திரர்கள் நாமே என்றும், அவர்களுடைய ஸுகதுக்கம் நம்முடையது என்றும் எண்ணும் அபிமானமானது எல்லாரிடத்திலும் குடிகொண்டிருக்கிறது. அதுதான் கௌணாத்மா. கௌணமென்றால், உபசாரமாகச் சொல்லுவதென்று அர்த்தம். நாம் வேறு, புத்ர மித்ரர்கள் வேறு என்று நமக்குத் தெரிந்திருக்கும் பொழுதே, நாம் நாம் என்கிற அபிமானம் நமக்கு அவர்களையொட்டி வருவதால் கௌணாத்மா என்று சொல்லப்பட்டது. அவர்களைவிட நெருங்கின சரீரம் முதலியவற்றில் நான் என்கிற அபிமானம் உண்டாவது மித்யாத்மா. சுத்தமான ஆத்ம ஸ்வருபத்தைப் பிரித்து, ப்ரம்ம ஸ்வரூபமே நான் என்பது அநுபவத்திற்க்கு வருகிறபொழுது, ப்ரம்மமே ஆத்மாவாகி விடுகிறது. அதைத் தான் முக்கியாத்மாவென்று சொல்வது. முதலில் சொல்லப்பட்ட கௌணாத்மா, மித்யாத்மா

இவ்விரண்டையும் விலக்கி விட்டால் புத்ர மித்திரர்கள், சரீர இந்திரியங்கள் இவைகளுடைய ஸம்பந்தம் நீங்கிவிடும். அப்பொழுது 'ஸத்யமான ப்ரம்ம ஸ்வரூபமாகவே நான் இருக்கிறேன்' என்கிற ஞானம் உண்டாகிறது. அதற்குப் பிறகு செய்யவேண்டியது ஒன்றுமே கிடையாது என்பது மேலே சொல்லிய ச்லோகத்தின் தாத்பரியம்.

"Arise, awake: எழுந்திருங்கள்,விழித்துக் கொள்ளுங்கள்" என்று, விவேகாநந்தர் எல்லாரையும் தட்டி எழுப்பி, ராமகிருஷ்ணா மிஷனுக்கு motto-வாக (லக்ஷ்ய வாசகமாக) வைத்தது, கடோபநிஷத்தில் வருகிற மந்திரம்தான். இப்போது நிறைய மேற்கோள் காட்டப்படும் அநேக வாசகங்கள் இந்த உபநிஷத்தில் வருகிறவையே. உதாரணமாக, "படிப்பாலோ மேதாவித்தனத்தாலோ ஆத்மாவை அடைய முடியாது" ("நாயமாத்மா") என்கிற மந்திரம்; ஜீவன் என்ற தேர்க்காரனுக்கு சரீரம் தேர், புத்தி ஸாரதி, மனஸ் கடிவாளம், இந்திரியங்கள் குதிரைகள் என்ற விஷயம்; ஹ்ருதய குகையில் பரமபுருஷன் அங்குஷ்ட (கட்டை விரல்) பிரமாணமாக ஜோதி ரூபத்திலிருக்கிறான் என்ற ஸமாசாரம்; தீபாராதனை செய்கிறபோது சொல்லும் 'ந தத்ர ஸூர்யோ பாதி' மந்திரம் (பரமாத்மாவின் ஸந்நிதானத்தில் சூரியன், சந்திரன், நக்ஷத்திரம், அக்னி எல்லாமே ஒளி மழுங்கி விடுகின்றன. அவனால் தான் இவற்றுக்கெல்லாம் பிரகாசமாதலால், இவற்றால் அவனை விளக்கிக் காட்டமுடியாது' என்ற அர்த்தம். நம் அறிவெல்லாம் அந்தப் பேரறிவிலிருந்தே உண்டானதால், இந்த நம் சிற்றறிவால் அவனை விளக்க முடியாது); பிற்பாடு கீதையிலும் பகவான்

சொல்லும் ஸம்ஸாரம் என்ற தலைகீழ் அச்வத்த விருட்சத்தைப் பற்றிய பிரஸ்தாவம்; ஹ்ருதயத்தில் குடிகொண்டுள்ள ஆசைகளை எல்லாம் ஒழித்துவிட்டால், இங்கேயே மனிதன் அமிருதமாகி பிரம்மத்தை அநுபவிக்கிறான் என்ற விஷயம் – இப்படி அநேக சமாசாரங்கள் இன்று quote பண்ணப்படுவதெல்லாம் கடோபநிஷத்தில் வருபவை தான்.

'கடோப'நிஷத்துக்கு அப்புறம் வரும் 'ப்ரச்னோபநிஷத்', 'முண்டகோபநிஷத்', 'மாண்டூக்யோபநிஷத்' ஆகிய மூன்றும் அதர்வ வேதத்தைச் சேர்ந்தவை. 'ப்ரச்னம்' என்றால் கேள்வி. பிரஜைகள் உற்பத்தியானது எப்படி? அவர்களை ரக்ஷிக்கிற தேவர்கள் யார்? பிராணன் எப்படி சரீரத்தில் வந்து இயங்குகிறது? விழிப்பு, தூக்கம், ஸ்வப்னம் என்கிற நிலைகளைப் பற்றின உண்மை என்ன? ஓங்கார உபாஸனையின் பிரயோஜனம் என்ன? பரம புருஷனுக்கும் ஜீவனுக்கும் என்ன சம்பந்தம்?- என்கிற ஆறு பிரச்னங்களுக்கு விடை சொல்வதால் இந்த உபநிஷத்துக்கு இப்படிப் பெயர் ஏற்பட்டிருக்கிறது.

முண்டகம் என்றால் தலையை மொட்டை அடித்துக் கொள்வது. ஸந்நியாஸிகள் மாதிரியான பரம பக்குவமான வைராக்யசாலிகளே அப்யஸிப்பதற்கு அதிகாரம் பெற்ற உபநிஷத்துக்கு 'முண்டகோபநிஷத்' என்ற பெயர் இருக்கிறது. அக்ஷர பிரம்மத்தைப் பற்றிச் சொல்கிற உபநிஷத் இது. அழிவில்லாதது எதுவோ அதுவே அக்ஷரம். அக்ஷரம் என்றால் ஒலி என்ற அர்த்தமும் இருக்கிறது. பஞ்சாக்ஷரம், அஷ்டாக்ஷரம் என்றெல்லாம் சொல்கிறோம் அல்லவா? இந்த ஒலிகளுக்கெல்லாம் மூலமான

அக்ஷரம்தான் பிரணவம் என்னும் ஓம்காரம். அக்ஷரப் பிரம்மம் என்ற லக்ஷ்யத்தில் சேர்வதற்கு அக்ஷரமான பிரணவம் விசேஷ ஸாதனமாக இருக்கிறது. ஓம்கார வில்லில் ஆத்மா என்ற அம்பைப் பூட்டிக் கொஞ்சங்கூட கலக்கமில்லாமல் பிரம்மம் என்ற குறியில் அடித்து ஒன்றாக்கி விடவேண்டும் என்று இந்த உபநிஷத் சொல்கிறது. ஜீவாத்மா, பரமாத்மா இரண்டையும் சரீரம் என்கிற ஒரே பிப்பல மரத்திலிருக்கிற இரண்டு பக்ஷிகளாகவும், அவற்றில் ஜீவாத்ம பக்ஷி மட்டும் பழத்தை (கர்ம பலத்தை)ச் சாப்பிடுவதாகவும், பரமாத்ம பக்ஷி சாக்ஷி மாத்திரமாகப் பார்த்துக் கொண்டு மாத்திரம் இருப்பதாகவும் இந்த உபநிஷத்தில்தான் வருகிறது. இதுவே பைபிளில் ஆதம் (ஆத்மா) ஆப்பிள் (பிப்பில) பழத்தைச் சாப்பிடாமலிருந்ததாகவும், ஈவ் (ஜீவன்) அதைச் சாப்பிட்டதாகவும் கதையாயிற்று. இப்போது குடியரசு சர்க்காரில் 'ஸத்யமேவ ஜயதே' என்ற motto [லக்ஷ்ய வாசகம்] வைத்துக்கொண்டிருக்கிறார்களே, அது முண்டகோபநிஷத் மந்திரம்தான். இந்த லோகத்திலேயே ஜீவன் முக்தர்களாக இருந்து, சரீரம் போனபின் விதேஹ முக்தர்களாகிற ஸந்நியாஸிகளைப்பற்றியும் இதில் ஒரு மந்திரம் இருக்கிறது. இப்போது ஸந்நியாஸிகளுக்குப் பூர்ண கும்பம் கொடுக்கும்போது சொல்கிற மந்திரங்களில் இந்த மந்திரமும் வருகிறது. வெவ்வேறு பெயரில், வெவ்வேறு ரூபத்தில் ஓடுகிற நதிகள் யாவும் ஸமுத்திரத்தில் தங்கள் பெயரையும் உருவத்தையும் இழந்து ஸமுத்திரமாகவே ஆகிவிடுவதுபோல, ஞானி நாம ரூபங்களை இழந்து பராத்பரனான புருஷனில் இரண்டறக் கலந்துவிடுகிறான் என்று இந்த உபநிஷத் சொல்கிறது.

'மாண்டூக்கோயபநிஷத்து' அடுத்தது. மாண்டூக்யம் என்றால் தவளை. 'தவளை உபநிஷத்து' என்று ஏன் பேர்? ஒரு காரணம் தோன்றுகிறது. தவளை ஒவ்வொரு படியாக ஏற வேண்டும் என்பதில்லை. அப்படியே தாவி முதல் படியிலிருந்து நாலாம் படிக்கு எகிறிக் குதித்து வரும். இந்த உபநிஷத்திலே ஜாக்ரம் (விழிப்பு நிலை), ஸ்வப்னம் (கனவு நிலை), ஸுஷுப்தி (தூக்க நிலை) இவற்றைத் தாண்டி ஆத்மவெளியான துரீயத்தில் (நாலாம் நிலையில்) சேருவதற்கு வழி சொல்லியிருக்கிறது. 'ஓம்' என்ற அக்ஷர உபாஸனையாலேயே இப்படி ஒரே தாவாகத் துரீயத்துக்குத் துள்ளிக் குதிப்பதைச் சொல்லியிருக்கிறது. அதனால்தான் 'தவளை உபநிஷத்து' என்று பேர் வந்துவிட்டதோ என்று தோன்றுகிறது. ரிஸர்ச் செய்பவர்கள், ஆதிகால ஜனங்களில் ஒவ்வொரு கோஷ்டியும் ஒவ்வொரு பிராணி வர்க்கத்தின் பேரில் totem என்று அடையாளம் வைத்துக் கொண்டு, தனித் தனிப்பிரிவுகளாகச் சேர்ந்திருந்தார்கள் என்றும், இதிலே தவளை அடையாளம் வைத்துக் கொண்ட மாண்டூக்யர்களிடம் இருந்த உபநிஷத்தே இது என்றும் சொல்கிறார்கள். இந்த உபநிஷத்தின் ரிஷி மண்டூக ரூபியான வருண பகவான் என்று சொல்லப்படுகிறது.

உபநிஷத்துக்களுக்குள் ரொம்பச் சின்னது இதுதான். மொத்தம் பன்னிரண்டே மந்திரங்கள்தான். ஆனால் கீர்த்தியிலும், சக்தியிலும் இந்த உபநிஷத் விசேஷமான இடம் பெற்றிருக்கிறது. பிரணவத்தின் நாலு பாதங்களைக் காட்டி ஜீவாத்மா, பரமாத்மா இரண்டும் ஒன்றே என்று இது நிர்த்தாரணம் செய்கிறது. கடைசியில் பிரபஞ்சமெல்லாம்

ஒடுங்கிப் போகிற துரீய அநுபவத்தை "சாந்தம்-சிவம்-அத்வைதம்" என்று இந்த உபநிஷத் வர்ணிப்பது பிரஸித்தமாக இருக்கிறது.

ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் குருவுக்கு குருவான ஸ்ரீ கௌட பாதாச்சார்யாள் 'மாண்டூக்யோப நிஷத் காரிகை' என்று இந்த உபநிஷத்தின் தத்துவத்தை விளக்கி எழுதியிருக்கிறார். அதற்கு பகவத்பாதாள் பாஷ்யம் செய்திருக்கிறார்.

தசோபநிஷத்துக்களின் பேரைச் சொல்லும் ச்லோகத்தில் அடுத்தாற்போல் 'தித்திரி' என்று வருவதுதான், தைத்ரீய உபநிஷத்.

வைசம்பாயனருக்குத் தம்முடைய சிஷ்யரான யாக்ஞவல்கியரிடம் மனோபேதம் உண்டாகி, "நான் சொல்லிக் கொடுத்த வேதத்தைக் கக்கிவிடு" என்று கோபித்துச் சொன்னதாகவும், யாக்ஞவல்கியர் அப்படியே செய்துவிட்டு, பிறகு சூரியபகவானிடம் சென்று அவரிடமிருந்து இதுவரை லோகத்துக்கு வராதிருந்த சுக்ல யஜுர் வேதத்தில் உபதேசம் பெற்று வந்தார் என்றும் முன்னே சொன்னேனல்லவா? யாக்ஞவல்கியர் முதலில் கற்றுக்கொண்ட வேதத்தைத் தம்முடைய மந்திர சக்தியால் வாஸ்தவமாகவே அன்ன ரூபமாக்கிக் கக்கி விட்டார். அப்போது வைசம்பாயனரின் உத்தரவுப்படி, மற்ற சிஷ்யர்கள் 'தித்திரி' என்கிற புறா மாதிரியான பக்ஷியின் ரூபத்தை எடுத்துக் கொண்டு யாக்ஞவல்கியர் கக்கியதைச் சாப்பிட்டு விட்டார்கள். அதனால், உடனே அவர்களுக்கு அந்த வேதம் முழுவதையும் அறிந்து கொள்ள முடிந்து

விட்டது. அந்த வேத சாகைக்கு கிருஷ்ண யஜுஸின் 'தைத்திரீய சாகை' என்ற பெயரும் உண்டாகிவிட்டது. 'தித்திரிக்கு' adjectival form 'தைத்திரீய' என்பது. தைத்திரீய சாகையில் உள்ள ஸம்ஹிதை, பிராம்மணம், ஆரண்யகம் எல்லாவற்றுக்கும் தைத்திரீயம் என்றே பெயர். தைத்திரீய ஆரண்யகத்தில் தான் இந்த உபநிஷத்து உள்ளது.

மற்ற எல்லா உபநிஷத்துக்களைவிட அதிகமாக அத்யயனம் செய்யப்படுகிற உபநிஷத்து இதுதான். கர்மாநுஷ்டானங்களில் பிரயோகமாகும் அநேக மந்திரங்கள் இதிலிருந்து எடுத்தவைதான்.

சீக்ஷாவல்லி, ஆனந்தவல்லி, ப்ருகுவல்லி என்று இந்த உபநிஷத்தில் மூன்று பாகங்கள் உண்டு.

சீக்ஷாவல்லியில் சீக்ஷையை (கல்விப் பயிற்சியை)ப் பற்றிய பல விஷயங்களைச் சொல்லியிருக்கிறது. பிரம்மசர்ய ஆசிரம நியமங்கள், அதன் மகிமை, வேத அத்யயனக் கிரமம், பிரணவ உபாஸனை முதலியவற்றைப் பற்றி இந்த பாகம் உபதேசிக்கிறது. பிரம்மசாரிகள் தங்கு தடையில்லாமல் தன்னிடம் வந்து வேதத்தை ஸ்வீகரிக்க வேண்டும் என்று ஆசாரியன் செய்கிற 'ஆவஹந்தீ ஹோமம்' இதில்தான் இருக்கிறது. இன்றைக்குக்கூட, இந்த ஹோமத்தைப் பண்ணிப் பார்த்ததில், பல இடங்களில் குற்றுயிரும் குலை உயிருமாக இருந்த [வேத] பாடசாலைகளில் புதிதாக வித்யார்த்திகள் சேர்ந்து அவற்றுக்குப் புத்துயிர் உண்டானதைக் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். இப்போது ராஜரீக ரீதியில் நாம் சொல்கிற ஸ்வராஜ்யத்தைவிட, சாச்வதமான ஆத்ம

"ஸ்வராஜ்ய"த்தைப் பற்றியும் இதிலே சொல்லியிருக்கிறது. ஸத்யம் வத, தர்மம் சர (உண்மையே பேசு; தர்மப்படியே ஒழுகு) முதலான உபதேசங்கள் இங்கேதான் வருகின்றன. வேத அத்யயனத்தையும் ஸ்வதர்மத்தையும் ஒருநாளும் விடக்கூடாது; இவை எந்நாளும் லோகத்தில் இருந்து வருவதற்காகவே, கலியாணம் பண்ணிக்கொண்டு பிரஜா விருத்தி பண்ணவேண்டும் என்று சிஷ்யனுக்கு குரு உபதேசிக்கிறார். "மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆசார்ய தேவோ பவ, அதிதி தேவோ பவ" [அன்னை, தந்தை, குரு அதிதி ஆகியோரை தெய்வமாகப் போற்ற வேண்டும்] என்ற மந்திரங்கள் இங்கேதான் இருக்கின்றன. தான தர்ம சிந்தனையை விசேஷித்து உபதேசிப்பதும் இங்குதான்.

மற்ற ஆனந்தங்கள் ஒவ்வொன்றையும் நூறால் பெருக்கிக் கொண்டே போய்க் கடைசியில் பிரம்மானந்தத்தைச் சொல்லியிருக்கிறது என்று முன்னே சொன்னேன் அல்லவா? அந்தப் பெருக்கல் வாய்ப்பாட்டைச் சொல்லி பிரம்மானந்தத்தோடு முடிகிற உபநிஷத் பாகத்துக்கே 'ஆனந்தவல்லி' என்று பெயர். சோற்றால் வளரும் மாம்ஸ சரீரமான அன்னமய கோசம், அதற்குள் மூச்சு விடுகிற பிராணமய கோசம், எண்ணங்களை உண்டாக்குகிற மனோமய கோசம், அவற்றில் நல்லது கெட்டதுகளை அறிந்து கொள்கிற விஞ்ஞான மயகோசம், இந்த நாலு கோசத்துக்கும் ஆதாரமாக இருக்கிற தனி ஜீவ மூலமான ஆனந்த மய கோசம் என்று ஐந்தைச் சொல்லி, ஆனந்த மயத்துக்கு அடி ஆதரமாயுள்ள பிரம்மம் ஸ்வச்சமாகத்

தன்னுடைய பேரின்ப நிலையில் இருக்கிற விஷயம் இங்கே விளக்கப்படுகிறது. ஒவ்வொரு கோசத்தையும் ஒரு பக்ஷியாக உருவகக்படுத்தி, அந்த பக்ஷிக்கு இது தலை, இது வலதுபக்க சிறகு, இது இடதுபக்க சிறகு, இது உடம்பு, இது ஆதாரமான வால் (அடிப்பாகம்) என்று தத்ரூபமாகச் சொல்லியிருக்கிறது. அடிக்கடி quote பண்ணப்படும் "யதோ வாசோ" ['எந்த ஸ்தானத்தை எட்டிப் பிடிக்க முடியாமல் வாக்கும் மனஸும் திரும்பி விடுகின்றனவோ, அந்த ஆனந்தமான பிரம்மத்தை அறிந்தவனுக்கு பயமில்லை'] முதலான மந்திரங்கள் இதில் வருவதுதான்.

"பிருகுவல்லி" என்பது, வருணபகவான் தன்னுடைய புத்திரரான பிருகுவுக்குச் செய்த உபதேசமாகும். உபதேசம் என்று சொன்னாலும் எல்லாவற்றையும் குருவே 'டிக்டேட்' பண்ணுவதாக இல்லாமல் சிஷ்யன் தானாக ஒவ்வொரு ஸ்டேஜாக எக்ஸ்பெரிமென்ட் பண்ணி, சொந்தத்தில் எக்ஸ்பீரியன்ஸ் அடைகிற விதத்தில், இங்கே பிருகுவை வருணன் உத்ஸாஹப்படுத்திக் கொண்டு போகிறார். இந்த மாதிரி, பிருகு தாமாகத் தபஸ் பண்ணிப் பண்ணியே, முதலில் அன்னமயமான சரீரம்தான் ஸத்தியம் என்று நினைத்த ஸ்திதியிலிருந்து, ஒவ்வொன்றாக மேலே ஏறிப்போய், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம் இவற்றைக் கடந்து, கடைசியில் ஆனந்த மயத்துக்கு ஆதாரமான ஆத்மாதான் பரம ஸத்தியம் என்று அநுபவத்தில் தெரிந்து கொள்கிறார்.

இப்படிச் சொன்னதால், முக்கியமாக அன்னமய சரீரத்தோடேயே நின்றுவிடுகிற யதார்த்த லோக வாழ்க்கையை இந்த உபநிஷத் தள்ளிவிடுகிறது என்று

அர்த்தமில்லை. லோகத்தில் இருந்து கொண்டே உத்தமமான ஸத்யத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு இந்த லோக வாழ்க்கையே தர்மமாக நடத்தி, உபாயமாக்கிக் கொள்ள வேண்டும். அதனால்தான் இங்கே ஆனந்தமய கோசத்துக்குப் போனபின், மறுபடி 'அன்னத்தை இகழாதே', அன்னத்தை எறியாதே, நிறைய அன்னத்தை விளைவியுங்கள்' என்றெல்லாம் உபதேசிக்கப்படுகிறது. சர்க்காரில் கூட உணவு அபிவிருத்தி இயக்கத்தில் (Grow More Food Campaignல்) இந்த மந்திரங்களைப் பிரசாரப் படுத்தினார்கள்! ஞானியானவன், "அன்னம், அதை உண்பவன், அன்னத்துக்கும் உண்பவனுக்கும் சம்பந்தம் உண்டாக்கியவன் ஆகிய எல்லாமும் நானே" என்று ஈச்வரனோடு ஈச்வரனாகத் தன்னை உணர்ந்து ஆனந்தமாக கானம் பண்ணிக் கொண்டிருப்பான் என்று முடிகிறது.

ரிக் வேதத்தின் ஐதரேய ஆரண்யகத்தில் வருகிற 'ஐதரேய உபநிஷத்' அடுத்ததாக இருக்கிறது. ஐதரேயர் என்ற ரிஷியின் மூலம் இது பிரசாரத்துக்கு வந்ததால் இப்படிப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஒரு ஜீவன் பிதாவிடமிருந்து மாதா கர்ப்பத்தில் புகுவது, பிறகு லோகத்தில் பிறப்பது, புண்ய பாபங்களால் மறுபடி மறுபடி பல லோகங்களில் ஜன்மா எடுப்பது முதலான விஷயங்களைச் சொல்லி, ஆத்மாவைத் தெரிந்துகொள்வதன் மூலமே ஜன்மாவிலிருந்து, ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை பெறுவதை இந்த உபநிஷத் சொல்கிறது. கர்ப்பத்திலிருக்கிற காலத்திலேயே வாமதேவர் என்ற ரிஷி சகல ஜன்மாக்களைப் பற்றியும் தெரிந்து கொண்டு, அத்தனை கோட்டைகளையும் கடந்து ஆகாசத்தின்

உச்சியில் பறக்கிற பருந்து மாதிரி விடுதலையை நோக்கிக் கிளம்பிவிட்டதாக இந்த உபநிஷத்தில் சொல்கிறார். இதிலே ஆத்மாவைப் பற்றிய பிரத்யக்ஷ ஞானமான பிரஜ்ஞானத்தை சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. அந்த ஞானத்தினால் பிரம்மம் பெறப்படுகிறது என்பதுகூடச் சரியில்லை. அந்த பிரஜ்ஞானமேதான் பிரம்மம் என்று முடிகிறது. இதுவே ரிக்வேத மஹாவாக்யம்.

பத்தில் கடைசி இரண்டான "சாந்தோக்ய உபநிஷத்"தும், "பிருஹதாரண்யக உபநிஷத்"தும் ரொம்பவும் பெரியவை. மற்ற எட்டு உபநிஷத்துக்களையும் சேர்த்தால் எவ்வளவு ஆகுமோ அதைவிட இவை பெரியவை. சாந்தோக்ய உபநிஷத் என்பது ஸாமவேதத்தில் சாந்தோக்ய ப்ராம்மணத்தில் இருப்பது. 'சந்தோக' என்பதைக் குறித்தது 'சாந்தோக்யம்'. சந்தோகன் என்றால் ஸாம கானம் செய்கிறவன் என்று அர்த்தம். 'சந்தோகன் காண்' என்று தேவாரத்தில்கூடப் பரமேச்வரனைச் சொல்லியிருக்கிறது. 'சந்தோக அவஸ்தா' என்பதே Zend-Avesta என்றாகிப் பார்ஸியர்களின் மதநூலாக இருக்கிறது!

கீதையில் கடோபநிஷத் வெகுவாகக் கையாளப்படுவது போல், பிரம்மஸூத்ரத்துக்கு நிரம்ப ஆதாரமாக சந்தோக்யோபநிஷத் மந்திரங்களே இருக்கின்றன என்று சொல்வதுண்டு.

'சாந்தோக்யம்', 'பிருஹதாரண்யகம்' ஆகிய இரண்டு உபநிஷத்துக்களிலும் பல ரிஷிகளின் உபதேசங்களைச் சேர்த்து கொடுத்திருக்கிறது.

சாந்தோக்ய ஆரம்பத்தில் ஓம்காரத்துக்கு உத்கீதம் என்று பேர் சொல்லி, அதன் உபாஸனையை விவரித்திருக்கிறது. இந்த உபநிஷத்தில் அக்ஷிவித்தை, ஆகாசவித்தை, மது வித்தை, சாண்டில்ய வித்தை, பிராண வித்தை, பஞ்சாக்னி வித்தை போன்ற பல வித்தைகளைச் சொல்லியிருக்கிறது. இவையெல்லாம் அத்வைதமான பரமாத்ம தத்வத்தைப் பல வழிகளில் சென்று தெரிந்துகொள்வதற்கு உதவுகிற த்வைதமான உபாஸனைகள். இவற்றுக்கு உச்சியிலே வருவது தஹரவித்தை. அகண்ட ஆகாசமாக இருக்கிற பரம்பொருளை ஜீவனானவன் தன் உள்ளத்துக்குள்ளே இருக்கிற சின்னஞ்சிறிய ஆகாசத்தில் கண்டுகொள்வதுதான் தஹர வித்தை.

இந்த உபநிஷத்திலே, சுவாரஸ்யமான பல கதைகளைச் சொல்லி, அதன் வழியே தத்வங்கள் உபதேசிக்கப்படுகின்றன.

வெளிப்பார்வைக்கு விசித்திரமாகத் தோன்றும் பிரம்ம ஞானியின் போக்கு ரைக்வர் என்பவரின் கதையில் தெரிகிறது. தன்னுடைய கோத்திரத்தைத் தெரிந்து கொள்ளாத ஸத்யகாமன் என்ற ஒரு சிறுவன் அதை ஒளிக்காமல் சொன்னதாலேயே அவனை நல்ல பிராமணனாகக் கொண்டு கௌதமர் என்ற ரிஷி அவனை சிஷ்யனாக ஏற்றுக் கொண்ட கதை சாந்தோக்யத்தில்தான் வருகிறது. 'சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு' என்ற திருக்குறளுக்குக் கதா ரூபமாக இது இருக்கிறது. ஸத்யகாமனுக்கு உபதேசம் பண்ணுவதற்கு முந்தி குருவானவர் நிரம்ப சோதனைகள் வைக்கிறார். அவருடைய பத்னியே ஸத்யகாமனுக்கு பரிந்து கொண்டு

பேசுகிறாள். இதை எல்லாம் உபநிஷத்தில் பார்க்கும்போது, பழையகால குருகுல வாசத்தைக் கண்முன்னால் படம் பிடித்துக் காட்டின மாதிரி இருக்கிறது. ஸத்யகாமனுக்கு நேரெதிராக வித்யா கர்வத்தோடு இருந்த ச்வேதகேது என்ற பிரம்மச்சாரிக்கு அவனுடைய தகப்பனாரான உத்தாலக ஆருணி அடக்கத்தை உண்டுபண்ணி, கடைசியில் ஜீவப்பிரம்ம அபேதத்தைச் சொல்லும் "தத்-த்வமஸி" உபதேசம் செய்வதுதான் ஸாம வேதத்துக்கே உயிர்நிலையாக இருக்கிற மஹா வாக்யத்தைச் சொல்லும் இடம். ச்வேதகேதுவைப் போலில்லாமல் ஸகல வித்தைகளையும் கசடறக் கற்றிருந்தும், இவற்றால் ஆத்மாவைத் தெரிந்துகொள்ள முடியவில்லையே என்று பரிதவித்துக் கொண்டிருந்த நாரத மஹரிஷிக்கு ஸனத்குமாரர் செய்கிற உபதேசமும் இந்த உபநிஷத்தில்தான் வருகிறது. "தைத்திரீயத்"தில் அன்ன மயத்தில் ஆரம்பித்து மேலே மேலே கொண்டு போன மாதிரியே, ஸனத்குமாரரும் ஆகார சுத்தியில் ஆரம்பித்து அந்த:கரண சுத்திக்குக் கொண்டு போய், அப்போதுதான் கட்டுக்கள் எல்லாம் தெறித்து ஆத்மானந்தம் ஸித்திக்கும் என்கிறார்.

உபதேசம் ஒன்றேயானாலும், சிஷ்யர்களின் பக்குவத்தைப் பொறுத்தே ஒவ்வொருவரும் அதனால் பிரயோஜனம் அடைகிறார்கள் என்பதை இன்னொரு கதை காட்டுகிறது. தேவராஜாவான இந்திரன், அசுர ராஜாவான விரோசனன் இரண்டு பேருக்கும் பிரஜாபதியானவர், "கண்ணினால் எவன் பார்க்கிறானோ அவனே ஆத்மா" என்று ஒரே உபதேசத்தைச் செய்கிறார். கண், அறிவு முதலான

எல்லாவற்றுக்கும் பின், அவற்றுக்கு ஆதாரமாக இருக்கிற வஸ்துவை அவர் இப்படி மறைமுகமாக குறிப்பிட்டார். ஆனால் இதை சரியாகப் புரிந்து கொள்ளாமல் அவர்கள் இருவரும் தங்களைத் தாங்களே கண்களால் பார்த்துக் கொள்ளும்படியாகத் தோன்றும் தங்களுடைய பிரதிபிம்பங்களையே ஆத்மா என்று அர்த்தம் பண்ணிக் கொள்கிறார்கள். பிரதிபிம்பத்தில் சரீரம் தானே தெரிகிறது? அதனால் சரீரமே ஆத்மா என்று விரோசனன் முடிவாகத் தீர்மானம் பண்ணி விடுகிறான். அதிலிருந்து நாஸ்திகவாதம், லோகாயதம், materialism என்றெல்லாம் சொல்வது அசுரர்களின் கொள்கையாகி விடுகிறது. இந்திரனும் முதலில் இப்படித் தப்பாக நினைத்தாலும், அப்புறம் (தைத்ரீயத்திலே வருகிற) பிருகு அன்னமய கோசத்திலிருந்து ஒவ்வொன்றாகத் தாமே பரீக்ஷித்துப் பரீக்ஷித்து ஆனந்தமய கோசத்துக்குப் போன மாதிரி, இங்கே இந்திரனும் ஸ்தூல தேகத்திலிருந்து ஸூக்ஷ்ம தேகமான ஸ்வப்ன சரீரம், அப்புறம் ஸ்வப்னமும் இல்லாமல் ஆழ்ந்து தூங்குகிற காரண சரீரம் முதலியவற்றை ஆராய்ந்து கொண்டே போய், மாண்டூக்யோபநிஷத்தில் சொன்ன துரீயம்தான் ஆத்மா என்று தெரிந்து கொள்கிறான்.

'பிருஹதாரண்யக' உபநிஷத்து எல்லாவற்றுக்கும் கடைசியில் வருவது. 'பிருஹத்' என்றால் பெரியது என்று அர்த்தம். பிருஹதீச்வரர், பிருஹந்நாயகி என்பவற்றைப் பெருவுடையார், பெரியநாயகி என்கிறோமல்லவா? உபநிஷத்துக்களுக்குள் பெரியது பிருஹதாரண்யகம். ஸாதாரணமாக ஒரு ஆரண்யகத்தின் முடிவிலே

வருவதுதான் உபநிஷத். இதற்கு மாறுதலாக சுக்ல யஜுஸ் ஸம்ஹிதையிலேயே வருவது ஈசாவாஸ்ய உபநிஷத். அதே சுக்ல யஜுஸ்ஸில் ஒரு முழு ஆரண்யகமாக (ஆரண்யகத்தின் கடைசிப் பகுதியாக மட்டுமில்லாமல் முழு ஆரண்யகமாகவே) இருக்கிற உபநிஷத்துத்தான் பிருஹதாரண்யகம். இதில் இரண்டு பாடம் உண்டு. மாத்யந்தின சாகையில் இருப்பது ஒன்று; காண்வ சாகையில் இருப்பது இன்னொன்று. பகவத்பாதாள் காண்வ சாகைப் பாடத்துக்கே பாஷ்யம் எழுதியிருக்கிறார்.

இதில் மொத்தம் ஆறு அத்யாயங்கள். முதல் இரண்டை மது காண்டம் என்றும், அடுத்த இரண்டை யாக்ஞவல்கியர் பெயரில் முனி காண்டம் என்றும், கடைசி இரண்டைக் கில காண்டம் என்றும் சொல்வார்கள். மது என்றால் ஆனந்த ரஸமாக இருப்பது என்று அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம். எல்லாம் பரமாத்ம ஸ்வரூபம் என்று தெரிந்து கொண்டால் லோகம் பூராவும் ஜீவர்களுக்கு மதுவாக இருக்கும். ஜீவர்களும் லோகத்துக்கு மதுவாக இருப்பார்கள். ஆத்மா ஸகலத்துக்கும் மது. இந்த விஷயம் மது காண்டத்தில் வருகிறது.

பிற்பாடு இதே உபநிஷத்தில்தான் (IV.4.22) ஆத்மா இப்படி இல்லை, இப்படி இல்லை என்று தள்ளித்தள்ளி, 'அதை இப்படி இருக்கிறது என்று வர்ணிக்க முடியாது; நமக்குத் தெரிந்த எதுவாகவும் அது இல்லை' என்று சொல்லியிருக்கிறது. இதற்கு "நேதி நேதி" வாதம் என்று பெயர். "ந இதி" என்பது ஸந்தியில் "நேதி" என்றாகும். "ந இதி" என்றால் இவ்வாறு என்று சொல்வதற்கு இல்லாதது' என்று அர்த்தம். முதலில் இப்படி 'நேதி' கொள்கைப்படி

பிரபஞ்சம், சரீரம், மனஸ் எல்லாவற்றையும் தள்ளிவிட்டுத்தான் வர்ணனாதீதமான ஆத்மாவை அறிந்துகொள்ள வேண்டும். அப்படி அறிந்து கொண்டதற்குப் பின் விவகாரத்தில் தோன்றுகிற லோகம், ஜீவர்கள் எல்லாமும்கூட அதே ஆனந்தரஸத்தால் ஆனதுதான் என்ற பாவம் உண்டாகும்.

இப்போது அநேக இடங்களில் 'ப்ரேயர்' மாதிரிச் சொல்லப்படும் 'அஸதோ மா ஸத்கமய' மந்திரம் பிருஹதாரண்யகம் ஆரம்ப அத்யாயத்திலேயே இருக்கிறது (1.3.28).

க்ஷத்ரிய ராஜாவான அஜாதசத்ருவிடம் கார்க்கியர் என்ற பிராம்மணர் உபதேசம் வாங்கிக்கொண்டது இரண்டாம் அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அஜாத சத்ரு, ஜனகர் போன்ற ராஜாக்கள் பிரம்ம ஞானிகளாக இருந்திருப்பது இதிலிருந்து தெரிகிறது. இதே போல் ஸ்திரீகளும் ராஜ ஸதஸில் ரிஷிகளுக்கு ஸமமாகக் கேள்விகள் கேட்டு வாதம் பண்ணிய 'ப்ரம்மவாதினி'களாக [பிரம்மத்தைப் பற்றி ஆராய்ந்து பேசுகிறவர்களாக] இருந்திருப்பதை, ஜனகரின் வித்வத் ஸதஸில் இருந்த கார்கி என்பவளைப் பற்றிச் சொல்கிறபோது தெரிந்து கொள்கிறோம். யாக்ஞவல்கியரின் இரண்டு பத்தினிகளில் ஒருத்தியான காத்யாயனி ஸாதாரண லௌகிக ஸ்த்ரீயாகவும், இன்னொருத்தியான மைத்ரேயி 'பிரம்மவாதினி'யாகவும் இருந்ததை இந்த உபநிஷத்து சொல்கிறது. யாக்ஞவல்கியர் மைத்ரேயிக்குப் பண்ணின உபதேசம் இந்த உபநிஷத்தில் மதுகாண்டம், முனிகாண்டம் இரண்டிலும் [2-ம் அத்யாயம் 4-ம் பிரிவிலும், 4-ம் அத்யாயம்

5-ம் பிரிவிலும்] கொஞ்சம் கொஞ்சம் வித்யாஸத்தோடு திருப்பிச் சொல்லப்படுகிறது. அது ரொம்பவும் அழகான கதையும் தத்வமும் சேர்ந்ததாக இருக்கிறது.

யாக்ஞவல்கியர் வீட்டை விட்டுவிட்டு ஸந்நியாஸியாகப் போவதற்கு உத்தேசம் பண்ணி, இரண்டு பத்னிகளுக்கும் சொத்தைப் பாகம் பிரித்துக் கொடுக்கிறார். காத்யாயனி சொத்திலேயே திருப்தி அடைந்து விடுகிறாள். ஆனால் மைத்ரேயியோ, "இந்த சொத்திலெல்லாம் இல்லாத ஸௌக்கியம் ஸந்நியாஸத்தில் இருக்கிறது என்பதால்தானே இதைவிட்டு அதற்குப் போகிறீர்கள்? அப்படிப்பட்ட அந்த ஸௌக்கியம் என்ன? அதை எனக்கும்தான் எடுத்துச் சொல்லுங்களேன்! என்று கேட்கிறாள். அதற்கு யாக்ஞவல்கியர், "நீ எப்போதுமே எனக்கு பிரியமானவளாக இருந்திருக்கிறாய். இப்போது இந்தக் கேள்வியைக் கேட்பதால், இன்னமும் அதிகப் பிரியமானவளாக ஆகிவிட்டாய்!" என்று சொல்லி, உபதேசிக்க ஆரம்பிக்கிறார். இந்தப் பிரியம் என்பது என்ன என்பதையே தத்வார்த்தமாக விஸ்தாரம் செய்கிறார். "பதியிடம் பத்தினிக்குள்ள பிரியமும், பத்தினியிடம் பதிக்குள்ள பிரியமும், இப்படியே புத்திரரிடத்திலுள்ள பிரியமும், செல்வங்களில் உள்ள பிரியமும், எல்லாவிதமான பிரியங்களுமே எதனிடம் செலுத்தப்படுகின்றனவோ அந்தப் பதி, பத்தினி, புத்ரர், செல்வம், மற்ற விஷயங்கள் இவற்றின் பொருட்டாக உண்டாவதில்லை. இப்படிப் பிரியமாக இருப்பதால் ஒருவனுக்குத் தன் நிறைவு ஏற்படுகிறதல்லவா? அவ்வாறு தன் ஆத்மாவுக்கு இது ஸந்தோஷம் உண்டாக்குகிறது

என்பதால்தான் எதனிடமும் பிரியத்தைச் செலுத்துகிறான். அப்படியானால் அந்த ஆத்மா அன்பு ஸ்வரூபமாக இருக்கிறது என்பதுதானே அர்த்தம்? அதை மட்டும் பிரித்துத் தெரிந்து கொள்வதற்காகத்தான் அதுவரை பிரியமாக இருந்த எல்லாவற்றையும் விட்டுவிட்டு, ஸந்நியாஸியாகப் போவது. அதைத் தெரிந்து கொண்டபின், அதற்கு அந்நியமாக எதுவுமே இல்லை என்று ஆகிவிடும். எல்லாமும் பிரியமானதாகிவிடும். முதலில் சிலதில் பிரியம் வைத்தபோது, அதற்கு மாறான வேறு சிலதில் அப்ரியம் என்று இருந்தது. இவை எல்லாவற்றையும் விட்டு விட்டு ஆத்மாவைத் தெரிந்து கொண்டு விட்டால் ஏற்றத்தாழ்வில்லாமல், எல்லாமே ஆத்ம ஸ்வரூபம் என்ற உணர்ச்சி ஏற்பட்டு, சிலதில் மட்டுமின்றி, எதனிடமுமே த்வேஷம் இல்லாமல் எல்லாமே ப்ரியமானதாகிவிடும்" என்று உபதேசம் செய்கிறார்.

இப்படி அவர் ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ளப் புறப்படுமுன் ஜனகராஜனின் சபையில் பரமாத்ம தத்வம் பற்றிக் கஹோளர், உத்தாலக ஆருணி, கார்கி ஆகியவர்களிடம் நடத்தின வாதங்களும், அப்புறம் ஜனகருக்குப் பண்ணின உபதேசங்களும் முனிகாண்டத்தில் சொல்லப்படுகின்றன. விசிஷ்டாத்வைதத்தில் விசேஷமாகச் சொல்லப்படும் அந்தர்யாமிக் கொள்கைக்கு ஆதாரம், உத்தாலக ஆருணிக்கு யாக்ஞவல்கியர் சொன்ன பதிலில் இருக்கிறது. லோகம் முழுக்கவே மாயை என்று அத்வைதத்திலுள்ளபடி சொல்லாமல், லோகம் சரீரம் என்றால், அதற்கு உயிராக உள்ளே பரமாத்மா இருக்கிறார்

என்பதுதான் அந்தர்யாமிக் கொள்கையின் முக்யமான கருத்து. இதை ஒரு குறிப்பிட்ட நிலையில் யாக்ஞவல்கியர் ஒப்புக்கொண்டு பேசினாலும், மற்ற சமயங்களில் பூர்ணமாக அத்வைதந்தான் சொல்கிறார். மைத்ரேயிக்கு உபதேசித்து முடிக்கும்போது பரம அத்வைதமாக, "கொஞ்சம் தனித்து த்வைதமாக இருந்தாலும், இன்னொன்றைப் பார்ப்பது, முகர்வது, ருசிப்பது, தொடுவது, கேட்பது, நினைப்பது என்றெல்லாம் ஏற்பட்டு விடும். ஆனால் ஆத்மாவை அநுபவத்தில் தெரிந்து கொள்கிற போது இந்த எதுவுமே இல்லை. எதனால்தான் பார்வை, கேள்வி, ருசி, வாஸனை, எண்ணம் எல்லாமே ஏற்படுகின்றனவோ அதை எப்படி, எதைக் கொண்டு பார்க்கவும், கேட்கவும், ருசிக்கவும், முகரவும், நினைக்கவும் முடியும்?" என்பதாக, அகண்ட ஏக உணர்வைத்தான் சொல்கிறார். 'ஜலத்தோடு கலந்து ஜலம் மாதிரிப் பரமாத்மாவுடன் அத்வைதமாக (ஒன்றாகி) விடுகிறான்' என்றே ஜனகருக்கும் அத்வைதமாக உபதேசிக்கிறார் (IV.3.22). எல்லா ஆசைகளிலிருந்தும் விடுபட்டவன் சரீரத்தில் இருக்கிற போதே பிரம்மாக இருந்து கொண்டு, சரீரம் விழுந்த பிற்பாடு பிரம்மத்தோடு ஐக்கியமாகி விடுகிறான் (IV.4.6) என்றும் சொல்கிறார்.

இந்த உபநிஷத்தின் கடைசியில் வருகிற இரண்டு அத்தியாயங்களும் சிதறிக் கிடக்கிற பல ஸமாசாரங்களைச் சேர்த்துக் கொடுப்பதால் 'கில காண்டம்' என்று வழங்குகின்றன. ஒரு வஸ்து சிதைந்து போனால் அது கிலமாகிவிட்டது என்று சொல்கிறோமல்லவா?

கொஞ்சங்கூட சிதையாமல் பூர்ணமாக இருப்பதுதான் 'அகிலம்'.

ஸாதகர்களின் தராதரத்தைப் பொறுத்து, ஒரே உபதேசத்துக்கு மூன்று விதமான அர்த்தம் உண்டாவதைக் கில காண்டத்தில் உள்ள ஒரு கதை விளக்குகிறது. தேவஜாதி, மநுஷ்ய ஜாதி, அசுர ஜாதி ஆகிய மூவரும் பிரஜாபதியிடம் உபதேசம் வேண்டுகிறார்கள். அவர் "த" என்ற ஒரு எழுத்தை மட்டும் உபதேசமாகச் சொல்கிறார். புலனடக்கம் போதாத தேவர்கள் 'த' என்றால் 'தாம்யத' (அடக்குங்கள்) என்று அர்த்தம் செய்து கொள்கிறார்கள். தனக்கென்று சேர்த்துக் கொள்வதையே ஸ்வபாவமாகக் கொண்ட மநுஷ்யர்கள் 'த' என்றால் 'தத்த' (கொடு, தானம் பண்ணு) என்று பொருள் கொள்கிறார்கள். குரூர குணம் படைத்த அஸுரர்கள் 'த' என்பதற்கு 'தயத்வம்' (தயையோடு இருங்கள்) என்று அர்த்தம் பண்ணிக் கொள்கிறார்கள். பிருஹதாரண்யக உபநிஷத்தின் கடைசிப் பாகத்தில் வருகிற ஒரு மந்திரம் எனக்கு ரொம்பவும் ரஸமாக, ஆறுதலாகத் தோன்றுவதுண்டு. இந்த மந்திரம் என்ன சொல்கிறது?

"வியாதிக்காரன் ஒருத்தன் ஜ்வரதாபத்தில் கஷ்டப்படுகிறான் என்றால் அது பெரிய தபஸ். இப்படி நோய் நொடியைத் தபஸ் என்று ஒருத்தன் தெரிந்து கொண்டு விட்டானானால், அவனுக்கு உயர்ந்த பரலோகம் (மோக்ஷம்) கிடைத்துவிடுகிறது" என்று இந்த மந்திரத்தில் சொல்லியிருக்கிறது [V.11.1].

இப்படிச் சொன்னால் ஒன்றும் புரியவில்லையே! இதில் என்ன ரஸம், என்ன ஆறுதல் இருக்கிறது? என்று கேட்கலாம். சொல்கிறேன்:

விரதம், தபஸ் முதலியவற்றால் உடம்பை வருத்திக் கொள்வதால் சரீராபிமானம் விலகுவதோடுகூட, நம்முடைய பூர்வ பாபங்களும் தேய்கின்றன. பூர்வ கர்ம பாபம் போவதற்கு ஒரு பிராயச்சித்தமாகத் தபஸ் இருக்கிறது. முன்னே உடம்பால் நாம் பாபம் பண்ணினதால், அதே உடம்பால் சிரமப்பட்டு தபஸ் செய்தால் பாபம் போகிறது.

இதனால்தான் மஹான்களும் தபஸ் பண்ணியதாகப் புராணங்களில் வருகிறது. ஸாக்ஷாத் ஜகன்மாதாவான அம்பிகையே பரமேச்வரன் வார்த்தையை மீறி தக்ஷனின் யக்ஞத்துக்கு வந்து அவமானப்பட்டு, அப்போதே பிராணத்தியாகம் செய்தபின், மறுஜன்மாவில் ஹிமவானுக்குப் புத்திரியாக அவதாரம் செய்தபோது, பூர்வத்தில் பதியின் உத்தரவை உல்லங்கனம் பண்ணியதற்கு [மீறியதற்கு] பிராயச்சித்தமாகத் தபஸ் பண்ணினால்தான் மறுபடி இந்த ஜன்மாவில் அவரை அடைய முடியும் என்பதால் ரொம்பவும் உக்ரமான தபஸுகளைப் பண்ணியிருக்கிறாள். [காளிதாஸனின்] குமார ஸம்பவத்தில் ரொம்ப அழகாக, மனஸை உருக்கும்படியாக இதை வர்ணித்திருக்கும். குளிர் காலத்தில் ஹிமயமலையில் எத்தனை குளிராக இருக்கும்? அந்த சமயத்தில் பனிப் பாறைகளின் மேல் உட்கார்ந்து கொண்டோ, பனியாக உறைந்து கொண்டிருக்கும் தடாகங்களுக்குள் நின்று கொண்டோ

தபஸ் பண்ணுவாள். நல்ல கோடை வெயில் கொளுத்துகிறபோது, தன்னைச் சுற்றி நாலு பக்கமும் நெருப்பை மூட்டிக் கொண்டு தபஸ் பண்ணுவாள். நாலு பக்கம் நெருப்பும், மேலே ஐந்தாவது நெருப்பாக ஸூரியனும் இருப்பதால், இதற்கு 'பஞ்சாக்னி தபஸ்' என்று பேர்.

இம்மாதிரியான கடுமையான தபஸ்களை அநேக மஹான்கள் பண்ணியிருக்கிறார்கள்.

இப்போது நம் விஷயம் என்ன? அவர்கள் ஏதோ ஒரு தப்பு இரண்டு தப்பு பண்ணினார்களென்றால், நாம் பண்ணுகிற தப்புகளுக்கோ கணக்கு வழக்கே இல்லை. ஆனால், அவர்கள் செய்த தபஸில் கோடியில் ஒரு பங்குகூடப் பண்ண நமக்கு மனஸும் இல்லை, சக்தியும் இல்லை. இப்படியிருந்தால் நம் பாபம் போகிறது எப்படி?

இம்மாதிரி நினைத்துக் கஷ்டப்படுகிற போதுதான் [மேலே சொன்ன] உபநிஷத் மந்திரம் ஆறுதலாக வருகிறது. நமக்கு disciplined life (நெறியான வாழ்க்கை) இல்லாததால், எப்போதும் பார்த்தாலும் வியாதி, வக்கை, ஜ்வரம் முதலியன வருகன்றனவல்லவா? நம்மைப் பார்த்துத்தான் உபநிஷத், "இந்த நோய், நொடி, காயலா எல்லாமே பெரிய தபஸ்தான். இப்படிப் பார்ப்பதற்குப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டாயானால், தபஸினால் கிடைக்கிற பாபத்தின் அழிவு உனக்கும் உண்டாகி, மோக்ஷ லோகத்துக்குப் போய் விடுவாய்" என்று சொல்கிறது. இவ்வளவு plain-ஆக தெளிவாக, நேராகச் சொல்லாவிட்டாலும், அந்த மந்திரத்தின் அர்த்தம் இதுதான்.

ஜ்வர தாபம், தாப ஜ்வரம் என்றெல்லாம் சொல்கிறோமல்லவா? 'தாபம்' என்றால் கொதிப்பது, வேகிறது என்று அர்த்தம். 'தபஸ்', 'தாபம்' என்று இரண்டுக்கும் root ஆன 'தப' என்னும் வார்த்தைக்குக் 'கொளுத்துவது' என்று அர்த்தம். ஸூர்யனுக்குத் 'தபனன்' என்றே பேர் இருக்கிறது. ஆகையால் சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற தபஸை நாம் பண்ணாவிட்டாலும், தானாக வந்த இந்த ஜ்வர தாபத்தையே நம் பாபத்தைப் போக்குவதற்காக ஈச்வரனே தந்திருக்கிற தபஸ்தான் என்று வைத்துக்கொண்டுவிட வேண்டும்.

டைபாய்ட், நிமோனியா மாதிரி வந்து 105, 106 [டிகிரி] என்று உடம்பை வறுத்து எடுக்கிறதா? அப்பாடா நாம் பஞ்சாக்னி தபஸ் பண்ணாததற்கு பதிலாகத்தான் ஸ்வாமி இந்த தாப ஜ்வரத்தைத் தந்திருக்கிறார் என்று நினைத்து நிம்மதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

மலேரியா வந்து, எத்தைனைக் கம்பிளி போர்த்தினாலும் போதாமல் குளிர் நடுக்கி எடுக்கிறதா? 'ரொம்ப நல்லது! நாம் குளிர்காலத்தில் ஜலூக்குள் இருந்து கொண்டு தபஸ் பண்ணமாட்டோமோல்லியோ? அதனால்தான் பரம கருணையோடு பகவானே நமக்கு இந்தக் குளிர் ஜுரத்தை அனுப்பியிருக்கிறார்' என்று வைத்துக் கொண்டு விடவேண்டும்.

இப்படி இந்த உடம்பு [நோய்] வந்தாலும், அடிபட்டாலும், காயம் பட்டாலும், ஒவ்வொன்றையும் ஒரு தபஸாக – நாமாகப் பண்ணாத போதிலும் பகவானே அனுப்பி

வைத்திருக்கிற தபஸாக - எடுத்துக் கொண்டு விடவேண்டும்.
பழகப் பழக இந்த மனோபாவம் உறுதியாக ஏற்பட்டு விடும். இதனால் நோய் நொடியைத் தாங்கிக் கொள்கிற சக்தி உண்டாகும். டாக்டர், மருந்து என்று தேடி ஓடாமல், "ஆகிறபடி ஆகட்டும்" என்று அதன் வழி விட்டு விடுவோம். பாப கர்மாவைத் தீர்த்து வைக்கிற ஒரு நல்ல உபாயமாக நம்மைத் தேடி வந்திருக்கிற தேக சிரமத்தை நாமாகப் போக்கிக் கொள்ள மாட்டோமில்லையா? இதனால் doctor fees, மருந்துச் செலவு எல்லாமும் லாபம். எல்லாவற்றையும் விடப் பெரிய லாபம், சிரமத்தை சிரமமாக நினைக்காமல் ஏற்றுக்கொள்கிற 'திதிக்ஷை' என்ற உயர்ந்த பண்பைப் பெற்று விடுவோம்.

இவ்வளவையும்தான் உபநிஷத் மந்திரம் ஸம்க்ஷேபமாக [சுருக்கமாக]ச் சொல்லி விடுகிறது. 'மஹத்தான பாபங்களைப் பண்ணிவிட்டு அதற்குப் பிரயாச்சித்தமான விரதம், தபஸ் எதையும் பண்ணாமலே, பண்ண முடியாமலே, திராணியில்லாமல் இருக்கிறோமே' என்று துக்கப்படும்போது, இந்த மந்திரம் நமக்கும் ஸ்வாமியே அனுப்பிவைக்கிற தபஸ் இருக்கிறது என்று ஆறுதல் சொல்கிறது.

தசோபநிஷத்துக்களும் முடிகிற இடமான பிருஹதாரண்யகத்தின் கடைசி அத்தியாயத்தில், கர்ம காண்டத்துக்கு வேதாந்தம் விரோதமே இல்லை என்று அழுத்தமாகக் காட்டுகிற மாதிரி பஞ்சாக்நி வித்யையையும், ஸுப்ரஜைகளை [நன்மக்களை] விரும்பும்

கிருஹஸ்தர்கள் அநுஷ்டிக்க வேண்டிய கர்மாக்களையும் சொல்லியிருக்கிறது4.

1. "ஸ்வாத்ம நிரூபணம்" : 94-வது ச்லோகம்.

2. "ச்ருதீநாம் மூர்த்தாநோ" எனத் தொடங்கும் 84-வது ச்லோகம்.

3. V.23

4. இந்த உபநிஷத்துக்களின் தாத்பரியத்தைப் பற்றி "அத்வைதம்" என்ற பிரிவிலுள்ள "வேதத்தின் முடிவும் சங்கரரின் முடிவும் ஒன்றே" என்ற உரையிலும் காண்க.

வேதங்களின் முக்கிய தாத்பரியம் என்ன ?

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

வேதங்களின் முக்கிய தாத்பரியம் என்ன ?

வேதங்களில் அநேக விஷயங்களைப் பற்றிச் சொல்லியிருக்கும்போது, வேதாந்தமான உபநிஷத்தில் சொன்ன ஆத்ம ஸாக்ஷாத்காரம்தான் வேதங்களுக்கு எல்லாம் முக்கியமான தாத்பரியம் என்றால், எப்படி ஒப்புக்கொள்வது?

அக்னி ஹோத்ரம், ஸோம யாகங்கள், ஸத்ர யாகங்கள், இஷ்டிகள் என்கிற பல வேள்விகள், பல விதமான கர்மாக்கள், ஹோமங்கள் எல்லாம் வேதத்தில் இருக்கின்றன. இவைதான் வேதத்தின் லக்ஷியம் என்று ஏன் சொல்லக் கூடாது?

கல்யாணத்தில் என்ன செய்ய வேண்டும்? சாவில் என்ன செய்ய வேண்டும்? எப்படி ராஜ்ய பரிபாலனம் பண்ணினால் நல்லது? ஸதஸில் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? - என்கிற மாதிரிப் பல விஷயங்களும்தான் வேதத்தில் வருகின்றன. இதில் எதை அதன் மையமான லக்ஷ்யம் என்பது?

யாகம், யக்ஞம் இவற்றையெல்லாம் தவிர, அநேக உபாஸனா மார்க்கங்கள் வேதத்தில் சொல்லப்படுகின்றன. தனித்தனியாகத் தியானம் சொல்லியிருக்கிறது. 'இந்த சரீரத்துக்குள் ஆத்மா எப்படிப் போகிறது, கடைசியில் சரீரம் என்னவாகப் போகிறது, திரும்பியும் மநுஷ்ய சரீரத்தில் எப்படியெல்லாம் பிரவேசிக்கிறது?' என்பன போன்ற விஷயங்களும் அதில் காணப்படுகின்றன.

இன்னும், சரீர ஆரோக்கியத்திற்கு வேண்டிய வைத்திய சிகித்ஸைகள், சத்ருக்களினால் ஹிம்ஸை வந்தால் அதை நிவிருத்தி பண்ணுவதற்கான சாந்திகள், இப்படி வேறே பல சமாசாரங்களும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும் போது நமக்கு ஒரு கேள்வி உண்டாகிறது. அதாவது, "வேதத்தின் முக்யமான உத்தேசம் என்ன? எதற்காக வேதம் ஏற்பட்டுள்ளது?"

'எல்லா வேதங்களும் சேர்ந்து ஒரு பொருளைத்தான் சொல்லுகின்றன' என்று உபநிஷத் சொல்கிறது (கடோபநிஷத் II.15). அந்த ஒரு பொருள் என்ன? 'ஓங்கார அர்த்தமாக இருக்கும்படியான ஒரு பரம்பொருளைத்தான் எல்லா வேதங்களும் சேர்ந்து சொல்கின்றன' என்பது அந்த உபநிஷத்து வாக்கியம்.

'வேதம் வெவ்வேறு விஷயங்களைச் சொல்கிறதே! வெவ்வேறு தேவதைகளைப் பற்றியும் சொல்லுகிறதே!' என்று நமக்குச் சந்தேகம் வருகிறது.

ஜட்ஜ் ஸதாசிவ ஐயர் என்று ஒருவர் இருந்தார். மைசூர் ராஜ்யத்தில் இருந்த பரமசிவ ஐயர் அவர் சகோதரர். 'வேதங்கள் என்றால் பௌதிக சாஸ்திரந்தான். வேதம், ஜியாலஜியைப் பற்றியே [நில இயல்] சொல்கிறது என்று இந்த பரமசிவ ஐயர் எழுதியிருக்கிறார்.

இன்னும் பலபேர் பல பிரகாரமாகச் சொல்கிறார்கள். 'அந்தக் காலத்தில் இந்தியாவில் உள்ளவர்களுக்கு ஸூர்யனையும், சந்திரனையும் பார்த்து ஆச்சரியமாக இருந்தது. அதிகமாக விஞ்ஞானம் விருத்தி அடையாத காலம் அது. அதனால் அவரவர்களுக்குத் தகுந்தாற் போல்,

அவரவர்கள் இயற்கைத் தோற்றங்களைப் பார்த்துப் பல விஷயங்களைச் சொன்னார்கள். அதைப் பாட்டாகப் பாடும்படியான சக்தி எல்லாருக்கும் இல்லை; சில பேருக்குத்தான் இருந்தது. இவர்கள் பாடிய பாட்டுக்களையே மந்திரங்கள் என்று தொகுத்து வேதமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று சில வெள்ளைக்காரர்கள் அபிப்ராயப் படுகிறார்கள்.

இவற்றையெல்லாம் பார்த்தால், 'எல்லா வேதமும் ஒரு பொருளைத்தான் சொல்கிறது' என்று உபநிஷத்துக்கள் சொன்னாலும், வெவ்வேறு பதார்த்தத்தைத்தான் அது சொல்வதாகத் தெரிகிறதே தவிர, ஒரு பொருளைச் சொல்வதாக நமக்குத் தோன்றவில்லை.

ராமாயணத்தைப் பற்றி ஒரு ச்லோகம் இருக்கிறது;

வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே।

வேத:ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா॥

"வேதவேத்யே"– வேதத்தினால் அறியப்பட வேண்டிய ஒருவன். அவன் யார்?" பரே பும்ஸி"– பரம புருஷன். வேதத்தினாலே அறியப்பட வேண்டிய பரம புருஷன் ராமனாக உலகில் அவதாரம் செய்தான். அவன் தசரதனுடைய குழந்தையாக வந்தவுடன், வேதம், 'ராமாயணமாக அவதாரம் பண்ணுவோம்' என்று வால்மீகியின் குழந்தையாக வந்தது! இதுதான் மேலே சொன்ன சுலோகத்தின் அர்த்தம். இங்கேயும் பரம்பொருள், அல்லது பரம புருஷன், அல்லது ஓங்காரம் என்கிற ஒரே ஸத்ய தத்வம்தான் எல்லா வேதங்களுக்கும் பொதுவான

லக்ஷியம் என்று தெரிகிறது. கடோபநிஷத்தில் "ஸர்வே வேதா:" என்று சொன்னாற் போலவே, கீதையிலும் பகவான் "வேதைச்ச ஸர்வை:அஹம் ஏவ வேத்ய:" – "எல்லா வேதங்களாலும் நானே அறியப்படுகிறேன்" என்கிறார்.

இவற்றையெல்லாம் பார்க்கிறபோது, "வேதத்தில் அநேக சமாசாரங்கள் சொல்லப்பட்டிருந்தாலும் வேதங்கள் எல்லாம் சேர்ந்து பொது லக்ஷ்யமாக சொல்வது ஒரு பொருளைத்தான்" என்று ஆகிறது.

"அப்படியானால், ஒரு பொருளைச் சொல்வதற்கு அநேகம் பொருளை வேதம் எதற்காகச் சொல்கிறது?" என்று நமக்குத் தோன்றும்.

அநேகம் பொருள்கள் மூலமாகத்தான் அந்த ஒரு பொருளை அறிய முடியும். யோகம், தியானம், தபஸ், யக்ஞம், கர்மாநுஷ்டானம், கல்யாணம் முதலான சடங்குகள், ராஜ்ய நிர்வாகம், சமூக வாழ்க்கை, கவிதை ஆகிய இவை எல்லாம் முடிந்த முடிவில் சுட்டிக்காட்டுகிற ஒரு பொருள் எதுவோ அந்த ஒரு பொருள்தான் வேதத்தின் உண்மையான தத்துவமாக இருக்கிறது. அந்த உண்மையான பொருள் ஒன்றைத் தவிரப் பாக்கி எல்லாம் மாறி மாறிப்போகும்படியான பொருள்கள்; கதையாகப் போகிற பொருள்கள். பின்னால் அந்தக் கதையும் மறைந்து போகிறது. ஒன்று தெரியாமல் பலவான லோகம்தானே நமக்குத் தெரிகிறது? அதனால், நமக்குத் தெரிகிற ஒவ்வொன்றையும் காட்டி, அதன் மூலமே ஒன்றுக்கு

அழைத்துக் கொண்டு போவதற்காகத்தான் வேதம் பல பல விஷயங்களையும் சொல்கிறது.

வேதத்தினால் சுட்டிக் காட்டப்படுகிற மெய்யான ஒரு பொருளை அறிந்து கொள்ள வேண்டுமானால், அந்த ஒன்றைப் பற்றிய நினைவு நமக்கு வருவதற்குச் சித்தத்திற்குச் சில பழக்கங்கள் (disciplines) வரவேண்டும். யாகங்கள் பண்ணுவது, தபஸ் பண்ணுவது, தானதர்மங்களை செய்வது, கோபுரம் கட்டுவது, குளம் வெட்டுவது, சமூக கார்யங்கள், கலியாணம் முதலான ஸம்ஸ்காரங்கள் ஆகிய எல்லாம் சித்தத்தைச் சுத்திசெய்து, சித்த விருத்தி நிரோதம் [ஓடிக் கொண்டே இருக்கும் மனஸை அடக்கல்] செய்வதற்காகத்தான். பல்வேறு கர்மாக்களின் நோக்கம் ஒரே பரமாத்மாவை அடைவதற்குத் துணைபுரிவதுதான்.

"வேத" என்றால் அறிவது. 'எந்த ஒன்றை அறிந்து கொண்டால், அனைத்தையும் அறிந்து கொண்டதாகுமோ அதுதான் ஆத்மா; ஆஸாமியை அடையாளம் காட்டுகிற அடிச்சுவடு மாதிரிதான் மற்ற எல்லாமும் அந்த ஒன்றுக்கு அடிச்சுவடுகள்' என்று உபநிஷத்து சொல்கிறது1. அப்படிப்பட்ட ஆத்மாவைப்பற்றி அறிவிப்பதுதான் வேதத்தின் லக்ஷ்யம். வேத ஆரம்பத்தில் வருகிற கர்மாவாகட்டும், முடிவில் வருகிற ஞானமாகட்டும், இரண்டுக்குமே – விஷயமாக இருப்பது ஈச்வரன், பிரம்மம், ஆத்மா என்றெல்லாம் சொல்லப்படுகிற ஒன்றுதான். ஸ்வாமிக்கு புஷ்பம் போடும்போது கூறும் மந்திர புஷ்பத்தின் போதும், ஒரு மஹானை வரவேற்கும் போதும், நாம் "யோ வேத (ஆ) தௌ ஸ்வர: ப்ரோக்தோ வேதாந்தே ச ப்ரதிஷ்டித:" என்கிறோமே, இது மேலே சொன்னதற்கு

proof தான். வேதத்தின் ஆதியிலும் (ஆரம்பத்திலும்), அந்தத்திலும் (முடிவிலும்) பிரதிஷ்டையானது ஒரே மஹா தத்வமான ஈச்வர தத்வம்தான் என்று இந்த மந்திரம் சொல்கிறது. ஆரம்பத்தில் வரும் கர்மா, முடிவில் வருகிற ஞானம் இரண்டுக்கும் லட்சியத்தில் கொஞ்சம்கூட வித்யாஸமில்லை என்று இங்கே ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. அநேக ஆயிரம் தினுசாகப் பிரிந்திருக்கும் கர்மா, ஒன்றே ஒன்றாயிருக்கிற ஞானம் இரண்டுக்கும் பொதுவாக - அதாவது வேதம் முழுவதற்கும் subject-ஆக- இருப்பது ஒன்றுதான். ஆத்மாவைப் பார்த்துக் கொள்ள முடியாமல் வெளிப்பார்வை உள்ளதாகவே, வெளி வஸ்துக்களை நோக்கி ஓடுவதாகவே இந்திரியங்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. இதைக் கடோபநிஷத்தும் (IV.1) சொல்கிறது. விஷயத்தைக் கவனிக்காமல், வேறு எதையாவது பார்ப்பதை 'பராக்கு'ப் பார்ப்பது என்கிறோமல்லவா? ஆத்மா ஒன்று தான் விஷயம். அதைவிட்டு வெளியிலே பார்ப்பதைத்தான் 'பரா(ங்)'முகம் என்பது. அதுதான் பராக்குப் பார்ப்பது. இதைத் தான் கடோபநிஷத் சொல்கிறது. அப்படிப் பராக்குப் பார்க்காதே என்றால் மனஸ் அடங்காது. அதனால் வெளிக்காரியங்களைப் பண்ணிப் பண்ணித்தான் உள்ளே பார்த்துக் கொள்ளும்படியான பக்குவத்தை அடைய வேண்டும். இந்திரியங்களும், மனஸும் இழுக்கிற இழுப்புக்கெல்லாம் ஓடாமல் வைதிக கர்மாக்களை நிறையச் செய்யச் செய்யத்தான், கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே பார்த்துக் கொள்கிற பக்குவம் உண்டாகும். மற்ற விஷயங்களையெல்லாம் அறிந்து, சோதித்து, சீர்தூக்கிப் பார்த்த பின்தான், எல்லாவற்றையும் அறிகிற அறிவை,

எதை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகுமோ, அதைப் பிடிக்க முடியும். இதற்காகத்தான் அநேக வித்தைகளை, உபாஸனைகளை, கர்மாக்களை, கலைகளை, social duty -களை வேதத்தில் சொல்லியிருக்கிறது. சரீரத்தால் கர்மா பண்ணிப் பண்ணியே சரீராபிமானத்தைக் கரைக்க வேண்டும். பல வித்தைகளைச் சிந்தனை பண்ணியும், தத்வங்களை ஆராய்ச்சி பண்ணியும், உபாஸனைகள் பண்ணியுமே மனஸ், புத்தி இவற்றைக் கரைக்க வேண்டும். கெட்ட காரியம் செய்வதில் சரீராபிமானம் ஜாஸ்தியாகும். துர்விஷயங்களை ஆராய்வதால் மனஸின் தடிப்பு ஜாஸ்தியே ஆகும். மாறாக, மந்திர பூர்வமான, லோக க்ஷேமமான வைதிக கர்மாக்கள், வைதிக உபாஸனைகள் இவற்றை அநுஷ்டிக்கிறபோது, சரீரம் சித்தம் இவற்றின் ஆக்ரஹம் தளர்ந்து கொடுக்கிறது. முடிவிலே உள்ளே பார்த்துக் கொள்வதற்கான முதிர்ச்சி, பரிபக்குவம் உண்டாகிறது. அப்படிப் பார்த்துக் கொண்டபின், இங்கேயே ("இஹைவ") மோக்ஷ ஆனந்தத்தைப் பெறுகிறான். 'மோக்ஷம்' என்றால், 'விடுபட்ட நிலை', 'விடுதலை' என்று அர்த்தம். எதிலிருந்து என்றால் ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை. சரீரமும் மனஸும் 'தான்' இல்லை என்று அவற்றிலிருந்து உபநிஷத்து சொன்னபடி விடுவித்துக் கொண்டுவிட்டால், ஸம்ஸாரத்திலிருந்தும் விடுதலையாகி விடுகிறது.

இந்த லோகத்திலேயே மோக்ஷத்தை ஸம்பாதித்துக் கொடுப்பதுதான் வேதங்களின் உத்தேசம். அதுதான் அதன் பெருமையும். இதர மதங்களில் இருப்பதுபோல், செத்துப்போனபின் பரலோகம் போய்தான் மோக்ஷம்

என்றால், அந்த மோக்ஷம் எப்படியிருக்கும் என்று இங்கே நாம் தெரிந்து கொள்ள முடியாது. அதை அடைந்தவர்களும் திரும்பிவந்து தங்கள் அநுபவத்தை நமக்குச் சொல்ல மாட்டார்கள். அதனால் அப்படி ஒன்று உண்டா என்று ஸந்தேஹமும் அவநம்பிக்கையும் ஏற்படலாம். ஆனால் இந்த லோகத்திலேயே, ஆசைகளுக்கெல்லாம் ராஜிநாமா கொடுத்துவிட்டு, ஆத்ம விசாரம் பண்ணினால் மோக்ஷம் இப்போதே ஸ்வயம் ஸித்தமாக இருக்கிறது என்று வேதம் சொல்வதால், அது ஸந்தேஹத்துக்கு இடமில்லாத ஸத்தியத்தையே சொல்கிறது என்று ஏற்படுகிறது.

மற்ற மார்க்கங்கள் மலேரியாவுக்குக் கொய்னா கொடுத்து அப்போதைக்கு ஜ்வரத்தை இறக்குகிற மாதிரி தற்கால சாந்தி கொடுக்கின்றன. மறுபடி ஒரு போதும் அந்த ஜ்வரம் வராதபடி செய்யவேண்டுமானால், வியாதியின் மூல காரணத்தையே கண்டுபிடித்து அதை அழிக்க வேண்டும். இப்படியே ஜீவனின் மூலம் என்ன என்கிற இடத்துக்கே போய், பரமாத்மாவிலிருந்து இப்படி அது பிரிகிற மூலத்தையே அடைந்து, பேதத்தை அழிப்பது வேத மதம்தான். அதுதான் தற்கால சாந்தியாக இல்லாமல் சாச்வத மோக்ஷமாக இருப்பது.

வேதத்தின் கர்மகாண்டத்தில் சொல்லியிருப்பதெல்லாமும் தற்கால சாந்திதான். ஆனாலும் எப்போதும் ஒரே அசாந்தியில் தத்தளித்துக் கொண்டிருக்கிறவனை, எடுத்த எடுப்பில் ஆத்மாராமனாக, பிரசாந்தனாக ஆக்கிவிட முடியாது. அதனால், தற்கால சாந்தியைத் தருகிற கர்மாக்களைக் கொடுத்திருக்கிறது. இவற்றால் சாச்வத

சாந்திக்கு வேண்டிய qualification - ஆன (யோக்யதாம்சமான) சித்த சுத்தியும் ஏற்படுகிறது. யக்ஞம், விரதம், பூர்த்தம் என்கிற பொதுத்தொண்டு போன்றவற்றையும் வேதம் விவரமாக விதித்தாலும், இது ஒவ்வொன்றையுமே முடிந்த முடிவாகக் கொள்ளவில்லை. இவற்றில் சரீரத்தைக் கிருசம் பண்ணுவதும் [மெலிவிப்பதும்] , இவற்றிலேயே மனஸைச் செலுத்துவதால் மனம் ஒருமுகப்படுவதும் நம் சித்த மலத்தை நீக்க வழியாகிறது என்பதற்காகவே இவை விதிக்கப்பட்டிருக்கின்றன.

ஆக, வேதங்களில் அநேக ஸமாசாரங்கள் நீள நெடுகச் சொல்லப்பட்டிருந்தாலும், அவை எல்லாமும் முடிவான வேதாந்தத்தில் சொல்லப்பட்ட ஞான விசாரத்தில் கொண்டு விடுவதற்காக ஏற்பட்டவைதான்.

முடிவில் சொல்வதுதான் தீர்மானம். ஒரு பத்திரிக்கையில் வந்திருக்கும் ஒருவருடைய பிரசங்கம் அல்லது கட்டுரையைப் படித்து அவர் என்ன சொல்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். அவர் நிறையப் பேசியிருக்கிறார். அல்லது எழுதியிருக்கிறார். எல்லாவற்றையும் படிக்க நேரம் இல்லை. அதனால் ஆரம்பத்தை படித்து விட்டு சட்டென்று அதனுடைய கடைசிப் பாராவைப் பார்க்கிறோம். முதலில் கொஞ்சம் பார்த்து விட்டு, அப்புறம் கடைசியில் இருப்பதைப் படித்துவிட்டால் போதும். அவர் அந்த கட்டுரையில், அல்லது பிரசங்கத்தில் என்ன சொல்லியிருக்கிறார் என்பது ஒரு விதமாகத் தெரிந்துவிடும். ஆரம்பத்தையும் முடிவையும் படித்துவிட்டே அதில் என்ன விஷயம் இருக்கும் என்று

தீர்மானம் பண்ணிவிடலாம். இந்த மாதிரி "வேத ஆதௌ" விலும் (வேத ஆரம்பத்திலும்) "வேதாந்தே ச"விலும் (வேத முடிவிலும்) ஒரே பரமாத்மாவான ஈச்வர தத்வத்தையே சொல்லியிருப்பதால் அதுவே வேதத்தின் ஸப்ஜெக்ட் ஆகிறது.

சர்க்காரில் அநேக சட்டம் பண்ணுகிறார்கள். ஆனால் அந்தச் சட்டங்களின் அபிப்ராயங்களைப் பற்றியே சில சமயங்களில் சிக்கல்கள் வந்து விடுகின்றன. அப்போது சட்டத்துக்கு வியாக்கியானம் இப்படித்தான் என்று இன்னொரு சட்டம் வகுத்து, அதன் மூலம் நிர்ணயம் செய்கிறார்கள். இதை Law of Interpretation என்கிறார்கள். இப்படியே ஈச்வரனின் நிரந்தரச் சட்டமான (Eternal Law - ஆன) வேதங்களின் தாத்பர்யத்தை நிர்ணயம் செய்ய, மீமாம்ஸை என்ற சாஸ்திரம் வியாக்கியான சட்டமாக (Law of Interpretation - ஆக) இருக்கிறது. பதினான்கு வித்யாஸ்தானங்களில் ஒன்றான மீமாம்ஸையைப் பற்றி மற்ற விஷயங்கள் பின்னால் சொல்லுகிறேன். இப்போது ஒரு ஸமாசாரத்தை மட்டும் எடுத்துக் கொள்கிறேன்.

வேத வாக்கியம் ஒன்றுக்கு இன்னதுதான் அர்த்தம் என்று நிர்ணயம் பண்ணுவதற்கு, மீமாம்ஸா சாஸ்திரத்தில் ஆறு வழிகள் சொல்லியிருக்கின்றன. அந்த ஆறு,

உபக்ரம- உபஸம்ஹாரௌ அப்யாஸ: அபூர்வதா பலம்।

அர்த்தவாத உபபத்தீ ச லிங்கம் தாத்பர்ய நிர்ணயே॥

என்று சொல்லியிருக்கிறது.

உபக்ரம - உபஸம்ஹாரம், அப்யாஸம், அபூர்வதா, பலம், அர்த்தவாதம், உபபத்தி என்பனவே இந்த ஆறு. வேதம் மட்டுமின்றி, எந்த ஒரு கட்டுரை அல்லது பிரவசனத்துக்கும் உத்தேசம் என்ன என்று கண்டுபிடிக்க இந்த ஆறும் உதவி செய்கின்றன.

உபக்ரமம் என்றால் ஆரம்பம். உபஸம்ஹாரம் என்றால் முடிவு. ஆரம்பத்தையும் முடிவையும் சேர்த்து ஒன்றாகப் பார்ப்பது 'உபக்ரம-உபஸம்ஹாரம்' என்ற முதல் வழி. இரண்டும் ஒன்றையே சொல்வதாக இருந்தால், அதுவே தாத்பரியம் என்று நிர்ணயம் பண்ணி விடலாம். 'அப்யாஸம்' என்றால் திரும்பத் திரும்பச் சொல்லப்படுவது. திரும்பத் திரும்பத் தண்டால் போடுவதால் அதை தேகாப்யாஸம் என்கிறோம். ஒரு பிரஸங்கத்தில் அல்லது வியாஸத்தில் ஒரு விஷயம் பலமுறை திருப்பிச் சொல்லப்பட்டால் அதுதான் அதற்கு விஷயம் என்று தெரிகிறது. 'அபூர்வதா' என்றால், பூர்வத்தில் சொல்லாமல் புதிதாகச் சொல்வது. ஏற்கெனவே சொன்னதை அல்லது எழுதினதைக் காட்டிலும், புதிதாக ஒரு விஷயத்தைக் கொடுத்தால், இதுவே தாத்பரியம் என்று தெரிகிறது. "இப்படிச் செய்தால் இந்தப் பலன் கிடைக்கும்" என்று சொன்னால், "இப்படிச் செய்து இந்தப் பலனை அடை" என்று சொல்வதாகவே ஆகும். அதாவது இந்தப் பலனை அடைவிப்பதுதான் உத்தேசம் என்று தெரிகிறது. 'பலம்' என்பது இதுவே. அநேக ஸமாசாரங்களைச் சொல்லி, அவற்றைத் தழுவியதாக ஒரு கதை சொல்லி, அதன் மூலம் ஒரு விஷயத்தை பெருமைப்படுத்தினால், பெருமைப்படுத்தப் படுகிற விஷயமே நமக்கு தாத்பரியம்

என்று தெரிகிறது. இதுதான் 'அர்த்தவாதம்' என்பது. ஒன்றைச் சொல்லி அதற்குக் காரண நிரூபணம், பொருத்தம் முதலியன விளக்கப்பட்டிருந்தால், அந்த விஷயந்தான் முக்யமான கருத்து என்று ஏற்படுகிறது. இந்த முறைக்கு 'உபபத்தி' என்று பெயர்.

இப்படித்தான், வேதத்தின் ஆரம்பத்தையும் முடிவையும் பார்த்துவிட்டு வந்த ஒருத்தர். என்னிடம் சொன்னார்: 'வேதம் சொல்லவந்த முக்ய ஸமாசாரம் என்னவென்றால் Fire Worship (அக்னி உபாஸனை) தான். வேதம் உபக்ரமத்தில், அதாவது ஆரம்பிக்கும்போது 'அக்னிமீளே' என்று சொல்கிறது. கடைசியில் உபஸம்ஹாரம் பண்ணி முடிக்கிறபோது அக்னி என்றே முடிகிறது. ஆரம்பம், முடிவு இரண்டும் அக்னிதான். ஆனபடியால், வேதத்தின் தாத்பரியம், gist (ஸாரம்) Fire Worshipதான் என்று அவர் சொன்னார்.

இதிலேயும் ஒரு உண்மை இருக்கிறது. அக்னி இருப்பது ஆத்ம சைதன்யம்தான்; அறிவொளிதான். அறிகிறவனாகவும், அறியப்படுவதாகவும், அறிவாகவும் இருக்கிற ஒரே ஆத்ம சைதன்யம்தான் வேதத்தின் பரம தாத்பரியம்.

ஆனால் வார்த்தைப்படி (literal-ஆக) எடுத்துக் கொண்டு, அக்னி உபாஸனைதான் தாத்பரியம் என்றால் சரியில்லை. ஏதோ ஒரு தேவதா உபாஸனைதான் பெரிசு என்று சொல்லாததுதான் வேதத்தின் பெருமை. எல்லா தேவதைகளாகவும் இருக்கிற ஆத்மாவையே பிரியமானதாக உபாஸிக்க வேண்டும் என்றுதான் வேதம்

(பிருஹதாரண்யகம் 1.4.8.) சொல்கிறது. "ஆத்மாவே பார்க்கப்பட வேண்டும். ஆத்மாவே கேட்கப்படவேண்டும். ஆத்மாவே மனனம் செய்யப்பட வேண்டும். ஆத்மாவே அநுபவித்து அறியப்பட வேணடும். அதனாலேயே எல்லாம் அறியப்பட்டதாகும்" என்றுதான் யாக்ஞவல்கியர் மைத்ரேயிக்குச் செய்கிற உபதேச வாயிலாக, நம் எல்லாருக்கும் வேதமானது முடிவான goal-ஐ (லக்ஷ்யத்தை)ச் சொல்கிறது.

Goal (குறிக்கோள்) என்று ஒன்றைச் சொல்லவேண்டுமானால், 'இப்போது நாம் இருக்கிற இடம் வேறு; இந்த ஆரம்பத்திலிருந்து நாம் அந்த முடிவான இடத்துக்குப் போயாக வேண்டும்' என்ற கருத்து அதில் தொக்கி நிற்கிறது.

"அத:" என்று 'அது'வாகத் தூரத்தில் சுட்டிக் காட்டப்படுவது கோல்; 'இதம்' என்று இதுவாக இப்போது நாம் இருக்கிற நிலைதான் ஆரம்ப ஸ்தானம். இங்கேயிருந்து அங்கே போயாக வேண்டும்.

ஆனால் வாஸ்தவத்தில் அந்த லக்ஷ்யம் (அது) இங்கே (இது என்பதில்) இல்லையா? இருக்கத்தான் செய்கிறது. எல்லாம் பிரம்மந்தான் என்று தெரிந்து கொள்கிறபோது 'அது', 'இது' இரண்டுமே பிரம்மந்தான்; அதாவது இரண்டுமே ஒன்றுதான். 'அது', 'இது' என்ற இரண்டுகூட இல்லவே இல்லை. 'இது' என்று இப்போது நாம் சொல்வதே 'அது' என்று இப்போது நினைக்கிற ஸத்யவஸ்துவாக, முடிவிலே ஆகிவிடுகிறது.

"அத:" என்ற மாதிரியே, "தத்" என்றும் பரமாத்மாவைச் சொல்வது வேதத்தின் வழக்கம். "தத்" என்றால் 'அது' என்றே அர்த்தம். "ஓம் தத் ஸத்" என்று எந்தக் காரியத்தையும் முடிப்பதற்கு, 'தத்'தாக உள்ள அது ஒன்றே ஸத்யம் என்று அர்த்தம்.

புருஷத்வம், மஹத்வம் (மகத்துவம்) என்பது போல் பல வார்த்தைகளை முடிவில் 'த்வம்' சேர்த்துச் சொல்கிறோம். இங்கே 'த்வம்' என்பதற்குத் 'தன்மை' என்று பொருள். மஹத்தின் தன்மை மஹத்வம். புருஷனின் தன்மை புருஷத்வம். ஸரி, தத்வம், தத்வம் என்று ஸத்யமான முடிவுகளைச் சொல்கிறோமே! இது எப்படி? 'தத்வம்' என்றால் தத்–த்வம், அதாவது 'தத்'தினுடைய தன்மை என்று பொருள். தத்வ விசாரம், தத்வ உபதேசம் என்பவற்றிற்கு, பிரம்மமான தத்தினுடைய தன்மையை விசாரிப்பது, தத்தினுடைய தன்மையை உபதேசம் செய்வது என்பதே பொருள்.

வேதம் 'தத்' என்று பரம்பொருளைத் தூரத்திலுள்ள 'அது' வாக சொல்கிறது என்றால், நமக்கு அதனால் என்ன பயன்? அப்படி இல்லை. "வெகுதூரத்தில் இருக்கிறவர்தாம் மிகவும் அருகிலும் இருக்கிறார்" – "தத்தூரே தத்வந்திகே" என்று2 வேதம் உணர்த்துகிறது.

கல்யாணம் ஆகவேண்டிய பெண் ஒருத்தி இருந்தாள். அவளுடைய பெற்றோர் பந்துக்களுக்குள்ளேயே முறைப் பையனைப் பார்த்து அவனுக்கு அவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கத் தீர்மானித்திருந்தார்கள். ஆனால் அந்தப் பெண், "புருஷர்களில் எல்லாம் உயர்ந்தவன்

எவனோ, அவனைத்தான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்" என்று பிடிவாதம் பண்ணினாள். அவர்களும், "உன் இஷ்டப்படியே போ!" என்று விட்டு விட்டார்கள்.

அந்தப் பெண், 'புருஷர்களுக்குள்ளேயே உயர்ந்தவன் ராஜாதான். கல்யாணம் பண்ணிக்கொண்டால் அவனைத்தான் கல்யாணம் பண்ணிக்கொள்வேன்' என்று தீர்மானம் பண்ணிக் கொண்டு, அவ்வூர் ராஜா பின்னாலேயே போய்க் கொண்டிருந்தாள்.

ஒரு நாளைக்கு ராஜா பல்லக்கில் போய்க் கொண்டிருந்த போது, ஒரு சாமியார் எதிரே வந்தார். ராஜா பல்லக்கை விட்டுக் கீழே இறங்கி, அந்தச் சாமியாருக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டுத் திரும்பவும் பல்லக்கில் ஏறிக்கொண்டு போனான்.

இதை அந்தப் பெண் பார்த்தாள். 'அடடா! ராஜாதான் புருஷர்களுக்குள் உயர்ந்தவன் என்று எண்ணி இத்தனை நாளும் ஏமாந்து போய்விட்டேனே! ராஜாவைக் காட்டிலும் உயர்ந்தவர் சாமியார் போல இருக்கிறதே! கல்யாணம் பண்ணிக்கொண்டால் இந்தச் சாமியாரைத் தான் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்' என்று தீர்மானம் பண்ணிக் கொண்டு அந்தச் சாமியார் பின்னாலேயே சுற்ற ஆரம்பித்து விட்டாள்.

சாமியாரோடு போகும்போது, ஒருநாள் அவர் தெருக்கோடியில் இருந்த பிள்ளையாருக்கு முன் நின்று குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடுவதை அவள் பார்த்தாள். "சாமியாரைவிடப் பெரியவர், உயர்ந்தவர் இந்தப் பிள்ளையார்தான். அதனால் பிள்ளையாரைத்தான்

கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்" என்று தீர்மானம் பண்ணிக் கொண்டாள். சாமியாரோடு போகாமல், அந்தப் பிள்ளையாருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து விட்டாள்.

அவளைத் தவிர அந்தப் பிள்ளையாரிடம் யாரும் அடிக்கடி வருகிற இடமாக அது இல்லை. அது கோயில்கூட இல்லை; வெறும் மரத்தடிதான். அதனால், தெருவோடு போகிற நாய் ஒன்று அந்தப் பிள்ளையார் மேலே காலைத் தூக்கிக் கொண்டு 'ஒன்றுக்கு'ப் போயிற்று. அதைப் பார்த்தவுடன், 'அடடா, இந்தப் பிள்ளையாரையும் விட உசந்தது இந்த நாய்தான்!' என்று, அந்த நாயைத் துரத்திக் கொண்டு, அவள் போக ஆரம்பித்துவிட்டாள்.

தெருவில் ஓடுகிற அந்த நாயை, ஒரு பையன் கல்லால் அடித்தான். அது 'வள், வள்' என்று குரைத்துக்கொண்டு ஓடிவிட்டது.

"ஏண்டா அந்த நாயை அடித்தாய்?" என்று அந்தப் பையனை ஒருவன் பிடித்துக் கொண்டு அதட்டினான்.

'நாயைக் காட்டிலும் நாயை அடித்தவன் பெரியவன் என்று எண்ணினேன்; அடித்தவனையே திருப்பி அடிக்கிற இவன்தான் உயர்ந்தவன்' என்று தீர்மானம் பண்ணிவிட்டாளாம் அந்தப் பெண்.

இப்படிக் கடைசியில் அவள் கண்டுபிடித்த அந்த ஆஸாமிதான் அவளுடைய அப்பா அம்மா முதலில் அவளுக்குத் தீர்மானம் பண்ணியிருந்த பிள்ளை! 'வெகு தூரத்தில் யாரோ இருக்கிறான், இருக்கிறான்' என்று எண்ணிக் கொண்டே சுற்றினாள். கடைசியில், அவன்

அவளுக்கு அருகிலேயே இருந்தவனாகப் போய்விட்டான். இப்படி லௌகிகமாக ஒரு கதை சொல்வதுண்டு.

"எங்கோ தூரத்தில் இருக்கிறான் ஸ்வாமி என்று ஊரெல்லாம் சுற்றுகிறாயே! தெரியாதவரையில் அவன் தூரத்தில் இருப்பவன்தான். ஊரெல்லாம் சுற்றினாலும் அவனைப் பார்க்க முடியாது. அவன் உன்கிட்டேயே இருப்பவன்தான். "தத்தூரே தத்வந்திகே" – 'தூரத்திற்கெல்லாம் தூரம், சமீபத்திற்கெல்லாம் சமீபம்' என்று ச்ருதி சொல்கிறது.

ஹொரைஸன் என்பார்களே, தொடுவானம்; இங்கிருந்து பார்த்தால் ஆகாசமும் பூமியும் அந்த இடத்தில் சேருவது போல் இருக்கும். அங்கே ஒரு பனைமரம் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். 'அந்தப் பனைமரத்தடிக்குப் போனால் பூமியும் வானமும் சேருகிற இடத்தைப் பிடித்து விடலாம்' என்று இங்கே இருந்து பார்க்கிறபோது நமக்குத் தோன்றும். ஆனால் அங்கே போனால், தொடுவானமும் அங்கிருந்து வெகுதூரத்திற்கு அப்பால் போய்விட்டது போல தெரியும். நாம் போகப் போக அதுவும் போய்க் கொண்டே இருக்கும். இந்தப் பனைமரத்தில் வந்து நின்றால் தொடுவானம் வெகுதூரத்திற்குப் போய்விட்டதே, அதைப் பிடிக்க இன்னும் நாமும் போக வேண்டும் என்று போய்க் கொண்டிருந்தால், அதைப் பிடிக்க முடியுமா? இந்தப் பனை மரத்துக்கு வெகுதூரத்தில் இருந்து பார்க்கும்போது இந்த இடத்தில்தான் தொடுவானம் இருப்பதுபோல இருந்தது. இந்த இடத்திற்கு வந்தவுடன், அது நம்மைவிட்டு இன்னும் வெகுதூரத்திற்குப் போய்விட்டது போலத் தெரிகிறது. ஆகவே அது எங்கே இருக்கிறது? நீ இருக்கிற

இடத்தில்தான் இருக்கிறது. நீ இருக்கிற இடந்தான் அது. அப்படி 'அது', 'அது' என்று சொல்லப்படுகிற, வெகு தூரத்தில் இருக்கிற ஸ்வாமி, உன் கிட்டேயே – உன் உள்ளேயே – இருக்கிறது; நீயே அதுதான் என வேதம் உணர்த்துகிறது.

நீயே அது என்பதைத் 'தத்–த்வமஸி' என்ற மஹாவாக்கியமாக வேதம் சொல்கிறது. தத்வம் என்றால் இங்கே தத்தின் தன்மை என்று அர்த்தமில்லை. 'த்வம்' என்பதற்கு இரண்டு அர்த்தம் உண்டு. தன்மை என்பது ஒன்று. 'நீ' என்பது இன்னொரு அர்த்தம். தத்– த்வம் அஸி என்னும் போது 'தத்– அது, த்வம்– நீ (யாக), அஸி– இருக்கிறாய்' என்று அர்த்தம். த்வம் என்பதற்கு இருக்கும் இரண்டு அர்த்தங்களை வைத்து, ஆசார்யாள் கூட "ஸௌந்தர்ய லஹரி" யில் சிலேடையாக ஒரு சுலோகம் பண்ணியிருக்கிறார் 3.

தத்–த்வம் என்ற இரண்டு வார்த்தைகளும் சேர்ந்துதான் தத்வம் என வழக்கில் வந்திருக்கிறது. ஒரே ஸத்யமான பரமாத்மாவின் தன்மையைத் தெரிவிக்கிற வார்த்தையைக் கொண்டே, எந்த ஸத்யமான முடிவுக்கும் 'தத்வம்' என்று பெயர் சொல்லுகிறோம்.

நான் நான் என்று எதை நினைத்துக் கொண்டிருக்கிறாயோ அதுதான், அந்த அறிவுதான் ஸ்வாமி. அந்தப் பிரகாசம் உன்னிடத்தில் இல்லையென்றால், உன்னால் ஸ்வாமி என்றே ஒன்றை நினைக்க முடியாது. 'நான் என்று அறிகிறேன், நான் என்று நினைக்கிறேன், அப்படி நினைக்கிற அறிவுக்கு மூல வஸ்து வெகுதூரத்தில் இருந்து கொண்டிருக்கிற 'தத்' என்று நினைக்கிறாயே, அந்த 'தத்'தும்

நீயும் ஒன்றுதானப்பா!' இதுதான் வேதத்தின் முடிவில் சொல்வது.

இது இது என்று எதைச் சொல்லிக்கொண்டிருக்கிறோமோ, அந்த இதம் என்பது, மூலம் இல்லாதது அன்று. மூலம் இல்லாமல் இது என்று ஒன்று தோன்றாது. விதை இல்லாமல் மரம் தோன்றாது. இவ்வளவு பிரபஞ்சத்திற்கும் – மலைகள், சமுத்திரம், ஆகாசம், பூமி, மாடு, மனுஷன், கோபம், பயம், பிரியம், இந்திரியங்கள், சக்தி இப்படி எல்லாவற்றுக்கும் – இது என்று சுட்டப்படும் எல்லாவற்றுக்கும் – மூலம் உண்டு. பார்க்கப்படுகிறது, கேட்கப்படுகிறது, முகரப்படுகிறது, நினைக்கப்படுகிறது, உஷ்ணம் சீதளம் என்பதாக ஸ்பர்சிக்கப்படுகிறது, மனசினாலே இந்திரியங்களினாலே ஆராயப்படுகிறது, அநுபவிக்கப்படுகிறது – இவை எல்லாவற்றுக்கும் 'இதம்' என்றுதான் பெயர். புத்திசாலித்தனம், ஆச்சரியமான காரியங்கள், இதுவரை வந்த விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் முதலிய எல்லாம், அதாவது அறியப்படுவன எல்லாம் 'இதம்'தான். இவை எல்லாம் ஒரு மூலத்தையே காரணமாக உடையன. மூலம் இல்லாது போனால் 'இது' என்கிறது ஒன்றுமே இராது. மூலம் இல்லாமல் ஒரு பொருள் கிடையாது. எல்லாவற்றுக்கும் ஒரு மூலம், பீஜம் இருக்கிறது. மநுஷ்ய சரீரம் என்றால் பீஜம் இருக்கிறது. மரம் என்றால் அதற்கு ஒரு பீஜம் (விதை) இருக்கிறது. மூலம் இல்லாமல் ஒன்றுமே கிடையாது. ஆதலால் பிரபஞ்சத்துக்கு ஒரு மூலம் இருக்க வேண்டும். பிரபஞ்சத்தில் என்ன என்ன சக்தி இருக்கிறதோ அவ்வளவும் அந்த மூலத்தில் இருக்க வேண்டும்.

புளியங்கொட்டை முளைக்கிறபோது பார்த்தால் தெரியும். முளை கண்டவுடன் அந்த விதையை இரண்டாகப் பிளந்து பார்த்தால் அதற்குள் ஒரு மரமே இருப்பது தெரியும். பெரிய மரமாக வளரக்கூடிய சக்தி அதனிடத்திலேயே இருக்கிறது. எல்லா விதைகளிலும் அப்படியே இருக்கும். என்றாலும், புளியங்கொட்டையில்தான் நன்றாக நாம் பார்க்க முடியும்.

மந்திரங்களில் பீஜாக்ஷரங்கள் என்று உண்டு. ஒரு சின்ன விதைக்குள் ஒரு மஹாவிருக்ஷம் இருப்பதுபோல், இந்த அக்ஷரங்களுக்குள்ளே அளவுகடந்த சக்தியை அடைத்து வைத்திருக்கிறது. ஐகாக்ரியத்தோடு (one- pointed concentration-ஒடு) லக்ஷக்கணக்கான ஆவிருத்தி அந்த அக்ஷரத்தை ஜபித்தால், அதன் உள் சக்தி முழுதையும் கிரஹிக்க முடியும்.

உலகத்திற்குள் எவ்வளவு சக்தி இருக்கிறதோ, எவ்வளவு மேதை இருக்கிறதோ, சாமர்த்தியம் இருக்கிறதோ அவ்வளவும் மூலமான ஸ்வாமிகள் இருக்க வேணடும். மூலம் இல்லாமல் இவை ஒன்றுமே தோன்றாது.

வேதம் முரசறைவதாவது, "இது இது என்று தோன்றும் பொருள்கள் எல்லாம் ஒரு மூலம் இன்றித் தோன்றவில்லை. மூலத்தில் இருக்கும்படியான சக்தி எதுவோ அதுவேதான் உலகம் முழுவதும் வியாபித்துக் கொண்டிருக்கிறது. அந்த மூலம் எங்கே இருக்கிறது? இது இது என்று பார்க்கப்படுவனவற்றுள், உள்ளே இருந்து பார்த்துக் கொண்டிருக்கிற ஆத்மாவேதான் மூலம்."

பெரிய நிலைக்கண்ணாடியை வைத்துவிட்டு அதில் பார்க்கிறோம். நம் உருவம் அதில் இருக்கிறது. நான்கு நிலைக் கண்ணாடிகளை முன்பின் வரிசையாக வைத்துவிட்டுப் பார்த்தால் ஆயிரம் உருவங்கள் தெரிகின்றன. அந்த ஆயிரத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறவன், ஆயிரத்துக்கும் மூலமான ஒரே ஒருவன்தான். இப்படி இத்தனை கோடி ஜீவர்களுக்கும் உள்ளே இருந்து, இது இது என்று பார்த்துக் கொண்டிருக்கிற ஒரே ஒருத்தன்தான் ஸ்வாமி! பார்க்கிற பொருள்தான் பார்க்கப் படுகிற வஸ்துக்களுக்கெல்லாம் மூலம். அந்த மூலம் என்பது அறிவுதான். அறிவு என்பதே எல்லா ஜகத்திற்கும் காரணம். அந்த அறிவு எங்கே இருக்கிறது? உன்னிடமே இருக்கிறது. அகண்டமாக (பிரிவில்லாததாக) இருக்கக்கூடிய இது, உன்னிடம் கண்டமாக (பிரிந்ததாக)த் தோன்றுகிறது.

இது சின்ன பல்பு, அது பெரிய பல்பு. அது நீல விளக்கு, இது பச்சை விளக்கு. விளக்கில் அநேக உருவங்கள் இருக்கின்றன. இருந்தாலும் அவை எல்லாவற்றுக்குள்ளும் இருக்கும் சக்தி– மின்சார சக்தி – ஒன்றுதான். எங்கும் வியாபித்திருக்கிற மின்சக்தி இங்கே, இந்த விளக்குக்குள் இருந்து பிரகாசிக்கச் செய்கிறது; fan (விசிறி) க்குள் இருந்து சுற்ற வைக்கிறது. இந்த எல்லாக் காரியங்களுக்கும் மூலமான சக்தி ஒன்று. அது அகண்டமானது. அதுவே ஒயர் (கம்பி) க்குள் வருகிறபோது கண்டமாகிறது. இயற்கையில் பளீர் பளீர் என்று மின்னும்போது, ஜலம் அருவியாகக் கொட்டும் போது, அங்கெல்லாம் இது தானே வெளிப்பட வந்து விடுகிறது. இந்த மாதிரி உனக்குள்ளேயே

இருக்கிற பரம ஸத்யமான தத்வம் உனக்கு flash ஆகும்படியாக [பளிச்சிடும்படியாக] பண்ணிக் கொள். கர்மாநுஷ்டானத்தில் ஆரம்பித்து, யக்ஞம், தேவதா உபாஸனை எல்லாம் பண்ணிக்கொண்டே போய், மஹாவாக்யத் தியானத்தில் முடிகிற வேத வேதாந்த ஸாதனங்களெல்லாம் இதற்குத்தான். வேதத்தில் இருக்கிற சமூக வாழ்க்கை முறைகள், குடும்ப தர்மங்கள், ராஜாங்க நீதிகள், கவிதை, வைத்தியம், ஜியாலஜி முதலான சாஸ்திரங்கள் எல்லாமும், இந்த ஆத்ம ஸாக்ஷாத்காரத்தில் கொண்டு போய் விடுவதற்காக ஏற்பட்ட படி வரிசைதான். முதலில் இப்படி 'தத்'தும் 'த்வம்'மும் ஒன்றாயிருப்பதை, மின்னல் வெட்டு மாதிரி சில க்ஷணங்களுக்கு மட்டுமே தெரிந்து கொள்வாய். பிரம்மாநுபவம் மின்னலில் மின்னல் மாதிரிக் கண்கொட்டுகிற நேரம்தான் உண்டாகும் என்று கேனோபநிஷத்தில் (iv.4) சொல்வது இந்த நிலையில்தான். அதோடு விடாமல் அப்யாஸம் செய்து கொண்டேயிருந்தால், அருவி தாரை கொட்டுகிறபோதும் எப்போதும் மின்சாரம் உண்டாகிற மாதிரி, எப்போதும் அந்த அநுபவத்திலேயே இருக்கலாம். இதுதான் சரீரத்தில் இருக்கிறபோதே மோக்ஷம். அப்புறம் சரீரம் போனபின், அந்தப் பரம ஸத்தியமாகவே இருந்து விடலாம். இப்படி சரீரம் உள்ளபோது ஜீவன் முக்தி, உயிர் போனபின் விதேஹமுக்தி என்று வித்யாஸம் சொல்வதுகூட, மற்றவர்கள் பார்வையில்தான். ஞானிக்கு இரண்டும் ஒன்று தான்.

இப்படி, எல்லாம் ஒரே பிரம்மம்தான் என்று நாம் அநுபவத்தில் தெரிந்து கொண்டு, இங்கேயே மோக்ஷத்தில்

இருக்கும்படியாகப் பண்ணுவதுதான் ஸகல வேதங்களுக்கும் பரம தாத்பரியமாகும்.

இன்றைக்கு லோக விஷயங்களைப் பத்திரிக்கைகளின் (ந்யூஸ் பேப்பர்களின்) மூலம் தெரிந்து கொள்கிறோம். பல தேசத்திலுள்ள ரிப்போர்ட்டர்கள், ந்யூஸ் ஏஜென்ஸிகள் எல்லோரும் கடிதம் எழுதியும், தந்தி கொடுத்தும், டெலிப்ரிண்டர் மூலம் மெஸேஜ் கொடுத்தும் இந்தச் செய்திகள் எல்லாம் கிடைக்கின்றன. லோகத்திலுள்ள இப்படிப்பட்ட கருவிகளாலும், ஸாதாரண மநுஷ்ய புத்தியாலும் தெரிந்து கொள்ள முடியாத விஷயங்கள் இருக்கின்றனவே! அவற்றைத் தெரிந்துகொள்ள ஒரு பத்திரிக்கை வேண்டாமா? எதை இந்தக் கருவிகளால் தெரிந்து கொள்ள முடியாதோ, எந்த ஊரிலிருந்து தந்தியும் டெலிப்ரின்டரும் வராதோ, அங்கேயுள்ள விஷயங்களைச் சொல்கிற பத்திரிக்கைதான் வேதம். அதீந்திரிய சக்தி வாய்ந்த ரிஷிகள் அந்தப் பத்திரிகையின் வழியாகத்தான் லோகாதீதமான, நம் ஸாதாரண புத்திக்கு அதீதமான ஸமாசாரங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்படி அநேக ஸமாசாரங்கள் வேதத்தில் இருந்தாலும் அதிலும் தள்ளப்படும் சில பாகங்கள் உண்டு.

"தள்ளப்படுவது" என்றால் ஒரேடியாகத் தப்பு என்று ஒதுக்கி விடுவது என்று அர்த்தமில்லை. வேதத்தில் தப்பான ஸங்கதி ஒன்றுகூட இருக்க முடியாது. அப்படியிருக்கும் என்று நினைத்தாலே அபசாரம். ஆனாலும், முக்யமான ஒரு விஷயத்தை ஏற்கச் செய்வதற்குப் பக்க பலமாகவும், பூர்வாங்கமாகவும் அதிலே

பல விஷயங்கள் வரும்போது முக்கியமான விஷயத்தை மட்டுமே எடுத்துக் கொண்டு பாக்கியைத் தள்ளவேண்டியதுதான் என்று நம் பூர்விகர்களே ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள். ஒரு ஆரம்ப நிலையில் அல்லது இடைநிலையில், சில விஷயங்களை எடுத்துக் கொண்டாலும், மேல் நிலைக்குப் போகிறபோது அவற்றை விட்டு விடும்படியாக இருக்கிற ஸமாசாரங்களும், படிப்படியாக ஜீவனை உயர்த்திக் கொண்டே போகிற வேதத்தில் இருக்கின்றன. இவை ஒரு நிலையில் ஏற்கப்பட்டாலும் அதற்கு மேலே இன்னொரு நிலையில் தள்ளப்படுகிறவைதான்.

இப்படியில்லாமல் பரம தாத்பரியம் அல்லது "விதி" என்பதாக பூர்ணமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்களும் வேதத்தில் இருக்கின்றன. அப்படியில்லாமல், ஸாரம் போக, பாக்கி தள்ளப்பட வேண்டியவற்றுக்கு "அர்த்தவாதம்" என்றும் "அநுவாதம்" என்றும் பெயர்.

ஒரு தத்வத்தை, விதியை நம் மனஸிலே படுகிற மாதிரி எடுத்துச் சொல்வதற்காக, அதற்கு மிகவும் உயர்வைக் கல்பிக்கிறதான அநேக கதைகளை வேதம் சொல்வதுண்டு. இப்படிச் சொல்லும்போது, விதியையே பூர்ணமாக எடுத்துக்கொள்ள வேண்டும். கதைகளை வேதம் சொல்வதுண்டு. இப்படிச் சொல்லும்போது, விதியையே பூர்ணமாக எடுத்துக்கொள்ள வேண்டும். கதைகளை 'அர்த்தவாதம்' என்று தள்ளி விடலாம். அதாவது, அவற்றை நாம் அனுஷ்டானத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இது "அர்த்தவாதம்".

"அநுவாதம்" என்றால் என்ன? நமக்குத் தெரியாததை முடிவாகச் சொல்வதற்காகவே, நமக்குத் தெரிந்த ஒன்றில் வேதம் ஆரம்பித்து, அதையும் விவரித்துக் கொண்டு போகும். புதிசாக ஒரு விதியை அல்லது தத்வத்தைச் சொல்லாமல், சில இடங்களில் ஏற்கெனவே நமக்குத் தெரிந்ததைத் திரும்பவும் சொல்லும். அதாவது வேதப் பிராமாண்யம் தேவைப் படாமல் நமக்கே நடைமுறையில் பிரத்யக்ஷப் பிரமாணம் முதலானதுகளால் தெரிய வருகிற விஷயங்களையும் சில இடங்களில் வேதம் சொல்ல வேண்டியதாகும். இதுதான் "அநுவாதம்" என்பது.

அநுவாதமும், அர்த்தவாதமும் முக்யமானவை அல்ல. அவை வேதத்தின் முடிவான உத்தேசத்தைச் சொல்ல வந்தவை அல்ல. நமக்கு மற்ற எந்தப் பிரமாணங்களாலும் தெரியாததை வேதம் சொன்னால், அதுதான் விதி; அதுதான் முக்யமான வாதம். அதுதான் ஸத்யமான தத்வம். அதுதான் வேதத்தின் உத்தேசம், உபதேசம் எல்லாம்.

அதாவது இதர கருவிகளைக் கொண்டு தெரிந்து கொள்ளக் கூடியதை வேதமும் சொன்னால், அது மறுக்க முடியாத வேதப் பிரமாணமாகி விடாது. தெரியாததைத் தெரிவிக்க ஏற்பட்டதுதான் வேதம். அது நமக்குத் தெரிந்ததையும் சொல்லி, தெரியாததையும் சொல்லிற்று என்றால், தெரியாதது தான் அதன் பரமதாத்பரியம் என்றே அர்த்தமாகும். நமக்குத் தெரிந்த இடத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்ற கருணையாலேயே தெரிந்ததையும் சொல்கிறது. ஆனால் இதுவே ஸத்ய தத்வம் என்றால் தெரியாததைச் சொல்லவேண்டிய அவசியமே இல்லை!

"நமக்குத் தெரியாத ஒரு தத்துவத்தை வேதம் நீள நெடுகச் சொல்லியிருக்குமானால் அப்போது அதைத் தள்ளிவிடுங்கள்: தெரிந்ததையே வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னால் அது பரிஹாஸத்துக்கு இடமாக அல்லவா ஆகும்? இதற்கு ஏன் தெரியாததை நீட்டி முழக்கி சொல்லியிருக்க வேண்டும்? சொல்லாமல் விட்டிருக்கலாமே!

சரி, நமக்குத் தெரிந்தது என்ன? தெரியாதது என்ன? உலக வஸ்துக்களின் விஷயத்தில் இரண்டு விதமான அபிப்ராயங்கள் இருக்கின்றன. நமக்குத் தெரிகிற இத்தனை வஸ்துக்களும் ஒரே பொருளா, வேறு வேறா என்ற ஸந்தேஹம் ஏற்பட்டு இரண்டு பிரிவாகப் பிரிகிறது. நாம் பிரத்யக்ஷப் பார்வையை மட்டும் வைத்துக் கொண்டு, வஸ்துக்கள் எல்லாம் ஒன்றுக்கொன்று வேறே வேறேதான் என்கிறோம். அப்படி வேற வேறேயாக வைததுக் கொண்டால்தான், நமக்குக் காரியம் சரியாக நடக்கிறது. நமக்கு ஜலம் வேறே, எண்ணெய் வேறேதான். தீபம் வேண்டுமானால் எண்ணெய் விட்டால்தான் எரியும். ஜலத்தை விட்டுப் பிரயோஜனமில்லை. அதே தீபம் பெரிசாக எரிந்து நெருப்புப் பிடித்துக் கொண்டுவிட்டால், அப்போது ஜலத்தை விட்டுத்தான் அணைக்க வேண்டும். எண்ணெய் விட்டால் இன்னம் பெரிசாக ஜ்வாலை விடும்! இப்படியே எந்தக் காரியமானாலும், வஸ்துக்களிடையே வித்யாஸம் பார்த்து, அவை வேறே வேறே என்று வைத்துக்கொண்டு செய்தால்தான் காரியம் நடக்கிறது.

இப்படி வேறே வேறேயாகவே வைத்துக் கொள்கிறது தான் த்வைதம்.

வேதத்தில் அநேக கர்மாங்கள், உபாஸனைகளைச் சொல்லியிருப்பதெல்லாம் இப்படிப்பட்ட த்வைத அடிப்படையிலேதான். அதனால், இங்கெல்லாம் வேதம் த்வைதமாக இருக்கிறது என்றுதான் ஏற்படுகிறது. இதை அத்வைதிகள் என்பதற்காக நாம் யாரும் ஆக்ஷேபித்துப் பேச வேண்டாம்.

ஆனால், இப்படி நமக்குத் தெரிந்த த்வைதத்தோடு வேதம் நின்றுவிட்டதா என்று பார்க்கலாம். அப்படி நின்று விட்டால் த்வைதந்தான் வேத தாத்பரியம் என்று சொல்லி விடலாம். ஆனால் வேதத்திலே என்ன பார்க்கிறோம்? ஸம்ஹிதையிலே ஆங்காங்கும், கடைசியில் உபநிஷத்தில் ஏகப்பட்டதாகவும், பிரத்யக்ஷத்தில் நமக்குத் தெரியாத அத்வைதத்தைச் சொல்லியிருக்கிறதே! வஸ்துக்கள் வேறு வேறு இல்லை – எல்லாம் ஒரே ஆத்மாவின் வெளித்தோற்றங்கள் தான் – என்ற அபிப்ராயத்துக்குக் கொண்டு விடுகிறதே!

நம்முடைய மதப் புஸ்தகங்களில் 'பூர்வபக்ஷம்', 'ஸித்தாந்தம்' என்று இரண்டு உண்டு. முதலில், பூர்வபக்ஷம் என்பதில் புஸ்தகத்தின் கொள்கைக்கு மாறுபட்டவர்களின் கொள்கையைச் (opposite point of view) சொல்லியிருக்கும். அதை மட்டும் பார்த்தால் புஸ்தகத்தின் அபிப்ராயத்தையே நாம் நேர்மாறாகப் புரிந்து கொண்டு விடுவோம். இப்படி எதற்கு பூர்வபக்ஷம் பண்ணியிருக்கிறதென்றால் அப்புறம் ஸித்தாந்தம் செய்வதற்காகத்தான். அதாவது எதிர்வாதங்களை வென்று புஸ்தகத்தின் கொள்கையான சித்தாந்தத்தை நிலைநாட்டுவதற்கே, முதலில் அந்த

எதிர்வாதங்களைச் சொல்லியிருக்கும். அப்புறம் ஸித்தாந்தம் என்ற பாகத்தில், அந்த வாதங்களுக்கெல்லாம் பதில் சொல்லி நிராகரித்து விட்டுத் தன் கொள்கையையே கெட்டியாக நிலை நாட்டியிருக்கும். எதிராளியின் அபிப்ராயத்தையும் மறைக்காமல் சொல்லி, அதற்கு இப்படி நம் தரிசனங்களில் ('தரிசனம்' என்றால் தத்வ சாஸ்திரங்கள் என்று அர்த்தம்) பதில் சொல்லியிருப்பதைப் பிறதேசத்து அறிஞர்களும் கொண்டாடுகிறார்கள்.

இதை எதற்கு சொன்னேன் என்றால், 'வேதத்தில் அத்வைதத்தைச் சொன்னது, இப்படிப் பூர்வபக்ஷமாக அந்தக் கருத்தைச் சொல்லி அப்புறம் அது சரியில்லை என்று நிர்த்தாரணம் பண்ணுவதற்கா?' என்று பார்த்தால், அப்படி இல்லை.

அத்வைதத்தை விசேஷமாகச் சொல்கிற உபநிஷத்துக்கள் தான் ஸித்தாந்தம் மாதிரி 'ஞானகாண்டம்' என்று கடைசியில் வருகிறது. த்வைதத்தை சொல்லும் 'கர்மகாண்டம்' பூர்வ பக்ஷம் மாதிரி இதற்கு முந்தியே வந்து விடுகிறது. ஆகவே நமக்குத் தெரிந்த த்வைதத்தையும் வேதம் முதல் நிலையிலே சொல்லி, தெரியாத அத்வைதத்தையும் முடிவிலே சொல்கிறது என்றால், அந்த அத்வைதந்தான் வேதம் சொல்ல வந்த லக்ஷ்யம், அதுவே வேதத்தின் பரம தாத்பரியம் என்றுதான் அர்த்தம்.

ஆனாலும் பூர்வபக்ஷத்தைக் கண்டிக்கிற மாதிரி வேதத்தில் த்வைதத்தைக் கண்டிக்கவில்லை. ஏனென்றால், காரணம் சொல்கிறேன். த்வைதத்தை வைத்துக் கொண்டு செய்கிற

கர்மா, உபாஸனை ஆகியன அத்வைதாநுபவத்துக்குப் போவதற்கு விரோதமில்லை. மாறாக அதற்கு உபாயமே இவை. அதனால் பூர்வபக்ஷத்தில் எதிர்க்கட்சிக்காரன் என்று ஒருத்தனை வைத்து அப்புறம் அவனைக் கண்டித்த மாதிரி, இங்கே த்வைதமான அபிப்ராயங்களையும், கர்மாக்களையும் விரோத பாவத்துடன் எதிர்க்கட்சி என்று வைக்கவில்லை. ஆகையால், அவற்றை அப்புறம் கண்டிக்கவுமில்லை. முதலிலே பூ இருந்து, அப்புறம் அந்தப் பூ உதிர்ந்து பழமாகிற மாதிரி, முதலில் த்வைதமாக இருந்தே, நாம் அப்புறம் அதை விட்டு அத்வைதமாக வேண்டியிருக்கிறது. பூவுக்கும் பழத்துக்கும் விரோதமா என்ன? பழந்தான் முற்றிய நிலை என்பதற்காகப் பூவைக் கண்டிப்பதில்லையல்லவா?

மற்ற எல்லாமும் அதது இருக்கவேண்டிய லெவலில் இருந்தால், அவற்றை அத்வைதத்தில் கண்டிக்க வேண்டியதேயில்லை. லெவலை மீறுகிற போதுதான் கண்டிக்க வேண்டியிருக்கிறது. இப்படித்தான் (சங்கர பகவத்பாத) ஆசார்யாளும், மற்ற அத்வைத கிரந்த கர்த்தாக்களும் இதர ஸித்தாந்திகளைக் கண்டனம் பண்ணி எழுதினது.

ஈச்வர கிருபையால், விஞ்ஞான வளர்ச்சியானது ஆத்மிகத்துக்குக் கெடுதலைப் பண்ணாமல், இதுவரைக்கும் வேதத்தால் அன்றித் தெரிந்து கொள்ள முடியாதிருந்த அத்வைதத்துக்கும் கிட்டே கிட்டே கொண்டு போவதாகவே 'மாடர்ன் ஸயன்ஸி'ல் ஏற்பட்டிருக்கிறது. ஸயன்ஸில் ஆரம்பத்தில் பார்த்தால் உலகத்திலுள்ள வஸ்துக்கள் எல்லாம் வேறு வேறு என்றே நினைத்தார்கள். பிறகு

எல்லாவற்றுக்கும் மூலமாக 72 எலிமென்ட்களே இருக்கின்றன என்று தீர்மானித்தார்கள். அந்த 72ம் தங்களுக்குள் ஒன்றுக்கொன்று பல தினுசில் சேருவதால்தான் இத்தனை கோடி வஸ்துக்களும் வந்தன என்றார்கள். அப்புறம் Atomic Science (அணு விஞ்ஞானம்) என்பதில் ஆராய்ந்து கொண்டே போனதில், இந்த 72 பதார்த்தங்களுக்கும் மூலம் ஒன்றே ஒன்றேதான், ஒரே எனர்ஜி (சக்தி) தான் என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்4.

ஆத்ம தத்வத்தை விசாரித்து, ஸத்யத்தைத் தெரிந்து கொண்டவர்கள், அந்த ஸத்யம் அறிவு மயமானதே என்று சொல்லி, இந்த அறிவுக்குள்ளேயே ஜட வஸ்துக்களை மட்டுமில்லாமல் அறிவோடு (சைதன்யத்தோடு) இருக்கபட்ட ஜீவாத்மாவையும் சேர்த்து அத்வைதமாகச் சொல்கிறார்கள்.

ஒரே எனர்ஜி என்றாலும் சரி, ஏக சைதன்யம் என்றாலும் சரி, விஞ்ஞானிகளும் ஞானிகளும் சொல்கிற அந்த ஒன்றேயான வஸ்து நமக்குப் பிரத்யக்ஷத்தில் தெரியவில்லை. அதன் வேஷமான பல பல வஸ்துக்கள்தான் வேறே வேறே மாதிரி 'த்வைதமாக'த் தெரிகின்றன. இந்த த்வைதமே ஸத்யமானால், அதற்கு வேதத்தைப் பார்க்க வேண்டுமென்பதே இல்லை. நம்முடைய கண்ணுக்கும் புத்திக்கும் தெரிந்ததைச் சொல்ல வேதம் எதற்கு? நமக்குத் தெரியாததாகவும், தெரிந்த இடத்திலிருந்து ஆரம்பித்து நாம் போகக்கூடியதாகவும், கடைசியிலே முடிவான விஷயமாகவும் வேதம் ஒன்றைச் சொல்லுமானால்,

அதுதான் வேதங்கள் அத்தனைக்கும் முடிவான தாத்பரியம் என்று எடுத்துக் கொள்ளவேண்டும். இப்படியிருப்பது 'ஜீவாத்மா' தன்னுடைய நிஜ நிலையைப் பெற வேண்டுமானால் பரமாத்மாவில் அத்வைதமாகக் கரைந்து பிரம்மமாகிவிடவேண்டும்' என்ற தத்வந்தான்.

1. ப்ருஹதாரண்யகம் I.4.7

2. ஈசாவாஸ்யோபநிஷத், 5.

3. "தெய்வத்தின் குரல்--முதற்பகுதி"யில் "பவானித்வம்" என்ற உரை பார்க்க.

4. அணு விஞ்ஞானம் உருப்பெறு முன்பே, அதாவது 1920-களிலேயே, ஸ்ரீ பெரியவர்கள் தமது உரையொன்றில், "72 எலிமென்ட்கள் ஒன்றுக்கொன்று சேருவதால் பல பொருட்களையும் உண்டாக்குகின்றன என்று சொல்கிறார்கள். இன்னும் மேலே ஆராய்ந்து கொண்டே போனால், அந்த 72 பதார்த்தங்களுக்கும் மூலம் ஒரே பதார்த்தந்தான் என்பதை அறிந்து கொள்வார்கள்" என்று கூறியிருக்கிறார்கள். அவர்களது தீர்க்க தரிசனம் பலிதமானதில் வியப்பென்ன?

உபதேச ஸாரம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

உபதேச ஸாரம்

அந்த நிலைக்குப் போக உபநிஷத்துக்களில் சொன்ன உபதேச ஸாரம் என்ன?

Time (காலம்), Space (இடம்) என்ற இரண்டு concept (கருத்து)களுக்குள்ளேயே நடைமுறைப் பிரபஞ்சம் முழுக்க மாட்டிக் கொண்டிருக்கிறது என்று 'மாடர்ன் ஸயன்ஸ்' சொல்கிறது. இந்த இரண்டிலிருந்து விடுபட்டால்தான் பிரபஞ்சத்தின் மூலமான ஸத்யத்தைப் பிடிக்க முடியும் என்று உபநிஷத் சொல்கிறது. நாம் இருக்கிற இடமே 'ஹொரைஸன்' என்ற கதை சொன்னேனே – இதிலே Space அடிப்பட்டுப் போய் விடுகிறது. இப்படியே கால தத்வத்துக்கும் அதீதமாக நிற்கவேண்டும்.

இப்படி சொல்லி விட்டால் போதுமா? இது நம்மால் முடியுமா?

முடியும் என்று நம்பிக்கை தருவதற்கு, வியவஹாரத்திலேயே (நடைமுறையிலேயே)

திருஷ்டாந்தம் இருக்கிறது. பொழுது போகவில்லை என்பதற்காக, எங்கேயோ காங்கோவில் நடக்கிற சண்டை ஸமாசாரத்தை விழுந்து விழுந்து படிக்கிறோம். ஆனால் இன்னம் கிட்டே பாகிஸ்தானில், காஷ்மீரில் சண்டை வந்தால் காங்கோவை விட்டு விடுகிறோம். பேப்பர்காரனே அந்த (காங்கோ) ந்யூசை ஒரு மூலைக்குத் தள்ளிவிட்டு இந்த (பாகிஸ்தான்) ஸமாசாரத்தை பெரிசாகப் போட ஆரம்பிக்கிறான். இப்போது இந்த ந்யூஸ்தான் நமக்கு முக்கியமாயிருக்கிறது. அப்புறம் இன்னம் கிட்டே, 'திருத்தனி தமிழ் நாட்டோடு சேரவேண்டும்' என்கிற மாதிரி ஒரு விஷயத்தில் தமிழனுக்கும் தெலுங்கனுக்கும் சண்டை, அடி உதை என்றால் பாகிஸ்தான் ஸமாசாரங்கூட எங்கேயோ ஓடிவிடுகிறது. இந்த boundary-ச் சண்டைதான் நம் கவனத்தைப் பெறுகிறது. இப்போது பக்கத்துத் தெருவிலே ஏதோ கலாட்டா என்றால் தமிழன் – தெலுங்கன் சண்டையிலும் 'இன்ட்ரஸ்ட்' போய் விடுகிறது. (ந்யூஸ்) பேப்பரைத் தூக்கிப் போட்டு விட்டு தெருச் சண்டையைப் பார்க்கப் போய்விடுகிறோம். போன இடத்தில் யாராவது வந்து, நம் வீட்டில் பசங்கள் சண்டை போட்டுக் கொள்கின்றன; அல்லது பத்தினிக்கும் அம்மாவுக்கும் (மாமியார் – மாட்டுப்பெண்) "யுத்தம்" என்று சொன்னால், தெருச் சண்டையையும் விட்டுவிட்டு வீட்டுக்கு வந்துவிடுகிறோம்!

ஸர்வதேச ரீதியில் காங்கோ சண்டைக்கு ரொம்பவும் முக்கியமிருக்கலாம். அதிலிருந்து பாகிஸ்தான் சண்டை, திருத்தணி சண்டை, தெருச் சண்டை, வீட்டுச் சண்டை என்று ஒன்றிலிருந்து ஒன்று சின்னதாகி, கடைசியில் அல்ப

விஷயத்தில் வந்து நிற்கலாம். ஆனால் நம் ஈடுபாடோ inverse ratio-வில் [எதிரிடை விகிதத்தில்] ஒன்றை விட ஒன்று ஜாஸ்தியாகிக் கொன்டே போயிருக்கிறது! இது ஏன்?

ஏனென்றால், Space-ல் காங்கோ எங்கேயோ இருக்கிறது. அதிலிருந்து ஒவ்வொன்றாகக் கிட்டே வந்து வீடு இங்கேயே இருக்கிறது. நம்மிடத்திலேயே இருக்கிற ஹொரைஸனுக்கு வருகிற கதைதான்.

இப்போது கொஞ்சம் பார்வையை உள்ளே திருப்பிக் கொண்டு விட்டால் போதும். உள்ளுக்குள்ளே, நம்முள்ளேயே இந்திரியங்கள் போடும் சண்டையை, கலாட்டாவைப் பார்த்துக் கொள்ள ஆரம்பித்து விட்டால், மற்ற எல்லாமே – வீட்டுச் சண்டை உள்பட எல்லா ஸமாசாரமுமே – எங்கேயோ காங்கோவில் நடக்கிற மாதிரி ஓடிப் போகும். இந்த உள்–சண்டையை ('அகப் போராட்டம்' என்று பத்திரிகைக்காரர்கள் சொல்கிறார்களே, அதை) தீர்த்துக் கொண்டு சாந்தமாக இருக்கவே முயற்சி பண்ணுவோம். அந்த சாந்தியில் இடம், வெளி, Space என்று எதுவும் இல்லாமல் போய்விடும். தூங்குகிற போது இடம் தெரிந்ததோ? அப்படி ஆகும். தூக்கத்தில் அறிவும் உணர்ச்சியும் இல்லை; Space-ம் இல்லை. ஞானத்தில் அறிவுமயமாக, அனுபவமயமாக இருந்துகொண்டே, Space இல்லாமல் இருக்கலாம்.

Time-காலமும் இப்படித்தான். பத்து வருஷத்துக்கு முன் அப்பா செத்துப் போனபோது அத்தனை அழுகை அழுதோமே? இப்போது ஏன் அந்த அழுகை வரவில்லை? செத்துப் போனவுடன் அழுத அளவுக்கு மறுநாள்கூட

அழவில்லையே. அது ஏன்? போன வருஷம் பிரமோஷன் கிடைத்தது, லாட்டரி சீட்டு விழுந்தது என்று ஆனந்தக்கூத்து ஆடினோமே? அந்தமாதிரி இப்போது ஏன் ஆடத் தோன்றவில்லை?

இடத்திலே கிட்ட இருப்பதிடமே அதிகப் பற்று இருக்கிற மாதிரி, காலத்திலே நமக்கு இந்த ஸம்பவங்கள் கிட்டே இருக்க இருக்க, அவற்றால் நாம் அதிகம் பாதிக்கப்படுகிறோம்.

நமக்கு வெளியிலே பார்வையை விட்டு, இடத்தையும் காலத்தையும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, இப்படியாக ஒரு அளவில் இடத்தின் பாதிப்பும், காலத்தின் பாதிப்பும் நம்மைவிட்டு – நம் முயற்சி இல்லாமலே – போகிறதைப் பார்க்கிறபோது, நாம் முயற்சி பண்ணி உள்ளே பார்வையை திருப்பிக் கொண்டால் இந்த இரண்டு தத்வங்களிலிருந்து விடுபட்டு விடலாம் என்ற நம்பிக்கை உண்டாகிறது. நம் முயற்சி இல்லாமல் தூக்கத்தில் காலமும் இடத்தோடுகூடத் தெரியாமல் போனாலும், அப்போது 'இப்படி இருக்கிறோம்' என்ற ஞானமில்லை. ஞானம் பெற்று, 'தூங்காமல் தூங்குவது' என்று தாயுமானவர் முதலானவர்கள் சொன்ன ஸ்திதிக்குப் போனால், பூர்ண பிரக்ஞையுடனேயே இந்த Time-Space-லிருந்து விடுபட்டுப் பேரானந்தமாயிருக்கலாம். அப்போது – வீட்டுச் சண்டை மட்டுமில்லை, நம்மையே கத்தியால் குத்தினால் கூட அது காங்கோ ஸமாசாரம் மாதிரித்தான் எங்கேயோ இருக்கும். நமக்கு ரொம்பவும் நெருக்கமான பதி, பத்தினி, குழந்தை கண்ணுக்கு முன்னே செத்துப் போனால்கூட அது பத்து

வருஷத்துக்கு முன் அப்பா செத்துப்போன மாதிரிதான் இருக்கும்.

த்வைத-அத்வைத வாதங்கள் இருக்கட்டும். இப்போது அவை நமக்கு வேண்டியதில்லை. நமக்கு வேண்டியது என்ன?

சாந்தி.

நல்லதும் கெட்டதுமாகப் பலது நம்மை பாதிக்கிறது. அதனால் அழுகிறோம். சிரிக்கிறோம். இரண்டும் பாதிப்புதான். இரண்டுமே போதும் போலத்தான் இருக்கிறது. சிரித்தால்கூட ஒரு அளவுக்கு மேலே போனால் வயிற்றை வலிக்கிறது! பலஹீனமாகிறது. "சிரிப்பு மூட்டாதே!" என்று கோபித்துக் கொள்கிறோம். ஆனந்தமாக டான்ஸ் பண்ணினாலும் உடம்பு அசந்து போகிறது, போதும் என்றாகிவிடுகிறது. ஒரு பாதிப்பும் இல்லாமல் விச்ராந்தியாக இருக்கமாட்டோமா என்றுதான் இருக்கிறது. இதுதான் நமக்கு வேண்டியது. அத்வைதமுமில்லை, த்வைதமும் இல்லை.

இதற்கு என்ன பண்ணலாம் என்று பார்க்கிறோம். பாதிப்பு எப்படிப் போகும் என்று ஆலோசித்துப் பார்த்தால் ஒன்று தெரிகிறது. 'முதலிலே காங்கோ சண்டை ந்யூஸ் வந்தபோது விழுந்து விழுந்து படித்தோமே, அப்புறம் ஏன் விட்டுப் போச்சு? அது ஏன் இப்போது நம்மை பாதிக்கவில்லை' என்று ஆலோசித்தால், இடத்தில் (space ல்) ஒன்று தள்ளிப் போகப் போக அதன் பாதிப்பு குறைகிறதென்று தெரிகிறது. பத்து வருஷம் முந்தி பிதா காலமானபோது அத்தனை அழுத நம்மை இப்போது அது

ஏன் பாதிக்கவில்லை என்று யோசித்துப் பார்த்தால், காலத்திலே தள்ளிப்போகப் போகப் பாதிப்பு குறைகிறது என்று தெரிகிறது. அதனால் நாம் பாதிப்பே இல்லாமலிருக்க வேண்டுமானால் பக்கத்திலேயே நடப்பதை காங்கோவில் நடக்கிற மாதிரி பாவிக்கப் பழகவேண்டும்; இந்த க்ஷணத்தில் வருகிற நல்லது பொல்லாததுகளைப் பத்து வருஷத்துக்கு முந்தி நடந்த மாதிரிப் பார்க்க அப்யாஸம் செய்ய வேண்டும். எத்தனை ஸந்தோஷமும், துக்கமும் சாச்வதமாக இல்லாததால், எல்லாம் relative தான் (ஸ்வய சக்தி இல்லாமல், இன்னொன்றைச் சார்ந்திருப்பதுதான்) என்று தெரிந்துவிட்டது. அதனால் இன்னொன்றைச் சாராமல் தன்னில் தானாக நிறைந்து Absolute-ஆக இருப்பதைப் பிடித்தால்தான் பல தினுஸான பாதிப்பு இல்லாமல் சாச்வத அமைதியாக இருக்கும் என்று தெரிகிறது. இதுதான் spirituality-யில் [ஆத்மிகத்தில்] ஐன்ஸ்டீனின் Relativity Theory[சார்புக் கொள்கை]! அவரும் Time, Space-ஐத்தானே சொல்கிறார்?

இந்த இரண்டிலிருந்து விடுபட வேண்டும் என்ற தாபம் தான் எனக்கு உபநிஷத்தின் உபதேச ஸாரமாகத் தெரிகிறது. எந்த அளவுக்குத் தாபப்பட்டு மீளுவதற்கு முயற்சி பண்ணுகிறோமோ, அந்த அளவுக்கு ஈச்வரப் பிரஸாதம் கிடைத்து, அந்த லக்ஷ்யத்துக்கு அழைத்துக் கொண்டு போகும்.

உபதேசம் வேண்டும் என்று மலைக்கும், காட்டுக்கும் ஓடவேண்டாம். இடமும், காலமுமே நமக்கு பாதிப்புப் போவதற்கான உபதேசத்தைப் பண்ணிவிடுகின்றன. நாம்

பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டு முயற்சி பண்ணவேண்டியதெல்லாம், இடத்தில் தள்ளி, காலத்தில் தள்ளி இருக்கிற விஷயங்கள் மாதிரியே இந்த இடத்தில், இந்த க்ஷணத்தில் நடப்பதையும் தள்ளி வைப்பதற்கான சக்தியை அடைவது தான்.

முதல் உபநிஷத்தான ஈசாவாஸ்யத்தில், "அது (ஆத்மா) அசைகிறது; (ஆனாலும்) அசைவதில்லை. அது தூரத்திலிருக்கிறது; ஆனாலும் கிட்டேயே, உள்ளேயே இருக்கிறது" என்று சொல்லும்போது Space, Time இதுகளையும், இதற்கு அதீதமாக இருக்கிற ஸ்திதியையுந்தான் மாற்றி மாற்றிச் சொல்லி, இந்த இரண்டிலிருந்து விடுபடுகிற ஆர்வத்தை உண்டாக்கியிருக்கிறது. அடுத்த மந்திரங்களில் Time, Space எல்லாம் இவனுடைய ஆத்மாவுக்குள்ளேயே அடங்கியிருப்பதைப் பார்க்கச் சொல்லியிருக்கிறது. அப்படிப் பார்த்துவிட்டால் அப்புறம் துவேஷமில்லை, மோஹமில்லை, துக்கமில்லை என்கிறது. அதாவது ஒருவிதமான பாதிப்பும் இல்லை. அப்புறம் ஒரு மந்திரம் இந்த ஆத்மா ஸர்வவியாபி என்று Space-க்கு மேற்பட்ட நிலையைச் சொல்லி, வருஷங்களுக்குப் பதார்த்தங்களை வகுத்துக் கொடுப்பதும் ஆத்மாதான் என்பதாக அதன் காலாதீத நிலையையும் சொல்கிறது.

மொத்தத்திலே, இன்றைய ஸயன்ஸின் லக்ஷ்யமாயிருக்கிற அதே Space-Time-ன் ஆதார ஸத்யம்தான் உபநிஷத் லக்ஷ்யமாகவும் இருக்கிறது. அந்த ஸத்யத்தை அனுமானத்தினால் மட்டும் ஒரு postulate மாதிரி ஸயன்ஸ் சொல்கிறது. உபநிஷத்தோ இதை அநுபவ பூர்வமாக,

தன்னில் தானாக அடைய முடியும் என்கிறது. வேதமுடிவான உபநிஷத்தின் முடிவு இதுவே.

வேதமும் தமிழ்நாடும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

வேதமும் தமிழ்நாடும்

வேதமிருந்தால்தான் லோகம் நன்றாக இருக்கும், ஆத்மாவும் க்ஷேமமடையும் என்பது என் அபிப்ராயம். இந்தப் பெரிய மூலதனம் இப்போது வீணாகப் போயிருக்கிற நிலை மாறி, இதை மறுபடி தழைக்கும்படியாகப் பண்ணவேண்டுமென்பதே எனக்கு ஸதா விசாரமாக இருக்கிறது. அதற்காகத்தான் என்னாலானதை ஏதோ திட்டம் கிட்டம் போட்டு வேத ரக்ஷணம், ஸ்டைபண்ட் என்று பல இடங்களில் ஏற்பாடு செய்திருக்கிறது. ஆனால் இது இந்த மடம், அல்லது சில ஸ்தாபனங்களின் கடமை மட்டுமல்ல; இது நம் எல்லோர் கடமையுமாகும்; உங்கள் எல்லோருடைய ட்யூட்டியும் ஆகும். நிர்ப்பந்தத்துக்காக இல்லாமல், ஆசையோடு ஆர்வத்தோடு நீங்கள் எல்லோரும் சேர்ந்து இது வேத பூமி என்பதை மறுபடி நிஜமாக்கப் பிரயாஸைப் படவேண்டும். தமிழ்நாட்டுக்கு இதை நான் முக்கியமாகச் சொல்கிறேன்.

வேத விருக்ஷம் நன்றாக விழுது விட்டு வளர்ந்த மண் இந்தத் தமிழ் பூமி, "வேதம் நிறைந்த தமிழ்நாடு" என்று [பாரதி] பாடியிருப்பது கவியின் அதிசயோக்தி இல்லை. அப்படித்தான் தமிழ்தேசம் இருந்திருக்கிறது.

சங்க காலத்திலிருந்து, எங்கே பார்த்தாலும் வேத வேள்விகளை வானளாவப் புகழ்ந்து சொல்லியிருக்கிறது. சங்கம் வளர்த்த பாண்டிய ராஜாக்கள் வைதிகமான யக்ஞாதிகளை நிறையச் செய்து, "பல் யாகசாலை முது குடுமிப் பெருவழுதி" என்ற மாதிரியான பட்டங்களைத் தங்களுக்குப் பெருமையோடு சூட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ராஜதானியான மதுரையைப் பற்றி இரண்டு பெருமை. ஒன்று, 'மாடு கட்டிப் போர் அடித்தால் மாளாது என்று யானை கட்டிப் போர் அடித்தது.' இது தான்ய ஸுபிக்ஷத்தைச் சொல்வது. இன்னொன்று ஆத்ம ஸுபிக்ஷத்தையும், லோக ஸுபிக்ஷத்தோடு சேர்த்துச் சொல்வது. அதாவது, பல ஊர்க்காரர்கள் தங்கள் தங்கள் ஊர்ப் பெருமையைச் சொல்லும்போது மதுரைவாசிகள், "எங்கள் ஊரில் வேத சப்தத்தோடேயாக்கும் பொழுது விடிகிறது. சேரர்களின் தலைநகரான வஞ்சியில் இருப்பவர்களும், சோழர்களின் தலைநகரான கோழி என்ற உறையூரில் இருப்பவர்களும், தினமும் கோழி கூவுவதைக் கேட்டு விழித்துக் கொள்கிறார்கள். அதைவிடப் பெருமைப்படத்தக்க விதத்தில் விழித்துக் கொள்பவர்கள் பாண்டிய ராஜதானியான மதுரையில் வசிக்கிற நாங்களே. வேத அத்யயனத்தை, மறையொலியைக் கேட்டுக் கொண்டுதான் நாங்கள் விழித்துக் கொள்கிறோம்" என்று பெருமைப் பட்டுக் கொள்கிறார்கள்! இது சங்க இலக்கியத்திலேயே இருக்கிற விஷயம்1.

திருக்குறளில் பல இடங்களில் வேதநெறி சிறப்பித்துப் பேசப்படுகிறது. வேதத்திலுள்ள பஞ்ச மஹாயக்ஞங்களைத்தான் திருவள்ளுவர் சொல்கிறார்: தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தார் ஓம்பல் தலை.

ராஜநீதி தவறினால் கோ-ப்ராம்மணர்களுக்கு க்ஷீணம் உண்டாகும் என்பது ஒரு முக்யமான வைதிகக் கொள்கை. கோ (பசு) வையும், பிராம்மணர்களையும் தனியாகக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், கோ தருகிற நெய், பால், சாணம் முதலியனதான் யக்ஞ திரவியங்களில் முக்யமானவை; யாகத்தைப் பண்ணுகிற அதிகாரம் பெற்றவர்களோ பிராம்மணர்கள்- என்பதுதான். இதே மாதிரி கோ-பிராம்மணர்களைத் திருவள்ளுவர் குறிப்பிட்டு, அரசின் நீதித் தண்டம் தவறினால், இந்த இருவராலும் கிடைக்கிற லோக உபகாரம் வீணாகிவிடும் என்கிறார்.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர் காவலன் காவான் எனின்.

'ஷட் கர்ம நிரதர்' என்று பிராம்மணர்களுக்கு உள்ள வைதிகமான பெயரை, அப்படியே மொழிபெயத்து "அறு தொழிலோர்" என்கிறார். அத்யயனம்-அத்யாபனம் (தான் வேதம் ஓதுவது-பிறருக்கும் ஓதுவிப்பது); யஜனம்-யாஜனம் (தான் வேள்வி செய்வது-பிறருக்கு வேள்வி செய்விப்பது): தானம் - ப்ரதிக்ரஹம் (வேள்வியில் தானே தக்ஷிணை தருவது; இம்மாதிரி செலவழிப்பதற்கு வேண்டிய மூலதனத்துக்காகவே பிறத்தியாருக்கு சிக்ஷை சொல்லி முடித்தபின் அவர்களிடமிருந்து தக்ஷிணை வாங்கிக்

கொள்வது) என்ற ஆறும் தான் பிராம்மணனுக்கு உரிய ஷட்கர்மாக்கள். இது மநுஸ்மிருதியில் சொன்னது. தர்ம சாஸ்திரங்களில் இன்னொன்றான பராசர ஸ்மிருதியில் வேறு தினுசாக ஆறு கர்மாக்களை பிராம்மணனின் நித்யப்படியாக (daily routine -ஆக) சொல்லியிருக்கிறது.

ஸந்த்யா-ஸ்நானம் ஜபோ ஹோமம் தேவதானாம் ச பூஜனம்।

ஆதித்யம் வைச்வதேவம் ச ஷட்கர்மாணி தினே தினே।

ஒன்று ஸந்தியாவந்தனம்; அதை ஸ்நானத்தோடு செய்ய வேண்டும். பிராம்மணன் பச்சைத் தண்ணீரில் முழுகப் பயப்படவே கூடாது. எப்போது பார்த்தாலும், தினமும் இரண்டு, மூன்று வேளை ஸ்நானம் செய்யவேண்டும். ப்ராத ஸ்நானம் (விடியற்காலை) , மாத்யான்னிக ஸ்நானம் (பகல்) ஸாயங்கால ஸ்நானம் என்று பண்ண வேண்டும். இப்படி மூன்று வேளையும் பண்ணியே அந்தந்த வேளைக்கான ஸந்தியா வந்தனத்தையும், மாத்யான்னிகத்தையும் செய்ய வேண்டும். இது தான் ஸந்த்யா-ஸ்நானம். முதலில் ஸந்தியா வந்தனம், அப்புறம் ஸ்நானம் என்று சொன்னதால், ஸந்தியா வந்தனம் பண்ணிவிட்டுப் பிறகு ஸ்நானம் செய்யவேண்டும் என்று குயுக்தி பண்ணக் கூடாது...

இந்தக் காலத்தில் இப்படியெல்லாம் விதண்டாவாதம், மரியாதைக்கு அர்ஹமான (உரிய) விஷயங்களில் கேலிப்பேச்சுப் பேசுவதெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. ஆசார்யாள் முடிவாக உபசதேசித்த "ஸோபான பஞ்சக"த்தில் 'துஸ்தர்க்காத் ஸுவிரம்யதாம்' என்று

சொல்கிற போது, குதர்க்கமாக, குயுக்தியாக மத விஷயங்களில் அர்த்தம் பண்ணுவதைத்தான் கண்டித்திருக்கிறார். மிகவும் பூஜ்யமான வேதத்தின் விஷயத்தில் இது மிகவும் அவசியம். பவ்யத்தோடு பணிவோடு அதைக் கேட்டுக் கொள்ள வேண்டும். வேதாந்த நிர்ணயத்துக்கு நல்ல யுக்திகளை ஒரு பிரமாணமாக ஆசார்யாள் ஒப்புக் கொள்கிறார். குயுக்தி, துஸ்தர்க்கம் (குதர்க்கம்) தான் கூடாது என்கிறார். எந்த அளவுக்குத்தான் மநுஷ்ய அறிவு போக முடியுமோ அந்த எல்லைக்குள்ளேயே அதற்கு அதிகாரம் கொடுத்து வேதத்தை ஆராய்ச்சி பண்ணுவதில் தப்பில்லை. ஆனால், நம் சிற்றறிவுக்கு எல்லையே வகுக்காமல் பூரண அதிகாரம் கொடுப்பதுதான் தப்பு...

ஸ்நானம்-ஸந்த்யா என்றில்லாமல், ஸந்த்யா-ஸ்நானம் என்றதற்குக் காரணம்: பிராம்மணனுக்கு ஸந்த்யா வந்தனம் தான் மற்ற எல்லா அனுஷ்டானங்களைவிட முக்கியமாக இருப்பது. அதனால் அவனுடைய கர்மாவைச் சொல்லும்போது அதற்கே முதலிடம் கொடுத்திருக்கிறது. ஆறு தொழில்களில் முதலாவது ஸந்த்யா-ஸ்நானம். இரண்டாவது ஜபம் - அநேக மஹாமந்திரங்களை, அவரவர் குலதேவதை இஷ்டதேவதை முதலியவற்றின் மந்திரங்களை ஜபிப்பது. மூன்றாவது ஹோமம், அதாவது யக்ஞம். நாலாவதாக தேவதா பூஜனம் - கந்த, புஷ்ப, தூப, தீப, நிவேதனங்களால் ஈச்வரனை வழிபடுவது. ஐந்தாவதாகச் சொன்ன ஆதித்யம் என்றால் அதிதியை உபசரிப்பது.. அதாவது விருந்தோம்பல். கடைசியில் வைச்வ தேவம். பஞ்சமனும், நாய் முதலான ஜந்துக்களும்

உள்பட ஸகலப் பிராணிகளுக்கும் பலி போடுவது வைச்வதேவம்.

இப்படிப் பண்ணுபவர்களைத்தான் 'அறுதொழிலோர்' என்று ரொம்பவும் பெரியவரான வள்ளுவர் சொல்கிறார். கெட்ட ராஜ்யத்தில் பிராம்மணர்கள் வேத அத்யயனம் பண்ண மாட்டார்கள், வேதத்தை மறந்து விடுவார்கள் என்கிறார் – அறு தொழிலோர் நூல் மறப்பர். பிராம்மணர்கள் வேதத்தை மறக்காமல் இருக்க வேண்டும்; அப்படிப்பட்ட நல்ல ராஜ்யம் ஏற்படவேண்டும் என்பதுதான் வள்ளுவரின் ஆசை என்று இதிலிருந்து தெரிகிறது.

தமிழ்த் தெய்வம் என்று சொல்லப்படும் ஸுப்ரமண்ய ஸ்வாமியின் ஆறுமுகங்களை வர்ணிக்கும்போது, சங்க நூலான திருமுருகாற்றுப் படையில், அவருடைய முகங்களில் ஒன்று பிராம்மணர்கள் வேதவிதி தப்பாமல் செய்யும் யக்ஞங்களை ரக்ஷிக்கவே இருக்கிறது என்கிறது2.

ஜைன–பௌத்த சம்பந்தமே முக்கியமாக உள்ள ஐம்பெரும் காப்பியங்களில் கூட, பல இடங்களில் வேதத்தை, வைதிக தர்மத்தை ரொம்பவும் சிலாகித்துச் சொல்லியிருக்கிறது. சிலப்பதிகாரத்தில் எங்கே பார்த்தாலும் வர்ணாச்ரம தர்மங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறது! 'அந்தணர் ஓம்பலை' விசேஷித்துச் சொல்லியிருக்கிறது; வேத சப்தம், யக்ஞம் (ஆரண ஓதையும் செந்தீ வேட்டலும்) இவற்றைக் கொண்டாடியிருக்கிறது என்று புலவர்கள் சொல்லுகிறார்கள். வைச்யனான கோவலன் அநேக வேத கர்மாநுஷ்டானங்களைப் பண்ணினதற்கு அதிலே குறிப்புகள் இருக்கின்றன என்கிறார்கள்.

தமிழ் வார்த்தைகளும், வழக்கிலுள்ள அநேக வசனங்களுமே, இந்த நாட்டின் வைதிக ஈடுபாட்டுக்குப் பெரிய சான்றுகளாக இருக்கின்றன. 'யஜனம், யக்ஞம்' என்பனவற்றுக்கு 'வேட்டல், வேள்வி' என்ற வார்த்தைகள் பிராசீனமாக இருந்து வருகின்றன. 'சயனம்' என்ற யக்ஞ மண்டப அமைப்புக்குப் 'பரப்பு' என்ற வார்த்தை பழங்காலத்திலிருந்து இருக்கிறது. இம்மாதிரி வேறு நாகரிகத்திலிருந்து வந்த விஷயங்களுக்கு, ஒரு பாஷையில் தனிப்பெயர்கள் ஆதிகாலத்திலிருந்து இருக்க முடியாது. இப்போது கிறிஸ்துவ தேசத்திலிருந்து பைபிள் வந்தால், அதற்கு நாம் 'கிறிஸ்துவ வேதம்' என்று பேர் கொடுத்தாலும், வேள்வி மறை என்பவை போல் இந்தப் பேர் வேரூன்றாமல் பைபிள், பைபிள் என்றேதான் சொல்கிறோம். அதுவுமில்லாமல் அதை வேதம் என்கிறபோது, வேதம் என்று ஏற்கெனவே நம்மிடமிருக்கிற மூல சாஸ்திரத்தின் பேரைக் கொண்டுதான் அதற்குப் பேர் வைத்திருக்கிறோம். பைபிளைத் தவிர வேறு வேதம் நமக்கு உண்டு. ஆனால், வேத யக்ஞத்தைத் தவிர வேறே 'வேள்வி' என்று ஒன்று கிடையவே கிடையாது. 'வேள்வி' என்று தமிழிலே பெயர் இருந்தாலும், வைதிக தர்மத்தில் இல்லாததாகத் தமிழ் நாட்டுக்கு என்று மட்டும் வேள்வி என்ற வேறு கர்மா இருக்கவில்லை. இப்படியே 'மறை' என்றால் வேதம்தான். தமிழிலே வேறே மறை என்று ஒன்று இருந்து, அந்தப் பெயரை வேதத்துக்கு வைக்கவில்லை.

இந்த 'மறை' என்ற வார்த்தை ரொம்பவும் ஆழமான, பொருத்தமான பொருள் கொண்டதாகும். வேதங்களில்

அங்கங்கே மறைவாக ரக்ஷிக்கவேண்டிய பகுதிகளுக்கு 'ரஹஸ்யம்' என்று வேதத்திலேயே பேர் கொடுத்திருக்கிறது; உபநிஷத்துக்களில் இப்படிப்பட்ட ரஹஸ்யமான பாகங்களையே தனியாக 'உபநிஷதம்' என்று குறிப்பிட்டிருக்கிறது. வேதியர்கள் தங்களுக்குள்ளயே ஜாக்ரதையுடன், கொஞ்சமும் அம்பலப்படுத்தி விடாமல் மறைவாக ரக்ஷிக்க வேண்டிய சில பாகங்களை மட்டுமே வேத, உபநிஷத்துக்கள் இப்படிச் சொல்கின்றன. தமிழ் இன்னம் ஒரு படி மேலே போய் வேதம் முழுதையும் 'மறை' என்று சொல்லிவிட்டது! 'மறை' என்றால் மறைத்து ரஹஸ்யமாகக் காப்பாற்றப்பட வேண்டியது என்று அர்த்தம். வேதம் அதிலே அதிகாரம் பெற்றவர்களிடம் மட்டும் பேசிற்று. 'இன்னின்ன பாகங்களை நீங்கள் மறைவாகப் போற்றி வாருங்கள்' என்று அதிகாரிகளுக்குச் சொல்லிற்று. தமிழ் பாஷை வேதியர்களை மட்டும் எடுத்துக் கொள்ளாமல், ஸமஸ்த ஜன சமூகத்தையும் எடுத்துக் கொண்டு பேசும்போது, எப்படி வேதமானது பிராம்மணர்களுக்குள்ளேயே சில பாகங்களை ரஹஸ்யமாக ரக்ஷிக்க வேணடும் என்கிறதோ, அதே மாதிரி ஸகல வர்ணத்தாரையும் எடுத்துக் கொள்கிறபோது வேதம் முழுதையுமே அதில் அதிகாரமுள்ளவர்கள் அதிகாரமில்லாதவர்களிடமிருந்து ரஹஸ்யமாக ரக்ஷிக்க வேண்டும் என்று கருதியே, முழு வேதத்துக்கும் "மறை" என்று பேர் கொடுத்து விட்டது! அதை எல்லாருக்கும் என்று democratise பண்ணிவிடக்கூடாது என்பதுதான் தமிழ் ஜனங்களின் தொன்று தொட்ட அபிப்ராயம் என்பது "மறை" என்ற இந்த வார்த்தையிலிருந்தே தெரிகிறது.

இன்னொரு விதத்திலும் 'மறை' என்று பெயர் பொருத்தமாயிருக்கிறது. வேதத்தினால் ஏற்படும் பயன் முழுவதும் உடனே தெரிந்து விடாது. ஆத்யாத்மிகமாக அதனால் அடையப்படும் பிரயோஜனங்கள் இப்போது மறைந்திருந்து பிற்பாடுதான் வெளிப்படும். இதனால் வேதமானது 'அதிருஷ்ட பலனை'ச் சொல்வது என்பார்கள். திருஷ்டியில் தெரியாதது தான் அதிருஷ்டம். தெரியாதது என்றால் மறைந்திருக்கிறது என்றுதானே அர்த்தம்? எதன் பலன் இப்படி மறைந்திருக்கிறதோ அதை "மறை" என்றே சொல்லி விட்டார்கள்.

நம் மதத்துக்கு வேதம் வேர். பக்தி, கோவில், தியானம், ஞானம் எல்லாவற்றுக்கும் மூலம் அது. மூலம் என்றால் வேர் என்றே அர்த்தம். கோவில், பக்தி, பூஜை முதலான மற்றதெல்லாம் வெளியே தெரிகிற அடிமரம், கிளை, பூ, காய், பழம் என்றால் வேதம் வேர். அதனால்தான் அடிமரம் முதலானவை இருக்கின்றன. வளர்கின்றன. ஆனால் வேர் இவற்றைப் போல் வெளியில் தெரியாமல் பூமிக்குள்ளேதான் ஓடிக்கொண்டு மறைவாக இருக்கிறது. இவ் விதத்திலும் மறை என்ற பெயர் மிகவும் பொருத்தமாயிருக்கிறது.

'ஓத்து' என்றும் வேதத்துக்கு அழகான, அர்த்த புஷ்டியுள்ள தமிழ்ப் பேர் இருக்கிறது. எது எழுதப்படாமல், வாய்மொழியாகவே, அதாவது ஓதப்பட்டே அப்யஸிக்கப் படவேண்டுமோ அதுதான் "ஓத்து". திருக்குறளில் இந்தப் பேர் இருக்கிறது. வடார்க்காடு ஜில்லாவில் திருவோத்தூர் என்று ஒரு ஊர் இருக்கிறது. ஞானஸம்பந்தர் அங்கே ஆண் பனையைப் பெண் பனையாக மாற்றினார்.

திருஒத்து–ஊர் என்பதே திருவோத்தூர் என்பது. வேதங்கள் பரமேச்வரனைப் பூஜை பண்ணின க்ஷேத்ரமாதலால் இப்படி பேர் ஏற்பட்டது. ஸம்ஸ்கிருதத்தில் அதற்கு 'வேதபுரி' என்று பெயர் இருக்கிறது.

மறை, ஒத்து, என்பது போல் "ஆரணம்" என்ற பெயரும் வேதத்துக்குத் தமிழ் பாஷையில் இருக்கிறது. "ஆரணன்காண்" என்று அடிக்கடி திருமுறைகளில் வரும்.

'வேத வாக்கோ!' என்று கேட்பது, தர்மசாலையை 'சத்திரம்' என்பது, முதலாளியை 'யஜமான்' என்பது, 'ஸாங்கோபாங்கம்' என்பது – இப்படி நடுவே நடுவே நான் சொன்ன அநேக விஷயங்களும், வைதிக அநுஷ்டானங்கள் தமிழ்த் தேசத்தில் எப்படி வேரோடியிருக்கிறது என்று காட்டுகின்றன.

எழுதி வைக்காமல் குரு–சிஷ்யன் என்று தலைமுறை தத்துவமாகக் காதால் கேட்டே பாடம் பண்ணப்பட வேண்டிய வேதத்துக்கு 'ச்ருதி' என்று ஸம்ஸ்கிருதத்தில் பேர் இருக்கிறதென்றால், தமிழிலோ 'எழுதாக் கிளவி' என்று இன்னம் அழுத்தமான பேர் இருக்கிறது. 'ச்ருதி' என்றால் 'கேட்கப்படுவது'. இப்படி சொல்வதாலேயே 'எழுதப்படக்கூடாதது' என்று ஊகித்துக் கொள்ளும்படியாக விட்டு விட்டார்கள். ஆனால் தமிழிலோ வேதத்தை எழுதக்கூடாது என்று வெளிப்படையாக தெரியும்படியாக 'எழுதாக் கிளவி' என்று பேர் வைத்திருக்கிறது. வேதம் அதற்குள்ள நியமப்படியே ரக்ஷிக்கப்பட வேண்டும் என்பதில் தமிழ் தேசத்துக்கு அவ்வளவு உறுதியிருந்திருக்கிறது!

இப்போது எந்த மதக் காரியமானாலும் 'சடங்கு' என்றுதானே தமிழில் சொல்கிறோம்? இது நான் இனி மேலே சொல்லப் போகும் "ஷடங்கங்கள்" என்கிற வேதத்தின் ஆறு அங்கங்களை வைத்தே ஏற்பட்ட பேர்தான்.

வேதங்களுக்குப் பிராணன் மந்திரங்கள் என்றால், அந்த மந்திரங்களுக்குப் பிராணன் அக்ஷர சுத்தம். அதாவது, சரியான உச்சரிப்புத்தானே? இது மாறினால் வெளி ஆகாசத்து சலனம் (vibration), உள்ளே நாடி சலனம் இரண்டும் மாறிப் பலனே மாறிவிடும் என்று சொன்னேனல்லவா? எந்தெந்த அக்ஷரம் சரீரத்தில் எங்கே யெங்கே பிறந்து எப்படி வெளிப்படுகிறது என்பதையெல்லாம் ரொம்பவும் scientific-ஆக (விஞ்ஞான ரீதியில்) சிக்ஷா சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. வெளியிலே மநுஷ்யர் காதுபடக் கேட்கிற 'வைகிரி' என்ற சப்தத்துக்கு ஆதாரமாக உள்ளே 'பரா' என்ற சப்தம் இருக்கிறது. 'வைகிரி' வாயில், உதட்டில் வருவது. 'பரா' என்ற மூல ரூபம்தான் மூலாதாரத்தில் நாபிக்குக் கீழே இருக்கிற சப்தம். அது வைகரியாக வாய் வழியே வருவதற்கு முன் பச்யந்தி, மத்யமா என்ற இரண்டு நிலைகள் இருக்கின்றன. யோக சித்தியில் மேலே போகப் போகத்தான் படிப்படியாக பச்யந்தி, மத்யமா, பரா முதலிய சப்தங்களை கேட்க முடியும். யோகேச்வரர்களான ரிஷிகள் பரா வாக்கையே கேட்கக் கூடியவர்கள். மூலாதாரத்தில் பரா வாக்காக எந்தெந்த சப்தங்கள் இருந்தால், அவை வைகரியாக எல்லா மநுஷ்யர்களும் வெளிப்படக் கேட்கக் கூடியபடி வரும்போது, அவற்றால் தேவதாப் பிரீதியும், லோகக்ஷேமமும், ஆத்மாபிவிருத்தியும் உண்டாகுமோ,

அப்படிப்பட்ட பரா வாக்குகளையே ரிஷிகள் அகண்ட ஆகாசத்திலிருந்து கிரஹித்து வேத மந்திரங்களாக நமக்குத் தந்திருக்கிறார்கள். இந்த விவரங்களைத் தொல்காப்பியத்தில் ரொம்பவும் நன்றாகப் புரிந்து கொண்டு சொல்லியிருக்கிற விஷயம் ஸமீபத்தில் தெரிய வந்தது.

பரா, பச்யந்தி என்பவற்றைப் பரை, பைசந்தி என்று பழைய தமிழ் நூல்களிலேயே சொல்லியிருப்பது முன்னமே தெரிந்தது. ஆனாலும் பஞ்சப் பிராணங்களில் உதானன் என்ற மேல்நோக்கிப் போகிற காற்றினால்தான் மூலாதாரத்தில் சப்தங்கள் உண்டாகின்றன என்பது உள்பட, மந்திரயோகம் இத்தனை நுணுக்கமாகத் தமிழின் முதல் நூலான தொல்காப்பியத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறதென்று இப்போது தான் தெரிந்தது. வேத ஸ்வரங்களைத் தூக்கியும், தாழ்த்தியும், ஸமனாகவும், ஸ்வரபேதமில்லாமலும் சொல்வதை உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம், பிரசயம் என்று சொல்வார்கள். அந்த சூட்சுமங்களையெல்லாம்கூடத் தெரிந்து கொண்டு தொல்காப்பியத்தில் சொல்லியிருக்கிறது.

'கோவிலில் ஏன் ஸம்ஸ்கிருத மந்திரங்களைச் சொல்ல வேண்டும்? தமிழில் சொன்னால் என்ன?' என்ற ஒரு கேள்வி ஸமீபத்தில் வந்ததல்லவா? அப்போதுதான் நன்றாகப் படித்த தமிழ்ப் புலவர்கள் இந்த விஷயத்தை எடுத்துக் கொண்டு விளக்கிச் சொன்னார்கள். 'மந்திரங்களைப் பொறுத்தமட்டில் எந்த பாஷை என்று பார்ப்பது அடிப்படையிலேயே தப்பு; இங்கே பாஷை, அர்த்தமெல்லாம் இரண்டாம் பக்ஷம்தான். சப்த மாத்திரத்திலேயே ஏற்படுகிற பலன்தான் மந்திரங்களுக்கு விசேஷம். வைதிகமான

மந்திரங்களுக்கு இப்படி சப்தத்தினாலேயே கௌரவம், சக்தி இருக்கிறது என்று தொல்காப்பியரே சொல்லியிருக்கிறார்' என்று அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

அந்த விஷயத்தைச் சொல்லி முடிப்பதற்குள், இங்கே நான் இன்னொன்றையும் சொல்லி விட வேண்டும். உங்களில் ரொம்பப் பேருக்கு அது விசித்ரமாக இருக்கும். அதாவது, வேதம் ஸம்ஸ்கிருத பாஷையில் இருக்கிறது என்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அதுவே தப்பு. வேத பாஷைக்கு 'ஸம்ஸ்க்ருதம்' என்று பேர் இல்லை. அதற்குப் பேர் 'சந்தஸ்' என்பதுதான். சந்தஸ் என்றால் சந்தம் (meter) மட்டுமில்லை. சந்தங்களில் அமைந்த வேதங்களுக்கும் வேதபாஷைக்கும்கூட 'சந்தஸ்' என்றே பேர். வேதம் தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் (லௌகிகமான பேச்சு, எழுத்து, காவியங்கள் ஆகியன மட்டுமின்றி தர்ம சாஸ்திரம், புராண இதிஹாஸம் உள்பட எல்லா விஷயங்களிலும்) பிரயோகமாகிற பாஷைக்குத்தான் ஸம்ஸ்கிருதம் என்று பேர். வேத பாஷை சந்தஸ். 'வேத பாஷையில் இப்படி இருக்கிறது' என்று சொல்லுமிடங்களில், வியாகரண சாஸ்திரம் எழுதிய பாணினி, 'இதி சந்தஸி' என்பார். மற்றபடி ஸம்ஸ்கிருதத்தைச் சொல்லும்போது 'இதி லோகே' என்பார்.

ஸம்ஸ்கிருதம் என்பது பார்த்துப் பார்த்து ஸம்ஸ்காரம் பண்ணப்பட்ட- அதாவது பழுதில்லாமல், வழுவில்லாமல் ரூபம் பண்ணப்பட்ட - பாஷை. ஆனாலும் முழுக்கவும் லோக க்ஷேமார்த்தமான சப்தங்களின் மூலத்தைக் கொண்டே ஏற்பட்ட ஒரு பாஷை உண்டென்றால் அது

வேத பாஷையான சந்தஸ்தான். 'கிருதம்' என்றால் 'செய்யப்பட்டது' என்று அர்த்தம். 'ஸம்ஸ்கிருதம்' என்றால் நன்றாக செய்யப்பட்டது. அப்போது யாரோ உட்கார்ந்து கொண்டு பிரயத்தனப்பட்டு இந்த பாஷையை செய்திருக்கிறார்கள் என்று ஆகிறது. வேத பாஷை இப்படி இல்லையே! அது தானாக flash ஆனது (பளிச்சிட்டது) என்றுதானே இத்தனை நாழி கதை சொன்னேன்? அதனால் அதில் grammar (இலக்கணம்) முக்கியமில்லை. லோகோபகாரமாக இப்படி வந்த சப்தங்களை வைத்தே அதற்கு நன்றாக grammar முதலியவையும் இருப்பதாக ஸம்ஸ்காரம் செய்து, தேவஜாதியினர் ஸம்ஸ்கிருத பாஷையைப் பண்ணி அதில் பேசலானார்கள். அதனால்தான் Vedic Grammar (வேத இலக்கணம்) , Vedic Prosody (வேதத்தின் யாப்பு) என்றெல்லாம் தனியாக இருக்கின்றன. வேதத்திலிருந்து ஸம்ஸ்கிருதம் பண்ணப்பட்டது என்பதாலேயே வேதம் ஸம்ஸ்கிருதம் இல்லை. பிற்பாடு ஸம்ஸ்கிருதம் தானாக வளர்ந்தும், ஸர்வ தேசப் பரிவர்த்தனைகளாலும் அநேக புது வார்த்தைகள் அதில் சேர்ந்த மாதிரி வேதத்தின் பாஷையில் ஏற்படவில்லை.

வேதம் ஸம்ஸ்கிருதம் இல்லை என்பதே, இப்போது நம் தாய் பாஷைகளுக்கு இல்லாத ஸ்தானம் ஸம்ஸ்கிருதத்துக்கு ஏன் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தால் வேத வித்யையை ஆதரிக்காமல் கோபப்படுகிறவர்களுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்! இரண்டு கால் பிராணி, நாலு கால் பிராணி ஆகிய அனைத்துக்கும் க்ஷேமத்தை உண்டு பண்ணும் சலனங்களை உண்டாக்கக் கூடிய சப்தங்களையே

உடையதான வேத பாஷையும், மற்ற அநேக மந்திர சாஸ்திர மந்திரங்களின் பாஷையும், நாம் நடைமுறையில் சொல்கிற அர்த்தத்தில் பாஷையே இல்லை. அவை ஒரு ஜாதிக்கோ, இனத்துக்கோ உரியன இல்லை. ஸமஸ்தப் பிரபஞ்சத்துக்குமான பாஷை என்று வேண்டுமானால் சொல்லலாம். சந்திரன் எல்லா தேசத்துக்கும் ஜிலுஜிலு என்ற நிலா அடிக்கிறது; சூரியன் லோகம் பூராவுக்கும் ஜீவஸத்தைத் தருகிறது. "எந்த தேசத்து சந்திரன்? எந்த தேசத்து சூரியன்? எங்களுக்கு இது வேண்டாம்" என்பார்களா?

தொல்காப்பியர், வேத சப்தங்கள் பரா என்கிற மூலத்தில் தோன்றியதால் முக்கியத்துவம் பெற்றவையாகும் என்று சொல்லி, "இப்படிப்பட்ட அக்ஷரங்களைப் பற்றி இந்த தொல்காப்பியத்தில் நான் சொல்லப் போவதில்லை. இங்கே சாதாரண மனிதர்களின் காதுக்கு எட்டும் வைகரி சப்தங்களை மட்டுந்தான் விவரிக்கப் போகிறேன். மற்றது, உள் விஷயம், மந்திராக்ஷரம், 'அந்தணர் மறைத்தே' என்று எழுத்ததிகாரத்தில் (102-ம் சூத்திரம்) சொல்லியிருப்பதாகவும், ஆதலால் ஆலயங்களில் மந்திர சப்தங்களை மாற்றாமல் ரக்ஷிப்பதற்குத் தொல்காப்பியமே ஆதரவாகத்தான் இருக்கிறது என்றும், அந்தத் தமிழ்ப் புலவர்கள் எடுத்துக் காட்டினார்கள் 3.

'நம் பாஷையில் ஒன்று இருந்தால்தான் உசந்தது; வேறெந்தப் பாஷையில் இருந்தாலும் மட்டம்; அது வேண்டாம்' என்று நினைப்பது கொஞ்சம்கூடப் பகுத்தறிவாகத் தோன்றவில்லை. உலகத்திலிருக்கிற அத்தனை புத்திசாலித்தனமும், நல்லதும் நம்

பாஷையில்தான் இருக்க வேண்டும் என்று நாம் நினைத்தால், அவரவர்களும் இப்படித்தானே தங்கள் தங்கள் தாய்ப் பாஷையைப் பற்றி நினைப்பார்கள்? அதனால் இநதப் பாஷைதான், அந்தப் பாஷைதான் என்றால் – அதில் துளிகூடப் பகுத்தறிவும் இல்லை; யதார்த்த ஞானமும் இல்லை. ஒரு பக்கத்தில் நம்பிக்கையின் மீதே அநேக விஷயங்களை ஏற்கவேண்டிய ஆஸ்திக்யத்தை பரிஹாஸம் செய்து, "பகுத்தறிவு, பகுத்தறிவு" என்கிறார்கள். இன்னொரு பக்கத்தில், இப்படி பிரத்யக்ஷத்திலேயே பகுத்தறிவு இல்லாமல் இருக்கிறது! ஒரு பக்கத்தில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதுதான் தமிழ்நாட்டின் தேசாசாரம் என்று சொல்கிறோம். இன்னொரு பக்கம், ஆதிகாலத்திலிருந்து இங்கு உறைந்து போய்விட்ட ஸநாதனமான ஸமாசாரங்களைக்கூட எப்படியாவது இல்லாமல் பண்ணிவிட்டால் தேவலை என்று நினைக்கிறோம்!

மந்திரங்களை நாம் விடுவதால் மந்திரங்களுக்கு ஒரு நஷ்டமும் இல்லை. நமக்குத்தான் நஷ்டம். மைசூரிலிருந்து காவேரி வருகிறது, வெளிதேசத்திலிருந்து உயிரைக் காப்பாற்றக்கூடிய ஒரு மருந்து வருகிறது என்றால், 'அதெல்லாம் வேண்டாம்; உள்ளூர் ஜலம் கிடைத்தால்தான் குடிப்போம்; உள்ளூர் மருந்தானால்தான் சாப்பிடுவோம்' என்று உயிரை விடுவார்களா? நமக்குப் பெரிய ரக்ஷையாக இருக்கிற மந்திரங்களில் பாஷையைக் கொண்டுவந்து, அந்நியம் எனறு ஒதுக்குவது இப்படித்தான். வாஸ்தவத்தில் அது அந்நியமும் இல்லை. நம்மோடு அந்நியோந்நியமாக ஆதிகாலத்திலிருந்து கரைந்ததுதான்.

ஆதி நாளிலிருந்து சென்ற நூற்றாண்டு வரை நம் தமிழ் தேசத்தில் இப்படிப்பட்ட பேத உணர்ச்சி இல்லவே இல்லை.

ரொம்பவும் தொன்மை வாய்ந்த புறநானூற்றிலேயே, நீண்ட சடாமுடியைக் கொண்ட இறைவன் எப்போது பார்த்தாலும் ஆறங்கத்துடன் கூடிய வேதத்தை ஓதிக் கொண்டிருக்கிறான் என்று இருப்பதாக ஸமீபத்தில் ஒரு கட்டுரையில் பார்த்தேன்4. இன்னொரு புறநானூற்றுப் பாட்டில் இப்படி வருகிறது - அதாவது: தமிழ்நாட்டு மூவேந்தர்களுக்கிடையில் எப்போது பார்த்தாலும் குஸ்திதான். இதற்கு மாறாக ஒரு சமயத்தில் சேர, சோழ, பாண்டிய ராஜாக்கள் மூன்று பேரும் ஒரே இடத்தில் சிநேகத்தோடு சேர்ந்திருந்தார்களாம். அந்தச் சோழ ராஜாவின் பேரே வைதிக ஸம்பந்தமானது- இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்று அவன் பெயர். இப்படி மூவரும் ஒற்றுமையுடன் சேர்ந்திருப்பதைப் பார்த்தாளாம் அவ்வைப்பாட்டி. அவளுக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. இந்த காட்சியை ரொம்பவும் உசந்த ஒன்றோடு ஒப்பிட வேண்டுமென்று நினைத்துக் கடைசியில், "பிராம்மணர் வீட்டில் கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்னி என்ற மூன்று அக்னிகளும் ஒன்று சேர்ந்திருக்கிற மாதிரி அல்லவா நீங்கள் மூவரும் சேர்ந்திருக்கிறீர்கள்?" என்றாளாம்5.

சங்க காலத்துக்கு அப்புறம் பார்த்தாலும், சேர சோழ, பாண்டிய, பல்லவ ராஜாக்கள், எங்கே பார்த்தாலும் பிராம்மணர்களுக்கு 'இறையிலி'யாக (வரியில்லாததாக) நிலம் கொடுத்து ரக்ஷித்திருக்கிறார்கள். கடிகை என்றும்,

பாடசாலை என்றும் நிறைய வைத்து, ஏராளமாக மான்யங்கள் தந்து வேத வித்யைகளை வளர்த்திருக்கிறார்கள்.

தமிழ் மறைகளாக முறையே சைவர்களும், வைஷ்ணவர்களும் கொண்டாடுகிற தேவாரத் திருமுறைகளையும் திவ்வியப் பிரபந்தங்களையும் பார்த்தாலோ, ஸ்வாமியைப் பற்றிச் சொல்கிற அளவுக்கு வேதங்களைப் பற்றியும் சொல்லியிருக்கிறது.

பக்தி என்பதுதான் தேவார-திவ்யப் பிரபந்தங்களுக்கு முக்கியம், கர்மா இல்லை என்று நாம் நினைத்துக் கொண்டிருந்தாலும், இவற்றைப் பார்த்தால் ஈச்வர பூஜையைவிட ஒரு படி அதிகமாகவே யக்ஞ கர்மாவைத்தான் ஸ்தோத்திரம் பண்ணியிருக்கிறது.

வேத பாஷை ஸம்ஸ்கிருதம் இல்லை என்ற மாதிரியே, இன்னொரு விசித்ரமான விஷயம் இப்போது சொல்லப் போகிறேன். அதாவது, நாஸ்திகம் என்றால் ஸ்வாமியில்லை என்று சொல்கிற நிரீச்வரவாதம் என்றுதானே இப்போது நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம்? இது தப்பு. ஸ்வாமி இல்லை என்று சொல்லிக்கொண்டே கூட ஆஸ்திகர்களாக இருக்க முடியும். அப்படிப் பல பேர் இருந்திருக்கிறார்கள். 'இது என்ன வேடிக்கையாக இருக்கிறது? அப்படியானால் ஆஸ்திகம் என்றால் என்ன?' என்றால், ஆஸ்திகம் என்றால் வேதத்திலே நம்பிக்கை இருப்பது என்றுதான் அர்த்தம். ஸ்வாமியிடம் நம்பிக்கை இல்லாவிட்டால் கூடப் பரவாயில்லை; வேத சப்தங்களின் மந்திர சக்தியில்

நம்பிக்கை வைத்து, யக்ஞாதி அநுஷ்டானங்களைப் பண்ணி விட்டாலும் அது ஆஸ்திகம்தான். 'வேதங்கள் ஒன்றேயான ஈச்வரனைச் சொல்லவில்லை. பல தேவதைகளைத்தான் சொல்லியிருக்கிறது. அவர்கள் மநுஷ்யர்களைப் போன்ற ஒரு இனந்தான் – பரமாத்ம தத்வத்தின் ரூபங்கள் இல்லை. ஆனாலும் இவர்களைத் திருப்தி பண்ணினால் க்ஷேமம் உண்டாகும்' என்று அரைகுறையாகப் புரிந்து கொண்டு, வேத கர்மாநுஷ்டானம் பண்ணுகிறவன்கூட ஆஸ்திகன்தான். 'வேத கர்மாக்களைப் பரமேச்வர அர்ப்பணமாகச் செய்யாமல் அதன் பலனுக்காகவே பண்ணவேண்டும்' என்கிற கொள்கையைப் பின் பற்றின கர்ம மீமாம்ஸகர்களை ஆஸ்திகர்கள் என்றே கருதுகிறோம். அவர்கள் வேதத்துக்குச் செய்து கொண்ட அர்த்தம் தப்பாகவே இருக்கட்டும்; ஆனாலும் வேதம்தான் தர்ம ப்ரமாணம் என்று நம்பியிருக்கிறார்களல்லவா? அதனால் தான் அவர்களை ஆஸ்திகர்களோடு சேர்த்தது. இதே சமயத்தில் பாசுபதம், பாஞ்சராத்ரம் முதலான சைவ, வைஷ்ணவ சம்பிரதாயங்களில் வேதத்துக்கு விருத்தமான [முரணான] விஷயங்கள் இருப்பதாக ஒருத்தருக்குத் தோன்றினால், இந்த மதங்கள் வேதத்தின் பிராமாண்யத்தை [பிரமாணமாக இருக்கும் ஸ்தானத்தை] ஆட்சேபிப்பதாகத் தோன்றினால், அவர் இப்படிப்பட்ட சம்பிரதாயங்களைப் பின்பற்றி ஓயாமல் சிவனையோ விஷ்ணுவையோ பூஜை பண்ணுகிறவரைக் கூட நாஸ்திகர்களுடனேயே சேர்த்துவிடுவார். பழைய கால புஸ்தகங்களில் இப்படித்தான் இருக்கிறது. இப்படியே சாக்த தந்திரங்கள் ஒருவருக்கு அவைதிகமாகத் தோன்றினால், அவர் சாக்தர்களை நாஸ்திகர்களோடு சேர்த்து விடுவார்.

வைதிக வழக்கை ஆட்சேபிப்பதுதான் நாஸ்திகம் என்பதே ஞானசம்பந்தரின் கொள்கையாகவும் இருந்திருக்கிறது; ஈச்வர பக்தி இல்லாமலிருப்பதுகூட அல்ல.

ஞானஸம்பந்தமூர்த்தி சைவ சமயாசாரியர்களுள் ஒருவர். குமாரஸ்வாமி அம்சமாதலால் ஈச்வரனான ராஜாவுக்குப் பிள்ளையான யுவராஜா மாதிரி ஹோதா படைத்தவர். "ஆணை நமதே!" என்று தம்முடைய கோளறு பதிகத்தைப் பாராயணம் செய்கிறவர்களை நவக்ரஹங்கள் தொடமுடியாதென்று, தம் வாக்காலேயே கம்பீரமாக உத்தரவு போட்ட யுவராஜா! அதனால் தமிழ் தேசத்தில் அவர் வாக்குக்குச் சட்டம் மாதிரியான அதிகாரம் உண்டு. பாலியத்தில் பல ஸ்தலங்களுக்குப் போய் பல அற்புதங்களைச் செய்திருக்கிறார். மயிலாப்பூரிலும் சில அற்புதங்களைச் செய்திருக்கிறார். பட்டீச்சுரம் என்னும் ஸ்தலத்தில முத்துப் பல்லக்கு முதலியவைகளை ஈச்வரன் கொடுக்கப் பெற்றுக் கொண்டார். முத்துப் பல்லக்கில் ஏறிக்கொண்டு ஸ்தல யாத்திரை செய்து கொண்டு வந்தார். அவருடன் 5000 பேர் பஜனை செய்து கொண்டு போவார்கள். பரமேச்வர பக்தி பண்ணிக் கொண்டு, சிவ க்ஷேத்திரங்களான ஊர்களுக்குப் போய்க் கொண்டிருந்தார்.

அந்தக் காலத்தில் ஜைனமதம், பௌத்த மதம் என்னும் இரண்டும் இந்தத் தேசத்தில் இருந்தன. வேதம் தப்பு; அதன்படி நடந்தால் பிரயோஜனமில்லை என்று அந்த மதஸ்தர்கள் சொல்லிக் கொண்டு இருந்தார்கள். இவர்களில் பாண்டிய தேசத்தில் ஜைனர்கள் அதிகாரம்

உடையவர்களாகி, அரசனையும் தங்கள் மதத்திற்கு இழுத்துக் கொண்டார்கள். மதுரையிலிருந்த பாண்டியன் சமணன் ஆனான். ஆனால், அவனுடைய பத்னியான மங்கையர்கரசியும், மந்திரி குலச்சிறையும் சிவபக்தி மிகுந்தவர்களாக இருந்தார்கள். அரசன் சமணனாய் விட்டதற்காக அவர்கள் மிகவும் வருந்தினார்கள்.

ஞானஸம்பந்த மூர்த்தியின் பிரபாவத்தை அவர்கள் கேட்டார்கள். அவர் மூலமாக அரசனை மாற்றலாம் என்று எண்ணி, அவரை மதுரைக்கு அழைத்துப் போனார்கள்.

அவர் மதுரைக்குப் போனவுடன் சமணர்கள் வாதத்துக்கு வந்தார்கள். அப்பொழுது அரசியும் மந்திரியும் இந்த சமணர்கள் இவரை என்ன செய்துவிடுவார்களோ என்று பயந்தார்கள்.

ஈச்வரனுடைய கிருபை இருந்தால், எந்த ராஜ்யம் எப்படிப் புரண்டாலும் பயம் இல்லாமல் இருக்கலாம். முடிவிலே அருள் வெல்லும். ஒருவனுக்குப் பரமாத்மாவின் பரிபூரண கடாக்ஷம் இருந்தால் எப்பொழுதும் ரக்ஷிக்கும்.

பீரங்கிகளும் மற்ற ஆயுதங்களும் அவன் காலில் வந்து நமஸ்காரமாக விழும். பக்தியும் பகவத் கடாக்ஷமும் குறையும்பொழுது, தேசத்துக்கும் மதத்துக்கும் குறைவு உண்டாகிறது. ஈச்வர கடாக்ஷத்தைப் பரிபூரணமாகப் பெற்றவன் ஒருவன் இருந்தாலும் போதும்; அவன் மூலமாகத் தேசம் க்ஷேமத்தை அடையும்; அப்பொழுது எது வந்தாலும் பயமில்லை.

ஆகவே, ஈச்வர கடாக்ஷத்தைப் பூர்ணமாகப் பெற்ற ஞானசம்பந்த மூர்த்தி கொஞ்சமும் பயமில்லை என்று

வாதம் செய்யத் துணிந்தார். வாதம் செய்யப் போவதற்கு முன் ஸுந்தரேச்வர ஸ்வாமி ஸந்நிதானத்தை அடைந்து ஒரு பதிகத்தால் ஸ்தோத்திரம் பண்ணினார். அதில் 'ஜைனர்களை வாதத்தில் ஜெயித்து உன்னுடைய புகழை நிலை நிறுத்த வேண்டும்' என்று பிரார்த்தித்தார். ஒவ்வொரு பாட்டிலும் கடைசியில்,

"ஞால நின்புகழே மிக வேண்டும் தென்

ஆலாவாயி லுறையும் எம் ஆதியே"

என்று பாடினார். ஆலவாய் என்றால் மதுரை.

ஜைனர்களை ஏன் ஜயிக்க வேண்டும்? 'அவர்கள் சிவன் கோயிலுக்கு வருவதில்லை; திருநீறிடுவதில்லை; ருத்திராக்ஷம் அணிவதில்லை; சிவபக்தியைப் பழிக்கிறார்கள்' என்று சொல்லி, இதனாலா அவர்களை ஜயிக்க வேண்டும் என்று சம்பந்தர் சொன்னார்? ஞாலமெல்லாம் சிவன் புகழ் பரவ வேண்டுமென்று ஆசைப்பட்ட அவர், இப்படித்தான் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அவர் இப்படிச் சொல்லவில்லை. பின் என்ன சொன்னார்?

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்

ஆதமில்லி யமணொடு தேரரை

வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே

பாதி மாதுட னாய பரமனே

ஞால நின்புக ழேமிக வேண்டும்-தென்

ஆல வாயிலு ரையுமெம் மாதியே
என்று முதல் பாட்டிலேயே சொல்கிறார்.

சமணரும், தேரரும் வேத வேள்வியை, அதாவது வேதங்களையும் யக்ஞங்களையும் நிந்திக்கிறார்கள் என்பதாலேயே அவர்களை வாதம் பண்ணி ஜயிக்க வேண்டும் என்கிறார்.

சமணர் என்றால் ஜைனர்கள். 'ஜினர்' என்கிற மஹாவீரரைப் பின்பற்றுவதால் 'ஜைனர் 'என்ற பேர் உண்டாயிற்று. ச்ரமணர் என்ற வார்த்தை தமிழில் சமணர் என்று ஆயிற்று. 'ச்ர' என்று ஸம்ஸ்கிருதக் கூட்டு எழுத்து 'ச', அல்லது வெறும் 'அ' வாக ஆகிவிடும். 'ச்ராவணம்' என்பது இப்படித் தான் 'ஆவணி' என்றாயிருக்கிறது. சங்கரன், சட்டி என்பதிலெல்லாம் வரும் ச (sa) சப்தம், தமிழில் சில இடங்களில் 'அ' ஆகிவிடும். 'சமர்' (யுத்தம்) என்பது 'அமர்' என்று வருகிறது. யுத்தகளம்தான் சமர்க்களம் என்பது. அதை 'அமர்க்களம்' என்கிறோம். சரீரத்தை ரொம்பவும் சிரமப்படுத்தி, கடினமான விரதங்களை அநுஷ்டிப்பதால் ஜைனர்களுக்கு 'ச்ரமணர்' என்று பேர். அது தமிழில் 'சமணர்' என்றும், 'அமணர்' என்றும் ஆகிறது. ஜைனர்களில் 'ச்வேதாம்பர் என்ற பெயரில் வெள்ளை வஸ்திரம் கட்டிக் கொள்பவர்கள் உண்டு. இல்லாது போனால் திகம்பரர்களாக, நிர்வாணமாகவே இருப்பார்கள். இதனால்தான், துணி கட்டிக் கொள்ளாத எவனையுமே அமணனாகச் சொல்லி 'அ(ம்)மணக்கட்டை' என்கிறோம்.

தேரர் என்றால் தேராவாதிகள் எனப்படும் பௌத்தர்கள்.

இந்த இரண்டு மதஸ்தர்களையும்தான் 'அமணொடு தேரரை' என்று முதற் பாட்டில் சொல்கிறார். அவர்கள் வேதத்தையும் யக்ஞத்தையும் நிந்திப்பவர்கள் என்று தோஷம் சொல்லுகிறார். அது பெரிய பாபம் என்கிறார். சிவபக்தி இல்லாதவர் என்று சொல்லவில்லை. இந்தப் பதிகத்தில் மற்றொரு பாட்டில்,

மறைவ ழக்கமி லாதமா பாவிகள்

பறித லைக்கயர் பாயுடுப் பார்களை

முறிய வாதுசெ யத்திரு வுள்ளமே

மறியு லாங்கையின் மாமழு வாளனே

ஞால நின்புக ழேமிக வேண்டும்-தென்

ஆல வாயிலு றையுமெம் மாதியே

என்று சொல்கிறார். இதில் "மறை வழக்கமில்லாத மாபாவிகள்" என்று நன்றாகவே திட்டிச் சொல்லியிருக்கிறார். ஒழுக்கம், வழக்கம் என்று தமிழில் இரண்டைச் சொல்லுவார்கள். ஆசாரம், அனுஷ்டானம் என்று ஸம்ஸ்கிருதத்தில் சொல்லுவதே தான் இது. ஒழுக்கம் ஆசாரம்; வழக்கம் அநுஷ்டானம். மறை வழக்கமென்பது வைதிக அனுஷ்டானம். வைதிகாநுஷ்டான மில்லாதவர்கள் ஜைனர்கள். அது மஹா பாவம் என்று நினைத்ததனால்தான், 'மாபாவிகள்' என்றார்.

'பறிதலைக்கையர்' என்று அவர்களைச் சொல்லியிருக்கிறார். வித்யாரண்ய ஸ்வாமிகள் என்பவர் வேத பாஷ்யம் செய்தவர். ஸகல வித்தைகளையும் அறிந்தவர். விஜய நகர ராஜ்யத்தை ஸ்தாபித்தவர். அவர் "ஸர்வதர்சன ஸங்க்ரஹம்" என்று ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். தர்சனம் என்பது மதத்துக்கு ஒரு பெயர். தர்சனம் – பார்ப்பது. உள்ளதை உள்ளபடி பார்ப்பது மதமாகையால் தர்சனம் என்னும் பெயர் பெற்றது. அந்தப் புஸ்தகத்தில், அந்தக் காலத்தில் இருந்த எல்லா மதங்களைப் பற்றியும் எழுதியிருக்கிறார். ஜைன மதத்தைப் பற்றி எழுதியிருக்கும் இடத்தில், ஜைனர்கள் 'கேசோல்லுஞ்சனம்' பண்ணிக் கொள்ளுவார்கள் என்று சொல்லியிருக்கிறார். உல்லுஞ்சனம் என்றால் பிடுங்குதல் என்று அர்த்தம். 'பாபம் செய்வதற்குப் பலனாகக் கஷ்டத்தை அநுபவிக்க வேண்டும். கஷ்டத்தை அநுபவித்தால் பாபம் போய் விடும். தலையிலுள்ள கேசத்தை ஒவ்வொன்றாகப் பிடுங்குவதால் கஷ்டம் உண்டாகும். அதனால் பாபம் குறையும்' என்பது ஜைனர்களுடைய அபிப்ராயம். அதனால், ஒவ்வொரு மயிராகப் பிடுங்கிக் கொள்வார்கள். அவர்கள் வஸ்திரம் உடுத்தமாட்டார்கள். "கடவஸனா:" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடம் என்றால் பாய். வஸனம் என்றால் ஆடை. பாயை உடுப்பார்கள். இதைத்தான், "பறி தலைக்கையர், பாயுடுக்கையர்" என்று ஞானஸம்பந்தர் சொல்லியிருக்கிறார். அவர்கள் செய்யும் பாபம் மறை வழக்கத்துக்கு பாஹ்யர்களாக (வெளியாராக) இருப்பதும், வேத வேள்வியை நிந்தனை செய்வதும் என்று சொல்லியிருக்கிறார்.

பத்துப் பாடல்களில் முதல் ஏழெட்டில் இப்படி ஈச்வர பக்தி இல்லாதவர்கள் என்பதை அடியோடு சொல்லாமல், வேதத்தையும் கர்மாநுஷ்டானத்தையும் விட்டவர்கள் என்பதற்காகவே சமணர்களைக் கண்டித்துவிட்டுக் கடைசியில் தான் பக்தியில்லாதவர்கள் என்பதற்காகக் கண்டனம் பண்ணுகிறார். முதலிலெல்லாம், "வைதிகத்தின் வழியழுகாத; அந்தணாளர் புரியும் அருமறை சிந்தை செய்யா அருகர்6; வேட்டு வேள்வி செயும் பொருளை விளி மூட்டு சிந்தை முருட்(டு) அமண்; அழல(து) ஓம்பும் அருமறையோர் திறம் விழல(து) என்னும் அருகர்" என்று சொல்லிவிட்டு, பிறகுதான் அவர்கள் சிவபக்தியில்லாமலிருப்பதைச் சொல்லுகிறார். சைவர்கள் மேல் பட்ட காற்றைக் கூட அவர்கள் ஒதுக்குகிறார்களாம்!

நீற்று மேனியா ராயினர் மேலுற்ற

காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரை

என்று சொல்லிவிட்டு கடைசியில்தான்,

அன்று முப்புரம் செற்ற அழக! நின்

துன்று பொற்கழல் பேணா அருகரை

என்பதாக, நேராக, அவர்கள் ஈசன் எந்தையின் இணையடியை வழிபடாததைத் தோஷமாகச் சொல்கிறார். இதற்கு முந்தி வைதிக கர்மாவுக்குத்தான் பிராதான்யம் கொடுத்துச் சொல்லியிருக்கிறார்.

தேவாரத்திலும் திவ்யப் பிரபந்தத்திலும் பிராம்மணர்களைப் பற்றிச் சொல்லும் இடங்களிலெல்லாம் அவர்கள் யக்ஞ கர்மாநுஷ்டானத்தில் வல்லவர்கள் என்பதற்காகவே ரொம்பவும் பாராட்டிச் சொல்லியிருக்கிறது.

கற்(று) ஆங்கு எரி ஓம்பிக் கலியை வாராமே

செற்றார் வாழ் தில்லை.

என்பதாக, "வேதத்தைக் கற்று, அதன்படி அக்னி வளர்த்து (எரி ஓம்பி) யாகம் பண்ணுவதாலேயே கலி புருஷனை விரட்டுகிற பிராம்மணர்கள் வசிக்கிற சிதம்பரம்" என்று சம்பந்த மூர்த்தி ஸ்வாமிகள் சொல்கிறார்.

ஓமாம்புலியூர்த் தேவாரத்தில், யக்ஞங்களைப் பற்றி நிறையச் சொல்கிறார். அதில் ஓரிடத்தில்,

பரப்பைப் படுத்(து) எங்கும் பசு வேட்(டு) எரி ஓம்பும் என்று வருகிறது.

'பரப்பு' என்றால் யாகவேதியை முறைப்படி அமைப்பது. சயனம் என்பது அதுதான். 'பசு வேட்டு' என்றதால் யக்ஞத்திலே ஜீவஹிம்ஸை தப்பில்லை என்கிற அபிப்ராயத்துக்குத் தேவாரத்தின் ஆதரவு தெரிகிறது.

ஸம்பந்தர் பிராம்மணர், அதனால் யாகாதிகளைக் கொண்டாடிச் சொல்லியிருக்கிறார் என்று நினைத்தால் சரியில்லை. அப்பிராம்மணரான அப்பரும் ஸ்வாமியை வேத வேள்வி சம்பந்தப்படுத்தியே ஸ்தோத்திரம் செய்கிறார்.

"வேதியா வேத கீதா"; "வேதங்கள் நான்கும் கொண்டு விண்ணவர் பரவி ஏத்த"; "வேதத்தான் என்பர், வேள்வியுளான் என்பர்"; "வேத நாயகன், வேதியர் நாயகன்"

என்பதெல்லாம் அப்பர் ஸ்வாமிகள் வாக்குதான். ஸ்வாமியே வேதாத்தியயனம் பண்ணுகிறார் என்று அவர் சொல்கிறார்:

" வேதமோதி வந்(து) இல்புகுந்தார்" "வேதங்கள் வேள்வி பயந்தார் போலும்."

மேலே சொன்ன ஓமாம்புலியூரில் அப்பரும் தேவாரம் பாடியிருக்கிறார். அதிலே,

ஓதி மிக அந்தணர்கள் எரி மூன்(று) ஓம்பும்

உயர் புகழ் ஆர்தரும் ஓமாம்புலியூர்.....

ஒன்றிய சீர் இருபிறப்பர் முத்தீ ஓம்பும்

உயர்புகழ் நான் மறை ஓமாம்புலியூர்

என்றெல்லாம் புகழ்ந்து, ஓமம் (ஹோமம்) நிறைந்ததே ஓமாம் புலியூர் என்று கொண்டாடுகிறார். எரி மூன்று, முத்தீ என்பவை கார்ஹபத்தியம், ஆஹவநீயம், தக்ஷிணாக்னி என்பதாகப் பிராம்மணன் வளர்க்க வேண்டிய மூன்று அக்னி குண்டங்களைச் சொல்வது. இத்தனை நுணுக்கமாக அப்பர் ஸ்வாமிகள் பிராம்மண ஆசாரங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார்.

திவ்யப் பிரபந்தத்திலும் அநேக இடங்களில் ஒரு பெருமாள் க்ஷேத்திரத்தை வர்ணிப்பதானால், யக்ஞத்தில்

எழும்புகிற ஹோமப் புகையே மேகங்கள் மாதிரி ஆகாசம் முழுதையும் அடைத்துக் கொண்டிருக்கிற ஊர் என்று அதை வர்ணித்திருக்கும். இங்கேயும் ஜாதி வித்யாஸம், ஜாதி த்வேஷங்கள் இல்லாமல், அப்ராம்மணர்களான ஆழ்வார்களும் வேதங்களின் பெருமையைப் பாடியிருக்கிறார்கள். பிராம்மணரில்லாதவரான திருமங்கையாழ்வார்தான் பெருமாளையே,

சந்தோகன், பௌழியன், ஐந்தழலோம்பு

தைத்திரீயன், சாமவேதி!

என்று வேத சாகைகளைச் சொல்லி அவற்றால் துதிக்கிறார். அப்பர் 'முத்தீ'யைச் சொன்னார் என்றால், இவர் இன்னும் சூக்ஷமமாக வைதிக ஆசரணைகளைத் தெரிந்து கொண்டு, பிராம்மணர்களிலேயே ரொம்பவும் விஷயம் தெரிந்தவர்கள் அந்த மூன்றோடு ஸப்யம், ஆவஸத்யம் என்ற வேறு இரண்டு அக்னிகளைச் சேர்த்துப் பஞ்சாக்னி வளர்ப்பதை 'ஐந்தழல் ஓம்புவது' என்கிறார். ஓமாம்புலியூரைத் தேவாரத்தில் சொன்ன மாதிரியே திருநாங்கூர், திருநறையூர் முதலான க்ஷேத்திரங்களை இவர் வேத விதி வழுவாத பிராம்மணர்களின் ஊர் என்பதற்காகவே திரும்பத் திரும்பப் போற்றிப் பாடியிருக்கிறார் 7.

தமிழில் தொல்காப்பியம் என்று மிகப் பழைய இலக்கண நூல் இருக்கிறதல்லவா? அது அகஸ்திய சிஷ்யர்கள் பன்னிரண்டு பேர்களுல் ஒருவரான திருணதூமாக்கினியால் செய்யப்பட்டது. அந்தப் புஸ்தகத்துக்கு பனம்பாரனார் செய்துள்ள சிறப்புப்

பாயிரத்தில், 'அரங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டு ஆசான்'என்று வருகிறது. இதற்கு நச்சினார்க்கினியர் உரை எழுதும் போது, 'இங்கே ரிக்-யஜுஸ்-ஸாம-அதர்வ வேதங்களை நான்மறை என்று சொல்லவில்லை. அல்பாயுஸும், அநேக வியாதிகளும், ஸ்வல்பமே அறிவும் கொண்ட கலிகால ஜனங்களான 'சின்னாட் பல்பிணிச் சிற்றறிவின'ரின் ஸௌகரியத்தை முன்னிட்டு, மஹா ஸமுத்ரமாயிருந்த வேதங்களை வியாஸர் நாலாகப் பிரிப்பதற்கும் முற்பட்ட காலத்தில் தொல்காப்பியம் உண்டாயிற்று. ஆகையால், இங்கே நான்மறை என்பவை தைத்திரியம், பௌடிகம், தலவகாரம், ஸாமம் என்ற ஆதிகால வேத பாகங்களே' என்று எழுதியிருக்கிறார். திவ்வியப் பிரபந்தத்தில், 'பௌழியா சந்தோகா' என்று வருகிறது. அதில் 'சந்தோகம்' என்பது ஸாமவேதம். 'பௌழியம்' என்பதே மேலே சொன்ன 'பௌடிகம்'. ரிக்வேத சாகைகளில் ஒன்றைச் சேர்ந்த 'கௌஷீதகீ ப்ராஹ்மணம்' என்ற 'பௌஷ்யம்' தான் பௌழியம் என்றும், பௌடிகம் என்றும் ஆகியிருக்கிறது. தலவகாரம், தைத்ரீயம், பௌழியம் என்பவை முறையே ஸாமவேதம், க்ருஷ்ண யஜுர்வேதம், ரிக் வேதம் ஆகியவற்றைச் சேர்ந்த வேத சாகைகளின் பெயர்கள். ஸாமம் மட்டுமே முழுவேதத்தின் பெயர்.

மலையாளத்தில் உள்ள நம்பூதிரிப் பிராம்மணர்கள் யாவரும் வேதாத்தியயனம் செய்வார்கள். லௌகிகப் பிரவிருத்தி உள்ளவர்கள்கூட இளமையில் வேதாத்தியயனம் பண்ணினவர்களாகத்தான் இருப்பார்கள். ஈ.எம்.எஸ். நம்பூதிரிப்பாடு என்று முதன் மந்திரியாக

இருந்த கம்யூனிஸ்டு தலைவர்கூட, பால்யத்தில் அத்யயனம் பண்ணியவர்தான். சமீப காலம் வரை அங்கே பிரம்மச்சாரிகள் கௌபீனம், கிருஷ்ணாஜினம் [மான்தோல்], தண்டம், ஸமிதாதானம் முதலியவைகளை விடாமல் கைக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது அவர்கள்கூட மாறிக் கொண்டு வருகிறார்கள். எந்த ஜாதியினர் அதிக சிஷ்டர்களாக இருக்கிறார்களோ அவர்கள் தவறினால் தான் மிகவும் கீழே போய்விடுகிறார்கள். நம்பூதிரிகளில் ரிக்வேதத்தினர்கள் அதிகம். அவர்களுடைய சுவடி ஒன்றில் ரிக்வேதத்திற்கு 'பௌழியம்' என்றே பேர் எழுதியிருக்கிறது. அதனால் பௌழியம் என்பது ரிக்வேதத்தின் பெயர் என்று தீர்மானமாகத் தெரிய வந்தது. அதுதான் தொல்காப்பிய உரைக்காரர் சொன்ன பௌடிகம்.

சங்கர பகவத் பாதாள் அவதாரம் பண்ணின இந்த நம்பூதிரி வம்சத்தில் இன்றைக்கும் வைதிக சிரத்தை அடியோடு போய்விடாத பெருமை இருக்கிறது. பல தப்பான மதங்கள் தலைவிரித்தாடிய சமயத்தில் வேத தர்மத்தை மீண்டும் ஸ்தாபிப்பதற்காகவே அவதாரம் செய்ய நினைத்த பரமேச்வரன், இருப்பதற்குள் எங்கே வேத அத்யயனமும் அநுஷ்டானமும் நிறைய இருக்கிறது என்று தேடிப்பார்த்தே, கேரளத்தில் காலடியில் ஒரு நம்பூதிரிக் குடும்பத்தில் அவதாரம் பண்ணினார் என்று சொல்லியிருக்கிறது. அவர் காலத்தில் மலையாள மொழியே தோன்றியிருக்கவில்லை. தமிழ் மொழிதான் அங்கும் இருந்தது. ஸுந்தர மூர்த்தி ஸ்வாமிகளின் அத்யந்த ஸகாவான சேரமான் பெருமாள் நாயனார்

காலத்தில்கூட மலையாளம், தமிழ் பாஷை பேசின சீமையாகத்தான் இருந்திருக்கிறது. அவர் தமிழில்தான் "திருக்கைலாய ஞான உலா" பாடியிருக்கிறார். அவர் மலையாளத்திலுள்ள திருவஞ்சைக்களத்திலிருந்துகொண்டு ராஜ்ய பரிபாலனம் பண்ணினவர். திவ்யப்பிரபந்தத்தில் "பெருமாள் திருமொழி" என்ற பெயரிலுள்ள பாசுரங்களைச் செய்த குலசேகர ஆழ்வாரும் திருவனந்தபுரத்திலிருந்துகொண்டு ஆட்சி செய்தவர்தான். அப்போதும் தமிழ்தான் அங்கே இருந்திருக்கிறது. இதற்கெல்லாம் முந்தி, இரண்டாயிரம் வருஷத்துக்கு முந்தி, ஈச்வரனே சங்கரராக அவதாரம் செய்த போது கேரளம் தமிழ் தேசமாகவேதான் இருந்திருக்கிறது. பாரத நாட்டிலேயே இந்தத் தமிழ் நாட்டுப் பகுதியில்தான் வேதம் ரொம்பவும் ஜீவனோடு இருந்தது என்பதால்தான் அவர் அங்கே அவதரித்தார் என்பதிலிருந்து தமிழ் தேசத்துக்கு வேதத்தில் இருந்துள்ள விசேஷமான பற்றுதல் தெரிகிறது.

இன்றைக்கு கேரளாவில் ஜாஸ்தி வேதாத்யயனம் இருப்பதற்குக் காரணம், ஆதியில் அது தமிழ் நாடாக இருந்ததுதான். அதே மாதிரி, ஸமீபத்தில் தமிழ் நாட்டைவிட ஆந்திராவில் வேதாத்யயனம் அதிகம் இருந்தாலும்கூட, ஆதியில் ஆந்திரர்களுக்கும் சோழர்களுக்கும் கல்யாண சம்பந்தம் ஏற்பட்டபோது, அந்தத் தெலுங்கு ராஜாக்கள் தமிழ் நாட்டிலிருந்தே ஏராளமான வேத வித்துக்களை அழைத்துக் கொண்டு போய்த்தான் தங்கள் தேசத்தில் வைதிகஸ்ரீயை விருத்தி பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அதாவது, ஏதோ துர்பாக்யவசமாகத்தான் இப்போது மற்ற திராவிட

மாகாணங்களைவிடத் தமிழ்நாட்டிலேயே வைதிக த்வேஷம் தலை தூக்கியிருந்தாலும், பூர்வத்தில் அந்தச் சீமைகளுக்கும் வேத வித்யை இங்கிருந்துதான் போயிருக்கிறது. ஆந்திராவில் 'த்ராவிடலு' என்று பேர் போட்டுக் கொள்கிற பிராம்மணர்கள், ஆதியில் தமிழ் நாட்டிலிருந்து போன குடியினர்கள்தான்.

தமிழ்நாட்டில் ஆதிகாலத்திலிருந்து இருந்து வந்திருக்கிற மதம் உள்பட, சைவம், வைஷ்ணவம், சாக்தம் முதலிய ஷண்மதங்கள்; ஸாங்கியம், யோகம், நியாயம், வைசேஷிகம் முதலிய ஸித்தாந்தங்கள்; மந்திர தந்திர ஆகமங்கள் எல்லாமே வேதத்தை ஆதாரமாகக் கொண்டவைதான்; வேதப் பிராமாண்யத்தை ஒப்புக் கொள்கிறவைதான். நவீன ஆராய்ச்சிக்காரர்கள் வேதம் வடக்கிலிருந்து வந்ததாகவும், தென்னாட்டில் வேறு மதமும் வேறு முதல் நூல்களும் இருந்ததாகவும் சொல்லி, அவர்கள் ஆரியர்கள், இவர்கள் திராவிடர்கள் என்று பெயர் கட்டிவிட்டுச் சண்டையைக் கிளப்பிவிட்டிருப்பதற்கெல்லாம் உண்மையாக ஸம்ஸ்கிருத சாஸ்திரங்களையும், தமிழின் பழ நூல்களையும் ஆராய்ந்து பார்த்தால் ஆதாரமேயில்லை. சாஸ்திரங்களை மூடநம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டு ஏமாந்து போகக்கூடாது என்று இந்த நவீன ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். கடைசியில், இப்போது ஏற்பட்டிருக்கிற நிலைமை என்ன என்றால், இவர்கள் தாங்களே பகுத்தறிவோடு, ஸயன்டிஃபிக்காகச் சொல்கிறோம் என்று அடித்துச் சொல்லிவிட்டதால், அநேக ஜனங்கள் இவர்கள் சொல்வதையே ஆராய்ச்சி பண்ணாமல், 'இதுதான் சரி' என்று வெறும் நம்பிக்கையின்

மேலேயே ஏற்றுக்கொண்டு நிஜமென நினைக்க ஆரம்பித்திருக்கிறார்கள்! வேத சாஸ்திரங்களில் நம்பிக்கையின் மீதே அனுஸரிக்க வேண்டிய விஷயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை அறிவால் ஆராயக் கூடாதுதான். ஆனால் அவற்றில் நன்றாக பகுத்தறிவோடு ஆராய்ந்து பார்க்கிற பகுதிகளும் உண்டு. அதோடு சேர்த்துச் சேர்த்து நம் தாய் பாஷைகளில் உள்ள ஆதி நூல்களையும் அலசி அலசிப் பார்த்தாலோ, இந்த ஆராய்ச்சிக்காரர்கள் சொல்கிற race theory (ஆரிய திராவிட இன பேதக் கொள்கை), தமிழ் மதம் வேறே என்பதெல்லாம் இருந்த இடம் தெரியாமல் அடிபட்டுப் போய்விடுகிறது. இப்படியெல்லாம் நம் தேசத்தில், நல்லதற்கில்லாமல் அநேக தப்பபிப்ராயங்கள், த்வேஷம், சாஸ்திரத்தில் அவநம்பிக்கை ஆகியன ஏற்பட்டுவிட்டதே என்று வருத்தமாக இருக்கிறது. இதெல்லாம் போய் இங்கே ஸமஸ்த லோகங்களுக்கும், ஸமஸ்தப் பிராணிகளுக்கும் க்ஷேமத்தைத் தரக்கூடியதான வேத மரபு மறுபடி நன்றாக தழைக்கவேண்டும். இதுதான் நாம் பரமேச்வரனிடம் எப்போதும் செய்துகொள்ள வேண்டிய பிரார்த்தனை.

இப்போதே அநேக வேதசாகைகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. மற்றவையும் அழியும்படி விடவே கூடாது. இதைவிடப் பெரிய ட்யூட்டி, கடமை எதுவும் நமக்கில்லை. நமக்கிருக்கிற புத்தி பலம், திரவிய பலம், கூட்டுறவு சக்தி எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து நாம் பண்ணவேண்டிய காரியம், தற்போது எங்கெங்கேயோ கொஞ்சம் கொஞ்சம் உயிரை வைத்துக் கொண்டிருக்கும்

வேத சாகைகள் எல்லாம் அழிந்து போய்விடாதபடி, அவைகளுக்கு ஆக்ஸிஜன் கொடுத்து உயிரூட்டுவதுதான்.

அனந்தமாக பரவிக்கிடந்த வேத சாகைகள், ஏற்கெனவே நம் அலக்ஷ்யத்தால் விரல்விட்டு எண்ணுகிற அளவுக்கு வந்துவிட்டன. இதுவும் அடுத்த தலைமுறைக்கு இல்லை என்ற பெரிய பாபம் நமக்கு ஸம்பவிக்காதபடி பண்ணவேண்டும்.

1.நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம வின்றுயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாதெம் பேரூர் துயிலே. (பரிபாடல்).

2. ....ஒருமுகம்
மந்திரம் விதியின் மரபுளி வழா அது
அந்தணர் வேள்வி ஓர்க்கும் மே.

3. எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியில்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து,
அகத்தெழு வளியிசை அரில் தப நாடி
அளவிற் கோடல் அந்தணர் மறைத்தே;
அஃதிவண் நுவலாது எழுந்து புறத்திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளவு நுவன்றிசினே

இதற்கு பதப்பொருள் வருமாறு:

எல்லா எழுத்தும்-- (உயிர், மெய், உயிர்மெய் முதலிய)
எல்லா எழுத்துக்களும் (பிறக்கும் முறையினை),

வெளிப்படக் கிளந்து-- (முன்னையை நூலாசிரியர்கள்) விளக்கியிருப்பதனால்,

சொல்லிய பள்ளி-- மேற்கூறிய (தலை,மிடறு, நெஞ்சு, பல், இதழ், நாக்கு, மூக்கு, அண்ணம் என்னும்) எட்டு இடங்களிலும்,

எழுதரு வளியில்-- உந்தியில் இருந்து எழுகின்ற உதானன் என்னும் காற்றினால்,

பிறப்பொடு-- பிறக்கின்ற (பரை பைசந்தி மத்திமை என்னும்) ஓசைகளின் பிறப்புடன்,

விடுவழி-- எழுத்துக்களின் பிறப்பைச் சொல்லுமிடத்து,

உறழ்ச்சி வாரத்து-- (மேற்கூறிய எட்டு உறுப்புக்களும் உதானன் என்னும் காற்றும்) வெவ்வேறாக மாறுபட்டு அமையும் தன்மையினால்,

அகத்தெழு வளியிசை-- மூலாதாரத்தில் எழுகின்ற காற்றின் ஓசையினை,

அரில்தப நாடி-- குற்றமற ஆராய்ந்து,

அளவிற் கோடல்-- எடுத்தல், படுத்தல், நலிதல், விலங்கல் (உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம்) என்னும் தன்மை உடையவனாகக் கொள்ளும் முறைமை,

அந்தணர் மறைத்தே-- அந்தணர்களின் வேதங்களில் சொல்லப்பட்ட முறைமை உடையதேயாகும்

அஃது இவண் நுவலாது-- (அவ்வேதங்களில் கூறிய பரை, பைசந்தி, மத்திமை என்னும் நிலையில் உள்ள ஓசைகளும், எழுத்துக்களும் யோகிகளின் உணர்வுக்கே புலப்படுமாதலின்) அவ்வியல்பினை இங்குக் கூறாமல்,

எழுந்து புறத்திசைக்கும் மெய்தெரி வளியிசை--நெஞ்சத் தானத்தில் இருந்து எழுந்து, வெளியே நம் காதுகளில் கேட்கும்படி ஒலித்துப் பொருளை உணர்த்துகின்ற வைகரி ஓசையினது(எழுத்தினது),

அளவு நுவன்றிசினே-- தன்மை அல்லது மாத்திரையினை மட்டுமே (இவ்விலக்கண நூலுக்கு வேண்டிய அளவு) கூறுகின்றேன்.

இந்நூற்பாவின் அமைப்பினால் மூலாதாரத்தினின்றும், உந்திக் கமலத்தினின்றும் ஓசை எழுகிறது என்றும், அவ்வோசையை எழுப்பும் காற்று உதானன் என்று பெயர் பெறும் என்பதும், அங்கனம் தோன்றும் ஓசையானது பரை, பைசந்தி, மத்திமை, வைகரி என்று நால்வகைப்படும் என்பதும், முதல் மூன்றும் யோகிகளின் உணர்வுக்கே புலனாகும் என்பதும், வைகரி என்பது ஒன்று மட்டுமே நம் செவிகளுக்குப் புலனாகின்ற எழுத்தொலியாக வெளிப்படும் என்பதும்,அங்கனம் வெளிப்படுங்கால் அவ்வோசையானது உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம் என்னும் (எடுத்தல், படுத்தல், நலிதல், விலங்கல் என்னும்)நிலைகளில் அமையும் என்பதும், இவ்விவரங்கள் எல்லாம் வேதங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன என்பதும்,அவற்றையெல்லாம் இங்கு எழுத்ததிகாரத்தில் கூற முற்படாமல், தாம் தொடங்குகின்ற

எழுத்ததிகாரத்திற்கு இன்றியமையாமல் வேண்டப்படுகின்ற சில குறிப்புக்களை மட்டுமே தொல்காப்பியர் கூறியுள்ளார் என்பதும் அறியக் கிடைக்கின்றன. இதனால் வேதங்களின் தொன்மையும், அவற்றுள் விளக்கப்பட்ட ஓசைகளின் நுட்பங்களும், பண்டைக் காலத்திலேயே தமிழகத்துச் சான்றோர்களால் அறியப்பெற்றிருந்தன, அறிந்து தழுவிக் கொள்ளப்பெற்றன என்று தெரிகின்றது.

(பதப்பொருளும் கருத்துரையும் உதவியவர் பேராசிரியர் ஸ்ரீ ந.ரா. முருகவேள் அவர்கள்.)

4. நன்றாய்ந்த நீள நிமிர்சடை முது முதல்வன்
வாய் போகாது ஒன்று புரிந்த ஈரிரண்டின்

ஆறுணர்ந்த ஒரு முதநூல் (புறம்–166)

5. ஒன்று புரிந்து அடங்கிய இரு பிறப்பாளர்
முத்தீப் புரையக் காண்தக இருந்த

கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர் (புறம்–367)

6.புத்தர் வரிசையில் உச்சியில் இருக்கிறவர் அர்ஹத். அவரை வழிபடுகிற பௌத்தர்களை அருகர் என்பார்கள். ஜைனர்களின் தெய்வத்துக்கும் அர்ஹத் என்றே பெயர். ஆதலால் சமணருக்கும் இப் பெயர் பொருந்தும்.

7. உண்மை மிகு மறையோடு நற்கலைகள் நிறை பொறைகள்

உதவுக் கொடை என்றிவற்றின் ஒழிவில்லா பெரிய

வண்மைமிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர்

* * *

நாத்தொழில் மறைவல்லார்கள் நயந்(து) அறம் பயந்த வண்கை

தீத்தொழில் பயிலு நாங்கூர்

* * *

சொல்ஆர் சுருதிமுறை ஓதிச் சோமுச் செய்யும் தொழிலினோர்

நல்லார் மறையோர் பலர் வாழும் நறையூர் (சோமு-- சோமயாகம்)

* * *

வேத நான்(கு) ஐந்து வேள்வி அங்கம் ஆ(று) இசை ஏழ்

நடையாவல்ல அந்தணர் வாழ் நறையூர்

(ஐந்து வேள்வி -- பஞ்ச மஹா யக்ஞம்; அங்கம் ஆறு -- வேதத்தின் ஆறு அங்கங்களான ஷடங்கங்கள்)

"நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையால் நான்மறை என்றார். அவை தைத்திரியமும் பௌடிகமும் தலவகாரமும் சாமவேதமுமாம். இனி இருக்கும் (ரிக்கும்) யசுவும் (யஜுஸும்) சாமமும் அதர்வணமும் என்பாரும் உளர். அது பொருந்தாது. இவர் இந்நூல் செய்த பின்னர், வேதவியாதர் (வியாஸர்) சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தனராதலின்."

வேத சாகை

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

வேத சாகை

வேதங்கள் அனந்தம், அதாவது முடிவேயில்லாதவை. வேதாந்தம் என்றாலோ வேதத்தின் முடிவு என்று அர்த்தம். வேதமுடி (ச்ருதிசிரஸ்) என்றாலும் வேதத்தின் முடிவுதான், முடிவே இல்லாத வேதத்தின் முடிவு என்றால் என்ன அர்த்தம்? தத்வரீதியிலே வேதங்களில் என்ன தாத்பரியங்களைச் சொல்லியிருக்கிறதோ, அவை எல்லாவற்றுக்கும் முடிந்த முடிவான ஆத்ம ஸாக்ஷாத்காரம் இந்த உபநிஷத் பாகத்திலேயே சொல்லப் பட்டிருப்பதால், அது வேதாந்தமாகிறது--அதாவது வேதத்தின் முடிவாக, முடிவான கொள்கையாக இருக்கிறது.

பிராம்மணனாகப் பிறந்த ஒவ்வொருவனும் கற்று, ஓதி, அப்பியஸிக்க வேண்டிய சாகை என்ற வேதப் பிரிவுகளில் முதலில் ஸம்ஹிதை, பிறகு பிராம்மணம், அதற்கப்புறம் ஆரண்யகம் என்று வந்து, ஆரண்யகத்தின் கடைசியிலே அந்த சாகையின் முடிவாக, அந்தமாக, உபநிஷத்துக்களே வருவதாலும் அவை வேதாந்தமாகின்றன.

கணக்கேயில்லாத வேதங்களை இப்படிப் பல சாகைகளாகப் பிரித்ததன் நோக்கம் என்ன? ஜீவன் பரிசுத்தி பெற்று ஸாக்ஷாத்காரம் பெறுவதற்கான ஸகல விஷயங்களையும் அவனுக்குச் சொல்லவேண்டும். அத்யயன ரூபத்திலும், யக்ஞம் முதலிய அநுஷ்டானங்களாலும் அவன் செய்ய வேண்டிய கர்மா, அதற்கான மந்திரங்கள்; அப்புறம் யக்ஞத்தின் தத்வார்த்தமான விசாரணை; கடைசியில் பரமாத்ம தத்வம் பற்றிய விசாரணையும், அதன் நிதித்யாஸனமும் (அதாவது தியானம் பண்ணிப் பண்ணி அநுபவ பூர்வமாக உணர்ந்து கொள்வதும்)--இப்படி மூன்றையும் ஒருவனுக்குக் கொடுக்க வேண்டும். ஒரு ஜீவன் கடைத்தேறுவதற்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு கொடுக்க வேண்டும். கடைத்தேறுவதற்கு அனந்தமான வேதங்களையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்கிற அவசியமே இல்லை. அப்படித் தெரிந்துகொள்வது அடியோடு ஸாத்யமில்லாத காரியமும் ஆகும். பரத்வாஜர் மாதிரியான மஹரிஷிகளும் வேத மலையில் மூன்று பிடிதான் எடுத்துக் கொள்ள முடிந்தது என்று கதை சொன்னேனல்லவா? ஆகையால் எவ்வளவு தெரிந்துகொண்டால் ஒரு ஜீவன் ஸம்ஸ்காரம் பண்ணப்பட்டு, அதாவது அழுக்கு எல்லாம் நீங்கி சுத்தமாகிப்

பரம்பொருளோடு கலப்பதற்குப் போதுமோ அதையே ஒரு "சாகை" என்று அனந்தமான வேதங்களிலிருந்து பிரித்துக்கொடுத்திருக்கிறது.

ஒரு சாகை என்பது ஒரு பிராம்மணன் பிறப்பது முதற்கொன்டு இறக்கும் வரையில் செய்ய வேண்டிய கர்மாக்களுக்கு உபயோகமான விஷயங்கள் அடங்கியிருப்பது. ஒரு சாகையை அத்யயனம் பண்ணி, அதாவது அதன் ஸம்ஹிதா மந்திரங்களை உருவேற்றி மனப்பாடமாக அத்யயனம் பண்ணி, இந்த மந்திரங்களை வைத்துக்கொன்டு, பிராம்மணத்திலுள்ளபடி யக்ஞங்களைச் செய்து, அப்புறம் இந்த வெளிக்காரியத்துக்கும் உள் தத்வத்துக்கும் பாலம் போட்டுக் கொடுக்கிற ஆரண்யங்களை விசாரம் செய்து, கடைசியில் உள்தத்வம் மட்டுமேயான உபநிஷத்துக்களை அனுஸந்தானம் பண்ணி, பிறகு உள்ளும் புறமும் எல்லாம் ஒன்றாகிவிடுகிற மோக்ஷ நிலையை அடைந்து விடுவதற்கு வசிதியாக, ஒவ்வொரு சாகையும் வகுக்கப்பட்டிருக்கிறது.

பக்குவிகளானால் ஒரே ஒரு மந்திரம்கூடப் போதும், ஆத்மாவை கடைத்தேற்றுவதற்கு! இருந்தாலும், பொதுவாக ஒரு ஸாதாரண ஜீவன் பரிசுத்தமாவதற்கு எத்தனையோ கர்மாக்கள், உபாஸனை, ஜபம், தியானம் இவற்றைச் செய்ய வேண்டியதாகிறது. அப்படி ஒரு ஸாமானிய ஜீவன் கடைத்தேறுவதற்கான அளவுக்கு ஒவ்வொரு சாகையிலும் மந்திரங்களையும், கர்மாக்களையும் தத்வோபதேசங்களையும் கொடுத்திருக்கிறது.

பிராம்மணரல்லாதார் விஷயம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

பிராம்மணரல்லாதார் விஷயம்

பிராம்மணன் தவிர மற்றவர்கள் பரிசுத்தியாக வேண்டாமா? அவர்களுக்கு இந்தக் கர்மாநுஷ்டானம் அத்யயனம், இவை இல்லையே என்றால், அவரவருக்கும் அவரவர் செய்கின்ற தொழிலே சித்தசுத்தியைத் தருகிறது. எந்த ஜாதியானாலும், தங்களுக்கு ஏற்பட்ட கர்மாவை (தொழிலை)ச் செய்து அதை ஈச்வரார்ப்பணம் பண்ணினால் ஸித்தி அடைந்து விடுகிறார்கள். இந்த விஷயத்தை பகவான் கீதையில் (XVIII.46) தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

ஸ்வகர்மணா தம் அப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ:|

யுத்தம் செய்வது, காவல் காப்பது முதலான தொழில் ஒருத்தனுக்கு ஏற்பட்டிருக்கிறது. இன்னொருவன் வியாபாரம் செய்கிறான், பசுவை ரக்ஷிக்கிறான். வேறொருவன் இந்த நாளில் தொழிலாளர்கள் என்று சொல்கிற labour force ஆக இருக்கிறான். பிராம்மணன் சமூகத்துக்காகச் செய்ய வேண்டிய தொழில் என்ன?

இந்த லோக ரீதியில் மற்றவர்கள் தொழில் செய்கிறார்கள். ஆனால் நம்முடைய பரமாத்மாவின் அநுக்ரஹந்தானே எல்லாவற்றுக்கும் முக்யமாக வேண்டியிருக்கிறது? அதை ஸகல ஜாதியாருக்கும் ஸம்பாதித்துக் கொடுப்பதற்கான காரியங்களே பிராம்மணனுக்கு ஏற்பட்டவை.

பரமாத்மாவோடுகூட, முன்னமே சொன்னபடி அவரது அதிகாரிகளைப் போல இருக்கிற தேவர்களை ஸகல ஜீவ ஜந்துக்களிடமும் பிரீதி உள்ளவர்களாகப் பண்ணவேண்டியதும் பிராம்மணின் தொழிலைச் சேர்ந்தது. அவன் அத்யயனம் பண்ணும் மந்திரங்கள், அவன் புரிகிற கர்மாநுஷ்டானங்கள் எல்லாமே ஸகல ஜாதியாரின் க்ஷேமத்தை உத்தேசித்தவைதான். இந்த லோகத்தின் லெவலை மீறிய சக்திகளோடு இவனுக்குக் காரியம் இருப்பதால், இவன் மற்றவர்களைவிட அதிக நியமங்கள், விரதங்களோடு இருந்து மந்திர சக்தியை ஸம்பாதித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. மற்றவர்களுக்கு இவ்வளவு வேண்டாம். அவர்களுக்காகவும் சேர்த்து இவனுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று புரிந்து கொண்டால் இவனுக்கு மட்டும் ஸ்பெஷலாக வைத்திருக்கிறது என்ற தப்பபிப்ராயம் உண்டாகாது.

இந்தக் காரியம் தவிர, லோகரீதியிலேயே இவன்தான் எல்லா வித்யைகளையும், சாஸ்திரங்களையும், மற்ற எல்லார் செய்கிற தொழில் முறைகளையும் நன்றாகப் படித்து, அவரவர்க்கும் உரிய தொழிலை அவரவர்களுக்குச் சொல்லி கொடுக்க வேண்டும். Teaching (கற்றுக் கொடுப்பதே) இவன் தொழில். மற்ற தொழில்களை இவனே செய்யாமல், அவற்றைப் பற்றிய நூல்களைப் பயில மட்டும் செய்து, அததற்கு உரியவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதோடு நிற்கவேண்டும். மற்றவர்களின் சரீரத்தைக் காப்பாற்றுகிற காவல் காரியம், வியாபாரம், உடலுழைப்பு முதலியவற்றைவிட, அவர்களுடைய தொழில் முறை, வாழ்க்கை நெறி இவற்றையே காப்பாற்றிக் கொடுப்பதன்

மூலம், அவர்களுடைய மனஸையும், அறிவையும் ரக்ஷித்துக் கொடுப்பதான இந்தத் தொழில் ரொம்பவும் பொறுப்பு வாய்ந்ததாக இருக்கிறது. இந்தப் பொறுப்பை ஆற்றுகிறவன் நல்ல சித்த பரிபக்குவம் வாய்ந்தவனாக இருந்தாலன்றி இவன் செய்கிற காரியம் பலன் தராது. மனஸிலும், அறிவிலும் இவன் உயர்ந்த தூய்மையை அடைந்திருந்தால்தான் இவன் பிறரை அவற்றில் உயர்த்திவிட முடியும். அதே சமயத்தில், இவனுக்குத்தான் மற்றவர்களுக்கு இல்லாத பிரதிபந்தகம் (handicap) ஒன்றும் இருக்கிறது. புத்தியால் காரியம் செய்கிறோம் என்பதால் இவன் மற்றவர்களைவிடத் தனக்கு உயர்வு இருப்பதாக நினைத்து விட்டால், அது பெரிய பிரதிபந்தகமாகிவிடும். இம்மாதிரிக் காரணங்களால், இவனைத்தான் ரொம்பவும் பரிசுத்தப்படுத்த வேண்டியிருக்கிறது. நிரம்பவும் அஹம்பாவம் உண்டாக்கக்கூடிய ஹேதுக்கள் இருந்தும், இவனைக் கொஞ்சங்கூட அஹம்பாவமே இல்லாதவனாகப் பண்ண வேண்டியிருக்கிறது. அதனால்தான், இவனை நாற்பது ஸம்ஸ்காரங்களால் நன்றாக வறுத்தெடுத்து சக்கையாகப் பிழிந்து சுத்தமாக வேண்டும் என்று வைத்திருப்பது.

மந்திரங்கள் பலிதம் ஆகவேண்டுமானால் கடும் நியமங்களை அநுஷ்டித்தால்தான் முடியும். தேள்கடி மந்திரம் மாதிரி ஒன்றை ஜபித்து விஷத்தை இறக்குகிறவர்களை இன்றைக்கும் பார்க்கிறோம். அவர்களைக் கேட்டால் நியமம் தப்பினால் தங்களுடைய ஜபம் பலிக்கிறதில்லை என்கிறார்கள். இன்ன வேளையில்தான் ஜபம் பண்ணலாம், இன்ன வேளையில்

கூடாது, வாரத்தில் இந்த நாளில் கூடாது, தூபம் காட்ட வேண்டும், பலி போட வேண்டும் என்று ஒவ்வொரு மந்திரத்துக்கும் ஒவ்வொரு விதி இருக்கிறது. விதி தப்பினால் பலனில்லாமல் போய்விடுகிறது என்கிறார்கள். கிரஹண காலத்தில் ஜபித்தால் நல்ல வீர்யம் ஸித்திக்கிறது என்கிறார்கள். இவ்விதமாக மந்திரம் பலன் தருவதற்கும், ஒரு வேத வித்து ஆத்மசுத்தி பெறுவதற்கும் ஆதாரமான விஷயங்கள் அத்தனையும் ஒரு சாகைக்குள் வந்து விடும்படியாக வைத்திருக்கிறது.

சாகைகளின் பிரிவினையும் வழக்கில் உள்ளவையும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

சாகைகளின் பிரிவினையும் வழக்கில் உள்ளவையும்

ஆதிகாலத்திலிருந்தவர்கள் மஹாசக்தர்களாக, நிரம்ப யோக சக்தியும் புத்திவன்மையும் உடையவர்களாக இருந்ததால் ஒவ்வொருவரும் ஏகப்பட்ட வேத சாகைகளை அப்பியாஸம் பண்ணி வந்தார்கள். அநேகம் மஹிரிஷிகளுக்கு தாமாகவே வேதங்கள் ஸ்புரித்தன. மற்றவர்கள் குருவிடமிருந்து அஸாதாரணமாக மேதா சக்தியினால் அபரிதமான வேத சாகைகளை கற்றுக்கொண்டார்கள். அதற்கப்புறம் இவர்களுக்காகவே வேத மந்திரங்கள் ஸ்புரித்ததும் உண்டு. குருவிடமிருந்து கற்றதற்கு மேலாகப் புதுப் புது வித்யைகளைப் பிரகாசப்படுத்தினார்கள். வேதம் முழுக்க ஸமுத்ரம் என்றால், அதைப் பூரணமாக அறிந்த யாரும் இருக்கவில்லைதான். ஆனாலும், இப்படி அந்த ஸமுத்ரத்தில் நிறைய பாகங்களைப் பற்றித் தெரிந்தவர்களாக ஆதிகாலத்தில் இருந்தார்கள்.

பிற்காலங்களில் மநுஷ்யர்களின் தெய்விகமான யோக சக்திகள் குறைந்துகொண்டே வந்து, கலி ஆரம்பத்தில் ரொம்ப க்ஷீணமடைந்து விட்டது. ஜனங்களின் ஆயுஸ், ஆரோக்யம், புத்திபலம் எல்லாமே ரொம்ப குறையலாயிற்று. புராணங்களில் இப்படிச் சொல்லியிருப்பதைத்தான், மேலே சொன்ன நச்சினார்க்கினியர் உரையிலும், 'சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர்' என்று சொல்லியிருக்கிறது. இதெல்லாம் பரமாத்மாவின் லீலைதான். ஏன் இப்படிக் குறைய வேண்டும் என்றால் சொல்லத் தெரியவில்லை. "வேதங்களை நிரம்பக் கற்று யக்ஞாதிகளும் முடிவிலே ஆத்ம விசாரமும் பண்ணிக் கொண்டு வந்தவர்கள்,

தலைமுறை தலைமுறையாக நன்றாக விருத்தியாகிக் கொண்டுதானே வரவேண்டும்? அப்படியில்லாமல் ஏன் க்ஷீணமடைய வேண்டும்?" என்று கேட்டால் [பதில்] சொல்லத் தெரியவில்லை. பரமாத்மா ஒரே மாதிரியில்லாமல் நூதன நூதனமாக, விசித்ரமாக விளையாடிக்கொண்டு இந்த லோக நாடகத்தை நடத்துவதால் இப்படியிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. ஆகக்கூடி evolution, evolution என்று (உயிரினம் மேலே மேலே அபிவிருத்தியாகிற கிரமத்திலேயே ஸ்ருஷ்டி போய்க்கொண்டிருக்கிறது என்று) டார்வின் முதலானவர்கள் சொன்னாலும், ஆத்மிகமாகவும், புத்திப் பிரகாசம், நல்ல குணம், யோகசக்தி முதலியவற்றை வைத்தும் பார்க்கிற போது evolution-கு நேர்மாறாக, கீழே கீழே டிக்ரி போவதாகத்தான் இருந்திருக்கிறது. இதிலே ஒரு freezing point (அப்படியே குளிர்ந்து, உறைந்து போய்விடுகிற நிலை) மாதிரி கலியுக ஆரம்பம் வந்தது.

கிருதயுகத்திலிருந்து மநுஷ்யர்களின் சக்தி குறைந்து கொண்டே வந்திருக்கிறது. அந்த யுகத்தில் அஸ்தி (எலும்பு) இருக்கும்வரை ஒருத்தருக்கு ஆயுஸ் இருக்கும். ரத்தம், மாம்ஸம் எல்லாம் வற்றிப் போய்விட்டாலும்கூட, எலும்புக் கூடு உளுத்து விழுகிற வரையில் உயிரோடு இருப்பார்கள். அவர்களுக்கு நிரம்பவும் தியான சக்தி உண்டு. அவர்களை 'அஸ்தி கத ப்ராணர்கள்' என்று சொல்லியிருக்கிறது. த்ரேதாயுகக்காரர்கள் 'மாம்ஸ கத ப்ராணர்'கள். அதாவது ரத்தம் சுண்டி விட்டால்கூட மாமிஸம் அழுகுகிறவரை உயிரோடு இருப்பார்கள்.

இவர்களுக்கு யக்ஞாதி கர்மாக்களைப் பண்ணும் சக்தி விசேஷமாக உண்டு. த்வாபரயுக ஜனங்களுக்கு 'ருதிர கத ப்ராணர்' என்று பெயர். 'ருதிரம்' என்றால் ரத்தம். தமிழில் 'உதிரம்' என்றாகியிருப்பது இதுதான். இவர்கள் ரத்தம் வற்றுகிறவரை ஜீவனோடு இருப்பார்கள். பூஜை பண்ணுவதில் இவர்களுக்கு சக்தி அதிகம். அப்புறம், இப்போது கலியுகத்தில் இருக்கிற நாம் 'அன்ன கத ப்ராணர்'கள். சோறு உள்ளவரைதான் நமக்கு உயிர் உடம்பில் தரித்திருக்கும். நமக்கு த்யான சக்தி, கர்மாநுஷ்டான சக்தி, பூஜை பண்ணும் சக்தி எதுவும் இல்லை. "கிருஷ்ணா, ராமா" என்று நாமாவைச் சொல்கிற சக்திதான் இருக்கிறது. நாமாவே காப்பாற்றிவிடும் என்பது வாஸ்தவந்தான். ஆனாலும் அதற்காக பிரம்ம ஸ்ருஷ்டியிலிருந்து வந்திருக்கிற வேதங்களை அழிந்து போகும்படிப் பண்ணலாமா? அது பெரிய நஷ்டமல்லவா? அந்த நஷ்டத்துக்கு ஹேது கிருஷ்ண பகவானின் தேஹோத்ஸர்ஜத்தோடு [தேக வியோகத்தோடு] பெரிதாக ஆரம்பித்தது. கிருஷ்ண பரமாத்மா சரீரத்தை பரித்யாகம் பண்ணிவிட்டு, லோகத்தைவிட்டுப் புறப்பட்டவுடன் ஒரு பெரிய இருட்டு வந்து சூழ்ந்து கொண்டுவிட்டது. கிருஷ்ண பரமாத்மா பேரிலும் இருட்டு (கிருஷ்ண-கருப்பு); அவர் பிறந்ததும் இருட்டு; காராக்ருஹத்திலே நட்ட நடுநிசியிலே அவர் பிறந்தார். ஆனால் அவரே லோகத்துக்கெல்லாம் ஞான ஜோதியாக இருந்தார்! கருணை ஜோதியாக, அருட்பெருஞ் ஜோதியாகவும் இருந்தார்! அவர் மறைந்ததும் ஞானத்துக்குப் பெரிய ஹானி உண்டாகி பெரிய இருள் சூழ்ந்துவிட்டது. கெட்ட சக்திகளுக்கு ஒரு ரூபமாக இருக்கப்பட்ட கலிபுருஷனுக்கு அதிகாரம்

ஏற்பட்டுவிட்டது. இதெல்லாம் எதற்காகவோ பரமாத்மாவே விளையாடிப் பார்த்துக் கொள்கிற லீலைதான்.

ஒரே ஜோதியாக வந்தார்; அப்புறம் ஒரே இருட்டு வந்து விடுமோ என்று பயப்படும்படியான நிலையை உண்டு பண்ணினார். இதற்கப்புறம் ஒரு கருணை உண்டாகி, "லோகம் இப்படி ஒரேடியாக வீணாகி விடவேண்டாம்; கலிக்குக் கொஞ்சம் மாற்று மருந்து – கலியின் விஷத்தை முறிக்கிற மருந்து – கொடுத்து ரக்ஷிக்கலாம்" என்று நினைத்தார். வேதந்தான் அந்த மருந்து. கலி புருஷன் அதைக் கபளீகரம் பண்ணிவிடாமல் காப்பாற்றிவிட்டால் போதும், லோகம் பிழைத்துக் கொள்ளும்; இருட்டிலே அது ஒரு விளக்காக வழிகாட்டிக் கொண்டிருக்கும் என்று பரம கருணையோடு எண்ணினார். பழைய மாதிரி வேதம் ஜோதியாகப் பிரகாசிப்பது கலியில் ஸாத்யமில்லை. கலிபுருஷனுக்கு அதிகாரம் கொடுத்தபின் அப்படிப் பண்ணுவதற்கில்லை. ஆனாலும், அது குறைந்த அளவுக்காவது எவ்வளவு பிரகாசிக்க வேண்டுமோ அந்த அளவு இருக்கும்படிப் பண்ணவேண்டும் என்று நினைத்தார். தம்முடைய அம்சாவதாரமான வேத வியாஸ மஹரிஷி மூலமாக இந்தப் பெரிய உபகாரத்தைச் செய்தார்.

அப்போது வேத வியாஸருக்கு அந்தப் பேர் இருக்கவில்லை. அவருடைய [இயற்] பெயரும் கிருஷ்ணர் என்பதுதான். தீவில் (த்வீபத்தில்) பிறந்தவராதலால் த்வைபாயனர் என்பார்கள். கிருஷ்ண த்வைபாயனர், பாதராயணர் என்ற பேர்கள் அவருக்கு இருந்தன. 'பதரி' என்னும் இலந்தை மரத்தடியில் தபஸ் பண்ணியதால் பாதராயணர் என்றும் அவரைச் சொல்வார்கள்.

பல மஹரிஷிகளின் மூலமாக லோகத்துக்கு வந்திருந்த 1180 வேத சாகைகளும் கிருஷ்ண த்வைபாயனருக்குத் தெரியும். அக்காலத்தில் அதெல்லாம் கலந்து ஒரே பிரவாஹமாகத்தான் இருந்தது. அதில் நிறைய கிரஹிக்கும் சக்தி பூர்விகர்களுக்கு இருந்தது. அவதார புருஷரானதால் த்வாபரக் கடைசியில் பிறந்த போதிலும் கிருஷ்ண த்வைபாயனருக்கோ அத்தனையையும் க்ரஹிக்கும் சக்தி இருந்தது. சக்தி குறைந்த நமக்காக அவர் அவற்றை நாலு வேதங்களாகவும், அதில் ஒவ்வொன்றிலும் இன்னின்ன சாகை என்றும் பிரித்தார். ஒரு dam போட்டுப் பெரிய பிரவாஹத்திலிருந்து பல வாய்க்கால் வெட்டி விடுகிற மாதிரி நாலு வேதங்கள், அவற்றின் சாகைகள் என்று விபாகம் (பகுப்பு) செய்தார். அது அவருடைய யோக மகிமை, தபஸின் வலிமை. இவற்றில் பிரார்த்தனா ரூபமான ரிக்வேத சாகைகள், யக்ஞ விதிகளின் ரூபமான யஜுஸ் சாகைகள், கான ரூபமான ஸாமவேத சாகைகள், ஆபத்துக்களைப் போக்கிக் கொள்வதற்கும் சத்ருக்களை நாசம் பண்ணுவதற்குமான மந்திரங்களையும் யக்ஞங்களையும் முக்யமாகக் கொண்ட அதர்வ சாகைகள் எல்லாம் இருந்தன.

தேவர்கள் ரொம்பவும் ஸந்தோஷப்படுத்துவதற்காக ஸாமவேதத்தில் அதிகப்படியான சாகைகள் இருந்தன. 1180ல் ஆயிரம் சாகைகள் ஸாமவேதத்திலேயே இருந்தனவாம்! ரிக் வேதத்தில் 21 சாகைகள் இருந்தன. யஜுர் வேதத்தில் 109 இருந்தன. (சுக்ல யஜுஸில் 15; கிருஷ்ணயஜுஸில் 94) அதர்வ வேதத்தில் 50 சாகைகள் இருந்தன.

1180 என்பது விஷ்ணுபுராணத்தில் வருவதாக ஒரு பண்டிதர் எடுத்துக் காட்டிய கணக்காகும். இதற்குக் கொஞ்சம் வித்யாஸமாக இன்னொரு கணக்கும் இருக்கிறது. அதன்படி ரிக் வேதத்தில் 21 சாகைகள்; யஜுஸில் 101; ஸாமத்தில் 1000; அதர்வத்தில் 11; மொத்தம் 1133 சாகைகள்.

இனிமேல் வரப்போகும் கலிகால ஜனங்கள் அல்ப சக்தர்களாகவே இருப்பார்களாதலால் இந்த ஆயிரத்து நூற்றுச் சொச்சத்தில் ஒரு சாகையை அத்யயனமும் அநுஷ்டானமும் பண்ணினால் போதும் என்று கிருஷ்ண த்வைபாயனர் கருதினர். பகவத் ஸங்கல்பமே அவருக்கு இந்த எண்ணத்தைத் தந்தது. அதனால் ஒருத்தரே பல வேதங்களைக் கற்றுக்கொள்கிற பழைய முறைபோய், ரிக், யஜுஸ், ஸாம, அதர்வங்களில் ஏதாவது ஒன்றிலே ஒரு சாகையைப் படித்து மனப்பாடம் பண்ணி, அதன்படி செய்தால் போதும் என்ற புது ஏற்பாட்டைச் செய்தார். தம் சிஷ்யர்கள் நூலு பேரில் ஒவ்வொருவரிடம் ஒரு வேதம் என்று பிரித்துக் கொடுத்து, 'இதன் சாகைகளை நீங்கள் பிரசாரம் செய்யுங்கள்' என்று ஆக்ஞை பண்ணினார். ரிக்வேத சாகைகளைப் பைலர் என்ற சிஷ்யரிடமும், இப்படியே யஜுஸை வைசம்பாயனரிடமும், ஸாமத்தை ஜைமினியிடமும், அதர்வத்தை ஸுமந்து என்பவரிடமும் கொடுத்துப் பிரசாரம் செய்ய வைத்தார்.

இப்படி ஒரு ஜீவனுக்கு இது போதும் என்று வேதத்தை நாலாகவும், அந்த நாலை 1180 சாகைகளாகவும் பிரித்துக் கொடுத்ததாலேயே, கிருஷ்ண த்வைபாயனருக்கு 'வேத வ்யாஸர்' என்ற காரணப் பெயர் உண்டாயிற்று. வ்யாஸம்

என்றால் கட்டுரை, essay,composition என்று அர்த்தம். ஒரு விஷயத்தை மட்டும் பிரித்து எடுத்துக்கொண்டு விளக்குவதால் அதற்கு வியாஸம் என்று பெயர் வந்தது. பல விஷயங்கள் இருக்கிறபோது, ஒவ்வொரு பொருள் பற்றியும் (subject wise-ஆக) விபாகம் பண்ணுவது (பிரித்து classify பண்ணுவது) தான் வியாஸம். ஏகப்பட்டதாக இருந்து வந்த வேதசாகைகளைத் தீர்மானமாக இது போதும் என்று பிரித்து விபாகம் செய்ததாலேயே, க்ருஷ்ண த்வைபாயனருக்கு வேத வ்யாஸர் என்ற பெயர் வந்துவிட்டது.

ஒரு சாகை போதும் என்று அவர் ஏற்பாடு பண்ணினதால், அதற்குமேல் கற்றுக் கொள்ளக் கூடாது என்று தடை போட்டுவிட்டதாக அர்த்தமில்லை. 'மினிமம்' ஒரு சாகையாவது பயில வேண்டும் என்று வைத்தார். வியாஸர் வேதங்களை விபாகம் செய்து இப்போது ஐயாயிரத்துச் சொச்சம் வருஷமாகிறது. ஓரளவுக்குச் சரித்திர பூர்வமாகவே இதை நிர்ணயம் பண்ணியிருக்கிறது. சாஸ்திரங்களால் தீர்மானமாகத் தெரிகிற இந்தக் காலக் கணக்கை ஒப்புக் கொள்ளாமல் சரித்திரக்காரர்கள் மஹாபாரத காலம் கி.மு.1500 என்று சொல்லிவந்தார்கள். இப்போது அது இன்னம் சில நூற்றாண்டுகளுக்கு முந்தியும் போயிருக்கும் என்று சொல்லி, 5000 வருஷம் என்ற கணக்கு சரியாக இருக்கும் என்று அபிப்ராயம் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். வியாஸர் விபாகம் பண்ணிய பிறகும் ரொம்ப காலம் ஒருவரே ஒரு வேதத்தில் ஒரு சாகையை அத்யயனம் செய்தபின், இன்னொரு வேதத்தின் இன்னொரு சாகை,

அப்புறம் மூன்றாவதாகப் பின்னுமொரு வேதத்திலே ஒரு சாகை என்றெல்லாம் அத்யயனம் பண்ணி வந்திருக்கிறார்கள். இன்றைக்கும் வடக்கத்தியர்களின் பேர்களுக்குப் பின்னால் சதுர்வேதி, த்ரிவேதி, த்விவேதி என்றெல்லாம் வருவதைப் பார்க்கிறோம். த்ரிவேதி ஒருத்தர் கவர்னராகக் கூட இருந்தார். 'துபே', 'தவே' என்பதெல்லாம் 'த்விவேதி' என்பதன் திரிபுகள்தான். நூலு வேதங்களிலும் ஒவ்வொரு சாகை அத்யயனம் பண்ணினவர்களின் பரம்பரையில் வந்தவர்களே 'சதுர்வேதி' என்கிறவர்கள். இவர்களை பெங்காலில் சட்டர்ஜி என்பார்கள். மூன்று வேதங்களில் அத்யயனம் பண்ணியவர்கள் த்ரிவேதிகள்; இரண்டில் பண்ணினவர்கள் த்விவேதிகள். இப்போது ஒன்றைக்கூடப் பண்ணினவர்கள் ரொம்பவும் அபூர்வமாகி விட்ட போதிலும் குடிப் பெயரிலாவது இப்படி ஒன்றுக்கு மேற்பட்ட வேதங்களை அத்யயனம் பண்ணின பூர்விகர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு அத்தாட்சி கிடைக்கிறது. ஞானஸம்பந்தர், தம்மை "நான்மறை ஞானஸம்பந்தன்" என்று சொல்லிக் கொள்கிறார். நூலு வேதங்களையும் அத்யயனம் பண்ணினவர் அவர். அம்பாளின் க்ஷீரத்தைப் பானம் பண்ணினவராதலால், அவருக்கு ஸகல வேதங்களும் உடனே தெரிந்திருக்கும்.

இந்த ஐயாயிரத்துச் சொச்சம் வருஷத்தில், அநேக சாகைகள் வழக்கொழிந்து போய்விட்டன. கொஞ்சங் கொஞ்சமாகத் தேய்ந்து கொண்டே வந்து, 1180 என்பது சமீபகாலமாக ஆறேழு சாகைகளில் நிற்கிற பரம துர்ப்பாக்ய ஸ்திதியில் இருக்கிறோம்! ('சாகை' என்று, அதில்

முதலில் வரும் ஸம்ஹிதையைச் சொல்கிறேன்.) ரிக்வேதத்தின் 21 சாகைகளில் இப்போது இருக்கிறது ஒன்றுதான். சாகல சாகை என்று அதற்குப் பேர். ஐதரேய உபநிஷத் வருகிற சாகையாதலால் ஐதரேய சாகை என்றும் சொல்வதுண்டு. சுக்ல யஜுஸின் 15 சாகைகளில் இப்போது இரண்டுதான் இருக்கின்றன. காண்வ சாகை என்பது மஹாராஷ்டிரத்தில் இருக்கிறது. மாத்யந்தின சாகைதான் வட இந்தியாவில் நிறைய இருக்கிறது. கிருஷ்ண யஜுஸின் 94 சாகைகளில் தைத்ரீயம்தான் அதிகம் உள்ளது. தக்ஷிணத்தில் மிகவும் அநுஷ்டானத்தில் இருப்பது இதுதான். ஸஹஸ்ர சாகை கொண்ட ஸாமத்தில் 997-ஐப் பறிகொடுத்து விட்டோம்! தமிழ்நாட்டில் தலவகார சாகை எனப்படும் ஜைமினீய சாகை ஒன்றுதான் எஞ்சியிருக்கிறது. மஹாராஷ்டிரத்தில் மட்டும் கொஞ்சம் ராணாயணீய சாகை என்பது இருக்கிறது. மேற்கே குஜராத் முதலான இடங்களிலும், கேரளத்திலும் கௌதும சாகை என்பது இருக்கிறது. அதர்வத்தின் ஐம்பது சாகைகளில் ஒன்றுகூட இல்லையோ என்று பயந்து கொண்டிருந்தோம். சல்லடை போட்டுச் சலித்ததில் சௌனக சாகையை நன்றாக அத்யயனம் பண்ணின ஒருவர், குஜராத்தில் ஸினோர் என்ற இடத்திலிருக்கிறார் என்று தெரிந்தது. அவரிடமிருந்து இந்த அதர்வ சாகையை அத்யயனம் பண்ண நம் ஊர்ப் பசங்களை அனுப்பிற்று.

ரிக்வேதத்தை சேர்ந்த பிராம்மணங்களில் ஐதரேய ப்ராம்மணமும் கௌஷீதகீ ப்ராம்மணமும் (சாங்காயன ப்ராம்மணம் என்றும் இதற்குப் பெயர் உண்டு) நமக்கு வந்திருக்கின்றன. இவற்றைச் சேர்ந்த ஆரண்யகங்களில்

வரும் 'ஐதரேய உபநிஷத்'தும் 'கௌஷீதகீ உபநிஷத்'தும் இன்றைக்கும் வழக்கில் உள்ளன.

சுக்ல யஜுஸைச் சேரந்த பிராம்மணங்களில் 'சதபத ப்ராம்மணம்' ஒன்றே அநுஷ்டானத்தில் இருப்பது. இது மாத்யாந்தின சாகை, காண்வ சாகை இரண்டிலும் (கொஞ்சங் கொஞ்சம் வித்யாஸங்களோடு) பொதுவாக இருப்பது. வேதங்கள் எல்லாவற்றுக்கும் விளக்கமாக இருக்கிற பெரிய புஸ்தகம் இது. ஆரண்யகமாகவும், ஆரண்யகம் பூராவுமே உபநிஷத்தாகவும் இருக்கப்பட்ட 'பிருஹதாரண்யகம்' ஒன்றே இன்றைக்கு சுக்ல யஜுஸில் நமக்குக் கிடைத்திருப்பது. 'ஈசாவாஸ்ய உபநிஷத்' இந்த வேதத்தின் ஸம்ஹிதா பாகத்திலேயே வருகிறது என்று முன்னேயே சொன்னேன்.

கிருஷ்ண யஜுஸில் இப்போது வழக்கில் இருக்கிற பிராம்மணம் 'தைத்திரீயம்'தான். இந்த வேதத்தின் ஆரண்யகங்களிலும் 'தைத்திரீயம்' என்பது இருக்கிறது. அதில்தான் தைத்திரீய உபநிஷத்தும், மஹா நாராயண உபநிஷத்தும் இருக்கின்றன. நிறையப் பிரயோஜனப்படுகிற ஸூக்தங்களும் மந்திரங்களும் மஹா நாராயண உபநிஷத்தில் இருப்பவையே. 'மைத்ராயணி ஆரண்யக'மும் அதே பேரைக் கொண்ட உபநிஷத்தும் இதே கிருஷ்ண யஜுஸில் கிடைத்திருக்கின்றன. கட சாகை (ஸம்ஹிதை), அதன் பிராம்மணம், ஆரண்யகம் எதுவும் இப்போது அநுஷ்டானத்தில் இல்லாத போதிலும் அதன் கடைசியில் வருகிற கடோபநிஷத் மட்டும் வழக்கில் இருக்கிறதென்று முந்தியே சொன்னேன்.

இதேபோல ச்வேதாச்வதர உபநிஷத்தும், கிருஷ்ண யஜுஸைச் சேர்ந்த ச்வேதாச்வதர ஸம்ஹிதையின் முடிவாக வருவது என்றாலும் இந்த உபநிஷத்தைத் தவிர அந்த சாகையின் மற்ற பாகம் எதுவும் கிடைக்கவில்லை.

ஸாம சாகா ஸம்ஹிதைகளில் 997 நஷ்டமாகி விட்ட போதிலும், அதன் பிராம்மணங்களில் மட்டும் ஏழெட்டுத் தப்பிப் பிழைத்திருக்கின்றன. தண்ட்ய ப்ராம்மணம், ஆர்ஷேய ப்ராம்மணம், தேவதாத்யாய ப்ராம்மணம், ஸம்ஹிதோபநிஷத் ப்ராம்மணம், வம்ச ப்ராம்மணம், [ஷட்விம்ச ப்ராம்மணம், ஸாமவிதான ப்ராம்மணம், சாந்தோக்ய ப்ராம்மணம், ஜைமிநீய ப்ராம்மணம்] என்றிப்படிப் பல இருக்கின்றன. இந்த வேதத்தைச் சேர்ந்த ஆரண்யகங்களில் தலவகார ஆரண்யகம் என்பதை தலவகார ப்ராம்மணம் என்றும் சொல்வதுண்டு. இது ஜைமிநீய ப்ராம்மணத்தில் வருவதுதான். இதில் கடைசியில் உள்ளதுதான் கேனோபநிஷத். அதனால் அதற்குத் 'தலவகார உபநிஷத்' என்றும் ஒரு பெயர் இருக்கிறது. சாந்தோக்ய பிராம்மணத்திலிருந்து 'சாந்தோக்ய உபநிஷத்' கிடைத்திருக்கிறது.

அதர்வ வேதத்தில் எல்லாம் போய் விட்டாலும், அதிலிருந்து 'பிரச்னம்', "முண்டகம்', 'மாண்டூக்யம்' என்ற மூன்று உபநிஷத்துக்கள் கிடைத்திருப்பதாக முன்பே சொன்னேன். 'நிருஸிம்ம தாபினீ உபநிஷத்'தும் அதர்வத்தைச் சேர்ந்ததுதான். இந்த வேதத்தில் நமக்குக் கிடைத்துள்ள ஒரே பிராம்மணத்துக்கு 'கோபத ப்ராம்மணம்' என்று பெயர்.

1180-சாகைகளில் இப்படி ஏழெட்டு மட்டும் மிஞ்சியிருப்பதுங்கூட அடுத்த தலைமுறைக்கு நசித்துப் போய் விடும்படியாகப் பண்ணிவிட்டால், அது மஹாபாபமாகும். ஒரு பரிஹாரமும் பிராயச்சித்தமும் இல்லாத பாபமாகும்.

திராவிட தேசம் என்று சொல்லப்படுகிற தக்ஷிணதேசத்தில், கேரளத்தில், வேத வித்யையானது நம்பூத்ரிகளுக்குள் இன்னமும் அணையாமல் இருந்து வருவதைச் சொன்னேன்.

அடுத்தபடியாக, ஆந்திரத்தில் வேதாப்பியாஸம் சமீபம் வரையில் நன்றாக நடந்திருக்கிறது. இதற்குப் பெரிய ஆதரவாக இருந்தது விஜயவாடாவில் நவராத்திரி ஸமயத்தில நடத்திவந்த வருஷாந்தரப் பரீக்ஷைகளும், வித்வத்ஸதஸும் ஆகும். பரீக்ஷையில் தேறினவர்களுக்கும், ஸதஸில் கலந்து கொண்ட பண்டிதர்களுக்கும், ரொக்கமாகப் பணம் கொடுத்து ஸம்மானிப்பார்கள். அதோடுகூட ஒரு ஸர்ட்டி:பிகேட் (நற்சான்றுப் பத்திரம்) கொடுப்பார்கள். இதிலே விசேஷம் என்ன என்றால்: இந்தப் பரீக்ஷைக்கும், ஸதஸுக்கும் வெளியூர்களிலிருந்து, தூர தூரப் பிரதேசங்களிலிருந்துகூடப் பிரம்மச்சாரிகளும், க்ருஹஸ்த வைதிகர்களும் வருவார்கள். பிற்பாடு இவர்கள் தங்கள் ஊருக்குத் திரும்புகிறபோது வழியிலுள்ள கிருஹஸ்தர்களின் வீடுகளில் ஸர்ட்டி:பிகேட்டைக் காட்டினால் அந்த கிருஹஸ்தர்கள் இவர்களுக்கு நிரம்ப மரியாதை செய்வார்கள். இவர்களை அதிதிகளாக உபசரித்து ஸத்காரம் செய்வதோடு, தாங்களும் திரவிய ஸம்மானம்

செய்வார்கள். இதே மாதிரி, ஆந்திர தேசத்தில் ஒரு கல்யாணம் பண்ணும்போது, அதில் வேத பண்டிதர்களுக்கென்று ஒரு பங்கு தக்ஷிணையாக ஒதுக்குகிற வழக்கமும் இருந்தது. இப்பேர்ப்பட்ட cash incentive-கள் (ரொக்கத் தொகை தருகிற ஊக்க உற்சாகம்) காரணமாக வேதாப்யாஸம் ஆந்திர தேசத்தில் செழிப்பாக இருந்தது.

பிராம்மணன் பணம் பணம் என்று பறக்கக்கூடாதுதான். அப்படிப் பறந்தால் அவன் பிராம்மணனே இல்லை. ஆனாலும், வேதம் தவிர மற்ற எந்தத் தொழில் போனாலும் பர்ஸ் நிறைய பணம் வரும். வேதத்துக்கு (வைதிக வாழ்க்கைக்கு)ப் போனால் அன்ன வஸ்திரத்துக்குக்கூட வழியில்லாமல் அவஸ்தைப்பட வேண்டியதுதான் என்கிற சூழ்நிலை போய், வைதிகனும் ஓரளவு ஸுபிக்ஷமாக, நிர்விசாரமாக ஜீவயாத்திரை நடத்த முடியும் என்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கத்தான் வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்ததால் தான் தெலுங்கு தேசத்தில் ஸமீப காலம் வரையில் வேதாப்பியாஸம் ஓரளவுக்கு நல்ல நிலையில் இருந்திருக்கிறது.

தேசம் பூராவுக்கும் திட்டம் போட்டு, குறிப்பாகத் தமிழ் நாட்டில் இப்படி அவசியமான திரவிய சகாயத்துக்கு வழிகள் செய்துதான் இப்போது வேத பாடசாலைகளை உயிர்ப்பிக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

தமிழ் நாட்டில் கடைசியாக நாயகர், மஹாராஷ்டிரர் முதலிய ஹிந்து ராஜாக்கள் ஆண்டவரையிலும், அதற்கப்புறம் இங்குள்ள சுதேச ஸம்ஸ்தானங்களிலும்

வைதிகர்களுக்கு நிரம்ப ராஜமானியங்கள் அளிக்கப்பட்டு வந்தன. ஒரு வேதசாகை முழுதையும் அத்யயனம் செய்கிறவனுக்கு 'ச்ரோத்ரியன்' என்று பெயர். 'ச்ருதி' என்றால் வேதம் அல்லவா? அதிலிருந்து வந்தது 'ச்ரோத்ரியன்'. இப்படிப்பட்ட ச்ரோத்ரியனுக்கு பூதானம், சின்னதாக ஒரு கிராமத்தையேகூட தானம் பண்ணுவது, அநேக தமிழ் ராஜாக்களின் வழக்கமாக இருந்திருக்கிறது. அந்தக் கிராமத்துக்கு வரி கிடையாது. 'இறையிலி' என்று இதைத்தான் பழைய சாஸனங்களில் சொல்லியிருக்கிறது. 'பிரம்மதேசம்' என்று இப்போது சொல்லப்படுகிறவை பிராம்மணனுக்குத் தானமாக ('தேய'மாக) தரப்பட்ட ஊர்கள்தான். 'பிரம்மதேயம்' என்றே சாஸனத்தில் போட்டிருக்கும். "சதுர்வேதி மங்கலம்" என்ற பெயரிலுள்ள ஊர்கள், நான்மறையாளருக்கு ராஜமான்யமாகத் தரப்பட்டவையே. வேதாத்யயனம் பண்ணி இன்னொருத்தனுக்குச் சொல்லிக் கொடுக்கிறவர்களுக்கு ஸம்பாத்தியமுள்ள வேறு வேலை இல்லாதபடியால், அவர்களால் கிஸ்தி கட்ட முடியாது என்று உணர்ந்தே வரி விலக்கு அளித்திருந்தார்கள். நவாப் ராஜ்யத்திலும், கம்பெனி ஆட்சியிலும், பிரிட்டிஷ் ராஜ்யத்திலுங்கூட இந்த வரிவிலக்கு நீடித்தது. வேதத்தை வளர்க்க இவர்களாக ஏற்பாடு பண்ணாவிட்டாலும், ஏற்கெனவே ச்ரோத்ரிய கிராமங்களுக்கு இருந்த வரிவிலக்கை மட்டும் ரத்து பண்ணாமலேயிருந்தார்கள். அப்படியும் பிராம்மணர்கள் தாங்களே நிலங்களை விற்று விட்டு, ஸர்ட்டிஃபிகேட்டுகளாக மாற்றிக் கொண்டு கிராமத்தையும் விட்டு டவுன்களுக்கு வந்து, இங்கிலீஷ் படிப்பு, இங்கிலீஷ் ஸர்க்காரில் வேலை என்று போய், வேத ஸம்பந்தத்தை

அடியோடு கத்திரித்துக் கொண்ட துர்க்கதி உண்டாகி விட்டது.

லௌகிகத்தில் [உலகியலில்] பிரவிருத்தி [தொழிலீடுபாடு] வைத்துக் கொள்ளாமல் ஆத்ம லாபகரமான காரியங்களையே தனக்காகவும் சமூகத்துக்காகவும் பாரம்பரியமாகச் செய்து வருவது என்ற உன்னதமான ஏற்பாடு நம் ஒரு தேசத்தில்தான் இந்த லோகம் பூராவிலுமே யுக யுகாந்தரமாக இருந்து வந்திருக்கின்றது. இதன் பெருமையை பிராம்மணர்களே உணரத் தவறி, வேதத்தைவிட்டு வெள்ளைக்கார நாகரிகத்துக்குப் பாயந்தபின் மற்றவர்களும் இந்த ஜாதியின் அவசியத்தை மறந்து போன ஸ்திதி ஏற்பட்டுவிட்டது.

பிராம்மணர் கடமை

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

பிராம்மணர் கடமை

இவ்வளவு தூரம் கேட்டதற்குப் பிரயோஜனமாக, பிராம்மணர்கள் எல்லாரும் ஏதாவது ஒரு காரியம் வேதத்தை ரக்ஷிப்பதற்காகப் பண்ணவேண்டும். நித்தியம் பிரம்ம யக்ஞம் பண்ண வேண்டும். பஞ்ச மஹா யக்ஞங்களில் அது ஒன்று. இங்கே 'பிரம்ம' என்றால் வேதம் என்று அர்த்தம். அகண்ட தீபம் போல் மந்திர சக்தியானது நம்மிடம் அணையாதிருப்பதற்காக நாம் அதைச் செய்ய வேண்டும். நாம் அத்தியயனம் பண்ணவேண்டிய சாகையின் மஹரிஷி எவரோ அவருக்குத் தர்ப்பணம் பண்ணவேண்டும். பண்ணி விட்டு இரண்டு அக்ஷரமாவது வேத அத்யயனம் பண்ண வேணடும். அதுவும் முடியாவிட்டால், காயத்ரீ ஜபத்தையாவது விடாமல் செய்ய வேண்டும். காயத்ரீ வேதத்தின் ஸாரமானது. காயத்ரீயை உபதேசம் பண்ணிக் கொண்ட பின்பு தான், வேதாக்ஷர உச்சாரணம் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அத்தகைய காயத்ரீயை ஸஹஸ்ராவிருத்தி [ஆயிரம் முறை ஜபிப்பது] தினந்தோறும் செய்யவேண்டும். கடைசி பக்ஷம் பத்தாவது பிரதி வேளையும் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. காயத்ரீ மந்திரம் சித்த சாந்திக்குக் காரணம். அதனுடைய தேவதை சூரியன். சூரியனுக்கு உரிய நாளாகிய ஞாயிற்றுக்கிழமை, இந்த காலத்தில் எல்லோருக்கும் லீவு நாளாக இருக்கிறது. ஆகையால்

அன்று மட்டுமாவது விடியற்காலம் 4-மணிக்கு எழுந்து எல்லாரும் ஸஹஸ்ராவிருத்தி காயத்ரி ஜபம் பண்ணவேண்டும். செய்தால் க்ஷேமம் உண்டாகும்.

புருஷஸூக்தம், ஸ்ரீ ஸூக்தம், ருத்ரம் முதலான வேத ஸூக்தங்களையாவது எல்லா பிராம்மணர்களும் கற்றுக் கொள்ள வேண்டும்.

இதெல்லாம் தற்போது உத்தியோகங்களில் இருக்கிற பிராம்மணர்களுக்குச் சொன்னது. இனிமேல் இவர்கள் பூராவாக அத்யயனம் பண்ணுவது கஷ்டமாதலால், அதமபக்ஷம் வேத சம்பந்தமாக இவ்வளவாவது செய்தாக வேண்டும் என்றேன். ஆனால், கஷ்டத்திலும் ஒன்றை எடுத்துக் கொண்டு முடித்தால்தான் பெருமை ஜாஸ்தி. அந்த விதத்தில் இவர்கள் என்ன கஷ்டமானாலும் பெரிதில்லை என்று, எத்தனையோ ஆயிரம் தலைமுறைகளாகத் தொடர்ந்து வந்திருக்கிற வேத வித்யையை ஸ்வீகாரம் பண்ணியே தீருவது என்ற பக்தியும் சிரத்தையும் வைத்து விட்டால், இப்போதிருந்தாவது அத்யயனத்தை ஆரம்பித்துச் சில வருஷங்களில் பூர்த்தி செய்துவிடலாம். மேலே மேலே ஆராய்ச்சி பண்ணி, ஐம்பது வயசு, அறுபது வயசு அப்புறங்கூடப் பல வருடங்கள் படித்து, உழைத்து பி.ஹெச். டி பட்டம் முதலானதுகளைப் பல யூனிவர்ஸிட்டிகளில் வாங்குகிறார்கள் இல்லையா? மனஸ் இருந்தால் எதுவும் செய்யலாம். வேதம் என்றால் என்னவென்றே தெரியாமலிருந்து விட்டு, அப்புறம் ஒரு ஆவேசம் வந்து நாற்பது வயசுக்குமேல் அத்யயனம் பண்ணினவர்கள் இருக்கிறார்கள். நம் வேத ரக்ஷணத் திட்டங்களின்

பொறுப்புள்ள office-bearer-களிலேயே இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆனபடியால் சிரத்தையும் சங்கல்பமுந்தான் முக்கியம்.

வயதாகி உத்யோகத்துக்கு வந்துவிட்ட பிராம்மணர்களின் சொந்த விஷயம் எப்படிப் போனாலும், இவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கெல்லாம் தப்பாமல் வேத அறிவைத் தர ஏற்பாடு செய்ய வேண்டும். அத்யயனம் பண்ணுவதற்கு விட முடியாவிட்டாலும் (இப்படி நானே விட்டுக் கொடுத்துச் சொல்வது தப்புத்தான். நான் கொஞ்சம் இளக்கிக் கொடுத்து விட்டால் பாக்கியும் பிசுபிசுவென்று போய்விடும். ஆனாலும், நான் பிடிவாதமாக ஒரு ஆக்ஞை போடுவதால் ஒன்றுமே நடக்காமல் போய்விடுமோ என்பதால், இப்படி விட்டுக் கொடுத்துச் சொல்ல வேண்டியதாகிறது), தங்கள் பிள்ளைகளுக்கு எட்டாம் வயசில் உபநயனத்தைப் பண்ணி, அப்புறம் ஏழெட்டு வருஷமாவது ஸாயங்காலங்களில் ஒரு மணி நேரம் முக்யமான வேத பாகங்களைக் கற்றுக் கொடுக்க ட்யூஷன் வைக்க வேண்டும். ஓரிடத்தில் பல பிள்ளைகளைச் சேர்த்துக் கூட்டுறவு அடிப்படையில் (co-operative basis) இதைச் செய்தால் செலவு குறையும். அதோடு ஏழைப் பசங்களும் கற்றுக்கொள்ள முடியும்.

இது எல்லாவற்றுக்கும் மேலாக, இன்றைக்கும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நடக்கும் வேத பாடசாலைகள் மூடிப் போகாதபடியும், இவற்றில் மேலும் வித்யார்த்திகள் சேருமாறு பண்ணவேண்டும். வித்யார்த்திகளுக்கும் அத்யக்ஷகர் (வாத்தியார்) களுக்கும் கணிசமான திரவிய சகாயம் பண்ணினால்தான் இந்தக் காரியம் நடக்கும்.

முன்னமே சொன்னமாதிரி, பிராம்மணனுக்கு ரொம்பவும் ஜாஸ்தியாக லௌகிக சௌகரியங்களையும், தன வஸதியையும் தரக்கூடாதுதான் என்றாலும், நல்ல ஸம்பாத்தியம் தரக்கூடிய பல தொழில்கள் அவர்களை வசீகரிக்கிற தற்காலத்தில், சிலராவது இப்படிப் பூர்ணமாக வேதத்தைக் கற்றுக்கொண்டு பிற்பாடு சொல்லிக் கொடுப்பது என்ற பிராம்மண ஸ்வதர்மத்தையே செய்ய வேண்டுமானால், அப்படிப்பட்டவர்கள் "இல்லை" என்று அழாத அளவுக்கு அவர்களுக்கு வஸதி பண்ணித் தரத்தான் வேண்டும். ஆதியில் இல்லாத அநேக புதுப்புது சௌகரியங்களும், சுக சாதனங்களும் வந்துவிட்ட இந்த நாளில், சிலரை மட்டும் பரம வைராகிகளாக இருந்து கொண்டு ஸ்வதர்மத்தைப் பண்ணுங்கள் என்று சொன்னால், வேதரக்ஷணம் என்பது நின்றே போய்விட வேண்டியதுதான். அதனால் வேதத்துக்கே தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் படியாகச் சிலரைப் பண்ணும்போது, அவர்களுக்கு நாம் நன்றாக சன்மானம் செய்து, திரவிய சகாயம் நிறையக் கொடுக்கத்தான் வேண்டும். அவர்களுக்கு 'லக்ஷரி' கூடாதாயினும், மற்றத் தொழில்கள் அவர்களை இழுத்துக் கொள்ளாத அளவுக்கு ஸௌகர்யம் பண்ணித் தரத்தான் வேண்டும்.
இப்படியெல்லாம் செய்யத்தான் அநேக திட்டங்கள் நடத்தி வருகிறோம்.

வேத ரக்ஷணத் திட்டங்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

வேத ரக்ஷணத் திட்டங்கள்

[1954-ல்] எனக்கு ஷஷ்டியப்த பூர்த்தி பெரிய உத்ஸவமாகப் பண்ணவேண்டும் என்பதற்கு பக்தர்கள் என்னிடம் அநுமதி கேட்டார்கள். அப்போது நான் சொன்னது இதுதான்: "எனக்கென்று ஒரு உத்ஸவமும் வேண்டாம். இந்த தேசத்தைவிட்டு என் காலத்தோடு வேதம் போய் விட்டது என்ற அபக்கியாதி எனக்கு ஏற்படாதபடி பண்ணிவிட்டால் அதுதான் எனக்கு உத்ஸவம்" என்று சொன்னேன். அதைப் பண்ண என்னால் முடியாவிட்டால் எனக்கு உத்ஸவம் கொண்டாடிக் கொள்ள லாயக்கே இல்லை என்று சொன்னேன்.

இதற்கு மேல்தான், 'ஷஷ்டியப்த பூர்த்தி டிரஸ்ட்' என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அது வேத பாஷ்யங்களைப் படிப்பதற்கு உற்சாகமூட்டுவதற்காக ஏற்படுத்திய டிரஸ்ட்.

வேதங்களுக்கு அர்த்தம் சொல்லித் தாத்பரியங்களை விளக்குவதே வேத பாஷ்யம். வேத மந்திரங்களின் அர்த்தத்தைத் தெரிந்து கொள்வதான இந்தக் காரியம் வேதத்தை அத்யயனம் பண்ணின பிற்பாடு செய்ய வேண்டியதுதான்.

ஆனாலும் அப்போதிருந்த நிலையில் வேத அத்யயனம் பண்ணுகிறதாவது கொஞ்சம் கொஞ்சம் நடந்து வந்தது. அதற்கப்புறம் பாஷ்யம் படிப்பதுதான் அடியோடு போய் விடுகிற மாதிரி இருந்தது. அதனால் அதற்கு முதலில் உயிர் கொடுக்க வேண்டும் என்று இந்த ஏற்பாட்டை செய்தது.

அப்புறம் [1957-ல்] கலவையில் நான் பீடத்துக்கு வந்து ஐம்பது வருஷம் முடிந்ததைக் கொண்டாட வேண்டும் என்று பக்தர்கள் ஆசைப்பட்டபோது, வேத பாஷ்யத்தோடு நின்றால் போதாது என்று, நேரே வேத அத்யயனத்துக்கு ஏற்பாடு பண்ணி வேதபாடசாலைகளை எடுத்துக் கொண்டு நடத்துவதற்கு கலவை பிருந்தாவன டிரஸ்ட் ஏற்படுத்தினோம். கலவைதான் என்னுடைய குரு, பரமகுரு என்கிற இரண்டு பூர்வாசாரியார்களின் ஸித்தி ஸ்தலம். அங்கே அவர்களுக்கு பிருந்தாவனம் [ஸமாதி] இருக்கிறது. அவர்களுக்கு அர்ப்பணமாகிற விதத்தில் கலவை பிருந்தாவன டிரஸ்ட் என்று பெயர் வைக்கப்பட்டது.

பிற்பாடு, 'வேத தர்மசாஸ்திர பரிபாலன ஸபை' என்று ஒன்றை ஏற்படுத்தி, அநேக இடங்களில் வேத ஸம்மேளனங்கள் நடத்திப் பண்டிதர்களைக் கௌரவிக்க ஏற்பாடாயிற்று.

அப்புறம் [1960-ல்] இந்த எல்லாக் காரியங்களையும் சேர்த்து பிடித்து நடத்துவதற்காக 'வேத ரக்ஷண நிதி டிரஸ்ட்' என்பதை ஏற்படுத்திற்று. இப்போது இந்தியா முழுவதிலும் வேத பாடசாலைகள் நடத்துவதற்கும், வேத பண்டிதர்களை கௌரவிப்பதற்கும் இந்த டிரஸ்ட்தான் பொறுப்பேற்றுக்கொண்டு, அநேக திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

இதிலே ஒரு திட்டம்: பாடசாலைகளிலோ அல்லது சம்பிரதாயமான வைதிகர்களின் கிருஹத்திலோ இந்தியா முழுதிலும் எங்கே எந்தப் பையன் அத்யயனம் செய்தாலும் சரி, அப்படிப்பட்டவர்களுக்காகப் பல இடங்களில் வருஷத்துக்கு ஒரு பரிக்ஷை வைக்கிறோம்.

ஒரு சாகை அத்யயனம் பண்ணி மனப்பாடமாக்கிக் கொள்ள எட்டு வருஷம் பிடிக்கிறது. எட்டு வருஷமும் இப்படி வருஷாந்தரப் பரிக்ஷை நடத்தி, முடிகிறபோது பட்டம் தருகிறோம். முன்னே நான் வேதங்களை அத்யயனம் பண்ணுவதில் பதம், கிரமம் என்று பல இருப்பதாகச் சொன்னேன் அல்லவா? இதன்படி 'பதாந்த ஸ்வாத்யாயி' அல்லது 'க்ரமபதி' என்று பட்டம் கொடுக்கிறோம்.

பட்டம் இருக்கட்டும். திரவிய சகாயம் செய்து அல்லவா வேத வித்யையை ஊக்கவேண்டும்? இதற்கு என்ன

செய்கிறோமென்றால், படிக்கிற காலத்திலேயே அத்யாபகர் (குரு), வித்யார்த்திகள் (சிஷ்யர்கள்) ஆகிய இருவருக்கும் ஒரு விகிதாசாரப்படி சம்பாவனைகளைக் கணக்குப் பண்ணிக் கூட்டிக் கொண்டு போகிறோம். இதிலிருந்து அத்யாபகருக்கு மாஸா மாஸம் கொடுத்து விடுகிறோம். அரைகுறையாகக் கற்றுக்கொண்டு வித்யார்த்தி ஓடிவிடக் கூடாது என்பதால் அவனுக்கு மட்டும் அத்யயனத்தை முடிக்கிறபோதுதான் சேர்த்துத் தருகிறோம்.

இந்த திட்டத்தின்படி, ஒரு குரு ஒரு வருஷத்துக்கு ஒரு வித்யார்த்திக்கு நூறிலிருந்து நூற்றைம்பது ரூபாய் வரையில் பெறுகிறார். பத்து வித்யார்த்திகள் இருந்தால், குருவுக்கு ஒரு வருஷத்தில் 1500 ரூபாய் கிடைக்கும். ஒவ்வொரு வித்யார்த்தியின் பங்கிலும், வருஷத்துக்கு முந்நூறு, நானூறு [ரூபாய்கள்] சேர்ந்து எட்டு வருஷ முடிவில் அவனுக்கு இரண்டாயிரத்திலிருந்து நாலாயிரம் ரூபாய் வரையில் lump sum - ஆகக் (ஒட்டு மொத்தமாக) கொடுக்கிறோம்.

இப்படி அத்யயனம் முடித்தபின் காவியம், சாஸ்திரம் முதிலயவற்றையும் படித்து, ஸம்ஸ்கிருத பாஷையில் நல்ல ஞானத்தை அபிவிருத்தி பண்ணிக்கொண்டு, "ஸலக்ஷண கனபாடி" என்ற தகுதியைப் பெறுகிற வித்யார்த்திக்கு 1500-லிருந்து 3000 ரூபாய் வரை சம்பாவனை செய்கிறோம். ஒவ்வொரு வித்யார்த்தியும் பெறுவதில் கால் பங்கு குருவுக்கும் கொடுக்கிறோம்.

அத்யயனத்துக்குப் பின் ஸலக்ஷண கனபாடியாகத் தேர்ச்சி பெற மூன்று, நாலு வருஷங்கள் படிக்க வேண்டியிருக்கிறதென்று அநுபவத்திலிருந்து தெரிகிறது.

"ஸமிதாதானம்" என்று தினமும் அக்னியில் மந்திர பூர்வமாக ஸமித்துக்களை ஹோமம் பண்ண வேண்டியது பிரம்மசாரியின் தர்மம். அதேமாதிரி இன்னொரு தர்மம், வீடுவீடாகப் போய் பிக்ஷை வாங்கி வருவது. வேதம் படிப்பதோடு மட்டுமில்லாமல் இப்படி ஸமிதாதானமும் பிக்ஷாசர்யமும் செய்கிற வித்யார்த்திகளுக்கு, சம்பாவனையை இரட்டிப்பாக்கிக் கொடுக்கிறோம்.

ஸலக்ஷண கனபாடி ஆனதற்குப் பிறகுதான் முதலில் சொன்ன வேத பாஷ்யப் படிப்பு வருகிறது. அதற்கு ஏழெட்டு வருஷம் பிடிக்கிறது.

அதாவது வேதக் கல்வி பூரணமாக ஆவதற்கு முதலில் எட்டு வருஷம் (க்ரமபதி விருது வாங்குவதற்கு), அப்புறம் ஸலக்ஷண கனபாடியாக நாலு வருஷம், பிற்பாடு பாஷ்யத்துக்கு ஏழு வருஷம் என்று சுமார் இருபது வருஷங்கள் பிடிக்கின்றன. முதல் கிளாஸிலிருந்து எம்.ஏ. வரைக்கும் படித்து முடிக்க 17, 18 வருஷம் ஆகவில்லையா? அப்படித்தான் இதுவும். அதைவிட நிறைய ஆத்மக்ஷேமம் தருகிற, அதை விட உபயோகமான, லோக உபகாரமான படிப்பு வேத வித்யை.

வேத பாஷ்யம் படிக்க வருகிறபோதே, ஒருத்தனுக்கு உத்தியோகத்துக்குப் போகிற வயசு வந்து விடுகிறது. அவனை அப்படிப் போகாமல் இதற்குத் திருப்பி விட வேண்டுமானால், படிக்கிற போதே ஸ்டைபென்ட் மாதிரிக்

கொடுத்தால்தான் முடியும் என்று நினைத்தோம். அதனால் ஏழு வருஷங்களில் பதின்மூன்று பரீக்ஷைகள் நடத்தி, ஒவ்வொன்றிலும் பாஸ் பண்ணினவுடன் முதல் வகுப்பானால் மாஸத்துக்கு 60 ருபாய், இரண்டாவது வகுப்பானால் 40 ருபாய், மூன்றாவது வகுப்பானால் 30 ருபாய் என்று சம்மானம் செய்கிறோம். தவிர, இரண்டாவது பரீக்ஷை கொடுத்தவன் மூன்றாவது பரீக்ஷைக்குப் போகிற வரைக்கும் அவனுக்கு உபயோகமாயிருப்பதற்காக 100 ருபாயும், இப்படியே மூன்றாவது பரீக்ஷை கொடுத்தவனுக்கு 200 ருபாயும், அதற்கு மேலான பரீக்ஷைகள் கொடுக்கிறவர்களுக்கு 250 ருபாயும் விசேஷ சம்மானமாகத் தரப்படுகிறது. ஒரு வித்யார்த்தி இரண்டு தரம் ஃபெயிலானாலுங்கூட இந்த சம்மானம் கொடுக்கப்படுகிறது. எப்படியாவது அவர்கள் இந்தப் படிப்பை விட்டு விடாமல் தொடரப் பண்ண வேண்டும் என்பதே எனக்கு விசாரமாக இருப்பதால், இப்படி ஏற்பாடு செய்திருக்கிறது. அதாவது பிரதி வருஷமும் வேத பாஷ்ய வித்யார்த்தி ஒருவனுக்கு சுமார் 600 ரூபாய் கிடைக்க வேண்டுமென்பது திட்டம்.

இப்படியெல்லாம் சுமார் இருபது வருஷம் படித்து முடிக்கிறவனை, அப்படியே கடைசி வருஷ சம்பாவனையோடு மட்டும் நடுத்தெருவில் விட்டு விடக்கூடாது! அவனுடைய வேத வித்யை அவனுக்கு எந்நாளும் கால் வயிற்றுக் கஞ்சிக்கு வழி பண்ணுமாறு செய்யவேண்டும் என்று தோன்றிற்று. இதற்கு மூலதனமாக முழுப்படிப்பையும் முடித்து விட்டுப் போகிறவனுக்கு முதல் வகுப்பில் தேறியிருந்தால் 7000

ரூபாயும், இரண்டாம் வகுப்பானால் 5000 ரூபாயும், மூன்றாம் வகுப்பானால் 3000 ரூபாயும் கொடுக்கிறோம்.

முதல் வகுப்பில் தேறியவனுக்கு "பாஷ்ய ரத்ன" என்றும், இரண்டாவதில் தேறியவனுக்கு "பாஷ்ய மணி" என்றும், மூன்றாவதில் தேறியவனுக்கு "பாஷ்யக்ஞ" என்றும் பட்டம் கொடுக்கிறோம்.

இவை தவிர பாரம்பரிய நியமாத்யயனத் திட்டம் என்றும் ஒன்று வைத்திருக்கிறோம். அது என்னவென்றால், குருகுலவாஸம் என்பது சில தலைமுறைகளுக்கு முன்னேயே பல இடங்களில் மாறி ஒரு பிரம்மசாரியானவன் வேறே குருவைத் தேடிப் போய் அவரோடு வாஸம் பண்ணாமல் தன் தகப்பனாரிடமிருந்தே படிக்கிற முறையாக ஆகி இருக்கிறது. இப்படி அநேக குடும்பங்களில் தகப்பனார்-பிள்ளை என்பதே குரு-சிஷ்யக் கிரமமாக அமைந்து சில தலைமுறைகளாக வேத வித்யை இவ்விதத்தில் தொடர்ந்து வந்திருக்கிறது. தற்போதும் அபூர்வமாக இப்படி வீட்டிலேயே பிதா-புத்ரன் என்று படித்து வருகிறவர்களை உத்ஸாஹப்படுத்தி விருத்தி செய்ய வேண்டும்; நல்ல வேத சாஸ்திர ஞானம் உள்ள ஒரு பிராமணர், தன் பிள்ளைக்கும் அதைக் கற்றுக் கொடுக்கும்படியாக ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகவே நியமாத்யயனத் திட்டம் போட்டிருக்கிறோம். இதன் கீழ் ஒவ்வொறு வித்யார்த்தியும் திட்டத்தில் சேர்கிறபோதே, அவன் பேரில் 12,500 ரூபாய் மூலதனம் போட்டுவிடுகிறோம். அதன் வட்டியிலிருந்து அவனுடைய படிப்புக் காலம் முழுவதும் மாஸா மாஸம் 40 ரூபாய் ஸ்டைபென்டும் படிப்பைப் பூர்த்தி பண்ணுகிற

போது 'ல்ம்ப்'பாக 9000 ரூபாயும் கொடுக்கிறோம். அதோடுகூட, முதலில் இவன் பேரில் போட்ட 12,500 ரூபாய் மூலதனத்தின் வட்டியிலும் 80% இவனுக்கு ஆயுஸ் உள்ள வரையில் கிடைத்து வரும்.

[வேத பாஷ்யம்]

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

வேத பாஷ்யம்

அர்த்தம் தெரியாமலே வேதத்தை அத்யயனம் பண்ணி அந்த சப்தத்தை ரக்ஷித்து வந்தாலும் போதும், மந்திர சக்தி வாய்ந்த அந்த சப்தமே க்ஷேமத்தைக் கொடுத்து விடும்; அர்த்தம் தெரியாமலும், ஒரு நம்பிக்கையின் பேரில் வேதாத்யயனம் பண்ணுவதுதான் வீர்யவத்தரம் – என்றெல்லாம் நடுநடுவே சொல்லியிருக்கிறேன். அதனால் அது தான் என் பூர்ணமான அபிப்ராயம் என்று அர்ததமில்லை! வேதத்துக்கு அர்த்தம் தெரிந்து கொள்வதென்றால் அதற்கு ஏகப்பட்ட காலம் படிக்க வேண்டியிருக்கிறது. அத்யயனத்துக்கு அப்புறமும் இத்தனை வருஷம் ஒருவனைப் பாடசாலையில் கட்டிப்போடுவது என்றால் சிரமம்தான். அதனால்தான் அர்த்தம் தெரிந்துகொண்டுதான் வேதாத்யயனத்தை ரக்ஷிக்க வேண்டும் என்றால் ரொம்பப் பெரிசாக எதிர்ப்பார்த்து அடியோடு ஒன்றுமே நடக்காமல் போய்விடப் போகிறதே, அத்யயனத்துக்குக்கூட யாருமே வராமல் போய்விடப் போகிறார்களே என்று நினைத்து பாதி ஸீரியஸாகவும், பாதி விளையாட்டாகவும், 'அர்த்தமே

வேண்டாம்; [வேத] சப்தமே போதும்' என்று சொல்லி வந்தேன்.

வாஸ்தவத்தில், சப்தத்தை மட்டும் ரக்ஷித்துத் தருகிறவர்களாவது நிறைய இருக்கவேண்டும்; அதோடுகூட வேத மந்திரங்களுக்கு அர்த்தத்தையும் தெரிந்து கொண்ட சிலராவது இருக்கும்படியாகவும் பண்ணத்தான் வேண்டும். இதனால்தான் வேதபாஷ்யத்தில் ரொம்பவும் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

வேதத்துக்கு விசேஷமான அர்த்த கௌரவம் இருப்பதால்தான் அநேக மஹான்கள் அவற்றுக்கு பாஷ்யம் என்கிற பேரில் விரிவாக அர்த்தம் (உரை) எழுதியிருக்கிறார்கள். அவை வீணாகப் போகவிடலாமா?

நாம் நம் அகங்களில் விவாஹம் முதலான பல காரியங்கள், சிராத்தம் முதலான பித்ரு காரியங்கள், இன்னம் சில ஹோமங்கள், ஆவணியவிட்டம் (உபாகர்மம்) முதலான வைதிக காரியங்கள் என்று பலவற்றைப் பண்ணுகிறோம். இவற்றின்போது வாத்தியார் சொல்லிக் கொடுக்கிற மாதிரி அநேக வேத மந்திரங்களைச் சொல்கிறோம். அடியோடு இந்தக் கர்மாக்களை விட்டுவிடுகிற துர்பாக்கிய ஸ்திதி ஈச்வராநுக்ரஹத்தில் இதுவரை ஏற்படவில்லை. ஆனாலும் முன்னைக்கு இப்போது தினந்தினமும் கர்மாக்கள் க்ஷீணித்துக் கொண்டுதான் வருகின்றன. இதற்கு ஒரு முக்யமான காரணம், சொல்கிற மந்திரங்களுக்கு அர்த்தம் தெரியாததுதான். அர்த்தம் தெரியாமலே, வாத்தியார் சொன்னதை ஒப்பிக்கிறது என்றால் இந்தக் காலத்தில்

படிப்பாளிகளாக இருக்கப்பட்ட நாகரிகக்காரர்களுக்கு அதிலே ஈடுபாடு இருப்பதில்லை. அர்த்தம் தெரியாவிட்டாலும், சிரேயஸ் என்று நம்பிக்கையோடு சொல்கிற சிரத்தையை இந்தக் காலத்தில் எதிர்ப்பார்க்க முடியாது. வாஸ்தவத்திலும், ஒவ்வொரு சடங்குக்கும் வெவ்வேறு மந்திரம் இருப்பதாலேயே அததற்கும் பொருத்தமான அர்த்தத்தோடுதான் அவை இருக்கின்றன என்று ஆகிறது. அந்த தாத்பரியத்தைப் தெரிந்து கொண்டால், அவற்றில் பலவற்றுக்கு scientific basis [விஞ்ஞான பூர்வமான ஆதாரம்] இருப்பதாகத் தெரிகிறது; இன்னும் பல மந்திரங்களுக்கு emotional appeal [உணர்ச்சி பூர்வமான கவர்ச்சி] இருப்பது அவற்றுக்கு அர்த்தம் தெரிகிறபோதுதான் வெளியாகிறது. இப்படி அர்த்தம் தெரிந்தால் ஈடுபாடு உண்டாகிறது. இதனால் தான் ஈடுபாடே இல்லாமல் மொண மொண என்று எதையாவது சொல்வதை 'திவச மந்திரம்' என்றே சொல்கிற வழக்கம் வந்துவிட்டது! ஆகையால், இனிமேலாவது திவஸ மந்திரம் உள்பட எல்லாவற்றுக்கும் அர்த்தம் தெரியும்படியாகப் பண்ண வேண்டும்.

எப்படிப் பண்ணுவது? முதலில் வாத்தியாருக்கு அர்த்தம் தெரிய வேண்டும். இப்போது பெரும்பாலான வாத்தியார்களுக்கே அர்த்தம் தெரியவில்லை. ஒரு கர்த்தா அல்லது யஜமானன் 'பண்ணி வைக்கிற' வாத்தியாரை, "இதன் அர்த்தம் என்ன?" என்று கேட்டால் அவருக்குச் சொல்லத் தெரியவில்லை. இப்படியிருந்தால், பண்ணுகிறவனுக்கு சிரத்தை எப்படிக் குறையாமல் இருக்கும்?

இன்றைக்கு உள்ள பல நடுத்தர வயசுக்காரர்களுக்கு, "நாம் சொல்லும் மந்திரங்களுக்கு அர்த்தம் என்ன?" என்று தெரிந்து கொள்கிற ஆர்வம் இருக்கிறது என்றே எனக்கு நம்பிக்கை. அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளாமல், வெறும் சப்தத்தைக் கிளிப்பிள்ளை மாதிரி ஒப்பிக்கிறது என்பதாலேயே அவர்களுக்குக் கர்மாவில் சிரத்தை குறைகிறது என்பது என் அபிப்பிராயம். ஆதலினால் வைதிக விருத்தியை (உபாத்யாயத் தொழிலை) மேற்கொள்ள இருக்கிறவர்களுக்கு வேத பாஷ்யத்திலும் நல்ல ஞானத்தை ஏற்படுத்தி, அவர்கள் அர்த்தம் சொல்லும்படியாகப் பண்ண வேண்டும் என்று பிரியாஸை எடுத்திருக்கிறோம்.

அர்த்தம் தெரியாமல் வேதம் சொல்கிற பிராம்மணனை [வேதத்தின் ஆறு அங்கங்களில் ஒன்றான) நிருக்தத்திலேயே சபித்திருக்கிறது.

நமக்கெல்லாம் அர்த்தம் தெரியவேண்டும், கர்மாக்களில் சிரத்தை ஏற்படவேண்டும் என்பதற்காகவேதான், அநேகம் பெரியவர்கள் வேதங்களுக்கு பாஷ்யங்களை எழுதி வைத்திருக்கிறார்கள்.

ஸ்ரீ மத்வாசாரியார்கூட ரிக்வேத முதல் காண்டத்தின் முதல் நாற்பது ஸூக்தங்களுக்கு பாஷ்யம் பண்ணியிருக்கிறார். ஸ்கந்த ஸ்வாமி என்பவரும் ரிக்வேத பாஷ்யம் செய்திருக்கிறார். கிருஷ்ண யஜுர் வேதத்துக்கு பட்ட பாஸ்கரரின் பாஷ்யம் இருக்கிறது. சுக்ல யஜுஸுக்கு மஹீதரரின் பாஷ்யம் இருக்கிறது. ஸமீப காலத்தில் கூட தயானந்த ஸரஸ்வதி, அரவிந்த கோஷ், அரவிந்த கோஷின்

வழியை அநுஸரித்து கபாலி சாஸ்திரி என்று பல பேர் பாஷ்யம் செய்திருக்கிறார்கள்.

இப்படி பல இருந்தாலும் ஸ்ரீ ஸாயணாசாரியாள் பண்ணின வேதபாஷ்யந்தான் வெள்ளைக்காரர்கள் முதற்கொண்டு authoritative (அதிகார பூர்வமானது) என்று ஒப்புக்கொள்ளும்படியாக விசேஷமாகப் பிராசித்து வருகிறது. பதினாலாம் நூற்றாண்டிலே தோன்றி விஜயநகர ஸாம்ராஜ்ய ஸ்தாபனம் பண்ணி, ஆதிசங்கர பகவத் பாதாளின் மடங்களை புது ஜீவனோடு புனருத்தாரணம் பண்ணின மஹா புருஷரான ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள்தான் இந்த ஸாயணாசார்யர்கள். ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம் என்கிற நாலில் யஜுஸிலேயே கிருஷ்ண யஜுஸ், சுக்ல யஜுஸ் என்று இரண்டு இருப்பதால் மொத்தம் ஐந்துவேதம் ஆகிறது. இந்த ஐந்து வேதங்களுக்கும் ஸாயனர் பாஷ்யம் பண்ணியிருக்கிறார். அவருக்கு முன்னாலும் பலர் வேத பாஷ்யம் பண்ணியிருந்தாலும், இப்படி ஐந்து வேதங்களுக்கும் பண்ணினவர் அவர் ஒருத்தரே. இதோடு, பூர்வ மீமாம்ஸை, உத்தர மீமாம்ஸை முதலான சாஸ்திரங்களிளும் பல க்ரந்தங்களை இயற்றியிருக்கிறார். ஒரு சாம்ராஜ்யத்தில் மந்திரி மாதிரி நிர்வாகப் பொறுப்பு வகித்துக் கொண்டே இத்தனை அத்யாத்ம நூல்களையும் ஒருத்தர் பண்ணினார் என்று நினைத்தாலே ஆச்சரியமாயிருக்கிறது.

அவர் பண்ணின வேத பாஷ்யந்தான் ஆரம்பத்திலிருந்து வெகுவாகப் பிரசாரத்தில் இருந்தது. இனிமேலே அது போய் விடுமோ என்ற பெரிய விசாரம் உண்டாயிற்று.

வேத அத்யயனம் செய்தவர்களானால், மேலே பாஷ்யம் படித்து அர்த்தம் தெரிந்து கொள்ளாமலே உபாத்யாய வ்ருத்திக்குப் போய் விடுவதாகவும், காவியங்களை (சாஸ்திரங்களையும் கூடத்தான்) வாசிப்பவர்களோ அத்யயனம் கூடப் பண்ணாமல் நின்றுவிடுவதாகவும் ஆகி வந்ததால், வேதபாஷ்யம் வரவர ரொம்ப மங்கிக்கொண்டு வந்தது. அந்த சமயத்தில் தான் முன்னே சொன்னபடி இதை ரக்ஷிப்பதற்காக ஷஷ்டியப்த பூர்த்தி ட்ரஸ்ட் ஏற்படுத்தப்பட்டது.

முதலில் இந்த ட்ரஸ்டின் ஆதரவில் பரீக்ஷைகள் ஆரம்பிக்கிறபோது, வேத பாஷ்யம் என்பது பிரசாரத்தில் இல்லாமல் புஸ்தகத்தில் மட்டுந்தான் இருந்தது. புஸ்தகத்தை வாங்க ஆளே இல்லையே என்று பிரசுரித்தவர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்த சமயம் அது. இந்த ட்ரஸ்ட் ஏற்பட்டபின் நாங்களே பாஷ்யம் படிப்பவர்களுக்கு உபகாரச் சம்பளம், ஸம்மானம் இவற்றோடு புஸ்தகமும் வாங்கிக் கொடுத்து விடுவதால், நீண்ட காலமாக விலை போகாத புஸ்தகங்கள் எல்லாம் விற்பனை ஆயின. பிரஸ்களில் பாஷ்ய புஸ்தகம் ஸ்டாக் இல்லாமல், இனிமேல் வாசிப்பவர்களுக்கு புஸ்தகத்துக்கு என்னடா செய்வது என்று நாங்கள் கவலைப்படும் படியாக நிலைமை மாறிற்று! பராசக்தியின் அநுக்ரஹத்தால் தான் இப்படி ஆயிற்று. அந்த அநுக்ரஹ பலம் இருக்கிற வரை, புஸ்தகம் இல்லாததால் பாஷ்யம் படிப்பது நின்று போச்சு என்ற ஸ்திதி ஒருநாளும் ஏற்படாது. இப்போது இருப்பதும் போதாது. இன்னும் நிறையப் பேர் வேதபாஷ்யம் படிக்க வரவேண்டும்.

நாம் ஒரு விவாஹம் செய்கிறோம், உபநயனம் செய்கிறோம், ஸீமந்தம் செய்கிறோம் என்றால், அதற்கு இரண்டு நாள் முந்தி பாஷ்யக்ஞரான வேத பண்டிதரை வரவழைத்து, அதிலே பிரயோகமாகிற மந்திரங்களுக்கு என்ன அர்த்தம், சடங்குகளுக்கு என்ன தாத்பரியம் என்று கேட்டுத் தெரிந்து கொள்ளவெண்டும். கர்மாவைப் பண்ணுகிறபோதே கேட்டுத் தெரிந்து கொள்வதென்றால் பொழுது இருக்காது. முன்னாடியே தெரிந்து கொண்டால்தான் மனஸிலும் ஊறும்; கர்மா பண்ணுகிறபோது அதில் மனஸாரப் பிடிப்பும் இருக்கும்.

இப்போது நடக்கும் கல்யாணங்களில் ஒரு மாஸத்துக்கு முன்கூட அவகாசம் இருப்பதில்லை. யார் Band வைக்கலாம், யார் டான்ஸ் வைக்கலாம், எப்படி ஊர்வலம் விடலாம் என்று ஏற்பாடு பண்ணுவதற்கே காலம் போதமாட்டேன் என்கிறது! எதுதான் இத்தனைக்கும் உயிர்நிலையோ, எதை வைத்துதான் கல்யாணமோ அந்த மந்திரங்களையும், அவற்றைச் சொல்லி நடத்தி வைக்கும் வைதிகர்களையுந்தான் கடைசி பக்ஷமாக வைத்திருக்கிறோம்! யாருக்காவது சிரத்தை ஏற்பட்டு, அவகாசமும் கிடைத்து, தான் செய்யவேண்டிய கர்மாக்களின் மந்த்ரார்த்தங்களை தெரிந்து கொள்ளப் பிரியப்பட்டால், அதைச் சொல்லி விளக்குவதற்குச் சிலரையாவது தயார்ப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில்தான் வேதபாஷ்யம் சொல்லிக் கொடுத்து பரீக்ஷைகள் நடத்துகிறோம்.

விவாஹம், உபநயனம் என்று ஒரு கர்மாவின் பெயரைச் சொல்லிப் பத்திரிகை போட்டு அதற்காக ஊர் கூட்டி,

பந்துக்களை வரவழைத்து, ஆயிரக்கணக்கில் செலவும் செய்கிறோம். ஆனால் அந்த கர்மாவுக்கு உரிய கவனத்தைச் செலுத்துவதில்லை! அதன் அர்த்தம் என்ன, தாத்பரியம் என்ன என்பதையே தெரிந்துகொள்ள முயலுவதில்லை என்றால் அது சரியேயில்லை.

அர்த்தம் தெரிந்து செய்தால்தான் பலன் ஜாஸ்தி என்று சொல்லியிருக்கிறது. கர்மாவை விட்டுவிடுகிற துணிச்சல் வராமல் இன்னமும் பண்ணிக் கொண்டிருக்கிறவர்கள், அர்த்தத்துக்கான முக்யத்வத்தைக் கொடுக்கத்தான் வேண்டும். கர்மாவை விட்டுவிட்டால் தப்பு என்று ஏதோ ஒரு பயம் இருப்பதால்தானே, இன்னமும் செய்து வருகிறோம்? அதே மாதிரி, இதற்கு அர்த்தம் தெரியாமல் செய்தாலும் தப்பு என்ற பயம் ஏற்பட்டு, பண்டிதர் மூலமாக அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். கர்மாவை செய்கிறவர்கள் அர்த்தம் தெரிந்து செய்தாலே அதன் பலனுக்குள்ள வீரியமும் ஜாஸ்தியாகிறது. யதேவ வித்யயா கரோதி....ததேவ வீர்யவத்தரம் பவதி-- என்று [சாந்தோக்ய உபநிஷத்தில்: I.1.10] சொல்லியிருப்பதை நம்ப வேண்டும்.

கர்த்தாவாக ஒருவன்தான் இந்த மந்திரத்தைச் சொல்லிக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறான்; அல்லது பூணூல் போட்டுக் கொள்கிறான்.பாக்கி வந்திருக்கிறவர்கள் விருந்து, பேச்சுக் கச்சேரி, டான்ஸ் கச்சேரி, மேளம் என்று இவற்றிலேயே ஸந்தோஷப்பட்டுவிட்டுப் போய்விடலாமா? கூடாது. நம் எல்லாருடைய உயர்ந்த மரியாதைக்கு உரிய வேத மந்திரங்கள் சொல்லப்படும்போது அதைக் கவனித்து கௌவரம் செய்ய வேண்டும். அதுவே மற்றவர்களுக்கும்

சிரேயஸைத் தரும். மற்றவர்களும் அர்த்தத்தைத் தெரிந்து கொண்டு விட்டால், கர்த்தாவாக இல்லாமல் வெறுமே கேட்டால்கூட, அவர்களுக்கும் புண்ணியம் ஏற்படும்.

அச்வமேத யாகம் என்ற ஒன்று இருக்கிறதல்லவா? அதைக் கர்த்தாவாக, யஜமானனாக இருந்து கொண்டு செய்கிற யோக்யதையும், அதிகாரமும் எல்லா ராஜாக்களையும் ஜயித்து அடக்கிய ஸார்வபௌமனான ஒரே ஒரு மஹாராஜாவுக்குத் தான் உண்டு. இதனால் எந்த ஒரு காலத்தை எடுத்துக் கொண்டாலும், அப்போது லோகம் பூராவிலும் ஒரு ராஜாதான் இந்த யாகம் செய்யக்கூடிய அதிகாரியாகிறான். இந்த அச்வமேத யாகத்துக்கோ வேறெந்த கர்மாவுக்கும் இல்லாத அளவுக்கு ஏராளமான புண்ய பலன்களை சொல்லியிருக்கிறது. "ஒரு தலைமுறையை எடுத்துக் கொண்டால், லோகம் முழுதிலும் ஒருத்தனுக்குத்தான் இத்தனை புண்ணியமும் சேரும்படி இருக்கிறதே! வேதத்தில் இப்படி ரொம்பவும் பக்ஷபாதம் செய்து மற்ற அத்தனை பேருக்கும் இந்தப் புண்ணியம் இல்லாமல் செய்திருக்கிறதே! இத்தனை பலம், படை வசதி, திரவிய வசதி இருக்கிறவனுக்குத்தான் உயர்ந்த புண்யங்கள் அத்தனையும் [கிடைக்கும்] என்றால், அவனை விட நல்ல சீலங்களோடு இருக்கிற மற்றவர்களுக்கு வஞ்சனை செய்த மாதிரியல்லவா இருக்கிறது? வேதம் எங்கேயாவது இப்படிச் செய்யுமா?" என்று தோன்றுகிறது.

வாஸ்தவத்தில் வேதம் இப்படிப் பக்ஷபாதம் பண்ணவே இல்லை. வேத கர்மா ஒன்று பண்ணினால், கர்த்தாவுக்கு விசேஷ பலன் உண்டாகிற போதே, லோகம் முழுதிற்கும்

அது நல்லதைப் பண்ணத்தான் செய்யும். இங்கே இருட்டாக இருக்கிறது என்று நான் ஒரு லைட் போட்டுக் கொண்டால் அது எனக்கு மட்டுமா வெளிச்சம் கொடுக்கிறது? இன்னம் பத்துப் பேருக்கும் கொடுக்கிறதோ இல்லையோ?

கர்த்தாவுக்கு விசேஷமான பலன், மற்றவர்களைவிடக் கூடுதலான பலன் என்று வேண்டுமானால் சொல்லலாம். மற்றவர்கள்கூட அவன் மாதிரிக் கூடுதலான பலனை--அவனுக்கு ஸமமான பெரிய பலனை--பெருவதற்கு ஒரு வழியும் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது; வேதத்திலேயே சொல்லியிருக்கிறது. ஒரு ராஜா அச்வமேதம் பண்ணுகிறான் என்றால், மற்றவர்கள் அப்படிச் செய்ய முடியாவிட்டாலும், எப்படி செய்வது என்ற கிரமத்தை தெரிந்து கொள்ளலாம் அல்லவா? அந்த மந்திரங்களைத் தாங்களும் கவனிக்கலாமல்லவா? அர்த்தத்தை தெரிந்து கொள்ளலாமல்லவா? இப்படியெல்லாம் செய்துவிட்டால் மற்றவர்களுக்கும் யாகம் செய்த பூர்ண பலனே உண்டாகி விடுகிறதாம். இப்படி வேதத்தில் அச்வ மேத ப்ரகரணத்திலேயே சொல்லியிருக்கிறது.

இதே ரீதியில் கல்யாணமாகட்டும், அபர காரியமாகட்டும் [ஈமச்சடங்காகட்டும்] எதிலும் கலந்து கொள்கிறவர்களும் அர்த்த ஞானத்தோடு மந்திரங்களை கவனித்து வந்தாலே, அவர்களுக்கும் மஹத்தான புண்ணியம் கிடைக்கும்.

என் கடமை

வேதம்

என் கடமை

வேதத்தை ரக்ஷிக்க வேண்டியதுதான் உங்களுடைய பெரிய கடமை என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பதுதான் என் கடமை. நீங்கள் நான் சொல்வதைக் கேட்டாலும், கேட்காவிட்டாலும், உங்களை காரியம் பண்ணும்படி செய்ய எனக்கு சக்தியில்லாவிட்டாலும், "இதுதான் உங்கள் காரியம்; இதுதான் உங்கள் கடமை" என்று வாய் வார்த்தையாகச் சொல்லவாவது எனக்குச் சக்தி இருக்கிற மட்டும் ஓயாமல் ஒழியாமல், நச்சு நச்சென்று, இதை நான் சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டியதுதான். வேதத்துக்காகத்தான் ஆசார்யாள் இந்த மடத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அவர் பெயரை வைத்துக்கொண்டு உங்களைப் பாக்கி எப்படியெல்லாம் நான் ஏமாற்றினாலும், இந்த வேதங்களைக் காப்பாற்றிக் கொடுக்கும்படியான பொறுப்பையாவது 'ஸின்ஸிய'ராக பண்ணிவிட்டால், அது ஓரளவு தோஷ நிவிருத்தியாகும். இதையும் பண்ணாவிட்டால் மஹா பெரிய தோஷமாகிவிடும். அதனால்தான் அலுப்புத் தட்டினாலும் ஸரி என்று, திரும்பத் திரும்ப வேத ரக்ஷணத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

வெறுமே சொல்வதோடு இல்லாமல், மேலே சொன்ன மாதிரி ஸ்தூலமாகப் பல திட்டங்களும் போட்டு நடத்தி வருகிறது. இதற்காக உங்களிடம் யாசகம் பண்ணுகிறேன். 'யாசகம்" என்று இல்லாவிட்டால், "ஆக்ஞை" என்று

வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். எப்படியோ ஓரப்படி, என் காரியம் நடந்தாக வேண்டும்!

வேதம் ஓதிய வேதியர்க் கோர் மழை

நீதி மன்னர் நெறியினர்க் கோர் மழை

மாதர் கற்புடை மங்கயர்க் கோர் மழை

மாதம் மூன்று மழை எனப் பெய்யுமே

என்று சொல்லியிருக்கிறது. மாதம் மும்மாரி பெய்தால்தான் எப்போதும் பூமி குளிர்ந்து, பயிர் பச்சை ஸம்ருத்தி (வளம்) இருக்கும். பிராமணர் முறைப்படி வேத அத்யயனம் பண்ணினால் அதற்காக மாஸம் ஒரு மழையும், ராஜா நீதி தவறாமல் ராஜ்யபாரம் பண்ணினால் அதற்காக ஒன்றும், ஸ்திரீகள் பதிவ்ரதா தர்மம் தப்பாமலிருந்தால் அதற்காக ஒன்றுமாக, இப்படி மும்மாரி பொழிகிறது என்று சொல்லியிருக்கிறது.

இந்த மூன்றில் "நீதி மன்னர் நெறி" – அதாவது ராஜாங்கத்தார் நீதி தவறாமல் ராஜ்யம் பாலனம் பண்ணும் விஷயம் – அடியோடு என் கையிலில்லாதது. ஆட்சி விஷயத்தில் (ஸந்நியாஸிகளான) எங்களுக்கு ஸம்பந்தம் இல்லை. ஆனபடியால் இதிலே எனக்குப் பொறுப்பு இல்லை.

ஆனால் பாக்கி இரண்டிலும், தர்மத்தை ரக்ஷித்துத் தர வேண்டிய ஒரு மடத்தின் சாமியார் என்கிற முறையில், எனக்கு நிரம்பப் பொறுப்பு இருப்பதாகவே நினைத்துக் கொண்டிருக்கிறேன். மாதர் கற்பை மதத் தலைவர் என்ன

காப்பாற்றுவது என்றால், இப்போது ஸ்தீரீ தர்மத்துக்கு விரோதமான பல போக்குகள் வந்துவிட்டதால், "குரு" பட்டம் சூட்டிக்கொண்டிருக்கிற நான்தான் அந்தத் தப்புக்களை எடுத்துச் சொல்லிப் பெண்களுடைய நடத்தைக்குக் கெடுதல் வராமல் எச்சரிக்க வேண்டியிருக்கிறது. பால்ய விவாஹ காலத்தில் பெண்கள் தப்பிப் போவதற்கு ரொம்பவும் குறைச்சலாகதான் chance இருந்தது. ஒரு பெண்ணுக்குத் தாம்பத்ய எண்ணம் வருகிறபோதே அவளுக்குப் பதி என்ற ஒருத்தன் இருந்துவிட்டதால், அவனிடம் மட்டுமே அவளுடைய மனஸ் போயிற்று. இந்த எண்ணம் ஏற்பட்ட வயஸுக்கப்புறமும் கலியாணமாகாமல் இருப்பது என்று ஏற்பட்டால், அப்போது மனஸ் பல தினுஸாகப் போகிறது; சித்த விகாரம் ஏற்படுகிறது. ஆனால் இப்படி சாரதாச் சட்டத்திலிருந்து ராஜாங்க ரீதியாகவே ஏற்பட்டு விட்டதால், எங்கள் கையைக் கட்டி போட்டுவிட்ட மாதிரிதான் ஆகிவிட்டது. ஆனாலும் நினைத்து நினைத்து எத்தனையோ சட்டங்களை மாற்றுகிற மாதிரி, இதையும் மாற்றுவதற்கு அவர்களை (ஸர்க்காரை)த் தூண்டிவிடுகிற ரீதியில் public opinion-ஐ create பண்ண [வெகு ஜன அபிப்ராயத்தை உண்டு பண்ணி] முடியுமா என்பதால்தான், இந்த விஷயத்தில் நான் முழுக்கக் கை கழுவாமல் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால் பெண்களுடைய மனோபாவம், பெண்ணைப் பெற்றவர்களுடைய மனோபாவம் எல்லாமே இப்போது விபரீதமாக மாறி, கல்யாணத்துக்கு முயற்சி பண்ணாமல் காலேஜில் co-education முறையில் [ஆண் மாணவர்களோடு கூட்டுப் படிப்பு] படிப்பது, அப்புறம் புருஷர்களோடு

உத்யோகம் பண்ணுவது என்றெல்லாம் ஆகி வருகிறதைப் பார்க்கிற போது, உள்ளுக்குள்ளே ரத்தக் கண்ணீர் விட்டுக் கொள்வதைத் தவிர, ஏதாவது பண்ணமுடியுமா என்று நம்பிக்கை போய்க் கொண்டுதான் இருக்கிறது.

எல்லாவற்றுக்கும் முதலில் சொன்னபடி, வேதியர் வேதம் ஓதுவதற்கானதைப் பண்ணி விட்டாலே ராஜதண்டம், பாதிவ்ரத்ய தர்மம் [கற்பு நெறி] இந்த இரண்டுங்கூடத் தன்னால் ஸரியாகிவிடும் என்ற நம்பிக்கையில்தான், வேத ரக்ஷணத்தில் தீவிரமாக முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறேன்.

இதற்கு உங்கள் பசங்களைக் கொடுக்க வேண்டும். பணத்தையும் கொடுக்கவேண்டும்.பணமில்லாத குடும்பத்துப் பசங்கள் வேதவித்யைக்கு வருவதற்காக அவர்களுக்குத் தர வேண்டிய நிதி உதவியானது உங்களில் பணமுள்ளவர்களிடமிருந்துதான் வரவேண்டும். கற்றுக் கொடுக்கும் வாத்தியார் சம்பளம், புஸ்தகச் செலவு, பாடசாலைப் பராமரிப்பு எல்லாவற்றுக்கும் பணம் வேண்டும். இதற்காக ரொம்பவும் ஸ்வல்ப அளவிலேயே ஆரம்பித்து காணிக்கைத் திட்டம் வைத்திருக்கிறோம். மாஸம் ஒரே ஒரு ருபாய்* செலுத்தினால் போதும். அதற்குப் பிரதியாக, நீங்கள் வேதமாதாவுக்குச் செய்கிற கைங்கரியத்தின் புண்ணிய பலனோடுகூட, இங்கே மடத்தில் நடக்கிற சந்திர மௌளீச்வர பூஜாப் பிரஸாதம் (விபூதி, குங்குமம், மந்திராக்ஷதை) உங்களுக்குத் தபாலில் அனுப்பப்படும். உங்கள் நக்ஷத்திரத்தைத் தெரிவித்துப் பணம் அனுப்பினீர்களானால், மாஸம்தோறும் உங்கள் நக்ஷத்திரத்திலேயே பிரஸாதம் அனுப்பப்படும். அதனால்

இதற்கு 'நக்ஷத்ரக் காணிக்கை' என்றே பெயர் வைத்திருக்கிறது.

திருப்பதி வேங்கடாசலபதி பேரைச் சொல்லி chain letter என்று போடுகிறார்களே – "இந்த லெட்டரைக் காப்பி பண்ணி இத்தனை பேருக்கு அனுப்பாவிட்டால் கண்போய்விடும், கால் போய்விடும்" என்று மிரட்டி எழுதுகிறார்களே, வேங்கட ரமண ஸ்வாமியின் பேருக்கு பயந்து கொண்டு, அநேகம் பேர் காப்பி பண்ணி அனுப்புகிறார்களே – அந்த மாதிரி ஏதாவது மிரட்டி உருட்டியாவது இந்த வேத தர்மத்துக்கு வசூல் பண்ண முடியுமா என்று எனக்கு இருக்கிறது!

அதிகம் வேண்டாம்! மாஸத்துக்குத் தலைக்கு ஒரு ரூபாய் தான் கேட்கிறேன். பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ ஸர்கார் வரி போட்டு விட்டால் கொடுக்கிறீர்களா இல்லையா? அப்படி இதை நான் போட்டிருக்கிற tax என்று வைத்துக் கொள்ளுங்கள். நான் நடத்துகிற கடுகத்தனை ஸர்காருக்குத் தர வேண்டிய வரி இது. இதற்காக பீச்சு, சினிமா இத்யாதியில் துளி குறைத்துக் கொண்டால் போதும். உங்கள் கடமை, என் கடமை இரண்டிலும் ஒரு பங்காவது பூர்த்தியானதாக ஆகும். *தற்போதைய சந்தா விவரமும் அதனை அனுப்பிவைக்க வேண்டிய வேத ரக்ஷண நிதி டிரஸ்டின் முகவரியும், "ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கர மடம், காஞ்சீபுரம்" என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

[முடிவுரை]

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வேதம்

முடிவுரை

வேதத்தின் மஹிமை எல்லையில்லாதது. லௌகிகத்தில் அதனுடைய பெருமை ஒரு விதத்தில் புலப்படுகிறது; அதற்கு ஈடும் இல்லை இணையும் இல்லை என்று காட்டுகிறது. அதைச் சொல்லி முடிக்கிறேன்.

உலகத்தில் உள்ள க்ஷேத்திரங்களுள் காசிதான் அதிக மஹிமையுடையது என்று நினைக்கப்படுகிறது. வேறு க்ஷேத்திரங்களைப் பற்றி ரொம்பவும் உயர்த்திச் சொல்லும் பொழுது அவை காசிக்கு ஸமானமானவை என்றே சொல்கிறார்கள். அதனாலேயே காசியினுடைய மஹிமை தெரிகிறது! தக்ஷிண தேசத்திலுள்ள ஒரு ஸ்தலத்தை தக்ஷிண காசி என்று சொல்வார்கள். உத்தரகாசி என்று ஹிமாசலத்தில் ஒரு ஸ்தலத்தைச் சொல்கிறார்கள். விருத்த காசி என்று விருத்தாசலத்திற்குப் பெயர். சித்தூர் ஜில்லாவிலுள்ள புக்கே என்னும் ஊரும் ஒரு காசி என்று சொல்லப்படுகிறது. தென்காசி என்றே ஓர் ஊர் திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கிறது. மற்ற ஸ்தலங்களை 'இது காசி க்ஷேத்திரத்திற்கு ஸமமானது' என்கிறார்கள். கும்பகோணத்தைப் பற்றியோ 'இது காசியிலும் வீசம் அதிகம்' என்று சொல்கிறார்கள். கும்பகோணம் ஸ்தலத்தைப் பற்றி ஒரு சுலோகம் உண்டு.

அந்ய க்ஷேத்ரே க்ருதம் பாபம் புண்ய க்ஷேத்ரே விநச்யதி ||

புண்ய க்ஷேத்ரே க்ருதம் பாபம் வாராணஸ்யாம் விநச்யதி ||

வாராணஸ்யாம் க்ருதம் பாபம் கும்பகோணே விநச்யதி ||

கும்பகோணே க்ருதம் பாபம் கும்பகோணே விநச்யதி ||

என்பது அந்த ச்லோகம். "ஸாதாரணமான ஓர் ஊரில் பண்ணும் பாபம் புண்ணிய க்ஷேத்ரத்துக்குப் போனால் போய்விடும். புண்ணிய க்ஷேத்ரங்களிலேயே பாபம் பண்ணினால்? அந்தப் பாபம் வாராணஸி என்ற காசிக்குப் போனால் போய்விடும். காசியிலும் பாபம் செய்தால்? அது கும்பகோணத்துக்குப் போனால் நசித்து விடும். ஸரி, அந்தக் கும்பகோணத்திலேயே பாபம் பண்ணிவிட்டால்? அதுவும் கும்பகோணத்திலேயே அழிந்து போய்விடும்" என்று அர்த்தம். காசியை விடக் கும்பகோணம் அதிக மஹிமையுடையது எனபது இதன் கருத்து.

இவ்வாறு காசியைவிட உத்கிருஷ்டமானது, காசிக்கு ஸமமானது என்று சொல்லுவதனாலேயே காசிக்குத்தான் தனி மஹிமை இருக்கிறதென்று தெரிகிறது! அதை உபமானமாகச் சொல்லிச் சொல்லி, அதற்கு இன்னும் கௌரவத்தை உண்டாக்கி விடுகிறாரகள். ஒரு பெரியவர் காசி க்ஷேத்திரத்தைப் பற்றி ஒரு ச்லோகம் சொல்லியிருக்கிறார். அது க்ஷேத்ராணாம் உத்தமானாம் அபி யத் உபமயா கா (அ)பிலோகே ப்ரசஸ்தி: என்று ஆரம்பிக்கிறது. "உத்தம க்ஷேத்திரங்களுக்கும் எதை உபமானமாக சொன்னால் பிரசித்தி வருகிறதோ அந்தக் காசி" என்று அர்த்தம்.

இதேபோல் எந்தப் புண்ய தீர்த்தத்தை உயர்த்திச் சொல்வதானாலும், 'இது கங்கைக்கு ஸமானம்" அல்லது கங்கையை விடவும் உசத்தி என்கிற வழக்கம் உள்ளது.

இதனால் க்ஷேத்ரங்களில் பரம உத்தமமானது காசி; தீர்த்தங்களில் பரம உத்தமமானது கங்கை என்று தானே ஏற்படுகிறது?

இதைப் போல வேதத்திற்கு கௌரவம் என்னவெனில் எந்த உயர்ந்த நூலானாலும் "இது வேதத்திற்கு ஸமானம்" என்று சொல்வதுதான்.

ராமாயணம் மிகவும் பிரசித்தமானது. அந்தக் கதையில் பல வகையானவை இருக்கின்றன. எந்த இந்திய பாஷையிலும் உயர்ந்ததாகவுள்ள நாடகம், கீர்த்தனம், காவியம் எல்லாம் ராம கதையே. யாரை எடுத்தாலும் ராமாயணத்தைப் பற்றிச் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட ராமாயணத்தின் கௌரவத்தைச் சொல்லவந்தபொழுது அது வேதம் என்றே சிறப்பித்துச் சொல்லப்படுகிறது:

வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மனா|

"ப்ரசேதஸின் புத்ரரான வால்மீகியின் மூலமாக வேதமே ஸாக்ஷாத் ராமாயணமாக உருவெடுத்தது" என்று பொருள்.

மஹாபாரதத்துக்கும் வேதம் என்னும் பெயர் சொல்லப்படுகிறது. நாலு வேதங்களுக்குப் பிறகு இதை ஐந்தாவது வேதமாக வைத்து பஞ்சமோ வேத: என்று கொண்டாடுகிறார்கள்.

சடகோபர் என்றும் மாறன் என்றும் பெயர் பெற்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழியை வைஷ்ணவர்கள் தலைக்கு மேல் வைத்துக் கொண்டாடுவார்கள். "வேதம் தமிழ் செய்தான் மாறன் சடகோபன்" என்றே அதையும் சொல்லுகிறார்கள். அதனால் அதுவும் வேதம் என்றே எண்ணப்படுவது தெரிகிறது.

தமிழில் மிகவும் பிரசித்தமான நீதி சாஸ்திரமாகிய குறளும்கூடத் தமிழ்வேதம் எண்றுதானே சொல்லப்படுகிறது?

திருவள்ளுவர் அந்தத் திருக்குறளை செய்தார். அந்தக் காலத்தில் மதுரையில் கடைச் சங்கம் இருந்தது. அங்கே ஸுந்தரேச்வரரால் கொடுக்கப்பட்ட பலகை ஒன்று இருந்தது. அதன்மேல் யோக்கியதை இருந்தவர் உட்காரலாம். யோக்கியதை இல்லாவிட்டால் தள்ளிவிடும். அது எப்படி? இதை நம்மால் நம்ப முடியவில்லை. ஆனால் ஒரு மெஷினில் காசு போட்டால் அது டிக்கட்டை வெளியே தள்ளுகிறது என்பதை நம்புகிறோம்!

திருவள்ளுவர் தாம் செய்த குறளை எடுத்துக் கொண்டு அந்தச் சங்கத்திற்குப் போனார்.

பொதுவாக வித்வான்கள் மற்றவர்களை அலக்ஷயம் பண்ணுவார்கள். ஏகமாகப் பரிக்ஷைகள் வைப்பார்கள். அப்படிப் பண்ணுவதனால், அசடாயிருப்பவர்கள் 'நானும் படித்தவன்' என்று சொல்லிக் கொள்ள முடியாது. கெட்ட சரக்கை எழுதிப் பிரசாரம் பண்ண முடியாது. ஆகையால் அப்படிப் பண்ணுவது ஒரு வகையில் நல்லதையே

உண்டாக்குகிறது. ஆனால் அந்த அலக்ஷ்ய புத்தி அதிகமாகப் போகக்கூடாது. அது தப்பு.

திருவள்ளுவர் கொண்டுபோன சுவடியை அந்தச் சங்கப்பலகையில் வைக்கச் சொன்னார்கள். "இந்தச் சுவடிக்கு சங்கப் பலகை இடம் கொடுத்தால்தான் இதை இலக்கியத் தரமுள்ளது என்று ஒப்புக் கொள்ள முடியும்" என்று மற்றப் புலவர்கள் சொல்லிவிட்டார்கள். திருவள்ளுவரும் "ஆஹா, அப்படியே!" என்று அந்தச் சின்னச் சுவடியை பலகையில் வைத்தார். அது அந்த சுவடிக்கு மட்டும் இடம் கொடுத்து, மற்றவர்களையெல்லாம் கீழே தள்ளிவிட்டது.

அப்போது ஏனைய புலவர்கள் எல்லோரும் குறளின் பெருமையை உணர்ந்து, ஒவ்வொருவரும் ஒவ்வொரு செய்யுளால் புகழ்ந்தார்கள். அவர்களுக்குள்ளே ஒருவர்,

ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது

சீரிய தென்றொன்றைச் செப்பரிதால்--ஆரியம்

வேத முடைத்து; தமிழ்த்திரு வள்ளுவனார்

ஓதுகுறட் பாவு டைத்து

(திருவள்ளுவ மாலை)
என்று சொல்லி இருக்கிறார். "ஸம்ஸ்கிருதம் பெரியதா, தமிழ் பெரியதா என்றுகேட்டால், ஸம்ஸ்கிருதம்தான் என்று நேற்று வரையிலும் சொல்லியிருக்கலாம். இன்றிலிருந்து அப்படிச் சொல்லக் கூடாது. ஸம்ஸ்கிருதத்திற்கு உயர்வு அதில் வேதம் இருக்கிறது என்பதே. அதற்கு சமானமாகத்

தமிழில் இன்றைக்குக் குறள் வந்துவிட்டதே! அது எப்படி உயர்வு உடையதாகும்?" என்று அவர் சொல்கிறார். இதனால் குறளானது வேத சமானம் என்பது தாத்பரியம். வேதத்தால் தான் ஸம்ஸ்கிருதத்துக்கே பெருமை, வேதம் எந்த பாஷையில் இருக்கிறதோ அந்த பாஷைதான் எல்லாவற்றிலும் உயர்ந்தது என்ற கருத்துக்களும் இங்கே வெளிப்படுகின்றன.

தேவாரமும் திருவாசகமும் தமிழ் வேதம் என்பது சைவர்களுக்குப் பிரசித்தம்.

இவை நம் மதத்துக்குள் அகப்பட்டவை.

கிறிஸ்தவர்கள் பைபிள் புஸ்தகம் கொண்டு வந்தார்கள். அதற்கும் 'சத்திய வேதம்' என்று பெயரிட்டார்கள்.

இப்படி உலகத்திலிருக்கும் வியவஹாரத்தைப் பார்த்தால் வேதத்திற்கு ஒரு தனி கௌரவம் இருக்கிறது. ஒரு பிரகாசமான கிரந்தத்தால் மற்றவைகளை வியவஹரிப்பது பிரசித்தமான் உலக வழக்கம் என்றால், நம் புஸ்தகங்களிலெல்லாம் இப்படிப்பட்ட முதன்மை ஸ்தானம் வகிப்பது வேதமாகவே இருக்கிறது.

இப்படி காலம் சொல்ல முடியாமல் நம் தேசம் முழுவதிலும் உறைத்து உறைத்து நம்முடைய மஹத்தான கலாசாரத்துக்கு ஜீவ சத்தாக ஊறிபோயிருக்கிற வேத நிதியை, நம்முடைய அஜாக்ரதையால் "இனிமேல் இல்லை" என்று ஆகும்படியாகச் செய்துவிடக் கூடாது. ஹிந்துவாகப்

பிறந்த ஒவ்வொருத்தனுக்கும் இதைவிடப் பெரிய பொறுப்பு எதுவும் இல்லை.

வேத சப்தம் பிரகாசிக்க வேண்டும்; வேத அர்த்தம் பிரசாரமாக வேண்டும்; வைதிக அநுஷ்டானங்கள் புது ஜீவனைப் பெற்றுத் திகழ வேண்டும். நம்முடைய ஒரு தேசத்திலே இப்படி ஏற்பட்டுவிட்டால் போதும். ஒருத்தனுடைய ஹ்ருதயம் பலமாக இருந்து விட்டால் மற்ற அவயவங்களுக்கு எத்தனை வியாதி வந்தாலும் அவன் பிழைத்துக் கொள்கிற மாதிரி, லோகத்திலுள்ள அத்தனை தேசங்களுமே நல்ல வழிக்கு வந்து, ஸமஸ்த ஜனங்களும் க்ஷேமமாக இருப்பார்கள். வேத தர்மம் பிரார்த்தனை பண்ணுவதும் இதைத்தான்.

லோகா: ஸமஸ்தா: ஸுகிநோ பவந்து!

வையகமும் துயர் தீர்கவே!

ஷடங்கங்கள்

ஷடங்கங்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

ஷடங்கங்கள்

ஹிந்து மதத்தின் ஆதாரப் புஸ்தகங்களில், வேதத்துக்கு அடுத்தபடியாக வருவது வேதத்தின் ஆறு அங்கங்கள்.

வேதத்தை ஒரு மூர்த்தியாகச் சொல்லும் போது அந்த வேத புருஷனுக்குப் பல அங்கங்கள் இருக்கின்றன. வாய், மூக்கு, கண், காது, கை, பாதம், என்ற ஆறு அங்கங்கள் இருக்கின்றன. இவற்றை "ஷட் (ஆறு) அங்கம்", "ஷடங்கம்"

என்று சொல்லுவார்கள். சடங்கு என்று சொல்லுவது அந்த வார்த்தையிலிருந்து மருவி வந்ததுதான்.

"வேதமோ (டு) ஆறு அங்கம் ஆயினான்" என்று தேவாரம் சொல்லும் ஆறு அங்கம் ஷடங்கமே.
[கல்வெட்டும் செப்பேடும்]

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

ஷடங்கங்கள்

கல்வெட்டும் செப்பேடும்

பழைய காலத்தில் தர்மசாஸனங்களெல்லாம் கோயில் சுவர்களில் கல்லில் வெட்டப்பட்டிருக்கின்றன. தர்மங்களைப் பதிவு செய்யும் ஸப் ரிஜிஸ்திரார் ஆபீஸ் பழைய நாளில் கோயில்தான்! திருவாங்கூர் ஸம்ஸ்தானத்து ராஜ்யாதிகாரிகளில் திருமந்திர ஒலை என்பவன் ஒர் உத்தியோகஸ்தன். ஸமீப காலம் வரையில் அந்த ராஜயத்தில் இந்த உத்யோகம் இருந்தது. பூர்வத்தில் தமிழ்நாட்டில் எல்லா அரசர்களிடமும் இப்படியரு அதிகாரி இருந்தான். இந்தக் காலத்தில் 'பிரைவேட் ஸெகரெட்டரி' என்று சொல்கிறார்களே, அந்த மாதிரி, அவன் அரசன் எது சொன்னாலும் அதை ஒலையில் எழுதிக் கொள்ளவேண்டும். பின்பு அதை யார் யாருக்கு அனுப்ப வேண்டுமோ அவர்களுக்கு அனுப்ப வேண்டும். அந்தக் காலத்தில் யார் எந்த தர்மம் பண்ணினாலும், அதை மஹாராஜாவுக்குத் தெரிவுக்க வேண்டும். அவன் அதை ஒத்துக் கொண்டு ஆக்ஞை பண்ணுவான். அந்த ஆக்ஞையைத் திருமந்திர ஒலைக்காரன் எழுதி

அனுப்புவான். அப்படி எழுதிக் கடைசியில், "கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளுவதாகவும்" என்று முடிப்பான். அந்த ஆக்ஞை எந்த ஊரில் தர்மம் செய்யப்படுகிறதோ அந்த ஊர் ஸபையாருக்கு அனுப்பப்படும். அவர்கள் அதைக் கோயில் சுவரில் வெட்டச் செய்வார்கள். இதுதான் 'கல்லில் வெட்டிக் கொள்வது' என்பது. அநேகக் கோயில்களிலுள்ள சிலாசாஸனங்கள் இவைதான்.

'செம்பில் வெட்டிக் கொள்வது' என்பது தாமிர சாஸனமாக செப்பேடுகளில் எழுதி, ஒரு ஏட்டுக்கு மேல் போனால் ஒட்டை பண்ணி வளையம் போட்டுக் கோத்து வைப்பதாகும். இதற்கும் உள்ளூர் ஸபையார் அங்கீகாரம் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட செப்பேடுகளும் கோவில்களிலேயே பாதுகாப்பாக பூமிக்கு அடியிலுள்ள "க்ஷேமம்" என்கிற (க்ஷேமம் என்றால் பாதுகாப்பு என்றுதானே அர்த்தம்?) இடத்தில் வைக்கப்படும். தேச வாழ்வே ஈச்வரன் கையில் ஒப்பிக்கப்பட்ட, ஆலயம் என்பதே ஒரு நாட்டின் உயிர்நிலையாகக் கருதப்பட்டு வந்ததால், இப்படி அதுவே ரிஜிஸ்திரார் ஆபீஸ், எபிக்ராஃபி ஆபீஸ் எல்லாமாக இருந்தது! அந்த விஷயம் இருக்கட்டும்.

ஊர் தோறும் இருந்த ஸபை விஷயத்துக்கு வருகிறேன்.

ஒவ்வொரு ஊரிலும் பிராம்மணர்கள் அங்கம் வஹிப்பதாக இந்த "ஸபை" என்பது இருந்தது. அதில் வேதமும் மந்திரப் பிராம்மணமும் தெரிந்தவன் அங்கத்தினனாகலாம். அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகள் உண்டு.

இன்ன இன்ன குற்றம் செய்தவர்களும் அவர்களுடைய பந்துக்களும் ஸபைக்கு அங்கத்தினர் ஆகக்கூடாது என்ற நியதியும் உண்டு. அங்கத்தினராவதற்குப் போட்டி போடும் ஒவ்வொருவர் பெயரையும் ஓலையில் எழுதிக் குடத்தில் போட்டு ஒரு குழந்தையைக் கொண்டு எடுக்கச் சொல்லுவது வழக்கம். அப்படி எடுத்த ஓலையில் உள்ள பெயருடையவர் ஸபைக்கு அங்கத்தினராவர். உத்தரமேரூர் என்னும் ஊரில் உள்ள சிலாசாஸனத்தில் இந்த விஷயங்கள் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

அந்த ஸபையினருக்குள் பல பிரிவுகள் உண்டு. நீருக்காக ஒரு பிரிவு, வரி போட ஒரு பிரிவு முதலிய பல பிரிவுகள் உண்டு. தர்மத்துக்கு நிலம் கொடுத்தாலும், பணம் கொடுத்தாலும், மாடு ஆடுகளைக் கோயில்களுக்கு விட்டாலும், தீபம் போடுவதற்காக ஏற்பாடு செய்தாலும் இப்படி எதுவானாலும் அந்த ஸபையினர் மூலமாக விடவேண்டும். அவர்கள் அதை அங்கீகரிப்பார்கள். அந்த தர்மசாஸனத்தில் 'இங்ஙனம் ஸபையோம்' என்று அவர்கள் கையெழுத்து போடுவார்கள். அப்படி உள்ள கையெழுத்துக்களால் பல அங்கத்தினருடைய பெயர்கள் இப்பொழுது தெரியவருகின்றன. அவற்றிலிருந்து 'ஷட்கர்மநிரதன்' என்றும் 'சடங்கவி' என்றும் பிராம்மணர்களுக்கு பட்டம் கொடுக்கப்பட்டிருந்தது என்று தெரியவருகிறது. 'சடங்கவி' என்பது 'ஷடங்கவித்' என்பதன் சிதைவாகும். ஷட்+அங்கம் +வித் – அதாவது "ஆறு அங்கங்களை அறிந்தவன்" என்பது அதன் அர்த்தம். அந்த பிராம்மணர்கள் ஆறு அங்கங்களையும் அறிந்தவர்கள் என்று தெரியவருகிறது. இப்படி நம் நாட்டின் சின்ன சின்ன

ஊர்களில் கூட எத்தனை ஷடங்கவித்துக்கள் இருந்திருக்கிறார்கள் என்று பழைய சாஸனங்களிலிருந்து தெரிகிறது. இவர்கள் முக்கியமாக வைதிக கர்மாநுஷ்டானம் செய்தவர்கள்தானே? இதனால் தான் வைதிக கர்மாக்களுக்கே "சடங்கு" என்று சொல்லும் வந்தது. ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுக்குப் பெண் கொடுக்க வந்தவருக்கு 'சடங்கவி சிவாசாரியார்' என்றே பெயர் சொல்லியிருக்கிறது.

ஆறு அங்கங்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

ஷடங்கங்கள்

ஆறு அங்கங்கள்

அந்த ஆறு அங்கங்களாவன: சிக்ஷை (எழுத்திலக்கணம்) , வியாகரணம் (சொல்லிலக்கணம்) , நிருக்தம் (நிகண்டு) ,

கல்பம் (கர்மாநுஷ்டான முறை) , சந்தஸ் (பாவிலக்கணம்) , ஜ்யோதிஷம் (சோதிடம்) என்பவை. பிராம்மணன் வேதங்களையும் இந்த ஆறு அங்கங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். முதலில் வேதாத்யயனம் செய்யவேண்டும். அந்த வேதத்திற்கு அர்த்தம் தெரிந்து கொள்ளும் பொருட்டு, இந்த ஆறு அங்கங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

வேத புருஷனுக்கு சிக்ஷை மூக்கு; வியாகரணம் முகம் அதாவது வாய் (வியாகரணப்படி ஒன்றைச் சொல்ல முடியாவிட்டால் உளற வேண்டும்) ; கல்பம் கை; நிருக்தம் காது; சந்தஸ் பாதம்; ஜ்யோதிஷம் கண்; ஜோஸ்யம் என்பது ஜ்யோதிஷத்தையே ஆகும்.

ஏன் இப்படி ஒவ்வொரு சாஸ்திரத்தை ஒவ்வொரு அவயமாகச் சொல்லியிருக்கிறது என்பதை அந்தந்த சாஸ்திரத்தைப் பற்றிச் சொல்லும்போது பார்க்கலாம்! பொருத்தமாகத்தான் இப்படி வைத்திருக்கிறார்கள் என்று தெரியும்.

முதலில் 'சிக்ஷை'யில் ஆரம்பிக்கலாம்.

சிக்ஷை: வேதத்தின் மூக்கு

மூச்சு அவயவம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சிக்ஷை: வேதத்தின் மூக்கு

மூச்சு அவயவம்

சிக்ஷை என்பது வேதத்தின் ஆறு அங்கங்களில் பிரதம அங்கம். வேதத்துக்கு நாசி (மூக்கு) ஸ்தானம் சிக்ஷை. மூக்கு என்பதால் மோந்து பார்க்கிற சின்ன உபயோகத்துக்காக ஏற்பட்டது என்று [அர்த்தம்] இல்லை. மூக்கினால்தானே மூச்சு விடுகிறோம்? நமக்குப் பிராணாதாரமான சுவாஸத்தை விடுவதற்கு நாசி உதவுகிறாற்போல், வேத மந்திரங்களுக்கு உயிர் மூச்சாக இருக்கிற அங்கம் சிக்ஷை.

வேத மந்திரங்களுக்கு உயிர் எதில் இருக்கிறது? மந்திரங்களின் ஒவ்வொரு எழுத்தையும், அதன் பரிமாணம் எப்படியிருக்க வேண்டுமோ அப்படிச் சரியாக உச்சரிக்க வேண்டும். 'அக்ஷர சுத்தம்' என்று இதற்குப் பெயர். அதோடுகூட ஒவ்வொரு எழுத்தையும் உயர்த்திச் சொல்வதா, தாழ்த்திச் சொல்வதா, ஸமனாகச் சொல்வதா என்ற பாகுபாடும் உண்டு. இந்த மூன்றையும் முறையே உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் என்று சொல்வார்கள். இவை இருக்க வேண்டியபடி இருந்தால் அதற்கே 'ஸ்வர சுத்தம்' என்று பெயர். இப்படியாக அக்ஷர சுத்தம் ஸ்வர சுத்தம் இரண்டும் இருந்தால்தான் மந்திரங்கள் பலன் தரும். மந்திரங்களில் அர்த்தத்தைவிடக் கூட இம்மாதிரி அவற்றின் ஒலி சரியாக இருக்க வேண்டியது தான் முக்கியம். அர்த்தம் தெரியாவிட்டாலுங்கூட, மந்திரங்களின் சப்த ரூபத்தை உள்ளபடி உச்சரித்து விட்டால் அவை பலன் தந்துவிடும். ஆகையால், மந்திர ஸமூஹமாகவே இருக்கப்பட்ட வேதத்துக்கு எது மூச்சு ஸ்தானம் என்றால் சப்தரூபம்தான்.

தேள்கொட்டு மந்திரம் இருக்கிறது. அதற்கு அர்த்தம் சொல்லக்கூடாது. அதில் உள்ள எழுத்துக்களுக்குத்தான் யோக்கியதை உண்டு. சில வகையான சப்தங்களுக்குச் சில சக்தி உண்டு. திவஸ மந்திரங்களை ஸம்ஸ்கிருதத்திலே ஏன் சொல்ல வேண்டும்? இங்கிலீஷிலாவது தமிழிலாவது சொன்னால் என்ன? அப்பொழுது சப்தம் வேறாய் விடுகிறது. அந்த சப்தந்தான் பிரதானம். பில்லி சூனியம் வைக்கிறவர்களுடைய பல்லைத் தட்டிவிட்டால் அவர்கள் செய்கிறது பலிக்காது. ஏனென்றால் பல் போனபின்பு உச்சாரணத்தில் தப்பு ஏற்படும். உச்சாரணம் வேதத்துக்குப் பிரதானம். அது ஸரியாக இருக்க என்ன செய்வது? அக்ஷரத்தை இப்படியிப்படி ஒலிக்க வேண்டுமென்று நன்றாக வரையறுத்து லக்ஷணம் சொல்ல வேண்டும்.

இப்படி அக்ஷர லக்ஷணத்தைச் சொல்வதுதான் சிக்ஷை என்பது. வேதாக்ஷரங்களின் லக்ஷணத்தை வரையறை செய்து கொடுப்பதே சிக்ஷா சாஸ்திரம்.

ஒரு பாஷையில் இப்படியிப்படி உச்சரிக்கவேண்டும் (pronounce பண்ணவேண்டும்) என்று முறைப்படுத்துகிறதை phonetics என்கிறார்கள். மற்ற பாஷைகளை விட வேத பாஷைக்கு இந்த ஃபோனடிக்ஸ் ரொம்பவும் முக்கியம். ஏனென்றால் உச்சரிப்பு மாறினால் பலனே மாறிவிடுகிறதை அந்தப் பாஷையில் பார்க்கிறோம்.

இப்படிப்பட்ட Vedic Phonetics -ஆக இருப்பதால்தான் சிக்ஷா சாஸ்திரத்தை வேத புருஷனின் ஆறு அங்கங்களில்

முதலாவதாக வைத்துள்ளார்கள். தமிழில் அதை "எழுத்திலக்கணம்" என்று சொல்லலாம்.

சிக்ஷையைப் பற்றி வேத முடியான உபநிஷத்திலேயே சொல்லியிருக்கிறது. தைத்திரீய உபநிஷத்து "சீக்ஷாவல்லி" என்பதிலேயே ஆரம்பிக்கிறது. அதன் முதன் மந்திரம் "சீக்ஷா சாஸ்திரத்தை இப்போது வியாக்யானம் பண்ணுவோமாக, அதாவது விளக்குவோமாக!" என்று ஆரம்பிக்கிறது.

இங்கேயும் சரி, மற்றும் அநேக வேத நூல்களிலும் சரி, 'சிக்ஷா' என்பதை நீட்டி 'சீக்ஷா' என்றே சொல்லியிருக்கும். ஆசார்யாள் [ஆதி சங்கரர்] தம்முடைய பாஷ்யத்திலே 'தைர்க்யம் சாந்தஸம்" என்கிறார். தைர்க்யம் என்றால் தீர்க்கமாக ஆவது; அதாவது, குறிலாக இருக்கவேண்டிய 'சி' நெடிலாக 'சீ' என்று ஆவது. தமிழில்கூடப் 'பொயட்ரி'யில் 'நிழல்' என்பதை நீட்டி 'நீழல்', 'திருவடி நீழல்' என்கிறோம். வேத பாஷைக்கு ஸம்ஸ்கிருதம் என்று பேர் இல்லை என்றும், அதற்கு சந்தஸ் என்றே பேர் என்றும் முன்னே சொன்னேனல்லவா? 'சாந்தஸம்' என்பது அப்படிப்பட்ட சந்தஸ் பாஷையை, அதாவது வேதத்துக்கேயான விசேஷப் பிரயோகத்தைச் சொல்வது.

விஞ்ஞான பூர்வமான யோகம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சிக்ஷை: வேதத்தின் மூக்கு

விஞ்ஞான பூர்வமான யோகம்

ஹார்மோனியத்திலும், நாயனத்திலும், புல்லாங்குழலிலும் காற்றைப் பலவிதமாக அளவுப்படுத்திச் சில இடைவெளிகளால் விடுகிறதால்தானே சப்தம் உண்டாகிறது? நம் தொண்டையிலும் அப்படிப்பட்ட அமைப்பு இருக்கிறது. தொண்டை மட்டுமில்லை; நாபிக்குக் கீழே மூலாதார ஸ்தானத்திலிருந்து சுவாஸம் என்கிற காற்றின் கதியைப் பல தினுசில் அளவு படுத்திக் கொண்டு வருவதால்தான் நாம் பேசவும் பாடவும் முடிகிறது. பகவான் பண்ணின இந்த மநுஷ்ய வாத்யம் ஹார்மோனியம், நாயனம் முதலியவற்றை விட சிரேஷ்டமானது. எப்படியென்றால், அவற்றில் வெறும் ஒலிகளை மட்டுந்தான் எழுப்ப முடியும். அ, க, ச, ங மாதிரியான அக்ஷரங்களை எழுப்ப முடியாது. மநுஷ்யனுக்கு மட்டுமே இந்தத் திறமை இருக்கிறது. மிருகங்களும் கூட ஏதாவது ஒரிரண்டு விதமான சப்தங்களைத்தான் போடமுடிகிறதே தவிர, இப்படி இத்தனை ஆயிரம் அக்ஷரங்களை எழுப்ப முடியாது.

மநுஷ்யனுக்கு மட்டுமே இந்த ஆற்றலை ஈச்வரன் தந்திருக்கிறான் என்பதாலேயே அதன் முக்கியத்துவத்தை அறியலாம். இவ்வளவு முக்கியமான ஒன்று, இப்போது நாம் பண்ணுகிற மாதிரி விருதாப் பேச்சில், அரட்டையில் வீணாகக் கூடாது. இதை வைத்துக் கொண்டு தேவ சக்திகளைப் பிடிக்க வேண்டும். அதனால் உலக நலனை உண்டாக்க வேண்டும்; நம் ஆத்மாவை உயர்த்திக் கொள்ள வேண்டும். இந்த மூன்று காரியங்களையும் செய்யும் சப்தங்களாகத்தான் வேத மந்திரங்களை ரிஷிகள் பிடித்துக் கொடுத்திருக்கிறார்கள். இதைப் புரிந்து கொண்டால்

உச்சாரணத்துக்கே இத்தனை மதிப்பு கொடுத்து சிக்ஷா சாஸ்திரம் என்ற ஒன்று ஏன் ஏற்பட்டிருக்கிறது என்பது புரியும். அதிலே ரொம்பவும் மைன்யூட்டாக [நுணுக்கமாக] இன்றைய பாஷா சாஸ்திர நிபுணர்களும், ஸயன்டிஸ்ட்களுங்கூட ஆச்சரியப்படும் படியாக, அடிவயற்றிலிருந்து ஆரம்பித்து இன்னின்ன மாதிரிக் காற்று புரளும்படியாகப் பண்ணி, அது இன்னின்ன இடத்திலே பட்டு, வாய்வழியாக இப்படியிப்படி வரவேண்டும் என்று அக்ஷரங்களை அப்பழுக்கில்லாமல், அக்யூரேட்டாக நிர்ணயம் பண்ணிக் கொடுத்திருக்கிறது.

காற்றானது இப்படி நமக்குள்ளே பல விதமாகச் செல்கிறபோது அதுவும் ஒரு தினுசில் யோக ஸாதனையாகவே ஆகிறது. ச்வாஸ கதியினால் நம் நாடிகளில் ஏற்படுகிற சலனங்களால்தான நம்முடைய உணர்ச்சிகள், சக்திகள் எல்லாம் உருவாகின்றன என்றும், 'அண்டத்தில் இருப்பதெல்லாம் பிண்டத்தில் உண்டு' என்றபடி இதே சலனங்கள் வெளி லோகத்திலும் அநேக விதமான அதிர்வுகளை ஏற்படுத்தி உலக வியாபாரத்தை உண்டாக்குகிறது என்றும் முன்னேயே சொன்னேனல்லவா? இதனால்தான் மூச்சையடக்கி யோக ஸித்தி பெற்ற மஹான்களுக்கு உள்ள அதே சக்தி மந்திர ஸித்தி பெற்றவர்களுக்கும் உண்டாகிறது. யோகம் என்று நாம் பொதுவிலே சொல்வது ராஜ யோகம் என்றால், இதை மந்திர யோகம் என்றே சொல்லலாம்.

மந்திரங்களில் ஒவ்வொரு அக்ஷரமும் இப்படி உண்டாக வேண்டும், அதன் ஸ்வரம் இப்படியிருக்கவேண்டும், 'மாத்திரை' என்பதான அதன் நீளம் இப்படியிருக்க

வேண்டும் என்றெல்லாம் சிக்ஷா சாஸ்திரம் விளக்குகிறது. 'மாத்திரை' என்பதில் குறில் நெடில் என்பன போன்ற விஷயங்கள் விளக்கப்படும்; குறிலுக்கு 'ஹ்ரஸ்வம்' என்றும், நெடிலுக்கு 'தீர்க்கம்' என்றும் பேர். வார்த்தைகளை ஸந்தி பிரிக்காமல் சேர்த்துச் சொல்கிறதற்கான guidance முதலான அநேக விஷயங்கள் – அத்யயனம் செய்கிறவர்களுக்கு உறுதுணையான விஷயங்கள் – சிக்ஷா சாஸ்திரத்தினாலேயே தெரிய வருகின்றன.

'க' மாதிரியான ஒரு சப்தம் கழுத்துக்கும் தொண்டைக்கும் நடுவேயிருந்து இப்படி வரவேண்டும்; இன்னொன்றிலே மூக்காலும் (nasal) வரவேண்டும் (அதாவது ஞ மாதிரியானவை) ; இன்னின்ன பல்லிலே நாக்குப் பட்டு வரவேண்டும் ('த' முதலிய சப்தங்கள்) ;இன்னின்ன மேலண்ணத்தில் நாக்குப் பட ஒலிக்க வேண்டும் ('ல' போன்றவை) ; முழுக்க உதட்டை மடித்து வரவேண்டிய சப்தம் ('ம') ; பல்லும் உதடும் சேர்ந்து உண்டாக்க வேண்டியது ('வ'- labio-dental என்று சொல்கிறது) – என்றிப்படி ரொம்பவும் நுட்பமாக அக்ஷர லக்ஷணங்களைச் சொல்லியிருக்கிறது. இது ரொம்பவும் scientific -ஆக [விஞ்ஞான பூர்வமாக] இருக்கிறது. இப்படியிப்படி அங்கங்களையும் தசைகளையும் மூச்சையும் இயக்கினால் இன்ன அக்ஷரம் வரும் என்று சிக்ஷா சாஸ்திரத்தில் சொல்லியுள்ளபடியே நாம் நடைமுறையில் செய்து பார்த்தால் இருக்கிறது. ஸயன்ஸாக இருந்துகொண்டே இது மந்திர யோகமாக, சப்த யோகமாகவும் இருக்கிறது.

மூல பாஷை ஸம்ஸ்கிருதமே

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சிக்ஷை: வேதத்தின் மூக்கு

மூல பாஷை ஸம்ஸ்கிருதமே

வார்த்தையின் அர்த்தத்தைவிட சப்தம் முக்யம் என்று சொன்னேன். இதைச் சொல்லும் போது இன்னொன்றும் நினைவு வருகிறது. வார்த்தையின் சப்தமே அதன் அர்த்தத்தைக் காட்டும்படியாக அநேக பதங்கள் சந்தஸ் என்ற வேத பாஷையிலும், அதை வைத்தே உருவாக்கிய ஸம்ஸ்கிருதத்திலும் இருக்கின்றன. உதாரணமாக, 'தந்தம்' என்று ஒரு வார்த்தை இருக்கிறது. 'பல்' என்று அதற்கு அர்த்தம் என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். பல் நாக்கிலே நன்றாக அடித்து, அதாவது சப்தத்தை எழுப்புவதில் பல்லுக்கே முக்யமான வேலையைக் கொடுப்பதாக இந்த 'தந்தம்' என்ற வார்த்தையே அமைந்திருக்கிறது. தந்தம் போனவர்களை (பல் இல்லாதவர்களை) 'தந்தம்' என்று சொல்லிச் சொல்லிப் பார்த்தால் தெரியும். அவர்களால் இந்த வார்த்தையை ஸ்பஷ்டமாகச் சொல்லவே முடியாது.

இந்தச் சின்ன விஷயத்திலிருந்து அநேக பாஷைகளை ஒப்பிட்டு ஆராய்ந்து எது முந்தி, எது பிந்தி என்று நிர்ணயிக்கிற Comparitive Philology க்கே முக்கியமான ஒரு ஸமாசாரம் தெரிகிறது. ஸம்ஸ்கிருதம், க்ரீக், லாடின் (லத்தீன்) , ஜெர்மன் (ட்யூடானிக் என்பது; இங்கிலீஷ் பாஷையும் ட்யூடானிக்கில் சேர்ந்ததுதான்) இன்றைய பிரெஞ்சு உள்பட அநேக பாஷைகளுக்கு மூலமான ஸெல்டிக் போன்ற பல மொழிகள் ஒரே

தாய்பாஷையிலிருந்து வந்தவை என்று சொல்லி இவற்றை 'இண்டோ யூரோபியன் குரூப்' என்று ஃபைலாலஜியில் சேர்த்து வைத்திருக்கிறார்கள். எது தாய்ப்பாஷை என்பதில் மட்டும் முடிவான அபிப்ராயம் ஏற்படவில்லை. ஸம்ஸ்கிருதம் (இப்படிச் சொல்லும்போது வேத பாஷையான சந்தஸையும் சேர்த்துத்தான் சொல்லப்படுகிறது) தான் ஆதி பாஷை, தாய்பாஷை என்றால் அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. ஆனால் இப்போது சொன்ன 'தந்தம்' போன்ற வார்த்தைகள் ஸம்ஸ்கிருதம்தான் மூலபாஷை என்று சொல்வதற்குச் சான்றாக இருக்கின்றன.

Dental [டென்டல்] என்று இன்றைக்கு இங்கிலீஷில் சொல்வதும் பல்லைக் குறிப்பதுதான். 'தந்த் – டென்ட்' என்கிறதில் நிறைய ஒற்றுமை நமக்குத் தெரிகிறது . பிரெஞ்சு, லாடின் முதலான பாஷைகளிலும் 'டென்ட்' ஸம்பந்தமே தெரிகிறது. அதாவது 'ட' காரம் வருகிறதே தவிர, ஸம்ஸ்கிருதத்தில் உள்ள 'தந்த'த்தில் வருகிற 'த' காரம் இல்லை. "இருந்துவிட்டுப் போகட்டும். இதனால் ஸம்ஸ்கிருதம் மூலபாஷை என்று எப்படி ஆகும்? ஏன் 'டென்டல்' என்பதிலிருந்துதான் ஸம்ஸ்கிருத 'தந்தம்' வந்தது என்று வைத்துக் கொள்ளக் கூடாது?" இப்படிக் கேட்டால், இங்கிலீஷ், பிரெஞ்சு, லாடீன் எல்லாவற்றுக்கும் ஸம்ஸ்கிருதமே தாய்ப்பாஷை என்பதற்கு 'தந்தம்' என்கிறதில் வருகிற சப்தங்களே ஆதரவாயிருக்கிறது. எப்படியென்றால் மேலே சொன்னது போல், "தந்தம்" என்பதைச் சொல்லவே தந்தம் (பல்) வேண்டியிருக்கிறது. 'டென்டல்' முதலான மற்ற பாஷை வார்த்தைகளைச்

சொல்லிப் பாருங்கள். அதிலே பல் ஸம்பந்தமே இல்லை. நாக்கின் நுனி மேலண்ணத்தில் படுவதாலேயே 'டென்ட்' சப்தம் உண்டாயிருக்கிறது. வார்த்தையே அர்த்தத்தை குறிப்படுமானால், அது ஸம்ஸ்கிருத 'தந்த'த்தில் தான். அதனால் இது தான் மூல ரூபம்; இதுதான் திரிந்து 'டென்டல்' வந்தது என்று தெரிகிறது.

இன்னும் சில வார்த்தைகளில், ஒன்றின் எழுத்துக்களை மாற்றுவதாலேயே அதோடு ரொம்பவும் ஸம்பந்தமுள்ள இன்னொன்றைக் குறிப்பிடும் வார்த்தை உண்டாகிறது. சிங்கத்துக்கு முக்யமான குணம் என்ன? ஹிம்ஸை செய்வது. "ஹிம்ஸ" என்ற எழுத்துக்கள் மாறியே 'ஸிம்ஹ' என்றாகியிருக்கிறது. 'கச்யபர்' ரிஷிகளுக்கெல்லாம் முதன்மையானவர். தேவஜாதி, அஸுர ஜாதி, மநுஷ்ய ஜாதி எல்லாவற்றுக்கும் மூல புருஷர். அவருக்கு ஏன் இந்தப் பேர் வந்தது? அவரே ஸத்யத்தைப் பார்த்தவர்; அதாவது உண்மையை உள்ளபடி அறிந்த ஞானி. ஞானத்தைப் பார்வை (த்ருச்யம்) என்றே சொல்வது வழக்கம். கச்யபரே "பார்த்தவர்". "பார்த்தவர்" என்பதற்கு ஸம்ஸ்கிருத பதம் 'பச்யக' என்பது. 'பச்யக' என்பதன் எழுத்துக்களே மாறி 'கச்யப' என்று வந்தது. "பச்யக" தான் "பார்ப்பான்" என்பது! ஸத்ய தத்துவத்தைத் தெரிந்து கொண்டவர்கள் என்ற அர்த்தத்தில் பிராம்மண ஜாதிக்குத் தமிழிலே இப்படி உயர்ந்த பெயர் உண்டாயிற்று. இப்போது அதுவே மட்டந்தட்டுகிற வார்த்தையாக உபயோகிக்கப்படுகிறது.

[உச்சரிப்பு விதிகள்]

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சிக்ஷை: வேதத்தின் மூக்கு

உச்சரிப்பு விதிகள்

உச்சாரணம், ஸ்வரம், மாத்திரை, பலம், ஸமம், ஸந்தானம் என்ற பல விஷயங்களை சிக்ஷா சாஸ்திரம் சொல்லி, ஒவ்வொரு மந்திரத்தையும் ஒரு மயிரிழைகூட அதன் சப்த ரூபம் தப்பாத வகையில் வகுத்துக் கொடுக்கிறது. அதிலும், இன்னின்ன எழுத்துக்கள் மநுஷ்ய சரீரத்தில் இன்னின்ன இடத்தில் பிறப்பவை, இவை இப்படிப்படியான முயற்சியால் உண்டானவை என்று அது நிர்ணயித்திருக்கிறது ரொம்பவும் ப்ராக்டிலாகவும், ஸயண்டிஃபிக்காகவும் இருக்கிறது. உதடுகளை இப்படிச் சேர். இன்ன சப்தம் வரும் என்று அது சொன்னால் வாஸ்தவத்தில் அப்படியே இருக்கிறது.

இதைச் சொல்லும்போது ஒன்று ஞாபகம் வருகிறது. ப,ம,வ போன்ற சப்தங்களில்தானே உதட்டுக்கு வேலை இருக்கிறது? க,ங,ச,ஞ,ட,ண,த,ந முதலியவற்றில் உதடு படுவதில்லை இல்லையா? இப்படி உதடு படாத சப்தங்களைக் கொண்ட வார்த்தைகளாலேயே ஆன ராமாயணம் ஒன்றை ஒருத்தர் எழுதியிருக்கிறார். அதற்கு 'நிரோஷ்ட ராமாயணம்' என்றே பேர். 'ஒஷ்டம்' என்றால் உதடு: அதிலிருந்து 'ஔஷ்ட்ரகம்', அதாவது தமிழில் ஒட்டகம் என்ற பேர் வந்தது. ஒட்டகத்திற்கு உதடு தானே பெரிசாக இருக்கிறது? ஸம்ஸ்கிருதத்தில் 'ஔஷ்ட்ரகம்' என்பது தமிழில் 'ஒட்டகம்' ஆயிற்று. 'நிர்– ஒஷ்டம்' என்றால் உதடு இல்லாதது என்று அர்த்தம். தன்னுடைய

பாஷா ஸாமர்த்தியத்தைக் காட்டுவதற்காக அவர் இப்படி நிரோஷ்டமாக ராமாயணம் பண்ணினதாகத் தோன்றலாம். ஆனால் எனக்கு இன்னொரு காரணமும் தோன்றுகிறது. அவர் ரொம்பவும் மடிக்காரராக (ஆசார சீலராக) இருந்திருக்கக்கூடும்!அதனால் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் கதையைப் பாராயணம் செய்கிற போது, எச்சில் படாமலே இருக்க வேண்டும் என்று இப்படி உதடு சேராத விதத்தில் பண்ணினார் போலிருக்கிறது!

வேதாக்ஷரங்களை எத்தனை கவனத்தோடு, ஜாக்ரதையோடு சொல்ல வேண்டும் என்பதற்குப் பாணினி மஹரிஷி செய்த 'பாணினீய சிக்ஷா'வில் ஒரு அழகிய ச்லோகம் இருக்கிறது.

வ்யாக்ரீ யதா ஹரேத் புத்ரான்

தம்ஷ்ட்ராப்யாம் ந ச பீடயேத்।

பீதாபதனபேதாப்யாம்

தத்வத் வர்ணான் ப்ரயோஜயேத்॥

வேதாக்ஷரங்களை ஸ்பஷ்டமாகச் சொல்ல வேண்டும். சப்த ரூபம் கொஞ்சங்கூட குழறுபடியாகக் கூடாது. ஒலி நழுவி விடவே கூடாது. அதற்காக ரொம்பவும் நறுக்கு நறுக்கு என்றும் சொல்லக் கூடாது. வேத எழுத்துக்களை கீழே நழுவாதபடியும் அழுத்தி ஹிம்ஸிக்காமலும் உச்சரிக்க வேண்டும். எப்படியென்றால் ஒரு பெண்புலி, தன் குட்டிகளைக் கவ்விக் கொண்டு போவது போல! பூனை, எலி முதலானதுகள் குட்டியைப் பல்லால் கவ்வுகின்றன.

கீழே விழாதபடி கெட்டியாகக் கவ்வுகின்றன. ஆனாலும் குட்டிக்கு வலிக்கிற மாதிரியாக கடித்துவிடுகிறதா? இல்லை. அந்த மாதிரி நாசூக்காக அக்ஷரங்களை உச்சரிக்க வேண்டும் என்பது ச்லோகத்தின் பொருள்.

இதே பாணினிதான், வேதாந்தங்களில் அடுத்ததான வியாகரணத்திலும் முக்கியமான நூலை உபகரித்திருக்கிறார்.

பாணினியைத் தவிர இன்னம் அநேக மஹரிஷிகளும் சிக்ஷா சாஸ்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.* இப்படிக் கிட்ட தட்ட முப்பது இருப்பதாகத் தெரிகிறது. பாணினியுடையதும், யாக்ஞவல்கிய சிக்ஷையும் விசேஷமானவை.

"ப்ராதிசாக்யம்" என்பதாக ஒவ்வொரு வேத சாகைக்கும் விசேஷமாகவும் வித்யாஸமாகவும் உள்ள வேத சப்தஸ்வரங்களை விரிவாக ஆராய்கிற நூல்களும் ஒவ்வொரு வேதத்துக்கும் உண்டு. இவற்றில் சிலவும் இவற்றுக்குரிய பிராசீனமான வியாக்யானங்களும் கிடைத்திருக்கின்றன. இவையும் "சீக்ஷா" என்பதில் அடங்கியவையே.

* ஆபிசலி, சந்திரகோமி, யாக்ஞவல்கியர், வசிஷ்டர், காத்யாயனர், பராசரர், மாண்டவ்யர், நாரதர், லோமசர் ஆகியோர் இயற்றிய சிக்ஷாஸூத்ர கிரந்தங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

பல மொழிகளின் லிபிகள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சிக்ஷை: வேதத்தின் மூக்கு

பல மொழிகளின் லிபிகள்

இன்ன ஒலிக்கு இது அடையாளம் [வரி வடிவம்] என்று காட்டுவதற்குத்தான் பல எழுத்துக்களைக் கொண்ட வெவ்வேறு லிபிகள் தோன்றியிருக்கின்றன. இங்கிலீஷ் முதலான பாஷைகளின் 'ஆல்ஃபபெட்டை' ரோமன் லிபி (Roman Script) என்கிறோம். பிராம்மி என்ற ஒரு லிபி இருந்தது. அசோக சாஸனங்கள் அதில் எழுதியதுதான். அதிலிருந்தே இப்போது ஸம்ஸ்கிருதத்துக்கு வழங்குகிற க்ரந்த லிபியும், தேவநாகிரி லிபியும், மற்றும் தமிழ் முதலான அநேக இந்திய லிபிகளும் உருவாயிருக்கின்றன.

பிராம்மி லிபியின் இரண்டு விதமான பிரிவுகளில் தக்ஷிணத்தில் வழங்கி வந்த பல்லவ –க்ரந்தம் என்பதிலிருந்து தான திராவிட பாஷைகளின் லிபிகள் ஏற்பட்டுள்ளன.

எல்லா லிபிகளுக்குள்ளும் தெலுங்கு லிபிக்கு ஒரு விசேஷம் உண்டு. மற்ற லிபிகளிலெல்லாம் தக்ஷிணாவர்த்தமாக, அதாவது வலது பக்கம் சுழித்து எழுத்துக்கள் எழுதப்படுகின்றன. தெலுங்கில் மட்டும் வாமாவர்த்தமாக இடது பக்கம் சுழித்து எழுத்துக்கள் இருக்கின்றன. ஈச்வரனின் வாமபாகத்திலிருக்கிற பராசக்திக்கு வாமமார்க்கம் என்ற உபாஸனையும் உண்டு.

இடது அவளுக்கு விசேமானதால் அவளுக்குரிய ஸ்ரீசக்ரத்தில் அக்ஷரங்களை ஆந்திர லிபியிலேயே எழுத வேண்டும் என்பதுண்டு. ஆந்திர பாஷை சிவப் பிரதானமானது என்பார்கள். ஏனென்றால் மற்ற எல்லா இடங்களிலும் மஹா விஷ்ணுவின் அஷ்டாக்ஷரத்துடனேயே அக்ஷராப்யாஸத்தை (படிப்புத் தொடக்கத்தை) ஆரம்பிக்கிறார்களென்றால், தெலுங்கு தேசத்தில் சிவ பஞ்சாக்ஷரத்துடன் தொடங்குகிறார்கள். ஆந்திர தேசமும் தெற்கே காளஹஸ்தி, மேற்கே ஸ்ரீ சைலம், வடக்கே கோடிலிங்க க்ஷேத்ரம் என்பதாக மூன்று சிவஸ்தலங்களுக்குள் – த்ரிலிங்கங்களுக்குள் – அடங்கியிருப்பதால்தான் அதற்கு தெலுங்கு தேசம் என்ற பெயரே உண்டாயிற்று. இதனால்தான் அப்பைய தீக்ஷிதர் தாம் ஆந்திரராகப் பிறக்கவில்லையே என்று குறைப்பட்டு ச்லோகம் செய்திருக்கிறார்.

ஆந்த்ரத்வம் ஆந்த்ரபாஷாசாப் – யாந்த்ர தேச ஸ்வஜன்ம பூ:।

தத்ராபி யாஜுஷீ சாகா ந(அ)ல்பஸ்ய தபஸ: பலம்॥

ஸாமவேதியாகப் பிறந்தவர் அப்பைய தீக்ஷிதர். "வேதங்களுக்குள் நான் ஸாமவேதம்" என்றே பகவான் கீதையில் சொல்லியிருக்கிறார். ஆனால் சிவ பக்த சிகாமணியான தீக்ஷிதர் சிவபஞ்சாக்ஷர மந்திரத்தைத் தனது மத்தியில் கொண்டதான யஜுர் வேதத்தில் ("யாஜுஷீ சாகா" என்று இதையே ச்லோகம் சொல்கிறது) பிறப்பதற்கும், தெலுங்கு தேசத்தில் பிறப்பதற்கும் தபஸ் செய்திருக்கவில்லையே என்று குறைப்பட்டிருக்கிறார்!

லிபி விஷயத்துக்கு வருகிறேன். இப்போதுள்ள இந்திய லிபிகள் எல்லாம் பிராம்மியிலிருந்து வந்தவைதான் என்றாலும் ஆதியிலிருந்த பிராம்மி லிபியைப் பார்த்தால் நமக்கு ஒன்றுமே புரியாது. அதனால் புரியாத விஷயத்தை "பிராம்மி லிபி" என்று சொல்ல ஆரம்பித்தார்கள். அப்புறம், அது திரிந்து பிரம்மா நம் நெற்றியிலே எழுதியிருக்கிற "பிரம்ம லிபி"யோடு ஒன்றாக்கப்பட்டுவிட்டது! இப்போது ஒன்றும் புரியாவிட்டால் "பிரம்ம லிபி" என்று நாம் சொல்வது "பிராம்மி லிபி" என்றுதான் இருக்க வேண்டும்.

கரோஷ்டி என்றும் ஒரு லிபி இருந்தது. கர-ஒஷ்டம் என்றால், 'கழுதையின் உதடு' என்று அர்த்தம். கழுதை உதடு துருத்திக் கொண்டு வருகிற மாதிரி அந்த லிபி எழுத்துக்களில் வளைசல்கள் பிதுங்கிக் கொண்டிருக்கும். பார்ஸி பாஷைக்கு அதுதான் லிபி.

ஐரோப்பாக் கண்டத்தின் எல்லா பாஷைகளுக்கும் ரோமன் லிபி ஒன்றேயிருப்பதுபோல் நமக்குப் பொது பிராம்மி. தற்போது அதிலிருந்து வந்த தேவநாகரியே வடக்கத்தி பாஷைகளின் லிபிகளில் நன்றாக தெரிகிறது.

ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு விதமான ஒலியைச் சொல்கிறது என்று நமக்குத் தெரியவில்லை. அதனால்தான் "தமிழில் ஏன் 'ன', 'ந' என்ற இரண்டு எழுத்துக்கள் ஒரே சப்தத்துக்கு இருக்கின்றன? வேறு எந்த பாஷையிலும் இப்படி இல்லையே!" என்று நினைக்கிறோம். வாஸ்தவத்தில் 'ன' சப்தத்துக்கும், 'ந' சப்தத்துக்குமிடையே சூக்ஷமமான வித்யாசம் உண்டு. 'ந' வில் நாக்கு முன்னம் பல்லின் உள்பக்கம் படும்; "ன"

விலோ நாக்கு இன்னும் மேலேறி மேலண்ணத்தைத் தொடும். தெலுங்கிலேகூட ஒரே 'ந' தான். மற்ற பாஷைகளிலும் இப்படியே.

தமிழுக்கும் தெலுங்குக்கும் மட்டும் பொதுவாயிருப்பது 'ர', 'ற' என்ற இரண்டு வகை இருப்பது. ஒன்று இடையினம், மற்றது வல்லினம் என்று சொல்லுகிறோம். மற்ற பாஷைகளில் இப்படி இரண்டு இல்லை. இதிலும் தமிழுக்கும் தெலுங்குக்கும் ஒரு வித்யாஸம் உண்டு. தமிழில் வல்லின 'ற'மட்டுமே ஒற்றோடு கூட 'ற்ற'என்று சேர்ந்து வரும். 'குற்றம்', 'சுற்றம்', 'மற்றும்', சொற்றுணை'என்கிற மாதிரி வார்த்தைகளில் இப்படி வருகிறது. ஆனாலும் இங்கே எழுத்தைப் பார்த்து ஒலியை அப்படியே உச்சரிப்பதில்லை. 'குட்றம்', 'சுட்றம்', 'மட்றும்', 'சொட்றுணை'என்கிற மாதிரி 'ற'கர ஒற்றானது 'ட'கர ஒற்றானது போலவே உச்சரிக்கிறோம். தெலுங்கில் இப்படி வராது. இதற்கு மாறாக, தெலுங்கிலே குதிரைக்கு என்ன சொல்கிறார்கள்? 'குர்ரம்' என்கிறார்கள். 'ர்' ஸவுண்டும், 'ர' ஸவுண்டும் கொஞ்சங்கூட மாறாமல் உள்ளபடியே சொல்கிறார்கள். தமிழில் இப்படி 'ர்ர' உள்ள வார்த்தையே கிடையாது.

தெலுங்கு பாஷையில் உள்ள வேறு சில விசேஷ சப்தங்கள்: சில இடங்களில் 'ஜ' என்பதை J சப்தமாக இல்லாமல் Z சப்தமாக சொல்கிறார்கள். 'சால' என்பதை 'த்ஸால' என்பதுபோல் சில இடங்களில், 'ச' வுக்கு 'த்ஸ' என்று, சொல்கிறார்கள். ஸம்ஸ்கிருதத்துக்கான தேவநாகரி, க்ரந்த லிபிகளில் 50 எழுத்து இருக்கிறதென்றால்,

தெலுங்கிலே ஜகாரத்திலும் சகாரத்திலும் ஒவ்வொன்று அதிகமிருக்கிற எழுத்துக்களைச் சேர்த்து 52 இருக்கின்றன. மஹாராஷ்ட்ர பாஷையிலும் இந்த ஸூக்ஷமமான இரண்டு சப்தங்களும் இருக்கின்றன. இரண்டாவது 'த' (tha) வை நாலாவது 'த' (dha) வாகவும் தெலுங்கர்கள் மாற்றிக் கொள்வதுண்டு. தியாகய்யர்வாள் பாட்டிலேயே இப்படிச் சில இடங்களில் இருக்கிறதென்று ஒருத்தர் சொன்னார்.*

ஒரு பாஷையில் உள்ளதை அப்படியே இன்னொரு பாஷையின் லிபியில் எழுதுகிற போது (transliterate பண்ணுகிற போது) இந்த விஷயங்களைத் தெரிந்து கொண்டு பண்ண வேண்டும். இப்படிப் பண்ணகிறபோது ஸம்ஸ்கிருதத்தில் 'ன' இல்லாததால், 'ஸத்யவான்', 'தர்மவான்' என்கிற மாதிரி வார்த்தைகளைக் கூட 'ஸத்யவாந்', 'தர்மவாந்' என்றுதான் எழுத வேண்டும். ஆனாலும் தமிழில் இப்படிப்பட்ட வார்த்தைகள் இல்லாததால், நம் கண்ணுக்கு அது விசித்ரமாகப் படும்! உச்சரிப்பு சரியாக இருக்க வேண்டும் என்று Phonetic spelling ஆக எழுதினால் அது நாம் இப்போது எழுதுவதற்கு வித்யாஸமாகத்தான் இருக்கும். தெலுங்கிலே வருவதைக் 'கன்னதல்லி' என்று எழுதாமல், 'கந்நதல்லி' என்றுதான் எழுவேண்டும். அது அச்சிலே விநோதமாகத்தான் இருக்கும்.

உச்சரிப்புக்களை உள்ளபடி தெரிந்து கொண்டால் தமிழில் ன, ந என்ற இரண்டு எழுத்து ஏன் இருக்கிறது என்பது போல் நமக்குப் புரியாமலிருக்கிற பல விஷயங்கள் புரிந்து விடும். இங்கிலீஷில் கூட இப்படியே நமக்கு "ஒரே 'வ' காரத்துக்கு ஏன் v, w என்று இரண்டு எழுத்துக்கள்?" என்று

தோன்றினாலும், இவற்றுக்கிடையே வித்யாஸம் உண்டு என்று ஒரு ப்ரொஃபஸர் சொன்னார். 'v' வருகிற இடத்தில் நம் பாஷைகளின் 'வ' மாதிரி கீழ் உதட்டை மடித்து, அதன் மேலே மேல் வரிசைப் பல் படவேண்டும்; 'w' வரும்போது பல்லே படாமல், உதட்டையே ரவுன்டாகக் குவித்துச் சொல்ல வேண்டும்; ஆகையால் இந்திய பாஷைகளில் வருகிற 'ஸரஸ்வதி', 'ஈச்வரன்' முதலான வார்த்தைகளை Sarasvati, Isvaran என்றுதான் எழுதவேண்டும் என்றார். இன்னொன்று கூட: இங்கிலீஷில் 'ண' கரம் கிடையாது; 'ன' தான் உண்டு. ஆனபடியால் 'and', 'band' போன்ற வார்த்தைகளை 'அண்ட்', 'பாண்ட்', என்று எழுதாமல் 'அன்ட்', 'பான்ட்' என்றுதான் எழுதவேண்டும்.

ஸ்பெல்லிங்கைப் பார்த்தே ப்ரொனௌன்ஸியேஷன் [உச்சரிப்பு] சரியாகப் பண்ணுவது என்பது, மற்ற எந்த பாஷையையும் விட ஸம்ஸ்கிருதத்திலேயே பூர்ணமாகத் தப்பில்லாமல் இருக்கிறது. இங்கிலீஷில் ஒரே கோணாமாணா! 'Legistlature wound up' என்று ஸமீபத்தில் பேப்பரில் பார்த்தேன். Wound என்பதை ஏதோ நினைவில் 'வூன்ட்' என்று படித்ததில் அர்த்தமே புரியவில்லை. 'வூன்ட்' என்றால் காயம் அல்லவா? இங்கே 'வௌன்ட்' என்று அதே ஸ்பெல்லிங்கைப் படிக்க வேண்டியிருக்கிறது! 'சுற்றுவது' என்கிற அர்த்தமுள்ள wind- க்கு இது past participle. இங்கே 'வௌன்ட்–அப்' என்றால் 'ஸமாப்தி பண்ணப்பட்டது' என்று அர்த்தம். இந்த wind என்ற வார்த்தையை எடுத்துக் கொண்டாலும் ஸ்பெல்லிங் ஒன்றாகவே இருந்தாலும், அதைக் காற்று என்ற அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளும்போது 'வின்ட்' என்று சொல்ல வேண்டும்;

'சுற்றுவது' என்ற அர்த்தம் பண்ணும் போது 'வைன்ட்' என்று சொல்ல வேண்டும். இப்படி ஒரே குழப்பம்! B-U-T பட், C-U-T கட், என்று இருந்தாலும் P-U-T மட்டும் 'பட்' இல்லை, 'புட்' என்கிறான். வால்க், சால்க் என்று உச்சரிப்புகளைக் கொடுக்கும்படியான Walk, Chalk என்பவைகளை வாக், சாக் என்றே சொல்கிறான். கேட்டால், சில எழுத்துக்கள் ஸைலன்ட் ஆகிவிடுகின்றன என்கிறான்.

தமிழில் இப்படியில்லை என்றுதான் தோன்றும். ஆனாலும் ஸம்ஸ்கிருதம் முதலான பிற பாஷைச் சொற்கள் தமிழில் நிறையக் கலந்திருப்பதால் அவற்றைத் தமிழில் எழுதும்போது மற்ற பாஷைகளில் ஒரே அக்ஷரத்தில் உள்ள நாலுவிதமான சப்தங்களைக் குறிப்பிட நாலு எழுத்துக்கள் இருக்கிறபோது, தமிழிலோ நாலுக்கும் ஒரே எழுத்துத்தானே இருக்கிறது என்ற குறை தெரிகிறது. 'கண்' என்பதில் வருகிற 'க' வேறு; 'முகம்' என்பதில் வரும் 'க' வேறு. 'முகம்' என்பதில் kha என்று அழுத்திச் சொல்லவேண்டும். கங்கை என்பதில் வரும் 'க' வோ இன்னொரு தினுசு; ga சப்தமாக உள்ளது. இதையே இன்னம் அழுத்தி gha -காரமாக 'கடம்' என்ற வார்த்தையில் சொல்ல வேண்டும். Ka, kha, ga, gha இவற்றுக்கு மற்ற இந்திய பாஷைகளில் நாலு எழுத்து இருக்கும்போது, தமிழில் ஒரே 'க' தான் நாலுக்கும் பொதுவாயிருக்கிறது. பீமன் கையிலே வைத்திருக்கிற 'கதை' (gadai) , எழுத்தாளர்கள் எழுதுகிற கதை (kathai) இவற்றில் இரண்டு அக்ஷரங்களும் வித்யாஸமாயிருந்த போதிலும், தமிழில் ஒரே மாதிரித்தான் எழுத வேண்டியிருக்கிறது. தமிழில் t'a, d'a இரண்டுக்கும் ஒரே 'ட'; ta, da இரண்டுக்கும் ஒரே 'த' என்று

ஏற்பட்டிருப்பதில், ஸ்பெல்லிங்கை வைத்தே சரியாக உச்சரிக்க முடியாமல் இருக்கிறது. 'தோ(do)ஷம்' என்றால் குறை;' தோ(to)ஷம்' என்றால் மகிழ்ச்சி. ('ஸந்தோஷம்' இதிலிருந்து வந்தது தான்.) ஆனால் இப்படி நேர்மாறாக அர்த்தமுள்ள இரண்டு வார்த்தைகளையும், தமிழில் ஒரே எழுத்துக்களால்தான் எழுத வேண்டியிருக்கிறது!கூடிய மட்டும் லிபியைக் கொண்டே சரியாக உச்சரிக்க வேண்டும் என்பதால்தான் ஸ, ஹ, ஜ, ஷ, க்ஷ முதலான கிரந்த எழுத்துக்களைத் தமிழில் சேர்த்தது. ஆனால் இப்பொழுது, முன்னெல்லாம் கவிப்பண்பை உத்தேசித்து தமிழ்க் கவிதைகளில் மட்டும் செய்து வந்தது போல் வசன நடையிலும்கூட இந்த எழுத்துக்கள் கூடாது என்கிற ரீதியில் எழுதி வருவதால், குழப்பமாகிறது. ஸம்ஸ்கிருத வார்த்தைகளைத்தான் பூர்ணமாக ஒழித்துக் கட்ட முடியவில்லை என்பதால், அதற்கே விசேஷமான சப்தங்களுக்குரிய இந்த எழுத்துக்களையாவது ஒழித்து விடலாமா என்று ஆரம்பித்திருப்பதில் வார்த்தைகளைத் தப்புத் தப்பாகப் படிக்கும் படி ஆகியிருக்கிறது. 'சாதகம்' என்று எழுதினால் அது 'ஸாதக'மாகவும் இருக்கலாம், 'ஜாதக'மாகவும் இருக்கலாம் என்றால், அர்த்தம் குழம்பித்தானே போகும்? சிலது தவிர்க்க முடியாது. முன்னே சொன்ன மாதிரி க,ச,ட,த,ப முதலானவற்றில் நாலு தினுசான வித்தியாஸம் தெரிவிக்கத் தமிழில் ஆதியிலிருந்தே எழுத்து இல்லை. ஆனால் பிறகு சேர்த்தவைகளைக் கூட இப்போது ஏன் விடவேண்டும்? இதனால் தமிழுக்கு வெற்றியா? ஸம்ஸ்கிருதத்துக்குத் தோல்வியா? பாஷைகள் என்ன, ஒன்றுக்கொன்று சண்டையா போட்டுக்கொள்கின்றன? நாம் தப்புத் தப்பாக

வார்த்தைகளைச் சொல்கிறோம் என்பது தவிர இப்படிப்பட்ட பாஷா த்வேஷக் காரியங்களால் ஒரு பலனும் இல்லை. இது இருக்கட்டும்.

பிற பாஷைச் சொற்களாக இல்லாமல் தமிழிலேயே உள்ள சொற்களை எழுதுவதற்குத் தமிழ் லிபி ரொம்பவும் திட்ட வட்டமாகத்தான் இருக்கிறது. ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, கன்னட பாஷைகளில் க, ச, ட, த,ப, முதலியவற்றில் நாலுவித ஒலிகள் இருப்பது மாதிரி தமிழ் பாஷையில் கிடையாது. Kha, ga, gha முதலிய சப்தங்கள் இதர பாஷை வாரத்தைகளைத் தமிழில் எடுத்துக் கொள்ளும் போதுதான் வருகின்றன. ஆகையால் தமிழுக்கு என்றே ஏற்பட்ட சப்தங்களை எழுதத் தமிழ் லிபி போதுமானதாகத்தான் இருக்கிறது. இங்கிலீஷில் சொந்த பாஷை வார்த்தைகளையே எழுத்தைப் பார்த்துச் சரியாக உச்சரிக்க முடியாமலிருக்கிறதே, அந்த மாதிரித் தமிழில் இல்லை.

ஆனாலும், இங்கேயும் கூடத் தமிழ் லிபி பூர்ணமாகச் சரியாக இல்லை என்று நான் சொன்னால், உங்களுக்கு ஆச்சர்யமாயிருக்கும்! ஒப்புக் கொள்ளமாட்டீர்கள். ஆனால், நான் பிரத்யக்ஷத்தில் பார்த்த ஒன்றைச் சொன்னால் ஒப்புக் கொள்வீர்கள்.

வடக்கத்திக்காரன் ஒருத்தன் தமிழ் லிபியை (ஆல்ஃபபெட்டை) நன்றாகத் தெரிந்து கொண்டான். அதாவது ஒவ்வொரு எழுத்தையும் எழுத்தெழுத்தாகத் தெரிந்து கொண்டான். அப்புறம் அவனுக்கு வார்த்தை வார்த்தையாக எழுத்துக்களைச் சேர்த்துக் கற்றுக்கொடுப்பதற்கு ஆள் கிடைக்கவில்லை. தேவார

திருவாசகங்களை மூல ரூபத்தில் படிக்க வேண்டும் என்ற ஆசையால்தான் அவன் இப்படித் தமிழ் கற்றுக்கொண்டது. 'எழுத்துக்கள் தெரிந்து விட்டதல்லவா?'என்று, அவனே அதற்கப்புறம் தேவாரபுஸ்தகத்தை வைத்துக்கொண்டு, ஒவ்வொரு எழுத்தாகப் பார்த்துப் பாடம் பண்ண ஆரம்பித்தான். அவனுக்குத் தமிழ் பாஷா ஞானம் [மொழியறிவு] இல்லை. ஆனால் அர்த்தம் தெரியாவிட்டாலும் மஹான்களின் வாக்கைச் சொன்னாலே புண்ணியம் என்று இப்படிப் பாடம் பண்ணினான். அப்புறம் ஒருநாள் அவன் என்னிடம் வந்தான். "தேவாரம் சொல்கிறேன்"எனறான். எனக்கு ரொம்பவும் ஸந்தோஷமாயிற்று. சொல்லச் சொன்னேன்.

ஆனால், அவன் சொன்னது எனக்கு வேடிக்கையாயிருந்தது.

அவன் அப்பர் ஸ்வாமிகள் திருவையாற்றில் ஸர்வத்தையும் உமாமஹேச்வர ஸ்வரூபமாகப் பார்த்துப் பாடின பிரஸித்தி பெற்ற "மாதர் பிறைக் கண்ணியானை" என்ற பாடலைப் பாடினான். ஆனால் எப்படி பாடினான்?

எடுத்த எடுப்பிலேயே நாம் "மாதர்" என்பதை maadar என்கிறோம் என்றால் அவன் maatar என்று ஆரம்பித்தான்.

'இதென்னடா, தர் புர்ரென்று ஆரம்பிக்கிறானே!' என்று எனக்கு விசித்ரமாயிருந்தது.

அப்புறம் malaiyaan mahalod'u (மலையான் மகளொடு) என்பதில் makalot 'u என்று 'க'வையும் 'ட'வையும் அழுத்தி பாடினான்.

'மலையான் மகளொடு பாடி' என்பதில், நாம் 'paad'i ' என்பதை அவன் 'paat'i' என்று பாடினபோது, எனக்குச் சிரிப்பே வந்துவிட்டது.

இப்படியே போயிற்று. 'புகுவார்' நாம் சொல்கிற Puhuvaar -ஆக இல்லாமல் Pukuvaar - ஆக இருந்தது. 'யாதும் சுவடு படாமல்' (yaadum s'uvadu pad'aamal) என்பது yaatum chuvat'u pat'aamal என்று அவன் வாயில் மாறி ஸ்வரூபம் கொண்டதற்கப்புறம் என்னால் அடக்கவே முடியவில்லை.

வடக்கத்தியான் ஒருத்தன் நம் தமிழ் பாடலைக் கற்றுக் கொண்டு பாடுகிறானே என்ற சந்தோஷத்தில், அவனை உத்ஸாஹந்தான் படுத்தவேண்டும் என்று அது வரை பேசாமல் இருந்த நான், அதற்கப்புறம் பொறுக்க முடியாமல், அவனுடைய உச்சரிப்பில் இருந்த ஏராளமான கோளாறுகளை அவனுக்கு ஹிதமாக எடுத்துக் காட்டினேன்.

அதற்கு அவன், "நான் என்ன பண்ணலாம்? புஸ்தகத்தில் இப்படித்தானே எழுதியிருக்கிறது?" என்று காட்டினான். அவன் சொன்னது வாஸ்தவம்தான். புஸ்தகத்தில் எழுதியிருக்கிற லிபியின்படி பார்த்தால், அவன் சொன்ன விதம் சரிதான். புஸ்தகத்தை வைத்துக்கொண்டு எழுத்தெழுத்தாக நானும் நீங்களும் படித்தாலும் அவன் சொன்ன மாதிரியே தான் படிப்போம்.

ஆகவே தமிழிலும் அநேகம் சப்தங்களை எழுத்திலே மாற்றித்தான் எழுதுகிறோம் என்று தெரிந்தது. குறிப்பாக

வார்த்தைகளுக்கு ஆரம்பத்தில் வராமல் நடுவிலும் முடிவிலும் வருகிற சப்தங்கள் எழுத்திலே வித்யாஸமாகத்தான் ஆகின்றன. 'மஹளொடு' என்று உச்சரிப்பதை 'மகளொடு' என்று எழுதுகிறோம். 'அதற்காஹ' என்று உச்சரிப்பில் சொன்னாலும் 'அதற்காக' என்றே எழுதுகிறோம். ஆரம்ப 'க' நடுவிலும் கடைசியிலும் 'ஹ' ஆகிறது. தமிழின் வார்த்தை ஆரம்பத்தில் 'த' வை 'ta' என்கிறோம்; பிறகு வந்தால் 'da' என்கிறோம். 'தந்தை என்கிறபோது முதலில் 'த' என்பது 'ta'ஸவுண்ட்; 'தை' என்பதோ 'dai' ஸவுண்டாயிருக்கிறது. இப்படியே ஆரம்பத்தில் வராமல் நடுவிலே வருகிற 'ட' 'd'a' தான்; 't'a' இல்லை. கடவுள், இடம் என்பதில் எல்லாம் 'd'a' தானே சொல்கிறோம்?

இம்மாதிரி விஷயங்கள் தமிழ் இலக்கண நூல்களில் நன்றாக வரையறுத்துச் சொல்லியிருக்கிறது. ஸம்ஸ்கிருதத்தில் போலவே தமிழிலும் 'தொல்காப்பியம்', 'நன்னூல்' முதலான அநேகம் உயர்ந்த புஸ்தகங்களில் வார்த்தைகளின் ரூபம், சப்த ரூபம், அவற்றில் ஏற்படுகிற வித்யாஸம் முதலியவைகளைச் சொல்லித்தான் இருக்கிறது. இந்த எழுத்தின் பின் s'a என்பது cha ஆகும்; ka என்பது ha சப்தத்தைக் கொடுக்கும் என்றெல்லாம் விதி இருக்கிறது.

பொதுவாக, தமிழில் வார்த்தையின் முதலில் 'க' வரும் போது ka சப்தமாகவும், நடுவிலும் முடிவிலும் வரும்போது ha சப்தமாகவும் இருக்கிறது. 'த' என்பது வார்த்தை முதலில் ta-வாகவும், பிற்பாடு da-வாகவும்; இப்படியே 'ப' வும் முதலில் pa-வாகவும், பிற்பாடு ba-வாகவும் தொனிக்கிறது. (தமிழ்

வார்த்தையின் நடுவிலோ, முடிவிலோ தனியாக 'ப' வருவதாகத் தெரியவில்லை. 'அன்பு', 'அம்பு', 'இன்பம்' என்பது போல் கூட்டுச் சப்தமாகத்தான் வருகிறது. ஜபம், சாபம், கபம், சுபம் என்கிறதுபோல, நடுவிலே தனி 'ப' வரும் வார்த்தைகள் ஸம்ஸ்கிருதத்திலிருந்து வந்தவைதான்) 'ச' விலே ஒரு வேடிக்கை. க–ங–ச–ஞ–ட–ண–த–ந–ப–ம– என்கிற போது ka-nga- cha -ngya-t'a-na-ta-na-pa-ma என்று cha -காரமாகச் சொன்னாலும், தமிழில் க,த,ப முதலியன ஆரம்பத்தில் வரும்போது ka,ta,pa என்றே தொனிப்பது போல், 'ச' என்பது cha -வாகத் தொனிக்காமல் s'a என்றே தொனிக்கிறது. சட்டி, சிவப்பு என்பதை s'atti, s'ivappu என்றுதான் சொல்கிறோம். ஆனால் ஒற்றெழுத்தோடு சேரும்போது chcha சப்தம் வந்து விடுகிறது; s's'a அல்ல – அச்சம், பச்சை, குச்சு என்பது போல! 'சொல்' என்கிறபோது s'ol என்கிறோம். அதையே பெயர்ச்சொல், வினைச்சொல் என்னும்போது peyarchchol, vinaichchol என்கிறோம். ஆனால், தமிழிலிருந்தே வந்த மலையாளத்தில், வார்த்தை ஆரம்பத்திலேயே 'ச' வுக்கு cha சப்தம் கொடுக்கிறார்கள். சிவப்பு என்பதை மலையாளிகள் chivappu என்றுதான் சொல்வார்கள். இன்னொரு பக்கத்தில், சில ஸமயங்களில் வார்த்தைக்கு நடுவே 'ச்ச' வரும்போது ch cha என்று சொல்லாமல் s's'a என்றும் சொல்கிறார்கள். காவிச் சேரி, நெல்லிச்சேரி முதலான ஊர்ப் பெயர்களை நாம் (தமிழர்கள்) Kaavis's'eri, Nellis's'eri என்கிறார்கள். தெலுங்கிலே 'ர்ர' வருகிற மாதிரி, மலையாளத்தில் s's'a இருக்கிறது. அச்சன், எழுத்தச்சன் என்னும்போது, நம்மாதிரி ch cha சப்தமாகவும் சொல்கிறார்கள்.

தமிழிலக்கண நூல்களைப் பார்த்தால், இந்த மொழியின் genius [பண்பு] படி, எந்தெந்த இடத்தில் எந்தெந்த சப்தம் எப்படியெப்படி ஆகும் என்பது விளக்கமாகத் தெரியும்.

ஆனாலும்கூட, லிபியைப் படிப்பதிலேயே உச்சரிப்பு கொஞ்சங்கூடத் தப்பாமலிருப்பது தமிழிலும் ஸாத்தியமில்லாமல்தான் இருக்கிறது.

ஸம்ஸ்கிருதத்தில்தான், இப்படிப்பட்ட மாறுபாடு இல்லை; இரண்டே இரண்டு விலக்கு தவிர, வேறெங்கும் இல்லை. அது பூர்ணமாக phonetic spelling- ஆகவே இருக்கிறது.

'ஏது இரண்டு விலக்கு? முழுக்க முழுக்க ஸம்ஸ்கிருதம் உச்சரிப்புக்குச் சரியான எழுத்துக்களை உடையதல்லவா?' என்றால் சொல்கிறேன்:

ஒன்று 'ப' (pa) வுக்கு முன்னால் ':' என்ற விஸர்க்கம் வரும்போது ஏற்படுகிற சப்த மாறுதல். விஸர்க்கம் ஏறக்குறைய 'ஹ' சப்தத்தைத் தருவது. 'ராம:' என்பதை 'ராமஹ' என்று சொல்லவேண்டும். பூர்ணமான 'ஹ' வாக இன்றிக் கொஞ்சம் தாழ்த்திச் சொல்லவேண்டும். தமிழ் நாட்டில் பூர்ண 'ஹ' வாகவே சொல்கிறார்கள். குறைத்துச் சொல்கிற மற்றவர்களை கேலியாக நினைக்கிறார்கள். வாஸ்தவத்தில் சிக்ஷா விதிப்படி அவர்கள் சொல்வதுதான் சரி. இந்த விஸர்க்கம் 'ப'வுக்கு முன்னாடி வரும்போது 'ப' என்பது 'fa' (ஃப) என்கிற ஸவுண்டைப் பெறுகிறது. லிபியை மட்டும் பார்த்து உள்ளபடி படித்தால் இங்கே தப்பாகிவிடும்.

இரண்டாவசு மாறுதல்; ஸம்ஸ்கிருதத்தில் ஸுப்ரஹ்மண்யன், ப்ரஹ்மா, வஹ்நி என்று எழுதினாலும்,

படிக்கும்போது ஸுப்ரம்ஹண்யன், ப்ரம்ஹர், வன்ஹி என்றே உச்சரிக்க வேண்டியிருக்கிறது. சரி, 'y' சேர்ந்த கூட்டெழுத்துக்கள் எல்லாவற்றுக்குமே இது பொது விதியா என்று பார்த்தால், அப்படியும் இல்லை. 'கஹ்வரம்', 'ஜிஹ்வா', 'குஹ்யம்', 'தஹ்ரம்', 'ப்ரஹ்லாதன்' முதலான வார்த்தைகளை உள்ளபடியே படிக்கிறோமே ஒழிய 'கவ்ஹரம்', 'ஜிவ்ஹா', 'குய்ஹம்', 'தர்ஹம்', 'ப்ரல்ஹாதன்' என்று [மேலே சொன்ன ரீதியில்] மாற்றிப் படிக்கவில்லை.

இந்த இரண்டு தவிர, முற்றிலும் உச்சரிப்பும், லிபியும் ஸம்ஸ்கிருதத்தில் ஒன்றாகவே இருக்கின்றன.

* உதாரணமாக "கருனாஜலதே" என்ற நாதநாமக்ரியா திவ்ய நாம கீர்த்தனையில் "ஜலதே (dhe)", "நிதே (dhe)" என்பவற்றுக்கு எதுகையாக "தாசரதே (the)" என்று வருகிறது.

எல்லா சப்தங்களும் உள்ள மொழி

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சிக்ஷை: வேதத்தின் மூக்கு

எல்லா சப்தங்களும் உள்ள மொழி

மேலே சொன்னதிலிருந்து ஸம்ஸ்கிருதத்தில் f (எஃப்) சப்தம் உண்டு என்றாயிற்று. அந்த பாஷையில் இல்லாத சப்தம் எதுவும் கிடையாது. 'ழ' தமிழில்தான் இருக்கிறது என்றுதானே பொதுவில் நினைத்துக் கொண்டிருக்கிறோம்?

ஸம்ஸ்கிருதத்துக்கு மூலமான வேத பாஷையிலும் 'ழ' இருக்கிறது! யஜுர்வேதத்தில் 'ட' வருகிற பல இடங்களில், தலவகார ஸாம வேதத்தில் 'ழ' மாதிரியே சொல்ல வேண்டும். சில இடங்களில் ரிக் வேதத்திலும் 'ழ' காரமாகத்தான் கொஞ்சம் மாற்றிச் சொல்ல வேண்டும். ரிக்வேதத்தின் முதல் ஸூக்தத்தின் முதல் வார்த்தையான "அக்னிமீளே" என்பதில் வருகிற 'ளே' என்பதையே இப்படி 'ழ' காரம் மாதிரி, 'அக்னிமீழே' என்றுதான் சொல்லவேண்டும். பூர்ண 'ழ' இல்லை; கிட்டத்தட்ட அம்மாதிரி இருக்கும் சப்தமாகச் சொல்ல வேண்டும்.

பிரெஞ்சு பாஷையிலும் 'ழ' வுக்கு ரொம்ப நெருக்கமான சப்தம் இருக்கிறது. ஆனால் பிரெஞ்சு, ஸம்ஸ்கிருதம் இரண்டு லிபியிலும் 'ழ' வுக்குத் தனி எழுத்து இல்லை. J,G என்ற எழுத்துக்களே பிரெஞ்சில் 'ழ'வையும் குறிக்கிறது. ஸம்ஸ்கிருதத்தில் 'ள' என்ற எழுத்தே 'ழ' வையும் குறிக்கிறது.

சீன பாஷையிலும் 'ழ' மாதிரியான சப்தம் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

[ஃ என்று] மூன்று புள்ளி வைத்துத் தமிழில் ஆய்தம் என்கிறோமே, அதுவும்கூட ஸம்ஸ்கிருதத்தில் உண்டு. பாணினியின் வியாகரண ஸூத்ரத்தில் "ஹ கப் பௌச" என்று ஒரு ஸூத்ரம் இருக்கிறது. இதன்படி "ராம:" plus "கருணாகர:" என்கிற மாதிரி, ஒரு விஸர்க்கத்துக்கு அப்புறம் 'க'- காரம் வந்தால், அந்த விஸர்க்கமானது முன்னே சொன்ன மாதிரி 'ஹ' சப்தத்தைக் கொடுக்காமல்,

"அஃது" என்பதில் வரும் 'ஹ' மாதிரியான ஆய்த சப்தத்தையே கொடுக்கும்.

இதே ஆய்தமாகிற விஸர்க்கந்தான் 'ப' காரத்துக்கு முன்னால் f ஆகிறது.

ராம: plus கருணாகர: என்பது "ராமஃ கருணாகர:". ராம plus பண்டித: என்பது "ராம f பண்டித:". இந்த 'f' சப்தத்துக்கு "உபத்மானீயம்" என்று பெயர். "த்மா" என்றால் ஊது குழலினால் அடுப்பை ஊதுகிற மாதிரிப் பண்ணுவது. அப்போது f சப்தம் தான் வரும்! இங்கிலீஷில் புல்லாங்குழலின் பெயரே "f" ல் தான் ஆரம்பிக்கிறது! Flute!

Fa-வைப்பற்றி இன்னொன்று சொல்ல வேண்டும். நாம் fa-வைப் பொதுவில் pa- ஆக்கி விடுகிறோம். இப்படித்தான் coffee- ஐ காப்பியாக்கிவிட்டோம் என்று நினைத்தால் அது தப்பு. 'கபிசம்' என்றால் ஸம்ஸ்கிருதத்தில் டார்க் ப்ரௌன் நிறம் என்று அர்த்தம். அதுதான் காப்பிப்பொடி நிறம். அதனால் நம் கபிசத்தைத்தான் வெள்ளைக்காரன் coffee ஆக்கிவிட்டான் என்று தோன்றுகிறது.

தமிழில் சொல்கிற குற்றியலுகரம் போன்ற சப்தம் ஸம்ஸ்கிருதத்திலும் ரு,லு இரண்டுக்கும் உண்டு. ரிக்வேதம், ருக்வேதம் என்ற இரண்டு தினுஸாக எழுதுவது வாஸ்தவத்தில் 'ரி' யும் இல்லை, 'ரு' வும் இல்லை. அது குற்றியலுகர சப்தம் மாதிரியானதுதான். 'க்ருஷ்ணன்' என்பதில் வருகிற 'ரு', 'ரிஷி' யில் வரும் 'ரி' இவையும், இ–க்கும் உ–க்கும் இடைப்பட்ட அதே சப்தம்தான். க்ருஷ்ணன் என்று தமிழில் 'ரு' போட்டு எழுதினாலும், இங்கிலீஷில் Krishna என்று 'ரி' போடுகிறோம். வடக்கத்திக்காரர்கள் சில

பேர் Krushna என்று எழுதுகிறார்கள். தெலுங்கர்கள் "ஹ்ருதயம்" முதலான வார்த்தைகளில் வருகிற இந்த குற்றியலுகர 'ரு' வைப் பூரண 'ரு' வாகவே சொல்வதைக் கேட்க வேடிக்கையாக இருக்கும்!

ர-காரம், ல-காரம் இரண்டுக்கு மட்டும் ஸம்ஸ்கிருதத்தில் குற்றியலுகர 'உ' சேர்கிறது. ர-காரத்தில் உள்ள ரிக், ரிஷி மாதிரி , ல- காரத்தில் வார்த்தையின் முதல் எழுத்தாகக் குற்றியலுகர 'லு' தனியே வராது. லுப்தம், லுலிதம் முதலான வார்த்தைகளில் வருவது பூரண 'லு' தான். கூட்டெழுத்தில் மட்டுமே குற்றியலுகர 'லு' வரும். "க்லுப்தம்" மாதிரியான கூட்டெழுத்திலேயே அது வருகிறது.

இந்தக் குற்றியலுகர ரு, லு இரண்டையும் ஸம்ஸ்கிருதத்தில் ர-கர, ல-கர வரிசையில் சேர்க்காமல், உயிரெழுத்து வரிசையிலேயே, அ-ஆ-இ-ஈ-உ-ஊ-வுக்கு அப்புறம் ரு, லு என்று சேர்த்திருக்கிறது. இதற்கப்புறம் ஏ, ஐ, ஓ, ஔ, அம், அ: - என்று வரும்.

அ-ஆ; இ-ஈ; உ-ஊ என்று இரண்டிரண்டாக ஒரு குறிலும் ஒரு நெடிலும் இருக்கிற மாதிரி ஸம்ஸ்கிருதத்தில் எ-ஏ, என்று இரண்டு இல்லை. நெடிலான ஏ மட்டும்தான் இருக்கிறது. இப்படியே ஒ-ஓ என்று இரண்டில்லை. ஓ மட்டுமே இருக்கிறது. இது எனக்கு ரொம்பக் குறையாக இருந்தது. பராசக்தி ஸகல சப்த ஸ்வரூபமாக இருக்கப்பட்டவள் என்றால், தேவ பாஷையில் அத்தனை சப்தங்களும் இருக்க வேண்டாமா? மற்ற எல்லா சப்தங்களும் உள்ள ஸம்ஸ்கிருதத்தில் இந்தக் குறை

மட்டும் இருக்கலாமா என்று வருத்தமாக இருந்தது. பாணினியின் வியாகரண ஸூத்ரத்துக்குப் பதஞ்சலி செய்துள்ள மஹாபாஷ்யத்தைப் பார்த்த பின் இந்தக் குறில் எ, ஒ சப்தங்களும் ஸம்ஸ்கிருதத்தில் உண்டு என்று தெரிந்து ரொம்ப ஆறுதலாக இருந்தது. ஸாமவேதத்தில் ஸாத்யமுக்ரி, ராணாயன என்ற இரண்டு சாகைகளைச் சேரந்தவர்கள் குறிலான எ, ஒ சப்தங்களை வேத அத்யயனத்தில் உபயோகிக்கிறார்கள் என்று அவர் சொல்லியிருக்கிறார். *

சந்தோகானாம் சாத்யமுக்ரி ராணாயனீயா: அர்தம் ஏகாரம் அர்தம் ஓகாரம் ச அதீயதே.

இப்படியாக ஸம்ஸ்கிருதத்தில் ஸகல சப்தங்களும் இருக்கின்றன. இன்ன எழுத்துக்கு இன்ன சப்தம் என்றும் ரொம்பவும் திருத்தமாகப் பண்ணிக் கொடுத்திருக்கிற லிபியும் அதற்கு இருக்கிறது.

* சண்டோகானாம் ஸாத்யமுக்ரி ராணாயனீயா: அர்தம் ஏகாரம் அர்தம் ஓகாரம் ச அதீயதே.

சுதேச-விதேச மொழிகளும், லிபிகளும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சிக்ஷை : வேதத்தின் மூக்கு

சுதேச-விதேச மொழிகளும், லிபிகளும்

இந்திய பாஷைகள் எல்லாவற்றுக்குமே ஒரு விசேஷம். அவற்றில் எழுதியிருப்பவை ஸ்பஷ்டமான சப்தங்களாகச்

சொல்லப்பட வேண்டியவை. World என்று எழுதினாலும் சொல்லும்போது, முதலில் வருவதே 'வே'யும் இல்லாமல், 'வோ'வும் இல்லாமல் ஒரு அஸ்பஷ்ட (ஸ்பஷ்டமில்லாத) சப்தம்; அப்புறம் 'r' என்பதையும் அஸ்பஷ்டமாக மழுப்பிக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. இப்படி அநேக அஸ்பஷ்ட சப்தங்கள் அந்நிய பாஷைகளில் இருக்கின்றன. இவற்றை 'அவ்யக்த சப்தம்' என்பார்கள். நம் தேச மொழிகள் யாவும் ஸ்பஷ்டமான வ்யக்த சப்தங்களே கொண்டவை.

எழுத்துக்கும் உச்சரிப்புக்கும் பொதுவான ஒரே விதி இல்லாமல் பல விதமாக குழப்புகிறதும் அந்நிய பாஷைகளில்தான் மிகவும் அதிகமாகக் காண்கிறது. ஒரே 'க' சப்தத்துக்கு C,K,Q, என்று மூன்று எழுத்து இருப்பது போல் இந்திய பாஷைகளில் இராது. 'ஃப' சப்தம் ஒன்றுக்கே இங்கிலீஷில் f (fairy) , ph (philosophy) , gh (rough) என்று மூன்று விதமான ஸ்பெல்லிங் இருக்கிறது. C என்ற எழுத்தை 'ஸி' என்ற ஸகாரமாகச் சொன்னாலும், அந்த எழுத்தில் ஆரம்பிக்கிற பெரும்பாலான வார்த்தைகள் 'க' காரமாகவே இருக்கின்றன. ஸெல், ஸெலுலாய்ட், ஸினிமா மாதிரி ஏதோ சிலதில்தான் c-க்கு ஸகார சப்தம் இருக்கிறது. இன்னொரு பக்கத்திலோ அந்நிய பாஷைகளில் ஒரு எழுத்துக்கே வெவ்வேறு சப்தமும் இருக்கிறது. இன்னொரு பக்கத்திலோ அந்நிய பாஷைகளில் ஒரு எழுத்துக்கே வெவ்வேறு சப்தமும் இருக்கிறது. மேலே சொன்னபடி c என்பது க, ஸ இரண்டுக்கும் வருகிறது. Fat என்கிறபோது a என்பது 'ஏ' மாதிரி தொனிக்கிறது. Fast என்கிற போது அதே a என்பது 'ஆ' வாகத் தொனிக்கிறது. சில

ஸ்பெல்லிங்குகளுக்கும் உச்சரிப்புக்கும் சம்பந்தமே இல்லை. Station, Nation முதலான வார்த்தைகளில் tion என்று எழுதிவிட்டு, அதை ஸம்பந்தமேயில்லாமல் 'ஷன்' என்று படிக்க வேண்டியிருக்கிறது.

ரோமன் ஆல்ஃபபெட் என்கிற இங்கிலீஷ் முதலான பாஷைகளின் லிபியில் இருபத்தியாறே எழுத்துக்கள் இருப்பதால் முதலில் கற்றுக் கொள்ள ஸுலபமாக இருக்கிறது. நம் தேச பாஷா லிபிகளில் நிறைய எழுத்து இருப்பதால் முதலில் சிரமப்பட்டே தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் இப்படி ஒரு வருஷம் கஷ்டப்பட்டு பால சிக்ஷை வாசித்து விட்டால், பிற்பாடு அந்த பாஷையிலுள்ள ஸகல புஸ்தகங்களையும் கிறுகிறுவென்று வாசித்து விடலாம். இங்கிலீஷிலோ எம்.ஏ.பாஸ் பண்ணின பிறகு கூட, அநேக வார்த்தைகளின் உச்சரிப்புக்கு டிக்ஷனரியில் போட்டிருக்கிற உச்சரிப்பு விளக்கத்தை பார்க்க வேண்டியிருக்கிறது.

இப்படி இந்திய பாஷைகளுக்கு இருக்கிற சிறப்பு இந்திய பாஷைகளுக்குள்ளும் ஸம்ஸ்கிருதத்துக்கு பரிபூரணமாக இருக்கிறது. இதனால் நம் தேசத்தை விட அந்நியமானது மட்டமானது என்றோ, நம் தேசத்திலேயே ஸம்ஸ்கிருதத்தை விட மற்றப் பாஷைகள் தாழ்த்தி என்றோ நான் சொல்லவில்லை. சில fact -களை (நடைமுறை உண்மைகளை) சொன்னேன். அவ்வளவுதான்!

சப்த ப்ரம்மாத்மகமாக இருக்கப்பட்ட பரமாத்மாவின் பரிபூர்ண ஸ்வரூபமாக ஸம்ஸ்கிருதம் இருக்கிறது என்று தெரிவதைச் சொன்னேன்.

எல்லா பாஷையும் எல்லாருக்கும் பொதுதான் என்ற மனப்பான்மை வரவேண்டும். அப்போது யாரையும் யாரும் மட்டம் தட்டத் தோன்றாது. பரஸ்பரம் அபிப்ராயப் பரிவர்த்தனைக்காக ஏற்பட்டதே பாஷை என்ற அடிப்படையான உண்மையை மறந்து விட்டதால்தான், இப்போது தாய் பாஷை ஒன்றிடமே வெறி மாதிரியான பற்றுதல், பிறபாஷைகளிடம் துவேஷம் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. மற்ற எல்லா விஷயங்களிலும் பரந்த மனப்பான்மை, இன்டர்நேஷனல் அவுட்லுக் (ஸர்வ தேச நோக்கு) என்று சொல்லி விட்டு இந்த பாஷை விஷயத்தில் மட்டும் இத்தனை குறுகின புத்தி வந்துவிட்டதைப் பார்க்கிறபோது பரிதாபமாக இருக்கிறது.

ஸம்ஸ்கிருத சப்தங்களை சிக்ஷா சாஸ்திரம் எப்படி ஸ்பஷ்டமாக நிர்ணயித்துக் கொடுத்திருக்கிறது என்பதில் ஆரம்பித்து, பெரிய பாரதமாக மொழி ஆராய்ச்சி சண்டைகளில் கொண்டு விட்டுவிட்டது!

அக்ஷமாலை

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சிக்ஷை : வேதத்தின் மூக்கு

அக்ஷமாலை

ருத்ராக்ஷ மாலை என்றால் ருத்ரன் கண்ணிலிருந்து உண்டானதான ருத்ராக்ஷத்தை கோத்துச் செய்த மாலை என்று அர்த்தம். 'அக்ஷம்' என்றால் இங்கே 'கண்' என்று பொருள். 'திருக்கண்மணி' என்றே ருத்ராக்ஷத்துக்குத்

தமிழில் பேர் உண்டு. அது ஸரி, வெறுமே அக்ஷமாலை, ஸ்படிக அக்ஷமாலை, என்றெல்லாம் சொன்னால் என்ன அர்த்தம்? இங்கே 'அக்ஷம்' என்றால் கண் என்று பொருள் கொண்டால் சரியில்லை. ஆகவே இங்கே அக்ஷம் என்றால் அ –விலிருந்து க்ஷ – வரையிலான அக்ஷரங்கள் என்று அர்த்தம் பண்ணிக்கொள்ள வேண்டும். ஸம்ஸ்கிருதத்துக்கான லிபியில் முதல் எழுத்து அ; கடைசி எழுத்து க்ஷ. இங்கிலீஷில் ஒரு விஷயத்தை அடியோடு நுனி சொல்வதற்கு "A to Z" என்கிற மாதிரி ஸம்ஸ்கிருதத்தில் "அ–காராதி க்ஷ–காராந்தம்" என்பார்கள். இப்படி உள்ள மொத்த எழுத்துக்கள் 50. அதனால் 50 மணி கொண்ட ஜபமாலைக்கு அக்ஷமாலை என்று பெயர். 51-வது மணியாக ஒரு பெரிய மணி இருக்கும். அதற்கு மேரு என்று பேர். மேருவைத் தாண்டாமல் ஸூரியன் திரும்பிவிடுவதாக ஐதிகம். அம்மாதிரியே, ஜபம் செய்கிறவர்கள் இந்த மேரு வந்ததும் திரும்பி உருட்டினால், ஒரு தரம் இப்படி முன்னும் பின்னுமாக ஜபித்து முடிக்க நூறு ஆவிருத்தி மந்திரமாகியிருக்கும்.

உச்சரிப்பின் முக்யத்துவம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சிக்ஷை : வேதத்தின் மூக்கு

உச்சரிப்பின் முக்யத்துவம்

அக்ஷர, ஸ்வர சுத்தம் மாறினால், ஒரு மந்திரத்தின் பலன் ஏற்படாது என்பதோடு மட்டுமின்றி விபரீத பலனே உண்டாகிவிடும் என்பதால், மந்திர அநுஸந்தானத்தில் பரம

ஜாக்ரதையாக இருக்க வேண்டும். இதை வலியுறுத்தி சொல்கிற கதையொன்று வேதத்திலேயே தைத்திரீயத்தில் வருகிறது. (தைத்திரீய ஸம்ஹிதை – II.4.12)

த்வஷ்டா என்கிறவன் ஒரு காரணத்துக்காக, 'இந்திரன் மேல் பழி தீர்த்துக் கொள்ளவேண்டும், அவனைக் கொல்லக் கூடிய பிள்ளையைப் பெற வேண்டும்' என்று நினைத்து, ஒரு மந்திரம் சொல்லி ஹோமம் பண்ணுகிறான். "இந்த்ர சத்ருர் வர்தஸ்வ" என்று அந்த மந்திரத்தைச் சொல்லும் போது 'இந்த்ர' என்பதை ஏற்றல் இறக்கல் இல்லாமல் ஸமமாகவும், 'சத்ரு' என்பதில் 'த்ரு'வைத் தூக்கியும் (உதாத்தமாகவும்) , 'வர்தஸ்வ' என்பதில் 'ர்த' வையும் இப்படியே தூக்கியும் சொல்லியிருக்கவேண்டும். அப்படிச் சொன்னால் த்வஷ்டாவின் பிள்ளை, 'இந்திரனைக் கொல்லுபவனாக வளரட்டும்' என்ற அர்த்தம் ஏற்படும். ஸ்வர சக்தியாலேயே அவன் அப்படி வளர்ந்து, இந்திரனை வதம் பண்ணியிருப்பான். அதாவது, 'இந்த்ர' என்பதில் 'த்ர'வைத் தூக்கியும் (உதாத்தமாகவும்) , வர்ஸ்தவ என்பதில் 'ர்த' வையும் இப்படியே தூக்கியும் சொல்லியிருக்கவேண்டும். அப்படிச் சொன்னால் த்வஷ்டாவின் பிள்ளை, 'இந்திரனைக் கொல்லுபவனாக வளரட்டும்' என்ற அர்த்தம் ஏற்படும். ஸ்வர சக்தியாலேயே அவன் அப்படி வளர்ந்து, இந்திரனை வதம் பண்ணியிருப்பான். ஆனால் த்வஷ்டா உச்சரிப்பிலே தப்புப் பண்ணிவிட்டான். அதாவது, 'இந்த்ர' என்பதில் 'த்ர' வைத் தூக்கியும் 'சத்ரு' என்பதை ஸமமாகவும், 'வர்தஸ்வ' என்பதில் 'ர்த'வை ஏற்றுவதற்குப் பதில் இறக்கி அநுதாத்தமாகவும் சொல்லிவிட்டான். இதனால்

'இந்திரனை இவன் கொல்பவனாக வளரட்டும்' என்று அர்த்தம் தலைகீழாக மாறிவிட்டது. வார்த்தைகளும் எழுத்துக்களும் மாறாவிட்டாலும்கூட, ஸ்வரங்களில் ஏற்பட்ட பிழையாலேயே த்வஷ்டா வேண்டியதற்கு நேர்மாறான பலன் உண்டாகிவிட்டது. இவனுடைய பிள்ளையை இந்திரன் வதம் பண்ணிவிட்டான். த்வஷ்டாவின் பிள்ளையான விருத்திரன் இந்திரனால் கொல்லப்படுவதற்கு அவன் தகப்பனாரே இப்படிக் காரணபூதனாகி விட்டான்.

இதைச் சொல்லி, மந்திர உச்சாரணத்தில் நம்மை ஜாக்கிரதைப்படுத்தும் ச்லோகம் ஒன்று உண்டு:

மந்த்ரோ ஹீன: ஸ்வரதோ வர்ணதோ வா
மித்யாப்ரயுக்தோ ந தமர்த்தமாஹ।

ஸ வாக் வஜ்ரோ யஜமானம் ஹினஸ்தி யதா இந்த்ரசத்ரு: ஸ்வரதோ (அ) பராதாத்॥

இந்திரனுடைய வஜ்ராயுதத்துக்குப் பதில், த்வஷ்டா தப்பாகச் சொன்ன வாக்கே வஜ்ரமாகிக் கொன்றுவிட்டதாம்!

சில சிறிய வித்யாஸங்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சிக்ஷை : வேதத்தின் மூக்கு

சில சிறிய வித்யாஸங்கள்

வேதத்தின் அக்ஷர சுத்தத்தைப் பற்றி இத்தனை சொன்னேன். நான் சொன்னதற்கு அநுஸரணையாகவே

ஆஸேது ஹிமாசலம் [ராமேச்வரத்திலிருந்து இமயமலைவரை] அத்தனை இடங்களிலும், ஒருத்தருக்கொருத்தர் தொடர்பேயில்லாமல், புஸ்தகமுமில்லாமல், வாய்மொழியாகவே வேதத்தைப் பாடம் பண்ணி வந்துள்ள போதிலும் எல்லாப் பாடங்களும் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது சதவிகிதம் அக்ஷர வித்யாஸமில்லாமல் ஒன்றாகவே இருக்கிறது.

அப்படியானால், இந்த பாக்கி ஒரு சதவிகிதத்தில் வித்யாஸம் இருக்கிறதா என்றால் இருக்கத்தான் செய்கிறது. ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள ஒவ்வொரு சாகைக்கும் இடையில் இம்மாதிரித் துளித்துளி அக்ஷர வித்யாஸம் இருக்கத்தான் செய்கிறது.

இப்படி இருக்கலாமா? ஒரு அக்ஷரம் தப்பினால்கூட விபரீத பலனாகும் என்று சொல்லிவிட்டு, ஒரே மந்திரமானது வெவ்வேறே சாகைகளில் வெவ்வேறே பிரதேசங்களில் வரும்போது அதில் ஒரு பெர்ஸென்ட் அக்ஷர வித்யாஸம் ஏற்படுகிறது என்றால் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லையே! மூலரூபம் ஒன்றுதான் என்றால், அதில் ஒரு பெர்ஸென்ட் வித்யாஸத்தோடு இன்னொன்று வந்தால் கூட, அது பலன் தராதுதானே? அல்லது விபரீத பலன்தானே தரும்?

இப்படிக் கேள்வி கேட்டால் பதில் இருக்கிறது. ஒரு மருந்துக்குப் பதில் இன்னொன்றை மாற்றிச் சாப்பிட்டால் விபரீதம் என்ற மாதிரி, அக்ஷரத்தை மாற்றினால் தப்புத்தான். ஆனால் மருந்தை மாற்றக்கூடாது என்பது வியாதிஸ்தனுக்குச் சொன்னதுதான். அவனாக மருந்தை

மாற்றிவிடக்கூடாது. ஆனால் டாக்டர் மாற்றலாம் அல்லவா? ஒரே வியாதிக்குப் பல மருந்துகள் இருக்கின்றன. அப்போது இதைச் சாப்பிடலாம், அல்லது இன்னொன்றைச் சாப்பிடலாம் என்று டாக்டரே 'பிரிஸ்க்ரைப்' பண்ணினால் அதில் தப்பில்லை தானே? ஒரே வியாதி இரண்டு பேருக்கு வந்திருக்கிறபோது, அவர்களின் தேகவாகிலே இருக்கிற வித்யாஸத்தை அநுசரித்து, ஒரே மருந்திலேயே கொஞ்சம் கொஞ்சம் சரக்குகளை மாற்றி, டாக்டர் கொடுக்கலாம் அல்லவா?

இம்மாதிரிதான், ஒன்றுக்கொன்று விபரீதமான பலன் உண்டாக்குகிற அக்ஷரங்களாக இல்லாமல், ஒரே மாதிரியான பலனை உண்டாக்குகிற அக்ஷரங்களை ரிஷிகள் பல சாகைகளுக்கிடையிலே மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த சாகையை அத்யயனம் செய்ய அதிகாரிகளாக யார் பிறப்பார்களோ அவர்களுக்கு இந்த அக்ஷர மாற்றங்கள் க்ஷேமத்தை உண்டு பண்ணும் என்பதால் இப்படிச் செய்திருக்கிறார்கள். இவற்றைப் பற்றிய விதிகள் பிராதிசாக்யத்தில் தெளிவாகக் கூறப்படுகின்றன.

அக்ஷரங்களுக்குள்ளே மாறுபாடு என்றால் பெரிய வித்யாஸம் இல்லை. அக்ஷரங்கள் ஸம்பந்தாஸம்பந்தமில்லாமல் மாறிவிடாது. பெரும்பாலும் ஒரே மாதிரியாக ஒலிக்கிற சப்தங்களே ஒன்றக்குப் பதில் இன்னொன்று வரும். அவ்வளவுதான். ரொம்பவும் கிட்டக் கிட்ட இருக்கிற அக்ஷரங்களில் ஒன்றுக்குப் பதில் இன்னொன்று வரும்.

வேத சப்தமும் பிரதேச மொழிச் சிறப்பும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சிக்ஷை : வேதத்தின் மூக்கு

வேத சப்தமும் பிரதேச மொழிச் சிறப்பும்

இந்திய பாஷைகள் பலவற்றிலே இருக்கப்பட்ட தனிப்பட்ட விசேஷங்களையெல்லாம் அங்கங்கே இருக்கிற வேதாத்யயன அக்ஷர வித்யாஸங்களோடு இணைத்துப் பார்க்கிறபோது, ஒவ்வொரு பாஷைக்கும் உள்ள தனிப் பண்புகளுக்கும், இதனால் அவைகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள வித்யாஸங்களுக்கும் அந்தந்தப் பிரதேசத்திலுள்ள வேத சப்தங்களே காரணம் என்ற பெரிய விஷயம் தெரிகிறது. இப்படி நான் ஃபைலாலாஜிகலாகப் பண்ணின சில ஆராய்ச்சிகளைச் சொல்கிறேன்:

ட (d'a) - ர–ல–ள–ழ என்று ஐந்து சப்தங்களும் ஒன்றுக்கொன்று கிட்டத்தில் இருக்கிறவை. ஒரு குழந்தையிடம் போய், "ரயில் என்று சொல்லு, ராமன் என்று சொல்லு" என்றால் அது "டயில்", "டாமன்" என்கிறது. 'ர' வும் 'ட'வும் கிட்டத்தில் இருப்பதாலேயே இப்படிச் சொல்கிறது. 'சிவராத்ரி' என்பதைப் பல பேர் 'சிவலாத்ரி' என்கிறார்கள். 'துளிப்போல' என்பதற்குத் 'துளிப்போர' என்கிறோம். இங்கே 'ல'வும் 'ர'வும் ஒரே மாதிரியான சப்தங்கள் என்று தெரிகிறது. மேலே 'ர' வும் 'ட'வும் மாறுவதைச் சொன்னேன். அதனால் 'ல'வும் 'ட'வாக மாறலாம் என்று ஏற்படுகிறது. அதனால் 'ல' வும் 'ள' வும் ரொம்ப நெருங்கினவை. அநேகமாக நாம் 'லளிதம்,' 'நளினம்,' 'சீதளம்' என்று சொல்கிறதை, ஸம்ஸ்கிருத

புஸ்தகங்களில் 'லலிதம்', 'நலினம்,' 'சீதலம்' என்றுதான் போட்டிருக்கும்; அத்தனை நெருங்கினவை. 'ள'வும் 'ழ' வும் ரொம்ப ஆப்தம் என்பதைச் சொல்லவே வேண்டாம். தமிழுக்கே ஏற்பட்ட மதுரையிலே இருக்கிறவர்கள் 'வாழைப் பழம்' என்பதை 'வாளைப் பளம்' என்றுதானே சொல்கிறார்கள்? தமிழுக்கே பிரத்யேகமானது என்று நினைக்கிற 'ழ'வை மாற்றிச் சொல்கிறார்கள்?

இப்போது நான் ஒரு புது விஷயம் சொன்னேன், தமிழில் மாத்திரம் இருப்பதாக நினைக்கப்படும் இந்த 'ழ' வேதத்திலும் இருக்கிறது என்று. ஸாமவேதத்தில் ஜைமினி சாகை என்று ஒன்று இருக்கிறது. அதைத் தலவகார சாகை என்றும் சொல்வார்கள். மற்ற வேதங்களில் மற்ற சாகைகளில் 'ட' அல்லது 'ள' வாக இருப்பதை, தலவகார சாகையில் 'ழ' மாதிரிதான் ஒலிக்க வேண்டும். முறைப்படி தலவகார சாகையில் அத்யயனம் பண்ணினவர்கள் இப்படித்தான் 'ழ' காரமாகச் சொல்கிறார்கள். அதைப் பூர்ணமான 'ழ' என்று வேண்டுமானால் சொல்ல முடியாமல் இருக்கலாம். ஆனால் உள்ளூர (அந்தர்பாவமாக) அது 'ழ' சப்தந்தான் என்பதில் ஸந்தேஹமில்லை.

ரிக்வேதத்திலேயே கூட இப்படி 'ழ'காரம் சில இடங்களில் ஒலிக்கிறதுண்டு. ஸாதாரணமாக 'ட'வும் 'ள'வும் ஒன்றுக்கொன்று மாறிவரும் என்றபடி, யஜுர் வேதத்தில் 'ட'காரம் வருமிடங்களில், ரிக் வேதத்தில் 'ள' காரம் வருவதுண்டு. வேதத்தில் முதல் மந்திரத்தில் முதல் வார்த்தை 'அக்னிமீடே' என்பது. 'அக்னிமீடே' என்பது இப்போது அநுஷ்டானத்திலே மெஜாரிட்டியாக இருக்கிற

யஜுர்வேதப் பாடம்தான். ரிக்வேதத்தில், இது 'அக்னிமீளே' என்றுதான் இருக்கிறது. இங்கே 'ளே' என்பதை 'ழே' மாதிரிச் சொல்ல வேண்டும். யஜுர்வேதத்திலே வருவதும், ரொம்பப் பிரஸித்தியோடு இருப்பதுமான ஸ்ரீ ருத்ரத்தில், 'மீடுஷ்டமாய' என்று ஒரு இடத்தில் வருகிறது. இந்த வார்த்தை ரிக்வேதத்திலும் உண்டு. அங்கே "மீடு"வில் வரும் 'டு' என்பது 'ள' காரமாக இல்லாமல், 'ழ' காரம் அந்தர்பாவமாகத் தொனிக்கிற சப்தமாகவே இருக்கிறது.

பொதுவாக, ரிக் வேதத்தில் 'ள'வாக இருப்பது, யஜுர் வேதத்தில் 'ட'வாகவும், தலவகார ஸாமவேதத்தில் 'ழ'வாகவும் இருப்பதாகச் சொல்லலாம். இப்போது இந்த ஒவ்வொரு வேதமும் நிறைய அநுஷ்டானத்திலுள்ள பிரதேசங்களை எடுத்துக் கொண்டு, அந்தப் பிரதேச பாஷைகளின் விசேஷத்தைப் பார்க்கலாம்.

'வேதம் ஆரியர்களைச் சேர்ந்தது; திராவிடம் அதற்கு வித்யாஸமானது' என்று இக்காலத்தில் கிளப்பி விட்டிருப்பதால், திராவிடத்திலுள்ள மூன்று பிரதேசங்களையே எடுத்துக் கொள்ளலாம். அதாவது, தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று பாஷைகளை எடுத்துக் கொள்ளலாம்.

தமிழிலே 'ழ'காரம் விசேஷம். தெலுங்கிலே 'ட' (da) சப்தத்தின் பிரயோகம் விசேஷமாக வருகிறது. கன்னடத்தில் 'ள' என்ற சப்தம் அதிகமாக இருக்கிறது. கன்னடத்தில் 'ள' என்ற சப்தம் அதிகமாக இருக்கிறது. தமிழிலே 'ழ' வரும் இடங்களில், தெலுங்கிலே 'ட'வும் கன்னடத்தில் 'ள' வும் வருகின்றன. உதாரணமாக,

'ப்ரவாளம்' என்று ஒரு ஸம்ஸ்கிருத வார்த்தை இருக்கிறது. 'பவழம்' என்று தமிழில் சொல்வது அதுதான் . இதையே தெலுங்கிலே சொல்லும்போது 'பகடாலு' என்கிறார்கள். கன்னடத்தில் 'ஹவள' என்று சொல்கிறார்கள்.

'ப்ரவாளம்' என்பதுதான் 'பவழ' மாயிருக்கிறது; 'பகடாலு' ஆகியிருக்கிறது. ஸம்ஸ்கிருத வார்த்தை தமிழில் மாறியதைவிடத் தெலுங்கில் ஜாஸ்தி மாறி, 'ப்ரவாளத்'தில் வரும் 'வ'வும் 'க' என்று வித்யாஸப்பட்டிருக்கிறது. அது தெலுங்கு மொழிப்பண்பு (genius of the language) . இதே போல, 'ப்ரவாள' என்பது கன்னட 'ஹவள' மாகிற போது, முதல் எழுத்தே ரொம்பவும் மாறுகிறது. 'ப்ர' என்பது தமிழிலும், தெலுங்கிலும் 'ப' ஆனது சின்ன மாறுதல்தான். கன்னடத்திலோ 'ஹ' என்றே மாறிவிட்டது. ஆனால் இதுதான் கன்னடத்தின் பிரத்யேக மொழிப் பண்பு. மற்ற பாஷைகளில் 'ப' வாக இருப்பது அதிலே 'ஹ' வாக விடும். 'பம்பா' (ஸரஸ்) என்பது 'ஹம்பா' என்றாகி, 'ஹம்பி' (Humpi ruins) என்றாகியிருக்கிறது. நாம் 'பால்' என்பதை கன்னடத்தில் 'ஹாலு' என்கிறார்கள். நாம் 'புகழ்' என்றால் கன்னடத்தில் 'ஹொகளு' என்பார்கள். இங்கெல்லாம் 'ப' என்பது 'ஹ' வாகிறது போலத்தான், 'ப்ரவாள'மும் 'ஹவள'மாகிறது'.

நான் இந்த ப-ஹ வித்தியாஸத்தைச் சொல்ல வரவில்லை. 'ப்ரவாள'த்தின் 'ள', தமிழில் 'ழ' வாகவும், தெலுங்கில் 'ட' வாகவும், கன்னடத்தில் மூலமான 'ள' ரூபத்திலேயே இருப்பதையுந்தான் சுட்டிக்காட்ட வந்தேன்.

இந்த வார்த்தை மட்டும் இல்லாமல், அதாவது ஸம்ஸ்கிருத 'ரூட்'டிலிருந்து வந்த ப்ரவாளம் போன்ற

வார்த்தைகளில் மட்டும் இன்றி, திராவிட பாஷைகளில் மட்டுமே இருக்கிற வார்த்தைகளிலும் கூடத் தமிழில் 'ழ' வரும் இடத்தில் தெலுங்கில் 'ட' வும் கன்னடத்தில் 'ள' வும்தான் வருகிறது. மேலே சொன்ன "புகழ்" என்பதே இதற்கு ஒரு உதாரணம். 'புகழ்' என்ற வார்த்தை ஸம்ஸ்கிருத தாதுவிலிருந்து வந்ததல்ல. அது ஒரு திராவிட பாஷைச் சொல்தான்....

ஆரியர், திராவிடர் என்று இரு இனமாகப் பிரிந்திருக்காவிட்டாலும், ஒரே இனத்துக்காரர்கள் ஸம்ஸ்கிருதத் தொடர்புடைய பாஷைகளாகவும், திராவிட பாஷைகளாகவும் பிரிந்திருக்கிறார்கள் என்றுதான் இப்போது ஆராய்ச்சி உள்ள நிலையிலிருந்து தெரிகிறது. இன்னும் நன்றாக ஆராய்ச்சி பண்ணினால் இந்தப் பாஷா வித்யாஸமும் கூட இல்லாமல், எல்லாம் ஒரே மூலபாஷையிலிருந்து (Parent Stock -லிருந்து) வந்ததுதான் என்றுகூட ஏற்பட்டுவிடலாம். சில மொழி ஆராய்ச்சிக்காரர்கள் (linguists) இப்படித் தமிழ் – ஸம்ஸ்கிருத பாஷைகளின் ஐக்கியத்தைக் கூட ஆராய்ச்சி செய்வதாகத் தெரிகிறது. மிக மிக ஆதிகாலத்துக்குப் போனால் அப்படியிருக்கலாம். ஆனால் அதற்குப் பின் ஆயிரக்கணக்கான வருஷங்களாக, திராவிட பாஷைகள் வேறு ரூபமாக மாறிக்கொண்டுதான் வந்திருக்கின்றன. இந்த நிலையை ஏற்றுக்கொண்டு, இப்போதைக்கு திராவிட பாஷைகளைத் தனியாகப் பிரித்தே தான் இங்கே பேசுகிறேன்.

'புகழ்' என்ற தமிழ் வார்த்தை கன்னடத்தில் 'ஹொகளு' என்றும், தெலுங்கில் 'பொகடு' என்றும் இருக்கிறது.

இதிலிருந்தும் தமிழ் 'ழ' காரம் தெலுங்கில் 'ட'காரமாகவும், கன்னடத்தில் 'ள' காரமாகவும் இருப்பதாகத் தெரிகிறது.

இப்படித் தமிழுக்கு 'ழ'வும், தெலுங்குக்கு 'ட'வும் கன்னடத்துக்கு 'ள'வும் விசேஷமாக இருப்பதற்கு ஏதாவது காரணம் இருக்குமோ என்று ஆலோசித்துப் பார்த்த போது, அந்தந்தப் பிரதேசத்திலுள்ள வேத சாகையின் அத்யயனத்திலுள்ள அக்ஷர வித்யாஸம்தான் இதற்குக் காரணம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன்.

மஹாராஷ்டிரம், கர்நாடகம் உள்பட மேற்குப் பிரதேசத்தில் எந்த வேதம் நிறைய அநுஷ்டானத்தில் இருக்கிறது என்று பார்த்தால், ரிக் வேதமாகத்தான் இருக்கிறது. நாஸிக்கிலிருந்து கன்யாகுமரிவரை மேற்குக்கரைப் பிரதேசத்தில் பார்த்தால், ரிக்வேதம்தான் அதிகம். அதனால்தான், அந்தப் பிரதேசத்தில் வழங்குகிற கன்னட பாஷையில் 'ள' முக்கியமாக இருக்கிறது. வேத 'ள' வே திராவிட பாஷையாக நினைக்கப்படும் பிரதேச மொழியான கன்னடத்திலும் விசேஷ சப்தமாக வந்துவிட்டது!

விசாகப்பட்டினத்திலிருந்து மெட்ராஸுக்கு வடக்கு வரை கிழக்கு ஸமுத்திரக் கரையையும், அதை ஒட்டிய உள்நாட்டையும் எடுத்துக் கொண்டு, அதாவது ஆந்திர தேசத்தைப் பார்த்தால், அங்கே நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பேர்கள் யஜுர்வேதிகள்தான்; பாக்கி இரண்டு சதவிகிதம் ரிக்வேதிகள். தெலுங்கு தேசத்தில் ஸாமவேதிகள் இல்லை என்றே சொல்லி விடலாம். இந்தப் பிரதேசத்தில் யஜுர் வேதம் முக்கியமாயிருப்பதால், அத்யயனத்திலே ரிக்வேதத்தில் வரும் 'ள' இங்கே

'ட'வாகத்தானே ஓதப்படும்? இதை வைத்தே, இங்கே regional language (பிரதேச பாஷை) ஆக உள்ள தெலுங்கிலும், மற்ற பாஷைகளின் 'ள' என்பது 'ட'வாகி விடுகிறது!

தமிழ் தேசத்தை எடுத்துக் கொண்டால், பிற்காலத்தில் இங்கேயும் யஜுர்வேதிகள்தான் அதிகமாகி விட்டார்கள். ஆனாலும், தெலுங்கு தேசத்தில் உள்ள அளவுக்கு இருக்கமாட்டார்கள். தமிழ் நாட்டில் நூற்றுக்கு எண்பது பேர் யஜுர்வேதிகள் என்று சொல்லலாம். பாக்கியில், 15% ஸாமவேதம் இருக்கும்; 5% ரிக்வேதம் இருக்கும்.

இப்போது இப்படி இருந்தாலும், முற்காலங்களில் தமிழ் தேசத்தில் ஸாமவேதம் இன்னம் நிறைய இருந்திருக்கிறது என்பதற்கான சான்றுகள் இருக்கின்றன. ஸாம வேதத்திலிருந்த ஆயிரம் சாகையைச் சேர்ந்தவர்களும் தமிழ் நாட்டில் இருந்திருக்கிறார்கள் என்று ஊகிக்க முடிகிறது. "ஆயிரம் சாகை உடையான்" என்பதாகத் தேவாரத்திலேயே சில இடங்களில் ஈச்வரனை ஸ்தோத்திரம் செய்திருக்கிறது.

இந்த ஆயிரம் சாகைகளில், தற்போதுள்ள ஸாம வேதிகளில் 'கௌதுமம்' என்ற சாகையைச் சேர்ந்தவர்களே அதிகமாயிருந்தாலும், பூர்வத்தில் 'ஜைமினி சாகை' அல்லது 'தலவகாரம்' எனப்படுவதைச் சேர்ந்த ஸாம வேதிகள் நிறைய இருந்திருக்கிறார்கள். 'சோழியர்'கள் என்பதாகச் சோழ தேசத்துக்கே சிறப்பித்துப் பேசப்படுபவர்களில் இன்றைக்கும் ஸாமவேதிகளாக இருப்பவர்கள் தலவகார சாகையினராகத் தான் இருக்கிறார்கள். பாண்டிய நாட்டின் கோடியில், திருநெல்வேலியில் உள்ள சோழியர்களைப்

பார்த்தால் கூட தலவகார சாகைகாரர்களான ஸாமவேதிகளாக இருக்கிறார்கள். ஆதியில் சோழ தேசத்தில் மட்டுமின்றி பாண்டிய தேசத்திலும் ஸாமவேதம் நிறைய இருந்திருக்கவேண்டும் என்று இதிலிருந்து தெரிகிறது.

"சோழியர்" என்றால், ரொம்பவும் பூர்வத்திலிருந்தே தமிழ் நாட்டுக்காரர்களாக இருந்த பிராம்மணர்கள் என்று அர்த்தம் பண்ணிக்கொள்ளலாம். அவர்கள் தமிழ் நாட்டின் ஆதிவாசிகளான பிராம்மணர்கள். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், தமிழ் நாட்டு பிராம்மணர்களில் "வடமர்" என்றும் ஒரு பிரிவு இருக்கிறது. 'வடமாள்', 'வடமா' என்கிறோம். "என்ன வடைமாவா, தோசை மாவா?" என்று கேலிகூடப் பண்ணுகிறோம். இது "வடமர்" என்பதே. தமிழ் நாட்டில் ஆதியிலிருந்து வஸித்துவந்த சோழியர்களைத் தவிர பிற்பாடு வடக்கேயிருந்து, குறிப்பாக நர்மதா நதிப் பிரதேசத்திலிருந்து, தமிழ் நாட்டுக்கு வந்து குடியேறிய பிராம்மணர்களதான் இந்த வடமர்கள். பெயரே அவர்கள் வடக்கிலிருந்து வந்தவர்கள் என்று காட்டுகிறது

ஆனால், இப்போது சிலர் நினைக்கிற மாதிரி, "அத்தனை பிராம்மணர்களுமே வடக்கேயிருந்து இங்கே வந்தவர்கள்தான்; தமிழ் தேசத்தில் ஆதியில் பிராம்மணர்களே இல்லை" என்பது தப்பான அபிப்ராயம் என்பதற்கும், "வடமர்" என்ற வார்த்தையே proof -ஆக இருக்கிறது. எல்லா பிராம்மணர்களுமே வடதேசத்தைச் சார்ந்தவர்கள்தான் என்றால், தமிழ் நாட்டில் உள்ள அத்தனை பிராம்மணர்களுக்குமே "வடமர்" என்ற பெயர் ஏற்பட்டிருக்கும். அப்படியில்லாமல், தமிழ் நாட்டு

பிராம்மணர்களில் ஒரு பிரிவுக்கு மட்டுமே "வடமர்" என்று பெயர் இருப்பதாலேயே, பாக்கியுள்ள பிராம்மணர்கள் ஆதியிலிருந்து தமிழ்நாட்டையே சேர்ந்தவர் என்றுதானே அர்த்தமாகும்? அந்த ஆதித் தமிழ் பிராம்மணர்கள் தான் 'சோழியர்கள்' எனப்பட்டவர்கள்.

"வடமர்"கள் நர்மதா தீரத்திலிருந்து வந்தவர்கள் என்பதற்கு ஒரு ஆதாரம் இருக்கிறது. வடமர்கள் மட்டும் இன்றைக்கும் ஸந்தியாவந்தனத்தில்,

நர்மதாயை நம: ப்ராத: நர்மதாயை நமோ நிசி|

நமோஸ்து நர்மதே துப்யம் பாஹி மாம் விஷ ஸர்ப்பத:||

என்பதாக, நர்மதைக்குக் காலையிலும் நிசியிலும் வந்தனம் சொல்லி, தங்களை ஸர்ப்ப பயத்திலிருந்து ரக்ஷிக்கும்படி வேண்டிக் கொள்கிறார்கள்.

தெற்கேயே இருந்த சோழியர்களில், சோமாசி மாற நாயனார் என்று அறுபத்து மூவரில் ஒருவராகக் கூட ஒரு பெரியவர் இருந்திருக்கிறார். 'சோமாசி' என்றால் பக்ஷணம் இல்லை. "சோம யாஜி" – ஸோம யாகம் பண்ணுகிறவர் – என்பதே "சோமாசி" என்றாயிற்று. ஸ்ரீ ராமாநுஜாசாரியாரின் தகப்பனாரும் ஸோம யாகம் பண்ணினவர். கேசவ ஸோமயாஜி என்று அவருக்குப் பெயர். ஸாம வேதந்தான் ஸோம யாகங்களுக்கு விசேஷமானது.

தமிழ்நாட்டிலே முக்யமாகச் சோழியர்கள் ஆதியில் இருந்தார்கள் என்றால், இங்கே தலவகார ஸாமமும்

வெகுவாக அநுஷ்டானத்தில் இருந்திருக்க வேண்டும் என்றே அர்த்தம். இங்கே சோழ, பாண்டிய தேசங்களைப் பற்றிச் சொன்னேன். பல்லவ தேசம், சேரநாடு இவற்றின் பிராம்மணர்களைப் பற்றிச் சொல்லவில்லையே என்று தோன்றலாம். ரொம்பவும் பூர்வத்தில் பல்லவ ராஜ்யமே இல்லை. சேர-சோழ-பாண்டியர்கள் என்பவர்கள்தான் மூவேந்தர்கள். பிற்காலப் பல்லவ ராஜ்யமும், ஆதியில் சோழ ராஜ்யத்தில் அடங்கியிருந்ததுதான். அதனால் அங்கிருந்த பூர்விகப் பிராம்மணர்களும் சோழியர்கள்தான். 'வடமர்கள்' என்று வடக்கேயிருந்து வந்தவர்களில் பலர், தமிழ் நாட்டின் வடபகுதியான பல்லவ ராஜ்யத்திலேயே தங்கிவிட்டார்கள். இவர்களுக்கு 'ஔத்தர வடமர்' என்று பிற்பாடு பெயர் உண்டாயிற்று. தமிழ் நாட்டுக்கு வடக்கேயிருந்து வந்தபின், தமிழ்நாட்டுக்குள் அதன் "உத்தர" பாகத்தில் (வடக்குப் பகுதியில்) தங்கி விட்டதால் "ஔத்தர" என்று அடைமொழி ஏற்பட்டது. வடமர்களிலும் ஸாமவேதிகள் சிலர் உண்டு. ஆனால் இவர்கள் ஜைமினீயம் எனப்படும் தலவகார சாகையைச் சேர்ந்தவர்களல்லர். அதிக அநுஷ்டானத்திலுள்ள கௌதும சாகையைச் சேர்ந்தவர்களே. தமிழ்மொழியும் இலக்கியமும் முறையாக ரூபம் பெற்று வந்த பழைய காலத்துக்கு வடமர்களின் வருகை ரொம்பவும் பிற்பட்டது. ஆதலால் அவர்களுடைய அத்யயன முறை நாம் எடுத்துக் கொண்ட விஷயத்துக்குச் சம்பந்தமில்லாதது. தமிழ் பாஷை நன்றாக ரூபம் பெற்று, சங்க இலக்கியங்கள் தோன்றிய பின்பே வந்த பல்லவர் ஸமாசாரம் நம் 'ஸப்ஜெட்டு'க்கு அவசியமில்லாத விஷயந்தான்.

சேர நாட்டு ஸமாசாரத்தைப் பார்க்கலாம். தற்போது கேரளமாகி விட்ட சேர நாட்டிலே மலையாள பாஷை வழங்குகிறது. தமிழ்-தெலுங்கு-கன்னடத்தைச் சொன்ன போது மலையாளத்தைச் சேர்க்காமல் விட்டதற்குக் காரணம், இந்த பாஷையும் பல்லவர்களைப்போல, வடமர்களைப் போல, பிற்காலத்து ஸமாசாரம் என்பதேயாகும். சுமார் ஆயிரம் வருஷத்துக்கு முந்தி வரையில், கேரளநாடு தமிழ்நாட்டின் பாகமான சேரநாடாகவும், அங்கிருந்த பாஷை தமிழாகவும்தான் இருந்தது. பிறகுதான் தமிழிலிருந்தே மலையாளம் தோன்றியது. தமிழ் 'ழ' தெலுங்கில் 'ட' வாகவும், கன்னடத்தில் 'ள' வாகவும் வித்தியாசப்பட்டு இருந்தாலும், மலையாளத்தில் 'ழ' வாகவேதான் தங்கிவிட்டது. நாம் 'புழை' என்பதை மலையாளத்தில் 'புழா' என்றே சொல்கிறார்கள். நாம் 'ஆலப்புழை', 'அம்பலப்புழை' என்றால் அவர்கள் 'ஆலப்புழா', 'அம்பலப்புழா' என்பார்கள். இத்தனைக் கொஞ்சம்தான் வித்தியாசம்.

அதனால் மலையாள பாஷையை விட்டுவிட்டு, அந்தச் சீமையில் ஆதியிலிருந்தே இருந்து வந்திருக்கிற வேதத்தைப் பார்ப்போம். நம்பூதிரிகள் எனப்படும் மலையாள பிராம்மணர்கள்தான் நீண்ட நெடுங்காலமாக ரொம்பவும் சாஸ்திரோக்தப்படி வேத அத்யயனம் செய்து வருகிறார்கள். இவர்களில் [ரிக்,யஜுஸ், ஸாமம் என்கிற] த்ரிவேதிகளும் இருக்கிறார்கள். குறிப்பாக, ஸாமவேதிகளில் தலவகார சாகையைப் பின்பற்றும் நம்பூதிரிகள் இருக்கிறார்கள். 'பாஞ்சான்மனை' என்று நல்ல வைதிகமான ஒரு நம்பூத்ரி பரம்பரை இருக்கிறது. அவர்கள் எல்லாரும்

தலவகார சாகையினரே. தமிழ்நாட்டு ஸாமவேதிகளில் தற்போது கௌதும சாகையினர் அதிகமாகி விட்டபோதிலும், மலையாளத்தில் ஸாமவேதிகள் தலவகார சாகையினராகவே இப்போதும் இருக்கிறார்கள்.

பரம்பரையாக தலவகாரம் ஓதிவருகிற நம்பூதிரிகள் மற்றை சாகைகளில் 'ட' அல்லது 'ள' வாக வருவதை 'ழ' காரமாகவே உச்சரிக்கிறார்கள். அதாவது தமிழ்நாட்டில் அத்யயனம் செய்வதுபோலவே தான் அங்கேயே இருக்கிறது. ஆதியில் அதுவும் தமிழ்நாடாகத்தானே இருந்திருக்கிறது?

மலையாளத்திலும், தமிழ்நாட்டிலும் உள்ள தலவகார ஸாமச் சுவடிகளில் எல்லாம் 'ழ' என்றே இந்த இடங்களில் எழுதியும் இருக்கிறது. சுவடியில் மட்டுமின்றி, அச்சுப்போட்ட பிரதிகளிலும் இப்படியே இருக்கிறது.

இப்படியாக, வேறெந்தப் பகுதியிலும் இல்லாத அளவுக்குத் தமிழ் தேசத்திலேயே தொன்று தொட்டுத் தலவகார ஸாமஸாகை இருந்து வந்திருக்கிறது; வேறெந்தப் பகுதியிலும் இல்லாத 'ழ' உச்சரிப்பும் அதோடு வேத அத்யயனத்திலே வந்திருக்கிறது!

சங்க நூல்களின் உரையாசிரியர்களுள் முக்யமானவரான நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்துக்கு எழுதிய உரையில் 'தைத்திரீயம், பௌடிகம், தலவகாரம், ஸாமம்' என்று நாலு வேதங்கள் இருந்ததாகச் சொல்லியிருக்கிறார் *. இவர் சாகைகளையே வேதம் என்று தவறுதலாகச் சொன்னாலும்கூட, இதிலிருந்தே ஆதியில் தமிழ்நாட்டில் தலவகாரம் என்பதே ஒரு முழு வேதம் மாதிரியான

ஸ்தானத்தைப் பெற்றிருந்தது என்றும் தெரியவருகிறது அல்லவா? தைத்திரீயம் என்பது கிருஷ்ணயஜுர் வேதத்தைச் சேர்ந்த தைத்திரீய சாகை. பௌடியம் என்பது 'பௌஷ்யம்' எனப்படும். ரிக் வேதத்தில் ஸாங்காயன சாகையைச் சேர்ந்த கௌஷீதகீ ப்ராம்மணத்துக்குத்தான் பௌஷ்யம் என்றும் பெயர். இங்கே 'பௌடியம்' என்று இவர் சொல்வது ஆழ்வார் வாக்கிலே 'பௌழியா' என்று வருவதிலிருந்தும் 'ட'வுக்கும் 'ழ'வுக்கும் உள்ள தொடர்பு தெரிகிறது.

ஆக இப்படி வேத சாகைகளில் உள்ள உச்சாரண பேதத்தை வைத்தே, அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள பாஷைகளில் தனித் தன்மையுள்ள எழுத்து உண்டாயிருக்கிறது.

திராவிட தேசத்தை மட்டும் வைத்து நான் இப்படி சொன்னதை, இப்போது ஆல் இண்டியா லெவலிலும் [அகில இந்திய ரீதியிலும்] இண்டர்-நேஷனல் லெவலிலும் [சர்வதேச ரீதியிலும்] சொல்லப் போகிறேன்.

இப்போது வட இந்தியாவை எடுத்துக் கொண்டால், அங்கே 'ய' வரவேண்டிய இடங்களில் 'ஜ'வையும், 'வ' வரவேண்டிய இடங்களில் 'ப' (ba)வையும் உபயோகப்படுத்துவது அவர்களுடைய வழக்கமாயிருக்கிறது. பேச்சு மொழியில் (colloquial -ஆக) மட்டுமின்றி அவர்களுடைய பாஷைகளில் இலக்கிய மொழியிலும் கூட (literary)யாகவே இப்படி ஏற்பட்டிருக்கிறது. அதிலும் 'வ'வை 'ப'வாக்குவது வங்காளத்திலும், 'ய'வை 'ஜ' வாக்குவது உத்தரபிரதேசம்,

பஞ்சாப், இன்னம் வடக்கான இடங்களிலும் மிகவும் அதிகமாகக் காண்கிறது.

வங்காளத்தில் 'வ–பயோரபேதம்', அதாவது 'வ'வுக்கும் 'ப' (ba) வுக்கும் பேதமில்லை என்பதை ஒரேயடியாகப் பின்பற்றுகிறார்கள். தமிழிலும், 'பீஷ்மர்' என்பதை 'வீட்டுமர்' என்றும், 'பீமன்' என்பதை 'வீமன்' என்றும் 'ப'வை 'வ' ஆக்குகிறோம். ஆனால் ஒரேயடியாக மாற்றுவதில்லை. வங்காளிகளோ 'வ'வை எல்லா இடங்களிலுமே 'ப'வாக்குகிறார்கள். வங்காளமே பெங்கால் ஆகிறது.

வங்கவாஸி என்பதை பங்கபாஸி என்று சொல்லுவார்கள். இப்படிச் சொல்வது பிழை என்பதை அவர்களே அறிந்து கொண்டார்கள். வங்காள தேசத்தில் இந்தத் தப்பை திருத்த ஒரு பரிஷத் ஏற்படுத்தினார்கள். "வங்க பரிஷத்" என்பது அதன் பெயர். இனிமேல் பதிப்பிக்கும் புஸ்தகங்களிலெல்லாம், பகாரம் உள்ள இடங்களில் வகாரமாகத் திருத்தவேண்டுமென்று நினைத்து, அப்படியே செய்து வந்தார்கள். அப்படிச் செய்ததில் ஸ்வபாவமாக பகாரம் இருக்க வேண்டிய இடத்திலும் வகாரமாக மாற்றிவிட்டார்கள்! 'பந்து' வென்பதைக் கூட 'வந்து' வென்று மாற்றி விட்டார்கள்! 'வங்கபந்து' என்ற சரியான ரூபத்தை இதற்கு முன் அவர்கள் 'பங்கபந்து' என்று தப்பாக சொன்னார்கள் என்றால், இப்போதும் 'வங்க வந்து' என்று வேறு விதத்தில் தப்பாகச் சொல்ல ஆரம்பித்து விட்டார்களாம்!

வடக்கே மற்ற மாகாணங்களிலும் ஒரளவுக்கு இப்படி 'வ'வுக்கு பதில் 'ப' சொல்கிறார்கள். 'பிஹார்' என்பதே

'விஹார்'தான். புத்த விஹாரங்கள் நிறைய இருந்த பிரதேசம் அதுவே. ராஷ்பிஹாரி என்கிறார்களே அது ராஸவிஹாரி என்பதுதான். அவர்கள் வகாரத்தைப் பகாரமாக மாற்றி உச்சரிப்பதற்கு காரணம் என்ன? பிராதிசாக்கியத்தில் அந்தச் சீமையில் உள்ள ஒரு குறிப்பிட்ட சாகையில் இப்படிச் சொல்ல வேண்டும் என்று இருக்கிறது. அந்த விதியை வேதத்துக்கு மட்டுமின்றி, பேசுவது எழுதுவது எல்லாவற்றிற்கும் உபயோகப் படுத்திக் கொண்டார்கள். இதனால் வேதத்தில் சொன்ன சி விதிகள் இந்தத் தேசம் முழுவதும் ஒரு காலத்தில் சிரத்தையாக அநுஷ்டிக்கப்பட்டு வந்ததென்று தெரிகிறது.

தேசம் பூராவிலுமே யஜுர் வேதம்தான் மெஜாரிட்டியாகப் பரவியிருக்கிறது என்று முன்பே சொன்னேன். இந்த யஜுஸில் கிருஷ்ண யஜுஸ், சுக்ல யஜுஸ் என்று இரண்டு இருப்பதாகவும் சொல்லியிருக்கிறேன் அல்லவா? இவற்றில் தக்ஷிணத்தில் அதிகம் பிரசாரத்திலிருப்பது கிருஷ்ண யஜுஸ்; உத்தர தேசத்தில் விசேஷமாக அநுஷ்டானத்திலிருப்பது சுக்ல யஜுஸ்.

சுக்ல யஜுஸின் பல சாகைகளில் ஒன்று மாத்யந்தின சாகை என்பது. அதுதான் வடக்கே சிறப்பாக பின்பற்றப்படுகிறது. இதன் பிராதிசாக்யத்தில் 'ய' வுக்கு பதில் 'ஜ' வரலாம் என்று இருக்கிறது; 'ஷ' வுக்குப் பதில் 'க' வரலாம் என்றும் இருக்கிறது. இதனால்தான் நாம் 'புருஷ ஸூக்தத்தில் "யத் புருஷேண ஹவிஷா" என்று சொல்வதை ஒரு ஹிந்துஸ்தானிக்காரன் "ஜத் புருஷேண ஹவிகா" என்கிறான். அவன் அப்படிச் சொல்வதைக் கேட்டால் நமக்கு சிரிப்பு வருகிறது. வேதத்தைத் தப்பாகச்

சொல்கிறான் என்ற கோபக்ஷாங்கூட வருகிறது. நாம்தான் வேத சப்தங்களின் purity -ஐ காப்பாற்றி வருகிறோம் என்று நினைக்கிறோம். ஆனால் வாஸ்தவத்தில் அவன் சொல்வதற்கு சிக்ஷா சாஸ்திரத்தின் அங்கீகாரமேயிருக்கிறது.

ஏற்கெனவே நான் சொன்னபடி, மிக நெருங்கிய தொடர்புள்ள சப்தங்கள்தான் இப்படி ஒன்றுக்கொன்று மாற்ற அநுமதிக்கப்படுகின்றன. 'ஜ'வும் 'ய'வும் கிட்டிய பந்துக்கள் என்பது தமிழைப் பார்த்தாலும் தெரிகிறது. ஜாவா என்று சொல்கிற ஜாவகத் தீவை தமிழ் நூல்களில் யாவகம் என்றே சொல்லியிருக்கும். ஸாதாரணமாக, ஒரு வார்த்தையின் முதல் எழுத்தாக வருகிற 'ஜ'வை 'ச' என்பதே தமிழ் வழக்கமாயிருந்தாலும், வார்த்தைக்கு நடுவே 'ஜ' வந்தால் அதை 'ய' என்றே ஆக்கி வருகிறோம். 'அஜன்', 'பங்கஜம்' என்பனவற்றை 'அயன்', 'பங்கயம்' என்கிறோம். 'ஷ' என்பது 'ச' வில் ஒரு வகைதான். 'ஷ'வும் 'க'வும் பரஸ்பரம் மாறும் என்பதால், 'ச' வும் 'க'வும் அப்படி மாறலாம் என்றே தெரிகிறது. இதற்கேற்றாற்போல் நாம் 'கை' என்பதை தெலுங்கில் 'செய்' என்கிறார்கள். (சை என்கிற ஒலிதான் இது.) செய்வது (காரியம் பண்ணுவது) முக்கியமாகக் கையின் தொழில்தான். அதனால் 'கை' என்பதைவிட தெலுங்கிலே உள்ள செய் என்பதுதான் அதன் காரியத்தைத் தெரிவிக்கிற செய் (பண்ணு) என்ற 'ரூட்'க்குப் பொருத்தமாயிருக்கிறது. ஸம்ஸ்கிருதத்திலும் இப்படித்தானே 'கர' என்றால் செய்வது என்கிற அர்த்தமும், கை என்ற அர்த்தமும் இருக்கிறது? சங்கரர் – நல்லதைச் செய்கிறவர். 'கரோமி' என்றால் 'செய்கிறேன்'. கைக்கும் 'கர'

என்றே வார்த்தையிருக்கிறது. ஆதலால் தமிழிலும் முதலில் 'செய்'யாக இருந்தது தான் அப்புறம் 'கை' ஆயிற்றோ என்னவோ? இப்போது தமிழில் 'செய்' என்பது verb -ஆக மட்டுமே இருக்கிறது. அந்த 'ச' என்பது 'க'வாக மாறி 'கை' உண்டாயிருக்கிறது. இன்னொரு விஷயம்: ஷ-வும் க்ஷ-வும் ரொம்பவும் கிட்டின ஒலிகள். க்ஷ என்பது க-வாக மாறுவது ரொம்ப ஸஹஜம். அக்ஷம்-அக்கம், தக்ஷிணம்-தக்காணம், க்ஷணம்-கணம் என்று பல திருஷ்டாந்தங்கள் சொல்லலாம். ஆதலால் ஷ-வும் க-வாக மாற நியாயமுண்டு.

தமிழிலே ப (ba) என்பது வ ஆகிறதென்றால், வடதேசத்து பாஷைகளில் வ என்பது ப ஆகிறது என்றேனல்லவா?அவ்விதமே, தமிழில் ஜ என்பது ய ஆகிறது, ஷ என்பது க ஆகிறது என்றால், எதிர்வெட்டாக வடக்கிலே ய என்பது ஜ-வாகவும், ஷ என்பது க-வாகவும் ஆகிறது. அது அவர்களுடைய அநுஷ்டானத்திலுள்ள வேத சாகையின் சிக்ஷா விதிப்படி ஏற்பட்டதாகும். இதனால்தான் யத் புருஷேண ஹவிஷா -வை ஜத் புருஷேண ஹவிகா என்கிறான்.

இதே மாற்றத்தை வடக்கிலே உள்ள எல்லா வார்த்தைகளுக்கும் ஏற்படுத்தி விடுகிறார்கள். 'யமுனா'வை 'ஜமுனா'வாக்கி விடுகிறார்கள். 'யோகி'யை 'ஜோகி'யாக்குகிறார்கள். 'யுகயுக' என்பதற்கு 'ஜுகஜுக' என்பார்கள். 'யாத்ரா' என்பது 'ஜாத்ரா' ஆகிறது. ஷ என்பது க-வாக மாறுவதில், 'ரிஷி' என்பதை 'ரிகி' என்கிறார்கள். க்ஷ-வும் 'ஷ'வும் ரொம்ப 'பந்து'க்கள் அல்லவா? நம்மிலேயே எத்தனை பேர் 'லக்ஷ்மி' என்பதற்கு 'லஷ்மி' என்று

சொல்கிறோம், எழுதுகிறோம்? இதனால் வடக்கே 'க்ஷ'வையும், 'க' ஆக்கி விடுகிறார்கள். 'க்ஷீரம்' என்பதைக் 'கீர்' என்கிறார்கள். தமிழிலும் இந்த வழக்கம் இருக்கிறது என்று காட்டினேன். 'லக்ஷ்மி' என்பதை 'இலக்குமி' என்கிறோம். இப்படி அநேகம் சொல்லிக் கொண்டே போகலாம்.

இப்போது இண்டர்-நேஷனல் லெவலுக்குப் போகலாம். கிறிஸ்துவ வேதமான பைபிள் பிறந்த பாலஸ்தீனம் - இஸ்ரேல் முதலான ஸெமிடிக் நாடுகளுக்குப் போகலாம். பைபிளின் 'ஓல்ட் டெஸ்ட்மென்ட்' முகமதியர்களின் குரானுக்கும் ஆதாரமாக இருக்கிறது. ஓல்ட் டெஸ்ட்மென்ட்டில் வந்தவர்கள் குரானிலும் வருவார்கள். ஆனாலும் அரேபியாவில் உச்சாரணம் மாறுகிறது. 'ஜோஸஃப்' என்பது 'யூஸஃப்' ஆகிறது; 'ஜெஹோவோ' என்பது 'யெஹோவோ' என்று வருகிறது. கிறிஸ்துவத்துக்கும் இஸ்லாத்துக்கும் இப்படி வித்தியாசம் என்பது மட்டுமில்லை. கிறிஸ்துவ தேசங்களுக்குள்ளேயே சில பாஷைகளில் ய-கரம் ஒலிக்கிறது: சிலவற்றில் ஜ-கரம் ஒலிக்கிறது. ஜேஸு-யேஸு (இயேசு) என்பதாக அந்த மதஸ்தாபகர் பேரே இரண்டு விதமாகவும் வருகிறது. கிரீஸ் பக்கம் போய்விட்டால் 'ஜ'காரம் வந்துவிடுகிறது.

இதற்கெல்லாம் மூலம் வேதத்தில் இருக்கிறது என்றும் ஆராய்ச்சி பண்ணப்பட்டிருக்கிறது. 'யஹ்வன்' என்று வேதத்தில் சொல்லப்படும் தேவதைதான் ஜெஹோவா - (யெஹோவா) என்கிறார்கள். 'த்யௌ-பிதார்' (த்யாவா - ப்ருதவி என்பது) என்பதே 'ஜூபிடர்' ஆயிற்று என்கிறார்கள். ஸம்ஸ்கிருத வார்த்தை ஒன்றின் ஆரம்பத்தில் ஒற்றெழுத்து வந்தால், அது மற்ற பாஷைகளில்

உதிர்ந்துவிடும். இம்மாதிரி 'த்யௌபிதார்' என்றால் 'யௌபிதார்'தான். அது 'ஜூபிடர்' ஆயிற்று.

இப்படி மூல ரூபத்தில் யஹ்வன், (த்) யௌபிதார் என்று இருந்ததே அப்புறம் 'ஜ'கார பேதம் அடைந்து ஜெஹோவா, ஜூபிடர் என்று ஆயிற்று என்றால் என்ன தோன்றுகிறது? ஆதியில் எங்கேயும், லோகம் பூராவும் வேதாநுஷ்டானம் இருந்தபோது, கிரீஸைச் சுற்றியிருந்த தேசங்களில் யஜுர் வேதத்தின் மாத்யந்தின சாகை அதிகம் பிரசாரத்திலிருந்து என்றுதானே ஊகிக்கமுடிகிறது? 1

* "வேதம்" என்ற பேருரையில் "வேதமும் தமிழ்நாடும்" என்ற பிரிவின் பிற்பகுதியும் பார்க்க.

1. தெய்வத்தின் குரல் முதற்பகுதியில் உள்ள "உலகம் பரவிய மதம்" என்ற உரையும் காண்க.

வேத உச்சரிப்பால் பிரதேச மொழி விசேஷமா? பிரதேச மொழியை வைத்து வேத உச்சரிப்பா ?

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

ஷடங்கங்கள்

சிக்ஷை: வேதத்தின் மூக்கு

வேத உச்சரிப்பால் பிரதேச மொழி விசேஷமா ? பிரதேச மொழியை வைத்து வேத உச்சரிப்பா ?

வேதத்தில் எந்த எழுத்து எந்தப் பிரதேசத்தில் சிறப்பாக இருந்திருக்கிறதோ, அதே எழுத்துத்தான் அந்தந்தப் பிரதேசத்துப் பாஷையிலும், அவர்களுடைய பேச்சிலும்

சிறப்பாக இருந்திருக்கிறது என்று தெரிவிப்பதற்காக இவ்வளவும் சொன்னேன். இதிலிருந்தே எல்லாத் தேசங்களிலும் வேதம் இருந்ததும் தெரிகிறது. நமக்கு நன்றாகத் தெரிகிற தமிழ் தேசத்தில் வேதம் இல்லாமல் இருந்த காலமே இல்லை என்றும் தெரிகிறது.

தமிழ் என்பதிலேயே ழ் என்று உட்கார்ந்து கொண்டு, நம் பாஷைக்கு பெருமையைத் தருகிற ழ காரம் வேதத்தின் தலவகார சப்தப் பிரகாரம் உண்டானதுதான்.

இப்படிச் சொல்வது சரியா?அல்லது தமிழிலே ழ இருக்கிறதாலும், வடக்கே பாஷைகளில் ஜ இருக்கிறதாலுந்தான், அந்தந்த பிரதேசங்களிலுள்ளவர்கள் வேதத்திலும் இப்படிப்பட்ட சப்தங்களாக மாற்றிக் கொள்ளலாம் என்று பண்ணிக் கொண்டார்கள் என்றால் சரியாயிருக்குமா?ஏற்கெனவே பிரதேச மொழிகளில் இருந்ததைத்தான் பிற்பாடு வேதத்திலும் எடுத்துக்கொள்ள இடம் தந்திருப்பார்களோ?அதையே தான் தலைகீழாக மாற்றி, வேதத்திலிருந்த ழ சப்தம்தான் தமிழுக்கு முக்யமாக ஆயிற்று, அதன் ஜ வடக்கத்திக்காரர்களுக்கு முக்யமாக ஆயிற்று, ப வங்காளிக்கு விசேஷமாக ஆயிற்று என்று சொல்கிறேனா? இதிலே எது சரி?

வேத சிக்ஷ£ விதிதான் பிரதேச பாஷைகளிலும் முக்கியமான ஒலியாக வந்தது என்பதுதான் சரி. ஏனென்றால் பிராதிசாக்ய விதி ஒரு பிரதேசத்துக்கு மட்டும் ஏற்பட்டதல்ல;அந்த சாகை அநுஷ்டானத்திலுள்ள ஸகலப் பிரதேசத்துக்கும் ஏற்பட்டது. தமிழ் நாட்டில் மட்டுமில்லாமல், எங்கேயாவது காஷ்மீரிலோ,

காமரூபத்திலோ (அஸ்ஸாம்) ஒரு தலவகார சாகா அத்யாயி (அத்யயனம் செய்பவன்) இருந்தாலும், அவன் மற்றவர்கள் ட வும் ள வும் சொல்கிற மந்திரங்களில் ழ வைத்தான் சொல்லுவான். ஒரு பிரதேசத்துக்கு என்றில்லாமல், அதாவது தெலுங்கன் மட்டுமில்லாமல் கிருஷ்ண யஜுஸில் அத்யயனம் பண்ணுகிறவன் எந்த பாஷைக்காரனாக இருந்தாலும், அவன் குஜராத்தில் இருந்தாலும், மஹாராஷ்டிரத்தில் இருந்தாலும், வேறே எங்கே இருந்தாலும் ட தான் சொல்ல வேண்டும். இப்படியே கன்னடஸ்தன் மட்டுமின்றி ரிக்வேதியாக இருக்கப்பட்ட எவனுமே 'ள 'காரம் தான் சொல்ல வேண்டும். குறிப்பிட்ட பிரதேசத்துக்கு என்றில்லாமல் பொதுவாக எழுதி வைக்கப்பட்ட பிராதிசாக்யத்தில் இப்படித்தான் சப்த ரூபத்தை நிர்ணயம் பண்ணிக்கொடுத்திருக்கிறது. ஆகவே, ஒரு சாகை எங்கே அதிகமாக அநுஷ்டிக்கப்படுகிறதோ அங்குள்ள பிரதேச பாஷையிலும் இந்த அக்ஷர விசேஷம் நாளடைவில் உண்டாகி விடுகிறதென்றே ஆகிறது.

பெரும்பாலும், ம்ருக சீர்ஷ நக்ஷத்திரம் பௌர்ணமியன்று வருகிற ஒரு மாஸத்துக்கு 'மார்கசீர்ஷி 'என்று பேர் வைக்கப்பட்டது. அதைத்தான் நாம் 'மார்கழி' என்கிறோம். 'ஷி' என்பது 'டி' யாகி, 'டி' என்பது 'ழி' ஆகிவிட்டது. முதலில் ஷ என்பது ட ஆனது, தமிழ் மொழிப் பண்பின்படியாகும். 'புருஷன்' என்பதை தமிழில் 'புருடன்' என்போம். 'நஹுஷன்' என்பதை 'நகுடன்' என்றே கவிதையில் எழுதியிருக்கும். கம்பர் விபீஷணனை 'வீடணன்' என்றுதான் சொல்கிறார். சரி, அதனால் 'மார்கசீர்ஷி 'என்பது 'மார்கசீர்டி 'யாகி

நடுவிலே உள்ள சீர் உதிர்ந்து போனாலும், மார்கடி என்றுதானே நிற்க வேண்டும்? ஏன் 'ழ' காரம் வந்து, 'மார்கழி' ஆயிற்று என்றால், இதுதான் தமிழ் நாட்டில் பிராசீனமாயிருந்த தலவகார சாகையின் சிறப்பினால் ஏற்பட்ட விளைவு.

இந்த சாகைக்காரன் 'ழ' சொல்கிற இடத்திலே, க்ருஷ்ண யஜுர்வேதிகள் 'ட' சொல்வார்கள் அல்லவா?இந்தப் பழக்கம் அவர்களை அறியாமலே அவர்களுக்கு இன்னமும் விட்டுப்போகவில்லை. எப்படிச் சொல்கிறேன் என்றால், தெலுங்கு தேச வைஷ்ணவர்கள் நம்முடைய தமிழ் திவ்யபிரபந்தங்களைச் சொல்லி கோவிலில் பகவானுக்கு அர்ப்பணம் பண்ணுகிறார்கள். திருப்பதியில் வேங்கடரமண ஸ்வாமிக்கு இப்படித் 'திருப்பாவை' அர்ப்பணம் பண்ணப்படுகிறது. அதன் எடுத்த எடுப்பில் "மார்கழித் திங்கள்" என்று வருகிறதல்லவா? 'ழி' என்பது தெலுங்கர்களின் வாயில் வராது. அதனால் 'மார்களி ' என்றோ 'மார்கலி' என்றோ சொல்லலாமல்லவா? ஆனால் இப்படியும் சொல்வதில்லை. 'மார்கடி திங்கள் 'என்று ட காரம் போட்டே சொல்கிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள ஸாமத்தைத் தாங்கள் யஜுஸில் சொல்லும்போது ழ என்பது ட ஆவது அவர்களுக்கே தெரியாமல் ரத்தத்தில் ஊறி வந்திருக்கிறது. அதனால் தான் 'மார்கழி 'யை ' மார்கடி 'என்கிறார்கள்.

மாதப் பெயர்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சிக்ஷை: வேதத்தின் மூக்கு

மாதப் பெயர்கள்

மார்கசீர்ஷி என்பது மார்கழி என்றானதாகச் சொன்னதில், பாஷா வித்யாஸங்கள் நன்றாகத் தெரிந்தன அல்லவா?தமிழில், அநேகமாக ஒவ்வொரு மாஸப் பெயரிலுமே, அந்த பாஷையின் தனி லக்ஷணப்படி மூலமான ஸம்ஸ்கிருதப் பேர் எப்படி மாறுகிறதென்று தெரிகிறது.

பெரும்பாலும் ஒரு மாஸத்தில் பௌர்ணமியன்று எந்த நக்ஷத்திரமோ அதுவே அந்த மாஸத்தின் பெயராக இருக்கும். அன்றைக்கு ஒரு பண்டிகையாகவும் விழாவாகவும் இருக்கும். அநேகமாக சித்ரா நக்ஷத்தரத்தன்றுதான் சித்திரை மாஸத்தில் பௌர்ணமி வரும். சித்ரா பூர்ணிமை ஒரு விசேஷ நாளாக இருக்கிறது. தமிழில் சித்திரை என்ற மாஸப் பெயர் மூலத்துக்கு மாறாமலே இருக்கிறது. விசாக சம்பந்தமுள்ளது வைசாகம். விசாக நக்ஷத்திரத்தில் பெரும்பாலும் பௌர்ணமி ஏற்படுகிற மாஸம்தான் வைகாசி. மதுரை மருதையாவது போல், ஸம்ஸ்க்ருத வைசாகி தமிழில் வைகாசியாகிறது. (பெங்காலில் பைஷாகி என்பார்கள்) வைகாசி விசாகமும் உத்ஸவ நாளாக இருக்கிறது. நம்மாழ்வார் திருநக்ஷத்ரம் அன்றுதான். இப்போது, புத்த பூர்ணிமா என்பதாக அதற்கு விசேஷம் கொடுத்திருக்கிறார்கள்.

அநுஷ நக்ஷத்ர ஸம்பந்தமுள்ளது ஆநுஷீ. அந்த நக்ஷத்ரத்தில் பௌர்ணமி ஏற்படுகிற ஆநுஷீமாஸம்,

தமிழில் ஆனி ஆகிறது. ஷகாரம் தமிழில் உதிர்ந்துவிடுகிறது.

ஆஷாடத்தில் பூர்வ ஆஷாடம், உத்தர ஆஷாடம் என்று இரண்டு. பூர்வம் - முன்; உத்தரம் -பின். 'பூர்வாஷாட'த்தில் 'ர்வ'கூட்டெழுத்துச் சிதைந்தும், 'ஷா'உதிர்ந்தும், தமிழில் 'பூராடம்'என்கிறோம். இப்படியே உத்தராஷாடத்தை 'உத்திராடம்' என்கிறோம். இந்த ஆஷாடங்களில் ஒன்றில் பௌர்ணமி ஸம்பவிப்பதால், 'ஆஷாடீ'எனப்படுவதுதான், நம்முடைய 'ஆடி' மாஸம்.

ச்ராவணம் என்பது ச்ரவண நக்ஷத்ரத்தைக் குறித்தது. முதலில் உள்ள 'ச்ர'தமிழில் அப்படியே drop -ஆகி, 'வண'த்தை 'ஒணம்'என்கிறோம். அது மஹாவிஷ்ணுவின் நக்ஷத்ரமாதலால், 'திரு'என்ற மரியாதைச் சொல்லைச் சேர்த்துத் திருவோணம் என்கிறோம். (இவ்வாறே 'ஆர்த்ரா' என்ற சிவபெருமானின் நக்ஷத்ரத்தை ஆதிரை என்றாக்கி, அதற்கும்'திரு' சேர்த்துத் 'திருவாதிரை'என்கிறோம். திரு அச்வினி, திருப் பரணி என்றெல்லாம் சொல்வதில்லை. கார்த்திகை மாஸ தீப உத்ஸவத்தை மட்டும் திருக்கார்த்திகை என்றாலும், மற்ற சமயங்களில் திரு போடாமல் கார்த்திகை என்றே சொல்கிறோம். ஹரி-ஹரபேதம் பார்க்காத தமிழ் மரபு அவ்விருவர் நக்ஷத்ரத்துக்கு மட்டும் எப்போதும் 'திரு'போட்டு மரியாதை தருகிறது. இந்த விஷயம் இருக்கட்டும்) அநேகமாகப் பௌர்ணமி ச்ரவணத்திலேயே வருவதான 'ச்ராவணி'தான், ஸம்ஸ்கிருதத்துக்கே உரிய சகார, ரகாரக் கூட்டெழுத்து drop ஆகி, ஆவணியாகிறது.

இப்படி ஏகப்பட்ட எழுத்துக்கள் தமிழில் உதிர்வதற்கு 'ஸிம்ஹளம்'என்பது 'ஈழம்'என்றானது ஒரு திருஷ்டாந்தம். ஸ வரிசையும் ச வரிசையும் தமிழில் அ வரிசையாய்விடும்.

'ஸீஸம்' என்பதுதான் 'ஈயம்' என்றாயிருக்கிறது. 'ஸஹஸ்ரம்'என்பது கன்னடத்தில் 'ஸாஸிரம்' என்றாயிருக்கிறதென்றால், அந்த 'ஸாஸிரம்' தமிழில் 'ஆயிரம்'என்று ஸகாரங்களை உதிர்த்துவிட்டு உருவாயிருக்கிறது.

'ஆயிர'த்தைச் சொன்னதால் மற்ற எண்களைப் பற்றியும் சொல்லிவிடுகிறேன். ஒன்று, இரண்டு, மூன்று முதலியன ஏக, த்வி, த்ரி முதலான ஸம்ஸ்கிருத வார்த்தைகளின் தொடர்பில்லாதவையாகவே உள்ளன. பஞ்ச–அஞ்சு;அஷ்ட–எட்டுஎன்பன மட்டும் ஸம்பந்தமிருக்கிறாற்போல் தோன்றுகிறது. இங்கிலீஷ் two, three என்பவை ஸம்ஸ்கிருத த்வி,த்ரி ஸம்பந்தமுடையவைதான். Sexta, hepta, octo, nona,deca என்பதாக ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து சம்பந்தத்தைச் சொல்லும் வார்த்தைகள் ஷஷ்ட, அஷ்ட, நவ, தச என்ற ஸம்ஸ்கிருத மூலத்திலிருந்தே வந்திருப்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. ஆனால் முதல் எண்ணான one என்பது 'ஏக' என்பதன் ஸம்பந்தமே இல்லாமல், தமிழ் 'ஒன்று' என்பதன் முதல் இரண்டு எழுத்துக்களாக இருப்பது ஆச்சரியமாயிருக்கிறது. தெலுங்கிலோ தமிழ் ஒன்று–வின் 'ஒ' வும், ஸம்ஸ்கிருத 'ஏக'வின் 'க'வும் சேர்ந்து 'ஒகடி'என்றிருக்கிறது. இதெயெல்லாம் பார்க்கும்போது இனத்தில் எல்லாம் ஒன்று என்பதுபோல், திராவிட – ஸம்ஸ்கிருத பாஷைகளுக்குங்கூடப் பொதுவான ஒரே

மூலபாஷை இருந்திருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது.

ஸிம்ஹளத்தில் 'ஸிம்ஹ'என்பதில் ஸ,ஹ இரண்டும் drop - ஆகி 'இம்ளம்', 'ஈளம்' என்றாகி, ள வும் ழ வாகி ஈழம் என்று ஏற்பட்டிருக்கிறது.

ப்ரோஷ்டபதம் என்பதற்கும் ஆஷாடம் போலவே பூர்வமும் உத்தரமும் உண்டு. பூர்வ ப்ரோஷ்டபதம்தான் தமிழில் பூரட்டாதி என்றாயிற்று. 'அஷ்ட' என்பது 'அட்ட'என்றாவது தெரிந்ததுதானே?உத்தர ப்ரோஷ்டபதம் உத்திரட்டாதி ஆயிற்று. இந்த நக்ஷத்ரங்கள் ஒன்றிலோ, அதை ஒட்டியோ பௌர்ணமி ஏற்படுகிற ப்ரோஷ்டபதீ என்பதே புரட்டாசி என்று எப்படியெப்படியோ திரிந்து விட்டது.

ஆச்வயுஜம், அச்வினி என்பதை அச்வதி என்கிறோம். அதிலே பௌர்ணமி வருகிற 'ஆச்வயுஜீ 'அல்லது 'ஆச்வினீ 'தான், நம் 'ஐப்பசி '.

கிருத்திகாவுக்கு adjective -ஆன கார்த்திகம்தான் கார்த்திகை என்று ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. முக்காலே மூன்று வாசி திருக்கார்த்திகை தீபோத்ஸவம் பௌர்ணமியாகத்தானே இருக்கிறது? மார்கசீர்ஷி மார்கழியாவதில்தான் ஆரம்பித்தேன். அம்மாதப் பௌர்ணமி திருவாதிரைப் பண்டிகையாகத் தடபுடல் படுகிறது. புஷ்யம்தான் தமிழில் பூசம். (இந்தப் 'பூச' சப்தம் பழகிப் பழகியே புனர்வஸுவையும் புனர்பூசம் என்கிறோம். அது புனர்வஸுவேயன்றி புனர் புஷ்யம் இல்லை!) புஷ்ய ஸம்பந்தமானது பௌஷ்யம்.புஷ்யத்துக்குத் திஷ்யம் என்றும் பெயர். பூர்ணிமை திஷ்யத்திலே வரும் மாஸம்

'தைஷ்யம்'. அதிலே கடைசி மூன்று எழுத்துக்களும் போய்த் தமிழில் 'தை'மட்டும் நிற்கிறது.

மாசி மகம் பௌர்ணமியில்தான் வருகிறது. மாகமாஸம் என்று மகநக்ஷத்ரத்தை வைத்துப் பெயரிட்டது, தமிழில் மாசி என்றாகியிருக்கிறது. ககாரம் சகாரமாகி, மாகி என்பது மாசி என்றாயிருக்கிறது. வைகாசி, புரட்டாசி, ஐப்பசி என்று c யில் முடிந்தாற்போலவே, இங்கேயும் சி யில் முடித்து, மாசி என்று சொல்கிறோம்.

பூர்வ பல்குனம், உத்தர பல்குனம் என்ற இரண்டு நக்ஷத்ரங்கள் உண்டு. இரண்டிலும் நாம் முக்யமான பெயரான பல்குனம் என்பதைத் தள்ளவிட்டு, 'பூர்வ'த்தை 'பூரம்' என்றும், 'உத்தர'த்தை உத்தர நக்ஷத்திரம் என்றுமே சொல்கிறோம். ஆனால், இந்த நக்ஷத்ரங்களில் ஒன்றில் பௌர்ணமி ஏற்படுகிற மாஸத்தை மட்டும் "பல்குன"என்ற சப்த ஸம்பந்தமுள்ள "பங்குனி" என்ற பெயரால் குறிக்கிறோம். அந்தப் பௌர்ணமியில்தான் பங்குனி உத்தரம் என்று திருக்கல்யாண உத்ஸவம் செய்கிறோம்.

இப்படிப் பன்னிரண்டு மாஸப் பெயர்களைப் பார்த்தாலே, ஸம்ஸ்கிருதத்திலுள்ள எந்தெந்த ஒலிகள் தமிழில் எப்படியெப்படி மாறும் என்பது தெரிந்துவிடும்.

சீக்ஷா சாஸ்திரத்தின் மற்ற சிறப்புகள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சிக்ஷை: வேதத்தின் மூக்கு

சீக்ஷா சாஸ்திரத்தின் மற்ற சிறப்புகள்

வேத சப்தத்தை மாற்றக்கூடாது, ஸ்வரத்தை மாற்றக் கூடாது என்றாலும், சாகா பேதத்தை உத்தேசித்துச் சப்தத்தைக் கொஞ்சம் கொஞ்சம் மாற்றவும் சிக்ஷா விதிகள் உள்ளன என்று இதுவரை சொன்னேன். இதே போல், ஸ்வரத்திலும் ஸ்வல்ப மாறுதலை அநுமதித்திருக்கிறது. மற்ற வேதங்களின் 'ஆ 'காரம் 'ஏ ' காரம் போன்ற சப்தங்களைச் சில இடங்களில் ரிக்வேதிகள் மேலும் நீட்டி அழுத்தி 'ஆ-ஆ ', 'ஏ-ஏ 'என்று சொல்லுகிறார்கள். சில சாகைகளில் 'ம் 'என்று வருவது., வேறு சிலவற்றில் 'க்ம் '(gm) என்று வரும். இதை 'அநுஸ்வாரம்'என்பார்கள். இதுவும் அக்ஷர பேதத்தைவிட அழுத்தத்திலுள்ள பேதத்தால் - அதாவது ஸ்வர பேதத்தால் - ஏற்படுவதே எனலாம்.

வேத அத்யயனத்தில் ஸம்ஹிதா, பதம், க்ரமம் என்று பல இருப்பதாக முன்னே சொன்னனல்லவா? இப்படி ஸம்ஹிதா பாடத்தை பதம், க்ரமம் முதலான மற்ற அத்யயன முறைகளில் மாற்றிக் கொடுப்பதற்கும், சிக்ஷா சாஸ்திரத்தைச் சேர்ந்த ப்ராதிசாக்யங்கள்தான் உதவி புரிகின்றன.

ஏதோ சப்தந்தானே என்று அலட்சியம் பண்ணுவதிற்கில்லை. சப்தத்தில்தான் அத்தனையும் இருக்கிறது. அதனால் சிக்ஷா சாஸ்திரம் வேத புருஷனுக்கு மூச்சு விடுகிற நாஸியாகிறது. வேத சப்தத்திலிருந்து வந்ததுதான் ஸம்ஸ்கிருதத்தின் ஐம்பது அக்ஷரங்கள். "ஜ்ஞ" என்ற எழுத்தைத் தனியாகக் கொண்டால் ஐம்பத்தியொன்று அக்ஷரங்கள். அவற்றுக்கு 'மாத்ருகா 'என்று பெயர். இதற்குப் பல அர்த்தம்

சொல்லலாம். முக்கியமாக, 'மாத்ரு ', 'மாதா ' என்றால் ஜகன்மாதாவாக இருக்கப்பட்ட அம்பாள், அந்தப் பராசக்தியின் ஸ்வரூபமே இந்த 51 அக்ஷரங்கள். பராசக்தியால்தான் ஸகலப் பிரபஞ்சங்களும் உண்டாயின என்றும் சொல்லி, சப்தத்தால்தான் ஜகத்ஸ்ருஷ்டி உண்டாயிற்று என்பதாகவும் சொன்னால், அந்த அம்பாள் 51 அக்ஷர ஸ்வரூபிணியாகத்தானே இருக்க வேண்டும்? சாக்த தந்திரங்களில் இந்த 51 அக்ஷரங்களுமே அம்பாளுடைய தேகத்தின் அவயங்கள் என்றும், எந்த அக்ஷரத்துக்கு எந்த அவயவம் என்றும் சொல்லியிருக்கிறது. நம் தேசத்தில் அந்த அவயவ சம்பந்தமுள்ள க்ஷேத்ரங்கள்தான் 51 சக்தி பீடங்களாக ஆகியிருக்கின்றன.

வேத புருஷனுக்கு நாசி என்ற ஒரு அங்கமாக சிக்ஷா சாஸ்திரம் சொல்லப்படுவது அதற்குப் பெருமை என்றால், அதிலே விளக்கப்படுகிற அக்ஷரங்கள் சேர்ந்தே அம்பாளின் பூர்ண ஸ்வரூபம் என்று சொல்வது அதற்கு மேலும் பெருமை தருவதாக இருக்கிறது.

வியாகரணம் : வேதத்தின் வாய்

இலக்கணத்தின் பெருமை

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வியாகரணம் : வேதத்தின் வாய்

இலக்கணத்தின் பெருமை

வேதபுருஷனுக்கு இரண்டாவது அங்கமாக வரும் வ்யாகரணம் முகம். முகம் என்றால் இங்கே வாய். வ்யாகரணம் என்பதே இலக்கணம். பாஷையின்

'லக்ஷண'த்தைச் சொல்வதால் 'இலக்கணம்'. லக்ஷ்மணன் என்பது இலக்குமணன் என்றாவது போல, லக்ஷணம் என்பது இலக்கணமாகிறது. பாஷைக்கு வாய்தானே முக்கியம்?

வியாகரணங்கள் பல இருக்கின்றன. முக்கியமாகப் பிரசாரத்தில் இருப்பது பாணினி மஹரிஷி செய்த வியாகரணம். அந்த வியாகரண ஸூத்திரங்களுக்கு ஒரு வார்த்திகம் (விரிவுரை மாதிரியானது) இருக்கிறது. அதைச் செய்தவர் வரருசி. வியாகரணத்திற்கு பாஷ்யம் செய்தவர் பதஞ்சலி. இந்த மூன்றும் முக்கியமான வியாகரண சாஸ்திரங்கள்.

மற்ற சாஸ்திரங்களுக்கும் வியாகரணத்திற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. மற்றவைகளில் பாஷ்யத்தைவிட ஸூத்திரங்களுக்குத்தான் கௌரவம் அதிகம். வியாகரணத்தில் அப்படியில்லை. ஸூத்திரத்தைவிட வார்த்திகத்திற்கு மதிப்பு அதிகம். அதைவிட பாஷ்யத்திற்கு அதிக மதிப்பு.

ஆறு சாஸ்திரங்கள் என்று ஒரு பிரிவு உண்டு. அந்தப் பிரிவில் வியாகரணமும் ஒன்று. நான்கு சாஸ்திரங்கள் மிக்க பிரஸித்தி உடையவை. அவை தர்க்கம், மீமாம்ஸை, வியாகரணம், வேதாந்தம் என்பவை. அவைகளிலும் வியாகரணம் ஒன்றாக இருக்கிறது. வேத ஷடங்கமான ஆறு அங்கங்களிலும் ஒன்றாக இருக்கிறது.

பாணினியின் வியாகரணம் ஸூத்திர ரூபமாக இருக்கிறது. சிறு சிறு வார்த்தைகளால் சுருக்கமாகச் செய்யப்பட்டது ஸூத்ரம்.

ஸூசனாத் ஸூத்ரம் ।

விரித்துச் சொல்லாமல் சூசனையாகவே புரிந்து கொள்ளும்படி சுருக்கிச் சொல்வதே ஸூத்ரம்.

ஒவ்வொரு சாஸ்திரத்துக்கும் பாஷ்யம் உண்டு. அவைகளை எல்லாம் இன்ன இன்ன பாஷ்யம் என்று குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. வியாகரண பாஷ்யத்தை மட்டும் மஹா பாஷ்யமென்று சொல்வார்கள். அதனாலேயே அதனுடைய பெருமை தெரிய வருகின்றது. அந்த பாஷ்யம் மஹரிஷி பதஞ்சலியால் இயற்றப்பட்டது.
வியாகரணமும் சிவபெருமானும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வியாகரணம் : வேதத்தின் வாய்

வியாகரணமும் சிவபெருமானும்

சிவன் கோயில்களில் "வ்யாகரண தான மண்டபம்" என்னும் பெயருடைய மண்டபம் ஒன்று இருப்பதுண்டு. "வக்காணிக்கும் மண்டபம்" என்று திரித்துச் சொல்வார்கள். அத்தகைய மண்டபம் திருவொற்றியூரிலும் இருக்கிறது. சோழ நாட்டில் பல கோயில்களிலும் இருக்கிறது.

எதற்காகச் சிவன் கோயில்களில் வியாகரண தான மண்டபம் இருக்கிறது? ஏன் விஷ்ணு கோயிலில் இல்லை. சிவனுக்கும் பாஷைக்கும் என்ன சம்பந்தம்? பேச்சே இல்லாத தக்ஷிணாமூர்த்தியாக இருக்கிறவரல்லவா சிவன்?

ந்ருத்தாவஸானே நடராஜ ராஜோ நநாத டக்காம் நவபஞ்ச வாரம்।

உத்தர்துகாம: ஸனகாதி ஸித்தான் ஏதத் விமர்சே சிவ ஸூத்ர ஜாலம்॥ *

என்று ஒரு ச்லோகம் இருக்கிறது. இதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுகிறேன்.

பேசாத சிவன் ஆடாமல் அசங்காமலிருப்பார். அவரே ஒரே ஆட்டமாக ஆடுகிறபோதுதான் பாஷா சாஸ்திரமே பிறந்தது. இதை மேற்படி ச்லோகம் தெரிவிக்கிறது.

நடராஜர் என்பது ஆடும் பரமேசுவரனுடைய பெயர். நடன், விடன், காயகன் என்ற உல்லாச கலைக்காரர்களில் நடன் நாட்டியம் செய்பவன். அந்த நடர்களுக்கெல்லாம் ராஜா நடராஜா. யாரைக் காட்டிலும் உயர்ந்த நடனம் செய்யமுடியாதோ அவன்தான் நடராஜா. மஹா நடன் என்று அவன் சொல்லப்படுகிறான். "மஹாகாலோ மஹாநட:" என்று ஸம்ஸ்கிருத அகராதியான "அமரகோசம்" சொல்கிறது. 'அம்பலக் கூத்தாடுவான்' என்று தமிழில் சொல்லுவார்கள். 'அம்பலக்கூத்தாடுவான் பட்டன்' என்பது பிராமணர்களுக்கு உரிய பெயராக இருந்ததென்று சாஸனங்களால் தெரிய வருகிறது. ஆதியில் பிராம்மணர்களும் இப்படி நல்ல தமிழ்ப் பெயராக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

'நிர்ணயஸாகரா பிரெஸ்' என்று பம்பாயில் ஒரு அச்சுக்கூடம் இருக்கிறது. அதில் பழைய காலத்தில்

இயற்றப்பட்ட சிறு காவியங்கள் 'Kavyamala Series' என்னும் பெயரில் வரிசையாக வெளியிடப்பட்டன. அந்த மாலையில் 'பிராசீன லேகமாலை' என்னும் பெயருடைய சில புஸ்தகங்கள் இருக்கின்றன. பழைய காலத்து ஸம்ஸ்கிருத சாஸனங்கள் அதில் இருக்கின்றன. அந்த சாஸனங்களுக்குள் வேங்கி நாட்டு சாஸனம் ஒன்று இருக்கிறது. வேங்கிநாடு என்பது, கிருஷ்ணா நதிக்கும் கோதாவரி நதிக்கும் நடுவில் இருப்பது. அந்த நாட்டில் அகப்பட்ட தாம்ர சாஸனம் ஒன்றை அந்தப் புஸ்தகத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தத் தெலுங்குச் சீமையில் அரசாட்சி செய்து வந்த கீழைச் சாளுக்கிய ராஜாக்களுக்கும் நம்முடைய தஞ்சாவூர் சோழ ராஜாக்களுக்கும் விவாஹ ஸம்பந்தம் இருந்தது. பிருஹதீச்வர ஸ்வாமி கோயிலைக் காட்டிய ராஜராஜ சோழனுடைய புத்ர வம்சம் பௌத்தர்களோடேயே முடிந்து போய்விட்டது. அவனுடைய தௌஹித்ரி (பெண் வழிப் பேத்தி) அம்மங்கா தேவி வாழ்க்கைப் பட்டிருந்தது ராஜராஜ நரேந்திரன் என்ற கீழைச்சாளுக்கிய ராஜாவுக்குத்தான். அவர்களுடைய பிள்ளையான குலோத்துங்கன்தான் அப்புறம் சோழ நாட்டுக்கும் ராஜா ஆனது. அவன் ஆந்திர தேசத்தில் வேதாத்தியயனம் விருத்தியடைய வேண்டுமென்று எண்ணித் தமிழ்நாட்டிலிருந்து 500 பிராம்மணர்களைக் கொண்டுபோய் வேங்கிநாட்டில் குடியேற வைத்தான். ஆந்திரதேசத்தில் உள்ள திராவிடலு என்ற பிரிவினர் இந்த 500 பிராம்மணர்களுடைய வம்சஸ்தர்களே.

அந்த 500 பிராம்மணர்களுடைய பெயர்களும், கோத்திரங்களும், அந்த சாஸனத்தில் சொல்லப்படுகின்றன. இன்ன இன்ன சாஸ்திரத்தில் வல்லவர், இன்ன இன்ன காரியங்கள் செய்ய வேண்டியவர் என்பவைகளைப் போன்ற பல விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஊரில் மொத்தமுள்ள நிலத்தில் அவர்களில் இன்னார் இன்னாருக்கு இந்த இந்தப் பூமி தானம் தரப்படுகிறது என்பதும், அந்தப் பூமியின் எல்லை முதலியவைகளும் அதில் காட்டப்படுகின்றன. சிஷ்யராக வருகிறவர்களுக்கு அவர்கள் தங்களுக்குத் தெரிந்த வேதங்களையும் சாஸ்திரங்களையும் சொல்லி வைக்கவேண்டும்; அதற்காகவே அவர்களுக்கு நிலங்கள் மானியமாக விடப்பட்டிருக்கின்றன.

ரூபாவதார வக்து : ஏகோ பாக :

என்று அதில் ஒரு வாக்கியம் இருக்கிறது. அதாவது 'ரூபாவதாரம்' சொல்லுபவருக்கு ஒரு பாகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'ரூபாவதாரம்' என்பது ஒரு வியாகரண சாஸ்திரம்தான்.

தின்டிவனத்தருகில் உள்ள 'எண்ணாயிரம்' என்ற ஊரில் இருந்த 340 மாணார்களைக் கொண்ட வித்யாசாலையில், 40 பேர் ரூபாவதாரம் படித்ததாக முதலாம் ராஜேந்திர சோழனின் சாஸனம் இருக்கிறது. பாண்டிச்சேரி ராஜ்யத் திரிபுவனத்தில் ராஜாதிராஜன் (கி.பி. 1018-1050) போஷித்த பாடசாலையிலும் ரூபாவதாரம் போதிக்கப்பட்டிருக்கிறது. வீரராஜேந்திர தேவனின் கி.பி. 1067-ம் வருஷத்திய சாஸனத்திலிருந்து, காஞ்சிக்கு அருகேயுள்ள

திருமுக்கூடல் வித்யாசாலையில் இந்த நூல் கற்பிக்கப்பட்டதை அறிகிறோம்.

ஸித்தாந்த கௌமுதி என்று ஒரு வியாகரண இப்பொழுது அதிகமாக பிரசாரத்தில் இருந்து வருகிறது. அடையபலம் என்ற ஊரில் அவதாரம் செய்தவர்களும், 104 கிரந்தங்களை எழுதினவர்களும், சைவகிரந்தங்களை அதிகமாகச் செய்தவர்களும், 'குவலயானந்தம்' என்னும் அலங்கார சாஸ்திரத்தை எழுதினவர்களுமாகிய அப்பைய தீக்ஷிதரவர்களுடைய சிஷ்யராகிய பட்டோஜி தீஷிதர் என்பவர் அந்த 'ஸித்தாந்த கௌமுதியை'ச் செய்தவர். அது பாணினியின் ஸூத்ரத்திற்கு வியாக்கியான ரூபமாக உள்ளது.

"அர்த்த மாத்ரா லாகவேன புத்ரோத்ஸவம் மன்யந்தே வையாகரணா:" என்று, வியாகரணமானது பண்டிதர்களுக்குத் தரும் பரமானந்தத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. "அரை மாத்திரை லாபம் கிடைத்தால், அது வியாகரண சாஸ்திரம் அறிந்தவர்களுக்கு, நிரம்ப நாள் பிள்ளையில்லாதவனுக்கு ஒரு புத்திரன் உண்டானதுபோல ஸந்தோஷத்தைக் கொடுக்கும்" என்பது இதன் அர்த்தம். 'அ' என்பதை 'ஆ' என்று நீட்டினால், அப்படி நீட்டினதற்குப் பலன் சொல்ல வேண்டும். அதுவே மாத்திரை லாபம். ரத்ன சுருக்கமாகவே ஸூத்ரம் இருப்பதால் அதிலே சிக்கல்கூட ஏற்பட்டு மாத்திரைகள் பற்றி அபிப்ராய பேதங்களும் உண்டாகும். அப்போது வியாக்யானந்தான் தெளிவு படுத்தித் தந்து, புத்ரோத்ஸவ ஆனந்தத்தைத் தருவது!

அதற்காக வியாக்யானம் வளவள என்று இருக்க வேண்டியதில்லை; நறுக்குத் தெறித்த மாதிரி சுருக்கமாயிருந்தும் தெளிவு பண்ணமுடியும் என்பதற்கு "கௌமுதி" எடுத்துக் காட்டு. ஸூத்திரத்தில் எழுத்துக்களெல்லாம் மிகவும் கணக்காக இருந்தால் ஸித்தாந்த கௌமுதியில் வியாக்கியானமும் கணக்காக இருக்கும்; வளவளப்பே கிடையாது. ஸூத்திரத்தில் அதிகம் இருந்தாலும் இருக்குமோ என்னவோ? இதில் இராது. அந்தக் கௌமுதி இப்பொழுது பிரஸித்தி அடைந்திருக்கிறது. அது சற்றேறக் குறைய 400 வருஷங்களுக்கு முன் செய்யப்பட்டது. இப்பொழுது அதைத்தான் ஸம்ஸ்கிருத வியாகரணம் வாசிக்கிறவர்கள் முதலில் வாசிக்கிறார்கள். (இந்த வியாகரணத்தைச் செய்த பட்டோஜி தீக்ஷிதரென்பவரே 'தத்வகௌஸ்துபம்' என்ற ஒரு கிரந்தம் செய்து, அதைக் குருவுக்குக் காணிக்கையாக அர்ப்பணம் செய்தார். அந்தப் புஸ்தகத்தில் பிரம்மத்தை விட வேறுண்டென்று சொல்வது உபநிஷத்துக்களோடு ஒட்டாது என்றும், அத்வைதந்தான் உண்மையானது என்றும் தீர்மானம் செய்திருக்கிறார். மத்வமத கண்டனமாக 'மத்வமத வித்வம்ஸனம்' என்ற கிரந்தம் ஒன்றும் அப்பைய தீக்ஷிதரவர்களுடைய ஆக்ஞையின் மேல் செய்திருக்கிறார். அதெல்லாம் ஸித்தாந்திகளுக்குள் சண்டையை உண்டாக்குவது. எல்லா ஸித்தாந்திகளுக்கும் பொதுவானது வியாகரண வியாக்யானம்.)

அவர் செய்த ஸித்தாந்த கௌமுதிக்கு முன்பு, முன்சொன்ன 'ரூபாவதாரம்' என்னும் வியாகரண சாஸ்திரமே பிரஸித்தமாயிருந்தது. 'ரூபம்' என்பதற்கு

இங்கே சப்தத்தின் 'முழு ஸ்வரூபம்' என்று அர்த்தம். அவதாரம் என்றால் இறங்குதல்; அதாவது, வரலாறு. இந்த ரூபாவதாரத்தை பிரஸிடென்ஸி காலேஜில் உபாத்தியாயராயிருந்த ரங்காசாரியார் என்பவர் பிரசுரம் செய்தார்.

அந்த ரூபாவதாரத்தைச் சொல்லி வைக்கிறவர்களுக்குத் தனியே ஒரு பாகம் ராஜமானியங்களிலிருந்து கொடுக்கப் பட்டதென்பது முன்னே சொன்ன சாஸனத்திலிருந்து தெரிய வருகிறதால், வியாகரணம் எவ்வளவு முக்கியமாக நினைக்கப்பட்டு வந்தது என்றும் புரிகிறது.

அந்த வேங்கி சாஸனம் ஏறக்குறைய 850 வருஷங்களுக்கு முன் ஏற்பட்டது. அதில் தானம் பெற்ற ஒவ்வொரு பிராம்மணனுடைய பேரும் இருக்கிறது. ஷடங்கவித் என்ற பட்டம் அந்தப் பிராம்மணர்களில் பல பேருக்கு இருக்கிறது. அவர்களுடைய பேர்களில் பல தமிழில் இருக்கிறது. அம்பலக் கூத்தாடுவான் பட்டன், திருவரங்கமுடையான் பட்டன் என்பவை போன்ற பல பெயர்கள் அதில் வருகின்றன. ஒன்று சிவக்ஷேத்திரங்களில் "கோயிலாக" இருக்கப்பட்ட சிதம்பர (அம்பல) சம்பந்தமுடைய பேர்; இன்னொன்று வைஷ்ணவ க்ஷேத்திரங்களின் "கோயிலான" ஸ்ரீரங்க சம்பந்தமுடைய பேர்!

இங்கே சைவம், வைஷ்ணவம் என்று நான் சொன்னாலும், அவர்கள் எல்லாரும் ஸ்மார்த்தர்களே. சிவபக்தியும்

விஷ்ணுபக்தியும் எந்த காலத்திலும் இருந்தது. அதனால்தான் சிவன் பெயரும் விஷ்ணு பெயரும் அவர்கள் வைத்துக் கொண்டிருந்தார்கள். வடதேசத்திலும் மலையாளத்திலும் இப்பொழுதும் ஸ்மார்த்தர்களே பெருமாள் கோயில்களில் பூஜை செய்கிறார்கள். திருவரங்கமுடையான் பட்டன் என்றால், வைஷ்ணவரென்று நினைக்கவேண்டாம். 'திருவரங்கமுடையான்' என்பதை ஸம்ஸ்கிருதத்தில் 'ரங்கஸ்வாமி' என்போம். உடையான் என்றால் ஸ்வாமி. 'ஸ்வம்' என்றால் உடைமை.

திருவம்பலக் கூத்தாடுவானென்பது நடராஜாவுடைய தமிழ்ப்பெயர். அவருக்கும் வியாகரணத்துக்கும் உள்ள ஸம்பந்தத்தைத்தான் சொல்ல வந்தேன். "ந்ருத்தாவஸாநே" ச்லோகத்தின் விஷயம் இதுதான். அவர் பெரிய கூத்து ஆடுகிறார். நாமெல்லாம் ஆடவேண்டிய கூத்தைச் சேர்த்து வைத்து அவர் ஆடுகிறார். அந்த நடராஜ விக்கிரஹத்தின் தலையில் படர்ந்தாற்போல் ஒன்று இருக்கும்; அது இரண்டு பக்கத்திலும் நீண்டு இருக்கும். அதில் சந்திரன் இருக்கும். கங்கையும் இருக்கும். அது என்ன? அதுதான் நடராஜாவுடைய ஜடாபாரம். இந்தக் காலத்தில் போட்டோ எடுக்கிறார்கள். அதில் "ஸ்நாப்-ஷாட்" என்பது ஒன்று. ஒரு வஸ்து சலனத்தில் இருக்கும்பொழுதே, திடீரென்று ஓர் அவஸரத்தில் போட்டோ எடுப்பது அது. நடராஜா வெகு வேகமாக நர்த்தனம் பண்ணுகிறார். பண்ணி நிறுத்தப் போகிற ஸமயத்தில் ஜடாபாரம் இரண்டு பக்கங்களிலும் நீட்டிக்கொண்டு இருக்கும். அந்த நிலையை

அந்தக் காலத்துச் சிற்பி மனஸிலே எடுத்த ஸ்நாப்-ஷாட் தான் அந்த ஸ்வரூபம்.

நடராஜாவுடைய கையில் ஒரு உடுக்கு இருக்கிறது. அது குடுகுடுப்பாண்டி வைத்திருப்பதைவிடப் பெரியது, மாரியம்மன் கோயிற் பூஜாரி வைத்திருப்பதைவிடச் சிறியது. அதற்கு டக்கா என்றும் டமருகம் என்றும் பெயர்கள் உண்டு. பாதத்தின் தாளத்தை அநுஸரித்து, அந்த டமருக தாளமும் இருக்கும். இதன் ஒலியைத்தான் மேலே ச்லோகத்தில் 'நநாத டக்காம்' என்று சொன்னது.

வாத்தியங்களில் முக்கியமானவை மூன்று வகை. அவை சர்ம வாத்தியம் (டக்கா, மேளம், கஞ்சிரா, மிருதங்கம் போலத் தோல் சேர்ந்த வாத்தியம்) , தந்திரி வாத்தியம் (வீணை, ஃபிடில் போலத் தந்தி போட்டது) , வாயுரந்திர வாத்தியம் (நாயனம்,புல்லாங்குழல் முதலிய துளை போட்டுக் காற்றை ஊதும் கருவிகள்) என்பவை. இவைகளில் சர்ம வாத்தியம் தண்டத்தாலோ ஹஸ்தத்தாலோ அடிக்கப்படும். அந்த வாத்தியத்தை நிறுத்தும்பொழுது சாப்புக் கொடுப்பது, அதாவது, சேர்ந்தாற்போலச் சில அடிகள் அடிப்பது வழக்கம். அதுபோல நடராஜருடைய டமருகத்தில் நடனம் முடியும் காலத்தில் - ந்ருத்த அவஸானே- ஒரு சாப்புத் தொனி உண்டாயிற்று. அதைப்பற்றித்தான் முன்சொன்ன ச்லோகம் ஆரம்பிக்கிறது.

நடராஜா நிருத்தம் செய்கிறார். ஸனகாதிகள், பதஞ்ஜலி, வியாக்கிரபாதர் முதலியவர்கள் சுற்றி நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மஹா தபஸ்விகள் ஆகையால் அந்த நிருத்தத்தைக் கண் கொண்டு பார்க்க முடிந்தது. நடராஜாவுடைய நடனத்தை ஞானநேத்திரம் உடையவர்கள்தாம் பார்க்க முடியும். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய விச்வ ரூபத்தைத் தரிசிக்கும் சக்தியை பகவானே அர்ஜுனனுக்குக் கொடுத்தார். இதே சக்தியை வியாஸர் ஸஞ்சயனுக்கும் கொடுத்து, அவனையும் விச்வரூபத்தைக் கண்டு திருதராஷ்டிர மஹாராஜாவுக்கு வர்ணிக்கும்படிப் பண்ணினார். அந்த ஸ்வரூபத்தை அவர்களால் மட்டும் பார்க்க முடிந்தது. குருக்ஷேத்ர யுத்த பூமியில் இருந்த மற்றவர்களால் பார்க்க முடியவில்லை. தேவதைகளும், ரிஷிகளும், யோகிகளும் ஸ்ரீ நடராஜமூர்த்தியின் தாண்டவத்தைப் பார்ப்பதற்காகப் பலப் பிரயத்தனம் செய்து, அதற்கு வேண்டிய பார்வையைப் பெற்றார்கள். அந்தப் பார்வை திவ்விய திருஷ்டி என்று சொல்லப்படும். 'திவ்ய சக்ஷுஸ்' என்று கீதையில் பகவான் சொல்கிறார்.

நிஜமான கண்களைக் கொண்டு ஸனகாதிகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நடராஜாவின் டான்ஸ் கச்சேரியில் விஷ்ணு மத்தளம் கொட்டிக் கொண்டிருக்கிறார். பிரம்மா தாளம் போட்டுக் கொண்டிருக்கிறார். நிருத்தம் முடிகிற ஸமயத்தில், டமருகத்தில் சாப்பு கிடுகிடுவென்று 14 சப்தங்களாக உதிர்ந்தது. ச்லோகத்தில் சொன்ன 'நவ பஞ்சவாரம்' என்றால் ஒன்பதும் ஐந்தும் சேர்ந்த பதினாலு. நநாத டக்காம் நவபஞ்சவாரம்.

அந்தச் சப்தங்களின் கணக்குப் போலவே வித்தைகளின் கணக்கு 14 ஆகத்தான் இருக்கின்றது! ஹிந்து மதத்துக்கு ஆதாரம் சதுர்தச வித்யா என்கிற 14 என்றால், நடராஜாவின் சாப்பும் பதினாலு சப்தத்தையே கொடுத்தது!அந்தப் பதினான்கு சப்தம் ஸனகாதிகளை உத்தாரணம் செய்வதற்காக உண்டாயின என்கிறது ச்லோகம்.

தக்ஷிணாமூர்த்திக்குப் பக்கத்தில் வயதில் முதிர்ந்த நாலு பேர்கள் இருப்பதாகக் கோயிலில் பார்க்கிறோமே, அவர்தாம் ஸனகாதிகள். தேவாரம், திருவாசகம் மட்டுமின்றி, ஆழ்வார் பாட்டிலும், பல இடங்களில் "அன்றாலின் கீழிருந்து அறம் நால்வருக்கு உரைத்த" விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நால்வர்தம் ஸனகாதிகள்.

அப்படி எழுந்த சப்தங்கள் சிவஸ்வரூபத்தை ஏகபோகமாக அநுபவிப்பதற்கு மார்க்கமாக இருந்தன. அந்த சப்தங்களை "மாஹேச்வர ஸூத்திரம்" என்று வைத்து, அவைகளுக்கு நந்திகேச்வரர் 'காரிகா' (காரிகை) என்கிற பாஷ்யம் எழுதினார்.

அப்பொழுது அங்கே இருந்தவர்களுல் பாணினி மஹரிஷி என்பவர் ஒருவர். அந்தப் பாணினி என்பவருடைய கதை "பிருஹத் கதை" என்ற புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த பிருஹத் கதையானது, ஸம்ஸ்கிருதத்தின் பேச்சு மொழிக் கொச்சைகளான பிராகிருத பாஷைகள் ஆறில்

ஒன்றாகிய பைசாச பாஷையில் குணாட்யர் என்பவரால் செய்யப்பட்டது.

பிருஹத் கதையின் ஸங்கிரஹத்தை (சுருக்கத்தை) க்ஷேமேந்திரர் என்பவர் ஸம்ஸ்கிருதத்தில் எழுதினார். அதை அநுசரித்து ஸோமதேவ பட்டர் "கதாஸரித்காரம்" என்று ஒன்று எழுதியிருக்கிறார். அரேபிய இரவுக் கதைகள் (Arabian Night Tales) ஈஸாப் கதைகள் (Aesop Fables) , பஞ்ச தந்திரக் கதைகள் முதலியவைகளுக்கெல்லாம் மூலம் அதில் இருக்கிறது. தமிழிலும் "பெருங்கதை" என்று ஒன்று இருக்கின்றது. 'ப்ருஹத் கதை'என்ற வார்த்தையின் நேர் தமிழாக்கம் தான் 'பெரும் கதை'.

'கதாஸரித்ஸாகர'த்தில் பாணினியின் கதை சொல்லப் பட்டிருக்கிறது. மகத தேசத்தில், இப்பொழுது பாட்னாவென்று வழங்கும் பாடலிபுத்ரத்தில் வர்ஷோபாத்யாயர், உபவர்ஷோபாத்யாயர் என்ற இருவர் இருந்தார்கள். உபவர்ஷோபாத்தியாயர் இளையவர்.அவர் பெண் உபகோஸலை. வர்ஷோபாத்தியாயரிடம் வரருசி என்பவரும் பாணினியும் பாடம் கேட்டு வந்தார்கள். பாணினிக்குப் படிப்பு வரவில்லை. அதனால் அவரை வர்ஷோபாத்தியாயர், "ஹிமாசலத்திற்குப் போய் தவம் பண்ணு" என்று அனுப்பி விட்டார். அவர் அப்படியே போய்த் தபஸ் செய்து ஈச்வர கிருபையை அடைந்தார். நடராஜாவுடைய தாண்டவத்தைப் பார்க்கும் சக்தியைப் பெற்றார். நடராஜ தாண்டவத்தின் அவஸான (முடிகிற) காலத்தில் உண்டான 14 சப்தங்களையும் கொண்டு, அவற்றை பதினான்கு ஸூத்திரங்களாக வியாகரணத்துக்கு

மூலமாக வைத்துக் கொண்டு, "அஷ்டாத்யாயி"யை எழுதினார். வியாகரண மூலநூல் இதுவே. எட்டு அத்தியாயம் கொண்டதாதலால் "அஷ்டாத்யாயி"எனப்படுகிறது.

அந்த பதினான்கு ஸூத்ரங்களையும் ஆவணியவிட்டம் பண்ணுகிறவர்கள் கேட்டிருப்பார்கள். மஹேச்வரனின் டமருவிலிருந்து உண்டானதால், அவை மாஹேச்வர ஸூத்ரம் எனப்படும்.

மநுஷ்யனின் கையால் அடிக்கப்படுகிற, அல்லது மீட்டப்படுகிற, அல்லது ஊதப்படுகிற வாத்யங்களிலிருந்து அக்ஷரங்கள் இல்லாத வெறும் சப்தந்தான் வருகிறது. நாதப்பிரம்மம் சப்தப் பிரம்மமுமாக இருக்கப்பட்ட பரமேச்வரனுடைய ஹஸ்த விசேஷத்தால், அந்த டமருகத்தின் சாப்புகளோ பதினாலு விதமான அட்சரக் கோவைகளாகவே ஒலித்தன! அவற்றைத்தான் ஆவணியவிட்டத்தில் கேட்கிறோம்:

1. அ இ உண்; 2. ருலுக்; 3. ஏ ஒங்; 4. ஐ ஔச்; 5. ஹயவரட்; 6.லண்; 7. ஞம ங்ண நம்; 8. ஜ2 ப4 ஞ்; 9. க4 ட4 த4 ஷ்; 10. ஜ ப3 க3 ட3 த3 ச்; 11. க2 ப2 ச2 ட2 த2 சடதவ்; 12. கபய்; 13. சஷஸர்; 14. ஹல் - இதிமாஹேச்வராணி ஸூத்ராணி.

ஆவணி அவிட்டத்தில் இதைச் சொல்கிற போது வேடிக்கையாகக் சிரித்துக்கொண்டே கேட்டிருப்பீர்கள். அது எந்த விஷயத்தைச் சொல்கிறது என்று தெரியாமலே

ஒப்பித்திருப்பீர்கள். பரமேச்வரன் உடுக்கை அடித்துக்கொண்டு கிர்ர், கிர்ர் என்று சுற்றி ஆடி முடித்தபோது கொடுத்த சாப்புகள் தான் இவை.

சலங்கை 'ஜல் ஜல்' லென்று சப்திக்கிறது; டமாரம் 'திமுதிமு' என்று அதிர்கிறது; மேளத்தில் 'டம் டம்' என்று ஒசை வருகிறது என்கிறோம் அல்லவா? வாஸ்தவத்தில் இதே சப்தங்களா அவற்றிலிருந்து வருகின்றன? ஆனாலும் கிட்டத்தட்ட வருவதால்தான் இப்படிச் சொல்கிறோம். 'பிப்பீ' என்று நாயனம் ஊதினதாகச் சொல்லுவோமே யொழிய, 'பிப்பீ' என்று தவில் வாசித்தான் என்போமா? 'டம்டம்' என்று தவில் வாசித்ததாக சொல்லுவோமே யொழிய, 'டம்டம்' என்று நாயனம் ஊதியதாக சொல்வோமா? அடிக்கிற வாத்யங்களுக்குள்ளேயே மேளத்தை 'டம் டம்' என்றும் மிருதங்கத்தை 'திம்திம்' என்றும் சொல்லுகிறோம். ஊதுகிற வாத்யங்களுக்குள்ளேயே நாயனத்தைப் 'பிப்பீ' என்றால், சங்கை 'பூம் பூம்' என்று ஊதினான் என்றுதான் சொல்கிறோம். வீணை மாதிரி மீட்டுகளை 'டொய்ங் டொய்ங்' என்கிறோம். ஆகையால், எல்லா வாத்தியங்களிலுமே ஸ்பஷ்டமாக அக்ஷரங்கள் வராவிட்டாலும் அக்ஷரம் மாதிரியான ஒலி வருகிறது என்றே ஆகிறது. மனிதர்கள் வாசிக்கிற வாத்தியங்களிலேயே இப்படியென்றால், ஸாக்ஷாத் நடராஜா, பஞ்ச கிருத்யம் செய்யும் பரமேச்வரன், அடிக்கிற உடுக்கிலே ஏன் ஸ்பஷ்டமாக அக்ஷரங்கள் வராது? இப்படிப் பதினாலு எழுத்துக் கூட்டங்கள் வந்தன.

இந்த எழுத்துக்களைப் பாணினி எப்படி உபயோகப் படுத்திக் கொண்டார் எழுத்துக்களைச் சேர்த்துச் சொல்ல ஒரு சுருக்கமான ஸம்ஜ்ஞையை [சமிக்ஞையை] இந்த ஸூத்ரங்களிலிருந்து பாணினி ஏற்படுத்திக் கொண்டார். 14 ஸூத்ரங்களில் ஒன்றின் முதலெழுத்தையும் மற்றொன்றின் கடைசி எழுத்தையும் சேர்த்துச் சொன்னால், நடுவில் இருக்கிற எல்லா எழுத்தையும் அது குறிக்கும் என்று பண்ணிவிட்டார். உதாரணமாக, 'ஹயவரட்' என்பதில் முதல் எழுத்தான ஹ–வையும், 'ஹல்' என்பதில் முடிவான 'ல்'லையும் சேர்த்தால் 'ஹல்' என்றாகிறது. அது இடையிலுள்ள மெய்யெழுத்துக்கள் எல்லாவற்றையும் குறிக்கும். இப்படியே 'அ இ உண்' ஆரம்பமான 'அ'-வை 'ஔச்' முடிவான 'ச்'- உடன் சேர்ந்த 'அச்' என்பது உயிரெழுத்துக்களைக் குறிக்கும். பதினாலு கோவைகளுக்கும் முதலெழுத்தாகிய 'அ–வையும், கடைசி எழுத்தாகிய 'ல்' லையும் சேர்த்து, 'அல்' என்றால் அது அத்தனை எழுத்தையுமே சேர்த்துக் குறிக்கும்.

அலோந்த்யஸ்ய என்பது அஷ்டாத்யாயியில் ஒரு ஸூத்திரம்.

'அல்' என்றாலே எழுத்து என்று அர்த்தம் வந்துவிட்டது. எல்லா பாஷைகளுக்குமே அகாரம் ஆதியாயிருக்கிறது. உருது பாஷையில் 'அலீப்' என்பது முதலெழுத்து. கிரீக்கில் 'ஆல்ஃபா' என்பது முதலெழுத்து. இந்த இரண்டும் எழுத்துக்களையெல்லாம் குறிக்கும் 'அல்' என்பதிலிருந்து வந்ததுதான். லோகம் பூராவும் வைதிக மதம் இருந்ததற்கு இதுவும் ஒரு அடையாளம்.

இவ்வாறு வியாகரணத்திற்கு மூலகாரணமாயிருந்தது நடராஜாவிடனுடைய டமருகத்தில் இருந்து உண்டாகிய மாஹேச்வர ஸூத்திரங்களென்று தெரிகிறது.

லோகத்தில் சப்த சாஸ்திரங்களை ஏற்படுத்தியதற்குக் காரணமாக இருந்தவர் பரமேச்வரராகையினால்தான் சிவன் கோவிலில் வியாகரணதான மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது; பெருமாள் கோவிலில் இல்லை.

நடராஜாவுக்கருகில் பதஞ்சலி, வ்யாக்ரபாதர் என்னும் இருவர் இருக்கிறார்கள். எந்தக் கோயிலிலும் அவர்களுடைய பிம்பங்களை நடராஜாவினுடைய பிம்பத்துக்குப் பக்கத்தில் பார்க்கலாம். சீர்க்காழிக்கருகில் ஒரு க்ஷேத்திரத்திற்குப் போயிருந்தேன். அங்கே கோயிலில் நடராஜாவுக்குப் பக்கத்தில் பதஞ்சலி, வியாக்ரபாதர் இவர்களுடைய உருவங்களுக்குக் கீழே அவர்களுடைய பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. எழுதுகிறவன் நன்றாக தெரிந்துக் கொள்ளாமையால் 'பதஞ்சலி' என்னும் பெயரைப் 'பதஞ்சொல்லி' என்று எழுதியிருந்தான். அந்தப் பெயரும் அவருக்குப் பொருந்தியதை நினைத்து அறியாமையிலும் ஒரு தத்துவம் இருக்கிறதென்று ஸந்தோஷம் அடைந்தேன்! "பதஞ்சொல்லி" என்பது எப்படிப் பொருந்தும்? 'பதம்' என்பது வியாகரணத்திற்கே ஒரு பெயர். பதவாக்ய ப்ரமாண என்கிறபோது 'பதம்' என்பதற்கு வியாகரணம் என்பதுதான் அர்த்தம். ஆகவே பதஞ்சொல்லி என்பதற்கு வியாகரணம் சொன்னவர் என்று அர்த்தமாகிறது. பதஞ்ஜலி வியாகரண

பாஷ்யம் செய்தவர் என்பதை முன்பே சொன்னேன் அல்லவா?

'பதஞ்சொல்லி' என்று தப்பாக எழுதினதே பதஞ்ஜலிக்குப் பொருத்தமாயிருப்பதைப் பார்த்த போது, இன்னொன்று நினைவு வந்தது. ஸம்ஸ்கிருதத்தில் 'குணாக்ஷர நியாயம்' என்று ஒன்று சொல்லுவார்கள். 'குணம்' என்றால் செல்லு முதலான பூச்சிக்குப் பெயர். அது மரத்தையோ ஏட்டுச் சுவடியையோ அரித்துக் கொண்டே போயிருக்கும். சில சமயங்களில் இப்படி அரித்திருப்பதே எழுத்துக்களைப் பொரித்த மாதிரி இருக்கும். பூச்சி பாட்டுக்கு அரித்தது அக்ஷரங்களின் வடிவத்தில் அமைந்துவிடும். செல்லுப் பூச்சி உத்தேசிக்காமலே இப்படி ஏற்பட்டு விடுவதுண்டு. இம்மாதிரி உத்தேசிக்காமலே ஏதோ ஒன்றைப் பண்ணி அதிலும் ஒரு அர்த்தம் ஏற்பட்டு விடுவதை 'குணாக்ஷர (குணஅக்ஷர) நியாயம்' என்பார்கள். பதஞ்ஜலி பதஞ்சொல்லியானதும் குணாக்ஷர நியாயம்தான் என்று தோன்றியது. இது இருக்கட்டும்.

தஞ்சாவூர் ராஜ்யத்தில், நானூறு வருஷங்களுக்கு முன் நாயக வம்சத்தைச் சேர்ந்த ரகுநாத நாயக்கர் ஆண்டபோது ஏற்பட்ட ஸாஹித்ய ரத்னாகரம் என்ற காவியத்தை நான் பார்க்க நேர்ந்தது. அதை எழுதிய யக்ஞ நாராயண தீக்ஷிதர் பெரிய சிவபக்தர். அவர் அதிலே ஓரிடத்தில் சொல்லியுள்ள ஈச்வர ஸ்தோத்திரம் ஒன்றிலும் வியாகரணத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதௌ பாணிநிநாததோ (அ)க்ஷர ஸமாம்னா-
யோபதேசேனஸ்ய:

சப்தானாம் அநுசாஸநான்யகலய: சாஸ்த்ரேண
ஸூத்ராத்மனா।

பாஷ்யம் தஸ்ய ச பாதஹம்ஸகரவை: ப்ரௌடாசயம் தம்
குரும்

சப்தார்த்த ப்ரதிபத்தி ஹேதும் அநிசம் சந்த்ராவதம்ஸம்
பஜே

(ஸாஹித்ய ரத்னாகர காவியம், XI-124)

இந்த ச்லோகத்தில் வரும் 'அக்ஷர ஸமாம்னாயம்' என்பது வ்யாகரணத்திற்குப் பெயர். அக்ஷரங்களைக் கூட்டமாகச் சேர்த்து வைத்த இடம் என்று அர்த்தம். ஈச்வரனுடைய மூச்சுக்காற்று வேதம். அவருடைய கைக்காற்று அக்ஷர வேதம். அதாவது மாஹேச்வர ஸூத்திரம். "சப்தானுசாஸனம்" என்பதும் அதன் பெயர். 'பாணினி நாதத:' என்பதற்குப் "பாணிகளால் (கைகளால்) சப்தம் பண்ணினாய்" என்றும், "பாணினிக்குச் சப்தம் ஏற்பட்டது" என்றும் சிலேடையாக இரண்டு அர்த்தங்கள் உண்டாகின்றன. அதாவது ஈச்வரன் கையிலிருந்து உண்டான சப்தத்தை வைத்துக் கொண்டு பாணினி வியாகரணம் பண்ணினார் என்னும் கருத்து இதில் குறிக்கப்படுகிறது.

"நீ கையாட்டியதால் வியாகரண ஸூத்திரங்கள் ஏற்பட்டன. காலையாட்டியதால் அதற்கு பாஷ்யத்தை உண்டு பண்ணினாய்" என்று ச்லோகம் சொல்லுகிறது. மஹாபாஷ்யத்தைச் செய்த பதஞ்ஜலி ஆதிசேஷாவதாரம். ஆதிசேஷன் பரமேச்வரன் காலில் பாதரஸமாக இருக்கிறார்! இதை நினைத்துத்தான் காலாட்டி பாஷ்யத்தை உண்டு பண்ணினார் என்று கவி சொன்னது!" சப்தமும் அர்த்தமும் உன்னாலேயே ஏற்பட்டது"என்று அவர் முடிக்கிறார்.

வியாகரணத்திற்கு இப்படி பல காரணங்களால் பரமேச்வரன் மூல புருஷனாய் இருப்பதால், அவருடைய கோயிலில் வ்யாகரண தான மண்டபங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று தெரிந்து கொண்டேன்.

*நந்திகேஸ்வர காரிகா-1

இலக்கண நூல்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வியாகரணம் : வேதத்தின் வாய்

இலக்கண நூல்கள்

இங்கே பரமேச்வரனைக் கவி "சந்த்ராவதம்ஸன்" என்கிறார். அப்படியென்றால் சந்திரனைத் தலையணியாக, சிரோபூஷனமாகக் கொண்டவன் என்று அர்த்தம். "சந்திரசேகரன்", "இந்துசேகரன்" என்றாலும் இதே பொருள்தான். வியாகரண சாஸ்திரங்களில் இரண்டுக்கு ஆச்சரியமாக இந்த 'இந்துசேகர'ப் பெயர் இருக்கிறது.

ஒன்று, 'சப்தேந்து சேகரம்' வியாகரணத்தில் இந்த நூல் வரைக்கும் ஒருத்தன் படித்து விட்டால், "சேகராந்தம் படித்தவன்"என்று பாராட்டிச் சொல்வார்கள். 'இன்னொரு புஸ்தகம், "பரிபாஷேந்து சேகரம்" என்பது.

சிக்ஷா சாஸ்திர நூல்கள் சுமார் முப்பது இருப்பது போல், வியாகரணத்திலும் ஏராளமான கிரந்தங்கள் இருக்கின்றன. அவற்றில் பாணினி ஸூத்ரம், அதற்குப் பதஞ்ஜலி பாஷ்யம், வரருசி வார்த்திகம் ஆகிய மூன்றும் தலைமை ஸ்தானத்தில் இருக்கின்றன.

வரருசியும் காத்யாயனரும் ஒருத்தரே என்ற அபிப்ராயத்தில் இங்கே நான் சொல்லியிருக்கிறேன். அவர்கள் வெவ்வேறு பேர் என்றும் சிலர் சொல்கிறார்கள்.

விக்ரமாதித்தன் ஸபையிலிருந்த 'நவரத்ன'ங்களில் ஒருத்தர் வரருசி. இலக்கண புஸ்தகங்கள் எழுதினவர். வார்த்திகம் பண்ணின காத்யாயனர் இவரா இல்லையா என்பதில் அபிப்ராய பேதம் இருக்கிறது.

பர்த்ருஹரியின் "வாக்யபாதயம்" என்ற நூலும் முக்யமான வியாகரண புஸ்தகங்களில் ஒன்றாகும்.

'நவ வ்யாகரணம்' என்பதாக ஸம்ஸ்கிருதத்தில் ஒன்பது இலக்கண நூல்கள் குறிப்பிடப் படுகின்றன. ஆஞ்ஜநேய ஸ்வாமி ஸூரிய பகவானிடமிருந்து இவற்றைக் கற்றுக் கொண்டார். பிற்பாடு ஸ்ரீராமரே ஆஞ்சநேயரை "நவவ்யாகரண வேத்தா" என்று புகழ்கிறார்.

நவ வியாகரணங்களில் ஒன்று "ஐந்திரம்" – இந்திரனால் செய்யப்பட்டதால் இப்படிப் பெயர். தமிழ் இலக்கணத்துக்கு மூலமான "தொல்காப்பியம்" இந்த ஐந்திரத்தை மூலமாகக் கொண்டு அந்த வழியிலேயே செய்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வடமொழி வியாகரணமும் தமிழிலக்கணமும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வியாகரணம் : வேதத்தின் வாய்

வடமொழி வியாகரணமும் தமிழிலக்கணமும்

'இலக்கணம்' என்ற தமிழ் வார்த்தை 'லக்ஷணம்' என்பதிலிருந்து வந்த மாதிரியே, இலக்கண சம்பந்தமான வேறு பல வார்த்தைகளும் ஸம்ஸ்கிருத வியாகரணத்தில் உள்ளதை அநுசரித்தே தமிழில் உண்டாயிருக்கிறது. உதாரணமாக, தமிழிலக்கணத்தில் 'பகுதி', 'விகுதி' என்று இரண்டைச் சொல்கிறோம். 'ராமனுக்கு' என்கிற வார்த்தையில் 'ராமன்' என்பது பகுதி, கு என்பது விகுதி என்கிறோம். 'பகுதி', 'விகுதி' என்பன 'ப்ரக்ருதி', 'விக்ருதி' என்ற ஸம்ஸ்கிருத வார்த்தைகளின் மரூஉதான். "அதெப்படிச் சொல்லலாம்? பகுதி என்பது நல்ல தமிழ் வார்த்தையல்லவா? 'பகுத்தல்' என்ற வினைச்சொல்லின் வேரிலிருந்து உண்டான பெயர்ச்சொல் அல்லவா பகுதி?" என்று ஆக்ஷேபிக்கலாம்.

'பகுப்பட்ட' என்ற அர்த்தத்தில் சுத்தத் தமிழ் வார்த்தையாகப் 'பகுதி' என்று ஒன்று இருப்பது வாஸ்தவம்தான். ஒரு வஸ்து நாலாகப் பகுக்கப்பட்டால், அதை 'கால் பகுதி'

என்கிறோம். இங்கே 'பகுதி' என்பது சுத்தத் தமிழ் வார்த்தையாகப் 'பகுதி' என்ற ஒன்று இருப்பது வாஸ்தவம்தான். ஒரு வஸ்து நாலாகப் பகுக்கப்பட்டால், அதை 'கால் பகுதி'என்கிறோம். இங்கே 'பகுதி' என்பது சுத்தத் தமிழ் வார்த்தைதான். ஆனால் ஸம்ஸ்கிருத 'ப்ரகிருதி' என்பது மருவி 'பகுதி' என்ற இன்னொரு தமிழ் வார்த்தையானதும் உண்டு என்கிறேன். இப்படி 'ப்ரக்ருதி' என்ற அர்த்தத்தில் தான் 'ராமனுக்கு' என்பதில் 'ராமன்' என்பதைப் பகுதி என்கிறோம். ஸம்ஸ்கிருத வியாகரணப்படி ராமன்–பரக்ருதி;கு–விக்ருதி. இந்த 'விக்ருதி'யே 'விகுதி' என்றாயிற்று. 'பகுதி' விஷயமாகத் தமிழ் தாதுவிலிருந்தே வந்ததோ என்று சந்தேகம் ஏற்படுவதுபோல் 'விகுதியின் விஷயத்தில் சந்தேகமே இல்லை. 'பகு (த்தல்)' என்பது போல 'விகு (த்தல்)' என்று தமிழ் வேர்ச்சொல் இருப்பதாக யாரும் சொல்ல மாட்டார்கள். விக்ருதிதான் விகுதி என்பதாலேயே, ப்ரகிருதிதான் பகுதி என்று நிச்சயமாகத் தெரிகிறது.

(விக்ருதியைப் 'பிரத்யயம்' என்றும் சொல்வார்கள். ஒரே ப்ரக்ருதிக்குப் பல அர்த்தங்களை உண்டாக்குவது ப்ரத்யயம்தான். 'ராமனை அடித்தேன்' என்றபோது 'ஐ' என்ற ப்ரத்யயம் ராமன் என்ற ப்ரக்ருதியை அடிவாங்கினவனாகப் பண்ணுகிறது. 'ராமனால் அடிபட்டேன்' என்றால், அதே ராமன் என்ற ப்ரக்ருதி 'ஆல்' என்ற ப்ரத்யயத்தால் அடிக்கிறவனாக ஆகிறான்!)

தமிழைவிட ஸம்ஸ்கிருதத்துக்கு உயர்வு தருவதற்காக இதையெல்லாம் நான் சொல்லவில்லை. ஒன்றுக்கு உயர்வு, இன்னொன்றுக்குத் தாழ்வு சொல்லிச்

சந்தோஷப்படுவது எப்போது? ஒன்றுதான் நம்முடையது, மற்றது பிறத்தியானுடையது என்று நினைக்கும்போதுதான்! 'ரேஸ்' வித்யாஸங்களை நிஜம் என்று நினைத்து இதில் ஒன்றே நம்மைச் சேர்ந்தது என்றால்தான் இதை உயர்த்திச் சொல்லி, இன்னொன்றை மட்டம் தட்டுவதில் ஆசை உண்டாகும். 'இந்த ரேஸ் வித்யாஸமே தப்பு; இரண்டும் ஒன்றுதான்; ஒரே இனத்திலேயே, ஒரே கலாசாரத்திலேயே வெவ்வேறு பாஷைகள் மட்டும் ஏற்பட்டன' என்னும்போது உயர்த்துவது, தாழ்த்துவது என்பதற்கு இடம் ஏது? ஆகையால் யதார்த்தத்தை யதார்த்தமாக (fact -ஐ fact -ஆக) சொல்கிறேனேயழிய, ஒன்றுக்கு உசத்தி சொல்லி இன்னொன்றுக்கு மட்டும் தட்டுவதற்குத் சொல்லவில்லை.

ஸம்ஸ்கிருதம் சர்வதேச மொழி

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வியாகரணம் : வேதத்தின் வாய்

ஸம்ஸ்கிருதம் சர்வதேச மொழி

ஸம்ஸ்கிருதம் அத்தனை மநுஷ்யர்களுக்குமான பாஷை. அது ஸர்வதேச பாஷை. அதுவே தேவ பாஷையும் ஆகும். தேவர்களுக்கு 'கீர்வாணர்' என்று பெயர். அதனால் ஸம்ஸ்கிருதத்துக்கு 'கைர்வாணீ' என்ற பெயரும் இருக்கிறது. 'தேவ பாஷை'என்று அதைத் தமிழ்க் கவிதைக்குச் சக்கரவர்த்தி ஸ்தானத்திற்கு வைக்கப்பட்ட கம்பரும் சொல்கிறார்: "தேவ பாடையில் இக்கதை செய்தவர்" என்கிறார்.

ஸம்ஸ்கிருதம் நாம தைவீ வாக்

என்று தண்டி காவ்யாதர்சத்தில் சொல்கிறார்.

தேவர்கள் வாக்கு – தைவீ வாக்.

நம் எல்லாருக்கும் தேவர்கள் பொதுதான். அதனால், ஸம்ஸ்கிருதமும் நம் எல்லோருக்கும் வேண்டியதுதான்.

அவ்யக்தம் எனப்படுகிற ஸ்பஷ்டமற்ற 'அக்ஷரங்களே இல்லாத பாஷை அது. இங்கிலீஷில் word என்கிறபோது 'வே(ர்) ட்'என்று எழுதுவதா 'வோ(ர்) ட்' என்று எழுதவதா என்று தெரியவில்லை. வியக்தமான ஏ–காரம், வியக்தமான ஓ–காரம் இரண்டுமில்லாத ஒரு சப்தமாக அது இருக்கிறது. ஸம்ஸ்கிருதத்தில் இப்படிப்பட்ட ஒலிகள் இல்லை. Word என்பதை 'வேர்ட்' என்று ர்–ஐ வியக்தமாகச் சொன்னாலும் தப்பாக இருக்கிறது; அதற்காக 'ர' காரமே இல்லாமல் 'வேட்' என்றாலும் சரியாயில்லை; துளித்துளி ர–சப்தத்தைத் தொட்டுக்கொண்டு ட்–டுக்குப் போக வேண்டியிருக்கிறது. இம்மாதிரி அவ்யக்த சப்தங்கள் ஸம்ஸ்கிருதத்தில் இல்லை.

அதேபோல், தாது இல்லாத பதம் என்பதே இல்லாத பாஷையாகவும் ஸம்ஸ்கிருதமே இருக்கிறது. எந்த ஒரு பதத்தை எடுத்துக் கொண்டாலும், அதை அக்ஷர அக்ஷரமாகப் பிரித்து அர்த்தம் சொல்ல முடிகிறது. காதுக்கும் மங்களமாகவும், கம்பீரமாகவும் இருக்கிறது. அதைச் சிலபேருக்கு மட்டுமானது என்று குறுக்கி த்வேஷம் பாராட்டுவது சரியே இல்லை.

ஏதோ சத்தம் போட்டு அதன் மூலம் விஷயத்தைத் தெரிவிப்பது என்றில்லாமல், சப்தங்களை நன்றாக ஸம்ஸ்காரம் பண்ணி (அதாவது சுத்தப்படுத்தி) அப்புறம் பதம், வாக்கியம் முதலானதுகளையும், பெயர்ச்சொல், வினைச்சொல் முதலான parts of speech -களையும் அலசி அலசி வரையறைப்படுத்தி ஸம்ஸ்காரம் செய்திருப்பதாலேயே இதற்கு 'ஸம்ஸ்க்ருதம்' என்ற பேர் ஏற்பட்டது. சிக்ஷா சாஸ்திரமும், அதைவிட முக்யமாக வியாகரணமும் இப்படிப் பட்ட ஸம்ஸ்காரங்களைச் செய்கின்றனவை ஆகும்.

அந்த பாஷையைப் பேசினால் அதுவே மநுஷ்யனுக்கு ஸம்ஸ்காரத்தைச் செய்கிறது. தேவ பாஷையிலிருந்து உண்டானதால் திவ்ய சக்திகளின் அநுக்கிரஹத்தைப் பெறும் படியாகச் செய்கிறது. ஸம்ஸ்கிருத சப்தங்கள் உத்தமமான நாடி சலனங்களால் நல்லது செய்வதோடு nervous system -ஐ [நரம்பு மண்டலத்தை] க்கூட வலுவாக்கி, ஆரோக்கியம் தருகிறது என்கிறார்கள்.
[மொழி ஆராய்ச்சியும் சமய சாஸ்திரமும்]

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

வியாகரணம் : வேதத்தின் வாய்

மொழி ஆராய்ச்சியும் சமய சாஸ்திரமும்

சிக்ஷை, வியாகரணம், இதற்கப்புறம் சொல்லப் போகிற சந்தஸ், நிருக்தம் ஆகிய இந்த நாலு வேதாங்கங்களும் பாஷா சம்பந்தமான சாஸ்திரங்கள்தான்.

"நம் மதத்துக்கு ஆதாரமான சாஸ்திரங்கள் என்று சொல்லி விட்டு, இப்படி மொழி ஆராய்ச்சியாகவும் (linguistic research) இலக்கணமாகவும் (Gramamar) இன்னும் prosody என்கிற செய்யுள் இலக்கணமாகவும் சொல்லிக் கொண்டே போகிறேனே! மதநூல் என்றால் ஸ்வாமியைப்பற்றி, வழிபாட்டு முறைகளைப் பற்றி, பக்தி ஞானாதிகளைப் பற்றி, தத்துவங்களையும் கோட்பாடுகளையும், வாழ்க்கை தர்மங்களையும் பற்றிச் சொன்னால்தானே சரியாயிருக்கும்?" என்று தோன்றலாம்.

'வேதம்' என்கிற விஷயத்தில் இப்படிப்பட்ட மதவிஷயமாகவே கருதப்படும் சமாசாரங்கள் நிறைய வந்தன. இனிமேல் சொல்லப் போவதில் கல்பம், மீமாம்ஸை, நியாயயம், புராணம், தர்ம சாஸ்திரம் முதலியவற்றிலும் இவ்விஷயங்கள் வரும். ஆனால், நடுவே இப்படி மத சம்பந்தமில்லாத மாதிரித் தோன்றுகிற பாஷா சாஸ்திரங்களும் வருகின்றன.

ஏனென்றால், வேத மதத்தின்படி எல்லாமே தெய்வ சம்பந்தமானதுதான். அதனால் இது மதவிஷயம், இது மதவிஷயமில்லை என்றே இல்லை. சரீர ஸௌக்யத்தைச் செய்கிற வைத்யம் (ஆயுர்வேதம்) , யுத்தம் போட உதவுகிற தநுர்வேதம் இவைகூட ஆத்மாபிவிருத்திக்கு உதவுகிறவை என்பதாலேயே வித்யாஸ்தானத்தில் சேர்ந்தார்கள். பொருளாதாரம், அரசியல் இவற்றைச் சொல்லும் அர்த்த சாஸ்திரம் கூடத்தான்.

வாழ்க்கையின் ஸகல அம்சங்களையும் எப்படிச் சீர்படுத்தி நடத்தினால் ஜீவன் பரிசுத்தி பெற்று மோட்ச

மார்க்கத்திலே செல்ல முடியுமோ, அதற்கு வழி சொல்லித் தருவதால்தான், இவை யாவும் மதப் பிரமாண கிரந்தங்களாக மதிக்கப்படுகின்றன.

இவற்றிலே பரமாத்மாவின் மிக உத்தம ஸ்வரூபமாக சப்தமே இருப்பதால் அது சம்பந்தப்பட்ட பாஷையின் ஸம்ஸ்காரத்தால் நமக்கு ஆத்ம க்ஷேமத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்றே வியாகரணம், சிக்ஷை ஆகியன ஏற்பட்டிருக்கின்றன.

சப்தப் பிரம்ம வாதத்தை வியாகரணம் எடுத்துச் சொல்கிறது. ஸங்கீதத்திலே நாதப் பிரம்ம உபாஸனை என்று சொல்வதும் இதிலே போன ஒரு கிளைதான். சப்தங்களைச் சரியாக தெரிந்துகொண்டு பேச்சாகப் பிரயோஜனப்படுத்தும்போது அதனால் ஸமாசாரங்களை தெரிவிப்பதோடு மட்டுமில்லாமல் நம்மையே சுத்தி பண்ணிக் கொள்ளவும் இந்தப் பாஷா சாஸ்திரங்கள் ஒத்தாசை செய்கின்றன.

வியாகரணத்திற்கு நம் சம்பிரதாயத்தில் எத்தனை மதிப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்பது அதற்கு நடுநாயகமாக இருக்கிற பதஞ்சலியின் "மஹாபாஷ்ய"த்துக்குக் கொடுத்திருக்கிற 'மஹா'பட்டத்திலிருந்தே தெரிகிறது. வேத பாஷ்யம், பிரம்ம ஸூத்ர பாஷ்யம், உபநிஷத் பாஷ்யம், கீதா பாஷ்யம் என்றிப்படி பல பாஷ்யங்கள் பல ஆசார்ய புருஷர்களால் பண்ணப்பட்டிருந்தாலும் அவற்றுக்குக்கூடத் தராத 'மஹா' டைட்டிலை இந்த பாஷா சாஸ்திரத்துக்கே தந்து பெருமைப்படுத்தியிருக்கிறார்கள். வித்வானான ஒருவனுக்கு ஒரு ஸாம்ராஜ்யத்தையே

சாஸனம் பண்ணிக் கொடுத்தால் எத்தனை ஸந்தோஷம் உண்டாகுமோ, அத்தனை ஸந்தோஷம் மஹாபாஷ்யத்தைப் படிப்பதிலேயே ஏற்பட்டுவிடும் என்று ஒரு வசனம் இருக்கிறது:

மஹாபாஷ்யம் வா படநீயம்

மஹாராஜ்யம் வா சாஸநீயம்

பழைய ராஜாங்கங்களில் வியாகரண சாஸ்திரப் பிரசாரத்தை எவ்வளவு போற்றி வளர்த்திருக்கிறார்கள் என்பதற்கு வேங்கி சாஸனம் மாதிரி சமீபத்தில் ஒரு சான்று கிடைத்தது.

முன்னே central provinces (மத்ய மாகாணம்) என்று சொல்லி, சுதந்திர இந்தியாவில் 'மத்ய ப்ரதேஷ்' என்கிறார்களே அங்கே, 'தார்' என்று ஒரு ஸம்ஸ்தானம் இருந்தது. இப்போது இந்தியன் யூனியனோடு சேர்ந்துவிட்டது. அந்த 'தார்' தான் கொடைவள்ளலும், கலைகளை எல்லாம் போஷித்தவனுமாகிய போஜராஜாவுடைய தலைநகரான "தாரா" என்பது. அந்த தாரா–தார் – பட்டிணத்திலே ஒரு மசூதி இருக்கிறது. அந்த மசூதியில் ஒரு பொந்துக்குள் ஏதோ ஸம்ஸ்கிருத எழுத்துக்கள் தெரிவதாக வெளியிலே தெரிய வந்தது. ஆனாலும் அந்நிய மதஸ்தர்களின் இடமாகி விட்டது. அவர்கள் அநுமதித்தால்தான் அங்கே போய் என்னவென்று பார்க்க முடியும். இதனால், எபிக்ரா:பிகல் டிபார்ட்மென்ட்காரர்களே ஒரு பத்து பதினைந்து வருஷம் ஒன்றும் பண்ண முடியாமல் சும்மா இருந்தவிட்டார்கள். அப்புறம், சுதந்திரம் வந்து சில வருஷங்களுக்கு அப்புறம்தான் கொஞ்சம் கொஞ்சமாக

அது என்ன எனறு பார்க்க போவது போல் போய், அப்புறம் மசூதிக்காரர்களிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு, அந்த பொந்தைப் பிரித்துப் பார்த்தார்கள்.

அதிலே ஒரு பெரிய சக்கரம் இருந்தது. அந்தச் சக்கரத்தில் ஏகப்பட்ட ச்லோகங்கள் எழுதியிருந்தது. அதிலுள்ள எழுத்துக்கள்தான் முன்னே தெரிந்தவை. ச்லோகங்கள் சொன்ன விஷயம் என்ன என்று பார்த்தால், அத்தனையும் வியாகரணம் தான்! வியாகரணம் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் சக்கராகாரமாகப் பாடல்களாக அமைத்து, ஆச்சரியப்படும்படியான chart- ரூபத்தில் எழுதி வைத்திருக்கிறது! போஜராஜா காலத்தில் ஸரஸ்வதியின் ஆலயமாக இருந்த இடத்தில்தான் இப்போது மசூதி இருக்கிறது. வாக்தேவியான ஸரஸ்வதி ஆலயத்தில் பாஷா சாஸ்திரம் இருக்கவேண்டும் என்றே வேத புருஷனுக்கு வாக்கு ஸ்தானமான வியாகரணத்தை எழுதி வைத்திருக்கிறார்கள். அந்த பெரிய சக்கரத்தை ஒரு பார்வை பார்த்தால் வியாகரணம் முழுக்கத் தெரிந்துவிடும் என்கிறார்கள். அதற்கு வழிபடத்தக்க பெருமை உண்டு என்பதாலேயே ஆலயத்தில் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். அந்தக் கோயில் மசூதியாகப் போய் அநேக வருஷங்கள் கழித்து வாக்தேவியின் அநுக்ரஹத்தால் இந்தச் சக்கரம் நமக்குக் கிடைத்திருக்கிறது. அதை எபிக்ராஃபி இலாகாகாரர்கள் அச்சுப் போட்டிருக்கிறார்கள். இங்கிலீஷிலும் மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

வியாகரணம் மாதிரியான சாஸ்திரங்களைக் கூட வெறும் லௌகிகம் என்று தள்ளாமல் பூஜார்ஹமாக [வழிபாட்டுக்கு

உரித்தானதாக] வைத்து, ராஜாங்கத்தாரே போஷித்து வந்திருக்கிறார்கள் என்று இதிலிருந்து தெரிகிறது.

சந்தஸ் : வேதத்தின் பாதம்

செய்யுளிலக்கணம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சந்தஸ் : வேதத்தின் பாதம்

செய்யுளிலக்கணம்

'சந்தத்தமிழ்' என்ற வார்த்தையைக் கேட்கிறோம். சந்தத்தமிழில் பாடி இறைவனை துதிக்க வேண்டும் என்று அடியார்கள் வேண்டுகிறார்கள். சந்தம் என்ற இந்த வார்த்தைக்கு மூலம்தான் "சந்தஸ்".

"சந்தஸ்" என்றால் வேதம் என்று முன்பு அர்த்தம் சொல்லியிருக்கிறேன். ஸ்ருஷ்டி என்ற அச்வத்த விருட்சத்துக்கு வேதங்கள்தான் இலைகள் என்று கீதையில் பகவான் சொல்கிற போதும் "சந்தாம்ஸி யஸ்ய பர்ணானி" என்றே சொல்கிறார் – 'வேதம்' என்பதற்குப் பதில் 'சந்தஸ்' என்கிறார். ஆனால் வேத ஷடங்கங்களில் வேத புருஷனுக்குக் காலின் ஸ்தானத்தில் இருக்கிறதும், இப்போது நான் எடுத்துக் கொண்டிருக்கிறதுமான "சந்தஸ்" என்ற வித்யாஸ்தானம் "வேதம்" என்ற அர்த்தத்தைச் சொல்வதல்ல.

இங்கே "சந்தஸ்" என்பது செய்யுளிலக்கணம், பாவிலக்கணம் என்றே பொருள்படும்.

ரிக்வேதம், ஸாமவேதம் இரண்டும் முழுக்கச் செய்யுள்களாக இருப்பவை. யஜுஸில் "ப்ரோஸ்" உண்டாயினும் அதுவும் 'பொயட்ரி'யோடு கலந்து கலந்துதான் வருகிறது. இப்படி சந்தஸ்கள் நிறைந்ததாகவே வேதம் இருப்பதால் தான், அதற்கே சந்தஸ் என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது.

நாம் ஸூட் போட்டுக் கொள்வதானால் தையற்காரன் அளவெடுத்துக் கொண்டு போகிறான். அதன்படி துணியை வெட்டித் தைக்கிறான். அளவு எடுக்காவிட்டால் தைக்க முடியாது. இதேபோல் நம் எண்ணங்களுக்குச் செய்யுள் ரூபம் கொடுக்கிறபோது, எண்ணத்தையே ஒரு உருவமாகக் கொண்டு வரவேண்டுமானால் அதற்குப் போட வேண்டிய டிரெஸ்தான் செய்யுள். அதற்கு அளவு வேண்டும் அல்லவா? சட்டை இத்தனை இன்ச் நீளம், இத்தனை இஞ்ச் அகலம் என்கிற மாதிரி செய்யுளுக்கும் இத்தனை அடி, இத்தனை எழுத்து என்றெல்லாம் நிர்ணயம் செய்து தரவேண்டும். அப்படிச் செய்வதுதான் "சந்தஸ்" என்ற சாஸ்திரம்.

சந்தம் என்றும், metre என்றும் சொல்லும் செய்யுள் அளவைகளை அதுவே வகுத்துக் கொடுக்கிறது.

பிங்களர் என்பவர் செய்த "சந்தஸ் ஸூத்ரம்" தான் இப்போது அதற்கு முக்யமான நூலாக இருக்கிறது.*

வேத புருஷனுக்குப் பாதமாக இருப்பது சந்தஸ் என்னும் அங்கம். மந்திரத்தின் ரிஷியைச் சொல்லி மூக்கைத் தொடுவார்கள்; தேவதையைச் சொல்லி ஹ்ருதயத்தைத் தொடுவார்கள். செய்யுள் உருவில் உள்ள வேத

மந்திரங்களெல்லாம் சந்தஸ்; மற்ற, அதாவது வேதத்தில் வராத, செய்யுள்களை ச்லோகம் என்று சொல்வார்கள். வசனத்தை 'கத்யம்' என்றும், சந்தஸை 'பத்யம்' என்றும் ஸம்ஸ்கிருதத்தில் சொல்வதுண்டு. தமிழில் நாம் செய்யுள் என்பதைத் தெலுங்கிலும் பத்யம் என்பார்கள். இங்கிலீஷில் பொயட்ரி என்று சொல்வார்கள்.

வேதச் செய்யுளுக்கே 'சந்தஸ்' என்று பெயர் இருப்பதோடு, 'சந்தஸ்' என்றால் எந்தச் செய்யுளுக்கும் இருக்கவேண்டிய சந்தம் அல்லது metre என்ற வ்ருத்தமும் [விருத்தமும்] ஆகும். செய்யுளில் பலவிதமான வ்ருத்தங்கள் இருக்கின்றன. ச்லோகங்களும் விருத்தங்களே. அநுஷ்டுப் விருத்தம் என்பது ஒன்று. புராண ச்லோகங்களும் ராமாயண ச்லோகங்களும் அந்த விருத்தங்களே. விருத்த லட்சணம்தான் சந்தஸ்.

ஒவ்வொரு விருத்தத்திற்கும் இவ்வளவு பாதம் இருக்க வேண்டும், ஒவ்வொரு பாதத்திற்கும் இவ்வளவு எழுத்துக்கள் இருக்கவேண்டும் என்ற நியமம் உண்டு. "ஆர்யா" என்று ஒரு சந்தஸ் இருக்கிறது. அதற்கு மாத்திரைக் கணக்கு உண்டு. அதாவது இவை குற்றெழுத்து, நெட்டெழுத்துக் கணக்கு உள்ள சந்தஸ்களாகும். இவற்றில் 'ராம' என்பது இரண்டெழுத்து என்ற கணக்குப் பண்ண மாட்டார்கள். 'ரா' என்கிற நெடிலுக்கு இரண்டு மாத்திரை, 'ம' என்ற குறிலுக்கு ஒரே மாத்திரை என்று மாத்ரா ரீதியிலேயே கணக்கு பண்ணி, 'ராம' என்றால் மூன்று மாத்திரை என்பார்கள். குறில் நெடில் வித்யாஸம் பார்க்காமல் ஒவ்வொரு செய்யுளிலும், ஒவ்வொரு பாதத்தில் இத்தனை எழுத்து இருக்கவேண்டும்

என்பதாக நிர்ணயிக்கப்பட்ட சந்தஸ்களே அதிகம். அவற்றைத்தான் குறிப்பாக 'விருத்தம்' என்பது. 'ஆர்யா' சந்தஸைப் போல குறில்–நெடில் வித்யாஸம் பார்த்துப் பாதத்துக்கு இவ்வளவு மாத்திரை இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டவற்றுக்கு 'ஜாதி' என்று பெயர்.

*வேத அட்டவனைகலான 'ரிக் ஸர்வ அநுக்ரமணி', 'அதர்வ வேதீய ப்ருஹத் ஸர்வ அநுக்ரமணிகா', 'ப்ருஹத் தேவதா' முதலான நூல்களிலும், ரிக் ப்ராதிசாக்யத்திலும் ஆங்காங்கே வேதத்தின் மீட்டர்கள் விவரிக்கப்படுகின்றன. மற்ற காவிய, இலக்கிய சந்தங்களைப்பற்றி 'சந்தோமஞ்சரி', 'வ்ருத்த ரத்னாகரம்' முதலிய நூல்கள் விரிவாக கூறுகின்றன.

பாதம் – அடி – FOOT

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சந்தஸ் : வேதத்தின் பாதம்

பாதம் – அடி – FOOT

சந்தஸை வேத புருஷனின் பாதம் என்றேன். சந்தஸ் தனக்கு விஷயமாக (subject) எடுத்துக் கொள்கிற செய்யுளுக்கும் 'பாதம்' இருக்கிறது. தமிழில் ஈரடிக் குறள், நாலடியார் என்பதிலெல்லாம் வரும் 'அடி'தான் செய்யுளின் 'பாதம்'. நாலடியார் என்றால் நாலு அடியார்கள் என்று அர்த்தமில்லை. அடியார்கள் என்று பக்தர்களுக்கு ஏன் பேர் ஏற்பட்டது என்றால், அவர்கள் ஈச்வர சரணாரவிந்தத்திலேயே, திருவடித் தாமரையிலேயே கிடக்கிறவர்கள். ஸம்ஸ்கிருதத்திலும் ஆசார்ய பாதர்,

கோவிந்த பாதர், கௌடபாதர், பகவத் பாதர் என்று ஈச்வரனின் பாத ஸம்பந்தம் உடையவர்களாகவே மஹான்களைச் சொல்கிறோம். நாலடியார் என்றால், 'நாலு அடி கொண்ட செய்யுள்கள்' என்று அர்த்தம்.

காலுக்குத் தானே ஸம்ஸ்கிருதத்தில் பதம் அல்லது பாதம் என்றும், தமிழில் அடி என்றும் பெயர் இருக்கிறது? இங்கிலீஷிலும் ஒரு Stanza -வில் இத்தனை feet இருக்க வேண்டும் என்றுதான் சொல்கிறார்கள். அதன் மீட்டர்களும் feet -க்கு இத்தனை அக்ஷரம் என்றுதான் வகுக்கப்படுகின்றன. காலைக்குறிப்பிடும் foot என்பது division of a stanza -வுமாகும். பாதம் –அடி– foot என்று எல்லா பாஷைகளிலும் ஒரே பொருள்படும் வார்த்தை செய்யுள் அளவையாக இருக்கிறது. எதில் போனாலும், இப்படி ஜன சமுதாயம் முழுவதற்கும் ஐக்யத்தைக் காட்டுவது மனஸுக்கு ஸந்தோஷமாக இருக்கிறது.

இன்னொரு ஒற்றுமை கூட. இங்கிலீஷில் பன்னிரண்டு அங்குல நீளமுள்ள அளவை foot என்கிறார்கள்; தமிழிலும் இதை 'அடி' என்றே சொல்லுகிறோம்.

ஒரு மந்திரம் அல்லது ஸ்லோகத்தில் பாதம் என்பது நாலில் ஒரு பாகம். நாளில் ஒரு பாகத்தைக் கால் என்கிறோம். மனுஷ்ய சரீரத்தில் கால் என்கிற அங்கம் நாலில் ஒரு பங்காக அதாவது கால் பாகமாகவே இருக்கிறது. இடுப்பு வரை பேர்பாதி – கீழே பாதி. அந்தப் பாதி இரண்டு கால்களாக இருக்கிறது. அதனால் ஒவ்வொரு காலும் பாதியில் பாதியான காலாகவும் [1/4] இருக்கிறது. இப்படியேதான், இடுப்புக்கு அரை என்று பேர்

இருப்பதும். 'அரைஞாண்' என்று இடுப்பிலே கட்டும் கயிற்றைச் சொல்லும் போது, 'அரை' என்றால் இடுப்பு. அதுதான் மநுஷ்ய சரீரத்தின் நடுவாக இருந்து கொண்டு, அதை இரண்டு அரை [1/2] களாகவும் பிரிக்கிற அவயவம். அதனால், இப்படிப் பெயர்.

தமிழில், கால் என்றால் பாதத்திலிருந்து இடுப்புவரையுள்ள LEG என்ற முழு அவயவத்தையும், பாதம் அல்லது பதம் என்றால் FOOT என்றும் பெரும்பாலும் அர்த்தம் பண்ணிக் கொள்கிறோம். ஆனால் சில இடங்களில் மட்டும் 'கால்' என்பதே FOOT என்ற அர்த்தத்திலும் பிரயோகமாகிறது. 'உள்ளங்கால்', 'புறங்கால்' என்னும்போது, கால் என்பது முழு LEG இல்லை; foot தான். ஸம்ஸ்கிருதத்தில் LEG, FOOT இரண்டும் பாதம்தான். 'பாதம்' என்றால் கால், கால் வாசி.

கணக்கிடுவது எப்படி ?

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சந்தஸ் : வேதத்தின் பாதம்

கணக்கிடுவது எப்படி ?

ஒரு வேத மந்திரம் அல்லது வேதமல்லாத ச்லோகத்தை எடுத்துக் கொண்டால், அதை நாலாகப் பிரித்திருக்கும். முக்கால்வாசி மீட்டர்களை, ஸமமான அக்ஷரங்கள் அல்லது ஸமமான மாத்திரைகள் கொண்ட நாலாகவே பிரிந்திருக்கும். பாதத்துக்குப் பாதம் ஸமமாக இல்லாததை 'விஷமம்' என்பார்கள். 'வி–ஸமம்' என்பதே 'விஷமம்'. ஸமம் என்பது வித்யாஸமில்லாத நிலைமையைக் காட்டுவது. இதனால்தான், நடுநிலைமை தப்பிப் பண்ணுகிற

காரியங்களை 'விஷமம்' என்கிறோம். தந்திரமாகப் பண்ணுகிற தப்புக்கு, mischief என்ற அர்த்தத்தில் இந்த வார்த்தை வழக்கத்தில் வந்து விட்டது. Unequal என்பதே அதன் நேர் அர்த்தம்.

எல்லாப் பாதங்களும் ஒன்றுக்கொன்று வித்யாஸமாயிருந்தால் அது விஷம வ்ருத்தம். ஒன்று விட்டொன்று (alternate) பாதங்கள் ஒரே மாதிரி இருப்பது, அர்த்த ஸமவ்ருத்தம். அதாவது முதல் பாதத்துக்கும் இரண்டாம் பாதத்துக்கும் அக்ஷர வித்யாஸம் இருக்கும்; மூன்றாம் பாதத்துக்கும் நாலாம் பாதத்துக்கும் இப்படியே வித்யாஸம் இருக்கும்; ஆனால், முதல் பாதமும் மூன்றாம் பாதமும் ஒரே மாதிரியிருக்கும்; இரண்டும் நாலும் ஒன்றாக இருக்கும்.

அநேகமாகப் பாதங்கள் யாவும் ஸமமாகவே இருக்கும். உதாரணமாக, எல்லோருக்கும் தெரிந்த (அல்லது அப்படி அப்படி நான் நினைத்துக் கொண்டிருக்கிற)

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ।

ப்ரஸந்நவதநம் த்யாயேத் ஸர்வவிக்நோபசாந்தயே ।।

என்பதில் உள்ள நாலு பாதங்கள்:

ஒன்று - சுக்லாம்பரதரம் விஷ்ணும்

இரண்டு - சசிவர்ணம் சதுர்புஜம்

மூன்று - ப்ரஸந்நவதநம் த்யாயேத்

நான்கு - ஸர்வவிக்நோப சாந்தயே.

எண்ணிப் பார்த்தால் இந்தப் பாதங்கள் ஒவ்வொன்றிலும் எட்டு அக்ஷரமேயிருக்கும்.
உயிரெழுத்தையும், உயிர் மெய்யெழுத்தையும் மட்டும் தான் அக்ஷரமாகக் கணக்குப் பண்ண வேண்டும்; மெய்யெழுத்துக்களைத் தள்ளிவிட வேண்டும். அப்போதுதான் எட்டு என்ற கணக்கு சரியாகி வரும். இப்படிச் செய்தால் 'சுக்லாம் பரதரம் விஷ்ணும்' என்பதில் தமிழ் லிபிப்படி பதின்மூன்று எழுத்து இருந்தாலும் கூட, எட்டு அக்ஷரங்கள்தான் என்று ஆகும். 1-சு; 2-க்லாம்; 3-ப; 4-ர; 5-த; 6-ரம்; 7-வி;8-ஷ்ணும். இதே மாதிரியே மற்றப் பாதங்களிலும் எட்டெட்டுத்தான் இருக்கும்.

தமிழிலே இப்படி எழுத்துக் கணக்கும் அக்ஷரக் கணக்கும் வித்யாஸப்படுகிற மாதிரி ஸம்ஸ்கிருத லிபியில் இல்லை. அதில் கூட்டெழுத்துக்கள் உண்டு. அதனால், 'க்லாம்', 'ரம்', 'ஷ்ணும்' என்பவை ஒவ்வொரு எழுத்தாகவே எழுதப்படுகின்றன. கிரந்தம், தேவநாகரி முதலான ஸம்ஸ்கிருத ஆல்ஃபபெட்டுகளில் இதுவும் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஒவ்வொன்றும் எட்டு அக்ஷரம் கொண்ட நாலு பாதங்களை உடைய 'சுக்லாம்பரதரம்' போன்ற ச்லோகங்களின் மீட்டருக்கு 'அநுஷ்டுப்' சந்தஸ் என்று பெயர்.

இந்த மீட்டர் வேதம், பிற்பாடு வந்த காவிய இலக்கியம் இரண்டிலுமே இருக்கிறது.
காவிய சந்தம் பிறந்த கதை

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சந்தஸ் : வேதத்தின் பாதம்

காவிய சந்தம் பிறந்த கதை

வேதத்திலே சப்தங்களை ஏற்றி இறக்குகிற ஸ்வரங்கள் உள்ள மாதிரி, காவியம் முதலிய மற்ற ச்லோகங்களில் அக்ஷரங்களை ஏற்றுவது என்று கிடையாது. ஸ்வரங்களோடேயே சொல்லி வந்த வைதிக அநுஷ்டுப் மீட்டரில் ஸ்வரமில்லாமல் முதன் முதலில் வந்த வாக்கு வால்மீகியுடையதுதான். அவர் வேண்டுமென்று யோசித்து இப்படி பண்ணவில்லை.

தம்பதியாக இருந்த இரண்டு பக்ஷிகளில் ஒன்றை ஒரு வேடன் அடித்துக் கொன்றதை அவர் பார்க்கும்படி நேரிட்டது. அப்போது பக்ஷிகளிடம் அவருக்கு ஏற்பட்ட கருணையே வேடனிடம் மஹா கோபமாக மாறிற்று. அவனைப் பார்த்து, 'ஏ வேடனே! ஸந்தோஷமாகக் கூடிக் களித்துக் கொண்டிருந்த பக்ஷிகளில் ஒன்றை வதைத்த உனக்கு எந்தக் காலத்திலுமே நல்ல கதி இல்லாமல் போகட்டும்' என்று சபித்துவிட்டார். ஸம்ஸ்கிருதத்திலே அவருடைய சாப வாக்கு இப்படி வந்தது:

மா நிஷாத ப்ரதிஷ்டாம் த்வம்

அகம : சாச்வதீ ஸமா :

யத் க்ரௌஞ்ச மிதுநாத் ஏகம்

அவதீ : காம மோஹிதம் ||

அவர் யோசிக்காமலே, கருணை உணர்ச்சி பீறிக்கொண்டு வந்து இப்படி சபித்துவிட்டார். உடனே ரொம்பவும் வருத்தப்பட்டார், "நாம் ஏன் இப்படி சாபம் கொடுத்திருக்க வேண்டும்?" என்று. இதை யோசித்துப் பார்க்கும் போது அவருக்கு ஆச்சரியமாக ஒன்று ஸ்புரித்தது. ஞான திருஷ்டி வாய்த்த ரிஷி அல்லவா? அதனால் ஸ்புரித்தது. தாம் கொடுத்த சாபமே எட்டெட்டு அக்ஷரங்கள் கொண்ட நாலு பாதமாக அநுஷ்டுப் வ்ருத்தத்தில் அமைந்திருக்கிறது, என்று தெரிந்தது! "மா நிஷாத ப்ரதிஷ்டாம் த்வம்"என்பது ஒரு பாதம். "அகம:சாச்வதீ ஸமா:" என்பது இரண்டாவது பாதம். "யத் க்ரௌஞ்ச மிதுநாத் ஏகம்" என்பது மூன்றாவது பாதம். "அவதீ:காமமோஹிதம்" என்பது நாலாவது பாதம். தன்னை மீறி உணர்ச்சி வந்தாற் போலவே, தன்னைமீறி இப்படிப்பட்ட விருத்த ரீதியான வார்த்தை ரூபமும் வந்திருப்பதை அறிந்து ஆச்சரியப்பட்டார்.

அவர் கொடுத்த சாபத்துக்கே இன்னொரு அர்த்தமும் இருப்பதையும் உணர்ந்தார். வேடனைப் பார்த்து இவர் சொன்னதே மஹா விஷ்ணுவைப் பார்த்து, "ஹே, லக்ஷ்மிபதியே! தம்பதியாக இருந்த இருவரில் ஒருவன் காம மோகத்தால் செய்த காரியத்துக்காக நீ அவனைக் கொன்றது உனக்கு எந்நாளும் கீர்த்தி தரும்" என்றும் அர்த்தம் பண்ணிக் கொள்ளும்படியாகத் தம்முடைய சாபவாக்கு அமைந்திருக்கிறது என்று கண்டு கொண்டார். ராவணன் – மண்டோதரி என்ற தம்பதியில், காமதுரனான ராவணனைக் கொன்றதால் உலகம் உள்ளளவும் கீர்த்தி பெறப்போகிற ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியைப் பற்றியே இப்படி

அவர் வாயில் அவர் அறியாமல் சந்தத்தோடு வார்த்தை வந்து விட்டது. அதிலிருந்து ஈச்வர ஸங்கல்பத்தைப் புரிந்து கொண்டு, அதே மீட்டரில் வால்மீகி ராமாயணத்தைப் பண்ண ஆரம்பித்து விட்டார்.

வேத ஸ்வரமில்லாத ச்லோக ரூபம் என்பது அப்போதுதான் ஏற்பட்டது. வேதம் மாதிரியே, இனிமேலும் உயர்ந்த விஷயங்களை எல்லோரும் நினைவு வைத்துக் கொள்ளும் படியாக சொல்வதற்கு வசதியாக இப்படி ஒரு ஸாதனம் – ச்லோகம் என்ற சாதனம் – கிடைத்ததே என்று ஸந்தோஷப்பட்டு, முதல் காவியமாக ஸ்ரீராம சரித்திரத்தைப் பாடினார்.

ப்ரோஸ் மறந்து போய்விடும். மீட்டர் அளவைகளுக்கு உட்படுத்திய பொயட்ரிதான் நினைவிலிருக்கும். இதனால் தான் ஆதியில் எல்லாம் பொயட்ரியாகவே எழுதினார்கள். ப்ரிண்டிங் ப்ரெஸ் வந்தபின், 'நினைவு வைத்துக் கொள்ள வேண்டியதில்லை; புஸ்தகத்தைப் பார்த்துக் கொள்ளலாம்' என்று ஏற்பட்ட பிறகுதான் ப்ரோஸ் வளர்ந்தது.

ஆனாலும், விஷயங்களைச் சொல்வதில் பொயட்ரிக்குத் தான் அழகும், சக்தியும் அதிகம். முதலில் உண்டான பொயட்ரி வால்மீகி ராமாயணம். அதனால்தான் வால்மீகி ராமாயணத்துக்கு "ஆதி காவியம்" என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.

பகவத் பிரஸாதமாக 'சந்தஸ்' கிடைத்ததால்தான் ராமாயணமே பிறந்தது. மற்ற ஸ்தோத்திரங்கள், புராணங்கள், காவியங்கள் எல்லாவற்றுக்கும் வேண்டிய ச்லோகம் என்ற ரூபம் பிறக்கச் சந்தந்தான் உதவியது.

சில சந்த வகைகள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சந்தஸ் : வேதத்தின் பாதம்

சில சந்த வகைகள்

இந்த்ர வஜ்ரா, உபேந்தர வஜ்ரா, ஸ்ரக்தரா என்றெல்லாம் காவியங்களிலும் ஸ்தோத்திரங்களிலும் பல சந்தஸ்கள் இருக்கின்றன. சிலது ரொம்பச் சிக்கலாக மஹா புத்திமான்களாலேயே இயற்றக் கூடியதாக இருக்கும்.

ஒரு பாதத்துக்கு எட்டு அக்ஷரம் இருப்பதை 'அநுஷ்டுப்' என்றேன். ஒன்பது அக்ஷரம் இருந்தால் 'ப்ருஹதீ' என்று அந்த சந்தஸுக்கு பெயர். 'பங்க்தி' என்பது பாதத்துக்குப் பத்து அக்ஷரம் கொண்ட மீட்டர். 'த்ரிஷ்டுப்' என்பது பதினொன்று கொண்டது. பன்னிரண்டு அக்ஷரம் கொண்டது 'ஜகதீ'. இப்படியே ஒரு பாதத்துக்கு 26 அக்ஷரம் கொண்ட ['உத்க்ருதி' என்ற சந்தஸில் 'புஜங்க விஜ்ரும்பிதம்' என்ற வகையில் அமைந்த] ச்லோகம் வரை பல மீட்டர்கள் உண்டு. அதற்கு மேல் போய்விட்டால் 'தண்டகம்' என்று பெயர். தண்டகத்தில் பல வகைகள் உண்டு. "திருத்தாண்டகம்" என்று அப்பர் பாடினது தண்டக சம்பந்தமுள்ளதுதான்.

வ்ருத்தங்களுக்குப் பேர் அழகாகவும், பொருத்தமாகவும், காவிய நயமுள்ளதாகவும் இருக்கும். புலி விளையாட்டாகப் பாய்ந்து பாய்ந்து போகிற மாதிரி ஒரு சந்தஸில் அக்ஷரங்கள் போகும். அதற்கு 'சார்தூல

விக்ரீடிதம்' என்றே பேர். 'சார்தூலம்' என்றால் புலி; 'விக்ரீடிதம்' என்றால் விளையாட்டு. இது பாதத்துக்குப் பத்தொன்பது அக்ஷரம் கொண்ட 'அதி த்ருதி' மீட்டர்களில் ஒரு வகை. ஒவ்வொரு பாதத்துக்குள்ளும் இந்த 19 அக்ஷரங்கள் 12 என்றும் 7 என்றும் பிரியவேண்டும். ஆச்சார்யாளின் "சிவாநந்த லஹரி" யில் 28-லிருந்து பல ச்லோகங்கள் இப்படி அமைந்தனவே. காமாக்ஷியைப் பற்றியதான "மூக பஞ்சசதீ"யில் 'ஸ்துதி சதக' ஆரம்ப ச்லோகங்கள் இந்த வ்ருத்தம்தான். கடைசி நூறான 'மந்தஸ்மித சதகம்' முழுதும் இந்த வ்ருத்தமே. பாம்பு ஊர்ந்து போகிற மாதிரி சப்த அமைப்பு உள்ள சந்தஸுக்கு 'புஜங்க ப்ரயாதம்' என்று பெயர். புஜங்கம் என்றால் பாம்பு தானே? ஆசார்யாளின் 'ஸுப்ரமண்ய புஜங்கம்' இந்த மீட்டரில் இருப்பதுதான். இது பாதத்துக்குப் பன்னிரண்டு அக்ஷரமுள்ள 'ஜகதீ'யில் ஒரு வகை. இந்தப் பன்னிரண்டும் சரியாக ஆறு ஆறாகப் பிரிந்திருக்க வேண்டும் என்பது விதி:

ம-யூ-ரா-தி-ரூ-டம்

ம-ஹா-வா-க்ய-கூ-டம்

என்கிற மாதிரி.

ஆசார்யாளின் "ஸௌந்தர்ய லஹரி" ஸ்தோத்திரமானது 'சிகரிணி' விருத்தத்தில் அமைந்ததாகும். இதிலே பாதத்துக்குப் பதினேழு எழுத்து. 'அத்யஷ்டி' என்பது இப்படிப்பட்ட பதினேழு எழுத்துப் பாத வ்ருத்தங்களுக்குப் பொது பெயர். இந்தப் பதினேழு எழுத்தும் ஆறு - பதினொன்று என்று பிரிந்து பிரிந்து வந்தால் அதற்கு

'சிகரிணி' என்று பெயர். "மூகபஞ்சசதீ"யில் 'பாதாரவிந்த சதகம்' இந்த மீட்டரில் இருப்பதே. வாய் கொள்ளாமல், ச்லோகங்களைக் கடல் மடை திறந்தது போல் சொல்லிக் கொண்டே போவதற்கு 'ஸ்ரக்தரா' ரொம்பவும் ஏற்றதாகும். ('ப்ரகிருதி' என்ற) 21 அக்ஷரம் கொண்ட பாதத்தை உடைய இந்த மீட்டரில், ஒவ்வொரு பாதமும் மூன்று ஏழு அக்ஷரங்களாகப் பிரிந்திருக்கும். ஈச்வரன், விஷ்ணு இருவரைக் குறித்தும் ஆசார்யாள் செய்திருக்கிற பாதாதி கேச, கேசாதி பாத வர்ணனை ஸ்தோத்திரங்களை இந்த வ்ருத்தத்திலேயே பாடியிருக்கிறார்.

முதலில் 'இந்த்ர வஜ்ரா' என்றேனே, அது பாதத்துக்குப் பதினொரு அக்ஷரம் கொண்ட 'த்ருஷ்டுப்' என்ற சந்தஸில் ஒரு வகை. இந்தப் பதினொரு அக்ஷரத்திலேயே வேறு விதமானது உபேந்த்ர வஜ்ரா. இரண்டையும் கலந்தது 'உபஜாதி'. காளிதாசனின் 'குமார ஸம்பவம்' இந்த உபஜாதி மீட்டரில் தான் ஆரம்பிக்கிறது.

இவையெல்லாம் வேதத்துக்குப் பிற்பட்ட காவியங்களிலும் ஸ்தோத்திரங்களிலும் வருகிற சந்தஸ்கள். வேதத்திலும் வருவதான சந்தஸ்கள்: 'காயத்ரீ', 'உஷ்ணிக்', 'அநுஷ்டுப்', 'ப்ருஹதீ', 'பங்க்தீ', 'த்ருஷ்டுப்', 'ஜகதீ' முதலானவை.

'காயத்ரீ' மஹா மந்திரம், அதுவே மந்திரராஜன் என்று கொண்டாடுகிறமே, அப்படிப்பட்ட உயர்ந்த மந்திரத்துக்கு அது அமைந்துள்ள 'காயத்ரீ' என்ற சந்தஸை வைத்தே பெயர் அமைந்திருக்கிறது. ஸாதாரணமாக ஒரு மந்திரம் என்றால், அது எந்த தேவதையைக் குறித்ததோ அதை வைத்தே பேர் சொல்வோம். சிவ பஞ்சாக்ஷரீ, நாராயண

அஷ்டாக்ஷரீ, ராம த்ரயோதசீ என்று தேவதையின் பெயரையும் மந்திரத்திலுள்ள அக்ஷரங்களின் எண்ணிக்கையையும் சேர்த்துச் சொல்கிறோம். காயத்ரீ மந்திரத்துக்கு தேவதை "ஸவிதா". காயத்ரீ என்பது மீட்டரின் பெயர்தான். ஆனாலும் மீட்டரையே வைத்து மந்திரத்துக்குப் பேர் சொல்கிறோம். சப்தத்துக்கும் ஸ்வரத்துக்குமே தனியாக தெய்விக சக்தி உண்டு என்பதுபோல், சந்தஸின் அமைப்புக்கும் இருக்கிறது என்று இதிலிருந்து தெரிகிறது.

'நாலு கால் சேர்ந்தால் ஒன்று. அதனால் ஒரு மந்திரமானாலும், ச்லோகமானாலும் நாலு பாதம் உண்டு' என்றேன். இதற்கு வித்யாஸமாக, இந்த காயத்ரீ மந்திரத்தில் மூன்று பாதங்கள்தான் இருக்கின்றன. ஒவ்வொன்றும் எட்டெழுத்துக்கொண்ட மூன்றே பாதங்களாலான 24 அக்ஷர மீட்டராகவே வேதத்திலுள்ள இந்த 'காயத்ரீ' இருக்கிறது. மூன்று பாதம் இருப்பதால், இதை 'த்ரிபதா காயத்ரீ' என்கிறோம். வேறு பல காயத்ரீ வகைகளும் உண்டு. வேதத்தின் முதல் மந்திரமான 'அக்னிமீளே' ஸூக்தமே காயத்ரீ சந்தஸில் அமைந்ததுதான்.

காவிய, ஸ்தோத்திரங்களில் 24 அக்ஷர காயத்ரீயானது தலைக்கு ஆறு அக்ஷரமுள்ள நாலு பாதங்களாகப் பிரியும். பாதமொன்று ஏழு அக்ஷரமுள்ள 28 அக்ஷர வ்ருத்தம் "உஷ்ணிக்" எனப்படும்.

இது வரை சொன்னதெல்லாம் அக்ஷரக் கணக்கு. அதாவது குறில் நெடில் என்று வித்யாஸம் பார்க்காமல் அ, ஆ இரண்டையும் ஒரே அக்ஷரமாகக் கணக்குப் பண்ணும்

முறை. மற்ற இடங்களில் குறிலை 'ஹ்ரஸ்வம்' என்றும், நெடிலை 'தீர்க்கம்' என்றும் சொன்னாலும் இந்த prosody-ல், அதாவது சந்தஸ் சாஸ்திரத்தில், குறிலை 'லகு' என்றும், நெடிலை 'குரு' என்றுமே சொல்வது வழக்கம். குறில் நெடில் வித்யாஸமில்லாதவையே 'வ்ருத்தம்' என்றும், வித்யாஸம் பார்த்து மாத்திரைக் கணக்கெடுப்பதை 'ஜாதி' என்றும் சொன்னேன். இப்படிப்பட்ட 'ஜாதி'களில் குறிலுக்கு ஒரு மாத்திரை, நெடிலுக்கு இரண்டு மாத்திரை என்று கணக்கு. குறிலே இன்னின்ன எழுத்துக்கு முன்னால் வந்தால் இரண்டு மாத்திரை என்றும் அதில் உண்டு. ஒவ்வொரு பாதத்திலும் இத்தனை அக்ஷரம் இருக்க வேண்டும் என்பதற்குப் பதில், இத்தனை மாத்திரை இருக்க வேண்டும் என்பது விதி.

முன்னமேயே சொன்ன 'ஆர்யா' என்ற மீட்டரில்தான் "மூக பஞ்சசதீ"யின் ஆரம்பமான 'ஆர்யா சதகம்' உள்ளது. ரொம்பவும் உயர்ந்தவளால்தான் 'ஆர்யை'யாக இருக்கப்பட்ட அம்பாளை ஸ்தோத்திரம் பண்ணுவதோடு, மீட்டரும் ஆர்யாவாக இருப்பதாலேயே 'ஆர்யா சதகம்' என்று பேர். இதிலே அக்ஷரங்களைக் கணக்குப் பண்ணாமல், மாத்திரைகளைக் கணக்குப் பண்ணினால்தான் ச்லோகங்கள் ஒரு கிரமத்தில் செய்யப்பட்டிருக்கின்றன என்று தெரியும். அக்ஷரக்கணக்குப் பண்ணினால், "இதென்ன, ச்லோகத்துக்கு ச்லோகம் மீட்டர் வித்யாஸமாயிருக்கிறதே?" என்று தோன்றும்.

சந்தஸ் சாஸ்திரத்தின் உபயோகம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சந்தஸ் : வேதத்தின் பாதம்

சந்தஸ் சாஸ்திரத்தின் உபயோகம்

ஒரு மந்திரம் உருவான பின், அதன் சரியான உச்சாரணத்துக்கு ரக்ஷையாக இருப்பது சிக்ஷா சாஸ்திரம். ஆனாலும் அந்த மந்திர ரூபமே சரியா என்று பார்ப்பதற்கு ரக்ஷையாக இருப்பது சந்தஸ் சாஸ்திரந்தான். மந்திர ரூபம் தப்பாக வரவே வராதுதான். ஏனென்றால், அது ரிஷிகள் யோசித்து யோசித்துப் பண்ணினதே இல்லை. பகவானே ஸ்புரிக்க வைத்தவைதான் மந்திரங்கள். அதனால் பகவத் ஸ்ருஷ்டியில் மநுஷ்யன், மிருகம், மரம் ஒவ்வொன்றும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற நியதிப்படி தாமே சரியான ரூபத்தோடு உண்டாகிற மாதிரி மந்திரங்களிலும் சந்தம் தானே சரியாகத்தான் இருக்கும். ஆனாலும் இப்போது நமக்கு ஒரு மந்திரம் அல்லது வேத ஸூக்தம் சொல்லிக் கொடுக்கப்படுகிறபோது அது சரியான மூல ரூபத்தில் வந்திருக்கிறதா என்று நிச்சயப்படுத்திக் கொள்ள சந்தஸ் சாஸ்திரந்தான் உதவி செய்கிறது. அதன் மீட்டரிலுள்ள அக்ஷரங்களை எண்ணிப் பார்த்து சரியாக இல்லாவிட்டால், விஷயம் தெரிந்தவர்களைக் கேட்டு, அதன் சரியான ரூபத்தை தெரிந்து கொள்ளலாம்.

தாமாகத் தோன்றிய மந்திரங்கள் தவிர கவிகளே உட்கார்ந்துகொண்டு இயற்றுகிறபோது சந்தஸின் கணக்குத்தான் அவர்கள் எண்ணத்துக்கு ச்லோக ரூபம் தருவதற்கு வகை செய்கிறது.

பாட்டுக்குத் தாளம் மாதிரி ச்லோகங்களுக்கு சந்தஸ் என்பது.

இப்படி ஒரு கணக்கில் கொண்டு வருவதால்தான் நிர்ணயமான ரூபம் கிடைக்கிறது. அது மனப்பாடம் பண்ணவும் ஸௌகரியம் செய்கிறது. ஆனால் எதிலுமே கட்டுப்பாடு வேண்டாம் என்கிற நவீன ஸமுதாயத்தில், கவிதைகளுக்கும் மீட்டர் வேண்டாம் என்று மனம் போனபடி பண்ண ஆரம்பித்திருக்கிறார்கள். கட்டுப்படுவதிலேயே தான் பெரிய ஸ்வதந்திரத்துக்கு வழி இருக்கிறது என்று இந்த நாளில் தெரியவில்லை.

*　　*　　*

வேதத்தில் ஒரு அக்ஷரங்கூடக் கூட்டவும் குறைக்கவும் முடியாதபடி மூல ரூபத்தை ரக்ஷித்துத் தருவது சந்தஸ் சாஸ்திரந்தான். ஆத்மார்த்தமான வேதத்தில் ஒரு சப்தம் கூட அதிகமாகவோ, குறைந்து விடவோ அநுமதிக்கக்கூடாது அல்லவா?

வேதத்தின் பாதம், மந்திரத்தின் மூக்கு

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சந்தஸ் : வேதத்தின் பாதம்

வேதத்தின் பாதம், மந்திரத்தின் மூக்கு

ஒவ்வொரு மந்திரமும் ஒரு தேவதையைக் குறித்து. ஆகையால் மந்திரம் ஒவ்வொன்றுக்கும் ஒரு தேவதை உண்டு; அதன் மீட்டரான சந்தஸ் உண்டு; அதை லோகத்துக்குத் தந்த ரிஷியும் உண்டு. எந்த ரிஷியின் மூலமாக ஒரு மந்திரம் லோகத்திற்கு வந்ததோ அந்த ரிஷி அந்த மந்திரத்தின் ரிஷியாவார். அவர் பெயரைச்

சொல்லித் தலையில் கையை வைத்துக்கொள்வது அவருடைய பாதங்களை சிரஸில் வைத்துக் கொள்வதற்கு அறிகுறி. ரிஷிகளால்தான் அந்த மந்திரங்கள் நமக்குக் கிடைத்தன; ஆகையால் அவர்களுக்கு முதலில் வணக்கம் செலுத்த வேண்டும்.

சந்தஸைச் சொல்லி மூக்கில் கை வைக்கிறோம். மந்திரத்தின் ரூபத்தை ரக்ஷிப்பது சந்தஸ். அது அதற்கு பிராணன் போன்றது. அதனால் பிராண ஸ்தானமாகிய மூக்கில் கையை வைக்கிறோம். மூச்சு இல்லாவிட்டால் பிராணன் இல்லையல்லவா? அதைப் போல, மந்திரங்களுக்கு மூச்சாக இருப்பது சந்தஸ். வேதம் என்ற மொத்த ரூபத்துக்கு சிக்ஷை மூக்கு, சந்தஸ் பாதம் என்றால், வேதத்திலுள்ள மந்திரங்கள் என்பதன் ரூபத்துக்குச் சந்தஸே மூக்கு, அதாவது ஜீவாதாரமான ச்வாஸ அவயவம்.

அந்த மந்திரத்தின் அதி தேவதையைத் தியானம் செய்ய வேண்டும். தேவதையின் ஸ்வரூபத்தை ஹ்ருதயத்தில் தியானம் செய்து மந்திர ஜபம் ஆரம்பிக்க வேண்டும். அதற்காகத் தான் தேவதையைச் சொல்லி ஹ்ருதயத்தைத் தொடுகிறோம்.

சந்தஸ் மந்திரங்களுக்கு ஆதாரம். கால் என்ற ஆதாரத்தின் மேல் நாம் நிற்பதுபோல், வேத புருஷன் சந்தஸாலேயே நிற்கிறார்.

சந்த:பாதோ வேதஸ்ய

என்று சொல்லியிருக்கிறது. காலில்லாமல் நிற்க முடியாது. வேதமந்திரங்களை சந்தஸின் அமைப்பே நிற்க வைக்கிறது.

நிருக்தம் : வேதத்தின் காது

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

நிருக்தம் : வேதத்தின் காது

நிருக்தம் என்பது வேதத்துக்கு அகராதி (Dictionary), அகராதி என்பது 'கோசம்' என்று ஸம்ஸ்கிருதத்தில் சொல்லப்படும். 'அமர கோசம்' என்று பிரஸித்தமான அகராதி இருக்கிறது. 'நிகண்டு' என்றும் சொல்வதுண்டு. தமிழிலும் 'நிகண்டு' என்றே சொல்வர். ஒவ்வொரு வார்த்தையும் இந்த தாதுவிலிருந்து வந்தது என்று அக்ஷர அக்ஷரமாகப் பிரித்து ஒவ்வொரு அக்ஷரத்துக்கும் அர்த்தம் சொல்வது நிருக்த சாஸ்திரம். இதை Etymology என்கிறார்கள்.

நிருக்தம் வேதபுருஷனுக்கு ச்ரோத்திர ஸ்தானம், அதாவது, காது. வேதத்தில் உள்ள அரிய வார்த்தைகளுக்கு இன்ன இன்ன அர்த்தம் என்று அது சொல்கிறது. ஏன் இந்தப் பதம் இங்கே உபயோகப்படுத்தப்பட்டது என்பதைக் காரணத்துடன் அது சொல்லும்.

நிருக்த சாஸ்திரம் பலரால் செய்யப்பட்டிருக்கிறது. இவற்றில் முக்கியமானது யாஸ்கர் செய்தது.

வேத நிகண்டுவில் ஒவ்வொரு பதத்திற்கும் அது இப்படி உண்டாயிற்றென்று காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. 'ஹ்ருதயம்' என்ற ஒரு பதம் இருக்கிறது. அது ஏன் இப்படி

வந்தது? வேதமே அதன் காரணத்தைச் சொல்லியிருக்கிறது. 'ஹ்ருதி அயம்': 'ஹ்ருதயத்தில் அவன் இருக்கிறான்' என்பது அர்த்தம். 'ஹ்ருத்' என்பதே பௌதிகமான ஹ்ருதயத்தின் பெயர். ஆனால் 'அயம்' என்று அதில் கிட்ட உள்ளவனான ஈச்வரனனையும் சேர்த்துச் சொல்வதால் அதன் ஆத்மிகமான முக்யத்வமும் குறிப்பிடப்படுகிறது. எந்த சாஸ்திரமானாலும் ஈச்வரனில் கொண்டுவிட வேண்டும். ஹ்ருதயத்தில் பரமேச்வரன் இருப்பதால், அதற்கு, 'ஹ்ருதயம்' என்று பெயர் வந்தது என்று தெரிய வருகிறது. இப்படி ஒவ்வொரு பதத்திற்கும் காரணம் உண்டு. அதை ஆராய்வது நிருக்தம்.

ஸம்ஸ்கிருதத்தில் எல்லாப் பதங்களுக்கும் தாது உண்டு. தாதுவை "ரூட்" என்று இங்கிலீஷில் சொல்லுவார்கள். இங்கிலீஷில் கிரியாபதங்களுக்கு (verbs) தாது உண்டே தவிரப் பெயர்ச் சொல்களுக்கு (Nouns) தாது இல்லை. ஸம்ஸ்கிருதத்தில்தான் பெயர்ச் சொல்லுக்கும் இன்ன க்ரியையால் இப்படிப் பெயர் வந்தது என்று தாது காட்ட முடிகிறது. அப்படி உள்ள பதங்களின் விகாரங்களை மற்ற பாஷைகக்காரர்கள் எடுத்து உபயோகித்தார்கள். அதனால்தான் அந்த பாஷைகளில் பல வார்த்தைகளுக்கு ரூட் தெரிவதில்லை. அந்த பாஷைக்கே உரிய சொல்லாக இருந்தால்தானே சொல்ல முடியும்? மணியை இங்கிலீஷில் Hour என்று சொல்லுகிறார்கள். அந்தப் பதத்தில் அமைந்துள்ள எழுத்துக்களின் உச்சரிப்பை அநுசரித்துப் பார்த்தால், ஹௌர் அல்லது ஹோர் என்றே சொல்ல வேண்டும். ஒரு காலத்தில் "ஹோர்" என்றே சொல்லியிருக்க வேண்டும். "ஹோரா சாஸ்திரம்" என்று

ஸம்ஸ்கிருதத்தில் ஒரு சாஸ்திரம் உண்டு. 'அஹோராத்ரம்' (இரவு பகல்) என்பதிலிருந்து, அந்த 'ஹோரா' என்பது வந்தது. ஹோரா என்பது இரண்டரை நாழிகையான ஒரு மணி நேரத்தை குறிக்கும். 'ஹோரா' என்பது தமிழில் 'ஓரை' ஆயிற்று. கல்யாணப் பத்திரிக்கைகளில் முஹூர்த்த காலத்தை 'நல்லோரை' என்று போடுகிறார்கள். அந்த ஹோராவே இப்போதைய இங்கிலீஷ் ஸ்பெல்லிங்கில் hour -ஆகவும், உச்சரிப்பில் 'அவர்' என்றும் வந்திருக்கிறது. இப்படியே heart என்பது ஸம்ஸ்கிருத 'ஹ்ருத்' என்பதிலிருந்து வந்தது. இப்படிப் பல வார்த்தைகள் இருக்கின்றன. இவைகள் பிற பாஷைகளில் தற்காலத்திய ஸ்வரூபத்தை அடைவதற்கு எவ்வளவோ காலம் ஆகியிருக்க வேண்டும். அந்த பாஷைகாரர்களுக்குப் பதங்களின் மூலம் தெரியாமல் இருப்பதற்குக் காரணம் இந்தப் பழமைதான்.

அர்த்தம் தெரிந்தாலொழிய ஒரு பாஷையைக் கேட்டு பிரயோஜனம் என்ன? அது கேட்டும் கேளாமல், செவிடாக இருப்பதற்கு ஸமம்தானே? இதனால்தான் நிருக்தத்தை வேத புருஷனுக்குக் காது என்பது. காதால் கேட்கப்படும் ச்ருதிக்கும் [வேதத்துக்கும்] இது ச்ரோத்ரம்!

வியாகரண சாஸ்திரத்தையும் நிருக்த சாஸ்திரத்தையும் வெள்ளைக்காரர்கள் காசியிலிருந்த பண்டிதர்களிடமிருந்து தெரிந்து கொண்டார்கள். இன்ன இன்ன காரணத்தால் இன்ன இன்ன பதம் இவ்விவ்வாறு வந்தது என்று நிருக்தத்திலே சொல்லியிருப்பதைத் தெரிந்து கொண்டனர். இதிலிருந்தே மொழி ஆராய்ச்சி என்று ஒரு புதிய சாஸ்திரம் (Science) உண்டாக்கினார்கள். அது ஃபைலாலஜி

(philology) எனப்படும். இப்படியாக நவீன பாஷா சாஸ்திரமும் ஏற்பட்டதற்கு மூலகாரணம் வியாகரணமும் நிருக்தமுமே.

அவர்கள் ஆராய்ச்சியால் பற்பல பாஷைகள் ஒவ்வொரு மூலத்திலிருந்து வந்தவைகளென்று சொல்கிறார்கள். அந்த மூலபாஷையைப் பேசிய மனிதர்களிருந்த இடத்தில்தான் அந்த இனத்தின் ஆதிஜனங்கள் இருந்தார்களென்றும், அப்புறம் பல இடங்களுக்கு பரவினார்களென்றும் சொல்கிறார்கள். ஸம்ஸ்கிருத மூல பாஷைகாரர்களின் ஆதி இடம் பற்றி அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. ஏதாயிருந்தாலும் நமக்குக் கவலையில்லை. நாம் எல்லாம் நம்முடைய ஊரே என்ற கொள்கையுடையவர்கள்: "யாதும் ஊரே!", "ஸ்வதேசோ புவனத்ரயம்!" –மூன்றுலகமும் நமக்குச் சொந்தமான நாடு தான்! பல இனம், அவற்றுக்கான பல மூல பாஷைகள் என்று இவர்கள் சொன்னாலும் அத்தனை இனத்துக்கும் ஒரே மூல இனமுண்டு; இவர்கள் மூல பாஷைகளாகச் சொல்வதற்கெல்லாமும் பொதுவாக ஒரே மூல பாஷை உண்டு என்பது நம் கொள்கை. நவீன ஆராய்ச்சிகளும் அதில் கொண்டுவிட்டு உலக ஜன சமுதாயம் முழுக்க ஒன்று என்று நிரூபணமாக வாக்தேவி அநுக்ரஹிக்க வேண்டும்.

ஜ்யோதிஷம் : வேதத்தின் கண்

கண் என்பது ஏன்?

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

ஜ்யோதிஷம் : வேதத்தின் கண்

கண் என்பது ஏன்?

நம்முடைய வைதிக மதத்திற்கு ஆதாரமாகிய பதிநான்கு வித்யாஸ்தானங்களுள் ஷடங்கங்களில் சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம் என்பவற்றைப் பற்றிச் சொன்னேன். அடுத்தது ஜ்யோதிஷம் (சோதிடம்) என்பது.

வேதபுருஷனுக்கு ஜ்யோதிஷம் நேத்திர ஸ்தானம், அதாவது கண். ஜ்யோதிஷ சாஸ்திரமானது மூன்று ஸ்கந்தங்கள் அடங்கியது. அதனால், அதற்கு "ஸ்கந்த த்ரயாத்மகம்" என்று பெயர்.

கர்க்கர், நாரதர், பராசரர் முதலிய பல ரிஷிகள் பல ஜ்யோதிஷ ஸம்ஹிதைகளைச் செய்திருக்கிறார்கள். ஸூரிய பகவான், அசுரத் தச்சனாகிய மயனுக்கு ஜ்யோதிஷ உபதேசம் பண்ணினதாக ஒரு கிரந்தம் இருக்கிறது. அதற்கு, "ஸூரிய ஸித்தாந்தம்" என்று பெயர். இப்படித் தேவர்களும் ரிஷிகளும் இயற்றிய பல ஜ்யோதிஷக் கிரந்தங்கள் உண்டு. மனிதர்கள் செய்த கிரந்தங்களும் இருக்கின்றன. வராஹமிஹிரர் என்பவர் பல கிரந்தங்களை எழுதியிருக்கிறார். ஆர்யபடர், பாஸ்கராசாரியார் முதலியவர்கள் பண்ணின கிரந்தங்கள் பல இருக்கின்றன. சமீப காலத்தில் சுந்தரேச்வர ச்ரௌதிகள் என்பவர் சித்தாந்த கௌஸ்துபம் என்ற ஜ்யோதிஷ க்ரந்தத்தைச் செய்திருக்கிறார்.*

ஜ்யோதிஷத்தை ஏன் வேத புருஷனுக்குக் கண்ணாகச் சொல்லியிருக்கிறது?

கண் இல்லாதவன் குருடன். கண் எதற்காக இருக்கிறது? பக்கத்திலுள்ள வஸ்துக்களைக் கையினால் தடவிப்

பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். தூரத்திலுள்ளதன் ரூபம் தெரிய வேண்டுமானால், அப்பொழுது கண்ணினால் பார்த்தே தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இடத்திலே தூரத்தில் இருப்பதைத் தெரிந்துகொள்ள நம்முடைய கண் எப்படி உபயோகப்படுகிறதோ, அப்படிக் காலத்திலே தூரத்தில் (அதாவது பல வருஷங்களுக்கு முன்னால் அல்லது பல வருஷங்களுக்கு அப்புறம்) உள்ள க்ரஹ நிலைகளைத் தெரிந்து கொள்ள ஜ்யோதிஷ சாஸ்திரம்தான் உதவி புரிகிறது. இன்றைக்கு சூரியனும் சந்திரனும் மற்ற /க்ரஹங்களும் எங்கே இருக்கின்றன என்பதைப் பிரத்யக்ஷத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். கண்ணில்லாவிட்டாலும் கையால் தடவியே கிட்டத்தில் உள்ளதன் ரூபத்தைத் தெரிந்து கொள்வதுபோல், ஜ்யோதிஷ சாஸ்திரம் தேவைப்படாமல் நம் கண்ணாலேயே பார்த்து, காலத்தில் கிட்டே, அதாவது நிகழ்காலத்தில் உள்ள கிரஹ நிலைமைகளை அறிந்து கொண்டுவிடலாம். ஆனால் 50 வருஷத்துக்கு முன்னால் அல்லது பின்னால் கிரஹங்கள் எங்கே இருக்கும் என்று தெரிய வேண்டுமானால் ஜ்யோதிஷ சாஸ்திரத்தைப் பார்த்தாலே தெரியும்!

கிட்டத்தில் உள்ளதைத் தடவிப் பார்த்து, அதன் உருவத்தை அறிகிறபோதுகூட அது பச்சையா, சிவப்பா, வேறு என்ன கலர் என்று தெரிந்து கொள்ள முடிவதில்லை. இதை அறியக் கண் வேண்டியிருக்கிறது. இதே போல, பிரத்யக்ஷத்தில் ஒரு கிரஹம் தெரிந்தால்கூட, அது அந்த நிலையில் இருப்பதால் ஏற்படுகிற பயன் என்ன, அது

நம்மை எப்படிப் பாதிக்கிறது என்று நமக்குத் தெரியாது. இதை ஜ்யோதிஷந்தான் நமக்குத் தெரிவிக்கிறது.

ஆகவேதான், ஜ்யோதிஷத்தை வேத புருஷனுக்குக் கண் என்றார்கள். வைதிகக் காரியங்களைச் செய்வதற்கு, இன்னின்ன க்ரஹம் இன்னின்ன இடத்தில் இருக்க வேண்டும் என்ற விதி உண்டு. 'நாள் பார்ப்பது', 'முஹூர்த்தம் வைப்பது' என்றெல்லாம் க்ரஹ நிலைகளை ஒட்டித்தானே சடங்குகளைப் பண்ண வேண்டியிருக்கிறது? இதனால் ஜ்யோதிஷம் நேத்ர ஸ்தானத்தைப் பெறுகிறது.

ஜ்யோதிஷத்துக்கு 'நயனம்' என்று ஒரு பெயர் உண்டு. 'நய' என்றால் அழைத்துக் கொண்டு போவது (to lead). கண்ணில்லாதவனை இன்னொருவர்தானே அழைத்துக் கொண்டு போக வேண்டியிருக்கிறது? அதனால் கண்தான் அழைத்துப் போகிற லீடராக இருக்கிறது என்பது தெரிகிறது! வேத கர்மாக்களைப் பண்ணுவதற்கான காலத்தை நிர்ணயம் பண்ணி, நம்மை அந்தக் காரியத்துக்கு அழைத்துக் கொண்டு போகிற கண்ணாக இருப்பது ஜ்யோதிஷமே.

* வேத அங்க ஜ்யோதிஷம் என்றே ரிக், யஜுர் வேதங்களுக்கு இருப்பதில் இன்று கிடைத்திருப்பது விலக்க வேண்டிய முஹூர்த்தங்களை மட்டுமே கூறுகிறது. இதை விட விரிவானதாகக் கருதப்படும் ஆதர்வண ஜ்யோதிஷம் என்பது கிடைக்கவேயில்லை.

[வான சாஸ்திரமும் ஜோஸ்யமும்]

ஜ்யோதிஷம் : வேதத்தின் கண்

வான சாஸ்திரமும் ஜோஸ்யமும்

வான சாஸ்திரம் (Astronomy) என்பதாக கிரஹங்களின் நிலைமைகளை மட்டும் ஆராய்ச்சி பண்ணுவதோடு இன்றைய ஸயன்ஸ் நின்றுவிடுகிறது. அவை அந்த நிலைகளில் இருப்பது லோகத்தை எப்படிப் பாதிக்கிறது, நம்மை எப்படிப் பாதிக்கிறது, அவற்றை நமக்கு அநுகூலமாக்கிக் கொள்ள என்ன பண்ண வேண்டும் என்ற விஷயங்களை – அதாவது, "ஜோஸ்யம் பார்ப்பது" என்று நாம் சொல்கிற Astrology சமாசாரங்களையும் Astronomy யோடு சேர்த்துச் சொல்வது ஜ்யோதிஷ சாஸ்திரம்.

கிரஹங்கள், நக்ஷத்ரங்கள், திதி ஆகியன இப்படியிப்படி இருந்தால், அந்த சமயத்தில் செய்யும் கர்மாக்களுக்கு இப்படியாகப்பட்ட பலன்கள் உண்டாகின்றன என்பதைச் சொல்லவே ஜ்யோதிஷ சாஸ்திரம் ஏற்பட்டது. வைதிக கர்மாக்களைச் செய்வதற்குரிய அநுகூலமான காலங்களை நிர்ணயிப்பதற்காகவே வேதாங்கமான ஜ்யோதிஷம் ஏற்பட்டது. இதில் கிரஹ ஸஞ்சாரம் முதலானதுகளை கணக்குப் பண்ண வேண்டியிருந்ததால் கணிதமும் நிறையச் சேர்ந்துவிட்டது.

யாகம் பண்ணும் இடமான யக்ஞவேதி, சயனம் என்பதான யக்ஞபூமி அமைப்பு ஆகியவற்றுக்கு நிர்ணயமான அளவுகள் உண்டு. அந்த அளவுப்படி அமைத்து யக்ஞம் பண்ணினாலே பலன் உண்டு. அதனால் யக்ஞவேதிகளின் அளவுகளைத் தீர்மானமாகக் கணக்குப் பண்ணிக் கொடுக்க வேண்டியதாயிற்று. இந்த ரீதியிலும், வேதத்துக்குத்

துணையங்கமாக கணிதம் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது.

புராதன கணித நூல்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

ஜ்யோதிஷம் : வேதத்தின் கண்

புராதன கணித நூல்கள்

ஜ்யோதிஷத்தில் மூன்று ஸ்கந்தங்கள் இருக்கின்றன என்பதாக முன்பே சொன்னேன். மடத்தில் ஜ்யோதிஷம் தெரிந்த ஒரு சாஸ்திரிகள் இருந்தார். அவருக்கு ஒரு பட்டம் கொடுக்க யோசித்தோம். கடைசியில் 'த்ரிஸ்கந்த பாஸ்கர' என்னும் பட்டத்தைக் கொடுத்தோம். ஸ்கந்தம் என்றால் மரத்தின் அடிக்கட்டையில் இருந்து பிரிகிற பெரிய கிளைகளுக்குப் பெயர் ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் ஸித்தாந்த ஸ்கந்தம், ஹோரா ஸ்கந்தம், ஸம்ஹிதா ஸ்கந்தம் என்று மூன்று ஸ்கந்தங்கள் இருக்கின்றன.

அரித்மெடிக், ட்ரிகனாமெட்ரி, ஜியாமெட்ரி, அல்ஜிப்ரா என்று பலவிதமாக உள்ள கணிதங்களெல்லாம் ஸித்தாந்த ஸ்கந்தத்தில் அடங்கி இருக்கின்றன. மேற்கத்தியர்கள் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு அப்புறம் 'டெவலப்' செய்த Higher Mathematics -ன் விஷயங்கள் எல்லாம் புராதனமான நம் ஜ்யோதிஷத்தில் வந்து விடுகின்றன.

அரித்மெடிக் (Arithmetic) என்பது வியக்த கணிதம். எண்களைத் தெளிவாகக் கொடுத்துப் பலன் கேட்பது வியக்த கணிதம். சாதாரணக் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்

என்பவைகள் வியக்த கணிதத்தைச் சார்ந்தவை. அவ்யக்தம் என்பது 1,2,3,4 போலத் தெரிந்த எண்ணிக்கையாக இராமல் A,X என்று வைத்துக் கொள்வது. அதைத்தான் அல்ஜீப்ரா என்று சொல்கிறார்கள். அவ்யக்தம் என்பதற்கு 'வெளிப்படையாகத் தெரியாதது' என்பது அர்த்தம். க்ஷேத்ர கணிதம் என்பதுதான் 'ஜ்யாமெட்ரி'. 'ஜ்யா' என்றால் பூமி; 'மிதி' என்றால் 'அளவை முறை' என்று அர்த்தம். யாகவேதி, யக்ஞ குண்டம் இவை எப்படியிருக்க வேண்டும் என்று அளவைகளைச் சொல்வதற்காகவே முதலில் ஏற்பட்ட ஜ்யாமிதிதான் இங்கிலீஷ் ஜ்யாமெட்ரியாயிருக்கிறது. 'ஜ்யாகரபி'யில் வருவதும் இதே 'ஜ்யா' தான். ஸமீகரணம் என்று ஒரு கணக்கு உண்டு. அது அவ்யக்தங்களைக் கொடுத்து வியக்தங்களைக் கண்டு பிடிப்பது. அவ்யக்தமான எண்ணிக்கைகளின் கூட்டங்களைத் தனியாகக் கொடுத்து அவைகளை சமமாக செய்யச் சொல்லுவது ஸமீகரணம். ஸமீகரணம் என்பதற்குச் சமமாகப் பண்ணுதல் என்பது அர்த்தம். அதைத்தான் equation என்கிறார்கள்.

வேதத்தின் ஆறாவது அங்கமாக இருக்கும் கல்ப சாஸ்திரத்துக்கு (இதைப் பற்றி பிறகு சொல்வேன்) வேதத்தின் ஐந்தாவது அங்கமான இந்த ஜ்யோதிஷத்தில் வரும் ஸித்தாந்த ஸ்கந்தத்தின் உதவி ரொம்பவும் தேவைப்படுகிறது. கல்ப சாஸ்திரத்தில் சுல்ப ஸூத்திரங்கள் என்று ஒரு பாகம் உண்டு. இந்த சுல்ப ஸூத்திரங்களில் யக்ஞங்களை பற்றிச் சொல்லும்போது யக்ஞம் செய்ய வேண்டிய சாலையில் யக்ஞவேதி எப்படி கட்ட வேண்டும் என்பன போன்றவற்றுக்கு அளவு

முறைகளைத் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறது. இந்த யக்ஞ பூமி அமைப்புகளுக்கு "சயனம்" என்று பெயர். கருடன் போன்ற ஆக்ருதியில் (வடிவத்தில்) ஒரு சயனம். இன்னம் இப்படிப் பல ஆக்ருதிகளில் சயனங்கள் அமைப்பதைப் பற்றி சொல்லும்போது, செங்கல் சூளை போடும் விதம், இத்தனை அளவுள்ள இத்தனை செங்கல்கள் அடுக்கினால் இந்த ஆகிருதியுள்ள சயனம் வரும் என்ற கணக்குகள் சுல்ப ஸூத்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு ஸித்தாந்த ஸ்கந்தத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொண்டால்தான் முடியும்.

ஆபஸ்தம்ப சுல்ப ஸூத்திரத்தில் ஒரு ஸமீகரணம் (equation) இருக்கிறது. அதை விடுவிக்க – ப்ரூவ் பண்ண – ஸமீபகாலம் வரையில் முடியாமலிருந்தது. வெள்ளைக்கார கணித விதிகளின் படி அதை 'ஸால்வ்' பண்ண முடியாமலிருந்ததால், அது தப்பு என்றுகூட நினைத்துவிட்டார்கள். அப்பறந்தான் மேலும் ஆராய்ச்சி செய்து பார்த்ததில், அந்த சுல்ப ஸூத்திர ஸமீகரணம் சரியானதே என்று தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இத்தனை நுட்பமான கணித ஞானம், இவ்வளவு காலம் தங்கள் கண்ணிலேயே மண்ணைத் தூவி வந்த அளவுக்கு ஸூக்ஷ்மமான ஞானம், ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முந்தியே இந்தியர்களுக்கு இருந்திருக்கிறதே என்று ஆச்சரியப்படுகிறார்கள். இதைப் போல இன்னம் கண்டுபிடிக்க வேண்டிய கணக்குகளுக்கு உரிய ஸூத்திரங்கள் எவ்வளவோ இருக்கின்றன. இந்த

ஸமீகரணங்களும், அளவுகளும், ஸித்தாந்த ஸ்கந்தத்தின் உதவியால் நிரூபணம் செய்ய வேண்டியவையாகும்.

ரேகா கணிதம், குட்டகம், அங்கபாதம் என்றெல்லாம் பலவகைக் கணக்குகள் நம் சாஸ்திரத்தில் சொல்லப்படுகின்றன.

அவ்யக்த கணிதத்திற்கு பீஜ கணிதம் என்றும் ஒரு பெயர் உண்டு....

எண்ணூறு வருஷங்களுக்கு முன் பாஸ்கராச்சாரியார் என்று பெரிய கணித ஸித்தாந்தி ஒருவர் இருந்தார். நமக்கு என்னதான் கெட்டிக்காரத்தனம் இருந்தாலும், பகவத் ஸங்கல்பத்தை மாற்ற முடியாது என்பதற்கு திருஷ்டாந்தமாக அவர் வாழ்க்கையில் ஒன்று நடந்தது. அவருடைய பெண்ணுக்கு லீலாவதி என்று பெயர். ஜாதகப்படி அவளுக்கு ரொம்பவும் மாங்கல்ய தோஷம் இருப்பதை ஜ்யோதிஷப் புலியான பாஸ்கராச்சாரியார் அறிந்திருந்தார். ஆனாலும் தமது கெட்டிக்காரத்தனத்தினால் ஸகல க்ரஹங்களும் தீர்க்க ஸௌமங்கல்யத்தைத் தரும்படியான ஒரு லக்னத்தைக் கண்டுபிடித்து அதிலே புத்திரிக்கு விவாஹம் செய்து விட்டால் அவள் தீர்க்க ஸுமங்கலியாக இருக்கச் செய்து விடலாம் என்று நினைத்தார். அந்த மாதிரியான க்ரஹ சேர்க்கை உடைய ஒரு லக்னத்தில் லீலாவதிக்குக் கல்யாண முஹூர்த்தம் வைத்தும் விட்டார்.

அந்தக் காலத்தில் இப்போது போல் கடிகாரம் கிடையாது. வாஸ்தவத்தில் அக்காலத்தில் இருந்ததுதான் அசல் கடிகா. கடம், கடிகா, கடிகை என்பதெல்லாம் பானை மாதிரியான

தீர்த்த பாத்திரத்தைக் குறிக்கும். இப்படிப்பட்ட ஜல பாத்திரமே பூர்வகாலத்திய கடிகா அல்லது கடிகாரம். அதிலே மேல்பாகம், கீழ்பாகம் என்று பிரிந்திருக்கும். மேல் பாகத்தில் விட்ட ஜலம் ஒரு துவாரம் வழியாக கீழ்பாகத்தில் துளித்துளியாக விழும். மருந்து பாட்டிலில் டோஸ் மார்க் பண்ணியிருக்கிற மாதிரி, கீழ் பாகத்தில் அளவுக்கோடுகள் போட்டிருக்கும். துளித் துளியாய் விழும் ஜலம் இன்ன கோடுவரை வந்தால் இத்தனை நாழிகை என்று கணக்குப் பண்ணிவிடுவார்கள். அதிலுள்ள டோஸ் மார்க் ஒருநாளில் அறுபதில் ஒரு பங்காகும். 'நாழிகை' என்று தமிழில் சொல்லப்படும் இந்தக் கால அளவுக்கு ஸம்ஸ்கிருதத்தில் 'நாடிகா' என்பதோடு 'கடிகா' என்றே இன்னொரு பெயர் உண்டு. அது 24 நிமிஷம் கொண்டது. Water -clock, Water glass என்று இங்கிலீஷிலும் சொல்வார்கள். ஜலம் சீதோஷ்ணத்தைப் பொறுத்து evaporate (ஆவி) ஆவதால், இதில் ஏதாவது கணக்குத் தப்பு வரும் என்று, ஜலத்துளிக்குப் பதில் 'எவாபொரேட்' ஆகாத மண் துகள் விழுகிற மாதிரிச் செய்யும் கடிகாரத்துக்கு hour - glass என்று பெயர்.

அந்நாள் வழக்கப்படி, லீலாவதி விளையாட்டுப் பெண்ணாக இருந்த சின்ன வயசிலேயே கல்யாணம் நிச்சயித்திருந்தது. அந்தக் குழந்தை மேலே சொன்ன மாதிரியான ஜல கடிகாரத்திடம் வந்து, குனிந்து பார்த்து ஏதோ சேஷ்டை பண்ணிற்று. அப்போது அதன் மூக்குத்தியிலிருந்து ஒரு சின்ன முத்து கடிகாரத்துக்குள் விழுந்து, மேல் பாகத்துக்கும் கீழ் பாகத்துக்கும் நடுவேயுள்ள துவாரத்தில் மாட்டிக் கொண்டு விட்டது.

இதனால் விழுகிற துளி சின்னதாகி விடும் அல்லவா? இப்படி, இருக்க வேண்டியதைவிடச் சின்னதான துளிகளாக விழுந்து முஹூர்த்த லக்னக் கோட்டுக்கு ஜலம் வந்தபோது, வாஸ்தவத்தில் அந்த சுபநேரம் தப்பி, அடுத்த லக்னம் வந்து விட்டது! அது கெட்ட லக்னம். அந்த லக்னத்தில் விவாஹமானதால் லீலாவதி ஜாதகப்படியே ரொம்பவும் பிஞ்சு வயஸில் பதியை இழந்து விட்டாள்!

முத்து விழுந்ததை அந்தக் குழந்தை உள்பட ஒருத்தரும் முதலில் கவனிக்காதலால் இத்தனை பெரிய விபரீதம் நடந்துவிட்டது. அப்புறம் விஷயம் தெரிய வந்தபோது விதியை யாரும் மாற்ற முடியாது என்று தெரிந்து கொண்டார்கள்.

கணித சாஸ்திர விஷயமாகப் பிற்காலத்தில் பாஸ்கராசாரியார் ஒரு கிரந்தம் செய்ய வேண்டுமென்று நினைத்தார். தமது புத்திரியின் பெயராகிய லீலாவதி என்னும் பெயரையே அந்த புஸ்தகத்துக்கு வைத்தார். சின்ன வயசிலேயே விதவையாகித் தம்மிடம் வந்துவிட்ட புத்திரி லீலாவதியை கணிதத்தில் பண்டிதை ஆக்கி, அவள் பெயரிலேயே தம் புஸ்தகத்தை எழுதினார். ஸாதாரணமாக ஒரு பரம்பரையில் பாட்டி, முப்பாட்டிகளின் பேரைக் குழந்தைக்கு வைத்து அவர்களுடைய நினைவை நீடிக்கச் செய்கிறார்களல்லவா? பாஸ்கராச்சாரியாரோ என்ன பண்ணினாரென்றால், குழந்தையே பெறாத தம்முடைய குழந்தை, கணித மாணாக்கப் பரம்பரை முழுதற்கும் ஒரு ஆதி பாட்டியாகச் சிரஞ்சீவித்வம் பெறும்படி தம்முடைய புஸ்தகத்திற்கே "லீலாவதி கணிதம்" என்று அவள் பேரை வைத்துவிட்டார்.

அதில் வியக்த கணிதம், பீஜ கணிதம் முதலிய பலவகைக் கணிதங்கள் இருக்கின்றன. "லீலாவதி கணக்கு"கள் கதை மாதிரியும், விடுகதை மாதிரியும், கவிதை மாதிரியும் சுவாரஸ்யமாக இருக்கும். கிரஹ ஸ்திதிகள், கிரஹங்களின் கதிகள் முதலியவற்றை நிர்ணயிப்பதற்கு உபயோகமாக "ஸித்தாந்த சிரோமணி" என்ற ஒரு கிரந்தத்தையும் பாஸ்கராசாரியார் எழுதியிருக்கிறார்.

"பிராசீனலேகமாலை" என்னும் பழைய சாஸனங்களின் தொகுப்பான புஸ்தகத்தில் உள்ள ஒரு சாஸனத்தால், பூர்வ காலத்தில் பாஸ்கராச்சாரியாருடைய கிரந்தங்களைப் பிரசாரப் படுத்துவதற்காக கூர்ஜர (குஜராத்) தேசத்தில் இருந்த சிங்கணன் என்னும் அரசன் மானியம் விட்டிருந்தானென்று தெரிய வருகிறது.

நவீன க்ஷேத்திர கணித கிரந்தமாகிய "யூக்ளிட்" புஸ்தகத்தில் நடுவில் உள்ள 7,8,9,10-ம் பாகங்களைக் காணவில்லை என்று சொல்லுகிறார்கள். ஸம்ஸ்கிருதத்தில் 12 புஸ்தகங்களும் அப்படியே இன்றைக்கும் இருக்கின்றன. நமக்கு ஒன்றும் தெரியவில்லை. 'பல முறை கூட்டல் போடுவதுதான் பெருக்கல்; பலமுறை கழிப்பதுதான் வகுத்தல்' என்பது போன்ற சின்னவிஷயங்கள்கூடத் தெரியாமலிருக்கிறோம்!

பாஸ்கராசாரியாருக்கு முன்பு, அதாவது இன்றைக்கு 1500 வருஷங்களுக்கு முன்பு வராஹமிஹிரர் என்று ஒருவர் இருந்தார். அவர் 'ப்ருஹத் ஸம்ஹிதை', 'ப்ருஹத் ஜாதகம்' முதலிய பல கிரந்தங்களைச் செய்திருக்கின்றார். 'ப்ருஹத் ஸம்ஹிதை' என்பது ஸகல சாஸ்திரங்களுக்கும்

ஸயன்ஸுகளுக்கும் digest- ஆகும். இத்தனை ஸயன்ஸா நம் பூர்விகர்களுக்குத் தெரிந்திருந்தது? என்று அதைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். 'ப்ருஹத் ஜாதக'த்தில் ஜ்யோதிஷ விஷயங்கள் யாவும் உள்ளன.

ஆரியபடர் என்பவர் 'ஆரியபட ஸித்தாந்த'மென்று ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். இவரும் 1500 வருஷத்துக்கு முன்பு இருந்தவரே. இப்பொழுது வழங்கி வரும் வாக்கிய கணிதமானது 'ஆரியபட ஸித்தாந்த'த்தை அநுசரித்தது என்று சொல்லுவார்கள். வராஹமிஹிரரையும், ஆரியபடரையும் நம் கால mathematician களும் கொண்டாடுகிறார்கள்.

இவ்வளவு கணித சாஸ்திரங்களும் நக்ஷத்திரங்கள், ஒன்பது கிரஹங்கள் என்பவைகளின் கதியைப் பற்றியும் ஸ்திதியைப் பற்றியும் சொல்லுபவைகள். கிரஹங்கள் ஏழுதான். ராகு கேதுக்கள் நிழல். அதனால் அவைகளைச் சாயாக்கிரஹங்கள் என்று சொல்லுவார்கள். சூரியனுக்கும் சந்திரனுக்கும் நேர் விரோதமாக அவை ஓடும். அவைகளுக்குத் தனி கணனம் வேண்டாம். சூரிய சந்திரர்களுக்கான கணனத்தின் விபரீத (தலைகீழ்) கணனமே அவைகளுக்குரிய கணனமாகும்.
[கிரஹமும், நக்ஷத்திரமும்]

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

ஜ்யோதிஷம் : வேதத்தின் கண்

கிரஹமும், நக்ஷத்திரமும்

நக்ஷத்திரங்களுக்கும் க்ரஹங்களுக்கும் உள்ள வித்தியாஸம் என்ன? நம்முடைய ஸூர்யனைச் சுற்றி வருகிறவையே க்ரஹங்கள். ஸூர்ய மண்டலத்தைச் சேராதவை நக்ஷத்திரங்கள். நம்முடைய கண்ணுக்கு தெரிகிற அடையாளம் ஒன்று இருக்கிறது. வைரத்தை ஆட்டிக்கொண்டே இருந்தால் அது பளபளவென்று அசைந்து ஜ்வலித்துக் கொண்டே இருக்குமல்லவா? அதைப் போல நக்ஷத்திரங்கள் அசைவோடு ஜ்வலித்துக் கொண்டிருக்கும். கிரஹங்கள் அசையாமல் ஜ்வலிக்கும்.

சூரியனும் நக்ஷத்திரங்களுந்தான் ஸ்வயம் பிரகாசம் உடையவை. [அதாவது அவையே இயற்கையாகப் பிரகாசமுள்ளவை.] க்ரஹங்கள் இப்படிப்பட்ட இன்னொரு ஸ்வயம் பிரகாச வஸ்துவினால்தான் தாங்களும் பிரகாசிக்கின்றன. [அவற்றுக்கு இயற்கை ஒளி கிடையாது.] நக்ஷத்திரங்களில் பலவிதமான வர்ணங்களில் டால் அடிக்கும். பட்டை தீர்த்த வைரத்தில் நீலம், பச்சை, முதலிய நிறங்கள் ஜ்வலிப்பது போல அவை இருக்கும். க்ரஹங்களான குருவும் சுக்கிரனும் கொஞ்சம் பெரிய நக்ஷத்திரங்களைப் போல இருக்கும். ஆனால் அவற்றில் தளதளப்பு இராது. நக்ஷத்திரங்கள் தளதளவென்று இருக்கும். சூரியனும் அப்படித்தான் இருக்கும். சூரியனைக் கொஞ்சம் உற்று கவனிக்க ஆரம்பித்தால் சுற்றிலும் காணப்படுகின்ற பிசிர் போய்விடும். அப்புறம் கண்ணாடியில் தட்டையாகச் செய்யப்பட்ட ஒன்று ஜலத்தில் மிதப்பது போல் தளதளவென்று தோன்றும். அசைவு இருக்கும். சந்திரன் இந்த மாதிரி இருக்காது. ஸூர்யனுக்கு உள்ளே ஒளி அசைவு உள்ளது என்பதற்கு

ஒரு நிரூபணம் சொல்கிறேன். கூரையில் ஒரு துவாரம் வழியாக ஸூர்ய வெளிச்சம் வருகிறது. நிலாவும் வருகிறது. ஸூர்யனின் வெயிலானதால்தான் இந்தக் கதிர் ஆடுகிறதைப் பார்க்கிறோம். சந்திர கிரணம் அசையாமலே இருக்கும். மற்ற க்ரஹங்களும் சந்திரன் மாதிரியே. நக்ஷத்திரம் சிறியதாக இருந்தாலும் ஒளியிலே அசைவு இருக்கும். நக்ஷத்திரம் பெரியதாக இருந்தால் VIBGYOR என்று சொல்லப்படும் ஏழு நிறங்கள் இந்த அசைவில் தோன்றும் – வைரத்திலிருந்து கலர்கள் கொட்டுகிற மாதிரியே!

சூரியனுக்கு ஸப்தாச்வன் என்பது ஒரு பெயர். அவனுடைய தேரில் ஏழு (ஸப்த) குதிரைகள் (அச்வங்கள்) உண்டு என்று அர்த்தம் சொல்வார்கள். 'ஒரே அச்வந்தான், அதற்கு ஏழு பேர்கள் இருக்கின்றன' என்று சொல்வதும் உண்டு. 'அச்வம்' என்பதற்கே 'கிரணம்' என்று அர்த்தம் உண்டு. சூரியனுக்கு ஏழு தினுஸான வர்ணங்களை வெளிவிடும் கிரணங்கள் இருக்கின்றன என்பதுதான் தாத்பர்யம். ஒரே கிரணந்தான் ஏழு தினுசாகப் பிரிந்து கலர்களாகிறது. விப்ஜியார் என்பதும் அதுதான். ஒரே கிரணத்திற்குதான் ஏழுபேர் என்று ஸ்பஷ்டமாக வேதத்தின் தைத்திரீய ஆரண்யகத்திலேயே இருக்கிறது: ஏகோ அச்வோ வஹதி ஸப்தநாமா. ஒரே வெண்மைதானே refraction என்ற ஒளிச்சிதறலில் ஏழு வர்ணமாகிறது?

நக்ஷத்திரமே ஸ்வயம் பிரகாசமுடையது. கிரஹமானது வேறு ஒன்றிடமிருந்து ஒளியைக் கடன் வாங்கிக் கொள்கிறது – சந்திரன் ஸூர்யனிடமிருந்து வாங்கிக் கொள்கிறது போல!

நக்ஷத்திர ஒளி அசைவதால்தான் "அது கண்ணைச் சிமிட்டுகிறது"; Twinkle twinkle little star" - என்பது. கிரஹங்கள் கண்ணைச் சிமிட்டின என்று யாராவது எழுதினால் தப்பு.

நக்ஷத்திரங்கள் கிழக்கே உதயமாகி மேற்கே அஸ்தமிக்கும். கிரஹங்களும் மேற்கே போகும். ஆனால் நித்தியம் கொஞ்சம் கிழக்கே நகர்ந்துகொண்டே போகும். கிழக்கே ஓடும் ரயிலுக்குள் ஒருத்தன் மேற்கே நடக்கிறதுபோல், ஏழு கிரஹங்களும் கிழக்கே நகர்ந்து கொண்டே போகும். இவற்றின் ஸ்திதிகளை ஜ்யோதிஷ சாஸ்திரம் சொல்லுகிறது.

கிரஹங்களும் மனித வாழ்வும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

ஜ்யோதிஷம் : வேதத்தின் கண்

கிரஹங்களும் மனித வாழ்வும்

பிரபஞ்சத்தில் நவக்ரஹங்களின் ஸ்திதிகளைப் போலவே மனிதர்களுடைய ஸ்திதியும் மாறிக்கொண்டே வருகிறது. கஷ்டம், சௌக்கியம், துக்கம், ஸந்தோஷம், உன்னத பதவி, தாழ்ந்த பதவி என்று இப்படி எல்லோருடைய ஸ்திதியும் மாறி வருகிறது. இப்படி மாறிக் கொண்டே இருப்பவன் மனிதன் மட்டும் அல்லன். ஸ்தாபனங்களுக்கும் அப்படியே. தேசங்களுக்கும் உயர்ந்த காலம், தாழ்ந்த காலம் என்று வருகிறது.

லோகத்தில் நடக்கும் ஸுகதுக்கங்களுக்கும் கிரஹங்களுக்கும் ஸம்பந்தம் உண்டென்று கண்டு

மஹரிஷிகள் இன்ன இன்ன மாதிரி கிரஹங்கள் இருந்தால் இன்ன இன்ன பலன் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு காரியம் ஆரம்பித்தால், அதன் ஆரம்பகால கிரஹரீதிகளைக் கொண்டு, மேலே நடக்கும் ஸுகதுக்கப் பலன்களைச் சொல்லும் பாகத்திற்கு "ஹோரா ஸ்கந்தம்" என்று பெயர். ஜனன காலத்தை ஆரம்பமாக வைத்துக் கொண்டு ஜாதகம் கணித்து வாழ்நாள் முழுவதற்கும் சுகதுக்க பலன்களைச் சொல்லிவிடலாம்.

சுகதுக்க பலன்களுக்குக் காரணம் பலவிதமாகச் சொல்லப்படுகிறது. இது பலபேர் ஒரே வியாதிக்கு வெவ்வேறு காரணம் சொல்கிற மாதிரிதான். வைத்தியர்கள் தாது வித்யாசத்தால் இந்த வியாதி உண்டாயிற்றென்று சொல்கிறார்கள். மந்திரவாதி தெய்வக் கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறான். ஜ்யோதிஷன் கிரஹ கதியால் அது வந்தது என்கிறான். தர்ம சாஸ்திரமோ பூர்வ கர்ம பலன் என்று சொல்லுகிறது! உணர்ச்சி மாறுதல்களாலேயே தேக ஸ்திதியும் மாறிவிடுகிறது என்று மனோ தத்துவ நிபுணர்கள் சொல்லுகிறார்கள்! இப்படி ஒன்றுக்கே பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. உண்மையில், கிரஹ கதியால் வருகிறதா? தாதுக்களால் வருகிறதா? மனத்தின் சலனத்தால் வருகிறதா? மற்றவைகளால் வருகிறதா?

இவற்றில் ஒன்றும் பொய்யில்லை. எல்லாம் காரணங்களே. எல்லாம் ஒன்றின் அடையாளங்களே. நாம் தெரிந்து கொள்ளுவதற்காக இப்படிப் பலவகையிலும் காரணங்கள் ஏற்பட்டு ஒன்றாகக்கூடி அநுபவத்தைக்

கொடுக்கின்றன. ஒவ்வொருவர் ஒவ்வொரு காரணத்தை எடுத்துக் கொள்கிறார்கள். மழை பெய்தால் ஈரம் உண்டாகிறது; ஈசல் உண்டாகிறது; தவளை கத்துகிறது. இவ்வளவும் மழை பெய்ததற்கு அடையாளங்கள். அதுபோல் நம் பூர்வ கர்மாவின் பலன் உண்டானதற்கு அநேக அடையாளங்கள் அமைகின்றன. ஒவ்வொன்றும் அதற்கு அடையாளந்தான். எல்லாவற்றிற்கும் ஸம்பந்தம் உண்டு. கர்மாவை அநுஸரித்து கிரஹகதி ஏற்படுகிறது, வியாதி ஏற்படுகிறது, மனசஞ்சலம் உண்டாகிறது, பிசாசாதிகளின் பீடை உண்டாகிறது. எல்லாம் ஒரு கர்மாவின் பலனாகவே உண்டாகின்றன. ஒவ்வொரு வழியிலும் தெரிந்து கொள்ளலாம். இவற்றில் க்ரஹரீதியாக உள்ள பலன்களைத் தெரிந்து கொள்ள கணக்கு மிகவும் உபயோகமாக இருக்கிறது.

சகுனம், நிமித்தம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

ஜ்யோதிஷம் : வேதத்தின் கண்

சகுனம், நிமித்தம்

ஜ்யோதிஷ சாஸ்திரத்தில், "ஸம்ஹிதா ஸ்கந்தம்" என்று ஒரு பிரிவு இருக்கிறது என்றேனல்லவா? ஜலம் எங்கே ஓடுகிறது? பூமிக்குள் நதி under-current ஆக எங்கெங்கே போகிறது. உள்ளே ஜலம் இருப்பதற்கு மேலே என்ன என்ன அடையாளம் இருக்கும்?- என்பவைகளைப் போன்ற பல விஷயங்கள் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன. வாசனைத் திரவியங்கள் செய்யும் விதம், வீடு கட்டும்

அளவு, சகுன சாஸ்திரம், நிமித்த சாஸ்திரம் முதலிய எல்லாம் இந்த ஸம்ஹிதையில் சொல்லப்படும்.

சகுனம் வேறு, நிமித்தம் வேறு. நிமித்தம் என்பதுதான் வரப்போவதை ஏதோ ஒரு தினுஸில் அடையாளம் காட்டுவதற்குப் பொதுப் பெயர். அதில் ஒரு வகையே சகுனம். சகுனம் என்பதற்கு 'பக்ஷி' என்பது அர்த்தம். பக்ஷிகளால் ஏற்படும் நிமித்தங்களுக்குத்தான் சகுனம் என்று பெயர். உலகத்தில் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாத வஸ்து ஒன்றும் இல்லை. நடக்கும் காரியங்களும் அப்படியே. ஸரியான கணக்குத் தெரிந்தால் எல்லாம் தெரிந்து கொள்ளலாம். உலகத்தில் நடப்பவை எல்லாம் ஒரே ஒருவருடைய ஆக்ஞையால்தான் நடக்கின்றன; ஒரே கணக்காக நடக்கின்றன. அதனால் ஒரு காரியத்தைக் கொண்டு மற்ற எல்லாவற்றையும் கண்டு பிடிக்கலாம். கை ரேகை, ஆரூடம், க்ரஹநிலை முதலிய எல்லாம் ஒன்றுக்கொன்று ஸம்பந்தம் உடையனவாகவே இருக்கின்றன. எல்லாம் நிஜம்தான். இவற்றில் ஒன்றே நிமித்தம். அதில் ஒரு அங்கமே சகுனம்.

ஒரு பக்ஷி வலமிருந்து இடம்போனால் இன்ன பலன்; இன்ன பக்ஷி கத்தினால் இன்ன விளைவு ஏற்படும் என்று சகுன சாஸ்திரம் கூறும்.

'நிமித்தம்' என்பதிலேயே, நாம் 'சகுனம் பார்ப்பது' என்று சொல்வதிலுள்ள மற்ற எல்லாம் வரும். Omen என்று பொதுவாகச் சொல்வது நிமித்தம்தான். [கீதை ஆரம்பத்தில்] " நிமித்தானி ச பச்யாமி விபரீதானி கேசவ" என்று யுத்தம் ஆரம்பிக்குமுன் அர்ஜுனன் பகவானிடம்

சொல்கிறான். 'கெட்ட சகுனங்களைப் பார்க்கிறேன்' என்று நாம் சொல்வதைத்தான், 'விபரீதமான நிமித்தங்களைப் பார்க்கிறேன்' என்கிறான். அவன் 'நிமித்தம்' என்பதுதான் சரி. நாம் சகுனம் என்பதே நல்லது அல்லது கெட்டதற்குச் சூசகமான பொதுப்பெயர் என்று நினைப்பது தப்பு. இந்த சூசகங்களில் பக்ஷிகளால் விளைவது மட்டுமே சகுனம். ஒரு பூனை குறுக்கே போனால் அது நிமித்தம். கருடன் குறுக்கே போனால் அது சகுனம்.

பிற்பாடு பகவானும் அர்ஜுனனிடம் 'நிமித்த'த்தைப் பற்றிச் சொல்கிறார். "நிமித்த மாத்ரம் பவ ஸவ்யஸாசின்" [XI.33.] "சத்ருக்களை வதைப்பதாவது, அதனால் பாவம் வருமே!" என்று அழுத அர்ஜுனனிடம், "இந்த யுத்தத்தில் இவர்களை வதைப்பதாக நான் ஏற்கெனவே ஸங்கல்பம் பண்ணியாகிவிட்டது. அதனால் இவர்கள் இப்போதே செத்துப்போனவர்கள்தான். இவர்களைக் கொல்பவன் நான் தான். நீ வெறும் கருவி மாத்திரமாக இரு" என்று பகவான் சொல்கிறபோது, 'நிமித்த மாத்ரம் பவ' என்கிறார்.

அதனால் நிமித்தம் என்பது அதுவே பலனை உண்டாக்குவதில்லை; இன்னொன்று நிச்சயம் பண்ணிவிட்ட பலனை இது வெளிப்படத் தெரிவிக்கிறது என்றே ஆகிறது. இதே போல, நம்முடைய பூர்வகர்ம பலனைத்தான் நிமித்தங்கள் யாவும் தெரிவிக்கின்றன.

சுருக்கமாகச் சொன்னால், மூன்று ஸ்கந்தங்களில் பொதுவாக கணிதத்தையும் கிரஹகதிகளையும் சொல்லுவது 'ஸித்தாந்தம்'. தனித்தனியாக மனிதனுடைய ஸுகதுக்க பலனைச் சொல்லுவது 'ஹோரை' அல்லது

ஜாதகம். 'ஹோரா'விலிருந்துதான் ஜாதகமே 'ஹாரஸ்கோப்' எனப்படுகிறது. மிச்சம் உள்ளவை எல்லாம் 'ஸம்ஹிதை'.

புராதன நூல்களில் நவீனக் கண்டுபிடிப்புக்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

ஜ்யோதிஷம் : வேதத்தின் கண்

புராதன நூல்களில் நவீனக் கண்டுபிடிப்புக்கள்

வராஹமிஹிரர் "ப்ருஹத் ஸம்ஹிதை' என்று ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார் என்றேனல்லவா? அதில் இல்லாத விஞ்ஞானக் கண்டுபிடிப்பு இல்லை.

வெறும் ஆகாசத்தில் இந்தக் கிரஹங்களெல்லாம் இருக்கின்றனவே. விழாமல் எப்படி நிற்கின்றன? இதற்குக் காரணத்தை நியூடன் என்பவர்தாம் கண்டுபிடித்தார் என்று எல்லோரும் நினைக்கிறார்கள். மிகப் பழைய காலத்தில் உண்டான சூரிய சித்தாந்தத்தின் ஆரம்பத்தில் இருக்கிற ச்லோகமே, பூமி விழாமல் இருப்பதற்கு ஆகர்ஷண சக்தி காரணம் என்று சொல்லுகிறது. நம் பகவத்பாதாளின் உபநிஷத் பாஷ்யத்திலும் பூமிக்கு ஆகர்ஷண சக்தி இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வஸ்துவை நாம் மேலே வீசி எறிந்தால் அது மறுபடியும் கீழே வந்து விழுகிறது. அப்படி விழுவது அதனுடைய ஸ்வபாவகுணம் அல்ல. அது பூமியில் விழுவதற்குக் காரணம் பூமியின் ஆகர்ஷண சக்தியே. ஆகர்ஷண சக்தி யென்றால் இழுக்கும் சக்தி என்பது அர்த்தம். பிராணன் மேலே போகும்; அபானன் அதைக் கீழே இழுக்கிறது.

ஆகவே, கீழே இழுக்கிற சக்திக்கு அபானசக்தி என்று பெயர். ஸ்ரீ ஆசார்யரவர்கள் பிருதிவிக்கு அபானசக்தி, அதாவது ஆகர்ஷண சக்தி, இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். ப்ரச்நோபநிஷத்தில் (III.8.) "ப்ருதிவியின் தேவதையே மநுஷ்ய சரீரத்தில் அபானனை இயக்குகிறது" என்று வருகிறது. அதன் பாஷ்யத்தில் ஆசார்யாள், மேலே போட்ட பொருளை பூமி ஆகர்ஷிக்கிற மாதிரி, மேலே போகிற பிராணனை அபானம் கீழே இழுப்பதைப் பற்றிச் சொல்கிறார். இதனால் உபநிஷத்திலேயே Law of Gravitation பேசப்படுவதாக ஆகிறது. இவைகளைப் போன்ற பல அருமையான விஷயங்கள் நம்முடைய சாஸ்திரங்களில் இருக்கின்றன. நமக்கு இவைகள் தெரியாததனால் தேசாந்திரத்தில் உள்ளவர்கள் நமக்கு எவ்வளவோ காலம் பிற்பட்டு எழுதியவைகளுக்கு அளவில்லாத கௌரவத்தைக் கொடுக்கிறோம்.

இப்பொழுது எவ்வளவு விதமான கணக்குகள் லோகத்தில் இருக்கின்றனவோ அவ்வளவு கணக்குகளும் எவ்வளவோ வருஷங்களுக்கு முன்பே உண்டான நம்முடைய ஜ்யோதிஷ சாஸ்திரங்களில் இருக்கின்றன.

[ஸ்ருஷ்டி தொடக்கமான] கல்பாரம்பத்தில் எல்லாக் கிரஹங்களும் ஒரே நேராக இருந்தன. அப்புறம் காலம் ஆக ஆக அவை கொஞ்சங் கொஞ்சமாக மாறிக் கொண்டே வருகின்றன. மற்றொரு கல்பாரம்பத்தில் மறுபடியும் நேராக வந்துவிடும்.

நாம் செய்யும் கர்மாக்களில் முதலில் சொல்லும் ஸங்கல்பத்தில பிரபஞ்ச வர்ணனை, கால அளவை

என்றெல்லாம் சொல்லப்படுகிற அவ்வளவும் ஜ்யோதிஷ விஷயந்தான்.

பூ ஆகர்ஷணம் மட்டுமில்லை, பூமி சுற்றுவதையும்கூட ஆர்யபடர், வராஹமிஹிரர் முதலானவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'பூமிதான் நம் பிரபஞ்சத்துக்கு மத்தியாக நின்ற இடத்தில் நின்று கொண்டிருக்கிறது. ஸூர்யனே அதைச் சுற்றி வருகிறான். அதனால்தான் இரவு பகல் உண்டாயிருக்கின்றன' என்றே மேல் நாட்டுக்காரர்கள் பதினாறாம் நூற்றாண்டுவரை நினைத்து வந்தார்கள். இதற்குக் கொஞ்சம் மாறாக யாராவது ஆராய்ச்சி பண்ணிச் சொன்னால், அவரை மதகுருமார்கள் stake என்ற கம்பத்தில் கட்டி நெருப்பை வைத்துக் கொளுத்தினார்கள்! ஆனால் ரொம்பவும் பூர்வ காலத்திலேயே நமக்கு இந்த விஷயங்கள் தெரிந்திருந்தன.

பூமிதான் ஸூர்யனைச் சுற்றுகிறது, ஸூர்யன் பூமியைச் சுற்றுவதில்லை என்பதற்கு, ஆர்யபடர் ரொம்ப அழகாக ஒரு பேர் கொடுத்திருக்கிறார். அதற்கு 'லாகவ – கௌரவ நியாயம்' என்று பேர். லகு என்றால் லேசானது, சின்னது என்று அர்த்தம். 'லகு'வைக் குறிப்பது 'லாகவம்'. 'லேசாக', 'லைட்'டாக ஒன்றை எடுத்துக் கொண்டு செய்வதைத்தான் 'கை லாகவம்', 'ஹஸ்த லாகவம்' என்கிறோம். லகுவுக்கு ஆப்போஸிட் (எதிர்ப்பதம்) குரு. கனமானது, பெரியது எதுவோ அதுவே குரு. மஹாகனம் பொருந்தியவர், கனவான், பெரியவர்கள் எனப்படுகிறவரே குரு. அவர்தான் ஆசாரியர். ஆசாரியர் குரு என்றால், அப்போது சிஷ்யன்தான் லகு. குருவான ஆசாரியரைத்தானே லகுவான சிஷ்யன் பிரதக்ஷிணம் பண்ணுகிறான்? அதாவது

சுற்றிச் சுற்றி வருகிறான்? ஆசாரியர் சிஷ்ய பிரதக்ஷிணம் பண்ணுவாரா? மாட்டார். நம் பிரபஞ்சத்தில் (solar system -லே) பெரியது, குருவானது ஸூர்யன் தான்; லகு பூமி. குருவைத்தான் லகு பிரதக்ஷிணம் செய்யும் என்பதே 'லாகவ–கௌரவ நியாயம்'! இதன்படி பூமிதான் ஸூர்யனைச் சுற்ற வேண்டும். இப்படிப் பிரபஞ்சத்தை குரு – சிஷ்ய கிரமமாக பார்த்து சாஸ்திரமாகவும் ஸயன்ஸாகவும் ஆர்யபடர் சொல்லியிருக்கிறார்.

இப்போது நாம் எந்த மதஸ்தர்கள் விஞ்ஞான சாஸ்திரம் வளர முடியாதபடி விஞ்ஞானிகளை 'ஹெரிடிக்' என்று சொல்லிக் கொளுத்தினார்களோ, அதே மதஸ்தர்களோடு சேர்ந்துகொண்டு, "இந்தியாவில் ஸயன்ஸ் வளராததற்கு காரணம் ஹிந்து மதம்தான். பரலோகம், பரலோகம் என்று சொல்லிக்கொண்டு ஹிந்து மதம் இந்த லோகத்து விஷயங்களையெல்லாம் அலக்ஷயம் செய்துவிட்டது" என்று குற்றம் சொல்கிறோம்! வாஸ்தவத்தில் அத்தனை ஸயன்ஸுகளும் நம் சாஸ்திரங்களிலே இருக்கின்றன.

ஸூர்யன் இருந்தபடிதான் இருக்கிறது; பூமிதான் அதைச் சுற்றி வருகிறது; பூமி சுற்றுவதால்தான் ஸூர்யன் உதிப்பதாகவும் அஸ்தமிப்பதாகவும் தோன்றுகிறதேயன்றி வாஸ்தவத்தில் ஸூர்யன் பூமியின் கிழக்கே தினம் தினம் உதித்து அப்புறம் மேற்கே நகர்ந்துகொண்டேபோய் அஸ்தமிக்கவில்லை என்ற விஷயம் ரிக்வேதத்திலுள்ள ஐதரேய பிராம்மணத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. "ஸூர்யன் உதிப்பதும் இல்லை; அஸ்தமிப்பதும் இல்லை" என்று அதிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறது

பூமி சுற்றுகிற விஷயம் வித்வான்கள் எல்லோருக்கும் தெரிந்திருந்த விஷயம் என்பதற்குத் திருமலை நாயகரிடம் மந்திரியாக இருந்த நீலகண்ட தீக்ஷிதரின், "சிவோத்கர்ஷ மஞ்ஜரி"யில் ஆதாரம் இருக்கிறது. 'பூமிர் ப்ராமயதி' என்றே இதில் கடைசி சுலோகம் ஆரம்பிக்கிறது. அந்த ச்லோகத்திலிருந்து, நீலகண்ட தீக்ஷிதருக்குப் பெரிய பாட்டனாரான அப்பய தீக்ஷிதருக்கும் பூமி சுற்றும் விஷயம் தெரியும் என்பது தெரிகிறது. [அந்த] ச்லோகத்தில் என்ன சொல்லியிருக்கிறது?

ஈச்வரனுக்கு அஷ்டமூர்த்தி என்பது ஒரு பெயர். பூமி, ஜலம், வாயு, அக்னி, ஆகாசம், ஸூர்யன், சந்திரன் (யாகம் செய்கிறவனான) யஜமானன் ஆகிய இந்த எட்டும் ஈச்வரனுடைய மூர்த்திகள். இவற்றிலே யஜமானன் ஒருத்தனுக்கு மட்டும் ப்ரமணம் (சுற்றுதல்) இல்லை. பாக்கி ஏழும் ப்ரமணம் உடையவையே என்று அப்பய தீஷிதர் சொல்லியிருக்கிறார். அப்படி அவர் சொல்லியிருக்கிறார் என்பதை அவருடைய தம்பி பேரரான நீலகண்ட தீக்ஷிதர் இந்த ச்லோகத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

காற்று நின்ற இடத்தில் நிற்காமல் சுற்றுவதும், நெருப்பும் கொஞ்சம்கூட ஸ்டெடியாக இல்லாமல் அசைந்து ஆடுவதும், ஜலமும் இப்படியே ஒரு இடமாக இருக்க முடியாமல் ஓடுவதும் நம் கண்ணுக்கே தெரிவதுதான். ஆகாசத்தைப் பார்க்கும் போது ஸூர்ய – சந்திரர்கள் சுற்றுவது தெரிகிறது. ஆகாசத்திலேதான் ஸகல ஸப்தங்களும் இருக்கின்றன. சலனம்தான் சப்தமூலம் என்பதால் அந்த ஆகாசமும் ப்ரமணமுடையது என்று

தெரிகிறது. ஆனால் பூமியைப் பார்த்தால் அது, போட்டது போட்டபடி இருக்கிற மாதிரித்தானே தெரிகிறது? இப்படித் தெரிந்தாலும், அதுவும் சுற்றுகிற ஏழில் ஒன்று என்றே அப்பைய தீக்ஷிதர் கருதியிருக்கிறார். "பூமிர் ப்ராமயதி" என்று ச்லோகம் ஆரம்பிப்பது பூமியின் சுழற்சியைத் தான் சொல்கிறது.

பூமியின் ஆகர்ஷணம், சுற்றுவது முதலியன இருக்கட்டும். பூமியின் ரூபத்தையே பார்க்கலாம். வெள்ளைக்காரர்கள் என்ன சொல்கிறார்கள்? 'பூமி தட்டையாகத் தோசைக்கல் மாதிரி இருக்கிறது என்றுதான் பழங்காலத்தில் நினைத்தார்கள். அது தட்டையாக இல்லை, பந்து மாதிரி உருண்டையாக இருக்கிறது என்று நாங்கள்தான் ஸமீப நூற்றாண்டுகளில் கண்டுபிடித்தோம்' என்கிறார்கள். ஸரி, 'ஜாகரஃபி'க்குப் பேர் என்ன சொல்கிறோம்? 'பூகோள சாஸ்திரம்' என்கிறோம். 'பூசாஸ்திரம்' என்று சொன்னாலே போதும். ஆனாலும் பூமியானது கோளமாக, அதாவது உருண்டையாக இருப்பது நமக்கு ஆதிகாலத்திலிருந்தே தெரியும் என்று தெரிவிப்பதாகத்தான் 'பூகோளம்' என்று சொல்லியிருக்கிறது.

Universe எனப்படும் ஸகல நக்ஷத்ர லோகங்களும் உட்பட்ட பிரபஞ்சத்தை 'ப்ரம்மாண்டம்' என்கிறோம். 'பிரம்மனால் படைக்கப்பட்ட அண்டம்' இது. அண்டம் என்றால் என்ன தெரியுமா? கோழி முட்டை. கோழி முட்டை திட்டமான உருண்டையாக இருப்பதல்ல. ஒரு உருண்டையின் ஓரங்களைத் தட்டிவிட்ட மாதிரி நீளவட்டத்தில் கனபரிமானம் உள்ளதாக முட்டை இருக்கிறது. நவீன விஞ்ஞானத்திலும் Universe என்பது உருண்டையாக (spherical)

இல்லை; முட்டை மாதிரி oval வடிவத்தில் கனபரிமாணமுள்ளதாக elliptical -ஆகவே இருக்கிறது என்கிறார்கள்.

இந்தப் பிரபஞ்சம் முழுக்க நகர்ந்து கொண்டேதான் இருக்கிறது என்ற மாடர்ன் அஸ்ட்ரானமியில் சொல்கிறார்களென்றால் வேதகாலத்திலிருந்து நாம் இதற்குத் தந்திருக்கிற பேரே இந்த உண்மையைத்தான் சொல்கிறது. 'ஜகத்', 'ஜகத்' என்றே நாம் சொல்கிறோம். 'ஜகத்' என்றால் நின்ற இடத்தில் நிற்காமல் போய்க்கொண்டேயிருப்பது என்றுதான் அர்த்தம் .

பூமி சுற்றுகிறது என்ற வாதத்தை ஆக்ஷேபித்தவர்களும் நம்மவர்களில் சிலர் இருந்துதான் இருக்கிறார்கள். அவர்களில் ஒரு சாராருடைய அபிப்பிராயத்தைச் சொல்கிறேன்: பூமியின் சுற்றளவு (circumference) சுமார் இருபத்தையாயிரம் மைல். அதனால் ஒரு நாளில் (24 மணிகளில்) பூமி ஒரு தடவை தன்னைத்தானே சுற்றிக் கொள்கிறது என்றால், அது மணிக்கு ஆயிரம் மைல் சுற்றுகிறது என்று அர்த்தம். அப்படியென்றால், ஒரு நிமிஷத்தில் அது பதினாறு அல்லது பதினேழு மைல் சுற்றுகிறது. அதாவது, பூமி சுற்றிக் கொண்டேயிருப்பதால் இந்த நிமிஷத்தில் இந்த மயிலாப்பூர் இருக்கிற இடத்தில், அடுத்த நிமிஷம் இங்கேயிருந்து பதினேழு மைலில் இருக்கிற ஒரு ஊரோ, சமுத்ரமோ வந்தாக வேண்டும். இந்த நிமிஷத்திலே இந்த மயிலாப்பூரில் உட்கார்ந்து கொண்டிருக்கிற காக்காய் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழும்பி ஆகாசத்தில் நேரே போகிறது. அடுத்த நிமிஷம் அது கீழே வருகிறது. முன்னே எங்கே உட்கார்ந்திருந்ததோ

அதே மயிலாப்பூர் மரத்தில் அல்லது மாடியில் வந்து உட்காருகிறது. பூமி சுற்றுவது நிஜமானால் இது எப்படி ஸாத்தியமாக இருக்க முடியும்? அது மேலே எழும்பின ஒரு நிமிஷத்தில் கீழே இருக்கிற பூமி சுற்றுகிற சுற்றில் மயிலாப்பூர் இருக்கிற இடம் நகர்ந்து பதினேழு மைலுக்கு அந்தண்டை உள்ள இடமல்லவா இங்கே வந்திருக்க வேண்டும்? - இப்படிக் கேட்கிறார் பூப்ரமண ஸித்தாந்தத்தை ஆக்ஷேபிக்கிறவர்.

இதற்கு மேற்படி ஸித்தாந்திகள் என்ன பதில் சொல்கிறார்கள் என்று நான் பார்க்கவில்லை. ஆனால் நவீன விஞ்ஞானம் படித்தவர்களைக் கேட்டபோது, "பூமியைச் சுற்றி சுமார் 200 மைலுக்கு atmosphere என்ற காற்று மண்டலம் இருக்கிறது; அதற்கப்புறமும் உறைகள் மாதிரிச் சில மண்டலங்கள் இருக்கின்றன; இவையும் பூமியோடு கூடவே சுற்றி வருகின்றன" என்று விளக்குகிறார்கள். நான் இப்போது சொன்னதில் கொஞ்சம் பிசகு இருந்தாலும் இருக்கலாம். அதெப்படியானாலும், பூமி மட்டுமன்றி அதன் அட்மாஸ்ஃபியரும் அதோடுகூட சுற்றுகிறது என்பதில் சந்தேகமில்லை.

Arabic Numeral என்று சொல்கிற 1,2,3,4 இலக்கங்களக்கு இந்தியாதான் மூலமான தாய்வீடு என்று, இப்போது மேல் நாட்டினர் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஸைஃபர் என்பதே இந்தியாவிலிருந்து வந்ததுதான் என்று மேல்நாட்டு அறிஞர்கள் சொல்கிறார்கள். இது தெரிய வந்ததால்தான் கணித சாஸ்திரம் பூரண ரூபம் பெற முடிந்தது என்கிறார்கள்.

ஸை:ஃபர் வந்தது மட்டுமில்லை, எந்த இலக்கத்தை ஸை:ஃபரால் வகுத்தாலும் infinity (அனந்தம்) வருகிறது என்ற சூக்ஷமமான கணித உண்மையையும் பாஸ்கராசாரியார் சொல்லி அதைப் பரமாத்ம தத்வத்தோடு சேர்த்துத் தம் கணித சாஸ்திரத்தின் மங்கள ச்லோகமாகக் கூறுகிறார்.

வகுக்கும் எண் (divisor) சின்னதாக ஆக ஆக ஈவு (quotient) பெரிதாகும் அல்லவா? பதினாறை எட்டால் வகுத்தால் (அதாவது வகுக்கும் எண் எட்டாக இருந்தால்) ஈவு 2; வகுக்கும் எண் நாலானால் ஈவு 4; இரண்டானால் ஈவு 8 ஆகிறது. ஸை:ஃபராலேயே வகுத்து விட்டால்? அப்போது ஈவானது எண்ணிக்கையாலேயே குறிப்பிட முடியாத அனந்தமாகிவிடுகிறது; infinity ஆகி விடுகிறது. வகுபடும் எண் எதுவானாலும் சரி, அதை வகுக்கிற எண் ஸை:ஃபரானால் ஈவு அனந்தம். இதற்கு கஹரம் என்று பாஸ்கராச்சாரியர் பேர் கொடுத்திருக்கிறார். 'கம்' (Kham) என்றால் ஸை:ஃபர்; 'ஹரம்' என்றால் வகுத்தல், 'இப்படி அனந்தமாக இருக்கிற பரமாத்மாவை நமஸ்கரிக்கிறேன்' என்று தம்முடைய கணித சாஸ்திரத்தில் அவர் சொல்கிறார்.

மூடநம்பிக்கையல்ல; ஆதார பூர்வமான உண்மைகளே !

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

ஜ்யோதிஷம் : வேதத்தின் கண்

மூடநம்பிக்கையல்ல;

ஆதார பூர்வமான உண்மைகளே !

"ஹிந்து சாஸ்திரங்களில் ஒரே நான்ஸென்ஸாக விஷயங்கள் இருக்கின்றன. பூமிக்கு வடக்கே மேரு சிகரம் இருக்கிறதாம். அங்கே உள்ள தேவர்களுக்கு நம்முடைய ஒரு வருஷம் ஒரு நாளாகி விடுகிறதாம். அந்த மேருவை ஸூர்யன் சுற்றுகிறானாம். உப்பு ஸமுத்திரம் மட்டுமில்லாமல் இக்ஷு (கருப்பஞ்சாற்று) ஸமுத்ரம், க்ஷீர ஸமுத்ரம் (பாற்கடல்) என்று ஏழு விதமான ஸமுத்ரங்கள் இருக்கின்றனவாம். ஐந்து கண்டங்களாகவே பிரிந்துள்ள உலகத்தை ஏழு தீவு கொண்டது ('ஸப்த த்வீபா') என்று வேறு சொல்கிறார்கள். எல்லாம் ஒரே பேத்தல்" என்று பரிஹாஸம் பண்ணுகிறார்கள்.

இருக்கட்டும். இந்த ஸமுத்ரம் ஏன் இத்தனை உப்புக் கரிக்க வேண்டும்? யார் அதிலே இவ்வளவு உப்பைக் கொட்டினது? இதே மாதிரி தித்திப்பு, பாலின் சுவை முதலி உள்ள கடல்களில் ஏன் இருந்திருக்க முடியாது?

சரி, ஸப்த த்வீபா என்றும் ஸப்த ஸாகரம் என்றும் சொல்வது தப்பு என்கிறார்களே, இவற்றைச் சொல்கிற சாஸ்திரத்தில் பூமியின் பொஸிஷனைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறது? 'பூமியின் வடகோடியிலே மேரு இருக்கிறது. அதற்கு நேர் எதிரே த்ருவ நக்ஷத்திரம் இருக்கிறது' என்று சொல்லியிருக்கிறது.

வடகோடிதான் North pole (வட துருவம்) என்று வைத்துக் கொள்ளலாம். இப்போது த்ருவ (துருவ) நக்ஷத்ரம் இதற்கு நேரேயா இருக்கிறது என்று பார்த்தால், அப்படியில்லை. Pole -க்கு 'த்ருவம்' என்ற பெயரே அந்த நக்ஷத்திரத்தின் பெயரை வைத்துத்தான். ஆனாலும் இப்போது அதற்கு நேரே 'போல்'

இல்லை. "ஆதியில் நேரேதான் இருந்தது. அப்புறம் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுப் பூமி கொஞ்சம் சாய்ந்து விட்டது" என்று நவீன ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். நேரே சுற்றும் பம்பரமாக த்ருவ நக்ஷத்ரத்தை நேரே நோக்கிய நிலையில் பூமி சுற்றிய காலத்தைச் சொல்கிற சாஸ்திரம் அப்போது இருந்த ஏழு தீவுகளையும் ஏழு கடல்களையும் சொல்கிறது. பம்பரம் சுற்றுவதில் கோணல் ஏற்பட்ட போது, ஸப்த சமுத்ரங்களும் கலந்து உப்பாகிவிட்டது என்கிறேன். அந்த வெள்ளத்தில் ஸ்பத த்வீபங்கள் ஐந்து கண்டங்களாக மாறிவிட்டன என்கிறேன்.

நம்முடைய வட துருவத்தின் மேலே ஒரு ஸ்தானம் இருக்கிறது என்றால், அதுதான் ஸ்வர்க்கம் இருக்கிற மேரு. இந்த பூலோகம் ஒரு எலுமிச்சம் பழம் என்று வைத்துக் கொண்டால் அதன் உச்சியில் உள்ள புள்ளி மேரு சிகரம். அந்த உச்சிக்கு எந்தப்பக்கமும் தெற்குதான். உச்சியான அந்த பாயின்டிலிருந்து கிழக்கேயோ, மேற்கேயோ, வடக்கேயோ, எங்கே போவது? எங்கேயும் போகமுடியாது. கீழே தெற்கில் இறங்குகிறது தவிர வேறு திசையே இல்லை. எலுமிச்சம் பழத்தின் உச்சியில் ஒரு பாயிண்டை வைத்துப் பார்த்தால் இது தெரியும். பூமியில் உள்ள எல்லாத் தேசங்களுக்கும் (வர்ஷங்களுக்கும்) வடக்கு மேருதான். ஸர்வேஷாமபி வர்ஷாணாம் மேரு: உத்தரத ஸ்தித: என்றதன் அர்த்தம் இதுதான்.

துருவத்திலே எப்படியிருக்கிறது? அங்கே ஆறுமாஸம் முழுவதும் பகலாகவும், ஆறு மாஸம் முழுவதும் இரவாகவும் இருக்கிறது. இதை ஆரம்ப கிளாஸிலேயே படித்திருக்கிறோமே! ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்தது

ஒரு நாள் என்கிறபடி, ஆறுமாஸம் பகலாகவும் ஆறு மாஸம் இரவாகவும் உள்ள துருவதற்கு நம்முடைய ஒரு வருஷம் ஒரு நாளாகிறது. இதைத்தான் தேவர்களுடைய ஒரு தினம் நமக்கு ஒரு வருஷம் என்பது.

பூமி சுற்றும்போது அதன் பக்கவாட்டிலிலுள்ள ஸகல பாகங்களும் சுற்றினாலும், உச்சிப் பாயின்டும், இதே மாதிரி அடியில் தென்துருவத்தில் உள்ள பாயின்டும் சுற்ற முடியாது. சுற்ற முடியாத அளவுக்குச் சின்னதுதானே பாயின்ட்? சுற்றுவதினாலேதான் மற்றப் பகுதிகளில் சூரிய சந்திரனோடு தினந்தினமும் பல கோணங்களில் சம்பந்தப்பட்டு ஓரிடத்தில் பதினெட்டு மணி வெய்யில் அடிக்கிறது; ஆறு மணி அளவே ராத்திரியாயிருக்கிறது. அதற்கு நேர் எதிரே ஓரிடத்தில் ஆறே மணி வெய்யிலாகவும் பதினெட்டு மணி ராத்திரியாகவும் இருக்கிறது. இரவு பகலில் பூமியின் பல பாகங்களுக்கிடையில் ஏகப்பட்ட கால வித்யாஸம் இருக்கிறது. சில நாட்களில் மட்டுமே சூரியன் நேர்கிழக்காக உதிக்கிறான்; தலைக்கு நேரே ஒரு டிகிரிக்கூடத் தப்பாமல் வருகிறான்; மற்ற நாட்களில் வடகிழக்கிலிருந்து தென்கிழக்கு வரையில் பல கோணங்களில் (angle -களில்) சூரியோதயம் ஏற்படுகிறது. வட துருவத்தில இப்படியில்லை. அங்கே ஆறு மாஸம் பகலிலிருந்து ஆறு மாஸம் இரவுக்குப் போய், மறுபடி அதிலிருந்து ஆறு மாஸம் பகலுக்கு வரும் போது சூரிய கதியைப் பார்த்தால், அந்த இடமானது சூரியனைச் சுற்றாமல், சூரியன்தான் அந்த இடத்தைச் சுற்றி வருகிறான்

என்றே தோன்றும். மேரு ஸூரியனைப் பிரதக்ஷிணம் பண்ணுகிறான் என்பது இதைத்தான்.

வடதுருவத்தில் ஸூரிய வெளிச்சமுள்ள ஆறு மாஸங்களை உத்தராயணம் என்றும், அங்கே இரவாகித் தென்துருவத்தில் வெளிச்சமிருக்கிற ஆறு மாஸங்களை தக்ஷிணாயனம் என்றும் சொல்கிறோம்.

வடதுருவத்துக்கு ஸுமேரு என்றும், தென் துருவத்துக்குக் குமேரு என்றும் பெயர். (ஸுமேரியா தேசம்கூட 'ஸுமேரு'விலிருந்து வந்ததுதான். அங்கே வேதத்தில் வரும் தேவதைகளின் வழிபாடு இருந்தது என்று சொல்கிறார்கள்.) வடக்கே தேவர்கள் இருப்பது போல் தெற்கே பித்ரு லோகமும் நரகமும் இருக்கின்றன. தேவதைகளையோ, பித்ருக்களான ஆவிகளையோ, நரகவாஸிகளையோ பார்ப்பதற்கு யோக சக்தியினால் திவ்ய திருஷ்டி பெறவேண்டும். நமக்கு அந்த த்ருஷ்டி இல்லாததால் அப்படிப்பட்ட லோகங்களும் இல்லை, ஜீவர்களும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. ருஷ்யாவில் பிறந்து, அமெரிக்காவில் வஸித்துவிட்டு, இந்தியாவில் வந்து 'தியாஸாஃபிகல் ஸொஸைடி' ஆரம்பித்த ப்ளாவட்ஸ்கி முதலானவர்கள் ஆவி உலக, தேவதா லோக விஷயங்களைத்தான் முக்யமாகச் சொல்லியிருக்கிறார்கள். இது மட்டுமில்லை. இக்கால ஸயன்டிஸ்ட்களில் ரொம்பவும் முக்யமாக நினைக்கப்படுகிற ஆலிவர் லாட்ஜ் என்கிறவர் கூட, பிற்காலத்தில் ஸயன்ஸைவிட முக்யமாக இந்த ஆவிகள், தேவதைகள் இவற்றின் ஆராய்ச்சியிலேயே இறங்கி, 'இவை எல்லாம் நிச்சயமாக இருக்கின்றன; இவைகளைக் கொண்டு

மனிதன் அநுகூலங்களை அடையலாம்' என்று புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார். ஜ்யோதிஷம் முதலான சாஸ்திரங்கள் ஒருபுறம் அஸ்ட்ரானமி மாதிரியான ஸயன்ஸ்களைச் சொல்லிவிட்டு உடனே spiritualism -க்கும் போகிறதே என்று கேட்டால், இவை இரண்டுக்கும் விரோதமில்லை என்று சொல்வது போல ஒரு பெரிய விஞ்ஞானியே ஸமீபத்தில் இப்படிப் பண்ணியிருக்கிறார்.

நாம் ஒருவருக்கொருவர் பழகிக் கொள்கிறதுபோல மநுஷ்யர்கள் தேவர்களோடு பழகி வந்த புராதன காலத்தில் ஏற்பட்டவை நம் சாஸ்திரங்கள். நம்முடைய [கர்மாக்களைத் தொடங்கு முன் செய்ய வேண்டிய] ஸங்கல்பத்தைப் பார்த்தாலே இது தெரிகிறது. இந்த ஸங்கல்பமானது எத்தனையோ யுகாந்தரங்களுக்கு முன், கோடிக்கு அப்புறம் எத்தனையோ ஸை:ர்கள் போட வேண்டிய அத்தனை காலத்துக்கு முன், ஸ்ருஷ்டி ஏற்பட்டதிலிருந்து இன்று வரைக்கும் காலத்தை நிர்ணயம் பண்ணித் தருகிறது. யுகத்தின் ஆரம்பத்தில் க்ரஹங்கள் எப்படியிருந்தன என்பது கூட ஜ்யோதிஷக் கணக்கால் தெரிகிறது. அப்போது எல்லா க்ரஹங்களும் ஒரே வரிசையில் இருந்தனவாம்.

சில கணக்குகள் இப்போது வித்யாஸப் படுகின்றன, பிரத்யக்ஷத்தில் பார்க்கிற சில நிலவரங்கள் சாஸ்திரத்துக்கு மாறாக இருக்கின்றன என்றால், உடனே 'சாஸ்திரம் புளுகு மூட்டை' என்று ஆரம்பித்துவிடக்கூடாது. எல்லா க்ரஹங்களும் நேராக இருந்த புராதன காலம், துருவ நக்ஷத்ரத்துக்கு சரியாக நேரே பூமியின் துருவம் இருந்த ரொம்பப் பழைய காலம்– இவற்றிலிருந்தே

சாஸ்திரங்கள் இருந்திருக்கின்றன. அதற்குப் பின், பல யுகங்களில் Nature -ல் (இயற்கையில்) மகத்தான மாறுதல் ஏற்பட்டு, பூமி மலையாகவும், மலை ஸமுத்ரமாகவும், ஸமுத்திரம் பாலைவனமாகவும் இப்படியெல்லாம் ஆகியிருக்கிறது. இந்த விவரங்களை ஜியாலஜிஸ்ட்கள் சொல்கிறார்கள். அதோடுகூட வானமண்டலத்தில் கிரஹ ஸஞ்சாரங்களிலும் மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதாக அஸ்ட்ரானமிக்காரர்கள் சொல்கிறார்கள். இதனாலெல்லாந்தான் சாஸ்திரத்தில் என்றைக்கோ சொன்னதற்கு வித்யாஸமாகவும் சிலவற்றை இன்றைக்கு பார்க்கிறோம்.

ஜ்யோதிஷத்தில் கணக்குப் பண்ணி சிருஷ்டி எப்போது ஆரம்பித்தது என்று சொல்கிறார்களோ, அதுவே நவீன ஆராய்ச்சியால் அநுமானிக்கிற சிருஷ்டி காலத்துக்குக் கிட்டத் தட்ட சரியாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

கலியுகத்துக்கு 4,32,000 வருஷங்கள். த்வாபரயுகத்துக்கு இதைப்போல இரண்டு மடங்கான 8,64,000 வருஷம். த்ரேதாயுகத்துக்கு மூன்று மடங்கான 12,96,000 வருஷம். க்ருதயுகத்துக்கு நாலு மடங்கான 17,28,000 வருஷம். நாலு யுகங்களும் சேர்ந்த 'சதுர்யுகம்' அல்லது 'மகாயுகம்' என்பதற்கு 43,20,000 வருஷம். இப்படி ஆயிரம் மஹா யுகங்கள் சேர்ந்தால், அதுதான் பிரம்மாவின் ஒரு பகல் வேளை. அதுவே கல்பம் என்பது. அது 14 மநுக்களின் ஆட்சிக்காலம். 'மநு'வின் ஆட்சிக்காலம்தான் 'மன்வந்த்ரம்' என்பது. நாம் பல ராஜாக்களையும் குடியரசுகளையும் வைத்துக் கொண்டிருந்தாலும், லோகம் பூராவுக்கும் மேலாதிக்கம் உள்ளவராக பகவான் மநு என்பவரையே

வைத்திருக்கிறார். இப்படிப்பட்ட மநுக்கள் பதினாலு பேர், மநுஷ்ய இன ஸ்ருஷ்டிலிருந்து அது முடிகிறவரை ஆட்சி நடத்துகிறார்கள். மநுவிலிருந்து தோன்றுவதால்தான் நமக்கு மநுஷ்யர், மநுஜர் முதலான பேர்கள் இருக்கின்றன. Man என்பதும் மநுவிலிருந்து வந்ததுதான். இப்போது ச்வேத வராஹ கல்பம் என்ற பிரம்மாவின் பகல் வேளையில் ஏழாமவரான வைவஸ்த மநுவின் காலத்திலே, இத்தனாம் ஆண்டில் நாம் இருக்கிறோம் என்று ஸங்கல்பத்தில் சொல்லப்படுகிறது. இதிலிருந்து கணக்கு பண்ணி முதலாமவரான ஸ்வாயம்புவ மநு எப்போது தோன்றியிருப்பார், அதாவது இந்த கல்பத்தில் ஸ்ருஷ்டி எப்போது ஆரம்பித்திருக்கும் என்று பார்த்தால், அந்தக் காலக் கணக்கும் மநுஷ்ய இனம் (Human Species) எப்போது தோன்றிற்று என்று ஸயன்ஸில் சொல்லுகிறார்களோ அதுவும் ரொம்பக் கிட்டத்தில் இருக்கிறது என்கிறார்கள்.

'மன்' என்றால் 'நினைப்பது'. நினைக்கிற காரியத்தைச் செய்கிற அங்கம்தான் மனஸ். அதை வைத்தே மநுவுக்கு இப்படிப் பெயர் ஏற்பட்டது. சிந்தனா சக்தி வாய்ந்த மனிதகுலத்துக்கு முதல்வராக அவர் இருக்கிறார். Man is a thinking animal என்று சொல்வதற்கேற்ப, நினைக்கத் தெரிந்ததே இவனுடைய சிறப்பு என்பதால்தான், மநுவிடமிருந்து வந்தவர்களுக்கும் மநுஷ்யர் என்ற பெயர் ஏற்பட்டுவிட்டது.

பதினாலு மநுக்களின் ஆயுட்காலமும் சேர்ந்த ஆயிரம் சதுர்யுகங்கள் பிரம்மாவுக்கு ஒரு பகல் என்றால் அதற்கு 432,00,00,000 (432 கோடி) வருஷம்; அதே அளவு வருஷம் ஒரு ராத்திரி. அதாவது 864 கோடி வருஷம் பிரம்மாவுக்கு ஒரு முழு நாள். அதுவே கல்பம் என்பதுமுண்டு. அதிலே

பகலில்தான் ஸ்ருஷ்டி நடப்பது. ராத்திரியில் ஸ்ருஷ்டி அடங்கிப் போன ப்ரளயம். இப்படி 365 நாட்கள் ஒரு பிரம்ம ஸம்வத்ஸரம் (வருஷம், ஆண்டு) . இதைப் போல் நூறு வருஷங்கள் அவருடைய ஆயுஸ். இந்த பிரபஞ்சத்தின் ஆயுஸும் அதுவே. அவரது ஆயுள் முடிகிற போது ஸகல லோகங்களும் இல்லாமல் போய்விடும். அதுதான் 'ஆத்யந்திக பிரளயம்' என்பது. அப்புறம் ஒரு பிரம்மா-ஆயுட்காலம் ஸ்ருஷ்டியே இல்லாமல், பிரம்மம் மட்டும் பிரபஞ்சமில்லாமல், தான் மாத்திரமாக இருக்கும். அப்புறம் மறுபடி இன்னொரு பிரம்மாவைக் கொண்டு சிருஷ்டியை ஆரம்பிக்கும். ஆஞ்சநேயர்தான் அடுத்த பிரம்மாவாக வரப்போகிறார் என்று சொல்வார்கள்.

'ஆத்யந்திக ப்ரளயம்' என்றால் சாச்வதமான ப்ரளயம் என்று அர்த்தம். 'அத்யந்தம்' என்ற வார்த்தையிலிருந்து 'ஆத்யந்திக' என்பது உண்டாயிருக்கிறது. 'ப்ரளயம்' என்றால் ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு, உணர்ச்சியில்லாமல் லயித்திருப்பது. ஆத்யந்திக ப்ரளயத்தில் இந்த லயம் என்பது பரமாத்மாவோடேயே சாச்வதமாக ஐக்யமாகி விடுவதாகி விடுகிறது. ஸ்ருஷ்டி கர்த்தாவான ப்ரம்மா நூறு வயஸு பூர்த்தியாகிப் பரமாத்மாவோடு ஐக்யமாகிறபோது, அவர் உண்டாக்கிய ஸ்ருஷ்டியும் சேர்ந்து ஐக்யமாகிவிடுகிறது. அப்புறம் புது ப்ரம்மா புது ஸ்ருஷ்டி ஆரம்பிக்கும் போதும் இந்த ஜீவர்கள் அதில் மறுபடி பிறப்பதில்லை. அதனால் இதை 'மஹா ப்ரளயம்' என்றும் சொல்வது.

வேறே இரண்டு ப்ரளயங்களும் உண்டு. ஒவ்வொரு சதுர்யுக முடிவிலும் ஏற்படுவது ஒன்று. இதை வெறுமே

'ப்ரளயம்' என்பார்கள். ஆயிரம் சதுர்யுகத்திற்கொரு தரம் பிரம்மாவின் ஒவ்வொரு பகலின் முடிவிலும் ஏற்படும் கல்ப ப்ரளயம் இன்னொன்று. அவருடைய ஒவ்வொரு இராக்காலமும் முடிகிறவரை இது நீடித்து, அடுத்த பகல் உதிக்கும் போது முடிந்துவிடும். இரண்டு பகல்களுக்கு நடுவேயுள்ள 'இன்டர்வெல்' லில் இது நடப்பதால் இதற்கு 'அவாந்தர ப்ரளயம்' என்றும் பெயர். சதுர்யுக முடிவான ப்ரளயத்தில் அடங்கின ஜீவர்கள் அடுத்த சதுர்யுக ஸைக்கிள் ஆரம்பிக்கும் போது மறுபடி பிறக்கத்தான் செய்வார்கள். 'அவாந்தர ப்ரளயம்' அல்லது 'கல்ப ப்ரளயம்' என்பதில் அடங்கியவர்களும் அடுத்த கல்பத்தில் பிறக்கத்தான் செய்வார்கள்.

பூலோகம், புவர் வோகம், ஸுவர் லோகம், மஹர் லோகம், ஜன லோகம், தபோ லோகம், ஸத்ய லோகம் என்று ஏழு. இவற்றுக்குள்தான் மநுஷ்யர்கள், தேவர்கள் முதலான ஸகல இனங்களும் இருக்கின்றன. இவற்றில் பூலோகம், புவர்லோகம், ஸுவர் லோகம் இவை மூன்றும் ஒரு group - ஆக இருக்கின்றன. 'பூர்ப்புவஸ்ஸுவ:' என்று இவற்றைத்தான் அடிக்கடி கர்மாக்களில் குறிப்பிடுகிறோம். மற்ற நாலு லோகங்களும் இவற்றைவிட உயர்ந்தவை. பிரம்மா ஒவ்வொரு இரவிலும் தூங்கும்போது அவாந்தர ப்ரளயம் ஏற்படுகிறதல்லவா? அப்போது இந்த முதல் மூன்று லோகங்கள் மட்டும் பிரளயத்தில் அழிந்துவிடும். அவரது ஆயுஸ் முடிவான மஹாப் பிரளயத்திலோ மற்ற லோகங்களும் அழிந்துவிடும்.

ஸூர்யனுடைய உஷ்ணம் நமக்குத் தெரியாத அளவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வருகிறது

என்று நவீன ஸயன்ஸில் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஸூர்ய உஷ்ணம் இல்லாவிட்டால் லோக வாழ்க்கை ஸாத்யமே இல்லை. ஆஹாரத்திலிருந்து ஆரம்பித்து லோக வாழ்வுக்கு வேண்டிய மழை, பருவக்காற்று எல்லாவற்றுக்கும் ஸூர்ய உஷ்ணந்தான் ஆதாரம் என்கிறார்கள். அதனால் இப்படி ஸூர்ய உஷ்ணம் குறைந்து கொண்டே போவதால், எத்தனையோ கோடி வருஷங்களுக்கு அப்புறம் நம் லோகமே இல்லாமற்போக வேண்டியதுதான் என்று ஒரு கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். சாஸ்திரப்படி பிரம்மாவின் அடுத்த அவாந்தரப் பிரளயம் எப்போது வரவேண்டுமோ, அதுவும் ஸயன்டிஸ்டுகள் கொடுக்கிற காலக் கெடுவும் சற்றேறக்குறைய ஒத்திருக்கின்றன.

ஸங்கல்பத்தில் சொல்கிறபடி இப்போது பிரம்மாவுக்குப் பாதிக்கு மேல் ஆயுஸ் தீர்ந்துவிட்டது. நமக்கு வாரத்தில் ஏழு நாள் பெயர்கள் மாதிரி ஏழு கல்பப் பெயர்கள் பிரம்மாவின் விஷயமாகச் சொல்கிறார்கள். அதில் இப்போது நாலாவதான ச்வேத வராஹ கல்பத்தில் பாதிக்குமேல் வந்து விட்டோம். பிரம்மாவுக்கு இன்றைக்கு இத்தனை வயசு, இத்தனை மாஸம், தேதி, அதில் இன்ன யாமம், அப்புறம் நாம் இன்ன கல்பத்தில், இன்ன மன்வந்தரத்தில், இன்ன சதுர்யுகத்தில், இன்ன யுகத்தில், இன்ன சகாப்தத்தில், ப்ரபவ முதலான அறுபது வருஷங்களில் நம் மநுஷ்யப் பஞ்சாங்கத்தின்படி இன்ன வருஷம், மாஸம், தேதியில், லக்னத்தில் இருக்கிறோம் என்கிற வரையில் எல்லாவற்றையும் ஸங்கல்பத்தில் சொல்கிறோம்.

இந்தக் கணக்குப்படி பிரம்மா எப்போது தோன்றியிருப்பார் என்று பார்த்தால், அதுவும், பிரபஞ்சம் எப்போது தோன்றியிருக்கும் என்று ஸயன்ஸில் போட்டிருக்கிற கணக்கும், ஏறக்குறைய ஸரியாக இருக்கின்றன என்கிறார்கள்.

பிரம்மாவின் வயஸைச் சொல்வதில் ஒரு வேடிக்கை. 'பரார்த்த –த்வய–ஜீவி' என்று பிரம்மாவைச் சொல்கிறார்கள். அதாவது இரண்டு பரார்த்தங்கள் உயிர் வாழ்கிறவர் என்று அர்த்தம். பரார்த்தம் என்றால் 'பர' என்கிற எண்ணிக்கையில் பாதி (அர்த்தம்) என்று அர்த்தம். அதாவது 'பரார்த்த–த்வய –ஜீவி' என்றால் 'இரண்டு x அரைப் பர ஆயுஸ்காரர்' என்று அர்த்தம். 'இரண்டு x அரைப் பர' என்றால் ஒரு 'பர' தானே? அதனால் 'பரார்த்த த்வயம்' என்காமல் 'பர' என்றே சொல்லி விட்டால் போதும். ஆனாலும் பிரம்மா இப்போது பாதிப் 'பர'வைத் தாண்டி 51-வது வயதில் இருப்பதால், 'பர'வில் பாதியை முக்யமாக நினைத்து, 'பரார்த்த'த்தையே குறிப்பிடுகிறோம்.

ஆயிரம் சதுர்யுகம் கொண்டதான பிரம்மாவின் ஒரு பகலுக்குள் 14 மநுக்களின் ஆட்சி நடப்பதால் ஒரு மந்வந்தரத்திற்கு 71 சதுர்யுகங்கள். இந்த வைவஸ்தவ மன்வந்தரத்தில் இப்போது நடப்பது 28-வது சதுர்யுகம். அதில் இது கலியுகம். நாம் பண்ணும் ஸங்கல்பத்தில் இவ்வளவும் இருக்கின்றன! திதி,லக்கினம் வரையில் சொல்வதுண்டு. இவ்வளவும் காலக் கணக்கு.

தேசக் கணக்கு வேறு அந்த ஸங்கல்பத்தில் இருக்கிறது. பிரம்மாண்டம் முழுதையும் வர்ணித்து, அதிலே நாம்

இருக்கிற ஊர் வரையில் கொண்டு வந்துவிடுகிறது. நாம் கடிதங்களில் ஊரையும் தேதியையும் எழுதுவது போல ஸங்கல்பத்தில் தேசத்தையும் காலத்தையும் சொல்லிக் கொள்கிறோம். இவ்வளவு அருமையான கணக்குகள் ஜ்யோதிஷ சாஸ்திரத்தினால் அறியப்படுகின்றன.

ப்ரத்யக்ஷ நிரூபணம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

ஜ்யோதிஷம் : வேதத்தின் கண்

ப்ரத்யக்ஷ நிரூபணம்

ஒரு கொட்டகையில் மேற்கூரையிலுள்ள துவாரம் வழியாக வரும் சூரிய கிரணம் ஓரிடத்தில் படுகிறது. அதே கிரணம் அடுத்த மாஸம் எங்கே படும் என்று கேட்டால் நமக்குத் தெரியாது. ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் சொல்லியுள்ள கணனங்களைச் செய்தால் தெரியும். பழைய காலத்தில் ஒரு முத்தைத் தொங்கவிட்டு, இன்ன காலத்தில் இன்ன இடத்தில் அதனுடைய நிழல் விழும் என்று ஸரியாகக் கோடு போட்டுக் காண்பித்தால், அப்படி காண்பித்தவர்களுக்கு அரசர்கள் உயர்ந்த சம்மானங்களைச் செய்து வந்தனர்.

மற்ற சாஸ்திரங்களிலெல்லாம் வாக்கியார்த்தம் செய்து வாதத்தில் ஜயித்தே சம்மானம் பெறுவார்கள். ஜ்யோதிஷ சாஸ்திரத்திலோ பிரத்யக்ஷமாகக் காட்டி சம்மானம் பெறவேண்டும். அதில் ஏமாற்ற முடியாது. அதற்கு சூரிய சந்திரர்களே சாக்ஷி.

ப்ரத்யக்ஷம் ஜ்யோதிஷம் சாஸ்த்ரம்

கல்பம் : வேதத்தின் கை

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

கல்பம் : வேதத்தின் கை

வேத புருஷனுக்குக் கல்பம் என்ற ஆறாவது ஆங்கம் கரம் என்பார்கள்.

காரியங்களைச் செய்வதினால் கைகளுக்குக் கரம் என்று பெயர் வந்தது. செய்யும் தொழில் உடையதால், தெலுங்கிலும் கை 'செய்' என்று வழங்குகிறது.

காரியத்தில் ஏவும் சாஸ்திரமே கல்பம். வேதத்தையும், சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம் முதலிய எல்லாவற்றையும் தெரிந்து கொண்ட பின்பு என்ன செய்வது? இவற்றால் ஏதாவது காரியம் செய்ய வேண்டும். மனஸில் தோன்றுகிற காரியங்களெல்லாம் பண்ணி ஸம்பாதித்த பாபங்களெல்லாம் தொலைய நல்ல காரியம் பண்ணவேண்டும். அந்த நல்ல காரியம் என்னவென்று தெரிய வேண்டும். அதற்குரிய மந்திரம், அதன் சரியான உச்சாரணம், அர்த்தம் முதலியவைகள் தெரிய வேண்டும். அந்தக் கர்மாக்களைச் செய்வதற்குப் பல திரவியங்கள் வேண்டும். அவற்றை நடத்த வீடு வேண்டும். அந்த வீட்டுக்கு வாஸ்து லக்ஷணம் வேண்டும். பின்பு அந்தக் கர்மாக்களின் பலனை ஈச்வரனுக்கு அர்ப்பணம் பண்ண வேண்டும். இவைகளைப் பற்றிய விஷயங்களைச் சொல்வதுதான் கல்பம்.

வேதத்தை அத்யயனம் பண்ணி, அதிலே உள்ள அக்ஷரங்களைப் பற்றிச் சிக்ஷையால் தெரிந்து கொண்டு, இலக்கணத்தை வியாகரணத்தால் அறிந்து, மீட்டர், அர்த்தம் என்பனவற்றையும் சந்தஸ், நிருக்தம் இவற்றால் தெரிந்துகொண்டு, ஜ்யோதிஷத்தின் மூலம் கர்மாக்களைச் செய்யும் காலத்தைத் தெரிந்து கொள்ளுவதின் பிரயோஜனம் என்னவெனில், கல்பத்தில் சொல்லியுள்ள நல்ல கர்மாக்களைப் பண்ணுவதே.

எந்தக் கர்மாவை எப்படிப் பண்ணுவது, எந்த எந்த வருணத்தார் எந்த எந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும், எந்த எந்த ஆசிரமத்தார் எதை எதை செய்ய வேண்டும் என்பவைகளையும், எந்தக் கர்மாவுக்கு எந்த மந்திரம், திரவியம், தேவதை என்பவைகளையும், யக்ஞங்களில் எத்தனை ரித்விக்குகளை வைக்க வேண்டும், எந்த விதமான பாத்திரங்களை உபயோகப்படுத்த வேண்டும் என்பவைகளையும், இவை போன்ற மற்றவைகளையும் சொல்வது கல்பம். நாம் 'சடங்கு' என்று சொல்வதையெல்லாம் கல்பமே வகுத்துக் கொடுக்கிறது. 'ஷடங்கம்' என்பதே 'சடங்கு' ஆயிற்று என்று சொன்னேன். அல்லது, கல்பம் வேதத்தின் ஆறாவது அங்கமானதால் ஷஷ்டாங்கமாகிறது. ஷஷ்டாங்கமே சடங்கு என்றாகியிருக்கலாமோ என்று தோன்றுகிறது.

கல்ப சாஸ்திரத்தை அநேக ரிஷிகள் செய்திருக்கிறார்கள். தக்ஷிணத்தில் வெகுவாகப் பின்பற்றப்படும் கிருஷ்ணயஜுர் வேதத்திற்கு ஆபஸ்தம்பர், போதாயனர், வைகானஸர், ஸத்யாஷாடர், பாரத்வாஜர், அக்னிவேசர் என்னும் ஆறு பேர்கள் கல்பஸூத்ரங்கள் செய்திருக்கிறார்கள்.

ரிக்வேதத்திற்கு ஆச்வலாயனர் செய்ததே அதிகம் வழக்கிலுள்ளது. ஸாங்காயனர் என்பவரும் செய்திருக்கிறார். சுக்ல யஜுர் வேதத்திற்கு காத்யாயனர் கல்ப ஸூத்திரம் செய்திருக்கிறார். ஸாமவேதத்தில் கௌதும சாகைக்கு லாட்யாயனரும், ராணாயநீய சாகைக்கு த்ராஹ்யாயணரும், தலவகார சாகைக்கு ஜைமினியும் ஸூத்திரம் செய்திருக்கிறார்கள்.

கல்பத்தில் ஒவ்வொரு சாகைக்கும் க்ருஹ்ய ஸூத்ரமென்றும், ச்ரௌத ஸூத்ரமென்றும் இரண்டு வகை உண்டு. 'ச்ருதி' எனப்படும் வேதத்திலேயே பூர்ணமாக வருகிற யக்ஞம் முதலானவையே 'ச்ரௌதம்' என்பவை. இவை விரிவாகச் செய்யவேண்டிய பெரிய காரியங்களாகும். கிருஹத்தில், வீட்டில் இல்லாமல், வெளியே பெரிசாக யாகசாலை போட்டுக் கொண்டு செய்யப்படுபவை. இதனால் தான் கிருஹத்திலேயே பண்ணப்பட்ட மற்ற சின்ன வைதிக கர்மாக்களுக்கு "க்ருஹ்யம்" என்றே பேர் வந்துவிட்டது. கர்ப்பம் உண்டாவது முதல் தேஹம் அக்கினிக்கு ஹோமம் பண்ணப்படும் தகனக்கிரியை வரையில் செய்யப்படுகின்ற நாற்பது கிரியைகளை இவ்விரு ஸூத்திரங்களும் சொல்லும். தஹனக்கிரியையும் ஒருவகையான ஹோமம்தான்! அந்தியேஷ்டி, அதாவது கடைசி வேள்வி, என்று சொல்லுவார்கள். இந்த இஷ்டியில், வேள்வியில், தேஹமே திரவியமாக அக்னியில் ஹோமம் செய்யப்படுகிறது!

அக்னி ஹோத்திரத்தை ஆதாரமாகக் கொண்டு பண்ணும் ஏழு ஹவிர்யஜ்ஞம்; ஏழு ஸோமயஜ்ஞம்; ஏழு பாக

யக்ஞங்கள் என்பதாக மொத்தம் 21 யக்ஞங்களைப் பிராம்மணன் பண்ண வேண்டும். இவற்றில் ஏழு ஹவிர் யக்ஞமும் ஏழு ஸோம யக்ஞங்களும் க்ருஹ்ய ஸூத்திரத்தில் வராது. இந்தப் பதினாலும் "ச்ரௌத ஸூத்திர"த்தில் வருவன. இவற்றையும் சேர்த்தே ஒருவன் செய்ய வேண்டிய 40 கர்மாக்கள் உள்ளன. இவற்றை 40 ஸம்ஸ்காரம் என்பர்.

ஸம்ஸ்காரம் என்றால் தூய்மைப் படுத்துவது.

வீட்டில் செய்வது அக்கினிஹோத்திரம். யாகசாலை போட்டுக் கொண்டு பண்ணுவது யக்ஞம். பெரிய யாகங்களை ச்ரௌத ஸூத்திரம் சொல்லும். Domestic rites என்று அகத்தோடு பண்ணுவதை க்ருஹ்ய ஸூத்ரம் சொல்லும். நான் மேலே ச்ரௌத ஸூத்ரக்காரர்களின் பேர்களையே சொன்னேன்.

நாற்பது ஸம்ஸ்காரங்களும் எட்டு ஆத்ம குணங்களும் கல்ப ஸூத்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த நாற்பது ஸம்ஸ்காரங்களில் முன்பு சொன்ன பதினான்கு ஹவிர், யோம யக்ஞங்களைத் தவிர மிகுதியுள்ள இருபத்தாறும் கிருஹ்ய ஸூத்திரத்தில் சொல்லப்படும். அதில் கர்ப்பாதானம், பும்ஸுவனம், ஸீமந்தம், ஜாதகர்மா, நாமகரணம், அன்னப் பிராசனம், சௌளம், உபநயனம், விவாஹம், அந்தியேஷ்டி முதலியவைகள் சொல்லப்படுகின்றன. இவற்றைப் பிற்பாடு விளக்குகிறேன்.

எட்டு ஆத்ம குணங்களாவன: தயை, பொறுமை, அசூயை இல்லாமலிருத்தல், சுத்தி [தூய்மை] , பிடிவாதமின்மை, மனங்குளிர்ந்திருத்தல், லோபமின்மை, நிராசை

என்பவைகள். இவை எட்டும் ஸாமான்ய தர்மங்களைச் சேர்ந்தவைகளே. அதாவது எல்லா ஜாதிக்காரர்களும் கைக்கொள்ள வேண்டியவை.

நாம் இன்ன ஸூத்ரத்திரத்தைப் பின்பற்றுகிறவர்கள் என்று நமஸ்காரம் பண்ணும்போது சொல்லும் அபிவாதனத்தில் சொல்கிறோம். அது ச்ரௌத ஸூத்திரத்தைத்தான் குறிக்கிறது. திருஷ்டாந்தரமாக ஸாமவேதிகள் "த்ராஹ்யாயண ஸூத்திரம்" என்று சொல்கிறார்கள். த்ராஹ்யாயணர் ச்ரௌத ஸூத்திரம் மாத்திரமே செய்திருக்கிறார். வேறொருவர் (கோபிலர்) தான் கிருஹ்ய ஸூத்திரம் செய்திருக்கிறார். ஆனாலும் பூர்வத்தில் பெரிய யக்ஞ கர்மானுஷ்டானங்கள் விசேஷமாக செய்யப்பட்டு வந்ததாலேயே, இவற்றைச் சொல்லும் ச்ரௌத ஸூத்ரத்தையே தன்னுடைய ஸூத்ரம் என்று சொல்லி வந்து, இப்போதும் அதுவே அபிவாதனத்தில் நீடிக்கிறது. ஆனால் பிற்காலத்தவரான நாமோ பெரிய ச்ரௌத கர்மாக்களைப் பண்ணாமல் க்ருஹ்ய ஸூத்திரத்தில் வரும் விவாஹம் முதலியவற்றை மட்டும் பண்ணுகிறோம். க்ருஹ்ய கர்மாக்கள் லகுவாகச் செய்யவேண்டியவை. அவற்றில் சிலதே இப்பொழுது பலத்துப்போய்விட்டன.

பூர்வத்தில் ச்ரௌத கர்மாவை ஏழையாய் இருப்பவனும் யாசகம் பண்ணிச் செய்தான். பழைய காலத்தில் 'பிரதி வஸந்த யோமயாஜிகள்' என்று பல பேர்கள் இருந்தார்கள். அதாவது ஒவ்வொரு வஸந்த காலத்திலும் ஸோமயாகம் செய்வார்கள். ஒரு வருஷத்தின் வரவு மூன்று வருஷ செலவுக்கு போதுமானதாக இருந்தால் அந்த வரவை

உடையவர்கள் ஒவ்வொரு வஸந்த காலத்திலும் ஸோமயாகம் செய்து வந்தார்கள்.

இப்பொழுது எல்லாம் கெட்டுப் போய்விட்டது. இக்காலத்து பணக்காரர்கள் கூட ஒரு வருஷ வரவுக்கு மூன்று வருஷ செலவை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வியாபார ரீதியில் உண்டான மாறுதல்களால் தனிகர் உட்பட எல்லோருக்கும் தரித்திரமும் கஷ்டங்களும் உண்டாயிருக்கின்றன. எதிலும் மிதமாக இருக்க வேண்டும்; அமிதம் கூடாது. இந்தக் காலத்து புத்தி சாமர்த்தியங்களெல்லாம் எத்தனை வந்தாலும் போதாத தரித்திரத்தில் கொண்டு போய்விடுகின்றன! ஒருவன் பணக்காரனாக இருக்கிறானென்றால் அவனுக்கும் தாங்க முடியாதபடி அபாரமான செலவுகளை வைத்துக் கொண்டிருக்கிறான். இவைகளையெல்லாம் மிதப்படுத்திக் கொண்டு நல்ல காரியங்களை செய்யவேண்டும்.

சிகை, புண்ட்ரம், கர்மாநுஷ்டானம் முதலியவைகள் ஸூத்திரத்துக்குத் தக்கபடி பலவகையாக இருக்கின்றன. சிலர் ஊர்த்வ சிகை (உச்சிக் குடுமி) வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் பூர்வ சிகை (முன்குடுமி) யுடையவர்களாயிருக்கிறார்கள். அப்படியே நெற்றிக்கு இட்டுக்கொள்வதிலும் ஊர்த்வ புண்ட்ரம், த்ரிபுண்டரம் என்று பேதங்கள் இருக்கின்றன. இவைகளெல்லாம் அவரவரும் தங்களது முன்னோர்களுடைய ஆசாரப்படி அநுஷ்டிக்க வேண்டும்.

சயனம் என்று யாக சாலையில் பல கட்டுமான அமைப்புக்கள் சொல்லப்படுகிறது. அவற்றினுடைய

லக்ஷணங்கள் முதலியவைகளைச் சொல்லும் "கல்ப ஸூத்திரம்" என்று ஒரு பிரிவு கல்பத்தில் இருக்கிறது.

கல்ப ஸூத்திரங்கள் சாமான்ய ஸூத்திரங்களென்றும் விசேஷ ஸூத்திரங்களென்றும் இருவகைப்படும். காத்யாயனர், போதாயனர், ஹிரண்யகேசர் ஆகியோர் சுல்ப ஸூத்திரம் செய்திருக்கிறார்கள். ஆண்டபிள்ளைப் பிரயோகம் என்பது இப்பொழுது பிரசாரத்தில் இருந்து வருகிறது. ஆண்டபிள்ளை என்பவர் திருப்பனந்தாளில் இருந்தவர். திருவிடை மருதூர்ப் பிள்ளையாருக்கு ஆண்ட பிள்ளையார் என்பது பெயர். அந்தப் பெயர் அவருக்கு வைக்கப்பட்டது. அவருடைய பிரயோகத்தின்படி இப்பொழுது ச்ரௌத கர்மாக்கள் நடந்து வருகின்றன. இப்பொழுது யாகங்கள் நடப்பது மிகவும் குறைந்துவிட்டது. கிருஹ்ய ஸூத்திரம்தான் கொஞ்சமாவது பிரசாரத்திலிருந்து வருகிறது. மற்ற தேசாந்தர சாஸ்திரங்களெல்லாவற்றிற்கும் அதிகப் பிரதான்யம் ஏற்பட்டிருக்கின்றது!

நம்முடைய சாஸ்திரங்கள் எல்லாம் ஈச்வர சரணாரவிந்தத்தைக் கட்டிப்பிடிக்கின்றன. எதைப் படித்தாலும் அது ஈச்வரார்ப்பணமாகவும் ஆத்ம லாபத்தைத் தருவதாகவும் இருக்கவேண்டும். நம்முடைய சாஸ்திரங்கள் எல்லாம அப்படிப்பட்டவைகளே. அவற்றிலே வேத மதத்துக்கு வெகு முக்யமாக இருக்கப்பட்ட ச்ரௌத கர்மாக்கள் (ஹவிர்-ஸோம யக்ஞங்கள்) ஒரேடியாகத் தேய்ந்து கொண்டே வந்திருப்பது ரொம்பவும் வருத்தப்பட வேண்டிய விஷயம்.

கல்ப ஸூத்திரம் செய்தவர்களான ஆபஸ்தம்பர், போதாயனர், ஆச்வலாயனர் முதலியவர்களில் த்ராஹ்யாயனர், காத்யாயனர் நீங்கலாக பாக்கி உள்ள எல்லோரும் ச்ரௌத ஸூத்ரம், க்ருஹ்ய ஸூத்ரம் என்ற இரண்டையும் செய்திருக்கிறார்கள்.

அதோடுகூட "தர்ம ஸூத்ரங்கள்" என்றும் சில இருக்கின்றன. இவற்றில் மனிதன் தனி வாழ்விலும், வீட்டிலும், சமூகத்திலும் கடைபிடிக்க வேண்டிய நெறிகள் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றிலிருந்தே பிற்காலத்தில் தர்ம சாஸ்திரங்கள் யாவும் அபிவிருத்தியாயின. பிற்காலத்தில் இங்கிலீஷ் Law -வில் கூட ஒப்புக்கொள்ளப்பட்ட மநு, மிதாக்ஷரி முதலான அநேக நீதி சாஸ்திரங்களும் இவற்றிலிருந்து உண்டானவையே. [ரிக் வேதத்தில் வஸிஷ்டர், விஷ்ணு, கிருஷ்ண யஜுஸில் மநு, போதாயனர், ஆபஸ்தம்பர், ஹிரண்யகேசி; ஸாமத்தில் கௌதமர் ஆகியவர்களுடைய தர்ம ஸூத்ரங்கள் கிடைத்துள்ளன.]

அதர்வம் அநுஷ்டானத்தில் இல்லை; அதனால் அதன் கல்ப ஸூத்ரங்களும் வழக்கில் இல்லை.

ஒவ்வொரு சின்ன காரியத்தையும் சொல்லிக் கொடுப்பது கல்பம். பிராம்மணன் செய்கிற ஒவ்வொரு சின்ன காரியமும் வேதத்தோடு சம்பந்தப்பட்டது. அப்படியிருந்தால் தான் அவன் விடுகிற ஒவ்வொரு மூச்சாலும், அவன் எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியாலும் லோகத்துக்கு க்ஷேமகரமான திவ்ய சக்திகளைப் பிடித்துக் கொடுக்க முடியும். "இப்படி

உட்காரு, இப்படிச் சாப்பிடு, இப்படி வேஷ்டியைக் கட்டிக் கொள்ளு" என்று ஒவ்வொன்றையும் சட்டமாக அவனுக்கு உத்தரவு போடுவது இதற்காகத்தான்.

உதாரணமாக வீடு கட்டுவதைப் பற்றிக் கூட கல்ப சாஸ்திரத்தில் இருக்கிறது. கிருஹ நிர்மாணம், வாஸ்து லக்ஷணம் என்றெல்லாம் அது விவரிக்கப்படுகிறது. இதைப் பற்றி எதற்கு சாஸ்திரத்தில் சொல்லவேண்டும் என்றால், ஒருவன் பண்ண வேண்டிய காரியத்துக்கு வீட்டின் சில்பம் (architecture, கட்டுமான அமைப்பு) அநுகூலமாயிருக்க வேண்டும். வைச்வ தேவ பலியை இன்ன மாதிரி த்வாரத்தில் (வாசலில்) போடவேண்டும் என்று விதி இருந்தால் அந்த மாதிரி வாசல் உடைய வீடு இருந்தால்தானே முடியும்? Flat -ல் முடியுமா? அநுஷ்டானங்களுக்கு அநுகூலமாக இருப்பதற்கே க்ருஹ நிர்மாணமும் கல்ப ஸூத்திரத்தில் சொல்லப்பட்டு விடுகிறது. ஔபாஸனம் பண்ணுகிற இடம் ஒரு குறிப்பிட்ட மாதிரி இருந்தால்தான் முடியும். அந்த லக்ஷணம் சாஸ்திரத்தில் இருக்கிறது. அந்த லக்ஷணத்துக்கு ஒத்து வராத கட்டிட அமைப்பானால் அங்கே இந்தக் கர்மாவைச் செய்வதற்கே சிரமமாகிறது. ஸ்கூலில் பசங்களை உட்கார்த்தி வைத்துப் பாடம் சொல்லிக் கொடுக்கும் க்ளாஸ்-ரூம்கள் ஒரு மாதிரியாக, ஒரு விதமான பெஞ்சுகள் மேஜைகளோடு இருக்க வேண்டியிருக்கிறது. அங்கேயே அவர்கள் எக்ஸ்பெரிமென்ட் பண்ண வேண்டிய லாபரட்டரியில் எல்லாம் வித்யாஸமாயிருக்கிறது. காரியத்தைப்

பொறுத்தே சில்பம் (கட்டிட அமைப்பு, furniture முதலான திரவியங்கள்) என்பதற்கு இது ஒரு திருஷ்டாந்தம்.

நான் பூஜை பண்ணுகிறேன். அதற்கென்று தனியாக சில லக்ஷணத்தோடு இடம் இருக்க வேண்டும். பங்களா ஒன்றில் எல்லா இடமும் ஸமமாக இருக்கிறது. அப்படிப்பட்ட இடம் ஒன்றில் பூஜை செய்ய ஆரம்பித்தால் கூட்டம் அதிகமாக வந்தால் மேலே மேலே வந்து பூஜைக்குப் பக்கத்தில் வந்து விடுகிறார்கள். ஸ்திரீகள், புருஷர்கள், விழுப்பு, மடி, ஆசார அநுஷ்டானம், வர்ணாசிரம தர்மம் முதலிய பிரிவுகள் அந்தக் கூட்டத்தில் மாறிவிடுகிறது. பங்களா அப்படி மாறும்படிச் செய்து விடுகிறது. இந்த பங்களா சில்பம் யாருடையது? இந்த மாதிரி வித்தியாஸங்கள் இல்லாத வெள்ளைக்காரருடைய சில்பம்! தனித்தனியாகவும் பிரிந்து இருக்க வேண்டும்; அதே சமயம் எல்லோருக்கும் இடம் இருக்க வேண்டுமென்ற நம் ஆசாரப்படி செய்ய ஆசையிருந்தாலும் புது மாதிரியான வீட்டு ப்ளானே கலந்தாங்கட்டியாகப் பண்ணி விடுகிறது. மேடை, கூடம், உள் என்று தனித்தனி இடங்கள் இருந்தால் அப்பொழுது வருபவர்கள் தனித்தனியாக உட்கார்ந்து கொள்வார்கள். சில்பமே அவர்கள் உட்கார்ந்து கொள்ள வேண்டிய மாதிரியைச் சொல்லிக் கொடுக்கும். நம்முடைய ஸம்பிரதாயத்தை அநுஸரித்து நம்முடைய சில்பம் ஏற்பட்டிருக்கிறது. கீழே மழமழவென்று சிமென்டுத் தரையாக இருந்தால் எச்சிலை மெழுக ஜலம் விட்டால் அது பரவி எல்லா இடமும் ஒரே எச்சிலாய் விடுகிறது. அந்த சில்பம் உடையவர்கள் மேஜையின்மேல் சாப்பிடுகிறவர்கள். ஆகையால்

அவர்களுக்கு எப்படி இருந்தாலும் பாதகமில்லை. நமக்குத்தான் கஷ்டமாக இருக்கிறது. இப்போது இந்த இடத்தில் நான் பூஜை பண்ணவும், பேசவும் வசதியாக இந்த மேடை இல்லாவிட்டால் எத்தனை கஷ்டமாயிருக்கும்?

நம்முடைய சில்பப்படி கிருஹ நிர்மாணம் பண்ண வேண்டும். கிருஹஸ்தன் என்பது கிருஹம் என்பதிலிருந்து ஏற்பட்ட பெயர். அவன் நம்முடைய சில்பப்படிதான் கிருஹ நிர்மாணம் செய்ய வேண்டும். அதை ஸூத்திரக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள். பற்று, விழுப்பு, மடி எச்சில் முதலியவைகளைக் கவனித்துக் கொண்டு இருக்க விரும்புகிறவர்கள் நம்முடைய சில்பத்தை அநுசரிக்க வேண்டும். மற்றவர்களின் சில்பப்படி உள்ள இடங்களில் நாம் வஸிக்க ஆரம்பிக்கிறோம். அதனால் ஆசாரங்களை அநுசரிக்க முடியாமல், முதலில், 'இப்படியிருக்கிறதே, என்ன பண்ணுவது?' என்று எண்ணுகிறோம். பின்பு 'குளிர்' விட்டு விடுகிறது! ஆசாரமே மாறிவிடுகிறது! வீட்டை விடப்பிடிக்காமல் ஆசார அநுஷ்டானத்தை விட்டு விடுகிறோம்!

கல்பம் வேதாந்தங்களில் ஆறாவதானது. இதிலே அடங்குகிற 40 ஸம்ஸ்கார விஷயங்களை பிற்பாடு தர்ம சாஸ்திரங்களைச் சொல்லும்போது கொஞ்சம் விவரமாகச் சொல்கிறேன்.

சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்ற ஆறோடு நாலு வேதங்களைப் பற்றிய ஸமாசாரங்களையும் சேர்த்து இதுவரை பதினாலு

வித்தைகளில் பத்தைப் பார்த்து விட்டோம். பாக்கி நாலு இருக்கின்றன. அவற்றைப் பார்ப்போம்.

மீமாம்ஸை : கர்ம மார்க்கம்

வேதத்தின் சட்ட விளக்கம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

மீமாம்ஸை : கர்ம மார்க்கம்

வேதத்தின் சட்ட விளக்கம்

நம் மதத்துக்கு பிரமாணமான பதினாலு வித்தைகளில் நாலு வேதங்களும் ஆறு வேதாங்கங்களும் போக மீதமுள்ள நாலும் வேத உபாங்கங்கள் எனப்படுபவை.

உப+அங்கம்=உபாங்கம்.

"உப" என்றால் துணையாக இருப்பது. உப ஸபாநாயகர் என்றால் ஸபாநாயகருக்கு அடுத்த ஸ்தானத்தில் இருப்பவர்தானே?

இப்படி ஆறு அங்கங்களுக்கு அப்புறம் வேதத்தின் துணை உறுப்புகளாக, உப அங்கங்களாக நூலு வருகின்றன.

மீமாம்ஸை, நியாயம், புராணம், தர்ம சாஸ்திரம் என்ற நாலுமே இந்த உபாங்கங்கள்.

'மீமாம்ஸை' என்ற வார்த்தையில் 'மாம்' என்பது தாது; 'ஸன்' என்பது 'பிரத்யயம்' (விகுதி) . இந்த வார்த்தைக்கு அர்த்தம் 'பூஜித விசாரம்'. தமிழில் சொல்வதானால், "நல்ல விஷயத்தைப் பற்றிய விசாரணை அல்லது ஆராய்ச்சி."

எது "பூஜிதம்"? எது நல்ல விஷயம்? வேதம்தான்.

வேதத்தை விசாரித்து - ஆராய்ந்து - அர்த்தத்தை எடுத்துச் சொல்வது மீமாம்ஸை.

நிருக்தத்தில் வேதத்தின் வார்த்தைகளுக்கு மட்டும் டிக்ஷனரி மாதிரி அர்த்தம் கொடுத்திருக்கிறது. மீமாம்ஸையில் அப்படியில்லை. மந்திரங்களின் தாத்பரியம் என்ன, உத்தேசம் என்ன என்று ஆராய்ச்சிப் பண்ணித் தீர்மானிப்பது மீமாம்ஸை சாஸ்திரமே.

வேதத்தில் கர்ம காண்டம், ஞான காண்டம் என்று இரண்டு பாகம் உண்டு என்று முன்பே சொன்னேன். சாகைகளின் முதல் பாகத்தில் வருவதால் கர்ம காண்டத்துக்குப் பூர்வ பாகம் என்றும், முடிவில் வருவதால் ஞானகாண்டத்துக்கு உத்தர பாகம் என்றும் பெயர். மீமாம்ஸையிலும் இப்படி இரண்டு உண்டு-பூர்வ மீமாம்ஸை, உத்தர மீமாம்ஸை என்பதாக.

கர்ம காண்டத்தில் சொன்ன யக்ஞம் முதலான அநுஷ்டானங்களே முக்கியம் என்பது பூர்வ மீமாம்ஸையின் கொள்கை. ஞான காண்டத்தில் சொன்ன ஆத்ம ஸாக்ஷாத்காரமே முக்கியம் என்பது உத்தர மீமாம்ஸையின் கொள்கை.

உபநிஷத்துக்களையும், பிரம்ம ஸூத்ரத்தையும் பற்றிச் சொல்லும்போதே உத்தர மீமாம்ஸையைப் பற்றி சொல்லிவிட்டேன்.

உத்தர மீமாம்ஸையான இந்த பிரம்ம ஸூத்ரம், உபநிஷத் இவைகளே பிரம்ம வித்யா என்றும் வேதாந்த மதம் என்றும் சொல்லப்பட்டு, அத்வைத-விசிஷ்டாத்வைத-த்வைத சம்பிரதாயங்களுக்கு முக்கியமான ஆதாரங்களாக இருக்கின்றன.

பூர்வ மீமாம்ஸைதான் இப்போது நாம் எடுத்துக் கொண்டுள்ள விஷயம். "மீமாம்ஸை" என்றாலே பொதுவில் குறிக்கப்படுவதும் இதுதான். உத்தர மீமாம்ஸைக்கு "வேதாந்தம்" என்ற பெயர் பிரபலமாகி விட்டதால், 'மீமாம்ஸை' என்பது பூர்வ மீமாம்ஸைக்கே பெயர் மாதிரி ஆகிவிட்டது. ஆனால் இதைச் சொல்லும் போதே உத்தர மீமாம்ஸை சமாசாரங்கள் வந்து சேரத்தான் செய்யும்.

ஒவ்வொரு சாஸ்திரத்துக்கும் ஸூத்ரம்-வார்த்திகம்-பாஷ்யம் என்ற மூன்று உண்டு என்று சொல்லியிருக்கிறேனல்லவா? இப்படி (பூர்வ) மீமாம்ஸைக்கான ஸூத்ரத்தைச் செய்தவர் ஜைமினி மஹரிஷி. அதற்கு பாஷ்யகாரர் சபரஸ்வாமி என்பவர். வார்த்திககாரர் குமாரிலபட்டர். குமாரிலபட்டரின் "பாட்டதீபிகை" இந்த சாஸ்திரத்தின் மிக முக்கியமான நூலாக இருக்கிறது. ஸாக்ஷாத் குமாரஸ்வாமியான ஸுப்ரமண்யரின் அவதாரமே குமாரிலபட்டர். மீமாம்ஸையில் குமாரிலபட்டருடைய அபிப்ராயத்துக்குச் சில விஷயங்களில் வித்யாஸமாகப் பிரபாகரர் என்பவர் பாஷ்யம் பண்ணியிருக்கிறார். அதனால் மீமாம்ஸகர்களில் "பாட்டமதம்", "ப்ரபாகர மதம்" என்று இரண்டு உட்பிரிவு (sub-division) உண்டாயிற்று. இந்த உள் வித்யாஸங்கள் நமக்கு

வேண்டாம். ஜெனரலாக இருக்கப்பட்டவைகளையே பார்க்கலாம்.

(குமாரில) பட்டர் கொள்கைகளைச் சொல்கிறதாலேயே ஒரு பிரிவுக்கு பாட்ட மதம் என்ற பெயர் வந்தது.[1]

ஸூத்ரங்களுக்குள் ஜைமினியின் பூர்வ மீமாம்ஸா ஸூத்ரமே மிகப் பெரியதாக இருக்கிறது. இதிலே பன்னிரண்டு அத்தியாயங்கள் உண்டு. ஒவ்வொரு அத்தியாயத்தையும் பல பாதங்களாகவும், ஒவ்வொரு பாதத்தையும் பல அதிகரணங்களாகவும் பிரித்திருக்கிறது. இப்படி ஆயிரம் அதிகரணங்கள் இருக்கின்றன. ஒவ்வோர் அதிகரணத்தில் ஒவ்வொரு விஷயமாக ஆயிரம் விஷயங்களை விசாரம் செய்வது பூர்வ மீமாம்ஸை. வேதவாக்கியங்களை எடுத்துக் கொண்டு அது விசாரம் செய்யும்.

வேதம் என்பது ஈச்வரன் உண்டாக்கிய சட்டம். ஆதி அந்தமில்லாத நித்யமான சட்டம், Eternal Law. நாம் பிரஜைகள், ஈச்வரன் நமக்கு அரசன். அவர் பல அதிகாரிகளை ஏற்படுத்தியிருக்கிறார். அவருடைய ராஜாங்கத்தில் இந்திரன், வாயு, வருணன், அக்கினி, யமன், ஈசானன், குபேரன், நிர்ருதி முதலிய அஷ்ட திக்பாலகர்களையும் இன்னும் பல தேவதைகளையும் லோகத்தை ஸம்ரக்ஷிக்கும் அதிகாரிகளாக நியமித்திருக்கிறார். அந்த அதிகாரிகள் பதினாலு லோகத்திலும் உள்ள ஜீவராசிகளாகிய பிரஜைகளை ரக்ஷிப்பதற்கு ஒரு சட்டம் வேண்டும் அல்லவா? அந்தச் சட்டந்தான் வேதம். அதன்படி பிரஜைகளான நாம் எப்படி நடப்பது, அதிகாரிகள் எப்படி

பரிபாலனம் பண்ணுவது என்று ஆராய்ச்சி செய்து அறியலாம். லௌகிகத்தில் இம்மாதிரி ஸந்தேஹம் வந்தால் ஜட்ஜுகள் யோசித்துத் தீர்ப்புச் சொல்லுகிறார்கள். வக்கீல்கள் ஆலோசிக்கிறார்கள். அது போல தர்மத்தை அநுஷ்டானம் பண்ணும் வழிகளையெல்லாம் சொல்லும் வேதமாகிற சட்டத்திற்கு அர்த்த நிர்ணயம் பண்ணினவர் ஜைமினி. அதுதான் மீமாம்ஸை.

ஓர் ஊரில் ஒரு வழக்கு வந்தால் அலஹாபாத்தில் இந்த மாதிரி வந்த கேஸில் இந்த மாதிரித் தீர்ப்பு செய்திருக்கிறார்கள், பம்பாயில் இப்படித் தீர்ப்பு பண்ணினார்கள் என்று தெரிந்துகொண்டு அவைகளை அநுசரித்துத் தீர்மானம் செய்கிறார்கள். அதுபோல ஓர் இடத்தில் அர்த்த நிர்ணயம் செய்ததை வேறு சில இடங்களில் எடுத்து அமைத்துக் கொள்ளலாம். இப்படி ஆயிரம் விதமான விஷயங்களை எடுத்துக் கொண்டு எவ்வளவு யுக்தி உண்டோ அவ்வளவினாலும் ஆக்ஷேபணை செய்து அவ்வளவையும் பூர்வபக்ஷம் செய்து நிர்ணயம் செய்வது மீமாம்ஸை. முதலில் ஒரு வேதவாக்கியத்தை எடுத்துக் கொள்வது (விஷயவாக்யா); இரண்டாவதாக அதன் அர்த்தம் இதுவா என்ற கேள்வி (ஸம்சயம்); மூன்றாவதாக எதிர்த்தரப்பிலே அர்த்தம் பண்ணுவது (பூர்வ பக்ஷம்); நாலாவதாக, அந்தத் தரப்பை ஆக்ஷேபிப்பது (உத்தரபக்ஷம்); ஐந்தாவதாக, கடைசியில் இதுதான் தாத்பரியம் என்று முடிவு பண்ணுவது (நிர்ணயம்). ஒவ்வொரு விஷய நிர்ணயம் ஒவ்வொர் அதிகரணமாக இருக்கிறது.

ஜைமினி செய்தவை சின்னசின்ன ஸூத்திரங்களாக இருக்கின்றன. அந்த ஸூத்திரங்களின் அபிப்பிராயத்தை விரிவாக விளக்குவது சாபரபாஷ்யம். சபரர் செய்த பாஷ்யம் 'சாபரம்'. சபரர் என்று வேடர்களுக்குப் பேர் உண்டு. சபரி பூர்வத்தில் வேட ஸ்திரீ என்பார்கள். சபரர் ஈச்வராம்சம் உடையவர். ஈச்வரன் அர்ஜுனனுக்குப் பாசுபதாஸ்திரம் கொடுக்க வேடராக வந்தபோது சபரராகி இந்த வார்த்திகம் செய்தார் என்றும் சொல்வதுண்டு.[2]

ஆயிரம் அதிகரணத்தை உடைமையால் பூர்வமீமாம்ஸைக்கு 'ஸஹஸ்ராதிகரணி' என்று ஒரு பெயர் உண்டு. வேதத்தில் உள்ளவற்றிற்கு அர்த்த நிர்ணயம் செய்கையில் பலவகையாக உள்ள குயுக்திகளைப் போக்கித் தீர்மானம் செய்வது இது.

பூர்வமீமாம்ஸை வேதத்தின் பூர்வகாண்டத்திற்கு அர்த்த நிர்ணயம் செய்வது போல உத்தரகாண்டமாகிய உபநிஷத்துக்களின் அர்த்தத்தை நிர்ணயம் செய்வது உத்தர மீமாம்ஸை. பரமாத்மாவைப் பற்றியும் அதனோடு வேறாகாமல் ஒன்றாவதைப் பற்றியும், இவைப் போன்ற வேறு விஷயங்களைப் பற்றியும் சொல்லுவது உபநிஷத். அந்தச் சட்டத்துக்கு பிரம்ம ஸூத்திரத்தின் மூலம் அர்த்த நிர்ணயம் செய்தவர் வியாஸர். இதிலே வேடிக்கை, இப்படி உத்தர மீமாம்ஸைக்கு ஸூத்ரகாரரான வியாஸரே பூர்வமீமாம்ஸை செய்த ஜைமினியின் குருவாக இருக்கிறார்!

ஞான காண்டமான உத்தர மீமாம்ஸைக்கு ஞான (அத்வைத) மார்க்கப்படியே பூர்ணமாக ஏற்பட்டுள்ள

(தைத்திரீய, பிருஹதாரண்யக) வார்த்திகத்தை எழுதினவர் யாரென்று பார்த்தால், அவர் பூர்வாசிரமத்தில் ரொம்பவும் தீவிரமான பூர்வ மீமாம்ஸைக்காரராக இருந்த ஸுரேச்வராசாரியாளாக இருக்கிறார்! இவரே பிற்பாடு கர்மாவிலிருந்து ஞானத்துக்கு மாறி, (சங்கர) ஆசார்யாளின் சிஷ்யராகி, ஆசார்ய பாஷ்யத்துக்கு வார்த்திகம் எழுதினார். பூர்வாசிரமத்தில் அவருக்கு மண்டன மிச்ரர் என்று பேர். இந்த வியாஸர், ஜைமினி இரண்டு பேரையுமே மண்டனமிச்ரர் திவஸப் பிராமணர்களாக வைத்து ச்ராத்தம் செய்த போதுதான் ஆசார்யாள் அவரிடம் வாதத்துக்குப் போனார் என்று கதை.

[1] பட்ட பாத வார்த்திகத்தின் கருத்துக்களைச் சுருக்கித் திருப்புட்குழி கிருஷ்ண தாத்தாசாரியார் எழுதிய 'பாட்டஸாரம்' இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டது.

[2] சபர பாஷ்யத்தை விவரித்து லக்ஷ்மீபுரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியார் சபர பாஷ்ய பூஷணம் எழுதியிருக்கிறார்.

கடவுட் கொள்கை இல்லை

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

மீமாம்ஸை : கர்ம மார்க்கம்

கடவுட் கொள்கை இல்லை

ஆசார்யாள் ஏன் மீமாம்ஸகரான மண்டனமிச்ரரிடம் வாதச்சண்டை போட வேண்டும்?

மீமாம்ஸையில் ஞானபரமான உத்தர மீமாம்ஸை, கர்ம பரமான பூர்வமான மீமாம்ஸை என்ற இரண்டு இருந்தாலும் பொதுவாக மீமாம்ஸை என்றால் பூர்வ மீமாம்ஸைதான் என்றேன். அதனால் மீமாம்ஸகர் என்றாலே கர்ம மீமாம்ஸகர் தான் என்றாகி விட்டது. அதனால்தான் மண்டன மிச்ரரை மீமாம்ஸகர் என்றது. உத்தர மீமாம்ஸை பொதுவில் 'வேதாந்தம்' எனப்படுவதால் உத்தர மீமாம்ஸகர்களான நாம் எல்லாரும் 'வேதாந்திகள்' எனப்படுகிறோம்.

ஆசார்யாள் வைதிக மதத்தையே திரும்பவும் உயிர்க்களை கொடுத்து ஸ்தாபனம் பண்ணியவர். இப்படிப்பட்டவர் வேதத்துக்கு உபாங்கமாக இருக்கப்பட்ட மீமாம்ஸையை எதற்காக ஆக்ஷேபிக்க வேண்டும்?

இதற்குப் பதில் சொல்லுமுன் மீமாம்ஸையாகத்தான் இருக்கட்டும், வேறு எந்த சாஸ்திரமாகத்தான் இருக்கட்டும். அது எந்த லக்ஷ்யத்தை உத்தேசித்தது என்று பார்ப்போம்.

ஒரு சாஸ்திரம் என்றால் அது ஈச்வரனிடம் கொண்டு விடவேண்டும். நம் சாஸ்திரங்கள் யாவும் அப்படிப்பட்டனவே என்று சொன்னேன். Grammar, dictionary, யாப்பிலக்கணம் இதுகளும்கூட அப்படிப்பட்டவை என்பதால்தான் சதுர்தச வித்யா ஸ்தானங்களில் இவற்றை வைத்தார்கள் என்று சொன்னேன். இப்போது, பூர்வ மீமாம்ஸையில் உள்ள கடவுள் தத்துவம் என்ன?

இதைத் தெரிந்து கொள்ளும் முன் நம் ஆசார்யாள் பூர்ணமாக ஸம்மதித்து பாஷ்யம் பண்ணிப் பிரசாரம் செய்த வேதாந்தத்தில் (உத்தர மீமாம்ஸையில்) கடவுள்

தத்துவம் எப்படியிருக்கிறதென்று பார்த்து விடலாம். நமக்கு முக்கியம் ஆசார்யாள்; ஆசார்யாளுக்கு முக்கியம் வியாஸாசார்யாளுடைய பிரம்மஸூத்ரம். அது என்ன சொல்கிறது?

'ஈச்வரன் யார்? அவனுக்கு உரிய லக்ஷணங்கள் என்ன?' என்பதைப் பற்றி வேதாந்தத்தை விளக்கும் முக்யமான சாஸ்திரமாக வியாஸாசாரியாள் பண்ணின பிரம்ம ஸூத்ரம் என்ன சொல்கிறது என்று பார்க்கலாம்.

பிரம்மஸூத்ரம் ஜீவாத்மாவைப் பற்றிச் சொல்கிறபோது, "கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்வாத்" என்கிறது. சாஸ்திரங்கள் அநேக விதமான கர்மாக்களை ஒரு ஜீவனுக்கு விதித்திருப்பதால் அவன் காரியம் செய்ய அதிகாரம் பெற்ற "கர்த்தா" என்று இதற்கு அர்த்தம். ஆனால் ஜீவன் காரியாதிகாரியான கர்த்தா மட்டுமேதான்; பலனுக்கு அதிகாரியில்லை. அதாவது, அவன் தானே தன் காரியங்களுக்குப் பலனைக் கொடுத்துக் கொள்ள முடியாது. அப்படிக் கொடுப்பது லோகத்தையே உண்டு பண்ணியிருக்கிற ஜகத்கர்த்தாவான ஈச்வரன்தான். (இந்தக் 'கர்த்தா'வை எடுத்துக் கொண்டுதான் அந்நிய மதஸ்தர்களும் 'கர்த்தர்' என்கிறார்கள்.) ஜீவாத்மாவும் ஒரு தினுஸில் கர்த்தாவாயிருந்தாலும் அவன் செய்கிற நல்ல காரியம், தப்புக் காரியம் எல்லாவற்றுக்கும் தகுந்தபடி பலனைக் கொடுப்பது பரமாத்மாவான ஈச்வரன்தான். இதையும் பிரம்ம ஸூத்ரம் சொல்கிறது – "பலமத உபபத்தே:" என்று.

கர்ம பலன்களைக் கொடுக்கிற "பல தாதா" ஈச்வரன். மனோ, வாக்கு, காயங்களினால் நல்லதை நினைக்கிறோம்; செய்கிறோம். கெட்டதையும் நினைக்கிறோம்; செய்கிறோம். இவை எல்லாவற்றையும் ஈச்வரன் கவனித்துக் கொண்டிருந்து அந்தந்த கர்மத்திற்கேற்ற பலனைக் கொடுக்கிறான். இப்படி, கர்த்தாவான ஜீவாத்மாவுக்குப் பலதாதாவாக இருப்பது, ஜீவாத்மாக்கள் காரியம் பண்ணும் ஜகத்தின் கர்த்தாவாகவே இருப்பது – என்ற இரண்டு லக்ஷணங்கள் ஈச்வரனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது நம் ஆசார்யாளுடைய வேதாந்த மதமாகிய உத்தர மீமாம்ஸைப்படி.

'மீமாம்ஸை' என்றே வழங்கும் 'பூர்வ மீமாம்ஸை'யில் – அதாவது இப்போது நாம் எடுத்துக் கொண்டிருக்கிற வேத உபாங்கத்தில் – ஈச்வரனைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறது?

நம் தேசத்தில் வேதத்தை அநுசரித்துக் கொண்டிருக்கும் மதஸ்தர்களில்தான் ஸாங்கியர், மீமாம்ஸகர் என்ற இரண்டு வகையினரும் உள்ளனர். அவர்களில் ஸாங்கிய மதத்தைச் சேர்ந்தவர், 'ஈச்வரன் ஜகத்துக்குக் கர்த்தா அல்ல' என்று தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள். 'ஈச்வரன் ஞானஸ்வரூபி. இந்த ஜகத் வெறும் கல் மண்ணாலாகிய ஜடப் பொருள். ஞானப் பொருள் ஜடப் பொருளுக்குக் காரணமாகாது. ஆகவே ஈச்வரனை ஜகத்துக்குக் கர்த்தா என்று சொல்வது தப்பு. ஈச்வரன் கர்த்தாவே அல்ல' என்று ஸாங்கிய மதஸ்தர் நிர்த்தாரணம் பண்ணப் பார்க்கிறார்கள்.

ஜகத்தில் பட்டுக்கொள்ளாமலும், காரியமே இல்லாமலும் கேவல (சுத்த) ஞானமாயிருக்கிற ஈச்வரனை ஸாங்கியர்கள் 'புருஷன்' என்பார்கள். இந்தப் புருஷன்தான் நம் ஆசார்யாள் முடிந்த முடிவாகச் சொல்லும் நிர்குணப் பிரம்மம். ஆனாலும் ஆசார்யாள் இதுவே மாயையினால் ஸகுணப் பிரம்மமான ஈச்வரனாகவும் இருந்து கொண்டு ஜகத் ச்ருஷ்டி முதலான வியவகாரங்களைச் செய்வதாகத் தோன்றுகிறது என்று சொல்லி ஸாங்கியர்களை ஆக்ஷேபித்தார்.

மீமாம்ஸகர்கள் வேதத்தில் சொல்லியிருக்கும் கர்மாநுஷ்டானங்களுக்கு மட்டுமே பிராதான்யம் கொடுப்பவர்கள். 'ஜகத் ச்ருஷ்டிக்கு ஈச்வரன் கர்த்தாவா இல்லையா?' என்பதைப் பற்றி அவர்கள் எதுவும் சொல்லவில்லை. அவர்களைப் பொறுத்த மட்டில் இது அவசியமில்லாத விஷயம். ஆனால் 'ஈச்வரன் பலதாதா அல்ல' என்பதை மீமாம்ஸகர்கள் பலமாகச் சொன்னார்கள். இவர்கள் ஜகத்துக்கு ஈச்வரன் கர்த்தாவா அல்லவா என்று சண்டை போடவில்லை. "நாம் செய்கிற நல்ல காரியங்களுக்கும் கெட்ட காரியங்களுக்கும் ஏற்ற பலனைக் கொடுக்கிறவன் ஈச்வரன் என்பது தப்பு. அவன் பலதாதா அல்ல; அந்தந்தக் காரியமே அதனதன் பலனைக் கொடுத்துக் கொள்கிறது" என்றார்கள்.

ஆகவே ஈச்வரனைப் பற்றி நம்முடைய வேதத்திலும் பிரம்மஸூத்திரத்திலும் சொன்ன இரண்டு லக்ஷணங்களையும் இந்த ஸாங்கிய மதஸ்தர்கள், மீமாம்ஸகர்கள் ஆகிய இரண்டு பேரும் ஆளுக்கு ஒன்றாகத் தள்ளிவிட்டார்கள்.

மீமாம்ஸகர்கள் ஈச்வரன் பலதாதா அல்ல என்று சொன்னதற்குக் காரணம், நாம் செய்கிற கர்மாக்களே நமக்குப் பலனை அளிக்கின்றன என்று அவர்கள் கருதியதனால்தான். வேத சாஸ்திரங்கள் எந்தக் கர்மாவை அநுஷ்டித்தால் புண்ணியம் வரும் என்று சொல்லியிருக்கின்றனவோ அந்தக் கர்மாவை அநுஷ்டித்தால் புண்ணியம் வருகிறது. எதைச் செய்தால் பாவம் ஸம்பவிக்கும் என்று அவை சொல்லுகின்றனவோ அதைச் செய்தால் பாவம் ஸம்பவிக்கிறது. இப்படி நாம் செய்கிற கர்மாக்களே நமக்குப் பலனை அளிக்கின்றனவே தவிர ஈச்வரன் பலதாதா அல்ல என்று இவர்கள் சொன்னார்கள்.

வேதத்தை ஒப்புக் கொண்டிருக்கிற மதங்களுக்குள்ளேயே, 'ஈச்வரன் ஜகத்துக்குக் கர்த்தா அல்ல. அவன் பலதாதா அல்ல' என்று சொன்ன மதங்கள் இந்த ஸாங்கிய மதமும் மீமாம்ஸக மதமுந்தான்.

பௌத்தத்தை வென்ற நியாமும் மீமாம்ஸையும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

மீமாம்ஸை : கர்ம மார்க்கம்

பௌத்தத்தை வென்ற நியாமமும் மீமாம்ஸையும்

ஆசார்யாள் அவதாரம் பண்ணி புத்த மதத்தைக் கண்டனம் பண்ணினதால்தான் அது இந்த தேசத்தை விட்டே போயிற்று என்று பலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது தப்பு. வேதத்தை ஆக்ஷேபித்த புத்த மதத்தை அவர்

ஸ்வதந்திரமாகக் கண்டனம் செய்கிற இடங்கள், அவர் பாஷ்யங்களைப் பார்த்தால் மிகவும் சொல்பமாகவே இருக்கும். அதைவிட அநேக மடங்கு அதிகமாக நம் ஆசார்யாள், வேதத்தை அநுஸரித்த ஸாங்கியமதம், மீமாம்ஸக மதம் இவற்றைத்தான் கண்டித்திருக்கிறார். இவை இரண்டைச் சேர்ந்தவர்களும், 'ஜகத்துக்கு கர்த்தா ஈச்வரன் அல்ல; அவன் பலதாதா அல்ல' என்று சொல்கிறார்களே என்பதால், அவர்களுடைய தத்துவத்தைப் பற்றியே நிறைய விசாரித்து, 'அப்படிச் சொல்வது தப்பு. வேத வாக்கியப்படி, பிரம்ம ஸூத்திரப்படி சொல்லியிருக்கிற லக்ஷணங்கள்தாம் உண்மையானவை' என்று நிர்த்தாரணம் செய்தார். 'ஈச்வரன் இல்லாமல் ஜகத் உண்டாகாது. நாம் செய்கிற கர்மாக்களே நமக்குப் பலனைக் கொடுக்கும் என்று சொல்ல முடியாது. ஈச்வரன்தான் பலனைக் கொடுக்கிறான். அவனுடைய சைதன்யந்தான், ஸங்கல்பந்தான் உலகத்தை சிருஷ்டித்து, அவரவர்களுடைய கர்மாக்களுக்கு ஏற்ற பலனைக் கொடுக்கிறது' என்று ஸாங்கிய மதத்தையும் மீமாம்ஸக மதத்தையும் எதிர்த்து நிறைய எழுதியிருக்கிறார். புத்த மதத்தைக் கண்டனம் பண்ணி எழுதியிருக்கும்படியாகத் தோன்றும் சில இடங்களிலுங்கூட, ஸூத்ரம் அப்படி இருப்பதனால் அதற்கேற்றபடி பாஷ்யம் எழுதியிருக்கிறார். ஆசார்யாள் புத்தமதத்தைக் கண்டித்ததால் தான் புத்த மதம் இந்தத் தேசத்தைவிட்டே போயிற்று என்று சொல்வதற்கு அவர் பாஷ்யத்தில் ஆதாரம் இல்லை என்று சொல்ல வந்தேன்.

பின்னே புத்த மதம் நம் தேசத்தில் ஏன் இல்லாமல் போயிற்று? யாரோ கண்டனம் பண்ணித்தானே அது போயிருக்க வேண்டும்? அப்படி புத்த மதத்தை பலமாகக் கண்டித்தது யார்?

மீமாம்ஸகர்களும், தார்க்கிகர்களும்தான்.

தர்க்க சாஸ்திரத்தில் வல்லவர்கள் 'தார்க்கிகர்'கள். பதினாலு வித்யைகளில் 'மீமாம்ஸை'க்கு அடுத்ததாக வரும் 'நியாய சாஸ்திர'த்தைச் சேர்ந்தே 'தர்க்கம்'. நியாய சாஸ்திர வல்லுநர்களுக்கு 'நையாயிகர்' என்று பெயர். வியாகரணத்தில் வல்லவர்களுக்கு 'வையாகரணி' என்று பெயர். புராணத்தில் வல்லவர் 'பௌராணிகர்'.

தார்க்கிகரான உதயனாசாரியர், மீமாம்ஸகரான குமாரில பட்டர் என்னும் இரண்டு பேருமே ஒவ்வொரு காரணத்திற்காக பௌத்த மதத்தை பலமாகக் கண்டித்திருக்கிறார்கள்.

ஈச்வரன் என்று ஒருத்தன் இல்லை என்று சொன்னதற்காக உதயனாசாரியார் புத்த மதத்தை பலமாகக் கண்டித்தார். மீமாம்ஸகர்களுக்கு வேதத்தில் சொல்லப்பட்ட கர்மாநுஷ்டானங்களே பிரதானம் என்று சொன்னேன். 'ஈசுவரன் பலதாதா அல்ல' என்று இவர்கள் சொன்னாலும், 'நாம் செய்கிற கர்மாநுஷ்டானங்கள் பலனைத் தருகின்றன. வேத தர்ம சாஸ்திரங்களை எல்லாம் சிரத்தையுடன் அநுஷ்டிக்க வேண்டும்' என்பவர்கள் அல்லவா? எனவே அநுஷ்டானம் ஒன்றுமே வேண்டாம் என்று புத்த மதத்தினர் சொன்னதற்காக, புத்த மதத்தை மீமாம்ஸகர்களும் பலமாகக் கண்டித்தார்கள்.

குமாரிலபட்டர் அதைக் கண்டித்துப் பல இடங்களில் நிறைய எழுதியிருக்கிறார். உதயனாசாரியர், குமாரில பட்டர் இவர்களால்தான் பௌத்தர்களுடைய கொள்கைகள் வித்வத் ஜனங்களுடைய மனஸில் பரவுவதற்கு இல்லாமல் நின்று போயின. பிறகுதான் நம் ஆசார்யாள் வந்தார்கள். பௌத்தத்தை ஏற்கெனவே உதயனரும் குமாரிலரும் கண்டித்து விட்டதால் அதை ஆசார்யாள் விசேஷமாக எடுத்துக் கொள்ள அவசியம் இருக்கவில்லை. இந்த உதயன-குமாரிலர்களின் ஸித்தாந்தங்களிலும் தப்புக்கள் இருக்கின்றன என்று எடுத்துக் காட்டி அவற்றைக் கண்டனம் செய்வதே ஆசாரியாளுக்கு முக்ய வேலையாயிற்று. ஆசாரியாள், 'ஈச்வரன்தான் ஜகத்துக்கெல்லாம் கர்த்தா; அவன்தான் பலதாதா' என்று நிர்த்தாரணம் பண்ணி வைத்தார்.

தப்பான விஷயங்களைக் கேட்டு உங்களுக்கு உண்மை தெரியாமல் போகக்கூடாது என்பதற்காக இதைச் சொன்னேன். குமாரிலபட்டர் 'தர்க்கபாதம்' என்னும் அத்தியாயத்தில் பௌத்தத்தை நிறையக் கண்டித்திருக்கிறார். உதயனாசாரியாரும் 'பௌத்தாதிகாரம்' என்று தம் நூலில் அவர்களைப் பற்றியே கண்டித்து எழுதியிருக்கிறார். புத்த மதம் இந்த தேசத்தில் நலிந்து போனதற்குக் காரணம் முக்யமாக இந்த இருவர்தான்; சங்கர பகவத்பாதாள் அல்ல. நாம் ஹிஸ்டரிப் புஸ்தகத்தில் படித்தது தப்பு .

[பௌத்தமும் பாரத ஸமுதாயமும்](#)

மீமாம்ஸை : கர்ம மார்க்கம்

பௌத்தமும் பாரத ஸமுதாயமும்

என் அபிப்ராயப்படி ஒரு காலத்திலும் பௌத்த மதத்தை பூர்ணமாக அநுஷ்டித்தவர்கள் நம் தேசத்தில் ஏராளமாக இருந்துவிடவில்லை. இப்போது சில பேர் தியாஸாஃபிகல் ஸொஸைட்டியில் சேர்ந்திருக்கிறார்கள். ஆனாலும் ஹிந்துக்கள் மாதிரியேதான் பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள்; கல்யாணம் முதலானவற்றைப் பண்ணுகிறார்கள். ராமகிருஷ்ண பரமஹம்ஸாவின் பக்தர்களாகச் சிலர் இருக்கிறார்கள். இவர்களும் பெரும்பாலும் ஸம்பிரதாயமான ஆசாரங்களைத்தான் பின்பற்றி வருகிறார்கள். ஸ்ரீ ஸி. ராமாநுஜாசாரியார், இப்போது "அண்ணா" (ஸ்ரீ என். ஸுப்ரமண்ய அய்யர்) முதலானவர்கள் ராமகிருஷ்ணா மிஷனில் நெருங்கின ஸம்பந்தமுள்ளவர்களாயிருந்தாலும், ஸம்பிரதாயமான ஆசார அநுஷ்டானங்களை விடாதவர்கள்தான். இப்படியே பல பெரியவர்கள் தோன்றுகிறபோது அவர்களுடைய கருணை, ஞானம் முதலான குணங்களால் அநேகர் ஆகர்ஷிக்கப்படுகிறார்கள். இருந்தாலும் அவர்கள் பேரிலேயே ஏற்பட்டிருக்கிற ஸ்தாபனங்களில் ஸநாதன வைதிக ஆசாரங்களை கொஞ்சமோ நிறையவோ மாற்றியிருப்பதுபோல், இந்த பக்தர்கள் தங்கள் அகங்களில் செய்வதில்லை. பழைய ஆசாரங்களைத்தான் அநுஸரித்து வருகிறார்கள். காந்தி, காந்தீயம் என்று எல்லாரும் இவரையும் ஒரு மதஸ்தாபகர் மாதிரி ஆக்கி, ராம-கிருஷ்ணாதி அவதாரங்களைவிடக் கூட காந்தி தான் பெரியவர் என்றெல்லாம் சொன்னாலும், இவர்களிலும்

பெரும்பாலோர் சொந்த வாழ்க்கையில் காந்தி சொன்ன மாதிரி விதவா விவாஹம், பஞ்சமர்களோடு [ஹரிஜனங்களோடு] தொட்டுக்கொண்டு இருப்பது என்ற விஷயங்களில் காந்தீயத்தைக் கடைப்பிடிக்காமல்தானே இருக்கிறார்கள்? சொந்த வாழ்க்கையில் தியாகம், ஸத்யம், பக்தி, தொண்டு முதலான நல்ல அம்சங்கள் காந்தியிடம் இருந்ததால் அவரிடம் எல்லாருக்கும் மதிப்புணர்ச்சி ஏற்பட்டதால் அவர் சொன்ன கொள்கைகள் எல்லாவற்றிலும் இவர்களுக்குப் பிடிப்பு ஏற்பட்டதாக ஆகவில்லை. இப்படித்தான் புத்தரைப் பற்றியும் அவருடைய தனி வாழ்க்கையின் (personal life -ன்) உயர்வைப் பார்த்து, 'ஒரு ராஜகுமாரர் நல்ல யௌவனத்தில், லோகத்தில் கஷ்டமில்லாமல் பண்ண வேண்டும் என்ற ஒரே எண்ணத்துக்காகப் பத்தினியையும், புத்ரனையும் விட்டுவிட்டு ஓடினாரே! என்ன வைராக்யம்? என்ன தியாகம்? எவ்வளவு கருணை?' என்று அவரிடம் மதிப்பு வைத்துக் கொண்டாடியிருக்கிறார்கள். இதனால் அவர் சொன்ன பௌத்தக் கொள்கைகளை எல்லாம் அவர்கள் ஒத்துக்கொண்டு அநுசரிக்க ஆரம்பித்ததாக அர்த்தமில்லை. வைதிக அநுஷ்டானங்களை புத்தர் கண்டித்தார் என்பதற்காக பெரும்பாலோர் இவற்றை விட்டு விடவில்லை. வர்ண விபாகம் [ஜாதிப் பகுப்பு], மற்ற யக்ஞாதி கர்மாக்கள் இவற்றைப் பண்ணிக் கொண்டே புத்தரையும் அவருடைய personal qualities- காக [தனி மனித குணநலன்களுக்காக]க் கொண்டாடி வந்திருக்கிறார்கள். புத்தர் ஆசைப்பட்ட மாதிரி கூட்டம் கூட்டமாக எல்லாருமே புத்த பிக்ஷுக்களாகிவிடவில்லை. வைதிக

ஸமயாசரங்களுடன் கிருஹஸ்தர்களாகவே இருந்து வந்தார்கள்.

அசோக சக்ரவர்த்தி தாம் பௌத்தராக இருந்து பௌத்தத்துக்காக எவ்வளவோ பண்ணியிருந்துங்கூட, ஸமூகத்தில் வைதிக தர்மங்களை மாற்றவில்லை. வர்ணாச்ரம தர்மத்தை அவரும் ரக்ஷித்தே வந்திருக்கிறார் என்று அவருடைய புகழ் பெற்ற ஸ்தம்பங்கள், Edicts -லிருந்து தெரிகிறது. புத்த பிக்ஷுக்களைத் தவிர கிருஹஸ்தர்கள் பெரும்பாலும் வேத வழியைத் தான் அநுசரித்திருக்கிறார்கள். ஈச்வரனைப் பற்றியும் தெய்வங்களைப் பற்றியும் புத்தர் சொல்லாவிட்டாலும், பெரிய புத்த பிக்ஷுக்கள் எழுதிய புஸ்தகங்களில்கூட ஆரம்பத்தில் ஸரஸ்வதி ஸ்துதி இருக்கிறது. தாரா, நீலதாரா மாதிரி அநேக தெய்வங்களை அவர்கள் வழிபட்டிருக்கிறார்கள். திபெத் பக்கங்களிலிருந்துதான் தேவதாராதனத்துக்கான ஏராளமான தந்த்ர நூல்கள் கிடைத்திருக்கின்றன. ஹர்ஷன், பில்ஹணன் முதலியவர்களுடைய ஸம்ஸ்கிருத கிரந்தங்களையும், இங்கே இளங்கோ முதலியவர்களின் காப்பியங்களையும் பார்த்தால் ஸமுதாயத்தில் பௌத்தர் செல்வாக்கோடு இருந்த காலங்களிலும் வைதிக ஆசாரங்களும், வர்ணாசிரம விதிகளும் வழுவாமலே அநுசரிக்கப்பட்டுத்தான் வந்தன என்று தெரிகிறது.

இப்போது இதற்கு மாறாகச் சீர்திருத்தக்காரர்களும் வியாஸர், ஆசார்யாள், ராமாநுஜர் ஆகியோரைப் புகழ்கிறார்கள். இப்போது நான் சொல்கிற அநேக ஆசாரங்களை ஏற்றுக்கொள்ளாத சீர்த்திருத்தக்காரர்கள்கூட

என்னிடம் வருகிறார்கள் அல்லவா? என்னிடம் ஏதோ நல்லது இருப்பதாக நினைத்துக் கொண்டிருப்பதால்தானே, நான் சொல்கிற கொள்கைகளை ஒப்புக் கொள்ளாவிட்டால்கூட ஒரு personal regard [மனிதர் என்ற தனிப்பட்ட முறையில் மரியாதை] காட்டுகிறார்கள்? இந்த மாதிரிதான் இந்த தேசத்தில் வைதிக சமயாசாரத்துக்கே கொஞ்சம் வித்யாஸமுள்ள கொள்கைகளை சொன்ன பெரியோர்களிடமும், ரொம்பவும் வித்யாஸப்பட்டு ஆக்ஷேபித்தே சண்டை போட்ட பெரியவர்களிடமுங்கூட, அவர்களுடைய சொந்த குணத்துக்காகவும் தூய்மையான வாழ்க்கைக்காகவும் எல்லோரும் மரியாதைச் செலுத்தி வந்திருக்கிறார்கள். ஆனாலும் மரத்திலே வஜ்ரம் பாய்ந்த மாதிரி நீண்ட நெடுங்காலமாக ஊறி உறைந்து உறுதிப்பட்டு விட்ட வைதிக ஸமய அநுஷ்டானங்களை விட்டு விடுகிற துணிச்சல் இந்தக் கடைசி ஒரு நூற்றாண்டு வரையில் நம் ஜனங்களுக்கு ஏற்படவில்லை. ஆகவே ஸகல ஜாதியினரும் அப்பன், பாட்டன், முப்பாட்டன் காலத்திலிருந்து வந்திருக்கிற ஆசாரங்களைத்தான் விடாமல் தொடர்ந்து வந்திருக்கிறார்கள். புத்தர் ஸமாசாரமும் இப்படித்தான் என்பது என் அபிப்ராயம். இதனால் அவர் கொள்கைகளை உதயனர், குமாரிலர் முதலானவர்கள் கண்டனம் பண்ணினவுடன், புத்தருடைய கொள்கைகளை முழுக்க ஒப்புக் கொண்டிருந்த கொஞ்சம் பேரும்கூடச் சட்டென்று அதை விட்டுவிட்டு பழைய வைதிகமான வழிக்கே திரும்பி வந்திருக்கிறார்கள்.

சங்கரரும் இதர ஸித்தாந்தங்களும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

மீமாம்ஸை : கர்ம மார்க்கம்

சங்கரரும் இதர ஸித்தாந்தங்களும்

வைதிக காரியங்களை எல்லாம் விட்டு விட்டுத் தத்வம் என்ன என்று தியானம் பண்ணிக் கொண்டு உட்காருவதைத்தான் ஆசார்யாள் முடிந்த முடிவான நிலையில் சொன்னார். ஆனால் புத்தரைப்போல, ஆரம்ப தசையிலேயே எல்லாரும் வேதகர்மாவை விட்டுவிட வேண்டும் என்று சொல்லவில்லை. ஆரம்பத்தில் நிறையக் கர்மா பண்ணிப் பண்ணி, அதனால் சித்த சுத்தி அடைந்த அப்புறந்தான் அதைவிட்டு ஆத்ம விசாரம் பண்ணவேண்டும் என்றார். முதலில் மீமாம்ஸை சொல்கிற கர்மாவை ஒப்புக்கொண்டே கடைசியில் பௌத்தம் சொல்கிற கர்மாவை விட்ட நிலைக்குப் போகவேண்டும் என்றார்.

பௌத்தம், மீமாம்ஸை, ஸாங்கியம், நியாயம் எல்லாவற்றையும் ஒரு நிலையில் ஒப்புக்கொண்டு இன்னொரு நிலையில் ஆக்ஷேபித்தவர் நம் ஆசார்யர்கள். இவை ஒவ்வொரு அம்சத்தையே முடிந்த முடிவாகப் பிடித்துக் கொண்டிருந்தன என்றால் ஆசார்யாள் இந்த எல்லா அம்சங்களையும் சேர்த்து harmonise பண்ணி [இசைவித்து]க் கொடுத்தார்.

ஸாங்கியம்

மீமாம்ஸை : கர்ம மார்க்கம்

ஸாங்கியம்

ஸாங்கியத்தில் எதிலேயும் பட்டுக் கொள்ளாததான - ஆனால் எல்லாவற்றுக்கும் ஆதாரமான - ஆத்மாவைப் 'புருஷன்' என்றும், எல்லாவற்றையும் நடத்தி வைக்கிற சக்தியான மாயையை 'ப்ரக்ருதி' என்றும் சொல்லியிருக்கிறது. ப்ரக்ருதி உள்படப் பிரபஞ்சம் என்பது 24 தத்வங்களில் அடங்கியிருக்கிறது என்று ஸாங்கியம் சொல்கிறது. பிரகிருதி என்பது முதல் தத்வம். அதற்கு 'ப்ரதானம்' என்றும் ஒரு பேர். அதிலிருந்து மஹத் என்ற இரண்டாவது தத்வம் வருகிறது. மநுஷ்யனின் புத்தி மாதிரிப் பிரிகிருதியின் புத்திதான் மஹத். 'மஹத்'திலிருந்து மூன்றாவது தத்வமாக 'அஹங்காரம்' உண்டாகிறது. தான் என்று தனியாக ஒன்று இருக்கிறது என்ற உணர்ச்சி (ego) தான் அஹங்காரம். அஹங்காரம் இரண்டாகப் பிரிகிறது. ஒரு பக்கம் சைதன்யமுள்ள [உயிரும் அறிவும் உள்ள] ஜீவனாகி அவனுடைய மனஸாகவும் ஐந்து ஞானேந்திரியங்களாகவும், ஐந்து கர்மேந்திரியங்களாகவும் ஆகிறது. இன்னொரு பக்கம் ஜடப் பிரபஞ்சத்திலே ஐந்து தன்மாத்ரைகளாகவும், ஐந்து மஹா பூதங்களாகவும் ஆகிறது. ஜீவனின் ஞானேந்திரியங்கள் என்பவை வெளியில் உள்ள வஸ்துக்களைப் பற்றி இவனுக்கு அறிவிக்கிற ஐந்து உறுப்புக்கள். வெளியில் உள்ளதைப் பார்க்கிற கண், முகர்கிற மூக்கு, ருசிக்கிற வாய், கேட்கிற காது, தொடுகிற சர்மம் என்கிற ஐந்தும் ஞானேந்திரியம். ஜீவனே நேராகக் காரியம் செய்ய உதவுபவை கர்மேந்திரியங்கள். இங்கேயும்

வாய் இருக்கிறது. வெளியிலே உள்ள ருசியை ஜீவனுக்கு அறிவிக்க உபயோகப்பட்ட ஞானேந்திரியமான வாய் பேசுவது என்ற கர்மாவை செய்வதால் கர்மேந்திரியமாகவும் இருக்கிறது. பல காரியங்களைச் செய்ய உதவும் கை ஒரு கர்மேந்திரியம். நடக்கிற கால், மலஜல விஸர்ஜனம் செய்கிற அவயவம், ஜனனேந்திரியம் ஆகியன மற்ற மூன்று கர்மேந்திரியங்கள். ஞானேந்திரியங்களுக்கு ஆசிரயமாக சப்தம் (காது) , ஸ்பரிசம் (சர்மம்) , ரூபம் (கண்) , ரஸம் அல்லது சுவை (வாய்) , கந்தம் என்ற வாஸனை (மூக்கு) என்ற ஐந்து சூக்ஷமமாக இருக்கின்றன அல்லவா? இந்த ஐந்துமே தன்மாத்ரைகள். இந்த தத்வங்கள் ஜடமாக விரிந்திருக்கும் ஆகாசம் (சப்தம்) , வாயு (ஸ்பரிசம்) , அக்னி (ரூபம்) , ஜலம் (ரஸம்) , பிருத்வி (கந்தம்) என்பவை ஐந்து மஹாபூதங்கள். இப்படியாக பிரகிருதி, மஹத், அஹங்காரம், மனம், ஐந்து ஞானேந்திரியம், ஐந்து கர்மேந்திரியம், பஞ்ச தன்மாத்திரைகள், பஞ்ச மஹாபூதங்கள் என்று மொத்தம் 24 இருக்கின்றன. [1]

இந்த இருபத்து நாலையும் அத்வைத வேதாந்தமும் ஒப்புக் கொள்கிறது. ஆனால் ஈச்வரன் என்கிற ஒருவன் (ஸகுண ப்ரம்மம்) தான் நிர்குணமான புருஷனையும் (ஆத்மாவையும்) பிரகிருதியையும் (மாயையையும்) சேர்த்து வைக்கிறவன் என்பதை அத்வைதம் சொல்கிறதே ஒழிய ஸாங்கியம் ஈச்வரனைப் பற்றிச் சொல்லவில்லை.

அத்வைதம் முதலிய எல்லா வேதாந்த ஸம்பிரதாயங்களும் ஒப்புக் கொள்ளும் ஸத்வ-ரஜோ-தமோ குணங்களை ஸாங்கியம் சொல்கிறது. தெளிந்த

சாந்தமான உயர்ந்த நிலை ஸத்வம். ஒரே வேகமும் சலனமுமாக இருக்கும் நிலை ராஜஸம் (ரஜோகுணம்) . சோம்பல், தூக்கம், ஜடத்தன்மை ஆகியன தாமஸம் (தமோ குணம்) . கீதையில் "குணத்ரய விபாக யோக"த்தில் இவற்றைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறது. "முக்குணங்களையும் கடந்த ஆத்மாவிலேயே நிலையாக நில்லு" (நிஸ்த்ரைகுண்யோ பவ) என்று கீதை ஆரம்பத்திலேயே பகவான் சொல்கிறார் (II.45). ஸாங்கியத்திலும் முக்குணங்களின் ஏற்றத்தாழ்வால்தான் எல்லா அனர்த்தங்களும் உண்டாவதாகவும், இவற்றை ஸமமாக்கி நிறுத்திவிடவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறது. ஆனால் கீதாதி சாஸ்திரங்களைப் போல இப்படிப் பண்ணிக் கொள்வதற்கு ஈஸ்வர ஆராதனை, சரணாகதி, ஞானவிசாரம் மாதிரியான எதையும் அது சொல்லவில்லை.

புருஷனுக்குத்தான் ஜீவசைதன்யம் இருக்கிறது. பிரகருதி ஜடந்தான். அதனால் பிரகிருதி தானாக எதுவும் பண்ண முடியாது. அது 24 தத்வங்களாகப் பரிணமிப்பது சைதன்ய புருஷனின் ஸாந்நியத்தால்தான் என்றும், ஆனாலும் புருஷன் பிரகிருதி ஸம்பந்தமேயில்லாத கேவல ஞானஸ்வரூபி என்றும் ஒன்றுக்கொன்று முரணாகச் சொல்கிறது ஸாங்கியம்.

'கேவலம்' என்றால் பிறக்கலப்பு இல்லாமல் தன்னந்தனியாக, ஸ்வச்சமாக இருப்பது என்று அர்த்தம். இதற்கு அட்ஜெக்டிவ்தான் 'கைவல்யம்' என்பது. 'கைவல்யம்' என்பதே ஸாங்கியத்தில் மோக்ஷம் என்பதற்குக் கொடுத்துள்ள பெயர். ஜீவனானவன் இருபத்து

நாலு தத்வங்களையும் தள்ளிவிட்டு, ஜடத்திலிருந்து விடுபட்டு, சைதன்யமான புருஷனின் தனித்த ஸ்வச்ச நிலைமையில் இருப்பதே கைவல்யம். (தமிழில் எப்படியோ "கேவலம்" என்றால் மட்டமானது, தாழ்வானது என்ற அர்த்தம் ஏற்பட்டு விட்டது) .

இப்படிப் புருஷன் என்கிற ஆத்மாவிலேயே நிலைத்து, மற்ற எல்லாவற்றையும் மாயை என்று தள்ளவிடுவதுதான் அத்வைதத்தின் லக்ஷயமும் ஆகும். ஆனால் அதற்கு ஆசார்யாள் கர்மா, உபாஸனை, (பக்தி) , அப்புறம் ஞான விசாரம் என்று வழிபோட்டுக் கொடுத்த மாதிரி ஸாங்கியத்தில் இல்லை. தள்ள வேண்டியதான 24 தத்வங்களின் விசாரம்தான் அதில் அதிகமிருக்கிறது.

இன்னொரு குறை. புருஷன் (ஆத்மா) காரியமில்லாத கேவல ஞானம், பிரகிருதி காரியமுள்ள ஆனால் ஞானமில்லாத, ஜீவசைதன்யமில்லாத ஜடம் என்று ஒரேடியாகப் பிரித்துவிட்டு, இந்த ஜடம் எப்படி மற்ற தத்வங்களாகப் பரிணமிக்க முடியும் என்பதற்குச் சரியாகக் காரணம் சொல்ல முடியாமல், ஜீவ சைதன்யமுள்ள புருஷனின் சாந்நியத்தால் மட்டுமே இது நடக்கிறது என்று ஸாங்கியத்தில் சொல்லியிருப்பது திருப்தியாக இல்லை. "காரியமேயில்லாதது புருஷன் என்று சொல்லிவிட்டு அதன் ஆதாரத்தில்தான் பிரகிருதி காரியம் செய்கிறது என்று சொல்கிறீர்களே! இது எப்படி?" என்று கேட்டால் ஸாங்கியர்கள், "ஒரு காந்தம் ஒரு இடத்தில் இருப்பதாலேயே இரும்புத் துண்டுகள் ஆடி அசையவில்லையா? காந்தம் அவற்றை அசைக்க வேண்டும் என்று உத்தேசிக்கிறதா என்ன? அது பாட்டுக்கு

இருக்கிறது. அப்படி இருப்பதாலேயே இரும்புத் துண்டுகள் அசைகின்றன. இப்படித்தான் புருஷன் தன் பாட்டுக்கு இருந்தாலே போதும். அதன் சைதன்ய விசேஷத்தால் பிரக்ருதி ஆடுகிறது. புருஷனும் பிரகிருதியும் முடவனைப் பொட்டையன் தூக்கிக் கொண்டு போகிற மாதிரிச் சேர்ந்து காரியம் பண்ணுகின்றன. முடவனால் நடக்க முடியாது. குருடனால் பார்க்க முடியாது. அதனால் குருடன் தோள்மேல் ஏறிக்கொண்டு முடவன் வழிசொல்ல, அதன்படி குருடன் நடக்கலாம். இப்படித்தான் காரியம் பண்ண முடியாத, ஆனால் ஞான மயமான புருஷனைத் தூக்கிக் கொண்டு காரியம் செய்கிற, ஆனால் ஞான மயனான புருஷனைத்தூக்கிக் கொண்டு காரியம் செய்கிற, ஆனால் ஞானமில்லாத ஜடப் பிரகிருதி பிரபஞ்ச வியாபாரத்தைப் பண்ணுகிறது" என்கிறார்கள். இது ஏதோ கதையாக, உவமையாக நன்றாயிருக்கிறதே தவிர, அத்வைதத்தில் காரியமற்ற நிர்குணப் பிரம்மமே காரியமுள்ள ஸகுண ஈச்வரனாகவும் இருந்துகொண்டு மாயாசக்தியால் பிரபஞ்சத்தை நடத்துகிற மாதிரித் தோன்றுகிறது என்று பொருத்தமாகச் சொல்வது போல இல்லை.

அத்வைதத்துக்கும் ஸாங்கியத்துக்கும் இன்னொரு பெரிய வித்யாஸம், சுத்த ஞான ஸ்வரூபமான புருஷனைப் பற்றி ஸாங்கியம் சொன்ன போதிலும், இத்தனை ஜீவாத்மாக்களும் அந்த ஏக புருஷனே என்று அத்வைதமாகச் சொல்லாமல் அநேக புருஷர்கள் இருப்பதாகவே சொல்கிறது.

இப்படிச் சில குழறுபடிகள் இருந்தாலும் ஸாங்கியம் என்பது தத்துவங்களைக் கணக்கெடுத்துச் சொல்வதில்

('ஸங்கியை என்றால் கணக்கெடுப்பது என்று அர்த்தம். ஜனஸங்கியை என்று ஸென்ஸஸ் எடுப்பதைச் சொல்கிறோமல்லவா? 'ஸங்கியை'யிலிருந்து வந்ததுதான் 'ஸாங்கியம்") நமக்கு ஒரு ஆதார சாஸ்திரமாக இருக்கிறது.

கபில மஹரிஷி ஸாங்கிய மதத்துக்கு ஸூத்ரம் எழுதியிருக்கிறார். ஈச்வரகிருஷ்ணர் என்பவர் செய்த ஸாங்கிய காரிகையும், ஸாங்கிய ஸூத்ரத்துக்கு விஞ்ஞான பிக்ஷு எழுதிய பாஷ்யமும் இந்த ஸித்தாந்தத்தின் முக்யமான நூல்களாகும்.[2]

கீதையில் பகவானே அநேக ஸாங்கிய கொள்கைகளைச் சொல்லியிருக்கிறார். ஆனால் ஸாங்கியம், யோகம் என்று இரண்டு மார்க்கங்கள் இருப்பதாக அவர் சொல்கிறபோது ஸாங்கியம் என்றால் வேதாந்தமான ஞான மார்க்கம் என்றே அர்த்தம். யோகம் என்பது கர்மயோகம்; ராஜயோகமல்ல.

ஸாங்கியத்தில் புருஷனைப் பிரகிருதியிலிருந்து பிரித்து உணரவேண்டும் என்று சொல்லி வெறுமனே விட்டு விட்ட இடத்தில் ஆரம்பித்து, எந்த மாதிரி உபாயத்தினால் என்ன ஸாதனைகளைப் பண்ணி எப்படி பிரிக்கிறது என்று 'ப்ராக்டிக'லாக வழி சொல்லித் தருவதுதான் [ராஜ] யோக ஸாஸ்திரம். ஆனால் யோகத்திலே ஈச்வரனை ஒப்புக் கொண்டு ஈச்வர ஆராதனையையும் மனோநிக்ரஹத்துக்கு [மனம் அடங்குவதற்கு] வழியாகச் சொல்லியிருக்கிறது. சித்த ஓட்டத்தை நிறுத்துவதுதான் "யோகம்" என்ற பொதுப் பெயரில் வழங்குகிற பதஞ்ஜலி மஹர்ஷியின்

ராஜயோகம். இப்போது Yoga, Yoga என்று மேல் நாடுகளில் அதுதான் கொடிகட்டிப் பறக்கிறது.

ஸாங்கியமும், யோகமும் சதுர்தச அல்லது அஷ்டாதச வித்தைகளில் சேராவிட்டாலும் அவையும் நம் சாஸ்திரங்களில் முக்கியமான இரண்டாக இருப்பதால் சொன்னேன்.

மீமாம்ஸையில் ஈச்வர பக்தி கிடையாதென்றாலும் அது வேதப் பிரமாணத்தை ஒப்புக்கொள்கிற மதம். அதே மாதிரி வேதத்தை ஒப்புக் கொண்டும், நிரீச்ரவாதம் பண்ணுவதாக ஸாங்கியம் இருக்கிறது.

பௌத்தம், அதைக் கண்டித்த நியாயம்- மீமாம்ஸை என்ற இரண்டு, மீமாம்ஸை மாதிரியே ஈச்வரனை ஒப்புக்கொள்ளாத போதிலும் சப்த (வேத) ப்ரமாணத்தை ஒப்புக் கொள்கிற ஸாங்கியம் - ஆகிய இந்த நாலிலிருந்தும் நம் ஆசார்யாள் எடுத்துக் கொள்ள வேண்டிய அம்சங்களை எடுத்துக் கொண்டு, கண்டிக்க வேண்டியதைக் கண்டித்துத் தள்ளிவிட்டு, இவை எல்லாவற்றுக்கும் இடம் கொடுப்பதும் இவை எல்லாம் உண்டாகக் காரணமானதுமான மூல வேதாந்தத்தையே ஸ்தாபித்தார். ஆசாரியாள் பௌத்தத்தில் முடிந்த முடிவாகச் சொன்ன உயர்ந்த ஞான நிலை, நிர்குணப் பிரம்மத்தின் ஸ்தானத்தில் ஸாங்கியத்தில் சொன்ன கேவலமான ஸ்வரூபமான புருஷன், மாயையின் ஸ்தானத்தில் அது சொல்கிற ப்ரக்ருதி, அதிலே சொல்லப்படும் 24 தத்வங்கள், மீமாம்ஸை சொல்லும் கர்மாநுஷ்டானம், நியாயத்திலே சொல்லப்பட்டுள்ள

ஈச்வரன், அது சொல்லும் பிரமாணங்கள் இவற்றை யெல்லாமே ஒப்புக் கொண்டவர். ஆனால் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு அம்சத்தை மட்டுமே பிடித்துக் கொண்டு அதையே லக்ஷ்யமாக்கிவிட்டபோது அவற்றைக் கண்டித்து இந்த எல்லா அம்சங்களையும் சேர்த்து ஒழுங்கு படுத்திக் கொடுத்தார்.

[1] இதற்கு அடுத்த உரையில் 'பதார்த்தம்' என்ற பகுதியும் பார்க்க.

[2] ஸாங்கிய காரிகைக்கு கௌடபாதரும் (ஆசார்யாளின் பரம குருவான கௌடபாதரேதான் இவர் என்றும் அல்லர் என்றும் இரண்டு கருத்துக்கள் உண்டு), ஆசார்யாளின் ஸூத்ர பாஷ்யத்திற்கு வியாக்யானம் எழுதிய வாசஸ்பதியும் எழுதிய விரிவுரைகள் ஸாங்கிய சாஸ்திரத்தில் முக்கியமாகக் கருதப்படும் வேறு இரு நூல்களாகும்.

மீமாம்ஸையும் ஆதிசங்கரரும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

மீமாம்ஸை : கர்ம மார்க்கம்

மீமாம்ஸையும் ஆதிசங்கரரும்

பௌத்தத்தில் ஈச்வரனைச் சொல்லவில்லை என்பதற்காக உதயனர் முதலிய நையாயிகர் அதைக் கண்டித்தது ஆசாரியாளுக்கு ஸம்மதமானதே. அதே போல, வைதிக கர்மாநுஷ்டானங்கள் பௌத்தத்தில் இல்லை என்பதனால் அதைக் குமாரிலர் போன்ற மீமாம்ஸகர்கள் கண்டனம்

பண்ணியதும் அவருக்கு ஸம்மதந்தான். ஏனென்றால் மீமாம்ஸகர்கள் முக்யமாகக் கொண்டிருந்த கர்மாநுஷ்டானங்கள் சித்த சுத்திக்கும், ஸமூக ஒழுங்குக்கும் அவசியம் வேண்டியனவே என்பது தான் நம் ஆசாரியாளின் அபிப்பிராயமாகும். ஆனாலும் 'ஈச்வரன் என்ற பல தாதா வேண்டாம்; கர்மாவினால் சுத்தியானபின் ஞானத்துக்குப் போகவேண்டாம்; கர்மாவை விட்டுவிட்ட ஸந்நியாஸம் தப்பானது' என்ற கொள்கைகளை மீமாம்ஸகர்கள் பின்பற்றியதனால் அவர்களையும் ஆசாரியாள் கண்டனம் பண்ணினார்.

மீமாம்ஸகர்களில் குமாரிலபட்டர், மண்டன மிச்ரர் இருவரும் முக்கியமானவர்கள். இவர்களில் குமாரிலபட்டரின் அந்திம காலத்தில் ஆசார்யாள் அவரை வாதத்தில் ஜயித்தார் *. இன்னொருவரான மண்டனமிச்ரரை ஜயித்து அவரைத் தனது நாலு பிரதான சிஷ்யர்களில் ஒருவரான ஸுரேச்வராசாரியராக ஆக்கினார்.

வேத மதத்துக்குள்ள பதினாலு ஆதாரங்களில் ஒன்றான மீமாம்ஸையை ஆசார்யாள் கண்டித்தார் என்றால், அது அடியோடு தப்பு என்று நிராகரணம் பண்ணினார் என்று அர்த்தமில்லை. 'மீமாம்ஸையில் சொன்ன கர்மாக்களைப் பண்ணியாகத்தான் வேண்டும். ஆனால் மீமாம்ஸகர் போல் ஈச்வர பக்தியில்லாமல் பண்ணக் கூடாது. அந்த கர்மாவே தருகிற ஸ்வர்காதி பலன்களை ஈச்வரனுக்கு அர்ப்பணம் பண்ணிவிட்டு, இந்த கர்மபல தியாகத்தினாலே சித்த சுத்தியை ஸம்பாதித்துக் கொள்ள வேண்டும். பலதாதா ஈச்வரன் என்று உணர்ந்தால்தான் சின்னதான, ஸ்வர்க்கம்

முதலான பலன்களை விட்டு ஈச்வரன் தருகிற பெரிய பலனான சித்த சுத்திக்குப் போக முடியும்' என்பதே ஆசாரியாளின் உபதேசம். மீமாம்ஸகர்களின் கர்மாநுஷ்டானம் முழுக்கவும் ஆசாரியாளுக்கு ஸம்மதமானதுதான். ஆனாலும் கர்மாவுக்காகவே கர்மா (end in itself) என்று நினைத்து அவர்கள் அதற்கு மேல் போகாமல் – பலதாதாவான ஈச்வரனிடம் பக்தி, அதற்கப்புறம் அந்த ஈச்வரனேதான் நாமாகி இருப்பதை அநுபவத்தில் அறிகிற ஞானம் ஆகிய இவற்றுக்குப் போகாமல் – நின்றுவிட்டது தப்பு என்று உபதேசம் பண்ணினார். கர்மாவை அவர் ஆக்ஷேபிக்கவே இல்லை என்பதால்தான் தமது சரீரத்தை விடுவதற்குமுன் கடைசியாக உபதேசித்து "ஸோபான பஞ்சக"த்தை

வேதோ நித்யம் அதீயதாம்

ததுதிதம் கர்மஸ்வநுஷ்டீயதாம்.

என்று ஆரம்பித்தார். "தினமும் வேத அத்யயனம் பண்ணுங்கள். அதிலே சொல்லியுள்ளபடி கர்மாக்களை நன்றாக அநுஷ்டானம் பண்ணுங்கள்" என்று அர்த்தம்.

ஆனால் இப்படி கர்மாவுடனே நின்றுவிடக் கூடாது. அதை ஈச்வரார்ப்பணம் பண்ணவேண்டும். இதனால் சித்த சுத்தியை உண்டாக்கிக் கொண்டு அப்புறம் ஞானோபதேசம் வாங்கிக் கொள்ளவேண்டும். அப்புறம் கர்மாவை எல்லாம் நிறுத்திவிட்டு ஸந்நியாஸியாகி அந்த உபதேசத்தையே தியானம் பண்ணி, விசாரம் பண்ணி, சொந்த அநுபவமாக்கிக் கொள்ள வேண்டும். இப்படி படிப்படியாகக் கொண்டு போகிறார்.

ஈச்வரனிடத்தில் கொண்டுவிடவே, ஏற்பட்ட வேதத்தின் கர்ம காண்டத்தை, அப்படிப் பண்ணவிடாமல் வெறும் கர்மாவோடேயே நிறுத்தி, சாச்வத ஆனந்தமான அத்வைத மோக்ஷத்தில் சேர்ப்பதற்கு வழி பண்ணித் தருவதற்குப் பதில், புண்ய கர்மா செலவழிகிற வரையில் மாத்திரம் வெறும் போகபூமியான ஸ்வர்க்கத்தில் சேர்ப்பதோடு நின்றுவிடுகிறார்களே என்பதற்காகத்தான் மீமாம்ஸகர்களை ஆசார்யாள் கண்டனம் பண்ணினார். கர்மாக்களை விஸ்தாரம் பண்ணி அது பற்றின வேத சட்டங்களை வியாக்கியானம் செய்கிறதில் மீமாம்ஸா சாஸ்திரம் சொல்கிற அவ்வளவும் ஏற்க வேண்டியதுதான். ஏனென்றால் வேத சப்தத்தை விசாரிக்கிற போது அந்த சாஸ்திரம் இந்த சப்தப் பிரமாணத்துக்கு அப்படியே surrender (சரணாகதி) பண்ணி, அதனாலேயே அதனுடைய அர்த்தத்தை உள்ளபடி தெரிந்து கொண்டு நிர்ணயம் பண்ணி விடுகிறது. எனக்கு மீமாம்ஸையைப் பற்றி ஒன்று வேடிக்கையாகத் தோன்றுகிறது. மீமாம்ஸா சாஸ்திரம் கண்ணுக்குத் தெரிகிற ஒரு ஸ்வாமியிடம் 'ஸரன்டர்' செய்து, அதனாலே அவனுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ள பிரயத்னம் செய்யவில்லைதான். அதனால் என்ன? வேதம்தான் பெரிய ஸ்வாமி. வேத சப்தம் கண்ணுக்குத் தெரிகிற ஸ்வாமியாக இல்லாவிட்டாலும் காதுக்குக் கேட்கிற ஸவாமியாக இருக்கிறது. அந்த சப்தம் சொல்கிற கர்மாக்களை எதிர்க கேள்வி கேட்காமல் பண்ணுவோம். இங்கே ஒரே 'ஸரன்டர்'தான். இப்படி 'ஸரன்டர்' பண்ணி வேத வாக்கியங்களின் தாத்பரியத்தை நிர்ணயம் பண்ணுவோம்' என்று மீமாம்ஸகர்கள்

இருந்திருக்கிறார்கள். அதனால் கண்ணுக்குத் தெரிகிற ஸ்வாமியை அவர்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும், காதுக்குக் கேட்கிற வேத ஸ்வாமியின் ஸ்வரூபத்தை (அர்த்தத்தை) நன்றாகத் தெரிந்து கொண்டு சொல்லிவிட்டார்கள் என்று நான் நினைப்பதுண்டு.

* 'தெய்வத்தின் குரல்' முதற்பகுதியில் "முருகனின் வடநாட்டு அவதாரம்" என்ற உரை பார்க்க

அர்த்த நிர்ணயம் எப்படி?

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

மீமாம்ஸை : கர்ம மார்க்கம்

அர்த்த நிர்ணயம் எப்படி ?

வேதத்தின் வாக்கியம் ஒன்று இருக்கிறது; அத்தியாயம் ஒன்று இருக்கிறது. அதிலே என்ன அபிப்ராயம் சொல்லி இருக்கிறது என்பதை எப்படித் தெரிந்து கொள்வது? எந்தத் தீர்மானத்தை வலியுறுத்த அது ஏற்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் என்ன செய்வது? வேதத்தை அர்த்தம் செய்வதற்குச் சில விதிகள் இருக்கின்றன. அவற்றை மீமாம்ஸா சாஸ்திரம் சொல்கிறது. வேதம் என்கிற சட்டத்திற்கு 'லா ஆஃப் இண்டர்ப்ரடேஷன்' மீமாம்ஸைதான். சர்க்காரில் அநேகச் சட்டங்களைப் பண்ணும்போது, அவற்றின் அர்த்தத்தைப் பற்றியே சந்தேகம், குழறுபடி உண்டாகும். அப்போது அந்த சட்டத்தை வியாக்யானம் பண்ண இன்னொரு சட்டம் வகுப்பார்கள். அதுதான் Law of Interpretation. வேதத்துக்கு

இப்படியிருப்பது மீமாம்ஸை. அதில் வேதத்தை அர்த்தம் செய்து கொள்ளச் சில வழிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

உபக்ரம-உபஸம்ஹாரம், அப்யாஸம், அபூர்வதா, பலம், அர்த்தவாதம், உபபத்தி என்று ஆறு வழிகளைக் காட்டி இவற்றால் வேதமந்திரங்களின் உத்தேசத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்று மீமாம்ஸை சொல்கிறது.

ஆரம்பமும் முடிவும் ஒரே விஷயமாக இருந்தால் அதுதான் உத்தேசம். இது இரண்டுக்கும் நடுவில் ஆயிரம் ஸமாசாரம் சொல்லியிருந்தாலும் இந்த ஆயிரம் ஸமாசாரமும் அந்த ஒரே உத்தேசத்தைத் தீர்மானிக்கத்தான் வந்திருக்கின்றன என்று ஸந்தேஹம் இல்லாமல் சொல்லிவிடலாம். இதற்குத் தான் 'உபக்ரம-உபஸம்ஹாரம்' என்று பெயர். 'உபக்ரமம்' என்றால் தொடக்கம்; 'உபஸம்ஹாரம்' என்றால் முடிவு.

ஒரு உபந்நியாசத்திலோ ஒரு கட்டுரையிலோ ஒரே விஷயத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தால், அப்படிச் சொல்லப்படுகிற விஷயத்தைத் தீர்மானம் பண்ணுவதற்காகத்தான் அந்த உபந்நியாசம், அல்லது கட்டுரை என்று தீர்மானித்து விடலாம். பிரசங்கம் எதைப்பற்றி என்று தெரியாது; இன்விடேஷனைப் பார்க்கவில்லை; நோட்டீஸ் போடவில்லை. ஆரம்பித்துப் பதினைந்து நிமிஷம் கழித்துத்தான் நாம் வந்தோம். அந்தப் பிரஸங்கத்தின் நடுவில் பிரஸங்கி அநேக ஸமாசாரங்களைச் சொல்கிறார். ஆனாலும் எது திருப்பித் திருப்பிச் சொல்லப்படுகிறதோ அதுதான் அந்தப் பிரஸங்கத்தின் தீர்மானம் என்று முடிவு செய்யலாம்.

ஒன்றை அடிக்கடி திருப்பித் திருப்பிச் சொல்வது, அல்லது செய்வதுதான் 'அப்யாஸம்'. ஏதாவது ஒன்றை மனனம் பண்ண வேண்டுமானால் திருப்பித் திருப்பி உருப்போடுகிறோம். திருப்பித் திருப்பி தண்டால் முதலியன போடுகிறார்கள்; அது தேகாப்பியாஸம். அப்படி ஒரு விஷயத்தைத் தீர்மானம் பண்ணுவதற்கு உபயோகப்படுவது 'அப்யாஸம்'. திருப்பித் திருப்பிச் சொல்லப்படும் விஷயந்தான் அதன் முடிவான தீர்மானம் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

இன்னொன்று 'அபூர்வதா'. ஒரு பிரஸங்கத் தொடர் முந்தாநாள் கேட்டிருக்கிறோம்; நேற்று கேட்டோம்; இன்றும் கேட்கிறோம். நேற்று, நேற்றுக்கு முந்தினநாள் சொன்ன விஷயங்களை இன்றைக்கும் சொல்லலாம். இருந்தாலும் இதுவரைக்கும் சொல்லாத சமாசாரம் இன்றைக்கு ஏதாவது சொன்னால் அதுதான் இன்றைய பேச்சின் முக்கியமான உத்தேசம். இதுவரைக்கும் சொல்லாத ஒன்றை இன்றைக்கு அதிகப்படியாகச் சொன்னால் அதிகப்படியாகச் சொல்கிற புது விஷயந்தான் இன்றைய பிரசங்கத்தின் விஷயம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். நடுவில் என்ன என்ன சமாசாரங்கள் சொன்னாலும் அவை எல்லாம் இந்த ஒன்றுக்கு அநுகுணமானவையே. இப்படி ஒரு விஷயத்தைத் தீர்மானம் பண்ணுவது 'அபூர்வதா'- புதிதாகச் சொல்லப்படும் விஷயம். பூர்வத்தில் வராதது அபூர்வதா.

இப்படியேதான் ஒரு புஸ்தகத்தில் அநேக விஷயங்கள் சொல்லியிருந்தாலும் எதற்குப் பலன் சொல்லியிருக்கிறதோ, 'இப்படிச் செய்தால் இன்ன பலன் தரும்' என்று சொல்லியிருக்கிறதோ அதுதான் அந்த

புஸ்தகத்தின் தீர்மானம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். இதற்குத்தான் 'பலம்' என்று பெயர்.

அநேக சமாசாரங்களைச் சொல்லிக் கொண்டு வருகிறோம். நடுவில் ஒரு கதை சொல்லி ஒன்றைப் பற்றி ஸ்தோத்திரம் பண்ணுகிறோம். எதைப்பற்றி ஸ்தோத்திரம் பண்ணுகிறோமோ அந்த விஷயந்தான் பிரதானம். அதைச் சொல்வதற்காகத்தான் கதை யெல்லாம் சொன்னது என்று புரிந்து கொண்டு விடலாம். கதைகளை ஆதாரமாகச் சொல்லி ஒன்றை ஸ்தோத்திரம் பண்ணுவதற்கு 'அர்த்த வாதம்' என்று பெயர். இதன் மூலமும் தீர்மானத்தைக் கண்டுபிடித்து விடலாம்.

ஒன்றைச் சொல்லி அதற்குக் காரண நிரூபணம், பொருத்தம் முதலியவை விளக்கப்பட்டிருந்தால் அந்த விஷயந்தான் முக்கியமான உத்தேசம். இந்த முறைக்கு 'உபபத்தி' என்று பெயர்.

உபக்ரமோபஸம்ஹாரௌ அப்யாஸோ (அ)பூர்வதா பலம் ।

அர்த்தவாதோபபத்தீ ச லிங்கம் தாத்பர்ய நிர்ணயே ॥

என்று இந்த ஆறு விதமான லிங்கங்களினால் ஒன்றைத் தீர்மானம் செய்து கொள்ளலாம் என்று மீமாம்ஸா சாஸ்திரத்தில் சொல்லப்படுகிறது. இவற்றுக்கு தாத்பர்ய லிங்கம் என்று பெயர்.

சம்ஸ்கிருதத்தில் 'லிங்கம்' என்றால் அடையாளம் என்பது பொருள். ஆரம்பமும் முடிவும் சொல்லமுடியாத பரமாத்ம தத்துவத்துக்கும், நீள உருண்டையாக இருக்கிற

பிரபஞ்சத்துக்கும் அடையாளமாக இருப்பதுதான் கோவில்களில் உள்ள லிங்கம். லிங்கத்தைக் குறி என்றும் சொல்லலாம். குறிப்பு என்றும் சொல்வது உண்டு. ஒரு உபந்நியாஸமோ, ஒரு புஸ்தகமோ எந்த தீர்மானத்தைச் சொல்கிறது, எந்த முடிவை வற்புறுத்துகிறது என்பதை இந்த ஆறுவிதமான குறிப்புகளை வைத்துக் கொண்டே நாம் தீர்மானம் பண்ணிவிடலாம்.

வேதத்தில் சொல்லப்பட்ட ஒரு வாக்கியமோ ஒரு அத்தியாயமோ எந்த விஷயத்தை தீர்மானிக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க இந்த ஆறு தாத்பர்ய லிங்கங்களைக் கொண்டே, ஆறு விதமான குறிப்புகளைக்கொண்டே தீர்மானம் செய்து கொள் என்று சொல்கிறது மீமாம்ஸா நியாயம்.

மீமாம்ஸைக் கொள்கைகள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

மீமாம்ஸை : கர்ம மார்க்கம்

மீமாம்ஸைக் கொள்கைகள்

மீமாம்ஸா மதத்துக் கொள்கை என்னவென்று இன்னம் கொஞ்சம் சொல்கிறேன். "ஸ்வாமி இருக்கிறாரா, இல்லையா?" என்ற கவலை வேண்டாம். இருந்தால் இருக்கட்டும், இல்லாவிட்டால் போகட்டும். நாம் பண்ண வேண்டியது வேதத்தில் சொன்னபடி கர்மாநுஷ்டானம் செய்து வருவதுதான். அந்தக் கர்மாவே பலன் தரும். காரியம் பண்ணினால் பலன் இல்லையா? நடுவில் ஸ்வாமி யென்றொருவர் எதற்கு? காரியமே பலனைத்

தருகிறது. நம்மகத்துத் தோட்டத்தில் இருக்கிற வாழை இலையைப் பறித்து வருவதற்குக் கறிகாய்காரனுக்குப் பணம் கொடுக்க வேண்டுமா என்ன? இப்படித்தான் நம் கர்மாவே தருகிற பலனுக்கு ஈச்வரன் என்ற எவனுக்கோ 'க்ரெடிட்' கொடுப்பது என்பார்கள். க்ருஷி (உழவு) பண்ணுகிறோம். அதனால் நெல் விளைகிறது. அது மாதிரி வேதம் நமக்குத் தெரியாததைச் சொல்கிறபடி காரியம் பண்ணினால் பலனுண்டு. காரியத்துக்குப் பலன் தர ஸ்வாமி வேண்டுமென்கிற அவசியமில்லை. ஜகத்தை ஸ்வாமி உண்டு பண்ணியிருக்க வேண்டுமே யென்றால், 'ஸ்வாமி உண்டு பண்ணுவானேன்? இப்பொழுது இருப்பது போலவே ஜகத் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. திடீரென்று உண்டானதாக ஏன் ஒப்புக் கொள்ள வேண்டும்?' என்பார்கள்.

ந கதாசித் அநீத்ருசம் ஜகத் ।

இந்த ஜகத் எப்பொழுதும் இப்படித்தான் இருந்து கொண்டிருக்கிறது. இப்படி இல்லாமல் எப்பொழுதும் இருந்ததில்லை. காரியம் பண்ணு, அதுவே பலன் கொடுக்கும். என்ஜினைச் சுற்றினால் மோட்டார் ஓடுகிற மாதிரி.

புத்திக்கு அகப்படாததை வேதம் சொல்லுகிறது. அதன்படி கர்மா பண்ணினால் பலன் உண்டாகிறது. அநாதியாக சப்தம் இருக்கிறது. அதுதான் வேதம். காலமும் ஆகாசமும் போல எப்பொழுதும் வேதமும் இருக்கிறது. நம்முடைய புத்திக்கு எட்டாததைச் சொல்ல வேதம் இருக்கிறது.

கெட்டது பண்ணினால் கெட்ட பலனும் நல்லது பண்ணினால் நல்ல பலனும் உண்டாகின்றன. காரியம் பலன் கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. அந்தப் பலனை அநுபவித்துக் கொண்டு சுற்றிக்கொண்டேயிருக்கிறோம். இதற்கு ஸ்வாமி வேண்டாம். வேதம் சொன்ன வேலையைச் செய்யாமல் நாம் இருக்கக்கூடாது. அப்படியிருப்பது பாபம். அதனால் நமக்கு நரகம் கிடைக்கும்.

'கர்மாவை நிறுத்தினால் பாபம் உண்டாகும். நித்தியமென்றும், நைமித்திகமென்றும், காம்யமென்றும் கர்மாக்கள் மூன்று விதமிருக்கின்றன. நித்திய கர்மாக்கள் எப்பொழுதும் பண்ணவேண்டியவை. ஒரு நிமித்தத்தில் பண்ணுவது நைமித்திகம். கிரஹணம் வருகிறது. அப்பொழுது ஸ்நானம், தர்ப்பணம் முதலியவை செய்யவேண்டும். யாராவது பெரியவர் நம் வீட்டிற்கு வந்தால், அவருக்கு உபசாரம் முதலியவை செய்ய வேண்டும். இவைகளெல்லாம் நைமித்திகம். ஒரு ஸந்தர்ப்பம் நேரும்போது பண்ணுவது நைமித்திகம். நித்திய-நைமித்திகங்களை எல்லோரும் அவசியம் பண்ணவேண்டும். மூன்றாவதான காம்யம் என்பது ஒரு பிரயோஜனத்தை இச்சித்துப் பண்ணவது. மழை வேண்டுமென்ற ஆசை இருக்கிறது; வருண ஜபம் பண்ணுகிறோம். பிள்ளை வேண்டுமென்ற ஆசை இருக்கிறது; புத்ர காமேஷ்டி செய்கிறோம். ஆயுளை உத்தேசித்து ஆயுஷ்ய ஹோமம் பண்ணுகிறோம். இவை காம்யம். இவைகளை ஒருவன் பண்ணித்தானாக வேண்டுமென்ற அவசியமில்லை.

இது மீமாம்ஸகர்கள் மதம். அவர்கள் சொல்லும் யுக்திகள் வேறு இருக்கின்றன.

நித்ய கர்மாவுக்கு லக்ஷணம் சொல்லியிருக்கிறார்கள். கர்மாக்கள் அகரணே ப்ரத்யவாய ஜனகம், கரணே (அ)ப்யுதயம் என்று இரண்டு வகை. செய்யாவிட்டால் உபத்திரவத்தைத் தருவது ஒன்று. செய்தால் ஸந்தோஷத்தைத் தருவது இன்னொன்று. 'அகரணே' என்றால் 'செய்யாவிட்டால்'; 'பிரத்யவாயம்' என்றால் 'உபத்திரவம்'. 'கரணே' என்பது 'செய்தால்'; 'அப்யுதயம்' என்பது ஸந்தோஷத்திற்குக் காரணமான பலன். நல்ல கிருஹம், தனம் புத்திரர், கீர்த்தி, அறிவு இவைகளெல்லாம் அப்யுதயம் என்பதில் சேர்ந்தவை. வேதாந்தத்தில் 'நி:ச்ரேயஸம்' என்று ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்த ஸந்தோஷம் பெரிய ஸந்தோஷமோ அந்த பேரானந்தமாக மோக்ஷம்தான் நி:ச்ரேயஸம். சின்ன சந்தோஷத்துக்குக் காரணமானது "அப்யுதயம்". இதைப்பற்றித்தான் மீமாம்ஸை சொல்லும். வேதாந்தத்தில் கூறப்பட்ட நி:ச்ரேயஸமான பெரிய ஸந்தோஷம், பேரானந்தம் பற்றி மீமாம்ஸை சொல்லாது. அது சொல்லும் ஸ்வர்கவாஸமும் அப்யுதயத்தைச் சேர்ந்ததுதான்.

வேலை என்றால் அதற்குக் கணக்குண்டு. தகுந்த பலனும் உண்டு. இது கர்ம மார்க்கம். செய்தால் நல்ல ஸந்தோஷம் உண்டாவது ஒரு வகை. செய்யாமற் போனால் உபத்திரவம் உண்டாவது ஒரு வகை.

நித்ய கர்மாவைச் செய்யாவிட்டால் உபத்திரவம் உண்டாகும்.

ஸந்தியாவந்தனம் பண்ணு என்றால், இக்காலத்தில், "செய்யமாட்டேன். அந்தப் பலன் எனக்கு வேண்டாம்" என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு மீமாம்ஸையால் ஸுலபமாகப் பதில் சொல்லிவிடலாம். ஸந்தியாவந்தனம் என்பது பலனக்காகப் பண்ணும் காம்யமான (optional) கர்மா இல்லை; அதைப் பண்ணாமற் போனால் உபத்திரவம் உண்டாகும் என்று மீமாம்ஸை சொல்கிறது!

பண்ணினால் பலன் என்பது நியாயம். பண்ணாவிட்டால் உபத்திரவம் என்பது என்ன நியாயம்? ஸந்தியாவந்தனம் பண்ணாவிட்டால் தோஷம் என்கிறார்கள். பண்ணினால் ஐச்வரியம் வரும் என்று சொல்லமாட்டார்கள். செய்யாவிட்டால் உபத்திரவம் என்னும் வகையிற் சேர்ந்தது அது.

கோவிலில் அர்ச்சனை, அபிஷேகம், அன்னதானம் முதலியவை பண்ணினால் விசேஷ பலன் உண்டு என்று சொல்லுகிறார்கள். அவை "கரணே அப்யுதயம்" என்னும் வகையைச் சேர்ந்தவை. இது நியாயமாகப் படுகிறது.

"அகரணே ப்ரத்யவாயம்" என்பது நியாயமா? லோகத்தில் அதற்கு திருஷ்டாந்தம் உண்டா?

உண்டு.

நாம் பிச்சைக்காரனுக்கு அரிசி போடுகிறோம். ஏதாவது ஸொஸைட்டிக்கு நன்கொடை கேட்டால் நூறு, இருநூறு ரூபாய் கொடுக்கிறோம். பரோபகாரம் பண்ணினால் புண்ணியம் உண்டென்று பண்ணுகிறோம். சில சமயங்களில் உபகாரம் பண்ண வேண்டாமென்று

தோன்றுகிறது. புண்ணியம் வேண்டாமென்று நினைக்கிறோம். அப்பொழுது முடியாது என்று சொல்லி விடுகிறோம். கடமையைச் செய்ய வேண்டியதுதான்; அதற்குமேல் தானம், தர்மம் இவை போன்றவைகளைச் செய்ய முடியாவிட்டால் பெரிய தோஷம் என்று சொல்ல முடியாதுதான்;

ஒருவனிடம் நாம் 500 ரூபாய் கைமாற்று வாங்கி இருந்தோம். அதைத் திருப்பித் தராமல் அவனிடம், "உனக்கு 500 ரூபாய் கொடுக்கிற புண்ணியம் எனக்கு வேண்டாம்" என்றால் அவன் விடுவானா? 'நான் புண்ணியத்திற்கு வரவில்லை. கொடுத்ததைக் கேட்கத்தான் வந்தேன்.' என்று சொல்லுவான். கேஸ் போட்டு, நமக்கு அதிகப்படி தண்டனையும் வாங்கி வைப்பான். இது "அகரணே ப்ரத்யவாய ஜனக"த்தைச் சேர்ந்தது.

அதைப் போலத்தான் ஸந்தியாவந்தனமும். ஸந்தியாவந்தனம் பண்ணமாட்டேன் என்பது வாங்கின கடனைத் திருப்பித் தர முடியாது என்கிறதைப் போல.

தமிழில் ஸந்தியாவந்தனத்தைக் காலைக் கடன், மாலைக் கடன் என்றே சொல்வார்கள். அந்தப் பெயர்கள் மிகவும் அழகாய் இருக்கின்றன.

'கடன் வாங்கின திருஷ்டாந்தம் சொன்னால் போதாது. யார் எங்கே கடன் வாங்கினார்கள்? ஸந்தியாவந்தனம் யாரிடம் கடன் வாங்கப்பட்டது?' என்று சிலர் கேட்கலாம்.

வேதத்தில் "தைத்திரீய ஸம்ஹிதை" (VI-3) யில் "பிராம்மணன் பிறக்கும் பொழுதே மூன்று கடனோடு

பிறந்திருக்கிறான். ரிஷிருணம், தேவருணம், பிதிர்ருணம் என்று மூன்று கடன்கள் உண்டு" என்று சொல்லியிருக்கிறது. "வேதம் ஓதுவதால் ரிஷிக்கடனும், யாகமும் பூஜையும் ஸந்தியாவந்தனாதி உபாஸனைகளும் பண்ணுவதால் தேவர்கடனும், தர்ப்பணம் சிரார்த்தம் இவற்றால் பிதிர்கடனும் தீர்கின்றன" என்கிறது. கடன் வாங்கினது நமக்குத் தெரியாது. தெரியாததை வேதம் சொல்லியிருக்கிறது. அதைக் கொண்டு நாம் யுக்தி பண்ணிப் பார்க்க வேண்டும். நம்பிக்கையுள்ளவர்களுக்கு அதை அநுஸரித்த யுக்தி தோன்றும். இல்லாதவர்களுக்கு விபரீத யுக்தி தோன்றும்.

இரண்டு ஸஹோதரர்கள் இருக்கிறார்கள். ஒருவன் மாஜிஸ்டிரேட் உத்தியோகம் பார்க்கிறான். மற்றவன் வைதிகன். முதல்வனுக்குக் கச்சேரி(court)க்குப் போகிற கடன் ஏற்பட்டிருக்கிறது. அவன் கச்சேரிக்குப் போகாமல், "இரண்டாமவன் போகவில்லையே; நான் மட்டும் எதற்காகப் போகவேண்டும்?" என்றால், "நீதான் மனுப்போட்டாய்; வேலை செய்யும்படி உத்தரவு போட்டோம்; நீ வருவதாக ஒப்புக் கொண்டாய். ஆகையால், நீதான் வரவேண்டும்" என்று அதிகாரிகள் சொல்லுவார்கள். அதைப் போல நல்ல கதி வரவேண்டுமென்று நாம் முன் ஜன்மத்தில் செய்த ஸத்காரியம் என்பதான மனுப் போட்டிருக்கிறோம். அதற்கேற்றபடி கர்மாக்களைச் செய்ய வேண்டுமென்று உத்தரவாய் இந்த [நிகழ்] ஜன்மா லபித்திருக்கிறது. உத்தரவு பண்ணியவர் ஒருவர் கண்ணுக்குத் தெரியாமலே ஸர்வ ஸாஷியாக இருக்கிறார். இது வேதாந்தியின் மதம். எந்த வேலைக்காக 'மனு'ப்போட்டோமோ அதுவே நமக்குப்

பலனைத் தருகிறது என்பது மீமாம்ஸகர்கள் மதம். கர்ம பலன் தானே நடக்கும் (Automatic) என்பது இவர்களுடைய மதம்.

ஆகக்கூடி, இரண்டு அபிப்ராயங்களின் படியும் கர்மாவுக்கேற்ற ஜன்மம் நமக்கு வந்திருக்கிறது. இதற்கேற்ற கர்மாக்களை நாம் செய்ய வேண்டும். செய்யாவிட்டால் உபத்திரவம் உண்டாகும். எங்கெங்கே பிறந்தோமோ அதற்கேற்பக் கர்மாக்களைச் செய்ய வேண்டும். லோகத்தில் ஆசார அநுஷ்டானங்கள் முறையாக இருக்க வேண்டும். வேதார்த்தங்களைத் தான் தெரிந்து கொண்டு, மற்றவர்கள் துக்கப்பட்டால் சாந்தப்படுத்திக் கொண்டு, அவர்களுடைய தொழில்களைப் போதித்துக் கொண்டு இருக்கவேண்டியது பிராம்மணன் கடமை. இம்மாதிரியே ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட கர்மாக்களைச் செய்ய வேண்டும். வாணியன் எண்ணையய் ஆட்டித்தர வேண்டும். சக்கிலியன் செருப்புத் தைத்துத் தரவேண்டும். பிராம்மணன் கண்டவற்றைத் தின்னாமல் தேஹம், மனஸ், ஆத்மா என்பவைகளில் பரிசுத்தனாக இருந்துகொண்டு பரமாத்மத் தியானம் பண்ணிக்கொண்டு இருக்கவேண்டும். மற்றவர்களையும் தியானம் பண்ணிக்கொண்டு இருக்கும்படிச் சொல்லவேண்டும். அதற்குத்தான் அவரவருக்கும் மானியம் ஏற்பட்டிருந்தது. பழைய காலத்தில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவனுடைய தொழிலைச் செய்வதற்காக மானியம் கொடுத்திருந்தார்கள். அந்தத் தொழிலை நிறுத்திவிட்டால் லௌகிகத்திலும் உபத்திரவம் உண்டாகும். அவனுடைய மானியத்தை

பிடுங்கி மற்றொருவனுக்குக் கொடுத்து விடுவார்கள். இந்தக் காலத்தில் அந்த நிலத்துக்கு வரி போட்டு விடுவார்கள். ஆகவே சாஸ்திரப்படி அவரவருக்கான கர்மாக்களைப் பண்ணாதவர்களுக்குப் பாபம் உண்டாவதோடு லௌகிக ஸௌகர்யங்களும் இல்லாமற் போய்விடும். அந்தக் கர்மாவைச் செய்வதனால்தான் மரியாதை உண்டாயிற்று. எதற்காக, எப்படி நம்முடைய ஜன்மம் ஏற்பட்டதோ அதை அப்படியே பண்ணாமல் இருப்பதனால்தான் இப்போது நம்முடைய தேசத்தில் இந்த மாதிரி கஷ்டமான நிலைமை ஏற்பட்டுவிட்டது. அந்த அந்தத் தொழிலைச் செய்து கொண்டு வந்தால், அதனால் மற்றவர்களுக்கும் லௌகிக ஸௌகர்யங்கள் ஏற்படும். அந்த நிலை மாறிவிட்டதனால்தான் இப்பொழுது தரித்திர நிலை வந்துவிட்டது.

"அகரணே ப்ரத்யவாய ஜனக"மாகிய நித்ய கர்மாக்கள் ஸந்தியாவந்தனம் முதலியவை. நித்ய கர்மாவைப் பண்ணாவிட்டால் பாபம் உண்டாகிறது. பண்ணினால் பாபம் இல்லாமையாகிய ஒரு லாபம் உண்டாகிறது. அதற்குமேல், க்ஷேமம் உண்டாகிறது. கடனைத் தவணைப்பிரகாரம் கொடுத்தால் கடன் போய்விடுகிறதாகிய ஒரு லாபமும், அதற்குமேல் "நாணயமானவன்" என்ற நல்ல பெயரும் உண்டாகும். அந்த நாணயத்தால் வியாபார விருத்தி ஏற்படுகிறது. அதுபோல நித்திய கர்மாவினால் பாபம் இல்லாமற்போவது ஒன்று; சிரேயஸ் உண்டாவது இரண்டு; ஆக இரண்டு லாபங்கள் உண்டாகின்றன.

'அகரணே ப்ரத்யவாய ஜநகம், கரணே அப்யுதயம்' என்னும் இந்த இரண்டும் நமக்கும் (வேதாந்திக்களுக்கும்) உண்டு. நாமும் இவைகளை ஒத்துக் கொள்கிறோம்.

இந்த மாதிரி உள்ள கர்மாக்களை எப்பொழுதும் பண்ணிக்கொண்டிருக்க வேண்டும். அக்னிஹோத்ராதி ச்ரௌத கர்மாக்களையும், ஔபாஸனம் முதலான ஸ்மார்த்த கர்மாக்களையும் தவறாமல் செய்துவர வேண்டும்.

"ஜீவனோடிருக்கிற வரையில் அக்னி ஹோத்திரம் செய்ய வேண்டும் என்ற வேதம் சொல்லுகிறது. அதைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்து கொண்டிருப்பதே போதும்" என்பது மீமாம்ஸகர் மதம். ஆனால் ஸந்நியாஸாசிரமத்தில் அக்னி ஹோத்ரம் முதலான கர்மாக்கள் இல்லை. இப்படிக் கர்மாக்களை விட்டால் அது பெரிய தோஷம் என்பார்கள். புத்தி பூர்வமாகக் கர்மாக்களை விட்டுவிட்டு ஸந்நியாஸம் வாங்கிக் கொள்வது அவர்களுக்கக் கிறிஸ்துவனாகவோ துருக்கனாகவோ ஆவதைப் போன்றது. உபநிஷத் "கர்மாவைச் செய்து கொண்டு நூறு வருஷம் இருக்க வேண்டும்" என்கிறது (ஈசாவாஸ்யோபநிஷத்: 2வது மந்திரம்.) தைத்திரீய ப்ராஹ்மணம், "அக்னிஹோத்ர நெருப்பை அணைத்தால் வீரஹத்தி தோஷம் வருகிறது" என்று சொல்லுகிறது.

"கெட்ட கர்மாவைச் செய்தால் பாபம் என்பது போல நித்ய கர்மாவை விட்டாலும் பாபம். ஸந்நியாஸி என்பவன் கர்ம ப்ரஷ்டன். ஆகையால், அவனைப் பார்த்தாலும் பாபம்;

பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும்" என்பது மீமாம்ஸகர்கள் மதம், "பாபியைப் பார்த்தாலும், பேசினாலும், தொட்டாலும், அவனோடு சேர்ந்து பங்க்தி போஜனம் பண்ணினாலும் நமக்குப் பாபம் ஒட்டிக்கொள்ளும். அதுபோல ஸந்நியாஸியைப் பார்க்கவும் கூடாது" என்பது மண்டனமிச்ரர் முதலானவர்களின் அபிப்பிராயம்.

"வேதத்தில்தானே ஞான காண்டத்தில் ஸந்நியாஸம், ப்ரஹ்மம், மோக்ஷம், ஞானம் என்பவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன? அவைகளைச் சொல்லுவதும் வேதம்தானே? அப்படி இருக்க நீங்கள் அவைகளை வைகிறீர்களே?" என்று கேட்டால், அவர்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள் என்பதை இப்பொழுது பார்க்கலாம்.

"ஞானம், ப்ரஹ்மம் என்பவை உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான். வேதம் என்பது என்ன? வேதம் சப்தம், அதாவது வார்த்தை. அது எதற்கு ஏற்பட்டது? தெரியாததைச் சொல்ல ஏற்பட்டது. அது சப்த ப்ரமாணம். கண்ணுக்கும் ஊகத்திற்கும் அகப்படாததைத் தெரிவிப்பது சப்த ப்ரமாணம். அது உபயோகமில்லாத ஒன்றைச் சொல்ல ஏற்பட்டதல்ல. எல்லா வார்த்தைகளுக்கும் இரண்டு வகைப் பிரயோஜனம் உண்டு. அதைச் செய், அல்லது அதைச் செய்யாதே என்பதுதான் சப்தத்தினுடைய பிரயோஜனம்.

"ப்ரவ்ருத்திர்வா நிவ்ருத்திர்வா நித்யேன க்ருதகேன வா|

பும்ஸாம் யேநோபதிச்யேத தத் சாஸ்த்ரம் அபிதீயதே||

"நமக்குக் காரியம் இல்லாமல் ஏதாவது வஸ்துவை மாத்திரம் சொல்லும் சப்தங்கள் வீண் வம்பைச் சேர்ந்தவை. அவை பிரயோஜனமில்லாதவை. காக்கா பறக்கிறது என்று ஒருவன் சொல்லுகிறான். அதைக் கேட்பதனால் என்ன பிரயோஜனம் உண்டாகிறது? காக்கா கருப்பு என்கிறான். அதனால் என்ன பிரயோஜனம்? நாளைக்கு ராத்திரி இங்கே உபந்நியாஸம் நடக்கும் என்றால் அதற்கு ஓர் அபிப்ராயம் உண்டு. எல்லாரும் வரவேண்டுமென்பது அதற்கு அர்த்தம். இது பிரவிருத்திப் பிரயோஜனம். கும்பகோணத்தில் நாளைக்கு உபந்நியாஸம் என்றால் இது வீண் வம்பு. இங்கிருந்து யார் போகப் போகிறார்கள்? பிரயோஜனம் இல்லாமல் எந்த வார்த்தையும் இருக்கக்கூடாது; ஒன்றிலே ஈடுபட வைக்கும் பிரவிருத்திப் பிரயோஜனமாவது, அதிலிருந்து விலக்கும் நிவிருத்திப் பிரயோஜனமாவது இருக்கவேண்டும். பஞ்ச மஹா பாதகங்களைச் சொல்லி, 'இவற்றைப் பண்ணாதே' என்று வேதம் சொன்னால் இது நிவிருத்திப் பிரயோஜனம். அந்தப் பாப காரியத்திலிருந்து விடுபடுவதே பயன். இந்த இரண்டுமில்லாத மற்றவை வெறுங்கதை. வேதம் இரண்டு பாகம். இன்னின்ன செய்ய வேண்டும் என்ற விதிகளையும், இன்னின்ன செய்யலாகாது என்ற நிஷேதங்களையும் சொல்லுவது ஒரு பாகம். அதுதான் கர்ம காண்டம். மற்றொரு பாகம், ஞான காண்டம் என்பது, வெறுமே கதை சொல்லும். கதைக்கு சொந்தமாகப் பிரயோஜனம் இல்லை. இந்த வேதக் கதைகள் விதியோடு சேர்ந்தால்தான் அர்த்தமாவது" என்று மீமாம்ஸகர்கள் சொல்வார்கள்.

தாதுபுஷ்டி லேஹ்யத்தைப் பற்றி ஒரு விளம்பரம் போட்டிருக்கிறது. சிங்கத்தோடு ஒரு மநுஷ்யன் குஸ்தி போடுவதுபோல அந்த விளம்பரத்தில் படம் போட்டிருக்கிறது. இந்தப் படத்தை எதற்காகப் போடுகிறான்? 'எல்லோரும் ஏமாந்து பணத்தைக் கொடுத்து அதை வாங்குங்கள்' என்பது தாத்பர்யம். அந்தப் படம் மாதிரி வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற கதைகளுக்கு விதிதான் பிரயோஜனம். இந்தக் கதையானது "அர்த்த வாதம்" எனப்படும். பல இடங்களில் நற்சாக்ஷிப் பத்திரம் (certificate) வாங்கியிருப்பதை ஒரு டாக்டர் மருந்து விளம்பரத்தில் ஏன் போடுகிறான்? இவன் மருந்தை எல்லாரும் வாங்க வேண்டும் என்பதற்காக அப்படிச் செய்கிறான். இம்மாதிரியான அர்த்தவாதங்களில் நிஜத்தோடு பொய் கலந்திருப்பதுமுண்டு. பொய்யை குணார்த்தவாதம் என்று சொல்லுவார்கள். (அநுவாதம் என்று ஒன்று சொல்லப்படும். தெரிந்ததையே அநுஸரித்துச் சொல்வது அது. நெருப்பு சுடும் என்பது தெரிந்தது. அதை மறுபடியும் சொல்லுவது அநுவாதம். மருந்தில் இன்ன இன்ன ஔஷதி இருக்கிறது என்று சொல்லுவது பூதார்த்தவாதம்.) குணார்த்தவாதம் என்பது பொய்க்கதையாவது சொல்லி விதிக்குப் பிரயோஜனப்படுத்துவது. கள் குடிக்காதே என்று சொல்லுவது விதி. கள் குடிப்பவன் உடனே தொலைந்தானென்று கதை எழுதினால் அது அர்த்தவாதம். கள் குடிக்கக்கூடாது என்பதுதான் தாத்பர்யம். கள் குடித்தால் மயக்கம் வருமென்பது அநுவாதம். ஆகக்கூடி, அர்த்தவாதமான கதைகள் எல்லாம் நம்மை விதிபூர்வமான ஒரு காரியத்தில் சேர்க்க வேண்டும்.

வேதத்தில் ஒரு யக்ஞத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. தக்ஷிணையாக ஸுவர்ணம் கொடு; வெள்ளி கொடுக்காதே என்று அங்கே சொல்லப்பட்டிருக்கிறது. யாகங்களில் வெள்ளி கொடுக்கக் கூடாதென்று தைத்திரீய ஸம்ஹிதையில் சொல்லியிருக்கிறது. இந்த இடத்தில் ஒரு நீளமான கதையைச் சொல்லி வெள்ளியைக் கொடுக்காதே என்று சொல்லுகிறது. நிஷேதத்தைக் காட்ட இந்தக் கதை சொல்லப்படுகிறது. (இன்னசெய்யவேண்டும் என்று நிர்ணயிப்பது விதி; இன்ன செய்யக்கூடாது என்பது நிஷேதம்). இந்த மாதிரியான அர்த்தவாதங்களுக்கு நேராக அதன் சப்தத்தில் பிரயோஜனமில்லை.

இந்த விஷயத்தைக் கொண்டுதான் மீமாம்ஸகர்கள் முன்சொன்ன ஞானகாண்ட ஆக்ஷேபணைக்குப் பதில் சொல்லுகிறார்கள்.

"பிரம்ம ஸ்வரூபத்தைப் பற்றித்தான் உபநிஷத் சொல்லுகிறது. அங்கே காரியத்தைச் சொல்லுகிறதேயில்லை. பிரம்மாநுபவம் என்பது காரியமே இல்லாத நிலை என்றே சொல்கிறது. வேதம் எப்பொழுது பிரமாணமாகும்? காரியத்தைச் சொன்னால்தான் வேதம் பிரமாணமாகும். இல்லாவிட்டால் வெறும் கதை சொல்கிறதற்கு ஸமானந்தான்; அர்த்தவாதந்தான். சும்மாயிருக்கிற ப்ரம்மத்தைப் பற்றிய உபநிஷத் அர்த்தவாதந்தான்.உள்ள வஸ்துவைப் பற்றி இந்த பாகம் சொல்லுகிறது. நாம் தெரிந்து கொள்ள வேண்டியது உள்ள வஸ்துவா? செய்ய வேண்டிய காரியமா? 'பிரம்மம் இருக்கிறது; ஆத்மா என்பதும் அதாகவே இருக்கிறது' என்ற

மாதிரி உள்ளதைச் சொல்வதில் நமக்கு எந்த காரியத்தையும் வேதம் கொடுக்கவில்லையே! யாகம், யக்ஞம் முதலியவைகளை நாம் செய்ய வேண்டும். இது மாதிரி நாம் நடத்த வேண்டிய காரியத்தைச் சொல்லத்தான் வேதம் வேண்டும். அதற்குத்தான் சப்தம் (வேதம்) ஏற்பட்டது. இருப்பதை அறிய சப்தம் வேண்டாம். இருப்பது எப்பொழுதாவது தன்னால் தெரியும். தெரியாவிட்டாலும் போகட்டும். ஆகையால் வெறுமே வஸ்துவைச் சொல்லும் வேத பாகம் அர்த்தவாதம். ஆகையினால் உபநிஷத் பிரமாணம் இல்லை. பின் எதற்காக அது இருக்கிறது? யக்ஞம் செய்பவனை உயர்த்திச் சொல்வதற்கு அது இருக்கிறது. கர்மாவுக்கு அபேக்ஷிதனான ஜீவனை ஸ்தோத்திரம் பண்ணி, அவன் கர்மாவை அதிகம் பண்ண வைப்பதற்காகத் தான் அப்படிச் சொல்லுகிறது. ஜீவனே பிரம்மம் என்று உபநிஷத் சொல்லுவது, கர்மாநுஷ்டானம் செய்பவனுக்கு ரொம்பவும் ஏற்றம் கொடுத்து ஸ்தோத்திரம் பண்ணுவது தான். எதற்கு இப்படி மிகையாக ஸ்தோத்திரம் செய்திருக்கிறது என்றால், எல்லாரையும் அந்தக் கர்மாநுஷ்டானங்களில் ஈடுபடுமாறு உத்ஸாஹப் படுத்துவதற்குத்தான். தாது புஷ்டி லேஹ்யம் சாப்பிட்டவன் சிங்கத்தோடு ஒரு நாளும் குஸ்தி போட முடியாது என்கிற மாதிரி இந்த ஜீவனும் பிரம்ம ஸ்தானத்தை அடைய முடியாது. உபநிஷத்து அப்படிப்பட்ட வெறும் கதைதான். "பிரம்மம், ஞானம், மோக்ஷம், ஈச்வரன் என்ற இந்தப் பேச்சே நமக்கு வேண்டாம். கர்மாவே நமக்கு எல்லாம். கர்மா செய்யாமல் இருப்பது தப்பு. ஸந்நியாஸியாவது தப்பு." இதுதான் மீமாம்ஸகர்களின் அபிப்பிராயம்.

சங்கரர் தரும் பதில்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

மீமாம்ஸை : கர்ம மார்க்கம்

சங்கரர் தரும் பதில்

நம்முடைய ஆசாரியாள் இதற்கு என்ன பதில் சொல்கிறார்?

சப்தம் (வேதம்) ஒன்றைச் சொன்னால் அது காரியத்தில் பிரயோஜனம் ஆகவேண்டும் என்று மட்டுமில்லாமல், அந்தக் காரியமும் பிரயோஜனமாய் இருக்கிறது என்பதால்தான் மீமாம்ஸகர்கள் அங்கீகரிக்கிறார்கள். ஆகவே காரியத்தால் ஏற்படும் பிரயோஜனந்தான் சப்த தாத்பரியமேயன்றிக் காரியமே லக்ஷ்யம் இல்லை என்றாகிறது. காரியம் இல்லாமல் இருப்பதே ஒரு பெரிய பிரயோஜனமாக இருந்தால் அப்பொழுது அந்தக் காரியமற்ற நிலையைச் சொல்லும் ஞான காண்ட சப்தத்தை அங்கீகரிக்கலாமல்லவா? அதாவது வேலை இல்லாதிருப்பதே பிரயோஜனமானால் அதுவும் சப்தத்தினுடைய தாத்பரியந்தான். சப்தத்தினுடைய தாத்பரியம் ஒரு பிரயோஜனமே யன்றி வேலை அல்ல. "ஸுராபானம் (மதுபானம்) பண்ணக்கூடாது" என்று வேதத்தில் சொல்லி இருக்கிறது. அதைக் கேட்டவுடன் என்ன காரியம் செய்வது? ஒன்றும் செய்வதற்கில்லை. அப்படியானால் அந்த சப்தத்துக்குத் தாத்பரியம் இல்லையா? கள்ளுக் குடித்துக் கெட்டுப் போகாமல் இருப்பதுதான் அதற்குத் தாத்பரியம். இப்படி ஒன்று

செய்யாமல் இருப்பதை 'அபாவம்' என்பார்கள். நிஷேதங்களுக்கு எல்லாம் அபாவம்தான் தாத்பரியம். இம்மாதிரி 'இதைச் செய்யாதே' என்று வேதம் பல காரியங்களிலிருந்து நம்மை விலக்குவதையும் மீமாம்ஸகர்களே ஒப்புக் கொள்கிறார்கள். வேதத்தில் நிஷேதம் என்று விலக்கப்பட்ட காரியங்களைச் செய்யாமலே இருக்கிறார்கள். இப்படி சில காரியம் செய்யாமல் இருப்பது பிரயோஜனமாக இருக்க முடியுமானால் எந்தக் காரியமும் இல்லாமல் பிரம்மமாக இருப்பது பெரிய பிரயோஜனமாக இருக்க முடியும் என்பதை எப்படி ஆக்ஷேப்பிக்கலாம்? காரியம் ஒன்றுமே இல்லாத பரம பிரயோஜனமாக ஆத்ம ஸாக்ஷாத்காரம் இருப்பதனால் வேதாந்த சப்தங்களும் மிகவும் உபயோகம் உள்ளவையே. அவற்றை அர்த்தவாதம் என்று தள்ளக்கூடாது.

ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஞானே பரிஸமாப்யதே

என்று பகவான் கீதையில் சொல்லி இருக்கிறார். "எல்லாக் கர்மாக்களும் போய்க் கடைசியில் ஞானத்தில்தான் நன்றாக ஸமாப்தி ஆகின்றன" என்கிறார். எல்லாக் கர்மாவும் பரமேச்வரனிடம் விநியோகம் ஆகவேண்டும். காரியமே இல்லாமல் இருப்பதுதான் பரம ப்ரயோஜனம், அதுதான் பிரம்மானந்தம். அதனால் ஜன்மமே இல்லாமல் போய்விடும். வேதத்திற்குப் பரமதாத்பரியம் அதுதான். கர்மகாண்டம் எல்லாம் ஞானகாண்டத்தில் போய் அன்வயிக்க வேண்டும். அப்பொழுதுதான் அதற்குப் பிரயோஜனம் உண்டு.

இந்தக் கருத்தைத்தான் ஸ்ரீ சங்கராச்சாரியர்கள் மண்டனமிச்ரர், குமாரில பட்டர் ஆகியோரிடம் எடுத்துச் சொல்லி அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படியாகச் செய்தார். சுருக்கமாக, "கர்மத்திலும் சித்தத்தை சுத்தி செய்வதற்கான கொஞ்சம் பிரயோஜனம் இருக்கிறது என்பதாலேயே வேதமானது கர்ம காண்டத்தில் காரியத்தைச் சொல்கிறது. இப்படிக் காரியம் பண்ணினால் என்ன பிரயோஜனமோ அதைக் காட்டிலும் கோடி கோடி பிரயோஜனம் காரியம் இல்லாதிருப்பதால் ஏற்படுமானால் அதுவே வேதத்தின் நிறைந்த தாத்பரியம் ஆகும். இதுதான் ஞான காண்டத்தின் அபிப்ராயம். அதனால் கர்மாவைப் பற்றிச் சொல்கிற பாகங்களெல்லாம் சித்தமலத்தைப் போக்கி ஈச்வரனிடத்தில் கொண்டு சேர்க்க ஆரம்ப ஸ்திதியில் உதவுகின்றன என்பதாலேயே தாத்பரியம் உடையவனாக இருக்கின்றன. வறட்டுக் கர்மாவினால் மட்டும் பிரயோஜனமில்லை. கர்மா நின்று போய் பரமாத்ம ஸ்வரூபமாகவே இருக்கும் நிலையே பரமப் பிரயோஜனம். அதை அடைவிக்கும் ஸந்நியாஸ ஆச்ரமத்தின் பெருமையை வேதம் முடிவு பாகத்தில் சொல்லுகிறது. அதையே முடிவான தாத்பர்யமாக அங்கீகரிக்க அடைய வேண்டும்" என்று ஸ்ரீ ஆசார்யாள் சொல்லித்தான் மண்டனமிச்ரருக்கு ஸந்நியாஸம் கொடுத்தார்.

கர்ம காண்டத்திலேயே வேதம் சில கர்மாக்களைப் பாபம் என்று சொல்லித் தள்ளுகிறது. ஆனால் இந்தப் பாபம் பண்ணுவதால் ஏதோ இன்பம், லாபம் இருக்கிறது என்று தான் ஒருத்தன் அதைப் பண்ணுகிறான். இதைப் பண்ணாதவனுக்கு அந்த இன்பம் இல்லை. ஆனாலும்

வேதம் "பண்ணாதே!" என்கிறது. ஏன்? பாபம் இப்போதைக்கு இன்பத்தை, திருப்தியைத் தந்தாலும் அப்புறம் இதைவிடப் பெரிதான ஆனந்தத்தை நமக்குச் சேர விடாமல் தடுத்து விடும். அதனால் "பண்ணாதே!" என்று தடுக்கிறது. இந்தத் தடையை ஒப்புக் கொண்டு மீமாம்ஸகர்களும் அதன்படியே பாப கர்மாக்களை யெல்லாம் விட்டுவிடுகிறார்கள். இவர்கள் பண்ணுகிற வைதிக அனுஷ்டானங்களான ஸத்கர்மாவின் பலனாகவும் இவர்களுக்கு ஒரு லாபம், ஆனந்தம் கிடைக்கிறது. இக வாழ்க்கையிலே ஸௌக்கியம் ஏற்படுகிறது. பித்ரு லோகம், தேவலோகம் முதலியன கிடைக்கின்றன. ஆனால் இவை மட்டும் சாச்வதமான ஸௌக்கியமா என்றால் இல்லை. புண்ய கர்ம பலன் தீர்ந்தவுடன் இந்த ஸௌக்கியங்களும் தீர்ந்து போகும். தேவ லோகத்துக்குப் போனாலும் புண்ணியம் தீர்ந்தவுடன் பூலோகத்தில் வந்து விழ வேண்டியதுதான். "க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி" என்று சொல்லியிருக்கிறது [கீதை:IX.21]. தீராத ஸௌக்கியம், மாறாத நிறைந்த ஆனந்தம் என்பது உண்டென்றால் அது பரமாத்ம தத்வத்தில் அதோடு அதாகவே கரைந்து, எந்தக் காரியமும் இல்லாமல் கிடைக்கிற ஞானியொருவன் அநுபவிக்கிற நிலைதான். ரொம்பவும் அல்பமான, ரொம்பவும் குறுகிய காலத்துக்கு மட்டுமேயான இன்பத்தைத் தருகிற பாப கர்மாக்களை விட்டுவிட்டு அதைவிட உயர்ந்ததான ஸத்கர்மாவுக்குப் போகவேண்டும். அதாவது வைதிக கர்மாநுஷ்டானங்களை குறைவேயில்லாமல் செய்ய வேண்டும். ஆனால் இதனாலும் நிறைந்த நிறைவான ஆனந்தத்தை சம்பாதித்துக் கொள்ள முடியவில்லை என்றால் என்ன

பிரயோஜனம்? 'கர்மாநுஷ்டான பலனும் சாச்வத ஸௌக்கியமாக இல்லையே! அதனால் இதைப் பண்ணாமலே இருந்து விடலாமா? நேரே அந்த சாச்வத ஸௌக்கியத்துக்கே போய்விடலாமா?' என்றால் அதுவும் நம்மால் முடியவில்லை. ஞானம் வருவது ஸுலபத்தில் ஸாத்தியமா? அதற்கு முதலில் சித்தம் சுத்தமாக வேண்டும். கர்மாதான் சித்தத்தை அலை பாயாமல் ஒரு ஒழுங்குப்படுத்திக் கட்டுகிறது. அதனால் கர்மாநுஷ்டானம் பண்ணவேண்டும். அப்படிப் பண்ணும்போது அது தருகிற ஸ்வர்க்க லோகம் முதலான இன்பங்களை உத்தேசிக்காமல், அதாவது பலனில் பற்றின்றி நிஷ்காம்யமாகப் பண்ணிவிட்டால், சித்தத்திலுள்ள மலங்கள் நீங்குகின்றன. இந்தக் கர்மாவுக்கு என்றே சொல்லியிருக்கிற பலன்கள் வேண்டாம் என்று பலதாதாவான ஈச்வரனிடமே அவற்றை அர்ப்பணம் செய்து விட்டால், அவன் இவைகளை விடப் பெரிய பலனான சித்த சுத்தியை அநுக்கிரஹிப்பான். அப்புறம் ஞானவிசாரம் பண்ண மனசு பக்குவமாகும். அதனாலே காரியமில்லாமல் தானாக இருக்கிற தனிப்பெரும் ஆனந்தத்தை அடையலாம்.

வேதாந்த மதங்களும் மீமாம்ஸையும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

மீமாம்ஸை : கர்ம மார்க்கம்

வேதாந்த மதங்களும் மீமாம்ஸையும்

வேதகர்மாக்களை யெல்லாம் அங்கீகரிக்கிறது என்ற அளவில் அத்வைதம் மீமாம்ஸையை ஆதரிக்கிறது

என்பதோடுகூட, மீமாம்ஸையில் பாட்ட மதத்தினர் சொல்கிற அதே ஆறு பிரமாணங்களைத்தான் அத்வைதத்திலும் ஒப்புக் கொண்டிருக்கிறோம்.

ஸ்ரீ சங்கரரின் அத்வைதம், ஸ்ரீ ராமாநுஜரின் விசிஷ்டாத்வைதம், ஸ்ரீ மத்வரின் த்வைதம் மூன்றுமே வேதாந்த மதங்கள்தான். அத்வைதத்தைப் போலவே இந்த மற்ற இரண்டு ஸித்தாந்திகளும் வைதிக கர்மாநுஷ்டானங்களை விடக்கூடாது என்பவர்கள்தான். ஆதலால் பொதுவாக வேதாந்த மதங்கள் எல்லாவற்றுக்கும் இந்த அம்சத்திலே மீமாம்ஸை ஸம்மதமானதுதான்.

பிரமாணங்களில் மீமாம்ஸை சொல்கிற ஆறையும் அத்வைதிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். விசிஷ்டாத்வைதிகள் இந்த ஆறில் 'பிரத்யக்ஷம்', 'அநுமானம்', 'சப்தம்' (வேதம்) என்ற மூன்று பிரமாணங்களை மட்டும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எப்படியானாலும் இவை மீமாம்ஸகர்கள் சொன்ன ஆறிலே இருக்கிற மூன்றுதான். இந்தப் பிரமாண ஸமாசாரத்தை 'நியாயம்' என்று அடுத்த உபாங்கத்தைப் பற்றிச் சொல்லும்போது கொஞ்சம் விரிவாகச் சொல்கிறேன்.

மொத்தத்தில், மீமாம்ஸையை அடியோடு நிராகரணம் பண்ணாமல் அதை வைத்துக்கொண்டு அப்புறமே அதைக் கடந்து மேலே பக்தியில் த்வைதம், விசிஷ்டாத்வைதம் என்றும், பிறகு ஞானத்தில் அத்வைதம் என்றும் போவதற்கு நமக்கு முக்யமாக இருக்கப்பட்ட மூன்று வேதாந்த மதாசாரியர்களும் வழி பண்ணியிருக்கிறார்கள்.

கர்மாவே எல்லாம் என்பதால் மீமாம்ஸையைக் கர்ம மார்க்கம் என்பார்கள். ஆனால் கர்ம-பக்தி-ஞான மார்க்கங்கள் என்று நாம் வேதாந்த மதத்தில் சொல்கிற அர்த்தத்தில் இது கர்ம மார்க்கமில்லை. வேதாந்த மதத்தில் கர்மாவை கர்மாவுக்காகவே பண்ணி, அதுவே முடிந்த முடிவு என்று வைக்கவில்லை. கர்ம பலனை நினைக்காமல், நிஷ்காம்ய கர்மம் என்பதாக அந்தப் பலனை ஈச்வரார்ப்பணம் செய்ய வேண்டும் என்பதே வேதாந்தப்படி கர்ம மார்க்கம், அல்லது கர்ம யோகம். முக்யமாக கீதையில் பகவான் இதைத்தான் சொல்லியிருக்கிறார். மீமாம்ஸகர்களின் கர்ம மார்க்கத்திலோ ஈச்வர பக்தியே இல்லை. ஆனால் இந்த கர்மாக்களே லோகக்ஷேமம், சமூகத்தின் ஒழுங்கான வாழ்க்கை ஆகியவற்றைத் தருவதோடு அவற்றைப் பண்ணுகிற ஜீவனுக்கும் சித்த சுத்தியைத் தந்து அவனை பக்தியிலும் ஞானத்திலும் ஏற்றி விடுகிறது என்பதால், மீமாம்ஸை எதை ஸாத்யமாக (goal -ஆக, லக்ஷ்யமாக) சொல்லிற்றோ அதே கர்மாக்களை ஸாதனமாக (means - ஆக) வேதாந்தத்தில் ஆக்கிக் கொடுத்திருக்கிறது.

பண்டிதருலகில் மீமாம்ஸையின் மதிப்பு

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

மீமாம்ஸை : கர்ம மார்க்கம்

பண்டிதருலகில் மீமாம்ஸையின் மதிப்பு

வேத அர்த்த நிர்ணயத்தில் மீமாம்ஸை செய்கிற பெரிய உபகாரத்தினால் அதனுடைய கர்மாக் கொள்கையை ஆக்ஷேபிப்பவர் உள்பட எல்லாப் பண்டிதர்களும்,

வித்வான்களும் இந்த சாஸ்திரத்தை அப்யஸித்தும், தாங்களே இதில் புதுப் புஸ்தகங்கள் எழுதியும் வந்திருக்கிறார்கள். தேர்ந்த வேதாந்தியான மன்னார்குடி ராஜு சாஸ்திரிகள் (பெயரைச் சொல்லாமல் 'மன்னார்குடிப் பெரியவாள்' என்றே அவரைச் சொல்வது வழக்கம்), திருவிசநல்லூர் வேங்கடஸுப்பா சாஸ்திரிகள், அதே ஊரைச் சேர்ந்த நீலமேக சாஸ்திரிகள், ராயம்பேட்டை கிருஷ்ணமாச்சாரியார், கிருஷ்ண தாதாசாரியார், மண்டகுளத்தூர் சின்னஸ்வாமி சாஸ்திரிகள் முதலான பண்டித சிம்மங்கள் மீமாம்ஸையில் நிரம்ப ஈடுபாடு காட்டியிருக்கிறார்கள். இதிலே ஒரு வேடிக்கை! வேங்கடஸுப்பா சாஸ்திரிகளுக்கும் நீலமேக சாஸ்திரிகளுக்கும் குருவாக இருந்த திருவிசநல்லூர் ராமஸுப்பா சாஸ்திரிகள் யாக கர்மாக்களை பலமாகக் கண்டனம் பண்ணியவர்*. மீமாம்ஸகர்களுக்கு முக்யமான ச்ரௌத கர்மாவை இவர் ஆக்ஷேபித்த போதிலும், 'தியரி'யில் மீமாம்ஸா சாஸ்திரத்தின் உயர்வைப் பார்த்து அதை நன்றாக அப்பியாஸம் பண்ணி மீமாம்ஸையில் ஒரு 'அதாரிடி'யாக இருந்தார்.

மயிலாப்பூரிலுள்ள ஸம்ஸ்கிருத காலேஜ் ஏற்பட்ட பிறகு இதில் பிரின்ஸிபல்களாகவும், வாத்தியார்களாகவும் இருந்திருக்கிற பல பேர் நல்ல மீமாம்ஸா பண்டிதர்களாக இருந்து வந்து கொண்டிருப்பதால் இந்த சாஸ்திரம் தற்போது விருத்தியாகி வருகிறது.

* "பசுமாரக மர்த்தனம்" என்று யாகத்தைக் கண்டித்தே இவர் ஒரு நூல் எழுதியிருக்கிறார்.

நியாயம் : யுக்தி சாஸ்திரம்

அநுமானம் முக்யமான பிரமாணம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

நியாயம் : யுக்தி சாஸ்திரம்

அநுமானம் முக்யமான பிரமாணம்

ந்யாய சாஸ்திரம் தர்க்க சாஸ்திரம் என்றும் வழங்கும். இது கௌதம மஹரிஷியால் செய்யப்பட்டது. இதன் முக்கிய உத்தேசம், இந்த உலகத்துக்கெல்லாம் கர்த்தா பரமேச்வரன் என்பதை யுக்திகளைக் கொண்டு தீர்மானப்பதுதான். அது அநுமானத்தால் ஈச்வரனை ஸாதித்துக் கொடுக்கிறது. ஆகவே அது யுக்திப் பிரதானமான சாஸ்திரம்.

யுக்தி அவசியம் வேண்டும். வேதம் ஒரு விஷயத்தைச் சொல்லுகிறது. அதனுடைய அர்த்தத்தை மீமாம்ஸை நிர்ணயிக்கிறது. நாம் வேதத்தை நம்புகிறோம். நம்பினாலும் மனசு ஸந்தேஹப்படும். ஆகையினால் அந்த ஸந்தேஹத்தை நிவர்த்தி பண்ணுவதற்கு வேதம் சொன்னதைப் பலவித யுக்திகளைக் கொண்டு தீர்மானப் படுத்தினால் அந்தத் தீர்மானம் த்ருடமாயிருக்கும். பந்தற்கால் நடும் பொழுது அதை ஆட்டி அசைத்துப் பார்த்து வைத்தால்தான் உறுதியாக நிற்கும். அம்மாதிரி யுக்தியால் நன்றாக ஆட்டி உண்மைகளை உறுதிப்படுத்த வேண்டும். யார் யுக்திவாதம் பண்ணினாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் யுக்திகள் எல்லாம் ஸரியான ஆதாரத்தை வைத்துக்கொண்டு பண்ண வேண்டும். குயுக்திகள் பண்ணக்கூடாது.

ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் லோகத்தை விட்டுப் போகும்போது சிஷ்யர்களெல்லாம் சேர்ந்து ஸங்கிரஹமாக [சுருக்கமாக] ஒரு உபதேசம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்படிப் பிரார்த்தித்த பொழுது "உபதேச பஞ்சகம்" அல்லது "ஸோபான பஞ்சகம்" என்று ஐந்து ச்லோகத்தை ஆசாரியர்கள் சொன்னார்கள். அதிலே துஸ்தர்க்காத் ஸுவிரம்யதாம்; ச்ருதிமதஸ் தர்க்கோ(அ)நுஸந்தீயதாம் என்று வருகிறது. அதாவது, விதண்டாவாதங்களை விட்டு, வேதக் கருத்தை மதித்து அநுஸரிக்கும் நல்ல யுக்திகளையே உபயோகப்படுத்த வேண்டும்.

யுக்திகளினால் நிர்ணயம் பண்ணிக் கொள்ளாவிட்டால் காட்டிலே போவது போன்றதுதான். ஆனால் அந்த யுக்திகளை ஓர் ஆதாரம் வைத்துக் கொண்டு செய்யவேண்டும். இப்படி யுக்திகளைக் கொண்டு வேதார்த்தத்தை நிர்ணயம் பண்ணுவதுதான் "ந்யாயம்". அந்த சாஸ்திரம் கௌதமரால் செய்யப்பட்டது என்றேன். கணாதர் என்பவர் ஒரு விதமான ந்யாய சாஸ்திரம் பண்ணியிருக்கிறார். அது "வைசேஷிகம்" என்று தனியாகப் பிரித்துச் சொல்லப்படும்.

ஒன்றிலிருந்து இன்னொன்றைப் பிரித்து அடையாளம் கண்டு கொள்வதற்குக் காரணம் அதிலுள்ள விசேஷத் தன்மை (particularity) தான். இந்த விசேஷத் தன்மையையே முக்யமாக விசாரிப்பதால் கணாத சாஸ்திரத்துக்கு வைசேஷிகம் என்று பெயர் வந்தது. ரொம்பவும் ஸயன்ஸாகவே போகிற நியாய சாஸ்திரமானது,

அத்யாத்ம விஷயங்களான ஜீவன், ஜகத், ஈச்வரன், மோக்ஷம் (மோக்ஷம் என்பதை அவர்கள் 'அபவர்க்கம்' என்று சொல்வார்கள்) இவற்றை ஜாஸ்தி விசாரிக்கிற வைசேஷிகத்தோடு போய்ச் சேர்ந்து கொள்கிறது. இவை இரண்டிலும் logic (தர்க்கம்) , philosophy (தத்வம்) இரண்டும் இருக்கின்றன. 'லாஜிக்' மூலமாகவே 'பிலாஸஃபி' சொல்லப்படுகிறது.

நாலு பிரமாணங்களை வைத்துக் கொண்டு உண்மையை ஆராய்கிறது நியாய சாஸ்திரம். அவை 'பிரத்யக்ஷம்', 'அநுமானம்', 'உபமானம்', 'சப்தம்' என்பவையாகும்.

பிரத்யக்ஷமாகக் கண்ணால் பார்ப்பது, காதால் கேட்பது முதலியனதான் முதலில் சொன்ன பிரத்யக்ஷப் பிரமாணம்.

அடுத்து வருகிற அநுமானம் என்ற பிரமாணந்தான் நியாயத்துக்கு ரொம்பவும் முக்கியமானது.

அநுமானம் என்பது என்ன? தூரத்தில் மலையிலே புகை தெரிகிறது. புகை மட்டும்தான் தெரிகிறது. நெருப்பு தெரியவில்லை. முன்னே இருக்கிற பாறைகள் நெருப்பை மறைக்கின்றன. அதனால் மேலே புகை மாத்திரம் தெரிகிறது. ஆனாலும் நாம் நம் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் மலையிலே இருக்கிற காட்டில் நெருப்புப் பிடித்துக்கொண்டிருக்கிறது என்று ஊகித்து விடுகிறோம். இதுதான் 'அநுமானம்' என்பது. இங்கே நெருப்புக்கு 'ஸாத்யம்' என்றும், அதை நாம் அநுமானிப்பதற்கு அடையாளமாயிருக்கிற புகைக்கு 'ஸாதனம்', 'லிங்கம்', 'ஹேது' என்றும் பெயர்.

இப்போது நாம் அநுஸரிக்கிற மதமான வேதாந்தத்தின் படி குருவிடமிருந்து சிரவணம் என்பதாக உபதேசம் பெற்றபின் அதை மனனம் பண்ண வேண்டும். மனனம் என்பது ஆசாரியர் மூலமாகக் கேட்டதைப் புத்தியில் ஏற்படும் யுக்தியைக் கொண்டு நினைத்து நினைத்துப் பார்ப்பது. இதிலே அநுமானம்தான் விசேஷமாகக் கை கொடுக்கிறது. அநுமானத்தால்தானே பிரத்யக்ஷமாக அறிய முடியாததை வேறு காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது? பரமாத்ம, ஜீவாத்ம ஸ்வரூபங்கள் நம் கண் முதலியவற்றுக்குப் பிரத்யக்ஷமாகத் தெரியவில்லை. மூக்காலோ, வாயாலோ அவற்றை அறிய முடியவில்லை. மோக்ஷ ஸ்வரூபமும் தெரியவில்லை. கடைத்தேறுவதற்குரிய வழியும் தெரியவில்லை. இவைகளையெல்லாம் அநுமானத்தால்தான் தெரிந்த கொள்ள வேண்டும். தெரிந்த ஒன்றை வைத்துக் கொண்டு தெரியாதவற்றைத் தெரிந்து கொள்ளுவது அநுமானம். இடி இடிப்பதால் மேகம் உண்டென்று அநுமானிக்கிறோம். அதுபோல.

வைதிக கர்மாக்களால் சித்த சுத்தி உண்டாயிற்று. நல்ல ஆசாரியரை அடைந்தோம். அவர் ஒன்று சொன்னார். அதை நம்பி விட்டோம். பின்பு வேறு ஒருவர் வித்தியாஸமாக ஒன்று சொன்னால் நமக்கு ஸந்தேஹம் உண்டாகும். எத்தனை தினுஸான ஆக்ஷேபணைகள் உண்டோ அவ்வளவையும் பண்ணித் தீர்மானிக்க வேண்டும். அப்படித் தீர்மானிக்க அநுமானம் முதலான பிரமாணங்கள் உபயோகப்படும். அந்த அநுமானத்தைப்

பிரதானமாக வைத்துக் கொண்டு ஆராய்வது நியாயம். வைசேஷிகமும் அப்படியே.

பதார்த்தம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

நியாயம் : யுக்தி சாஸ்திரம்

பதார்த்தம்

நம்முடைய மத ஸித்தாந்தம், எல்லாப் பதார்த்தங்களையும் அடிமூலத்துக்குப்போய் நன்றாகத் தெரிந்து கொள்ளுவதால் ஸத்ய தத்வம் பிரகாசித்துவிடும் என்பது. எல்லாவிதமான பிரமாணங்களையும் உபயோகப்படுத்தி அப்படித் தெரிந்து கொள்ள வேண்டும். எதைக் கொண்டு பதார்த்தங்களைத் தெரிந்து கொள்ளுகிறோமோ அதுதான் பிரமாணம்.

பிரத்யக்ஷப் பிரமாணமான கண் காது முதலியவைகளுக்குள் அகப்படும் விஷயங்கள் கொஞ்சந்தான். அகப்படாதவை அதிகமாக இருக்கின்றன. அவைகள் அநுமானப் பிரமாணத்தில் அகப்படும். அந்த அனுமானத்தை விரிவு படுத்த வேண்டும். அது வேத தத்வத்தை அறியும் ஞானத்துக்கு உபயோகப்படுகிறது. அதனால்தான் நியாயம் ஓர் உபாங்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மீமாம்ஸை சிரவணத்திற்கு உபயோகம். மனனத்துக்கு சாதனமாக இருப்பது நியாயம்.

நியாயத்தில் பதார்த்தங்களை ஏழு விதமாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொன்றையும் தனியாக அறிய முடியாததால் மொத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த ஏழுவகைப் பதார்த்தங்களில் இரண்டு பிரிவு உண்டு. உள்ளது என்பது ஒன்று, இல்லாதது என்பது ஒன்று.

பாவோ அபாவச்ச

இந்த ஏழுவகைப் பதார்த்தங்களுள் ஏழாவது "இல்லாதது" என்பது. இருக்கிறது என்பது பாவம். இல்லாதது அபாவம். அபாவம் ஏழாவது. "பாவ"மாக இருப்பதை ஆறுவிதமாகப் பிரித்திருக்கிறார்கள்.

இல்லை என்பது எப்படிப் பதார்த்தமாகும்? பதார்த்தம் என்பது என்ன? பதத்தின் அர்த்தம்தான் பதார்த்தம். இல்லை என்னும் ஒரு பதத்திற்கும் அர்த்தம் இருக்கிறதல்லவா?

அபாவம் சில இடத்தில் இருக்கிறது; சில இடத்தில் இல்லை. இங்கே புஷ்பம் இல்லை. அதாவது புஷ்பத்தின் அபாவம் இங்கே இருக்கிறது! அங்கே பூஜாமண்டபத்தில் புஷ்பம் இருக்கிறது; புஷ்பத்தின் அபாவம் அங்கு இல்லை. இப்படி அபாவமானது சில இடங்களில் இருக்கிறது; சில இடங்களில் இல்லை. அப்படியே சில ஸமயத்தில் இருக்கிறது; சில ஸமயத்தில் இல்லை. இப்படி, சில கால தேசங்களில் அபாவம் இருப்பதனால் அது பதார்த்தம் ஆகிறது.

ஏழு பதார்த்தங்களாவன: திரவியம், குணம், கர்மம், ஸாமான்யம், விசேஷம், ஸமவாயம், அபாவம் என்பவை. திரவியம், குணம், கர்மம் இந்த மூன்றும் ஸத்தான பதார்த்தம். அவற்றை இருக்கிறதென்று நம்மால் காட்ட முடியும். அதுதான் ஸத். பாக்கி நான்கும் அப்படிக் காட்ட முடியாதது. "ஸத்தை"யோடு கூடியது முதல் மூன்றுதான்.

இவற்றில் முதலாவதான த்ரவ்யம் ஸ்தூலமாக காட்டக் கூடியது. ஞானம், ஆசை, ஸந்தோஷம், துக்கம் முதலிய குணங்களைத் தனியாகப் பிரித்துக் காட்ட முடியாது. இவைகளெல்லாம் ஒன்றை ஆசிரயித்தே இருக்கும், தனியாகப் பிரிக்க முடியாது. தாமரை சிவப்பாக இருக்கிறது. சிவப்பு தாமரையினுடைய குணம். அந்தச் சிவப்பைத் தனியாகப் பிரித்துக் காட்ட முடியாது. இப்படி ஒரு ஆசிரயத்தை ஒட்டிக் கொண்டு இருப்பதுதான் குணம். அது எதை ஆசிரியத்திருக்கிறதோ அந்த ஆசிரியந்தான் த்ரவ்யம். சந்தோஷத்தையும் துக்கத்தையும் தனியாகக் காட்ட முடியாவிட்டாலும் ஒருத்தன் ஸந்தோஷமாகவும் துக்கமாகவும் இருப்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறதல்லவா? அப்போது ஸந்தோஷம், துக்கம் இவற்றையும் தெரிந்துகொண்டு விடுகிறோம். சிவப்புத் தாமரையைப் பார்க்கும்போது சிவப்பு என்னவென்று தெரிந்து கொண்டு விடுகிறோம். கர்மம் என்பது காரியம். சலனம், போதல், ஓடுதல் முதலிய வேலைகள் கர்மாக்கள். அவைகளும் திரவியத்தை ஆசிரயத்தே நிற்கும். ஒருவன் ஓடுகிறான், ஓடுதலை அவனிடத்திலிருந்து பிரிக்க முடியாது. அவன் ஓடுகிறான் என்பதைப் பார்க்க முடிகிறது. அப்போது அவன் உட்கார்ந்திருக்கவில்லை, படுத்திருக்கவில்லை என்ற வித்யாஸம் தெரிகிறது. அதனால் ஓட்டத்தை நாம் பார்க்கிறோம் என்று அர்த்தம். ஸாமான்யம் என்பது நாலாவது பதார்த்தம். அது ஜாதியைக் குறிப்பது. பல மாடுகள் இருக்கின்றன. அவைகளுக்குள் மாட்டுத்தன்மை என்னும் ஒரு பொதுமை இருக்கிறது. அதை நாம் ஜாதி என்கிறோம். அது எல்லாப் பசுக்களிடத்திலும் இருக்கிறது. அதுதான் "ஸாமான்யம்".

ஒரே மாதிரி இருந்தும் வெவ்வேறாக இருப்பது "விசேஷம்". பசுக்கள் ஒரே ஜாதியாக இருந்தும் அப் பசுக்களிடத்தில் ஒவ்வொன்றையும் தனித்தனியே பிரித்துக் காட்டக்கூடிய சில 'விசேஷ' அடையாளங்கள் இருக்கின்றன. திரிவியத்தையும் குணத்தையும், திரவியத்தையும் அதன் காரியத்தையும், தனித்தனியானவற்றையும் பொதுமையையும், ஒரு முழு வஸ்துவையும் அதன் அவயவங்களையும் பிரிக்க முடியாமல் ஒட்டி வைத்திருப்பதுதான் "ஸமவாயம்" எனப்படுகிறது. அக்னியில் பிரகாசமான ரூபம் இருக்கிறது. அந்தப் பிரகாசத்தையும் ரூபத்தையும் பிரிக்க முடியாது. அது ஸமவாயம். திரவியமும் திரவியமும் சேர்ந்தால் அதை ஸம்யோகம் என்று சொல்வார்கள். இவை ஒன்றோடொன்று சேராமல் தனித்தும் இருக்க முடியும். திரவியமும் குணமும் சேர்ந்தால் அது ஸமவாயம்; திரவியமும் கர்மாவும் சேர்ந்தால் அதுவும் ஸமவாயந்தான். குணமும் கர்மாவும் ஒரு திரவியத்தைச் சேராமல் தனித்தும் இருக்க முடியாது.

கடைசியாக வரும் அபாவத்தைப் பற்றி முதலிலேயே சொல்லிவிட்டேன்.

இப்படிப் பதார்த்தங்களை ஏழுவகையாகப் பிரித்தது போல ஒவ்வொரு பதார்த்தத்தையும் பலவகையாகப் பிரத்திருக்கிறார்கள். திரவியம் ஒன்பது விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், காலம், திக்கு, ஆத்மா, மனது என்பவை. இவைகளில் முதலில் சொல்லப்பட்ட ஐந்துக்குப் பஞ்ச பூதங்களென்று பெயர். பிருதிவி என்பது பூமி, அப்பு ஜலம்,

தேஜஸ் அக்னி, வாயு காற்று, ஆகாசம் என்பது எல்லாவற்றிற்கும் இடம் கொடுப்பது.

இந்த பஞ்ச பூதங்களிலும் ஒரு வேடிக்கை இருக்கிறது. இவைகளுக்கு ஸரியாக உடம்பில் ஐந்து திஞுசான அறிவுகள் இருக்கின்றன. பார்க்கிற சக்தியுள்ள கண், கேட்கும் காது, ருசிக்கும் நாக்கு, உஷ்ணம் சீதம் தெரிந்துகொள்ளும் ஸ்பரிசேந்திரயம், கந்தம் தெரிந்துகொள்ளும் மூக்கு என்பவை ஐந்து. ஸ்பரிச இந்திரியம் என்பது வெளித்தோலான சர்மம் மட்டும் இல்லை. உடம்பு முழுவதிலும் ஸ்பரிச உணர்ச்சி இருக்கிறது. உடம்புக்கு உள்ளேயும் இருக்கிறது. வயிற்று வலி, மார்(பு) வலி முதலியவை அதனால்தான் தெரிகின்றன. இந்த ஐந்து விதமான அறிவும் ஒவ்வொன்றால் அறியப்படுகிறது. ஒவ்வொரு விஷயம் ஒவ்வோர் இடத்தில் தான் உணர்ச்சியைத் தருகிறது. பார்வை கண்ணில்தான் இருக்கிறது; காதினால் பார்க்க முடியாது. காதினால் கேட்கிற ஸங்கீதத்தை கண்ணினாலோ மூக்கினாலோ கேட்க முடியாது. நாக்கிலே ஒரு பதார்த்தத்தைப் போட்டால் அதனுடைய ருசியைத் தெரிந்து கொள்ள முடியுமேயொழிய வாஸனையை அறிய முடியாது. கற்கண்டு தித்திக்கிறது என்று மூக்கு தெரிந்து கொள்ளாது. இப்படி ஐந்து திஞுஸான குணங்களை ஐந்து இந்திரியங்களில் ஒவ்வொன்றுதான் தெரிந்து கொள்ள முடியும். ரூபம் என்னும் குணத்தைக் கண் அறிகிறது. நிறம், அளவு முதலியவைகள் ரூபம். சுக்ல, பீத, நீல, ஹரித, ரக்த, கபிசம், அதாவது [முறையே] வெள்ளை, மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு, காப்பி நிறம் (brown) என்பவை

நிறங்கள். சப்த பேதங்களைக் காது அறிகிறது. கெட்ட வாஸனை, நல்ல வாஸனைகளை மூக்கு அறிந்து கொள்கிறது. ஆறுவகை ரஸங்களை நாக்கு உணர்ந்து கொள்கிறது. உஷ்ணம், சீதம் முதலியவைகளை ஸ்பரிசேந்திரியம் தெரிந்து கொள்ளுகிறது. இப்படி ஐந்து இந்திரியங்கள் ஐந்து வகையான குணங்களை உணர்ந்து கொள்ளுகின்றன. இவைகளுக்கு ஞானேந்திரியங்கள் என்று பெயர். இந்திரியம் இல்லாவிட்டால் குணம் தெரியாது. நமக்கு இந்திரியங்கள் ஆறாக இருந்தால் ஆறு வகையான குணங்களை நாம் அறியக் கூடுமாயிருக்கும். ஆயிரம் இந்திரியங்கள் இருந்தால் ஆயிரம் குணங்கள் அறியப்படக் கூடலாம்! உலகத்தில் எத்தனை விஷயங்கள் இருக்கின்றனவோ, தெரியவில்லை! நமக்கு ஸ்பரிசேந்திரியம் கொடுக்காவிட்டால் சீதம், உஷ்ணம் முதலியவை உண்டு என்று அறிய முடியாது தானே? அந்த இந்திரியம் கொடுத்ததனால் சீதோஷ்ணங்கள் அறியப்படுகின்றன. சீதோஷ்ணங்கள் வெளியில் இருப்பதனால் மட்டும் நமக்குத் தெரிகின்றன என்று சொல்லக்கூடாது. வெளியில் இருப்பதை அறிய நமக்கு இந்திரியம் இருந்தால்தான் அவை தெரியும். குருடர்களுக்கும் செவிடர்களுக்கும் ரூபம், சப்தம் என்பவை வெளியில் இருந்தபோதிலும் தெரியாததைப் பார்க்கிறோமல்லவா?

கண், நாக்கு, மூக்கு, தொடு உணர்ச்சிப் புலன் (த்வக்), காது என்னும் ஐந்து இந்திரியங்களுக்கும் ரூப, ரஸ, கந்த , ஸ்பரிச, சப்தங்கள் முறையே விஷயமாகின்றன.

இந்த ஐந்து குணங்களையும் பகவான் பஞ்ச பூதங்களில் வைத்திருக்கிறார். மண்ணில் ஐந்து குணங்களும் இருக்கின்றன. அதற்கு ரூபம் இருக்கிறது; ருசி இருக்கிறது. நம் உடம்பு, கத்திரிக்காய், வெல்லம் எல்லாம் மண்தான்! மண்ணுக்கு வாஸனை இருக்கிறது. வாஸனை உள்ள புஷ்பம் மண்தான். கடினம், சீதம் உஷ்ணம் முதலியதான ஸ்பரிசத்தால் அறியும் குணங்களும் மண்ணுக்கு இருக்கின்றன. சப்தமுங்கூட இருக்கிறது. நூலைக் கட்டிக் கேட்டால் சப்தம் கேட்கிறது. கட்டையைத் தட்டினால் சப்தம் உண்டாகிறது. ஜலத்தில் கந்தத்தைத் தவிர மிகுதியுள்ள நான்கு குணங்களும் இருக்கின்றன. நாம் வாஸனைப் பதார்த்தங்களைக் கலந்தால்தான் ஜலத்தில் கந்தம் உண்டாகிறது. ஜலத்திற்கு ரூபம், ரஸம், சப்தம், ஸ்பரிசம் என்னும் நான்கும் இருக்கின்றன. ஜலத்தை அடித்தால் சப்தம் உண்டாகிறது. மண்ணில் ஐந்து குணங்களும் இருந்தாலும் மற்ற நான்கிலும் இல்லாமல் அதில் மட்டும் இருப்பது கந்தம். அது அதனுடைய விசேஷ குணம். ஜலம் இல்லாமல் போனால் ரஸம் இல்லை. அதனால்தான் ரஸேந்திரியமாகிய நாக்கில் எப்பொழுதும் தண்ணீர் இருக்கிறது. நாக்கில் நீர் வற்றி மரத்துப் போனால் ருசியை அறிய முடியாது! ரஸம் என்பதற்கே ஜலம் என்று ஒரு அர்த்தம் உண்டு. தேயுவுக்கு (நெருப்புக்கு) ரஸமும் இல்லை, கந்தமும் இல்லை. ரூபம், சப்தம், ஸ்பரிசம் என்ற மூன்றுதான் இருக்கின்றன. அதற்கு ரூபம் விசேஷ குணம். வாயுவில் ரூபம் இல்லை. சப்தமும் ஸ்பரிசமும் மாத்திரம் இருக்கின்றன. அதற்கு ஸ்பரிசம் விசேஷ குணம். அதனால்தான் நம் மேலே காற்று பட்டால் தெரிகிறது. ஆகாசத்திற்கு சப்தம் மட்டுமே

உண்டு. வாயுவினால்தான் சப்தம் உண்டாகிறதென்று முதலில் நவீனர்கள் கருதியிருந்தார்கள். கம்பியில்லாத் தந்தி முதலியவை ஏற்பட்ட பிறகு காற்றினுடைய மாறுதல்களுக்கு உட்படாமல் சப்தம் கேட்பதால் ஆகாசத்தினுடைய குணம் அது என்று தெரிந்து கொண்டு வருகிறார்கள்.

சப்தம் என்ற ஒரே குணமுள்ள ஆகாசம்; சப்தத்தோடு நம் மேலே படுவதால் தெரிந்துக்கொள்ளக் கூடிய ஸ்பரிசமும் உள்ள வாயு; சப்தம், ஸ்பரிசம் என்ற இரண்டோடு கண்ணுக்குத் தெரிகிற ரூபமும் உள்ள அக்னி; இந்த மூன்றோடு ரஸமும் சேர்ந்த ஜலம்; இந்த நாலு குணங்களோடு கந்தமும் உள்ள பிருத்வி – என்று பஞ்ச பூதங்கள்.

ஐந்து குணங்களுக்கு ஆசிரியங்களாக பஞ்ச பூதங்களாகிய திரவியங்கள் இருக்கின்றன.

நியாய சாஸ்திரம் சொல்லும் ஒன்பதில் மிகுதியுள்ள திரவியப் பிரிவுகள் காலம், திக்கு, ஆத்மா, மனது என்பவை. மணி, நேற்று, இன்று, நாளை, வருஷம், யுகம் முதலியவை காலம். அதாவது Time என்ற தத்வம். திக்கு என்பது தேசம் – மேல் கீழ், அங்கே, இங்கே என்பனவெல்லாம்! அதாவது Space என்ற தத்துவம். இவ்வளவையும் அறிவும் மனத்தை உடையவனே ஆத்மா. மற்ற எல்லாம் அவனுக்காகத்தான் இருக்கின்றன! அவன் இரண்டு விதம். அசட்டு ஆத்மா ஒருவன். அசடாயில்லாத ஆத்மா ஒருவன். இவர்கள் முறையே ஜீவாத்மா, பரமாத்மாவென்று சொல்லப் படுவார்கள்! லோகத்தில் நடப்பதையெல்லாம் வெறுமே பார்த்துக் கொண்டிருப்பவன் ஒருவன் (பரமாத்மா) . இதிலே மாட்டிக் கொண்டு துக்கப்படுபவன் மற்றவன் (ஜீவாத்மா) . ஜீவாத்மா பலர்; பரமாத்மா ஒருவர். இவ்விருவரும் சைதன்ய [அறிவுள்ள ஜீவ] வஸ்துக்கள்.

வேதாந்தம் அறிவே ஆத்மா என்று சொல்லுகிறது. நியாய சாஸ்திரமானது அறிவை உடையவனான ஞானவான் ஆத்மா என்று சொல்லுகிறது. சிறிய அறிவை உடையவன் ஆத்மா என்று த்வைதமாகத்தான் நியாயம் பேசுகிறது. வேதாந்தப் படியோ ஏகமான பேரறிவே ஆத்மா; அதற்கு வேறாக அறியப்படும் ஒன்றே இல்லை; பல ஜீவாத்மாக்கள் என்று கூட இல்லை. ஆனால் நியாயப்படி அறிவு குணத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது; ஆத்மா திரவியம்; ஞானம் அதன் குணம்; ஞானாச்ரயன் ஆத்மா.

பரமாத்மாவினுடைய ஞானத்தில் தெரியாத ஒன்றும் இல்லை என்பதாக அவரை மட்டுமே நியாயத்தில் பேரறிவாகச் சொல்லியிருக்கிறது. ஜீவாத்மாக்கள் கொஞ்சம் ஞானம் உடையவர்களே. அதனால் நமக்கு "கிஞ்சித்ஞர்கள்" என்னும் பெயர் ஏற்பட்டிருக்கிறது. 'கிஞ்சித்' என்றால் கொஞ்சம். பரமாத்மாவே ஸர்வக்ஞர். நாம் ஞானாச்ரயமாகவும் அஞ்ஞான ஆச்ரயமாகவும் கலந்து இருக்கிறோம். பரமாத்மா பூர்ண ஞானாச்ரயமாக இருக்கிறார். 'ஆத்மா விபு, அதாவது அது எங்கும் நிறைந்திருக்கிறது; பரமாத்மாவும் எங்கும் நிறைந்திருக்கிறது' என்று நியாய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டாலும் ஜீவாத்ம பரமாத்ம அபேதம் சொல்லப்படவில்லை. ஏனென்றால் இந்த சாஸ்திரத்தின் நோக்கில் அறிவு என்பது ஒவ்வொரு ஜீவரிடத்திலும் தனித்தனியாக ஏற்பட்டிருக்கிறது. அந்த இடம் தான் மனது. அந்த மனதினால்தான் சுகமும் துக்கமும் உண்டாகிறது.

குணம் 24 பிரிவாகவும், கர்மம் 5 பிரிவாகவும் நியாய சாஸ்திரத்தில் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட பதார்த்த ஞானம் இருந்தால் உண்மையை அறிந்து, மற்றவற்றில் வைராக்கியம் உண்டாகி மோக்ஷம் வரும் என்கிறது நியாய சாஸ்திரம். துக்கம் ஸுகம் எதுவுமில்லாத வெறுமையாகவே அது மோக்ஷத்தைச் சொல்லும்.

வேதாந்த மார்க்கத்தின்படியே நாம் மோக்ஷத்தைச் அபேக்ஷித்தாலும் அந்த வழியிலும் உபதேசத்தை ஆராயும் மனனத்திற்கு நியாயம் மிகவும் உபயோகப்படும்.

பஞ்ச பூதங்களையும், ஜீவாத்மாவையும், மனஸையும் நாம் தெரிந்து கொள்கிறோம். பரமாத்மாவை எப்படி தெரிந்து கொள்ள முடியும்? அவன் ஒருவன்தான் அறிய முடியாதவன். அவனை அறிவதற்காகத்தான் அநுமானம் வேண்டும். மற்றவைகளை அறிவதற்குப் பிரத்யக்ஷப் பிரமாணமே போதும். ச்ருதி வாக்கியமானது ஈச்வரன் இருக்கிறான் என்று சொல்லுகிறது. இருந்துதான் ஆகவேண்டும் என்று அநுமானத்தால் ஸித்தாந்தம் செய்வது நியாயம்.

ஒரு சின்ன அநுமானத்தை இப்பொழுது பார்க்கலாம். நான் உட்கார்ந்துள்ள இந்த ஸிம்மாஸனம் ஒருவன் பண்ணித்தான் ஆகியிருக்கிறது என்பது நமக்குத் தெரியும். பண்ணினவனை நேரில் தெரியாததால் இது பண்ணப்பட்டது என்பதே பொய் என்று சொல்லலாமா? வேறு ஸிம்மாஸனங்களைப் பண்ணி நாம் பார்த்திருக்கிறோம். அதைக் கொண்டு இதையும் பண்ணினவன் ஒருவன் இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்கிறோம். அவனுக்கு இதைப் பண்ணுகின்ற சக்தியுண்டு என்பதையும் அறிந்து கொள்ளுகிறோம். அதைப் போல ஜகத்து எல்லாவற்றையும் பண்ணுகிறவன் ஒருவன் இருக்கிறான். அவன் ஸர்வஜ்ஞன், ஸர்வசக்திமான். எல்லாரையும் ரக்ஷிக்கின்றமையால் கருணாநிதியாகவும் அவன் இருக்க வேண்டும். இம்மாதிரி விஷயங்களை ஆக்ஷேபணை, ஸமாதானங்களோடு ஸரியான அநுமானத்தைக் கொண்டு நிர்ணயிப்பது நியாய சாஸ்திரம்.

பிரமாணங்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

நியாயம் : யுக்தி சாஸ்திரம்

பிரமாணங்கள்

பிரத்யக்ஷ, அநுமானங்களோடு நியாயம் சொல்கிற மற்ற இரு பிரமாணங்கள் உபமானமும் சப்தமும் ஆகும்.

உபமானம் என்பது என்ன? நமக்குத் தெரியாத ஒன்றைத் தெரிந்த ஒன்றின் ஒப்புவமையால் தெரிந்து கொள்வது. 'கவயம்' என்று ஒரு

மிருகம் இருக்கிறது. அது எப்படியிருக்கும் என்று நமக்குத் தெரியவில்லை. காட்டெருமை மாதிரி ஒன்று அது; பார்த்தால் மாடு மாதிரியே இருக்கும் என்று அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. நாம் எங்கேயோ காட்டுப் பக்கம் போகிறோம். அங்கே இப்படி மாடு மாதிரியான ஒரு மிருகத்தைப் பார்க்கிறோம். இதுதான் கவயம் என்று தெரிந்து கொள்கிறோம். 'உபமானம்' என்பது இதுவே.

சப்தப் பிரமாணம் என்பது வாக்கு ரூபமான வேதப் பிரமாணமும், ஸத்துகளான பெரியவர்களின் வாக்குமாகும். நமக்குத் தெரியாத விஷயங்களை வேதமும், மஹான்களும் சொல்லும்போது அதிலே பொய்யே இருக்காது என்று பிரமாணமாக எடுத்துக் கொள்ள வேண்டும். "வேதம் ஈச்வர வாக்கு" என்பதே நையாயிகர்களின் (நியாய சாஸ்திரக்காரர்களின்) கருத்து. அதனால் அது பிரமாணம். ஸத்ய ஸந்தர்களாக இருக்கப்பட்ட மஹான்கள் சொல்வதும் சப்தப் பிரமாணத்தில் சேர்க்கப்பட வேண்டியது.

இந்த நாலு பிரமாணங்களும் மீமாம்ஸையில் குமாரில பட்டரின் ஸித்தாந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இவற்றோடு கூட அர்த்தாபத்தி அநுபலப்தி என்ற இரண்டையும் சேர்த்து அவர் ஆறு பிரமாணங்களைச் சொல்கிறார். நம்முடைய அத்வைத வேதாந்தத்திலும் இந்த ஆறு பிரமாணங்களையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

அர்த்தாபத்தி என்பதற்கு நம் சாஸ்திர நூல்களில் ஒரு உதாரணம் சொல்லிச் சட்டென்று புரிய வைத்திருக்கிறது. "பீனோ தேவதத்தோ திவா ந புங்க்தே" என்று சொல்லியிருக்கும். "குண்டன் தேவதத்தன் பகல் வேளையில் சாப்பிடுவதில்லை" என்று அர்த்தம். பகலில் சாப்பிடாமலும் அவன் இளைக்கவில்லை, குண்டாக இருக்கிறான் என்று இந்த வாக்கிலிருந்து ஆகிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? அவன் இரவில் நன்றாகச் சாப்பிடுகிறான் என்று தெரிகிறது. சாப்பிடாமலிருப்பது, ஆனாலும் அதனால் இளைக்காமலிருப்பது என்பது மாதிரியான ஒரு முரண்பாட்டிலே இது முரண்பாடு இல்லை என்பதற்கான காரணத்தைக் கண்டு கொள்ள உதவுவதே 'அர்த்தாபத்தி' என்ற பிரமாணம்.

தேவதத்தன் இரவிலே சாப்பிடுகிறான் என்று நாம் ஊகிப்பது முன்னே இரண்டாவதாகச் சொன்ன 'அநுமானம்' என்ற பிரமாணத்தைச் சேராது. அநுமானத்தில் ஒரு விஷயத்தை ஊகிப்பதற்கு அதிலிருந்தே ஒரு அடையாளம் – மேகத்திலிருந்தே இடிமாதிரி, நெருப்பிலிருந்தே புகை மாதிரி – தோன்ற வேண்டும். இங்கே அப்படிப்பட்ட 'லிங்கம்' எதுவுமில்லை.

உபமானத்திலும் இப்படியே. 'இது கவயம்' என்று நாம் காட்டு மிருகத்தைக் கண்டவுடன் ஊகித்து விடுவதால் மட்டும் அது அநுமானமாகி விடாது. இங்கேயும் லிங்கத்தைக் கொண்டு மிருகத்தை நாம் அடையாளம் புரிந்துகொள்ளவில்லை. ஏற்கெனவே நமக்குத் தெரிந்த கவய வர்ணனையின் ஒப்புவமையாலேயே அறிகிறோம்.

கடைசிப் பிரமாணம் அநுபலப்தி. ஒன்று இல்லை என்பதை அறிந்து கொள்வதே அநுபலப்தி. அபாவம் என்பதை ஏழு பதார்த்தங்களில் கடைசியாக நியாயத்தில் சொல்லியிருக்கிறது என்றேனல்லவா? அந்த அபாவத்தை நாம் எதனால் தெரிந்து கொள்கிறோமே அதுவே அநுபலப்தி.

"அந்தக் கொட்டகையில் யானை இருக்கிறதா, போய்ப் பார்!" என்று சொன்னால் போய்ப் பார்க்கிறோம். யானை இருந்தால் இருக்கிறது என்று தெரிந்து கொள்கிற மாதிரியே, யானை இல்லாவிட்டால் இல்லை என்பதையும் தெரிந்து கொள்கிறோம். யானையைத் தெரியவில்லை. ஆனால் அது அங்கே இல்லை என்ற உண்மை தெரிகிறது. யானையைத் தெரியாததாலேயே இந்த உண்மை தெரிகிறது. இம்மாதிரி ஒன்று தெரியாததாலேயே உண்மை தெரிவது அநுபலப்தி.

நியாயத்தில் அர்த்தாபத்தியும், அநுபலப்தியும் இல்லை. மீமாம்ஸையிலும், அத்வைத வேதாந்தத்திலுமே உள்ளன. (மீமாம்ஸையிலும் பாட்ட மதத்தில் மட்டுமே அநுபலப்தி உண்டு; பிரபாகரரின் ஸித்தாந்தத்தில் கிடையாது.)

பகவானைக் காட்டவே பகுத்தறிவு

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

பகவானைக் காட்டவே பகுத்தறிவு

இப்படிப்பட்ட பிரமாணங்களைக் கொண்டு ஆராய்ந்து கொண்டே போவதில் நியாயம் விட்ட இடத்தில் வைசேஷிகம் பிடித்துக்கொண்டது. வைசேஷிக ஸ்தாபகரான 'கணாதர்' என்ற மஹரிஷி, எல்லாம் கடைசியில் பரமாணுக்களால் ஆனது என்று கொண்டு போய் நிறுத்துகிறார். அந்த பரமாணுக்களை ஈச்வரன் பல தினுஸில் ஒன்று சேர்த்தே ஜகத்தை உண்டாக்கியிருக்கிறான் என்கிறார்.

ஜகத்து, ஜீவன் எல்லாமே ஈச்வரனுக்கு வேறேயாக த்வைதமாகத்தான் நியாய – வைசேஷிகங்களில் பேசப்படுகின்றன.

சைதன்யமான ஜீவனின் சிற்றறிவு எங்கேயிருந்து வந்தது, ஜடமான அணு எங்கேயிருந்து வந்தது என்று கேட்டுக்கொண்டே மேலே மேலே போகிற போதுதான் கடைசியில் எல்லாம் பரமாத்மாவின் பல தோற்றங்கள், வேஷங்கள் தான் என்று அத்வைதமாக முடிகிறது.

அந்த அத்வைதத்தில் முடிவதற்கும் நியாயசாஸ்திரம் இடைநிலையில் வேண்டியிருக்கிறது.

பகுத்தறிவுக்கு உரிய இடத்தைக் கொடுப்பதே நம்முடைய 'நியாயம்' அல்லது 'தர்க்கம்'. அது அறிவு ஆராய்ச்சி நிரம்பப் பண்ணுகிறது. அதற்காக rationalism என்பது materialism, atheism மாதிரியான லோகாயத வாதமாக, நிரீச்வரவாதமாக, நாஸ்திகமாகத்தான் இருக்க வேண்டும் என்றில்லை என்றும் காட்டுகிறது. அறிவு ஆராய்ச்சியின் மூலமே, இத்தனை கிரமத்தோடு ஒரு லோகம் ஏற்பட்டு அதில் இத்தனை ஜீவஜந்துக்களின் வாழ்க்கை ஒன்றுக்கொன்று இசைந்து உண்டாகியிருக்கிறதென்றால் இதையெல்லாம் செய்கிற ஒரு ஈச்வரன் இருக்கத்தான் வேண்டும் என்கிறது. நம் பகுத்தறிவு போகமுடியாத இடமும் உண்டு என்பதை நியாய சாஸ்திரம் ஒப்புக்கொள்வதால்தான் நம்மால் நிரூபித்துப் பார்த்துக் கொள்ள முடியாத விஷயங்களைக் கூட வேதம் சொன்னால் ஏற்கத்தான் வேண்டும் என்கிறது.

அதாவது நியாய சாஸ்திரத்தில் யுக்தி என்பது குயுக்தியாக (ஆசார்யாள் வாக்குப்படி, 'தர்க்கம்' என்பது 'துஸ்தர்க்க'மாக) ஆகிவிடாமல் ஸத்ய தத்வத்தைக் காட்டிக் கொடுக்கவே பிரயோஜனப்படுகிறது.

அறிவால் நல்ல முறையில் ஆராய்ச்சி பண்ணுவது அந்த அறிவையே சுத்தப்படுத்தும். புத்தித் தெளிவு, intellectual clarity என்பதைக் கொடுக்கும். அப்படிப்பட்ட நிலையிலே புத்திக்கு அதீதமான ஸத்யங்களும் ஸ்புரிப்பதற்கு (flash ஆவதற்கு) இடம் ஏற்படும்.

புத்தி ஆராய்ச்சியே செய்யாமல் பகவானையும் சாஸ்திரங்களையும் பூர்ணமாக நம்பிக் கொண்டு இருந்துவிட்டால் அது ரொம்பவும் சிலாக்யம்தான். ஆனால் இப்படிப் பூர்ணமாக நம்பிக் கொண்டு அதிலேயே ஈடுபட்டு ஆத்மாவைக் கடைத்தேற்றிக்கொள்ள நம்மால் முடிகிறதா? அப்படி முடியாத நிலையில் தெய்வ பரமான சிந்தனையோ, ஆத்மாவைப் பற்றிய நினைப்போ இல்லாமல், அதே சமயத்தில் எந்த விதமான அறிவு விசாரணையும் செய்யாமல் வெறுமே தின்று கொண்டும், தூங்கிக் கொண்டும் சோம்பேறியாக இருப்பதைவிட, புத்தியைக் கொண்டு ஆராய்ந்து, "ஈச்வரன் இல்லை; நாஸ்திகம்தான் சரியானது" என்ற முடிவுக்கு வந்தால்கூடத் தேவலை என்பேன். ஸத்ய தத்வத்தைத் தெரிந்து கொள்ள ஒரு முயற்சியும் பண்ணாத சோம்பேறியைவிட, தன் மூளையைச் செலவழித்து ஏதோ பரிசிரமப் பட்டு ஒருத்தன் நாஸ்திகமான முடிவுக்கு வந்திருக்கிறான் என்றால், இந்தச் சோம்பேறியைவிட அந்த நாஸ்திகன் உயர்ந்தவன் என்பேன். அந்த நாஸ்திகன் இன்னும் ஆராய்ந்து கொண்டே போய் புத்தித் தெளிவு (clarity) பெற்றானானால் அப்புறம் நாஸ்திகத்தை விட்டுவிடவும் வழி பிறக்கும். ஆனால் இந்த சோம்பேறிக்குத்தான் ஒரு வழியும் இல்லை!

இதனால்தான் 'சார்வாகம்' என்கிற நாஸ்திக ஸித்தாந்தத்தையும் ஒரு மதமாக ஆதியில் வைத்தார்கள். சாரு+வாகம் என்பதே சார்வாகம். அதாவது கேட்பதற்கு நன்றாக இருக்கிற வாக்கு என்று அர்த்தம். "சாமி, பூதம் என்றெல்லாம் அலட்டிக் கொண்டு விரதம், தபஸ், இந்திரிய நிக்ரஹம், மனோ நிக்ரஹம் என்று அவஸ்தைப்பட

வேண்டாம். மனம் போனபடி, இந்திரியம் போகிற வழியில் ஆனந்தமாயிருப்போம்! என்று கேட்பதற்கு ரம்யமாகச் சொல்வதால் சார்வாகம் என்று அதற்குப் பேர்.

ஆனால் அப்படி நடக்கும்போது ஆனந்தத்தோடு துக்கமும் தானே வருகிறது? அது தானே அதிகம் வருகிறது? இந்த துக்க நிவிருத்திக்குத்தான் மெடீரியலிஸமாக இல்லாத மற்ற மதங்கள் வழி சொல்கின்றன.

எல்லாவித அறிவும் வேண்டும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

நியாயம் : யுக்தி சாஸ்திரம்

எல்லாவித அறிவும் வேண்டும்

புத்தி, மனஸ், இவற்றை நன்றாக உபயோகித்து இவை தம்மைத் தாமே நன்றாக சாணையில் தீட்டுகிறதுபோல தீக்ஷண்யமாகும்படிப் பண்ணிக் கொள்வது ஸத்ய தத்வத்தைக் கண்டுபிடிப்பதற்கு ரொம்பவும் பிரயோஜனப்படும். இல்லாது போனால் லோகமெல்லாம் மாயை என்று சொல்லவந்த ஆசார்யாள் எதற்காக அத்தனை சாஸ்திரங்களையும், கலைகளையும், ஸயன்ஸ்களையும் தெரிந்து கொண்டு ஸர்வக்ஞ பீடாரோஹணம் பண்ணவேண்டும்?

நியாயத்துக்கு 'தர்க்கம்' என்றும் 'ஆன்வீக்ஷிகி' என்றும் பெயர்கள் உண்டு. இந்த ஆன்வீக்ஷிகியான நியாயத்தையும், கபில மஹரிஷி ஸ்தாபித்ததால் 'காபிலம்' எனப்படும் ஸாங்கியத்தையும், பதஞ்ஜலியின் பெயரால் பாதஞ்ஜலம் எனப்படும் யோக சாஸ்திரத்தையும், குமாரில பட்டரின் பாட்ட மதமான மீமாம்ஸையையும் நம் ஆசார்யாள் கரைத்துக் குடித்திருக்கிறார் என்று, 'சங்கர விஜய'ங்களில் ஒன்றில் ஒரு ச்லோகம் இருக்கிறது.

ஆன்வீக்ஷிக்யைக்ஷி தந்த்ரே பரிசிதி–ரதுலா காபிலே காபி லேபே

பீதம் பாதஞ்ஜலாம்ப: பரமபி விதிதம் பாட்ட கட்டார்த்த தத்வம்|
["மாதவீயம்" IV.20]

அத்வைதத்தைச் சொல்லாத சாஸ்திரங்களும் அத்வைதத்தில் அடங்குகிறவைதான் அதனால்தான் சங்கராச்சாரியார் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிற நான் இந்த எல்லா சாஸ்திரங்களையும் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். த்வைதம்-விசிஷ்டாத்வைதம், சைவம்-வைஷ்ணவம் இவற்றில் எல்லாவற்றையும் தனக்குள்ளே வைத்துக் கொண்டிருப்பது அத்வைதம். மற்றவை இதைத் திட்டினாலும், அவற்றையும் இது தனக்குள்ளே இடம் கொடுத்து வைத்துக் கொண்டிருக்கிறது. அவற்றை இது திட்டுகிற இடங்களிலும், அவைதான் முடிந்த முடிவு என்றும் அத்வைதம் தப்பு என்றும் அவை சொன்னதை ஆக்ஷேப்பிப்பதற்காகத்தான் திட்டு இருக்குமே தவிர, அவை அடியோடு தப்பு என்று அத்வைதம் சொல்லாது. அவற்றுக்கும் எங்கே எவ்வளவு இடம் தர வேண்டுமோ அதைத் தரும்.

தர்க்க சாஸ்திர நூல்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

நியாயம் : யுக்தி சாஸ்திரம்

தர்க்க சாஸ்திர நூல்கள்

'ந்யாய சாஸ்திரம்' செய்த கௌதம மஹரிஷிக்கு 'அக்ஷபாதர்' என்று ஒரு பேர்.[1]

அவர் அறிவால் ஓயாமல் சிந்தனை பண்ணிக் கொண்டே இருப்பாராதலால் வெளி உலகமே அவர் கண்ணுக்கு தெரியாதாம். இந்நாளில் ஸயன்டிஸ்டுகளும் புரொஃபஸர்களும் எப்போதும் யோசித்துக் கொண்டேயிருப்பதால் absent- minded ஆக இருக்கிறார்கள் என்கிறோம் அல்லவா? இப்படி விகடத் துணுக்குகள் கூட நிறையப் போடுகிறார்கள். கௌதமர் இப்படித்தான் இருந்தார். ஆனால் எதையோ பலமாக யோசித்துக் கொண்டே போய் ஒரு கிணற்றில் விழுந்து விட்டாராம். அப்போது பகவானே அவரை மேலே ஏற்றி விட்டு அவருடைய காலிலேயே கண்ணை வைத்து விட்டாராம்! கால் தானாக, involuntary -யாக நடக்கிறபோது அதிலுள்ள கண்ணும் தானாகப்

பார்த்து விடும்படி அநுக்ரஹம் செய்தாராம். பாதத்திலே அக்ஷம் (கண்) ஏற்பட்டதால் இவருக்கு அக்ஷபாதர் என்று பேர் வந்தது என்று கதை .

இவருடைய ஸூத்ரத்துக்கு பாஷ்யம் எழுதியவர் வாத்ஸ்யாயனர்; வார்த்திகம் செய்தவர் உத்யோகரர்; பரம அத்வைதியான வாசஸ்பதி மிச்ரர் இந்த வார்த்திகத்துக்கு ஒரு விளக்கம் எழுதியிருக்கிறார். 'ந்யாய-வார்த்திக- தாத்பர்யடீகா' என்று அதற்குப் பேர். இந்த விளக்கத்துக்கு விளக்கம் எழுதியிருக்கிறார் உதயனாச்சாரியார். தாத்பர்ய-டீகா-பரிசுத்தி என்று அதற்குப் பெயர். 'ந்யாய குஸுமாஞ்சலி' என்றும் உதயனர் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். இவர்தான் புத்தமதத்தைக் கண்டனம் பண்ணி நம் தேசத்தில் இல்லாமல் பண்ணியவர்களில் முக்யமான ஒருவர். 'ந்யாய ஸூத்ர'த்துக்கு ஜயந்தர் எழுதிய 'ந்யாய மஞ்சரி' என்ற பாஷ்யமும் இருக்கிறது. அன்னம் பட்டர் என்பவர் 'தர்க்க ஸங்கிரஹம்' என்றும் அதற்குத் தாமே விரிவுரையாக ஒரு தீபிகை'யும் எழுதியிருக்கிறார். ஸாதாரணமாக நியாய சாஸ்திரம் படிக்கிறவர்கள் [கடைசியில் சொன்ன] இந்த இரண்டு புஸ்தகங்களோடுதான் ஆரம்பிக்கிறார்கள்.

கணாத மஹரிஷி எழுதிய "வைசேஷிக ஸூத்ர"த்துக்கு "ராவண பாஷ்யம்" என்று ஒன்று இருந்து காணாமற் போய்விட்டதாகச் சொல்கிறார்கள். பாஷ்யம் மாதிரியாகப் பிரசஸ்தபாதர் எழுதிய 'பதார்த்த-தர்ம-ஸங்க்ரஹம்' நமக்குக் கிடைத்திருக்கிறது. இதற்கு உதயனர் வியாக்கியானம் எழுதியிருக்கிறார். ஸமீபத்தில் உத்தமூர் வீரராகவாச்சாரியார் "வைசேஷிக ரஸாயநம்" என்ற நூலை எழுதியிருக்கிறார்.

வைசேஷிகத்துக்கு "ஔலூக்ய தர்சனம்" என்றும் ஒரு பெயர் உள்ளது. 'உலூகம்' என்றால் ஆந்தை. 'உலூ'தான் இங்கிலீஷில் 'Owl' என்று ஆயிற்று. ஆந்தை சம்பந்தப்பட்டது ஔலூக்யம். கணாதருக்கே 'உலூகம்' என்று பேர் வந்ததாகச் சொல்கிறார்கள்! கௌதமர் யோசனையிலேயே இருந்ததால் கண் தெரியாமல் கிணற்றில் விழுந்தார் என்றால், கணாதர் பகலெல்லாம் ஆராய்ச்சியிலேயே இருந்துவிட்டு இரவுக்குப் பின்தான் பிக்ஷைக்குப் புறப்படுவாராம். பகலில் கண்ணுக்கு அகப்படாமல் ராத்ரியிலேயே இவர் சஞ்சாரம்

செய்ததால், 'ஆந்தை' என்று nick- name பெற்றதாகச் சொல்கிறார்கள். அஞ்ஞானியின் ராத்திரி ஞானிக்குப் பகலாயிருக்கிறது என்று கீதையில் பகவான் சொல்லும்போது எல்லா ஞானிகளையும் ஆந்தையாகத்தான் சொல்லிவிட்டார்!

கணாதர் ஸ்தாபித்தால் 'காணாத சாஸ்திரம்' என்றும் வைசேஷிகத்துக்குப் பெயர். "தமிழ் 'காணாத' அல்ல; எல்லாவற்றையும் 'கண்டு' சொன்னவர்" என்று ஒரு பண்டிதர் வேடிக்கையாகச் சொன்னார்.[2]

மற்ற எந்த சாஸ்திரத்தையும் படித்து அறிவதற்கு வியாகரணமும் வைசேஷிகமும் நிரம்ப ஒத்தாசை செய்கின்றன என்பது வித்வான்களின் அபிப்ராயம். இதனால்,

காணாதம் பாணினீயம் ச ஸர்வசாஸ்த்ரோபகாரகம்

என்று வசனமும் இருக்கிறது.

(காணாதம்–வைசேஷிகம்; பாணினீயம்–வியாகரணம்.)

வியாகரணம் நடராஜாவின் டமருவிலிருந்து வந்தது என்றால் நியாய–வைசேஷிக சாஸ்திரங்களும் சிவபெருமான் ஸம்பந்தமுடையனவே. வைசேஷிக சாஸ்திரங்களில் மஹேச்வரனையே பரமாத்மாவாக சொல்லி நமஸ்காரம் பண்ணியிருக்கிறது. ஜகத்துக்கு ஈச்வரன் "நிமித்த" காரணம் என்று கொள்வதில் சைவ மதங்கள் நியாய சாஸ்திரத்தையே பின்பற்றுகின்றன எனலாம்.

[1] ஒவ்வொரு சாஸ்திரத்திற்கும் மூலாதாரமான ஸூத்ரத்தைத் தந்திருப்பது ஒவ்வொரு ரிஷியே ஆவார்.

[2] தர்க்க நூல்களில் மற்றும் சில இவ்வுரையின் பிற்பகுதியில் குறிப்பிடப் பெறுகின்றன.

உலகப் படைப்பின் காரணம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

நியாயம் : யுக்தி சாஸ்திரம்

உலகப் படைப்பின் காரணம்

நிமித்த காரணம், உபாதான காரணம் என்று இரண்டு உண்டு. ஒரு பானை இருந்தால் அது உண்டாவதற்கு மண் என்று ஒரு வஸ்து இருக்க வேண்டும். மண்தான் பானைக்கு உபாதான காரணம். ஆனால் மண் எப்படிப் பானையாக ஆகும்? தானே அது ஒன்று சேர்ந்து பானையாகுமா? குயவன்தான் மண்ணைப் பானையாகப் பண்ண வேண்டியிருக்கிறது. மண்ணினால் ஒரு பானை உண்டாக வேண்டுமானால் அதற்குக் குயவன் என்ற காரணமும் வேண்டியிருக்கிறது. குயவன்தான் நிமித்த காரணம்.

ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் சொன்ன நிமித்தம் வேறு, இந்த நிமித்தம் வேறு.

அணுக்களை உபாதான காரணமாகக் கொண்டு ஈச்வரன் என்கிற நிமித்த காரணம் ஜகத்தைப் பண்ணியிருக்கிறது என்பது நியாய-வைசேஷிகக் கொள்கை.

மண்ணைப் பானையாக்குவதற்குக் குயவன் அவசியம் வேண்டும். அவன் இல்லாவிட்டால் மண்ணிலே பானை இல்லை. இல்லாத பானை என்ற விளைவை மண்ணிலிருந்து குயவன் உண்டாக்குகிறான் என்று சொல்வார்கள். இதற்கு ஆரம்பவாதம் என்றும், அஸத்-கார்ய-வாதம் என்றும் பெயர். 'ஸத்' என்றால் இருப்பது. 'அஸத்' இல்லாதது. வெறும் மண்ணிலே பானை இல்லை. இல்லாத பானை அதிலிருந்து விளைந்தது. இப்படித்தான் ஈச்வரன் அணுக்களைக் கொண்டே அணுக்களில் இல்லாத சிருஷ்டியைப் பண்ணியிருக்கிறான் என்கிறார்கள். இது நியாயக் கொள்கை.

ஸாங்கியர்களுக்குக் கடவுளே கிடையாது என்று முன்னேயே சொல்லியிருக்கிறேன். அவர்கள் பிரகிருதி என்ற இயற்கையே ஜகத்தாகப் பரிணமித்தது என்பார்கள். இது இந்தக் காலத்து நாஸ்திகர்கள் சொல்வது மாதிரியே என்று நினைத்து விடக்கூடாது. ஏன் என்றால் (நிர்குண பிரம்மத்தின் ஸ்தானத்தில் இருக்கப்பட்ட) சுத்த ஞான ஸ்வரூபமான 'புருஷன்' என்பவனையும் ஸாங்கியர்கள்

சொல்வார்கள். ஜடமான ப்ரகிருதி இத்தனை ஒழுங்காக இயங்குவதற்கு புருஷனின் ஸாந்நித்தியமே காரணம் என்பார்கள். ஸாந்நித்தியம்தான் காரணம், புருஷனே நேராக ஈடுபட்டு ஸ்ருஷ்டியைச் செய்யவில்லை என்கிறார்கள். ஸூரிய வெளிச்சத்தில் தானாக பயிர் முளைக்கிறது, ஜலம் வற்றுகிறது, துணி காய்கிறது; ஸந்நிதி விசேஷத்தாலேயே இவை நடக்கின்றன. ஸூரியன் இங்கே உள்ள இன்ன பயிரை முளைக்க பண்ண வேண்டும், இந்த குட்டையிலுள்ள ஜலத்தை வற்ற வைக்க வேண்டும் என்று நினைத்தா இவை நடக்கின்றன? ஐஸைத் தொட்டால் கை மரத்துப் போகிறது. அதனால் அந்த ஐஸ் நம் கையை மரக்கப் பண்ண வேண்டும் என்று உத்தேசித்ததாகச் சொல்லலாமா? இப்படித்தான் புருஷன் ஸ்ருஷ்டியிலே கொஞ்சங்கூடப் பட்டுக் கொள்ளாவிட்டாலும் புருஷனிடமிருந்து பெற்ற சக்தியாலேயே பிரகிருதி இத்தனையையும் தன்னிலிருந்து தானே உண்டாக்கிக் கொள்கிறது. நிமித்த காரணம் என்பதாக ஈச்வரன் என்று ஒருவன் பண்ணவில்லை. பிரகிருதியே இப்படி ஸ்ருஷ்டியாகப் பரிணமித்திருக்கிறது என்பது ஸாங்கியர் கொள்கை. இதற்குப் பரிணாமவாதம் என்று பேர்.

நையாயிகர்களின் அஸத்-கார்ய-வாதத்திற்கு மாறாக ஸாங்கியர்கள் ஸத்-கார்ய-வாதத்தைச் சொல்கிறார்கள். உபாதான காரணமான மண்ணிலே இல்லாத பானையை நிமித்த காரணமான குயவன் பண்ணினான் என்று அஸத்-கார்ய-வாதிகள் சொல்கிறார்களல்லவா? ஸத் கார்யவாதிகளான ஸாங்கியர்கள் "மண்ணுக்குள்ளே பானை முதலிலேயே இருக்கத்தான் செய்தது. எள்ளுக்குள்ளேயே இருக்கிற எண்ணெயைத்தானே வாணியன் செக்கிலே ஆட்டி வெளிக்கொண்டு வருகிறான்? அதுபோல மண்ணில் மறைமுகமாக இருக்கிற பானைதான் பிறகு காரியத்தால் வெளியிலேயும் பானையாக வருகிறது. மண்ணை உபயோகித்தால்தானே பானை வருகிறது? எள்ளை வைத்துப் பானை பண்ணை பண்ண முடியுமா? அல்லது மண்ணைப் பிழிந்து எண்ணெய் எடுக்க முடியுமா? பானையிலே இருப்பதனைத்தும் மண்ணின் அணுக்கள்தான். அந்த அணுக்களின் ரூபத்தை இப்படி ஒழுங்கு செய்ததால் பானை என்ற ஒன்று உண்டாயிருக்கிறது" என்பார்கள்.

நம் ஆசாரியாள், "ஆரம்ப வாதமுமில்லை. பரிணாம வாதமும் இல்லை. பிரம்மம்தான் மாயா சக்தியால் இத்தனை ஸ்ருஷ்டி மாதிரி வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறது. பரமாத்மக் குயவனுக்கு வேறாக ஒரு மண்ணே இல்லை. அதனால் ஆரம்பவாதம் சரிப்படாது. பரமாத்மா ஜகத்தாகப் பரிணமித்தது - பால் தயிராகப் பரிணமித்த மாதிரி என்றாலும் தப்பு. அப்படிச் சொன்னால் பால் தயிரானபின் தயிர் தான் இருக்குமே தவிர பால் இருக்காது. இம்மாதிரி பரமாத்மா ஜகத்து பரிணமித்தபின் இல்லாமல் போய் விட்டார் என்றால் அது மஹா தப்பல்லவா? அதனால் பரிணாமமும் இல்லை. தான் தானாக சுத்த ஞான ஸ்வரூபமாக ஒரு பக்கம் இருந்துகொண்டே இன்னொரு பக்கம் மாயையால் ஜீவ-ஜகத்துக்களாகத் தோன்றுகிறார். இதெல்லாம் ஒரே ஸத்வஸ்துவின் தோற்றம்தான், வேஷம்தான்! ஒருத்தன் ஒரு வேஷம் போட்டுக் கொள்கிறான் என்றால் அப்பொழுது அவன் அவனாக இல்லாமல் போய் விடுகிறானா என்ன? அப்படித்தான் இத்தனையும் வேஷம், கண்கட்டு வித்தை! இத்தனையாலும் பாதிக்கப்படாமல் ஸத்வஸ்து ஏகமாக அப்படியே இருந்துகொண்டேயிருக்கிறது" என்று ஒரே அடியாக அடித்துவிட்டார். இதற்கு "விவர்த்த வாதம்" என்று பெயர்.

ஒரு கயிறானது பாம்பு மாதிரித் தோன்றுவது விவர்த்தம். கயிறு என்ற உபாதான காரணத்தை வேறு ஒரு நிமித்த காரணம் பாம்பாக மாற்றவில்லை. எனவே இது ஆரம்ப வாதம் இல்லை. கயிறு பாம்பாகப் பரிணமிக்கவுமில்லை; அதாவது transform ஆகிவிடவில்லை. கயிறு கயிறாகவே தான் இருக்கிறது. ஆனால் நம் அஞ்ஞானத்தால் பாம்பு மாதிரித் தோன்றுகிறது. இப்படியே அஞ்ஞானம் அல்லது அவித்யை என்பதால் பிரம்மம் லோகமாகவும் தனித்தனி ஜீவர்களாகவும் நமக்குத் தெரிகிறது.

ஆசார்யாள் சொன்ன இந்த உண்மைக்குப் போவதற்கு நியாயத்தின் யுக்திவிசாரணை படி போட்டுக் கொடுக்கிறது.

யுத்தியால் பதார்த்தங்களைத் தெரிந்து கொண்டு, அதிலிருந்து வைராக்யம் பெற்று, சுகதுக்கங்கள் இல்லாத வெறுமையான அபவர்க்கம் என்ற ஸ்தானத்துக்குப் போவதோடு நியாய-வைசேஷிகம்

நிறுத்திவிடுகிறது. த்வைதத்தில் இதற்குமேல் போக முடியாது. அத்வைதமாக ஒரே ஸத்தைப் பிடித்து அதுவே நாம் என்கிற போதுதான் நிறைந்த நிறைவான மோக்ஷம் கிடைக்கிறது. ஆனாலும் இப்போதிருக்கிற லோக வாழ்வோடு திருப்திப்படாமல் இதற்கு மேலே ஒரு அபவர்க்கத்துக்குப் போக நியாயம் தூண்டி விடுகிறது என்பதே விசேஷந்தான்.

இந்த சாஸ்திரத்தின் இன்னொரு பெருமை, அது எத்தனை தினுசான யுக்தி உண்டோ அத்தனையையும் கொண்டு வாதம் பண்ணி, பௌத்தர்கள், ஸாங்கியர்கள், சார்வாகர்கள் (எனப்படும் லோகாயதர்கள்) ஆகியோருடைய கொள்கைகளை ஆக்ஷேபித்து ஈச்வரன் என்ற கர்த்தா உண்டு என்று நிலை நாட்டியிருப்பதாகும்.

சில கதைகளும் வாதங்களும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

நியாயம் : யுக்தி சாஸ்திரம்

சில கதைகளும் வாதங்களும்

அறுபத்து நான்கு வாதங்களை கங்கேச மிச்ரோபாத்யாயர் என்பவர் தமது 'தத்வ சிந்தாமணி'யில் சொல்லியிருக்கிறார். இதுவரை தத்வ விஷயங்களில் மண்டையைக் குழப்பிக் கொண்டதால் இப்போது கொஞ்சம் கதை சொல்கிறேன். கங்கேசருடைய கதைதான்.

கங்கேசர் பூர்வத்தில் மஹா அசடாக இருந்தார். அவர் வங்காளத்தில் இருந்தவர். குலீன பிராம்மண குலத்தைச் சேர்ந்தவர். குலீனர் என்றால் நல்ல குலத்தில் உண்டானவர்கள் என்று அர்த்தம். நல்ல குலத்தில் பிறந்த இவர்களுக்கே மட்டமான பிராமணப் பெண்களையெல்லாம் கல்யாணம் செய்து கொடுத்து விடுவது வங்காளதேசத்து வழக்கம். அதனால் குலீனர் ஒருவர் ஐம்பது பேருக்கு மேல் கல்யாணம் பண்ணிக் கொள்வதுமுண்டு. கங்கேச மிச்ரர் ஒரு பெண்ணை மட்டும் கல்யாணம் பண்ணிக் கொண்டு மாமனார் வீட்டிலேயே இருந்தார். அசட்டுக்கு ஒரு பெண்ணுக்கு மேலே யார் கொடுப்பார்கள்?

வங்காளிகள் மத்ஸ்யம் சாப்பிடுவார்கள். வங்காளத்தில் ஆறு மாஸம் தேசமுழுவதும் பிரவாஹமாகவே இருக்கும். கறிகாய் போட இடமிருக்காது. அதனால் இந்த மாஸங்களில் மத்ஸ்யத்தை அவர்கள் உபோயகப்படுத்துவார்கள். கிழக்கு வங்காள தேசத்தார் அதை 'ஜல புஷ்பம்' என்றே சொல்லுவார்கள். அதாவது அது வெஜிடேரியன் உணவு என்று அர்த்தம்!

கங்கேசருடைய மாமனார் வீட்டில் அந்த ஸாமான் சமைப்பது வழக்கம். "மாப்பிள்ளை" என்று மரியாதையாகக் கூப்பிடாமல் கங்கேசரை "கங்கா" என்று எல்லோரும் கூப்பிடுவார்கள். அவர் அசடு என்பதால் அவர் இலையில் எலும்பை மட்டும் பரிமாறுவார்கள். மற்றவர்கள் இலையில் ஸத்தைப் பரிமாறுவார்கள். பிறகு அவரை எல்லோரும் பரிஹாஸம் செய்வார்கள்.

அது அவருக்குப் பொறுக்கவில்லை. ஒரு நாள் ஒருவரிடமும் சொல்லாமல் காசிக்குப் போய்விட்டார். அங்கே போய்ப் பத்து வருஷம் படித்தார். வீட்டிலுள்ளவர்கள், அசடு எங்கேயோ போய்விட்டதென்று பேசாமல் இருந்து விட்டார்கள்.

அவர் படித்து விட்டு வீட்டுக்கு வந்தார். எங்கேயோ சுற்றி அலைந்து வந்திருக்கிறது, இன்னமும் அசடாகவே இருக்கும் என்று எல்லோரும் நினைத்தார்கள். வழக்கப்படி அஸ்தியை [மீன் எலும்பைப்] பரிமாறினார்கள். அப்பொழுது அவர் சொன்னார்:

"நாஹம் கங்கா: கிம்து கங்கேச மிச்ர:"

'நான் கங்கா அல்ல; கங்கேச மிச்ரனாக்கும்' என்று அர்த்தம். 'அசட்டு கங்காவாக இருந்தால் – கங்கையிலேதான் அஸ்தியை கரைக்கிறதாலே – எனக்கும் அஸ்திபோடுவது நியாயந்தான்! ஆனால் இப்போது அந்த கங்கா பேருக்குப் பின்னாடி 'மிச்ரா' போட்டுக் கொள்கிற யோக்யதையோடு, படித்துப் பண்டிதனாகவும் வந்திருக்கிறேன்!' என்று ரத்தினச் சுருக்கமாகத் தெரிவித்து விட்டார்.

வேட்டகத்துக்காரர்களுக்கு அவர் பெருமை தெரிந்தது.

அந்த கங்கேசமிச்ரர்தான் பிறகு "நவ்ய ந்யாயம்" என்ற பெயரில் புத்துயிர் பெற்று எழுந்த ந்யாய சாஸ்திரத்தின் மூல புருஷராகித் 'தத்வசிந்தாமணி'யை எழுதினவர். அதற்கு ரகுநாத சிரோமணி என்பவர் 'தீதிதி' என்று ஒரு வியாக்கியானம் எழுதி இருக்கிறார். அவர் காலத்திற்குப் பின்புதான் 'சிரோமணி' என்னும் பட்டம் வழக்கத்தில் வந்தது. கதாதரர் என்பவர் அதில் பத்து வாக்கியத்திற்கு வியாக்யானம் ஒரு பெரிய புஸ்தக ரூபமாக எழுதியிருக்கிறார். ஆனாலும் ஒரு வாக்கியங்கூட அதிகமாகத் தோன்றாது. 'கதாதரியில் (கதாதரர் எழுதிய புஸ்தகத்துக்கு 'கதாதரி' என்று பெயர்) ஐந்து வாதம் வாசித்தால் அவன் புத்திசாலியாவான்; பத்து வாதங்கள் வாசித்தால் இன்னும் கெட்டிக்காரனாகிறான்; அதில் ப்ராமாண்யவாதம் என்ற ஒன்று இருக்கிறது; பிரமாணங்களைப் பற்றிய வாதமே ப்ராமாண்ய வாதம். அதை வாசித்தவன் எல்லோரையும் விடக் கெட்டிக்காரன் ஆகிறான்' என்று சொல்வதுண்டு. 'கதாதரி'யை இன்றும் தர்க்க சாஸ்திரம் படிப்பவர்கள் வாசித்து வருகிறார்கள்.

ப்ரமாண்ய வாதம் என்றேனே, அதைச் சொல்வதென்றால் மூளை குழம்பும். ஆனால் நம் ஆசார்யாள் அவதாரம் பண்ணிய காலத்தில் மண்டனமிச்ரரின் வீட்டு வாசலில் இருந்த கிளிகள்கூட இந்த பிராமாண்ய வாதத்தை 'டிஸ்கஸ்' பண்ணிக் கொண்டிருந்தனவாம்!

மண்டனமிச்ரரின் ஊரான மாஹிஷ்மதிக்கு சங்கர பகவத் பாதாள் போனார். அந்த ஊரில் நதியிலிருந்து தீர்த்தம் எடுத்துக் கொண்டு போகிற பெண்களைப் பார்த்து, "மண்டன மிச்ரரின் வீடு எங்கே இருக்கிறது?" என்று கேட்டார். அந்த ஊரிலே ஸாமான்ய ஸ்திரீகளுக்குக் கூட நிரம்பப் பாண்டியத்யம் இருந்தது. அதனால் ச்லோக ரூபமாகவே ஆசாரியருக்கு அவர்கள் பதில் சொன்னார்கள். இப்படி மண்டனமிச்ரரின் வீட்டுக்கு அடையாளம் சொல்வதாக அந்தப் பெண்கள் சொன்ன ச்லோகங்களில் ஒன்று-

ஸ்வத: ப்ரமாணம் பரத: ப்ரமாணம் கீராங்கனா யத்ர ச ஸங்கிரந்தே|

த்வாரஸ்த நீடாந்தர ஸந்நிருத்தா ஜாநீஹி தன்-மண்டன பண்டிதௌக:||

'ஆதிகாலத்தில் இந்தியாவில் புருஷர்கள்தான் படிப்பறிவு பெற்றிருந்தார்கள்; பெண்களை மட்டம் தட்டி நிரக்ஷரகுக்ஷிகளாகவே அடைத்து வைத்திருந்தார்கள்' என்று சொல்வது எவ்வளவு தப்பு என்பது இம்மாதிரியான நிகழ்ச்சிகளிலிருந்து தெரிகிறது. மனுஷப் பெண்கள் மட்டுமல்ல. கிளியிலே கூட பெண்களாக இருக்கப்பட்ட 'கீராங்கனா'க்களும் சாஸ்திர ஆராய்ச்சி பண்ணினவாம். அதைத்தான் ச்லோகம் சொல்கிறது.

'எந்த வீட்டு வாசலில் உள்ள பெண் கிளிகள் 'ஸ்வத: ப்ரமாணம் – பரத: ப்ரமாணம்' என்பவை பற்றி வாதம் பண்ணிக் கொண்டிருக்கின்றனவோ, அந்த வீடுதான் மண்டன மிச்ர பண்டிதருடையது என்று தெரிந்து கொள்வீராக! என்பது ச்லோகத்தின் அர்த்தம்.

மேலே நான் சொன்ன ப்ராமாண்ய வாதத்தில்தான் இந்த 'ஸ்வத: ப்ராமண'மும் 'பரத: ப்ரமாண'மும் வருகின்றன.

இத்தனை சொன்னபின் அது என்ன வாதம் என்றுதான் கொஞ்சம் பார்த்துவிடலாம். அதைப்பற்றி வேடிக்கையாக ஒரு கதை கூட உண்டு.

நம் தென் தேசத்தவர்களில் ஒருவர் தர்க்கம் வாசிக்கலாமென்று வங்காளத்தில் உள்ள நவத்வீபத்துக்குப் போனாராம். வங்காளத்தில்தான் தர்க்கம் வாசித்தவர்கள் அதிகம். நம் ஊரிலிருந்து போனவர் மஹாகவி. தம்முடைய கவித்வத்தினால் நம் ஊரில் நிறையப் பணம் ஸம்பாதித்தார். பின்பு பிராமாண்யவாதத்தை நேரே நவத்வீபத்திற்குப் போய் வாசிக்கலாமென்று போனார்.

வாசித்தார்.

ஆனால் ஒன்றும் ஏறவில்லை.

மேலும், பிரயத்னம் பண்ணிப் பார்த்தார். இதனால் அவருக்கிருந்த கவித்வ தாரை போய்விட்டது! தர்க்கத்தில் போய் முட்டிக் கொண்டதில் ஏற்கெனவே இருந்த கவித்வமும் போய்விட்டது. பணமும் போய்விட்டது. கவித்வமாவது இருந்தால் மறுபடி பணம்

ஸம்பாதித்துக் கொள்ளலாம். அதுவும் போய்விடவே மிகவும் வருத்தப்பட்டார். பிராமாண்யவாதமும் வரவில்லை. ச்லோகம் பண்ணும் சக்தி கடைசியாகத் துளி மிஞ்சியிருந்ததைக் கொண்டு இப்படிப் புலம்பினாராம்:

நம: ப்ராமாண்ய வாதாய மத்-கவித்வ- (அ)பஹாரிணே|

'என்னுடைய கவிதா சக்தியை அபஹரித்த பிராமாண்ய வாதத்திற்கு நமஸ்காரம்' என்பது அதனுடைய அர்த்தம்!

இந்தப் பிராமாண்ய வாதத்தைத்தான் மண்டனமிச்ரர் வீட்டுக் கிளிகள் பேசிக்கொண்டு இருந்தன. அந்த வாதத்தைப் பற்றி நாம் கொஞ்சம் விசாரிப்போம்.

ஒரு வஸ்துவைப் பார்த்தால் அதைப்பற்றிய ஞானம் உண்டாகிறது. சில ஞானங்கள் சரியாய் இருக்கின்றன. சில தப்பாய் இருக்கின்றன. ஸ்படிகத்தைக் கற்கண்டு என்று நினைக்கிறோம். அது தப்பான ஞானம். கற்கண்டைக் கற்கண்டாக நினைப்பது சரியான ஞானம். சரியான ஞானத்தைப் ப்ரமா (prama) என்பார்கள். தப்பான ஞானத்தை ப்ரமா (bhrama) என்று சொல்லுவார்கள். ஸம்சயஞானம் என்றும் நிச்சய ஞானம் என்றும் இரண்டு விதம். இது சரியான அறிவா என்ற ஐயத்துடன் கூடியது ஸம்சயஞானம். ஐயமில்லாமல் உறுதியுடன் அறிவது நிச்சயஞானம். சில சமயங்களில் ஒன்று தப்பாக தோன்றினாலும் அப்போதைக்கு நிஜமாகத்தான் தோன்றுகிறது. அப்பொழுது இந்த ஞானம் பிரமாணம்தான் என்று தோன்றும்- ஸ்படிகக் கற்கண்டு மாதிரி. சில ஞானங்கள் தோன்றும் பொழுதே பொய்யாகத் தோன்றுகின்றன. குளத்திற்குள் தலைகீழாகத் தெரிகிற மரத்தின் பிரதி பிம்பத்தை அறியும் பொழுதே அது நிஜமல்ல, அப்ரமாணம் என்றும் தோன்றுகிறது. ஞானம் வரும் பொழுதே பிரமாணம் என்று தோன்றுவதும் அப்ரமாணம் என்று தோன்றுவதும் ஆக இரண்டு வகை. வரும் காலத்திலே இது நிஜந்தான் என்று வருகிற ஞானம் பிராமாண்ய க்ரஹ ஞானம்; தோன்றும் பொழுதே அப்ரமாணம் என்று தோன்றுவது அப்ரமாண்ய க்ரஹ ஆஸ்கந்தித ஞானம். ப்ரமை (pramai) யில் போலவே, ப்ரமை (bhramai) யிலும் பிரமாண ஞானம் உண்டு. அதனால்தான் ஸ்படிகத்தைக் கற்கண்டாக

நினைக்கும்பொழுதும் நம்முடைய நினைப்பு பிரமாணமாகத் தோன்றுகிறது.

இப்படியாக ஒரு வஸ்து தோன்றும் போதே அது நிஜமானது (ப்ரமாணம்) அல்லது பொய்யானது (அப்ரமாணம்) என்றும் தோன்றுகிறதே, இந்த ப்ரமாண அப்ரமாண அறிவானது வஸ்துவைப் பார்க்கிற நம்முடைய ஞானத்திலிருந்து (subjective -ஆக) தோன்றுகிறதா, அல்லது (objective -ஆக) அந்த வெளி வஸ்துவிலிருந்து தோன்றுகிறதா? நம்மிலிருந்து தோன்றினால் 'ஸ்வத: ப்ரமாணம்'. நாம் அறிகிற வஸ்துவிலிருந்து தோன்றினால் 'பரத: ப்ரமாணம்'.

இந்த இரண்டில் எது சரி என்றுதான் மண்டனர் வீட்டுப் பெண் கிளிகள் வாதம் செய்தனவாம்.

நமக்கு உண்டாகும் ஞானம் பிரமாணமானது அல்லது அப்பிரமாணமானது என்று ஏற்படுகிற உறுதி நம் ஞானத்துள்ளேயே ஸப்ஜெக்டிவ்வாக இருப்பதில்லை. அது நாம் அறிகிற வஸ்துவிடமுள்ள குணத்தால் ஏற்படுவதுதான். அந்த வஸ்துவிடமிருந்து நடைமுறையில் பிரயோஜனம் அடைய முடிந்தால்தான் நம்முடைய ஞானம் சரியானது அல்லது தப்பானது என்று ஆகிறது. அதாவது நம் ஞானம் சரியா தப்பா என்பது ஆப்ஜெக்டிவ்தான் என்பதே நியாய சாஸ்திரத்தின் கருத்து. மண்டனமிச்ரர் போன்ற மீமாம்ஸர்களின் அபிப்ராயமோ இதற்கு மாறானது. நம் ஞானம் பிரமாணமானது என்கிற உறுதி நம்முடைய அறிவையே சேர்ந்த விஷயந்தான்; ஆனால் நம் ஞானம் பிரமாணமில்லை (அப்ரமாணம்) என்று தெரிவது வெளிவஸ்துவைப் பொறுத்த விஷயம்- "ப்ராமாண்யம் ஸ்வத: அப்ரமாண்யம் பரத:"- என்பது அவர்கள் கட்சி.

இந்த வாதங்களெல்லாம் தர்க்கத்தில் வரும்.

"வாதம்" என்றாலே இந்தக் காலத்தில், தான் சொன்னதே சரியென்று பிடிவாதம் பண்ணுவது என்று தப்பாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வாஸ்தவத்தில் வாதமென்பது நாமும் பேசி எதிராளியையும் பேசவிட்டு இரண்டையும் ஆலோசித்துச் சீர்தூக்கி

உண்மையை அறிவதுதான். அநேக இடங்களுக்குப் போய் மண்டனமிச்ரர் போன்றவர்களிடம் ஆசாரியாள் வாதம் செய்தார் என்பது இப்படித்தான்.

மற்றவன் சொல்கிறதையும் கேட்டே அவர் அத்வைதம் தான் சத்தியம் என்று முடிவு பண்ணினார். ஆகையால் வாதம் என்பது exchange of thoughts (பரஸ்பரக் கருத்துப் பரிவர்த்தனை) தான்; பிடிவாதம் இல்லை. நாம் சொல்வதே சரி என்று முதலிலேயே தீர்மானம் பண்ணிக்கொண்டு அதற்காகவே கட்சி கட்டிக் கொண்டு பேசுவதற்கு "ஜல்பம்" என்று பெயர்; "வாதம்" என்று இல்லை. மூன்றாவதாக இன்னொன்று இருக்கிறது: ஜல்பத்தில் உள்ள மாதிரி தனக்கென்று ஒரு கட்சி இல்லாமல், ஆனாலும் மற்றவர் எந்தக் கட்சியைச் சொன்னாலும் அதை ஆக்ஷேபித்து சண்டை போடுவதுதான் அது. அதற்கு 'விதண்டை' என்று பெயர். 'விதண்டாவாதம்' என்று இதிலிருந்துதான் வந்தது.

* * *

அசட்டு கங்கேசர் மஹாபுத்திமானாகி வங்காளத்துக்கு வந்ததிலிருந்து (கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து) நியாய சாஸ்திரம் புத்துயிர் பெற்றது. வங்காளத்தில் புதிதாக ஏற்பட்டு, பிற்பாடு விருத்தி அடைந்த இந்த சாஸ்திரத்திற்க்கு 'நவ்ய–ந்யாயம்' என்று பெயர் உண்டு. 'நவ்யம்' என்றால் 'புதிதான' என்று அர்த்தம். அந்தப் பெயர் ஏற்பட இன்னொரு காரணம் வங்காளத்தில் 'நவத்வீபம்' என்ற பாகத்திலேதான் கங்கேசரும், பிறகு அவரை அநுஸரித்து வந்தவர்களும் வாழ்ந்தனர். 'நவத்வீபம்' என்பதை 'நதியாத்' (nadiad) என்கிறார்கள். ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் அந்தச் சீமையில் பிறந்தவர்தான். சைதன்யரும் மஹாவித்வான். சாஸ்திரங்களையெல்லாம் படித்தவர். அப்புறம் "கிருஷ்ணா கிருஷ்ணா' என்று ஸங்கீர்த்தனம் பண்ணிக் கொண்டு, இந்த பஜனைதான் மோக்ஷமார்க்கம் என்று ஸித்தாந்தம் செய்தார்.

லோகம் நிஜமானது, மாயை அல்ல, ஜீவாத்மாக்கள் பல உண்டு, பரமாத்மா வேறே என்கிற த்வைதமான அபிப்ராயங்களை நியாய சாஸ்திரம் சொன்னாலும், நிரீச்வர வாதத்தை ஆக்ஷேபித்து ஈச்வரனை நிலைநாட்டியதனாலும், அத்வைதமான யுக்திக்குப் போவதற்கு

இதனுடைய வாதங்கள் அஸ்திவாரம் போட்டுக் கொடுப்பதாலும் உத்தமமான சாஸ்திரமாக இருக்கிறது.

நியாயம் நிரம்ப அறிவு வாதமுள்ள வேத உபாங்கமாக இருக்கிறதென்றால், இதற்கு அடுத்ததாகச் சதுர்தச வித்தைகளில் வருகிற 'புராண'த்தைத்தான் இக்காலப் படிப்பாளிகள் ஒரே 'superstitious' [மூட நம்பிக்கைகளின் மயமானது] என்கிறார்கள். அதைப் பற்றிக் கொஞ்சம் பார்க்கலாம்.

புராணம்

வேதத்தின் பூதக் கண்ணாடி

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

வேதத்தின் பூதக் கண்ணாடி

புராணம் என்பது வேதத்துக்குப் பூதக் கண்ணாடி. சின்னஞ்சிறியதாக இருப்பதை பூதக்கண்ணாடி நன்றாகப் பெரிசுப் பண்ணி காட்டுகிறதல்லவா? இம்மாதிரி வேதத்தில் சுருக்கமாக, சின்ன சின்னதாகப் போட்டிருக்கிற தர்மவிதிகளை கதைகள் மூலம் பெரிசு பண்ணிக் காட்டுவது தான் புராணம்.

ஒன்றைச் சுருக்கமாகச் சொன்னால் அது மனஸில் ஆழப்பதியாமல் போய்விடலாம். அதையே சுவாரஸ்யமான கதையாக விஸ்தாரம் பண்ணிச் சொன்னால் நன்றாக மனஸில் பதியும்.

'ஸத்யம் வத' (உண்மையே பேசு) என்று மட்டும் வேதம் சொல்கிறது. அப்படிப் பேசுவதால் எத்தனை பெருமை ஏற்படுகிறது என்பதை ஹரிச்சந்திரன் கதை பல அத்யாயங்களில் விஸ்தாரமாகச் சொல்கிறது. 'தர்மம் சர' (அறத்தைப் பின்பற்று) என்று இரண்டு வார்த்தையில் வேதம் சொன்னதை நீள நெடுக மஹாபாரதத்தில் தர்ம புத்திரரின் கதையாகச் சொல்லியிருக்கிறது. 'மாத்ரு தேவோ பவ', 'பித்ரு தேவோ பவ' (அன்னை தந்தையை தெய்வமாகக்கொள்) என்ற வேத வாக்குக்கு ஸ்ரீராம சரித்ரம் பூதக்கண்ணாடியாய் இருக்கிறது.

அடக்கம், பொறுமை, தயை, கற்பு முதலான அநேக தர்மங்களை வேதத்தில் – கட்டளையிட்டுள்ளவற்றை – புராண புருஷர்களும், புண்ய ஸ்திரீகளும் தங்களுடைய சரித்திரத்தின் மூலம் நன்றாகப் பிரகாசிக்கும்படிச் செய்திருக்கிறார்கள். அவற்றைப் படிப்பதாலும், கேட்பதாலும் இந்த தர்மங்களில் நமக்கு ஆழ்ந்த ஈடுபாடு உண்டாகிறது.

இவர்கள் எல்லாருக்கும் சோதனைகளும் கஷ்டங்களும் நிறைய வந்திருக்கின்றன. அநேக தப்பு தண்டாக்களைச் செய்கிற நம்மைவிட இந்த உத்தமமான புராண பாத்திரங்கள்தான் ஜாஸ்தி கஷ்டப்பட்டிருக்கிறார்கள். ரொம்பவும் பயங்கரமான சோதனைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆனாலும் இவர்களுடைய சரித்திரத்தைப் படிக்கும்போது, "தர்மங்களை அநுஸரிப்பதனால் கஷ்டந்தானே ஏற்படுகிறது? அதனால் அநுஸரிக்க வேண்டாமே!" என்று தோன்றுவதேயில்லை. அத்தனை கஷ்டத்திலும், சோதனையிலும் விட்டுக் கொடுக்காமல் அவர்கள் பாறாங்கல் மாதிரி தர்மத்திலேயே நிற்பதால் பெற்றிருந்த மனத் தெளிவுதான் நம் மனஸில் பதிகிறது. அதோடுகூட அந்த உத்தமர்கள் படும் கஷ்டங்களைக் கேட்கும்பொழுது நம் உள்ளம் உருகுவதாலேயே நம்முடைய அழுக்குகளையும் அலம்பிவிட்டாற்போல் இருக்கிறது. முடிவிலே அவர்களுக்கு ஏற்படுகிற பெரிய வெற்றியும் கீர்த்தியும் நமக்கு அந்த தர்மங்களில் கெட்டியான பிடிமானத்தை உண்டாக்கித் தருகின்றன.

புராணமும், சரித்திரமும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

புராணமும், சரித்திரமும்

நம் தேசத்தில் History (சரித்திரம்) இல்லை என்று ஒரு குறை சொல்லப்படுகிறது. புராணம் சரித்திரந்தான். ஆனாலும் இக்காலப் படிப்பாளிகள் கிறிஸ்துவுக்குப் பிற்பாடு ஒரு இரண்டாயிரம் வருஷத்துக்குள் நடந்தது தவிர மற்ற எதையும் – புராணங்களில் சொல்லியிருப்பவைகளை ஹிஸ்டரியாக மதிப்பதில்லை.

புராணங்களில் ஏதோ கொஞ்சம் உண்மை இருக்கலாம் என்று தங்கள் ஆராய்ச்சியில் தெரிவதாகச் சொல்லிக் கொண்டு, தங்களுக்குப் பிடித்த ஆரிய திராவிட பிரிவினைக் கொள்கை மாதிரியான பொய் விஷயங்களுக்கு மட்டும் புராணங்களில் ஆதாரம் இருப்பதாகக் காட்டிவிட்டு, பாக்கி அதில் வருகிற அற்புதமான விஷயங்கள் (miracles), அதீந்திரியமான விஷயங்கள் (supernatural) எல்லாம் கட்டுக் கதை, புளுகு மூட்டை என்று தள்ளி விடுகிறார்கள். புலன்களுக்கு அகப்படுகிற விஷயங்களுக்கு அப்பாற்பட்டதாக எதுவும் யதார்த்தத்தில் நடந்திருக்க முடியாது என்கிற தீர்மானத்தில் இவர்கள் இருப்பதால், 'மிஸ்டரி' [மர்மமான அதிசயங்கள்] நிறைய வருகிற புராணங்களை 'ஹிஸ்டரி' இல்லை என்று ஒதுக்கி விடுகிறார்கள்.

இப்போது தாங்கள் எழுதி வைத்திருக்கிற சரித்திரத்தை எல்லோரும் படிக்க வேண்டும் என்று ஸ்கூலிலேயே பாடமாக வைத்துவிட்டுப் புராணத்தைக் கழித்துக் கட்டுவது குழந்தைகளுக்கு நல்லது செய்வதாகாது. புராணங்கள் குழந்தைகளுடைய உள்ளத்தை நல்ல நெறிகளில் சேர்ப்பது போலச் சரித்திரத்தில் எதுவும் இல்லை.

சரித்திரம் படிக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. படிக்கத்தான் வேண்டும். புராணங்களும் சரித்திரம்தான். அதனால் அவற்றையும் படிக்க வேண்டும் என்கிறேன்.

ஏன் சரித்திரம் படிக்க வேண்டும் என்பதற்குச் சொல்கிற அநேக காரணங்களில் ஒன்று – " History repeats itself " என்பது. சரித்திரம் திரும்பத் திரும்ப ஒரே மாதிரி நடக்கிறது என்கிறார்கள். அதனால் பூர்வத்தில் எப்படி நடந்தது என்று தெரிந்து கொண்டால் அதிலிருந்து இனி எப்படி நடக்கும் என்று தெரிந்து கொள்ளலாம். பூர்வத்தில் நடந்ததிலிருந்து எதிர்காலத்துக்குப் படிப்பினைப் பெறலாம். இப்படியிப்படிச் சூழ்நிலை உருவாகிக் கொண்டு போனால் யுத்தம் ஏற்படும், ஜனங்களின் வாழ்வு கெட்டுப் போகும், ஒரு பெரிய நாகரிகமே விழுந்து விடும் என்பது சரித்திரத்தைப் பார்க்கும்போது தெரிகிறது. இதனால் அதே மாதிரியான சூழ்நிலைகள் இப்போது உருவானால் அவற்றை முதலிலேயே உஷாராக இருந்து தடுத்துவிட வசதியாக இருக்கும். இது சரித்திரத்தின் ஒரு பிரயோஜனம் என்கிறார்கள்.

கல்பத்துக்குக் கல்பம் ஒரே மாதிரியாக ஸம்பவங்கள் நடக்கின்றன; ஒவ்வொரு கல்பத்திலும் ராமாயணம், பாரதம், பாகவதம், தசாவதாரம் மற்றும் எல்லாப் புராணங்களும் நடக்கின்றன என்று நம் சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதைத்தான் History repeats itself என்று கொஞ்சம் மாறுதலான அபிப்பிராயத்தோடு சொல்லுகிறார்கள்.

ஆனாலும் நடைமுறையில் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிற ஹிஸ்டரியைப் பார்த்து யாராவது எந்தப் படிப்பினையாவது பெறுகிறார்களா என்று பார்த்தால் அதுதான் இல்லை! செங்கிஸ்கான், தைமூர், கஜினி, மாலிக்கா ஃபூர் போலப் பலபேர் அவ்வப்போது தோன்றி தேசங்களைச் சூறையாடி ஹதாஹதம் செய்திருக்கிறார்கள் என்று சரித்திரத்திலிருந்து தெரிகிறது. தெரிந்து கொண்டதால் மட்டும் இப்படிப்பட்ட வெறிப் போக்குகளை நிறுத்த முடிந்திருக்கிறதா என்ன? இவர்கள் மாதிரியே ஒரு ஹிட்லரும் முஸோலினியும் வந்து மறுபடி ஹதாஹதம் செய்கிறார்கள். இன்னும் கிட்டத்தில் பிரத்தியக்ஷமாகவே பார்க்கிறோம் – ஒரு லஞ்சம், 'கரப்ஷன்', வேண்டியவர்களுக்குப் பட்சபாதம் காட்டுவது, வேலை கொடுப்பது என்றெல்லாம் ஒரு ராஜாங்கத்தார் பண்ணினால் அதற்கு ஜனங்களின் ஆதரவு போய்விடுகிறது என்று எலெக்க்ஷனில் தெரிகிறது. அப்புறம் வேறே சிலர் ராஜாங்கத்தை அமைக்கிறார்கள். ஆனால் படிப்பினை ஒன்றும் பெற்றதாகத் தெரியக் காணோம்! அதே தோஷங்களை இவர்களும் செய்ததாக ஏற்பட்டு, அடுத்த எலெக்க்ஷனில் அதே கதி இவர்களுக்கும் உண்டாகிறது. ஒரு குறுகிய காலத்துக்குள்ளேயே இப்படி ஏற்படுகிறது. ஆகையால் History repeats itself என்று தெரிந்து கொண்டு விடுவதால் மட்டும் அதிலிருந்து நல்ல பாடம் எதையும் படிக்க முடியவில்லை என்று தெரிகிறது. 'ரிபீட்' ஆகாமல் ஹிஸ்டரியை நிறுத்தும்படிச் செய்வதற்கு அதில் எதுவும் இல்லை.

தர்மத்தை நாம் ஏற்கும்படியாகச் சரித்திரத்தோடு குழைந்துக் கொடுத்தால்தான் அது நம்மை நல்வழிப்படுத்தித் தப்பான ஸமாசாரங்கள் 'ரிபீட்' ஆகாமல் செய்ய உபாயமாகும். புராணம் இதைத்தான் செய்கிறது.

சரித்திரத்தில் வெறுமே காலவாரியாக ராஜாக்களின் வரலாற்றைத்தான் தந்திருக்கிறது. இதிலே கொடுங்கோலர்கள் கெடுதல் அடைந்தார்களா, உத்தமமான ராஜாக்கள் உயர்ந்த கதியைப் பெற்றார்களா என்பதற்கு முக்யமில்லை. கர்ம நியதிப்படி ஈச்வரன் இவர்களுக்கு இப்படிப்பட்ட பாப புண்ய பலன்களைக் கொடுத்துத்தான் இருப்பார். ஆனால் அது இந்த ஜன்மாவிலேயே கொடுக்கப்படவேண்டும் என்பதில்லை அல்லவா? பின் ஜன்மாக்களில் இந்தப் பலன்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இதை விசாரிப்பது ஹிஸ்டரியின் காரியமில்லை. விசாரித்து அறிகிற சக்தியும் சரித்திரக்காரர்களுக்குக் கிடையாது. ஒரு கஜினியோ, ஹிட்லரோ இந்த பூமியில் வாழ்ந்தவரை கொடி கட்டித்தான் பறந்தார்கள் என்றாலும் உயிர்போனபின் அவர்களுக்கு நரக வாஸம் கிடைத்தது; அல்லது ரொம்பவும் நீசமான மறு ஜன்மா ஏற்பட்டது என்றால் இதையும் புராணம் விசாரித்துச் சொல்லும். புராண கர்த்தாக்களுக்கு அந்த சக்தி உண்டு; இதைச் சொல்கிற லக்ஷ்யமும் உண்டு. ஹிஸ்டரி நிபுணர்களுக்கு இந்த இரண்டும் இல்லை. அதனால்தான் ஹிஸ்டரியில் பார்க்கிறவர்களில் அநேகரின் ஜீவிதத்திலிருந்து பாப புண்யங்களைப் பற்றி நாம் படிப்பினை பெற முடிவதில்லை.

புராணமும் சரித்திரந்தான் என்றாலும் அது பாப-புண்யங்களில் ஜனங்களுக்கு பாடம் கற்பித்து அவர்களை தர்மத்தில் செலுத்தும்படியான வரலாறுகளை மட்டும் 'ஸெலக்ட்' பண்ணிக் கொடுக்கிறது. தர்மசாலிகளாக இருந்ததால் அந்த ஜன்மாவிலேயே உயர்வை அடைந்தவர்கள் யாரோ, தர்மத்தை விட்டதால் அந்தப் பிறவியிலேயே கெடுதலை அடைந்தவர்கள் யாரோ, அப்படிப்பட்டவர்களின் கதைகளையே புராணங்கள் பெரும்பாலும் 'ஸெலக்ட்' பண்ணி நமக்குக் கொடுக்கின்றன. இல்லாவிட்டால் அடுத்த ஜன்மாக்களைச் சொல்லி அதில் பாத்திரங்கள் பாப-புண்ய பலன்களை அடைந்ததைச் சொல்லும். பாப-புண்ய பலன்களில் நம்மைச் சேர்க்காத புராணக் கதை எதுவுமே கிடையாது. ஆகையால், "பழைய சரித்திரங்களைப் படிப்பதனால் அந்தப் பழைய அநுபவங்கள் இனிமேல் நடக்க வேண்டியதற்கு வழிகாட்டியாக இருக்கும். நல்லவர்களாக இருந்து நல்ல காரியங்களைச் செய்து நன்மையை அடைந்தவர்களுடைய சரித்திரங்களை நாம் படித்தால் நாமும்

அப்படியிருக்க ஒரு தூண்டுகோலாக இருக்கும். கெட்டவர்களாக இருந்து உலக க்ஷேமத்துக்குக் கேடு பண்ணிக்கொண்டு முடிவில் தாங்களே அதைவிடக் கஷ்டம் அடைந்தவர்களுடைய கதைகளைப் படிப்பதால் நாம் அந்த வழியில் போகாமல் லகானை இழுத்த மாதிரி இருக்கும்" என்பதாகச் சரித்திரப் படிப்புக்குப் பிரயோஜனம் சொல்வதானால், இந்தப் பிரயோஜனத்தை வாஸ்தவத்தில் தற்கால ஹிஸ்டரியால் அடைய முடியவில்லை. புராணத்தில்தான் அடைய முடிகிறது.

'நல்லது கெட்டவைகளைப் பற்றி நமக்கு ஒருவிதமான பாடமும் கற்பிக்காமல் வெறுமே காலவாரியாக பல ராஜாக்கள் ஆண்டதையும் சண்டை போட்டதையும் வளர்த்திச் சொல்லவேண்டியதில்லை. நாம் வாழ்க்கையில் எடுத்துத் கொள்ளும்படியான உபதேசம் இல்லாத சரித்திரம் நமக்கு வேண்டாம். ஆத்மலாபமான சரித்திரங்களையே சொல்வோம்' என்ற அபிப்பிராயத்தோடு புராணங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

சந்திர வம்சம், சூரிய வம்சம் என்பது போலப் புராணங்களிலும் ராஜாக்களின் பரம்பரை முழுக்கச் சொல்லியிருக்கும். இவனுக்குப் பின் இவன் என்று பெரிய லிஸ்ட் கொடுத்திருக்கும். ஆனால் அவர்களில் நாம் நல்வழிப்படப் பிரயோஜனப்படாதவர்களின் கதையை ஒரு வரி, இரண்டு வரியில் சொல்லி முடித்திருக்கும்; அல்லது பேரை மட்டும் சொல்லி விட்டிருக்கும். நாம் படிப்பினை பெறும்படியானவர்களின் சரித்திரங்களையே விஸ்தாரமாகச் சொல்லியிருக்கும். உதாரணமாக த்ருவனின் [துருவனின்] அப்பாவான உத்தானபாதன், த்ருவனுக்கு அப்புறம் அரசாண்ட அவனுடைய பிள்ளை இவர்களைப் பற்றியும் பாகவத புராணத்தில் சொல்லியிருக்கிறது. ஆனால் ஏதோ இரண்டு வரி, நாலு வரிதான் இருக்கும். பக்தி, விடாமுயற்சி, மனவுறுதி முதலியவற்றுக்குப் பாடமாக உள்ள த்ருவ சரித்ரத்தை மட்டும் ஸவிஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறது.

புராணம் பொய்யென்று இங்கிலீஷ்காரர்கள் சொல்லி நம்முடைய தேசத்தின் ஹிஸ்டரியை எழுதினார்கள். அதிலே தங்களுக்குப் பிடித்த divide-and-rule [பிரித்து ஆளும்] கொள்கைகக்கு ஸாதகமான ரேஸ் தியரி

முதலான அநேக விஷயங்களை ரொம்பவும் நடுநிலையிலிருந்து ஆராய்ச்சி பண்ணினது போலவே காட்டிச் சேர்த்துவிட்டார்கள். புராணம் பொய்யென்று இவர்கள் சொன்னார்கள் என்றால், இப்போது இவர்கள் எழுதிய சரித்திரத்திலும் பொய் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு உள்ளது உள்ளபடி இந்திய சரித்திரத்தை எழுதுவதற்கு (reconstruct செய்வதற்கு) முயற்சிகள் நடக்கின்றன. இப்படிச் செய்கிறவர்களுக்கும் அநேக கொள்கைகளில் வேண்டியது–வேண்டாததுகள் (prejudice -கள்) இருக்கலாம். அதனால் என்னதான் நடுநிலையிலிருந்து எழுதுவதாகச் சொன்னாலும், எவ்வளவு தூரத்துக்கு முழுக்க நிஜமான சரித்திரம் உருவாகும் என்று சொல்வதற்கில்லை.

பதினெட்டுப் புராணங்களை எழுதிய வியாஸாசாரியாள், அநேக ஸ்தல புராணங்களை எழுதிய பெரியவர்கள், பக்தர்களின் சரித்ரங்களை எழுதிய சேக்கிழார் முதலியவர்கள்தான் வாஸ்தவத்தில் விருப்பு வெறுப்பில்லாமல் எழுதினவர்கள்.

ஸாம்ராஜ்யங்கள், சண்டை, படையெடுப்புக்கள், ராஜவம்சங்கள் இவைதான் சரித்திரம் என்று நினைப்பது ஸரியில்லை. எல்லா விஷயங்களுக்கும் சரித்திரம் உண்டு. அரசியல் சரித்திரத்தை மட்டும் ஹிஸ்டரியில் பிரதானமாக வைத்து விட்டார்கள். தர்ம விஷயங்களைப் பிரதானமாக வைத்து அதற்கு ராஜவம்சத்தை மட்டுமின்றி மற்ற புண்ய புருஷர்கள், ரிஷிகள், ஸாமானிய ஜனங்கள் முதலியோரின் கதைகளையும், மற்ற எல்லா விஷயங்களின் சரித்திரத்தையும் துணையாக சேர்த்துத் தருவனவாகப் புராணங்களில் இருக்கின்றன. புராணங்களைப் பார்த்தால் அந்தக் கால அரசியல் மட்டுமின்றி cultural life (கலாச்சார வாழ்வு), அக்கால வித்தைகள், ஸயன்ஸ்கள் எல்லாவற்றையும் பற்றித் தெரிந்து கொள்ள முடிகிறது. அவற்றில் முக்யமாக சொல்லப்படுவதோ தர்மங்களும் ஆத்யாத்மிக க்ஷேமமுமாகும்.

புராணங்கள் பொய்யா, உருவகமா ?

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

புராணங்கள் பொய்யா, உருவகமா ?

புராணத்தை நம்ப முடியாது என்று சொல்லி அதற்குக் காரணம், 'அதிலே இப்பொழுது நாம் பார்க்கிற யதார்த்த நிலவரங்களுக்கு வேறான விஷயங்கள் இருக்கின்றன' என்கிறார்கள். தேவர்கள் வந்தார்கள், போனார்கள், வரம் கொடுத்தார்கள் என்றால் அதெல்லாம் இந்தக் காலத்தில் நடக்காததால், புரளி என்று தோன்றுகிறது. பெண்ணைக் கல்லாகச் சபித்தார்கள், கல்லைப் பெண்ணாகும்படி வரம் கொடுத்தார்கள், சூரியன் உதிக்காமல் நிறுத்தி வைத்தார்கள் என்றெல்லாம் பார்த்தால் – இதெல்லாம் நம் சக்தியில் இல்லாத காரியங்களாக இருப்பதால் 'வெறும் புரட்டு' என்று நினைக்கத் தோன்றுகிறது.

இந்தக் காலத்தில் முடியவில்லை, இந்தக் காலத்தில் நடக்கவில்லை என்பதற்காக எந்தக் காலத்திலும் நடக்கவில்லை, நடக்கமுடியாது என்று எப்படிச் சொல்லலாம்? வேத மந்திர சக்தியும், உயர்ந்த தபஸும், யோகாநுஷ்டானமும் பூர்வத்தில் நிறைய இருந்தன என்பதற்கு எந்தப் பழைய புஸ்தகத்தைப் பார்த்தாலும் நிறைய ஆதாரம் இருக்கிறது. இவை இருந்த மட்டும் தேவசக்திகளெல்லாம் இந்த லோகத்தினராலேயே ஸுலபமாக கிரஹிக்கும்படி இருந்திருக்கின்றன. வெளிச்சம் இருந்தால் கூடவே நிழலும் இருக்கும் என்கிற ரீதிப்படி தேவசக்திகளைப் போலவே அஸுர ராக்ஷஸ சக்திகளும் ஸ்தூலமாகத் தெரிகற மாதிரி லோகத்தில் இருந்திருக்கிறார்கள். இப்போதும் தேவாஸுர யுத்தம் முதலானவை மநுஷ்யனின் கண்ணுக்குத் தெரியாமல் (நல்லது கெட்டதுகளின் மோதலாக) நடந்துகொண்டேதான் இருக்கிறது. அந்தக் காலத்தவர்களுக்கு இந்த நல்ல சக்திகளையும் கெட்ட சக்திகளையும் தபோ சக்தியால் கண்கொண்டு பார்க்க முடிந்தது. எல்லா விதமான light waveகளும் sound waveகளும் [ஒளி, ஒலி அலைகளும்] மநுஷ்யக் கண்ணின் லென்ஸுக்கு அகப்பட்டு விடாது என்று விஞ்ஞானிகளே சொல்கிறார்கள். அதில் சில விஞ்ஞானிகள் இன்னும் ஒருபடி மேலே போய் occult என்கிற இயற்கைக்கு அதீதமான மர்ம சக்திகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து, 'தேவதைகள் இருக்கின்றன; நல்ல தேவதைகள், துர்த்தேவதைகள் எல்லாம் இருக்கின்றன' என்றுகூட எழுதி வைத்திருக்கின்றார்கள்.

இப்போதும் அநேக யோகிகள், ஸித்த புருஷர்கள் இருக்கிறார்கள். ஐஸில் கிடந்தாலும் நெருப்பில் கிடந்தாலும் அது அவர்களுடைய சரீரத்தை பாதிப்பதில்லை. மழையை வரப்பண்ணுகிறார்கள்; பெய்கிற மழையை நிறுத்தவும் செய்கிறார்கள். இப்படிப் பலர் அதீந்திரயமான சக்தியோடு இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள். நமக்குத்தான் எதிலும் நம்பிக்கையில்லை. எல்லாவற்றிலும் ஸம்சயம்! பூர்வ காலத்தில் இப்படிப்பட்ட விசேஷ சக்திகளை இன்றைவிட ஏராளமானவர்கள் பெற்றிருந்தபடியால்தான் புராணங்களைப் பார்த்தால் ஏகப்பட்ட 'மிராகிள்'களை சொல்வதாக இருக்கிறது.

மிராகிள் வந்தால் ஹிஸ்டரி இல்லை என்று ஒதுக்கி விடுகிறார்கள். கூன் பாண்டியனுக்குப் பஞ்சாக்ஷர பஸ்மாவின் மகிமையால் ஞானஸம்பந்தர் வெப்பு நோயை நீக்கினார், கூனை நீக்கி 'நின்றசீர் நெடுமாறன்' ஆக்கினார் என்றால் அதை ஹிஸ்டரியாகச் சேர்ப்பதற்கில்லை என்கிறார்கள். மஹேந்திரப் பல்லவன் அப்பர் ஸ்வாமிகளை கல்லிலே கட்டி கடில நதியில் போட்டும் அது மிதந்ததைப் பார்த்துத்தான் ஜைனமதத்தை விட்டு வைதிகத்திற்கு மாறினான் என்றால் அதை ஹிஸ்டரியாக எடுத்துக் கொள்ள முடியாது என்கிறார்கள். ஆனாலும் இப்படியொரு பல்லவ ராஜாவும், பாண்டிய ராஜாவும் நாற்பது ஐம்பது வருஷங்களுக்குள் ஜைனமதத்தை விட்டு சைவத்துக்கு வந்திருக்க வேண்டுமென்பது மட்டும் மற்ற circumstantial evidence (ஸந்தர்ப்ப ஸாக்ஷியம்) எல்லாவற்றையும் பார்த்தால் உறுதியாகத் தெரிகிறது. ஆறு ஏழாம் நூற்றாண்டுகளில், தமிழ்நாட்டில் சமண மதம் வெகுவாக நலிவடைந்து வைதிக மதம் (குறிப்பாக சைவம்) பிரகாசமாக ஜொலிக்க ஆரம்பித்திருக்கிறது என்று சரித்திர நிபுணர்களே ஒப்புக்கொள்ளும்படித் தெரிகிறது. இப்படி ஒரு பெரிய மாறுதல் நடக்க வேண்டுமானால், இரண்டு பெரிய ராஜாக்கள் தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமானால் அதற்குக் காரணமாக அப்பர் ஸ்வாமிகளின் கதையிலும் ஞானஸம்பந்தர் கதையிலும் வருகிற மாதிரியான அற்புதங்கள் நடந்திருக்கக்கூடும்தான் என்பதை எப்படி ஆக்ஷேபிக்கலாம்? இந்த விஷயங்களை அந்த ராஜாக்கள் கல்வெட்டிலோ செப்பேட்டிலோ எழுதி வைக்கவில்லை என்பதால் அவை நடக்கவில்லையென்று சொல்லி

விடலாமா?

ராமாநுஜாசாரியார் கன்னட தேசத்தை ஆண்டு கொண்டிருந்த ஜைனனான பிட்டி தேவன் என்ற ஹொய்ஸள வம்ச ராஜாவுடைய பெண்ணுக்குப் பிடித்திருந்த பேயை ஓட்டினதாலேயே அவன் ஜைனத்தை விட்டு வைஷ்ணவனானான் என்று குரு பரம்பரைக் கதையிலிருந்து சொல்கிறார்கள். சரித்திரக்காரர்கள், 'பேய் ஓட்டுகிற ஸமாசாரத்தையெல்லாம் எடுத்துக் கொள்ள மாட்டோம்' என்கிறார்கள். ஆனாலும் ராமாநுஜர் ஜீவித்த பதினொன்றாம் நூற்றாண்டில் கன்னட ராஜ்யத்தில் ஜைனம் மங்கி வைஷ்ணவ வழிபாடு, கோவில் முதலியன அதிகமானதையும், பிட்டி தேவனே பிற்பாடு விஷ்ணுவர்த்தன தேவன் என்று பெயர் பெற்றதையும் சரித்திரத்தில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இது குரு பரம்பரைக் கதையில் சொன்னதன் விளைவாகவே இருக்கலாம் என்பதை எப்படி ஆக்ஷேபிக்க முடியும்?

இங்கிலீஷ் படிப்புப் படித்து விட்டதால், ஸயன்ஸில் நிரூபிக்க முடியாததெல்லாம் புரளியென்று சொல்லிப் புராணங்களைத் தள்ளுவது கொஞ்சங்கூட சரியான மனப்பான்மையாகாது.

இப்போதுங்கூட அங்கங்கே பத்துப் பன்னிரண்டு அடி நீளமுள்ள மனித எலும்புக் கூடுகள், புராண வர்ணனைப்படியான – தற்போது இல்லாத – பெரிய பெரிய மிருகங்களின் எலும்புக் கூடுகள் அகப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இதைப் பார்த்தால் பனை மர, தென்னை மர உயரமுள்ள ராக்ஷஸர்கள், சிங்கம் மாதிரியான உடம்பும் யானை மாதிரியான தும்பிக்கையும் கொண்ட யாளி போன்ற மிருகங்கள் பூர்வத்தில் இருந்திருக்கக் கூடுமென்றே ஏற்படுகிறது. காலெலும்பு மாத்திரம் பதினாறு அடி நீளமுள்ள ஒரு மநுஷ்ய எலும்புக்கூடு, யானையைப் போல பத்து மடங்குகள் உள்ள ஒரு மிருகத்தின் எலும்புக்கூடு முதலானதுகளை ஐஸ்பெர்க்கில் ஆர்க்டிக் ரீஜனில் பனிக்கட்டிக்குள்ளிருந்து கண்டுபிடித்திருக்கிறார்கள். இதைப் பெரிய archaeological find (புதைபொருள் கண்டுபிடிப்பு) என்று கூத்தாடினார்கள். ஆர்க்கியாலஜியோடு, ஜியாலஜி (பூ–இயல்) யையும் சேர்த்து, இவை இத்தனை லட்சம் வருஷத்திற்கு முன் இருந்தவை என்கிறார்கள்.

இதோடு 'மைதாலஜி' (புராண இயல்) யையும் சேர்த்தால் நம்முடைய பழைய கதைகள் நிஜந்தான் என்றாகிவிடும்.

ஒரு காலத்தில் பனை மர உயர ஆள், இப்போது ஆறடி உயர ஆசாமி, வேறொரு காலத்தில் அங்குஷ்டப் பிரமாண (கட்டை விரல் அளவேயான) ஆள் என்றிப்படி கால வித்யாஸத்தில் பல தினுசாக ஆகிறது. ஜீவராசிகள், படைப்பினங்களும் மாறுகின்றன. இந்த வித்யாஸங்களையும் புராணங்கள் சொல்லுகின்றன.

"வானரர்கள் என்று குரங்கு மநுஷ்யர்களாம்! மிருகத்தின் உடம்பும் மநுஷ்ய முகமுமாம்! இரண்டு தலை, பத்துத் தலைக்காரர்களாம்! எல்லாம் வெறும் பொய்" என்று புராணங்களைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். அல்லது இப்படித் திட்டாதவர்களும். "இதெல்லாம் ஒவ்வொரு symbol (தத்வ ரூபகம்). தத்துவங்களைத்தான் பாத்திரங்களைக் கொண்டு விளக்கியிருக்கிறது; allegorical representation" என்கிறார்கள்.

கதாத்வாரா [கதை மூலமாக] தத்வமும் போதிக்கப் படுவது வாஸ்தவம்தான். அதற்காகக் கதையைப் பொய்யென்று சொல்ல முடியாது. இப்போது கூட எப்போதேனும் நியூஸ் பேப்பரில் பார்க்கிறோம் – இரண்டு தலையும் நாலு கையுமாக ஒரு குழந்தைப் பிறந்தது; மிருகத்திலும் சேராமல் மநுஷ்ய இனத்திலும் சேராமல் நடுவாந்தரமாக ஒரு விசித்திரக் குழந்தை பிறந்தது – என்றிப்படி! Freak என்று இதைச் சொல்கிறார்கள். தப்பவே முடியாத இயற்கையும் கொஞ்சம் தப்பிப் போவதைத்தான் freak என்கிறார்கள். இப்பொழுது freak ஆகச் சொல்லப்படுவதே பூர்வகாலங்களில் ஒரு உத்தேசத்தோடு இப்போதை விட அதிகமாகவும் ஸ்ருஷ்டிக்கப் பட்டிருக்கலாம். இக் காலத்தில் நமக்கிருப்பதைவிட அதிகமாக அவர்களுக்கு இயற்கைக்கு அதீதமான சக்திகள் இருந்ததால் இயற்கையிலும் இப்படிப்பட்ட அதிசயப் பிறப்புக்கள் அதிகம் நேர்ந்திருக்கலாம். அதனால் 'இப்போதுள்ள நமக்குத் தெரிவதுதான் ஸகலமும், இதற்கு வித்தியாசமாக எதுவும் இருந்திருக்க முடியாது' என்று நாம் ஆக்ஷேபிப்பதற்கே இல்லை.

நமக்குத் தெரியாதது, தெரிய முடியாதது எல்லாவற்றுக்கும் பொய்யென்று பெயர் வைத்து விடுவது நியாயமில்லை. புராணத்திலே நம்பமுடியாதது என்று நாம் தள்ளிவிடுகிற ஒன்றே அவ்வப்போது நம் காலத்தில் நடந்துவிடுகிறது. பூர்வ ஜன்மத்தைச் சொல்வது முதலான அதிசயங்கள் இப்போதும் நியூஸ் பேப்பர்களில் வந்து கொண்டேதான் இருக்கின்றன. அதுவும் ஸமீப காலமாக இம்மாதிரி அதிசயச் செய்திகள் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன. ஒன்று சொல்கிறேன்:

புராணத்தில், 'காச்யபருக்கு கத்ரு என்று ஒரு பத்தினி இருந்தாள். அவளுக்குப் பாம்புகள் குழந்தையாகப் பிறந்தன' என்று பார்த்தால் உடனே இதெல்லாம் ஒரே அஸம்பாவிதம் என்று தள்ளிவிடுகிறோம். ஆனால் போன வருஷம் (1958) பேப்பரிலேயே [செய்தித்தாள்] வந்ததை ரொம்பப் பேர் பார்த்திருப்பீர்கள். ஒரு மார்வாடிப் பெண்ணுக்கு பாம்பு பிறந்தது என்று அந்த 'ந்யூஸ்' இருந்தது. அதைப் பார்த்த போது தான் எனக்கே இந்த மாதிரி இன்னொரு விஷயம் உறுதிப்பட்டது .

நான் ஸ்வாமிகளாக ஆகிறதற்கு முந்தி ஒரு குடும்பத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த வீட்டில் பிறந்த பெண்களும் ஸரி, அந்த வீட்டுப் பிள்ளைகளுக்கு வாழ்க்கைப்படுகிற பெண்களும் ஸரி, தாழம்பூ வைத்துக் கொள்ள மாட்டார்கள். பின்னாளில் நான் ஸ்வாமிகளான அப்புறம் அவர்களிடம் ஏனென்று கேட்டபோது அவர்கள் ஒரு கதை சொன்னார்கள். கதையென்றால் இட்டுக் கட்டினது இல்லை.

"பத்துப் பதினைந்து தலைமுறைகளுக்கு முன்னாடி எங்கள் குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு பாம்பு குழந்தையாகப் பிறந்து விட்டது. இதை வெளியில் சொல்லிக் கொள்ள வெட்கம். ஆனாலும் வீட்டோடு வளர்த்து வந்தார்கள். பாம்புக்குப் பால் போட்டி (புகட்டி) குழந்தை மாதிரியே வளர்த்தார்கள். அதுவும் யாருக்கும் ஹிம்ஸை பண்ணாமல் தன்பாட்டுக்கு வீட்டோடு விளையாடிக் கொண்டிருந்ததாம். இந்த விசித்திரக் குழந்தையை எங்கேயும் எடுத்துக் கொண்டு போக முடியவில்லை, விட்டு விட்டும் போக முடியவில்லையென்பதால் அம்மாக்காரி ரொம்ப அவசியமானால் ஒழிய எங்கேயும் வெளியே

போகவே மாட்டாள். 'கல்லானாலும் கணவன்' என்கிற மாதிரி 'பாம்பானாலும் குழந்தை' தானே?அந்த வாத்ஸல்யம்! எங்கேயும் போக மாட்டாளாம். ஆனால் ரொம்பவும் நெருங்கின பந்துக்களின் கல்யாணமொன்று வந்தபோது அவளால் போகாமல் இருக்க முடியவில்லை.

"அப்போது வீட்டில் ஒரு வயசான கிழவி இருந்தாள். (அவள் பாம்புக் குழந்தையின் பாட்டியா என்பது தெரியவில்லை. அந்தக் காலத்தில் தூர பந்துக்களில்கூட நாதியற்றவர்களை வைத்துப் பராமரிக்கிற நல்ல பழக்கம் இருந்து வந்தது. இப்போதுதான் தாயார் தகப்பனாரோடேயே சேர்ந்தில்லாமல் தனிக்குடித்தனம் போகவேண்டுமென்று நவீன நாகரீகத்தில் பறக்கிறார்கள். முன்னெல்லாம் அவிபக்த குடும்பம்தான் (joint family). அதிலே யாராவது ஒரு அத்தை பாட்டி, ஒன்று விட்ட சின்ன தாத்தா என்று வைத்துக் கொண்டு ரக்ஷிப்பார்கள். இந்த கதை நடந்த அகத்தில் ஒரு கிழவி இருந்தாள்.) அவளுக்குக் கண் தெரியாது.

"அந்தக் கிழவியின் பாதுகாப்பில் பாம்புக் குழந்தையை விட்டுவிட்டு அதன் தாயார் தவிர்க்க முடியாத நிலைமையில் வெளியூருக்குப் போனாள்.

"பாம்புக்கு விசேஷமாக என்ன செய்ய வேண்டும்? குளிப்பாட்ட வேண்டுமா? தலை வார வேண்டுமா? சட்டை போட வேண்டுமா? இல்லாவிட்டால், தூக்கி வைத்துக் கொள்ள வேண்டுமா? இதெல்லாம் இல்லை. வேளைக்கு அதற்குப் பால் விட்டால் மட்டும் போதும். அதனால் அம்மாக்காரி அந்தக் கிழவியிடம், "காய்ச்சின பாலை, கை நிதானத்திலேயே கல்லுரலைத் தடவிப் பார்த்து அதன் குழியிலே விட்டு வைத்து விடுங்கள். நேரத்தில் குழந்தை (பாம்பு) வந்து அதைக் குடித்து விடும்" என்று சொல்லிவிட்டு ஊருக்குப் போனாள். அந்தப் பாம்பை இப்படிப் பழக்கியிருந்திருப்பாள் போலிருக்கிறது.

"கிழவி அப்படியே செய்தாள். பாம்பும் தாயார் சொன்னபடியே வந்து குடித்துவிட்டுப் போயிற்று. அப்புறம் ஒரு வேளை நாழி தப்பிப் போயிற்று. கிழவி அசந்து போய் விட்டாளோ என்னவோ? கல்லுரலில் பார்த்த பாம்புக்குப் பாலில்லை. அது ரொம்ப ஸாது. கொஞ்ச நேரம்

காத்துப் பார்த்தது. அப்புறம் அதுவும் அசந்துபோய் அந்தக் கல்லுரல் குழியிலேயே சுருட்டிக் கொண்டு படுத்துக்கொண்டு விட்டது.

கிழவி அதற்கப்புறந்தான், கொதிக்க கொதிக்கப் பாலைக் காய்ச்சி எடுத்துக் கொண்டு கல்லுரலுக்கு வந்தாள். அதிலே பாம்புக்குட்டி படுத்துக் கொண்டிருப்பது அவளுக்குத் தெரியவில்லை; வழக்கம்போலவே கொதிக்க கொதிக்க இருந்த பாலை அப்படியே ஒரு நிதானத்தில் குழிக்குள்ளே விட்டு விட்டாள்.

"பாம்பின் மேலேயேதான் விட்டுவிட்டாள். பாவம்! அந்தக் குட்டி பாம்பு அப்படியே... செத்துப்போய் விட்டது." *

அங்கே ஊருக்குப் போயிருந்த அம்மாக்காரிக்கு ஸொப்பனமாச்சு. ஸொப்பனத்திலே அந்தப் பாம்புக்குட்டி வந்து, 'நான் செத்துப் போய் விட்டேன். நீ போய் என்னை எடுத்து தாழங் காட்டிலே தஹனம் பண்ணிவிடு. இனிமேல் உங்கள் அகத்தில் பிறக்கிற பெண்களும், வாழ்க்கைப் படுகிற பெண்களும் தாழம்பூ வைத்துக் கொள்ள வேண்டாம்" என்று சொல்லிற்று. (தாழம் புதர்தான் பாம்புக்கு ரொம்ப ப்ரீதி.)

"அதிலிருந்து எங்கள் குடும்பத்தில் யாரும் தாழம்பூ வைத்துக் கொள்வதில்லை" என்று அந்த அகத்துப் பெண்கள் சொன்னார்கள்.

இந்தக் கதையைப் பற்றி எனக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது, இப்படிக்கூட நடந்திருக்குமா என்று.

நான் ஸ்வாமிகளாகிவிட்ட பிற்பாடு, அந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் என்னைப் பார்க்க வந்ததற்கு முக்யமாக ஒரு காரணம் இருந்தது. அது பாம்பு பூர்விகத்தைச் சொல்வது இல்லை. அவர்கள் குடும்பத்தில் ஒரு பழைய செப்பேடு இருந்தது. எனக்கு இதில் 'இன்டரஸ்ட்' உண்டு என்பதால் அதைக் கொண்டு வந்து காண்பித்தார்கள்.

அது கிருஷ்ண தேவராயருக்குப் பிறகு ஆட்சி பண்ணிய அச்சுத தேவராயர் காலத்து தாம்ர சாஸனம் (செப்பேடு) . அதில் எழுதியிருந்ததிலிருந்து, பிராமணன் ஒருத்தன் வேறே 108 பிராமணர்களுக்கு தானம் கொடுத்த விவரம் தெரிந்தது.

ராஜாவுக்காகவே இந்த ஒரு பிராமணன் இப்படி 108 பேருக்கு தானம் பண்ணியிருக்கிறான்.

அது ஏன், எதற்காக என்று சொல்கிறேன். பிராமணன் ஸதாஸர்வகாலமும் வேத அத்தியயனமும், கர்மாநுஷ்டானமும் பண்ணிக் கொண்டேயிருக்க வேண்டுமென்பதால் அவன் உத்தியோகத்தில் போய் ஸம்பாதிக்கக் கூடாது. ஆனால் அவன் குடும்பம் நடக்கவேண்டுமே! அவன் பெரிய பெரிய யக்ஞங்களும் பண்ண வேண்டுமே! இவற்றுக்காக அவன் தானம் வாங்கலாம் என்று சாஸ்திரம் அநுமதித்தது. ராஜாக்களும் மற்றப் பிரபுக்களும் இப்படியே அவர்களுக்குக் கொடுத்து ஆதரித்து வந்திருக்கிறார்கள். ஆனால் தானம் வாங்குகிற 'ரைட்' இருக்கிறது என்பதற்காக, இந்தக் காலத்தில் சிலர் தப்பாக நினைப்பது போல, பிராமணர்கள் மற்றவர்களைச் சுரண்டவில்லை. ரொம்பவும் மானஸ்தர்களாக இருந்து கொண்டு அவசியமானால்தான், அதுவும் தங்களுக்கு வேண்டிய அளவுக்கே, தானத்தை அங்கீகரித்தார்கள். ஒரு ராஜாவின் பரம்பரை உத்தமமானதாக இருந்தால்தான், அவன் நல்ல க்ஷத்ரியனாக இருந்தால்தான் அவனுடைய மான்யத்தை ஏற்றுக்கொள்வார்கள். இவர்கள் பிடுங்கித் தின்பதால் ராஜாக்கள் கஷ்டப்படாமல், 'நாம் கொடுப்பதை வாங்கிக்கொள்ள மாட்டேன் என்கிறார்களே! ஸத்பாத்திரத்துக்கு தானம் செய்கிற புண்ணியம் நமக்குக் கிடைக்காமல் போகிறதே! என்றுதான் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். இம்மாதிரி ஸந்தர்ப்பங்களில் ராஜாக்களும் பிரபுக்களும் ஒரு யுக்தி பண்ணியிருக்கிறார்கள். அதாவது, தீன தசையில் உள்ள ஒரு பிராமணனை 'மசிய' வைத்து அவனுக்கு ஏகப் பட்டதாக தானம் செய்துவிடுவார்கள். ஆனால் அது முழுவதும் அவன் ஒருத்தனை உத்தேசித்தேயில்லை. அவன் வழியாக மற்ற பிராம்மணர்களுக்கும் தானம் பண்ணி விடவேண்டுமென்பதே உத்தேசம். அதாவது இந்த ஒரு பிராம்மணன் 'பேருக்கு' அவ்வளவு தானத்தையும் வாங்கிக் கொள்வதுபோல வாங்கிக் கொண்டு, அதில் கொஞ்சத்தை மட்டும் தனக்கே தனக்கென்று வைத்துக்கொண்டு, பாக்கியையெல்லாம் மற்ற பிராமணர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். அந்த மற்ற பிராமணர்கள் இன்னொரு பிராமணன் கொடுப்பதையே வாங்கிக் கொள்வதால் அவர்களுக்கு 'ப்ரதிக்ரஹ தோஷம்' ('ஏற்பது இகழ்ச்சி'

என்ற குறை) ஏற்படாது. எனவே மற்ற பிராம்மணர்கள் இவன் செய்கிற தானத்தை ஏற்பார்கள். பிரபுவின் உத்தேசம் இப்படியாக நிறைவேறிவிடும்.

இப்படித் தந்திரம் பண்ணினது நடுவிலே வருகிற அந்த ஒரு பிராம்மணனுக்கு தோஷமாகாதா? பிரபு நல்ல எண்ணத்தில் எப்படியாவாது வேதவித்துக்களை ஆதரிக்க வேண்டுமென்று இப்படி யுக்தி செய்வதில் தப்பில்லைதான். ஆனால் இப்படி ஒரு தந்திரத்துக்கு உடன்பட்ட பிராமணனுக்கு பாபமில்லையா என்றால், இல்லை. எப்படியென்றால், பிரபு கொடுத்த தானம் சட்டப்படி இவனுடைய சொத்தாகத் தான் ஆகிறது. இவன் பேரிலேதான் அவன் தத்தம் செய்திருக்கிறான். அதனால் அப்புறம் இவன் அதற்கு உரிமை கொண்டாடாமல் அதிலே முக்கால்வாசிக்கு மேல் மற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டுத் தான் ஸ்வல்ப பாகமே வைத்துக் கொள்வதால் இவனுக்கும் தோஷம் போய்விடுகிறது.

ராஜப் பிரதிக்ரஹமே தோஷமானது - அரசனிடமிருந்து வாங்குவதே தப்பு- என்றுதான் தியாகையர் மாதிரியானவர்கள், சரபோஜி போன்றவர்கள் "கொடுத்தே தீருவேன்" என்று வலுக்கட்டாயப் படுத்தினால்கூட அதை உதறித்தள்ளிவிட்டு, "நிதி சால ஸுகமா?" (பணமா சௌக்கியம் தருவது?) என்று சீறியிருக்கிறார்கள்.

நாட்டுக்கோட்டை செட்டிப்பிள்ளைகள் (நகரத்தார்) அநேக சத்திரங்களைக் கட்டினபோது, பிராம்மணர்கள் அவற்றில் போய் சாப்பாட்டுக்கு உட்காருவதற்குத் தயங்கிய போது, இதே போலத்தான் ஒரு பிராம்மணனைத் தேடிப் பிடித்து அவன் பேரில் சத்திரத்தின் கட்டளைகளை எழுதி, அவன் மற்றவர்களுக்குப் போடுகிற மாதிரிப் பண்ணியிருக்கிறார்கள்.

நான் மேலே சொன்ன செப்பேட்டில் இப்படித்தான் ஒரு பிராம்மணன், ராயரிடமிருந்து வடார்க்காட்டிலுள்ள மாம்பாக்கம் என்ற கிராமத்தை பூதானம் வாங்கிக் கொண்டு அதை 108 பிராம்மணர்களுக்கு விநியோகம் செய்திருக்கிறான். அந்த 108 பிராமணர்களுடைய பேரையும் சொல்லி, அவர்கள் இன்ன வேத சாஸ்திரம் படித்தவர்கள்,

அவர்களுக்கு இத்தனை நிலம் கொடுக்கப்படுகிறது என்ற விவரங்கள் அந்த ஸாஸனத்தில் எழுதியிருந்தது.

அப்படி நூற்றெட்டுப் பேரை உத்தேசித்து கிராம தானம் வாங்கிக் கொண்ட பிராமணர் பாம்புக் குழந்தைக் குடும்பத்தில் வந்தவர்தான். அவரிடமிருந்து தானம் பெற்ற மற்றவர்களின் வம்சம் எதுவும் இப்பொழுது தெரியவில்லை. இவர்கள் குடும்பத்தில் மட்டும் இந்தச் செப்பேடு தலைமுறை தலைமுறையாக வந்திருக்கிறது.

இதிலே குறிப்பிட்டு சொல்லவேண்டியது, செப்பேட்டில் சொல்லியிருக்கிற மூதாதையின் பெயர் 'நாகேச்வரன்' என்று இருப்பதுதான். இப்போது இந்தத் தலைமுறையில் இதை என்னிடம் கொண்டு வந்த குடும்பத் தலைவர் பெயரும் நாகேச்வரன். விசாரித்துப் பார்த்ததில் அவர்கள் குடும்பத்தில் ஒவ்வொரு தலைமுறையிலும் நாகேச்வரன் என்ற பெயரை வைத்துக் கொண்டு வருகிறார்களென்று தெரிந்தது.

உடனே ஊகிக்க முடிந்தது – பாம்புக் குழந்தையின் ஸம்பந்தத்தால்தான் இந்த 'நாகப்' பெயர் ஏற்பட்டிருக்கிறதென்று. அதோடுகூட அச்சுத தேவராயர் காலத்திலேயே அவர்கள் சொன்ன கதைக்கு ஆதாரம் இருக்கும்படியாக இந்தப் பெயர் இருந்திருப்பதும் தெரிந்தது.

'இப்படியும் இருக்குமா?' என்று நான் முன்பு நினைத்ததற்கு இது பதில் சொல்கிறாற்போல் இருந்தது. அப்புறம் போன வருஷம் ஒரு பெண்ணுக்குப் பாம்பு பிறந்த ந்யூஸைப் பார்த்தபின் இதைப் பற்றி ஸந்தேஹப்பட வேண்டாம் என்று மேலும் உறுதியாயிற்று.

உங்களுக்கு புராண நம்பிக்கைப் போதவில்லை என்று நான் கண்டிப்பது தப்புத்தான். எனக்கே ந்யூஸ் பேப்பரில் வருவது நிஜம் என்று தோன்றின மாதிரி, ஐதிஹ்யமாக ஒரு குடும்பத்தில் சொன்னதில் நம்பிக்கை போதாமல் ந்யூஸைக் கொண்டுதானே ஐதிஹ்யத்தை confirm செய்து கொள்ள வேண்டியிருந்தது?

இதுதான் இப்போது நாம் இருக்கிற ஸ்திதி: பேப்பரில் வந்து விட்டால் எத்தனை நம்பத் தகாததானாலும் பொய் என்று தோன்றவில்லை. ஆனால் புராணம் என்றாலே கட்டுக் கதை என்று அலக்ஷ்யம். "அவர்களுக்கு வேலையில்லை. ஏடு இருந்தது, எழுத்தாணி இருந்தது, கதை கதையாகக் கட்டி வைத்து விட்டார்கள். இதில் சிலதில் கெட்டிக்காரத்தனமாவது இருக்கிறது. பாக்கியெல்லாம் அபத்தம்" என்று நினைக்கிறோம்.

* ஸ்ரீ பெரியவர்கள் அற்புத நாடகச் சுவையோடு இக்கதையைச் சொல்லி வருகையில் இவ்விடத்தில் பலர் 'த்ஸொ', 'த்ஸொ', என்று விசன ஒலிகளை எழுப்ப, பெரியவர்கள், 'இதுதான் காவ்ய ரஸம் என்பது! எங்கேயோ எப்போதோ, யாருக்கோ நடந்தது - அல்லது நடந்ததாக இட்டுக்கட்டிச் சொல்வது- நம் மனஸை உருக்கிவிடுகிறது. துக்கமாயிருந்தாலுங்கூட, தினமும் நாம் நிஜத்தில் படுகிற துக்கங்கள் மாதிரி இல்லாமல், இதிலே அலாதியாக ஒரு ரஸ மும் இருக்கிறது' என்றார்கள்.

கற்பனையேயானாலும் கருத்துள்ளதே !

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

கற்பனையேயானாலும் கருத்துள்ளதே !

புராணங்களில் வெறும் கற்பனையும் எங்காவது இருக்கலாம்தான். பிற்காலத்தவர்கள் இடைச் செருகலாக (Interpolation என்பதாக) சிலதை நுழைத்து விட்டும் இருக்கலாம். ஆனால் எது வெறும் கற்பனை, எது இடைச் செருகல், எது மூல ரூபம் என்று யார் நிர்ணயிப்பது? அவரவரும் தங்களுக்கு இடைச் செருகலாகத் தோன்றுவதை நீக்கி விடுவது என்று ஆரம்பித்ததால் அத்தனை கதைகளும் போய் விடும். மூலக் கதையென்றே ஒன்று நிற்காது. அதனால் சில தப்புக்கள், கோளாறுகள் இருப்பதாகத் தோன்றினாலுங்கூட இன்றைக்கு நம் கைக்கு எந்த ரூபத்தில் புராணங்கள் வந்திருக்கின்றனவோ அதை அப்படியே வைத்து ரக்ஷிக்கத்தான் வேண்டும்.

அதிலே ஏதாவது கட்டுக்கதை இருந்தாலும் இருந்து விட்டு போகட்டும். அது நம் மனஸை பகவானிடம் கொண்டு போய் விட்டு சாந்தப்படுத்துகிறதோ இல்லாயோ? கடைக்கு ஒரு பண்டம் வாங்கப் போகிறோம். நல்ல சரக்காகக் கிடைக்கிறது. நம் உத்தேசம் பூர்த்தியாகிவிட்டது என்று ஸந்தோஷப்படுவதா, அல்லது கடையில் இன்ன குறை இருந்தது, கடைக்காரனிடம் இன்ன தோஷம் இருந்தது என்று சொல்லி அதிருப்தி படுவதா? பூகோள – ககோள [வான் இயல்] வர்ணனைகள், மன்வந்த்ரம் முதலான கால வர்ணனைகள் எங்கேயாவது தப்பிப் போனால்தான் போகட்டுமே! இதெல்லாம் தெரிந்து கொள்ளத்தான் ஜாகரஃபியும் அஸ்ட்ரானமியும் ஹிஸ்டரியும் இருக்கிறதே! ஜாகரஃபியிலும் ஹிஸ்டரியிலும் அஸ்ட்ரானமியிலும் கொடுக்க முடியாத பரமாத்ம தத்வத்தை, பக்தியை, தர்மத்தைச் சொல்கிற லக்ஷ்யத்தைப் புராணம் பூர்த்தி பண்ணுகிறதோ இல்லையோ?

'த்ரேதாயுகம் என்று அத்தனை லக்ஷம் வருஷம் முன்னாடி ராமர் இருந்திருக்க முடியாது. அப்போது ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிற நாகரிக வாழ்வு ஏற்பட்டே இராது' என்கிறது போலப் பல வாதங்கள் செய்கிறார்கள். இதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. இருந்தாலும் ஒரு பேச்சுக்குச் சொல்கிறேன்: ராமர் த்ரேதாயுகத்தில் இல்லாமலே இருந்திருக்கட்டும். இப்படியே அதற்கு முந்தி க்ருதயுகத்தில் நடந்ததாக சொல்லப்படும் கதைகள் அவ்வளவு பூர்வ காலத்தில் நடந்திருக்காமேலே இருக்கட்டும். எல்லாம் ஒரு ஏழாயிரம் எட்டாயிரம் வருஷத்துக்குள் நடந்தது என்றே வைத்துக் கொள்ளலாம். அதனால் ஸ்ரீ ராம சரித்திரமோ, மற்ற கதைகளோ மதிப்பிலே குறைந்து விடுமா? அவற்றால் நாம் பெறுகிற படிப்பினை கெட்டுப் போய் விடுமா?

புராணத்தில் சொல்லியுள்ள கதைகளின் காலம் தப்பு என்பது போலவே, இந்த புராணங்கள் ஏற்பட்ட காலத்தைப் பற்றியே சொல்வதெல்லாமும் தப்பு என்கிறார்கள்.

ஐயாயிரம் வருஷத்துக்கு முந்திக் கலியுக ஆரம்பத்தில் வியாஸர் புராணங்களைக் கொடுத்தார் என்பது சாஸ்திரங்களில் சொல்லியுள்ள

விஷயம். அவருக்கு முன்பே புராணம் உண்டு. சாந்தோக்ய உபநிஷத்தில் நாரதர் தாம் அத்தியயனம் பண்ணின வித்தைகளின் பேரைச் சொல்லும்போது அவைகளில் ஒன்றாகப் புராணத்தை குறிப்பிடுகிறார். அதனால் வேத- உபநிஷத காலத்திலேயே புராணம் இருந்ததாகத் தெரிகிறது. பிற்கால ஜனங்களின் குறைந்த சக்திக்கு ஏற்ற மாதிரி, ஏற்கெனவே இருந்த வேதங்களை வியாஸர் பல சாகைகளாகப் பிரித்துக் கொடுத்தது போலவே இந்தப் புராணங்களையும் தாமே விரிவாக எழுதிக் கொடுத்திருக்கிறார் போலிருக்கிறது.

ஆனால் இங்கிலீஷ் படிப்பாளிகள் புராணங்கள் அவ்வளவு பழையவை இல்லை என்கிறார்கள். இருந்து விட்டுப் போகட்டுமே! [சென்னை டவுனில் உள்ள] கந்த ஸ்வாமி கோயிலில் ஜே ஜே என்று கூட்டம் சேருகிறது, நல்ல ஸாந்நித்தியம் இருக்கிறது, அங்கே நல்ல பக்தி ஏற்படுகிறது, ஸந்நிதானம் நம் துக்கத்தைப் போக்கி அருள் சுரக்கிறது என்றால் அதுதான் கோவிலின் பிரயோஜனம். இதிலே திருப்திப் படாமல், 'இந்தக் கோவில் எப்போது கட்டியது? அருணகிரிநாதர் காலத்தில் இது இருந்ததா? அவர் திருப்புகழ் பாடியிருக்கிறாரா?' என்று கேட்டுக் கொண்டு போவதில் என்ன அர்த்தம்? இம்மாதிரியானதுதான் புராண காலத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளும்! நம் மன அழுக்கை, சித்த மலத்தைப் போக்குவதுதான் புராணங்களின் லக்ஷ்யம் என்பதை நினைவில் வைத்து, பயபக்தியோடு படித்தால் இப்போது எழுகிற அநேக ஆக்ஷேபங்களுக்கு இடமிராது.

ஆராய்ச்சி, கீராய்ச்சி, research என்று சொல்லிவிட்டால் உடனே நாம் நம்பிவிடுவது என்பதுதான் எல்லாவற்றையும் விடப் பெரிய ஸூபர்ஸ்டிஷனாக (மூட நம்பிக்கையாக) இருக்கிறது! இப்போதையை ஆராய்ச்சிகளிலும் நிறையப் பொத்தல்கள், குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. இது ஸரியாக இருந்து, புராணம் கற்பனையாக இருக்கிற இடத்திலுங்கூட, 'நல்லதைச் செய்தவன் வாழ்ந்தான்; தப்பைச் செய்தவன் கெட்டான்; இப்படிக் கெட்டவர்களையும் அநேக ஸந்தர்ப்பங்களில் பகவான் கை தூக்கிவிட்டிருக்கிறான்' என்பதைப் புராணம் நம் மனஸில் அழுத்தமாகப் பதிப்பிக்கிறதால் அதன் உத்தேசம் பூர்த்தியாயிற்று என்றுதான் அர்த்தம்.

நவீன மனப்பான்மைக்காரர்கள் மட்டுமின்றி சாஸ்திரஜ்ஞர்கள், சிஷ்டர்கள் கூடப் புராணத்தை இரண்டாம் பக்ஷமாக நினைத்து வருவதாக எதனாலோ ஏற்பட்டுவிட்டது. மற்ற சாஸ்திரங்களில் வாக்யார்த்தம், உபந்நியாஸம் பண்ணுகிறவர்களைவிடப் புராணப் பிரவசனம் செய்யும் பௌராணிகர்கள் தாழ்த்தி என்ற அபிப்ராயமும் இருக்கிறது. ஆனால் மஹாமஹோபாத்யாய பட்டம் பெற்ற மஹா பண்டிதர்களான யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள், காபே ராமசந்திராச்சார் முதலியவர்கள் புராணப் பிரவசனம் நிறைய பண்ணி வந்திருக்கிறார்கள். இப்போது ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா பதினெண் புராணங்களைக் கண்டுபிடித்துத் தமிழில் (சுருக்கியாவது) அச்சுப் போடுவதே காரியமாக இருக்கிறார். *

* ஸ்ரீ சோமதேவ சர்மா அமரராவதற்கு முன் கூறியது.

வியாஸர் தந்த செல்வம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

வியாஸர் தந்த செல்வம்

வேதத்தில் இருப்பதை எல்லோருக்கும் நன்றாக விளங்க வைப்பதற்காக, வேதங்களை வகுத்துக் கொடுத்த அதே வேதவியாஸர் பதினெட்டுப் புராணங்களை உபகரித்தார். பதினென் புராணங்களை அஷ்டாதச புராணம் என்பார்கள்.

வியாஸரைத்தான் நான் முதல் 'ஜர்னலிஸ்ட்' [பத்திரிகை எழுத்தாளர்], இன்றைய ஜர்னலிஸ்ட்களுக்கெல்லாம் 'ஐடிய' லாக [முன்னுதாரணமாக] இருப்பவர் என்று நினைக்கிற வழக்கம். கதை, சரித்திரம், பூகோளம், தத்வம், தர்மம், கலைகள் எல்லாவற்றையும் புத்திமான்களுக்கு மட்டுமில்லாமல் பாமர ஜனங்களுக்கும் ஸ்வாரஸ்யமாகத் தருவதற்கே அவர் புராணங்களை எழுதிப் பெரிய செல்வமாகக் கொடுத்திருக்கிறார். இதைத்தானே ஜர்னலிஸ்ட்களும் செய்கிறார்கள்? ஆனால் இவர்கள் பெரும்பாலும் ஸ்வாரஸ்யம், ஜன

ரஞ்ஜகம் என்பதோடு நிறுத்திக் கொண்டு விடுகிறார்கள். வியாஸர் பாமர ஜனங்களையும் தர்மத்தில் கொண்டு சேர்க்கவே, பரமாத்மாவிடம் கொண்டுபோய் விடுவதற்கே ஸ்வாரஸ்யத்தை ஸாதனமாக வைத்துக் கொண்டார். அந்த ஸ்வாரஸ்யத்தையே 'கோல்' (லக்ஷ்யம்) என்று வைத்துக் கொண்டால் பத்திரிகைகள் தர்ம விருத்தமான (தர்மத்துக்கு முரணான) விஷயங்களையும் பிரசாரம் செய்யும்படி ஆகிறது. வியாஸரை முன்னோடியாக வைத்துக் கொண்டால் பத்திரிகைக்காரர்களின் எழுத்து சுத்தமாகி விடும். லோகத்துக்கு ஒரு பெரிய நல்லது பிறக்கும்.

நாலு லக்ஷம் கிரந்தங்களில் வியாஸர் இந்த 18 புராணங்களை எழுதியிருக்கிறார். ஒரு கிரந்தம் என்பது 32 எழுத்துக்கொண்ட ச்லோகம். இந்த நாலு லக்ஷத்தில் கால்வாசியை, அதாவது ஒரு லக்ஷம் கிரந்தத்தை 'ஸ்காந்த புராண'மே எடுத்துக் கொண்டு விடுகிறது. உலகத்தின் மிகப் பெரிய புஸ்தகம் அதுவாகத்தான் இருக்கும். மீதி 17 புராணங்களுமாக மூன்று லக்ஷம் கிரந்தம். இது தவிர லக்ஷம் கிரந்தம் கொண்ட மஹாபாரதத்தையும் வியாஸர் உபகரித்திருக்கிறார். ('புராணம்' என்கிற பதினெட்டில் சேராமல் 'இதிஹாஸம்' என்று இருப்பவை பாரதமும், ராமாயணமும்.)

ஒவ்வொரு தேவதா மூர்த்தியைப் பற்றியும் ஒவ்வொரு புராணம் சொல்லும். சைவமானவை, வைஷ்ணவமானவை, சாக்தமானவை என்றிப்படிப் பல தேவதைகளைக் குறித்துப் புராணங்கள் இருக்கின்றன. பிரம்ம புராணம் (பிராம்மம்) , பத்ம புராணம் (பாத்மம்) , விஷ்ணு புராணம் (வைஷ்ணவம்) , சிவ புராணம் (சைவம்) , பாகவதம், நாரத புராணம் (நாரதீயம்) , மார்க்கண்டேய புராணம், அக்னி புராணம் (ஆக்னேயம்) , பவிஷ்ய புராணம், பிரம்ம வைவர்த்த புராணம், லிங்க புராணம், வராஹ புராணம் (வாராஹம்) , ஸ்காந்த மஹா புராணம், வாமண புராணம், கூர்ம புராணம் (கௌர்மம்), மத்ஸ்ய புராணம் (மாத்ஸ்யம்) , கருட புராணம் (காருடம்), பிரம்மாண்ட புராணம் என்பவை பதினெட்டுப் புராணங்கள்.

இந்தப் பதினெட்டில் பத்து சிவபரமானது என்று சொல்கிறார்கள்.

இப்போது நமக்குப் பிரஸித்தமாகத் தெரிகிற அநேக விருத்தாந்தங்கள் இவற்றிலேதான் வருகின்றன. சரித்திரம், கதை, தத்துவம் எல்லாம் இவற்றிலே இருக்கின்றன.

விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் ஆசார்யாள் விஷ்ணு புராணத்திலிருந்து நிறைய மேற்கோள் காட்டுகிறார். வியாஸ மஹரிஷியின் பிதாவான பராசரர் பண்ணின புராணம் அது. ஸ்ரீ ராமாநுஜரின் ஸித்தாந்தத்தில் விஷ்ணு புராணம் ஒரு முக்யமான அதாரிடி [ஆதாரநூல்] .

ஸ்ரீ ராமநுஜருக்கு முந்தி விசிஷ்டாத்வைதத்தின் மூல புருஷர்களில் ஒருவராக இருந்தவர் ஆளவந்தார். அவரிடம் ராமாநுஜர் போய்ச் சேருவதற்குள்ளேயே அவருடைய உயிர் பிரிந்துவிட்டது. ராமாநுஜரிடம் முக்யமாக மூன்று காரியங்களை ஒப்புவிக்க வேண்டுமென்று ஆளவந்தார் நினைத்தார். அதனால் பிராணன் வெளியே போன பிறகும் அவருடைய சரீரத்தில் மூன்று விரல்கள் மடங்கி இருந்தனவாம். ஒவ்வொரு விரலும் இன்ன ஆக்ஞையத் தெரிவிக்கிறது என்று புரிந்து கொண்டு ராமாநுஜர் சொன்னவுடன், உயிரில்லாத அந்த உடம்பின் மடங்கின விரல்கள் ஒவ்வொன்றாக நிமிர்ந்தனவாம்! அந்த மூன்று ஆக்ஞைகளில் ஒன்று, பிரம்ம ஸூத்ரத்திற்கு விசிஷ்டாத்வைதப்படி பாஷ்யம் எழுதவேண்டும் என்பது. இரண்டாவது, திருவாய்மொழிக்கு வியாக்யானம் எழுதப் பண்ண வேண்டும் என்பது. மூன்றாவதாக வியாஸர், பராசரர் ஆகிய இருவரின் கீர்த்தியும் உலகில் இருக்கும்படியாகப் பண்ணுவது. விஷ்ணு புராண கர்த்தா என்பதால் இப்படிப் பராசரருக்கு ஏற்றம் கொடுக்கப்பட்டது. இதை மனஸில் வைத்துக் கொண்டுதான் ராமாநுஜர் தம்முடைய முக்கியமான சிஷ்யரான கூரத்தாழ்வாரின் இரண்டு பிள்ளைகளுக்கும் பராசர பட்டர், வேத வியாஸ பட்டர் என்று பெயர் வைத்தார். பராசர பட்டர் பிற்காலத்தில் வைஷ்ணவ ஆசாரியர்களில் முக்யமான ஒருவரானார்.

'விஷ்ணு புராணம்' பண்ணியவர் பராசரர் என்றாலும், பதினெட்டுப் புராணங்களையும் நாம் பார்க்கிற ரூபத்தில் ஸரிபண்ணி எழுதிக் கொடுத்தது வியாஸர்தான். வேதங்களை அவர்தான் விபாகம்

பண்ணினார் [வகுத்துக் கொடுத்தார்] என்ற விஷயத்தை முன்பே சொல்லியிருக்கிறேன். வேதத்திலுள்ள விதிகளை எல்லோருக்கும் நன்றாக மனஸிலே ஆழமாகப் பதியச் செய்வதற்காக அவரே புராணங்களையும் அநுக்ரஹித்தார்.

இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. வேதத்தை அத்யயனம் பண்ணும் அதிகாரம் சிலருக்குத்தான் இருக்கிறது. மற்றவர்களுக்கு இல்லை. அதனால் அப்படிப்பட்ட பொது ஜனங்களுக்கு வேத தத்வார்த்தங்கள் தெரிய வேண்டும் என்றே புராணங்களை வியாஸர் எழுதினார் என்பதே அந்தக் காரணம்.

விஷ்ணு புராணத்தை வியாஸரின் தகப்பனார் மூல ரூபத்தில் சொன்னார் என்றால், பாகவதத்தை வியாஸரின் புத்திரரான சுகாசாரியார் பரீக்ஷித்துக்கு உபதேசிக்கிறார்.

பதினெட்டுப் புராணங்களில் "பாகவதம்" என்று சொல்லப்படுவது, கிருஷ்ண பரமாத்மாவின் சரித்திரத்தை முக்யமாக வைத்து மற்ற அவதாரங்களின் கதைகளையும் சொல்கிற விஷ்ணு பாகவதாமா, அல்லது அம்பாளின் லீலைகளைச் சொல்கிற தேவீ பாகவதமா என்று இரண்டு விதமான அபிப்பிராயங்கள் உண்டு. நமக்கு இரண்டும் வேண்டும். 'விஷ்ணு பாகவதம்', 'தேவீ பாகவதம்' இரண்டும் உத்தமமான கிரந்தங்களாக இருக்கின்றன. சைதன்யர், நிம்பார்க்கர், வல்லபாசாரியார் போன்றவர்களின் ஸித்தாந்தங்களில் விஷ்ணு பாகவதம் வேதத்துக்கு ஸமதையான அந்தஸ்துப் பெற்றிருக்கிறது. அதே சமயத்தில் அவர்களை ஆட்சேபிக்கிற அத்வைதிகளும் அதைத் தலைக்கு மேல் கொண்டாடுகிறார்கள்.

சிவபுராணம் வேறே, ஸ்காந்த புராணம் வேறே. ஸ்காந்தத்தில் முக்கால்வாசி சிவனைப் பற்றிய கதைகள், தத்வங்கள் தான். ஆனாலும் ஸ்கந்தனான முருகனைப் பற்றிய விருத்தாந்தம் இதிலே வருவதால் இதற்கு 'ஸ்காந்தம்' என்று பெயர் வந்தது. இதிலே ஸுப்ரமண்யரின் விஷயமாக இருப்பதையே முக்யமாக வைத்துக் காஞ்சீபுரத்தைச் சேர்ந்த கச்சியப்ப சிவாச்சாரியார் தமிழிலே 'கந்த புராணம்' என்று எழுதியிருக்கிறார்.

மார்க்கண்டேய புராணத்தில் தான் 'துர்கா ஸப்த சதீ' என்கிற துர்க்காம்பாளின் விருத்தாந்தம் வருகிறது. ['தேவீ மாஹாத்மியம்' என்பதும் அதுவே.] 'சண்டீ ஹோமம்'- சத, சண்டி, ஸஹஸ்ர சண்டி – என்று பண்ணுவெதல்லாம் இதில் இருக்கிற எழுநூறு மந்திரங்களைக் கொண்டுதான். இதிலே ஒவ்வொரு ச்லோகமும் ஒரு மந்திரமாக மதிக்கப் படுவதால் அதைச் சொல்லி ஹோமம் செய்யப்படுகிறது.

பவிஷ்யம் என்றால் எதிர்காலம் (future) என்று அர்த்தம். 'பவிஷ்ய புராண'த்தில் இப்போது நாம் பார்க்கிற கலியின் கிருத்ரிமம் உள்பட அநேக விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

மௌரியர்கள் போன்ற பழைய ராஜாக்களை மட்டுமின்றி, வெள்ளைக்காரர்கள் இங்கே வந்தது உள்படப் புராணத்தில் இருக்கிறெதன்றால், இக்காலத்தவர்கள் "இதெல்லாம் வியாஸர் கலியுக ஆரம்பித்தில் எழுதினதே இல்லை. ஸமீபத்தில்தான் யாரோ எழுதி அவர் பேரைப் போட்டு விட்டார்கள்" என்கிறார்கள். இடைச் செருகல் எங்கேயாவது கொஞ்சம் இருக்கச் செய்யலாம்தான். அதற்காக ஒரேயடியாக "எல்லாம் புதுசுதான்" என்று தள்ளிவிட முடியாது. யோகசக்தி வாய்ந்தவர்கள் எந்தக் காலத்தையும் காண முடியும்; இருந்த இடத்திலே இருந்து கொண்டே எந்தத் தேசத்தில் நடப்பதையும் சொல்லி முடியும். இம்மாதிரியான சக்தி பெற்ற மஹாபுருஷர்களின் பெயரில் யார் வேண்டுமானாலும் கிரந்தம் பண்ணிப் பிரசாரப் படுத்துவது என்பது ஸுலபமான காரியமில்லை.

கருட புராணத்தில் பித்ருலோகம், பித்ரு காரியம் முதலியவற்றைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறது. அதனால் சிராத்த கர்மாவில் இந்தப் புராணத்தைப் படிக்கிற வழக்கம் இருக்கிறது.

பிரம்மாண்ட புராணத்தில்தான் "லலிதோபாக்யானம்" [லலிதாம்பிகையின் சரிதம்], லலிதா ஸஹஸ்ரநாமம் முதலானவை வருகின்றன. பதினெட்டு புராணங்களையும் சொல்லி முடிக்கிறபோது ராஜராஜேச்வரி பட்டாபிஷேகம் வரும் இந்த புராணத்தோடுதான் பூர்த்தி பண்ணுவதாக ஸம்பிரதாயம் இருக்கிறது என்பதைப் பற்றி தேவீ உபாஸகர்கள் பெருமைப் பட்டுக் கொள்வார்கள்.

இப்போது ஒவ்வொரு ஸ்வாமிக்கும் நாம் சொல்லும் அஷ்டோத்தரம், ஸஹஸ்ரநாமம், கவசம் முதலானவைகள் பெரும்பாலும் புராணங்களில் வருகிறவைதான். விஷ்ணு ஸஹஸ்ரநாமம், சிவ ஸஹஸ்ரநாமம் இரண்டுமே மஹாபாரதத்தில் வருபவை.

அநேக ஸ்தோத்திரங்களும் இவற்றிலிருந்தே நமக்குக் கிடைக்கின்றன. "ஆதித்ய ஹ்ருதயம்" ஸ்ரீமத் ராமாயணத்தில் வருவது. "ப்ரதோஷ ஸ்தோத்ரம்" ஸ்காந்தத்தில் வருகிறது. இப்படி அநேகம்.

உப புராணங்களும் பிற புராணங்களும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

உப புராணங்களும் பிற புராணங்களும்

பதினெட்டு புராணங்களைத் தவிர பதினெட்டு உப-புராணங்களும் இருக்கின்றன. 'விநாயக புராணம்', 'கல்கி புராணம்' முதலியவை உப-புராணங்களில் தான் இருக்கின்றன. முக்யமாகப் பதினெட்டு உப-புராணம் என்று சொன்னாலும் மேலும் அநேகம் இருக்கின்றன.

மாஸங்களின் மகிமைகளை சொல்கிற துலா (ஐப்பசி) புராணம், மாக (மாசி) புராணம், வைசாக (வைகாசி) புராணம் என்றெல்லாம் இருப்பவை பதினெட்டு புராணங்களிலும் உப-புராணங்களிலும் அடங்கியிருக்கிற சில பகுதிகளே.

ஸ்தல புராணங்கள் என்று ஒவ்வொரு க்ஷேத்திரத்துக்கும் இருக்கிறது. இவற்றிலும் பல முன்னே சொன்ன புராணங்களுக்குள்ளேயே இருப்பவைதான். தனியாக இருப்பவையும் அநேகம்.

இப்படியே காவேரி, கங்கை முதலான தீர்த்தங்களின் மாஹாத்மியங்களும் புராணங்களின் பாகமாகவும், தனியாகவும் இருக்கின்றன. துலா புராணத்தில் முக்யமாகக் காவேரி மகிமைதான் வருகிறது. துலா மாஸத்தில் காவேரி ஸ்நானம் விசேஷமானது.

பகவானைப் பற்றிய புராணங்களைத் தவிர பக்தர்களைப் பற்றியேயான புராணங்களும் இருக்கின்றன. 'பெரிய புராணம்' என்ற திருத்தொண்டர் புராணம் சிவனடியார்களான 63 நாயன்மார்களின் கதைகளைச் சொல்வது. இதுவே ஸம்ஸ்கிருதத்தில் 'உபமன்யு பக்தி விலாஸம்' என்ற பெயரில் இருக்கிறது. பண்டரீபுரத்திலுள்ள பாண்டுரங்கனிடம் விசேஷமாக ஈடுபட்டிருந்த துகாராம், நாமதேவர் முதலானவர்களின் சரித்திரத்தைச் சொல்வதாக "பக்த விஜயம்" என்ற நூல் இருக்கிறது. வட தேசத்து பக்தர்களைப் பற்றி நாபா தாஸ் என்பவர் "பக்த மாலா" என்று எழுதியிருக்கிறார்.

இதிஹாஸம் – புராணம் : பெயர் விவரம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

"இதிஹாஸம்" – "புராணம்" : பெயர் விவரம்

ராமாயணமும் மஹாபாரதமுந்தான் நம் தேசத்தில் பாமர–பண்டித பேதமின்றி எல்லோருக்கும் இரண்டு கண்கள் போல இருந்து கொண்டு யுகாந்திரமாக நல்ல வழியைக் காட்டி வந்திருக்கின்றன. இந்த இரண்டையும் புராணங்களோடு சேர்க்காமல், தனி ஸ்தானம் கொடுத்து 'இதிஹாஸ'ங்கள் என்று வைத்திருக்கிறது.

'புரா' என்றால் 'பூர்வத்தில்' என்று அர்த்தம். பூர்வத்தில் நடந்ததைச் சொல்பவை புராணங்கள். அவற்றில் எதிர்கால prediction-ம் வருகிறது.

பூர்வத்தில் நடந்த கதையைச் சொல்வது என்று மட்டுமில்லாமல், புராணம் என்பதே பூர்வ காலத்தில் எழுதப்பட்டது என்றும் அர்த்தம் செய்து கொள்ளலாம். பொயட்ரி, டிராமா முதலான பூர்வகால இலக்கிய ஸ்ருஷ்டிகளுக்குப் பிறகு ஸமீபத்தில் ப்ரோஸிலேயே கதையை எழுதுவது என்று ஒரு இலக்கிய ரூபம் உண்டாயிற்று. அதற்கு Novel என்றே பெயர் வைத்தார்கள். "நாவல்" என்றால் புதியது என்று அர்த்தம். அந்தக் காலத்தில் இந்த ரூபம் பொயட்ரியைப் போலவும், டிராமாவைப் போலவும் இல்லாமல் புதிதாக வந்ததால் 'நாவல்' என்றே பெயர் வைத்தார்கள். இந்த ரூபம் நம் நாட்டிலே வந்த

போதும் 'நாவல்' என்பதை மொழி பெயர்த்து 'நவீனம்' என்றார்கள். நவீனம் புதியது என்றால் புராணம் பழையது. இந்தப் பெயரே புராணங்களின் தொன்மையைக் காட்டுகிறது.

புராணம் என்று இருந்தால் அது சொல்ல வேண்டிய விஷயங்கள் ஐந்து இருக்கின்றன என்று பஞ்ச லக்ஷணம் கொடுத்திருக்கிறது. அவை: ஒன்று, ஸர்க்கம் (ஆதியில் நடந்த சிருஷ்டி). இரண்டு, ப்ரதி ஸர்க்கம் (அப்புறம் அந்த ஸ்ருஷ்டி யுகங்கள் தோறும் கவடு விட்டுக் கொண்டு பரவியது.) மூன்று, வம்சம் (பிரம்ம புத்ரர்களிலிருந்து ஆரம்பித்து ஜீவகுலம் எப்படி தலைமுறை தலைமுறையாக வந்தது என்ற விஷயம்.) நான்கு, மன்வந்தரம் (ஆயிரம் சதுர்யுகங்களில் லோகம் பூராவுக்கும் மநுஷ்யகுல முன்னோர்களாக இருக்கப்பட்ட பதினாலு மனுக்களின் காலத்தைப் பற்றிய விஷயங்கள்.) ஐந்தாவது, வம்சாநுசரிதம் (தேசத்தைப் பரிபாலித்த ராஜாக்களின் வம்சாவளி; ஸூர்ய வம்சம், சந்திர வம்சம் என்பது போன்ற dynasty -களின் விவரம்) . இன்னம், பூகோள வர்ணனை, ககோள வர்ணனை என்பதாக லோகங்களைப் பற்றி விரிவாக வர்ணிக்க வேண்டும். இங்கே புராணம் என்பது ஹிஸ்டரியாக மட்டுமின்றி ஜாகரஃபியாகவும் ஆகிறது.

'இதிஹாஸம்' என்பது இதி–ஹ–ஆஸம். 'இதி–ஹ–ஆஸம் என்றால் இப்படி நடந்தது என்று அர்த்தம். 'இதி ஆஸம்' என்றாலே 'இப்படி நடந்தது' என்றாலும், நடுவிலே ஒரு 'ஹ' போட்டிருக்கிறது. 'ஹ'வுக்கு 'நிச்சயமாக', 'வாஸ்தவமாக', 'ஸத்தியமாக' என்று அழுத்தம் கொடுக்கிற அர்த்தமுண்டு. கொஞ்சங்கூடப் பொய் கலக்காமல் உள்ளது உள்ளபடியே எழுதினது 'இதிஹாஸம்'. அது எழுதப்பட்ட காலத்திலேயே நடந்தது. ராமர் இருந்த போதே வால்மீகி ராமாயணத்தை எழுதினார். பஞ்ச பாண்டவர்கள் இருந்த போதே வியாசாரியாள் கூட இருந்து பாரதத்தில் வரும் ஸம்பவங்களை எல்லாம் நேரில் பார்த்தவர்.

'புராணம்' என்ற பெயர்ப்படி அவர் பழைய விஷயத்தை சொன்ன போதும், தீர்க்க திருஷ்டியால் உள்ளது உள்ளபடிப் பார்த்துத்தான் எழுதியிருப்பார். என்றாலும் அதைக் கேட்ட மற்றவர்களுக்கு – அவர் காலத்தவர்களுக்கு – அந்த விஷயங்கள் தெரியாது. மஹாபாரதம்,

ராமாயணம் ஆகியவை இப்படி இல்லை. அவை முதலில் பிரசாரமானபோது லோகத்தில் இருந்தவர்களுக்கே அவற்றிலுள்ள அநேக பாத்திரங்களையும், ஸம்பவங்களையும் தெரியும். அதனால்தான் இவற்றில் நிஜம்தானா என்று நாம் ஸம்சயிப்பதற்கு இடமே இல்லை என்பதைக் காட்ட 'இதி–ஹ–ஆஸம்' என்று 'ஹ' போட்டு உறுதிப்படுத்தியிருக்கிறது.

"இதி–ஹ–ஆஸம்' என்றால் 'இப்படி(யிருக்க வேண்டுமென்று) அவர்கள் (பெரியோர்) சொல்கிறார்கள்' என்றும் அர்த்தம் செய்து கொள்ளலாம்.

நேரே நடப்பதை வைத்துக் சொல்லாமல், இப்படியிருந்தது என்று ஒரு நம்பிக்கையின் மேல் எடுத்துக் கொள்வதே 'ஐதிஹ்யம்'. 'ஐதீகம்' என்று தமிழில் அதைத்தான் சொல்கிறோம். அதாவது மரபு அல்லது tradition -க்கு இப்படிப் பேர். இப்போது நாம் நேரில் பார்க்கிற ஒன்றைக் கொண்டு இதை ஏற்படுத்தவில்லை. நமக்கு நீண்ட காலத்துக்கு முன்னாலிருந்து அநுஸரிக்கப்பட்டதா, சரி, நாமும் பின்பற்றவேண்டும் என்று இருப்பதே ஐதீகம். 'இதி' என்ற வேர்ச் சொல்லிலிருந்தே 'ஐதிஹ்யம்' வந்திருக்கிறது. 'இப்படிப் (பெரியோர்) சொன்னது' என்பதற்காகவே நாம் பின்பற்ற வேண்டியது ஐதிஹ்யம். நாம் நேரில் பார்ப்பது 'இது'; இன்னொருத்தர் சொன்னால் 'இப்படி'!

இதிஹாஸங்களின் பெருமை

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

இதிஹாஸங்களின் பெருமை

புராணங்களை வேதத்துக்கு உபாங்கமாகச் சொன்னால், இதிஹாஸங்களையோ வேதத்துக்கு ஸமானமாகவே உயர்த்திச் சொல்லியிருக்கிறது. பாரதத்தை 'பஞ்சமோ வேத:'- ஐந்தாவது வேதம் – என்று சொல்லியிருக்கிறது. ராமாயணத்தைப் பற்றி "வேதத்தால் அறியத்தக்க பரமபுருஷன் தசரதனின் குழந்தையாக அவதாரம் பண்ணியவுடன் அந்த வேதமும் வால்மீகியின் குழந்தையாக அவதாரம் பண்ணிவிட்டது" என்று சொல்லியிருக்கிறது.

வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே|

வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மனா||

(பிரசேதஸின் பிள்ளையானதால் வால்மீகிக்குப் பிராசேதஸ் என்று பெயர்.)

ராமாயண- பாரதக் கதைகள் நம் தேச ஜனங்களின் ரத்தத்திலேயே ஊறிப்போனவை.

இந்த இதிஹாஸ படனம் குறைந்து போய்விட்ட இந்த நாற்பது, ஐம்பது வருஷத்துக்கு முன்புவரை* பாமர ஜனங்கள் உள்பட எல்லோருமே வெளி தேசத்தார் வியக்கும்படியான நல்லொழுக்கங்களோடு யோக்யமாக இருந்து வந்தார்கள் என்றால் அதற்கு முதல் காரணம் ராமாயணமும் பாரதமும்தான். பாரதப் பிரவசனம் விடாமல் ஒவ்வொரு ஊர்க் கோயிலிலும் நடக்க வேண்டும் என்பதற்காகத் தமிழ் ராஜாக்கள் மானியம் கொடுத்து வந்திருக்கிறார்கள். நாற்பது, ஐம்பது வருஷத்துக்கு முந்தி வரையில் பூசாரி உடுக்கடித்துக் கொண்டு பாரதம் பாடுவதை கேட்கத்தான் கிராம ஜனங்கள் கூட்டம் கூட்டமாகப் போவார்கள். அதுதான் அவர்களுக்கு ஸினிமா, டிராமா எல்லாம். ஆனால் இந்த ஸினிமா டிராமாக்களினால் ஒழுக்கத்துக்கு ஏற்பட்டிருக்கிற ஹானிகள் இல்லாமல், பாரதக் கதை கேட்டுக் கேட்டே அவர்கள் ஸத்யத்துக்கு பயந்து கபடு, சூது இல்லாமல் நல்ல வாழ்க்கை நெறியில் போனார்கள். பாரதத்துக்கு இந்தத் தமிழ் தேசத்திலிருக்கிற மதிப்பு, கிராம தேவதை ஆலயத்தை, "திரௌபதை அம்மன் கோயில்" என்று சொல்வதிலிருந்து தெரிகிறது.

ஒவ்வொரு பெரிய புராணத்தையும் எடுத்துக் கொண்டால் அதிலே தனித்தனிக் கதையாக அநேகம் இருக்கும். ஒவ்வொரு கதையும் ஒரு குறிப்பிட்ட தர்மத்தை வலியுறுத்துவதாக இருக்கும். இதிஹாஸத்திலோ ஆரம்பத்திலிருந்து கடைசிவரை ஒரே கதையாக இருக்கும். நடுவே வேறு பல உபாக்யானங்கள் வந்தாலும்கூட அவையும் பிரதானமான ஒரு கதையைச் சுற்றியே இருக்கும். புராணத்தில் ஒவ்வொரு கதை ஒவ்வொரு தர்மத்தைச் சொல்கிறது என்றால் இதிஹாஸத்தின் மையமான கதையில் ஸகல தர்மங்களும்

நடத்திக் காட்டப்பட்டிருக்கும். உதாரணமாக, தனிக்கதைகளான ஹரிச்சந்திர உபாக்யானம் ஸத்யம் என்ற ஒரு தர்மத்தை மட்டும் சொல்கிறது; சிரவணன் கதை பித்ரு பக்தியை மட்டும் சொல்கிறது; நளாயினி கதை கற்பை மட்டும் சொல்கிறது; ரந்திதேவன் கதை பரம தியாகத்தை, கருணையை மாத்திரம் சொல்கிறது. ஆனால் ராமர், பஞ்ச பாண்டவர்கள் இவர்களுடைய வாழ்க்கையைச் சுற்றி அமைந்த இதிஹாஸங்களில் இவர்கள் ஸகல தர்மங்களையும் நடத்திக் காட்டியிருக்கிறார்கள்.

* இதிஹாச, புராண உபந்நியாஸங்கள் வெகுவாகப் பெருகியிருப்பினும் இவை நகரப் புறங்களிலேயே நடப்பதால் பெருவாரியான கிராம மக்கள் இவற்றால் பயன் பெறாததை ஸ்ரீ சுவாமிகள் கருத்தில் கொண்டு 1962-ல் கூறியது.

தெய்வங்களுள் பேதம் ஏன் ?

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

தெய்வங்களுள் பேதம் ஏன் ?

ஒவ்வொரு ஸ்வாமியையும் குறித்ததாக ஒவ்வொரு புராணம் இருப்பதால் சில ஸந்தேஹங்கள் வருகின்றன. சைவமான புராணங்களில், 'சிவன் தான் பரமாத்ம தத்வம்; சிவன்தான் ஸ்ருஷ்டி-ஸ்திதி-ஸம்ஹாரம் எல்லாவற்றுக்கும் அதிகாரி. இவர் சொல்படி இவருக்கு அடங்கித்தான் விஷ்ணு பரிபாலனம் பண்ணுகிறார். அவர் [விஷ்ணு] வெறும் போகி, மாயையில் அகப்பட்டுக் கிடப்பவர். சிவன்தான் யோகி, சிவன்தான் ஞானஸ்வரூபி' என்றெல்லாம் சொல்லியிருக்கும். 'சிவனுக்கு விஷ்ணு அடங்கினவர். சிவனை விஷ்ணு பூஜை பண்ணுகிறார். சிவனுக்கு அடங்காமல் சில சமயத்தில் அவர் சிவனை எதிர்த்தபோது தோற்றுப் போய் மானபங்கப்பட்டிருக்கிறார்' என்றெல்லாம் சொல்லி, இது ஒவ்வொன்றுக்கும் திருஷ்டாந்தமாக அநேக கதைகளைச் சொல்லியிருக்கும். வைஷ்ணவமான புராணங்களைப் பார்த்தாலோ இதை அப்படியே தலைகீழாகத் திருப்பி வைத்து, அதற்கும் ஆதரவாக

ஏகப்பட்ட விருத்தாந்தங்களைக் காட்டியிருக்கும். "பேய் பிசாசுகளைக் கட்டிக்கொண்டு சுடுகாட்டில் உட்கார்ந்திருக்கிற சிவனா ஒரு ஸ்வாமி? சக்கரவர்த்தியான வைகுண்டநாதனின் தாஸர்தான் அவர்" என்று அவற்றில் சொல்லியிருக்கும்.

சிவன் விஷ்ணு என்ற இரண்டு தெய்வங்களுக்குள் மட்டும் என்றில்லை. ஒவ்வொரு புராணத்திலும் ஏதோ ஒரு தெய்வத்தை – அது ஸுப்ரமண்யராயிருக்கலாம், பிள்ளையாராக இருக்கலாம், அல்லது சூரியனாக இருக்கலாம். ஏதோ ஒன்றை – முழுமுதற் கடவுளாகச் சொல்லி மற்ற எல்லா தெய்வங்களையும் மட்டம் தட்டி, அவை இந்த ஒரு மூர்த்தியைத்தான் பூஜை பண்ணுகின்றன, அப்படிப் பண்ணாமல் அஹம்பாவப்பட்டபோது இதனிடம் தோற்றுப் போய் மானபங்கப்பட்டிருக்கின்றன என்று கதைகளிருக்கும்.

இதைப் பார்த்தால், 'என்ன இப்படி ஒன்றுக்கொன்று வித்தியாஸமாய் இருக்கிறதே! இதில் எது நிஜம், எது பொய்? எல்லாம் நிஜமாக இருக்கமுடியாது. சிவன் விஷ்ணுவைப் பூஜை பண்ணினார் என்றால் விஷ்ணு சிவனை பூஜை பண்ணுவது அயுக்தம். இப்படி நடக்காது. திரிமூர்த்திகளுக்கு மேல் அம்பாள் இருக்கிறாள் என்றால் அவளே பரமேச்வரனிடம் பதிவிரதையாக அடங்கிக் கிடக்கிறாளென்பது தப்பு. அதனால் எல்லாப் புராணமும் நிஜமாய் இருக்கமுடியாது. எது நிஜம்? எது பொய்? ஒரு வேளை எல்லாமே பொய்தானா? அப்படித்தான் இருக்கும் போலிருக்கிறதே! என்று ஸந்தேஹங்கள் தோன்றுகின்றன.

தர்க்க ரீதியாகப் பார்த்தால் எல்லாம் நிஜமாக இருக்க முடியாதென்று தோன்றினாலும், எல்லாமே நிஜம்தான். ஒரு சமயத்தில் தோற்றுப்போன ஸ்வாமியே இன்னொரு சமயம் ஜெயிக்கிறது. ஒரு சமயம் பூஜை பண்ணின ஸ்வாமியே இன்னொரு சமயம் பூஜை பண்ணப்படும் ஸ்வாமியாகிறது.

இது எப்படி? எதற்காக இப்படி இருக்க வேண்டும்?

ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் ஆகிய சகலத்தையும் செய்கிற பரமாத்மா ஒன்றேதான் இருக்கிறது. அதுவேதான் இத்தனை தெய்வங்களாகவும் ஆகியிருக்கிறது. எதற்காக? இந்த லோக

வியாபாரம் ருசியாக இருக்கவேண்டும் என்பதற்காக எல்லா ஜனங்களையும் ஒரே அச்சாகப் படைக்காமல் பலதரப்பட்ட மனோபாவ வித்தியாஸங்களுடையவர்களாகத் தானே பரமாத்மா சிருஷ்டித்திருக்கிறார்? இந்த ஒவ்வொரு மனோபாவத்துக்கும் பிடித்த மாதிரி பரமாத்மாவும் ஒவ்வொரு ரூபத்தை எடுத்துக் கொண்டால்தான் அவரவரும் தங்களுக்குப் பிடித்ததை இஷ்ட தேவதையாய்க் கொண்டு உபாஸித்து நல்ல கதியைப் பெற முடியும். அதற்காகத்தான் ஒரே பரமாத்மா பல தெய்வரூபங்களை எடுத்துக் கொள்கிறது.

ஒவ்வொருவருக்கும் தங்கள் இஷ்ட மூர்த்தியிடமே அசையாத நம்பிக்கை ஏற்படவேண்டுமல்லவா? "இதுதான் பரமாத்ம ஸ்வரூபம், பரப்பிரம்ம ஸ்வரூபம். இதற்கு மேல் ஒரு சக்தியில்லை"– என்ற உறுதியை அவர்களுக்கு ஊட்ட வேண்டுமல்லவா? அதற்காகத்தான் ஒவ்வொரு ரூபத்திலும் மற்ற ரூபங்களையெல்லாம்விடப் பெரியதாகத் தன்னைக் காட்டிக் கொண்டிருக்கிறது. மற்ற ரூபங்கள் தன்னை பூஜை பண்ணினதாகவும் தன்னிடம் தோற்றுப் போனதாகவும் காட்டியிருக்கிறது.

இப்படிச் சொன்னதாலேயே ஒவ்வொரு தெய்வமும் மற்ற தெய்வங்களைப் பூஜித்ததுமுண்டு, மற்ற தெய்வங்களால் பூஜிக்கப்பட்டதுமுண்டு; மற்ற தெய்வங்களிடம் தோற்றதுமுண்டு, மற்ற தெய்வங்களால் தோற்கப் பண்ணினதுமுண்டு என்று ஆகிறதல்லவா?

இவற்றிலே சைவமான புராணங்களில் சிவனின் உயர்வை மட்டுமே காட்டுகிற விஷயங்களாகத் தொகுத்துக் கொடுத்திருக்கும்; வைஷ்ணவமான புராணங்களில் விஷ்ணுவின் உத்கர்ஷத்தை [மேன்மையை] சொல்கிற ஸம்பவங்களை மட்டுமே சேர்த்துத் தந்திருக்கும். இப்படியே அம்பாள், ஸுப்ரமண்யர் முதலிய மற்ற தேவதைகளைப் பற்றிய ஒவ்வொரு புராணத்திலும் அது ஒன்றே முழுமுதல் தெய்வம் என்னும்படியான விருத்தாந்தங்களை மட்டும் கொடுத்திருக்கும்.

ஆக, உத்தேசம் மற்றவற்றை மட்டம் தட்டுவதில்லை. எது ஒருத்தனுக்கு உபாஸ்யமோ அதனிடமே இவன் அனன்ய பக்தி செலுத்தும்படி பண்ணவேண்டும் என்பதே உத்தேசம். அன்னியமாக

இன்னொன்றிடம் பக்தி சிதறாமல் இருப்பதுதான் 'அனன்யம்' என்பது. இந்த தெய்வத்தை உயர்த்திக் காட்டி இதன் உபாஸகனை உயர்த்துவதுதான் லக்ஷ்யமேயன்றி, மற்றவற்றை நிந்திப்பது அல்ல. இதை 'நஹி நிந்தா நியாயம்' என்பார்கள்.

எல்லாம் ஒரே பரமாத்மாவின் பல ரூபங்கள் என்று பார்க்கிறவர்களுக்கு அனன்ய பக்தி என்பதற்கு அவசியமே இல்லை. ஏனென்றால் ஒரு தெய்வத்துக்கு இன்னொன்று அன்னியம் என்று அவர்கள் நினைத்தால்தானே ஒன்றைவிட்டு இன்னொன்றிடம் திரும்புவதைப் பற்றிய பேச்சே வருகிறது? எல்லாம் ஒன்றின் வேஷமே என்று புரிந்து கொண்டுவிட்டால் அப்போது எல்லாப் புராணங்களும் ஒரே பரமாத்மாவின் லீலா விநோதம்தான்; அந்த ஒன்றேதான் தன்னை வெவ்வேறு மனோபாவக்காரர்கள் அநுபவிக்கும்படியாக வெவ்வேறு தெய்வம்போல் ஆக்கிக் கொண்டு இத்தனை கூத்தும் அடிக்கிறது என்று புரிந்து கொண்டு, ஒன்றுக்கொன்று முரணாகத் தோன்றுகிற எல்லாக் கதைகளையும் ரஸிக்கவும் பக்தி செலுத்தவும் முடிகிறது.

பாணாஸுரன் கதையிலே சிவன் கிருஷ்ணனிடம் தோற்றுப் போகிறாரா? திருவண்ணாமலைக் கதையிலே விஷ்ணு சிவனுடைய அடியைக் காணமுடியாமல் தோற்றுப் போகிறாரா? இரண்டும் ஸத்யந்தான். கிருஷ்ண பக்தர்களை அவர்தான் பரமாத்மா என்று நம்பப் பண்ணுவதற்காக ஈச்வரன் தயங்காமல் கிருஷ்ணனிடம் தோற்றுப் போகக் கூடியவர்தான். சைவர்களுக்கு ஈச்வரனிடம் பிடிப்பை உறுதியாக்க வேண்டும் என்பதற்காக விஷ்ணு தம்மையே குறைத்துக் கொண்டு ஈச்வரனிடம் தோற்கக் கூடியவர்தான். நாம் ஜயித்தவர் – தோற்றவர் என்று வித்யாஸமாக நினைத்தாலும் அவர்களுக்குத் தாங்கள் வேறு இல்லை, ஒருவரேதான் என்று தெரியுமல்லவா? தன்னையே ஜயித்துக் கொள்வதாவது? தன்னிடம் தோற்றுப் போவதாவது? அதனால் இதெல்லாம் விளையாட்டுத்தான்! இப்படி ஒரே பரமாத்மா பல ரூபம் எடுத்துக்கொண்டு லீலை செய்கிறது.

இன்னொரு காரணமும் உண்டு. ஜனங்களுக்கு வழி காட்டியாக இருப்பதுதான் அது. லோகத்தில் பக்தி விருத்தியாக வேண்டும். இதற்காக பகவானே வழி காட்டவேண்டும். அதற்காகத்தான் சில கதைகளில் சில க்ஷேத்ரங்களில் விஷ்ணுவே பக்தனாக இருந்து கொண்டு ஈச்வரனுக்குப் பூஜை செய்கிறார்; வேறு சில கதைகளில், க்ஷேத்ரங்களில் சிவன் விஷ்ணுவுக்குப் பூஜை பண்ணுகிறார்.

மற்ற தெய்வங்களும் இப்படியே. பொதுவாக சைவம், வைஷ்ணவம் என்றே நாம் பெரிய பிரிவுகளாகப் பிரிந்திருப்பதால் ஈச்வரன், விஷ்ணு என்ற இரண்டையே அதிகம் சொல்கிறேன்.

லோகத்தில் பாதிவ்ரத்யம் [கற்பு நெறி] இருக்கவேண்டும். அதனால் அம்பாளே பதிவிரதைகளுக்கெல்லாம் வழி காட்ட வேண்டும். அப்போது, தான் பராசக்தியாக இருந்தாலும் பதிக்கு அடங்கி ஒடுங்கினவளாகத்தானே இருக்க வேண்டும்?

ஆக, புராணங்களிலே ஒன்றுக்கொன்று வித்தியாஸமாக, இந்த ஸ்வாமிதான் உசத்தி என்றும், அந்த ஸ்வாமிதான் உசத்தி என்றும் காட்டும்படியான கதைகள் வருவது அந்தந்தக் குறிப்பிட்ட சமயத்தில் ஒன்றிடமே இதுதான் பரமாத்மா என்று நாம் ஆழமாக ஈடுபட்டு நிற்பதற்காகச் சொன்னது என்றே எடுத்துக்கொள்ள வேண்டும். ஒன்றைத் தாழ்த்தியது போல் சொன்னது உண்மையில் அதை நிந்திப்பதற்காக இல்லை; இன்னொன்றை இதுவே ஸகலமும் என்று கெட்டியாகப் பிடித்துக் கொள்ளச் செய்வதுதான் உத்தேசம்.

ஒன்றே பலவாக

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

ஒன்றே பலவாக

ஒரே பரமாத்மாதான் பல தேவதா மூர்த்திகளாகியிருக்கிறார். ஒவ்வொருத்தனுக்கு ஒவ்வொரு மூர்த்தியிடம் அலாதிப் பிடிமானம் உண்டாகிறது. அவனவனுக்கும் அந்தப் பிடிப்பையே உறுதிப்படுத்திக் கொடுப்பதற்காகப் பரமாத்மா தம் ஸ்வரூபத்தில் ஒன்றை

இன்னொன்றிடம் ஒரு சமயத்தில் குறைத்துக் கொள்கிறார். தஞ்சாவூர் சீமையிலேயே எடுத்துக் கொண்டால்: திருக்கண்டியூரில் பரமசிவனை மஹாவிஷ்ணுவுக்கு முன்னால் குறைத்துக் காட்டுகிறார். பிரம்ம சிரஸைக் கிள்ளியதால் பரமேச்வரனுக்கு ஏற்பட்ட சாபத்துக்கு அவர் மஹாவிஷ்ணுவிடம் சாபவிமோசனம் பெறுகிறார். அடுத்தாற்போல் திருவீழிமிழலையில் அந்த மஹாவிஷ்ணு பரமசிவனுக்கு முன்னால் குறைந்தாற் போல் இருக்கிறார். அங்கே விஷ்ணு சிவனுக்குப் பூஜை பண்ணுகிறார். ஒவ்வொரு கமலமாக சிவ ஸஹஸ்ர நாமம் சொல்லி அர்ச்சனை செய்கிறார். கடைசியில் ஒரு கமலம் குறைகிறது. உடனே புண்டரீகாக்ஷனான (தாமரைக் கண்ணனான) பெருமாள் தம் கண் ஒன்றையே பறித்து அர்ச்சனை செய்கிறார். ஈச்வரன் பிரஸன்னமாகி அவருக்குச் சக்கரம் வழங்குகிறார். இங்கே 'நேத்ரார்ப்பணேச்வரர்' என்றே ஈச்வரனுக்குப் பெயர். கண்டியூரில் பெருமாளுக்கு 'ஹர சாப விமோசனர்' என்று பெயர். கண்டியூர் கதையைக் கேட்கிறபோது பெருமாள் மஹாபாபத்தையும் சாபத்தையும் போக்குகிற பரம கருணாமூர்த்தி என்ற பாவத்தை, ஸாரத்தைத்தான் நாம் கிரஹிக்க வேண்டும். அப்படியே திருவீழிமிழலைப் புராணத்தில், தன் கண்ணைக்கூடத் தயங்காமல் கொடுக்கிறதுதான் பக்தி என்னும் ஸாரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். எவரைவிட எவர் உசத்தி அல்லது தாழ்த்தி என்று பார்ப்பதை முக்யமாய் நினைக்கக் கூடாது.

முன்பெல்லாம் லாந்தர் விளக்குகள்தாம் இருந்து வந்தன. அதில் நாலு பக்கம் கண்ணாடி போட்டதும் உண்டு; முப்பட்டை மாதிரி மூன்று பக்கம் கண்ணாடி போட்டது மாதிரியும் உண்டு. நாம் இந்த முப்பட்டை லாந்தரைப் பார்ப்போம். கண்ணாடிக்குள்ளே விளக்கு ஏற்றி வைத்திருக்கும். அதன் ஒளி மூன்று பக்கத்தாலும் கண்ணாடி வழியாக வெளியே வரும். சில சமயங்களில் அலங்காரமாக, இந்தக் கண்ணாடி ஒவ்வொன்றுக்கும் ஒரு வர்ணம் பூசியிருப்பார்கள். உள்ளேயிருக்கிற ஒரே ஒளி அந்தந்தப் பக்கத்துக் கண்ணாடி வழியாக வருகிறபோது அததன் வர்ணமாக தெரியும். சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்ற மூன்று காரியங்களை ஒரே பரமாத்மா பண்ணுகிறது. ஒரே சைதன்யம் [அறிவொளி] தான் மூன்றுக்கும் காரணம். அந்த சைதன்யம் முப்பட்டை லாந்தருக்குள் இருக்கிற விளக்கு மாதிரி.

மூன்று பட்டையில் ஒன்றுக்கு சிவப்புக் கலர் பூசியிருக்கிறது. அதுதான் ச்ருஷ்டி. ஸ்பெக்டராஸ்கோப்பில் சுத்த வெளிச்சத்திலிருந்து சிவப்பைப் பிரித்தால், பாக்கி ஆறு கலர்களும்கூட பிரிந்துவிடும். ஒன்று பலவாக ஆகிற சிருஷ்டி இதுதான். அதனால்தான் சிருஷ்டிகர்த்தாவான பிரம்மாவைச் சிவப்பு நிறமாகச் சொல்வது. முப்பட்டைக் கண்ணாடியில் இன்னொன்று நீலம். ஸயன்ஸ்படி நிற மாலையின் கடைசியில் உள்ள 'வயலெட்' அதுதான். ஆரம்பம் சிவப்பு (infra-red), முடிவு வயல்ட் (ultra-violet). சிருஷ்டிக்கப்பட்ட லோகத்தையெல்லாம் பரிபாலித்துக் கொண்டிருக்கும்போதே, 'இந்த லோகம் என்பது தன்னில் தானே நிறைந்த பூர்ண சத்தியம் இல்லை; இது பரமாத்மாவின் வேஷம்தான்; அவருடைய லீலைதான்' என்று ஞானத்தினால் காட்டிக் கொண்டிருக்கிறவர் மஹாவிஷ்ணு. அந்த ஞான அக்னியில் லோகமெல்லாம் கரியாகிறது. ஒரு வஸ்து அடியோடு நீற்றுப் போய்விடாமல் தன் ரூபத்தோடேயே, ஆனால் வர்ணத்தை இழந்து, கரிக்கட்டையயாக நிற்கிற நிலை இது! லோகம் என்று ஒன்று இருக்கவும் இருக்கிறது; ஆனால் அதன் தனி குணம் – மாயை – எரிந்து, கரிந்து அதுவம் விஷ்ணு மயமே என்று தெரிகிறது: ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்! கரியான், நீலமேனியான் என்றெல்லாம் விஷ்ணுவைச் சொல்கிறோம். நீலம், கறுப்பு, வயலெட் எல்லாம் கிட்டக் கிட்ட இருக்கிற வர்ணங்கள். பரமாத்மா முத்தொழிலுக்காக ஒரு முப்பட்டை லாந்தர் மாதிரி இருக்கிறபோது நீலப்பட்டை வழியாக உள்ளேயிருக்கிற ஒளி வருகிறபோது அதை விஷ்ணு என்கிறோம்.

முப்பட்டை லாந்தரில் மூன்றாவது பக்கம் கண்ணாடிக்குக் கலர் பூசாமல் உள்ளபடியே விட்டிருக்கிறது. ஞானத்தில் எல்லாம் எரிகிறபோது முதலில் கரிக்கட்டையாக ஆயிற்று. அந்தக் கரியையும் எரித்தால் எல்லாம் சாம்பலாகி விடுகிறது. ரூபம் என்பதே இல்லாமல் நீற்றுப் பொடியாகி விடுகிறது. இப்போது நிறமும் மாறிக் கறுப்பு அத்தனையும் வெள்ளை வெளேர் என்று ஆகிவிடுகிறது. வெளுப்பு சுத்த வெளிச்சத்துக்கு ரொம்பக் கிட்டின வர்ணம். அந்த வெளிச்சத்திலிருந்து வந்த எல்லாக் கலர்களும் – அதாவது பரமாத்மாவிடமிருந்து உண்டான சகல பிரபஞ்ச வியாபாரங்களும் – அடியோடு அடிபட்டு நீற்றுப் போய், அந்தப் பரமாத்மா மட்டுமே மிஞ்சி நிற்கிற நிலை இது. நிற்பது – நீறு. எல்லாம் போனாலும் நிலைத்து

நிற்கிற நிலை இது. 'மஹா பஸ்மம்' என்கிற பரமேச்வரன் அதுதான். ஸம்ஹாரம் என்கிற பேரில் எல்லாவற்றையும் அழிக்கிற போது அது கொடூரமான காரியமாகத் தோன்றினாலும், அழிப்போடு நிற்காமல், ஆதாரமான சத்தியத்தில் சேர்க்கிற பரம காருண்யமான தொழிலைத்தான் சிவபெருமான் செய்கிறார். விஷ்ணு, லீலையோடு சேர்த்துச் சேர்த்து ஞானத்தைத் தந்தபோது, நானா தினுசான (ஸர்வம்) லோகம் (ஜகத்) என்பது ஒரு கரிக்கட்டை மாதிரி பார்வைக்குத் தெரிந்தது. அதனால்தான் 'ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்' என்றது. இப்போது லீலை எல்லாம் முடிந்து ஸம்ஹாரம் என்ற பரம ஞான நிலை வந்திருக்கிறபோது ஸர்வமும் இல்லை, ஜகத்தும் இல்லை. அதனால்தான் 'சிவமயம்' என்று மட்டும் சொல்கிறோம்.

ஒரே விளக்குத்தான் – பிரம்ம சைதன்யம். அதுவே சிவப்புப்பட்டை வழியாகத் தெரியும்போது பிரம்மா எனப்படுகிறது; நீலப்பட்டை வழியாகப் பார்க்கிறபோது அதுவே விஷ்ணு; வர்ணம் பூசாத ட்ரான்ஸ்பாரன்ட் வெளுப்புக் கண்ணாடி மூலம் பார்த்தால் அதுவே சிவன்.

"ஒருருவே மூவுருவாய்" என்றுதான் நம் பெரியவர்கள் பாடி வைத்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட ஃபிலாஸபியைத்தான் சொல்ல வேண்டும், ஒரு சித்தாந்தத்தைத்தான் நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணங்கள் இல்லாமல் திறந்த மனஸோடு, விசாலமான பார்வையோடு தங்களுக்குத் தோன்றிய சத்தியங்களையே சொல்லிக் கொண்டு போன மகாகவிகள் எல்லோரும் ஒரே வஸ்துதான் மும்மூர்த்திகளாக, முப்பத்து முக்கோடி தேவதைகளாக ஆகியிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். பாணன் "ஸர்க-ஸ்திதி-நாச ஹேதவே" (ஸர்கம் என்றால் ஸ்ருஷ்டி) என்று ஒரே வஸ்துவை மூன்று தொழிலுக்காக மூன்றானதாகச் சொல்கிறான். காளிதாஸனும் ஸ்பஷ்டமாக, "ஏக ஏவ மூர்த்தி: பிபிதே த்ரிதாஸா" – ஒன்றுதான் பரமாத்மா; அது முத்தொழிலுக்காக மூன்றாகப் பிரிந்தது என்கிறான்.

"பதினெண் புராணங்கள்" என்பனவற்றில் சைவமானவைதான் பிரமாணமுடையவை, வைஷ்ணவமானவை தான்

பிரமாணமுடையவை என்று கட்சி கட்டினால், கட்சி தான் நிற்குமே ஒழிய, சண்டைதான் மிஞ்சுமே தவிர, தெளிவு உண்டாகாது; சாந்தி பிறக்காது. 'ஒன்று ஸத்; அதைத்தான் ஞானிகள் பல பேரில் சொல்கிறார்கள்' என்கிற வேத வாக்கியத்துக்கு அதிகமாக நமக்கு பிரமாணம் இல்லை.

ஆகையால் சைவ வைஷ்ணவ பேதபாவங்கள் இல்லாமல், எல்லோரும் அன்போடு கூடி சகல தெய்வங்களையும் பற்றிய விருத்தாந்தங்களை சிரவணம் செய்து சிரேயஸை அடைய வேண்டும்.

திருவிசநல்லூர் அய்யாவாள் என்று ஒரு மஹான் இருந்தார். ஸ்ரீதர வேங்கடேச்வரர் என்பது அவர் பெயர். ஆனால் அவர் இருந்த ஊரை மட்டும் சொல்லி, பேரைச் சொல்லாமல் 'திருவிசநல்லூர் அய்யாவாள்' என்றே ஸகல ஜனங்களும் மரியாதையோடு குறிப்பிடுவார்கள். சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன் இருந்தவர். பகவந்நாம போதேந்திராளின் மூத்த 'கான்டெம்பரரி' [சமகாலத்தவர்] . போதேந்திராள் விசேஷமாக ராம நாமாவையும், கோவிந்த நாமாவையும் பிரசாரம் செய்து வந்தார். அதே சமயத்தில் அய்யாவாள் சிவ நாமாவின் மகிமையைப் பரப்பி வந்தார். இரண்டு பேருக்குமே சைவ வைஷ்ணவ பேதம் கிடையாது. அதனால் இருவருமே சேர்ந்துகூடத் திருவிசநல்லூரில் நாம ஸித்தாந்தத்தைப் பிரசாரம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்குள் பரஸ்பரம் அன்பும் மரியாதையும் இருந்தன. கலிகாலத்தில் கைகண்ட மருந்து எனப்படும் நாமத்தின் பிரபாவத்தை இரண்டு பேருமே நிலைநாட்டினார்கள். பஜனை சம்பிரதாயத்தில் இவர்களைத்தான் முக்கியமான ஆசார்யர்களாக ஸ்தோத்திரம் செய்து விட்டு அப்புறம் மற்ற தெய்வபரமான நாமாவளிகள் சொல்வது வழக்கம். முதலில் போதேந்திராளைப் பற்றியும், அப்புறம் அய்யாவாளைப் பற்றியும், குருவந்தனம் சொல்லிவிட்டுத்தான் பஜனை செய்வார்கள்.

அய்யாவாள் ஒரு சிராத்த தினத்தன்று பஞ்சமனுக்கு போஜனம் பண்ணி வைத்தார் என்பதற்குப் பிராயச்சித்தமாக அவர் கங்கா ஸ்நானம் செய்து வரவேண்டும் என்று நாட்டாண்மைக்காரர்கள் தீர்ப்பு பண்ண, அவர் தம் வீட்டுக் கிணற்றிலேயே கங்கையைப்

பொங்கவைத்தார் என்ற விஷயம் அநேகமாக எல்லாருக்கும் தெரிந்திருக்கும். இப்படி கங்கை வந்தது ஒரு கார்த்திகை அமாவாஸையில். இப்போதும் அந்தப் புண்ய தினத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் திருவிசநல்லூர் அந்தக் கிணற்று ஜலத்தில் ஸ்நானம் செய்தால் கங்கா ஸ்நான பலன் கிடைக்கும் என்று நம்பிச் செய்து வருகிறார்கள்.

அய்யாவாள், ஸீதா கல்யாணத்துக்கு முன்னால் ஸ்ரீராம சந்திர மூர்த்தி சிவதநுஸை ஒடித்த விஷயத்தை ஓர் இடத்தில் சொல்லியிருக்கிறார். அங்கே "ஸ்வகர ப்ரதிபாடித ஸ்வசாப:" என்கிறார். அதாவது, தன் கையாலேயே தன் வில்லை ஒடித்துக் கொண்டார் என்கிறார். 'சிவதநுஸ் ஏற்கெனவே நாராயணனால் விரிசல் ஆக்கப்பட்டது. அப்புறம் நாராயணன் ஸ்ரீராமனாக வந்து அதை நன்றாக ஒடித்தே போட்டு விட்டார்' என்பதாக இந்த தநுர்பங்க சமாசாரத்தை வைத்து ஈச்வரனத் தாழ்த்தி பேசுவது நீண்ட காலமாக வந்த ஒரு வாதம். ஆனால் ஸமரஸமாக பார்த்த அய்யாவாளுக்கோ, சிவ விஷ்ணு பேதமே தெரியவில்லை. 'சிவனேதான் விஷ்ணு; விஷ்ணுவேதான் ராமன். ஆகையினால் ராமனும் சிவனும் ஒன்றுதான். சிவதநுஸ் என்றால் அதுவேதான் ராம தநுஸும்! தன் கையால் தன் வில்லையே முறித்துப் போட்டார்! அவருடைய லீலைக்கு இதெல்லாம் வேண்டியிருக்கிறது! என்று எழுதிவிட்டார்.

வழிகள் பல; குறிக்கோள் ஒன்றே

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

வழிகள் பல; குறிக்கோள் ஒன்றே

ஆழ்வார்கள் விஷ்ணுபரமாகப் பாடி வைத்திருக்கிறார்கள். நால்வர் சிவபரமாகப் பாடினார்கள். வேதத்தில் ஸகல தெய்வங்களையும் ஒரே மாதிரி ஸ்தோத்திரம் செய்திருக்கிறது. உபநிஷத்து என்று போனால், அங்கே தெய்வங்களைப் பற்றி அதிகம் பேச்சில்லாமல் எல்லாம் ஆத்ம தத்துவமாகச் சொல்லியிருக்கிறது. இங்கே திருவள்ளுவரை எடுத்துக் கொண்டால் அவர் தெய்வம், தத்வம் இவைகளைப் பற்றி வைதிக

சம்பிரதாயப்படியே சொல்லியிருந்தாலும், அதை விட ரொம்ப அதிகமாக தர்மங்கள், நன்னெறிகள் (Morals, ethics) இவற்றையே சொல்கிறார். இன்னொரு பக்கம் திருமூலரைப் பார்த்தால் அங்கே ஸ்வாமி பக்தி என்பதை விடப் பிராணாயாமம், தியானம், தாரணை, ஸமாதி இத்யாதி யோக சமாச்சாரங்கள்தான் நிறைய வருகின்றன. 'இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொன்றைச் சொன்னால் எதை எடுத்துக் கொள்வது?' என்றால் எதை எடுத்துக் கொண்டாலும் தப்பில்லை. நாம் எடுத்துக் கொண்டதை நடுவிலே விடாமல், அதையே நம்பிக்கையோடு பிடித்துக் கொண்டு போய்க் கொண்டேயிருந்தால் முடிவில் எது பரமார்த்த சத்தியமோ அதையே அடைந்து விடுவோம். ஆரம்பத்தில் இவை வேறு வேறு வழிகளாகத் தோன்றினாலும், முடிவில் எல்லாம் கொண்டு சேர்க்கிற இடம் ஒன்றுதான்.

தேவர் குறளும் திருநான்மறை முடிவும்

மூவர் தமிழும் முனிமொழியும் – கோவை

திருவாசகமும் திருமூலர் சொல்லும்

ஒரு வாசகம் என்(று) உணர்

இதே மாதிரி 'சிவமஹிம்ன ஸ்தோத்திர'த்திலும் சொல்லியிருக்கிறது. புஷ்ப தந்தர் என்ற மகான் – கந்தர்வராக இருந்து ஈச்வர சாபத்தால் பூமியில் விழுந்தவர் என்று சொல்வார்கள் – பரமேச்வரன் மகிமைகளைப் பற்றிச் சொல்கிற ஸ்தோத்திரம் அது. அதிலே ஒரு ச்லோகத்தில், 'த்ரயீ (வேதம்), ஸாங்கியம் (தத்வ ஆராய்ச்சி), யோகம், பசுபதி மதம், வைஷ்ணவம் என்பதெல்லாம் அவரவரின் ருசி விசித்திரத்தைப் பொறுத்து ஒரே பரமாத்ம தத்வத்தில் கொண்டு சேர்க்க ஏற்பட்டவைதான் – எந்த நதியானாலும் ஒரே சமுத்திரத்தில் போய் விழுகிற மாதிரி! என்று சொல்லியிருக்கிறது.

இங்கிலீஷ்காரர்கள் இதே ஸமரஸ திருஷ்டியில்தான் 'Jehovah, Jove or Lord' என்கிறார்கள். பைபிள் தோன்றிய இஸ்ரேல் பிரதேசங்களில் இருந்த ஹீப்ரு, ஸெமிடிக் மத ஸ்வாமிதான் ஜெஹோவா. கிரீஸ் முதலான தேசங்களில் இருந்த ஹெல்லெனிக் மதத்தின் கடவுள் 'ஜவ்'.

ஜூபிடரின் இன்னொரு பெயர்தான் ஜவ். 'லார்ட்'- பிரபு – என்பது பொதுவாக எல்லா மதத்திலும் ஈச்வரனுக்குச் சொல்கிற பேர். பேர் வேறாயிருந்தாலும் ஆசாமி ஒருத்தனேதான் என்று வெள்ளைக்கார தேசத்து அநுபவிகளும் சொல்லியிருக்கிறார்கள்.

புராணங்களைப் பணிவோடு, மரியாதையோடு, அதனால் பயனடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு படித்தால் குழப்பம் எதுவும் உண்டாகாது. நம்முடைய க்ஷேமத்துக்காகவே ஏற்பட்டவைதான் அவை என்ற நல்லறிவு பெறுவோம். கொஞ்சம் கூட்டிக் குறைத்துச் சொல்லியிருந்தாலும் அதுவுங்கூட நல்ல உத்தேசத்துடன்தான் என்று புரிந்து கொள்வோம்.

புராணத்தை போதித்தவர்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

புராணத்தை போதித்தவர்

இந்தப் புராணங்களை ஈச்வரனே தேவிக்குச் சொல்வதாக அல்லது விஷ்ணுவுக்குச் சொல்வதாக, அல்லது விஷ்ணுவோ ப்ரம்மாவோ நாரதருக்கோ அல்லது ஒரு ரிஷிக்கோ சொல்வதாக அவற்றில் சொல்லியிருக்கும். அப்படி தெய்வங்களே சொன்ன கதைகளை அப்புறம் ஒரு ரிஷிக்கோ ராஜாவுக்கோ இன்னொரு ரிஷி சொன்னார் என்று சொல்லிக் கொண்டு போய்க் கடைசியில் இவற்றை வியாஸர் ஸூதருக்கு உபதேசிக்க ஸூதர் நைமிசாரண்யத்திலுள்ள ரிஷிகளுக்குச் சொன்னார் என்று முடித்திருக்கும்.

நைமிசாரண்யத்து ரிஷிகள் அப்பிராம்மணரான ஸூதருக்கு உயர்ந்த ஆஸனமளித்து உட்கார வைத்து மரியாதை பண்ணி அவரிடமிருந்து புராண சிரவணம் பண்ணினார்கள். இதிலிருந்தே புராணங்களுக்குள் மதிப்புத் தெரிகறது. அதோடுகூட, பிறப்பைவிட அறிவுக்குத்தான் மதிப்புத் தந்தார்கள் என்றும் தெரிகிறது. உயர்ந்த விஷயத்தை எந்த ஜாதியார் சொன்னாலும் மரியாதையோடு கேட்டுக் கொண்டார்கள் என்று தெரிகிறது.

நண்பனாகப் பேசுவது

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

நண்பனாகப் பேசுவது

ஒரு நல்ல காரியம் நடக்க வேண்டுமானால் அதை மூன்று தினுசுகளில் நடக்குமாறு பண்ணலாம். ராஜாங்கம் உத்தரவு போடுகிறது போலக் கட்டளை செய்வது ஒன்று. இதற்கு 'ப்ரபு ஸம்மிதை' என்று பெயர். பிரபுவான யஜமானன் வேலைக்காரனுக்கு ஆர்டர் பண்ணுவது போலச் சொல்வது பிரபு ஸம்மிதை. பண்ணா விட்டால் தண்டனை உண்டேயென்று, பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் பயத்தோடு கட்டளைப் பிரகாரம் காரியத்தைப் பண்ணியாக வேண்டும். இப்படி அதிகார ஸ்தானத்திலிருந்து கொண்டு உத்தரவாகப் போடாமல் ஒரு சினேகிதன் நம்மிடம் ஒரு காரியத்தைச் செய்யச் சொன்னாலும் செய்கிறோம். இங்கே பயம் இல்லை. அன்பாலேயே செய்கிறோம். நமக்கு நல்லதையே நினைக்கும் சிநேகிதன் அவன் என்ற நம்பிக்கை இருப்பதால் செய்கிறோம். இப்படி நம்மிடம் நல்ல மனஸ் உள்ள சிநேகிதனுக்கு 'ஸுஹ்ருத்' என்று பெயர். அதனால் நம் ஸகா மாதிரியான ஸ்தானத்திலிருந்து கொண்டு நம்மை நல்ல காரியத்தில் ஏவுவது "ஸுஹ்ருத் ஸம்ஹிதை". இதை விடவும் சுலபமாகக் காரியத்தைச் சாதித்துத் தர வல்லது எது என்றால் பத்தினியின் பிரிய வசனம்தான். யஜமானனின் உத்தரவு பாரமாக இருக்கிறது என்றால், அதையே சிநேகிதன் சொல்லும்போது லகுவாகிறது. இதைவிடவும் லேசாகி விடும், அதையே பத்தினி சொல்கிறபோது. இது மாதிரி ரம்யமாக ஒன்றைச் சொல்லியே செய்யப் பண்ணுவது 'காந்தா ஸம்மிதை' எனப்படும். காந்தா என்றால் பத்தினி.

வேதம் பிரபு ஸம்மிதை, புராணங்கள் ஸுஹ்ருத் ஸம்மிதை, காவியங்கள் காந்தா ஸம்மிதை என்று சொல்வதுண்டு.

யத் வேதாத் ப்ரபு ஸம்மிதாத் அதிகதம் சப்த ப்ராமாணாத் சிரம்

யத் ச அர்த்த ப்ரவணாத் புராண வசனாதிஷ்டம் ஸுஹ்ருத் ஸம்மிதாத்|
காந்தா ஸம்மிதயா யயா ஸரஸதாம் ஆபாத்ய காவ்யச்ரியா
கர்த்தவ்யே குதுகீ புதோ விரசிதஸ் தஸ்யை ஸ்ப்ருஹாம் குர்மஹே||

(வித்யாநாதரின் "பிரதாபருத்ரீயம்"–ச்லோ.8)

"இப்படிச் செய். அப்படிச் செய்" என்று மட்டும் வேதம் சொல்கிறது. ஏன் என்று காரணம் சொல்லாது. காரணம் கேட்டாலே நாம் வேதத்தை அவமரியாதை பண்ணுகிறோம் என்று வேறு சொல்கிறார்கள்! புராணம் என்ன பண்ணுகிறது? "அப்பா, இப்படி செய்வதால் இந்த நண்மை உண்டாகிறது. வேறு தினுசில் செய்வதால் இம்மாதிரியான கெடுதல் உண்டாகிறது" – என்று கதை மூலம் காரணம் சொல்கிறது. காரணம் சொல்வது மட்டும் புராணத்தின் விசேஷமில்லை. அந்தக் காரணத்தை நமக்கு ஸ்வாரஸ்யமாக இருக்கிற கதைகளின் மூலமாகச் சொல்லி நாம் அதை விரும்பிக் கேட்கும்படி பண்ணுவதே புராணத்தின் விசேஷம். 'ஹரிச்சந்திரன் இப்படித்தான் செய்தான். நளன் இப்படித்தான் செய்தான். இன்னும் இன்னின்ன பெரியவர்கள் இப்படியிப்படிச் செய்தார்கள். அதனால்தான் நடுவிலே அவர்களுக்கு எத்தனை கஷ்டங்கள், சோதனைகள் வந்தாலும், கடைசியில் பரம க்ஷேமமும், இன்றைக்கு நாமும் இன்னம் லோகம் உள்ளளவும் ஜனங்கள் அவர்களை மரியாதை பண்ணும்படியான சாச்வத கீர்த்தியும் உண்டாயிற்று. இதற்கு மாறாக ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு, ராவணன், துரியோதனன் போன்றவர்கள் செய்தார்கள். தாற்காலிமாக அவர்கள் பெரிய ஸ்தானத்தைப் பெற்று ஸந்தோஷம் அடைந்தாலும், கடைசியில் நாசமாகி, உலகம் உள்ளளவும் அபகீர்த்திக்கு ஆளாகியிருக்கிறார்கள்' என்று எடுத்துக்காட்டி நம்மை நல்லவற்றில் தூண்டுகிறது; கெட்டவற்றிலிருந்து தடுக்கிறது. வாஸ்தவத்தில் நடந்த கதைகளைத்தான் புராணம் சொல்கிறது. ஸுஹ்ருத்தான சிநேகிதனும் உண்மைக்கு மாறாகப் பேசாமலேதான், ஆனாலும் நம் மனஸ் ஏற்கிற விதத்தில் நல்லதைச் சொல்வான்.

காவியம் என்ன செய்கிறது? கவி என்ன செய்கிறான்? அவன் யதார்த்த உண்மையிலே தன் கற்பனையையும் நிறைய கூட்டிக் கொள்கிறான். கல்பனா சக்தியாலேயே கதைகளைக்கட்டி விடுகிறான். ஒன்றை மிகைபடச் சொல்கிறான், இன்னொன்றை குறைபடச் சொல்கிறான். வேறொரு விஷயத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்கிறான் (கூறியது கூறல்) . இதை எல்லாம் செய்வதற்கு அவனுக்கு 'ரைட்' கொடுத்திருக்கிறது. யதார்த்தத்துக்கு கண், காது, மூக்கு வைத்து ஜோடனை பண்ணி அனைவரும் ரசிக்கும்படியாகச் செய்வதே கவியின் காரியம். ஸுஹ்ருத் (நண்பன்) போல் உள்ளதை உள்ளபடி மட்டும் சொல்லாமல், புருஷன் நல்ல வழியில் போக வேண்டுமென்பதற்காகக் காந்தாவானவள் கூட்டியும், குறைத்தும், மாற்றியும் கூடப் பேசி அவனுக்கு ஹிதமாக இருக்கும்படியாக 'நைஸ்' பண்ணி விஷயங்களைச் சொல்லி அவனை சரி பண்ணுவள் என்பது ஐதிஹ்யம். இந்தக் காந்தாவின் ஸ்தானத்தில் காவியமும், பிரபுவின் ஸ்தானத்தில் வேதமும், இரண்டிற்கும் நடுவான ஸுஹ்ருத்தின் ஸ்தானத்தில் புராணங்களும் இருந்து கொண்டு நமக்கு தர்மங்களைச் சொல்கின்றன.

உபந்நியாஸமும் திரைப்படமும்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

உபந்யாஸமும் திரைப்படமும்

முன்னாளில் தாயார் விடிய நாலு நாழிகளையிருக்கும் போதே எழுந்திருந்து வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் போதே – சாணி தெளிப்பது, கோலம் போடுவது, தயிர் சிலுப்புவது முதலான காரியங்களைச் செய்யும் போதே – புராணங்களில் வரும் புண்ணியமான கதைகளைப் பாட்டாகப் பாடிக்கொண்டிருப்பாள். குழந்தைகள் அதைக் கேட்டுக் கேட்டே புராணக் கதைகளைத் தெரிந்து கொண்டார்கள். தர்மங்களை ஜீவனுள்ள கதாபாத்திரங்களில் குழைத்துக் கொடுப்பதால் அவை இளம் உள்ளங்களில் ஆழப் பதிந்துவிடும். இதையே பிற்பாடு பௌராணிகர்கள் சொல்லக் கேட்டும்,

தாங்களே மூல நூலைப் படித்தும் விவரமாகத் தெரிந்து கொண்டார்கள். இதெல்லாம் முற்கால ஸம்பிரதாயங்கள்.

இப்போது இந்த நல்ல வழக்கங்கள் போய்விட்டன. ஸினிமாப் பாட்டு, பாலிடிக்ஸ், நாவல், பத்திரிக்கைகள் இவைதான் சின்ன வயஸிலிருந்தே எல்லாரையும் இழுக்கும்படியாக ஏற்பட்டிருக்கிறது. இப்போதும் ஸினிமா – டிராமாக்களில் புராணக் கதைகளையும் நடிப்பதால் அந்த அளவுக்குக் கொஞ்சம் புராண ஞானம் உண்டாகலாம். ஆனால் இது ஸரியான ஞானமாக இருக்குமா என்பது ஸந்தேஹம். புராணப் படத்தைப் பார்த்தாலுங்கூட நல்லதை விட அதிகமாகக் கெட்டதே வந்து சேரும்படி இருக்கலாம். ஏனென்றால் புராணக் கதையை ஸினிமாவாகவோ டிராமாவாகவோ ஆக்குகிறபோது அதை எத்தனைக்கெத்தனை ஜன ரஞ்ஜகமாகப் பண்ணலாம் என்றுதான் பார்ப்பார்கள். இதனால் காந்தா ஸம்மிதத்துக்கு நல்லதை வலியுறுத்துவதற்காகவே தரப்பட்ட சுதந்திரத்தைத் தப்பாகப் பிரயோஜனப்படுத்திக் கொண்டு மூலக் கதையை ரொம்ப சிதைத்து விடுகிற ஹேது அதிகமிருக்கிறது.

டிராமா, ஸினிமாவில் இன்னொரு கெடுதல், இவைகளைப் பார்க்கப் போகிறவர்கள் உத்தமமான கதாபாத்திரங்களின் குணங்களை கிரஹித்துக் கொள்வதற்குப் பதில் அந்த வேஷம் போட்டுக் கொள்ளும் நடிகருடைய குணங்களையே கிரஹித்துக் கொள்ளுவது!

நல்ல நடத்தையோடு கூடியவர்களாகவும், புராணம் சொல்கிற தத்வங்களில் ஈடுபாடு உள்ளவர்களாகவும், அதிலே வரும் உத்தம புருஷர்களின் குணங்களில் தோய்ந்தவர்களாகவும் இருக்கப்பட்ட பெரியவர்கள் செய்கிற புராணப் பிரவசனத்தைக் கேட்டால்தான் கேட்பவர்களுக்கும் அதிலுள்ள தர்மங்கள், அதில் வருபவர்களின் ஸத்குணங்கள் இவற்றை கிரஹித்துக் கொள்ள முடியும். பணம், புகழ் இவற்றையே நினைப்பவர்களாகவும், தாம் சொல்கிற விஷயங்களைத் தாமே அனுஷ்டானத்துக்கு எடுத்துக் கொள்ளாதவரகாகவும் இருக்கிற பௌராணிகர் பண்ணும் உபந்நியாஸமும் டிராமா, ஸினிமா போலத்தான். நல்ல பலனைத் தராது. சாஸ்திரத்தில் சொன்ன நாடக தர்மப்படி இருந்தால் டிராமாவும், சினிமாவும் கூட நல்லதைச்

செய்யமுடியும். நிஜ வாழ்க்கையில் புருஷன் பெண்டாட்டியாக இருப்பவர்கள் தான் நாடகத்திலும் ஸதி-பதியாக வரலாம்; ச்ருங்காரக் காட்சியில் இப்படியிப்படியான கட்டுப்பாடுகள் வேண்டும் என்று நாடக சாஸ்திரத்தில் இருக்கிறது.

தினமுமே இப்பொழுதெல்லாம் பட்டணங்களில் நிறைய உபந்நியாஸங்கள் நடக்கின்றன. நியூஸ் பேப்பரில் 'எங்கேஜ்மென்ட் கால'த்தைப் பார்த்தால் எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. நான்கூடக் கேள்விப்படாத மத விஷயங்கள், கதை, புராணங்களில் உபந்நியாஸங்கள் நடக்கின்றன. ஜனங்களும் கூட்டம் கூட்டமாக இவற்றுக்குப் போகிறார்கள். ரொம்பவும் நாகரிகமான வழியில் இருக்கப்பட்டவர்கள், படித்த யுவர்கள் யுவதிகள்கூட இவற்றுக்கு வருகிறார்கள் என்று தெரிகிறது. நடுவாந்தரத்தில் இருந்த நிலையோடு பார்க்கும்போது இதை ஒரு 'ரினையஸான்ஸ்' (மறுமலர்ச்சி) என்று கூடச் சொல்லத் தோன்றுகிறது.

ஆனால் இதிலே முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, பௌராணிகர்கள் எந்த அளவுக்கு ரஸாபாஸம் உண்டாக்காமல் கதை சொல்கிறார்கள் என்பதுதான். ஏதோ கொஞ்சம் பாலிடிக்ஸ், ஹாஸ்யம், உபகதைகள் வந்தால் பரவாயில்லைதான். ஆனால் இதுகளே கதையை, அதன் தத்வார்த்தத்தை அடித்துக் கொண்டு போகிற மாதிரி செய்து விட்டால் அது ரஸாபாஸம். பகவான் நினைவை உண்டாக்குவதுதான் ரஸம். அதையும் அந்தப் புராணத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம், அதை விட்டு ரொம்பவும் வெளியே ஓடிவிடாமல், மனஸில் பதிகிற மாதிரி சொல்ல வேண்டும். இதற்கு முக்கியமாக ஸ்வாநுபூதி இருக்க வேண்டும். கதை சொல்கிறவருக்கே ஆஸ்திக்யம், ஆசாரங்கள், தெய்வ பக்தி, தாம் சொல்கிறதில் மனமார்ந்த நம்பிக்கை எல்லாம் இருக்க வேண்டும். அவரே விஷயத்தில் (சப்ஜெக்டில்) தோய்ந்தவராக இருந்துவிட்டால், வேண்டாத கதைகள், பாலிடிக்ஸில் போவதற்கு அவருக்கே மனசு வராது. ஸினிமா, நாவலுக்குப் பதில் அதே மாதிரி இன்னொரு பொழுதுபோக்கைப்போலப் புராணப் பிரவசனமும் ஆகிவிட்டால் அதில் ஒரு பிரயோஜனமும் இல்லை.

பட்டணங்களில் உள்ளது போல சின்ன ஊர்களிலும் கிராமங்களிலும் இவ்வளவு உபந்நியாஸங்கள், பஜனைகள், ஆஸ்திக ஸங்கங்களைப் பார்க்க முடியவில்லை. ரொம்பவும் நாகரிகம் முற்றிய இடத்திலேயே, 'ஆக்ஷ'னுக்கு ஸமமாக 'ரியாக்ஷ'னும் இருக்கும் என்ற 'நியூடன் Law'ப்படி அதற்கு மாற்றாக, இம்மாதிரி ஸத் விஷயங்களும் வளர்ந்து வருகின்றன. எல்லா இடத்திலும், கிராமங்களிலும்கூட, இப்படி நடக்க வேண்டும். எந்த இடமானாலும் ஏகாதசியன்று பக்திக்காகவும் தர்மத்துக்காகவும் என்றே புராண படனமும் (படிப்பதும்) சிரவணமும் (கேட்பதும்) நடக்க வேண்டும்.

ஸ்தல புராணங்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

ஸ்தல புராணங்கள்

புராணங்களை நம்புகிறவர்கள் கூட 'ஸ்தல புராணங்கள்' என்று ஊருக்கு ஊர் சின்னதாக இருக்கிறவற்றை நம்புவதற்கு யோஜிக்கிறார்கள். படிப்பாளிகள் எல்லாப் புராணமுமே பொய்யென்றால், ஸ்தல புராணம் வெறும் குப்பை என்று சொல்லும் அளவுக்குப் போய் விடுகிறார்கள். என்ன காரணம் என்றால் அநேக ஸ்தல புராணங்களில் ஒவ்வொன்றிலும், 'இங்கேதான் இந்திரனுக்கு சாப விமோசனம் ஆயிற்று', 'இங்கேதான் அகஸ்தியர் பார்வதி-பரமேச்வராள் திருக்கல்யாணக் காட்சியைப் பார்த்தார்' என்று இருக்கிறது. 'இது எப்படி ஸாத்தியம்? அவரவரும் தங்கள் ஊரை உயர்த்திச் சொல்ல வேண்டுமென்பதற்காக இட்டுக் கட்டி வைத்திருக்கிறார்கள்' என்று சொல்கிறார்கள்.

இதைப் பற்றி விஷயம் தெரிந்த ஆஸ்திகர்களைக் கேட்டால், 'கல்பத்துக்குக் கல்பம் அதே கதைகள் திரும்பவும் நடக்கிறது. அதை கதை நடந்தாலும் ஒரே அச்சாக இல்லாமல் கொஞ்சம் கொஞ்சம் பேதமும் இருக்கும். ஒரு கல்பத்தில் ஒரு ஸ்தலத்தில் நடந்த கதை இன்னொரு கல்பத்தில் இன்னொரு ஸ்தலத்தில் நடக்கிறது.

அதனால்தான் அநேக ஸ்தலங்களில் ஒரே புராணக் கதை நடந்ததாகச் சொல்லப்படுகிறது' என்கிறார்கள்.

இதை ஒத்துக் கொள்ள முடியாதவர்களுங்கூட, ஒவ்வொரு ஊர்க்காரர்களுக்கும் புராணங்களில் வரும் புண்ணிய சம்பவங்கள் தங்கள் ஊரில் நடந்ததாக சொல்லிக் கொள்வதில் ஒரு பெருமை இருக்கிறதென்று நல்ல முறையில்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். பாமர ஜனங்கள் தங்கள் ஊருக்கே ராமர் வந்தார், கிருஷ்ணன் வந்தார், மஹரிஷிகள் வந்தார்கள், அங்கே மஹா கொடூரமான பாவங்களுக்கு விமோசனம் கிடைத்தது என்ற நம்பிக்கையைப் பெற்றதால் அந்த கோவில்களுக்குப் போவதிலும் உத்ஸவங்கள் நடத்துவதிலும் உத்ஸாஹம் அடைந்து, நல்ல பக்தி சிரத்தைகளைப் பெற்றிருக்கிறார்களா, இல்லையா? இதைத்தான் நாம் கவனிக்க வேண்டும். 'புத்திசாலி'களான நம்முடைய சந்தேகங்கள் இல்லாமல் அந்த எளிய ஜனங்கள் பெறும் நிறைவை ஏன் குலைக்க வேண்டும்? இந்த மாதிரி விஷயங்களில் உண்மை என்பதாக ஏதோ ஒரு யதார்த்தத்தை (fact) சொல்லி, அதனால் சாமான்ய ஜனங்கள் பெறும் திருப்தியைக் கெடுத்து அவர்களுக்கு புத்திக் கலக்கத்தை உண்டாக்கக் கூடாது. பகவானே கீதையில் சொல்கிறார்:

ந புத்திபேதம் ஜனயேத் அக்ஞானாம் கர்ம ஸங்கினாம்|

இப்படிச் சொல்வதால் ஸ்தல புராணங்கள் யதார்த்தமான சத்தியத்தைச் சொல்லவில்லை என்கிற கோஷ்டியோடு நான் சேர்ந்துவிட்டதாகவும், ஆனாலும் அதனால்கூடப் பொதுஜனங்களிடம் நல்ல விளைவை ஏற்படுத்த முடிகிறது என்பதற்காகத்தான் அவற்றை அங்கீகரிக்க வேண்டும் என்று சொல்வதாகவும் நினைத்துவிடக் கூடாது. பெரும்பாலான ஸ்தல புராணங்கள் உண்மையான விருத்தாந்தங்களைத்தான் சொல்கின்றன – என்பதே என் நம்பிக்கை. சிலது வேறு தினுஸாக இருக்கலாம். அப்படி இருந்தாலும் இருந்து விட்டுப் போகட்டும் என்றுதான் சொல்கிறேன். எல்லா ஸ்தலப் புராணமுமே பொய்யென்று நான் சொல்ல வரவில்லை.

ஸ்தல புராணங்களின் ஸத்தியத்வம்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

ஸ்தல புராணங்களின் ஸத்தியத்வம்

வேதத்தில் என்ன சொல்லியிருந்தாலும் அது ஸத்தியம் என்று நம்ப வேண்டும் என்பது போல, சைவ – வைஷ்ணவங்களுக்குத் தமிழ் வேதமாக உள்ள தேவார-திவ்யப்ரபந்தங்களில் சொல்லியிருப்பதை நாம் உண்மையென்று ஒப்புக் கொள்ள வேண்டும். அநேக க்ஷேத்ரங்களில் பாடப்பெற்ற தேவாரங்களிலும் ஆழ்வார்களின் பாசுரங்களிலும் அந்தந்த ஸ்தல புராண விஷயங்கள் வருகின்றன. 1500 வருஷத்துக்கு முந்திய இந்த தேவார – திவ்யப்ரபந்தங்களிலேயே ஸ்தல புராணக் குறிப்புகள் இருப்பது அந்தப் புராணங்களின் பழமைக்குச் சான்றாக இருக்கிறது.

உதாரணமாக ஸ்ரீரங்கத்திலே பெருமாள் வேறு எந்த ஊரிலும் இல்லாத மாதிரி தெற்கே பார்த்துக் கொண்டிருக்கிறார். இதற்கு அந்த க்ஷேத்ர புராணத்தில் காரணம் சொல்லியிருக்கிறது. ஸ்ரீ ராமசந்திர மூர்த்திக்குப் பட்டாபிஷேகம் ஆனபிறகு விபீஷணன் லங்கைக்குத் திரும்பிப் போனபோது, ராமர் தாம் வழிபட்டு வந்த ரங்கநாத விக்ரஹத்தை அவனுக்கு கொடுத்தாரென்றும் அதுதான் ஒரு காரணத்தால் அவன் போகிறவழியில் உபயகாவேரிக்கு நடுவே ஸ்ரீரங்கத்தில் பிரதிஷ்டையாகி விட்டதென்றும், தன்னோடு லங்காபுரிக்கு எடுத்துப்போக முடியவில்லையே என்று துக்கப்பட்ட விபீஷணனைத் திருப்திபடுத்தவே ஸ்ரீரங்கநாதர் தெற்கு நோக்கிப் படுத்திருக்கிறார் என்றும் ஸ்ரீரங்க ஸ்தல புராணத்தில் விரிவாகக் கதை சொல்லியிருக்கிறது. இந்த விஷயத்தை ஆழ்வார்கள் தங்கள் பாட்டில் சொல்கிறார்கள்.[1]

மஹாவிஷ்ணு தெற்கே பார்த்திருப்பதற்குப் புராணம் சொல்கிற காரணம் ஆழ்வார் காலத்திலேயே நிச்சயமாக இருந்திருக்கிறதென்றால் அந்தப் புராணம் அதற்கும் முந்தியதாகத்தானே இருக்க வேண்டும்?

காஞ்சீபுரத்தில் ஏகாம்பரநாதர் அம்பாளே பிடித்து வைத்துப் பூஜை பண்ணிய பிருத்வி [மண்ணாலான] லிங்கம்; ஸ்வாமி அவள் பூஜை பண்ணுகிறபோது பெரிய வெள்ளத்தைப் பிரவஹிக்கச் செய்தும் அவள் விடாமல் லிங்கத்தைக் கட்டிக்கொண்டாள்; அதிலிருந்து ஸ்வாமியே ஆவிர்பவித்தார் – என்று ஸ்தல புராணத்தில் இருப்பதைத் தேவாரமும் சொல்கிறது. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் ஏகம்பத்தில் பாடிய தேவாரத்தில் பாட்டுக்குப் பாட்டு அம்பாள் பூஜை பண்ணின மஹிமையைச் சொல்கிறார்.[2]

ஸ்ரீரங்கத்துக்குப் பக்கத்தில் இருக்கிற ஜம்புகேச்வரத்தில் (திருவானைக்காவில்) ஜம்பு மஹரிஷி என்பவர் ஜம்பு (நாவல்) விருக்ஷமாக ஆக, அதன் கீழேயே ஈச்வரன் வந்து கோயில் கொண்டார். அங்கே லிங்கத்துக்கு ஒரு சிலந்தி பந்தல் போட்டுப் பூஜித்தது. இந்த பந்தலை அறுத்துக் கொண்டு ஒரு யானை லிங்கத்துக்கு அபிஷேகம் பண்ணிற்று. இதனால் சிலந்திக்கு ஆத்திரம் வந்து யானையின் தும்பிக்கைக்குள் புகுந்து கொண்டு அதன் மண்டைக்குள் போய் குடைந்தது. அப்போது யானை மண்டையை மோதிக் கொண்டு தானும் செத்து சிலந்தியையும் சாக அடித்து விட்டது. இந்த சிலந்தி தான் பிற்பாடு கோச்செங்கட் சோழனாக பிறந்து ஜம்புகேச்வர ஆலயத்தைக் கட்டிற்று. இந்தக் கதையை ஸ்தல புராணம் சொல்கிறது.

இத்தனைக்கும் தேவாரத்திலேயே reference இருக்கிறது. மூலஸ்தானத்தில் எப்போதும் காவேரி ஊற்று இருக்கும்படியான அற்புத ஸ்தலம் அது என்பதற்கு அப்பர் தேவாரம் ஒன்றில் பத்துப் பாட்டிலும் குறிப்பு இருக்கிறது.[3]

திருக்கழுக்குன்றத்தில் தினமும் மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு இரண்டு கழுகுகள் வந்து பண்டாரம் கொடுக்கிற சர்க்கரைப் பொங்கலைச் சாப்பிட்டு விட்டுப் போகிறதல்லவா? இது நூற்றாண்டுகளாக நடந்துவருகிறது என்று சொல்வதற்கு என்ன ஆதாரம் என்று கேட்கிறார்கள். இந்த ஊர் பேரே தேவார காலத்திலிருந்து "கழுக்குன்றம்" என்று இருக்கிறது. இதைவிடப் பெரிய ஆதாரம் என்ன வேண்டும்?

திருவிடைமருதூரில் தைப்பூச ஸ்நானம் விசேஷமானது என்று க்ஷேத்ர மாஹாத்மியத்தில் சொல்லியிருக்கிறது என்றால் இந்த விசேஷத்தை சுமார் 1300 வருஷங்களுக்கு முன்பு அப்பரும் சம்பந்தருமே பாடியிருக்கிறார்கள்.[4]

ஸ்ரீரங்கம், ஜம்புகேச்வரம், காஞ்சீபுரம், திருக்கழுக்குன்றம், திருவிடைமருதூர் போன்ற மஹாக்ஷேத்ரங்கள் புராதனமாக ப்ரஸித்தமானதால் அவற்றைப் பற்றிய புராண வழக்குகள் பழைய தமிழ் நூல்களில் வந்திருப்பதில் ஆச்சரியமில்லை என்று தோன்றலாம். சின்ன சின்ன க்ஷேத்ரங்களில் உள்ள சின்ன புராண ஐதிஹ்யங்களுக்குக் கூட பழைய தமிழ் மறைகளில் குறிப்பு இருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

பிரஸித்தியடையாத சில க்ஷேத்ரங்களில் ரிஷிகளோ தேவர்களோ வண்டுகளாக இருந்து பூஜை பண்ணினதாக ஸ்தல புராணங்களில் இருக்கிறது. இப்போதும் அந்த ஊர்களில் சன்னதியிலேயே பெரிய தேனடைகள் இருந்து கொண்டிருக்கின்றன. நன்னிலத்தில் இப்படி இருக்கிறது. 'மதுவனம்' என்றே அதற்கு ஒரு பெயர் இருக்கிறது. (மது – தேன்) . திருத்துறைப்பூண்டிக்குப் பக்கத்தில் சித்தாம்பூர் என்று சொல்கிற ஊர் இருக்கிறது. இதற்கு தேவாரத்தில் திருச்சிற்றேமம் என்று பெயர். இங்கேயும் ஸ்வாமி சன்னதியில் தேன்கூடு இருக்கிறது. ஸித்தர்கள் தேனீக்களாக வந்து பூஜிக்கிறார்கள் என்று ஐதிஹ்யம். இந்த தேனடைக்கும் தினந்ததோறும் பூஜை நடக்கிறது. வைஷ்ணவ திவ்ய தேசங்களில் திருக்கண்ண மங்கையில் தேனடையிருக்கிறது. இவற்றைப் பற்றி அந்தந்த ஊர் தேவார–திவ்யப்ரபந்தங்களிலும் reference இருக்கிறது.[5]

ஸ்தல புராண விஷயங்களை தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் முதலியவற்றில் குறிப்பிட்டிருப்பதால் அவற்றின் பழமை, பிராமாண்யம் (authenticity) இரண்டும் தெரிகின்றன.

[1] குடதிசை முடியை வைத்துக்

குணதிசை பாதம் நீட்டி

வடதிசை பின்பு காட்டித்

தென்திசை யிலங்கை நோக்கி

கடல்நிறக் கடவுள் எந்தை

அரவணைத் துயிலுமாக் கண்டு

உடல் எனக்(கு) உருகுமாலோ?

என் செய்கேன் உலகத்தீரே!

(தொண்டரடிப்பொடி ஆழ்வார்)

[2]ஏலவார் குழலாள் உமைநங்கை என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற..

ஆற்றமில் புகழாள் உமைநங்கை ஆதரித்து வழிபடப்பெற்ற..

வரிகொள் வெள்வளையாள் உமைநங்கை மருவி ஏத்தி வழிபடப்பெற்ற..

கெண்டை யந்தடம் கண்ணுமை நங்கை கெழுமி ஏத்தி வழிபடப்பெற்ற..

எல்லையில் புகழாள் உமைநங்கை என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற..

மங்கை நங்கை மலைமகள் கண்டு மருவி ஏத்தி வழிபடப்பெற்ற..

எண்ணில் தொல்புகழாள் உமைநங்கை என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற..

அந்தமில் புகழாள் உமைநங்கை ஆதரித்து வழிபடப்பெற்ற..

பரந்த தோல் புகழாள் உமைநங்கை பரவிஏத்தி வழிபடப்பெற்ற..

(வெள்ளம் வந்தபோது அம்பாள் லிங்கத்தைத் தழுவ, ஈஸ்வரன் ஆவிர்பவித்ததைக் குறிக்கும் பாடல்.)

எள்கல் இன்றி இமையவர் கோனை ஈசனை வழிபாடு செய்வாள் போல்

உள்ளத்துள்கி உகந்து (உ)மைநங்கை வழிபடச் சென்று நின்றவா கண்டு

வெள்ளங்காட்டி வெருட்டிட வஞ்சி வெருவி ஓடித்தழுவ வெளிப் பட்ட

கள்ளக்கம்பனை எங்கள் பிரானைக் காணக்கண் அடியேன் பெற்றவாறே.

[3]சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தர் செய்து

உலந்தவன் இறந்தபோதே கோச்செங்க ணானுமாகக்

கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர்தங்கள்

குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே (அப்பர்)

வெண்ணாவலின் மேவிய எம் அழகா (சம்பந்தர்)

[வெண்ணாவல் : ஜம்பு விருட்சம்]

"செழு நீர்த் திரளைச் சென்றாடினேனே" (அப்பர்)

[இச் சொற்றொடர் பத்துப் பாட்டுக்களிலும் வருகிறது]

[4] பூசம் புகுந்தாடிப் பொலிந்தழகாய

ஈசன் உறைகின்ற இடைமரு(து) ஈதோ! (சம்பந்தர்)

வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர் வந்தீண்டிப்

பொருந்திய தைப்பூசமாடி உலகம் பொலிவெய்த (சம்பந்தர்)

ஈசன் எம்பெருமான் இடைமருதினில் பூச நாம் புகுதும் புனலாடவே (அப்பர்)
[5] தேனார் வண்டு பண் செயும் திருஆரும் சிற்றேமத்தான் (ஞானசம்பந்தர்)

களிவண்டறையும் பொழில் கண்ண மங்கை யுட் கண்டுகொண்டேனே. (திருமங்கையாழ்வார்)

பல வரலாறுகளிடை தொடர்பு

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

பல வரலாறுகளிடை தொடர்பு

ஒரு ஸ்தல புராணத்தில் இருக்கிற ஸம்பவத்தை ஸம்பந்தப் படுத்தி இன்னொன்றில் வருகிறது. இப்படிப் பல புராணங்களுக்கிடையே ஒரே கதையை தொடர்பு படுத்திச் சொல்லியிருக்கிறது; Inter-connected ஆகச் சொல்லியிருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்துப் படித்தால்தான் முழுக்கதையும் தெரிகிறது. இம்மாதிரி ஒரு ஸ்தல புராணத்தில் விட்ட இடத்தில் இன்னொன்று தொடங்குவதாக அநேகம் இருப்பதே ஸ்தல புராணங்கள் பொய்யில்லை என்பதற்கு ஒரு சான்றாக இருக்கிறது.

ஸ்தல புராணங்களுக்குள்ளே மட்டுமில்லாமல் 18 மஹாபுராணங்கள், உபபுராணங்கள் இவற்றில் பல அம்சங்களைக் கூட ஸ்தல புராணங்கள்தான் பூர்த்தி செய்கின்றன என்பதைப் பார்க்கும்போது இவற்றின் authenticity [நிஜத்தன்மை]யைப் பற்றி மேலும் உறுதியாகிறது.

உதாரணமாக: அம்பாளும் ஈச்வரனும் கைலாஸத்தில் சொக்கட்டான் ஆடினார்களும். "நான்தான் ஜெயித்தேன்", "நான்தான் ஜெயித்தேன்" என்று இரண்டு பேரும் அபிப்பிராய பேதமாகச் சொன்னார்களாம். பல தினுஸாக லோகத்துக்கு தர்மங்களை எடுத்துக் காட்டுவதற்காக ஸ்வாமியும் அம்பாளும் இப்படியெல்லாம் கூத்தடிப்பார்கள். அப்படித்தான் இப்போது அவர்களுக்குள்ளே கலகம் வந்து விட்டது. காசு வைத்து இந்த மாதிரிப் பந்தயம் ஆடினால் எவரும் ஒழுங்கு தப்பிப் போகும்படிதான் ஆகும் என்று காட்டுகிற மாதிரி, சொக்கட்டான் ஆட்டத்தின் முடிவில் கலகம் வந்ததாக ஆட்டம் போட்டார்கள்.

தன்னுடைய உடைமையையெல்லாம் பந்தயம் வைத்துத் தோற்றுப்போன ஸ்வாமிக்குக் கோபம் வந்து அம்பாளை, "நீ பூலோகத்தில் போய்ப் பசுவாகத் திரிந்து கொண்டிரு" என்று சாபம்

கொடுத்து விட்டார். அவர் பசுபதி. வெறித்துத் திரிந்து கொண்டிருக்கிற இந்திரியங்களான பசுக்களை அடக்கி வைக்கிற பதி அவர். அஹங்காரம் பிடித்த ஜீவனுக்கு இந்த அநுக்ரஹத்தைப் பண்ணமாட்டார் என்று காட்டுவதற்காக ஸாக்ஷாத் பராசக்தியைப் போக்கிடமில்லாத பசுவாகத் திரிந்து கொண்டிருக்கும்படி ஆக்ஞை பண்ணி விட்டார்! மஹாசக்தியாக இருக்கப்பட்ட அம்பாளும், உடனே தன் தப்பை உணர்ந்து, அவருக்கு அடங்கிய பதிவிரதையாக – இந்தக் கற்பு நெறி உலகத்துக்குத் தெரிவதற்காக – ஒரு சாதாரணப் பசு மாடாக ஆகி பூலோகத்துக்கு வந்து திரிய ஆரம்பித்து விட்டாள்.

"கோமாதா, குஹஜன்மபூ:" – என்று அம்பாளுக்கு ஸஹஸ்ரநாமாவில் பேர் சொல்லியிருக்கிறது. இப்படி கோமாதாவாக பூலோகத்துக்கு வந்து விட்டாள்.

மஹாவிஷ்ணு அவளுடைய அண்ணா அல்லவா? அந்தப் பாசம் அவருக்கு! மாப்பிள்ளை (ஈச்வரன்) அவளை விரட்டி விட்டார் என்றதும், 'அவர் பசுபதியாக இருந்து ரக்ஷிக்காவிட்டால் போகட்டும்; தங்கையை நாம் ரக்ஷித்துப் பாதுகாப்பில் வைத்துக் கொள்வோம்' என்று நினைத்து மஹாவிஷ்ணு மாட்டிடையனாக ஆகித் தானும் அம்பாளோடு வந்துவிட்டார். இடையனாகி பூலோகத்தில் அலைய வேண்டும் என்று இவருக்கு ஒரு சாபமும் இல்லை. ஆனாலும் ஸஹோதர வாத்ஸல்ய தர்மத்தைக் காட்டுவதற்காகத் தங்கையோடு கூடத் தாமும் வந்து விட்டார். இந்த அநுபவத்திலே ஏற்பட்ட ருசியினால்தான் கிருஷ்ணாவதார காலத்திலேயும் மாடு மேய்த்து ஸந்தோஷப் பட்டார். கோபாலன் என்றே பேர் வாங்கினார். 'கோபாலன்' என்றாலும் 'பசுபதி' என்றாலும் ஒரே அர்த்தம்தான். இந்தப் பெயர்களை ஆலோசித்துப் பார்த்தாலே சைவ–வைஷ்ணவ பேதம் போய்விடும். அது இருக்கட்டும்.

அண்ணாவும் தங்கையும் இப்படிக் கோனாராகவும், கோவாகவும் வந்த ஊர்தான் திரு அழுந்தூர். "தேரழுந்தூர்" என்று சொல்வது அதுதான். கம்பருடைய ஊர் அதுவே. 'கம்பர்மேடு' என்று இப்போதும் அங்கே இருக்கிறது. அங்கே [திருமங்கை] ஆழ்வார் மங்களாசாஸனம் பண்ணின கோயில் இருக்கிறது. பெருமாள் கோபால மூர்த்தியாகவே

கர்ப்பக்ருஹத்தில் பசுவோடு கூட இருக்கிறார். பசுவுக்கு ஸகாவாக வந்தால் அவருக்கு 'கோஸகன்' என்று பேர். கோஸக க்ஷேத்ரம் என்றே தேரழுந்தூருக்குப் பேர் இருக்கிறது. 'கோ-ஸகர்' என்பதை 'ஆமருவியப்பன்' என்று தமிழில் சொல்கிறோம். 'ஆ' என்றால் பசு.

அந்த ஊரில் வேதபுரீச்வரர் என்ற பெயரில் சிவனுக்கு கோயில் இருக்கிறது. ஓர் ஊர் என்று இருந்தால் ஒரு கோடியில் சிவன் கோயிலும் இன்னொரு கோடியில் பெருமாள் கோயிலும் இருக்கவேண்டும் என்பது பழைய கால சாஸ்திரப்படியான town-planning.

தேரழுந்தூரில் உள்ள பெருமாள் கோயிலுக்கு ஆழ்வார் பாடல் இருக்கிறதென்றால், ஈச்வரன் கோயிலுக்கு [ஞான சம்பந்தரின்] தேவாரம் இருக்கிறது. ஆழ்வார்கள் பாடிய ஸ்தலங்களை 'மங்களாசாஸனம் பெற்றவை' என்பார்கள். தேவாரம் உள்ள க்ஷேத்ரத்தைப் 'பாடல் பெற்ற ஸ்தலம்' என்பார்கள். அநேக க்ஷேத்திரங்களுக்கு இந்த இரண்டு பெருமைகளும் இருக்கிறது. தேரழுந்தூருக்கும் இருக்கிறது.

பசுவாக வந்த அம்பாளை மஹாவிஷ்ணு புல் மேல் மேயவிட்ட இடங்கள் தேரழுந்தூருக்கு பக்கத்திலேயே பில்லூர் ('புல்' என்பதைத் தஞ்சாவூர் ஜில்லாக்காரர்கள் 'பில்' என்றுதான் சொல்லுவார்கள்), மேக்கிரி மங்கலம் என்ற பெயர்களில் இருக்கின்றன. ஆன் ஆங்கூர் என்பதும் இன்னொரு பக்கத்துக்குக் கிராமம். அதுவும் பசு திரிந்ததற்கு அடையாளமாகப் பேர் வைத்துக் கொண்டிருக்கிறது! (ஆன்-பசு).

பசு புல் மேயும். கோனார் மேய விட்டுக் கூடப் போய் பாதுகாப்பார். அம்பாளும், மஹாவிஷ்ணுவும் ஈச்வர ஆராதனை பண்ண வேண்டுமல்லவா? அதற்காகத்தான் கோஸக க்ஷேத்திரத்தில் பெருமாள் வேதபுரீச்வரரைப் பிரதிஷ்டை பண்ணினார். (வேதபுரீச்வரர் கோயில், ஆமருவியப்பன் கோயில் இரண்டும் ஒரே மானேஜ்மென்டில்தான் இருக்கிறது.)

வேதத்துக்கு கோ ரொம்பவும் அவசியம். யாகத்துக்கு வேண்டிய நெய், பால் முதலானவற்றைத் தரும் கோ, யாகத்தைப் பண்ணி வைக்கும் பிராம்மணர்கள் இருவரும் வேத மதம் விளங்குவதற்குக் குறிப்பாக

இருக்க வேண்டும். 'கோ–ப்ராஹ்மணேப்யோ சுபமஸ்து நித்யம்' என்றும் 'வாழ்க அந்தணர் வானிவர் ஆனினம்' என்றும் இதனால்தான் சொல்லியிருக்கிறது.

அம்பாள் 'கோ' வாக வந்த இடத்தில், அவளைப் அப்படிச் சபித்தவர் வேதபுரீச்வரராக வந்தார். அந்த ஊரில் ஸமீப காலம் வரை வேத சாஸ்திர வ்யுத்பன்னர்கள் [விற்பன்னர்கள்] நிறைய இருந்திருக்கிறார்கள். "அழுந்தை மறையோர்" என்று அவர்களை சம்பந்தர் தேவாரத்தில் திரும்பத் திரும்பப் போற்றியிருக்கிறார்.

இந்த ஊர்ப் பெருமாளையே ஆழ்வார் ரொம்பவும் வேத சம்பந்தமுள்ளவனாக, "சந்தோகா! பௌழியா! தைத்திரியா! சாமவேதியனே! நெடுமாலே!" என்று கூப்பிடுகிறார்.

ஒரு நாள் மேய்ச்சலின் போது பசுவின் குளம்பு இடித்து பூமிக்குள்ளிருந்து ஒரு கல் வந்தது. பார்த்தால் சிவலிங்கமாய் இருந்தது. இப்படிப் பெரிய சிவ அபராதம் பண்ணி விட்டதால் பசு மிரண்டு ஓடியது. மஹாவிஷ்ணு அதை சமாதானப் படுத்தி அழைத்து வந்தார். அந்த இடத்துக்கு "திருக்குளம்பியம்" என்று பெயர் இருக்கிறது.

இதையெல்லாம் பார்த்த மஹாவிஷ்ணுவுக்கு ரொம்பவும் வேதனை உண்டாயிற்று. ஏதோ ஒரு விளையாட்டில் தன் ஸஹோதரி அஹங்காரப்பட்டதற்காக இத்தனை விபரீதங்கள் வந்து விட்டதே என்று ரொம்பவும் வருத்தப்பட்டார்.

ஸுந்தரேச்வரருக்கு மீனாக்ஷியை மஹாவிஷ்ணுதான் தாரை வார்த்துக் கொடுத்தார். அந்த மாதிரி இங்கேயும் தங்கையை எப்படியாவது ஈச்வரன் மறுபடியும் சேர்த்துக் கொள்ளும்படியாக பண்ணவேண்டும் என்று மஹாவிஷ்ணு பிரார்த்தனையும் பூஜையும் பண்ணிக் கொண்டிருந்தார்.

ஈச்வரன் மனஸுக்கு, திருப்தி உண்டாயிற்று. மஹாவிஷ்ணுவிடம், "நீ இப்படியே அவளை (பசுவாக இருக்கிற அம்பாளை) மேய்த்துக் கொண்டே போய்க் காவேரியில் ஸ்நானம் பண்ணுவித்து எழுப்பு.

பழைய ரூபம் வரும். அப்புறம் நானே வந்து எப்போது கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்பதைச் சொல்கிறேன்" என்றார்.

அவர் சொன்னப் பிரகாரமே கோஸகர் பசுவக் காவேரி ஸ்நானம் பண்ணுவித்து, திரும்ப அது அங்கிருந்து போய் அடைந்த ஊரைத்தான் இப்போது 'திருவாவடுதுறை' என்கிறோம். 'ஆ–அடு–துறை' தான் அது. எந்தக் காவேரித் துறையிலே ஆ (பசு) நீராடிக் கிட்டே போய்ச் சேர்ந்தோ ('ஆ–அடு' என்பதில் வரும் 'அடுதலு'க்குக் கிட்டே போய்ச் சேருதல் என்று அர்த்தம்) அந்த ஊர் என்று அர்த்தம். (திருமூலர் 'திருமந்திரம்' செய்ததால் பெருமை படைத்த ஊர் இந்தத் திருவாவடுதுறைதான். ஊர்ப் பேருக்குப் பொருத்தமாகத் திருமூலரும் செத்துப் போன ஒரு இடையனின் உடம்புக்குள்ளே பரகாயப் பிரவேசம் பண்ணியிருக்கிறார்!)

அங்கே ஈச்வரன் வாக்குப்படியே அம்பாளுக்குப் பசுரூபம் மறைந்து ஸ்வய ரூபம் வந்தது. ஈச்வரனும் பிரத்யக்ஷமானார். ஆனால் இன்னும் கொஞ்சம் ஆட்டம் போட நினைத்தார். பக்கத்திலே குற்றாலம் என்ற ஊரில் (இது திருநெல்வேலி குற்றாலமில்லை. அருவி விழுகிறதே அந்த ஊர் இல்லை. இது தஞ்சாவூர் ஜில்லாவில் மாயவரத்துக்குப் பக்கத்தில் இருப்பது. 'திருத்துருத்தி' என்பது இதற்குப் பழைய பெயர். அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் தேவாரம் பாடியுள்ள 44 க்ஷேத்ரங்களில் அது ஒன்று.) அந்த ஊரிலே அம்பாளைப் பெண்ணாக வளர்க்க வேண்டும் என்று ஒரு ரிஷி தபஸ் பண்ணிக் கொண்டிருந்தார். 'அம்பாள் பூலோகத்துக்கு வந்ததுதான் வந்தாள். ரிஷியுடைய இஷ்டத்தை பூர்த்தி செய்வதற்காகவும் இந்த சந்தர்ப்பத்தையே 'யூடிலைஸ்' பண்ணிக் கொண்டு விடலாமே!' என்று ஈச்வரன் நினைத்தார். இல்லாவிட்டால் அவளை மறுபடி ஒரு தடவை அல்லவா பூலோகத்துக்கு அனுப்ப வேண்டிவரும்?'

அதனால் ஈச்வரன் அம்பாளிடம், "நீ போய் திருத்துருத்தியில் அந்த ரிஷியின் பெண்ணாகக் கொஞ்ச காலம் இருந்து வா. அப்புறம் நான் வந்து கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்" என்றார்.

அம்பாளும் அப்படியே செய்தாள்.

அப்புறம் ஸ்வாமி அங்கே பிரஸன்னமானார். கோஸக க்ஷேத்ரத்தில் வாக்குக் கொடுத்தவரே இங்கே வந்தார் என்பதற்கு ஒரு உட்சான்றாக இங்கேயும் ஸ்வாமிக்குப் பேர் வேதேச்வரர் என்று இருக்கிறது.

அந்த ரிஷியும், இந்தக் கல்யாணத்துக்காகவே காத்துக் கொண்டிருந்த மஹாவிஷ்ணுவும் ஈச்வரனை எதிர்கொண்டு அழைத்த ஊருக்கு 'எதிர்கொள்பாடி' எனறு பேர் ஏற்பட்டுவிட்டது.

கல்யாணத்துக்கு முன்னால் 'வ்ரதம்' என்று பண்ணுகிற ஹோமத்தை ஈச்வரன் பக்கத்தில் ஒரு ஊரில் செய்தார். அதனால் அதற்கு 'வேள்விக் குடி' என்றே பேர் உண்டாயிற்று.

அப்புறம் எங்கே அவர் அம்பாளைக் கல்யாணப் பெண்ணாகப் பார்த்து பாலிகை தெளித்தாரோ அந்த ஊர் 'குறுமுளைப்பாலி' என்று வழங்கி வருகிறது.

அப்போது இரண்டு மூன்று கிராமங்களையே அடைத்துப் பெரிதாக கல்யாணப் பந்தல் போட்டார்களாம். அதற்கு நடுமத்யமாக இருக்கிற ஊருக்கு 'திருமணஞ்சேரி' என்றே பெயர் இருக்கிறது. அங்கேதான் ஸாக்ஷாத் பார்வதி–பரமேச்வரர்களுக்குத் திருக்கல்யாணம் பண்ணி வைத்து மஹாவிஷ்ணு மனங்குளிர்ந்தார்.

இப்போது நான் சொன்ன இந்தக் கதையில் அஹம்பாவம் கூடாது, சூதாட்டம் கூடாது, பதியின் வாக்குக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும், ஸஹோதர வாத்ஸல்ய பரிபாலனம் முதலான அநேக தர்மங்கள் வெளியாவதால் ஸ்தல புராணங்களை உபயோகமில்லாதவை என்று ஒதுக்குவது எவ்வளவு தப்பு என்று தெரிகிறது. அது மட்டுமில்லை. நான் கதை சொன்னதும் இதை நினைத்து இல்லை. இந்த ஒரு கதைக்குள்ளே துண்டு துண்டாக ஒரு ஏழெட்டு ஸ்தல புராணங்கள் சேர்ந்திருக்கின்றன. ஒன்றுவிட்ட இடத்தில் இன்னொன்று ஆரம்பிக்கிறது. எல்லாம் சேர்ந்தால்தான் கதை பூர்ண ரூபம் பெறுகிறது.

தேரழுந்தூர், பில்லூர், ஆனாங்கூர், திருக்குளம்பியம், திருவாவடுதுறை, குற்றாலம், எதிர்கொள்பாடி, வேள்விக்குடி, குறுமுளைப்பாலி,

திருமணஞ்சேரி என்று இத்தனை ஊர்களைப் பற்றிய ஸ்தல புராணங்கள் ஒன்று சேர்ந்து ஒரே கதையை உருவாக்கியிருப்பதால் அந்தக் கதை நிஜந்தான் என்று ஆகிறது. அநேகமாக அந்த ஸ்தலங்களின் பேரிலேயே 'எவிடென்ஸ்' இருக்கிறது.

இதைவிடத் தஞ்சாவூர் ஜில்லாக்காரர்களுக்கு அதிகம் தெரிந்த ஒரு கதை கும்பகோணத்தையும் அதன் சுற்றுப்பட்ட க்ஷேத்ரங்களையும் இணைக்கிறது:

பிரளயத்தின் போது பிரம்மா அடுத்த சிருஷ்டிக்கான பீஜங்களை அமிருதத்தில் வேத சப்தங்களோடு சேர்த்து ஒரு மண் கும்பத்தில் (குடத்தில்) போட்டு அதற்கு யதோக்தமாக மாவிலை, தேங்காய் வைத்துப் பூணூல் போட்டு மேரு உச்சியில் வைத்துவிட்டார். பிரளய வெள்ளத்தில் அது மிதந்து வந்தபோது பரமேச்வரன் மறுபடி சிருஷ்டியை ஆரம்பித்து வைக்கவேண்டுமென்று நினைத்தார். அப்போது கும்பத்தின் மேலே வைத்திருந்த தேங்காய் புயலின் ஆட்டத்திலே சரிந்து விழுந்து விட்டது. உடனே பிரளய வெள்ளத்திலிருந்து அந்தப் பிரதேசம் வெளியிலே வந்துவிட்டது. தேங்காய் விழுந்த இடத்திற்குக் கிட்டேதான் பிற்பாடு அமிருதம் மஹாமகக் குளமாகப் பெருகிற்று. இப்போதும் அங்கே ஸ்வாமிக்கு நாரிகேளேச்வரர் என்று பெயர் இருக்கிறது. (நாரிகேளம் என்றால் தேங்காய்.) அவர் மேற்குப் பார்க்க இருப்பதால் 'அபிமுகேச்வரர்' என்கிறார்கள். அப்புறம் மாவிலை விழுந்தது. அந்த இடமும் பிரளயத்தை மீறிக் கொண்டு பூப்பிரதேசமாக வெளியில் வந்தது. கும்பகோணத்திற்கு வடமேற்கே நாலு மைலில் உள்ள 'திருப்புறம்பயம்தான்' அது. 'பயம்' என்றால் 'பயஸ்'-ஜலம், அதாவது பிரளயம்; 'புறம்'-புறம்பாக இருப்பது. பிரளயத்துக்குப் புறம்பாக அதை மீறி இருப்பது திருப்புறம்பயம். அப்புறம் பூணூலும் இப்படியே விழுந்தது. அது மஹாமகக்குளத்தின் கிட்டே ஒரு இடம். அங்கேயுள்ள கோவிலில் ஸ்வாமி பெயர் 'ஸூத்ரநாதர்'என்றே இருக்கிறது. ஸ¨த்ரம் என்றால் பூணூல். 'உபவீதம்' என்றாலும் பூணூல். அதனால் 'உபவீதேச்வரர்' என்றும் சொல்வதுண்டு. அங்கே கௌதம மஹரிஷி பூஜை செய்ததால் 'கௌதமேச்வரர்' என்றே அதிகம் வழங்குகிறது.

இந்த கும்பத்துக்கு வாயைத் தவிர மூக்கும் இருந்தது, கிண்டி, கமண்டலு முதலியவற்றுக்கு இருப்பது போல! நான் வைத்துக் கொண்டிருக்கிற கடத்துக்குக் கூட மேல் பக்கம் வாய் இருப்பதோடு, பக்கவாட்டில் மூக்கும் இருக்கிறதல்லவா? கடம் அல்லது குடத்தை உள்ளே நிரப்புவதற்கு வாய் வழியாக ஜலம் விடவேண்டும். அதிலிருந்து ஜலத்தை வெளியில் விடவேண்டுமானால் மூக்கு வழியாகத்தான் விடவேண்டும். இம்மாதிரி சாஸ்திரோக்தமான குடமாகவே அந்த அமிருத கடமும் இருந்திருக்கிறது. பரமேச்வரன் பார்த்தார் – கும்பம் தானாகக் கவிழ்ந்து சிருஷ்டி பீஜமும் அமிருதமும் வெளியில் வராததால் தாம் பாணத்தினால் அடித்துக் கும்பத்தை உடைத்து அவற்றை வெளிப்படுத்தி விடுவது என்று தீர்மானம் பண்ணினார். உடனே பாணத்தையும் போட்டார். பாணபுரி என்ற 'பாணத்துறை'யான அந்த இடத்தைத்தான் இப்போது 'வாணாதுறை' என்கிறார்கள். அங்கே ஸ்வாமிக்குப் பேர் பாணபுரீச்வரர். குடத்தின் வாய் சிதறி விழுந்த இடம் (குடவாசல்) என்று பெயர் பெற்றது. ஆனால் சாஸ்திரோக்தமாக மூக்கு வழியாக அமிருதம் வெளி வரவேண்டும் என்று ஸ்வாமி நினைத்ததால் மூக்கு உடைந்து அமிருதம் வெளிவந்த க்ஷேத்திரமே மற்ற க்ஷேத்திரங்களைவிடப் பெருமை உடையதான 'கும்பகோணம்' ஆயிற்று. 'கோணம்' என்றால் மூக்கு. கும்பத்தின் கோணம் விழுந்து இடம் 'கும்பகோணம்'. 'குடமூக்கு' என்பதே அதற்குத் தேவாரத்தில் உள்ள பெயர். அங்கே லிங்கமாக அந்த மண் கலயமே வைக்கப்பட்டு விட்டது. இப்போதும் அப்படித்தான் இருக்கிறது. கவசம் போட்டுத்தான் அதற்கு அபிஷேகம் நடக்கிறது. 'கும்பேச்வரர்' என்று பெயர். அமிருதம் விழுந்த இடம்தான் மஹாமகக் குளம்.

இது அமிருதம் வெளிவந்த க்ஷேத்ரம் என்பதற்குப் பொருத்தமாக இங்கேயுள்ள சார்ங்கபாணிப் பெருமாளை "ஆரா அமுதன்" என்றே ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள்! வைஷ்ணவர்கள் கும்பகோணத்தைக் குடந்தை என்பார்கள்.

இப்படிப் பல க்ஷேத்ரங்கள் inter-connected ஆக இருந்து கொண்டு ஸ்தல புராணங்கள் நிஜந்தான் என்று உறுதிப்படுத்துகின்றன. திருவழுந்தூர், கும்பகோணம் குறித்த பல க்ஷேத்திரங்கள் ஒன்றுக்கொன்று கிட்டக்

கிட்ட இருப்பவை. இவை ஒரு நாலைந்து மைல் ரேடியஸுக்குள் அகப்பட்டு விடும்.

இதைவிட விஸ்தாரமான ஸ்கேலில் தூர தூர இருக்கிற க்ஷேத்திரங்களின் பரஸ்பர ஸம்பந்தத்தைச் சொன்னால், ஸ்தல புராணங்கள் கட்டுக்கதை இல்லை என்று இன்னும் திடமாகத் தெரியும். சொல்கிறேன்.

ராமேச்வரம், வேதாரண்யம், பட்டீச்வரம் என்ற மூன்று க்ஷேத்ரங்கள் மேலே சொன்னவை மாதிரிக் கிட்டே கிட்டே இருப்பவை அல்ல. ராமேச்வரம் ராமநாதபுரம் ஜில்லாவில் தெற்கு ஸமுத்ரகோடியில் இருக்கிறது. வேதாரண்யம் தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு கோடியில் ஸமுத்ரகரையில், திருத்துறைப்பூண்டி தாலுகாவில் இருக்கிறது. அதே ஜில்லாவில், ஆனால் அதற்கு ரொம்பவும் தள்ளி கும்பகோணத்துக்குப் பக்கத்தில் பட்டீச்வரம் இருக்கிறது. இப்படி ஒன்றுக் கொன்று தூரத்தில் உள்ள ஸ்தலங்களில் ஒரே வரலாறு சரடு மாதிரி இழையோடுகிறது என்றால் அதைப் பொய்யென்று சொல்ல முடியாதுதானே?

இந்த மூன்று ஊர்களிலும் ஈச்வரன் கோயிலில் 'ராமலிங்கம்' என்ற பெயரில் லிங்கம் இருக்கிறது. மூன்றும் மஹா க்ஷேத்ரங்கள். ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியின் ஸம்பந்தமுள்ள க்ஷேத்திரங்கள் என்ற மகிமை அவற்றுக்கு இருக்கின்றன. அதோடுகூட இந்த மூன்று இடங்களிலும் நாராயணாவதாரமான ஸ்ரீராமன் லிங்கப் பிரதிஷ்டை பண்ணியிருக்கிரார் என்பதால் சைவ வைஷ்ணவ ஒற்றுமைக்கும் இவை பலம் கொடுப்பதாக இருக்கின்றன. இதல்லாமல் மற்ற விசேஷங்களும் கொண்ட க்ஷேத்ரங்களாக இவை இருக்கின்றன.

பாரத தேசத்தின் நாலு கோடிகளில் உள்ள நாலு முக்ய க்ஷேத்திரங்களான "சார்-தாம்" எனப்படும் சதுர் தாமங்களில் (வாஸ ஸ்தானங்களில்) ராமேச்வரம்தான் தக்ஷிணத்துக்குரிய பெரிய க்ஷேத்ரமாக இருக்கிறது. வடக்கே பத்ரிநாதம், மேற்கே ஸோமநாதம், கிழக்கே [புரி] ஜகந்நாதம், தெற்கே ராமநாதம் என்பவையே சார்தாம். வேதாரண்யம் சுதந்திரப் போராட்டத்தின் போது உப்பு ஸத்தியாக்ரஹம் நடந்த ஊர். 'திருமறைக்காடு' என்பதாக மூவர் தேவாரமும் பெற்ற ஸ்தலமாக அது இருக்கிறது. இங்கே வேதங்கள் ஈச்வரனைப் பூஜித்து

திருக்காப்பு செய்த கதவைத் திறக்கும்படியாக அப்பர் ஸ்வாமிகள் பதிகம் பாடினார். திருஞான ஸம்பந்தர் பாடல்பாடி மறுபடி மூடும்படிச் செய்தார். பட்டீச்வரம் என்பது காமதேனுவின் நாலு பெண்களில் ஒன்றான பட்டி பூஜித்த க்ஷேத்ரம். மேலே திருஆவடுதுறையில் சொன்னது போல, பசு பூஜித்த க்ஷேத்ரங்கள் அநேகம் உள்ளன. திருஆமாத்தூர் என்று பண்ருட்டியருகே அப்பரோடு ஸம்பந்தமுள்ள ஸ்தலம் இருக்கிறது. அங்கேயும் பசு பூஜித்திருக்கறது. அப்படிப்பட்ட ஒரு ஊர் பட்டீச்வரம். ஞான ஸம்பந்தமூர்த்தி – குழந்தை – நல்ல வெயிலில் ஈச்வர நாமாவைச் சொல்லிக் கொண்டு ஆடிப்பாடிக் கொண்டு வருவதைப் பார்த்து ஈச்வரனே மனமுருகி பூதங்களைக் கொண்டு ஸுப்ரமண்ய அவதாரமான அந்தப் பிள்ளைக்கு ஊர் பூராவும் முத்துப் பந்தல் போட்டு வெயில் தெரியாமல் வரவழைத்துக் கொண்டு க்ஷேத்திரம் பட்டீச்வரம். நானூறு, நானூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னால் தஞ்சாவூரிலிருந்து ஆண்டு வந்த நாயக ராஜாக்களுக்கு மந்திரியாக இருந்த மஹான் கோவிந்த தீக்ஷிதருக்கு இந்த ஊரில் ஒரு தனியான வசீகரம் இருந்தது. இந்தக் கோயிலுக்கு அவர் விசேஷமாகத் திருப்பணிகள் செய்திருக்கிறார். அம்பாள் ஸந்நதியில் அவருக்கும் அவருடைய பத்தினிக்கும் பிம்பங்கள் இருக்கின்றன.

ராமலிங்க ஸம்பந்தத்துக்காக இந்த மூன்று க்ஷேத்ரங்களைப் பற்றிச் சொல்ல வந்தேன்.

அகஸ்தியர் திருக்கல்யாணக் காட்சி கண்ட இடம் என்று ஒரே ஸம்பவத்தையே பல க்ஷேத்ரங்களில் சொல்வது மாதிரி இல்லை, இந்த மூன்று ஸ்தலங்களில் உள்ள ராமலிங்கப் பிரதிஷ்டை. ஒவ்வொரு பிரதிஷ்டைக்கும் வெவ்வேறு காரணம் இருக்கிறது.

ராவணனைக் கொன்றதால் ராமருக்கு மூன்று தோஷங்கள் ஏற்பட்டன. முதலாவது, ராவணன் விச்ரவஸ் என்ற மஹரிஷியின் பிள்ளையானதால் பிராம்மணன் என்பது. அவனை ஸம்ஹாரம் செய்ததால் ராமருக்கு பிரம்மஹத்தி தோஷம் உண்டாயிற்று. சிவலிங்கப் பிரதிஷ்டை பண்ணி இந்த தோஷத்தை அவர் போக்கிக் கொண்ட இடந்தான் ராமேச்வரம்.

இப்போது ராம ராவண யுத்தத்தை ஆரிய திராவிடச் சண்டை என்று சில பேர் சொல்வது அடியோடு தப்பு என்பதற்கு இதைவிட வேறு proof (சான்று) வேண்டாம். ராமாயணத்தைப் பொய் என்று தள்ளினால் ராம ராவண யுத்தத்தையும் அடியோடு தள்ளத்தான் வேண்டும். இந்த யுத்தத்திற்கு மட்டும் historical basis [சரித்திர அடிப்படை] இருக்கிறது என்று சொல்லக் கூடாது. ராமாயணம் நிஜம் என்று ஒப்புக் கொண்டால் அதிலே ராவணனைப் பற்றி திரும்பத்திரும்ப ரிஷிபுத்ரன், வேதாத்யயனம் பண்ணினவன், ஸாமகானம் செய்தே பரமேச்வரனை திருப்திப்படுத்திக் கைலாஸத்துக்கு அடியிலிருந்து மீண்டவன் என்றெல்லாம் சொல்லியிருப்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். 'எங்களுக்குப் பிடித்ததை மட்டும் ஒப்புக் கொள்வோம். பாக்கியெல்லாம் கட்டுக்கதை' என்றால் அது முறையான வாதத்தில் சேராது.

ராமாயண புஸ்தகத்தில் எழுதி வைத்தது இருக்கட்டும். பிரத்யக்ஷமாகத் தெரிகற மாதிரி இந்த லோகத்திலேயே மிகப்பெரிய பிரகாரங்களோடு ராமேச்வரத்தில் கோவில் இருக்கிறது. சரித்திரக்காரர்களே ஒப்புக் கொள்கறபடி ஆயிரக்கணக்கான வருஷங்களாக அங்கே ராமர் பிரம்மஹத்தி தோஷம் நீங்குவதற்காகப் பிரதிஷ்டை செய்த லிங்கம் என்று ராமநாத ஸ்வாமியைச் சொல்லி தேசம் பூராவும் வழிபட்டு வந்திருக்கிறது. இதனால் ராவணன் பிராம்மணன் என்ற நம்பிக்கைக்கு மாறாகத் தமிழ் நாட்டில் பூர்விகர்கள் நினைத்ததேயில்லை என்று தெரிகிறது.

ராவணன் பிராம்மணன் என்பது மட்டுமில்லை. அவன் மஹாவீரன். லோகங்களெல்லாம் கிடுகிடுவென்று நடுங்கும் படியாகப் பண்ணினவன். கார்த்தவீர்யார்ஜுனனையும் வாலியையும் தவிரத் தான் சண்டை போட்ட அத்தனை பேரையும் ஜயித்தவன். இப்படிப்பட்டவனைக் கொன்றதால் வீரஹத்தி தோஷமும் ஸ்ரீராமனுக்கு உண்டாயிற்று. இந்த தோஷத்துக்குப் பிராயசித்தமாகத்தான் ராமர் வேதாரண்யத்தில் ராமலிங்கப் பிரதிஷ்டை செய்தார்.

பிராம்மணன், வீரன் என்பது தவிர ராவணனுக்கென்று வேறு பெருமைகளும் உண்டு. அவன் நல்ல சிவபக்தன். வீணை வாசித்துப் பாடுவதில் நிபுணன். இம்மாதிரி நல்ல அம்சங்களை 'சாயை' என்பார்கள். 'சாயை' என்றால் ஒளி, நிழல் என்று இரண்டு அர்த்தமும் உண்டு. 'மரகத சாயே' என்று மீனாக்ஷியைச் சொல்கிற போது 'மரகதம் போன்ற ஒளி உடையவளே' என்று அர்த்தம். ஒளி என்பது பெருமை வாய்ந்த குணங்களையெல்லாம் குறிப்பிடும். சாயை (பெருமை) உடைய ராவணனை வதம் செய்ததால் ராமருக்கு சாயாஹத்தி என்ற மூன்றாவது தோஷம் உண்டாயிற்று. இது தீருவதற்காகத்தான் அவர் பட்டீச்வரத்தில் ராமலிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜை பண்ணினார்.

சாஸ்திரப்படி பார்த்தால் ராவணனை ஸம்ஹரித்த மநுஷ்யருக்கு பிரம்மஹத்தி, வீரஹத்தி, சாயாஹத்தி என்ற மூன்று தோஷங்கள் ஏற்பட்டுத்தான் இருக்கவேண்டும். பதித பாவனான ராமசந்திரமூர்த்திக்கு வாஸ்தவத்தில் தோஷமே ஏற்பட முடியாதுதான். எவன் பெயரை ஸ்மரித்தாலே ஸமஸ்த மஹா பாபங்களும் ஓடிப் போகுமோ அப்படிப்பட்ட தாரக நாமனான ராமன் தனக்கே பிராயச்சித்தம் பண்ணிக் கொள்ள வேண்டியதே இல்லைதான். ஆனாலும் அவர் இந்த பூலோகத்தில் 'ஐடியல்' மநுஷ்யராக வாழ்ந்து காட்டவேண்டும் என்றுதான் நரவேஷம் போட்டுக் கொண்டு வந்திருந்தார். ஒவ்வொரு சின்ன காரியத்துக்குங்கூட சாஸ்திரத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்று பார்த்துப் பார்த்தே அந்தப் பிரகாரம் பண்ணினார். சாஸ்திர தர்மங்களைத் துளிக்கூட வழு இல்லாமல் பண்ணிக் காட்டுவதில் ராமரை மிஞ்சி இன்னொருத்தர் கிடையாது. ராமாயணத்தில் எங்கே பார்த்தாலும் இந்த குணாதிசயத்தைப் பார்க்கிறோம். தம்மை ஸாதாரண மநுஷ்யராகவே வைத்துக் கொண்டு, மநுஷ்யர்களுக்கு சாஸ்திரத்தில் என்னென்ன தர்மங்கள், விதிகள், பிராயச்சித்தங்கள் சொல்லியிருக்கின்றனவோ அவற்றையெல்லாம் விடாமல் செய்தார். ஆகவே ஒவ்வொரு அல்ப காரியத்துக்குங்கூட சாஸ்திரத்தைப் பார்த்து அதன்படி பண்ணின ராமன் இந்த மூன்று பெரிய தோஷங்களுக்கு மட்டும் பிராயச்சித்தம் பண்ணிக் கொள்ளாமல் இருந்திருப்பாரா? அப்படிச் சொல்வது கொஞ்சங்கூடப் பொருத்தமில்லை. அதனால் வால்மீகி ராமாயணத்தில் இது என்னவோ விட்டுப் போய்விட்டது என்றுதான் ஆகிறது. அதிலே

விட்டுப் போன குறையைத்தான் ராமேச்வரம், வேதாரண்யம், பட்டீச்வரம் ஆகிய ஊர்களுக்கான ஸ்தல புராணங்கள் பூர்த்தி செய்கின்றன.

'இது ராமாயணத்தில் இல்லை; அதனால் ஏதோ அத்தைப்பாட்டிக் கதை' என்று நினைப்பது தப்பு. ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் குணத்தை நன்றாக ஆழ்ந்து அநுபவித்துப் பார்த்தால் அவர் இந்த மூன்று பிராயச்சித்தங்களைப் பண்ணிக்கொண்டுத்தான் இருப்பார்; அப்படிப் பண்ணினால்தான் அவர் ராமர். ஆகையால் ஏதோ காரணத்தால் ராமாயணத்தில் விட்டுப்போன இந்த விஷயத்தைச் சொல்கிற ஸ்தல புராணங்கள்தான் அவருடைய மனோபாவத்துக்கும், சரித்திரத்துக்கும் (conduct-கும்) பூர்த்தியைத் தருகின்றன என்ற தெளிவு உண்டாகிறது. லோகத்தையெல்லாம் ஹிம்ஸித்து வந்தவனும், ஜகன்மாதாவான ஸீதையையே கெட்ட எண்ணத்தோடு மாறு வேஷத்தில் வந்து நீசமாகத் திருடிக்கொண்டு போனவனுமான ஒருத்தனை ஸம்ஹாரம் பண்ணி, அதனால் ஸமஸ்த ஜீவராசிகளும் ஸந்தோஷம் அடைந்து அவரைக் கொண்டாடும் சமயத்தில், அப்படிப்பட்ட சத்ருவிடத்தில் இருந்த மூன்று பெருமைகளை நினைத்து அவனைக் கொன்றதற்காக தம் மீதே மூன்று தோஷங்களை சுமத்திக் கொண்டு பிராயசித்தம் பண்ணிக் கொண்டதாக ஸ்ரீ ராமனைச் சொல்வதுதான் அவருடைய உத்தம ஸ்வபாவத்தையே ஒரு தூக்குத் தூக்கிப் பிரகாசிக்கப் பண்ணுவதாக இருக்கிறது. லிங்கப்பிரதிஷ்டை பண்ணினது ஹரி-ஹர அபேதத்துக்கு ஒத்தாசை செய்கிறது.

இந்த மூன்று ஸ்தல புராணங்களுக்குள் ஒன்றுக்கொன்று முரண்பாடு (contradiction), ஒன்றில் சொன்னதையே இன்னொன்றில் திருப்பிச் சொல்வது (duplicate பண்ணுவது) என்பதெல்லாம் இல்லை. ராமேச்வர புராணத்தில் பிரம்மஹத்தி நீங்கினதை மட்டுமே சொல்லியிருக்கிறது. மற்ற இரண்டு தோஷங்கள் அங்கே போனதாகச் சொல்லவில்லை. அங்கேயிருந்து அப்படியே ஸமுத்திரக் கரை ஓரமாகவே வடக்காகப் போயிருப்பார் போலேயிருக்கிறது. அங்கே வேதாரண்யத்தில் வீரஹத்தி போக லிங்கப் ப்ரதிஷ்டை செய்திருக்கிறார். வேதாரண்ய ஸ்தல புராணத்திலும் வீரஹத்தி மட்டும் நிவிருத்தியானதைத்தான் சொல்லியிருக்கிறது. இங்கேயும் பிரம்மஹத்தி போனதாகச்

சொல்லியிருந்தால் தப்பு என்கலாம். அப்படியில்லை. அப்புறம் உள்நாட்டுப்பக்கமாக (interior-க்கு)ப் போய் பட்டீச்வரத்தில் மூன்றாவது ராமலிங்கத்தைப் ப்ரதிஷ்டை செய்து சாயாஹத்தியை நிவ்ருத்தி செய்து கொண்டிருக்க வேண்டும். பட்டீச்வரம் ஸ்தல புராணத்திலும் இந்த ஒரு தோஷத்தைத்தான் சொல்லியிருக்கிறது.

அதாவது இந்த மூன்று க்ஷேத்ரங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு தோஷத்தையே – அதுவும் மற்றதில் விட்டுப்போன ஒன்றையே– சொல்லி அதற்கு concrete evidence-ஆக [கண்ணுக்குத் தெரியும் சாட்சியாக] ஒவ்வொரு கோவிலிலும் 'ராமலிங்கம்' என்று பேருள்ள ஒரு லிங்கத்தைக் காட்டியிருக்கிறது. ஒரே நிஜமான கதையின் இழைதான் மூன்று ஸ்தல புராணங்கள் வழியாகவும் போய்ப் பூர்த்தியாகிறது. இந்த மூன்றும் ஒன்றுக்கொன்று சுமார் நூறு, நூற்றைம்பது மைல் தள்ளியுள்ள ஊர்கள். ரயிலும் ப்ளேனும் இல்லாத காலத்தில் அது ஆயிரம், ஆயிரத்தைந்நூறு மைலுக்கு ஸமானம். ஆகவே இவ்வளவு தள்ளியுள்ள ஊர்களுக்கிடையே ஒரே கதையின் விவரங்கள் பொருத்தமாக அமைந்திருக்கின்றன என்றால் ஸ்தல புராணங்கள் நிஜம்தான் என்றுதானே ஏற்படுகிறது?

நவீன ஆராய்ச்சிக்காரர்கள், சாஸ்திரக்ஞர்கள் இருவருக்குமே விசித்ரமாகத் தோன்றினாலும் சரி, என் அபிப்ராயம் ஒன்றைச் சொல்கிறேன். வால்மீகி ராமாயணத்தை 'அதாரிடி'யாக எடுத்துக் கொள்கிற அளவுக்கு ஸ்தல புராணங்களை எடுத்துக் கொள்ள முடியாது என்று பொதுவாக ஒரு அபிப்ராயம் வந்துவிட்டாலும், வால்மீகி ராமாயணம், மற்றும் பாரதம், தற்போது authentic (அதிகார பூர்வமானது) என்று நினைக்கப்படுகிற விஷ்ணு புராணம், பாகவதம் முதலியவற்றை விடக்கூட ஸ்தல புராணங்கள்தான் நிஜத்தைச் சொல்வதில் பெரிய 'அதாரிடி' என்று நான் இம்மாதிரி அநேக திருஷ்டாந்தங்களிலிருந்து முடிவுக்கு வந்திருக்கிறேன்.

முதலில் தஞ்சாவூர் ஜில்லாவில் கும்பகோணத்திலும், மாயவரம் தாலுக்காவுக்குள்ளே திருவழுந்தூரைச் சுற்றியுள்ள ஏழெட்டு ஸ்தலங்களிலும் புராணத்து details [விவரங்கள்] tally ஆவதை [ஒன்றுக்கொன்று பொருந்துவதை] சொன்னேன். அப்புறம் ராமநாதபுரம்,

தஞ்சாவூர் இரண்டு ஜில்லாக்களில் உள்ள மூன்று க்ஷேத்திர ஸமாசாரங்கள் ஒத்து வருவதாகச் சொன்னேன். இப்போது இன்னும் பெரியதாக ஆல்-இண்டியா-ஸ்கேலில் ஒன்று சொல்கிறேன்.

'காவேரி புராண'த்தில் இரண்டு விதமான பாடங்கள் உண்டு. அதிலே ஒன்று ஸ்ரீரங்கத்திலுள்ள காவேரித் துறையான அம்மா மண்டபத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. துலா மாஸம் எனப்படும் ஐப்பசியில் காவேரி ஸ்நானம் மஹா விசேஷமாகும் என்று இதில் சொல்லியிருக்கிறது. இதிலே முக்கியமான கதாபாத்திரம் தர்மவர்மா என்ற சோழ ராஜா. இவன் நிசுளபுரியிலிருந்து கொண்டு ஆட்சி செய்தான் என்று சொல்லியிருக்கிறது. நிசுளம், நிசோளம், சோளம், சோளி என்ற ஸம்ஸ்கிருத வார்த்தைகளுக்கு 'உடம்போடு போட்டுக் கொள்கிற உறை மாதிரியான உடுப்பு' என்று அர்த்தம். "உறையூர்" எனப்படுவதே ஸம்ஸ்கிருதத்தில் "நிசுளபுரி"யாக இருக்கிறது! இதைத் தலைநகரமாகக் கொண்ட ராஜ்யத்துக்கும் சோள தேசம் (சோழ தேசம்) என்றே பெயராக இருக்கிறது! சோளப் பயிருக்கு என்ன விசேஷம்? "சோளக் கொண்டை" என்று, நன்றாக உறை தைத்துப் போட்டுக் கொண்ட மாதிரி இந்த தானியம் ஒன்றுதான் தானிய மணிகளைச் சுற்றிச் சோளி போட்டுக்கொண்டு வளர்கிறது! சோளி போட்டுக் கொண்டிருக்கிற தானியம் சோளம்! இந்த மொழி ஆராய்ச்சி இருக்கட்டும்.

'காவேரி புராண'த்தில் இன்னொரு பாடத்தில் மாயவரத்தில் இருக்கப்பட்ட காவேரித் துறையான துலா கட்டத்துக்கு முக்யத்வம் கொடுத்திருக்கிறது. இப்போது அதை லாகடம், லாகடம் என்று ஜனங்கள் சொல்கிறார்கள். இது துலா கட்டம் என்பதன் திரிபுதான். துலா ஸ்நானத்துக்கு வரும் யாத்திரிகளுக்கு வசதியாகக் கட்டப்பட்ட படித்துறைதான் துலா கட்டம் (லாகடம்) . மாயவரத்திலும் இன்னம் ஆறேழு காவேரிக் கரை க்ஷேத்ரங்களிலும் துலா கட்டங்கள் இருக்கின்றன. இவை அத்தனையும் அச்சடித்ததைப் போல் ஒரே ப்ளானில் கட்டப்பட்டிருக்கின்றன. துலாஸ்நான மகிமையைச் சொல்கிற இடத்தில், காவேரி புராணத்தில் ஒரு பாடத்தின்படி ஸ்ரீ ரங்கத்துக்கும் தர்மவர்மாவுக்கும் முக்யத்வம் தந்திருக்கிறதென்றால், இன்னொரு பாடத்தில் மாயவரத்துக்கும் அங்கே துலா ஸ்நானம்

செய்து மோக்ஷம் அடைந்த ஒரு பிராம்மண தம்பதிக்கும் முக்யத்வம் தந்திருக்கிறது.

நாத சர்மா என்று அந்த பிராம்மணனுக்குப் பேர். அவருடைய பத்தினி அநவத்யை. விதிவத்தாக துலா மாஸம் தினந்தோறும் இவர்கள் மாயவரத்தில் காவேரி ஸ்நானம் செய்தே மோக்ஷம் அடைந்தார்கள் என்று சொல்லியிருக்கிறது.

இவர்கள் பல இடங்களுக்கு க்ஷேத்ராடனம் பண்ணினதாகச் சொல்லுமிடத்தில் கேதாரத்துக்கு (கேதாரிநாத்) போனார்கள், காசிக்குப் போனார்கள் என்று சொல்லியிருக்கிறது.

இது இங்கே மாயவரத்தில் மட்டுமே தெரிந்த கதை. காசி இங்கேயிருந்து ஆயிரம் மைலுக்கு அப்பால் இருக்கிறது. காசியில் கங்கையில் இருக்கிற பல கட்டங்களில் ('காட்' என்று சொல்வார்கள்) 'கேதார் காட்' என்று ஒன்று இருக்கிறது. அந்தக் கேதார்காட்டில் அதைக் குறித்த ஸ்தல புராணம் சொல்லப்படுகிறது. அதிலே நாததசர்மா–அநவத்யை என்ற பிராம்மண தம்பதி ஸ்நானம் செய்த இடம் அது என்று வருகிறது!

நாதசர்மா கதை நம்மூர்க்காரர்களுக்கே அதிகமாகத் தெரியாது. ராமர், கிருஷ்ணர், ஹரிச்சந்திரன், நளன் முதலியவர்களைப் போல தேசம் முழுவதும் தெரிந்தவரில்லை, அவர். அப்படிப்பட்ட ஒருவரைப்பற்றி இங்கே மாயவரத்தில் சொல்கிற புராணக் கதையும், ஆயிரம் மைல் தாண்டி காசியில் சொல்வதும் 'டாலி' ஆகிறது என்பதைப் பார்க்கும்போது ஆச்சரியமாயிருக்கிறது!

ஸ்தல புராணங்களை நம்புவதற்கில்லை என்று சொல்வது எவ்வளவு தப்பு என்பதற்கு திருஷ்டாந்தமாகத்தான் இதைச் சொன்னேன்.

காசிக்கும் காஞ்சிக்கும் நடுவே ஆயிரம் மைலுக்கு மேல் இருக்கிறது. காசியில் அன்னபூர்ணி விசேஷம். காஞ்சீபுரத்திலும் ஜகன்மாதா 32 தர்மங்களைப் பண்ணும் போது அன்னதானம் பண்ணியிருக்கிறாள். காமாக்ஷி ஆலயத்தில் கர்ப்பகிருஹத்தின் நுழைவாசலுக்கு நேரே அன்னபூர்ணேச்வரிக்கு ஸந்நிதி இருக்கிறது! அதன் விமானத்தில்

தக்ஷிணதேசத்தில் வேறே எங்கேயும் இல்லாத விதத்தில் ஆறு சிகரங்கள் இருக்கின்றன. ஏன் இப்படி இருக்கிறது என்பதற்குப் பதில் காசியில் கிடைக்கிறது! காசியில் அன்னபூரணி விமானத்தில் இதே மாதிரி ஆறு சிகரங்கள் இருக்கின்றன. அதன் அச்சாகத்தான் இங்கே ஆயிரம் மைல் தாண்டி காஞ்சியிலும் இப்படி இருக்கிறது! சின்ன விஷயங்களில்கூட இவ்விதம் தேசத்தின் வெவ்வேறு கோடிகளில் உள்ள ஸ்தலங்களில் ஒற்றுமையிருப்பதால் க்ஷேத்ர ஐதிஹ்யங்களை லேசாகத் தள்ளி விடுவதற்கில்லை என்று தெரிகிறதல்லவா?

ஸ்தலபுராணங்களின் சிறப்பு

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

ஸ்தலபுராணங்களின் சிறப்பு

என் அபிப்ராயம், அநேக சரித்திர உண்மைகளைத் தெரிந்து கொள்ளவும், local culture, local custom [பிரதேச பண்பாடு, பிரதேச வழக்குகள்] முதலியவற்றைத் தெரிந்து கொள்ளவும் இந்த ஸ்தல புராணங்கள்தான் ரொம்பவும் உதவும் என்பது. இவற்றை நன்றாக ஒன்றோடொன்று சேர்த்து ஆராய்ச்சி பண்ணிப் பார்த்தால், பதினெட்டு மஹாபுராணங்களை விடவும் உபபுராணங்களை விடவும், இதிஹாஸங்களை விடவும் நம்முடைய சரித்திரம், பண்பாடு முதலியவற்றை அறிய இவை உதவும் என்று தோன்றுகிறது. இவை ஒன்றுக்கொன்று விஷயங்களை ஸப்ளிமென்ட் செய்து கொண்டு (கூட்டிக் கொண்டு) போவது மட்டுமின்றி மஹாபுராணக் கதைகளிலுங்கூட விட்டுப் போனதைப் பூர்த்தி பண்ணுகின்றன. 'ஹிஸ்டரி' (சரித்திரம்) சரியானபடி தெரிய ஸ்தல ஐதிஹ்யங்களும் புராணங்களும் நிரம்ப உதவும்.

உதாரணமாக, இப்போது படிப்பாளிகளில் பலருக்கு அத்வைதியான பகவத்பாதள் அநேக க்ஷேத்ரங்களுக்குப் போய் ஆலய பூஜா க்ரமங்களை சரிப்படுத்திக் கொடுத்தார் என்று சொன்னால் நம்பிக்கைப் பட மாட்டேன் என்கிறது. 'அவர் ஞான மார்க்கத்தைத்தான் சிலாகித்துச் சொன்னார். அதனால் இந்த பக்தி வழிபாடுகள், ஆலய ஆகம

ஸமாசாரங்கள் ஆகியவற்றில் அவர் பிரவேசித்திருக்க மாட்டார்' என்கிறார்கள். ஆனால் அவர் புதுக் களை ஊட்டினதாக க்ஷேத்ர ஐதிஹ்யங்களின்படி சொல்லப்படும் ஸ்தலங்களை (ஒன்றுக்கொன்று ஆயிரம், இரண்டாயிரம் மைல் தள்ளியிருப்பவைகளை) போய்ப் பார்த்தால் அவற்றுக்கு ஆசார்யாளின் ஸம்பந்தமிருப்பது அழுத்தமாகத் தெரிகிறது. வடக்கே ஹிமாசலத்துக்கு நடுவில் உள்ள பத்ரிநாத்துக்குப் போனால் அங்கே 'ராவல்' என்று பூஜை பண்ணுகிறவர் கேரளத்து நம்பூதிரியாக இருக்கிறார்! இங்கே இந்த சென்ன பட்டணத்திலேயே திருவொற்றியூரில் திரிபுரஸுந்தரி அம்மனுக்குப் பூஜை பண்ணுவது யார் என்று பார்த்தால் இதுவும் ஒரு நம்பூதிரி பிராம்மணர்தான்! ஆசார்யாள் நம்பூதிரிப் பிராமணர்தான் என்றும் அவர் புதிதாக ஜீவ களையூட்டிய பல ஸ்தலங்களில் நம்பூதிரிகளையே பூஜகர்களாக வைத்தார் என்றும் கர்ண பரம்பரையாகச் சொல்லி வருவதற்கு இப்படி பிரத்யக்ஷ ஸாக்ஷியம் இருக்கிறது.

தர்மோபதேசத்திலும் இந்த ஸ்தல புராணங்கள் மஹா புராணங்களுக்குப் பின்தங்கி விடவில்லை. சின்ன சின்ன தர்ம நுணுக்கங்கள் நமக்குக் கிடைத்துள்ள ஆயிரக் கணக்கான ஸ்தல புராணங்களில்தான் பளிச்சென்று போதிக்கப்பட்டிருக்கின்றன.

இப்போது படிப்பாளிகளில் மத நம்பிக்கை உள்ளவர்களுங்கூட ஸ்தல புராணம் என்பதை ரொம்பவும் மட்டம் தட்டினாலும், தமிழ் தேசத்தில் ஸமீப காலம் வரையில் அதற்குப் பண்டிதர்களிடையே நிரம்ப கௌரவம் இருந்திருக்கிறது. அதனால்தான் அநேக ரிஷிகளின் பெயரிலுள்ள புராணங்களைப் பின்பற்றித் தமிழிலும் மஹா பண்டிதர்களாக, பெரியவர்களாக இருந்த அநேகர் ஸ்தல புராணங்களை இயற்றியிருக்கிறார்கள். ஸ்தலபுராணம், மான்மியம், கலம்பகம், உலா என்றெல்லாம் அநேக க்ஷேத்ரங்களின் மகிமையைச் சொல்கிற சிறந்த தமிழ் நூல்கள் இருக்கின்றன. (மஹிமை வாய்ந்தது 'மாஹாத்மியம்'. அதைத் தமிழில் 'மான்மியம்' என்பார்கள்.) சங்ககாலம், தேவார–திவ்யப்பிரபந்த காலம், கம்பர்–ஒட்டக்கூத்தர் முதலானவர்களின் காவிய காலம் என்றெல்லாம் தமிழிலக்கியத்தைக் காலவாரியாகப் பாகுபடுத்தும்போது 16-ம் நூற்றாண்டைத் தலபுராண காலம் என்றே புலவர்கள் சொல்கிறார்கள். பதிநாலாம் நூற்றாண்டிலேயே உமாபதி

சிவாசாரியார் எழுதிய சிதம்பர மாகாத்மியமான 'கோயிற்புராணம்'தான் முன்னோடி என்கிறார்கள். கமலை ஞானப் பிரகாசரையும் சைவ எல்லப்ப நாவலரையும் முக்யமான புராணகர்த்தாக்களாகச் சொல்கிறார்கள். கந்தபுராணம் எழுதிய கச்சியப்ப சிவாசாரியார், திருவிளையாடற் புராணம் எழுதிய பரஞ்சோதி முனிவர், சைவ சமயாச்சாரியார்களின் ஒரு முக்யஸ்தரான உமாபதி சிவாசாரியார், சிவப்பிரகாச ஸ்வாமிகள், இரட்டைப் புலவர்கள், அந்தகக் கவி வீரராகவ முதலியார், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், திரிகூட ராசப்பக் கவிராயர் முதலான, நிரம்ப யோக்யதை வாய்ந்தவர்களெல்லாம் ஸ்தல புராணம் செய்திருப்பதிலிருந்து அதற்கு இருந்த பெருமை தெரிகிறது. உ.வே. ஸ்வாமிநாதய்யருடைய குருவான மஹாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை ஸமீபத்தில் அநேக க்ஷேத்ரங்களுக்கு ஸ்தல புராணம் எழுதிக் கொடுத்திருக்கிறார். இதனால் தமிழின் சமயத்துறையிலும், இலக்கியத் துறையிலும் 'தலபுராணம்' என்பதற்குத் தனிச்சிறப்பு உண்டு என்று தெரிகிறது.

பெரிய சம்ஸ்கிருத சாஸ்திர பண்டிதரான கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள் தமிழில் 'வேதாரண்ய மாஹாத்மியம்' எழுதியிருக்கிறார்.

ஸ்தல புராணம் பிரசாரம் ஆவதற்குத் தமிழ் தேசத்தில் ராஜாங்கமே ஆதரவுதந்து, உத்ஸாஹப்படுத்தியிருக்கிறது. 450 வருஷத்துக்கு முந்தி தஞ்சாவூரில் நாயக ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டதற்குக் காரணமாக இருந்த மந்திரி கோவிந்த தீக்ஷிதரின் விருப்பப்படியே, ஸம்ஸ்கிருதத்திலிருந்த பஞ்சநத (திருவையாறு) க்ஷேத்ர புராணத்தைத் தாம் தமிழில் பண்ணினதாக மொழி பெயர்ப்பாசிரியர் சொல்லியிருக்கிறார்.*

* மலிபுனல் சோழநாடு தஞ்சையிற்

காத்திடும் அரசர் மதியமைச்சன் ஒழி மறை தேர்

கோவிந்தா தீட்சத ராயன் திரு வாக்குடமையாலே..

புராண வடமொழி தமிழால் புகலலுற்றேன்

காத்துத்தருவது நம் கடமை

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

புராணம்

காத்துத்தருவது நம் கடமை

கோயில்களும் அவற்றில் நடக்கிற உத்ஸவாதிகளுந்தான் நம் மதத்துக்கு ஆயிரம் பதினாயிரம் காலமாக எத்தனையோ எதிர்ப்புக்கள் வந்தபோதிலும் முட்டுக் கொடுத்து அவற்றைத் தாக்குப் பிடிக்கச் சக்தி தந்து வந்திருக்கின்றன. ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு கதை உண்டு. ஒவ்வொரு உத்ஸவத்துக்கும் ஒரு ஐதிஹ்யம் (ஐதீகம்) உண்டு. இவை எல்லாம் புராண வாயிலாகவே நமக்குக் கிடைத்திருக்கின்றன. இந்த பெரிய மூலதனத்தை அலக்ஷ்யம் செய்வது ஜனங்களின் மத உணர்ச்சிக்கே பெரிய தீங்கு உண்டாக்கிவிடும்.

பிரிண்டிங் பிரெஸ் (அச்சுக்கூடம்) இல்லாத பூர்வகாலங்களிலும் ஓலைச் சுவடிகளாவே கண்ணெனக் காக்கப்பட்டு வழிவழியாக வந்துள்ள புராணங்களை இத்தனை புஸ்தகங்கள் அச்சுப் போட்டுக் கொண்டிருக்கிற இந்த நாளில் (அதில் பெரும்பாலானது ஆத்ம சிரேயஸுக்கு ஹானி செய்வதாகத் தான் இருக்கிறது) நாம் ஒரு பிரசாரமுமில்லாமல் மங்கும்படிச் செய்துவிட்டால் வருங்காலத்து ஜனங்களுக்கு நல்ல விஷயங்களில் ஈடுபடுத்தும் ஒரு பெரிய தூண்டுகோல் இல்லாமல் போய்விடும். இவற்றை எதிர்காலத்துக்கு ரக்ஷித்துத் தர வேண்டியது நம் கடமை.

சுவடிகள், நூலகங்கள்

தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்)

சுவடிகள், நூலகங்கள்

முன்னெல்லாம் வீட்டுக்கு வீடு நிறைய ஓலைச்சுவடிகள் இருக்கும். இதிஹாஸ புராணங்களும் ஸ்தல புராணங்களும் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள் அவற்றில் இருக்கும். சுவடி பழுதாக ஆரம்பித்தால் மறுபடி புது ஓலைகளில் அவற்றை எழுத்தாணியால் 'காப்பி' பண்ணுவார்கள். பழுதான சுவடிகளை ஒரு பக்கம் சேர்த்து வைப்பார்கள். இப்படிச் சேர்ந்ததை எல்லாம் 'பதினெட்டாம் பேர்' அன்றைக்குக் காவேரியிலோ

வேறு புண்ய தீர்த்தங்களிலோ யதோக்தமாகக் கொண்டு போய்ப் போட்டு விடுவார்கள்.

ஆடிமாதம் பதினெட்டாம் தேதி காவேரிக்கு விசேஷ தினம். அச்சமயத்தில் காவேரியில் புது வெள்ளம் வரும். 'பதினெட்டாம் பெருக்கு' என்பதைத்தான் 'பதினெட்டாம் பேர்' என்று சொல்கிறோம்.

கை ஒடிய இப்படி எழுத்தாணியால் ஓலை நறுக்குகளில் எழுதி எழுதி, எழுதினதைக் காப்பி பண்ணி நம் முன்னோர் நம் தாத்தா காலம் வரைக்கும் கொண்டுவந்து கொடுத்ததைப் பிற்பாடு காப்பி எடுக்காமலே காவேரியில் போட்டு விட்டு அதற்கும் சேர்ந்து "ஸ்நானம்" பண்ணிவிட்டார்கள். இதனால் இப்போதே அநேக புராணங்கள் மறுபடி நமக்குக் கிடைக்குமா என்ற ரீதியில் நஷ்டமாகி விட்டன. புராணங்கள் மட்டுமில்லை. இதர சாஸ்திரச் சுவடிகளும்தான்! சேகரிக்க முடிந்த சுவடிகளையெல்லாம் எத்தனையோ சிரமப்பட்டு அலைந்து திரிந்து சேகரித்து சில லைப்ரரிகளில் சேர்த்து வைத்திருக்கிறது. தஞ்சாவூர் ஸரஸ்வதி மஹால் லைப்ரரி, மெட்றாஸில் ஓரியன்டல் மானுஸ்க்ரிப்ட்ஸ் லைப்ரரி, அடையாறு லைப்ரரி, இவற்றில் இப்படி நிறையச் சுவடிகளைச் சேர்த்து வைத்திருக்கிறது. அடையாற்றிலே தியாஸாஃபிகல் ஸொஸைடிகாரர்கள் இதிலே செய்திருக்கிற பணி ரொம்பவும் உயர்ந்தது.

தஞ்சாவூர் ஸரஸ்வதி மஹாலிலும் இப்படியே சரபோஜி முதலான ராஜாக்கள் அரும்பாடுபட்டு ஏட்டுச் சுடிகளைச் சேகரித்து வைத்தார்கள்.

ஏடு என்றால் நடுவிலே நரம்பும் அதற்கு இரண்டு பக்கம் இலையுமாக இருக்கிறதில் ஒரு பக்கம் என்று அர்த்தம். வாழையிலையை இப்படிக் குறுக்காகப் பிளந்து ஒவ்வொரு பாதியையும் ஏடு என்கிறோம். பனை மட்டையில் இருக்கிறதை இப்படியே நடு நரம்பை எடுத்து விட்டு ஒவ்வொரு பக்கத்தையும் எடுத்து ஏடு என்பதுதான் ஏட்டுச்சுவடி. அது தான் நீண்ட நாளானாலும் பழுத்துப்

போகாத, பழுதாகாத nature -ன் paper (இயற்கையின் காகிதம்..) !அதில் எழுத்தாணியை வைத்துக் கொண்டு செதுக்கி எழுத வேண்டும். ஞானசம்பந்தரின் தேவார ஏடு வைகையை எதிர்த்துக் கொண்டு கரையேறிய இடம் இன்றைக்கும் பாண்டிய நாட்டில் திருவேடகம் (திரு ஏடு அகம்) என்ற ஸ்தலமாக விளங்குகிறது. அங்கே ஈச்வரனுக்குப் 'பத்ரிகா பரமேச்வரர்' என்று பெயர். இப்போது 'பேப்பர்' என்றால் காகிதம் என்பது ஒரு அர்த்தம்; "மாகஸின்" (ஸஞ்சிகை) என்றும் அர்த்தம். "மாகஸின்" என்பதை "பத்திரிகை" என்கிறோம். நேச்சரின் பேப்பரான இயற்கை பத்திரிகை கரையேறின ஊரில் ஸ்வாமியே 'பத்திரிகா பரமேச்வரன்' என்று ஜர்னலிஸ்ட் பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்! 'பத்ரம்', 'பத்ரிக' என்றாலும் இலை என்றே அர்த்தம். இலையிலிருந்து வந்தது தானே ஏடு? அதனால் ஏட்டுக்குப் பத்திரிகை என்று பெயர். இது தான் அந்த நாள் காகிதமாக இருந்ததால் கடிதாசும் இதிலேதான் எழுதுவார்கள். அதனால் கடிதாசுக்குப் 'பத்ரம்' என்றே பேர் வந்து விட்டது. இதெல்லாம் இருக்கட்டும்.

ஸரஸ்வதி மஹாலைப் பற்றிச் சொன்னேன். இதைப் பற்றி ஸ்வாரஸ்யமான ஒரு விஷயம் நினைவு வருகிறது.

பழைய காலத்தில் வெளிதேசத்திலிருந்து படையெடுக்கிறவர்கள் ஒரு தேசத்திற்கு விளைவிக்கிற மிகப் பெரிய ஹானி, அந்த தேசத்தின் லைப்ரரியைக் கொளுத்தி விடுவதுதான் என்று வைத்துக் கொண்டிருந்தார்கள். ஏனென்றால் ஒரு தேசத்தின் பொருளாதாரத்துக்கு கஜானா எப்படியோ அப்படி அதன் அறிவுக்குக் கஜானாவாக இருந்தது இந்த லைப்ரரிதான்.

கலாசார கஜானா என்று சொல்லலாம். இப்போது போல் அப்போது பிரன்டிங் பிரஸ் இல்லாததால் பல பிரதிகள் கிடையாது. சில நூல்களில் ஒரே பிரதிதான் இருக்கும். இப்படிப்பட்ட சுவடிகள் கொண்ட லைப்ரரியைக் கொளுத்தி விட்டால் அது அந்த தேசத்தின் கஜானாவைக் கொள்ளையடிப்பதற்கு மேலே, அந்த தேசத்தின் பெண்களை மானபங்கபடுத்துவதற்கு மேலே என்று இதர தேசத்தார் நினைத்தார்கள். எதிரி தேசத்து அறிவுச் செல்வங்களான புஸ்தகங்களைக் கொளுத்துவது, அவர்களுடைய கோயில்களை இடிப்பது, அந்த தேசத்து ஸ்திரீகளை மானபங்கப்படுத்துவது முதலானவற்றுக்கு நம்முடைய ராஜநீதி சாஸ்திரங்களில் இடமே கிடையாது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளவேண்டும். ஜைனம் போன்ற ஒரு எதிராளி மதத்தைச் சேர்ந்த அமரஸிம்ஹன் மாதிரியானவர்கள் ஹிந்து சமயாசாரியர்களிடம் வாதத்தில் தோற்றவுடன் தாங்களாகவே தங்கள் சுவடிகளை நெருப்பிலே போட்டாலும் நம் ஆசாரியாளைப் போன்றவர்கள், "கூடாது, கூடாது! எந்த தத்வத்தைச் சேர்ந்ததானாலும் சரி; ஒரு புஸ்தகத்தை இல்லாமல் பண்ணக்கூடாது" என்று எதிராளியின் கையைப் பிடித்துத் தடுத்திருக்கிறார்கள்.

இதர தேசத்தவர்களுக்கோ பண்பாட்டில் சிறந்த இன்னொரு ராஜ்யத்தைப் பிடிக்கிறபோது அங்கேயுள்ள லைப்ரரியை கொளுத்துவது பெரிய சொக்கப்பானை போன்ற உத்ஸாஹ விளையாட்டு! 'அறிவுச் செல்வம் எல்லாருக்கும் பொது; எதிரியுடைய ஊரைச் சேர்ந்ததானாலும் அதை நாமும் எடுத்துக் கொண்டு பயனடையலாம்' என்ற

விவேகமில்லாமல், தங்களைவிட அறிவாளிகளாக உள்ள சத்ருக்களின் புஸ்தகங்களை பஸ்மம் பண்ணி அவர்களை வயிறெரியச் செய்ய வேண்டும் என்று நினைத்து இப்படிப்பட்ட பெரிய அக்ரமத்தைச் செய்தார்கள். இப்படித்தான் ஈஜிப்டில் [எகிப்தில்] அலெக்ஸான்ட்ரியா என்ற இடத்தில் அலெக்ஸான்டர் காலத்திலிருந்து சேகரிக்கப்பட்ட அநேகத் துறைகளில் உயர்ந்த புஸ்தகங்களைக் கொண்ட லைப்ரரியையும்; டர்க்கியில் (துருக்கியில்) இஸ்டான்புல் என்று இப்போது சொல்லப்படுகிற கான்ஸ்டான்டினோபிளில் கிரேக்கர்கள், ரோமானியர்கள் ஆகியவர்கள் பல காலமாகப் பேணி வளர்த்த லைப்ரரியையும் பதினைந்து – பதினாறாம் நூற்றாண்டில் துருக்கர்கள் படை எடுத்தபோது இருந்த இடம் தெரியாமல் கொளுத்திவிட்டார்கள். பழைய சங்க நூல்களை ஸமுத்திரம் கொண்டு போய்விட்டது என்கிற மாதிரி இயற்கை உத்பாதமாக இல்லாமல், சத்துருக்களின் பண்பாட்டுக் குறைவால் அந்த தேசங்களில் பழைய அறிவு நூல்களில் பல வீணாகி விட்டன.

இங்கே நம் தக்ஷிண தேசத்திலும் கர்நாடிக் நவாப் முதலியவர்கள் கை ஓங்கித் தமிழ்நாடு முழுவதிலும் துருக்க சைன்யம் பரவினபோது தஞ்சாவூர் ஸரஸ்வதி மஹாலுக்கு ஆபத்து வந்துவிட்டது. அதைக் கொளுத்திவிட்டால் தஞ்சாவூர் பெரிய கோவிலை இடிப்பதற்கு ஸமானம் என்று ரொம்ப ஆவலாக சத்ருக்கள் வந்தார்கள். அப்போது டபீர் பந்த் என்ற மஹாராஷ்டிர பிராம்மணர் தஞ்சாவூர் ராஜாவுக்கு (சிவாஜி வம்சத்தவருக்கு) மந்திரியாக இருந்தார். அவருக்கு

ஸமயோசிதமாக ஒரு யுக்தி தோன்றிற்று. லைப்ரரியைக் கொளுத்த வேண்டும் என்று வந்தவர்களிடம், "இதிலே எங்கள் ஹிந்து புஸ்தகங்கள் மட்டும் இல்லை. குரான் பிரதிகளும் வைத்திருக்கிறோம்" என்றார். உடனே, வந்தவர்கள் "குரான் இருக்கிறதா? அப்படியானால் கொளுத்த மாட்டோம்" என்று நமஸ்காரம் பண்ணிவிட்டுப் போய்விட்டார்கள்.

அப்புறம் இங்கிலீஷ்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள் எல்லோரும் வந்தார்கள். அவர்களுக்கு எதிலும் ஆராய்ச்சி புத்தி ஜாஸ்தி. இன்னொரு தேசத்து விஷயமானாலும் கொளுத்துவது என்று இல்லாமல், அதனால் தாங்கள் பிரயோஜனம் அடைய முடியுமா என்று பார்ப்பார்கள். ஜெர்மன் தேசத்தவர்களும் கலாசார ஆராய்ச்சி , மொழி ஆராய்ச்சிக்காக வந்து நம் நாட்டுச் சுவடிகளை எல்லாம் தேடித் தேடிப் பார்த்தார்கள். இதனால் நமக்கே பல புது சாஸ்திரங்களை இந்த அந்நிய தேசத்தவர்கள்தான் தேடிப் பிடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நம் நன்றி தெரிவிக்கவேண்டும். குறிப்பாக மெக்கென்ஸி என்பவர் ஸர்வேயர்-ஜெனரலாக இருந்தபோது ஊர் ஊராகப் போய் கிடைக்கக்கூடிய ஸகல ஏட்டுச்சுவடிகளையும் கலெக்ட் பண்ணி, அப்போது இதற்காக சர்க்காரின் டிபார்மென்ட் இல்லாவிட்டாலுங்கூட, அங்கங்கே படிக்கத் தெரிந்தவர்களைக் கொண்டு படிக்கப் பண்ணி, எல்லாவற்றையும் ரிகார்டாக preserve பண்ணி வைத்ததைச் சொல்ல வேண்டும். மெக்கென்ஸியின் ஆள் கும்பகோணத்தில் நம் மடத்துக்குக்கூட வந்து விவரங்கள் சேகரித்துக் கொண்டு போயிருக்கிறான்.

ஸரஸ்வதி மஹால் முதலிய இடங்களில் இருந்த ஸயன்ஸ், குறிப்பாக தநுர்வேதம், ஸம்பந்தமான நம் பழைய சுவடிகளை மேல் நாட்டுக்காரர்கள் எடுத்துக் கொண்டே போய்விட்டார்கள் என்று சொல்கிறார்கள். இப்படி எடுத்துக் கொண்டு போய்தான் ஹிட்லர் சில தினுஸான குண்டுகள், ப்ளேன்கள் முதலியன செய்தான் என்கிறார்கள்.

இருந்தாலும் இன்னமும் போஜராஜாவின் 'ஸமாராங்கண ஸூத்ரம்' போன்ற நம்மிடமே உள்ள சுவடிகளிலிருந்து மந்திர பூர்வமான அஸ்திரங்கள் மட்டுமின்றி, scientific [விஞ்ஞான பூர்வமான] ஆயுதங்களான சஸ்திரங்களும் நம் தேசத்தில் நீண்ட காலத்துக்கு முன்பே இருந்திருப்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. வராஹமிஹிரரின் 'ப்ருஹத் ஸம்ஹிதை' மாதிரியான 'டைஜஸ்டுகள்' நம் நாட்டின் அநேகத் துறை சாஸ்திரங்களையும் ஸயன்ஸ்களையும் சேர்த்துக் கொடுத்திருக்கின்றன.

சாஸ்திரங்கள், மற்ற வித்யையகள், நம்முடைய மருத்துவம், விஞ்ஞானம் எல்லவாற்றுக்கும் பழைய சுவடிகள் இருக்கின்றன. புராணங்களும் இவற்றில் இருக்கின்றன. இவைகளில் ஸ்தல புராணங்கள் மற்றவற்றை விடவும் ரொம்ப நஷ்டப்பட்டிருக்கின்றன. எஞ்சியதை நாம் காப்பாற்ற வேண்டும். தேடித் தேடிப் புதுசாகக் கிடைப்பதைச் சேகரம் செய்ய வேண்டும்.

*　　*　　*

வேதம் சொல்லும் பரமாத்ம தத்வத்தையும் தர்மங்களையும் நன்னெறிகளையும் ஒழுக்கங்களையும்

ஸகல ஜனங்களுக்கும் விளக்கிச் சொல்லி ரஸிக்கும்படியான கதைகளைச் சொல்லி அவர்கள் அவற்றைப் பற்றியொழுகும்படிச் செய்திருப்பது புராணத்தின் சக்தியினால்தான். ஹ்ருதயத்தைத் தொடும் விதத்தில் உபதேசம் பண்ணுபவை அவை. நம்முடைய ஜனங்களின் தொன்றுதொட்டு வந்த நற்பண்புகளுக்கு முதுகெலும்பு புராணம்தான். ஆகையால் இப்போது அதனிடம் நமக்கு இருக்கும் அசட்டை மனப்பான்மையை மாற்றிக் கொண்டு, அதை ஒரு செல்வமாகக் காப்பாற்றுவோம். பல புராணங்களையும் ஒன்று சேர்த்து ஒப்பிட்டு ஆராய்ச்சிகள் செய்வோம்; இதனால் நாம் பயனடைந்து லோகத்துக்கும் பயனைத் தருவோம்.

தர்ம சாஸ்திரம் (ஸ்மிருதி)

புராண லக்ஷியத்துக்கு நடைமுறை வழி

தர்ம சாஸ்திரம் (ஸ்மிருதி)

புராண லக்ஷ்யத்துக்கு நடைமுறை வழி

புராண புருஷர்கள்தான் நமக்கு ideal (ஆதரிசமானவர்கள், வழிகாட்டிகள்) என்று தெரிகிறது. அவர்களுடைய கதைகளைப் படித்தால் அவர்களுடையது மாதிரியான உயர்ந்த குணங்களைப் பெற வேண்டுமென்ற ஆசை உண்டாகிறது. ஆனாலும் ஆசை உண்டாகிறதே தவிர, அந்த உத்தம குணங்களை சம்பாதித்துக் கொண்டு எந்த சந்தர்ப்பத்திலும் அவற்றிலிருந்து நழுவாமல் இருப்பதென்றால், இது அஸாத்தியமானதாக இருக்கிறது.

காரியம் ஏதாவது பண்ணிக்கொண்டேயிருப்பதுதான் மநுஷ்யனின் இயற்கையாக இருக்கிறது. க்ஷண

காலம்கூட மனஸை நிறுத்திவிட்டு இருக்க முடியமாட்டேன் என்கிறது. பகவானும் கீதையில், "மநுஷ்யனானவன் ஒரு நொடியும் சும்மா இல்லாமல் காரியம் பண்ணிக் கொண்டேயிருக்கும் படியாகத்தான் பிரகிருதி (இயற்கை) அவனை ஏவிக்கொண்டிருக்கிறது. அதனால் அவன் இந்தக் காரியங்களைப் பண்ணுகிற சரியான வழியைத் தெரிந்துகொண்டு அப்படியே பண்ணி அதனால்தான் சித்தத்தை சுத்தி செய்து கொண்டு உத்தம குணங்களை ஸம்பாதித்துக் கொண்டு, அப்புறம் காரியங்களை விட்டு, குணங்களைக்கடந்து குணாதீதனாக, ஞானியாக, பிரம்மவித்தாக ஆக வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்.

நம் மதத்தின்படி நடந்து கொண்டு, பாபங்களைப் போக்கிக் கொண்டு ஆத்மாவை சுத்தப்படுத்திக் கொண்டு சாச்வத ஸௌக்கியமான மோட்சத்தை அடைய வேண்டுமானால் நாம் என்னென்ன காரியங்கள் பண்ண வேண்டும்? பாபம் பண்ணியதால்தானே இந்த ஜன்மா வருகிறது? அதை அலம்பிக்கொள்ள வேண்டும். புதிதாகப் பாபம் பண்ணாமலிருக்கவேண்டும். நம் மனஸை, குணத்தைப் பாபத்தில் போகாதபடி உசத்திக் கொள்ள வேண்டும். இதற்குத்தான் மதம் இருக்கிறது. இப்படி நம் மதப்படி நாம் செய்ய வேண்டியதெல்லாம் என்னென்ன? இது நமக்குத் தெரியவில்லை.

பொதுவாக நாம் இப்போதிருக்கிற நிலைமையில் ஏதோ ராமாயணம், பாகவதம், புராணம் கொஞ்சம் தெரிகிறது. இதில் கதாபாத்திரங்கள் இன்னின்ன மத அநுஷ்டானங்களைச் செய்ததாக அங்கங்கே வருகிறது.

ஆனால் அங்கங்கே வருகிறதே யொழிய, ஒரே இடத்தில் ஒரே சீராகக் கர்மாக்களை அமைத்துக் கொடுக்கவில்லை (codify பண்ணவில்லை). ஒவ்வொரு அநுஷ்டானத்தையும் எப்படிப் பண்ணுவது என்று procedure -ம் [செய்முறையும்] இந்தப் புராண இதிஹாஸங்களில் சொல்லப்படவில்லை. அதனால் நமக்கு அதைப் பார்த்து அதன்படிப் பண்ணுவது என்பது சரியாக வரவில்லை.

புராண இதிஹாஸங்கள் பக்தியைப் பிரதானமாகச் சொல்கின்றன. ஆனால் நாம் தினமும் அறுபது நாழியும் பக்தி பண்ணிக்கொண்டு, பூஜையும் தியானமும் பண்ணிக்கொண்டு, ஸ்தோத்திரம் சொல்லிக் கொண்டு இருக்க முடியுமா? முடியாதே! குடும்பத்துக்காக நாம் அநேக காரியங்கள் செய்ய வேண்டும். குளிப்பது, சாப்பிடுவது போன்றதைச் செய்யவேண்டும். இது போகவும் மிச்ச நாழி முழுதும் பூஜையிலேயே இருப்பது என்றால் முடியாது. அலுப்புத் தட்டிப் போகும். வேறு ஸத்கர்மாக்கள் நமக்கு வேண்டும். அவற்றை எங்கேயிருந்து தெரிந்து கொள்வது?

தர்ம சாஸ்திரங்களிலிருந்துதான்.

பதினாலு வித்யைகளில் புராணத்துக்கப்புறம் கடைசியாக வருவது இந்த தர்ம சாஸ்திரமே.

புராண புருஷர்கள் நமக்கு லட்சியத்தைக் காட்டுகிறார்கள். அந்த லட்சியத்தை அடைவதற்கு வழி என்ன என்றால் கர்மாநுஷ்டானத்தில் தான் ஆரம்பிக்க வேண்டும். இப்படி நாம் நடைமுறையில், practical -ஆகச் செய்ய வேண்டியதையெல்லாம் சொல்வது தர்ம சாஸ்திரம். நாம்

என்னென்ன செய்ய வேண்டும் என்று வேதத்தில் அங்கங்கே உதிரியாகச் சொல்லியிருக்கிறவற்றையெல்லாம் நன்றாக வகைப் படுத்தி விவரமாகச் சொல்கிற வேத உபாங்கம் இது.

குடும்பக் காரியம், சொந்தக் காரியம், குளிப்பது, சாப்பிடுவது முதற்கொண்டு எல்லாவற்றையும் ஒரு நிர்ணயப்படி, நியதிப்படி செய்யவேண்டும். வேத தர்மத்தில் மநுஷ்ய வாழ்வின் ஸகல அம்சங்களையும் ஆத்மாபிவிருத்திக்கு அநுகூலமாக ஆக்கி விதிகள் போட்டிருக்கிறது. இப்படிப் படுத்துக் கொண்டால் சிரேயஸ், இப்படி ட்ரெஸ் பண்ணிக்கொண்டால் அது ஆத்மாவுக்கு நல்லது, இப்படி வீடு கட்டினால்தான் அநுஷ்டானத்துக்கு ஸாதகமாக இருக்கும் என்பதாக வாழ்க்கையில் எல்லா விஷயங்களையும் மதத்தோடு அது சம்பந்தப்படுத்தி விடுகிறது. லௌகிக வாழ்க்கை (secular life), மத வாழ்க்கை (religious life) என்று அது இரண்டாகப் பிரிக்கவில்லை. லௌகிகம் கூட மதத்தில் கொண்டு சேர்க்கும்படியாகவே வேத தர்மம் அமைந்திருக்கிறது. எந்தக் கர்மாவைப் பண்ணினாலும் அதை மந்திர பூர்வமாகச் செய்யும்படிப் பண்ணி ஆத்மாபிவிருத்திக்கு அங்கமாக ஆக்கிவிடுகிறது. லௌகிகத்தையும் ஆத்மிகத்தையும் சேர்த்துக் கொடுப்பது போலவே, தனி மநுஷ்யன் தன் சிரேயஸுக்காக (individual salvation)காகப் பண்ண வேண்டியதிலேயே ஸமூக வாழ்க்கையின் ஒழுங்கும், லோக க்ஷேமமும் (general welfare -ம்) சேரும்படியாக இணைத்துக் கொடுத்திருக்கிறது.

இப்போது நாம் தெரிந்து கொண்டிருக்கிற புராணங்களிலுள்ள பக்தி வேதத்திலே இருக்கிறது. ஆனால்

அதோடுகூட ஏகப்பட்ட கர்மாவும் இருக்கிறது. பக்தியையே பூஜை என்ற கர்மாவாகப் பண்ணும்போது அதற்கும் நிறைய விதிகள் இருக்கின்றன. பூஜையோடு கூட அநேக யாகங்கள், சிராத்தம், தர்ப்பணம் எல்லாம் வேத தர்மத்துக்கு வெகு முக்யமாக இருக்கின்றன.

வேதத்தில் இத்தனையும் இருக்கின்றன. ஆனால் ஒரே இடத்தில் எல்லாவற்றையும் முறைப்படுத்தி (Codify -பண்ணி) கொடுத்திருக்கவில்லை. ஒவ்வொரு கர்மாவுக்கும் procedure விரித்துச் சொல்லி இருக்கவில்லை.

"வேதோ (அ) கிலோ தர்ம மூலம்" என்று மநு சொல்கிறபடி வேதந்தான் நாம் என்னென்ன செய்யவேண்டும் என்ற நெறிகளுக்கும் காரியங்களுக்கும் மூலமாக, வேராக, ஊற்றாக இருக்கிறது.

ஆத்ம க்ஷேமத்துக்காக நாம் என்ன செய்ய வேண்டுமோ அதிலேயே லோக க்ஷேமத்தையும் பயனாக ஏற்படுத்தித் தருவது வேதம். இந்த இரண்டும் ஏற்பட எது உதவுகிறதோ அதுதான் 'தர்மம்' என்பது. அந்த தர்ம மூலமாக வேதம் இருப்பது வாஸ்தவம்தான். வேதோ (அ)கிலோ தர்ம மூலம்.

ஆனால் வேதங்களைப் பார்த்தால் ஒரு கிரமமாக, திட்டவட்டமாக நாம் செய்ய வேண்டியவற்றுக்கு 'லிஸ்ட்' இல்லையே! இப்படி இப்படி செய்ய வேண்டுமென்ற விரிவான விளக்கமும் இல்லையே! அனந்தமான வேதத்தில் நமக்குக் கிடைத்திருப்பதே கொஞ்சந்தான். நமக்குக் கிடைத்திருக்கிற வேத வாக்கியங்களைப்

பார்த்தாலும் அவற்றில் அநேகத்துக்கு அர்த்தங்கூட முழுக்கத் தெரிய மாட்டேன் என்கிறதே!

இப்படி இருக்கிற வேதங்களிலிருந்துதான் கல்பம் என்கிற ஆறாவது வேதாங்கத்தில் உள்ள தர்ம ஸூத்ரங்களும் க்ருஹ்ய ஸூத்ரங்களும் ச்ரௌத ஸூத்ரங்களும் ஒருத்தன் பண்ண வேண்டிய கர்மாக்களைத் திரட்டி ஒழுங்குபடுத்திக் கொடுத்திருக்கின்றன. ஆனால் இதுவும் சுருக்கமாகத்தான் இருக்கும். எல்லா அம்சங்களையும் ஒரே இடத்தில் சொல்வதாகவும் இராது. இவையும் விரிவான- guide ஆக இல்லை. இவற்றை சந்தேகத்துக்கு இடமில்லாமல் விரித்துச் சொல்கிறவைதான் தர்ம சாஸ்திரங்கள்.

தர்ம ஸூத்ரங்கள் (ஆபஸ்தம்பர், கௌதமர் முதலானவர்கள் செய்தவை) சின்னச் சின்ன வாசகங்களாக ஸூத்ர லக்ஷணப்படி இருக்கும். ஸூத்ரம் என்றால் ரத்னச் சுருக்கமாகத்தான் இருக்க வேண்டும். தர்ம சாஸ்திரங்கள் என்கிற ஸ்மிருதிகள் (மநு, யாக்ஞவல்கியர், பராசரர் முதலானவர்கள் செய்தவை) ச்லோக ரூபத்தில் விரிவாக இருக்கும்.

ஆனால் எல்லாவற்றிற்கும் பொதுவான ஆதாரம் வேதந்தான். நாம் என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கு வேதத்தின் ஆக்ஞைகளைத்தான் மேற்கொண்டு, அதன்படி நடக்க வேண்டும். வேதக் கட்டளைகளை ஓரளவுக்கு முறைப்படுத்திச் சொல்கிற கல்பத்தை நன்றாக அலசி விஸ்தாரம் பண்ணுவதே தர்ம சாஸ்திரம். யக்ஞ பூமி நிர்மாணம், க்ருஹ நிர்மாணம்

போன்றவற்றையே கல்பம் அதிகம் சொல்கிறதென்றால் மநுஷ்யனுக்கு ஸகல விதத்திலுமான நடத்தைமுறையையும் (code of conduct) விவரமாகச் சொல்வது தர்ம சாஸ்திரம்.

"நான் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால் இந்தக் காரியத்தைச் செய்வது சரியா, தப்பா என்று வேதத்தில் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லையே! 'அநந்தா வை வேதா:' என்றபடி வேதம் அளவு கடந்ததாக அல்லவா இருக்கிறது? இவற்றில் பெரும்பாலானவை இப்போது மறைந்தே போய் விட்டன. அதனால் எங்கே இந்தக் காரியத்தை இப்படித்தான் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லையே! இவை எல்லாவற்றையும் படித்தவர்கள் யாரும் இருப்பதாகவும் தெரியவில்லையே? என்ன செய்வது?" என்று கேள்வி.

ஸமுத்திரம் மாதிரி விரிந்து கிடக்கிற வேதங்களிலிருந்து நமக்கு வேண்டிய காரியங்களைப் பொறுக்கி எடுப்பது அஸாத்யம்தான்.

"இப்படி செய் என்று வேதத்தில் இதைப்பற்றிச் சொல்லியிருப்பது தெரிந்தால் வேத வாக்கியப்படியே செய்து விடுவேன். அது தெரியாதபோது என்ன செய்வது?"

இதற்கு மநு பதில் சொல்கிறார்: "சரி, அப்படியானால் ஒன்று சொல்கிறேன். அந்த வேதங்களை எல்லாம் நன்கு அறிந்திருந்த மஹரிஷிகள் ஸ்மிருதிகள் என்று செய்திருக்கிறார்கள். அதில் என்ன சொல்லியிருக்கிறது என்று பார்" என்கிறார். ஸ்மிருதி என்பதே தர்ம சாஸ்திரம்.

வேதோகிலோ தர்மமூலம்| தத்விதாம் ச ஸ்ம்ருதிசீலே|

"ஸ்ம்ருதி" என்றால் நினைவுக் குறிப்பு; விஸ்ம்ருதி என்றால் பைத்தியம். "வேதத்துக்கு ஸ்ம்ருதி இருக்கிறதே! அதாவது, நினைவுக் குறிப்பு (notes) இருக்கிறதே! வேதங்களையெல்லாம் நன்றாக உணர்ந்த மஹரிஷிகள் அவற்றிலுள்ள தர்மங்களையும், கர்மங்களையும் ஒரே இடத்தில் தொகுத்து முறைப்படுத்திக் குறிப்பாக எழுதி வைத்தவையே இவை. இந்த ஸ்மிருதிகளில் நமக்கு நன்றாக அர்த்தம் புரிகிற பாஷைகளில் எழுதப்பட்டவை. அவற்றைப் பார். நீ என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது, எப்படிச் செய்ய வேண்டும் என்பவையெல்லாம் அவற்றில் ஸவிஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறது" என்கிறார் மநு. "தர்ம சாஸ்திரம்" என்று சொல்வது இந்த ஸ்ம்ருதிகளைத்தான்.

வேதம் சொல்லும் காரியங்களை, அநுஷ்டானங்களை எப்படிப் பண்ண வேண்டும் என்று வேதாங்கங்களில் ஆறாவதாக உள்ள 'கல்பம்' சொல்கிறது. கல்பத்தில் அடங்கும் க்ருஹ்ய ஸூத்ரங்களும், ச்ரௌத ஸூத்ரங்களும், தர்ம ஸூத்ரங்களும் வேள்வி முதலானவற்றின் செய்முறையைச் சொல்கின்றன. இதையே ஒரு ஜீவன் கருவாக மாதாவின் கர்ப்பத்தில் உருவாவதிலிருந்து, அது பிறந்து வளர்ந்து, கலியாணம் பண்ணிக்கொண்டு, குடும்பம் நடத்தி, கடைசியில் சிதையில் வைத்து தகனம் செய்யப்படும் வரையில் இப்படியிப்படிச் செய்ய வேண்டும் என்று அடியிலிருந்து நுனி வரையில் நுணுக்கமாகச் சொல்பவையே ஸ்ம்ருதிகள். தினந்தினமும்

எழுந்திருந்ததிலிருந்து தூங்குகிற வரையில் ஒருத்தன் என்னென்ன செய்ய வேண்டும், எப்படி யெப்படிச் செய்ய வேண்டும் என்று அது routine போட்டுக் கொடுத்து விடுகிறது.

ஸ்மிருதியைப் பார்த்து விட்டால் போதும். நம் மதப்படி நாம் செய்ய வேண்டியதெல்லாம் என்ன என்பது பூர்ணமாகத் தெரிந்துவிடும்.

ஸ்மிருதிகளும், துணை நூல்களும்

ஸ்மிருதிகளும், துணை நூல்களும்

மநு, பராசரர், யாக்ஞவல்கியர், கௌதமர், ஹாரீதர், யமன், விஷ்ணு, சங்கர், லிகிதர், பிருஹஸ்பதி, தக்ஷன், அங்கிரஸ், பிரசேதர், ஸம்வர்த்தர், அசனஸ், அத்ரி, ஆபஸ்தம்பர், சாதாதபர் என்றிப்படிப் பதினெட்டு மஹரிஷிகள் தங்களுடைய அதிமாநுஷ்ய சக்தியால் வேதங்களை முழுக்கத் தெரிந்து கொண்டு அதிலிருந்து தொகுத்து தர்ம சாஸ்திரங்களைத் தந்திருக்கிறார்கள். இவை மநு ஸ்மிருதி, பராசர ஸ்மிருதி, யாக்ஞவல்கிய ஸ்மிருதி என்று அவரவர் பெயரால் வழங்குகின்றன. இவற்றைப் பார்த்தால் போதும், வாழ்க்கையில் செய்யவேண்டிய ஸகல அநுஷ்டானங்களையும் தர்மங்களையும் தெரிந்து கொண்டு விடலாம்.

18 ஸ்மிருதிகளைத் தவிர, உப ஸ்மிருதிகள் என்று 18 துணை நூல்கள் இருக்கின்றன*.

ஸ்ரீமத் பகவத் கீதையையும் ஸ்மிருதிகளோடு சேர்த்துச் சொல்கிற வழக்கம் உண்டு. நேராக வேத மந்திரங்களாக உள்ள 'ச்ருதி'யாக இல்லாமலும் நம் மதத்துக்கு

ஆதாரமாயிருப்பதால் அதை 'ஸ்மிருதி'ப் பிரமாணமாகச் சொல்கிறார்கள்.

இப்படி அநேகம் ஸ்மிருதிகள் இருப்பதால் இவற்றிலும் ஒன்றிலிருப்பது இன்னொன்றில் இல்லாமல் இருக்கலாம். சில சில காரியங்கள் ஒன்றுக்கொன்று வித்யாஸப்படலாம். அதனால் என்னென்ன செய்ய வேண்டும் என்பதில் இன்னமும் கொஞ்சம் ஸந்தேஹம் ஏற்படுகிறது. இந்த ஸந்தேகத்தையும் போக்குவதாக 'தர்ம சாஸ்திர நிபந்தன'ங்கள் என்று சில புஸ்தகங்கள் இருக்கின்றன.

சில ஸ்மிருதிகள் ஒரு சில விஷயங்களோடு நின்று விடுகிறது; பூர்ண உபதேசம் செய்யவில்லை. வழக்கத்தில் தலைமுறை தலைமுறையாக வந்துவிட்ட விஷயங்கள் எல்லோருக்கும் தெரிந்தேயிருக்கும் என்று நினைத்துவிட்ட மாதிரி, சில ஸ்மிருதிகளில் ஸந்தியாவந்தனப் பிரயோகமே இல்லை; சிலவற்றில் சிராத்த விஷயமில்லை; தீட்டு-துடக்கு ஸமாசாரங்களைச் சொல்லும் ஆசௌசாதிகள் சிலதில் இல்லை. "இப்படி மூச்சுவிடு! இப்படிச் சாப்பிடு" என்று புஸ்தகத்தில் எழுதி வைத்தா சொல்லிக் கொடுக்க வேண்டும்? அந்த மாதிரிதான் இவையும் என்று அந்த ஸ்மிருதி கர்த்தாக்கள் நினைத்திருப்பார்களோ என்னவோ?

இம்மாதிரி எந்த விஷயத்தையுமே 'தன்னால் தெரிந்திருக்கும்' என்று நினைத்து விட்டுவிடாமல், ஸகலத்தையும் எழுதி வைத்திருப்பது நிபந்தன கிரந்தங்களில்தான். ஸ்மிருதிகளில் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பவைகளையும் இவையே வியவஸ்தை

செய்து, இதிது இப்படியிப்படித்தான் என்று நிர்ணயம் செய்கின்றன. சில பெரியவர்கள் எல்லா ஸ்மிருதிகளையும் பார்த்து, ஒன்றோடென்று பொருத்தி ஆராய்ச்சி செய்து, முடிவாக இன்னின்ன செய்யவேண்டும் என்று தீர்மானித்து, ஐயம் திரிபற இந்த நிபந்தனங்களை எழுதி வைத்திருக்கிறார்கள்.

இப்படி நம் தேசத்தில் ஒவ்வொரு பிரதேசத்தில் ஒவ்வொரு நிபந்தன கிரந்தத்தை அநுஸரிக்கிறார்கள். வடக்கே இருப்பவர்கள் காசிநாத உபாத்யாயர் எழுதிய நிபந்தனத்தைப் பின்பற்றுகிறார்கள். மேற்கே மஹாராஷ்டிரத்தில் 'மிதாக்ஷரி' என்ற நிபந்தனம் அநுஸரிக்கப்படுகிறது. அதற்குச் சட்டத்துக்கு ஸமதையான ஸ்தானம் இருப்பதாகக் கோர்ட்டுகளே அங்கீகரித்திருக்கின்றன. கமலாகர பட்டர் எழுதிய 'நிர்ணய ஸிந்து' என்ற நிபந்தனமும் அங்கு வழங்குகிறது. மஹாராஷ்ட்ரத்திலுள்ள பைதானில் மந்த்ரியாக இருந்த ஹேமாத்ரி என்பவர் எல்லா தர்ம சாஸ்திரங்களையும் சேர்த்து ஒரு பெரிய 'டைஜஸ்'டாக 'சதுர்வர்க்க சிந்தாமணி' என்று எழுதியிருக்கிறார். இங்கே தக்ஷிணத்தில் நாம் வைத்யநாத தீக்ஷிதர் எழுதிய "வைத்யநாத தீக்ஷிதீயம்" என்ற புஸ்தகத்தைப் பின்பற்றிச் செய்கிறோம். கிருஹஸ்தர்களுக்கு இவை முக்யமாக இருக்கின்றன. ஸந்ந்யாஸிகள் தாங்கள் செய்ய வேண்டியது என்ன, செய்யக்கூடாதது என்ன என்பதை 'விச்வேச்வர ஸம்ஹிதை' என்ற நூலைப் பார்த்து தெரிந்து கொள்கிறார்கள்.

* உப ஸ்மிருதிகளைச் செய்த பதினெண்மர்: ஜாபாலி, நாசிகேதஸ், ஸ்கந்தர், லௌகாக்ஷி, காச்யபர், வியாசர், ஸநத்குமாரர், சந்தனு, ஜனகர், வியாக்ரர், காத்யாயனர், ஜாதூகர்ண்யர், கபிஞ்ஜலர், போதாயனர், காணாதர், விச்வாமித்ரர், பைடீனஸர், கோபிலர்.

வைத்யநாத தீக்ஷிதீயம்

வைத்யநாத தீக்ஷிதீயம்

தமிழ்நாட்டில் தர்ம சாஸ்திரம் என்றால் வைத்யநாத தீக்ஷிதீயம்தான்.

கொஞ்சம் பாஷாஞானம் இருந்தாலும் இதுபோன்ற தர்ம சாஸ்திரத்தைப் படித்துப் புரிந்துகொண்டு விடலாம். வேத அத்யயனம் பண்ணினால்கூட மந்திரத்துக்கு அர்த்தம் தெரியாத மாதிரி, இது கஷ்டம் இல்லை. வைத்யநாத தீக்ஷிதீயத்தைப் பெரியவர்கள் நன்றாகத் தமிழிலேயே மொழி பெயர்த்து அச்சுப் போட்டிருக்கிறார்கள்.

வைத்யநாத தீஷிதர் எழுதிய புஸ்தகமாதலால் இதற்கு இப்படிப் பெயர் சொல்கிறோம். அவர் இந்நூலுக்கு, வைத்த பெயர் "ஸம்ருதி முக்தாபல நிபந்தன க்ரந்தம்" என்பது.

இந்தப் பரம உபகாரமான நூலை எழுதிய வைத்யநாத தீக்ஷிதரைப் பற்றி நமக்குக் கொஞ்சமே தெரிய வந்திருக்கிறது. இருநூறு வருஷங்களுக்கு முன்பு அவர் இருந்திருக்க வேண்டும். நாச்சியார் கோவிலுக்கு ஸமீபத்திலுள்ள கண்டிரமாணிக்கத்தைச் சேர்ந்தவர் என்று தெரிகிறது. எழுதியதோடு மட்டுமில்லாமல் அவரே ஸகல

கர்மங்களையும், தர்மங்களையும் அநுஷ்டித்துக் காட்டினார்; பெரிய யாகங்கள் செய்தார் என்று அறிகிறோம்.

மேதாதிதி, விக்ஞானேச்வரர், ஹேமாத்ரி முதலியவர்களின் உயர்ந்த நிபந்தன கிரந்தங்களையும்விட வைத்யநாத தீக்ஷிதீயமே சிரேஷ்டமானதாகக் கருதப்படுகிறது. ஒரு விஷயங்கூட விட்டுப் போகாமல் இதில் வர்ண (ஜாதி) தர்மம், (பிரம்மசர்யம் முதலான) ஆச்ரம தர்மம், ஆசௌசம், சிராத்தம், பிராயச்சித்தம், ஸ்த்ரீ தர்மம், தாயபாகம், திரவிய சுத்தி முதலான ஸகலத்தையும் பூர்ணமாகச் சொல்லியிருக்கிறது.

தர்ம சாஸ்திரம் பூர்விகமான பிதுரார்ஜித சொத்தை எப்படி யாருக்கு விநியோகிக்க வேண்டும் என்பதைக்கூட வரையறுக்கிறது. Hindu Code Bill முதலானவை சுதந்திர இந்தியாவில் கொண்டுவரப்பட்டபோது சில பேர் சாஸ்திரப்படிதான் சொத்துரிமை தரவேண்டும் என்று வாதம் செய்தார்கள். இந்த விஷயந்தான் தாயபாகம் என்பது. (மருமக்கத்தாயம் என்றே மலையாளத்தில் மாமன்- மருமான் வழியாகச் சொத்து விநியோகமாவதைச் சொல்கிறார்களல்லவா? 'தாயாதி' என்ற பெயரும் 'தாய' த்திலிருந்து வந்ததே.)

நிபந்தன கிரந்தங்களில் தீக்ஷிதீயமே கடைசியில் வந்த தாகையால் முந்தைய எல்லா தர்ம சாஸ்திர நூல்களையும் அலசி, ஆராய்ந்து, எல்லா விஷயங்களையும் கொடுக்கிறது. இதற்கு முந்தி தோழப்பர் செய்த நிபந்தனந்தான் தக்ஷிணத்தில் ஓரளவுக்கு நல்ல பிரசாரத்திலிருந்தது.

தீக்ஷிதீயம் தோன்றியதிலிருந்தே ஸ்மார்த்த வைஷ்ணவ பேதமில்லாமல் இருவரும் அதை ஆதாரமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ச்ருதியான வேதத்தையும், அதன் விளக்கமாய் பூர்வத்திலேயே தோன்றிய கல்ப ஸூத்ர, தர்ம ஸூத்ர, ச்ரௌத-க்ருஹ்ய ஸூத்ரங்களையும், ஸ்மிருதிகளையும் போல, பிற்பாடு தோன்றிய நிபந்தன கிரந்தங்களை எல்லாரும் ஏற்கும்படியான முறையில் எழுதுவது ஸுலபமல்ல. தீக்ஷிதர் பக்ஷபாதமே யில்லாமல் விசால மனஸோடு, நடு நிலைமையிலிருந்து கொண்டு மீமாம்ஸா சாஸ்திரத்தின் அர்த்த நிர்ணய முறையையே பின்பற்றிப் பூர்வ சாஸ்திரங்களைத் தொகுத்து, அவற்றில் பரஸ்பர விரோதமுள்ள பாகங்களில் முடிவாக ஒரு தீர்மானத்துக்கு வந்திருப்பதால்தான் தீக்ஷிதீயம் தென்தேசத்தில் பிரமாண நூலின் ஸ்தானத்தைப் பெற்றது. ஒன்றுக்கொன்று ஸ்மிருதிகள் முரணாயிருக்கும் சில இடங்களில், "அவரவர் இவற்றை தேசாசாரப்படி செய்து கொள்ளட்டும்; தங்கள் குல பூர்விகர்கள் எப்படிப் பண்ணினார்களோ அப்படிப் பண்ணட்டும்" என்று பெருந்தன்மையோடு சொல்லி விட்டு விடுவார்.

சுயச்சையும் கட்டுப்பாடும்

சுயேச்சையும் கட்டுப்பாடும்

இங்கே ஒரு பொதுவான விஷயம் சொல்லவேண்டும். எவ்வளவுதான் அலசி அலசி விரிவாக எழுதினாலும் நூறாயிரம் சமாசாரங்கள் வந்து சேர்கிற மநுஷ்ய வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சமும் இப்படித்தான் என்று

எழுதிவைத்து நிர்ணயம் பண்ண முடியாது. எழுத்திலே நிர்த்தாரணம் செய்வது சட்டம் மாதிரி நிர்ப்பந்தமாகத்தான் தோன்றும். நன்றாகக் கட்டுப்பாடு செய்கிற சட்ட விதிகள் வேண்டும்தான். நம் சாஸ்திரங்களில் இப்படி நிறைய இருக்கத்தான் செய்கின்றன. சுதந்திரம், ஜனநாயகம் என்று பெரிசாகச் சொல்வதெல்லாம் யதார்த்தத்தில் மனம் போனபடி நடப்பதாகவும், அசக்தமான நல்லவர்களை பலிஷ்டரான முரடர்கள் ஸ்வயேச்சையாக அடக்கி ஒடுக்கிக் கஷ்டப்படுத்துவதாகவுமே இருப்பதைப் பார்க்கிறோம். ஆகையால், விதிகளைப் போட்டு ஜனங்களைக் கட்டுப்படுத்தத்தான் வேண்டும். ஆனாலும் இதிலும் ஒரு 'லிமிட்' வேண்டும். கட்டுப்பாடு பண்ணுவதற்கும் ஒரு கட்டுப்பாடு வேண்டும். இல்லாவிட்டால் மநுஷ்ய ஸ்வபாவப்படி, ஒரேயடியாகச் சட்டம் போட்டு நெரித்தால் உத்ஸாகமே போய்விடும். ரொம்பவும் கட்டுப்படுத்தினாலே ரொம்பவும் அறுத்துக் கொண்டு ஓடத் தோன்றும்.

இதனால் நம் சாஸ்திரங்களில் எல்லாவற்றையும் எழுதி வைத்து சட்டமாகத் திணிக்காமல், பல விஷயங்களில் பெரியவர்கள் பண்ணுகிறதைப் பார்த்தே மற்றவர்கள் மனமொப்பி, தாங்களாக, ஸ்வயேச்சையாக அதே மாதிரி செய்யும்படி விட்டிருக்கிறார்கள். என்னை நீங்கள் பெரியவன் என்று வைத்துக் கொண்டு விட்டால், என்னைப் பார்த்து நான் பண்ணுகிற மாதிரி நீங்களும் நெற்றிக்கு இட்டுக் கொள்ள வேண்டும், பூஜை பண்ண வேண்டும், பட்டினி கிடக்க வேண்டும் என்று ஸ்வயேச்சையாக ஆரம்பிக்கிறீர்கள் இல்லையா? இந்த மாதிரி சில

விஷயங்களை personal example (இன்னொருத்தரின் வாழ்க்கை உதாரணம்) , tradition (மரபு) , தேச வழக்கம் (local custom) , குடும்ப வழக்கம் இவற்றைப் பார்த்தே பண்ணும்படியாக விட்டால்தான் பாக்கிக்குச் சட்டம் போட்டு விதிகளாக எழுத்தில் எழுதி வைக்கிறபோது அவற்றை ஜனங்கள் சிரத்தையுடன் அநுஸரிக்க விரும்புவார்கள்.

வாழ்ந்து காட்டி பிறத்தியாரையும் அப்படிச் செய்ய வைப்பது ரொம்ப உசத்தி. அப்புறம் வாய் வார்த்தையாகப் பேசி, compulsion (நிர்பந்தம்) இல்லாமல் ஸ்வயேச்சையாக ஏற்கிற மாதிரி persuasion மூலம் பண்ண வைப்பது இரண்டாம் பக்ஷம். கடைசி பக்ஷம்தான் விதியாக எழுதி வைத்துக் கட்டாயப்படுத்துவது. ஸஹஸ்ரம் வத; ஏகம் மா லிக என்று வசனம் கூட உண்டு. 'ஆயிரம் விஷயத்தை வாய் வார்த்தையாகச் சொல்; ஆனால் அதில் ஒன்றைக் கூட எழுதி வைத்து நிர்ப்பந்தம் பண்ணாதே' என்பது இதற்குத் தாத்பரியம். இப்போது எடுத்ததற்கெல்லாம் written laws (எழுத்து மூலம் சட்டம்)! கையில் பேனா கிடைத்தவனெல்லாம் தன் அபிப்ராயத்தை எழுதி 'பப்ளிஷ்' பண்ணிவிடுகிறான்!

மநுஷ்யனுக்கு சுதந்திரமே தராமல் ஹிந்து தர்மசாஸ்திரங்கள் ஆயிரம் சட்டம் போடுகின்றன என்று இக்காலத்தவர் கண்டித்தாலும், அதிலே இந்த சுதந்திரத்தை மதித்துப் பல விஷயங்களை விட்டுத்தான் வைத்திருக்கிறது. ஜீவன் இஷ்டப்படி போய், தானும் கெட்டு லோகத்தையும் கெடுக்காமலிருக்க வேண்டுமானால் எல்லா விஷயத்திலுமே ஒரு நிர்ணயம் இருக்கத்தான் வேண்டும் என்று நம் சாஸ்திர கர்த்தாக்கள் கருதியிருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட நிர்ணயங்கள்

எல்லாவற்றையும் ஜனங்கள் எழுத்து மூலம் சட்டமாக எடுத்துக் கொள்வதானால் ரொம்பவும் கட்டி வைக்கிற மாதிரி நினைப்பார்கள். ஆகையால், 'சிலவற்றை மட்டுமே எழுதுவோம்; பாக்கியை அவர்களே சுதந்திரமாக சிஷ்டர்களைப் பார்த்தும், மரபைப் பார்த்தும், தேச குல ஆசாரத்தைப் பார்த்தும் அநுஷ்டிக்கட்டும்' என்று விட்டிருக்கிறார்கள்.

'சாஸ்திர விதி' என்னும்போது தோன்றும் நிர்பந்த எண்ணம் பெரியோர் வழி, மரபு என்னும்போது தோன்றுவதில்லை. குல வழக்கம், ஊர் வழக்கம் முதலியவற்றை ஒரு சுய அபிமானத்தோடு ஏற்றுக்கொள்கிறோம்.

இவற்றைக் கடைசி தர்மசாஸ்திர நூலான வைத்யநாத தீக்ஷிதீயந்தான் பெரிய மனஸோடு ஒப்புக் கொண்டது என்றில்லை. பூர்வ கிரந்தங்களும் இதே அபிப்ராயத்தைக் கொண்டவைதான். பெரும்பாலாரால் பின்பற்றப்படுகிற – 'அதாரிடி' ஸ்தானம் பெற்ற – ஆபஸ்தம்ப ஸூத்திரத்திலேயே மஹரிஷி ஆபஸ்தம்பர் முடிவில், "நான் இந்த சாஸ்திரத்தில் எல்லா தர்மங்களையும் சொல்லிவிடவில்லை. மீதி எவ்வளவோ இருக்கினறன. ஸ்திரீகளிடமிருந்தும், நாலாம் வர்ணத்தவரிடமிருந்துங்கூடக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியவை அநேகம் இருக்கின்றன. அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்கிறார்.

இதிலிருந்து 'ஸ்திரீகளைப் புருஷர்கள் அடக்கி வைத்தார்கள்; பிராமணரல்லாதாரை பிராமணர்கள் கீழே தள்ளியிருந்தார்கள்' என்று குற்றம் சொல்வதெல்லாம்

எவ்வளவு தப்பு எனத் தெரிகிறது. பெரிய தர்ம சாஸ்திர ஆதார நூலிலேயே ஸ்திரீ-சூத்ரர்களின் தார்மிக ஞானத்தை மதித்து, அதற்கு அதிகாரபூர்வமான ஸ்தானம் கொடுத்திருக்கிறது.

கல்யாணங்களில் ஆரத்தி எடுப்பது, பச்சை பூசுவது என்று அநேக விஷயங்கள் பெண்டுகள் சொன்னபடி செய்ய வேண்டும் என்றே ஆச்வலாயனர் முதலான பெரிய 'ஒரிஜினல்' ஸூத்ரகர்த்தாக்கள் சொல்லியிருக்கிறார்கள். பந்தற்கால் நடுவதற்கு மந்திரம் இருந்தாலும்கூட, அது விஷயமாகப் பந்தல் போடுகிற வேலைக்காரன் ஒரு ஐதிகம் சொன்னால் அதையும் கேட்கத்தான் வேண்டும்.

இப்படியெல்லாம் சாஸ்திரங்களில் ஒரே கெடுபிடிக் கட்டாயம் பண்ணாமல் எல்லாருக்கும் கொஞ்சம் ஜனநாயக சுதந்திரம் கொடுத்துத்தான் இருக்கிறது.

நாலாம் வர்ணமான சூத்திரர்களுக்கு உள்ள ஸம்ஸ்காரங்களையும் அநுஷ்டானங்களையும் தர்ம சாஸ்திரங்கள் சொல்லியிருக்கின்றன. அந்த ஜாதியை அலக்ஷ்யம் பண்ணவே இல்லை. தீஷிதீயத்தில் வர்ணாச்ரம காண்டத்திலும், ஆன்ஹிக காண்டத்திலும், சிராத்த காண்டத்திலும் இவை உள்ளன.

பொதுவாக, தர்ம சாஸ்திரங்களில் ஆசார காண்டம், வியவஹார காண்டம் என்று இரண்டு உண்டு. ஒழுக்கங்களை ஆசாரம் என்பார்கள். அவற்றை நடைமுறையிலான வெளிக்காரியங்களில் பின்பற்றுவதே வியவஹாரம்.

சின்னங்கள்

சின்னங்கள்

நாம் இந்த மதத்தைச் சேர்ந்தவன் என்றால் அதற்கு சில வெளி அடையாளங்கள், சின்னங்கள் உண்டு.

'ஸ்கௌட்' (சாரணர்)களுக்குத் தனி உடுப்பு இல்லையா? ஆர்மி [தரைப்படை] , நேவி [கப்பற்படை] ஒவ்வொன்றில் இருப்பவருக்கும் வேறு வேறு வெளி அடையாளங்கள் இருக்கின்றன. போலீஸிலேயே பல பிரிவுகளுக்குப் பல தினுஸாக இருக்கின்றன. இவர்கள் டிரெஸ்ஸையும், பாட்ஜ் முதலானவற்றையும் மாற்றிக் கொள்வதால் இவர்கள் செய்கிற காரியம் ஒன்றும் மாறிவிடாது. இருந்தாலும் அப்படி மாற்றிக் கொள்ளக் கூடாது என்று கட்டாயமாக விதி இருக்கிறது. போலீஸ்காரன் தொப்பியை நேவிக்காரன் வைத்துக் கொள்ளக் கூடாது. அப்படியே இவன் தொப்பியை அவன் வைத்துக் கொள்ளக்கூடாது. எதிலும் கட்டுப்பாடு, ஒழுங்கு (discipline, orderliness) இருக்க வேண்டும்.

இந்த டிஸிப்ளின், ஆர்டர் மதத்துக்கும் வேண்டுமல்லவா? அதனால்தான் பல வேறு ஜாதிக்காரர்கள், வெவ்வேறு ஆசிரமக்காரர்கள் ஆகிய ஒவ்வொருத்தருக்கும் வித்தியாஸமான சின்னங்களை, காரியங்களைக் கொடுத்திருக்கிறது. 'இப்படி வேஷ்டி கட்டிக் கொள்ளு, இப்படி புடவை கட்டிக் கொள்ளு, இந்த மாதிரி நெற்றிக்கு இட்டுக் கொள்ளு என்றெல்லாம் ரூல்களை தர்ம சாஸ்திரம் சொல்கிறது.

இது வெறும் சமூகக் கட்டுப்பாட்டுக்காக மட்டும் சொன்னதல்ல. இவை ஒவ்வொன்றிலும் ஜீவனைப் பரிசுத்தி பண்ணுகிற சூக்ஷமமான அம்சமும் உண்டு.

கச்சேரியில் ஸேவகனாயிருப்பவனுக்கு டவாலி உண்டு. அதிகாரிக்கு அது கிடையாது. ஏன் இப்படி என்று நாம் கேட்பதில்லை. ஆனால் சாஸ்திரத்தில் அவரவர் தொழிலுக்கும் குலாசாரத்துக்கும் ஏற்றதாக வேறு வேறு அடையாளங்களைச் சொன்னால் மட்டும் ஆக்ஷேபிக்கிறோம். ஸமத்வம் (equality) என்று சத்தம் போடுகிறோம். ஸமஸ்த ஜன ஸமூகத்தின் க்ஷேமத்துக்காகவும் காரியத்தில் பலவாகப் பிரிந்திருந்த போதிலும், ஹ்ருதயத்தில் ஒன்றாக சேர்ந்திருந்த நம்முடைய சமுதாய அமைப்பில் ஆசார அநுஷ்டானங்களையும், அடையாளங்களையும் பிரித்துக் கொடுத்தது அவரவரது குண-கர்மாக்களுக்கு அநுகூலம் பண்ணுவதற்குத்தான் என்பதை மறந்து, இதிலே வாஸ்தவத்தில் இல்லாத உயர்வு தாழ்வுகளைக் கல்பித்துக் கொண்டு சண்டை போடுகிறோம்.

இப்போது கடைசியில் ஒருத்தருக்கும் ஒரு மதச் சின்னமும் இல்லை என்று ஆக்கிக் கொண்டிருக்கிறோம்.

பாக்கி அடையாளங்களை வெட்கப்படாமல் போட்டுக்கொள்கிறோம். ஆத்மாவுக்கு நல்லது செய்கிற மதச் சின்னங்களை போட்டுக் கொள்ள மட்டும் வெட்கப்படுகிறோம். "எல்லாம் ஸூபர்ஸ்டிஷன்" என்கிறோம். சீர்திருத்தம் என்று ஆரம்பிக்கிறோம். இப்படிச் சொல்லிக் கொண்டே, சீர்திருத்தக்காரர்கள் என்று

அடையாளம் தெரிவதற்காக ஒரு குல்லா போட்டுக் கொள்கிறோம்; அல்லது ஏதோ ஒரு கலரில் சட்டை, துண்டு போட்டுக் கொள்கிறோம். இவற்றுக்கு தெய்வத்துக்கும் மேலான முக்யத்தைத் தருகிறோம்!

ஸ்மிருதிகள் சுதந்திர நூல்கள் அல்ல

ஸ்மிருதிகள் சுதந்திர நூல்கள் அல்ல

ஸ்மிருதிகள் என்கிற தர்மசாஸ்திரங்களை மரியாதை உணர்ச்சியுடன் பார்க்கிற பலரிடத்தில்கூட அவற்றைப் பற்றி ஒரு தப்பான அபிப்பிராயம் இருக்கிறது. அதாவது ஸ்மிருதிகளைப் பண்ணினவர்களே சுதந்திரமாக இந்த தர்மங்களை, விதிகளை வகுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். ஸ்மிருதிகாரர்களை [ஸ்மிருதிகளை எழுதியவர்களை] law-givers என்று சொல்கிறார்கள். அதாவது அவர்களாகவே தங்கள் அபிப்பிராயப்படி இவற்றை சட்டம் (law) என்று போட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். சட்ட நிபுணர்கள் பலர் ஒன்று சேர்ந்து நம் தேசத்தில் இப்படியிப்படி இருக்க வேண்டும் என்று 'கான்ஸ்டிட்யூஷன்' [அரசியல் நிர்ணய சாஸனம்] செய்திருக்கிறார்களே, அது போலத்தான் தர்ம சாஸ்திரங்களையும் எழுதியிருக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். ஸ்மிருதிகள் சுதந்திரமாகவே அபிப்பிராயம் சொல்பவை என்று நினைக்கிறார்கள்.

இப்படி நினைப்பதால் இன்னொன்றும் இதைத் தொடர்ந்து தோன்றுகிறது. இப்போது கான்ஸ்டிட்யூஷன் நாம் நடைமுறையில் செய்ய விரும்புகிற சில காரியங்களுக்கு இடம் கொடுக்காமலிருக்கிற போது, நமக்கு ஸாதகமாக

அதைத் திருத்திவிடுவது (amend பண்ணுவது) என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? இதே மாதிரி, பழைய சட்டங்களான தர்ம சாஸ்திரங்களையும் நம்முடைய இக்காலக் கொள்கைக்கு ஏற்றபடி மாற்றி விட்டால் என்ன என்று கேட்கிறார்கள்.

என்னிடமே பல பேர் கேட்டிருக்கிறார்கள், "காலத்தை அநுஸரித்து சாஸ்திரத்தை ஏன் மாற்றக் கூடாது?" என்று. "ஸர்க்கார் சட்டங்களை மாற்றவில்லையா?" என்று ஆதாரம் காட்டுகிறார்கள். என்னையே ரொம்ப ஸ்தோத்திரம் பண்ணி, "ஸ்மிருதிகளை பண்ணின ரிஷிகள் மாதிரிதான் இந்தக் காலத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். அதனால் நீங்கள் மனசு வைத்தால் சாஸ்திரங்களை இந்தக் காலத்துக்குத் தகுந்தாற் போல் மாற்றி விடலாம்" என்கிறார்கள். "நாங்கள் ஆசைப் படுகிற மாதிரி நீங்கள் சாஸ்திரத்தை மாற்றித் தாருங்கள்" என்பதையே இப்படி கௌரவமாகச் சொல்கிறார்கள்!

ஸ்மிருதிகள் அந்தந்த ஸ்மிருதிகர்த்தாவின் சொந்த அபிப்பிராயம்தான் என்றால் இவர்கள் நினைப்பதிலும் கேட்பதிலும் தப்பு இல்லை.

ஆனால் ரொம்பப் பேருக்கு - தர்ம சாஸ்திரங்களிடம் மதிப்புணர்ச்சி உள்ளவர்களுக்குக்கூட- என்ன தெரியவில்லையென்றால், இந்த ஸ்மிருதிகள் அவற்றைச் செய்தவர்களின் சொந்த அபிப்பிராயமே இல்லை. ஏற்கெனவே வேதங்களில் சொல்லியிருந்தவற்றையேதான் அவர்கள் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். வேத வாக்கை ஒருகாலும் எந்த சந்தர்ப்பத்திலும் மாற்றக்

கூடாதாகையால், இந்த தர்ம சாஸ்திர விதிகளையும் மாற்றுவதற்கே இல்லைதான்.

சாஸ்திரப்படியே நீங்கள் நடக்கும்படிப் பண்ண எனக்கு சக்தியோ, யோக்யதையோ இல்லாமல் இருக்கலாம். ஆனாலும் அதை மாற்றுவது நிச்சயமாக என் காரியமில்லை. என்னை இங்கே [மடத்தில்] உட்கார்த்தி வைத்திருப்பது வேத தர்மங்களை ஜனங்கள் பரிபாலனம் பண்ணும்படியாகச் செய்வதற்குத்தான். ஆசார்யாள் ஆக்ஞை அது தான். அதனால் இந்தக் காலத்தின் ஸௌகரியத்துக்கு, புதுக் கொள்கைக்கும் போக்குகளுக்கும் ஸாதகமாக சாஸ்திரத்தை மாற்றிக் கொடுப்பதற்கு எனக்கு authority (அதிகாரம்) இல்லை.

ரிஷிகளாக இந்த ஸ்மிருதிகளை எழுதி வைத்திருக்கிறார்கள் என்றால் அதை நாம் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதே இல்லை. வேண்டாம் என்றால் தூக்கி எறிந்து விடலாம். இவர்கள் வேதத்தில் இல்லாததை எல்லாம் நமக்குச் சொல்லியிருக்கிறார்கள், ஏதோ தாங்களாகவே உத்தேசித்து இப்படி இப்படி இருந்தால்தான் நல்லது என்று வரையறுத்து வைத்திருக்கிறார்கள் என்றால் அவை நமக்கு வேண்டியதில்லை. அப்படிப் பார்த்தால் அநேகம் பேர் தங்களுக்குத் தோன்றியதை எழுதி வைத்திருக்கிறார்கள்; நமக்குத் தோன்றுவதையும் நாமே எழுதி வைத்துக்கொண்டு விடலாமே!

உண்மையில் ஸ்மிருதிகள் வேத வாக்கியங்களையே அநுஸரித்துச் சொல்லியிருப்பதனால்தான் இந்த

ஸ்மிருதிகளை நாம் இன்றைக்கும் என்றைக்கும் ஆதாரமாக வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

"சரி, அப்படியென்றால் வேதத்தில் இருப்பதையேதான் இவர்கள் பிரமாணமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதற்கு என்ன ஆதாரம்?"

வேதமே ஸ்மிருதிகளுக்கு அடிப்படை

வேதமே ஸ்மிருதிகளுக்கு அடிப்படை

பெரிய ஆதாரம் மஹாகவியின் வாக்குத்தான். நம்முடைய மத ஸ்தாபகர்கள் யாவரும் – சங்கரர், ராமாநுஜர், மத்வர் எல்லாரும் – தர்ம சாஸ்திரங்கள் வேதத்தை அநுஸரிப்பவையே என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இது நமக்குப் பெரிய ஆதாரம் என்று சொல்லமுடியாது. இந்த மதாசாரியர்களுக்கெல்லாம் கொள்கைப் பிடிமானம் உண்டு. ஸம்பிரதாயத்தை ரக்ஷிக்க வேண்டும் என்ற லக்ஷ்யம் உண்டு. அதனால் இவர்கள் மரபை மீறிப் பேசமாட்டார்கள். ஆனால் கவி விஷயம் இப்படியில்லை. அவனுக்கு ஒரு கொள்கையையும் நிலை நாட்டுகிற பிடிமானம், பிடிவாதம் இராது. கொள்கைச் சார்பில்லாமலே தனக்கு ஸத்யமாகப் படுவதையெல்லாம் சொல்லிக்கொண்டு போகிறவன் அவன்.

இப்படிப்பட்ட மஹாகவிகளில் முக்கியமான காளிதாஸன் 'ரகுவம்ச'த்தில் ஓரிடத்தில் ஸ்மிருதிகளைப் பற்றிச் சொல்கிறான்.

ராமனுக்குத் தகப்பனார் தசரதர். தசரதருடைய தகப்பனார் அஜன். அஜனுடைய தகப்பனார் ரகு. அதனால்தான் ரகுராமன் என்ற பெயரே – கொள்ளுத்தாத்தாவின் பெயரே– ராமனுக்கு வந்தது. 'தாசரதி' என்று தகப்பனாரின் பெயரை இரண்டோர் இடங்களில்தான் சொல்லியிருக்கும். பொதுவாகத் தாத்தாவின் பெயரைத்தான் பேரனுக்கு வைப்பது. ஆனால் தாத்தா பேரான அஜன் என்பது ராமனுக்குக் கிடையாது. கொள்ளுத் தாத்தாவின் பேரேதான் இவருக்கு அதிகம். அவ்வளவு கீர்த்தியாக, பேரும் புகழுமாக ரகு வாழ்ந்து கொண்டிருந்தார். ராகவன் என்றாலும் ரகு குலத்தோன்றல் என்றே அர்த்தம்.

ரகுவின் தகப்பனாருக்கு திலீபன் என்று பெயர். திலீபனுக்கு வெகுநாள் பிள்ளையே இல்லாமல் இருந்தது. திலீபனுடைய குலகுரு வஸிஷ்டர். வஸிஷ்டரிடத்தில் திலீபன் போய், "ஸ்வாமி, எனக்குக் குழந்தையே இல்லை. என் வம்சம் விளங்க நீங்கள்தான் அநுக்கிரகம் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தனை செய்துகொண்டார்.

வஸிஷ்டர் வீட்டில் ஒரு பசு மாடு இருந்தது. அது காமதேனுவின் பெண். நந்தினி என்று பெயர். அந்த நந்தினியை திலீபனிடத்தில் கொடுத்து, "இதைக் குளிப்பாட்டி, மேய்த்து, மிகவும் சிரத்தையுடன் பூஜித்து வளர்த்துக் கொண்டிரு. உனக்குப் பிள்ளை பிறக்கும்" என்று வஸிஷ்டர் அநுக்கிரஹம் செய்தாராம்.

ராஜாவைப் பார்த்து இப்படி மாடு மேய்க்கச் சொன்னார் என்றால் அவன் எத்தனை விநயமாக இருந்திருக்கவேண்டும்?

அன்றைய தினத்திலிருந்து திலீப மஹாராஜாவும் ஒரு மாட்டுக்காரனைப் போலவே தினமும் அந்த நந்தினியைக் காட்டுக்கு ஓட்டிக்கொண்டு போவது, மேய்ப்பது, குளிப்பாட்டுவது, இப்படி மிகவும் பக்தி சிரத்தையுடன் ரக்ஷித்துக் கொண்டிருந்தாராம். காட்டுக்கு மாட்டை ஓட்டிக் கொண்டு மேய்க்கப் போகிறபோது, துஷ்ட ஜந்துக்களால் மாட்டுக்கு ஆபத்து வராமல் இருக்க ஒரு தனுசு, ஒரு பாணம் மாத்திரம் எடுத்துக் கொண்டு மாட்டின் பின்னாலேயே போவாராம். அதைச் சொரிந்து கொடுக்கிறது, அதை மேய்க்கிறது, அது நின்றால் இவரும் நிற்கிறது, அது படுத்துக்கொண்டால் இவரும் படுத்துக்கொள்வது, அது நடந்தால் இவரும் நடக்கிறது – இப்படி அதன் பின்னாலேயே இவர் போய்க் கொண்டிருந்தார். ஒரு நிழல் எப்படி இருக்குமோ – நாம் உட்கார்ந்தால் நிழலும் உட்காருகிறது, நின்றால் நிற்கிறது, ஓடினால் ஓடுகிறது – அப்படி,

சாயேவ தாம் பூபதிரந்வகச்சத்।

நிழல்போல் அந்த அரசர் நந்தினி என்ற பசுமாட்டை ரக்ஷித்து வந்தார் என்று காளிதாஸன் சொல்கிறான்.

இப்படி தினமும் வீட்டிலிருந்து திலீபன் மாட்டை மேய்க்க ஓட்டிக்கொண்டு போகிற காலத்தில் திலீபனுடைய மனைவி ஸுதக்ஷிணையும் கொஞ்ச தூரம் பின்னாடியே நடந்து போய் வழியனுப்பிவிட்டு அப்புறம் திரும்பி வருவது வழக்கம். வெகு நியமமாக வீட்டில் இருந்துகொண்டு பர்த்தாவை அனுப்பி வைப்பது, சாயந்திரம் காட்டிலிருந்து அவர் பசுமாட்டோடு எப்போது திரும்பி

வருவார் என்று பார்த்துக் கொண்டிருப்பது - இப்படி ஸுதக்ஷிணையும் பதிக்கு சுசுரூஷை செய்து கொண்டிருந்தாள். இவர் நந்தினியை நிழல் போல் பின்பற்றினார் என்றால் இவரை ஸுதக்ஷிணை நிழல் மாதிரி அநுஸரித்தாள்.

பதிவ்ரதா தர்மத்தை ஜனகரே ஸீதா கல்யாணத்தின் போது இப்படித்தான் சொன்னார். ராமனைப் பார்த்து "என் குழந்தை ஸீதை உன்னை நிழல் போலத் தொடர்ந்து வருவாளப்பா! சாயேவ அநுகதா" என்றார். இப்படி வால்மீகி ராமாயணத்தில் இருக்கிறது. வால்மீகி சொன்ன ராமனுடைய சரித்திரத்தைக் காளிதாஸனும் சொல்ல வந்தான். ராமனுக்கு பின்னாடி வந்த லவ குசர்களைப் பற்றியும் சொல்கிறான். ராமனுக்கு முந்தி ரகுவம்சம் இருக்கிறதே- ராமனுடைய முன்னோர்கள்- அவர்களைப் பற்றியும் எழுதியிருக்கிறான். இப்படி ராமாயணம் சொல்ல வந்தவன், அந்த உத்தமமான வம்சத்தில் முன்னும் பின்னும் உள்ள சந்ததிகளைப் பற்றியும் சொல்லி, ராமனுக்கு யாருடைய பெயர் வந்ததோ அந்த மகா கீர்த்தி வாய்ந்த ராமனுடைய கொள்ளுத் தாத்தா பெயரையே "ரகுவம்சம்" என்று அந்த மஹாகாவியத்துக்கு வைத்தான். உத்தமமான வம்சத்தைப் பற்றி சொன்னாலே நாக்கு பவித்திரமாகும் என்பது போல் சொல்லியிருக்கிறான்.

இதிலே, ஸுதக்ஷிணை மாடு மேய்க்கப் போகும் திலீபனைத் தொடர்ந்து போகிறதைச் சொல்கிறபோதுதான் ரிஷிகள் எல்லாரும் ஸ்மிருதிகளை எப்படி பண்ணினார்கள் என்பதைச் சொல்கிறான். இதைச் சொல்ல வேண்டும் என்று கொள்கை கட்டிக் கொண்டு சொல்லவில்லை.

இதற்காகச் சொல்கிற மாதிரியும் வலிந்து சொல்லவில்லை. என்னவோ அவனுடைய திறந்த மனஸில் பளிச்சென்று பட்டு, அதை அப்படியே சொல்லிவிட்டான் என்று தோன்றுகிற ரீதியிலே ஸ்மிருதிகளைப்பற்றிச் சொல்கிறான். என்ன சொல்கிறான்?

ஸுதக்ஷிணை மாட்டின் பின்னால் கொஞ்ச தூரம் எப்படிப் போனாள் என்று வருணிக்கிறான். நந்தினி முன்னாடி போகிறது. இவள் வேறு எங்கும் பார்க்காது, அந்த அடிச் சுவட்டின் வழியிலேயே நடந்தாள் என்று சொல்ல வருகிறான். நந்தினி நடக்கும்போது அதன் குளம்புகள் படுகிற இடத்தில் கொஞ்சம் தூசி கிளம்புகிறது. இப்படி கிளம்பும்படியான பவித்ரமான தூசி இருக்கிறதே, அந்தத் தூசியைப் பார்த்துக் கொண்டு, அந்தச் சுவட்டை அநுஸரித்து ஸுதக்ஷிணை கொஞ்சம் தூரம் நடந்தாள் என்று காளிதாஸன் சொல்கிறான்.

மற்ற கவிகளைக் காட்டிலும் காளிதாஸன் வெகு அழகாக உபமானம் சொல்வான். அதுதான் அவனிடத்திலுள்ள விசேஷம். ஒவ்வோரு கவிக்கு ஒவ்வோர் அம்சத்தில் விசேஷம். "உபமா காளிதாஸஸ்ய"- உவமைக்குக் காளிதாஸன். அப்படி உபமானத்தோடு ஸுதக்ஷிணை நந்தினிக்குப் பின் நடந்து போகிறதைச் சொல்கிற போதுதான் வேதத்தை ஸ்மிருதி பின் தொடர்வது உவமையாக வருகிறது:

தஸ்யா: குரந்யாஸ பவித்ர பாம்ஸும்

அபாம்ஸுலாநாம் துரி கீர்த்தநீயா।

மார்கம் மநுஷ்யேச்வர தர்மபத்நீ

ச்ருதேரிவார்த்தம் ஸ்ம்ருதிரந்வகச்சத்||

'பாம்ஸு' என்றால் தூசி. நந்தினி குளம்பு வைக்கிற இடத்தில் தூசி கிளம்புகிறது. 'குர' என்று குளம்புக்குப் பெயர். 'குரந்யாஸ'- குளம்பு வைத்ததினாலே; 'பவித்ர பாம்ஸும்'-கிளம்புகிற பவித்திரமான தூசியைப் பார்த்துக் கொண்டு போனாள்.

பசுவின் பாத தூசி மிக விசேஷமானது. அது எந்த இடத்தையும் பரிசுத்தம் செய்துவிடும். ஸாதாரணப் பசுவின் தூசியே பவித்ரம் என்றால், காமதேனு புத்திரியான நந்தினியின் பாத தூசி எத்தனை உயர்ந்ததாயிருக்கும்? அதற்குப் பாத்திரமான ஸுதக்ஷிணையோ இயல்பாகவே பரம பவித்ரமான தூசிபடியாத சரித்திரத்தை உடையவள்!

அபாம்ஸுலாநாம் துரி கீர்த்தநீயா

'அபாம்ஸு' ஒரு தூசி இல்லாதவள்! யாதொரு பழியோ களங்கமோ இல்லாத ஜன்மம். அப்பேர்ப்பட்ட உத்தமமான ஸுதக்ஷிணை, நந்தினியின் குளம்பு படுவதனாலே எழும்புகிற பவித்திரமான தூசியை அநுஸரித்து, சுத்தமான மார்க்கத்தை அநுஸரித்து காலடி எடுத்து வைத்து நடந்தாள். அது எப்படியிருந்தது என்றால் வேதத்தினுடைய (ச்ருதிகளுடைய) அர்த்தத்தை அநுஸரித்து மஹரிஷிகள் செய்திருக்கும்படியான ஸ்மிருதிகள் எப்படிச் சென்றிருக்கின்றனவோ அப்படியிருந்தது என்கிறான் காளிதாஸன்.

ச்ருதேரிவார்த்தம் ஸ்ம்ருதிரந்வகச்சத் |

'அந்வகச்சத்' - பின்தொடர்ந்தாள். இங்கே பசுமாட்டுக்கு உபமானம் வேதம்–ச்ருதி. அதனுடைய குளம்படிதான் அர்த்தம். வேத அர்த்தத்தையே ஸ்மிருதி பின் தொடர்கிற மாதிரி பசு மாட்டின் அடியை ஸுதக்ஷிணை பின்பற்றினாள். ஸுதக்ஷிணை முழுக்க அப்படியே பசு மாட்டோடு போகாது கொஞ்ச தூரம்தான் போனாள். அதுபோல் வேதத்தில் இருப்பதை எல்லாம் ஸ்மிருதிகள் சொல்லவில்லை. அவை நினைவுக் குறிப்புகள்தான். ஆனால் வேதத்தின் அடியும் பொருளும் தப்பாமல், அதில் இருப்பதையே ஸ்மிருதிகள் சொல்லியிருக்கின்றன. வேதத்திலிருக்கிற அத்தனை ஆயிரம் மந்திரங்களையும் ஸ்மிருதி சொல்லவில்லை. அவற்றை பிரியோஜனப் படுத்துகிற வழியையே சொல்கிறது. அதாவது வேதம் போகிற வழியில் அதை கொஞ்ச தூரம் அநுஸரிக்கிறது.

"பரிசுத்த அந்த:கரணத்தையுடைய ஸுதக்ஷிணை பதியைப் பின்பற்றி நந்தினியின் குரதூளி எழும்பும் பவித்திர மார்க்கத்திலிருந்து சிறிதேனும் வழுவாமல் போனாள்" என்று சொன்ன காளிதாஸன் இதற்கு ஒரு நல்ல உவமை சொல்ல வேண்டும் என்று நினைத்தவுடன் தன் மனஸில் பளீரென்று எழுந்த உவமையாக, "வேத அர்த்தத்திலிருந்து கொஞ்சங்கூட வழுவாமல் ஸ்மிருதி அதைப் பின்பற்றிப் போவது போலப் போனாள்" என்கிறான்.

எப்பொழுதும் உபமானமானது உபமேயத்தைவிட உயர்ந்ததாக இருக்கும். சந்திரன் மாதிரி, தாமரைப்பூ மாதிரி ஒருத்தர் முகம் இருந்தது என்று சொன்னால்

வாஸ்தவத்தில் உபமானமான சந்திரனும், தாமரைப்பூவும் உபமேயமான முகத்தைவிட உயர்ந்ததாகத்தான் இருக்கும். அந்தப்படி, இங்கு பர்த்தாவான திலீபனைப் பசுவின் சுவட்டால் பின்பற்றிய பரம பவித்ரையான ஸுதக்ஷிணை என்ற உபமேயத்துக்கு உபமானமாகச் சொல்லப்பட்ட ஸ்ம்ருதியானது ச்ருதியை இன்னம் ரொம்ப க்ளோஸாக பின்பற்றுகிறது என்று ஆகிறது. உவமை சொல்வதில் அதிச்ரேஷ்டனான காளிதாஸன் இந்த உபமானத்தைச் சொன்னான் என்பதைவிட, ஸ்மிருதிகள் முழுக்கவும் ச்ருதிகளை அநுஸரித்தவையே என்பதற்கு ஆதாரம் வேண்டியதில்லை.

ச்ருதி-ஸ்மிருதி;ச்ரௌதம்-ஸ்மார்த்தம்

ச்ருதி- ஸ்மிருதி; ச்ரௌதம்-ஸ்மார்த்தம்

ச்ருதி-ஸ்ம்ருதிகளுக்கிடையே பேதம் கற்பிப்பது தப்பு. ச்ருதி-ஸ்ம்ருதி-புராணம் மூன்றும் ஒரே tradition (மரபு) தான். "ச்ருதி-ஸ்ம்ருதி-புராணானாம் ஆலயம்" என்று பகவத் பாதாளைச் சொல்கிறோம். இவை ஒன்றுக்கொன்று வித்யாஸமானவையாக யிருந்தால் எப்படி ஒருத்தரிடமே மூன்றும் சேர்ந்திருக்கும்?

ஆசாரியாளின் வழியை அநுஸரிப்பவர்களுக்கு ஸ்மார்த்தர்கள் என்பது பெயர். 'ஸ்மார்த்தர்' என்றால் 'ஸ்மிருதிகளைப் பின்பற்றுகிறவர்' என்பதே அர்த்தம். வேதத்தை நிலை நாட்டவே ஆசார்யாள் அவதரித்தார் என்று சொல்லிவிட்டு, அவரது வழியில் போகிறவர்களை ஸ்மார்த்தர் என்றால் வேதமும் ஸ்மிருதியும் ஒன்று என்று தானே ஆகிறது?

இப்போது, வேதத்திலே வ்யக்தமாக [வெளிப்படையாக]ச் சொல்லாமல் ஸ்மிருதிகளில் சொல்லியுள்ள அநுஷ்டானங்களை ஸ்மார்த்த கர்மா என்றும், வேதமான ச்ருதியிலேயே வ்யக்தமாகச் சொன்ன அநுஷ்டானங்களை ச்ரௌத கர்மா என்றும் சொல்கிறோம். இதனால் ச்ரௌதத்தைவிட ஸ்மார்த்தம் கீழானது என்று நினைத்து விடவே கூடாது. கிருஹஸ்தனுக்கு மிகவும் முக்யமான ஔபாஸனம், வீட்டிலே இவன் செய்ய வேண்டிய அதி முக்யமான (domestic) க்ருஹ்ய கர்மாக்கள், வைதிக கர்மாக்களில் ரொம்பவும் அவசியமானதான பித்ரு சிராத்தம் இவையும், பாக யக்ஞங்கள் என்ற ஏழு வேள்விகளும் ஸ்மார்த்த கர்மாக்கள்தான். இவற்றிலெல்லாம் வேத மந்திரங்களேதான் பிரயோஜனமாகின்றன. ஆகையால் ச்ருதியின் உள்பாவத்தை நன்றாகப் புரிந்து கொண்டேதான் இவற்றை ஸ்மிருதிகாரர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

ஆகையால் ச்ருதியை விட ஸ்மிருதி கீழானது, ஸ்மிருதியை விடப் புராணம் கீழானது என்றெல்லாம் நினைக்காமல் எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து, integrated - ஆக நினைக்க வேண்டும்.

வேத தர்மங்களைப் புராணம் கதையாகச் சொல்கிறது. வேத தர்மங்களையும் கர்மங்களையும் ஸ்ம்ருதியானவை கதையில்லாத உபதேசங்களாக, விதிகளாகத் தருகின்றன. கர்மாக்களின் வழிமுறைகளையும் தருகின்றன.

வேதம் முனிவர்களுக்கு intuition -ல் (உள்ளுணர்வில்) பளீரென்று தெரிந்தது. அதை அவர்கள் செய்யவில்லை. வெறுமே கண்டு கொண்டார்கள். இங்கே அவர்களுடைய மூளைக்கு வேலையே இல்லை.

ச்ருதிம் பச்யந்தி முனய:

"வேதத்தை முனிவர்கள் வெறுமே கண்டு கொண்டார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிக் கண்டெடுத்ததில் தங்கள் மூளையைச் செலுத்தி, ஜனங்களுக்கு தர்மங்களையும் கர்மங்களையும் பாகுபடுத்தி, வகை தொகையாக தரவேண்டும் என்ற எண்ணத்தில் நினைவு படுத்திக் கொண்டு கோத்துக் கொடுத்ததே ஸ்மிருதி. ஸ்மிருதி என்றால் நினைவு என்று முன்பே சொன்னேனல்லவா?

வேதம் தோன்றியது தானாக உண்டான அநுபவம். அதிலிருந்து ரிஷிகள் நினைவால் உண்டாக்கியது தர்ம சாஸ்திரம் எனப்படும் ஸ்மிருதிகள்.

"ஸம்ஸ்கார ஜன்யம் ஞானம் ஸ்ம்ருதி:" என்று, நியாய சாஸ்திரத்தில் ஸ்மிருதிக்கு லக்ஷணம் சொல்லியிருக்கிறது. ஸம்ஸ்காரத்திலிருந்து பிறக்கும் அறிவே ஸ்ம்ருதி என்று அர்த்தம்.

இந்த இடத்தில் 'ஸம்ஸ்காரம்' என்பதற்கு 'அதீந்திரியம்' என்றும் இன்னொரு பேர் சொல்லியிருக்கிறது. இது என்ன?

காசிக்குப் போய் நேரிலே அந்த க்ஷேத்ரத்தைப் பார்த்தோம். நேரிலே பார்த்தது அநுபவம். ஊருக்குத் திரும்பி வந்து

ரொம்ப நாள் கழித்துக் கோயிலுக்குப் போகிற போது, இந்த உள்ளூர்க் கோயிலிலும் 'காசி விஸ்வநாதர் ஸந்நிதி' என்று இருப்பதற்குப் போகிறோம். உடனே காசியிலே நாம் அநுபவித்த விச்வநாத தரிசனம் ஞாபகம் வருகிறது. நடுவே பல நாள் இந்த நினைவு இல்லை. அநேகம் பேரைப் பார்க்கிறோம். பிறகு நினைப்பதில்லை. மறுபடி பார்த்தால் மட்டும், 'ஒஹோ, முன்னே பார்த்திருக்கிறோமே! என்று பழைய ஞாபகம் வருகிறது. இடையிலே நினைவு இல்லை. அப்படி இடையில் இருக்கிற நிலைதான் ஸம்ஸ்காரம் அல்லது அதீந்திரியம் என்பது. அதிலே அநுபவத்தின் impression [பதிவு] உள்ளூர இருக்கிறது. இந்த 'இம்ப்ரெஷன்' அப்புறம் 'எக்ஸ்ப்ரெஷ'னாக வெளிப்படுவதுதான் ஸ்மிருதி (நினைவு) . ஆக அநுபவம், அந்த அநுபவித்தில் ஏற்பட்ட உள் இம்ப்ரெஷனான ஸம்ஸ்காரம் என்ற இரண்டையும் கொண்டே ஸ்மிருதி என்ற நினைவு உண்டாகிறது.

அநுபவமான வேதம் நினைவான ஸ்மிருதியாக, தர்ம சாஸ்திரமாக வந்திருக்கிறது. வேத மூலம் இல்லை என்றால் ஸ்மிருதி என்ற பேரே தப்பு. . இந்த ஸ்மிருதிக்கு எது ஆதாரமான அநுபவம் என்றால் வேதம்தானே? அப்படியொரு ஆதாரமில்லாவிட்டால் "நினைவுக் குறிப்பு" என்று பொருள்படும்படிப் பேர் வைத்திருப்பார்களோ? ஏற்கெனவே ஆதாரமில்லாமல் புதிதாகத் தோன்றுவதை ஞாபகக் குறிப்பு என்று யாராவது சொல்வார்களா?

நேராக ச்ருதியிலேயே சொன்ன ச்ரௌதம் ஸந்தேஹத்துக்கு இடமில்லாமல் நமக்கு 100% பிரமாணம் என்பதில் யாருக்கும் இரண்டாவது அபிப்பிராயமில்லை.

அதற்காக அப்படி நேராக ச்ருதியில் இல்லாமல் ஸ்மிருதியிலேயே உள்ள ஸ்மார்த்தம் இரண்டாம் பக்ஷப் பிரமாணம் என்று அர்த்தமில்லை. ச்ரௌதத்துக்கு ஆக்ஷேபமாக, மாறாக ஸ்மார்த்தம் பேசாது. ச்ரௌதத்துக்கு அதிகமாகவே சிலதை அது சொல்கிறது. இவையும் நமக்குப் பூர்ணப் பிரமாணமே. ஏனென்றால் ச்ருதியின் inner spirit -ஐ (உள் பாவத்தை) ப் புரிந்து கொண்டே இவற்றை ஸ்மிருதி சொல்கிறது. மஹாபுராணங்களிலும், இதிஹாஸங்களிலும் விட்டுப் போனதையும் ஸ்தல புராணங்கள் எடுத்துச் சொல்லி இட்டு நிரப்புகிற மாதிரி, ச்ரௌதத்தில் விட்டுப் போனதையே ஸ்மார்த்தத்தில் சொல்லியிருக்கிறது. ஆகையால் 'ச்ருதி பிரமாணம்', 'ஸ்மிருதி பிரமாணம்' என்ற இரண்டு வார்த்தைகள் அடிபடுவதைப் பார்த்து, இவற்றுக்கிடையில் வித்யாஸமோ, ஏற்றத் தாழ்வோ கற்பிக்கக் கூடாது.

ஸம்ஸ்காரம்

ஸம்ஸ்காரம்

மேலே ஸம்ஸ்காரம் என்ற வார்த்தையைச் சொன்னேன். ஆனால் அதற்குச் சொன்ன அர்த்தம் தர்க்க சாஸ்திரப்படியானது. Impression on memory (ஒரு விஷயம் மூளைக்குள் பதிந்திருப்பது) என்பது இந்த இடத்தில் அர்த்தம் என்று சொன்னேன்.

பொதுவாக ஸம்ஸ்காரம் என்றால் இப்படி அர்த்தம் செய்ய மாட்டார்கள். 'ஸம்–நன்றாக; காரம் ஆக்குவது:' "ஒன்றை நன்றாக ஆக்குவதே ஸம்ஸ்காரம்" என்பதுதான் பொதுவான அர்த்தம்.

இம்மாதிரி ஒரு ஜீவனைப் பரமாத்மாவிடம் சேர்க்கிற அளவுக்கு நன்றாக சுத்தப்படுகிற ஸம்ஸ்காரங்களையே தர்ம சாஸ்திரங்கள் நமக்கு விசேஷமாகச் சொல்கின்றன.

கல்ப ஸூத்ரங்களில் சொன்னதை அநுஸரித்து ஒரு ஜீவன் இந்த ஜீவ யாத்திரையில் (ஒரு ஜன்மாவில்) செய்ய வேண்டிய நாற்பது ஸம்ஸ்காரங்களை விரிவாக தர்ம சாஸ்திரங்களிலிருந்தே அறிகிறோம்.

நாற்பது ஸம்ஸ்காரங்கள் என்னென்ன என்று கொஞ்சம் தெரிந்து கொள்ளலாம்.

நாற்பது ஸம்ஸ்காரங்கள்

தேவலோகம் அல்லது ஆத்ம ஞானத்துக்கு வழி

நாற்பது ஸம்ஸ்காரங்கள்

தேவ லோகம் அல்லது ஆத்ம ஞானத்துக்கு வழி

இந்த லோக வாழ்க்கையில் ஸந்தோஷம், துக்கம் இரண்டும் கலந்து கலந்து வருகின்றன. சிலருக்கு ஸந்தோஷம் அதிகமாக இருக்கிறது. சிலருக்கு துக்கம் அதிகமாக இருக்கிறது. மனஸைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, எத்தனை துக்கத்திலும் சிரித்துக் கொண்டு ஸந்தோஷமாயிருப்பவர்கள் எங்கேயாவது அபூர்வமாக இருக்கிறார்கள். ஸந்தோஷப்பட எத்தனையோ இருந்தும் திருப்தியில்லாமல் அழுபவர்களோ நிறைய இருக்கிறோம். குறையிருக்கிறது என்றால் துக்கம் என்றுதான் அர்த்தம்.

எப்போதும் ஸந்தோஷமாயிருக்க வேண்டும் என்பது தான் அத்தனை ஜீவராசிகளும் விரும்புவது. எப்போதும்

ஸந்தோஷமாயிருக்கிற இடங்கள் இரண்டு உண்டு. தேவலோகம் அல்லது ஸ்வர்க்கம் என்பது ஒன்று. இன்னொன்று ஆத்ம ஞானம். ஆத்மா ஸந்தோஷமே வடிவானது. ஆனந்தமே பிரம்மம் என்று உபநிஷத் சொல்கிறது. அந்தப் பிரம்மம் தான் ஆத்மா. இப்படி தெரிந்து கொண்டு விட்டால் சாச்வத ஸந்தோஷந்தான். ஆனால் இது இந்திரியங்களாலும் மனஸாலும் அநுபவிக்கிற ஸந்தோஷம் அல்ல. இந்திரியம், மனஸ் எல்லாவற்றையும் கடந்து, 'சரீரம் நானில்லை, புத்தி நானில்லை, சித்தம் நானில்லை' என்று பண்ணிக் கொண்ட உச்சாணி நிலை அது.

இந்திரியங்களாலும் மனஸாலும் ஸந்தோஷத்தை ஸதாவும் அநுபவித்துக் கொண்டிருக்கிற இடமே தேவலோகம். பாட்டு, கூத்து, கந்தர்வ கானம், ரம்பை-மேனகை நர்த்தனம், கல்பக விருக்ஷம், காமதேனு, நந்தனவனம் எல்லாம் இருக்கிற உல்லாஸ பூமி அது. அங்கே ஸதா ஆனந்தம். ஆனால் ஆத்ம ஞானியின் ஸந்தோஷத்துக்கும் இதற்கும் வித்தியாஸங்கள் உண்டு. தேவ லோகத்தில் ஸதா ஸந்தோஷமே தவிர, அங்கே போகிறவனுக்கு இல்லை. ஏனென்றால் தேவலோகத்தில் இவனுக்கு சாச்வத வாஸம் கிடைக்காது. ரொம்பப் புண்ணியம் பண்ணினால், அதற்கு பலனாக நல்லதான அடுத்த ஜன்மா தருவதற்கு முன்பு கொஞ்ச காலம் இவனுக்கு தேவலோக வாஸம் கிடைக்குமே தவிர, தேவலோகத்திலேயே இவனுக்கு நிரந்தர வாஸம் கிடைக்காது. புண்ய பலனை இவன் அநுபவித்து விட்டான் என்று கணக்கு பார்த்தவுடன் இவனை ஸ்வாமி

பூலோகத்துக்கே உருட்டி விட்டுவிடுவார். மநுஷ்யர்களாக இருந்து ரொம்பவும் நிறையப் புண்ணியம் செய்ததால் தேவர்களாகவே ஆகி தேவலோக வாஸம் பெற்ற சிலரைப் பற்றியும் புராணங்களில் இருப்பது வாஸ்தவந்தான். ஆனால் தேவர்களுக்குமேகூட தேவலோகத்தில் நிரந்திர வாஸமில்லை என்றும் அந்தப் புராணங்களே சொல்கின்றன. தேவர்களை சூரபத்மன் அடித்துத் துரத்தினான், மஹிஷாஸுரன் அடித்துத் துரத்தினான், இந்திரன் உள்பட தேவர்கள் பூலோகத்திலே வந்து திண்டாடினார்கள் என்றெல்லாமும் புராணத்தில் இருக்கிறது. அதனால் தேவலோகத்தில் எப்பொழுதும் இருக்க முடிந்தால் சாச்வத ஸந்தோஷமாக இருக்கும் என்று hypothetical -ஆக வேண்டுமானால் சொல்லலாமே தவிர அப்படி யாரும் இருந்ததில்லை; இருக்கவும் முடியாது என்றுதான் தெரிகிறது.

இந்திரியத்தால் ஸந்தோஷம் என்கிறபோது வெளியிலே உள்ளவற்றை அநுபோகம் பண்ணுவதால்தான் அது கிடைக்கிறது. வெளியிலே இருப்பதை எப்படி எப்போதும் நம்மிடம் தக்க வைத்துக்கொள்ள முடியும்? அது கையை விட்டுப் போனாலும் போகும்தான். காமதேனுவும், கல்பக விருக்ஷமும், ஐராவதமும், இந்திராணியுமே கூட இந்திரன் கையை விட்டுப்போய், அவன் தனியாகத் தவித்த ஸந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன. ஆகையால் வெளியிலிருப்பதை depend பண்ணுகிற (சார்ந்திருக்கின்ற) தேவலோக இந்திரிய ஸௌக்கியம் நிஜத்தில் சாச்வதமேயில்லை. வெளி–உள் என்று எதுவுமே இல்லாமல் ஆத்மாவிலேயே, ஸ்திர பிரக்ஞன் என்று

பகவான் [கீதையில்] சொன்னது போல் ஆணி அடித்த மாதிரி ஊன்றிவிடுகிறவனுக்குத்தான் ஸதானந்தம். இந்திரனின் ஆனந்தமும் இந்த ஆத்மானந்த மஹாஸமுத்திரத்தில் துளியிலும் துளிதான் என்கிறார் ஆசார்யாள்.

யத் ஸௌக்யாம்புதி லேச லேசத இமே

சக்ராதயோ நிர்வ்ருதா - (மநீஷா பஞ்சகம்)

இந்திரியங்களையும் மனஸையும் பயிர்த்தண்டிலிருந்து ஈர்க்கை உருவுகிற மாதிரி உருவிப் போட்டுவிட்டு ஆத்மாவாகவே இருந்து விட்டால் இந்த ஸதானந்தம் கிடைப்பதாக உபநிஷத் சொல்கிறது. அதற்கு ரொம்பவும் தைரியம் வேண்டும். 'சரீரம் நானில்லை, அதன் ஸுகதுக்கம் எனக்கில்லை' என்று அதை உயிரோடு இருந்து கொண்டிருக்கும்போதே கிள்ளிப் போடுவதற்கு ரொம்பவும் தைரியம் வேண்டும். சித்த சுத்தி ஏற்பட்டாலொழிய இது வராது. சித்தம் சுத்தியாவதற்குத்தான் கர்ம அநுஷ்டானம். ஒரு ஜீவனை வேத மந்திரங்களால் இப்படி பரிசுத்தி பண்ணி, அந்த மந்திரங்களோடு சேர்ந்த காரியங்களில் ஈடுபடுத்துவதற்காகவே நாற்பது ஸம்ஸ்காரங்கள் இருக்கின்றன. அதாவது அத்வைத முக்திக்கு முதல்படியாக இவை உள்ளன.

இந்த கர்ம அநுஷ்டானத்தால் சித்த சுத்தியை ஸம்பாதித்துக் கொள்வதே லக்ஷ்யமாக இருக்க வேண்டும். அப்புறம் சுத்தமான அந்த:கரணத்தைப் பெற்றுவிட்ட ஜீவன் ஆத்ம விசாரம் செய்து ஸதானந்தமான ஆத்ம

ஸாக்ஷாத்காரத்தை அடையவேண்டும் என்பது ஸ்ரீ சங்கர பகவத் பாதர்களின் கொள்கை. இந்த லக்ஷ்யம் இருந்தும், கர்மாவைக் கடைசி மட்டும் விடாமலே, ஸந்நியாஸியாகி ஞான விசாரம் செய்யாமலே இறந்து போனால் அவன் பிரம்ம லோகத்துக்குப் போகிறான் என்றும், மஹாப் பிரளயத்தில் பிரம்மா பிரம்மத்தோடு ஐக்கியமாகிறபோது இவனும் அத்வைத முக்தி அடைந்துவிடுகிறான் என்றும் சொல்கிறார்*. இப்படிப்பட்ட லக்ஷ்யம் இல்லாமல் கர்மாவுக்காகவே கர்மா பண்ணினால் தேவலோகம் கிடைக்கும். ஆனால் அது நிரந்தரம் இல்லை. இருந்தாலும் பூலோக அவஸ்தையைவிட, கொஞ்ச காலமானாலும் தேவலோக வாஸம் சிலாக்யம்தானே? அங்கே அனுப்புவதும் ஸம்ஸ்காரங்கள்தான்.

* அடுத்து வரும் பிரம்மசரியம் என்ற உரையில் 'நைஷ்டிக பிரம்மசரியம்; இல்லற வாழ்க்கை' என்ற பிரிவும் பார்க்க.

மூன்றுவிதமான லோகங்கள்

மூன்று விதமான லோகங்கள்

தேவலோகம், மநுஷ்ய லோகம் என்ற இரண்டோடு நரக லோகம் என்று ஒன்றைச் சொல்கிறோம். வஸிக்குமளவும் இன்பமே உள்ளது தேவலோகம்; இன்பமும் துன்பமும் கலந்திருப்பது மநுஷ்ய லோகம். துன்பம் மட்டுமே உள்ள லோகமும் இருந்தாக வேண்டும் அல்லவா? அதுவே நரகம். மஹா பாபம் பண்ணினவன் அடுத்த ஜன்மா நீசமாக எடுப்பதற்கு முன்பு, தன் பாபகர்மாவுக்கு அதிகப்படி தண்டனையாக இந்த நரகத்துக்குப் போகிறான் என்று சாஸ்திரம் சொல்கிறது. அங்கே ரொம்பவும் கஷ்டப்பட்டு

அநுபவித்து, அதிகப்படி பாவத்தைக் கழித்தபின் மறுபடி பூலோகத்துக்கு வருகிறான்; மறு ஜன்மா எடுக்கிறான்.

ஸுகதுக்கங்கள் சீதோஷ்ணத்தைப் போல இருக்கின்றன. லோகங்களெல்லாம் தெர்மாமீட்டர் போல இருக்கின்றன. அந்தத் தெர்மாமீட்டரில் கொதிக்கும் இடம் (boiling point) தான் நரக லோகம். ஜில்லென்று உறையும் இடம் (freezing point) ஸ்வர்க்க லோகம். நடுவில் டிகிரிகள் இருக்குமிடம் பூலோகம். இந்த நடு பாகத்திலே உறைகிற டிகிரிக்குக் கிட்டேயிருந்து ஆவியாய்ப் போகிற டிகிரிக்குக் கிட்டே வரை பல டிகிரிகள் இருக்கின்றன. கொதிக்கும் இடத்தில் (boiling point) குளிர்ச்சி இல்லை. உறையும் இடத்தில் (freezing point) உஷ்ணமே இல்லை. இந்த இரண்டுக்கும் நடுவில் பல விதமான டிகிரிகளும் இருக்கின்றன. இந்த மூன்றையும் மூன்று லோகங்களுக்கு உபமானமாகச் சொல்லலாம். மேல் லோகம் ஒரு வகை. அவை இந்திரனிருக்கிற தேவ லோகம், பிரம்மாவின் ஸத்யலோகம், விஷ்ணுவின் வைகுண்டம், பரமேச்வரனின் கைலாஸம் முதலியவைகள். உபநிஷத் இவைகளை ஒன்றாகச் சொல்லும்; பிரம்மலோகம் என்றே சொல்லும். புராணங்கள் பிரித்துச் சொல்லும். கீழே இருப்பது நரகலோகம். மத்தியில் இருப்பது ஸுகம், துக்கம் இரண்டும் கலந்தாங்கட்டியான மிச்ரலோகம் எனப்பட்ட நம்முடைய மண்ணுலகம். இங்கே ஸுகதுக்கங்கள் பலவிதமான விகிதத்தில் கலந்திருக்கின்றன. ஜாஸ்தி ஸுகம்-ஸ்வல்ப துக்கத்திலிருந்து ஜாஸ்தி துக்கம்-ஸ்வல்ப ஸுகம் வரை பல தினுஸான விகிதங்கள்; பல டிகிரிகளைப் போல!

ஆனாலும் நம்முடைய சாஸ்திரப்படி மற்ற லோகங்களைவிட இந்த பூலோகந்தான் உயர்ந்தது! ஏன்? இதிலிருந்து எந்த லோகத்துக்கு வேண்டுமானாலும் போகலாம். மற்ற லோகங்களுக்குப் போனால் இஷ்டப்படி அவ்விடத்தை விட்டுப்போக முடியாது. நரகத்தின் கஷ்டம் தாங்காமல் ஓடி வந்துவிடலாமா என்றால் முடியாது. பாப கர்மா தீருகிற வரை அங்கே இருந்துதான் தீரவேண்டும். தர்மராஜா இவ்வளவு காலம் இருக்கவேண்டுமென்று எழுதி வைத்திருப்பான். அங்கெல்லாம் நாமாக ஒன்றும் செய்ய முடியாது. "ஸ்வர்க்கம் நன்றாயிருக்கிறதே, இன்னம் கொஞ்சம் காலம் அங்கேயே இருக்கலாமே" என்று ஆசைப்பட்டாலும், புண்ய கர்மா தீர்ந்தபின் அங்கே நீடிக்க முடியாது. 'தொபுகடீர்' என்று பூலோகத்தில் வந்து விழவேண்டியதுதான். பூமியில் மட்டுமே நமக்கு தனி ஸ்வாதந்திரியம் கொஞ்சம் இருக்கிறது. புண்ணியம் பண்ணலாம். பாபமும் பண்ணலாம். கையினால் பூஜையும் பண்ணலாம், அடிக்கவும் செய்யலாம். நாக்கினால் நாம ஸங்கீர்த்தனம் பண்ணலாம், அல்லது யாரையாவது வையலாம். இரண்டுக்கும் நமக்குச் சக்தி இருக்கிறது. இப்படி ஒவ்வொரு இந்திரியத்துக்கும் இரண்டுவித சக்தியை பகவான் கொடுத்திருக்கிறார்.

இந்த ஸ்வாதந்திரியம் மற்ற லோகங்களில்லை. அவைகளெல்லாம் போக பூமிகள். மாடாகப் பிறந்தால் புண்ணியம் பண்ணமுடியுமா? தேவர்களும் அந்த மாட்டைப் போன்றவர்கள்தான்! மாட்டுக்குப் பாபமும் இல்லை; புண்ணியமும் இல்லை. இந்த பூலோகத்தில் மநுஷ்யராகப் பிறந்த நாம் மட்டுமே கர்மாநுஷ்டானம் பண்ணி நல்ல

கதியடையலாம். தேவ லோகத்தில் அது முடியாது. கிருஷி [உழவு] பண்ணுகிற பண்ணை ஸ்தானம் நம் உலகம்தான். பாக்கியெல்லாம் இங்கே நாம் உற்பத்தி பண்ணுவதன் பலனை சாப்பிடுகிற ஹோட்டல் ஸ்தானம்! உற்பத்தி ஸ்தானம் அல்ல! அங்கே பலன்களை அநுபவிக்கலாம். எவ்வளவு புண்ணிய பாபம் பண்ணியிருக்கின்றோமோ அவ்வளவு பலன்களை அநுபவிக்கலாம். அதனால் அவைகளுக்கு போக பூமியென்ற பெயர் ஏற்பட்டது. நம் லோகமே கர்ம பூமி. பண்ணுகிற சக்தி இங்கேதான் உண்டு. இங்கும் சுதந்திர மனஸால் யோசித்துப் பண்ணுவது மநுஷ்ய ஜன்மத்திற்குத்தான் உண்டு. மற்றவைகளெல்லாம் 'இன்ஸ்டிங்க்ட்' [உள்ளுணர்ச்சி] படிச் செய்கிற ஜீவராசிகளே. கர்மாவைப் பண்ண மற்ற லோகங்களிருப்பவர்க்கு அதிகாரம் இல்லை.

மநுஷ்யன் செய்கிற கர்மா, அவனுடைய குணம் ஆக இரண்டும் சேர்ந்து ஜீவனை மற்ற லோகங்களுக்கு அழைத்துக் கொண்டு போகின்றன. வேலை செய்து குணத்தை நல்லதாக ஆக்கிக் கொண்டு பரலோகத்திற்கப் போவதற்கு இந்தக் கர்ம பூமியைத் தவிர இதர பூமிகளில் ஸாத்தியமில்லை.

ஒரு கர்மாவைச் செய்ய வேண்டுமென்றால் அதற்குக் கால, தேசக் கட்டுப்பாடு உண்டு. சிராத்தம் அர்த்த ராத்திரியில் பண்ணலாமா? கூடாது. அதற்கு ஏற்பட்ட காலம் உண்டு. அப்படியே அந்தக் கர்மா செய்யவேண்டிய தேசம் ஒன்று இருக்கிறது. அந்தக் கர்மாவைப் புண்ணிய பூமியில்தான் பண்ண வேண்டும். முக்கியமாக பாரத

வர்ஷத்தில் வைதிக கர்மாக்கள் பண்ணப்பட வேண்டும். இந்த தேசத்திலும் சில காலங்கள் நிஷித்தமானவை; சில இடங்கள் நிஷித்தமானவை. பரிசுத்த இடத்தில் பரிசுத்த காலத்தில் கர்மாக்களைப் பண்ணவேண்டும்.

ஸம்ஸ்காரம் என்பதன் பொருள்

ஸம்ஸ்காரம் என்பதன் பொருள்

கர்மா என்றால் என்ன? கர்மா என்பது காரியம். ஒரு வேஷ்டியை உண்டாக்குவதற்கு எவ்வளவு காரியங்கள் செய்ய வேண்டியிருக்கின்றன! பஞ்செடுத்து, கொட்டை பிரித்து, நூல் நூற்று, தறியில் நெய்து, சாயம் தோய்த்து – என்றிப்படி எத்தனை செய்ய வேண்டியிருக்கிறது? அதைப் போல அநேக காரியங்கள் பண்ணி ஒருவனை ஆத்மவித்தாக்க வேண்டும். குணத்தினாலும் சரீரத்தினாலும் சேர்ந்து, ஒன்றையொன்று பரிசுத்தி பண்ணிக் கொள்ளும் முறையில் கர்மா செய்யவேண்டும். இப்படிப்பட்ட கர்மாவுக்கே ஸம்ஸ்காரம் என்று பெயர்.

ஒரு பதார்த்தத்துக்கு உள்ள தோஷத்தைப் போக்குவது எதுவோ, குணத்தை புகட்டுவது எதுவோ அதுதான் ஸம்ஸ்காரம். உதாரணமாக கேச ஸம்ஸ்காரம் என்பது க்ஷௌரம் [க்ஷவரம்] செய்து கொள்வது, அழுக்கு, பேன் முதலியவைகளை எடுப்பது, தைலம் தேய்ப்பது முதலியவை. ஜீவாத்மாவுக்கு தோஷங்கள் இருக்கின்றன. தோஷத்தை நிவர்த்தி பண்ணி குணத்தை நிரப்ப வேண்டும். சீப்பினால் வாரித் தைலம் தேய்ப்பது போன்றது ஸம்ஸ்காரம். வயலில் சில ஸம்ஸ்காரங்கள் செய்யப்படுகின்றன. முதலில் காயப்போட வேண்டும்;

பின்பு உழ வேண்டும்; ஜலம் விட்டுப் பரம்படிக்க வேண்டும். பிறகு விதைக்க வேண்டும்; நாற்றுப்பிடுங்க வேண்டும்; களை பிடுங்க வேண்டும்; ஜலம் பாய்ச்ச வேண்டும்; அதிக ஜலமிருந்தால் மடை திறந்துவிட வேண்டும்; விளைந்த பின் அறுவடை செய்யவேண்டும்; களத்தில் அடிக்க வேண்டும்; பதர் தூற்றவேண்டும், நெல்லைக் கோட்டை கட்டவேண்டும்; பின்பு அந்த நெல் பழகவேண்டும். அப்புறம்தான் அதை உபயோகிக்க வேண்டும். இவ்வளவு காரியங்கள் இருக்கின்றன. பஞ்சு நூலாகி வேஷ்டியாக வேண்டுமென்றால் பல காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. பஞ்சு யந்திர சாலையில் எவ்வளவு காரியங்கள் செய்யப்படுகின்றன? நூல் சிக்கலாகாமல் நெய்ய எத்தனை ஜாக்கிரதையுடன் எவ்வளவு செய்ய வேண்டியிருக்கிறது? நம்முடைய ஆத்மாவானது இந்திரிய சலனங்களால் சிக்கலாக இருக்கிறது. சிக்கலை எடுத்து எப்பொழுதும் ஆனந்தமாக இருக்கச் செய்யவேண்டும். அப்படிச் செய்வதற்கு பல தடைகள் இருக்கின்றன. ஏதோ சில ஸமயங்களில் மட்டும் இப்போது ஆனந்தம் உண்டாகிறது. பல விதமான துக்கம், வலி இருந்தும் இவ்வளவையும் மீறிக் கொண்டு கொஞ்சம் ஆனந்தம் உண்டாகிறதே, இந்த ஆனந்தம் எப்பொழுதும் இருக்குமாறு பண்ணவேண்டும். அதற்காக ஜீவனை ப்ரம்ம லோகத்தில் கொண்டு போய் சேர்க்கவேண்டும். அந்த ஈச்வர ஸந்நிதானத்தில் சேர்த்துவிட்டால் அப்புறம் துன்பமே இராது. பிரளயத்துக்கு அப்புறம் ஐக்கியம் உண்டாகும். ஆகையால் அங்கே சேர்க்கத் தயார் பண்ண வேண்டும்.

இதற்குத்தான் நாற்பது ஸம்ஸ்காரங்களையும் எட்டு ஆத்ம குணங்களையும் ரிஷிகள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆத்ம குணம், ஆத்மாவை ஸம்ஸ்காரங்களால் சுத்தி பண்ணிக் கொள்வது என்றெல்லாம் சொல்கிறபோது ஆத்மா என்பது த்வைதிகள் சொல்கிற, அதாவது பரமாத்மாவுக்கு வேறாக இருக்கிறாற்போலத் தெரிகிற, ஜீவாத்மாவைத்தான். வாஸ்தவத்தில் இருப்பது ஒரே ஆத்மாதான்; ஜீவ ஆத்மா, பரம ஆத்மா என்ற பேதமே இல்லை. இந்த ஆத்மா நித்ய சுத்தமானது. ஆகையால் அதை ஸம்ஸ்காரத்தால் சுத்தி பண்ணுவது என்பதே தப்பு. அது நிர்குணமான வஸ்து. அதனால் ஆத்ம குணம் என்பதும் தப்பு. ஆனாலும் அந்த நிர்குண வஸ்து மாயையோ, கீயையோ எதையோ ஒன்றை வைத்துக் கொண்டு நம் எல்லார் மாதிரியும் ஆகி, நமக்கு 'அதுவே தான் நாம்' என்பது துளிக்கூடத் தெரியாமல்தானே நடைமுறையில் பண்ணி இருக்கிறது? இப்படி த்வைதமாக பேத லெவலில் இருக்கிற ஜீவனைத்தான் இங்கே ஆத்மா என்று சொல்லியிருக்கிறது. இது அழுக்குப் பிடித்ததுதான். அதனால் ஸம்ஸ்காரம் பண்ணி இதை சுத்தமாக்க வேண்டும். இது துர்க்குணம் பிடித்தது. அதனால் எட்டு ஆத்ம குணங்களை அப்பியஸித்து இதை நல்ல குணமுள்ளதாக்க வேண்டும். அப்புறம் ஸம்ஸ்காரம் முதலான காரியங்களும் போய்விடும் குணங்களும் – உயர்ந்த ஸத்வ குணமும் கூட – போய்விடும். ஜீவாத்ம பரமாத்ம பேதமில்லாத அகண்ட ஏக ஆத்ம அநுபவம் அப்போதுதான் ஸித்திக்கும். அதை அடைவதற்காகவே

இப்போது காரியமும் (ஸம்ஸ்காரமும்) , குணமும் வேண்டும். இப்படி அஷ்ட குணங்கள்.

நமக்கு லட்சியமாக உள்ள புராண புருஷர்களின் உத்தம குணங்களை நேரே அப்படியே எடுத்துக் கொண்டு அநுஸரிக்கலாம் என்றால், அதற்கு முடியாமல் ஆசாபாசங்கள், துவேஷங்கள், பயம், மனஸின் மற்ற கிருத்ரிமங்கள் எல்லாம் இடைஞ்சல் செய்கின்றன. நமக்கு நிறைய கர்மாக்களைக் கொடுத்து, அதோடு, 'இப்படித்தான் உட்கார வேண்டும். இப்படித்தான் டிரெஸ் பண்ணிக் கொள்ள வேண்டும்' என்றெல்லாம் ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கும்படி பண்ணினால்தான் மனஸ் தடித்தனமாகக் கண்டபடி போகாமல் இருக்கிறது. தடித்தனம், அஹங்காரம் குறைய குறையத்தான் ஆசை, துவேஷம் பயம், துக்கம் முதலானவைகளை அடக்கிக் கொண்டு உத்தம குணங்களிலிருந்து நழுவாமல் இருக்க முடிகிறது. ஸம்ஸ்காரங்களும் ஸத்குணங்களும் ஒன்றோடொன்று சேர்த்து வருகின்றன.

ஐடியலாக இருக்கிற புராண புருஷர்களின் குணங்களை – கதையாகக் கேட்டு, நாமும் அப்படி இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்ட குணங்களை – நாம் யதார்த்தத்தில் பெறுவதற்கு ஸம்ஸ்காரங்கள் ஸஹாயம் செய்கின்றன.
அஷ்ட குணங்கள்

அஷ்ட குணங்கள்

இப்படி எட்டு குணங்கள். தயை, க்ஷாந்தி, அநஸூயை, சௌசம், அநாயசம், மங்களம், அகார்ப்பண்யம், அஸ்ப்ருஹா என்பவை அஷ்ட குணங்கள்.

'தயை' என்பது ஸர்வபூதங்களிடமும் அன்பு, அருளுடைமை. மநுஷ்ய வாழ்க்கையின் நிறைந்த பலன், பெரிய ஆனந்தம் அன்பு செய்வதுதான். அதுதான் அஸ்திவாரம், back-bone [முதுகெலும்பு] .

'க்ஷாந்தி' என்றால் பொறுத்துக் கொள்வது. நமக்கு வியாதி, விபத்து, தாரித்ரியம் முதலானவற்றால் உண்டாகிற கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வது ஒன்று. நமக்கு ஒருத்தர் கஷ்டத்தைக் கொடுக்கிறபோது அவரையும் மன்னித்து அன்பைக் காட்டுவது இன்னொரு விதப் பொறுமை.

'அநஸூயை' என்பது அத்ரி மஹரிஷியின் பத்னியான மஹா பதிவிரதையின் பேர் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அஸூயை இல்லாதவள் அநஸூயை. (அநுஸூயை என்று 'நு' போட்டுச் சொல்வது தப்பு.) நம்மைவிட ஒருத்தன் நல்ல நிலையில் இருந்தால் வயிற்றெரிச்சல் படக்கூடாது. பொறாமையின்மைதான் அநஸூயை.

முதலில் சொன்ன அன்பு எல்லாரிடமும்; இரண்டாவதாகச் சொன்ன பொறுமை தப்புப் பண்கிறவனிடம்; பொறாமையின்மை நம்மைவிட மேல் ஸ்தானத்திலிருக்கிறவனிடம். அவன் நம்மைக் காட்டிலும் யோக்யதையில் குறைந்தவனாக இருந்தாலும்கூட, நமக்குமேல் ஸ்தானத்துக்குப் போய்விட்டான் என்றால் அஸூயைப்படக் கூடாது. 'பூர்வ ஜன்மாவில் நம்மைவிடப் புண்ணியம் பண்ணியிருப்பான். அதனால்தான் பகவான்

அவனை உயர்த்தி வைத்திருக்கிறான்' என்று மனஸைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சௌசம் என்பது 'சுசி' என்பதை வைத்து ஏற்பட்டது. 'சுசி' என்றால் சுத்தம். ஸ்நானம், மடி வஸ்திரம், ஆஹார நிர்ணயம் முதலான ஆசாரங்கள் எல்லாம் 'சௌசம்' என்பதில் வரும். 'சுத்தம் சுகம் தரும். சுத்தம் சோறு போடும்' என்று பாமர ஜனங்களும் சொல்வார்கள். வெளியிலே நன்றாக சுத்தமாக இருக்கிறவனைப் பார்த்தாலே நம் மனஸுக்கும் சுத்தமாயிருக்கிறது.

ஸகல ஜனங்களுக்குமான ஐந்து தர்மங்களை மநு சொல்கிறபோதும் முதலில் அஹிம்ஸை, அப்புறம் ஸத்யம், அப்புறம் பிறர் பொருளில் ஆசையின்மை (அஸ்தேயம் – திருடாமலிருப்பது என்பது நேர் அர்த்தம்) என்ற மூன்றைச் சொல்லி, நாலாவதாக இந்த 'சௌசம்' என்பதையே சொல்கிறார். கடைசியாக இந்திரிய நிக்ரஹம் (புலனடக்கம்) என்பதைச் சொல்கிறார்*.

'அநாயாஸம்' என்பது ஆத்ம குணங்களில் அடுத்தது. ஆயாஸத்துக்கு எதிர்ப்பதம் அநாயாஸம். 'லைட்'டாக இருப்பது என்கிறார்களே அதுதான் அநாயாஸம். ஆயாஸம் இல்லாமல், அதாவது எதையுமே ஒரு சுமையாக எடுத்துக் கொண்டு கஷ்டப்படாமல், 'லைட்'டாக, லேசாக இருப்பது அநாயாஸம். எப்போது பார்த்தாலும் 'உர்'ரென்று இருந்துகொண்டு, வாழ்க்கையில் தனக்கு எல்லாம் கஷ்டம் என்று புலம்பிக் கொண்டு, நொந்து கொண்டு இல்லாமல், எதிலும் கடுமையாகச் செய்யாமல், நிம்மதியோடு லேசாகச் செய்யவேண்டும். இப்படிச்

செய்வதாலேயே ஆயாஸப் பட்டுக்கொண்டு செய்வதைவிடப் பலமடங்கு வேலை செய்து விடலாம். பதட்டமில்லாமல் பண்ணுவது அநாயாஸம். பட பட என்று செய்தால் நம்மையும் நெரித்துக் கொண்டு மற்றவர்களையும் நெரிப்பதுதான் மிஞ்சுமே தவிரக் காரியம் ஸரியாக ஆகாது. அநாயாஸம் ஒரு பெரிய Virtue (குணசீலம்). அலட்டிக் கொள்ளாமல் இருக்கிற குணம் அநாயாஸம். தானும் சிரமப்படாமல், மற்றவர்களையும் சிரமப்படுத்திக்கொண்டிராமல் இருப்பது அநாயாஸம். அநேக கர்மாநுஷ்டானங்களில் உடம்பால் சிரமப்படத்தான் வேண்டியிருக்கும். சிராத்தம் செய்வதென்றால் மத்யான்னம் இரண்டு மணி, மூன்று மணி வரை பட்டினி கிடக்கத்தான் வேண்டும். ஒரு யாகம் என்றால் அதில் இருக்கிற சரீர சிரமம் கொஞ்ச நஞ்சமில்லை; ஆகையால், இங்கே சிரமப்படக்கூடாது என்பது மனஸினால் சிரமப் படாமலிருப்பதைத்தான் குறிக்கும். எந்தக் காரியமானாலும் விக்கினங்கள் ஏதாவது வரத்தான் செய்யும். இதைப் பார்த்து மனஸை strain பண்ணிக்கொள்ளக்கூடாது. எல்லாம் பகவான் திட்டப்படி நடக்கிறது என்று, மனஸிலே பாரமில்லாமல் இருக்கவேண்டும். ஸங்கீத வித்வான் அநாயாஸாமாக தாரஸ்தாயி பிடித்தார் என்றால் என்ன அர்த்தம்? சிரம ஸாத்யமானதையே ஸுலபமாக்கிக் கொண்டு விட்டார் என்றுதானே அர்த்தம்? சிரமமான வாழ்க்கையை அப்படிப் பண்ணிக்கொள்வதுதான் 'அநாயாஸம்'.

'மங்களம்' என்றால் மங்களந்தான்! ஆனந்தமாக – அதிலேயே ஒரு கம்பீரத்தோடு தூய்மையோடு

ஆனந்தமாக இருந்து கொண்டிருப்பதுதான் மங்களம். எதற்கெடுத்தாலும் எரிந்து விழுந்து கொண்டோ, மூக்கைச் சிந்திப் போட்டுக்கொண்டே இல்லாமல், 'ஆஹா' என்று எப்போதும் ஸந்தோஷமாக இருக்கவேண்டும். இதுதான் லோகத்துக்கு நாம் செய்கிற பெரிய ஒத்தாசை, பெரிய தொண்டு. பணத்தை வாரிக் கொடுப்பதை விட, வேறு ஸர்வீஸ்கள் பண்ணுவதை விட, நாம் போகிற இடமெல்லாம் நம் மங்களத்தாலேயே ஆனந்தத்தை உண்டாக்கிக் கொண்டிருப்பதுதான் மற்ற ஜீவர்களுக்குப் பெரிய தொண்டு. 'லைட்'டாக, லேசாக எதையும் ஸாதிப்பது அநாயாஸம். போகிற இடமெல்லாம் நாமே ஒரு 'லைட்' (தீபம்) மாதிரி ஒளியை, ஆனந்தத்தைக் கொடுப்பது 'மங்களம்'. நாம் ஒரு இடத்துக்குப் போனால் அங்கேயிருப்பவர்கள் 'குற்றம் கண்டு பிடிக்க வந்துவிட்டான்' என்று முகத்தைச் சுளிக்கும்படியாக இருக்கக் கூடாது. எங்கே நாம் போனாலும் அங்கே நல்ல தினுசான ஸந்தோஷத்தை விருத்தி பண்ணவேண்டும். நாமும் மங்களமாக இருந்து கொண்டு, பொங்கும் மங்களம் எங்கும் தங்குமாறும் செய்ய வேண்டும்.

'அகார்ப்பண்யம்' என்று அடுத்தது சொன்னேன். கிருபணனின் குணம் கார்ப்பண்யம். அப்படி இல்லாமலிருப்பது அகார்ப்பண்யம். கிருபணன் என்றால் லோபி. லோபித்தனம், கருமித்தனம் இல்லாமல் தான தர்ம சிந்தையோடு இருப்பது அகார்ப்பண்யம். மனஸார வாரிக் கொடுக்கிற குணம் வேண்டும்.

அர்ஜுனன் ரொம்பவும் dejected -ஆக, depressed -ஆக மனம் தளர்ந்து தேர்த்தட்டிலே உட்கார்ந்து, 'யுத்தம் பண்ண

மாட்டேன்' என்று அழுதபோது அவனுக்கு 'கார்ப்பண்ய தோஷம்' ஏற்பட்டதாக கீதையில் சொல்லியிருக்கிறது. அந்த இடத்தில் 'தன்னையே ரொம்பவும் தாழ்த்திக் கொண்டு தீனமாகப் போய் விட்டவன்' என்று அர்த்தம். தன் விஷயத்திலேயே தான் லோபியாகி விட்டான் என்று அர்த்தம். அகார்ப்பண்யம் என்றால் இப்படி தீனனாக, நோஞ்சானாக, கையாலாகாதவனாக இல்லாமல் தீரனாக, நல்ல உத்ஸாஹ புருஷனாக, மனஸ்வியாக இருப்பது என்றாகும்.

'அஸ்ப்ருஹா' என்பது அஷ்டகுணத்தில் கடைசி. 'ஸ்ப்ருஹா' என்றால் பற்று. 'அஸ்ப்ருஹா' என்றால் பற்றின்மை, ஆசையின்மை. அத்தனை அனர்த்த பரம்பரைக்கும் ஆணி வேராக இருப்பது ஆசைதான். ஆனால் அதை அடியோடு வெட்டுவதுதான் ரொம்பவும் அஸாத்தியமாயிருக்கிறது. ஸம்ஸ்காரங்களைப் பண்ணி பண்ணி, அவற்றோடு அஷ்ட குணங்களையும் சேர்த்துச் சேர்த்து அப்பியாஸம் பண்ணிக் கொண்டு போகும்போது கடைசியில் இந்த ஆசையின்மை, பற்றின்மை, 'அஸ்ப்ருஹா' என்பது பூர்த்தியாக அநுபவத்தில் வருகிறது.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு

என்று வள்ளுவர் சொன்னார்.

'இப்படி ஈச்வரன் என்ற பற்றற்றானைப் பற்றிக் கொண்டு மற்றப் பற்றுகளை விட்டுவிட்டால் மட்டும் போதாது. அப்புறம் அந்த ஈச்வரனுடனும் பற்றைக் கத்தரித்து

விடவேண்டும்' என்று இன்னும் ஒருபடி மேலே போய்விட்டார் திருமூலர்:

ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள்

ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்

ஆசையைத்தான் தாகம் [வேட்கை] என்று புத்தர் சொன்னார். "ஜலம் வேணும் வேணும்" என்று தாகத்தில் பறக்கிற மாதிரி ஆசை வாய்ப்பட்டுப் பறப்பதை 'திருஷ்ணா' என்பார்கள். பிராகிருதத்தில் இதையே 'தன்ஹா' என்று புத்தர் சொன்னார். ஆசையைப் போக்கடித்துக் கொள்வதுதான் புத்தருடைய முக்கியமான உபதேசம். இது அஷ்ட குணங்களில் கடைசி. முதலில் சொன்ன தயை (love) தான் கிறிஸ்து மதத்துக்கு ஜீவநாடி.

இப்படி ஒவ்வொன்றை ஒவ்வொரு மதத்தில் ரொம்பவும் அழுத்தம் கொடுத்துச் சொன்னாலும் இந்த அஷ்ட குணங்களையுமேதான் கிறிஸ்து, புத்தர், நபி, நானக், ஜொராஸ்த்ரர், கன்ஃபூஷியஸ், இன்னும் என்னென்ன மதங்கள் இருக்குமோ அவை எல்லாவற்றின் ஸ்தாபகர்களும் சொல்லியிருக்கறார்கள். நேராக அவர்கள் இந்த எட்டைச் சொல்லாமலிருந்தாலுங்கூட மநுஷ்யனானவன் இந்த குணங்கள் இல்லாமலிருப்பதை எந்த மதஸ்தாபகரும் ஆதரித்திருக்க மாட்டார் என்பது நிச்சயம்.

* தெய்வத்தின் குரல்--முதற் பகுதி "பொதுவான தர்மங்கள்" என்ற பிரிவில் முதல் மூன்று கட்டுரைகள் பார்க்க.

குணமும் காரியமும்

குணமும் காரியமும்

ஆனால் இப்படி குணங்களை மட்டும் சொல்லி, "குணவானாயிரு, குணவானாயிரு" என்று மற்ற மதங்கள் சொல்லும்போது, நம் மதம்தான் இப்படிச் சொன்னதோடு நிற்காமல், ப்ராக்டிகலாக (நடைமுறையில்) அவனை அப்படி ஆக்குவதற்காக ஏகப்பட்ட ஸம்ஸ்காரங்களையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறது. வெறுமனே உபதேசிப்பதில் பிரயோஜனம் இல்லை. மநுஷ்யனைக் காரியத்திலே கட்டிப் போட்டால்தான் பிரயோஜனம் உண்டு. இதை நம் மதம்தான் பண்ணுகிறது.

மற்ற மதங்களில் அன்பு, ஆசையின்மை முதலான குணங்களை முக்யமாகச் சொல்லியிருக்க, ஹிந்து மதத்தில் நல்ல குணங்களுக்கு முக்யத்வம் தராமல், ஓயாமல் கர்மாநுஷ்டானம்தான் சொல்லியிருக்கிறது, ஒரே ritual-ridden [சடங்கு மயமானது] என்று சிலபேர் தப்பாக நினைக்கிறார்கள். அஷ்ட குணங்கள், அப்புறம் குணம் கடந்த குணாதீத ஸ்திதி முதலானவைகளை நம் மதத்தில் விசேஷமாகச் சொல்லியிருக்கறது. குணங்களைப் பற்றி வெறுமே பிரஸங்கம் பண்ணி விட்டால் போதாது. நல்லவனாக இருக்க வேண்டும், ஸத்யமாய் இருக்கவேண்டும். பிரேமையோடு இருக்கவேண்டும், தியாகமாய் இருக்கவேண்டும் என்பதெல்லாம் நமக்கே தெரிந்ததுதானே? தெரிந்துதானே வாழ்க்கையில் கொண்டுவர முடியாமல் கஷ்டப்படுகிறோம்! இதையே திருப்பித் திருப்பி சாஸ்திரத்திலும் உபதேசம் பண்ணினால்

மட்டும் என்ன பிரயோஜனம் வந்துவிடும்? அதனால்தான் மற்ற மதங்களில் நல்ல குணங்கள், நன்னெறிகள் (ethics, morality) இவை பற்றியே நிறைய உபதேசமிருக்கிற மாதிரி இல்லாமல், இந்த உபதேசத்தையும் பண்ண வேண்டிய அளவுக்குப் பண்ணிவிட்டு, அதோடு நின்று விடாமல், அதிலே நாம் வாஸ்தவமாகவே ஈடுபட்டு, அப்பியஸிப்பதற்கு உத்ஸாஹ மூட்டும் விதத்தில் நல்ல குணசாலிகள் அடைந்த கீர்த்தியையும், கெட்ட குணக்காரர்கள் அடைந்த அபகீர்த்தியையும் சொல்கிற ஏராளமான புராண புருஷர்களின் கதைகளை நம் மதத்தில் கொடுத்திருக்கிறது. இந்த உத்ஸாஹமும் நம்மைப் பிரத்யக்ஷத்தில் அப்படிப்பட்ட குணசாலிகளாக்குவதற்குப் போதாது. அதனால்தான் நிறைய கர்மாக்களை, ஸம்ஸ்காரங்களைக் கொடுத்து அவற்றால் சித்தத்தை சுத்தி பண்ணிக் கொள்ளச் செய்கிறது. குணசாலிகளாவதற்கே கர்மாநுஷ்டானம் என்ற practical training [நடைமுறைப் பயிற்சி]–யைத் தருகிற மதம் நம்முடையதே என்று புரிந்து கொண்டு பெருமைப்படுவதற்குப் பதில், இதை மற்ற மதங்கள் போல இல்லை என்று குறை சொல்வது சரியில்லை. அஷ்ட குணங்கள் இயேசு சொன்ன அன்பில் ஆரம்பித்து, புத்தர் சொன்ன ஆசையின்மையில் முடிந்திருக்கிறது.

குணங்களைப் பற்றி உபதேசம் பண்ணிவிட்டால் போதுமா? காரியம் பண்ணுவதுதானே மநுஷ்ய ஸ்வபாவம்? அதை வைத்துக் கொண்டு, அதன் மூலந்தானே எதையும் ஸாதித்துத் தரவேண்டியதாக இருக்கிறது? காந்தி அஹிம்ஸை, ஸத்யம் என்று நிறையச் சொல்லிக்

கொண்டிருந்தார் என்றாலும் அவருடைய ஆச்ரமத்தில் போய்ப் பார்த்தால் அவர் எப்போது பார்த்தாலும் சுருசுருவென்று ஏதாவது காரியம் பண்ணிக் கொண்டிருந்தார். மற்றவர்களையும் உட்கார விடாமல் வேலை வாங்கிக் கொண்டேதான் இருந்தார். ரொம்பவும் கடுமையான task-master என்று அவரைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள். ராட்டையை சுற்றிக்கொண்டு நூற்கவேண்டும், கக்கூஸை அலம்ப வேண்டும்- இப்படி ஏதாவது காரியம் பண்ணிக் கொண்டேயிருக்கும்படிதான் செய்தார்.

இப்படிப்பட்ட கர்மாநுஷ்டானங்களை முக்யமாகச் சொல்லி அவற்றோடு கூடவும், அவற்றைச் செய்வதால் ஏற்படுகிற சித்தத் தெளிவின் மூலமும் கடைபிடிக்க வேண்டிய அஷ்ட குணங்களையும் தர்ம சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது.

இவற்றில் கௌதமரும் ஆபஸ்தம்பரும் செய்துள்ள ஸூத்திரங்கள் அதி பிராபல்யத்தோடு இருக்கின்றன. ஸ்மிருதிகளில் மநு செய்தது பிரபலமானது.

ஆபஸ்தம்பரும், கௌதமரும் எல்லாருக்கும் பொதுவானவைகளை எழுதியிருக்கிறார்கள். ஆபஸ்தம்பர் தனியாகவும் ஒவ்வொரு பிரிவினருக்குள்ள தனித்தனி தர்மங்களையும், ஸம்ஸ்காரங்களையும் எழுதியிருக்கிறார். கௌதமர் நாற்பது ஸம்ஸ்காரங்களையும் எட்டு ஆத்ம குணங்களையும் சொல்லியிருக்கிறார். ஜீவன் உடம்பை விட்டுப் பிரிந்தவுடன் நேரே பிரம்மலோகத்திற்குப் போய்ச் சேர இந்த நாற்பத்தெட்டும் காரணங்களாக இருக்கின்றன.

இவைகளால் ஈச்வர ஸந்நிதானத்தில் போய் இருக்கலாம். அது பரமஞானியின் ஸந்நிதானத்தில் இருப்பதுபோல் இருக்கும். அசையாமல் ஆனந்தமாக இருக்கலாம். லோகத்தை நடத்தும் ஈச்வரன், லோகாதீதமாக அரூபமாகிற பொழுது நாமும் அதோடு அதாகக் கலந்துவிடலாம். அத்வைதமாகி விடலாம். அதுவரை அவனுடைய லோகத்தில் (ஸாலோக்யமாக) இருந்து, அப்போது அவனோடு கரைந்து (ஸாயுஜ்யமாக) வாழலாம். "யஸ்யைதே சத்வாரிம்சத் ஸம்ஸ்காரா: அஷ்டாவாத்மகுணா: ஸ ப்ரம்மண: ஸாயுஜ்யம் ஸாலோகதாம் ஜயதி" என்று சொல்லியிருக்கிறது*.

இந்த நாற்பது ஸம்ஸ்காரங்கள் கை கால் முதலியவைகளை ஆட்டிச் செய்யவேண்டும். ஓர் உத்தியோகம் செய்ய வேண்டுமானால், கையைக் காலை ஆட்டியும் வாயை அசைத்துப் பேசியும் செய்கிறோமல்லவா? அப்படித்தான் இதுவும். யார் இந்த நாற்பத்தெட்டையும் அநுஷ்டிக்கிறானோ அவன் நேராக பிரம்மலோகத்துக்குப் போகிறான்; கஷ்டம் ஸுகம் என்பவை இல்லாத ஊருக்குப் போகிறான். கஷ்டமும் ஸுகமும் இல்லாமல் எப்பொழுது இருக்கும்? இந்த இரண்டையும் ஏற்படுத்தினவனிடம் போனால்தான் அப்படியிருக்கலாம்.

ஆத்மகுணங்களை ஆத்மசக்தி என்று சொல்லுகிறார்கள். இது ஸமீபகாலப் பத்திரிகை வார்த்தை. பழைய தமிழ், ஸம்ஸ்கிருத புஸ்தகங்களில் ஆத்மசக்தி என்ற வார்த்தை இல்லை. ஆத்மகுணங்கள்தான் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை எட்டு. இவற்றை முன்பே சொன்னேன்.

* கௌதம தர்ம ஸூத்ரம், முதல் ப்ரசனம், எட்டாவது அத்யாயம்.

அக்னியின் முக்யத்வம்

அக்கினியின் முக்கியத்வம்

'நிஷேகாதி ச்மசானாந்தம்' நாற்பது ஸம்ஸ்காரங்கள் சொல்லப்படுகின்றன. அதாவது, தாயார் வயிற்றில் எந்தத் தினத்தில் தேஹகாரணமான கரு இருக்க ஆரம்பித்ததோ, அந்த நிஷேகம் முதல் தேஹம் அக்கினிக்கு ச்மசானத்தில் [மயானம்] ஆஹூதியாகிற வரைக்கும் நாற்பது கர்மாக்கள் செய்யப்பட வேண்டும். நிஷேகம் அக்கினி ஸாக்ஷியாகச் செய்யப்படுகிறது. கடைசியில் ச்மசான கர்மாவும் அக்னியிலேயே செய்யப்படுகிறது.

வாழ்நாள் பூராவும் அக்னியை அணையாமல் காத்து வரவேண்டும். பிரம்மச்சாரி தினந்தோறும் ஸமிதாதானம் பண்ணி அக்னி காரியம் செய்யவேண்டும். அக்னி ஸாக்ஷியாக விவாஹமான பின் கிருஹஸ்தர்கள் ஔபாஸனம் என்பதை அக்னியில் செய்யவேண்டும். வானப்பிரஸ்தனுக்கு கக்ஷாக்னி என்று ஒரு அக்னி சொல்லப்பட்டிருக்கிறது. அது காட்டில் செய்வது. ஸந்நியாஸாசிரமத்தில் மட்டும் அக்னியில்லை. ஸந்நியாசியிடம் ஞானாக்கினி இருக்கிறது. அவனுடைய பிரேதத்துக்கும் அக்னி ஸம்ஸ்காரம் கிடையாது. புதைப்பது மரியாதைக்காகச் செய்வது. நியாயமாக அவனுடைய சரீரத்தை நாலாக வெட்டிக் காட்டில் நாலு திக்கிலும் போட்டு விட வேண்டும். ஜனங்களுக்கு உபத்திரவம் இல்லாமல் இருப்பதற்காகக் காட்டில்

போடவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்யாவிட்டால் புதைத்து அதன்மேல் மரம் செடிகளை வைக்க வேண்டும். காட்டில் போட்டால் பிராணிகளுக்கு ஆஹாரம் ஆகிறது. புதைத்தால் மரங்களுக்கு எருவாக ஆகிறது. இப்பொழுது பிருந்தாவனம் கட்டுவது முதலியவை மரியாதையால் செய்பவை. பில்வம், அச்வத்தம் முதலிய பெரிய மரங்களை ஸந்நியாஸியைப் புதைத்த இடத்தில் வைக்க வேண்டும் என்று தான் சொல்லப் பட்டிருக்கிறது.

எல்லா ஜாதியாருக்கும் அக்னி காரியம் உண்டு. விவாஹ காலத்தில் எல்லா வர்ணத்தாரும் ஔபாஸனம் பண்ண வேண்டும். பிறகு எல்லாரும் அந்த அக்கினியைக் காப்பாற்ற வேண்டும். இப்பொழுது பார்ஸி என்கிற பாரஸீகர்கள்தாம் அக்னியைக் காப்பாற்றி வருகிறார்கள். அவர்களுடைய மத கிரந்தத்திற்கு 'ஜெண்டவஸ்தா' என்று பெயர். 'சந்தோவஸ்தை' என்ற வேத பாகம் அப்படி வந்திருக்கிறது. ஜொராஸ்த்ரர் என்பவர் அவர்களுடைய ஆசார்யர். அந்தப் பெயர் ஸௌராஷ்ட்ரர் என்பதன் சிதைவுதான். இரான் தேசம் அவர்களுடையது. ஆர்யன் என்பது இரான் என்று மாறிவிட்டது. அவர்கள் அக்னி அணைந்துபோனால் அதிகச் செலவு செய்து பெரிய பிராயசித்தம் பண்ணிக் கொள்ளுகிறார்கள். நம்மிடத்தில் அக்னி காரியம் இந்த நூற்றாண்டு தொடக்கத்திலிருந்து குறைந்து விட்டது. வாழ்க்கை மாறிவிட்டது. சிரத்தை இருந்தால் இந்த உத்தம ஸம்பத்தைக் காத்து வைத்துக் கொண்டிருக்கலாம். சிரத்தை இல்லாததற்கு இந்தக் காலப் படிப்பு ஒரு முக்யமான காரணம்.

இந்த தேஹத்தையும் கடைசியில் ஆஹுதியாக தேவதைகளுக்கு ஹோமம் செய்துவிட வேண்டும். அதற்காகத்தான் பிரேதத்துக்கு நெய்யைத் தடவி அதையும் ஒரு திரவ்யமாக ஹோமம் பண்ணுகிறார்கள். அதுதான் தஹன ஸம்ஸ்காரம்.

ஸம்ஸ்காரங்களின் பெயர்கள்

ஸம்ஸ்காரங்களின் பெயர்கள்

ஜீவாத்மாவுக்குப் பரிசுத்தி ஏற்படுவதற்காக நாற்பது ஸம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன். அவை கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்மா, நாமகரணம், அன்ன ப்ராசனம், சௌளம், உபநயனம், குருகுலவாஸத்தில் செய்ய வேண்டிய பிரஜாபத்தியம் முதலிய நாலு வேத விரதங்கள், அது முடிந்ததும் செய்கிற 'ஸ்நானம்', பிறகு விவாஹம், அதன்பின் கிருஹஸ்தன் செய்யவேண்டிய ஐந்து நித்ய கர்மாக்களாகிய பஞ்ச மஹா யக்ஞங்கள் ஆக, இதுவரை மொத்தம் பத்தொன்பது; இதோடு கிருஹஸ்தன் செய்ய வேண்டிய பாக யக்ஞங்கள் ஏழும், ஹவிர் யக்ஞங்கள் ஏழும், ஸோம யக்ஞங்கள் ஏழும் ஆக யக்ஞங்கள் இருபத்தொன்றும் ஸம்ஸ்காரங்களே ஆகும். 19+21=40 ஸம்ஸ்காரம்.

அஷ்டகை (அன்வஷ்டகை) , ஸ்தாலீபாகம், பார்வணம், ச்ராவணி, ஆக்ரஹாயணி, சைத்ரி, ஆச்வயுஜி என்ற ஏழும் பாக யக்ஞங்கள். அக்னியாதானம், அக்னிஹோத்ரம், தர்சபூர்ண மாஸம், ஆக்ரயணம், சாதுர்மாஸ்யம், நிரூடபசுபந்தம், ஸௌத்ராமணி என்ற ஏழும் ஹவிர்

யக்ஞங்கள். அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்த்யம், ஷோடசி, வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம் என்னும் ஏழும் ஸோம யக்ஞங்கள்.

நாற்பது ஸம்ஸ்காரங்களில் தினந்தோறும் பண்ண வேண்டியவை சில இருக்கின்றன. சில சில காலங்களில் பண்ணவேண்டியவை சில. ஆயுளில் ஒரு தரம் பண்ண வேண்டியவை சில. இவைகளுக்குள் ஒவ்வொரு கிருஹஸ்தனும் நன்றாகத் தெரிந்துகொண்டு தினமும் செய்யவேண்டிய முக்கியமான ஸம்ஸ்காரங்கள் பஞ்ச மஹா யக்ஞங்கள் என்ற ஐந்து.

மந்திரமில்லாமல் வெறுமே செய்யும் காரியத்தைவிட, மந்திரத்தைச் சொல்லிச் செய்வதே அதிக நன்மை தர வல்லது. இப்படி மந்திரபூர்வமாகக் காரியம் பண்ணுவதே ஸம்ஸ்காரமாகிறது. கிருஹஸ்தன் தினந்தோறும் செய்யவேண்டிய பஞ்சமஹா யக்ஞத்தில் ஸோஷல் சர்வீஸ் (சமூக ஸேவை) என்பது மந்திர பூர்வ ஸம்ஸ்காரமாகிறது.

பஞ்ச மஹா யக்ஞங்கள் – பிரம்ம யக்ஞம், தேவ யக்ஞம், பித்ரு யக்ஞம், மநுஷ்ய யக்ஞம், பூத யக்ஞம் என்பவை. வேதம் ஓதுவது என்ற அத்யயனமே பிரம்ம யக்ஞம், யாகமும் பூஜையும் தேவ யக்ஞம். தர்ப்பணம் பித்ரு யக்ஞம். விருந்தோம்பல் மநுஷ்ய யக்ஞம். ஜீவ ஜந்துக்களுக்கெல்லாம் பலி போடுவது பூத யக்ஞம்*.

இவை போலவே ஔபாஸனம், அக்னி ஹோத்ரம் இரண்டும் தினசரி செய்வது. ஔபாஸனம் என்பது நாற்பது ஸம்ஸ்காரத்திலுள்ள ஏழு பாக யக்ஞங்களில்

சேராத ஒரு பாக யக்ஞம். அக்னிஹோத்ரம் என்பது ஏழு ஹவிர் யக்ஞங்களில் ஒன்று. தர்ச பூர்ண மாஸம் என்ற இன்னோர் ஹவிர் யக்ஞம் பதினைந்து நாளுக்கு ஒருமுறை செய்வது. மற்ற ஐந்து ஹவிர் யக்ஞங்களையும் ஏழு ஸோம யக்ஞங்களையும் வருஷத்துக்கொரு முறையோ, அல்லது ஆயுஸில் ஒரே ஒரு தடவையாவது செய்யவேண்டும். கஷ்டமான ஸோம யாகங்களை ஜன்மாவில் ஒருமுறை பண்ணினால் போதும் என்று கருணையோடு வைத்திருக்கிறார்கள்.

மாஸம்தோறும் பண்ணவேண்டிய பார்வணீ சிராத்தமும், பிரதமைகளில் செய்யும் ஸ்தாலீபாகமும் தவிர மற்ற ஐந்து பாக யக்ஞங்களும் வருஷத்துக்கு ஒரு முறைதான்.

இதையே வேறு விதமாக வகுத்துச் சொன்னால்: பஞ்ச மஹா யக்ஞம் என்ற ஐந்தும், அக்னி ஹோத்ரமும், ஔபாஸனமும் ஆக ஏழு தினசரி செய்வது. தர்ச பூர்ண மாஸம் பக்ஷமொருமுறை; ஸ்தாலீபாகமும் பக்ஷமொரு முறை; பார்வணீ மாஸாந்தரம்; நாற்பதில் உள்ள மற்ற யக்ஞங்கள் ஸம்வத்ஸரத்துக்கு [ஆண்டுக்கு] ஒரு தரமோ, ஜன்மத்தில் ஒரு முறையோ பண்ண வேண்டியவை.

ஒரு போகம் விளையும் நிலங்களில் அறுப்பறுக்கிறது வருஷத்துக்கு ஒரு தரம். முப்போகம் விளைந்தால் நாலு மாஸத்துக்கொரு அறுப்பு. சில பயிருக்கு ஜலம் தினந்தோறும் பாய்ச்சவேண்டும். சிலவற்றுக்கு ஒன்றுவிட்டு ஒரு நாள் பாய்ச்ச வேண்டும். இவைகளெல்லாமே ஸம்ஸ்காரங்கள் தான். ஆனாலும்

இவைகளுக்குள் வித்தியாஸம் இருக்கிறது. அவைகளைப் போன்றவைதான் மநுஷ்யனுக்கான ஸம்ஸ்காரங்களும்.

* தெய்வத்தின் குரல்: முதற் பகுதி"யில் "பொதுவான தர்மங்கள்" என்ற பிரிவில் பஞ்ச மஹா யக்ஞங்கள் குறித்த உரைகள் உள்ளன.

பெற்றோர் செய்யும் ஸம்ஸ்காரங்கள்

பெற்றோர் செய்யும் ஸம்ஸ்காரங்கள்

கர்ப்பாதானம் முதற்கொண்டு ஸம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. தாயார் வயிற்றில் தேஹம் ஏற்படுகிற க்ஷணம் முதல் ஸம்ஸ்காரங்கள் ஆரம்பமாகின்றன. சரீர பிண்டமானது மந்திர பூர்வமாக உற்பத்தியாகவேண்டும். கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம் என்பவை தாயார் தேஹத்துக்கு ஏற்பட்ட ஸம்ஸ்காரமென்று நினைக்கிறார்கள். அது தப்பு. அவை உள்ளே உண்டாகிற ஜீவனைக் குறித்தவை. அந்த ஜீவனுடைய பரிசுத்திக்காக ஏற்பட்டவை. கர்ப்பத்திலுள்ள வேறொரு ஜீவனை உத்தேசித்துப் பண்ணப் படுபவைகளாதலினால் அந்த ஸம்ஸ்காரங்களின் விஷயத்தில் பெரியவர்களுக்குப் பொறுப்பு அதிகம். தங்களுக்காக என்றால் வேண்டாம் என்று எண்ணலாம். வேறொரு ஜீவனுக்காக இருப்பதால் இவர்கள் அதை அநாதரவு பண்ணித் தடுப்பது பெரிய பாபமாகிறது. இக்காலத்தில் சாந்தி கல்யாணம் (கர்ப்பாதானம்), ஸீமந்தம் முதலியவை ஃபாஷனாக இல்லை என்று அநேகர் விட்டு வருவது பெரிய பாபமாகும். ஸ்திரீ-புருஷ உறவிலே நிஜமாக வெட்கப்பட வேண்டிய விஷயங்களில் லஜ்ஜை

இல்லாமல் வெள்ளைக்கார ஃபாஷனில் விவஸ்தை கெட்டு நடந்துகொண்டே, இதைப் பரிசுத்தி பண்ணி நல்லதாக ஒரு புது ஜீவனை உண்டாக்குவதற்காக ஏற்பட்ட வைதிக கர்மாக்களை லஜ்ஜைக்குரியவை என்று விட்டுவிடுவது கிரமமே இல்லை.

தேஹம் வெளியில் வருவதற்கு முன்பு பண்ணப்படுபவை கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம் என்னும் மூன்று ஸம்ஸ்காரங்களும். மந்திர பூர்வமாகத்தான் ஸ்திரீ-புருஷ ஸங்கம் ஏற்பட வேண்டும். மிருகப் பிராயமான வேகமாக இல்லாமல் இதையும் ஒரு ஸம்ஸ்காரமாக மந்திரத்தின் மூலம் உயர்த்தி கருவாக உண்டாகக் கூடிய ஜீவனுக்கும் அதனால் க்ஷேமத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த உயர்ந்த தத்துவத்தை விட்டு விட்டு, இதனால் நாம் ஏதோ ஒரு அநாகரிகமான சடங்கை விட்டுவிட்டோம் என்று பெருமைப்பட்டுக் கொள்வது பைத்தியக்காரத்தனம்தான். லஜ்ஜை இருந்தால், சாந்தி கல்யாணத்துக்கு ஊர் கூட்ட வேண்டாம். ஆனால் அகத்து மட்டோடாவது அவசியம் இந்த கர்மா பண்ணத்தான் வேண்டும். நித்ய ஔபாஸனம், நாலு நாள் கலியாணம் என்பவையெல்லாம் போய், கல்யாணத்துக்கு மறுநாள் சேஷஹோமம் கூட இல்லாமல், (கல்யாணம் நடக்கும்) அன்றே ஒரு விதமான மந்திர பூர்வ ஸம்ஸ்காரமும் இல்லாமல் இப்போது இதை [ஸ்திரீ-புருஷ ஸங்கத்தை] செய்து வருவது ரொம்பவும் துராசாரம்; ரொம்பவும் பாபமும் ஆகும். மிருகப் பிராயமாகப் பண்ணுவதால் ஸந்ததியும் அப்படியே [மிருகம் மாதிரியே] அமைகிறது. பும்ஸவனம் கர்ப்பத்தின் மூன்றாவது மாதம் செய்ய வேண்டும். ஆறு அல்லது

எட்டாவது மாதத்தில் ஸீமந்தம் பண்ணவேண்டும். இப்போது இரண்டையும் சேர்த்து ஏதோ பண்ணுகிறார்கள்.

குழந்தை பிறந்தவுடன் ஜாதகர்மா என்ற ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். தானங்கள் கொடுக்கவேண்டும். பதினோராவது நாள் நாமகரணம். பெயர் வைப்பதுகூட ஜீவனைப் பரிசுத்தி பண்ணுகிற ஸம்ஸ்காரமாகத்தான் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்ன நக்ஷத்திரத்தில் பிறந்தால் இன்ன மாதிரிப் பெயர் வைக்க வேண்டும் என்று இருக்கிறது. பகவந் நாமாக்களாகப் பேர் வைக்க வேண்டும். அந்தப் பேரைச் சொல்லிக் கூப்பிடுவதே நம்மையும் சுத்தப்படுத்தும் ஸம்ஸ்காரமாகிறது! லாங்ஃபெல்லோ (நீள ஆள்), ஸ்டோன் (கல்) என்றெல்லாம் கண்ட பெயர்களை வைத்துக் கொள்கிற மாதிரி நம் மதத்தில் இல்லை. இப்போது இப்படிப்பட்ட அசட்டுப் பெயர்கள் இங்கேயும் வந்து விட்டன. ஸ்வாமி பெயராகவே வைத்தாலும் அதைக் கன்னாபின்னா என்று சிதைத்துக் கூப்பிடும் வழக்கமும் நீண்டகாலமாக இருந்திருக்கிறது. இதெல்லாம் ரொம்பத் தப்பு. வைதிக ஸம்ஸ்காரமாக வைத்த பெயர் என்பதற்கான கௌரவத்தை அதற்குக் கொடுக்கவேண்டும்.

குழந்தையின் ஆறாம் மாஸம் உணவூட்டுவதான 'அன்ன ப்ராசன' ஸம்ஸ்காரம்.

கர்ப்பாதானம் முதல் நாமகரணம் வரை குழந்தையை முன்னிட்டு (on behalf) பெற்றோரே பண்ணுவது. அன்ன ப்ராசனத்தில் தகப்பன் மந்திரம் சொன்னாலும் குழந்தையே சாப்பிடுகிறது.

தாயார் மருந்து சாப்பிட்டால் பால் குடிக்கிற குழந்தைக்கு தேஹபுஷ்டி ஏற்படுகிறதோ இல்லையோ? அதைப்போலவே மாதா பிதாக்களுடைய சித்தவிருத்தி எப்படி இருக்கிறதோ அப்படியே உள்ளே இருக்கும் ஜீவனும் ஸாத்விக ஸ்வபாவமோ, பாப பிரவிருத்தியோ உண்டாகும். மனது சாந்தமாக இருந்து ஒரு ஸமாசாரம் எழுதி அதைப் படித்துப் பார்த்தால் நன்றாயிருக்கும். கோபமாக இருக்கும் பொழுது எழுதி அப்புறம் பார்த்தால் நன்றாக இருப்பதில்லை. சரீரத்திலும் அப்படியே குணதோஷங்கள் ஏற்படுகின்றன. ஒரு தம்பதி உத்தம குணங்களோடு ஸங்கமித்தால்தான் நல்ல பிண்டம் ஏற்பட்டு உள்ளே இருக்கும் ஜீவனுக்கும் நல்ல சுபாவம் உண்டாகும். மந்திர பூர்வமாகப் பண்ணுவது இதற்காகத்தான்.

இத்தகைய கர்மாக்களை அடியோடு தள்ளாதவர்களும் உரிய காலத்தில் பண்ணாமல் சேர்த்துப் பண்ணி விடுகிறார்கள். இப்படியின்றி, அந்த அந்தக் காலத்தில் அந்த அந்த மந்திரத்தைச் சொல்லி அந்த அந்த திரவியங்களைக் கொண்டு அந்த அந்த ஸம்ஸ்காரத்தைச் செய்யவேண்டும். அன்னப் பிராசனத்துக்கப்புறம் 'சௌளம்' செய்ய வேண்டும். அதாவது சிகை (குடுமி) வைக்கிறது. ஸத் கர்மாவுக்கு உபயோகமாக இருக்க அது பண்ணவேண்டும். ஸந்நியாஸிக்கு சிகை இல்லை. மொட்டைத் தலையாக இருக்க வேண்டும். ஸந்நியாஸிகள் மந்திரபூர்வமாகத்தான் சிகையை எடுத்துக் கொள்ளவேண்டும். மந்திரபூர்வமாக வைத்துக் கொண்ட சிகையைப் பரமேச்வரனுக்கு முன்பு பண்ணின பிரதிக்ஞைக்கு விரோதமாக இஷ்டப்படி எடுத்து விடுவது தப்பு. சிகையை எடுப்பது ஒரு பெரிதா என்று

கேட்கலாம். பொய் சொல்லுகிறது தப்பு அல்லவா? அது எவ்வளவு தப்போ அவ்வளவு தப்பு இதுவும். 'பரமேச்வர ப்ரீதியாக' என்று ஸங்கல்பம் பண்ணியே, சௌள ஸம்ஸ்காரத்தில் சிகை வைக்கப்படுகிறது. அப்படி வைத்துக் கொண்டதைக் கிள்ளுக்கீரையாக எண்ணி மனம் போனபடி எடுத்தால் அந்தப் பரமேச்வரனிடமே பொய் சொன்னதாக ஆகவில்லையா? சிவலிங்கப் பிரதிஷ்டை செய்கிறார்கள். வேல், ஸாளக்கிராமம் வைத்து பூஜை செய்கிறார்கள். பின்பு, கோபித்துக் கொண்டு எடுத்து எறிந்து விடலாமா? அகஸ்மாத்தாகப் போனால் – திருடன் கொண்டு போனால் பாதகம் இல்லை. நாமாக வைத்ததை நாமாக வேண்டுமென்று மாற்றுவது பெரிய தப்பு. சௌளத்தை மட்டும் ஸங்கல்பத்தோடு பண்ணிக் கொண்டு அப்புறம் இஷ்டப்படி அதை எடுத்து விட்டு 'க்ராப்' பண்ணிக் கொள்வது தப்பு.

'.....ஏ போச்சு' என்று பேச்சு வழக்கிலே ரொம்ப அலக்ஷ்யமான ஸமாசாரமாகச் சொன்னாலும், வாஸ்தவத்தில் இது பெரிய ஸமாச்சாரம்தான். வேத அத்யயனம், வைதிக கர்மாநுஷ்டானம், தர்மப்படி இல்லறத்திலிருந்து கொண்டு பண்ணும் தாம்பத்தியம் இவற்றிலே சரீரத்துக்கும், சரீரத்தின் நாடி சலனங்கள் மூலம் சித்தத்துக்கும் ஏற்படவேண்டிய பலத்துக்குத் தலையில் பிரம்மமரந்திரத்தில் சிகை என்ற ரக்ஷை இருப்பது பெரிய காப்பாகும். கூரைக்கு ஓடு போடுகிற மாதிரி அது! வேத கர்மாவும், தாம்பத்தியமும் நின்றுபோன ஸந்நியாஸ ஆச்ரமத்தில் தான் இந்த ரக்ஷை தேவையில்லாமல் போகிறது. ஆகையால் கிருஹஸ்தன்

ஸந்நியாஸியாக ஆனாலன்றிக் குடுமியை எடுக்கக் கூடாது. தற்காலத்தில் பிரம்மச்சரிய, கிருஹஸ்தாச்ரம காலங்களிலும் வேத ஸம்பந்தத்துக்கு முழுக்குப் போட்டு விட்டதால், சிகையும் இல்லாமலிருக்கிறோம்!

பாபம் பண்ணி நரகவாஸம் பண்ணுகிற ஜீவர்களின் பிரீதிக்காக, ஒரு கிருஹஸ்தன் ஸ்நானம் செய்யும்போது மந்திர பூர்வாக சிகோதகம் தரவேண்டும் (குடுமியிலிருந்து ஜலத்தைப் பிழிந்து கொடுக்க வேண்டும்) என்று இருக்கிறது. சிகை இல்லாவிட்டால் இதை எப்படிப் பண்ணுவது?

சௌளத்துக்கு அப்புறம் வருவது உபநயனம். பிரம்மோபதேசம், பூணூல் கல்யாணம் என்பதெல்லாம் இதுவே.

உபநயனம் முதல் பண்ணப்படும் ஸம்ஸ்காரங்கள் ஒரு ஜீவனுக்கு அறிவு வந்த பின்பு ஏற்படுபவை. குழந்தையாக இருந்த ஜீவன் அறிவுடன் மந்திரம் சொல்லிப் பண்ணத் தொடங்கும் முதல் ஸம்ஸ்காரம் உபநயனமே.

மாதா பிதாக்களிடத்தில் ஏதாவது பாபதோஷங்களிருந்தால் அவை அவர்களிடத்திலுண்டாகிற ஜீவனையும் பாதிக்கும். அதற்காக, ஒரு ஜீவன் எந்த மாதாவுடைய கர்ப்பத்தில் வாஸம் பண்ணுகிறதோ, எந்தப் பிதாவால் உண்டாகிறதோ அவர்களுடைய தோஷங்கள் அந்த ஜீவனுக்கு ஏற்படாமலிருப்பதற்காக ஸம்ஸ்காரங்கள் செய்யவேண்டும். மாதா பிதாக்களிடம் துர்க்குணங்கள் உண்டு. அவை அவர்களால் ஏற்படும் ஜீவன்களுக்கு உண்டாகாமலிருக்க ஸம்ஸ்காரங்கள் செய்ய வேண்டும்.

அந்த தோஷங்கள் [கர்ப்ப சம்பந்தமான] கார்ப்பிகம் என்றும் [பீஜ சம்பந்தமான] பைஜிகம் என்றும் இரண்டு வகைப்படும். கார்ப்பிகம் தாயால் உண்டாவது. பைஜிகம் தந்தையால் உண்டாவது. இந்த தோஷங்களின் நிவாரணத்திற்காக உபநயனம் வரையில் உள்ள சம்ஸ்காரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைச் செய்ய வேண்டியவர்கள் மாதா பிதாக்கள். உபநயனம் வரைக்கும் ஸம்ஸ்காரங்களைத் தானே செய்து கொள்ளப் புத்திரனுக்கு அர்ஹமான [தகுதியான] வயது வரவில்லை.

எந்த ஸம்ஸ்காரத்தையும் உரிய காலத்தில் பண்ண வேண்டும். அதனால் பாப பரிகாரம் ஏற்படுகிறது. பூர்வத்தில் வேறொரு காரியம் பண்ணிப் பாபம் ஸம்பாதித்திருக்கிறோம். அதை நீக்க மனம்-வாக்கு-காயங்களால் ஸம்ஸ்காரம் பண்ணவேண்டும்.

நாம், பாபம் அந்த மூன்று கரணங்களாலேயும் பண்ணியிருக்கிறோம். மனதால் கெட்ட எண்ணம் நினைத்திருக்கிறோம். வாக்கால் பொய் பேசியிருக்கிறோம். தேஹத்தால் பொய் பண்ணியிருக்கிறோம். அதாவது பல தினுஸாகப் பாசாங்கு பண்ணியிருக்கிறோம். மனோ-வாக்-காயங்களால் பண்ணிய பாபங்களை அவைகளாலேயே ஸத் காரியங்களைப் பண்ணிப் போக்கிக் கொள்ள வேண்டும். மனத்தினால் பரமேச்வரத் தியானம் பண்ணவேண்டும்; வாக்கினால் மந்திரம் சொல்ல வேண்டும்; காயத்தால் ஸத்காரியம் பண்ண வேண்டும். மனோ-வாக்- காயங்களால் தானாக ஒரு ஸம்ஸ்காரத்தைப் பண்ணும் பக்குவம் ஜீவனுக்கு உபநயனத்திலிருந்து ஏற்படுகிறது. இதுவரை

தகப்பனார்தான் இவனுக்காக மந்திரம் சொல்லிப் பண்ணினார்.

இங்கே இன்னொரு விஷயமும் சொல்லவேண்டும். ஒரு ஜீவனை direct -ஆக [நேராக] உத்தேசித்தே அதன் பிதா பண்ணும் [கர்ப்பாதானம் முதற்கொண்டு சௌளம் வரையிலான] கர்மாக்கள் மட்டுமின்றி, அந்தப் பிதாவாகப்பட்டவன் மற்ற எல்லா ஸம்ஸ்காரங்களையும் பண்ணி நல்ல அநுஷ்டாதாவாக இருப்பதும் indirect -ஆக (மறைமுகமாக) அவனுடைய புத்திரர்களுக்கு நல்லதைச் செய்கிறது. 'மாதா பிதா பண்ணுவது மக்களைக் காக்கும்' என்ற வார்த்தைப்படி இது மாதிரி நடக்கிறது. வைதிக பிராமண ஸந்ததிக்கு ஸமீப காலம் வரையில் புத்திப் பிரகாசம் அதிகம் இருந்து வந்ததற்கு ஒரு முக்ய காரணம், முன்னோர்கள் பண்ணிய ஸம்ஸ்காரங்களின் சக்திதான். முன்பு இருந்தவர்கள் செய்தது இரண்டு அல்லது மூன்று தலைமுறைக்கு அஸ்திவாரமாக இருக்கிறது. அந்த எல்லை தாண்டிப் போனால் அப்புறம் கஷ்டந்தான். இந்த ஸந்ததியில் பிறந்த குழந்தைகளே லௌகிகத்தில் பிரவேசித்தபின் அதிகமாகக் கீழே போய்விட்டார்கள். ரொம்பவும் கெட்டுப் போனார்கள். மடை அடைத்து வைத்ததைத் திறந்துவிட்டால் வெகு வேகமாக ஜலம் போகிற மாதிரி இவர்கள்தாம் கடுமையாக லௌகிகத்தில் இறங்கி விட்டார்கள்.

நம்முடைய பெற்றோர்கள் ஸம்ஸ்காரம் பண்ணவில்லை; அதனால் நமக்கு நன்மை உண்டாகவில்லை என்ற குறை நமக்கு இருக்கலாம். அதைப்போல நம்முடைய குழந்தைகள் குறை கூறாமல் நாம் நல்ல

ஸம்ஸ்காரங்களைப் பண்ணவேண்டும். அவர்களுக்கும் பண்ணி வைக்க வேண்டும்.

சிலருக்கு ஏன் இல்லை?

சிலருக்கு ஏன் இல்லை?

ஜாதகர்மா, நாமகர்மா, அன்னப் பிராசனம், சௌளம் முதலியன எல்லா ஜாதியாருக்கும் பொதுவானவை. உபநயனம் என்பது பிராம்மணர், க்ஷத்ரியர், வைசியருக்கே உரியது. மற்றவர்களுக்கு அது வேண்டியதில்லை என்று வைத்திருக்கிறது.

இப்படிச் சொன்னவுடன் பாரபட்சம், வித்யாஸம் (partiality) என்று சண்டைக்குக் கிளம்பக்கூடாது. லோகத்துக்கு உபகாரமாக சரீரத்தால் தொண்டு செய்வதை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட நான்காம் வர்ணத்தவர்களுக்கு அந்தத் தொழிலாலேயே சித்த சுத்தி ஏற்படுகிறது. அவர்கள் வித்யாப்பியாஸ காலத்திலிருந்து தங்களுக்கேற்பட்ட தொழிலை அப்பன் பாட்டனிடமிருந்து கற்றுக் கொண்டால்தான் அதில் செய்நேர்த்தி உண்டாகும். அவர்களுக்குப் பன்னிரண்டு வருஷ வேதாத்யயனமும் குருகுலவாஸமும் வேண்டியதில்லை. இதைச் செய்யப் போனால் அவர்கள் செய்ய வேண்டிய தொழில் அல்லவா கெட்டுப் போகும்?

உபநயனம் என்பது குருகுலவாஸத்துக்கு முதல் படிதான். 'உப–நயனம்' என்றாலே குருவுக்கு 'கிட்டே கொண்டு போய்விடுவது' என்றுதான் அர்த்தம். புத்தி சம்பந்தமான வேத வித்யையை அப்பியஸிக்கும்போது அஹங்காரம்

வந்து விடாமல் இருக்கவேண்டும் என்பதாலேயே ஸ்வாதீனமாகப் பழகுகிற தகப்பனாரை விட்டுக் கண்டிப்பிலே ஒழுங்குக்குக் கொண்டு வருகிற குருவிடம் கொண்டுபோய்விடச் சொல்லியிருக்கிறது. சரீர உழைப்பாக ஒரு தொழிலைக் கற்றுக் கொள்கிறபோது அதிலே புத்தித் திமிர், அஹங்காரம் வராது. தகப்பனாரிடமிருந்தே கற்றுக் கொள்ளலாம். சரீர சேவை செய்கிறவர்களுக்கு உபநயனமும், குருகுலவாஸமும் அவசியமில்லை.

வம்சாவளியாக வீட்டிலேயே கற்றுக்கொள்வதை விட அதிகமாக சில நுணுக்கங்கள் தெரிய வேண்டுமானால் அதை பிராம்மணனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். வீட்டில் கற்றுக் கொள்வதற்கு முடியாமற் போகிறவர்களும் இப்படிச் செய்யலாம். பிராம்மணன் 'களவும் கற்றுமற' என்பது போல எல்லாத் தொழிலையும் தெரிந்து கொண்டு, பிறருக்கு மட்டுமே அவற்றைச் சொல்லிக் கொடுத்துவிட்டு - அதாவது அவற்றைத் தானே ஜீவனோபாயமாகக் கொள்ளாமல மற்றவர்களுக்கு சிக்ஷை பண்ணுவித்து - தன்னளவில் அத்யயனம், யக்ஞம் முதலான வைதிக காரியங்களை மட்டுமே பண்ணிவர வேண்டும்.

தொழில், மனோபாவம் இவற்றுக்கு அநுகூலமாகவே ஸம்ஸ்காரங்கள் இருக்கின்றன. அதனால் சிலருக்குச் சில ஸம்ஸ்காரம் இல்லாததால் மட்டம், மட்டம் தட்டுகிறார்கள் என்றெல்லாம் நினைப்பது தப்பு. என்னைக் கேட்டால், வேடிக்கையாக, எவனுக்கு ஜாஸ்தி ஸம்ஸ்காரம் சொல்லியிருக்கிறதோ அவனைத்தான் மட்டமாக நினைத்திருக்கிறார்கள் என்றுகூடச் சொல்வேன். இத்தனை

நிறைய ஸம்ஸ்காரம் பண்ணினால்தான் இவன் சுத்தமாவான்; மற்றவனுக்கு இவ்வளவு இல்லாமலே சுத்தமாவான் என்று நினைத்து அதிகப்படி ஸம்ஸ்காரங்களை வைத்ததாகச் சொல்லலாம் அல்லவா? ஜாஸ்தி மருந்து சாப்பிட வேண்டியவனுக்குத்தானே அதிக வியாதி இருப்பதாக அர்த்தம்?

ரிஷிகளைவிடப் பாரபக்ஷமில்லாதவர்கள் எவருமில்லை. அவர்கள் நம் மாதிரி வாய்ச் சவடாலுக்காக ஸமத்வம் பேசுகிறவர்களல்ல. வாஸ்தவமாகவே எல்லாரையும் ஈச்வரனாகப் பார்த்த நிஜமான ஸமத்வக்காரர்கள் அவர்கள்தான். லோகத்தில் பல தினுசான காரியங்கள் நடக்க வேண்டியிருப்பதால் அதற்கேற்றபடியும், இந்தக் காரியங்களுக்கு ஏற்றவாறு மனோபாவங்கள் இருப்பதால் அவற்றை அநுஸரித்தும் வெவ்வேறு விதமான ஸம்ஸ்காரங்களை அவர்கள் வைத்தார்கள். இதிலே உசத்தி- தாழ்த்தி அபிப்ராயங்களுக்கு இடமேயில்லை.

சாஸ்திரங்களில் இப்படி முதல் மூன்று வர்ணத்தாருக்கு உபநயனமும் அது தொடர்பான சில ஸம்ஸ்காரங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்ப்போம்.

பிரம்மசரியம்

பிரம்மசரிய ஆசிரமம்

பிரம்மச்சரியம்

சௌளத்துக்குப் பின் வருவது உபநயனம்.

குழந்தையாயிருந்தவனுக்கு அறிவு வந்து, தானே மந்திரங்களைச் சொல்கிற சமயத்தில் உபநயனம்

நடக்கிறது. "பிக்ஷாசர்யம் சர" (பிக்ஷை எடு) என்று இந்தச் சடங்கில் சொன்னால் பூணூல்காரப் பையன் "பாடம்" (baad `ham) (அப்படியே செய்கிறேன்) என்கிறான். அதனால் இவனுக்கு உபநயனத்துக்கு முன்பே "பிக்ஷாசர்யம் சர" என்று சொன்னால் அதைப் புரிந்துகொள்வதற்கான ஸம்ஸ்கிருத ஞானம் இருக்க வேண்டும். ஐந்து வயதில் படிக்க ஆரம்பித்தால் இரண்டு அல்லது மூன்று வருஷத்தில் இப்படிப்பட்ட பாஷா ஞானம் வந்துவிடும். ஆதலால் எட்டு வயதில் பூணூல் போடவேண்டும் என்றாகிறது.

எட்டு வயசுக் குழந்தைகள் அர்த்தம் தெரிந்து பூணூல் போட்டுக் கொண்டு ஜபம் பண்ணிவிட்டால் லோகமெல்லாம் நன்றாக ஆகிவிடும். இப்போதோ இளம் மனசுகளில் நாஸ்திகத்தைத் தான் ஏற்றியிருக்கிறோம்!

பிரம்மச்சரிய ஆசிரமம்.

உப–சமீபத்தில், நயனம் – அழைத்துக் கொண்டு போகிறது. யாருக்கு ஸமீபத்தில் அழைத்துக் கொண்டு போகிறது? ஒருவனை குருவுக்கு ஸமீபத்தில் அழைத்துக் கொண்டு போகிறதுதான் உபநயனம். குரு யார்? வேதவித்துக்கள். முதல் ஆசிரமமான பிரம்மச்சரியத்துக்கு ஒரு குரு; கடைசி ஆசிரமமான ஸந்நியாசத்துக்கு ஒரு குரு. வேத வேதாங்கம் அறிந்தவர்கள் முதல் ஆசிரமத்துக்கு குரு. வேதம் உள்பட எல்லாவற்றையும் விட்டு பிரம்ம ஞானம் அடைந்தவர்கள் கடைசி ஆசிரமத்துக்கு குரு. வித்தையைத் தெரிந்து கொள்வது முதல் ஆசிரமம். ஞானத்தைத் தெரிந்து கொள்வது கடைசி ஆசிரமம்*.

உபநயனம் பிரம்மச்சரியத்துக்கு ஆரம்பம். அதன் முடிவு 'ஸமாவர்த்தனம்', உபநயனம் முதல் ஸமாவர்த்தனம் வரையில் இருப்பது ப்ரஹ்மச்சரியம். ஸமாவர்த்தனம் என்றால் திரும்பி வருகிறது என்று அர்த்தம். ஒரு இடத்துக்குப் போனால்தான் போன இடத்திலிருந்து திரும்பி வருவது என்பது முடியும். அகத்திலிருந்து குருகுலத்துக்குப் போய் வேத அத்யயனத்தைப் பூர்த்தி பண்ணிவிட்டு அகத்திற்குத் திரும்பி வருவதுதான் ஸமாவர்த்தனம்.

உபநயனம் பூர்வாங்கம். அங்கம் என்றால் பிரதானம் ஒன்று வேண்டும். பிரதானத்திற்கு அங்கி என்று ஒரு பெயருண்டு. உபநயனம் என்ற அங்கத்துக்கு அங்கியாக இருப்பது ப்ரஹ்மச்சர்யம். ப்ரஹ்மச்சர்யம் என்ற இடத்தில் ப்ரஹ்ம என்பதற்கு வேதம் என்பது அர்த்தம். வேதத்தை மனப்பாடமாகக் கற்று ஸ்வாதீனப்படுத்தவே ஒரு ஆசிரமம் ஏற்பட்டிருக்கிறது. அதுதான் ப்ரஹ்மச்சர்யம். அதற்கு பூர்வாங்கம் உபநயனம். அந்த ஆசிரமத்துக்கு கடைசி பக்ஷமாக ஏற்பட்ட காலம் பன்னிரண்டு வருஷங்கள். ஒரு வேதத்தை ஸாங்கோபாங்கமாக அத்தியயனம் பண்ணுவதற்குப் பன்னிரண்டு வருஷங்கள் வேண்டும்.

பிரம்ம என்பதற்கு ஆறு அர்த்தங்கள் உண்டென்று சொன்னேன். பிரம்ம என்பது விஷ்ணுவுக்கு ஒரு பெயர். பரமசிவனுக்கும் ஒரு பெயர். பிராம்மண ஜாதி, தபஸ், பரமாத்ம ஸ்வரூபம் என்பவைகளுக்கும் அந்தப் பெயருண்டு. பிரம்மா என்று நீட்டினால் சதுர்முகனுக்குப் பெயராகிறது.

ப்ரம்மச்சரியம் என்பது வேதாத்தியயனம் பண்ணுவதற்காக ஏற்பட்ட ஒரு தீக்ஷை. அதற்குப் பூர்வாங்கமாக ஏற்பட்ட ஒரு காரியம் உபநயனம். பரிஷேசனம் என்று ஜலத்தால் சாதத்தைத் தெளிப்பது எதற்கு? அது போஜனத்திற்கு அங்கம். சாதத்தை அப்படியே சாப்பிட்டு விடக்கூடாது. ஈச்வரப் பிரஸாதமாக்கிச் சாப்பிட வேண்டும் என்றே முதலில் அதன் மேல் ஜலம் தெளிக்கிறோம். இப்படிச் செய்துவிட்டு சாப்பிடாமல் இருந்தால் எத்தனை அசட்டுத்தனம்? உபநயனம் பண்ணிவிட்டு வேதாத்தியயனம் பண்ணாமலிருப்பது பரிசேஷனம் பண்ணிவிட்டு சாப்பிடாமலிருப்பதைப் போன்றது. இப்போது அத்தனை பேரும் இப்படி அசடுகளாக இருந்து வருகிறோம்.

உபநயனம் என்ற பூர்வாங்கத்திற்கும் ஸமாவர்த்தனம் என்கிற உத்தராங்கத்திற்கும் நடுவில் நான்கு வ்ரதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நம்முடைய தக்ஷிண தேசத்தில் பெரும்பாலும் அநுஷ்டானத்திலுள்ள க்ருஷ்ண யஜுர் வேதத்தை எடுத்துக் கொண்டால், அவை பிராஜபத்யம், ஸௌம்யம், ஆக்னேயம், வைச்வதேவம் என்பவை.

எந்த மந்திர ஸித்திக்கும் நியமம் அவசியம் வேண்டும். ஆத்மா கடைத்தேறுவதற்கு மந்திரமயமான வேதம் இருக்கிறது. அதைப் பாடம் பண்ணுவதற்கு ஒரு நியமம் வேண்டும். வேத ஸமூஹம் முழுவதற்கும் ஏற்பட்ட இந்த நியமமே பிரம்மச்சரியமாகும். இது தவிர, வேத பாகம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி நியமங்கள் இருக்கின்றன. அவ்வளவுக்கும் சேர்த்து மொத்த விரதம் பிரம்மச்சரியம். தனித்தனி பிரிவுக்குத் தனித்தனி விரதங்கள் இருக்கின்றன. வேதத்தை நான்கு காண்டமாக பிரித்திருக்கிறார்கள்.

அவைகளை நாலு மஹரிஷிகள் பிரவர்த்திப்பித்திருக்கிறார்கள். அந்த மஹரிஷிகளை உத்தேசித்து பிரம்ம யக்ஞம் பண்ணப்படுகிறது. (பிரம்ம யக்ஞம் என்பதற்கு வேத யக்ஞம் என்பதுதான் அர்த்தம்) . ஒவ்வொரு காண்டத்திற்கும் தனித்தனியாக ஒரு விரதம் உண்டு. பிரம்மச்சரிய ஆசிரமத்தின்போது ஒவ்வொரு காண்டத்தை அத்தியயனம் பண்ணுகிறபோது அதற்கு ஏற்பட்ட விரதத்தையும பண்ணவேண்டும். பிரஜாபத்ய காண்டத்திற்கு ஒரு விரதம் ஏற்பட்டிருக்கிறது. அது பிரஜாபத்யம். அப்புறம் ஸௌம்ய விரதம், பின்பு ஆக்நேய விரதம், அப்புறம் வைச்வதேவ விரதம் செய்ய வேண்டும். நான்கு காண்டங்களும் முடிந்தபின்பு குருவினுடைய அனுஜ்ஞை [அனுமதி] யின் மேல் ஸமாவர்த்தனம் பண்ணிக் கொள்ள வேண்டும். [வீட்டுக்குத் திரும்பிச் செல்லும் ஸம்ஸ்காரத்தை பண்ணிக் கொள்ள வேண்டும்.]

முன்பு சொன்ன நான்கு காண்ட விரதங்களும் கிருஷ்ண யஜுர் வேதத்துக்கு ஏற்பட்டவை. ரிக்வேதத்துக்கு மஹா நாம்னி விரதம், உபநிஷத் விரதம், கோதான விரதம் ஆகிய நான்கு விரதங்கள் உண்டு. இப்படி ஒவ்வொரு வேதத்துக்கும் தனித்தனி விரதங்கள் இருக்கின்றன. கிருஷ்ண யஜுர் வேதமே அதிகம் பிரசாரத்திருப்பதால் அதை முதலில் சொன்னேன்.

குருகுல வாஸத்தை முடிக்கும்போது செய்யும் ஸமாவர்த்தனத்திற்கு ஸ்நானம் என்றும் ஒரு பெயர் உண்டு. அதைச் செய்து கொண்டவனுக்கு ஸ்நாதகன் என்று பெயர்.

எல்லாரும் தம் தம் வேதத்தையும் வித்தைகளையும் அத்தியயனம் பண்ண வேண்டும். ஆவணி அவிட்டம் வருகிறது. அன்று உபாகர்மா பண்ணுகிறோம். அன்று வேதத்தில் புது பாகம் ஆரம்பித்துக் கொள்ள வேண்டும். தை மாஸம் பூர்ணிமையில் உத்ஸர்ஜனம் [முடித்தல்] பண்ண வேண்டும். ஆவணி மாதத்தில் ஆரம்பித்துத் தை மாதத்தில் விட்டுவிட வேண்டும். அதாவது ஏறக்குறைய தக்ஷிணாயன ஆறு மாதத்தில் வேதாத்தியயனம் பண்ணவேண்டும். மற்ற ஆறு மாதங்களில் வேதத்தின் ஆறு அங்கங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

வேதாத்யயனம் செய்யும்பொழுது அந்த அந்தக் காண்டத்துக்கு ஏற்பட்ட தனி நியமத்தோடும் பிரம்மச்சரியத்துக்கு ஏற்பட்ட தனி நியமாத்தோடும் பண்ணினால் தான் மந்திர ஸித்தி உண்டாகும். நாம் ஒன்றும் பண்ணுவதில்லை. "உபயோகம் இல்லை" என்று மட்டும் சொல்லுகிறோம். கல்யாணத்துக்கு முன்பு 'வ்ரதம்' என்று ஒரு பெயர் வைத்து ஒரு மணி நேரத்துக்குள் எல்லா ஸம்ஸ்காரங்களையும் சுருக்கி அர்த்தமே தெரியாமல் கிடுகிடு என்று பண்ணுகிறோம். அதுவாவது இருப்பதனால் இந்த உபந்நியாஸம் பண்ண நேரிட்டது.

வேதத்தை ஸ்வீகரிப்பதற்கு ஒருத்தனை அர்ஹனாக்கி [அருகதை உள்ளவனாக்கி] அதன் மூலம் லோகம் முழுவதற்கும் நல்ல திவ்ய சக்திகளைப் பரப்புகிற பரம ச்ரேஷ்டமான கர்மாவான உபநயனத்தின் பெருமையை அறிந்து அதை உரிய காலத்தில் பண்ண வேண்டும்.

த்வி-ஜன்-இருபிறப்பாளன்-எனப்படும் பிராம்மண, க்ஷத்ரிய, வைச்யர்கள் லோகோபகாரமான இரண்டாவது பிறப்பை அடைவது அவர்கள் எப்போது வேதத்தைக் கற்கத் தகுதி பெறுகிறார்களோ அப்போதுதான். இந்தத் தகுதியை அவர்கள் பெறுவது உபநயன ஸம்ஸ்காரத்தில்தான். இதைக் காலத்தில் செய்ய வேண்டியது பெற்றோர் கடமை.

இப்போது இம்மாதிரி விஷயங்களில் சாஸ்திரங்கள் ரொம்பவும் அநாதரவு செய்யப்படுகின்றன. ஒவ்வொன்றுக்கும் சாஸ்திரத்தைப் பார்த்துச் செய்து வந்த நம் தேசத்தில் இப்போது நிலைமை அடியோடு மாறிவிட்டது.

* உபநயன சம்ஸ்காரத்தால் வேதமோத அதிகாரம் பெற்று "பிரம்மசாரி"யாகிறவன் ஆசிரியரிடம் ஒழுகவேண்டிய முறைகளை "குருகுல வாசம்" என்ற உரையில் காண்க.

சாஸ்திர விதியும், பொது வழக்கும்

சாஸ்திர விதியும் பொது வழக்கும்

இதிலே ஒரு வேடிக்கை, அல்லது பெரிய கஷ்டம், தர்ம சாஸ்திரங்களில், ஸூத்ரங்களில் சொல்லியுள்ள ரூல்களை மனம் போனபடி மீறுகிறபோதே, அங்கங்கே எப்படியோ பழக்கத்தில் வந்துவிட்ட சில விஷயங்களைப் பெரிய சாஸ்திர ரூல் மாதிரி நினைத்துக் கொண்டு அநுஸரித்து வருகிறார்கள். உதாரணமாக அக்காள் கல்யாணத்துக்கு இருக்கும் போது தம்பிக்குப் பூணூல் போடக்கூடாது; ஒரே ஸமயத்தில் மூன்று பிரம்மச்சாரிகள் ஒரு வீட்டில் இருக்கக் கூடாது என்கிறது போன்ற காரணங்களைச்

சொல்லிக் கொண்டு, பிள்ளைகளுக்கு உரிய காலத்தில் உபநயன ஸம்ஸ்காரம் செய்விக்காமல் இருக்கிறார்கள். ஆதாரமான தர்ம சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிற வயசு வரம்பை இம்மாதிரி லௌகிகமான வழக்கங்களை முன்னிட்டு மீறுவது ஸரியல்ல. இம்மாதிரி வழக்கங்கள் லௌகிகமான ஸௌகரியத்தை முன்னிட்டோ, ஸென்டிமென்ட் என்கிறார்களே, அந்த மன உணர்ச்சியை முன்னிட்டோ தான் ஏற்பட்டிருக்கக் கூடும். தர்ம சாஸ்திரத்தை மீறாமல் இவற்றையும் கடைப்பிடிப்பதில் தவறில்லை. ஆனால் ஆதாரமான ரூலை மீறி இவற்றையே பெரிய சாஸ்திரமாக நினைத்து அனுஸரிப்பது அயுக்தமானது.

ஆபஸ்தம்ப ரிஷி தம்முடைய தர்ம சாஸ்திரத்தின் முடிவில் "நான் இதில் சொன்னதோடு எல்லா விதிகளும் முடிந்துவிட்டன என்று அர்த்தம் இல்லை. இன்னம் அநேகம் உள்ளன. அவை குலப் பழக்கத்தாலும், பிரதேசப் பழக்கத்தாலும் [தேசாதாரத்தாலும்] ஏற்பட்டிருப்பவை. இவற்றை ஸ்திரீகளிடமிருந்தும், நாலாம் வர்ணப் பொது ஜனங்களிடமிருந்தும் கேட்டுத் தெரிந்து கொண்டு அநுஷ்டியுங்கள்" என்று சொல்லியிருப்பது வாஸ்தவம்தான், ஆனால் இப்படி சொன்னவை, அவர் தர்ம சாஸ்திரத்தில் சொன்னதற்கு அதிகப்படியாக (additional -ஆக) ஜனங்களின் பழக்கத்தில் வந்தவற்றைத்தான் குறிப்பிடுமே ஒழிய, அவர் சொன்னதற்கு முரணாக (contrary -ஆக) உள்ள பழக்கங்களையல்ல. அதாவது சாஸ்திரத்தில் இருப்பனவற்றோடுகூட, அவற்றுக்கு முரணில்லாத குலாசார, தேசாசாரங்களையும் பின்பற்ற வேண்டுமே

ஒழிய, சாஸ்திரப் பிரமாணத்தை விட்டுவிட்டு, அதற்கு மாறுதலாக ஏற்பட்டு விட்ட பழக்கங்களைக் கடைபிடிப்பது என்று வைத்துக் கொள்ளக் கூடாது.

உபநயன ஸம்ஸ்காரத்தை எந்தக் காரணத்தை முன்னிட்டும் தள்ளிப் போடவே கூடாது. கல்யாணத்திலே பண ஸம்பந்தத்தைக் கொண்டு விட்டு அதற்காக கால தாமஸம் பண்ணுவது தப்பு, சாஸ்திர விரோதமானது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அதைப்பற்றி பின்னால் விவாஹ ஸம்ஸ்காரத்தில் சொல்லுகிறேன். கல்யாணத்திலாவது தவிர்க்க முடியாமல் 'ஷோ' அம்சங்கள் சேர்ந்துவிட்டன என்கலாம். நாம் வேண்டாமென்றாலும் பிள்ளையகத்தார் வேண்டும் என்றால் இந்த ஆடம்பரங்களைப் பண்ணித்தான் ஆகவேண்டும். இதற்குப் பணம் சேர்க்க வேண்டும். இதற்காகக் கால தாமஸம் பண்ண வேண்டியிருக்கிறது. அதோடு கூடக் கல்யாணம் என்பதில் வரன் என்று ஒருத்தனைத் தேடிப் பிடித்து, நமக்கு அவனைப் பிடித்து, அவன் வீட்டாருக்கும் நம் ஸம்பந்தம் பிடிக்க வேண்டியதாக இருக்கிறது. வரன் வேட்டையில் காலம் செலவிட வேண்டியதாகிறது.

பூணூல் விஷயம் இப்படியில்லை. இதை ஏன் ஆடம்பரமாகப் பண்ணவில்லை என்று எந்த ஸம்பந்தியும் நம்மை நிர்பந்திக்கப் போவதில்லை. மாப்பிள்ளை தேடுகிறதுபோல் இதில் வெளியே யாரையோ தேடிப்போய் பரஸ்பர ஸம்மதத்தைப் பெறவேண்டியும் இருக்கவில்லை. ஆதலால் உரிய காலத்தில் ஒரு பிள்ளைக்குப் பூணூல் போடாமலிருப்பதற்கு எந்த ஸமாதானமும்

சொல்வதற்கில்லை. அதை எந்த விதத்திலும் மன்னிப்பதற்கேயில்லை.

மூலாதாரம் வீணாகக் கூடாது

மூலாதாரம் வீணாகக்கூடாது

குழந்தைக்கு உடம்புக்கு [நோய்] வந்தால் மருந்து வாங்கித் தராமலிருந்தால் எத்தனை தப்போ, அதைவிடத் தப்பு உரிய வயசில் உபநயனம் பண்ணி அவனுக்கு ஆத்ம க்ஷேமமாகவும் அவன் மூலமாக லோகத்துக்கு க்ஷேமமாக இருக்கிற காயத்ரீ உபதேசத்தைக் கொடுக்காமலிருப்பது, வெறும் vanity, ஜம்பத்துக்காக இப்போது பூணூல் என்றால் அதை ஒரு குட்டிக் கல்யாணம் போலப் பண்ணுவது என்று வைத்துக் கொண்டு இந்தச் செலவை எவ்வளவு தள்ளிப்போடலாமோ அப்படிச் செய்வதற்காக காலம் கடத்துவதை எவ்வளவு கண்டித்தாலும் போதாது.

இதற்காக மடத்தில் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருக்கிறோம். மாஸ் உபநயனம் என்று இப்போது பலருக்குச் சேர்த்துப் பூணூல் போட்டு வைக்கிறோம். இன்னம் அநேக தர்ம ஸ்தாபனத்தினர் அநேக ஊர்களில் இப்படிக் கோஷ்டிப் பூணூல் நடத்தி வருகிறார்கள். எல்லோருக்கும் காயத்ரீ பொதுவானதுதான், ஸ்மார்த்த-வைஷ்ணவ-மாத்வ மதபேதமில்லாமல் எல்லா ஜாதிப் பிள்ளைகளுக்காகவும் மாஸ் உபநயனம் செய்து வைக்கப்படுகிறது. ஓரளவு திருப்திப்படும்படி இது நடந்து வருகிறது. இன்னும் நன்றாக பலத்து விருத்தி அடையவேண்டும்.

வசதியில்லாதவர்களுக்குத்தான் மாஸ்-உபநயனம் என்று நினைத்து, வசதியுள்ளவர்கள் அதில் சேராமல், தாங்களாகத் தனியாகவும் உபநயனம் பண்ணாமலிருந்து வருகிறார்கள். இந்த உத்தமமான ஸம்ஸ்காரத்தில் 'வசதி' என்ற வார்த்தைக்கு இடமேயில்லை. திரவிய ஸம்பந்தமில்லாத இந்தக் கர்மாவை இப்படியாக்கி வேதாப்பியாஸத்துக்கு மூலாதாரமான காரியத்தை வீணாக்கியிருக்கிறது!

உபநயனத்தோடு காயத்ரீ தீர்ந்தது, மறுநாளிலிருந்தே கிரிக்கெட்டும், ஸினிமாவும், கட்சி மீட்டிங்குந்தான் என்று ஆகிவிடாமல் உபநயனப்பிள்ளை தொடர்ந்து ஸந்தியாவந்தனம் செய்யும்படியாக மாதாபிதாக்கள் கண்டிப்புடன் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்களே கிளப், ஸினிமா, மீட்டிங், ரேஸ் என்று போகிறபோது நான் சொல்வது என்ன பலன் தரும் என்று எனக்கே தெரியவில்லை. தாங்கள்தான் வீணாகப் போயாயிற்று, குழந்தைகளாவது உருப்படட்டும் என்றுதான் இதைச் செய்யவேண்டும். ஆனால், "எனக்குச் சொல்ல வருகிறாயே! நீ என்ன பண்ணுகிறாய்?" என்று பிள்ளையே மாதாபிதாக்களிடம் திருப்பிக் கொண்டு விட்டாலும் கஷ்டந்தான்!

இப்படிப்பட்ட ஒரு துர்த்தசையில் நான் உங்கள் 'டய'த்தை 'வேஸ்டா'க்கி கொண்டு, "சொல்ல வேண்டியது என் கடமை" என்பதற்காகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்!

நீங்கள் எப்படிச் செய்வீர்களோ, அல்லது செய்யாமலே தான் போவீர்களோ, எனக்குத் தெரியாது -நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியது என்று இந்த மடம் எனக்கு

போட்டிருக்கிற ஆக்ஞையை நான் நிறைவேற்றியாக வேண்டும். அந்த ஆக்ஞை, 'வேத அத்யயனத்துக்கு அதிகாரமுள்ள எல்லாப் பசங்களுக்கும் உரிய காலத்தில் உபநயனம் செய்விக்கப்பட வேண்டும்; அதற்கப்புறம் அவர்கள் விடாமல் ஸந்தியாவந்தனமும், தினமும் ஒரு மணியாவது வேத வித்யாப்யாஸமும் பண்ண வேண்டும்' என்று தகப்பனார்களுக்குச் சொல்வதுதான்.

பிரம்மச்சாரியின் லக்ஷணம்

பிரம்மச்சாரியின் லக்ஷணம்.

ஒவ்வொரு நாளும் பிரம்மச்சாரிகள் அக்னி காரியம், அதாவது ஸமிதாதனம் (சுள்ளிகளை மந்திரபூர்வமாக ஹோமம்) பண்ண வேண்டும். பிக்ஷாசர்யம் (பிக்ஷை எடுத்தல்) செய்ய வேண்டும். அலவணமாக (உப்பில்லாமல்) சாப்பிட வேண்டும். பிரம்மசாரிகளில் பிராம்மணன் பலாச (புரச) தண்டமும், க்ஷத்ரியன அச்வத்த (அரசு) தண்டமும், வைசியன் அத்தி தண்டமும் வைத்துக் கொள்ள வேண்டும். ச்ருத தாரணத்துக்காகத் தண்டம் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது எதை அத்தியயனம் பண்ணுகிறானோ அதைக் கெட்டியாக இருத்திக் கொள்வதற்கு அப்படிச் செய்ய வேண்டும். இடிதாங்கி, ஏரியல் என்றெல்லாம் இல்லையா? அப்படி மநுஷ்யனுக்கானது இந்த தண்டம். இடிதாங்கி Scientific [விஞ்ஞான பூர்வமானது] என்றால் தண்டமும் Scientific தான். வேதத்திலுள்ள எல்லா மந்திரங்களும் மறவாமல் மனதில் இருக்கும்படி பாதுகாக்க தண்டம் வேண்டும். வேத மந்திர சக்தியை தாரணம் பண்ணுவதற்கு அந்த தண்டத்திற்கு ஒரு சக்தி இருக்கிறது. வேதநிதி அகலாமல் இருக்க அதை

வைத்துக் கொள்ள வேண்டும். பிரம்மச்சாரி மேலே கிருஷ்ணாஜினம் (மான்தோல்) போட்டுக் கொள்ள வேண்டும். மேல் வேஷ்டி போட்டுக்கொள்ளக் கூடாது. எலெக்ட்ரீஷியன் மரத்தின் மேல் நிற்கவேண்டும்; ரப்பர் Gloves போட்டுக் கொள்ள வேண்டும் என்கிற மாதிரி ஆத்மிக மின்ஸாரத்துக்கு பெரியவர்கள் இந்த விதிகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

இப்பொழுது நாம் ஒரு நாள் உபாகர்மாவைத் தான் பண்ணுகிறோம். அப்புறம் தொடர்ந்து வேதம் படிப்பதில்லை. உத்ஸர்ஜனமும் [ஒரு வேதப்பகுதியைப் படித்து முடிப்பது] பண்ணுவதில்லை. அது பண்ணாததற்குப் பிராயச்சித்தமாக 'காமோகார்ஷீத்' ஜபம் பண்ணுகிறோம்; "நான் பாபம் பண்ணவில்லை; காமம் பண்ணியது, கோபம் பண்ணியது; என்னிடம் வராதே; நமஸ்காரம் பண்ணுகிறேன்!" என்று சொல்லுகிறோம். அந்த மந்திரத்துக்கு அதுதான் அர்த்தம். உத்ஸர்ஜனம் பண்ணினால் இந்த ஜபம் அவசியம் இல்லை.

கால நியமம், விரத நியமம், ஆஹார நியமம் முதலியவைகளை அநுஷ்டிப்பது பிரம்மச்சரியம். அத்யயனத்தில் ஸ்வர லோபம், வர்ண லோபம் முதலான உச்சாரணத் தப்புக்கள் ஏற்படக்கூடும். இதற்குப் பிராயச்சித்தமாக ஆவணியவிட்டத்தன்று எள்ளு மாத்திரம் சாப்பிட்டு அன்று முழுவதும் பட்டினி இருந்து மறுநாள் 1008 ஸமித்தால் காயத்ரி ஹோமம் பண்ண வேண்டும். இப்பொழுது ஹோமமாக பிரதம சிராவணக்காரர்கள் (தலைப்பூணூல் பையன்கள்) மட்டும் பண்ணுகிறார்கள் மற்றவர்கள் ஹோமமின்றி ஜபம் மாத்திரம் செய்கிறார்கள்.

இப்படியின்றி எல்லாருமே ஹோமம் செய்ய வேண்டும். வெறும் ஜபம் பண்ணினால் தூக்கம் வருகிறது. அதனால் லோபம் வருகிறது. ஒரு காரியம் இருந்தால் தூக்கம் வராது. அதற்காகவாவது ஸமித்தினால் ஹோமம் பண்ணலாம். பலாஸ ஸமித்தால் பண்ண வேண்டும். இல்லாவிட்டால் அச்வத்த ஸமித்தால் பண்ணவேண்டும். கடைசி பக்ஷம் தர்ப்பையினாலாவது பண்ண வேண்டும்.

பிரம்மச்சாரி சாப்பிடுவதற்கு கணக்கு இல்லை. வயிறு நிறைய சாப்பிடலாம். ஆனாலும் நாக்கு ருசியைக் குறைக்க வேண்டும். இவன் இஷ்டப்படியான சமையலாக இருக்கக்கூடாது, பிக்ஷையில் எது கிடைக்கிறதோ அதையே சாப்பிட வேண்டும் என்பதும் இவனை பிக்ஷை எடுக்க வைத்ததற்கு ஒரு காரணம். மூல காரணம், பிச்சை எடுப்பதால் இவனுக்கு விநயம் ஏற்படும் என்பதே. ருசி பார்க்கக் கூடாது என்றாலும் ஆஹாரத்தின் அளவுக்கு கட்டுப்பாடு இல்லை. பிரம்மச்சாரி வயிறாரச் சாப்பிட வேண்டும். பட்டினி முதலிய உபவாஸங்களை பிரம்மச்சாரிக்கு சாஸ்திரங்கள் விதிக்கவில்லை. வளர்கிற பருவத்தில் அவன் புஷ்டியாக இருக்க வேண்டும். அதே ஸமயம் ஸத்வ குணத்தோடு, முரடாக இல்லாமல் இருக்க வேண்டும். குரு சுச்ருஷை இப்படிப்பட்ட ஸத்வ குணத்தை ஊட்டவே ஏற்பட்டது.

தனது வேத சாகையையும், சதுர்தச வித்யைகளில் மற்றவற்றையும் பன்னிரண்டு வருஷ குருகுல வாஸத்தில் கற்றுத் தேற வேண்டும். பிறகு ஸமாவர்த்தனம் பண்ணிக் கொண்டு அகத்துக்குத் திரும்பிப் போய் விவாஹம் செய்து கொள்ள வேண்டும்.

நைஷ்டிக பிரம்மசரியம்;இல்லற வாழ்க்கை

நைஷ்டிக பிரம்மச்சரியம்; இல்லற வாழ்க்கை

ஸமாவர்த்தனம் பண்ணிக் கொள்ளாமல் குருவிடத்திலேயே இருந்து வாழ்க்கை முழுதையும் அவருக்கே அர்ப்பணம் பண்ணி அவர் போன பிறகும் பிரம்மச்சாரியாகவே வாழ்நாள் முழுதும் இருப்பதும் உண்டு. இதற்கு நைஷ்டிக பிரம்மச்சரியம் என்று பெயர். பீஷ்மர், ஆஞ்ஜநேயர் முதலியவர்களை நைஷ்டிக பிரம்மச்சாரிகள் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் இது கலியில் விசேஷமாக சொல்லப்படவில்லை.

இயற்கை தருமத்தை அநுஸரித்து பிரம்மச்சாரியானவன் ஸமாவர்த்தனம் பண்ணிக்கொண்டு அப்புறம் விவாஹம் செய்துகொண்டு இல்லறம் நடத்த வேண்டும் என்பதுதான் பொதுதர்மம். பிரகிருதிக்கு எதிர் நீச்சல் போடுவது கஷ்டம். அதன் போக்கிலேயே போய், ஆனாலும் அதிலேயே முழுகிப்போய்விடாமல் கரையைப்பிடிக்க வேண்டும். அதனால்தான் தர்மமாக கார்ஹஸ்தியம் [இல்லறம்] வகித்து அப்புறமே கொஞ்சம் விடுபட்டு வானப்ரஸ்தம், அதற்கும் அப்புறம் பூர்ண சந்நியாஸம் என்று விதித்திருக்கிறது. Nature -ஐ Violent -ஆக எதிர்த்துப் போனால் ஹானிதான் உண்டாகும் என்பதால் இப்படி வைத்திருக்கிறது. நைஷ்டிக பிரம்ம்ச்சாரியாக இருப்பேன், ஸந்நியாஸியாக இருப்பேன் என்று நல்ல வாலிபத்திலேயே நினைத்துக் கொண்டிருந்துவிட்டு அப்புறம் பிரகிருதி வேகத்திலே இழுக்கப்பட்டு அந்த ஆசிரமத்துக்கு விரோதமாக நடந்து கொண்டுவிட்டால்

மஹத்தான பாபமாகிறது. இதுவே கிருஹஸ்தனுக்குப் பாபமாக இல்லாமல் பிரகிருதி தர்மமாக அநுமதிக்கப்பட்டிருக்கிறது.

எந்த ரூல் இருந்தாலும் எக்ஸெப்ஷன் (விலக்கு) உண்டு. நல்ல திட சித்தமும் பக்குவமும் பூர்வ ஜன்ம ஸம்ஸ்கார பலமும் இருப்பவர்கள் நைஷ்டிக பிரம்மச்சாரிகளாக இருக்கலாம். ஒரு முந்நூறு வருஷத்துக்குள் ஸமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகள் அப்படித்தான் இருந்துகொண்டு முகம்மதிய பிரவாகத்தையே சிவாஜி மூலம் முறியடித்து, நம் தர்மத்தை ஆழமாக நிலைநாட்டினார். நைஷ்டிக பிரம்மச்சாரியான ஆஞ்சநேயரின் அம்சம் அவர்.

வேத தர்மத்தை மறுபடி ஸ்தாபிப்பதற்காகப் பரமேச்வர அவதாரமாக வந்த ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் தம் சொந்த வாழ்க்கையிலே பிரம்மச்சரியத்திலிருந்து நேரே ஸந்நியாஸத்துக்குப் போனது மட்டுமின்றி ஸுரேச்வரர் தவிர அவரது மற்ற மூன்று பிரதான சிஷ்யர்களான பத்மபாதர், ஹஸ்தாமலகர், தோடகர் என்ற மூன்று பேருக்கும் பிரம்மச்சரியத்திலிருந்தே நேராக ஸந்நியாஸ ஆச்ரமம் கொடுத்திருக்கிறார். [சங்கர] மடத்திலும் பிரம்மச்சாரிகளே நேரே ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு பீடாதிபதிகளாக இருக்க வேண்டும் என்ற விதி அநுஸரிக்கப்படுகிறது. அதனால் எல்லாரும் கிருஹஸ்தாச்ரமம் வகித்துத்தான் ஆகவேண்டும் என்றில்லை என்று தெரிகிறது. ஆனால் இப்படிப்பட்ட பக்குவம் ரொம்ப அபூர்வமானவர்களுக்கே இருக்கும். விவாஹமும், பஞ்ச மஹா யக்ஞங்களும், தலைக்கு ஏழேழாக உள்ள பாக-ஹவிர்-ஸோம யக்ஞங்கள்

இருபத்தியொன்றும் நைஷ்டிக பிரம்மசாரிகளுக்கும் நேரே பிரம்மச்சரியத்திலிருந்து துரீயாச்ரமத்துக்கு [நாலாவது ஆசிரமமான துறவறத்துக்கு] ப் போனவர்களுக்கும் இல்லாமல் போகிறது. அதாவது நாற்பது ஸம்ஸ்காரத்தில் பேர் பாதிக்கு மேல் அவர்களுக்கு இல்லாமல் போகிறது. இவை இல்லாமலே அந்த:கரணம் சுத்தியடைகிற அளவுக்கு அவர்கள் பக்குவமாகியிருக்கவேண்டும். அதனால் இதை 'எக்ஸெப்ஷனல் கேஸ்'கள் (விதிவிலக்கானவை, அசாதாரணமானவை) என்றே சொல்லவேண்டும்.

தஹனம் என்று எப்போது ஒரு கிரியை சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறதோ, அப்போது நம் மதப்படி எல்லோரும் கடைசியில், நல்ல விருத்தாப்பியத்தில் கூட , ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று விதிக்கவில்லை என்றே அர்த்தம் என்று ஒரு கட்சி சொல்வதுண்டு. பிரம்மச்சர்யம், கிருஹஸ்தாச்ரமம், வானப்ரஸ்தம், ஸந்நியாஸம் என்ற நாலு ஆசிரமங்களை ஒவ்வொருவரும் வரிசையாக அநுஷ்டித்தேயாக வேண்டும் என்றால் வாஸ்தவமாகவே தகனக்ரியை இருக்கமுடியாதுதான். ஸந்நியாஸியை தகனம் செய்யாமல் புதைக்கத்தானே சொல்லியிருக்கிறது? அதனால் பக்குவிகளுக்கே ஸந்நியாஸம்; மற்றவர்களுக்கு இல்லை – கிழ வயஸில் கூட இல்லை – என்று சொன்னால் இந்த வாதத்தைத் தப்பு என்று சொல்ல முடியவில்லை.

ஸந்நியாஸம் வாங்கிக் கொள்கிற அளவுக்கு வயசு ஆகாமல், சின்ன வயசிலேயே செத்துப் போனவர்களை

உத்தேசித்துத்தான் தஹனக் கிரியையைச் சொல்லியிருக்கிறது என்று நினைப்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. அகால மரணமாகவோ அல்பாயுஸாகவோ இல்லாமல் கால ம்ருத்யுவாக, நன்றாக வயஸாகிச் செத்துப் போகிறவர்களையும் உத்தேசித்ததாகத்தான் தகனக்கிரியை, அப்புறம் செய்யும் பித்ரு காரியங்கள் ஆகியன இருக்கிறது. ஆகையால், அத்தனை வயசிலும் அவர்கள் ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ளாமலிருப்பதை சாஸ்திரம் அங்கீகரிப்பதாகத்தானே ஏற்படுகிறது?

நல்ல ஞான வைராக்கியத்தில் பிடிப்பு ஏற்பட்டவர்கள் கிருஹஸ்தாச்ரமம் ஆனபின் குடும்பப் பொறுப்புகளை விட்டுக் காட்டிலே போய் வைதிக காரியங்களை மட்டும் பண்ணிக் கொண்டிருக்க வேண்டும்.
பிள்ளைகுட்டிகளையும் சொத்து சுதந்திரங்களைவிட்டுவிட்டுப் பத்தினியை மட்டும் அழைத்துக் கொண்டு காட்டுக்கு போய்விடவேண்டும். பத்தினி எதற்கு என்றால் இந்திரிய ஸுகத்துக்காக அல்ல. பின்னே எதற்கு என்றால் அக்னி காரியங்களைப் பத்தினி கூட இருந்தால்தான் பண்ண முடியும் என்பதற்காகவே. யாகாதிகளையும் ஔபாஸனையையும் பண்ணும் பொருட்டே அவளை அழைத்துக் கொண்டு போக வேண்டும். இதுதான் வானப்ரஸ்தம் – வனத்தில் போயிருப்பது என்று அர்த்தம். வீடு வாசலையும், உறவுக்காரர்கள், அவர்களுடைய காரியங்கள் ஆகியவற்றையும் விடுகிற பக்குவம் முதலில் வரவேண்டுமாதலால் வானப்ரஸ்தம் ஏற்படுகிறது. அப்புறம்

வைதிக காரியத்தையும் விட்டுவிட்டு ஆத்மா என்ன, பரமாத்ம ஸத்யம் என்ன என்று தெரிந்து கொள்வது ஒன்றிலேயே நாட்டம் வலுத்த பின் குருமுகமாக ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ள வேண்டும். பத்தினியையும் வேதகர்மாக்களையும் விட்டுவிட்டு குருமுகமாக ஸந்நியாஸ ஆச்ரமம் பெற்று பரமாத்ம ஸத்யத்தையே ஸதாவும் சிந்தித்து தியானித்து, அதை அநுபவத்தில் தெரிந்துகொண்டுவிட வேண்டும். "அந்த ஸத்யம்தான் தானும்; லோகமெல்லாம் அதன் பொய் விளையாட்டு தான்" என்ற அநுபவம் ஏற்பட்டு, சரீரத்துக்கும் மனஸுக்கும் அதீதமான பரம ஸத்யமாக இருந்து கொண்டிருப்பதுதான் மோக்ஷம். பிராரப்தப்படி [முன்வினைப் பயன்படி] சரீரம் இருக்கிற மட்டும் இருந்து விட்டு அப்புறம் மரணம் அடைந்துவிடும். ஆனால் அதைப் பற்றி அநுபவ ஞானியான ஸந்நியாஸிக்கு ஒரு பொருட்டும் இல்லை. வெளி உலகத்தின் பார்வையில், இது வரைக்கும் தேகத்தில் வாழ்ந்த போதே முக்தி நிலையில் இருந்த ஜீவன் முக்தன், தேகம் போய் விதேஹ முக்தனாகிறான் என்று சொல்வது வழக்கம். அவன் நேரே குணம் குறியற்ற பரமாத்ம தத்வமாகி விடுகிறான்.

கல்யாணம் பண்ணிக் கொள்ளாமலே ஸந்நியாஸி ஆகிறவன்; கல்யாணம் பண்ணிக் கொண்டு நாற்பது ஸம்ஸ்காரங்களையும் முறைப்படி ஒன்றும் விட்டுப்போகாமல் பண்ணி, அதோடு அஷ்ட குணங்களையும் கைக் கொண்டு கடைசியில் ஸந்நியாஸம் வாங்கிக் கொள்கிறவன் - ஆகிய இருவரும் இப்படித் தானே பரமாத்ம தத்வமாக ஆகிவிடுகிறார்கள்.

ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ளாமலே கடைசி வரை எல்லா ஸம்ஸ்காரங்களையும் அஷ்ட குணங்களையும் அநுஷ்டித்தவனின் கதை என்ன? செத்துப் போன பின் அவன் கதி என்ன? இவனுக்குத்தானே தஹனம் சொல்லியிருக்கிறது? லோகத்தில் பொதுவாக ரொம்ப ஜாஸ்தி இருக்கிறவனும் இவன்தானே? இவன் செத்தபின் என்ன ஆகிறான்?

ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் இவன் பரமாத்ம தத்வத்தோடு அத்வைதமாகக் கரைந்து விடுகிறான் என்று சொல்ல வில்லை. கடைசி வரையில் எல்லாவற்றையும் விட்டு, பரமாத்மா ஒன்றையே பிடித்துக் கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் பெரிய தாபமாக இவனுக்கு வரத்தானே இல்லை? அது வந்துவிட்டால் யாரும் பிடித்து வைக்க முடியாது. அது வராததால் தான் இவன் ஸந்நியாஸியாக ஓடவில்லை. ஆகையால் இவன் அத்வைத முக்தி அடைவதில்லை. ஆனாலும் சாஸ்திரத்தை நம்பி அதன்படியே கர்மாக்களைப் பண்ணி சித்தத்தை நன்றாக சுத்தம் பண்ணி, லோக க்ஷேமத்தையும் உண்டாக்கியிருக்கிறானல்லவா? அதனால் இவன் குணமும் குறியுமில்லாத பரமாத்மாவுடன் ஒன்றாகாவிட்டாலும், அதே பரமாத்மா குணம் குறிகளோடுகூட லோகங்களை நிர்வகிக்கிற ஈச்வரனாக இருக்கிற பரம உத்தமமான ஸந்நிதானத்தை அடைகிறான். ஹிரண்யகர்ப்ப ஸ்தானம் என்று அது சொல்லப்படுகிறது. பிரம்ம லோகம் என்பது அதுதான். பரமாத்மாவிலேயே கரைந்து ஒன்றாகிவிடாமல், வெளியே இருந்து கொண்டிருந்தாலும்கூட, அவரை ஸதாவும் அநுபவித்துக் கொண்டிருப்பதால் அந்த

ஸ்தானத்தில்கூட எப்போதும் ஆனந்தமாகவே இருக்கும். ஒரு குறையும் இருக்காது. அப்படியானால் இதையும் மோட்சம் என்று சொல்ல வேண்டியதுதான். ஒரு குறையில்லை, ஒரு துக்கம் இல்லை, எப்போதும் ஈச்வர ஸாந்நித்யம். இதற்கு மேல் என்ன வேண்டும்? இப்படிப்பட்ட நிலையைத்தான் எல்லா ஸம்ஸ்காரங்களையும் செய்துவிட்டு ஸந்நியாஸியாகாமலே இறந்தவன் அடைகிறான்.

அவன் இதற்கு மேல் ஒன்றும் கேட்க மாட்டான். ஆனாலும் அந்த ஈச்வரன் தானும் ஒரு காலத்தில் இந்த லோக வியாபாரங்களையெல்லாம் நிறுத்திவிட்டு, லோகங்களையெல்லாம் மஹாப் பிரளயத்தில் கரைத்துவிட்டு, குணம் குறியில்லாத பரமாத்ம ஸத்யமாக மட்டுமே ஆகிவிடுவான். அப்போது அதுவரை அவனுடைய ஸந்நிதானத்திலிருந்த ஜீவர்களும் அவனோடுகூடப் பரமாத்மாவோடு பரமாத்மாவாக அத்வைத முக்தி அடைந்து விடுவார்கள்.

மஹாப் பிரளயத்தில் ஸகல ஜீவராசிகளும்தான் – அநுஷ்டானமே செய்யாதவர்களும், புழு பூச்சியும் கூடத்தான் – பரமாத்மாவோடு சேர்ந்து விடுவார்கள். அப்படியிருக்க இத்தனை அநுஷ்டானங்களைச் செய்த இவனுக்கும் அந்த நிலை கிடைத்ததில் விசேஷம் என்னவென்றால், ஒரு விசேஷம் இருக்கிறது. மறுபடியும் அகண்ட வெளியிலிருந்து பரமாத்ம ஸகுண ஈச்வரனாகி லோகங்களை ஸ்ருஷ்டித்து, ஜகத் வியாபாரங்களை ஆரம்பித்து விடுவார். அப்போது அநுஷ்டானம் பண்ணாத மற்ற ஜீவர்களும், இதர உயிரினங்களும் பூர்வ கர்மாப்படி

மறுபடி பிறந்துதான் ஆகவேண்டும். அதுவரை பரமாத்மாவில் அவை இரண்டற கரையாமல் லயித்துத்தான் இருந்திருக்கும். இப்போது லயம் விலகி மறுபடி ஜன்மா உண்டாகிவிடும். ஸம்ஸ்காரங்களைச் செவ்வேனே செய்து சுத்தியானவனோ இப்படி புனரபி ஜனனம் என்று மறு ஸ்ருஷ்டியின்போது பூமியில் வந்து விழாமல், பரமாத்மாவோடு பரமாத்மாவாக இரண்டறக் கரைந்தது கரைந்தபடியே இருப்பான்.

பிரம்மசரியம் என்பதிலிருந்து ரொம்பவும் தாண்டி முடிவான நிலைக்கு வந்துவிட்டேன். 'ஒருத்தன் பிரம்மசாரியாக வாழ்நாள் பூரா இருக்கலாமா? கிருஹஸ்தாச்ரமம் வகிக்காமலே ஒரு பிரம்மச்சாரி ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ளலாமா?' என்ற கேள்விகள் எழுந்ததால் அதற்குப் பதில் சொல்ல ஆரம்பித்தேன்.

உபநயன காலம்

உபநயன காலம்

உபநயனம், குருகுலவாஸம் இவற்றைப் பற்றிச் சொன்னேன். உபநயனம் செய்யவேண்டிய காலம் பிராம்மணனுக்கு கர்ப்பத்தைக் கூட்டி எட்டாவது வயசாகும்; அதாவது பிறந்து ஏழு வயஸு இரண்டு மாஸம் ஆனவுடன் பண்ண வேண்டும். க்ஷத்ரியர்கள் பண்ணிரண்டு வயது வரை உபநயனம் செய்யலாம். யது வம்சத்தில் பிறந்த கிருஷ்ண பரமாத்மாவுக்கு அப்படித்தான் செய்திருக்கிறது. வைச்யர்கள் பதினாறு வயசு வரை உபநயனம் பண்ணலாம்.

பிராம்மணர்களுக்கும்கூட எட்டு வயசு lower limit [கீழ் வரம்பு] , பதினாறு வயசு upper limit [உச்ச வரம்பு] என்று சாஸ்திரங்கள், போனால் போகிறதென்று அவகாசம் கொடுத்திருக்கின்றன. பதினாறு வயசுக்கு அப்புறம் பூணூல் போடாமல் ஒரு பிராம்மணப் பிள்ளையை வைத்திருப்பது மஹத்தான தோஷமாகும்.

ஒருவனுக்கு இப்படி வயசுக் காலம் சொல்லியிருப்பதோடு, உபநயன ஸம்ஸ்காரம் என்பதைச் செய்வதற்கே உத்தராயணம்தான் உரிய காலம் என்றும் ஸூரியன் பூமியின் வடக்குப் பாதியில் ஸஞ்சரிக்கிற ஆறுமாஸத்திலேயே உபநயனம் செய்யவேண்டும். உபநயனம் மட்டுமின்றி விவாஹமும் இந்த ஆறுமாஸத்தில்தான் செய்யலாம். இதிலும் வஸந்த காலம் (சித்திரை, வைகாசி) தான் விவாஹத்துக்கு ரொம்பவும் எடுத்தது. அதே மாதிரி 'மாசிப் பூணூல் பாசி படரும்' என்பதாக மாசி மாதத்தில் பூணூல் போடுவதை விசேஷமானதாகச் சொல்லியிருக்கிறது. தக்ஷிணாயனத்தில் (ஆடியிலிருந்து மார்கழி முடிய) இவற்றைச் செய்வது சாஸ்திர ஸம்மதமல்ல. இப்போது இவற்றுக்கு எவ்வளவு காலம் கடத்தலாமோ அவ்வளவு டிலே செய்துவிட்டு கடைசியிலே மார்கழி மாஸம் ஒன்று தவிர வேறு எப்போது வேண்டுமானாலும் பண்ணலாம் என்று பண்ணுகிறார்கள். பலனும் அதற்கேற்ற மாதிரிதான் இருக்கிறது. கலியாணம் என்று ஏதோ ஒன்று பண்ணியிருக்கிறார்களே என்று திருப்திப்பட்டு அதை வேண்டுமானாலும் தக்ஷிணாயனத்தில் அநுமதிக்கலாம். (கூடாதுதான். ஆனால் தொலைகிறது என்று விடலாம்.)

உபநயனத்தை ஒருகாலும் தக்ஷிணாயனத்தில் அநுமதிப்பதற்கில்லை. ஏற்கெனவே தக்ஷிணாயனத்தில் உபநயனம் பண்ணியிருந்தால்கூட மறுபடி உத்தராயணத்தில் ஒரு தரும் பண்ணுங்கள் என்றுதான் சொல்வேன். கலியாணம், பூணூல் இரண்டையுமே பணம் சம்பந்தப்பட்ட காரியங்களாக்கி விட்டு இரண்டு செலவும் ஒன்றாகப் போகட்டுமே என்பதால் தங்கள் பெண்களின் கல்யாணத்துக்காகப் பிள்ளையின் பூணூலை தள்ளிப் போடுகிற வழக்கம் அதிகமிருப்பதால் இதைச் சொல்ல நேர்ந்தது.

ஐந்து வயஸிலேயே உபநயனம் செய்யும் ஒரு வழக்கமும் உண்டு. 'அது காம்யோபநயனம்' எனப்படும். 'காம்யம்' என்றால் ஒரு இஷ்டத்தை உத்தேசித்தது என்று அர்த்தம். குழந்தை விசேஷ அபிவிருத்தி அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டால் இப்படி செய்யலாம். ஆனால் இப்படி செய்யாததால் தோஷமில்லை. ஏனென்றால் மந்திரங்கள் நன்றாக ஸ்பஷ்டமாக உச்சரிக்க வருகிற காலத்தில், ஸம்ஸ்க்ருத ஞானம் இரண்டு வருஷமாவது ஏற்பட்டானதற்கு பிறகு உபநயனம் பண்ணுவதே போதும். (இப்போது முப்பது, முப்பத்தைந்து வயசுக்குக் கல்யாணமாகிறபோது பூணூலும் போடுவது என்று வந்திருக்கும் தசையில் நான் 'ஐந்து வயசில் பண்ண வேண்டுமென்றில்லை, எட்டில் பண்ணினாலே போதும் என்று சொல்வது எனக்கே ஹாஸ்யமாகத்தான் இருக்கிறது! ஹாஸ்யம் என்று சொன்னாலும் வைதிகப் பிரக்ஞை இருந்தால் வயிறு எரியவேண்டும்!)

பகவத்பாதாளுக்கு ஐந்தாவது வயதிலேயே உபநயனமானதாகச் சொல்லியிருக்கிறது. பால்யத்திலே அலாதி புத்திசாலித்தனமும், தெய்வ பக்தியும் தெரிந்து, வாக்கு ஸ்பஷ்டமிருந்தால் இப்படிச் செய்யலாம்.

உபநயன உதாரண புருஷர்கள்

உபநயன உதாரண புருஷர்கள்

இரண்டு தெய்வக்குழந்தைகள் மநுஷ்ய ரூபத்தில் அவதாரம் பண்ணினபோது உபநயன ஸம்ஸ்கார விசேஷத்தாலேயே தங்கள் அவதார காரியத்தைப் பண்ணிக் காட்டின என்று நான் நினைப்பது வழக்கம். வேத மதம் நலிவடைந்தபோது அதை புத்துயிர் கொடுத்து ஸ்தாபித்த சங்கரரும் ஞானஸம்பந்தரும்தான் அந்த குழந்தைகள்.ஸம்பந்த மூர்த்தி ஸ்வாமிகளுக்கு பால்யத்திலேயே உபநயனமானதைப் பெரிய புராணத்தில் சொல்லியிருக்கிறது. "நான்மறை ஞான ஸம்பந்தன்" என்று அவரே வர்ணித்துக் கொண்டிருப்பதிலிருந்து நாலு வேதங்களையும் அவர் அத்யயனம் பண்ணினார் என்று தெரிகிறது. ஆசாரியாளுக்கும், ஞானஸம்பந்தருக்கும் ஒரு தரம் கேட்டாலே பாடமாய் விடும். 'ஏக ஸந்தக்ராஹி'கள். அதனால் ஓரிரு வருஷங்களுக்குள் அத்யயனம் பூர்த்தி பண்ணிவிட்டார்கள். கற்றுக்கொள்ளாமலே, தாங்களாக ஸகல வித்தைகளையும் தெரிந்து கொள்ளக் கூடியவர். அந்த இருவருள் ஒருவர் [சங்கரர்] பரமேச்வர அவதாரம்; மற்றவர் [ஸம்பந்தர்] ஸுப்ரமண்யரின் அவதாரம். அப்படியிருந்தும் அவர்கள் உபநயன ஸம்ஸ்காரமாகி, காயத்ரீ மந்திர உபதேசம் பெற்ற பின்பே அவதார

காரியத்தை விசேஷமாகச் செய்து காட்டினார்கள் என்றால், இது அந்த ஸம்ஸ்காரத்தின் அவசியத்தை ஸாதாரண மநுஷ்யர்களான நமக்கு அழுத்தமாகத் தெரிவிப்பதற்குத்தான்.

ராஜசூடாமணி தீக்ஷிதரென்று ஒரு கவி இருந்தார். அவர், "காயத்ரீ என்னை அடையுமுன்னே ஸரஸ்வதி என்னிடம் வந்து விட்டாள்" என்று ஒரு ச்லோகத்தில் சொல்லியிருக்கிறார். காயத்ரீ உபதேசம் பெறுகிற எட்டாவது வயசுக்கு முன்பே அவர் கவிபாட ஆரம்பித்து விட்டார். அதைத்தான் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்! ஞான ஸம்பந்தரும் மூன்றாம் வயசிலேயே 'தோடுடைய செவியன்' என்று பாடினவர்தான். அப்போதே அற்புதங்களைச் செய்ய ஆரம்பித்து விட்டார். ஆனாலும் பூணூல் போட்டுக் கொண்டு காயத்ரீ உபதேசம் வாங்கிக் கொண்டார்; அந்த பலத்தினாலேயே மேற்கொண்டு பெரிய பெரிய காரியங்களைப் பண்ணி வைதிக தர்மத்தை நிலைநாட்டினதாகக் காண்பித்தார் – என்பதிலிருந்து நமக்கெல்லாம் உபநயன ஸம்ஸ்காரத்திலும், அதற்கப்புறம் காயத்ரீ ஜபம் செய்வதிலும் கண்ணைத் திறந்து விட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

வயசு நிர்ணயத்துக்குக் காரணம்

வயசு நிர்ணயத்துக்குக் காரணம்

ஸரஸ்வதி உள்ளே புகுந்தபின் காயத்ரீ புகுவது இருக்கட்டும்; இது எங்கேயோ அபூர்வமாக நடக்கிற சமாசாரம். காமன் உள்ளே புகுவதற்கு முன் காயத்ரீ உள்ளே புகுந்துவிட வேண்டுமென்பதுதான் முக்கியம்.

அதனால்தான் எட்டு வயசு என்று வைத்தார்கள். காமத்தின் ஆவேசம் ஏற்பட்டுவிட்டால் அது மந்திர சக்தி பெற முடியாமல் இழுத்துக் கொண்டு போகும். ஏற்கெனவே பெற்ற சக்தியைக்கூட ஜீர்ணிக்கிற சக்தி அதற்கு உண்டு. அதனால்தான் பதினாறு வயசுக்கு மேல், சாண் ஏறினால் முழம் சறுக்குகிற நிலை ஏற்படுவதற்கு ரொம்பவும் முந்தியே, காயத்ரீயை நன்றாக ஜபித்து அதில் ஸித்தி அடைந்து விடும்படியாக வயசு நிர்ணயம் செய்திருக்கிறார்கள்.

இதொன்றையும் நாம் ஸீரியஸாக எடுத்துக் கொள்வதேயில்லை. தண்டத்துக்குச் செய்கிறோம். அடியோடு விட்டு விடுவதற்குத் துணிச்சல் இல்லாததாலேயே காலம் தப்பி, முறை கெட்டு, ஏதோ செய்தோம் என்கிற பொய்த் திருப்திக்காகப் பண்ணுகிறோம். இதைவிட தைரியமாக நாஸ்திகமாக இருந்துவிட்டால்கூடத் தேவலை; அவனுக்கு ஒரு 'கன்விக்ஷ'னாவது [கொள்கையுறுதியாவது] இருக்கிறதல்லவா என்றுகூடத் தோன்றுகிறது.

பாலப் பிராயத்திலேயே காயத்ரீயை ஜபிக்க ஆரம்பித்து விட்டால் பசுமரத்தாணியாக அது பதியும். காயத்ரீயானது முக்கியமாக mental power (மனோசக்தி) , தேஜஸ், ஆரோக்யம் எல்லாவற்றையும் அபரிமிதமாகத் தரவல்லது. இந்த ஜபத்தாலேயே குழந்தைகளுக்கு நல்ல concentration [சித்த ஒருமைப்பாடு] , புத்தி தீக்ஷண்யம், சரீர புஷ்டி எல்லாமும் உண்டாகும். பிற்பாடு காமம் தெரிந்தாலும் அது ஒரேடியடியாக இழுத்துக் கொண்டு போய், புத்தி குறைவிலும் சரீர அசுத்தியிலும் விடாதபடி பெரிய

கட்டுப்பாடாக இருக்கும். பிரம்மசர்ய ஆச்ரமத்தில் இவன் வீர்யத்தை விரயம் பண்ணாமல், நல்ல பிரம்ம தேஜஸோடு, அறிவாளியாகவும், குணசாலியாகவும், அடக்கம் முதலான நன்னடத்தைகளோடும், தெய்வ பக்தியோடும், ஆத்ம ஸம்பந்தமான விஷயங்களில் பிடிமானத்தோடும் இருப்பதற்கு பால்யத்திலேயே காயத்ரீ அநுஸந்தானம் பண்ணுவது பெரிய ஸஹாயம் செய்யும். தங்கள் குழந்தைகளுக்கு இத்தனை நன்மைகளையும் ஒரு காரணமுமில்லாமல் இக்காலத்துப் பெற்றோர்கள் தடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காயத்ரீ ஜபம், வேத அத்யயனம், இதர வேதாங்கங்களைப் படிப்பது, பிக்ஷை எடுப்பது, குரு சுசுருஷை, நடுவே பிரம்மசரிய ஆச்ரமத்தில் செய்யவேண்டிய விரதங்கள் இவற்றை முடித்து நல்ல யௌவனத்தை அடைந்தவன் ஸமாவர்த்தனத்தோடு குருகுல வாஸத்தைப் பூர்த்தி பண்ண வேண்டும். பிறகு காசிக்கு யாத்திரை சென்று வரவேண்டும். காசி யாத்திரை முடிந்து திரும்பியவுடன் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்.
ஸமாவர்த்தனத்துக்குப் பிறகு விவாஹம் வரையில் அதாவது ஒருவன் காசி யாத்திரை போய் வரும் கட்டத்தின் போது – அவனுக்கு 'ஸ்நாதகன்' என்று பெயர். இக்காலத்தில் 'கான்வகேஷன்' தான் ஸமாவர்த்தனம்! கல்யாணத்தில் காசி யாத்திரை என்று ஒரு கூத்து நடக்கிறது!

இதற்கப்புறம் விவாஹம் என்பது. அதுவும் நாற்பது ஸம்ஸ்காரங்களில் ஒன்று.

இயற்கையை மதிக்கும் இல்லறம்

இயற்கையை மதிக்கும் இல்லறம்

தூய்மைக் குறைவுக்கெல்லாம் காரணமானது சிற்றின்பம் என்று மஹான்களெல்லாம் பாடி வைத்திருந்தாலும், அதிலும் கூட ஒரு நெறியை ஏற்படுத்திக் கொடுத்து, அதையே ஆத்மாவை தூய்மைப்படுத்துகிற ஒரு ஸம்ஸ்காரமாக்கி நமக்கு வேத தர்ம சாஸ்திரங்கள் கொடுத்திருக்கின்றன. சாதாரணமாக ஒரு ஜீவனை, 'காட்டுக்குப் போ; ஸந்நியாஸியாய் இரு' என்று சொன்னால் அவனால் முடியாது. லோக வாழ்க்கையில் அடிபட்டுத்தான் அவனுக்குப் பக்குவம் உண்டாக வேண்டும். பிஞ்சாகக் கசக்கிற காலத்தில் கசந்து, வடுவாக துவர்க்கிற கால்த்தில் துவர்த்து, காயாகப் புளிக்கிற காலத்தில் புளித்து, அப்புறம்தான் பழமாகப் பழுத்து மதுர பூர்ணிமாவதற்கு ஸாமானிய ஜீவர்களால் முடியும். தானாக பழுக்காததைத் தடி கொண்டு அடித்துப் பழுக்கப் பண்ண முடியாது! அப்படி இயற்கை வேகத்தை மீறிப் பண்ணினால் ராமலிங்க ஸ்வாமிகள் சொன்னபடி "வெம்பி விழ" வேண்டியதுதான் என்பது ரிஷிகளுக்குத் தெரியும். அதனால்தான் விவாஹத்தையும் கிருஹஸ்த (இல்லற) தர்மங்களையும் வைத்திருக்கிறார்கள். அது மட்டுமில்லாமல், பூர்வ கர்மாவுக்காக அநேக ஜீவர்கள் பிறந்தாக வேண்டுமே? தாம்பத்தியம் இல்லாமல் இது எப்படி முடியும்?

கிருஹஸ்தாச்ரமத்தில் இவன் முன்பு கற்றுக்கொண்ட வேதத்தைத் தொடர்ந்து ஓதியும் பிறர்களுக்கு ஓதுவித்தும்

(கற்றுக் கொடுத்தும்) வரவேண்டும். அநேக யக்ஞங்களையும், ஔபாஸனையையும் அக்னிமுகமாகப் பண்ண வேண்டும். பிரம்மசர்யத்தில் ஒருத்தனைச் சேர்ந்த ஸந்தியா வந்தனமும் கிருஹஸ்தாச்ரமத்தில் தொடர்கிறது.

தற்போது மற்ற யக்ஞாநுஷ்டானம், வேதாத்யயனம் இரண்டுமே ரொம்ப ரொம்பக் குறைந்து விட்டாலும் ஸந்தியாவந்தனமும், அதில் முக்யமான காயத்ரீ ஜபமும் துளி இருப்பதால் அதைப்பற்றிச் சொல்கிறேன்.

காயத்ரீ

காயத்ரீ

காயத்ரீ என்றால், "எவர்கள் தன்னை கானம் பண்ணுகிறார்களோ அவர்களை ரக்ஷிப்பது" என்பது அர்த்தம்.

காயந்தம் த்ராயதே யஸ்மாத் காயத்ரீ (இ) த்யபிதீயதே ।

கானம் பண்ணவதென்றால் இங்கே பாடுவதில்லை; பிரேமையுடனும் பக்தியிடனும் உச்சரிப்பது என்று அர்த்தம். யார் தன்னை பயபக்தியுடனும் பிரேமையுடனும் ஜபம் பண்ணுகிறார்களோ அவர்களை காயத்ரீ மந்திரம் ரக்ஷிக்கும். அதனால் அந்தப்பெயர் அதற்கு வந்தது. வேதத்தில் காயத்ரீயைப் பற்றிச் சொல்லும் பொழுது,

காயத்ரீம் சந்தஸாம் மாதா

என்று இருக்கிறது. சந்தஸ் என்பது வேதம். வேத மந்திரங்களுக்கெல்லாம் தாயார் ஸ்தானம் காயத்ரீ என்று இங்கே வேதமே சொல்கிறது. 24 அக்ஷரம் கொண்ட காயத்ரீ மந்திரத்தில் ஒவ்வொன்றும் எட்டெழுத்துக் கொண்ட மூன்று பாதங்கள் இருக்கின்றன. அதனால் அதற்கு 'த்ரிபதா' காயத்ரீ என்றே ஒரு பெயர் இருக்கிறது. இந்த ஒவ்வொரு பாதமும் ஒவ்வொரு வேதத்தின் ஸாரம். அதாவது, ரிக், யஜுஸ், ஸாமம் என்ற மூன்று வேதங்களையும் இறுக்கிப் பிழிந்து கொடுத்த essence (ஸாரம்) காயத்ரீ மஹாமந்திரம். அதர்வத்துக்குத் தனி காயத்ரீ இருக்கிறது. இரண்டாவது உபநயனம் செய்து கொண்டே அதை உபதேசம் பெற வேண்டும்.

த்ரிப்ய ஏவது வேதேப்ய: பாதம் பாதமதூதுஹம்

(மநுஸ்மிருதி)

காயத்ரீ மூன்று வேதத்திலிருந்து ஒவ்வொரு பாதமாக எடுத்தது என்று மநுவே சொல்கிறார். வேதத்தின் மற்றதையெல்லாம் விட்டுவிட்ட நாம் இதையும் விட்டால் கதி ஏது?

சாஸ்திரப் பிரகாரம் செய்ய வேண்டிய கார்யங்களுக்குள் எல்லாம் முக்கியமான காரியம் காயத்ரீ ஜபம்.

வேதியரின் தேகத்தூய்மை

வேதியரின் தேகத் தூய்மை

மந்திரசக்தி குறையாமல் இருக்க தேஹத்தை சுத்தியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

தேஹோ தேவாலய: ப்ரக்தோ ஜீவ: ப்ரோக்தோ ஸநாதன:|

தேஹம் ஒரு தேவாலயம். அந்த ஆலயத்துக்குள் இருக்கிற உயிரான ஜீவன் ஈச்வரஸ்வரூபம்.

ஆலயத்தில் அசுத்தியோடு போகக்கூடாது. அங்கே அசுத்தமான பதார்த்தங்களை சேர்க்கக் கூடாது. மாம்ஸம், சுருட்டு முதலியவைகளை கொண்டு போனால் அசுத்தம் உண்டாகும். ஆகம சாஸ்திரங்களில் தீட்டோடும் தேஹ அசுத்தத்தோடும் ஆலயத்துக்குப் போகக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியே மனித தேஹம் ஒரு தேவாலயமானால் அதிலும் அசுத்தமான பதார்த்தங்களைச் சேர்க்கக்கூடாது. குறிப்பாக, மந்திரசக்தி இருக்க வேண்டிய தேஹத்தில் அசுத்தமானவைகளைச் சேர்த்தால் அது கெட்டுப் போய்விடும்.

வீட்டுக்கும் தேவாலயத்திற்கும் வித்தியாஸம் இருக்கிறது. ஆனாலும் தேவாலயத்தைப் போல அவ்வளவு கடுமையாக அசுத்தம் வராமல் வைத்துக் கொள்ள வேண்டியதில்லை. ஒரு மூலையிலாவது வாய் கொப்புளிக்கவும், ஜல மல விஸர்ஜனத்துக்கும், பஹிஷ்டா [மாதவிடாய்] ஸ்திரீக்கும் இடம் வைக்கிறோம். Flat system -ல் கடைசியில் சொன்னது போய், அநாசார மயமாகி விட்டிருக்கிறது. இதற்கெல்லாம் ஆலயத்தில் கொஞ்சங்கூட இடமில்லையல்லவா?

ஒரு தேசத்தில் வீடும் வேண்டும், ஆலயமும் வேண்டும். அதே மாதிரி ஜனசமூகத்தில் லோக காரியங்களைச்

செய்யும் வீடு மாதிரியான தேகங்கள், ஆத்ம காரியத்தைச் செய்யும் ஆலயம் மாதிரியான தேகங்கள் இரண்டும் வேண்டும். தேஹங்களுக்குள் ஆத்மாவை ரக்ஷிப்பவை தேவாலயத்தைப் போல பாதுகாக்கப்பட வேண்டிய பிராம்மண தேஹங்கள். வேத மந்திர சக்தியை ரக்ஷிக்க வேண்டியவைகளாதலால் ஆலயம்போல் அதிக பரிசுத்தமாக அந்த தேகங்கள் இருக்க வேண்டும். அசுத்தியான பதார்த்தங்களை உள்ளே சேர்க்கக் கூடாது. மந்திர சக்தியை ரக்ஷித்து அதனால் லோகத்துக்கு நன்மையை உண்டாக்க வேண்டுவது பிராம்மணன் கடமை. அதனால்தான் அவனுக்கு அதிகமான நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. "மற்றவர்கள் அது பண்ணுகிறார்களே, நாமும் ஏன் பண்ணக்கூடாது?" என்று அசுத்தியைத் தரும் காரியங்களை பிராம்மணன் பண்ணக்கூடாது. அவர்களெல்லாம் சரீரத்தை வைத்துக் கொண்டு ஸந்தோஷமான அநுபவங்களை அடைகிறார்களே என்று இவன் தனக்குத் தகாதவற்றைச் செய்யக்கூடாது. "பிராம்மணனுக்கு தேஹம் ஸந்தோஷத்தை அநுபவிப்பதற்காக ஏற்பட்டதல்ல. லோக உபகாரமாக வேதத்தை ரக்ஷிக்க வேண்டிய தேஹம் அது. அது மஹா கஷ்டப்படவே ஏற்பட்டது" என்று [வாஸிஷ்ட ஸ்ம்ருதி'யில்] சொல்லியிருக்கிறது: "ப்ராஹ்மணஸ்ய சரீரம் து நோபபோகாய கல்பதே! இஹ க்லேசாய மஹதே".

லோக க்ஷேமத்திற்காக மந்த்ரங்களை அப்யஸிக்க வேண்டும் என்பதற்காகவேதான் செலவு பண்ணி உபநயனம் முதலியவைகளைச் செய்து கொள்வது. வேத

மந்திரங்களை ரக்ஷிப்பதற்காகவே- அதன் மூலம் ஸகல ஜீவ ஜந்துக்களையும் ரக்ஷிப்பதற்காகவே - தேஹத்தை வைத்துக் கொள்ள வேண்டும். 'எல்லோரும் ஸௌகரியமான தொழில் பண்ணுகிறார்களே! ஏன் நாம் செய்யக் கூடாது?' என்று பிராம்மணன் நினைக்கக் கூடாது. தன்னுடைய கடமையை நன்றாகச் செய்துவிட்டுப் பிறகுதான் ஜீவனோபாயத்தை நினைக்க வேண்டும். முன்பு இவன் பிராம்மண தர்மங்களைச் செய்தாலே போதுமென்று ராஜாவும் ஸமூஹமும் இவனுக்கு மானியம், ஸம்பாவனை செய்து வாழ வசதி தந்தார்கள். இப்போது நிலைமை மாறிவிட்டதால், பணத்துக்கும் கொஞ்சம் பிரயத்தனப்பட வேண்டியதுதான். ஆனால் நிரம்பப் பணத்தை ஸம்பாதிக்க வேண்டுமென்று ஆசைப்படக்கூடாது. இதற்காக அநாசார வழிகளில் பிரவேசிக்கக் கூடாது. பிராம்மணர்களுக்கு தரித்திர நிலை வேண்டியதுதான். இன்பங்களைத் தேடாமல் காயக் காயக் கிடந்தால்தான் இவனுக்கு ஞானப் பிரகாசம் உண்டாகும். அதனால் லோகம் வாழும். கண்ட தேசங்களுக்குச் சென்று ஆசார அநுஷ்டானங்களை விட்டுவிட்டு ஸம்பாதிக்கிற ஐச்வர்யம் இவனுக்கு வேண்டாம். அதுபடி ஸம்பாதிக்காவிட்டால் ஒன்றும் முடியாது என்பது இல்லை. லோகத்தில் மந்திர சக்தியைக் காப்பாற்றிக் கொண்டு தன்னுடைய தர்மத்தை அநுஷ்டிப்பது முதல் கடமை. ஸம்பாதிப்பது secondary [இரண்டாவது] தான்.

மந்திர சக்தி என்ற அக்கினியை இவன் காப்பாற்றிக் கொண்டு வந்தால் அது எல்லோருக்கும் க்ஷேமத்தை உண்டாக்கும். லோகத்தில் எவருக்குக் கஷ்டம் வந்தாலும்

அதை நிவர்த்திக்கும் சக்தி பிராம்மணனுக்கு மந்திர சக்தியின் மூலம் இருக்க வேண்டும். யாராவது கஷ்ட காலத்தில் வந்து பிரார்த்தித்தால், "நீ பண்ணுவதைத்தான் நானும் பண்ணுகிறேன், உனக்கு இருக்கிற சக்திதான் எனக்கும் இருக்கிறது" என்று ஒரு பிராம்மணன் சொன்னால் அவனுடைய ஜன்மா வீண்.

மந்திர சக்தியாகிய அக்கினி இப்பொழுது பெரும்பாலும் அணைந்திருக்கிறது. பிராம்மண தேஹம் விகாரம் ஆகிவிட்டது. அதில் அசுத்தமான பதார்த்தங்கள் சேர்க்கப் படுகின்றன. ஆனால், ஒரு பொறி மட்டும் அணையாமல் இருக்கிறது. அதை விருத்தி பண்ணவேண்டும். அப்படிச் செய்தால் எப்பொழுதாவது பற்றிக்கொள்ளும்.

அந்த நெருப்புப் பொறிதான் காயத்ரீ. அது பரம்பரையாக வந்திருக்கிறது.

காயத்ரீ மந்திர மகிமை

காயத்ரீ மந்திர மகிமை

மூன்று தலைமுறையாக காயத்ரீயை விட்டு விட்டவன் பிராம்மணனாக மாட்டான். அப்பேர்ப்பட்டவர்கள் இருக்கிற தெரு அக்ரஹாரம் ஆகாது. அது குடியானவர் தெருதான். ஆனால் இன்னும் மூன்று தலைமுறை ஆகவில்லையாகையால் இன்னும் பிராம்மணர்கள் என்று பெயராவ்து சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

மூன்று தலைமுறை யக்ஞம் இல்லாவிட்டால் அவன் துர்ப்ராம்மணன்; கெட்டுப்போன பிராம்மணன். கெட்டாலும்

'பிராம்மணன்' என்ற பேராவது இருக்கிறது! மறுபடியும் பிராம்மணனாவதற்குப் பிராயச்சித்தம் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் காயத்ரீயை மூன்று தலைமுறையாக விட்டுவிட்டால் பிராம்மணத்வம் அடியோடு போய் விடுகிறது. அவன் மறுபடியும் பிராம்மணனாக மாட்டான். அவன் பிராமணபந்துதான்; அதாவது, பிராமணர்களை உறவுக்காரர்களாக உடையவன்தான்! அப்படியே க்ஷத்ரியன் காயத்ரீயை விட்டுவிட்டால் க்ஷத்ரிய பந்துவாகிறனான்; வைசியன் வைசிய பந்துவாகிறான்.

ஆகையால் அந்த நெருப்புப் பொறியை ஊதிப் பெரிசு பண்ண வேண்டும். சின்ன நெருப்புப்பொறி எதற்கும் உபயோகப்படாது. ஆனால் உபயோகப்படுமாறு பெரிசாக்கப்படுவதற்கு அதில் ஆதாரம் இருக்கிறது.

ஆகையால் ஞாயிற்றுக்கிழமையாவது பூணூல் உள்ளவர்கள் ஆயிரம் காயத்ரீ பண்ண வேண்டும். கண்ட இடத்தில் கண்ட ஆஹாரத்தை உண்ணலாகாது. இது வரைக்கும் அநாசாரம் செய்ததற்குப் பிராயசித்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். இனியாவது கண்ட ஆஹாரத்தை உண்ணாமல், மந்திரசக்தி இருப்பதற்கு தேஹத்தைப் பரிசுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

'ஸஹஸ்ர பரமா தேவீ சத மத்யா தசாவரா' என்ற [தைத்திரீய அரண்யக வாக்குப்] படி ஆயிரம் ஆவிருத்தி ஜபிப்பது உத்தமம்; நூறு ஜபிப்பது மத்யமம்; அதம பக்ஷம் பத்து.

காலை ஸந்தி, மத்தியான வேளை, மாலை ஸந்தி என்ற ஒவ்வொரு காலத்திலும் பத்து காயத்ரீயாவது எத்தனை ஆபத்து காலத்திலும் ஜபம் பண்ணவேண்டும். இந்த மூன்று காலங்களும் சாந்தம் உண்டாகிற காலம். காலையில் பக்ஷி முதலிய பிராணிகளும் மனிதர்களும் எழுந்திருக்கும் காலம். அப்பொழுது மனது ஸாந்தியாக இருக்கும். ஸாயங்காலம் எல்லோரும் வேலையை முடிந்து ஓய்ந்திருக்கும் காலம். அதுவும் சாந்தமான காலம். மத்தியான காலத்தில் ஸூரியன் உச்சியில் இருக்கிறான். அப்பொழுது எல்லோரும் அயர்ந்திருக்கும் காலம். அப்பொழுதும் மனதுக்கு சாந்தமான காலம். இந்த மூன்று காலங்களிலும் காயத்ரீ, ஸாவித்ரீ, ஸரஸ்வதீ என்று மூன்று பிரகாரமாக தியானம் செய்ய வேண்டும். காலையில் பிரம்மா ரூபிணியாகவும், மத்தியான்னம் சிவ ரூபிணியாகவும், ஸாயங்காலம் விஷ்ணு ரூபிணியாகவும் தியானம் செய்யவேண்டும்.

காயத்ரீயில் ஸகல வேத மந்திர சக்தியும் அடங்கியிருக்கிறது. மற்ற எல்லா மந்திரங்களுக்கும் சக்தியைக் கொடுப்பது அதுதான். அதை ஜபிக்காவிட்டால் வேறு மந்திர ஜபத்திற்குச் சக்தி இல்லை. ஹிப்நாடிஸம் என்பதனால் பல காரியங்களைச் செய்கிறார்கள். மோக்ஷத்துக்குப் போக உதவும் ஹிப்நாடிஸம் காயத்ரீ மந்திரம்! ஆசையை அடக்கி ஜன்மம் எடுத்ததன் பலனை அடையச் செய்கிற ஹிப்நாடிஸம் காயத்ரீ! லோக காரியங்களைக் குறைத்துக் கொண்டு இந்தப் பொறியை ஊதுவதை அதிகமாகச் செய்யவேண்டும். இதை ஒரு விரதமாக வைத்துக் கொள்ளவேண்டும். அநாசாரத்தில்

போகாமல் தேகத்தை சுத்தமாக வைத்துக் கொண்டால்தான் இந்த ஒரு பொறியாவது அணையாமலிருக்கும்.

ஸந்தியாவந்தனத்தில் அர்க்கியமும் காயத்ரீயும் முக்கியமானவை. மற்றவைகளெல்லாம் அதற்கு அங்கமானவை. அசக்தர்களாயிருப்பவர்கள் அர்க்கியத்தைக் கொடுத்துவிட்டுப் பத்து காயத்ரீயாவது ஜபிக்க வேண்டும். 'அந்த இரண்டு தானே முக்கியம்? அவைகளை மட்டும் செய்துவிடலாம்' என்றால் வரவர அவைகளுக்கும் லோபம் வந்துவிடும். ஆபத்திலும் அசக்தியிலும் பத்து காயத்ரீ போதும் என்பதால் எப்போதும் இப்படிப் பத்தே பண்ணினால், அப்படிப் பண்ணுகிறவர்களுக்கு எப்போதும் ஆபத்தும் அசக்தியுமாகத் தான் இருக்கும் என்று ஒரு பண்டிதர் வேடிக்கையாகச் சொன்னார். ஆகையால் அங்கபுஷ்களத்தோடு எதுவும் குறைவின்றி செய்து வந்தால்தான் முக்கியமானது நன்றாக நிற்கும். ஆபத்துக் காலத்திலுங்கூட அவைகளைச் செய்து வரவேண்டும். காலம் தப்பாமல் செய்யவேண்டும். பாரத யுத்தத்தின் போது ஜலம் அகப்படாதபோதுகூட தூளியை [புழுதியை] வைத்துக்கொண்டு காலம் தவறாமல் ஸேனாவீரர்கள் அர்க்கியம் கொடுத்தார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

அஸ்தமன காலத்திலும், உதயகாலத்துக்கு முன்பும், உச்சிக்காலத்திலும் அர்க்கியம் கொடுக்க வேண்டும். இடைக்காட்டுச் சித்தர் என்று ஒருவர் இருந்தார். ஸித்தர்கள் விநோதமான காரியங்கள் பண்ணுவார்கள்; புதிராகப் பேசுவார்கள். இடைக்காட்டுச் சித்தர் ஆடு மேய்த்தார்! அவர், 'காணாமல் கோணாமற் கண்டு கொடு!

ஆடுகாண் போகுது பார் போகுது பார்!' என்று சொல்லி இருக்கிறார். "காணாமல்" என்றால் ஸூரியனைக் காண்பதற்கு முன்பு என்பது அர்த்தம். அதாவது ஸூரியோதையத்திற்கு முன் காலை அர்க்கியம் கொடுக்க வேண்டும். "கோணாமல்" என்பதற்கு ஸூரியன் தலைக்கு நேரே இருக்கும் பொழுது என்பது அர்த்தம். அதாவது ஸூரியன் மேற்காக சாய்வதற்கு முன் உச்சிக்காலத்தில் மாத்யான்னிக அர்க்கியம் கொடுக்க வேண்டும். "கண்டு" என்பதற்கு ஸூரியன் இருக்கும் போது என்று அர்த்தம். ஸூரியன் அஸ்தமிப்பதற்கு முன்பு மலை வாயிலில் இருக்கும்பொழுதே ஸாயங்கால அர்க்கியம் கொடுக்க வேண்டும். இந்த விஷயங்களைத்தான் அந்த ஸித்தர் லேசாகச் சொல்லியிருக்கிறார். "ஆடு" என்றால் "நீராடு!" அதாவது "கங்கையில் ஸ்நானம் பண்ணு" என்பது அர்த்தம். "காண்" என்றால் "ஸேது தரிசனம் பண்ணு" என்பது அர்த்தம். "போகுது பார்" என்றால் த்ரிகால ஸந்தியாவந்தனத்தாலும் கங்கா ஸ்நானத்தாலும் ஸேது தரிசனத்தாலும் நம் பாபம் தொலைந்து போகிறதைப் பார்!" என்று அர்த்தம். காசிக்குப் போய் கங்கையை எடுத்துக் கொண்டு, ஸேதுவான ராமேச்வரத்துக்குப் போய் ராமநாத ஸ்வாமிக்கு கங்காபிஷேகம் பண்ணும் ஸம்பிரதாயத்தைத்தான் சொல்லியிருக்கிறார்.

காயத்ரீயை ஸரியாகப் பண்ணினால்தான் மற்ற வேத மந்திரங்களிலும் ஸித்தி உண்டாகும். அர்க்கயத்தையும் காயத்ரீயையும் தவறாமல் செய்து கொண்டு வரவேண்டும். ஜன்மத்தில் ஒரு தரமாவது கங்காஸ்நானமும் ஸேது தரிசனமும் பண்ணவேண்டும்.

ஒருவனுக்கு ரொம்பவும் ஜ்வரம் வந்தால், கூட இருக்கிறவர்கள் அவனுக்காக ஸந்தியா வந்தனம் பண்ணித் தீர்த்தத்தை ஜ்வரம் வந்தவன் வாயில் விடவேண்டும். இப்பொழுது நமக்கு நித்தியப்படி ஜ்வரம் வந்தது போலத்தான் இருக்கிறது !

ஜ்வரம் வந்தால் அதற்கு மருந்து அவசியம்; அதுபோல ஆத்மாவுக்கு வந்திருக்கிற பந்தம் என்ற ஜ்வரம் போக காயத்ரீ மருந்து அவசியமானது. அதை எந்த காலத்திலும் விடக் கூடாது. மருந்தைவிட இதுதான் முக்கியமானது. ஒரு நாளாவது ஸந்தியாவந்தனத்தை விட்டு விட்டோமென்று இருக்கக் கூடாது.

காயத்ரீ ஜபம் பண்ணுவது எல்லாராலும் ஆகிற காரியந்தான். இதிலே ஜலத்தைத் தவிர வேறு திரவியம் வேண்டாம். சரீர பிரயாசையும் இல்லை. லகுவாகப் பரம சிரேயஸைத் தரும் ஸாதனம். ஆயுள் இருக்கிறவரைக்கும் ஸந்தியாவந்தனத்துக்கு லோபம் வராமல் பண்ணவேண்டும்.

காயத்ரீயை மாத்ரு ரூபமாக (தாய்வடிவமாக) உபாஸிக்க வேண்டும். பகவான் எல்லா ரூபமாக இருந்தாலும் மாதா ரூபமாக வந்தால் ரொம்பவும் ஹிதமாக இருக்கிறது. காயத்ரீயை அப்படிப்பட்ட மாதாவென்று வேதம் சொல்லுகிறது.

புருஷனுக்குத்தான் காயத்ரீ இருக்கிறது. ஸ்திரீக்கு எந்த காயத்ரீ இருக்கிறதென்றால் புருஷன் காயத்ரீயை அநுஷ்டித்தாலே ஸ்திரீக்கு க்ஷேமம் உண்டாகும்.

இதேபால் காயத்ரீ ஜபத்துக்கு அதிகாரம் பெற்ற மூன்று வர்ணத்தாரும் அதை விடாமல் செய்வதாலேயே காயத்ரீயில் உரிமையில்லாத மற்ற ஜாதிகளுக்கும் க்ஷேமமுண்டாகும். தான் ஒன்றைச் செய்யாமலிருப்பதால் தனக்கு மட்டுமே நஷ்டம் என்றால் விட்டுவிடலாம். அதனால் பிறத்தியானுக்கு நஷ்டம் என்றால் அப்படி விட்டுவிட முடியாது. காயத்ரீக்கு அதிகாரமில்லாத ஸ்த்ரீ, சூத்ரர்களுக்கும் trustee [தர்மகர்த்தா] மாதிரி இந்த மந்திர சக்தியைப் பெற்றுத்தர வேண்டியவர்கள் இந்தக் கடமையைப் பண்ணாவிட்டால் அது பரிஹாரமே இல்லாத தோஷமாகும்.

பலவித மந்திரங்கள் இருக்கின்றன. அவைகளை ஜபம் பண்ணுவதற்கு முன்பு இன்ன இன்ன பலனை உத்தேசித்து பண்ணுகிறேன் என்று சொல்லுகிறோம். காயத்ரீ மந்திரத்தினுடைய பலன் சித்த சுத்திதான்; மன மாசு அகலுவது தான். மற்ற மந்திரங்களால் உண்டாகிற பலன்களெல்லாம் கடைசியில் சித்த சுத்தி உண்டாக்கத்தான் இருக்கின்றன. அதுவே காயத்ரிக்கு நேரான பலன்; ஒரே பலன்.

இந்தக் காலத்தில் காலையிலும் ஸாயங்காலத்திலும் எல்லாரும் காலந்தவறாமல் ஸந்தியாவந்தனம் செய்யலாம். சீக்கிரம் ஆபீஸுக்குப் போகவேண்டியவர்கள் மத்யான்ன வேளையில் வீட்டிலிருக்க முடியாததால், பிராஃதக் காலம் ஆனபின், அதாவது ஸூர்ய உதயத்திலிருந்து ஆறு நாழிகை (2மணி 24 நிமுஷம்) கழித்து வரும் ஸாங்க்ய காலத்தில், அதாவது 8.30 மணி

சுமாருக்கு மாத்தியான்ஹிக அர்க்கியத்தை கொடுத்து ஜபிக்க வேண்டும்.

அதாவது நம்மால் அடியோடு முடியாமற் போனாலன்றி திரிகால ஸந்தியோபாஸனை இல்லாமல் இருக்கவே கூடாது. அடியோடு முடியாமல் ஜ்வரம் வந்தால் மற்றவர்களிடம் "கஞ்சி கொடு, தீர்த்தம் கொடு" என்று சொல்லுவதைப் போல், "எனக்காக ஸந்தியாவந்தனம் பண்ணு" என்று சொல்ல வேண்டும்.

மந்திர சக்தியானது அணையாமல் விருத்தியாகக் கிருபை செய்ய வேண்டுமென்று பகவானை எல்லாரும் பிரார்திப்போமாக!

ஸந்தியாவந்தனத்தின் இதர அம்சங்கள்

ஸந்தியாவந்தனத்தின் இதர அம்சங்கள்

தநுர்வேதத்தில் அஸ்திரம், சஸ்திரம் என்று இரண்டு வகை ஆயுதங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. சஸ்திரம் என்பதுதான் கம்பு, அம்பு, ஈட்டி, கதை முதலான அசல் ஆயுதங்கள். அஸ்திரம் என்பது இப்படி அசல் ஆயுதமாக இல்லாமல் எந்த ஒரு வஸ்துவையும் மந்திர சக்தியால் ஆயுதமாக ஆக்கி எய்வது. மந்திரத்தைச் சொல்லி ஒரு தர்ப்பையையோ, புல்லையோ ஏவி விட்டால் கூட அது ஆயுதமாகிவிடும். சஸ்திரங்களையும் இப்படி மந்திர பூர்வமாகப் பிரயோகிப்பதுண்டு. மந்திரபூர்வமாக ஒரு பதார்த்தத்தை அஸ்திரமாக்கி ஏவி விட்டால், எதன்மேல் விடுகிறோமோ அது நாசமடையும்.

இரு பிறப்பாளர் என்னும் பிரம்ம-க்ஷத்ரிய- வைசியர்கள் பிரதிதினமும் மூன்று வேளையும் பண்ண வேண்டிய அஸ்திரப் பிரயோகம் ஒன்று இருக்கிறது. அஸுரர்களை, அதாவது லோகத்தைச் சூழ்ந்துள்ள கெட்ட சக்திகளை, நாசம் பண்ணுவதற்காக இந்த அஸ்திரப் பிரயோகம் ஒன்று இருக்கிறது. அஸுரர்களை, அதாவது லோகத்தைச் சூழ்ந்துள்ள கெட்ட சக்திகளை, நாசம் பண்ணுவதற்காக இந்த அஸ்திரப் பிரயோகம் பண்ண வேண்டும். அஸ்திரம் என்றால் ஒன்றை மந்திர பூர்வமாக விட்டு எறிகிறதல்லவா? அந்த அஸ்திரம் எது? எதை விட்டெறிகிறது? ஜனங்களுடைய புத்தியை ஆசிரயித்திருக்கிற அஸுரர்கள் தொலைய வேண்டுமென்று ஜலத்தை விட்டு எறிகிறதுதான் அஸ்திரமாகிறது. இதுதான் ஸந்தியா வந்தன அர்க்யம். 'பாபம், பொய் முதலியவை தொலைய வேண்டும். ஞான ஸூரியன் பிரகாசிக்க வேண்டும். அது பிரகாசிக்காமல் பண்ணிக் கொண்டு உள்ளே இருக்கிற பிரதிபந்தகங்கள் [இடையூறுகள்] நிவர்த்தியாக வேண்டும்' என்று அந்த அஸ்திரப் பிரயோகம் பண்ண வேண்டும். ஒவ்வொரு நாளும் மூன்று வேளை பண்ண வேண்டும். எந்தக் காரியம் பண்ணினாலும் பண்ணாவிட்டாலும் மூச்சைப் பிடித்துக் கொண்டு இதைப் பண்ண வேண்டும்.

ஒரு காரியத்தை சிரத்தையாக ஒருவன் பண்ணினால் 'மூச்சைப் பிடித்துக் கொண்டு பண்ணுகிறான்' என்று சொல்லுகிறோம். வாஸ்தவத்தில் இந்த அர்க்ய காரியத்தையே மூச்சைப் பிடித்துக் கொண்டு பண்ண வேண்டும்! தினந்தோறும் இதைப்பண்ணி வந்தால் அந்த

சத்ருக்கள் நாசமாய்ப் போய் விடுவார்கள். இது பண்ணுவதற்கு முதலில் மூச்சைப் பிடித்துக் கொள்ள வேண்டும். அதாவது ச்வாஸத்தை அடக்க வேண்டும். இப்பொழுது நாம் மூக்கை மட்டும் தான் பிடிக்கிறோம். சாஸ்திரம் 'நாஸிகாம் (மூக்கை) ஆயம்ய' என்று சொல்லவில்லை. 'ப்ராணான் (மூச்சை) ஆயம்ய' என்றுதான் சொல்லியிருக்கிறது. அதாவது வெறுமே மூக்கைப் பிடிக்காமல் பிராணனையே கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும். 'ப்ராணாயாமம்' என்பது 'ப்ராண ஆயாமம்', அதாவது 'ச்வாஸக் கட்டுப்பாடு', 'ஆயம்ய' என்றால் 'கட்டுப்படுத்தி'.

எந்தக் காரியம் பண்ணினாலும் மனது ஒருமைப்பட வேண்டும். ஜலத்தைக் கொண்டு அஸ்திரப் பிரயோகம் செய்வதற்கும் மனது ஒருமைப்பட வேண்டும். அதற்காகத் தான் மூச்சைப் பிடிக்க வேண்டும். 'மூச்சைப் பிடித்தால் மனது எப்படி நிற்கும்?' என்று கேட்கலாம். மனது நிற்கிற பொழுது மூச்சு நிற்பதைப் பார்க்கிறோமே! பெரிய ஆச்சரியம் உண்டாகிறது, பெரிய துன்பம் வருகிறது, பெரிய சந்தோஷம் ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது மனசுலயித்துப் போய் ஏகாந்தமாக நிற்கிறது; 'ஹா!' என்று கொஞ்ச நேரம் மூச்சும் நின்றுபோய் விடுகிறது. அப்புறம் வேகமாக ஓடுகிறது. நாமாக அதை நிறுத்தவில்லை; தானாக நிற்கிறது. மனசு ஒன்றிலே நன்றாக ஈடுபட்டவுடன் மூச்சு நின்றுவிடுகிறது. பின்பு பெருமூச்சு விடுகிறோம். எதற்காக? முன்பு விடாத மூச்சையும் சேர்த்து விடுகிறோம். இப்படி மனது ஒருமைப்படுகிற போது மூச்சு நிற்கிறதென்றால் மூச்சை

நாமாக நிறுத்தினாலும் மனது ஒருமைப்படும் என்று ஆகிறதல்லவா? இதற்காகத்தான் பிராணாயாமத்தால் மூச்சை இறுக்கி, அப்புறம் அர்க்யம் தருவது.

நாம் அர்க்கியம் விடும்போது சித்த ஐகாரியத்தோடு [மன ஒருமைப்பாட்டோடு] விடவேண்டும். பிராணாயாமம் பண்ணினால் சித்தைக்காக்கிரியம் உண்டாகும். அதை நிறையப்பண்ணுவது யோகத்திற்கு அவசியம். அப்படி நிறையப் பண்ணுவது கஷ்டமானது; உபதேசத்தின்படி செய்ய வேண்டியது. நாம் ஸந்தியாவந்தனத்தில் அதிக பட்சமாக ஒரு இடத்தில் பத்துத் தடவை பண்ணுகிறோம். மூன்று பண்ணு என்னும் சில இடத்தில் இருக்கிறது. சிறு வயதில் உபநயனமான காலம் முதற்கொண்டு கிரமமாக நாம் வேளைக்குப் பத்துப் பிராணாயாமம் பண்ணிக்கொண்டு வந்திருந்தாலே, இத்தனை நாளில் யோகீச்வரராக ஆகியிருப்போம். பண்ணுகிறதைச் சரியாகப் பண்ண வேண்டுமல்லவா? அரை நிமிஷம் ச்வாஸத்தை நிற்கப் பண்ண வேண்டும். அதிகமாக வேண்டாம். பிராணன் நின்றால் மனது நிற்கும். அந்த நிலையில் அர்க்யம் கொடுத்தால் வாஸ்தவமாகக் கெட்ட அஸுர சக்திகள் ஓடிப்போகும். மனஸ் நின்றால் நாம் விடுகிற ஜலம் அஸ்திரமாகும்.

அர்க்கியமாகிய அஸ்திரப் பிரயோகத்தைப் பண்ண வேண்டும். பின்பு காயத்ரீ பண்ணவேண்டும். பிராணாயாமத்தைக் கூடிய வரையில் பண்ணவேண்டும். மூச்சைக் கொஞ்சம் நிறுத்துகிறது, பின்பு விடுகிறது என்ற அளவில் இருந்தாலே போதும். அதிகம் அடக்கவேண்டாம். ஸங்கல்பம், மார்ஜனம், பிராசனம், அர்க்யப்ரதானம், ஜபம்,

ஸ்தோத்திரம், அபிவாதனம் இவ்வளவும் பரமேச்வரனுடைய அநுக்கிரஹம் பெறுவதற்காகப் பண்ணகிறேனென்று நினைத்துச் செய்யவேண்டும். முதலில் பண்ணும் ஸங்கல்பம் என்பது அதுதான். ஆரம்ப முதல் கடைசி வரையில் பரமேச்வரார்ப்பணம் பண்ணவேண்டும். இவ்வளவுக்கும் பிராணாயாமம் முக்கிய அங்கம். திரிகாலங்களிலும் இதை ஸ்வல்பமாவது பண்ணவேண்டும்.

தினந்தோறும் மூன்று வேளையும் ரோகிஷ்டன் [நோயாளி] கூடப் பிராணாயாமம் பண்ணவேண்டும் என்று சாஸ்திரத்தில் இருப்பதால் உபத்திரவம் கொடுக்கிற அளவுக்கு இதில் ச்வாஸக் கட்டுப்பாடு இல்லை என்று புரியும். இப்படிப் பண்ணினாலே ரோகமும் போய் தீர்க்காயுஸ் உண்டாகும்.

ரிஷயோ தீர்க்க ஸந்த்யத்வாத் தீர்க்கமாயுரவாப்நுயு:|

ப்ரஜ்ஞாம் யசச்ச கீர்த்திம் ச ப்ரஹ்ம வர்சஸமேவ ச||

(மநுஸ்மிருதி, 4-94)

அபிவாதனத்தில் எந்த மஹரிஷியுனுடைய ஸந்ததியில் பிறந்திருக்கிறோம் என்று சொல்கிறோமோ அந்த மஹரிஷி முதல் காயத்ரீ ஜபிக்கப்பட்டு வருகிறது. அந்த கோத்திரத்தில் பிறந்ததற்காவது கர்மாநுஷ்டானங்களைச் செய்ய வேண்டியது நமது கடமை. அந்த முதல் ரிஷிக்கு அப்புறம் எவ்வளவோ பேர் ரிஷிகளாக இருந்திருக்கிறார்கள். த்ரயார்ஷேயம், பஞ்சார்ஷேயம், ஏகார்ஷேயம் என்று சொல்கிறோம். அதாவது அந்த அந்த

கோத்திரத்தில் ரிஷிகளோ, ஐந்து ரிஷிகளோ, ஒரு ரிஷியோ இருந்திருக்கிறார்கள் என்று இதனால் தெரியவருகிறது. அவர்கள் அப்படி தீர்க்காயுஸ், ஞானம், புகழ், பிரம்மதேஜஸ் முதலியவையுள்ள ரிஷிகளாக ஆனதற்குக் காரணம் அவர்கள் செய்த ஸந்தியாவந்தனம்தான் என்பது நான் சொன்ன [மநு ஸ்மிருதி] ச்லோகத்தின் அர்த்தம்.

தொடர்ச்சியாக வந்த இந்த தாரையை நாம் அறுத்து விடக்கூடாது. பிராணயாமத்தோடு சித்தைக்காக்கிரியத்தோடு மந்திர லோபமில்லாமல் பரமேச்வரார்ப்பணமாக ஸந்தியாவந்தனத்தை நிறுத்தி நிதானமாகப் பண்ணவேண்டும். அர்த்தத்தைத் தெரிந்து கொண்டு பண்ணவேண்டும்.

மனோ-வாக்-காயங்களால் பாபம் பண்ணியிருக்கிறோம். அந்த மூன்றாலும் செய்யும் கர்மாக்களால் அந்தப் பாபத்தைப் போக்கிக் கொள்ளவேண்டுமென்று முன்பு சொல்லியிருக்கிறேன். ஸந்தியாவந்தனத்தில், வாக்கினால் மந்திரம் சொல்லுகிறோம்; காயத்ரீ ஜபத்தை மனதினால் தியானித்துப் பண்ணுகிறோம்; மார்ஜனம் (புரோக்ஷித்துக் கொள்வது) முதலியவைகளால் காயசுத்தி உண்டாகிறது.

அது மட்டுமில்லாமல் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் மூன்றும் சேர்ந்ததாகவும் ஸந்தியாவந்தனம் இருக்கிறது.

ஸந்தியாவந்தனம் பண்ண அவரவர்கள் தங்கள் தங்களுக்கென்று பாத்திரம் வைத்துக்கொள்ளவேண்டும். ஸந்தியா வந்தனத்தை அவஸரமாகப் பண்ணக்கூடாது என்பது முக்கியம்.

பெண்கள் விஷயம் என்ன?

பெண்கள் விஷயம் என்ன?

நடுவிலே இதர ஜாதியாரின் நலனையும் உத்தேசித்து த்விஜன் - இருபிறப்பாளன் -ஸந்தியாவந்தனம் செய்ய வேண்டும்; ஸ்திரீகளின் க்ஷேமத்தை உத்தேசித்தும் புருஷரே பண்ண வேண்டும் என்றேன்.

இதர ஜாதியாருக்கு - நாலாம் வர்ணத்தாருக்கு - ஏன் இந்த ஸம்ஸ்காரங்கள் இல்லை என்பதையும் முன்பே சொன்னேன். இப்போது ஸ்திரீகள் விஷயத்தையும் கவனிக்க வேண்டும்.

அவர்களுக்கு ஏன் இந்த அநுஷ்டானங்களும், ஸம்ஸ்காரங்களும் இல்லாமல் வைத்திருக்கிறது?

குழந்தை பிறந்தவுடன் புண்யாஹவாசனம், நாமகரணம், பிறகு ஆண்டு நிறைவில் அப்தபூர்த்தி, அன்னப் பிராசனம் முதலானதுகளை நாம் பெண் குழந்தைகளுக்கும் பண்ணினாலும், சௌளம் (குடுமி வைத்தல்) , உபநயனம், பிறகு பிரம்மசரிய ஆச்ரமத்தில் உள்ள விரதங்கள் முதலிய எதுவும் பெண்களுக்கு இல்லை. அப்புறம் கல்யாணம் என்கிற விவாஹ ஸம்ஸ்காரம் மட்டும் அவளுக்கும் இருக்கிறது. அதற்கப்புறம் உள்ள ஸம்ஸ்காரங்கள், யக்ஞம் முதலானவற்றில் கர்த்தாவாக முக்கியமாய் காரியம் பண்ணுவது புருஷன்தான். இவள் பத்தினி ஸ்தானத்தில் கூட நிற்கிறாள். ஔபாஸனத்தில் மாத்திரம் இவளும் ஹோமம் பண்ணுகிறாள்.

ஏன் இவளை இப்படி வைத்திருக்கிறது?

பிறப்பதற்கு முன்பே செய்யப்படும் நிஷேகம், பும்ஸவனம், ஸீமந்தம் முதலியவைகூட புருஷப் பிரஜையை உத்தேசித்தேதான் செய்யப்படுகின்றன.

அப்படியானால் இக்காலச் சீர்திருத்தக்காரர்கள், 'பெண் விடுதலைக்காரர்கள்' சொல்வது போல் ஹிந்து மதத்தில் பெண்களை இழிவு படுத்தி இருட்டில் அடைத்துத்தான் வைத்திருக்கிறதா?

நாலாம் வர்ணத்தாருக்கு ஸம்ஸ்காரங்களில் பல இல்லாததற்கு என்ன காரணம் சொன்னேன்? அவர்களால் நடக்க வேண்டிய லௌகிக காரியங்களுக்கு இவை அவசியமில்லை என்றேன். இந்த ஸம்ஸ்காரங்களால் எப்படிப்பட்ட தேஹ, மன ஸ்திதிகள் ஏற்படுமோ அவை இல்லாமலே அவர்கள் லோக உபகாரமாக ஆற்றப்பட வேண்டிய தங்களது தொழில்களைச் செய்துவிட முடியும். அத்யயனம், யக்ஞம் என்பவற்றில் மற்ற ஜாதியாரும் பொழுதைச் செலவிட்டால் அவர்களால் நடத்தியாக வேண்டிய காரியங்கள் என்ன ஆவது? இதனால்தான் அவர்களுக்கு இவை வேண்டாமென்று வைத்தது. இவை இல்லாமலே, தங்கள் கடமையைச் செய்வதனால் அவர்கள் ஸித்தி பெறுகிறார்கள். "ஸ்வகர்மணா தம் அப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ:" என்று பகவான் (கீதையில்) சொல்லியிருக்கிறார். இந்த விஷயங்களை முன்பே சொன்னேன்.

பொதுவான சமூகத்தில் இப்படிக் காரியங்கள் பிரித்திருப்பதை முன்னிட்டே ஸம்ஸ்கார வித்யாஸம்

ஏற்பட்டிருக்கிற மாதிரித்தான், ஒவ்வொரு வீட்டிலும் புருஷர்களுக்கும் பெண்களுக்கும் இடையே வித்யாஸம் வைத்திருக்கிறது. ஒரு வீடு என்றிருந்தால் சமையல், வீட்டைச் சுத்தம் பண்ணுவது, குழந்தைகளை வளர்ப்பது என்றிப்படி பல காரியங்கள் இருக்கின்றன. ஸ்வாபாவிகமான [இயற்கையான] குணங்களால் பெண்களே இவற்றுக்கு ஏற்றவர்களாக இருக்கின்றனர். இவர்களும் புருஷர்களின் அநுஷ்டானங்களில் இறங்கிவிட்டால் இவர்கள் செய்ய வேண்டிய காரியம் என்ன ஆவது? இவர்களுடைய சித்தசுத்திக்குப் பதி சுசுரூஷை, கிருஹ ரக்ஷணை இதுகளே போதும் என்னும் போது புருஷனின் அநுஷ்டானங்களை இவர்களுக்கும் வைத்து வீட்டுக் காரியங்களை ஏன் கெடுக்க வேண்டும்?

ஆகவே disparity, discrimination [ஏற்றத்தாழ்வு, வித்யாஸப் படுத்துதல்] என்று இக்காலத்துச் சீர்த்திருத்தக்காரர்கள் வைகிறதெல்லாம் வாஸ்தவத்தில் ஒருத்தர் செய்கிறதையே இன்னொருத்தரும் அநாவசியமாக duplicate பண்ணாமல், ஒழுங்காக வீட்டுக் காரியமும், நாட்டுக் காரியமும் நடக்கும்படி division of labour [தொழிற் பங்கீடு] பண்ணிக் கொண்டது தான்; எவரையும் மட்டம்தட்ட அல்ல.

மந்திரங்களை ரக்ஷிக்க வேண்டிய சரீரங்களை அதற்குரிய யோக்கியதை பெறும்படியாகப் பண்ணுவதற்காகவே ஏற்பட்ட ஸம்ஸ்காரங்கள் பல இருக்கின்றன. இவற்றை இந்த மந்திர ரக்ஷணை என்ற காரியமில்லாத மற்ற சரீரிகளுக்கு எதற்கு வைக்கவேண்டும்? உடைந்து போகிற க்ளாஸ் ஸாமான்களைப் பார்ஸலில் அனுப்ப வேண்டுமானால் அதற்கு சில விசேஷ பாதுகாப்புப்

பண்ணுகிறார்கள். கூட்ஸில் மண்ணெண்ணையய், பெட்ரோல் முதலியவற்றை அனுப்பும்போது அதற்குத் தனி ஜாக்கிரதைகள் பண்ணுகிறார்கள். மற்ற ஸாமான்களுக்கு இப்படிப் பண்ணவில்லை என்பதால் அவற்றை மட்டம் தட்டுகிறார்கள் என்று ஆகுமா? இந்நாளில் ரேடியேஷனை [கதிரியகத்தை] உத்தேசித்து, ஸ்பேஸுக்கு [வானவெளிக்கு] ப் போகிறவனை முன்னும் பின்னும் ஐஸொலேட் செய்து [பிரித்து வைத்து] ரொம்பவும் ஜாக்கிரதை பண்ணவில்லையா? இதே மாதிரி, இதைவிடவும் மந்திரங்களுக்கு ரேடியேஷன் உண்டு என்று புரிந்து கொண்டால் பிராம்மணனைப் பிரித்து ஸம்ஸ்காரங்களை வைத்ததன் நியாயம் புரியும்.

லோக க்ஷேமார்த்தம் மந்திரத்தை ரக்ஷிக்க வேண்டிய ஒரு பிராம்மண புருஷ சரீரம் உருவாக வேண்டுமானால் அது கர்ப்பத்தில் வைக்கப் படுவதிலிருந்து சில பரிசுத்திகளைப் பண்ண வேண்டியிருக்கிறது. பும்ஸவனம், ஸீமந்தம் முதலியன இதற்குத்தான். பிறந்த பிறகும் இப்படியே.

அவரவரும் ரைட், ரைட் (உரிமை, உரிமை) என்று பறக்காமல், நல்ல தியாக புத்தியோடு, அடக்கத்தோடு லோக க்ஷேமத்துக்கான காரியங்களெல்லாம் வகையாக வகுத்துத் தரப்பட வேண்டும் என்பதையே கவனித்தால், சாஸ்திரங்கள் சில ஜாதியாருக்கோ, ஸ்திரீகளுக்கோ பக்ஷபாதம் பண்ணவேயில்லை என்பது புரியும்.

பெண்களின் உயர்ந்த ஸ்தானம்

பெண்களின் உயர்ந்த ஸ்தானம்

ஸ்திரீகளுக்குத் தாமாக யக்ஞம் பண்ண அதிகாரமில்லை என்பதை மட்டும் பார்த்து ஆக்ஷேபணை பண்ணுகிறவர்கள், பத்தினி இல்லாத புருஷனுக்கு யக்ஞம் செய்கிற அதிகாரமில்லை என்கிற விஷயத்தையும் கவனித்தால், ஹிந்து சாஸ்திரம் பெண்களை மட்டம் தட்டுகிறது என்று சொல்ல மாட்டார்கள். பத்தினி உள்ளவன்தான் யக்ஞம் செய்யவேண்டும்; அப்படிப்பட்ட யக்ஞ கர்மாநுஷ்டானத்தை இவன் லோக க்ஷேமத்துக்காகவும் தன் சித்த சுத்திக்காகவும் ஆரம்பிக்க வேண்டும் என்றேதான் பிரம்மசரிய ஆசிரமம் முடிந்து ஸமாவர்த்தனம் ஆனபின் விவாஹம் என்கிற ஸம்ஸ்காரத்தை வைத்திருக்கிறது.

விவாஹத்துக்கு "ஸஹ தர்ம சாரிணீ ஸம்ப்ரயோகம்" என்று பேர். அதாவது "தன்னோடுகூட தர்மத்தை நடத்திக் காட்டுகிறவளோடு பெறுகிற உத்தமமான சேர்க்கை" என்று அர்த்தம். அதாவது, இந்திரிய ஸுகம் இதில் முக்கிய லக்ஷ்யமல்ல. லோகத்தில் தர்மங்களை அநுஷ்டிப்பதுதான் லக்ஷ்யம். அதைத் தனியாக அநுஷ்டிக்கச் சொல்லவில்லை. அதற்குத் துணையாக ஒரு ஸ்திரீயைச் சேர்த்துக் கொள்ளும்படி சாஸ்திரம் சொல்கிறது. 'தர்ம பத்தினி', 'ஸஹ தர்ம சாரிணி' என்பதாகப் பொண்டாட்டியை தர்மத்தோடு ஸம்பந்தப் படுத்தித்தான் சொல்லியிருக்கிறதே தவிர, காமத்தோடு அல்ல. இதிலிருந்து சாஸ்திரங்களில் ஸ்திரீகளுக்குக் கொடுத்துள்ள உயர்ந்த மதிப்பைப் புரிந்து கொள்ளலாம்.

பிரம்மசாரி, தான் மட்டில் தன் ஆசிரம தர்மத்தைப் பண்ணுகிறான்; ஸந்நியாஸியும் அப்படியே. இல்லறம்

நடத்துகிற கிருஹஸ்தாச்ரமி மட்டும் தனியாக இல்லாமல் பத்தினியுடன் சேர்ந்தே தன் தர்மத்தை, கர்மங்களைப் பண்ண வேண்டும் என்று சாஸ்திரம் வைத்திருக்கிறது. புருஷன்-மனைவி இருவருக்கும் இது பொது சொத்து. பத்தினி இருக்கிற கிருஹஸ்தனுக்கு மட்டுமே யாக யக்ஞாதிகளை சாஸ்திரத்தில் வைத்திருக்கிறதே தவிர, பிரம்மசாரிக்கும் ஸந்நியாஸிக்கும் இவை இல்லை. இந்திரிய ஸௌக்யத்துக்காக மட்டுமே பத்தினி என்றால், பத்தினி இல்லாவிட்டால் ஒருவன் யக்ஞம் பண்ணக்கூடாது என்று வைத்திருக்குமா? அவள் பக்கத்தில் நின்றால்தான் இவன் யக்ஞம் பண்ணலாம். கர்த்தாவாக அவளே நேரே யக்ஞம் பண்ண 'ரைட்' இல்லை என்பதை மட்டும் கவனிக்கும் பெண் விடுதலைக்காரர்கள், அவள் இல்லாவிட்டால் இவனுக்கும் 'ரைட்' போய் விடுகிறது என்பதையும் கவனிக்க வேண்டும். வேதத்திலேயே இப்படி விதித்திருக்கிறது: "பத்நீவதஸ்ய அக்னி ஹோத்ரம் பவதி". ஒரு பெரியவர்* தன் பத்தினி செத்துப் போன போது, "என் யக்ஞ கர்மாநுஷ்டானங்களையெல்லாம் கொண்டுபோய் விட்டாளே" என்று அழுதாராம்!

தர்மத்துக்கும், கர்மத்துக்கும் கைகொடுப்பவளாக அப்படிப்பட்ட ஒரு உயர்ந்த ஸ்தானம் நம்முடைய சாஸ்திரங்களில் ஸ்திரீகளுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

* 'மன்னார்குடி பெரியவாள்' எனப்பட்ட பிரம்மஸ்ரீ ராஜ ஸ்ரீ சாஸ்திரிகள்.

விவாஹம்

தர்மத்துக்காகவே ஏற்பட்டது

விவாஹம்

தர்மத்துக்காகவே ஏற்பட்டது.

தர்ம அர்த்த காம மோக்ஷம் என்று நான்கு புருஷார்த்தங்களைச் சொல்கிறோம். இதிலே முதலாவதான தர்மம் எப்போதுமே விட்டுப் போகக்கூடாது. அர்த்தம் (பணம்) சம்பாதிப்பதும் காம அநுபவமும் ஒரு காலத்தில் விட்டு விடுபவை. ஆனால் இவற்றை அநுபவிக்கும் காலத்திலும் தர்மத்திலிருந்து விலகக்கூடாது. சாஸ்திர தர்மங்களையும் விட்டு ஸந்நியாஸியாகிறபோதுகூட, ஒருத்தன் தர்மத்துக்கு அப்பாற்பட்டவனாகி விடுகிறானே தவிர, அதை ஆக்ஷேபிக்கிறவனாகவோ, அதர்மத்தைச் செய்கிறவனாகவோ ஆகிவிடவில்லை. 'ஸந்நியாஸ தர்மம்' என்றுதானே அவன் பின்பற்ற வேண்டியவைகளையே சொல்கிறோம்?

பூர்வ மீமாம்ஸை என்ற கர்ம காண்டம், உத்தர மீமாம்ஸை என்ற ஞான காண்டம் முதலியவைகளைப் பற்றி முன்பே சொன்னேன். இவற்றில் பூர்வ மீமாம்ஸை ஸூத்ரம் "அதாதோ தர்ம ஜிக்ஞாஸா" என்று ஆரம்பிக்கும். "தர்மத்தைப் பற்றிய விசாரணை இனி ஆரம்பிக்கிறது" என்று அர்த்தம். உத்தர மீமாம்ஸா ஸூத்ரம் (பிரம்ம ஸூத்ரம்) 'அதாதோ ப்ரஹ்ம ஜிக்ஞாஸா' - அதாவது 'பிரம்மத்தைப் பற்றிய விசாரணை இனி ஆரம்பிக்கிறது' என்று முதல் ஸூத்ரத்தில் சொல்கிறது. பிரம்மத்தையே விசாரித்து தியானிக்கிற போது தர்மத்தைப் பற்றிய நினைவும் போய்விடுகிறது. கர்மம் உள்ள த்வைதமான

லோகத்துக்குத்தான் தர்மம். அத்வைதமான ஞானத்தில் லோகமில்லாததால் தர்மத்தைப் பற்றிய விசாரணையில்லை. அதனால் அது தர்ம விருத்தமானது [தர்மத்துக்கு முரணானது] என்று அர்த்தமில்லை. அதற்கு மேலே போனது, அதற்கு அதீதமானது என்றே அர்த்தம். கீதையில் பகவான் 'ஸர்வ தர்மான் பரித்யஜ்ய (எல்லா தர்மத்தையும் விட்டுவிட்டு) என்னையே சரணடை' என்று சொல்கிறாரென்றால், 'அதர்மக்காரனாக ஆகி என்னிடம் புகலடை' என்பதாகவா அர்த்தம் பண்ணுவது? 'தர்ம அதர்மங்களை பற்றின விசாரணையை விட்டுவிட்டு, அவற்றுக்கு மேலே எழும்பி, இரண்டுக்கும் மூலமான வஸ்துவிலேயே பிடிப்பை வைத்துக் கொள்' என்றுதான் அர்த்தம். இது உள் அநுபவம். இந்த அநுபவத்தைப் பெற்ற ஞானிகள் வெளியிலே செய்கிற காரியங்கள், தானாகவே தர்ம மயமாகத்தான் இருக்கும். அதானால்தான் மஹாத்மாக்களாக உள்ள ஸந்நியாஸிகள் conscious - ஆக [புத்தி பூர்வமாக] தர்மத்தைப் பண்ண வேண்டும் என்று உத்தேசிக்கா விட்டாலும் அவர்கள் செய்வதெல்லாம் தர்மமாகவே இருப்பது.

மொத்தத்தில் தர்மம் என்பது ஒருவனை எப்போதுமே விடுகிறதில்லை. உயர்ந்த நிலையை அடைகிறபோது இவன் அதைப் பற்றிய எண்ணத்தை விட்டுவிட்டாலும், அது இவனை விடாமல் இவன் காரிய ரூபத்தில் செய்கிறதில் பிரகாசித்துக் கொண்டேதான் இருக்கும்.

தர்ம- அர்த்த-காம-மோக்ஷத்தில் அர்த்தம் (பொருள்) சம்பாதிப்பது தர்மப்படிதான் இருக்க வேண்டும். அப்படியே காமமும் தர்மத்தோடு சேர்ந்தே இருக்க வேண்டும்.

இதைத்தான் காளிதாஸன் 'ரகுவம்ச'த்தில் திலீபனைக் கொண்டாடிச் சொல்கிறபோது, "அப்யர்த்த காமௌ தஸ்யாஸ்தாம் தர்ம ஏவ மநீஷிண:" என்கிறான். "நல்லறிவு பெற்ற அவனுடைய [திலீபனுடைய] அர்த்தம், காமம் இரண்டும்கூட தர்மமாகவே இருந்தன" என்று அர்த்தம்.

அர்த்த-காமங்களை இப்படி தர்மப்படி ஆண்டு அநுபவிக்கிறதே கிருஹஸ்தாச்ரமம் [இல்லறம்] . அதற்கு ஆரம்பம் தான் விவாஹம்.

பிரம்மசாரிக்கும் ஸந்நியாஸிக்கும் அர்த்த (பொருள்) ஸம்பாதனம், காம அநுபோகம் இரண்டும் இல்லை. அந்த இரண்டு ஆசிரமங்களுக்கு நடுவே பாலம் போடுகிற மாதிரி அமைந்துள்ள கிருஹஸ்தாச்ரமத்தில் இந்த இரண்டும் அநுமதிக்கப்பட்டிருக்கின்றன.

உயிர் வாழ்வதற்குப் பொருள் வேணத்தான் வேண்டும். கர்மாப்படி பல உயிர்கள் பிறப்பதற்குக் காமமும் வேணத்தான் வேண்டும். கர்மாவைத் தீர்த்துக் கொள்வதற்காகவே நாமும் அது தீருகிறவரை லோகத்தில் வாழத்தான் வேண்டும். இதே மாதிரி மற்றவர்களுக்கு 'சான்ஸ்' கொடுப்பதற்காக அவர்களுக்கு ஜன்மாவைத் தரவேண்டும் என்றால் பொருள் சேர்க்கவும் காமத்தை அநுபவிக்கும் வேண்டும்தானே? கர்மாவை விட்டு ஸந்நியாஸியானவர்களுக்கும் ஆஹாரம் வேண்டியிருப்பதால் அதைப் போடுவதற்கு கிருஹஸ்தன் இருந்துதானே ஆகவேண்டும்? ஆகவே எப்படிப் பார்த்தாலும் கிருஹஸ்தாச்ரமம் இருக்கத்தான் வேண்டும். லோகத்தில்

எல்லாரும் ஸந்நியாஸியாவது நடக்காத காரியம். ஆகையால் இதிலே தர்மத்தோடு வாழ்ந்து, பிரம்மச்சாரிக்கும் ஸந்நியாஸிக்கும்கூட வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து தருகிற கிருஹஸ்தாச்ரமியைத்தான் சாஸ்திரங்கள் ரொம்பவும் சிறப்பித்து, ஸமூஹத்தின் back-bone என்று கொண்டாடுகின்றன.

பிரம்மச்சரிய ஆசிரமத்தில் படித்து முடித்து, விஷயங்களைத் தெரிந்து கொண்டு, நல்லறிவையும் நற்குணங்களையும் பெற்றபின் தர்மப்படி கர்மாநுஷ்டானம் பண்ணுவதற்காக விவாஹம் செய்து கொள்ள வேண்டும்.

விவாஹத்தை நாற்பது ஸம்ஸ்காரங்களில் ஒன்றாக வைத்திருக்கிறது - அதாவது ஜீவனைப் பரிசுத்தி பண்ணுகிற புண்ணிய கர்மாவாக வைத்திருக்கிறது.

இந்திரியத்தை நெறிப்படுத்தி ஒரே ஒருத்தர் விஷயமாகப் போகும்படி சீராக்கித் தருவது என்பதோடு, ஸகல தர்மங்களையும் நடத்துவதற்கும் ஒரு ஆச்ரமமாக அமைந்த கிருஹஸ்தாச்ரமத்துக்குப் பூர்வாங்கமே விவாஹம் - பிரம்மச்சர்யாச்ரமத்துக்கு உபநயனம் போல.

காம அநுபோகத்தோடு கூட மற்ற லோகக்ஷேமமான தர்மங்களை அநுஷ்டிப்பது என்பது மட்டுமல்லை. காமத்திலேயே தர்மத்தை அநுஷ்டிக்கும்படியாகவும் கிருஹஸ்தாச்ரமத்தை சாஸ்திரம் அமைத்திருக்கிறது. 'தர்மம்' என்பது எதையும் வரையறை மீறாமல் ஒழுங்குபடுத்துவதுதானே? இப்படி இந்திரிய வேகத்தைக் கட்டுப்படுத்தி தாம்பத்தியம் பண்ணுவதுதான்

காமத்திலேயே தர்மத்தை அநுஷ்டிப்பதென்பது. இதனாலேயே படிப்படியாக இந்த வேகம் குறைந்து பக்குவம் உண்டாகிறது. அது பிற்பாடு. அதற்கு முதலில், பலாத்காரமில்லாமல், காமத்தை கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப்படுத்துவது கிருஹஸ்தாச்ரமத்தில். இதற்கு முன்னால் பின்பற்றிய பிரம்மசரிய ஆசிரமத்தின் கடும் நியமங்கள் (strict disciplines) ஒருவனை இப்படிக் கட்டுப்பாட்டில் கொண்டு வருகின்றன. எப்போதும், வேளை போது கவனிக்காமல், பசு வேகத்தில் இவனை அடித்துக் கொண்டு போகாமல் அது காப்பாற்றுகிறது.

பசு வேகம் என்று சொன்னாலும் வாஸ்தவத்தில் பசுக்கள்-மிருகங்கள் - அதற்கான ஒரு பருவத்தில் மட்டும் தான் ஸங்கமம் பண்ணுகின்றன. கர்ப்பம் தரிக்கக்கூடிய ஒரு காலத்தில் மட்டுமே அவற்றுக்கு இந்த வேகம் உண்டாகிறது. 'பசு வேகம்' 'பசு தர்மம்' என்றெல்லாம் அவற்றை வைத்துப் பெயர் சொல்கிற மநுஷ்யன்தான் அவற்றைவிட மட்டமாக இருக்கிறான். இந்த உணர்ச்சி வேகம் ஏற்படுகிற ஆரம்ப காலத்திலேயே இதை மட்டுப்படுத்த பிரம்மச்சரியம் இருக்கிறது. அப்புறம் இவனுக்கு காமத்திலேயே தர்மத்தோடு ஒழுங்காக, வியவஸ்தைக்கு உட்பட்டு இருப்பதற்கு கிருஹஸ்தாச்ரமமும், அதற்கு ஆரம்பமாக விவாஹம் என்ற ஸம்ஸ்காரமும் ஏற்படுகின்றன.

அந்த வேகம் பல பேரிடம் போக விடாமல் ஒருத்தரிடமே போகப் பண்ணுகிற வியவஸ்தையை எல்லா மதங்களுமே விவாஹச் சடங்கினால் செய்திருக்கின்றன.

அதோடு, கூடுதலாக நம்முடைய மத சாஸ்திரம் செய்திருக்கிற வியவஸ்தை என்ன என்றால்: ஸ்திரீ ரிதுவான தினம் முதல் நாலு நாட்களில் ஸங்கமம் செய்யக்கூடாது. அப்புறம் பன்னிரண்டு தினங்கள் மட்டுமே செய்யலாம். அப்புறமும் அடுத்த முறை ரிதுவாகும் வரையில் கூடாது. நடுவே சொன்ன பன்னிரண்டு நாட்களிலும் அமாவாஸ்யை மாதிரியான சில திதிகள், சில நக்ஷத்ரம் முதலியவற்றில் கூடாது. இதையெல்லாம் தள்ளி மிச்ச நாட்களில்தான் கர்ப்பாதானம் செய்யலாம் என்று விதி. இதை அநுஸரித்தால் தம்பதிகளின் தேக-மனோ புஷ்டிகள் என்றைக்கும் குறையாது.

குடும்பக் கட்டுப்பாடும் பெண் தொகைப் பெருக்கமும்

குடும்பக் கட்டுப்பாடும் பெண் தொகைப் பெருக்கமும்

எல்லாவற்றுக்கும் மேலாக, இப்போது குடும்பக் கட்டுப்பாடு என்று அஸங்கியமாகப் பல காரியங்களை தண்டோரா போட்டுக் கொண்டு பண்ணுகிறார்களே, இதற்கு அவசியமே இல்லாமல், தன்னால் இயற்கையாகவே குழந்தைகள் பிறப்பது ரொம்பவும் மட்டுப்படும். முடிந்த மட்டில் சமைத்த ஆஹாரங்களுக்குப் பதில் பழங்களைச் சாப்பிடுவது, சாஸ்திரப்படி நிஷேதனமான [விலக்கப்பட்ட] நாட்களில் பிரம்மச்சரியத்தோடு இருப்பது என்பதாக தம்பதிகள் இருக்க ஆரம்பித்து விட்டால் ஆர்டி.ஃபீஷியலாக [செயற்கை முறைகளில்] குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டிய அவசியமே ஏற்படாது.

இங்கே இன்னொரு விஷயம் சொல்கிறேன். பொதுவாக பாபுலேஷனை குறைக்க வேண்டும் என்கிற

அபிப்ராயத்தோடு இது ஸம்பந்தமில்லை என்று தோன்றினாலும் உண்மையில் ஸம்பந்தம் உள்ளதுதான். வரதட்சிணைப் பிரச்சனைக்கு 'ஸொல்யூஷன்' [தீர்வு] தான் நான் சொல்ல வந்த விஷயம். வரதட்சிணைக்கும் பாபுலேஷனுக்கும் என்ன ஸம்பந்தம்? பாபுலேஷனில் பெண் பிரஜைகளின் விகிதாசாரம் ஜாஸ்தியானதால்தான் வரதட்சிணைப் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. பொருளாதார சாஸ்திரப்படி, குறைச்சலாக உள்ள சரக்குக்குத்தான் கிராக்கி ஜாஸ்தி. இதன்படி, பாபுலேஷனில் புருஷப் பிரஜைகள் குறைவாகி, பெண்கள் அதிகமாக ஆரம்பித்தபோதுதான், பெண்களுக்கு ஸம எண்ணிக்கையில் பிள்ளைகள் இல்லாததால் பெண்ணைப் பெற்றவர்கள் போட்டி போட்டுக் கொண்டு வரதக்ஷிணை கொடுக்கிற பழக்கம் ஏற்பட்டது. இது ஸமீபகால வழக்கந்தான். இது ஏற்பட்ட சந்தர்பத்தை நான் ஆராய்ச்சி பண்ணிப் பார்த்ததில், வெள்ளைக்கார ஆட்சி ஏற்பட்டு பிராம்மணர்கள் குமாஸ்தாக்களாக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு வெறும் பேனாவால் உழுகிற sedantry வேலைகளை ஆரம்பித்த பின்தான் இந்த நிலை உண்டானதாகத் தெரிந்தது. அதாவது உடல் வருந்த இவன் யக்ஞ கர்மாநுஷ்டானம் பண்ணின காலம் போய் உட்கார்ந்து உத்தியோகம் பண்ண ஆரம்பித்த பின்தான் இவனுக்குப் புருஷ பிரஜைகளைவிட அதிகமாகப் பெண் குழந்தைகள் பிறக்க ஆரம்பித்தன. கடைசியில் அதன் விளைவாகப் பிள்ளைகளுக்கு கிராக்கி ஏற்பட்டு வரதட்சிணை என்கிற பெரிய களங்கம் உண்டாகி விட்டது. யக்ஞம் மட்டுமில்லாமல், 'பூர்த்த தர்மம்' என்ற பெயரில் முன் காலங்களில் பிராம்மணன் ஸோஷல் ஸர்வீஸ் செய்த

போது வெட்டுவது, கொத்துவது, உழுவது முதலான காரியங்களிலும் மற்றவர்களோடு ஓரளவு பங்கு எடுத்துக் கொண்டு சரீர சிரமம் நிறையப்பட்ட வரையில் அவனுக்கு ஆண் பிரஜையே அதிகமாகப் பிறந்தது.

இப்படி நான் சொல்வதற்கு பலன் தருவதாக இன்னொன்றும் சொல்கிறேன். முன்பு பிராம்மணர்களிடம் மட்டுமிருந்த வரதட்சிணை வழக்கம் மெதுவாக இப்போது மற்ற சில ஜாதியார்களிடமும் ஏற்பட்டு வருகிறதல்லவா? இவர்கள் யார் என்று பார்த்தால், அநேகமாக இவர்களும் சரீர உழைப்பை விட்டுவிட்டு, உட்கார்ந்து வேலை பார்க்கிற முறைக்குத் திரும்பினவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆனபடியால் இப்போது ஆபீஸ்களில் வேலை செய்கிறவர்களும், லீவ் நாட்களிலாவது குளம் வெட்டுவது, ரோடு போடுவது, கோவிலுக்கு மதில் கட்டுவது முதலான ஸோஷல் சர்வீஸ்களை உடல் வருந்தப் பண்ணினால் ஆண் பிரஜைகள் அதிகம் பிறந்து, முடிவில் வரதட்சிணைப் பழக்கம் தொலையும் என்று நினைக்கிறேன். ஆனால் அது வேறு ஸப்ஜெக்ட்.

இந்திரிய ஸுகத்திலும் வியவஸ்தை வேண்டும் என்பதில் ஆரம்பித்தேன்.

விவாஹமே பெண்டிருக்கு உபநயனம்

விவாஹமே பெண்டிருக்கு உபநயனம்

இதற்குப் பிரம்மச்சரியம் ஒருத்தனைத் தயார் பண்ணுகிறது என்றால் பெண்ணின் கதி என்ன? அவளுக்கு உபநயனமோ, பிரம்மச்சரிய ஆச்ரமமோ இல்லையே! புருஷன் மனசு கட்டுப்பட்டிருக்கிற மாதிரி அவளையும் கட்டுப்பாட்டில் கொண்டு வராமல் இருக்கலாமா? சீர்திருக்காரர்கள் சொல்கிற மாதிரி ஸ்திரீகளுக்கு உபநயனமும் பிரம்மச்சரிய ஆச்ரமமும் இல்லாமல் அநீதிதான் இழைத்திருக்கிறதா என்றால் – இல்லை.

புருஷனுக்கு உபநயன–பிரம்மச்சரியங்களுக்கு அப்புறம் ஏற்படுகிற விவாஹ ஸம்ஸ்காரமேதான் ஒரு பெண்ணுக்கு உபநயன ஸ்தானத்தில் அமைகிறது. அந்தக் குழந்தை பிராயத்திலிருந்து இவளுக்கு வயது வந்து தாம்பத்தியம் ஆரம்பிக்கிற வரையில், குருவிடம் பிரம்மச்சாரி மனஸை அர்ப்பணம் பண்ணின மாதிரி இவள் பதியிடம் பண்ண வேண்டும்.

"ஸ்த்ரீணாம் உபநயன ஸ்தானே விவாஹம் மநுரப்ரவீத்" என்பது மநுஸ்மிருதி.

இதற்கு ஒரு வெளி அடையாளம் காட்டு என்றால் சட்டென்று, 'உபநயனத்திலே ஒரு பையனுக்குப் பூணூல் போடுகிற மாதிரி விவாஹத்திலே பெண்ணுக்கு மங்கள் ஸூத்திரம் கட்டப்படுகிறது' என்று சொல்லிவிடலாம்.

உப–நயனம் என்றால் 'கிட்டே அழைத்துப் போவது', அதாவது 'குருவினடம் அழைத்துப் போய் குருகுல வாஸத்தில் பிரம்மசரியம் அநுஷ்டிக்கும்படிப் பண்ணுவது' என்று அர்த்தம் சொன்னேன். ஸ்திரீகளுக்குப் பதியே குரு.

அவனிடம் கொண்டு சேர்க்கிற விவாஹம்தான் அவளுக்கு உபநயனம்!

அதாவது சாஸ்திரப் பிரகாரம், ஒரு பிள்ளைக்கு உபநயனம் செய்கிற ஏழாவது வயசில் பெண்ணுக்கு விவாஹம் செய்துவிட வேண்டும். காமம் தெரிகிற முன்பே இவள் பதியை குருவாக வரித்துவிடும்படி செய்ய வேண்டும். காமம் தெரியாவிட்டால்தான் இப்படி குருவாக வரிக்கவும் முடியும்! குருவை ஒருத்தன் தெய்வமாகவே மதிக்க வேண்டும் என்பதும் சாஸ்திரம் அல்லவா? அப்படியே இந்தப் பெண் குழந்தை சின்ன வயசில் பதியை குரு-தெய்வமாக பாவித்து ஹ்ருதயத்தை அவனுக்கு ஸமர்ப்பணம் பண்ணிவிட வேண்டும். அந்த இள வயசில்தான் இது ஸாத்தியமும் ஆகும். பிற்பாடு புத்தியால் எதிர்க்கேள்வி கேட்பது, அஹம்பாவத் தடிப்பு எல்லாம் உண்டாகிவிடும்.

ஹ்ருதய-ஸமர்ப்பணம் - சரணாகதி - தான் ஜன்மாவைக் கடைத்தேற்றுகிற பெரிய ஸாதனம். கீதையின் சரம ச்லோகத்தில் சொன்ன இந்த சரணாகதியை தெய்வமோ, குருவோ, பதியோ, யாரிடமோ பண்ணிவிட்டால் போதும். அப்புறம் தனக்கென்று ஒன்றும் இல்லை. நாம் யாரிடம் சரணாகதி பண்ணினோமோ அவர்கள் மூலம் ஈச்வரன் அநுக்ரஹம் பண்ணிவிடுவான்.

இம்மாதிரியாகப் பிள்ளையாகப் பிறந்த ஒருத்தனை குருவிடம் சரணாகதி பண்ணும்படியாக உபநயனத்தையும், அவன் கல்யாணம் செய்துகொள்ளும் போது அந்தக் கல்யாணத்தையே பெண்ணாய்ப் பிறந்தவள் பதியிடம்

சரணாகதி பண்ணும்படியாக விவாஹ ஸம்ஸ்காரத்தையும் ரிஷிகள் ஏற்பாடு செய்து தந்திருக்கிறார்கள்.

அதாவது, பெண்ணை மட்டும் மட்டம் தட்டி அவளைப் புருஷனுக்கு சரணாகதி பண்ணச் சொல்லவில்லை. அந்தப் புருஷனையும் விவாஹத்துக்கு முந்தியே குருவுக்கு சரணாகதி பண்ணச் சொல்லியிருக்கிறது. அவன் எந்த வயசில் இந்த சரணாகதியைச் செய்கிறானோ அந்த வயசில் இவள் அவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு சரணாகதி பண்ணவேண்டும் என்பது சாஸ்திரத்தின் அபிப்ராயம்.

உசத்தி-தாழ்த்தி, உரிமை (right) , ஸ்தானம் (position) முதலான விஷயங்களைவிட சித்த சுத்தியைப் பெரிதாக நினைத்தால் அப்போது சரணாகதிதான் முக்கியமாகிறது. அதற்கு வழியாகத்தான் புருஷனுக்கு உபநயனமும் பெண்ணுக்கு விவாஹமும் விதிக்கப்பட்டிருக்கின்றன என்று புரிந்து கொள்ள வேண்டும்.

விவாஹ வயதும் சட்டமும்

விவாஹ வயதும் சட்டமும்

உபநயனம் மாதிரிப் பெண்ணின் ஏழாவது வயசில் கல்யாணம் பண்ண வேண்டும்; அப்போதுதான் சரணாகதி புத்தி வரும் - என்று சொன்னால், 'இது இந்த காலத்தில் ஸாத்தியமா? சட்ட விரோதமல்லவா?' என்று கேட்பீர்கள்.

'ராஜாங்கத்தின் சட்டத்தை மீறு' என்று சொல்லக் கூடாதுதான். அப்படிச் சொல்லவில்லை. சட்ட மறுப்பு (civil disobedience) என்று இப்போது ஆட்சி நடத்துகிறவர்களே ஒரு காலத்தில் பண்ணிக் காட்டித்தான் இருக்கிறார்கள். 'சட்டம் என்று யாரோ எழுதினதற்காக எங்கள் ஸ்வாதந்தரியத்தை விட மாட்டோம்' என்று அப்போது சொன்னார்கள். அதே மாதிரி, "ஜெயிலில் போட்டாலும் பரவாயில்லை; பிராணன் போனாலும் பரவாயில்லை; ஆத்ம க்ஷேமத்துக்காக ஏற்பட்ட விவாஹ ஸம்ஸ்காரத்தை வெறும் லௌகிக விஷயமாக்கிச் சட்டம் பண்ணினால் ஏற்கமுடியாது" என்று கிளம்புகிற வேகம் நம் ஜனங்களுக்கு இல்லை. அப்படி இல்லையே என்பது மட்டும் நான் 'சட்டத்தை மீற வேண்டாம்' என்று சொல்வதற்குக் காரணமில்லை. ஒரு விஷயத்தில் மீறினால், மற்றவற்றிலும் மீறுகிற எண்ணம் உண்டாகி, கட்டுப்பாடே போய்விடும். அதனால்தான் [சட்டத்தை மீறும்படிச்] சொல்லவில்லை. ஆனாலும் சட்டத்தை மீறாமலே ராஜாங்கத்துக்கு சாஸ்திர அபிப்ராயத்தை விடாமல் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். ராஜாங்கத்துக்கு மட்டுமில்லை; ஜனங்களிலும் நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு மேல் சாஸ்திர அபிப்ராயத்தை விட்டு விட்டார்களே! அவர்களுக்கும் பாக்கியிருக்கிற ஸ்வல்ப சாஸ்திரக்ஞர்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும். சட்டத்தை மீறாமலே, முன்னேற்றம் எத்தனை நிதானமாக ஏற்பட்டாலும் அதனால் மனம் தளராமல் நூறு வருஷம் ஆனாலும் ஆகட்டும்! இன்னம் அதிகமானாலும் ஆகட்டும்! உன்னதமான இந்த தேசாதாரம் மறுபடி பழக்கத்தில் வரப் பண்ணுவதற்கு நம்மாலானதை சாந்தமான வழியிலேயே

செய்வோம் என்று செய்ய வேண்டும். பலனை பார்க்க நாம் [உயிரோடு] இருக்க வேண்டும் என்பதில்லை. ஆயிரம் வருஷத்துக்கு அப்புறம்தான் பலன் உண்டாகும் என்றாலும், அதற்கு இப்போதே நம்மாலான விதையைப் போட்டுவிட வேண்டும். யத்தனத்தை இப்போது ஆரம்பித்தால்தான், என்றைக்கோ ஒரு நாளாவது பலன் கிடைக்கும். பிரயத்தனமே இல்லாவிட்டால் என்றைக்கும் பலன் ஏற்பட முடியாதல்லவா? விதையே போடாவிட்டால் எப்படி மரம் உண்டாகும்?

தர்மசாஸ்திரமே பெரிய சட்டம் என்று ராஜாங்கத்தாருக்கும், பொதுஜனங்களுக்கும் புரியும்படியாக, ஹிதமான முறையில் (by persuasion) வற்புறுத்திக் கொண்டேயிருக்க வேண்டும்.

விவாஹ வயது குறித்த விவாதம்

விவாஹ வயது குறித்த விவாதம்

'பால்ய விவாஹம் கூடாது; பெண்கள் ரிதுவான பின்தான் கல்யாணம் பண்ணவேண்டும்' என்று இந்த நூற்றாண்டு ஆரம்பத்திலேயே நம் மதஸ்தர்களில் ரொம்பவும் செல்வாக்காக இருந்தவர்கள் வாதம் செய்து மகாநாடுகள் நடத்தி resolutions [தீர்மானங்கள்] போட்டிருக்கிறார்கள். இவர்கள் வேதத்தில் நம்பிக்கையில்லாதவர்கள் அல்ல. மாறாக தாங்கள் சொல்வதுதான் வேத ஸம்மதமான விவாஹம், பால்ய விவாஹம் என்பது வேத ஸம்மதமானதில்லை என்று இவர்கள் சொன்னார்கள்.

எம். ரங்காச்சாரியார், சிவஸ்வாமி அய்யர், ஸுந்தரமய்யர், கிருஷ்ணஸ்வாமி அய்யர் மாதிரியான பெரிய புள்ளிகள் இவர்களில் இருந்தார்கள். அப்புறம் ரைட் ஆனரபிள் [வி.எஸ். ஸ்ரீநிவாஸ] சாஸ்திரி இந்த விஷயத்தில் விசேஷமாக வாதம் பண்ணினார்.

நல்ல சாஸ்திர பாண்டித்தியம் பெற்றிருந்தவர்களிலேயே வைஷ்ணவர்கள் காஞ்சிபுரத்திலும், ஸ்மார்த்தர்கள் திருவையாற்றிலும் இரண்டு ஸபைகள் நடத்தி, வேதப் பிரகாரம் பூர்வத்தில் விவாஹ வயசு உயர்வாகத்தான் இருந்தது, ரிதுமதி விவாஹந்தான் நடந்திருக்கிறது என்று அபிப்ராயம் சொன்னார்கள்.

அப்புறம் ஏன் இப்படி பால்ய விவாஹம் வந்தது என்பதற்கும் ஒரு காரணம் சொன்னார்கள். அதாவது: துருக்கர்கள் இந்த தேசத்துக்கு வந்த புதிதில் ஹிந்து மதத்தைச் சேர்ந்த கன்யாப் பெண்களைத் தூக்கிக் கொண்டு போய் பலாத்காரம் பண்ணுவது அதிகமாயிருந்ததாம். ஆனால் ஒருத்தன் 'தொட்ட'தை (பொட்டுக் கட்டினதை) அவர்கள் பலாத்காரம் பண்ணமாட்டார்களாம். அதனாலேயே பெண்கள் குழந்தைகளாக இருக்கும்போதே கல்யாணம் பண்ணிவிடுகிற புது வழக்கத்தை ஆரம்பித்தார்களாம். இப்படி இந்தக் கல்யாணச் சீர்திருத்தக்காரர்கள் சொல்லி, 'இப்போது நாம் மறுபடி வேதத்தில் இருந்த பிரகாரமே மாற்ற வேண்டும். Pre-puberty marriage [வயசு வரும் முன் கலியாணம்] என்ற அநாகரிகத்தைத் தொலைந்து விடவேண்டு" என்று வாதம் செய்தார்கள்.

தாங்கள் சொல்வது வாஸ்தவத்தில் சாஸ்திரோக்தமானது என்பதற்கு ஆதரவாக இவர்கள் குறிப்பாக இரண்டு சான்றுகளை காட்டினார்கள். ஒன்று விவாஹ சடங்கிலேயே வருகிற சில வேத மந்திரங்கள். மற்றது நம்முடைய தர்ம சாஸ்திரங்களிலெல்லாம் மிகச் சிறந்ததாக கருதப்படும் மநுஸ்மிருதி.

விவாஹப் பிரயோக மந்திரமான வேத வாக்கியத்தில்* என்ன சொல்லியிருக்கிறது?

இதைச் சொல்லுமுன் இன்னொரு விஷயம் சொல்ல வேண்டும்.

நம் ஒவ்வொரு தேகத்திலும் அங்கங்களுக்குள்ளே அவை ஒவ்வொன்றுக்கும் அதி தேவதையாக ஒரு தேவன் இருக்கிறான். கண்ணில் ஸூரியன், கையில் இந்திரன் என்றிப்படி நமக்குள் ஆத்யாத்மிகமாக தேவ சக்திகள் இருக்கின்றன. இது தவிர ஒவ்வொரு வயோவஸ்தையிலும் (வயசுக்கட்டத்திலும்) ஒவ்வொரு தேவதைக்கும் நம் மேல் ஆதிக்கம் இருக்கிறது. இவ்விதத்திலே ஒரு பெண்ணானவள் பிறந்ததிலிருந்து வஸ்திரம் கட்டிக் கொள்ளத் தெரிகிற வரையில் 'ஸோமன்' என்ற தேவதையின் ஆதீனத்தில் இருக்கிறாள். (புருஷர்கள் கட்டிக் கொள்ளும் வேஷ்டிக்கே 'சோமன்' என்று பேர் இருக்கிறது!) அதற்கப்புறம் ரிதுவாகும் வரையில் அவள் கந்தர்வனின் ஆதீனத்தில் இருக்கிறாள். வயசு வந்ததிலிருந்து மூன்று வருஷம் அக்னியின் ஆதிக்கத்தில் இருக்கிறாள். ஸோமன் என்றால் சந்திரன். ஸோமன் ஒரு பெண்ணை ஸ்வீகரித்துக் கொண்டிருக்கிற குழந்தைப்

பிராயத்தில் அதனிடம் நிலா மாதிரியான குளிர்ச்சி இருக்கிறது. அப்புறம் கந்தர்வன் என்ற உல்லாஸ ஜீவியான, நல்ல ஸுந்தரமான தேவதையிடம் இருக்கிற சிறுமிக்கு லாவண்யம் விசேஷமாக இருக்கிறது. பிறகு அக்னியின் அதிகார காலம் உண்டான போது காமாக்னியை ஏற்படுத்தும் சக்தி உண்டாகிறது. மூன்று தேவதைகளுடைய அதிகாரத்துக்கு இப்படி லௌகிகமாக அர்த்தம் பண்ணுவதுண்டு. இது இருக்கட்டும்.

சீர்திருத்தக்காரர்கள் சான்று காட்டும் வேத மந்திரங்களின் அர்த்தம் என்ன? வரன் எனப்படும் கல்யாணப்பிள்ளை வது எனப்படும் கல்யாணப் பெண்ணைப் பார்த்து சொல்லும் இந்த வேத வாக்கியங்களுக்கு அர்த்தம் என்ன என்றால், "முதலில் ஸோமன் உன்னை அடைந்தான்; இரண்டாவதாக கந்தர்வன் அடைந்தான்; மூன்றாவதாக அக்னி உனக்கு அதிபதி ஆனான். மநுஷ்ய வர்க்கத்தைச் சேர்ந்த நான் நான்காமவனாக உன்னை ஆளுவதற்கு வந்திருக்கிறேன். உன்னை ஸோமன் கந்தர்வனிடம் கொடுத்தான்; அக்னி என்னிடம் இப்போது கொடுத்திருக்கிறான்" என்று அர்த்தம்.

விவாஹத்தின் போதே சொல்லப்படுகிற மந்திரத்தில் இப்படி வருவதால் கல்யாணப் பெண்ணானவள் ரிதுமதியாகி அக்னியின் ஆதினத்தில் மூன்று வருஷம் இருந்த பிறகுதான் அவளை ஒருத்தன் கல்யாணம் பண்ணிக் கொள்கிறான் என்றுதானே அர்த்தம் ஆகிறது?

இதைச் சொல்லித்தான் சீர்திருத்தக்காரர்கள், "நாங்கள் ஒன்றும் சாஸ்திர விரோதமான reform (சீர்திருத்தம்) கொண்டு வரவில்லை. ஆதியிலிருந்த சாஸ்திரத்துக்கு

விரோதமாகத் துருக்க ராஜ்யத்தில் ஏற்பட்ட வழக்கத்தை மாற்றிப் பழையபடி சாஸ்திரோக்தமாகப் பண்ண வேண்டும் என்றுதான் சொல்கிறோம். வேத வாக்கியத்தைவிட பெரிய பிரமாணம் இருப்பதாக எந்த ஸநாதனியும் சொல்ல முடியாதே! அதைத்தான் நாங்கள் 'அதாரிடி'யாகக் காட்டுகிறோம் என்று சொன்னார்கள்.

இதோடு மநுஸ்மிருதியிலிருந்து இவர்கள் ஒன்றை மேற்கோள் காட்டினார்கள்.

த்ரீணி வர்ஷாண்யுதீக்ஷேத குமாரீ ரிதுமதி ஸதீ ।

ஊர்த்வம் து காலாத் ஏதஸ்மாத் விந்தேத ஸத்ருசம் பதிம்॥

இதற்கு அர்த்தம், "வயசுக்கு வந்த பெண் அதற்கப்புறம் மூன்று வருஷம் வரன் தேடி வருகிறானா என்று காத்திருந்து பார்க்கவேண்டும். வராவிட்டால் அதன்பின் அவளே பதியைத் தேடிக் கொள்ளலாம்" என்பது. இங்கே post-puberty marriage (ரிதுமதி ஆனபின்பே விவாஹம்) என்றுதானே தெரிகிறது? அது மட்டுமில்லை. "பெரியவர்கள் பார்த்துத்தான் பண்ணி வைக்க வேண்டும் என்றுகூட இல்லாமல் ஒரு பெண் தானே ஸ்வயேச்சையாக புருஷனைத் தேடிக்கொள்கிறதை அநுமதிக்கிற அளவுக்கு அவ்வளவு 'மாடர்னாக' மநுதர்மம் இருக்கிறது. நடுவாந்திரத்தில் வந்த வைதிகக் குடுக்கைகளும், மடிஸஞ்சிகளுந்தான் எல்லாவற்றையும் மாற்றிக் காட்டுமிராண்டித்தனமாகச் செய்துவிட்டார்கள்" என்று சீர்திருத்தக்காரர்கள் சொன்னார்கள்.

"வேத மந்திரங்கள், தர்ம சாஸ்திர ச்லோகம் இவற்றின் அர்த்தத்தைப் பார்த்தால் அவர்கள் சொல்வது சரிதானே? இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள், ஸ்வாமிகளே!" என்று கேட்டால், பதில் சொல்கிறேன்.

*ஸோம: ப்ரதமோ விவிதே கந்தர்வோ விவித உத்தர:|
த்ருதியோ அக்னிஷ்டே பதி: துரியஸ்தே மநுஷ்யஜா:||
ஸோமோ ததத் கந்தர்வாய கந்தர்வோ ததத் அக்னயே|
ரயிம் ச புத்ராம் சாதாத் அக்னிர் மஹ்யம் அதோ இமாம்||

[ரிக் X.85.40-41]

எட்டு வித விவாஹங்கள்

எட்டு வித விவாஹங்கள்

மநுஸ்மிருதி உட்பட்ட தர்ம சாஸ்திரங்களில் எட்டு விதமான விவாஹங்கள் சொல்லியிருக்கிறது.

ப்ரஹ்மோ-தைவ-ஸ்ததைவார்ஷ:
ப்ரஜாபத்ய-ஸ்ததாஸுர:|
காந்தர்வோ ராக்ஷஸச்சைவ
பைசாசாஷ்டம: ஸ்ம்ருத: - (மநுஸ்மிருதி III.21)

அதாவது பிராம்மம், தைவம், ஆர்ஷம், பிரஜாபத்தியம், ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம் என்று கல்யாணத்தில் எட்டு தினுசு.

'பிராம்மம்' என்பது குருகுலவாஸம் முடித்து வந்த உத்தம பிரம்மசாரிக்காக அவனுடைய மாதா-பிதாக்கள் ஒரு நல்ல குலத்துப் பெண்ணின் மாதா பிதாக்களிடம் வந்து

கன்யாதானம் பண்ணித் தரச்சொல்லிக் கேட்டுக்கொள்வது. பிள்ளைக்குப் பெண் வீட்டார் வரதக்ஷிணை தருவது, பெண்ணுக்குப் பிள்ளை வீட்டார் பரிசம் தருவது என்று இரண்டும் இதில் இல்லை. வியாபாரக் கொடுக்கல் வாங்கலாக இல்லாமல் இரண்டு குலங்கள் அபிவிருத்தியாக வேண்டும் என்ற உயர்ந்த லக்ஷ்யம் ஒன்றிலேயே பண்ணப்படுவது பிராம்ம விவாஹம். தர்ம சாஸ்திரங்கள் எட்டு வித விவாஹங்களில் இதைத்தான் மிகவும் சிரேஷ்டமாகச் சொல்லியிருக்கின்றன.

'தைவம்' என்பது ஒரு யாகத்திலேயே அதைப் பண்ணுகிற ரித்விக்குக்குப் பெண்ணைக் கல்யாணம் செய்து தருவது[1]. உரிய காலத்தில் பெண்ணைத் தேடி வரன் வராததால், பெண் வீட்டுக்காரர்கள் அவனைத் தேடிப் போய் யாகசாலையிலே மாப்பிள்ளை பிடிப்பதென்பது, பிராம்ம விவாஹத்தை விடத் தாழ்த்தி என்பதே அபிப்ராயம். பெண்ணைப் பிள்ளை வீட்டுக்காரன் தேடிவருவதுதான் சிலாக்கியமான விவாஹம் என்பதாக ஸ்திரீகுலத்தை சாஸ்திரம் உயர்த்தி வைத்திருக்கிறது.

மூன்றாவதான ஆர்ஷ விவாஹம் என்பது ரிஷி ஸம்பந்தமானது என்று பொருள் படுவது; சியவன ரிஷிக்கு ஸுகன்யாவைக் கல்யாணம் செய்து கொடுத்த மாதிரி இருக்கும் என்று 'ஆர்ஷ' என்றே வார்த்தையைப் பார்த்தால் தோன்றுகிறது. ஆனால் தர்ம சாஸ்திரப்படி, வரனிடமிருந்து இரண்டு பசுக்களை வாங்கிக்கொண்டு பெண்ணை பதிலுக்குத் தருவது 'ஆர்ஷம்' என்று தெரிகிறது[2]. ஆர்ஷம் என்றால் ரிஷிக்குக் கொடுப்பது என்று அர்த்தம் செய்துகொண்டால், இதுவும் உரிய காலத்தில் பிராம்ம

விவாஹம் ஆகாத கன்னிகையை ஒரு வயசான ரிஷிக்காவது சுசுருசுக்ஷை செய்யும் பொருட்டுப் பத்தினியாக கொடுப்பது என்று ஆகும். வரனிடமிருந்து கோ வாங்கிக் கொண்டு கல்யாணம் செய்வது என்கிற போதும், அவனிடம் விசேஷமான சீலங்கள் இல்லாததால்தான் பசுவைக் கொடுத்துப் பெண் கேட்கிறான் என்றும், இந்தப் பெண் வீட்டுக்காரனுக்கும் பிராம்ம விவாஹப்படியான நல்ல ஸம்பந்தம் கிடைக்காததால்தான் திரவியத்தை வாங்கிக் கொண்டு பிரதியாகப் பெண்ணைக் கொடுக்கிறான் என்றும் ஏற்படுகிறது. உத்தமமான விவாஹத்தில் பண சம்பந்தமே, பிஸினஸ் அம்சமே கூடாது என்பது சாஸ்திர தாத்பரியம்.

நாலாவது பிராஜாபத்தியம். பிரஜாபத்தியம் பிஸினஸ் கொடுக்கல் வாங்கலாக இல்லாமல் ஒரு பிரம்மச்சாரிக்கு கன்யாதானம் பண்ணித் தருகிற விவாஹ முறைதான். ஆனால், பிராஜாபத்தியம் என்கிற பெயரில் பிரஜையை உண்டு பண்ணுவது என்ற நோக்கம் அவஸரமாகத் தெரிவதால், தன் குமாரி சீக்கிரமே ரிதுவாகிவிட இருக்கிறாள் என்பதால் அவளுக்குக் கல்யாணம் பண்ணித்தர அவளுடைய தகப்பனார் அவஸரப்பட்டு வரனைத் தேடிக் கொண்டு தாமே போகிறார் என்று ஏற்படுகிறது. அதாவது, பிராம்மம் மாதிரி இல்லாமல் இங்கே பெண் வீட்டுக்காரர்களே பிள்ளையைத் தேடிக்கொண்டு போய்க் கல்யாணம் செய்து தருகிறார்கள். இது இரண்டாம் பக்ஷந்தான். கிருஹலக்ஷ்மியாக இருக்க வேண்டியவனை வரனின் கிருஹத்தார் தேடிவந்து,

கேட்டுப் பண்ணிக் கொள்கிற பிராம்மம்தான் இதைவிட உசத்தி.

'ஆஸுரம்' என்றால் 'அஸுரத்தனமான' அர்த்தம். ஒரு பெண்ணுக்குப் பொருத்தமில்லாத (மாட்ச் ஆகாத) ஒரு வரனானவன் நிறையப் பணத்தை அவளுடைய தகப்பனாருக்கோ பந்துக்களுக்கோ கொடுத்து, அவர்களை அதனால் வசப்படுத்திக் கட்டாயப்படுத்தி அவளைக் கொடுக்கும்படிப் பண்ணுவதுதான் ஆஸுரம்3. ஆர்ஷப்படி கோவைக் கொடுத்துப் பெண் வாங்கினவன் வலுக்கட்டாயப் படுத்துபவனில்லை. ஆஸுரக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறவனைப் போல் அவனைப் பணமோ, அதிகாரமோ கொழுத்தவன் என்றும் சொல்ல முடியாது. ஆஸுரம் (அசுர சம்பந்தமானது) என்ற வார்த்தையே ஆர்ஷம் (ரிஷி சம்பந்தமானது) என்ற வார்த்தைக்கு விரோதமாகத்தானே இருக்கிறது? அநேக பணக்காரர்கள் இரண்டாதாரம் கல்யாணம் செய்து கொண்டது ஆஸுரம்தான்.

அடுத்ததான காந்தர்வ விவாஹம் என்றவுடன் சகுந்தலைக்கும் துஷ்யந்தனுக்கும் நடந்தது என்று உங்களுக்கு நினைவு வரும். இந்தக் காலத்தில் 'ஒஹோ' என்று கொண்டாடும் காதல் கல்யாணம் இதுதான்.

'ராக்ஷஸம்' பெண் வீட்டுக்காரர்களோடு யுத்தம் செய்து ஜயித்துப் பெண்ணை எடுத்து கொண்டு போய்க் கலியாணம் பண்ணிக் கொள்வது. கிருஷ்ண பரமாத்மா ருக்மணியை இப்படித்தான் விவாஹம் செய்து கொண்டார்.

கடைசி, எட்டாவது தினுசு விவாஹம், பைசாசம், அசுரத்தனமானது, ராக்ஷஸத்தனமானது, இவற்றுக்கெல்லாம் முடிவிலே பிசாசுத்தனமான பைசாசத்தைச் சொல்லியிருக்கிறது. ஆஸுரத்தில் பெண்ணின் ஸம்மதத்தை எதிர்பார்க்காவிட்டாலும், அவளுடைய மநுஷ்யர்களுக்காவது பணத்தைக் கொடுத்தான். ராக்ஷஸத்தில் அவளுடைய மநுஷ்யர்களை ஹிம்ஸித்த போதிலும் அவளுடைய இஷ்டத்தை மீறிக் கல்யாணம் செய்து கொள்ளமாட்டான். ருக்மிணி கிருஷ்ணரிடம் ஆசை வைத்துத் தானே இருந்தாள்? பைசாசத்திலோ பெண்ணுடைய இஷ்டத்தையும் பார்ப்பதில்லை. அவளுடைய பெற்றோர்களுக்கும் திரவியம் தருவதில்லை. பெண் வீட்டுக்காரர்களைப் பகைத்துக் கொண்டு, கல்யாணப் பெண்ணையும் பலவந்தப்படுத்தி விவாஹம் பண்ணிக் கொள்வதைத்தான் பைசாசம் என்று வைத்திருக்கிறது.

ஒரு பக்கம் பைசாசம், இன்னொரு பக்கம் பிராம்மம். பிராம்மம் என்பது தைவத்தைவிட உயர்ந்தது. ஆனாலும் லோகத்தில் எல்லாருக்கும் ஒரே மாதிரி வியவஸ்தை செய்துவிடக்கூடாது. இதை உணர்ந்து அதிகாரி பேதம் சொல்லியிருப்பதுதான் நம் சாஸ்திரத்தின் பெருமை. இதை உணராத இக்காலத்திய அபேத வாதங்களால்தான் எல்லா அனர்த்தங்களும் வந்திருக்கின்றன.

காட்டுக் கட்டைகளாக, கொடூரமான பழக்க வழக்கங்களோடு உள்ள வனவாஸிகளும் இருக்கிறார்கள். உள்ளூர அவர்களிடம் நாகரிகவாஸிகளைவிட உயர் பண்புகள் இருக்கும். இவர்களாலும் சமூகத்துக்கு அநேகப் பிரயோஜனம் இருக்கும். ஆனால் இவர்களுக்குள்

எப்போதும் தங்களுக்குள்ளே சண்டை சச்சரவு, family feud நிறைய இருப்பதுண்டு. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் இவர்களுக்கு ராக்ஷஸ, பைசாச விவாஹங்களைக் கூட அநுமதித்தாக வேண்டியிருக்கிறது. விவாஹத்துக்கு பிற்பாடு தன்னால் சண்டையெல்லாம் போய் ஸௌஜன்யமாகி விடுவார்கள். இதே மாதிரி சரீர புஷ்டி, பௌதிகமான ஸந்தோஷங்கள் முதலியவற்றை விசேஷமாகக் கொண்ட க்ஷத்ரியர் போன்றவர்களுக்கு காந்தர்வமும் அநுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெண்கள் தாங்களாகவே விவரமறிந்து புருஷனைத் தேடி மாலையிடுகிற 'ஸ்வயம்வர' உரிமையைக் கூடப் பெற்றிருக்கிறார்கள்.

இதனால்தான் வேதத்தை அடியொற்றிய Hindu Law -ஆன தர்மசாஸ்திரங்களில் எட்டு விதமான விவாஹங்களையும் அநுமதித்திருக்கிறது. மந்திர பூர்வமாக விவாஹம் செய்து கொள்வதற்கு இந்த எட்டு விதமான வதூவரர்களுக்கும் 'ரைட்' கொடுத்திருக்கிறது.

இவற்றிலே பிராம்ம விவாஹம் தான் சிரேஷ்டமானது. அது பெண்ணானவள் ரிதுவாவதற்கு முன்பே செய்யப்பட வேண்டியது. "ப்ரதானம் ப்ராக் ரிதோ:" என்று தர்ம ஸூத்திரத்திலேயே இருக்கிறது. பையனின் உபநயன ஸ்தானத்தில் பெண்ணுக்கு ஏழாவது வயசில் (கர்ப்பத்தைக் கூட்டி எட்டாவது வயசில்) செய்ய வேண்டிய விவாஹம் அது.

துரதிருஷ்டவசமாகச் சில பெண்களுக்குப் பிள்ளையாகத் தேடி வந்து செய்துகொள்ளும் பிராம்ம விவாஹம்

நடக்காதபோது வயசு ஏறிவிடுகிறது. பிறகு தைவமாகவோ, ஆர்ஷமாகவோ, பிராஜாபத்யமாகவோ நடக்கிறது. இவை மட்டுமே பிராம்மணருக்கு ஏற்பட்டவை. இதரர்களுக்கு இவற்றோடு வேறு விதமான கல்யாணங்களும் – வயசு வந்த பெண்ணே ஸ்வயம்வரமாகத் தேர்ந்தடுப்பது, அல்லது காந்தர்வமாகச் செய்து கொள்வது உள்பட – அநுமதிக்கப் பட்டிருக்கிறன்றன.

கல்யாண மந்திரங்களில் பல எட்டு வகையாரையும் உத்தேசித்தவை. அவை எல்லாருக்கும் பொதுவாக இருக்கப்பட்டவை. அதாவது ரிதுமதியான பெண்ணை விவாஹம் செய்து கொடுப்பதற்கும் உரியனவான மந்திரங்கள் விவாஹ பிரயோகத்தில் வருகின்றன.

இம் மாதிரி அனைவருக்கும் பொதுவாக இருக்கிற மந்திரங்களில்தான் முன்னே சொன்ன இரண்டும் இருக்கின்றன. ஸோமன், கந்தர்வன், அக்னி ஆகியோரின் ஆதீனத்திலிருந்து தன்னை வந்தடைந்த ரிதுமதியான வதூவைப் பற்றி வரன் சொல்கிற அந்த மந்திரங்கள், பிராம்மமாக மட்டுமின்றி மற்ற எல்லா விதமான விவாஹங்களையும் உத்தேசித்துச் சொல்லப்பட்டவையே ஆகும்.

அதையே பால்ய விவாஹம் செய்துகொள்ளும் வரனும் சொல்கிறான். இப்போது குழந்தையாயிருப்பவளை இவன் பாணிக்கிரஹணம் செய்து கொண்டாலும், பிற்பாடு அவள் யுவதியாக ஆன பிறகுதானே இவன் தாம்பத்தியம் நடத்தப் போகிறான்? அப்போது ஸோமன்–கந்தர்வன்–அக்னி ஆகிய மூவரின் ஆதிக்கத்திலிருந்தும் தனக்குக்

கொடுக்கப்பட்டவளாகதானே அவளை இவன் அடையப் போகிறான்? அதனால் அப்போது சொல்ல வேண்டிய மந்திரத்தை முன்கூட்டியே (in advance) இப்போது விவாஹத்தில் சொல்லி விடுகிறான்.

நாம் இக்காலத்தில் பிள்ளை பிறந்தவுடன் செய்ய வேண்டிய ஜாதகர்மா, நாம கர்மா, சௌளம் முதலியவற்றை யெல்லாம் சேர்த்து வைத்து அவனுடைய விவாஹத்துக்கு முன் இருபது, இருபத்தி இரண்டு வயசில் பூணூல் போடும் போது காலம் தள்ளிச் சொல்லுகிறோமல்லவா? இப்படிப் பின்னால் காலம் தள்ளுவதற்குப் பதில், முன்பாகவே (அட்வான்ஸாகவே) பிராம்ம விவாஹக்காரன் இந்த மந்திரங்களைச் சொல்லி விடுகிறான்.

இதற்கு ஒரு example (உதாரணம்) சொல்கிறேன். பிரம்மச்சாரி செய்கிற ஸமிதாதானத்தில் தனக்கு நல்ல பிரஜை ஏற்படவேண்டும் என்பதும் அநேக வேண்டுதல்களில் ஒன்றாக வருகிறது. இதைப் பார்த்து நம் சீர்திருத்தக்காரர்கள், "பிரம்மச்சாரியாக இருக்கும்போதே தகப்பனாராகிவிட்டு அப்புறம்தான் விவாஹம் பண்ணிக் கொண்டு கிருஹஸ்தனாக வேண்டும் என்பதே வேதத்தின் அபிப்ராயம்" என்று சொன்னால் எத்தனை அஸம்பாவிதமாக இருக்கும்? பிற்பாடு என்றைக்கோ உண்டாக வேண்டியதற்கு இப்போதே ஒரு பிரம்மச்சாரி பிராத்தனை பண்ணுகிறான் என்பதுதானே சரியான அர்த்தம்? அப்படித்தான் விவாஹ விஷயமாகச் சீர்த்திருத்தக்காரர் காட்டும் வேத வாக்கியமும்.

இந்த மந்திரங்கள் பெண்ணுக்கு வயசு வந்த பின் நடக்கிற மற்ற விதக் கல்யாணங்களிலோ விவாஹ ஸந்தர்ப்பத்திலேயோ யதார்த்தமாகச் சொல்வதற்குப் பொருத்தமாக இருக்கின்றன.

இதுதான் ரைட் ஆனரபிள் சாஸ்திரி கட்சிக்கு நாம் சொல்கிற பதில். பெண்ணுக்கு வயசு வந்த பின்னும் செய்யப்படும் சில வகைக் கல்யாணங்களை அங்கீகரித்து மேற்படி மந்திரங்கள் விவாஹத்தில் சேர்க்கப்பட்டிருப்பதால், எல்லா விவாஹமும் வயசு வந்த பின்தான் செய்ய வேண்டும் என்று அர்த்தம் ஆகாது என்று சொல்கிறோம்.

விவாஹங்களில் மிக உத்தமமானதாக சாஸ்திரங்களில் சொல்லப்படும் 'பிராம்மம்' என்பதன்படி, கல்யாணப் பெண் ரிதுவாகாதவளே என்பதற்கு அழுத்தமான சான்றாகவும் விவாஹச் சடங்கின் கடைசியில் ஒரு வேத மந்திரமே இருக்கிறது[4].

வஸ்திரம் கட்டிக் கொள்ளத் தெரிந்த பின் ரிதுவாகும் வரையுள்ள இடைக்காலத்தில் ஒரு பெண் குழந்தை கந்தர்வனின் ஆதிக்கத்தில் இருக்கிறாள் என்று சொன்னேனல்லவா? அந்த கந்தர்வனின் பெயர் விச்வாவஸு. இந்த விச்வாவஸுவைப் பார்த்து கல்யாணப் பிள்ளை சொல்கிற மந்திரம் தான் நான் இங்கே குறிப்பிடுவது. "ஏ விச்வாவஸுவே! உன்னை நமஸ்காரம் பண்ணுகிறேன். நீ இந்தப் பெண்ணை விட்டு எழுந்திருந்து போ. வேறொரு பெண் குழந்தையிடம் போய்ச் சேரு. இவளுக்கு நான் பதியாகி விட்டேன் அல்லவா? அதனால்

என்னிடம் இவளைக் கொடுத்து விட்டு நீ, தகப்பனாரின் வீட்டில் இருப்பவளும் விவாஹம் ஆகாதவளுமான இன்னொரு பெண்ணைச் சென்றடைவாயாக" என்று இங்கே கல்யாணப்பிள்ளை வேண்டிக் கொள்கிறான்.

வரனானவன் விவாஹத்தின் போது கல்யாணப் பெண்ணை விட்டுப் போகுமாறு கந்தர்வ பூஜை பண்ணி அந்த கந்தர்வனிடம் பிரார்த்திக்கிறான் என்பதிலிருந்து அவள் இன்னம் அக்னியின் ஆதிக்கத்தின் கீழே வரவில்லை, கந்தர்வனின் ஆதிக்கத்தில் இருக்கிறாள், அதாவது வயசுக்கு வரவில்லை என்றுதானே தீர்மானமாக முடிவாகிறது?

"எல்லாம் சரி. ஆனால் மநுஸ்மிருதியிலிருந்து சீர்திருத்தக்காரர்கள் quote செய்தார்களே! ரிதுவாகி மூன்று வருஷம் வரனை எதிர்பார்த்துவிட்டு, அப்புறம் ஒரு பெண் தானே புருஷனைத் தேடிக் கொள்ளலாம் என்று அந்த ச்லோகம் சொல்கிறதே! அதற்கென்ன ஸமாதானம்?"

ஸமாதானம் இருக்கிறது. "வயசுக்கு வருமுன் கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிட வேண்டும்" (ப்ரதானம் ப்ராக்ரிதோ:) என்பதே தர்மசாஸ்திரத்தின் பொது விதி. அந்த விதி தப்பிப் போகிற கேஸ்களில் என்ன செய்வது? ஒரு பெண்ணை வரனாகத் தேடி வராவிட்டால் அவளுடைய பிதாவோ, பிராதாவோதான் பிள்ளை பார்த்து கல்யாணம் பண்ணித் தரவேண்டும். ஆனால் இப்படிச் செய்யாமல் அவர்கள் பாட்டுக்கு பொறுப்பில்லாமலிருந்தால்? அல்லது ஒரு பெண் நாதியில்லாமல், கார்டியன் இல்லாமல் இருந்தால்? அப்படிப்பட்டவளைப் பற்றித்தான் ரிதுவானதற்கு மூன்று வருஷத்திற்கு பின் தானே புருஷனைத் தேடலாம் என்று மநுஸ்மிருதியில் சொல்லியிருக்கிறது. அதாவது, நாதியே இல்லாதவளுங்கூட, வயசுக்கு வந்தபின் உடனே தானாக புருஷனுக்காகப் புறப்படாமல், யாராவது பந்து மித்ரர்களோ, அண்டை

அசலாரோ, அபிமானமுள்ளவர்களோ தனக்காக மாப்பிள்ளை தேட மாட்டார்களா என்று பொறுத்திருந்து பார்த்துவிட்டு, அப்புறம்தான் தானாகவே தேடலாம் என்று சொல்லியிருக்கிறது.

Context [ஸந்தர்ப்பம்] –ஐப் பார்க்காமலும், முன்னுக்குப் பின் வருவதை comparitive -ஆக [ஒப்பிட்டு]ப் பார்க்காமலும் சாஸ்திர வசனங்களையும் வேத மந்திரங்களையும் துண்டாக எடுத்து வைத்துக்கொண்டு பார்ப்பதால்தான் சீர்திருத்தக்காரர்கள் ஆசாரசீலர்களாக உள்ளவர்களின் வழக்கத்திலிருப்பதற்கு மாறானதையே சாஸ்திரோக்தமானது என்று வாதிக்கும்படி ஆகியிருக்கிறது.

சாக்ராயண உஷஸ்தி என்ற ரிஷிக்கு பால்ய (ரிதுவாகாத) மனைவியிருந்ததாக உபநிஷத்திலேயே [சாந்தோக்யம் 1.10.1] இருக்கிறது. இம்மாதிரி விஷயங்களை ஆர அமர சரியாகப் பார்க்காமல் சீர்த்திருத்தக்காரர்கள் பதட்டப்பட்டுப் பேசி விடுகிறார்கள்.

இருந்தாலும் முன்பெல்லாம் சீர்திருத்த வாதங்களுக்கு எதிர் வாதம் செய்ய ஜனங்களுக்குத் தெரியாவிட்டாலுங்கூட, "இதுவரை பெரியவர்கள் எப்படிப் பண்ணி வந்திருக்கிறார்களோ அப்படியே போவோம்; புதிதாக ஒன்றை எடுத்துக் கொள்ள வேண்டாம்" என்ற அபிப்ராயம் இருந்தது. அதனால்தான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரி இந்த கல்யாண வயசு reform விஷயமாக இரண்டு முறை கவுன்சிலில் மசோதா கொண்டு வந்தும் அது நிறைவேறவில்லை. அப்புறம் தான் ஸார்தா என்பவர், இப்போது நாம் "சாரதா சட்டம்" என்று ஒரு அம்மாள் போட்ட சட்டம் மாதிரி நினைத்துக் கொண்டிருக்கிற இந்த சட்டத்தைக் கொண்டு வந்தார். அதற்குக்கூட சரிக்குச் சமன் ஆதரவாக 50%, எதிர்தரப்பில் 50% என்றுதான் வோட் விழுந்தது. அந்த ஸந்தர்பத்தில் பிரிட்டிஷ் ஸர்க்காரானது, "காங்கிரஸ் கேட்கிற ஸ்வயராஜ்யத்தைத்தான் நாம் தரவில்லை; அவர்களுக்குத் திருப்தியாக, மதத்தைக் கெடுப்பதற்காவது ஸஹாயம் செய்யலாம்" என்று நினைத்து நாமினேட்டட் மெம்பரை வைத்து இந்த மசோதாவுக்கு ஆதரவாக வோட் பண்ணச்சொல்லி, விவாஹ வயதை உயர்த்தியேயாக வேண்டும் என்பதைச் சட்டமாகச் செய்து

விட்டார்கள். அதாவது public opinion (பொது ஜன அபிப்ராயம்) –ஐ மீறி கவர்மென்ட் பலத்தினாலே அந்த மசோதா 'பாஸ்' ஆயிற்று.

இப்போது நிலைமை ரொம்பவும் மாறிவிட்டது பழைய பழக்கங்களில் பக்தி விச்வாஸம் போய்விட்டது. பிரிட்டிஷ் ராஜ்யத்தில் சாரதாச் சட்டம் அமுலானவுடன், அவர்கள் கொடுத்திருந்த மஹாமஹோத்பாத்யாய டைட்டிலை "வேண்டாம்" என்று துறந்த பண்டிதர்கள் உண்டு. வங்காளத்திலிருந்த பஞ்சாணன தர்க்க ரத்ன பட்டாசார்யரும், திருவிசநல்லூரிலிருந்து காசிக்குப் போய் ஸெட்டில் ஆகிவிட்ட லக்ஷ்மண சாஸ்திரி (தமிழ்நாட்டு பிராம்மணர் என்று தெரிவதற்காக 'லக்ஷ்மண சாஸ்திரி திராவிட்' என்றே பெயர் வைத்துக் கொண்டவர்) என்பவரும் இப்படிப்பட்ட தியாகத்தைச் செய்தார்கள். இப்போது நம் ஸ்வதந்திர இந்தியாவில் ராஜாங்கத்தால் சாஸ்திர விஷயங்களில் செய்யப்படும் மாறுதல்களைப் பார்த்து இப்படிக் குமுறி எழுகிற உணர்ச்சி யாருக்கு இருக்கிறது?

நம் குழந்தைகளுக்கு சாஸ்திர தாத்பரியங்களை முழுக்கவும் நன்றாகச் சேர்ந்துப் பிடித்துப் பார்த்துச் சொல்ல வேண்டும். இங்கே ஒன்றும், அங்கே ஒன்றும் பார்த்தால் conflicting -ஆக [முரணாக] த்தான் இருக்கும். 'வேதத்தில் love marriage தான் சொல்லியிருக்கிறது' என்கிற அளவுக்கு அரை குறை ரிஸர்ச் கொண்டு விட்டு விடுகிறது! சாஸ்திரங்களைப் பூராவாகப் பார்க்கவேண்டும். ஒன்றை எடுத்துக் கொள்ளும்போது அது சொல்லப்பட்ட ஸந்தர்பத்தைப் பார்க்க வேண்டும்; அதற்கு முன்னும் பின்னும், மற்றும் இதே விஷயமாக இதர இடங்களிலும் என்ன சொல்லியிருக்கிறது என்றெல்லாம் தீர்க்கமாகப் பார்த்து, விசாரித்தே, முடிவு சொல்ல வேண்டும்.

பிராம்ம விவாஹம் எல்லா ஜாதியாருக்கும் உண்டு. ஆனால் பிராம்மணர் தவிர மற்ற ஜாதியாருக்கு வேறு விதமான விவாஹமும் உண்டு. அதாவது ரிதுமதி விவாஹமும் அநுமதிக்கப்பட்டிருக்கிறது. சரீர ஸம்பந்தமான ஸௌக்கியங்களுக்கு முக்கியத்வம் தருவதானால் மற்ற விவாஹங்களும் செய்யலாம். ஆத்மாபிவிருத்திக்கு பிராம்ம விவாஹமே எடுத்தது.

1 யஜ்ஞஸ்ய ரித்விஜே தைவ: (யாஜ்ஞவல்கிய ஸ்மிருதி I.59)

2 ஆகாயார்ஷஸ்து கோத்வயம் (யாஜ்ஞவல்கிய ஸ்மிருதி I.59)

3 ஆஸுரோ த்ரவிணாதானாத் (யாஜ்ஞவல்கிய ஸ்மிருதி I.61)

4 உதீர்ஷ்வாத : பதிவதீ ஹ்யேஷா விச்வாவஸும் நமஸா கீர்பிரீடே| அந்யாம் இச்ச பித்ருஷதாம் வ்யக்தாம் ஸ தே பாகோ ஜநுஷா தஸ்ய வித்தி||
உதீர்ஷ்வாதோ விச்வாவஸோ நமஸேடாமஹே த்வா|
அந்யாம் இச்ச ப்ரபர்வ்யம் ஸம்ஜாயாம் பத்யா ஸ்ருஜ|
-(ரிக் X.85.21-22)

ஏன் பாலிய விவாஹம்?

ஏன் பாலிய விவாஹம்?

விவாஹம் என்ற ஸம்ஸ்காரத்துக்குப் பல உத்தேசங்கள் உண்டு. அதிலே முக்யமான ஒன்று, ஸ்திரீகளுக்குச் சித்த பரிசுத்தி ஏற்படப் பதி என்ற ஒரு பிடிப்பை ஏற்படுத்தித் தருவது. அதைப் பிடித்துக் கொண்டே அவர்கள் கடைத்தேறி விடுவார்கள். குருவிடம் பிரம்மசாரி சிஷ்யன் சரணாகதி பண்ணிப் பாப நிவிருத்தியடைந்து சுத்த மனஸோடு இருக்கிற மாதிரி இந்தக் கன்னிகையும் இவனிடம் இருக்க வேண்டும்.

நம்முடைய கர்மா, ஜன்மா எல்லாவற்றுக்கும் காரணம் மனஸின் சேஷ்டைதான். இந்த மனஸை வைத்துக் கொண்டு அதனுடைய இச்சைகளைப் பூர்த்தி பண்ணப் பாடுபடுவதில் தான் பாபங்கள் ஸம்பவிக்கின்றன; ஜன்மாக்கள் ஏற்படுகின்றன. மனஸை நிறுத்திவிட்டால் கர்மா இல்லை, ஜன்மா இல்லை, மோக்ஷம்தான். மனஸை நிறுத்துவது மஹாசிரமமான காரியம். அஷ்ட மஹாஸித்திகளைக் கூட அடைந்து விடலாம்; சிந்தையை அடக்கிச் சும்மா இருப்பதுதான் முடியாத காரியம் என்று [தாயுமானவர்] பாட்டுக்கூட இருக்கிறது. மனஸை நிறுத்த முடியாவிட்டாலும், அதைச் சொந்த விருப்பு, வெறுப்புகளுக்காக ஆடும்படி விடாமல் இன்னோரிடத்தில் அர்ப்பணம் பண்ணி விட்டால், அப்போது 'தனக்காகப் பண்ணிக் கொள்வது' என்பதால் ஏற்படும் பாபமும் ஜன்மமும்

இல்லாமல் போகும். இன்னொருத்தர் ஆட்டி வைக்கிறபடி அவரிடம் மனஸை ஸமர்ப்பித்து விட்டோமானால் நமக்கு கர்த்தா என்கிற பொறுப்பில்லை. அதனால் ஏற்படும் பாப புண்யமும் ஜன்மாவில் இல்லை. "என் செயலாவது யாது ஒன்றுமில்லை" என்று ஈச்வரனிடத்தில் இப்படித்தான் மனஸை அர்ப்பிக்கச் சொல்கிறார்கள். ஆனால் அதைச் செய்பவர் கோடியில் ஒருத்தர்தான். இதையே ஒரு பெண்ணுக்குப் பதியை ஈச்வரனாகக் காட்டியிருக்கிற நம் தர்மத்தில் ஏராளமான ஸ்திரீகள் ஸுலபமாகச் செய்து கடைத்தேறியிருக்கிறார்கள். புருஷனை ஈச்வரனாக நினைப்பது கணவனே கண் கண்ட தெய்வம் என்ற கொள்கை, கல்லானாலும் கணவன் என்ற அடக்க ஸ்வபாவம், பாதிவ்ரத்யம் (கற்பு) , ஸௌமங்கலியம் (சுமங்கலித் தன்மை) , ஸுமங்கலியாகவே செத்துப் போக வேண்டும் என்ற தீவிரமான பிரார்த்தனை ஆகிய இவைகள் அநாதி காலமாக நம் தேசத்து ஸ்திரீதர்மமாக, நம் தேசத்துப்பெண்களின் உத்தம ஜீவனத்துக்கு உயிர் நிலையாக இருந்து வந்திருக்கின்றது.

எந்தத் தேசத்திலும் உத்தம ஸ்திரீகள் இருந்திருப்பார்கள்தான். எந்த மதத்திலும் உயர்ந்த குணசாலினிகள் தோன்றியிருப்பார்கள். என்றாலும் மேலே சொன்ன விஷயங்கள் நம் தேசத்தின், நம் மதத்தின் நம் கல்ச்சரின் ஜீவாதாரமான ஒரு அம்சமாக இருப்பது போல் மற்ற இடங்களிலே சொல்ல முடியாது. 'நாகரிகம்' என்று சொல்லி கொண்டு இதை மாற்ற நினைப்பது நம்முடைய மஹோன்னதமான பண்பாட்டுக்கே ஆதாரமாக இருக்கப்பட்ட ஒரு ஆணிவேரை வெட்டி விடுகிற மாதிரியாகும்.

காதல் கீதல் என்று சித்த விகாரம் ஏற்படாமல், சரீர நினைப்பும் காமமும் வருகிறதற்கு முந்தியே ஒருத்தனை பர்த்தாவாக அடைந்தால்தான் குழந்தை உள்ளத்தில் உண்டாகிற பணிவினால் அங்கே உண்மையான சரணாகதி செய்து, "இவனே நமக்கு குரு; இவனே நமக்கு ஈச்வரன்" என்று இருக்க முடியும்.

ஆந்திர தேசத்திலும் மஹாராஷ்டிரத்திலும் இன்றைக்கும் ஸ்திரீகளுக்கு விரதங்கள் அதிகம். அவற்றில் ஒன்று கன்னிகைகள்

பரமேச்வரனையே பதியாக நினைத்துப் பூஜிப்பது. பிறகு ஒருத்தன் பதியாக வருகிறான். அவனையே பரமேச்வரனாகப் பூஜிப்பது, இப்போது பத்னியாகிவிட்ட அந்த கன்னிகைக்கு விரதமாக ஆகிறது. பரமேச்வரனைப் பதியாகப் பூஜித்து, முடிவில் எவன் பதியாக வந்தாலும் அவனே பரமேச்வரன் என்று பாவித்துவிட வேண்டியது.

கேள்வி கேட்காமல், நம்பிக்கையின் பேரில்தான், அதாவது பால்யத்தில்தான் ஒருத்தனைப் பரமேச்வரனாக நினைக்க முடியும். விவரம் தெரியாத போது வந்த இந்த நம்பிக்கை மனஸில் ஊறி ஊறி, நம் ஸ்வாபாவிகமான ஸ்திரீதர்மத்தினால் மனஸில் உறுதிப்பட்டு விடுவதால், விவரம் தெரிந்த பின்னும் பதியே பரமேச்வரன் என்ற பக்தி நிலைத்து நின்றுவிடும். அவனிடத்திலேயே தன் மனஸை அர்ப்பணம் பண்ணித் தனக்கென்று மான அவமானம் எதுவும் இல்லாமல் ஒருத்தி இருந்துவிட்டால் அவளுடைய அஹம்பாவம் கரைந்து போய்விடுகிறது. அதுதான் ஜனன நிவிருத்தி, அது தான் மோக்ஷம். பக்தி, ஞானம், தபஸ், பூஜை, யக்ஞம், யோகம் என்ற எல்லாம் இந்த அஹங்கார நாசத்தைத்தான் உத்தேசமாகக் கொண்டிருக்கின்றன. இது ஒரு ஸ்திரீக்குப் பதிபக்தியால் ஸுலபமாக, இயற்கையாக ஸித்தித்து விடுகிறது.

இப்படி பாவித்து சரணாகதி பண்ணின நளாயினி, அநஸூயை, ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மியான ஸீதாதேவி, ஸதி என்ற பெயர் பெற்ற தாக்ஷாயிணியான பராசக்தி, ஸாவித்ரி, கண்ணகி, திருவள்ளுவரின் பத்தினி வாஸுகி முதலானவர்களைத்தான் நம் தேசத்தில் தெய்வங்களுக்கும் மேலாக வைத்திருக்கிறது. அவர்களை நினைத்தாலே நமக்கு வேறெதிலும் உண்டாகாத பெருமைப் புளகாங்கிதம் உண்டாகிறது- நமஸ்காரம் பண்ணுகிறோம். ஏன் இப்படி இருக்க வேண்டும் என்றால் சொல்லத் தெரியாது! "பதியே ஈச்வரன் என்பது பேத்தல்; ஸுபர்ஸ்டிஷன்; பெண்களை அடக்கி, நசுக்கி வைக்கிற கொடுமை" என்று எத்தனை ஆக்ஷேபித்தாலும், இப்படி இருப்பதுதான் இந்த தேசாசாரம். பாரத தேசம் என்றால் இங்கே ஹிமோத்கிரியும் கங்கையும் இருக்கிறதோ இல்லையோ? ஏன் இருக்க வேண்டும் என்றால் என்ன சொல்வது? அப்படித்தான் நம் தேசத்துக் கற்பரசிகளின் சரணாகதி வாழ்க்கையும். ஆல்ப்ஸ் மலையை

ஐரோப்பியர்கள் நினைக்கிற மாதிரிதானா நாம் கைலாஸத்தை நினைக்கிறோம்? மிஸிஸிபியை அமெரிக்காக்காரன் நினைக்கிற மாதிரி தானா நாம் கங்கையை நினைக்கிறோம்? அதற்கெல்லாம் மேலாக இவற்றிலே தெய்விகத்தை அநுபவிக்கிறோம் அல்லவா? அப்படியேதான் அவர்களுக்கு ஒரு குடும்ப ஏற்பாடாக மட்டும் உள்ள தாம்பத்தியத்தில் நம் சாஸ்திரங்கள் ஒரு பெண்ணுக்கு ஆத்மாவையே சுத்தப்படுத்தித் தருகிற பரம ஸாதனமான சரணாகதியைப் பிசைந்து வைத்திருக்கிறது. சமூக ரீதியில் பெண்களுக்கு நல்லது செய்வதாக நினைத்துக் கொண்டு இதற்குக் காரணமான பால்ய விவாஹத்தை மாற்றுவதனால் அவர்களுடைய ஆத்மாபிவிருத்திக்கு பெரிய ஹானியை உண்டாக்குகிறோம். சின்ன ஸௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுத்து மஹா பெரிய பிரயோஜனத்தை நஷ்டப்படுத்துகிறோம்.

பால்ய விவாஹம் பௌதிகமாகக் கெடுதல் என்பது வெறும் பேச்சு. குழந்தையாகக் கல்யாணம் பண்ணிக் கொண்டாலும் அப்புறம் அவள் சரீர ரீதியில் பக்குவமான பிறகுதான் தாம்பத்தியம் பண்ண அழைத்துக் கொள்ளப்படுவாள். அதுவும் தவிர தர்ச பூர்ணம் (அமாவாஸ்யை, பௌர்ணமி) போன்ற அநேக தினங்களில் பிரம்மசரிய நியமம் சொல்லியிருப்பதால் சரீரம், சித்தம் இரண்டுமே புஷ்டியோடு இருக்கும். இப்போதுதான் இந்தக் கட்டுப்பாடுகள் போய், சித்தவிகாரம், தேக பலஹீனம் இரண்டும் அதிகமாகி நரம்பு ஸம்பந்தமான டாக்டர்கள் நன்றாக விருத்தியாகும்படி ஆகியிருக்கிறது.

பால்ய விவாஹத்தினால் பால்ய விதவைகள் என்ற கொடூரமான களங்கம் ஏற்பட்டு ஹிந்து மதத்தையே மாசுபடுத்திவிட்டது என்பதுகூட மிகையான வாதம்தான் (exaggeration) பால்ய விதவைகள் இருக்க வேண்டுமானால் அவர்களுடைய கணவன்மார்கள் உயிரோடு இருந்தால் பதினைந்து வயசிலிருந்து இருபத்தைந்து வயசுக்குள் இருப்பார்கள். நான் கேட்டறிந்த மட்டில் இந்த 15-25 வயசு age-group -ல் சாவு ஏற்படுவது ரொம்பவும் குறைச்சல்தான். எனவே பால்ய விதவைகள் சொல்பமாகவே இருந்திருப்பார்கள். இல்லவே இல்லை என்று நான் சொல்லவில்லை. ஒரு குழந்தை வைதவ்யம் அடைந்தது என்றால்கூட மனஸுக்கு வேதனையாகத் தான் இருக்கிறது. ஆனால்

மொத்த பலனை பார்க்கும்போது இதற்கெல்லாம் விட்டுக் கொடுக்க வேண்டியதுதான்.

இப்போது பெண்ணுக்கு இருபது வயசுக்கு மேல் கல்யாணம் செய்து கொடுக்கிறபோதும் விதி இருந்தால் உடனே வைதவ்யம் வரத்தான் செய்கிறது. ஒரு ரயில் ஆக்ஸிடென்ட், ப்ளேன் ஆக்ஸிடென்ட் என்கிறபோது கல்யாணமாகி ஒன்று, இரண்டு மாஸங்களிலேயே ஜீவனை இழந்தவர்களும் அதில் பலர் இருப்பதைப் பார்த்து ரொம்பவும் கஷ்டப்படுகிறோம், வைதவ்யத்தைத் தடுப்பதற்காக பால்ய விவாஹத்தைத் தடுத்து விடலாம் என்றால், பிற்பாடு வயசு வந்தபின் கல்யாணமானவுடனே வைதவ்யம் வராமல் 'காரன்டி' தர நமக்குச் சக்தியில்லையே!

நம் தேசாரப்படி ஸ்திரீகள் பதியை ஈச்வரனாக பாவித்து அதன் மூலமாக மஹா பெரிய பலனான ஜன்ம நிவிருத்தியை அடைய வேண்டுமானால் சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதுதான் வழி. அதை விட்டுவிட்டு, "பெண்கள் நிறையப் படிக்கிறார்கள்; உத்யோகம் பார்க்கிறார்கள்; தங்கள் மனசுப்படி கல்யாணம் பண்ணிக் கொள்கிறார்கள்; இதெல்லாம் நம்முடைய progress (முன்னேற்றம்)" என்று சொல்பவர்கள் சொன்னாலும், எனக்கென்னவோ இந்தப் பெண்கள் இப்படிப் பலர் கண்ணில் பட்டுக்கொண்டு, சித்த விகாரங்களுக்கு ரொம்பவும் ஆளாகிற சூழ்நிலையிலே மாட்டிக் கொண்டிருக்கிறார்களே என்றுதான் ஓயாத கவலையாக, பயமாகக் கூட, இருக்கிறது.

'கட்டுப்பெட்டிகளாக இருந்து கொண்டு இப்படி பெண்களை கட்டுப்பாடு பண்ணி, பால்ய விவாஹம், பால்ய வைதவ்யம் போன்ற கொடூரங்களுக்கு ஆளாக்குகிறார்களே' என்று சீர்திருத்தக்காரர்கள் கோபித்துக் கொண்டு, பெண்களுடைய சமூக உரிமை போகிறது என்று அழுதால், எனக்கோ, 'இவர்கள் சீர்திருத்தம் என்கிற பெயரில் நம் பெண்களின் மகத்தான குலதனமான கற்புக்கு ஹானி உண்டாகும்படியான ஹேதுக்களை ஏற்படுத்துகிறார்களே' என்று அதைவிடக் கோபம் வருகிறது; அழுகை வருகிறது. 'ஸ்திரீகள் கெட்டுப் போனால் குலக்ஷயம்தான்; லோகமே போய் விடும்; எல்லாரும்

நரகத்துக்குப் போகவேண்டியதுதான்: 'ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ண ஸங்கர:| ஸங்கரோ நரகாயைவ*' என்று அர்ஜுனனுக்கு அழுகை வந்த மாதிரி வருகிறது.

இக்காலப் பெண்களும் இதற்கு ஸம்மதித்திருக்கிறார்களே, பெற்றவர்களும் அங்கீகரித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே என்பதுதான் மனஸைச் சுடுகிறது.

எல்லா ப்ராக்ரெஸ்ஸையும் எல்லா அட்வான்ஸையும் விட நம் பெண் குழந்தைகள் கெட்டுப் போய்விடக் கூடாதே என்பதுதான் எனக்குப் பெரியதாக, அதே கவலையாக, இருக்கிறது. படிப்பதாலும் உத்யோகம் பார்ப்பதாலும் அப்படியொன்றும் நம் பெண்கள் சித்தம் கெட்டு விடவில்லை என்று எனக்கு ஆறுதல் சொல்கிறார்கள். எனக்கும் அந்த நம்பிக்கை போகவில்லை. ஆனாலும் இப்படி கண்டபடி திரிகிறார்களே, கெட்டுப் போக நிறைய சான்ஸ் இருக்கிறதே, கெடுப்பதற்கு என்றே ஸினிமாவும் நாவலும் பத்திரிகைகளும் இருக்கிறதே என்று பயப்படுகிறேன். அவ்வப்போது கன்னாபின்னா என்று நடந்து விடுகிற சங்கதிகளும் வருகின்றன. தப்பு நடந்து பிறகு அதை என்ன பண்ணி மாற்றுகிறது? இப்படி ஒன்று, இரண்டு கேஸ்கள் கூட நடக்க இந்த தேசத்தில் விடலாமா? என்று மனஸு கொதிக்கிறது. தாயார்–தகப்பனார்களுக்குத் தங்கள் பெண்களைப் பற்றி இருக்க வேண்டிய கவலை, பயம் எல்லாவற்றையும் சேர்த்து வைத்து நான்தான் படுகிறேன் போலிருக்கிறது! எல்லாரும் கெட்டுப் போக வேண்டாம். ஆனாலும் ஒரு பால்ய விதவை உண்டானால்கூட களங்கம் என்று சீர்திருத்தக்காரர் சொன்னால், ஒரே ஒரு பெண் கெட்டுப் போனால்கூட அதைவிட ஆயிரம் மடங்கு களங்கம் என்று நான் பயப்படுகிறேன்.

வேதம் ஓதிய வேதியர்க்கோர் மழை

நீதி மன்னர் நெறியினர்க்கோர் மழை

மாதர் கற்புடை மங்கைக்கோர் மழை

மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே.

என்று சொல்லியிருக்கிறது. இதிலே 'நீதி மன்னர் நெறி' என் ஜூரிஸ்டிக்ஷனில் [அதிகார எல்லைக்குள்] இல்லாத விஷயம். அதனால் அதைப் பற்றி நான் கவலையோ, ஸந்தோஷமோ படுவதற்குப் பொறுப்பாளி இல்லை. ஆனால் வேதியரை வேதம் ஓதப் பண்ணுவதும், மாதர்களை கற்பு நெறி தவறக்கூடிய 'சான்ஸ்' களுக்குக் காட்டிக் கொடுக்காமல், காமம் புகுமுன்பே பதியை ஈச்வரனாக பாவிக்கக் கொடுத்து, அப்புறம் அவன் ஒருத்தனையன்றி மனஸ் கொஞ்சங் கூடச் சலிக்காத பாதிவ்ரயத்தை ஏற்படுத்தித் தருவதும் என் பொறுப்புதான். இந்த இரண்டுக்கும் என்னாலானதைச் செய்ய வேண்டும் என்றுதான் ஓயாமல் நினைத்துக் கொண்டு எதையாவது திட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறேன். Goal ரொம்பவும் எட்டத்தில்தான் இருக்கிறது. என் பிரயத்தனத்தைவிட ஜாஸ்தி வேகத்தோடு அது விலகி விலகிப் போய்க் கொண்டேயிருக்கிறது. அதற்காக இந்த ரேஸில் நான் ஓய்ந்து விடக்கூடாது. அல்லது இப்போது வந்திருக்கிற நாகரிகப் போக்குகள் தான் சரி என்று 'ஆமாம் பூசாரி' யாகத் தலையாட்டி விடவும் கூடாது. 'போனது போனது தான்; சீர் செய்து சாத்தியப்படாது. இப்போது ஏற்பட்டிருக்கிற கலிப் பிரவாஹத்தைத் தடுத்து மாற்றுவது நடக்காத காரியம்' என்று விட்டு விடுவதற்காக என்னை இங்கே [பீடத்தில்] உட்கார்த்தி வைத்திருக்கவில்லை. அநாதி காலமாக இந்த தேசத்தில் உயர்ந்த நிலையில் இருந்து வந்திருப்பதும், இரண்டாயிரம் வருஷமாக இந்த மடம் பரிபாலித்து வந்திருப்பதுமான வேத அபிவிருத்தியையும் ஸ்திரீதர்மங்களையும் என் காலத்தில் நான் வாயை மூடிக்கொண்டு வாரிக்கொடுத்துவிட்டு 'ஜகத்குரு' பட்டம் சூட்டிக்கொண்டு, ஸாக்ஷாத் பகவத்பாதாளின் பெயரை வைத்துக் கொண்டிருந்தால் அதைவிடப் பெரிய தோஷம் இல்லை. பகவான் [கீதையில்] சொன்ன மாதிரி ஜயாபஜயம் அவன் கையில் இருக்கிறது என்று விட்டுவிட்டு, நான் பாட்டுக்கு முன் வைத்த காலைப் பின் வைக்காமல், என் பிரயத்தனத்தை விடாமல் பண்ணிக் கொண்டேதான் போக வேண்டும். ரிஸல்ட் என்னுடைய 'ஸின்ஸரிடி'யையும், அந்தரங்க சுத்தத்தையும், தபஸையும் பொறுத்து அமையும். கணிசமான பலன் இதுவரைக்கும் ஏற்படவில்லை என்றால் என் ஸின்ஸிரிடி போதவில்லை, என் மனஸ் சுத்தமாகவில்லை, என் தபஸ் குறைச்சல் என்றுதான் அர்த்தம்.

லோகம் என்னை எத்தனை ஸ்தோத்திரம் பண்ணினாலும் எனக்கு இப்படித்தான் தோன்றுகிறது.

எல்லாம் போய்விட்டது என்றால் நான் இதைக்கூடச் சொல்ல வேண்டாம்; ஒரு யத்தனமும் பண்ணவேண்டாம், மடத்தைக் கலைத்து விடலாம். ஆனால், போய்விட வில்லை. ஒரு சின்ன பொறி அளவுக்காவது இருக்கிறது. அதுகூட இல்லையானால் நான் இத்தனை சொல்வதைக் கேட்டுக் கொண்டு நீங்கள் இவ்வளவு பேர் உட்கார்ந்து கொண்டேயிருக்க மாட்டீர்கள். நான் சொல்கிறபடி நீங்கள் செய்வதோ, செய்யாததோ ஒரு பக்கம் இருக்கட்டும். என்னை இவ்வளவு தூரம் சொல்லவாவது விட்டு எதிர்த்து கோஷம் போடாமல், பொறுமையோடு கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்களோ இல்லையோ? அதனால்தான் ஒரு பொறியாவது இருப்பதாக நம்பிக்கொண்டு, அதை எப்படியாவது விலா வெடிக்கிற மட்டும் ஊதி ஊதிக் கொஞ்சம் ஜ்வாலை வரும்படிச் செய்ய முடியுமா என்று முயன்று கொண்டிருக்கிறேன். ஜனங்களின் புதுப்போக்குப்படியே நானும் போவது என்றால் அது பகவத்பாதாளுக்குப் பண்ணுகிற துரோகந்தான்.

மனஸிலிருப்பதைக் கொட்டித் தீர்த்தால்தானே நல்லது? பரஸ்பரம் நீங்கள் என்னிடம் பக்தி செய்வதும், நான் ஆசீர்வாதம் செய்வதும் இருக்கட்டும். அது இருந்து கொண்டேதான் இருக்கும். ஆனாலும் இந்த மடம் எதற்காக ஏற்பட்டது என்று சொல்லி, அந்த வழியில் உங்களைப் போகப் பண்ணாமல், உங்கள் பணத்தை மட்டும் நான் வாங்கிக் கொண்டால் அது பிடுங்கியடித்துத் தின்கிற காரியந்தான் என்பதால் மனஸை விட்டுச் சொன்னேன்.

வேத ரக்ஷணத்துக்காகப் பண்ணின முயற்சிகளில், போட்ட திட்டங்களில், பராசக்தியின் அநுக்கிரஹத்தால் ஓரளவு நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. வீட்டுக்கு வீடு அத்யயனம் இருக்கும்படி பண்ண முடியாவிட்டாலும், அடுத்த தலைமுறைக்கு அத்யயனம் என்ற ஒன்றே இல்லாமல் போய் விடுமோ என்ற நிலைமை மாறி, இப்போது அநேக வித்யார்த்திகள் தேசம் முழுதும் பல பாடசாலைகளில் அத்யயனம், வேத பாஷ்யம் எல்லாம் படித்துப் பாஸ் செய்து வருகிறார்கள்.

இந்தக் கன்யா விவாஹந்தான் சட்டமாகவே வந்து கையை ரொம்பவும் கட்டிப் போட்டுவிட்டது. அரசாங்கச் சட்டத்துக்கு அடங்கித்தான் ஆகவேண்டும். ஒரு பெண்ணுக்கு மனோபாவ விகாரம் இல்லாத காலத்திலேயே 'இதுதான் தெய்வம்' என்று நினைக்கும்படியாக ஒரு புருஷனின் கையில் பிடித்துக் கொடுத்து, அந்தப் பழக்கம் ஊறிய பிறகு அதாவது விகாரம் உண்டாகிற காலத்தில் தன் சரீரத்தை அர்ப்பணம் செய்து கொள்ளும்படிச் செய்யவேண்டும் என்கிற தர்ம சாஸ்திரத்தின் நிரந்தரமான சட்டத்துக்கு விரோதமாகத்தான் அரசாங்கச் சட்டம் இருக்கிறது என்றாலும்கூட சட்ட மறுப்பு பண்ணு என்று சொல்வது சரியில்லைதான். அதனால் எறும்பு ஊறக் கல் தேயும் என்கிற மாதிரி நாம் விடாமல் எடுத்துச் சொல்லிக் கொண்டேயிருந்து அவர்களுடைய மனஸ் மாறுகிறதா என்று பார்க்க வேண்டியதுதான்.

* **கீதை** 1.41-2.

நாம் இப்போதே செய்ய வேண்டியது

நாம் இப்போதே செய்ய வேண்டியது

அது ஆகிற போது ஆகட்டும். நாம் உடனே பண்ண வேண்டியது என்ன? அவர்கள் 14 வயசு, 16 வயசு, 18 வயசு என்று ஏதோ ஒரு வரம்பு வைத்திருந்தால், அந்த வரம்பு தாண்டின உடனேயாவது கல்யாணத்தைப் பண்ணி விடுவதற்கு முன் கூட்டியே வரன் பார்த்து மற்ற ஏற்பாடுகளையெல்லாம் பண்ணி வைத்துக் கொள்ள வேண்டும்.

எவ்வளவுக்கெவ்வளவு குறைந்த வயசில் கல்யாணம் பண்ண இடமிருக்கிறதோ அவ்வளவு குறைந்த வயசில் பண்ணி விட வேண்டும்.பெண்கள் நீண்ட கால்ம் மனோவிகாரப்பட்டுக் கொண்டிருக்கும்படி விட்டால் அது நமக்கு பாபம் என்கிற பய உணர்ச்சியோடு இந்த விஷயத்தில் இனியாவது காரியம் செய்யவேண்டும். தானே தட்டிப் போனால் வேறு விஷயம். புருஷ யத்தனம் இல்லாமலிருந்தால் அது பெரிய தப்பு.

அப்படியே எவ்வளவுக்கெவ்வளவு குறைந்த செலவில் பண்ண வேண்டுமோ அப்படிப் பண்ண வேண்டும்.

விவாஹத்தில் எளிமை

விவாஹத்தில் எளிமை

சாஸ்திரம் விதிக்கிற வயஸை மீறுவதற்குச் சட்டம் காரணம் என்றால், சட்டம் போட்டிருக்கிற 'லிமிட்'டையும் மீறி 25 வயசு, 30 வயசுக்குக்கூடப் பெண்கள் கல்யாணமாகாமல் நிற்பதற்குக் காரணம் விவாஹத்தை பண சம்பந்தமான விஷயமாக்கியிருப்பதுதான். இப்போது கல்யாணத்தில் நடக்கிற ஆடம்பரங்களும் வரதக்ஷிணை வாங்குவதும் சீர் செனத்தி கேட்பதும் சாஸ்திர ஸம்மதமானதல்ல. செலவழிப்பதற்கு பெண் வீட்டுக்காரன் என்று ஒருத்தன் ஏற்பட்டிருக்கிறான் என்பதால் அவனிடம் ஒட்டக் கறக்க வேண்டும் என்பதற்காகவே பிள்ளைக்கு "ஸூட் வாங்கித் தா; பூட்ஸ் வாங்கித் தா; ரிஸ்ட் வாட்ச் வாங்கித் தா" என்று பறிமுதல் மாதிரிப் பண்ணி, இந்த அலங்காரங்களோடு ஜானவாஸ ஊர்வலம் என்று ரொம்பவும் அத்யாவசியமான அம்சம் மாதிரி விவாஹத்துக்கு முதல் தினம் பண்ணுகிறார்களே, இது சாஸ்திரத்தில் அடியோடு இல்லாத விஷயம். இதற்கு ஒரு மந்திரமும் கிடையாது.

பழைய நாளில் அதிபால்யத்தில் குழந்தைகளை உத்ஸாஹப்படுத்த வேண்டும், ஹோமப் புகையில் கஷ்டப்படுகிறதுகளே! என்று விளையாடல், நலுங்கு, ஊர்வலம் என்றெல்லாம் வைத்தார்கள், அவ்வளவு தான்.

"கன்யாம் கனக ஸம்பந்நாம்" என்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதால், தங்கமானது லக்ஷ்மி பிரஸாதத்தை உண்டாக்குவது என்பதால், தங்கத்திலே திருமாங்கல்யம் மட்டும் பண்ணினால் மட்டும் பண்ணினால் போதும். மற்ற நகைகள், வைரத் தோடு முதலியன வேண்டாம். பட்டும் வேண்டாம். நூலில் கூறைப் புடவை வாங்கினால் போதும். ஆந்திர தேசத்தில் இப்படித்தான் செய்கிறார்கள். எல்லாவற்றையும் விட வரதக்ஷிணை தொலைய

வேண்டும். ஊர் கூட்டி சாப்பாடு, பாட்டு, சதிர், பந்தல் என்று விரயம் பண்ணுவது போகவேண்டும்.

தாய்குலத்தின் பெருமை

தாய்க்குலத்தின் பெருமை

வைரத்திலும் பட்டிலும் நம் ஸ்திரீகளுக்கு எப்படியாவது மோஹம் போய்விட்டால் போதும், நம்முடைய குடும்ப வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையும் மட்டுமில்லாமல் ஸ்திரீதர்மமே பிழைத்துப் போய்விடும். 'லக்ஷக்கணக்கான பட்டுப் பூச்சிகளைக் கொன்று அதிலிருந்து எடுக்கிற பட்டினால் நமக்கு ஒரு அலங்காரமா? சாப்பாட்டிலே நாம் சைவம் என்று சொல்லிக் கொண்டால் போதுமா? இத்தனை பட்டுப் பூச்சிகளின் கொலை பாவத்துக்கு ஆளாகிறோமே!' என்கிற எண்ணம் பெண்களுக்கு வந்துவிட்டால் போதும். இதிலே இன்னொரு அம்சம், இதனால் வசதியில்லாதவர்களுக்கும் பட்டிலும், வைரத்திலும் ஆசையைத் தூண்டி விடுவது. பிள்ளை வீட்டுக்காரர்கள் "இத்தனை பட்டுப் புடவைகள் வாங்க வேண்டும், வைரத் தோடு போட வேண்டும்" என்றெல்லாம் நிர்ப்பந்தப்படுத்தி அநேகப் பெண்களை கல்யாணமாகாது நிறுத்தி வைக்கும்படி பண்ணுவது பாபம்.

கல்யாணத்தை economic problem [பொருளாதாரப் பிரச்சனை] –ஆகப் பண்ணியிருப்பது அக்கிரமம். "அக்கிரமம்" என்கிற வார்த்தையைத்தான் சொல்ல வேண்டும். அவரவரும் ஆணோடு பெண்ணோடு பிறந்தவர்கள்தானே? நமக்கும் பெண்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்க பிள்ளையகத்துக்காரன் என்று ஆனவுடன், "வரதக்ஷிணை கொண்டா, பாத்திரத்தைக் கொண்டா, நகையைக் கொண்டா, வைரம் போடு, பட்டு வாங்கு" என்று ஷைலக் மாதிரி கன்டிஷன் போட்டுப் பெண் குழந்தைகளை கல்யாணமாகாமல் கண்ணைக் கசக்கும்படியாகப் பண்ணுவதை மன்னிக்கிறதற்கேயில்லை. பெண்ணின் குணம், குலம் திருப்தியாயிருக்கிறதா? 'நம் அகத்தை விளங்க வைக்க கிருஹலக்ஷ்மியாக இந்தக் குழந்தை வரவேண்டும்' என்று ஸந்தோஷமாக நினைத்து, எந்த கண்டிஷனும் போடாமல், பணம் காசைப் பற்றி நினைக்காமல் கலியாணம் பண்ணிக்கொள்கிற நல்ல மனஸ் நம் ஜனங்களுக்கு வரவேண்டும்.

இதில் ஸ்திரீகளின் பங்கு விசேஷமானது. பெண்ணாக பிறந்தவர்களுக்குத்தான் தங்கள் மாதிரியானவர்களிடம் அபிமானமும் அநுதாபமும் இருக்க வேண்டும். தங்கள் பிள்ளைகளுக்குக் கல்யாணம் பண்ணுகிற ஸமயத்தில் பெண்டுகள் குறிப்பாக நான் சொன்ன விதத்தில் உயர்ந்த பண்போடு நடந்து கொள்ளவேண்டும். 'அந்த அகத்தில் அப்படிச் சீர் செய்தார்களே; அந்த பிள்ளைக்கு அவ்வளவு செய்தார்களே; அந்த மாதிரி நம் பிள்ளைக்கு நடக்காவிட்டால் எப்படி? அது நமக்குக் குறைவு இல்லையா?' என்ற மாதிரி அசட்டு எண்ணங்களை விட்டுவிட்டு, மற்றவர்கள் செய்த ஜம்பத்துக்கும் டாம்பீகத்துக்கும் நாம் இடம் கொடுக்காமல், இனிமேல் கல்யாணம் பண்ணப் போகிற மற்ற பிள்ளையகத்துக்காரர்களுக்கு நாமே வழிகாட்டியாக இருக்க வேண்டும். 'இதுவரை மற்றவர் பண்ணின தப்பை, அக்ரமத்தை ஏன் நாம் follow பண்ண வேண்டும்? இனிமேலே மற்றவர்கள் நம்மை follow பண்ணும்படியாக இப்போது நாம் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தினால் இதுவேயல்லவா நமக்குப் பெருமை?' இப்படிப்பட்ட உணர்ச்சி தாய்க்குலத்துக்கு உண்டாக வேண்டும்.

'நம்மகத்துப் பெண்ணுக்கு நாம் வரதக்ஷிணை கொடுத்தோமே! நமக்கே நம் அப்பாவும் அந்த காலத்தில் வரதக்ஷிணை கொடுத்தாரே! அதனால் இப்போது நாமும் வாங்கினால் தப்பில்லை' என்று தாங்களாக நியாயம் கற்பித்துக் கொண்டுவிடக் கூடாது. இந்தக் கெட்ட பழக்கம் – நம் தர்மத்தைச் சிதைக்கிற பழக்கம் எப்படியாவது நிற்க வேண்டும். இதற்காக யாராவது இப்போது தியாகியாக முதலடி எடுத்து வைத்துத்தான் ஆகவேண்டும். எதெதற்கோ தியாகம் என்று கிளம்புகிறார்களே! ஒரு ஊர் இந்த ஜில்லாவில் இல்லாமல் இன்னொரு ஜில்லாவுக்குப் போகிறது என்றால் அதற்காக நூறு பேர், ஆயிரம் பேர் மறியல் செய்து ஜெயிலுக்குப் போகிறார்கள்; எவனாவது ஒருத்தன் கெரஸினைத் தன் மேலே கொட்டிக் கொளுத்திக் கொண்டு, உயிரையே விடுகிறான்! நம்முடைய உயர்ந்த ஸ்த்ரீ தர்மத்தைக் காப்பாற்ற நாம் கொஞ்சம் பண நஷ்டம் படக் கூடாதா?

"ஸௌந்தர்யலஹரி சொல்கிறோம். அபிராமி அந்தாதி சொல்கிறோம்" என்று பல பெண்கள் என்னிடம் வந்து ஆசிர்வாதம் கேட்கிறார்கள். நல்ல காரியம்தான். ஆசீர்வாதம் பண்ணுகிறேன். ஆனால்

இதையெல்லாம் விட அதிகமாக அம்பாளுடைய பிரீதியை சம்பாதித்துக் கொள்ள வேண்டுமானால் இவர்கள் வரதக்ஷிணை, வைரத் தோடு, சீர் ஸெனத்தி என்ற கண்டிஷன் இல்லாமல் நான் சொன்ன மாதிரிக் கலியாணங்களுக்கு மனப்பூர்வமாக சம்மதித்தால்தான் முடியும். தங்கள் மாதிரியான பெண்கள் வயசு வந்தும் கலியாணமாகாமல் நிற்பது, அதனால் மனோ விகாரப்படுவது, மானபங்கப்படுவது, அப்புறம் மான உணர்ச்சியும் மரத்துப் போய் விடுவது என்றிப்படி ஆகியிருக்கிற நிலைமையை மாற்றுவதற்கு இவர்களுக்கு மனசு இரங்கினால் இவர்களிடம் அம்பாளுக்கு மனசு தானாக இரங்கும்.

'நாங்கள் கேட்காமல் பெண் வீட்டுக்காரர்களாகவே இத்தனை கொடுக்கிறோம் என்று ஸ்வயேச்சையாக வந்ததால் வாங்கிக் கொண்டோம்' என்று சொல்வதுகூட தப்பு. ஏனென்றால் ஒருத்தர் பண்ணுவதிலிருந்து இன்னொருத்தர் என்று இது செயின் மாதிரிப் போய்க் கொண்டிருக்கிற வழக்கம். கட்டாயப்படுத்தாமலே ஒருத்தர் வரதக்ஷிணை கொடுத்தாலும் இதனால் அவர் தன் பிள்ளைக்கும் கலியாணம் பண்ணும்போதும் வரதக்ஷிணை எதிர்பார்க்கத்தான் செய்வார். அதனால் அவர்களாகவே கொடுத்தாலும்கூட, "வேண்டாம்" என்று சொல்லுகிற உயர்ந்த மனோபாவம் வரவேண்டும். பெண்வீட்டாருக்கு மிதமிஞ்சிப் பணம் இருந்தால் கூட, "எங்களுக்குப் பணம் தராதீர்கள்". உங்கள் பெண்ணுக்கே ஸ்ரீ தனமாகப் போட்டு வையுங்கள்" என்று சொல்ல வேண்டும்.

பிள்ளை வீட்டுக்காரர்களின் செலவுக்கு – அதாவது பிள்ளையின் உறவுக்காரர்களுக்கு துணிமணி வாங்குகிறது; இவர்கள் கலியாணத்துக்குப் போகிற பிரயாணச் செலவு முதலானதுகளுக்கு – பெண் வீட்டுக்காரர் 'அழ' வேண்டும் என்பது துளிக்கூட நியாயமே இல்லை. நம் பிள்ளைக்குத்தானே கல்யாணம்? நாமே ஏன் அதற்கு செலவழிக்கக் கூடாது? எவனோ கொடுக்கிற பணத்தில் நாம் டிரஸ் வாங்கிக் கொள்வது அவமானம்தான். நமக்கு வக்கில்லை என்றுதான் அர்த்தம். இதையே 'பிள்ளையகத்து ஸம்பந்தி' என்று பெரிய பெயரில் தங்கள் 'ரைட்' மாதிரி மிரட்டி உருட்டிச் செய்து வருகிறோம்! வரதக்ஷிணை நாமாகக் கேட்டாலும் சரி, அவர்களாகக் கொடுத்தாலும்

சரி. திருட்டுச் சொத்து மாதிரி என்ற பயம் வேண்டும். இது இரண்டு தரப்போடு நிற்காமல் vicious circle -ஆக [விஷ வட்டமாக] ஸமூஹத்தையே பாதிப்பதால் எப்படியாவது இதை ஸமாப்தி பண்ண வேண்டும்.

மணப்பிள்ளையின் கடமை

மணப்பிள்ளையின் கடமை

வரனாக இருக்கப்பட்ட பிள்ளைகளும் இதற்கு ஸஹாயம் செய்ய வேண்டும். சாதாரணமாக, மாதா பிதாக்களின் வார்த்தைக்குப் புத்திரர்கள் மாறு சொல்லவே கூடாதுதான். அப்படிச் சொல்லும்படி நான் புத்திரர்களுக்கு உபதேசம் செய்யக்கூடாதுதான். ஏற்கெனவே முன்னாளைப் போலப் பிள்ளைகள் அப்பா, அம்மாவுக்குக் கட்டுப்பட்டிராத இக்காலத்தில் நானும் அவர்களைக் கீழ்ப்படியாமல் இருப்பதில் ஊக்கக்கூடாதுதான். இதெல்லாம் எனக்குத் தெரிந்தாலும், விவாஹ விஷயத்தைப் பண ஸம்பந்முள்ளதாகப் பண்ணிப் பிராசீனமான நம் ஸ்திரீதர்மத்துக்கு உண்டாக்குகிற பெரிய ஹானியைப் பார்க்கிறபோது, இந்த ஒரு விஷயத்தில் மட்டும் பிள்ளைகள் எனக்கு ஆதரவாக அப்பா, அம்மாவிடம் வாதம் பண்ணி, "வரதக்ஷிணையும், சீரும் கேட்காவிட்டால்தான் கல்யாணம் செய்து கொள்வேன்" என்று ஸத்யாக்ரஹம் பண்ண வேண்டும் என்று சொல்லத் தோன்றுகிறது. நிஜமான ஸத்யாக்ரஹமாக இருக்கவேண்டும். பெற்றோர் கேட்கவில்லை என்பதற்காக பிள்ளை அவர்களை ஒதுக்கிவிட்டு கல்யாணம் பண்ணிக் கொண்டால் அது ஸத்யாக்ரஹம் இல்லை. ஸத்யாக்ரஹம் என்றால் அதிலே தியாகம் இருக்கவேண்டும். அதனால் 'வரதக்ஷிணை இல்லாமல் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டீர்களா? ஸரி, அப்படியானால் நான் கல்யாணமே பண்ணிக் கொள்ளாமல் பிரம்மசாரியாக இருந்து விடுகிறேன்' என்று தியாகமாக எதிர்ப்பு செய்தால்தான் ஸத்யாக்ரஹம். இப்படி பண்ணினால் எந்தத் தாயார்–தகப்பனார் மனசும் மாறாமல் போகாது. இதுதான் இப்போது இளைஞர்கள் செய்ய வேண்டிய பெரிய சீர்திருத்தம். கலப்பு மணம், காதல் கல்யாணம் பண்ணிக் கொள்வது மாதிரியான சாஸ்திர விரோதமான காரியங்களைச் செய்து பெருமைப்படுவதற்கு பதில் சாஸ்திரோக்தமான இந்த

வரதக்ஷிணையொழிப்புக்கு நம்முடைய இளைஞர்கள் உறுதியோடு சகாயம் செய்தால் இதுவே பெரிய சீர்திருத்தமாயிருக்கும்.

மாதா-பிதா-குரு என்று மூன்றை வேதமே சொல்லியிருக்கிறதோ இல்லையோ? அதனால் மாதா-பிதாவைத் தானாக ஒரு புத்திரன் எதிர்த்துக் கொள்ளக் கூடாது என்றாலும் இப்போது நான் - குரு என்று பேர் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறவன் - சொல்வதால் வரதக்ஷிணை விஷயத்தில் மட்டும் மாதா பிதாவின் அபிப்ராயம் சாஸ்திரப்படி இல்லாவிட்டால் பிள்ளைகள் அவர்கள் எதிர்த்து வாதம், ஸத்யாக்ரஹம் பண்ண வேண்டும்.

இது நம் யுவர்கள், கான்ஸர் மாதிரி நம் சமூகத்தில் புரையோடி அரிக்கிற ஒரு கொடுமையை அகற்றி நம் ஸமுதாய மறுமலர்ச்சிக்குச் செய்கிற மகத்தான தொண்டாக இருக்கும். நம் மதத்தின் மேன்மையில் உள்ள நம்பிக்கைக்காக மட்டும் இன்றி, மனிதாபிமானக் கடமையாகவும் இதை நம் இளைஞர்கள் செய்ய முன்வர வேண்டும்.

நெடுங்காலப் பயிராகவும், எதிர்காலத்துக்கு உத்தரவாதமாயும், தார்மிகப் பாதுகாப்பாகவும் இருக்கிற விவாஹம் என்ற விஷயத்தில் பெரியவர்கள் பார்த்துப் பெண்ணை நிச்சயம் செய்கிறபடிதான் பிள்ளைகள் செய்யவேண்டும். ஆனால் அந்தப் பயிரையே பூச்சி அரிக்கிற மாதிரி வந்திருக்கிற வரதக்ஷிணை கொடுமைக்கு உடந்தையாக இருந்து விடக்கூடாது. அப்பா, அம்மா சொற்படி கேட்பதோடு சமூகத்துக்குச் செய்ய வேண்டிய கடமையும் இருக்கிறதல்லவா? வரதக்ஷிணை கேட்டால் கல்யாணத்துக்குக் கண்டிப்பாக மறுத்துவிட வேண்டியது பிள்ளையின் கடமை. இது குடும்பத்துக்கு, மடத்துக்கு, சமூகத்துக்கு, பெண் குலத்துக்கு எல்லாவற்றுக்கும் செய்கிற தொண்டு. இப்படியாக இளைஞர்கள் எல்லாரும் சபதம் செய்து, அதை நிறைவேற்ற வேண்டும்.

மடத்தில் செய்துள்ள ஏற்பாடு

மடத்தில் செய்துள்ள ஏற்பாடு

ஏழெட்டு வயசில் கல்யாணம் பண்ண முடியாவிட்டாலும், சட்டம் அநுமதிக்கிற வயசு வந்தவுடனேயாவது கல்யாணத்தைப் பண்ணிவிட

வேண்டும் என்பதற்காக "கன்னிகாதான ட்ரஸ்ட்" என்று ஒன்றை ஆரம்பித்திருக்கிறோம்*.

ஏழையான பெண் குழந்தைகளுக்குப் பணம் இல்லாததால் கல்யாணம் நடக்கவில்லை என்று இருக்கக்கூடாது என்று உத்தேசத்தோடு இந்த டிரஸ்டிலிருந்து வசதியில்லாதவர்களுக்குப் பரம சிக்கனமாகச் செலவுக்குப் பணம் கொடுத்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறோம். இதற்கு உபகாரம் பண்ணுவது பெரிய புண்ணியம். நம்முடைய தர்மத்துக்கு சேவை செய்கிற பாக்கியத்தை இது தரும்.

மற்ற ஜாதிகள் பிராம்மணர்களைப் போல இத்தனை கிரிசை கெட்டுப் போகவில்லை. அந்த ஜாதிகளில் இத்தனை வரதக்ஷிணைக் கொடுமையோ, பெண்கள் இத்தனை பெருவாரியாகக் காலேஜ் படிப்பு, உத்யோகம் என்று போய் ஸ்வயேச்சையாகத் திரியும்படித் 'தண்ணி தெளித்து' விட்டிருக்கிற நிலைமையோ இல்லை. ஆதலால் ஏழைப் பிராம்மணப் பெண்களை உத்தேசித்தே இந்த டிரஸ்ட் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

இந்த கன்னிகாதான டிரஸ்டுக்கும் சரி, வேதரக்ஷண நக்ஷத்திரக் காணிக்கைக்கும் சரி, பிராம்மணர்களைத் தவிர மற்றவர்களிடம் பணம் வாங்கக் கூடாது என்பது என் அபிப்ராயம். காரணம், இவன் பண்ணின தப்புக்கு மற்றவர்களை penalty [அபராதம்] செலுத்தும்படிப் பண்ணக்கூடாது என்பதுதான். வேதத்தை விட்டது இவன் பண்ணின பெரிய தப்பு. சட்டத்துக்கு உட்பட்டுகூட அதன்படியான மினிமம் வயசிலும் பெண்களுக்குக் கல்யாணம் பண்ணாமல் விட்டிருப்பது, அதே மாதிரி அல்லது அதைவிடப் பெரிய தப்பு. அதனால் இந்தத் தப்புக்களை நிவருத்தி பண்ணுவதற்காகச் செய்திருக்கிற ஏற்பாடுகளுக்கு இவனேதான் பணம் கொடுக்க வேண்டும். மற்றவர்களை உபத்ரவிக்கக் கூடாது. அப்படிச் செய்தால் இது இரண்டோடு மூன்றாவது தப்பாகும். பிராம்மணன்தான் இப்பொழுது எந்தத் தொழிலுக்கு வேண்டுமானாலும் போய் சம்பாதிக்கிறானே! வேண்டாத க்ளப்களுக்கும் கேளிக்கைகளுக்கும் யதேஷ்டமாகச் செலவழிக்கிறானே! அதனால் இவனேதான் இந்த இரண்டுக்கும் கொடுக்க வேண்டும் என்பது என் அபிப்ராயம்.

திருமாங்கல்யம், கூறைப்புடவை, மூஹூர்த்த வேஷ்டி இவை கொடுத்து வெகு சிக்கனமாகக் கல்யாணத்தை முடிப்பதற்கு கன்னிகாதான டிரஸ்டின் மூலம் திரவிய ஸஹாயம் செய்யப்படுகிறது.

வேதரக்ஷணத்துக்காகப் பண்ணிய ஏற்பாடுகளின் அளவுக்குக் கூட இந்தக் கன்யாதான ஏற்பாடு திருப்திகரமாகப் பிரச்சனையைத் தீர்க்கவில்லை. இதை ரொம்ப வருத்தத்தோடு சொல்கிறேன். கடப்பாரையை முழுங்கினவனுக்கு சுக்குக் கஷாயம் கொடுத்த மாதிரி, குட்டிச் சுவராகப் போன பிராம்மண சமூகத்துக்கு ஏதோ துளிதான் இதனால் பண்ண முடிந்திருக்கிறது. இப்போது கரை புரண்டு வந்திருக்கிற அதர்மப் பிரவாஹத்துக்கு அணை போட வேண்டும் என்ற எண்ணமே பெண்ணைப் பெற்றவர்களுக்கு இல்லாததால் ட்ரஸ்டை utilise செய்து கொள்ள [பயன்படுத்திக் கொள்ள] போதுமானவர்கள் வரவில்லை. காலத்தில் கல்யாணமாகவில்லையே என்ற கவலை பெண்ணைப் பெற்றவர்களுக்கு விட்டுப் போய், அவர்கள் பாட்டுக்குப் பெண்ணை சம்பாத்தியத்துக்கு விட்டுவிடலாம் என்று ஹாய்யாக நினைக்கிற பொழுது, நாங்கள் 'டிரஸ்ட்' வைத்து என்ன பண்ணுவது? இப்போது பெண்ணைப் பெற்றவர்கள் பிள்ளை தேடுவதற்குப் பதில் அவளுடைய உத்தியோகத்துக்குத்தான் ரெகமன்டேஷன் தேடுவதாக நம் தேசத்தில் துர்த்தசை ஏற்பட்டிருக்கிறது. மிஞ்சினால் வருஷத்தில் ஐம்பது கலியாணத்துக்கு உதவி செய்கிறோம். ஒரு வருஷத்தில் ஐயாயிரம் பெண்கள் வேலைக்குப் போகிறார்கள். அதைப் போலப் பத்து மடங்கு பெண்கள் உத்தியோகம் தேடி அலைகிறார்கள் என்றால் நாங்கள் சொல்கிற வயசில் கல்யாணம் பண்ணிக்கொள்ள 50 பேர்தான் கிடைக்கிறார்கள்! இந்த டிரஸ்ட் வைத்தது, ஏதோ என் duty -ல் நான் fail ஆகவில்லை என்று என்னை நானே ஸமாதானப் படுத்திக் கொள்ளத்தான் கொஞ்சம் பிரயோஜனப்படுகிறது!

சட்ட வரம்பு தாண்டினவுடனேயே கல்யாணம் பண்ணிக் கொடுக்கும்படியாகவாவது முன்னேற்பாடுகளைத் தயாராகச் செய்துவைத்துக் கொள்ளும்படி தாயார் தகப்பனார்மார்களுக்கு ஒரு

மானம், வேகம், சுரணை பிறக்காதா என்பதால் இப்படி பச்சையாகச் சொல்கிறேன்.
* கன்னிகாதான 'ட்ரஸ்ட்' முகவரி "ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கர மடம், காஞ்சீபுரம்" என்ற முகவரிக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

வாஸ்தவமான சீர்திருத்தம்

வாஸ்தவமான சீர்திருத்தம்

இத்தனை வயசுக்குக் கீழே பண்ணக் கூடாது என்று flooring (அதம பக்ஷ வரம்பு) வைத்த சட்டத்திலே இத்தனை வயசுக்கு மேலே போகக் கூடாது என்று ceiling -ம் [உச்ச வரம்பும்] வைத்திருக்கக் கூடாதா என்று நினைக்கும்படியாக இருக்கிறது!

இப்போது 25 வயசு, 30 வயசு என்று பெண்கள் கலியாணமாகாலிருப்பதற்குச் சட்டத்தைக் குறை சொல்வது துளிக்கூட நியாயமே இல்லை. நம்முடைய அசிரத்தைதான் இன்றைய கோளாறுகளுக்கெல்லாம் காரணம். பூணூல் போடுவதற்கு சாரதா சட்டம் இல்லையே! ஏன் முப்பது வயசுக்குக் கல்யாணத்தோடு சேர்த்து [பூணூல்] போடுகிறோம்? சாஸ்திர விஷயத்தில் நமக்கு அத்தனை அலக்ஷியம்!

இந்தப் பொதுவான அசிரத்தையோடு, கல்யாணம் பூணூல் முதலான காரியங்களைப் பெரிய தடபுடல் உத்ஸவமாகச் செய்வதற்குப் பணம் தயார் பண்ணிக் கொள்வது, எல்லாவற்றிலும் பெரிய தீமையாக கலியாணம் என்றால் ஒரு ஆயுஸுகால சேமிப்பும் போதாத அளவுக்கு வரதக்ஷிணைக்காகவும், சீர் செனத்திக்களுக்காகவும் செலவழிக்க வேண்டியிருப்பது ஆகியனவும் சேர்ந்து சாஸ்திரோக்தமான கால கெடுவின்படி இந்த ஸம்ஸ்காரங்களைப் பண்ணுவதற்கேயில்லை என்ற ஸ்திதிக்குக் கொண்டு விட்டிருக்கிறது*.

வேத சாஸ்திரங்களில் இவற்றுக்குப் பண ஸம்பந்தமே கூறப்படவில்லை. இது நாமாகப் பண்ணிக் கொண்ட அனர்த்தம். நான் மேலே சொன்ன எட்டுக் கல்யாணங்களில் எதிலுமே பெண்ணையும் கொடுத்துப் பணமும் கொடுப்பதாக இல்லை. ஆஸுர விவாகத்தில்கூட

பெண் வீட்டுக்காரர்களுக்குத் தான் பணம் கொடுத்துப் பதிலுக்கு பெண் வாங்கிக் கொள்கிறான். அந்த வியாபாரமே அஸுரத்தனம் என்றால், "பெண்ணையும் கொடுத்துப் பணத்தையும் கொடு" என்று கேட்பது நம் தர்ம சாஸ்திரக்காரர்கள் கற்பனைகூடச் செய்து பார்க்காத ஒன்றுதான். 'கன்யா சுல்கம்' என்பதாக பெண்ணுக்குக் கொடுப்பதையாவது கொஞ்சம் சாஸ்திரத்தில் ஒப்புக் கொண்டிருக்கிறதே தவிர, பிள்ளை வீட்டாருக்கு வரதக்ஷிணை கொடுப்பதற்கு அதில் ஆதாரமேயில்லை. நிஜமான கல்யாணச் சீர்திருத்தம் வரதக்ஷிணை ஒழிப்புதான்.

அதைப் பண்ணாமல் வயசு விஷயத்துக்குச் சீர்திருத்தம் கொண்டு வந்ததில் நம்முடைய குடும்ப-சமூக வாழ்க்கை முறையே புரண்டு விட்டிருக்கிறது. பெண்கள் உத்யோகத்துக்குப் போவதைதான் சொல்கிறேன். வரதட்சிணைக்கும், சீருக்கும், ஆடம்பரக் கல்யாணத்துக்கும் வேண்டிய அளவு பணம் சேர்க்க முடியாதபோது, சாரதா சட்டம் ரொம்ப அநுகூலமாக வந்து கல்யாணத்துக்கு அவசரமில்லாமல் அவகாசம் தந்தது.

* "தெய்வத்தின் குரல் முதற்பகுதியில்" உள்ள "வரதக்ஷிணை பிரச்னை" என்ற உரை பார்க்கவும்.

பெண்கள் உத்தியோகம் பார்ப்பது

பெண்கள் உத்தியோகம் பார்ப்பது

அப்புறம், கல்யாணமும் ஆகாமல் வெறுமே வீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிற பெண், படித்து வேலைக்குப் போய் இரண்டு காசுதான் கொண்டு வரட்டுமே, கல்யாணச் செலவுக்கும் அது உதவுமே என்கிற எண்ணத்தில் பெண்களை உத்யோகத்துக்கு அனுப்புகிற வழக்கம் ஆரம்பித்தது. முதலில் வெட்கப்பட்டுக் கொண்டு, அவளே சம்பாதித்துக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும்படியாக விடுவது தகப்பனாருக்கு ரொம்ப அவமானம் என்ற உணர்ச்சியோடு வேலைக்கு அனுப்பினார்கள். நல்ல யௌவனத்தில் சித்த விகாரங்களைத் தூண்டி விடுகிற சூழ்நிலையில் இப்படிப் பெண்களை விடுகிறோமே என்று அப்போது கொஞ்சம் பயம், கவலை எல்லாமும் இருந்தது. ஆனாலும் போகப் போக என்ன ஆகியிருக்கிறது என்றால் 'குளிர்' விட்டு விட்டது.

ஜனகர் மாதிரியான ராஜ ரிஷிகளே கன்யாப் பெண்ணைக் கல்யாணமாகாமல் வைத்துக் கொண்டிருப்பது வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிற மாதிரி என்று பயந்ததாகப் புராணங்களில் பார்க்கிறோம். அந்த விவஸ்தை இப்போது கெட்டுவிட்டது; கட்டுவிட்டுப் போச்சு! அவமானமாக முதலில் நினைத்தே இப்போது நாகரிக முன்னேற்றத்துக்கு அடையாளமாக ஆகிவிட்டிருக்கிறது. பெண்ணைப் பெற்றவர்கள் தங்கள் பொறுப்பு உறைக்காமல், கூச்சம், கவலை, பயம் எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தங்கள் பெண் பெரிய உத்தியோகம் பார்க்கிறாள் என்று பெருமைப்படுகிற அளவுக்கு நம் தர்மம் ஹீன ஸ்திதி அடைந்திருக்கிறது. உத்யோகம் பார்க்கிற பெண்கள் என்னிடம் ப்ரமோஷன் ஆவதற்கு அநுக்கிரஹம் கேட்கிறதும், நானும் கண்டும் காணாத மாதிரி இருந்து கொண்டு எல்லோருக்கும் நல்ல சாமியாராகப் பெயர் வாங்கிக்கொள்வதாகவும் ஆகியிருக்கிறது!

சீர்திருத்தக்காரர்கள், 'ஸ்திரீகள் காலேஜில் படித்து உத்தியோகம் பண்ணுவது பெரிய முன்னேற்றம்; இதனால் முன்னே பண்ணின அநீதி போய்விட்டது' என்கிறார்கள். முன்னே ஸ்திரீகளுக்கு அநீதி பண்ணவேயில்லை என்பது என் கட்சி. அப்படிப் பண்ணியிருந்தால், புருஷனுக்குத்தான் பண்ணியிருந்தது என்றுகூட வேடிக்கையாகச் சொல்வேன். ஏன்? ஒரு புருஷப் பிரஜையானவன் பிரம்மச்சரிய ஆசிரமம் முடித்ததிலிருந்தே கிருஹஸ்தாச்ரம தர்மங்களை மேற்கொண்டு ஔபாஸனாதி ஸம்ஸ்காரங்களைப் பண்ணினால்தான் அவனுடைய ஜன்மா கடைத்தேறும். ஸ்திரீப் ப்ரஜைக்கோ புருஷன் பண்ணுகிற ஸம்ஸ்காரங்களுக்கெல்லாம் மேலாக அவனிடம் இவள் மனஸை அர்ப்பணம் பண்ணி பதிவிரதையாயிருப்பதே ஜன்மாவைக் கடைத்தேறச் செய்கிறது. இது பெண்களுக்கு இழைத்த அநீதி என்று சீர்திருத்தக்காரர்கள் சொன்னாலும், எனக்கோ புருஷனைவிட பெண்ணுக்குத் தான் ரொம்பவும் ஸாதகமாக நம் சாஸ்திரத்தில் பண்ணியிருக்கிறது என்று தோன்றுகிறது. ஏனென்றால் அநேக ஸம்ஸ்காரங்களையும், அப்புறம் சிரவண, மனன, நிதித்யாஸனாதிகளையும் பண்ணித்தான் ஒரு புருஷனுக்கு மனோநாசம் உண்டாகி ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஸித்திக்கிறது. அந்த ஸாதனையின் முடிவான மனோநாசம் ஒரு பதிவிரதைக்குப் பதியிடம்

சரணாகதி பண்ணுவதாலேயே ரொம்ப சீக்கிரத்தில் ஈஸியாக ஏற்பட்டு விடுகிறது. பதியின் இஷ்டத்தை அநுஸரிப்பதால் இவளுக்குத் தன்னிஷ்டம், மானாவமானம் எல்லாம் போய் அஹங்காரம் கரைந்து, மனோநாசத்துக்கு ரொம்பவும் கிட்டே போய் விடுகிறாள். மனஸை எங்கேயோ பூர்ணமாக அர்ப்பணம் பண்ணி, சரணாகதி என்று இருந்துவிட்டால் அப்புறம் மனோநாசம் பக்கத்திலேயே தானே? இன்றைக்கு உத்தியோகம் பார்க்கிற பெண்கள் பெறுகிற ப்ரமோஷனுக்கெல்லாம் மேலான ப்ரமோஷன் இப்படி அவளை ஆத்மபரிசுத்தி பண்ணி உச்சத்துக்குத் தூக்குவதுதான். இப்படி பதியிடம் மனஸை அர்ப்பணம் பண்ணியே தான் மஹா பெரிய ரிஷிகளை விட அதிகமான சக்திகளை நம் தேசத்து பதிவிரதா ஸ்திரீகள் பெற்றிருக்கிறார்கள். அவள் பெய் என்றால் மழை பெய்கிறது என்று திருவள்ளுவர் சொல்கிறார். ஸூரியனை உதிக்காதே என்று அவள் சொன்னால் உதிப்பதில்லை! செத்த புருஷனை யமதர்ம ராஜாவிடமிருந்து அவளால் திரும்பவும் வாங்கிக் கொண்டு வர முடிகிறது. எந்த ரிஷிக்கும், தெய்வத்துக்குமே கூட கொடுக்காத உசந்த ஸ்தானத்தை இப்பேர்ப்பட்ட பதிவிரதைகளுக்குத்தான் நம் சாஸ்திரமும் சம்பிரதாயமும் தருகிறது. அவள் தெய்வங்களின் மேலேயே தண்ணியைத் தெளித்து தன் குழந்தைகளாக்கிக் கொண்டு விடுகிறாள் என்று புராணத்தில் பார்க்கிறோம். ஆகையால் பெண் எப்படியிருந்தால் நிஜமான உயர்வைப் பெறுவாளோ, அதைச் சொல்லி அப்படிப்பட்டவளைக் கோவில் எடுத்துக் கும்பிடுகிற நம் சாஸ்திரம் ஒரு நாளும் ஸ்திரீயை மட்டம் தட்டவில்லை.
சீர்திருத்தவாதிகள்தான் அவளை அப்படி வளர முடியாதபடி மட்டப்படுத்துகிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.

ஆக விவாஹம் என்பது புருஷனை சுத்தப்படுத்துகிற அநேக ஸம்ஸ்காரங்களில் ஒன்று என்றால், ஸ்திரீயையோ அத்தனை ஸம்ஸ்காரங்களும் இல்லாமலே அவற்றின் முடிந்த பயனான பூர்ணத்துவத்தைப் பெறப் பண்ணுவதாகும். இப்பேர்ப்பட்ட ஸம்ஸ்காரத்தின் ஸாரத்தை விட்டுச் சக்கையாக ஒப்புக்கு ஏதோ இப்போது நடக்கிறது. விவாஹம் என்ற ஸம்ஸ்காரமும் கிருஹஸ்தாச்ரமும் லாவண்யம், வீர்யம், இந்திரிய ஸௌக்யம் இவற்றை மட்டும் குறித்த விஷயமல்ல என்பதையும், ஜன்மா

கடைத்தேற வழியாகவே அது வகுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் புரிந்து கொண்டால் சாஸ்திரம் சொல்லியிருப்பதே சரி என்ற அறிவு உண்டாகும்.

பெண்கள் உத்தியோகம் பார்ப்பதால் பொருளாதார ரீதியிலேயே உண்டாகியிருக்கிற ஒரு அனர்த்தத்தை யாரும் கவனித்ததாக தெரியவில்லை. Employment problem [வேலையின்மைப் பிரச்சனை] –ஐ தான் சொல்கிறேன். சில வருஷங்களுக்கு முந்தி 'கலியாணமாகிற வரையில் பெண் வேலைப் பார்க்கட்டும்; இதனால் அவள் கல்யாணமாகவில்லையே என்பதை நினைத்து நினைத்து அழுது கொண்டு வீட்டோடு இருக்காமல் அவளுக்கு ஒரு போக்காக இருக்கும். அதோடுகூட, பணசம்பந்தமானதாகப் பண்ணப்பட்டுவிட்ட கல்யாணத்தில் வரதக்ஷிணை, மற்ற செலவுகளுக்கு அவளுடைய சம்பாத்தியத்திலிருந்தே மிச்சம் பிடித்துச் சேமிக்கலாம்' என்ற எண்ணத்தில் ஒரு பெண்ணை விவாஹம் வரையில் வேலைக்கு விடுவதாகவும், அப்புறம் நிறுத்தி விடுவதாகவும் இருந்தது. புக்ககத்துக்காரர்களும் புருஷனும் அந்தப்பெண் கல்யாணத்துக்குப் பிறகு வேலைக்குப் போவதை நிஷித்தமாக [இழுக்காக] நினைத்தார்கள். ஆனால் வரவர இந்த பிராம்மண சமூகத்துக்கு இந்த ஒரு நூற்றாண்டாக ஏற்பட்டிருக்கிற பணத்தாசையில் இதுவும் மாறி, இப்போது கல்யாணமான பிற்பாடும் அவள் உத்தியோகத்திற்குப் போவது என்ற வழக்கம் வந்திருக்கிறது. இதனால் சிசு ரக்ஷணை [குழந்தை வளர்ப்பு] முதலான தாய்க் குலத்தின் உயர்ந்த கடமைகள் கெட்டுப்போய், வெள்ளைக்கார தேசங்கள் மாதிரி குடும்பம், பெற்றோர், குழந்தை என்பதெல்லாமே ஹ்ருதயபூர்வமாகக் கட்டுப்பட்டில்லாமல் பிஸினஸ் போல் ஆகியிருப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். எகனாமிக் [பொருளாதார] ரீதியில் இதனால் உண்டாகியிருக்கிற கெடுதலைப் பார்க்கலாம். இப்போது வேலையில்லை, வேலையில்லை என்று லட்சக்கணக்கில் ஆண்கள் திண்டாடுகிறார்கள். அதே சமயம் இன்னொரு பக்கம் பல குடும்பங்களில் புருஷன் உத்தியோகம் பார்ப்பது மட்டும் இல்லாமல் ஸ்திரீயும் வேலைக்குப் போகிறாள். அவன் மட்டில் வேலைக்குப் போய் இவள் வீட்டிலிருந்தால் இவள் பார்க்கிற வேலை உத்யோகமில்லாத ஒரு ஆணுக்கு கிடைக்குமல்லவா? ஆனாலும் தன் பொண்டாட்டியைத் தன்

சம்பாத்தியத்துக்குள்ளேயே கட்டும் செட்டுமாக வைத்துக் காப்பாற்றுவதுதான் கௌரவம் என்றில்லாமல் புருஷன் அவளையும் வேலைக்கு விட்டு அவளும்தான் காசு கொண்டு வரட்டுமே என்று இருக்கிறான். முதலில் தாயார் தகப்பனார் மானமில்லாமல் பெண்களை வேலைக்கு விடுகிறார்கள். அப்புறம் புருஷனும் அதையே பண்ணுகிறான். அந்த பெண்ணும் இதை ஒரு பெருமையாகவே நினைக்கிறது. ஆபீஸுக்குப் போய் உத்தியோக புருஷியாக இருந்த பிறகு வீட்டில் அடைபட்டுக் கிடக்கப் பிடிக்க மாட்டேன் என்கிறது. ஸ்வயமாக ஸம்பாதித்தால் புருஷன் தட்டிக் கேட்காமல் தன் இஷ்டப்படி செலவழித்துக் கொள்ளலாமே என்று இருக்கிறது.

வீட்டோடு இருந்தால் அடைபட்டுக் கிடப்பது என்று அர்த்தமேயில்லை. நம்முடைய சாஸ்திரங்கள், புராணங்கள் தாய் பாஷையிலும் ஸம்ஸ்கிருதத்திலும் இருப்பதற்குக் குறைவேயில்லை. அவற்றிலே ஒரு ருசியை ஏற்படுத்திக் கொண்டால் நாளெல்லாம் படித்தாலும் போதாமல் ஜன்மா முழுதும் படித்துக் கொண்டு ஸந்தோஷமாக இருக்கலாம். பல பெண்கள் ஸத்ஸங்கமாகச் சேர்ந்து ஒவ்வொரு வீட்டில் இவற்றைப் படிக்கலாம். கிளப் என்றோ ஸ்தாபனம் என்றோ போர்டு போட்டுக் கொண்டு காரியாலயம் மாதிரி இல்லாமல் வீடுகளிலேயே இதைச் செய்யவேண்டும். மெம்பர், பிரஸிடென்ட் மாதிரிப் பதவிகள் உண்டாகாமல், இவற்றுக்காகப் போட்டிச் சண்டைகள் இல்லாமல் இருக்க வேண்டுமென்பதால் [இப்படிச்] சொல்கிறேன். இதோடுகூட மடம், ஆலயம் முதலியவற்றுக்காக சுத்தமான மஞ்சள் குங்குமம் பண்ணிக் கொடுப்பது, முனை முறியாத அக்ஷதை பொறுக்கிக் கொடுப்பது போன்ற காரியங்களைச் செய்தால் பெரிய சமூகத் தொண்டாகவும் இருக்கும். ஸ்திரீத்வம் [பெண்மை] என்ற உயர்ந்த சரக்கு பறிபோகாமலே இப்படிப் பட்ட ஸத்காரியங்களைப் பண்ணி வந்தால் வீட்டோடு இருப்பது அடைபட்டிருப்பதாக இருக்காது. ஆத்ம ஸ்வதந்திரத்துக்கு வழியாக ஆனந்தமாகவே இருக்கும். ஸ்திரீத்வத்தயும் இழந்து கொண்டு துராசைகளைப் பெருக்கிக் கொண்டு உத்யோகத்திற்குப் போவதைவிட இதுதான் சிரேயஸ். ஸ்வாபாவிகமாகவும் [இயல்பாகவும்] பெண்களுக்கு எடுத்தது இதுவே. வீட்டில் அடைபட்டில்லை என்று ஆபீஸுக்குப் போவதால் எத்தனை தப்புக்களுக்கு இடம் கொடுத்துப்

போகிறது? 'பெண் விடுதலை' என்று பெரியதாகச் சொன்னாலும் ஆபீஸில் எத்தனை பேருக்கு அடங்கிப் பதில் சொல்லும்படி இருக்கிறது? இப்படி- யிருப்பதில் வாழ்க்கையில்தான் நிம்மதி உண்டா? நிம்மதியாகச் சமைத்துப் போட்டுச் சாப்பிடுவது; குழந்தை குட்டிகளின் வாத்ஸல்யத்தை பூர்ணமாக அநுபவிப்பது என்பதெல்லாம் இந்த 'விடுதலை' யில் உண்டா?

சொல்லி என்ன பிரயோஜனம்? அவரவர்க்கும் ஸ்வயநலம் என்று அவரவரும் நினைத்துக் கொண்டிருக்கிற ஒன்று தான் முக்கியமாக இருக்கிறதே தவிர சமூகத்தில் பிறத்தியார் கஷ்டப்பட நாம் காரணமாய் இருக்கக் கூடாது என்ற நியாய உணர்ச்சி கொஞ்சங்கூட இல்லை. புருஷன் பெண்டாட்டி என்று சில குடும்பங்களில் இரட்டை சம்பாத்தியமும், வேறு சில குடும்பங்களிலோ இரண்டு பேரில் ஒருத்தருக்கும் உத்தியோகம் இல்லாமல் பரிதாபமாகவும் இருக்கிற நிலையில் கல்யாணமான பிறகாவது பெண்கள் வேலைக்குப் போவதை நிறுத்திக் கொண்டால், அத்யாவசியமாக வேலை பார்த்தே ஜீவிக்க வேண்டிய ஒரு புருஷனுக்கு அந்த வேலை கிடைத்து அந்தக் குடும்பம் உருப்படுமே என்ற பிரக்ஞை வரவேண்டும். பெண்களை சரி-சமம் பண்ணுகிறோம் என்கிறவர்களும் இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டும்.

சரி நிகர் சமம் என்கிற வாதம் எதில் வரலாம், எதில் வரக்கூடாது என்ற வியவஸ்தையே இக்காலத்தில் தெரியவில்லை. ஒவ்வொன்றும் ஒரு விதமாக இருக்க வேண்டும். அப்படித்தான் பிரபஞ்ச வாழ்க்கை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. 'எல்லாம் ஒரே விதமாக ஆகவேண்டும்; அதுதான் சரி சமம்' என்ற வாதமே அடியோடு தப்பு. அப்படி ஆக்கினால் இயற்கையான வாழ்க்கைமுறையே பாழாகிவிடும். ஒன்றொன்றும் இயற்கைப்படி, ஸமூஹத்தின் மொத்த வாழ்வுக்கு அநுகூலமாக எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிருப்பது தான் அதற்கு நிறைவு. அதிலேதான் அதற்கு நிஜமான ஸௌக்கியம் உண்டு. இந்த நிறைவை விட்டு விட்டு, செயற்கையாக ஸமத்வம் என்று ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு அதற்காக ஓடுவதில் individual ஆகவும் [தனி நபரளவிலும்] நிஜமான நிறைவு அவரவர்க்கு உண்டாவதில்லை;

குடும்பம், ஸமூஹம் இவற்றின் வாழ்க்கையும் இதனால் கெட்டே போகிறது.

இயற்கைப்படி பெண்கள்தானே பிள்ளை பெற வேண்டும் என்று வைத்திருக்கிறது? நாம் எவ்வளவு ஸமத்வச் சண்டை போட்டாலும் அதை மாற்றமுடியாதல்லவா? பிள்ளையைப் பெற்றவளே அதை சவரக்ஷணை பண்ணுவது, அதற்காக கிருஹலக்ஷ்மியாக இருப்பது என்பதுதான் பெண்களுக்கு ஸ்வாபாவிக (natural) தர்மம். அதைப் பண்ணுவதால் அவர்களுக்கு ஒரு குறைவும் இல்லை. அதை விட்டதால் உயர்வும் இல்லை. அதனால் ஸமப்படுத்துகிற பேச்சுக்கு இங்கே அர்த்தமேயில்லை.

எடுத்துச் சொல்லிப் பயனுண்டா?

எடுத்துச் சொல்லிப் பயனுண்டா?

மிளகாய்க்கு நெய்விட்டுக் காரத்தை சமனம் பண்ணுகிறாற்போல் பிரகிருதி வேகங்களுக்கு விவாஹாதி ஸம்ஸ்காரங்களால் சமனம் உண்டாக்கப்படுகிறது. மிளகாயே இல்லாமல் இல்லை. அது இருக்கிறது. ஆனால் அதன் காரம் குடலை எரிக்காதபடி நெய் விட்டிருக்கிறது. லௌகிகமான, சரீர சம்பந்தமான ஸௌக்யம் கிருஹஸ்தாச்ரமத்தில் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அது கொழுந்து விட்டெரியாமல் ஏகப்பட்ட ஸம்ஸ்காரங்களால் புருஷனை ஓர் அளவில் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஸ்திரீக்கோ பாதிவ்ரத்யத்தோடு [கற்போடு] கூடின கிருஹரக்ஷணை என்ற ஒன்றே இத்தனை ஸம்ஸ்காரத்துக்கும் ஸமமாயிருக்கிறது. இது நமக்கு மனஸில் பட்டுவிட்டால் போதும். நாம் இந்த தேசத்தில் ஆத்ம சிரேயோ லக்ஷியம் எந்த நாளும் வீணாகி விடக் கூடாது என்று ஹ்ருதய சுத்தத்தோடு நினைத்து பகவானைப் பிரார்த்தனை பண்ணிக் கொண்டு, அருள் துணையை நம்பி, எடுத்துச் சொல்லிக் கொண்டேயிருந்தால் என்றைக்காவது ஒரு நாள் வழி பிறக்கும். இப்போது போகிற போக்கிலே முடிவான ஒரு நிலையில் போய் முட்டிக் கொண்டு கடைசியில் இது அத்தனையும் அனர்த்தம்தான் என்று என்றைக்காவது ஜனங்கள் விழித்துக் கொள்கிறபோது, மீள்கிற

வழி எது என்று தெரிவதற்காக நாம் சாஸ்திரத்திலுள்ளதைச் சொல்லிக் கொண்டேதான் இருக்க வேண்டும்.

'வர்ணாச்ரமம், பால்ய விவாஹம் முதலானதுகளைப் பற்றிச் சொல்லி என்ன பிரயோஜனம்? அநேகமாக இவற்றில் முக்காலே மூணுவீசம் போயே போய்விட்டதே! பல விஷயங்களில் ராஜாங்கச் சட்டமே சாஸ்திரத்துக்கு மாறாக வந்துவிட்டதே!' என்று கேட்கலாம். வாஸ்தவம்தான். அநேக விஷயங்களில் சட்டமே வந்து கையைக் கட்டித்தான் போடுகிறது.

Secular State என்று நம் ராஜாங்கத்துக்குப் பேர் சொல்கிறார்கள். 'மதச்சார்பில்லாதது' என்று இதற்கு அர்த்தம் சொல்கிறார்கள். அதாவது ஸமூஹ (social) விஷயங்களில் ஸர்க்கார் தலையிடலாமே தவிர, மத (religious) விஷயங்களில் தலையிடக் கூடாது என்று சொல்கிறார்கள். ஆனால் நம்முடைய மதத்திலே இப்படி மதம்–சமூகம் –வீடு–தனி மனுஷ்யன் என்று தனித்தனியாகப் பிரிக்காமல், எல்லாவற்றையும் சேர்த்துப் பின்னி integrate பண்ணி [ஒருங்கிணைத்து] அல்லவா வைத்திருக்கிறது? அதனால் சமூக விஷயம் என்று ஸர்க்கார் போடுகிற சட்டமும் மதத்தையே அல்லவா பாதிக்கிறது? இதை ஒப்புக்கொள்ளாமல் 'இன்னின்ன விஷயங்களோடு மதம் முடிந்துவிடுகிறது; மற்றதெல்லாம் ராஜாங்கம் ஸம்பந்தப்பட்ட ஸமூஹ விஷயம்' என்கிறார்கள்.

சரி, எல்லா மதத்திலுமே சில அம்சங்களிலாவது ஸமூஹ ஸமாசாரங்களும் வந்து விடுகிறதே, அவற்றின் விஷயத்திலும் இந்தக் கொள்கையைக் கடைபிடிக்கிறார்களா என்று பார்த்தால்– இங்கே தான் ரொம்ப வேதனையாயிருக்கிறது. 'ஸெக்யூலர் ஸ்டேட்'டில் எல்லா மதமும் ஸமம் என்று சொன்னாலும், சிறுபான்மை மதஸ்தர்கள் social reform சட்டங்களை ஆக்ஷேபித்து, "இது எங்கள் மதத்தில் சொன்னதற்கு விரோதமாயிருக்கிறது. இது குரானுக்கு விரோதம்;கிறிஸ்துவக் கோட்பாட்டுக்கு முரணானது" என்று சொன்னால் உடனே அந்த மதஸ்தர்கள் விஷயத்தில் இந்தச் சட்டங்களுக்கு விலக்கு தந்துவிடுகிறார்கள். இம்மாதிரிச் சிறுபான்மை மதஸ்தருக்கு மட்டும் குடும்பக் கட்டுப்பாடு போன்ற ஒன்றில் விலக்குத் தந்துவிடுகிறார்கள்.

இம்மாதிரிச் சிறுபான்மை மதஸ்தருக்கு மட்டும் குடும்பக்கட்டுப்பாடு போன்ற ஒன்றில் விலக்குத் தந்தால் எதிர்காலத்தில் அவர்களே பெரும்பான்மையாகி விடவும் இடமேற்படுகிறது. ஆனால் 'ஸெக்யூலர்ஸ்டேட்' டாக இருந்தும் ஹிந்து மத விஷயமாக மட்டும் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற தீர்மானம் ஏற்பட்டிருக்கிறது. 'மைனாரிட்டி ரிலிஜன்'காரர்கள் போல் நம்மிலே ஒரு சூடு பிறந்து ஆட்சேபிக்கிறவர்களே இல்லை. அப்படியே நாலு, பேர் எதிர்ப்புத் தெரிவித்தாலும், பிற்போக்குக்காரர்கள், பத்தாம் பசலிகள் (obscurantist) என்று அவர்களுக்குப் பெயர் கொடுத்துவிட்டுச் சட்டத்தைக் கொண்டு வந்துவிடுகிறார்கள்.

'ஸெக்யூலர் ஸ்டேட்' என்றால் மதச் சார்பில்லாத ஸர்க்கார் என்றே அர்த்தம். மத விரோதமான என்று அர்த்தமில்லை. ஒரு மதம் மட்டுமின்றி எல்லா மதமுமே அபிவிருத்தியாவது ஸெக்யூலர் ஸ்டேட்டுக்கு ஸம்மதமானதுதான்' என்றெல்லாம் பெரிசாகப் பிரஸங்கம் பண்ணுபவர்கள் பண்ணினாலும், பிரத்யக்ஷத்தில் ஹிந்து மதத்தைத் தவிர மற்ற மதங்களுக்கு விரோதமில்லாத காரியங்களைப் பண்ணுவதுதான் இங்கே ஸெக்யூலர் ஸ்டேட் எனறு நடந்து வருகிறது! தர்க்காஸ்து நிலம் மாதிரி ஹிந்து மதம் இருந்து வருகிறது.

"இது தெரிந்தும் ஏன் ஸாத்தியமில்லாத சாஸ்திர விஷயங்களை நச்சு நச்சு என்று சொல்கிறாய்?" என்றால் ---

இப்போது இப்படி இருந்தாலும் இன்னும் எப்படி எப்படி போகும் என்று சொல்ல முடியாது. 'அமெரிக்காவில் டாலரே விளைகிறது;அங்கே ஜனங்களுக்கு ஒரு குறையும் இல்லை' என்றுதானே போன தலைமுறையில் நினைத்தோம். ஆனால் இப்போது எப்படியிருக்கிறது? அந்த தேசத்து ஜனங்களுக்கு இருக்கிற குறை மாதிரி, சூன்ய உணர்ச்சி மாதிரி, வேறு யாருக்குமே இல்லை என்று தெரிய வருகிறது. டாலரினாலேயே இத்தனை குறையும் என்றும் தெரிகிறது! லௌகிக ஸௌக்கியத்தின் உச்சாணிக்குப் போன பிறகுதான் அவர்கள் இதிலே ஆத்மாவை எப்படி சூன்யமாக்கிக் கொண்டு விட்டோம் என்று விழித்துக் கொண்டிருக்கிறார்கள். டாலரில் மிதந்ததால் எத்தனை குடி,

கொள்ளை, கொலை, விபசாரம் முதலிய தப்புகளில் போய் விழுந்து விட்டோம் என்று உணர ஆரம்பித்திருக்கிறார்கள். . கடைசியில் மனஸில் நிம்மதியில்லையே, சாந்தி இல்லையே என்று நம்முடைய யோகம், ஞான விசாரம், பஜனை முதலானவற்றுக்கு கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

இதிலிருந்து, இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு நல்லதாகவே தோன்றி வந்த ஒன்று , அப்புறம் தலைதெறிக்கப் போன பிறகு அனர்த்தமானது என்று தெளிவாகிறது; அப்போது ஜனங்கள் விமோசனத்துக்கு ஓடுகிறார்கள் என்று தெரிகிறதல்லவா? இப்படியே இந்த இரண்டு தலைமுறைகளாக நல்லது என்று நினைத்து, பெரும்பாலும் நல்ல எண்ணத்துடனேயே, நம் தேசத்தில் பண்ணப்பட்டிருக்கிற சாஸ்திரத்துக்கு முரணான விஷயங்களாலும் எத்தனை ஹானி ஏற்பட்டிருக்கிறது என்பதை என்பதை இன்னொரு தலைமுறை உணரக்கூடும். இப்போதுகூட ஆங்காங்கே இந்த உணர்ச்சி கொஞ்சம் தலை தூக்கிக் கொண்டுதான் இருக்கிறது. ஆரம்பத்தில் நன்றாகியிருந்து குதிரைக்குட்டி மாதிரியாயிருந்து போகப் போக ஸ்வயரூபத்தை காட்டுகிற மாதிரிதான் சீர்திருத்தக் காரியங்கள் நடந்திருக்கின்றன என்று முடிவிலே முட்டிக்கொள்கிற ஸ்திதியில் தெரிய வரலாம். கீதையில் பகவான் இரண்டு வித ஸௌக்கியங்களைச் சொன்னார். 'யதக்ரே விஷமிவ, பரிணாமே அம்ருதோபமம்' என்பது ஒன்று. ஆரம்பத்தில் விஷம் போல இருந்துவிட்டு முடிவிலே எது அமிருதமாகிறதோ அதுதான் உயர்ந்த ஸாத்விக ஸௌக்யம். முதலில் ஆலஹாலம் வந்து விட்டுப் பிறகு அமிருதம் வந்தது இப்படித்தான். சாஸ்திரம், தனி மநுஷ்யன், குடும்பம், ஸமூஹம் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறதே என்று ஆரம்பத்தில் விஷம் மாதிரிக் கசந்தாலும், போகப் போக இதுதான் எல்லாக் கட்டுகளும் தெறித்துப் போகிற ஆத்ம ஸ்வதந்திரம் என்கிற பேரானந்தத்தைத் தருகிற அமிருதம் என்று தெரியும். இதிலே விஷம் தற்காலிகம்; அமிருதம் சாச்வதம். இன்னொரு ஸௌக்யம், 'யதக்ரே அம்ருதோபமம், பரிணாமே விஷமிவ' என்பது. முதலில் அமிருதமாகத் தித்தித்து விட்டுப் போகப்போக விஷமாகிவிடுவது. இங்கே அம்ருதம் தாற்காலிகம்; விஷம் சாச்வதம். அமெரிக்காவில் டாலர் இப்படித்தான் முதலில் அம்ருதமாயிருந்துவிட்டு இப்போது விஷமாகியிருப்பதை

அவர்களே தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்படியே இங்கும் எதிர்காலத்தில் தனி மனித நிறைவு, ஸமூஹக் கட்டுக்கோப்பு இரண்டும் ஹானியடைந்து, சாஸ்திர விரோதமாகப் பண்ணினதெல்லாம் முதலில் அம்ருதமாயிருந்தாலும் பிறகு இப்படி விஷமாகி விட்டதே என்று புரிந்து கொண்டு அழுகிற காலம் வரக்கூடும். அப்போது அமிருதத்தைத் தேடுகிறவர்களுக்கு அது எங்கேயிருக்கிறது என்று தெரியவேண்டும் அல்லவா? இப்போது நாம் பண்ணுகிற மாறுதல்கள்தான் முற்றி அவர்களுக்கு விஷம் தலைக்கேறிய ஸ்திதி ஏற்படப் போகிறபடியால் இதை (அமிருதம் எங்கேயிருக்கிறது என்பதை) அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டியது நம் கடமை. அதற்காகத்தான், இப்போது நாமே இந்த சாஸ்திரோக்தமான ஸமாசாரங்கள் என்ற அமிருதத்தைக் குடிக்காவிட்டாலும், பின்தலைமுறைகளில் நம்மைவிட க்ஷீண தசைக்குப் போய் விஷம் தலைக்கேறி விமோசனம் தேடுகிறவர்கள் தேடும்போது அவர்களுக்கு உதவுவதற்காகவது இந்த ஸமாசாரங்களை (குழி தோண்டிப் புதைத்து விடாமல்) சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். இந்த தீபம் வருங்காலத்திலாவது வழிகாட்ட விடவேண்டும்.

இந்த எண்ணத்தில்தான், காரியத்தில் செய்ய முடியாமல் கையைக் கட்டிப் போட்டிருந்தாலும் இன்னம் வாயைக் கட்டவில்லையே என்பதால் சாஸ்திர விதிகளை ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

செலவில் சாஸ்திரோக்தம்

செலவில் சாஸ்திரோக்தம்

வயசு விஷயத்தில் சாஸ்திரோக்தமாகப் பண்ணுவதற்கு முன்னால் பண விஷயத்தில் சாஸ்திரோக்தமாகப் பண்ணுவதற்காவது இப்போதே ஆரம்பித்து விடவேண்டும். முன்னேயே சொன்னாற் போல் சாஸ்திரப்படி விவாஹம் என்பது பணத்தைப் பற்றிய விஷயமில்லை.

வேறொன்றும் சாஸ்திரோக்தமாகப் பண்ண நமக்கு மனஸோ, தைரியமோ இல்லாவிட்டாலும் கலியாணத்தை economic problem -ஆகப்

பண்ணாமல் இது ஒன்றையாவது சாஸ்திரப்படி வெகு சிக்கனமாக நடத்தப் பார்க்கலாம்.

விவாஹம் என்பது ஸந்தியாவந்தனம் மாதிரியான செலவில்லாத ஒரு வைதிக கர்மாதான். இதில் நூதன தம்பதிக்கு [புது மணமக்களுக்கு] புது வஸ்திரம் – நூலே போதும் – தங்கத்தில் லேசாக திருமாங்கலியம், ரொம்பவும் நெருங்கின பந்துக்களை மட்டும் அழைத்துச் சாப்பாடு போடுவது, முஹூர்த்த சமயத்தில் ஒரு மங்கள வாத்திய சப்தம் கேட்கப் பண்ணி அதற்காக ஏதோ கொடுப்பது, வாத்தியார் தக்ஷிணை ஆகியவற்றை மட்டுமே செய்தால் போதும். இது பூர்ணமாக சாஸ்திர சம்மதமானதுதான். இப்படிப் பண்ண ஒரு குமாஸ்தாவுக்கும் முடியாமல் போகாது.

பணம் கொழித்தவர்களுங்கூட தடபுடல் பண்ணாமல் இப்படிச் சிக்கனமாகவே பண்ணவேண்டும். ஏனென்றால் அவர்கள் பண்ணுகிற டாம்பிகம் மற்றவர்களுக்கு ஒரு கெட்ட precedent [முன்மாதிரி] ஆகிவிடுகிறது! ஆகையால் கச்சேரி, ஃபீஸ்ட் என்று தாங்கள் செலவிடக் கூடிய இந்தப் பணத்தைக் கொண்டு வசதியில்லாத ஒரு ஏழைப் பெண்ணுக்கு கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும். இப்படிப் பண்ணினால் தண்டச் செலவாகப் போகக்கூடியதை தர்மக் கரென்ஸியாக மாற்றிக் கொண்டதாகும். ஒவ்வொரு பணக்காரரும் தம் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணுகிறபோதே அதில் செலவைக் கட்டுப்படுத்தி இன்னொரு ஏழைப் பெண் கண்ணைக் கசக்காமல் வழி திறந்து விடலாம். 'மாஸ்' உபநயனம் மாதிரியே பல பேருக்கு ஒரு பொது இடத்தில் பொதுச் செலவில் கல்யாணங்கள் நடத்த ஏற்பாடு செய்யலாம். இதனால் அவரவருக்கும் செலவு நிரம்பக் குறையும்.

இப்போதெல்லாம் கல்யாண மண்டபங்களின் வாடகையே பாதிச் செலவை விழுங்கி விடுகிறது என்கிறார்கள். எத்தனை சின்ன கல்யாணமானாலும் இக்கால பிளாட் குடித்தனத்தில் வீட்டிலேயே பண்ண முடியாதுதான். அதனால் தர்மிஷ்டர்கள் ஒன்று சேர்ந்து வசதியில்லாதவர்களுக்காக அங்கங்கே சின்ன சின்ன கல்யாண மண்டபங்கள் கட்டித்தர வேண்டும்.

கல்யாணம் என்றாலே வெட்கப்பட்டுக்கொண்டு ஓடின பெண்கள், அப்புறம் [கல்யாணம்] ஆகுமா ஆகுமா என்று வாய்விட்டுக் கதறுகிற பரிதாப நிலை ஏற்பட்டு, இப்போது நிலைமை முற்றி கல்யாணமே இல்லாமல் உத்தியோக புருஷியாக ஸ்வயேச்சையாக இருக்கலாமென்று ஏற்பட்டிருக்கிறது. இதனால் நம் பண்பாட்டின் ஜீவநாடியான ஸ்திரீதர்மம் வீணாகி வருகிறது. நடக்கக் கூடாததெல்லாம் ஒவ்வோரிடத்தில் நடந்து விடுகிறது.

இதிலே வயிற்றெரிச்சல் என்னவென்றால், இந்தத் தப்புக்களைத் திருத்தல் வேண்டும் என்ற வேகம் யாருக்கும் வராதது மட்டுமில்லை; 'ஸைகாலஜி', அது இது என்று சொல்லிக் கொண்டு இந்தத் தப்புக்களையே விஸ்தாரம் பண்ணி, அவற்றுக்கு ஸமாதானமும் சொல்லி, கதைகள் எழுதி, ஸினிமாக்கள் எடுத்து, இதனாலேயே இதை நன்றாக அபிவிருத்தியும் பண்ணி வருகிறார்கள்! கேட்டால் (கேட்பதற்கே ஆளில்லை!) 'எழுத்து ஸ்வதந்திரம், கல்பனை ஸ்வதந்திரம், கலா ஸ்வதந்திரம்' என்பார்கள். சாஸ்திரத்தைத் தவிர எல்லாவற்றுக்கும் குடியரசு யுகத்தில் ஸ்வதந்திரம் ஏற்பட்டிருக்கிறது!

விவாஹம் சாஸ்திரப்படிப் பொருளாதார விஷயமில்லை என்பதில் ஆரம்பித்தேன்.

'எல்லாம் ஸரி! ஆனால் சாஸ்திரத்தில் நாலு நாள் கல்யாணம் சொல்லியிருக்கிறதே! நாலு நாள் விருந்துச் சாப்பாடு, சத்திர வாடகை என்றால் செலவாகுமே!' என்கலாம்.

நாலு நாள் கல்யாணத்தைப் பற்றிச் சொல்கிறேன்: சாஸ்திரத்தில் தாரித்திரியம் உண்டாக்குவதற்காக கர்மாநுஷ்டானங்கள் சொல்லப்படவில்லை. விவாஹம் பண்ணுகிறது ஒரு நாள்தான். அப்புறம் மூன்று நாள் மாப்பிள்ளை தன் சொந்த வீட்டில் பிரம்மசரிய தீக்ஷையோடு இருக்கவேண்டும். அந்தக் காலத்தில் மேளம் வேண்டாம். நலுங்கு வேண்டாம். மாற்ற விரும்புகிறவர்கள் இப்படி மாற்றலாம். இதுதான் வாஸ்தவமான சீர்திருத்தம் (reform) பிள்ளையகத்துக்காரர் இதைச் செய்யலாம். "ஒருநாள் கல்யாணம் உங்கள் அகத்தில் செய்வேன். பாக்கி மூன்று நாள் எங்கள் அகத்தில் செலவில்லாமல் பண்ணுவேன்" என்று சொல்லிவிடலாம். கல்யாணம்

ஆன மறுநாள் கிருஹஸ்தன் ஔபாஸனாக்னியைத் தன் வீட்டிற்குக் கொண்டு வர வேண்டும். அப்படி ஔபாஸன குண்டத்தை எடுத்துக் கொண்டு வரும் போதும், வண்டியில் வைக்கும் போதும், நுகத்தடியில் மாடுகளைப் பூட்டும்போதும், வழியில் வைக்கும் போதும், மறுபடியும் வண்டியில் வைக்கும்போதும் சொல்ல வேண்டிய மந்திரங்கள் இருக்கின்றன. இப்பொழுது மந்திரோக்தமாகவே மோட்டாரிலோ, ரயிலிலிலோ வைத்துக் கொண்டு வரலாம். அதனால் ஒரு தோஷமும் இல்லை. அந்த நாளில் பக்கத்து ஊர்களிலேயே சம்பந்தம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அதனால் ஔபாஸன குண்டத்தை கொண்டு போவது ஸௌகரியமாக இருந்தது. அல்லது நாலு நாள் கலியாணத்தை இன்னொரு விதம் பண்ணலாம். இப்பொழுது கலியாணம் நடத்துகிற இடத்திலேயே பிள்ளையகம் என்று ஒன்று வைத்துக் கொள்கிறோமே, அங்கேயோ, வாடகை அதிகமானால் யாராவது உறவினர் வீட்டிலோ மூன்று நாளும் பண்ணவேண்டியதைப் பண்ணலாம். யாரையும் சாப்பிடச் சொல்லவேண்டாம். ஸம்பந்திக்குக்கூடச் சாப்பாடு போட வேண்டாம். உபாத்தியாயருக்கு மட்டும் ஸம்பாவனை பண்ணினால் போதும். ஒரு நாளில் எல்லாவற்றையும் முடித்துவிடுவது சாஸ்திர சம்பந்தமே இல்லை.

விவாஹத்துக்கு ஸம்வத்ஸர தீக்ஷை, அதாவது விவாஹமாகி ஒரு வருஷம் பிரம்மசரிய நியமம்; பிறகே சாந்தி கல்யாணம் – என்கிற நிலைமை பிற்பாடு மாறி, நாலு நாலாவது இப்படி நியமத்தோடு இருப்பதாக ஏற்பட்டது. கழுதை கட்டெறும்பாகத் தேய்ந்து அப்புறம் கட்டெறும்பும் இல்லை என்று இப்போது நடப்பதுபோல் ஒரே நாளோடு தீர்த்து விடக்கூடாது. மூன்று நாள் ஔபாஸனம் நிச்சயம் செய்ய வேண்டும். தெலுங்கர்கள் கல்யாணத்தில் வதூ-வரர்கள் [மணமக்கள்] வெள்ளை நூல் வஸ்திரத்தை மஞ்சளில் நனைத்துக் கட்டிக் கொள்ளுகிறார்கள். அது சிக்கனமாக இருக்கிறது. எத்தனை தனிகரானாலும் அதைத்தான் கட்டிக் கொள்ள வேண்டுமென்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். உத்தர தேசத்திலும் ஸாதாரணமாக ஸாமான்ய வஸ்திரங்களைத்தான் பெண்கள் கட்டிக் கொள்ளுகிறார்கள். இங்கே நாமும் அப்படிச் செய்ய ஆரம்பிக்கலாம்.

பிரவேச ஹோமம் என்று விவாஹ காலத்தில் ஒன்று செய்வதுண்டு. இது வரன் தன் வீட்டில் பிரவேசிப்பதற்குப் பண்ணுவது. விவாஹாக்கினியை எடுத்துக் கொண்டுபோய் ஔபாஸன ஹோமத்தைத் தன்னுடைய வீட்டில் அவன் பண்ண வேண்டும். அங்கே பண்ணுவதற்குத்தான் ஔபாஸனம் என்று பெயர். ஸௌகர்யத்தை உத்தேசித்தும் சாஸ்திர சம்மதமாகவும் நான் முன்னே சொன்னபடி பிள்ளையகத்தார் வந்து தங்கும் ஜாகையிலே செய்யலாம். கோவிலுக்குப் போய் ஒரு-நாள்-கல்யாணம் பண்ணிவிட்டு வந்து விடுவது என்பது தப்பான காரியம். பார்ட்டி, ரேஸ் என்று செலவழிக்கிற பணக்காரர்களும் நாலு நாள் ஒரு சாஸ்திரோக்த சடங்கு செய்யப் பிடிக்காததாலே இப்போதெல்லாம் கோயிலில் போய் தாலிகட்டி ஒரு வேளையோடு முடிக்கிறார்கள். பணக்காரர்கள் அப்படிச் செய்ய ஆரம்பித்தால் ஏழைகளும் பின்பற்றிக் கெட்டுப்போவார்கள். நான் சொல்வதை அநுஸரித்தால் நாலு நாள் பண்ணுவதில் செலவு இல்லை.

பெண் ரிதுமதியான பின் விவாஹம், அதுவும் ஒரு நாள் கலியாணம், மறுநாளே அவளை [புக்கத்துக்கு] அழைத்துப் போவது என்பதில் ஏற்பட்டிருக்கிற இன்னொரு விபரீதந்தான் விவாஹத்தன்றே சாந்தி கல்யாணம் பண்ணுவது.

விவாஹமானவன் திரிராத்திர தீக்ஷையோடு இருக்க வேண்டுமென்பது அத்யாவசியம். அதாவது மூன்று நாட்களும் பூர்ண பிரம்மசரிய நியமத்தை அநுஷ்டிக்க வேண்டும். பிரம்மசரியம் எட்டு விதம். எப்போதுமே பிரம்மசரியம் இருக்க முடியாதவனும் சிற்சில தினங்களில் அந்த நியமத்துடன் இருக்கும்படியாக இந்த எட்டு விதிக்கப்பட்டிருக்கின்றன. அதமபக்ஷமாக, கல்யாணமான முதல் மூன்று தினங்கள் இப்படி இருக்க வேண்டும். இதுவும் போய், அன்றே நிஷேகம் என்பது மஹாதோஷம்.

மறுபடி மறுபடி சம்பந்திகளைக் கூப்பிடுவது, சாப்பாடுக்குச் செலவழிப்பது, மேளத்துக்குச் செலவழிப்பது என்றில்லாமல் ஒன்றாக பண்ணிவிடலாமே என்று இப்படிப் பட்ட தோஷத்தைச் செய்கிறார்கள். சாஸ்திரத்தில் இல்லாத தடபுடல்களைக் கொண்டு வந்து விட்டு,

அப்புறம் இவைகளைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகப் பெண்ணின் கல்யாணம் வரையில் [அவளுடைய ஸஹோதரனான] பிள்ளையின் பூணூலை ஒத்திப் போடுவது, கல்யாணத்தன்றே ஸாந்தி கல்யாணத்தையும் [மந்திரோக்தமாகக் கூட இல்லாமல்] பண்ணிவிடுவது என்றெல்லாம் முறை கெட்டுச் செய்து வருகிறோம்.

உற்றமும் சுற்றமும் செய்யவேண்டியது

உற்றமும் சுற்றமும் செய்ய வேண்டியது

ஆகையால் இந்த வைதிக ஸம்ஸ்காரங்களில் செலவை எப்படியும் குறைத்தாக வேண்டும். இதில் பந்து மித்ரர்கள் செய்யக்கூடிய ஒரு உபகாரமும் உண்டு. அதாவது, கல்யாணம், உபநயனம் என்று அழைப்பு வந்தால் நண்பர்கள், உறவினர்கள் எல்லோரும் போகத்தான் வேண்டும் என்பதில்லை. பிரயாணத்துக்குச் செலவிட்டு ரயில்காரனும், பஸ்காரனும் வாங்கி கொள்வதில் என்ன பிரயோஜனம்? அதையெல்லாம் சேர்த்து வைத்துக் கல்யாணம் பண்ணிகிறவனுக்கு ரொக்கமாக அனுப்பிவிட வேண்டும். இதனால் விருந்துச் சாப்பாடு என்று ஒரு செலவு குறைவது ஒரு பக்கம்; அவசியமான செலவும் சீரும் செய்ய கல்யாணம் பண்ணிகிறவனுக்கு வரவினம் வலுப்பது இன்னொரு பக்கம்!

சிக்கனத்துக்கு மூன்று உபாயம்

சிக்கனத்துக்கு மூன்று உபாயம்

பண சம்பந்தத்தால் சாஸ்திரோக்த வாழ்க்கையே கெட்டுப் போய்விட்டது. சாஸ்திரோக்தமாக மாறுவதற்கு நாம் நிறைய சம்பாதிக்க வேண்டும் என்றில்லாமல் பண்ணிக் கொண்டு விட்டால் போதும்.

எனக்கு மூன்று விதத்தில் செலவைக் குறைக்கலாம் என்று தோன்றுகிறது (1) எல்லோரும் – நல்ல பணக்கார வீட்டு ஸ்திரீகளுள்பட – பட்டு முதலான பகட்டுத் துணிகளைவிட்டு கடைசித்தரமான வஸ்திரந்தான் வாங்குவது என்று வைத்துக் கொள்ள வேண்டும். (2) காப்பிக்குத் தலைமுழுகிவிட்டு காலையில் கோதுமைக் கஞ்சிதான் சாப்பிடுகிறதென்று வைத்துக் கொள்ளவேண்டும். அல்லது

மோர் சாப்பிடலாம். காப்பி சாப்பிடுவது என்ற ஒரு பழக்கத்தைப் பண்ணிவிட்டதால் Substitute (அதை மாற்ற ஏதாவது ஒன்று) வேண்டுமல்லவா? தக்ரம் (மோர்) அமிருதமென்று வைத்திய சாஸ்திரம் சொல்கிறது. இப்படிச் செய்வதனால் அநேக குடும்பங்களில் செலவில் நூற்றுக்கு அறுபது பங்கு குறைந்துவிடும் என்று தோன்றுகிறது. 'அரிசி எவ்வளவு ரூபாய்க்கு வாங்குகிறோம்? பால், காப்பிக் கொட்டை எவ்வளவு வாங்குகிறோம்?' என்று கணக்கு பார்த்தால் பால், காப்பிக்கொட்டைக்குத்தான் அதிக செலவு. (3) விவாஹத்துக்காகப் பணத்தைக் கொண்டு வா என்று வரதக்ஷிணை வாங்குவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இப்படிப் பண்ணினால் டம்பம் போவது ஒன்று; நல்ல ஆரோக்கியமும் மனஸின் அபிவிருத்தியும் ஏற்படுவது இன்னொன்று; மூன்றாவதவாக சாஸ்திரோக்தமான வாழ்க்கையையும் வழக்கங்களையும் நிலை நிற்கும்படிப் பண்ணுவது.

விவாஹத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்ததில் இத்தனை கதையும் வந்து சேர்ந்து விட்டது. இன்னொரு கதை விட்டுப் போச்சு. அதையும் சொல்கிறேன். புருஷப் பிரஜைகளைவிட பெண் பிரஜைகள் அதிகமாக இருப்பதற்கு ஒரு காரணம் சொன்னேன். மெய்வருந்தி உழைக்காமல் உட்கார்ந்து வேலை செய்வது காரணம் என்றேன். இன்னொன்று தோன்றுகிறது. அதையும் சொல்கிறேன். எனக்குத் தோன்றுவது மட்டுமல்ல, சாஸ்திரத்திலேயே சொல்லியிருப்பதுதான். அதாவது ஔபாஸனாதிகளைப் பண்ணிக் கொண்டு ஆசார சீலனாகப் புருஷன் இருந்தால் அவன் ஆரோக்கியமாகவும் நல்ல மனவிருத்தியோடும் இருப்பதோடு ஆண் சந்ததி உண்டாகும்.

பிராசீனமான ஆசாரம் உடையவர்களுக்கு துர்பலம் இல்லை; வியாதி இல்லை. பிராசீன ஆசாரத்தை இப்பொழுது கொஞ்சமாவது அநுஷ்டித்து வருகிறவர்கள் ஸ்திரீகள்தாம். அதனால் அவர்களிடம் உண்டாகிற பிரஜைகளிலும் அதிகமாகப் பெண்களே இருக்கிறார்கள். புருஷர்களும் அதிகமாகப் பிராசீன ஆசாரத்தை வைத்துக் கொண்டிருந்தால் இப்போதைவிட ஆண் ஸந்ததி அதிகமாக உண்டாகும். இரண்டும் ஸமவிகிதமாகும். ஸ்தல தரிசனம், தீர்த்த

ஸ்நானம், பூஜை முதலியவைகளைப் புருஷர்கள் பண்ணி வந்தார்கள். இப்பொழுது அவர்களுக்கும் சேர்த்து ஸ்திரீகள் பண்ணுகிறார்கள்! புருஷர்கள் ஆசாரத்தை விட்டதனால் புருஷப் பிரஜைகள் குறைவாக ஆகிவிட்டார்கள். ஆகவே பாக்கி எதற்காக இல்லாவிட்டாலும் குடும்ப வாழ்க்கை எகனாமிகலாக நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காவது புருஷர்கள் ஆசார அநுஷ்டானங்களை வைத்துக் கொள்ள வேண்டும். தாரித்திரிய நிவர்த்திக்கும் வரசுல்க [வரதக்ஷிணை] நிவர்த்திக்கும் ஆசார அநுஷ்டானந்தான் வழி.

கூட்டங்கூடி, சீர்திருத்தம் என்று சொல்லிக் கொண்டு யோஜிக்காமல் கையெழுத்துப் போடுகிறார்கள். அந்த மாதிரிக் காரியங்களெல்லாம் தற்கால சாந்தியானவையே. பரிகாரம் நிரந்தரமாக இருப்பதற்கு இதுதான் மருந்து.

[விவாஹத்தின் உத்தேசங்கள்]

விவாஹத்தின் உத்தேசங்கள்

பிரம்மசரிய ஆச்ரமத்தில் வேதங்களை ஒருவன் கிரஹித்து விடுகிறான். அப்புறம் 'தியரி'யை 'ப்ராக்டிகல்' ஆக்க வேண்டும். வேதத்தில் சொன்ன கர்மாக்களை, யஜ்ஞங்களைப் பண்ணவேண்டும். அதற்கு தன்னோடு பிரிக்க முடியாத சொத்தாக ஒரு துணையைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். இவனுடைய வீட்டில் சமையல் முதலான காரியங்கள் நடப்பதற்கும், இவனுடைய இந்திரிய சுகத்தைப் பூர்த்தி பண்ணுவதற்காகவும் மட்டும் ஏற்பட்டவள் அல்ல பத்தினி என்பவள். தர்ம பத்தினி, யஜ்ஞ பத்தினி என்று அவளுக்குப் பெயர். இவன் செய்யும் தர்மத்தைக் கூட இருந்து உத்ஸாஹப் படுத்தி நடத்த வேண்டியவள் அவள், யஜ்ஞத்தில் இவன் கூட நிற்க வேண்டியவள். இப்படியாக தேவ சக்திகளை லோகத்துக்கு அநுகூலம் பண்ணித் தருகிற கர்மாக்களுக்கு அவள் பக்கபலமாயிருக்கிறாள்.

இவனுக்கு சமையல்காரியாக, இவனுக்கு சரீர ஸௌக்கியம் கொடுக்கிறவளாக இருக்கிறபோதுங்கூட அதிலேயே லோக க்ஷேமத்தைச் செய்கிறவள் அவள். எப்படியென்றால்:இவன் வீட்டுச் சமையல் இவனுக்கு மட்டுமில்லை. 'ஆதித்யம்', 'வைச்வதேவம்' என்பதாக தினமும் அதிதிக்கும், தீனர்களுக்கும், பிராணிகளுக்கும்

கிருஹஸ்தன் அன்னம் போட வேண்டும். அதற்கும்தான் அவள் சமைப்பது. இவளுக்குப் பிரஜை உண்டாவதும் தம்பதியுடைய ஸௌக்கியத்தினால் ஏற்பட்டதென்பதோடு முடிந்துவிடுவதில்லை. வேத தர்மம் என்றைக்கும் லோகத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக, வேத தர்மத்தை அநுஷ்டிப்பதற்கே இவள் பிரஜைகளைப் பெற்றுத் தரவேண்டும். புத்ரோத்பத்தியைக் கூட இப்படி எதிர்கால தர்ம வாழ்வை உத்தேசித்த ஸம்ஸ்காரமாகப் பண்ணுவதை வேறெந்த மதத்திலும் பார்க்க முடியாது.

இப்படியாக ஐஹிக [இஹலோக] சம்பந்தம் மட்டுமின்றி ஆத்ம சம்பந்தமும், லோக க்ஷேம உத்தேசமும் கொண்டதாக இருக்கிறது நம் மதத்தில் பதி-பத்னி உறவு. மற்ற மதங்களிலும் சர்ச் மாதிரியான இடத்தில் தெய்வ ஸாக்ஷியாகத்தான் விவாஹம் நடக்கிறதென்றாலும் அதற்கு இத்தனை உயர்ந்த லட்சியங்கள் கொடுக்கப்படவில்லை. புருஷனை மேலும் ஸம்ஸ்காரங்களில் செலுத்தி சுத்தப் படுத்தவோ, ஸ்திரீயைப் பதிவிரதத்தினால் பூர்ணத்வமே அடையப் பண்ணவோ அந்த விவாஹங்களில் இடமில்லை. மற்ற தேச விவாஹங்கள் ஒரு குடும்ப அல்லது சமூக ஒப்பந்தம் (contract) மாதிரித்தான். இங்கே அது ஆத்ம பந்தம். பந்தப்பட்டிருக்கிற ஆத்மாவை விடுவிப்பதற்காகவே ஏற்பட்ட பந்தம். அதனால்தான் இங்கே அது ஆத்ம பந்தம். அதனால்தான் இங்கே divorce (விவாஹரத்து) என்பதற்கு இடமேயில்லாமலிருக்கிறது. அந்த எண்ணம் வந்துவிட்டாலே நமக்குப் பாபம்.

இத்தனை உத்தமமான விவாஹ ஸம்ஸ்காரத்தின் முக்யமான மூன்று உத்தேசங்கள்: ஒன்று, வேதத்தைப் படித்து முடித்து வந்த ஒருத்தனின் குடும்பம் நடக்க வழி செய்து கொடுத்து, அவன் வேத தர்மங்களை அநுஷ்டிப்பதற்குத் துணை சேர்த்துக் கொடுப்பது. இரண்டு, நல்ல ஸம்ஸ்காரமுடையவர்களுக்கே உத்தம தம்பதிகளாக இருந்து, உன்னதமான வேத தர்மத்துக்கு எதிர்கால வாரிசுகளை உற்பத்தி செய்து தருமாறு பண்ணுவது; அதாவது வரப்போகிற காலத்தில் லோகத்தில் உயர்ந்த மனோபாவமுள்ள ஜனங்கள் இருக்கும்படியாக ஏற்பாடு செய்வது. மூன்றாவது ஸ்திரீகள் கடைத்தேறப் பெரிய பிடிப்பாக ஒன்றை உண்டாக்கிக் கொடுப்பது. பரிபக்குவமடையாத

நிலையில்தான் புருஷன் யக்ஞாதி அநுஷ்டானங்களைப் பண்ணுவது. அவன் அப்படிச் செய்வதற்குத் துணையாக வருகிற பத்தினியோ தன்னுடைய பாதி விரத்யத்தாலேயே அவனையும்விடப் பரிபக்குவம் அடைந்து விடும்படி நம்முடைய வைதிக தர்மம் பண்ணிவிடுகிறது! இந்த மூன்றோடு, அல்லது மூன்றுக்குப் பிறகு நாலாவதாக வருவதுதான் தம்பதியின் இந்திரிய ஸௌக்கியம் என்பது.

முக்கியமான மூன்றும் எடுபட்டுப் போய் நாலாவது மட்டுமே முழுக்கப் பிரதானமாகிவிட்ட இன்றைய கால ஸ்திதியிலிருப்பவர்கள் நான் சொன்ன சாஸ்திரோக்தமான அந்த உத்தேசங்களைப் புரிந்து கொண்டால் நாம் நல்லதற்கு மாறுவதற்கு வழி பிறக்கும். அப்படிப் புரிந்து கொள்வதற்கு சந்திரமௌலீச்வரர் அநுக்ரஹம் செய்யவேண்டும்.

பாணிக்ரஹணம் (மணமகள் மணமகளுடைய கையைப் பிடித்தல்) , மாங்கல்ய தாரணம், ஸப்த பதீ என்று புது தம்பதி ஏழடி எடுத்துவைப்பது இவை விவாஹத்தில் பிரதானமான அம்சங்கள். மாங்கல்ய தாரணம் வேதத்திலேயே உண்டா, இல்லையா என்று பெரிய சர்ச்சைகள் செய்வதுண்டு. இது அவசியமில்லாத சர்ச்சை. எத்தனையோ ஆயிரம் காலமாக இருந்து வந்திருக்கிற மாங்கல்ய தாரணம் அவசியம் செய்ய வேண்டியதே!

கிருஹஸ்தாச்ரமம் (இல்லறம்)

இல்லறத்தான்; இல்லாள்

கிருஹஸ்தாச்ரமம் (இல்லறம்)

இல்லறத்தான்; இல்லாள்

ஒரு யுவாவானவன் குருகுலவாஸம் முடித்து ஸமாவர்த்தனமாகிய உடனேயே அவனுக்கு ஒற்றைப் பூணூல் போய் இரட்டைப் பூணூல் ஏற்பட்டு விடுகிறது. பிரம்மசரிய ஆச்ரமத்தில் தரித்த தண்டம், கிருஷ்ணாஜினம் (மான் தோல்) மேகலை முதலியன போய்விடுகின்றன. இப்போது அவன் ஏகவஸ்திரத்தை தட்டாடையாக உடுத்துவதும் போய், பஞ்சகச்சம் கட்டிக்கொண்டு, உத்தரீயமாக மேல் வேஷ்டி போட்டுக் கொள்ள வேண்டும். பிரம்மசரியத்தில் போக்யம்

உதவாது என்று ஒதுக்கின சந்தனம், குண்டலம், புஷ்பம் (புருஷர்களும் சிகையில் புஷ்பம் தரிப்பதுண்டு) , பாதரக்ஷை முதலிய அலங்கார வஸ்துகளையும், ஸௌக்ய ஸாதனங்களையும் அணிந்து கொண்டு, மை கூட இட்டுக்கொண்டு, குடை பிடித்துக்கொண்டு போய் அவன் ராஜாவிடமோ, ராஜப் பிரதிநிதியிடமோ தன் வித்யையையும், சுத்த பிரம்மசரியத்தையும் நிரூபித்துவிட்டு, மேற்கொண்டு கல்யாணத்துக்கு வேண்டிய திரவியத்தை தானமாகப் பெறவேண்டும்- இது சாஸ்திரத்தில் சொன்னபடியாகும்.

கல்யாணம் செய்து கொள்ள இருக்கிற ஒரு யுவா அதற்காகவே தானம் வாங்க வேண்டுமென்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதிலிருந்தே கல்யாணச் செலவு பிள்ளை வீட்டுக்காரனுடையதுதான் என்று அழுத்தமாகத் தெரிகிறதல்லவா?

இன்னொன்றும் தெரிகிறது. ஸமாவர்த்தனம் பண்ணி ஸ்நாதகனான ஒருவன் பிற்பாடு கல்யாணம் செய்து கொள்ளாமல் ஏகாங்கியாகவே இருந்தாலுங்கூட அவனுக்கு இரட்டைப் பூணூல், பஞ்சகச்சம் இவை உண்டு என்று ஆகிறது. வேஷ்டி நுனி தெரியாமல் கொசுவிச் சொருகுவதால் ஒருவனின் சக்தி காப்பாற்றப்படுகிறது. முஸல்மான்கள் வேஷ்டி ஓரங்களைச் சேர்த்துத் தைத்துக் கட்டிக் கொள்கிறார்களல்லவா? பஞ்சகச்சமாக இல்லாவிட்டாலும், தமிழ்நாடும் மலையாளமும் தவிர, மற்ற இடங்களில் எல்லாருமே (பூணூல் இல்லாதவர்களும்கூட) கச்சம் போட்டே கட்டுகிறார்கள். இப்போது வேஷ்டியே போய், என்னைப் பார்க்க வருகிறபோதுகூட முழு நிஜார் போட்டுக் கொள்வது என்றிருக்கிறது! இந்த ஸ்திதியில் கச்சம், தட்டாடை வித்யாஸங்களைச் சொல்வது வேடிக்கையாகத்தானிருக்கிறது!...

இப்போது குருகுலவாஸம், பிறகு ஸமாவர்த்தனம், கங்காயாத்திரை முதலிய எதுவும் இல்லாவிட்டாலும் பெண் வீட்டுக்காரனிடமிருந்து "வசூல்" செய்வதற்கு இன்னொரு item -ஆகப் 'பரதேசிக் கோலம்' என்று ஒன்றை வைத்துக் குடை, பாதரக்ஷை, வாக்கிங் ஸ்டிக் எல்லாம் வாங்கித்தர வைக்கிறோம். மாப்பிள்ளைக்கு மையிட்டு சங்கிலி போட்டு காசி யாத்திரை என்று ஒன்று நடத்துகிறோம்.

கல்யாணமாகாமலே நைஷ்டிக பிரம்மசாரியாக இருப்பதை சாஸ்திரம் அநுமதித்தாலும் அது விதிவிலக்கான கேஸ்தான். பொது விதி, "யதோக்தமாக குருகுலவாஸம் முடித்ததும் பிரம்மசரிய ஆச்ரமத்தை முடித்து அடுத்ததற்குப் போ" என்பதுதான். அதாவது பிரம்மசரியம் சாஸ்திரோக்தமாக முடிந்தவுடன் கிருஹஸ்தாச்ரமத்துக்கு ஏற்பாடு செய்துவிட வேண்டியதுதான்.

பிராம்மணனுக்குப் பிறக்கும்போதே மூன்று கடன்கள் உள்ளனவே, ரிஷிகடன், தேவர் கடன், பித்ரு கடன் என்று! இவற்றில் பிரம்மசரியத்தில் செய்கிற வேத அத்யயனம் ரிஷிருணத்தை மட்டுந்தானே போக்குகிறது? யஜ்ஞங்கள் செய்து தேவருணத்தைத் தீர்ப்பதற்காகவும், நல்ல ஆண் ஸந்ததி மூலம் பித்ரு ருணத்தைத் தீர்ப்பதற்காகவும் இவன் கலியாணம் செய்து கொண்டால்தானே முடியும்?

பித்ரு கடன் தீரவே முக்யமாய் ஸந்ததி வேண்டும். இவன் திவஸம் பண்ணினால் மட்டும் போதாது. மூன்று முன் தலைமுறைக்காரர்களைப் பித்ரு லோகத்திலிருந்து மேலே அனுப்ப வேண்டுமானால் இவன் காலத்துக்குப் பின்னும் இரண்டு தலைமுறைகளில் திவஸமும் தர்ப்பணமும் நடந்தாக வேண்டும். அதற்காகப் புருஷப் பிரஜை வேண்டும். நைஷ்டிக பிரம்மசாரியாகவோ, ஸந்நியாஸியாகவோ இருக்கத் தகுதி பெற்ற அபூர்வமான சிலரின் விஷயம் என்னவென்றால் அவர்களது பரிசுத்தியாலும் ஞானத்தாலும் பிற்பாடு சிராத்த கர்மாக்கள் இல்லாமலே மூன்று தலைமுறை மட்டுமில்லாமல் இருபத்தியோரு தலைமுறைகள் கடைத்தேறி விடுகின்றன.

ஒரு புருஷன் கற்க வேண்டியதைக் கற்று முடித்தவுடன் லோகத்தில் தர்மங்களை அநுஷ்டிப்பதற்காகப் பத்தினி என்ற துணையைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்; அதுவே ஒரு கன்னிகைக்குப் பதி என்ற ஓரிடத்தில் மனஸை அர்ப்பணம் பண்ணி ஆத்ம பரிசுத்தி அடைய உபாயமாயிருக்க வேண்டும்; இருவருமாகச் சேர்ந்து நல்ல பிரஜைகளை உண்டாக்க வேண்டும் என்ற உத்தமமான அபிப்ராயத்தில் விவாஹமும் கிருஹஸ்தாச்ரமமும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

கிருஹஸ்தாச்ரமத்தைத் தமிழில் இல்லறம் என்பார்கள். கிருஹம் என்றால் இல்லம்தான். "இல்லறமல்லது நல்லறமல்ல" என்று தர்ம சாஸ்திரங்களைப் போலவே தமிழ் ஆன்றோர்களும் இந்த ஆச்ரமத்தைத்தான் சிறப்பிக்கின்றனர்.

'க்ருஹம்' என்றால் வீடு. குருவின் வீட்டிலிருந்து திரும்பி வந்து சொந்த வீட்டில் தர்மங்களை நடத்துபவன் 'க்ருஹஸ்தன்'. 'க்ருஹ-ஸ்தன்' என்றால் நேர் அர்த்தம் 'வீட்டில் இருப்பவன்'. அதையே 'வீட்டிற்கு உடைமைக்காரன்' என்ற அர்த்தத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அவனை அகமுடையான், அகத்துக்காரன், வீட்டுக்காரன் என்றெல்லாம் வீட்டுக்கு முக்யஸ்தனாக வைத்தே பத்தினியானவள் குறிப்பிடுகிறாள். பத்தினியைத் தவிர மற்றவர்கள் அவனை இப்படிச் சொல்வதில்லை. அந்த பத்தினியை 'க்ருஹிணி' என்றே சொல்கிறார்கள். 'க்ருஹஸ்தை' என்று சொல்வதில்லை. 'க்ருஹிணி' என்பதால் வீட்டிலே அவளுக்குத்தான் முக்யத்வம் அதிகம் என்று தெரிகிறது. 'க்ருஹஸ்தை' என்றால் வீட்டிலே இருப்பவள் என்று மட்டுமே ஆகும். ஆனால் 'க்ருஹணி' என்கிறபோதோ வீடே இவளுடையதுதான், இவள்தான் வீட்டை நிர்வாகம் பண்ணுகிறவள் என்ற உயர்ந்த அர்த்தம் ஏற்படுகிறது. தமிழிலும் புருஷனை 'இல்லறத்தான்'- 'இல்- அறத்தான்'- என்பதாக கிருஹத்தில் பண்ண வேண்டிய தர்ம காரியங்களைச் செய்ய வேண்டியவன் என்றே குறிப்பிட்டு விட்டு, பத்தினியைத்தான் 'இல்லாள்' என்பதாக வீட்டுக்கே உடைமைக்காரி என்ற மாதிரி சொல்லியிருக்கிறது. 'இல்லான்' என்று புருஷனை சொல்வதில்லை. அப்படிச் சொன்னால் ஒன்றும் இல்லாதவன் என்றே ஆகும். இல்லத்தரசி, மனைவி, மனையாள் என்று பத்தினியை சொல்வதுபோல், புருஷனை இல்லத்தரசன், மனைவன், மனையான் என்று சொல்வதில்லை. தெலுங்கிலும் பத்தினியையேதான் 'இல்லு' என்கிறார்கள்

ஔபாஸனம்

ஔபாஸனம்

பாணிக்ரஹணம், மாங்கல்ய தாரணம், ஸப்த பதி முதலிய எல்லாமே விவாஹத்தோடு முடிந்து போகிற சடங்குகள். ஆனால் அப்படி

முடியாமல் விவாஹத்தில் தொடங்கி, ஸந்நியாஸம் அல்லது மரணம் வரையில் நீடிக்கிற ஒரு சடங்கு விவாஹத்திலிருந்து ஏற்படுகிறது. அதாவது, எந்த அக்னியின் ஸாட்சியாக விவாஹம் செய்யப்படுகிறதோ அந்த அக்னி என்றைக்கும் அணையாமல் அதிலே செய்கிற ஔபாஸனம் என்ற சடங்கு.

அக்னி காரியம் வைதிக மதத்துக்கு முக்கியமானது. பிரம்மசாரி 'ஸமிதாதானம்' என்பதாக தினமும் இருவேளையும் ஸமித்துக்களை [சுள்ளிகளை] ஹோமம் பண்ணுகிறான். அந்தக் கர்மா கலியாணத்தோடு முடிந்து விடுகிறது. கலியாணத்திலிருந்து அக்னி காரியங்கள் – யாக, யஜ்ஞாதிகள் – அதிகமாகின்றன. முதலாவதாக ஸமிதாதானத்துக்குப் பதில் 'ஔபாஸனம்' ஆரம்பிக்கிறது. 'உபாஸனை' சம்பந்தப்பட்டது எதுவோ அதுவே ஔபாஸனம். பல தேவதைகளைப் பூஜை, மந்திரம், தியானம் முதலியவற்றால் உபாஸிப்பதாகச் சொன்னாலும், ஹிந்துக்கள் எல்லோருக்கும் வேதப்படி ஏற்பட்ட உபாஸனை 'ஔபாஸனம்' என்றே பெயர் பெற்ற அக்னி காரியம்தான்.

இது எல்லா ஜாதியினருக்கும் விதிக்கப்பட்ட கர்மா. நான்காம் வர்ணத்தவர்களுக்கு உபநயனமில்லாவிட்டாலும் அவர்களுக்கும் விவாஹ ஸம்ஸ்காரமும் அதிலிருந்து ஏற்படும் ஔபாஸனம் என்ற அக்னி காரியமும் உண்டு.

வைத்ய நாத தீக்ஷிதீயம் முதலான தர்ம சாஸ்திர நூல்கள் சூத்ர வர்ணத்தார் எப்படி ஜாதகர்மம், நாமகரணம், ஆன்ஹிகம் [நித்தியப்படி காரியங்கள்] , ஸ்நானம், தானம், தேவபூஜை, அபர கர்மம் [ஈமச் சடங்கு] , சிராத்தம் முதலியன செய்ய வேண்டுமென்று விவரித்துச் சொல்லியிருக்கின்றன. அவர்களுக்கு இருக்கிற இந்த 'ரைட்' களை அவர்களுக்கு தெரிவித்து அநுஷ்டிக்கப் பண்ணாமலே, 'எந்த ரைட்'டும் இல்லை' என்று சீர்திருத்தவாதிகள் சண்டைக்கு வருகிறார்கள். நமோந்தமான ['நமோ' என்று முடிகிற] ச்லோக ரூபமான மந்திரங்களைச் சொல்லி நாலாம் வர்ணத்தவர் மற்றவர்களைப் போலவே ப்ரதி தினமும் இரண்டு வேளையும் விவாஹத்திலிருந்து தொடங்கி ஔபாஸனம் செய்ய உரிமை பெற்றிருக்கிறார்கள்.

புது பிராம்மண ஜாதி உண்டாக்கலாமா?

புது பிராம்மண ஜாதி உண்டாக்கலாமா ?

ஸகல ஜாதியாரும் ஔபாஸனம் செய்ய வேண்டும் என்கிற போது இன்னொரு விஷயத்தையும் கவனிக்கத் தோன்றுகிறது.

"ஔபாஸனம் மட்டும் என்ன? அத்யயனம், காயத்ரீ. யஜ்ஞம் ஆகிய எல்லாவற்றையுமே எல்லா ஜாதியாரும் பண்ணினால் என்ன?" என்று சில பேர் கேட்கிறார்கள். ஒரு பக்கம் ஒரே நாஸ்திகம், 'வேதத்தைக் கொளுத்த வேண்டும், பிள்ளையாரை உடைக்க வேண்டும்' என்று இருந்தால், அப்படி சொல்கிறவர்கள் தங்களை சீர்திருத்தக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டால், இன்னொரு பக்கம் இன்னொரு தினுசு சீர்திருத்தக்காரர்களோ ஏன் பாரபட்சமில்லாமல் அத்தனை ஜாதியாருக்கும் எல்லா வைதிக கர்மாவிலும் அதிகாரம் கொடுக்கக் கூடாது என்கிறார்கள்.

நான் பிராம்மணன் குட்டிச்சுவராகப் போனதற்காகத் திட்டுகிறேன் அல்லவா? இதையே ஒரு ஒரு ஆதாரமாக, தங்களுக்கு ஆதரவாகப் பிடித்துக் கொண்டு இவர்கள், 'பிராம்மணன்தானே தானும் கெட்டு மற்ற ஜாதிகளையும் கெடுத்து விட்டவன்? அதனால் இப்போது மறுபடி வைதிகமான வழிகளை, வேதாத்யயனம் முதலானதுகளை உயிர்ப்பிக்கிற போது, கடமையில் தப்பின பிராம்மண ஜாதிக்கு மட்டும் இவற்றில் ஏன் அதிகாரம் தரவேண்டும்? லோக க்ஷேமத்துக்காக வேதமும், வைதிக காரியமும் இருக்க வேண்டும் என்று நம்புகிற எந்த ஜாதியாரும், எல்லா ஜாதியாரும் இவற்றை மேற்கொண்டு, அநுஷ்டிக்கும்படிப் பண்ணிவிட வேண்டும் என்று கட்சி பேசுகிறார்கள். எல்லாருக்கும் பூணூல் போடலாம்; ஸகலருக்கும் வேதம் சொல்லிக் கொடுக்கலாம் என்கிறார்கள்.

ஆர்ய ஸமாஜம் மாதிரி இருக்கப்பட்ட ஸ்தாபனங்களில் எல்லாருக்கும் வேத அத்யயனம், யஜ்ஞங்கள் ஆகியவற்றில் அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். பாரதி மாதிரி எங்கேயாவது யாராவது ஒருவர் பஞ்சமனுக்கு பிரம்மோபதேசம் பண்ணி வைக்கிறார். இப்படி வேதத்தை எல்லோருக்கும் பொதுவாக்கி விட்டால் என்ன என்று சீர்திருத்தவாதிகள் கேட்கிறார்கள்.

இது கொஞ்சங்கூட ஸம்மதமனதல்ல. சாஸ்திரத்தில் இருப்பதை சொல்ல அதன் பிரதிநிதியாக இருக்கிறவன் தான் நான். ஆகையால், இது பரம தியாகிகளாக, கொஞ்சங்கூட சொந்தப் பற்று பாசம் இல்லாமல், தங்களுக்கென்று சொத்து சுதந்திரமில்லாமல் லோக க்ஷேமத்தையே உத்தேசித்து தர்மங்களை விபாகம் பண்ணிக் கொடுத்த சாஸ்திரக்காரர்களான ரிஷிகளுக்கு ஸம்மதமில்லை என்று சொல்ல வேண்டியது என் கடமை.

பாபத்தில் இரண்டு தினுசு. தனக்கான கர்மாவை விடுகிறவன் ஒருவிதமான பாபத்தை பண்ணுகிறான். இவனை கர்ம ப்ரஷ்டன் என்பார்கள். இன்னொருத்தன் தன் கர்மாவை விட்டதோடு நிற்காமல் இன்னொருத்தனின் கர்மாவை எடுத்துக் கொண்டு, அந்த ஜாதிக்காரன் மாதிரியே அவனுக்குரிய ஆசாரங்களை அநுஷ்டிக்கிறேன் என்று புறப்படுகிறான். இவனை 'கர்மாந்தர ப்ரவிஷ்டன்' என்பார்கள். இவன்தான் கர்ம ப்ரஷ்டனை விடப் பெரிய பாபம் செய்கிறவன் என்பது சாஸ்திரத்தின் அபிப்ராயம்.

ஏன்? இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று – தன் கர்மத்தை விட்டவன், வர்ண தர்மமே முழுக்கச் சரியில்லை என்று ஏதோ ஒரு 'கன்விக்ஷன்' (மனசாட்சிப்படியான உறுதி) ஏற்பட்டதால் அப்படிச் செய்தான் என்றாவது சமாதானம் சொல்லலாம். சாஸ்திர விஷயத்தில் நம் மனசாட்சிக்கு இடம் கிடையாதானாலும், ஏதோ இப்படிக் கொஞ்சம் சமாதானம் சொல்லவாவது இடம் இருக்கிறது. ஆனால், இன்னொருத்தனின் கர்மாவையும் அதற்கான ஆசார நியமங்களையும் எடுத்துக் கொள்கிறவன் என்ன நினைக்கிறான்? தனக்கு ஏற்பட்ட கர்மாவும் அதற்கான ஆசாரமுந்தான் மட்டம். இன்னொன்று உசத்தி என்ற நினைத்தே அதற்குப் போகிறான். இப்படிக் கர்மாக்களுக்குள் உயர்வு–தாழ்வு நினைப்பது நவீன கால அபேதவாதத்துக்கும், இக்காலத்தில் dignity of labour [எத்தொழிலும் கௌரவமானதே] என்பதற்கும் பொருந்தாது; பழங்கால சாஸ்திர வாதப்படியும் பொருந்தாது. வர்ண தர்மம் முழுதையும் தள்ளி விடுகிற கர்ம ப்ரஷ்டன், ரிஷிகள் என்னவோ காலத்துக்கு ஒவ்வாமல் செய்து விட்டார்கள் என்றுதான்

நினைக்கிறான். அவர்களைப் பக்ஷபாதிகள் என்று நினைக்கவில்லை. ஆனால் தன்னதை விட்டுவிட்டு இன்னொரு வர்ண தர்மத்தை எடுத்துக் கொள்கிறவனோ ரிஷிகளைப் பக்ஷபாதியாக்கி விடுகிறான். இவன் புதிசாகத் தழுவுகிற வர்ணமே ஆத்ம சிரேயஸ் தருவது; இவனுக்காகப் பாரம்பரியமாக ஏற்பட்ட வர்ணத்தில் அந்தப் பலன் இல்லை என்று நினைத்துத் தானே இவன் மாறுகிறான்? அப்போது ரிஷிகள் வர்ண விபாகம் என்று பண்ணினதே வஞ்சனை என்றுதானே ஆகிறது! இதனால்தான் இவன் பண்ணுகிற பாபமே பெரிசு என்பது.

'பிராம்மணர்கள் தவறி விட்டார்கள். அதனால் புதுப் பிராம்மணரை உண்டு பண்ணுவோம். என்றால் அது, அவன் தன் தர்மத்தை விட்டதால் நானும் என் தர்மத்தை விடுவேன் என்கிற பேச்சுதான். விடுவதோடு இல்லாமல் இன்னொன்றை எடுத்துக் கொள்வேன் என்கிறபோது இன்னம் தப்பாகிறது. அத்தனை கர்மாவும் அஹங்காரம் நசிப்பதற்காகத்தான். நமக்கென்று சொந்தமாக விருப்பு வெறுப்பு இல்லாமல், "ஈச்வராக்ஞையானது வேத சாஸ்திர மூலமாக நமக்குப் பிறப்பிலேயே எந்தத் தொழிலைக் கொடுத்ததோ அதைச் செய்வோம்" என்ற அடக்கமும் விநயமும் தான் வர்ண தர்மத்துக்கு அஸ்திவாரம். அதன்மேல் நின்று கொண்டு ஒவ்வொருவனும் தனக்கான தொழிலில் ஸதா உழைக்கிற போது அஹங்காரம் கரைகிறது.

புது ஜாதி உண்டுபண்ணுவது, புதுப் பிராம்மணனைப் பண்ணுவது என்கிறபோது– எத்தனை நல்ல எண்ணத்தோடு இப்படி ஆரம்பித்தாலும் சரி, வேத சப்தங்களும், வேத கர்மாக்களும் லோகத்தில் இருக்கப் பண்ண வேண்டும் என்று மனஸார நினைத்து, அந்த உயர்ந்த லட்சியத்துக்காகவே இப்படிச் செய்தாலும் சரி – இந்த மாதிரிச் செய்யும்போது அஹங்காரம் முந்திரிக்கொட்டை மாதிரி முந்திக்கொண்டு வரத்தான் செய்யும். இது இரண்டாவது காரணம்.

ஒரு பக்கத்தில் இப்படியென்றால், இன்னொரு பக்கமோ என்னதான் ஸமத்வம் பேசினாலும், பகுத்தறிவு வாதம் பண்ணினாலும், நாம் இதைப் பண்ணலாமா? பாரம்பரியமாகப் பண்ணி வந்தவர்கள் மாதிரி நம்மால் இந்த மந்திர உச்சாரணம் பண்ணியும் அநுஷ்டானங்களைப்

பண்ணியும் பலன் பெற முடியுமா? என்று ஒரு எண்ணம் (inferiority complex) உள்ளூர உதைத்துக் கொண்டுத்தான் இருக்கும்.

ஆர்ய ஸமாஜத்திலும், அதற்கப்புறம் இன்று வரை புதிசு புதிசாக முளைத்துக் கொண்டிருக்கிற அநேக மதச் சீர்திருத்தங்களிலும் ஜாதியே இல்லை என்று வைத்து எல்லாருக்கும் வேதத்தில் பூர்ண அதிகாரம் கொடுத்திருந்தும்கூட இவற்றில் பிராமணரல்லாதவர் ஏன் கூட்டம் கூட்டமாக சேரவில்லை? புதிசாக ஒன்றை எடுத்துக் கொள்வதிலிருக்கிற கூச்சம்தான் முக்கியக் காரணம். நாஸ்திகமாகவே போனாலும் போகலாமே தவிர, பழைய ஆஸ்திக ஆசாரங்களை நம் இஷ்டத்துக்கு திருப்பிக் கொள்ளக் கூடாது என்ற அடிப்படையான உயர்ந்த எண்ணம் பிராம்மணரல்லாதோருக்கு இருப்பதே முக்கிய காரணம். ஆகையினால், 'நாங்கள் எல்லோரையும் வேதத்துக்கு திருப்புவோம்' என்று ஓரிரண்டு பேர் கிளம்பினாலும், அவர்களோடு ஏதோ நாலைந்து சதவிகிதம் போனாலும் பாக்கி 95 சதவிகிதம் இப்போதுள்ள ஹிந்து சமுதாய அமைப்பில்தான் ஒட்டிக்கொண்டிருக்கும். இதனாலேயே அதில் சேருகிறவர்களுக்கும் உள்ளூர பயம், தாழ்வு மனப்பான்மை இருக்கத்தான் செய்யும். நாம் பண்ணி பலன் வருமா என்று சந்தேகம் இருக்கத்தான் செய்யும். இப்படியிருந்தால் சித்தம் சுத்தமாவது எப்படி? அஹங்காரம் மாதிரியே பயம், தாழ்வுணர்ச்சி, சந்தேகம் எல்லாம் அழுக்குகள். இவை இருக்கிறவரையில் சித்தம் சுத்தமாகாது. அப்படிச் செய்கிற காரியத்தால் லோகத்துக்கும் பிரயோஜனம் ஏற்படாது. ஒரு பக்கம் இப்படி இருக்கிற போதே, இன்னொரு பக்கம், "அவன் விட்டு விட்டதை நாம் செய்கிறோமல்லவா? என்ற அஹங்காரம், சவால் விடுகிற மாதிரியான (challenge பண்ணுகிற) மனப்பான்மை எல்லாமும் இருக்கும். இயற்கையாக ஒரு வர்ணத்தார் செய்து வந்ததை மற்றவர்கள் எடுத்துக் கொண்டு செய்கிறபோது அதைப் பெரிதாகப் பிரகடனம் பண்ணிக் காட்ட வேண்டும் என்று வந்துவிடும். 'டெமான்ஸ்ட்ரேஷன்' வந்துவிட்டால் அப்படிப்பட்ட காரியத்தில் ஹ்ருதயம் கலக்காது, ஹ்ருதய சுத்தி இருக்காது. மொத்தத்தில் இவனுக்கும் பலன் இராது; சமூகப் பயனும் விளையாது.

உணர்ச்சி வசப்படாமல், பகுத்தறிவோடு ஆலோசனைப் பண்ணிச் சில fact -களை (யதார்த்த உண்மைகளை) fact -கள் என்று ஒப்புக் கொள்ள வேண்டும். வேத மந்திரங்களில் சுத்தமான சப்தத்துக்குள்ளேயே சக்தியைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறேன் அல்லவா? அந்த ஸரியான சப்தங்கள் தான் என்றில்லை. ஜெர்மன் பாஷை, அல்லது கிட்டத்திலேயே உள்ள உருது இவைகளை எடுத்துக் கொண்டாலும் அவற்றிலே உள்ள சில சப்தங்கள் நமக்கு நெஞ்சாங்குழியை வலிக்கிற மாதிரி, பல்லை உடைக்கிற மாதிரி இருக்கின்றன. லேசில் உச்சரிக்க வரமாட்டேன் என்கிறது. ரொம்பப் பக்கத்திலேயே உள்ள தெலுங்கை எடுத்துக் கொண்டால்கூட 'ச'வருகிற இடங்களில் 'த்ஸ' மாதிரி, 'ஜ'வருகிற சில இடங்களில் Z சப்தம் மாதிரி அவர்கள் அநாயஸமாகப் பேசிக்கொண்டு போகிற மாதிரி நம்மால் முடியவில்லை. ஆனால் நம் ஊரிலே ஒரு ஜெர்மன் குழந்தை பிறந்தால், தெலுங்குக் குழந்தை பிறந்தால் அது பேச்சு வருகிறபோதே அந்தந்த பாஷையின் கஷ்டமான சப்தங்களைக் கூட 'நாச்சுரலாக' உச்சரித்து விடுகிறது. பாரம்பரியம் என்ற ஒன்று கிடையாது என்று என்னதான் சண்டை போட்டாலும் பிரத்யக்ஷ உண்மையாக fact -ஆக இருக்கிறது. இப்படியே வேத சப்தங்கள் அவற்றையே யுகாந்தரமாக ரக்ஷித்து வந்திருக்கிற பரம்பரைக்கு – இப்போது இரண்டு, மூன்று தலைமுறைகளாக அந்த ரக்ஷணை விட்டுப்போன பிறகும் கூட– ஸுலபமாக, இயற்கையாக வருகிறது. மற்றவர்களுக்கு இப்படிச் சொல்ல முடியாது. மந்திரங்களில் உச்சாரணம் தப்பினால் பலனே போய்விடுகிறது என்பதைப் பார்க்கிற போது இவர்கள் எத்தனை நல்ல எண்ணத்தில் அத்யயனாதிகளைப் பண்ணினாலும் பலனில்லை என்றுதானே ஆகும்?

இன்னொன்று – எத்தனையோ ஆயிரம் வருஷங்களாக ஒரு தர்மத்தில் வந்து பாரம்பரியமாக (heriditary-யாக) அதற்கேற்ற ஸ்வபாவத்தைப் பெற்றவர்களே அதை விட்டு விடுகிறார்கள் என்கிறபோது புதிசாக, அதுவும் இந்த நவீன காலச் சூழ்நிலையில் வேறொருவன் அந்த தர்மத்தை எடுத்துக் கொண்டு அப்பியஸிக்கிறேன் என்றால் அது எப்படி உருப்படியாக வரும்? உத்தேசம் நல்லதாக இருந்தாலும்கூட மநுஷ்ய மனஸ் பண்ணுகிற திரிசமனில் இதெல்லாம் வெறும் "சாலஞ்சாக"வும் சண்டையாகவும்தான் முடியும்.

ஆனதால் யோஜித்துப் பார்க்கிறபோது, இப்போது தேசத்தில் இரண்டு வித விபரீதமிருக்கிறதே (வேத கர்மாநுஷ்டானமே வேண்டாம் என்று பிராம்மணன் விட்டுவிட்டு இருப்பது ஒரு விபரீதம். மற்றவர்களும் வேத கர்மாநுஷ்டானங்களை எடுத்துக் கொள்ளலாம் என்பது இன்னொரு விபரீதம்) இப்படி இரண்டு இருப்பதில் எது எதைவிடப் பெரிய தப்பு என்று சொல்லத் தெரியவில்லை. செய்ய வேண்டியவன் அதைச் செய்யாவிட்டால் தப்பு; செய்யக்கூடாதவன் அதை செய்தாலோ அதைவிடத் தப்பு என்றுதான் பகவான் கீதையில் ஜட்ஜ்மென்ட் கொடுத்திருக்கிறார் :

"ஸ்வதர்மே நிதனம் ச்ரேய:பரதர்மோ பயாவஹ:"

"தனக்கான கர்மாவைப் பண்ணுவதால் சாவு ஏற்பட்டாலும் அதுவே சிரேயஸ். இன்னொருத்தனின் தர்மத்தை மேற்கொண்டால் அது பெரிய பயத்தைத் தருவது" என்கிறார். சாவு எப்படியும் வருவதால் ஸ்வதர்ம நிஷ்டனாகச் செத்துப் போனால் மறுபடி பிறக்க வேண்டாம். பகவானிடமே போய் விடலாம். அதுதான் பெரிய ச்ரேயஸ். "இன்னொருவனின் தர்மத்தால் பயம்" என்றால் என்ன? அது நரகத்தில் தள்ளிவிடும் என்றுதான் அர்த்தம். பெரிய பயம் அதுதான். நரகம் என்று ஒன்று இருப்பதாக நம்பாவிட்டாலும், இந்த ஜன்மாவிலோ, அடுத்த ஜன்மாவிலோ நரகத்துக்கு சமமான கஷ்டத்தை அநுபவிக்கும்படியாகும் என்று வைத்துக் கொள்ளலாம். அது தவிர, இன்னொரு தர்மத்தைப் பண்ணும் போதே அதை நாம் பண்ணுவதால் பாபம் சம்பவிக்குமோ என்று உள்ளுக்குள்ளே ஒரு பயம் அரித்துக் கொண்டுதான் இருக்கும். ஏனென்றால் இவன் வேத சாஸ்திரங்களை நம்பாத நாஸ்திகனல்ல. அப்படியிருந்தால் பிராம்மணனுடைய வைதிக காரியங்களை இவன் எடுத்துக் கொண்டிருக்க மாட்டானே! ஆகையால் நல்ல உத்தேசம் என்று நினைத்துக் கொண்டே இவன் இப்படிப் பண்ணினாலும், 'வேத சப்தம் லோக க்ஷேமம் தரும் என்று சொன்ன அதே சாஸ்திரத்தில் தானே, இன்னொருத்தனின் தர்மம் பீதி விளைவிப்பது என்று சொல்லியிருக்கிறது!' என்று உள்ளூரக் குடைந்து கொண்டு தானிருக்கும்.

மொத்தத்தில் விஷயம் என்ன வென்றால், சாஸ்திரம் என்றால் பூரணமாக சாஸ்திரத்தை ஒப்புக் கொள்வதாக இருக்க வேண்டும். அல்லது சாஸ்திரமே வேண்டாம் என்று முழுக்க நாஸ்திகனாக இருந்து விடவேண்டும். அப்படியில்லாமல் தம்முடைய புத்திசாலித்தனத்தைக் காட்டி சாஸ்திரத்தை நம் இஷ்டப்படி வளைத்துச் சிலதை எடுத்துக் கொள்வது, சிலதை விடுவது, சிலதை மாற்றுவது என்றால் அது நாஸ்திகத்தை விட பாபகரமானது. வேத மாதா நம் இஷ்டப்படி, இழுத்த இழுப்புக்கு வரவேண்டும் என்று நினைப்பது பெரிய தோஷம். இப்படி நினைத்துக் கொண்டே வேத அத்யயனம் பண்ணுகிறேன் என்றால் அது பரிஹாஸமான காரியம்தான்.

சீர்திருத்தவாதிகளிடம் எனக்குக் கோபமில்லை. அவர்களுடைய நல்ல எண்ணத்திலும் சந்தேகமில்லை. ஆனால் ஆலோசனை போதாததால், தெரியாமலே பெரிய தோஷத்தைச் செய்யப் பார்க்கிறார்கள். இங்கேயிருந்து அங்கே போகிறேன் என்று இவர்கள் வேலியை உடைக்கிற போது அங்கே பாக்கிக் கொஞ்சம் பேர் இருக்கிறவர்களும் இங்கே வந்து விடலாம் என்று வழிவிட்ட மாதிரி ஆகிவிடுகிறது என்பதை யோஜித்துப் பார்க்க வேண்டும்.

வேதாத்யயனத்தில் இருக்கிற அதே கௌரவம் தன்னுடைய தொழிலில் இருக்கிறது என்ற நிஜமான உணர்ச்சி இருந்தால், இப்படி இதைவிட்டு அதற்குப் போகத் தோன்றாது. 'பிராம்மணர்கள் வேதத்தை விட்டு விட்டார்களே, அதனால் லோக க்ஷேமமான மந்திர சப்தம் போய் விடுகிறதே, அதற்காகத்தான் புதுப் பிராம்மணர்களைப் பண்ண வேண்டும்' என்றால் இதிலே அஹங்காரம், சாலஞ்ஜ், டெமான்ஸ்ட்ரேஷன், இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ் ஆகிய இத்தனை அனர்த்த பரம்பரை உண்டாவதைக் கவனிக்க வேண்டும். ஆகையால் வேதம் உயிரோடு இருக்கவேண்டும் என்ற லக்ஷ்யத்திற்கு நிஜமாகப் பாடுபடுவதானால், அதற்காகவே ஏற்பட்டு, யுகாந்திரமாக அந்த தர்மத்தை அநுஷ்டித்து வந்தவர்களையேதான் அதிலே மறுபடி திருப்பிவிட வேண்டும்.

பிராம்மணனை நான் திட்டுகிறேன் என்றால் இவனை திருத்தவே முடியாது என்று தலைமுழுகிவிட வேண்டும் என்று அர்த்தமில்லை. பிராம்மண ஜாதிக்காரர் ஒருத்தன்தான் கெட்டதற்கெல்லாம் ஆஸ்பதமானவன் என்று நான் நினைப்பதாக ஆகாது. துருக்க ராஜ்யமும், பிரிட்டிஷ் ராஜ்யமும் வந்தபோது பிராம்மணர்கள் தர்மத்தை விட்டார்களே, இப்போதும் இந்த புது நாகரிகப் போக்குகளில் அதிகம் போகிறார்களே என்று நான் திட்டுவதால், இவர்களிடம் மட்டுமே ஸ்பெஷலாக தப்பு இருக்கிறது என்று ஆகாது. இவர்களுடைய ஸ்தானத்தில் யார் இருந்தாலும் இப்படிப் பட்ட ஸந்தர்ப்ப நெரிசல்களில் இதே மாதிரிதான் பண்ணியிருக்கக் கூடும். இப்போது இவர்களைக் குற்றவாளிகளாக்கிவிட்டு இவர்களுடைய இடத்தில் தாங்கள் வந்தால் நல்லபடியாகச் செய்ய முடியும் என்று நினைக்கிறவர்களும் இந்த 'ஸர்கம்ஸ்டன்ஸ்'களில் [சூழ்நிலையில்] இதே தப்புகளைப் பண்ணியிருக்கக்கூடும். பாரம்பர்யமாக புத்தி வேலையிலேயே இருந்தவர்கள் சந்தர்ப்ப வேகங்களில் மத விஷயமாக, ஆத்ம ஸம்பந்தமாக அந்த புத்தி சக்தியை உபயோகிக்க முடியாமல் லௌகிகத்தில் இறங்கினால் இப்படித்தான் ஒரே தலைகீழாகக் சறுக்கிக்கொண்டு போகும்படியாகும். இதை நான் Justify பண்ணுகிறேன் [நியாயமென்று ஒப்புக்கொள்கிறேன்] என்று அர்த்தமில்லை. ஆனாலும் இந்தக் காலத்தில் சீர்திருத்த எழுத்துக்காரரர்கள் விபச்சாரத்திற்க்குக்கூட 'ஸைகாலஜி'யைக் காட்டி சமாதானம் சொல்வதால், அந்த சமாதானம் பிராம்மணர்கள் கெட்டுப்போனதற்கும் கொஞ்சம் உண்டு என்பதை எடுத்துக் காட்டினேன். நான் பிராம்மணர்களைக் கண்டிப்பதால், அவர்கள் மட்டும்தான் அயோக்கியர்கள் என்பதாக மற்றவர்களும் மட்டம் தட்ட வேண்டும் என்று ஆகாது. அவர்களுக்கு எடுத்துச்சொல்லி யோக்கியர்களாகப் பண்ணுவதுதான் மற்றவர்களின் கடமை. இந்த ஒரு நாற்பது ஐம்பது வருஷமாக1 பிராம்மணன் என்றால் கிள்ளுக்கீரை என்று நினைத்து எத்தனை விதமாய் பரிஹாஸம், மான பங்கம் பண்ணினாலும் அத்தனையும் பொறுத்துக் கொள்கிற ஸாதுக்களாயிற்றே; இதற்கு முந்தியும் நாலைந்து தலைமுறைகளுக்கு முன்வரையில் இத்தனை ஆத்மிக குலதனத்துக்கும் கலைகளுக்கு கார்டியன்களாகக் காப்பாற்றிக் கொடுத்தவர்களாயிற்றே என்பதை

நினைத்து மற்றவர்கள் இப்போது அவர்களை அவர்களுக்கான வாழ்க்கை நெறியில் பிரியத்தோடு ஊக்க வேண்டும். அவர்கள் மறந்துவிட்ட உயர்ந்த தர்மத்தை, தியாகத்தை அவர்களுக்கு நயமாக எடுத்துக்காட்டி உறைக்கும்படியாகப் பண்ணவேண்டும்.

விஷயந்தெரியாத சில பிராமணர்கள் எப்போதோ மற்றவர்களைக் கொடுமைப் படுத்தினார்கள் என்பதற்குப் பதிலடியாக இப்போது இவர்களை த்வேஷித்துக் காரியங்களைச் செய்வது சரியில்லை. பழைய கொடுமைகளைப் போக்க வேண்டும். மற்றவர்களுக்கு ஸமூஹத்தில் உயர்ந்த ஸ்தானம் வர வேண்டும் என்று போராடியதிலும் பிராம்மணர்கள்தானே முன்னிலையில் இருந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பிராம்மணர்களின் அதிக்கிரமத்தை பிராம்மணர்கள்தானே அதிகம் எடுத்துச் சொல்லி திருத்தினார்கள்? ஆகையால் துவேஷத்தை வளர்த்துக்கொண்டே போவதில் பயனில்லை. அது தமிழ்ப் பண்பாடு என்ற விசேஷித்து சொல்வதற்கு ஏற்றதுமில்லை.

துரதிஷ்டவசமாக பிராம்மணர்கள் நல்ல சீர்திருத்தம் என்று நினைத்து தப்பான ஸமத்துவங்களை ஏற்படுத்தப் போனதில், கீழேயிருப்பதை மேலே உயர்த்துவதற்குப் பதில் மேலே இருக்கிறதை கீழே இறக்கியதாகத்தான் ஏற்பட்டிருக்கிறது. இரண்டு தினுஸில் ஸமமாய் இருக்கலாம். ஒன்று எல்லாம் உயர்ந்திருக்கலாம். அல்லது எல்லாம் தாழ்ந்திருக்கலாம். பாரத்தை உயரே தூக்கிப் போவது கஷ்டம். கீழே உருட்டி விடுவது ஸுலபம். அந்த மாதிரிதான் நம்முடைய சீர்திருத்த சமத்துவம் எது ஸுலபமோ அதைப் பண்ணிவிட்டது. Equality , eqaulity [ஸமத்துவம்] என்று பண்ணினதில் quality [தரம்] போய்விட்டது! வாஸ்தவத்தில் ஒரே மாதிரியான காரியத்தை எல்லாரும் பண்ணுகிற ஸமத்வம் அவசியமானதேயில்லை. பலவிதமாகப் பிரிந்து காரியங்களைச் செய்வதால் ஸமத்வம் இல்லை என்றும் அர்த்தம் இல்லை. இதைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறேன்2. எனவே இப்போது ஒரே மாதிரி எல்லாரும் செய்கிற uniformity -ஐ விட்டு விட்டு, பிரிந்து செய்தும் ஐக்கியமாயிருக்கிற unity -க்காகப் பிரயத்தனம் பண்ண வேண்டும்.

தமிழ் நாகரிகத்தில் ப்ரம்ம த்வேஷமும், ஸம்ஸ்கிருத த்வேஷமும் இருந்ததேயில்லை என்பதைப் புரிந்து கொண்டு விட்டால் போதும். ஆத்மிக விஷயங்கள், மத சாஸ்திரங்கள், காவியங்கள், கலை நூல்கள் அத்தனையும் ஏராளமாக இருக்கிற ஸம்ஸ்கிருதத்திடமும் துவேஷம் போய், "அது நம் பாஷையும்தான்" என்ற உணர்ச்சி வர வேண்டும். எல்லோரும் அதைக் கற்க வேண்டும். லோக க்ஷேமத்துக்காக பிரம்மண்யம் என்று தனியாக ஒன்று இருக்க வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்டு, அதற்கான அத்யயன யஜ்ஞாதிகளை அவற்றில் அதிகாரம் பெற்றவர்கள் பண்ணும்படி உத்ஸாஹப் படுத்த வேண்டும். இப்போது வேதம் உபநிஷத்து எல்லாம் புஸ்தகமாக வந்துவிட்டதால் எல்லோரும் அவற்றின் கருத்துக்களைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் பல வருஷங்கள் பிடிக்கிற அத்யயனம், யஜ்ஞகர்மா முதலியவற்றைச் செய்யப் போக வேண்டாம். அது அவசியமேயில்லை.

நல்ல எண்ணம், சீர்திருத்தம் எதுவானாலும் முதலில் அடக்கம் வேண்டும். அப்படியிருந்து கொண்டு செய்தால் சாஸ்திர விரோதமாக போக வேண்டியது வராது.

1 1959ல் கூறியது.

2 "தெய்வத்தின் குரல்-முதற்பகுதி"யில் "வைதிக மதம்" என்ற பிரிவிலுள்ள உரைகள் பார்க்க.

ஸ்திரீகளின் ஒரே வைதிகச் சொத்து

ஸ்திரீகளின் ஒரே வைதிகச் சொத்து

ஔபாஸனம் எல்லா ஜாதியாருக்கும் உண்டு என்றேன். அதே போல் ஔபாஸனம் ஆண்-பெண் இருவருக்கும், பதி-பத்தினி இரண்டு பேருக்கும் சேர்ந்த பொதுக் காரியமாய் இருக்கிறது.

பதி கிருஹத்திலிருக்கும் போது அவனோடு கூடச் சேர்ந்து பத்தினியும் ஔபாஸனம் பண்ணுகிறாள். அவன் ஊரிலில்லா விட்டாலும் ஔபாஸனாக்னியில் ஹோமம் பண்ண வேண்டிய அக்ஷதைகளை

அதில் பத்தினியே போட வேண்டும். அந்த ரைட் அவளுக்கு வேதத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிற்பாடு வந்த பௌராணிகமான விரதங்கள், பூஜைகள் இவைகளைச் சேர்க்காமல் சுத்த வைதிகமாகப் பார்த்தால், ஔபாஸனத்தைத் தவிர ஸ்திரீக்குச் சொந்தமாக எந்த வேத கர்மாவும் இல்லை. புருஷன் பண்ணுகிறதிலெல்லாம் automatic -ஆக இவளுக்கு share கிடைத்து விடுகிறது. ஆகவே, 'இவள் கிருஹரக்ஷணை தவிர தனியாக எந்த தர்மமும், கர்மமும் பண்ண வேண்டாம். பண்ணினாலும் ஒட்டாது என்று தான் வைதிகமான தர்ம சாஸ்திரத்தில் இருக்கிறது. ஒரே exception [விதி விலக்கு] ஔபாஸனம்.

ஆகையால் 'ரைட்' 'ரைட்' என்று கேட்கிற ஸ்திரீகளை இந்த விஷயத்தில் கிளப்பிவிட்டாவது வீட்டுக்கு வீடு ஔபாஸனாக்னி ஜ்வலிக்கும்படிச் செய்யலாமோ என்று எனக்கு ஆசை. ஔபாஸனம் செய்யாத புருஷனிடம் பத்தினியானவள், "உங்களுக்குக் கொஞ்சமாவது வேத ஸம்பந்தம் இருக்கும்படியாக, (நீங்கள் வைதிகமான பாக்கியெல்லாவற்றையும் விட்டுவிட்டாலும்) வேத மந்திரமான காயத்ரீயாவது பண்ணுகிறீர்கள். இப்போது பண்ணாவிட்டாலும், மந்திரமே மறந்து போயிருந்தாலும்கூட, பின்னாலாவது என்றைக்காவது பச்சாதாபம் ஏற்பட்டால் காயத்ரீ பண்ணுவதற்கு அநுகூலமாக உங்களுக்கு உபநயன ஸம்ஸ்காரமாவது ஆகியிருக்கிறது. எனக்கோ உபநயனமும் இல்லை, காயத்ரீயும் இல்லை. நம் மதத்துக்கே, லோகத்துக்கே, ஸ்ருஷ்டிக்கே ஆதாரமாக இருக்கப்பட்ட வேதத்தில் ஸ்திரீயான எனக்கு ஏதாவது 'ரைட்' இருக்குமானால் அது இந்த ஔபாஸனம்தான். நீங்கள் இதுவும் செய்யாவிட்டால் எனக்கு வேத ஸம்பந்தம் அடியோடு போய் விடுகிறதல்லவா?" என்று சண்டை போட்டு அவனை ஔபாஸனம் பண்ண வைக்க வேண்டும். இந்த மஹா பெரிய சொத்துரிமைக்குத்தான் பெண்கள் சண்டை போட வேண்டும்.

ஸ்திரீகளுக்காவது ஔபாஸனம், அக்னி ஹோத்ரம் (ஔபாஸனத்தைப் போலவே நித்யம் இரண்டு வேளை செய்கிற அக்னி ஹோத்ரம் என்று ஒன்று உண்டு. இதைப் பற்றி அப்புறம்

சொல்கிறேன்) முதலிய வைதிக சொத்துக்களில் சிரத்தையிருக்க வேண்டும் என்பதே நான் சொல்வதன் தாத்பர்யம். ஸ்திரீகள் யோசித்துப் பார்க்க வேண்டும், "அகத்தில் எத்தனையோ அக்னி இருக்கிறதே! காப்பி போட, சமைக்க, ஸ்நானத்துக்கு வெந்நீர் வைக்க இதற்கெல்லாம் அக்னியிருக்கிறதே! எதை சாட்சியாக வைத்துக் கொண்டு விவாஹம் பண்ணிக் கொண்டோமோ அது ஔபாஸனமில்லாமல் அணைந்துபோக விடலாமா?" என்று.

அக்னி எப்போதும் அணையாமலிருக்க உமி போட்டு வரவேண்டும். இதற்காக நெல்லை வீட்டில் குத்தினால் அதில் பல பிரயோஜனங்கள் ஏற்படுகின்றன. உமி கிடைப்பதோடு, நாம் சாப்பிட ஆரோக்யமுள்ள கைக்குத்தல் அரிசி கிடைப்பது; நெல்லைக் குத்துகிற ஏழைக்கு ஏதோ கொஞ்சம் ஜீவனோபாயம் கிடைப்பது, என்றிப்படி. ஹோமம் செய்ய வேண்டிய அக்ஷதை மட்டும் பத்தினியே குத்தியதாக இருக்க வேண்டும். இது மந்திர பூர்வமான காரியம்.

ஔபாஸனத்துக்கு அதிகச் செலவு இல்லை. அதைச் செய்ய ரொம்ப நேரமும் பிடிக்காது. ஆகவே மனஸ் மட்டும் இருந்து விட்டால் எல்லாரும் செய்யலாம். இதிலே உமிக்காகப் பிறருக்குக் கூலி கொடுத்துச் குத்தச் செய்வதன் வழியாகப் பரோபகாரம்; மெஷின் உஷ்ணம் சேராமல் போஜனத்துக்கு ஆரோக்யமான வஸ்து என்கிறவையும், கைக்குத்தலரிசி சேர்ப்பதில் காந்தீயமும்கூட வந்து விடுகிறது.

ஔபாஸன அக்னியைக் காப்பாற்றி வந்தால் பூதப் பிரேத பிசாசாதிகளால் வரும் கஷ்டங்கள், வியாதிகள் கிட்டவே வராது. இப்பொழுது எவ்வளவோ பிராம்மணர்கள் வீட்டில் கூட வேப்பிலை போடுவது, பிரம்பால் அடிப்பது, மசூதிக்குப் போய் ஊதுவது, என்னிடம் வந்து பிரார்த்திப்பது என்றெல்லாம் செய்யும்படியாகியிருப்பது ஔபாஸன அக்னி இல்லாததன் கோளாறுதான். புருஷப் பிரஜைகளும் ஸ்திரீப்ரஜைகளும் எந்த விகிதத்தில் பிறக்க வேண்டுமோ அப்படிப் பிறப்பதற்கும் ஔபாஸனம் ஸஹாயம் பண்ணும் என்று முன்னமே சொல்லியிருக்கிறேன். ஔபாஸன பஸ்மா [சாம்பல்] இட்டுக்கொள்வது பெரிய ரக்ஷை.

அக்னியின் சிறப்பு

அக்னியின் சிறப்பு

கிருஹஸ்தன் செய்ய வேண்டிய ஏராளமான அக்னி காரியங்களுக்கு ஆரம்பம்தான் ஔபாஸனம். வேத மதத்துக்கு அக்னி ரொம்ப முக்கியம். அக்னி நாராயணன் என்றே அவரைச் சொல்கிறார்கள். ருத்ர ஸூக்தங்களைப் பார்த்தாலும் அக்னி சம்பந்தமே தெரிகிறது. திருவண்ணாமலையில் இப்படி அக்னி மலையாகவே ஈச்வரன் பூர்வத்தில் இருந்திருக்கிறார். அம்பாளையும் விளக்கிலே ஜோதி ஸ்வரூபிணியாக ஆராதிக்கிற வழக்கம் விசேஷமாய் இருக்கிறது. மலையாளத்தில் பகவதி பூஜைகளில் மூர்த்தி, யந்திரம் இவை முக்கியமில்லை; தீபத்தில்தான் தேவியை ஆவாஹனம் செய்கிறார்கள். ஈச்வரனின் அக்னி நேத்திரத்திலிருந்து உத்பவித்த ஸுப்ரமண்ய ஸ்வாமியையும் ஜோதி ஸ்வரூபமாகவே சொல்கிறோம். "ஆரியர்கள் என்றாலே Fire-worshippers தான்" என்று ஆராய்ச்சிக்காரர்கள் சொல்கிறார்கள். வேத மதத்தில் ஒரு பிரிவாகவே இருக்கப்பட்ட பார்ஸிகளைப் பார்த்தாலும் அவர்கள் அக்னியை ரக்ஷிப்பதுதான் பிரதானமான வழிபாடு என்று என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிராம்மணர்களுடைய வீட்டுக்கு வீடு அக்னி ஜ்வலித்து அதில் சாஸ்திரப்படி சேர்க்க வேண்டிய நெய், பால், ஹவிஸ் மணந்து கொண்டிருந்தால் அரோக திடகாத்திரமும் உத்தமமான மனோவிருத்திகளும் ஸகல ஜாதி ஜனங்களுக்கும் ஏற்படும்.

எந்த தேவதைக்கான யஜ்ஞம் செய்தாலும் அக்னியில்தான் ஹோமம் செய்ய வேண்டும் என்ற விஷயம் முன்பே சொன்னேன்.

அக்னி காரியங்கள்

அக்னி காரியங்கள்*

இப்படி ஏறக்குறைய நானூறு யஜ்ஞங்கள் வேதத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

இவற்றில் ஔபாஸனம் மட்டும் நாலு வர்ணத்தாரும் செய்யலாம் என்றாலும் பிரம்ம க்ஷத்ரியர்களே அதிகம் செய்ததாகவும் வைச்யர்கள் நடைமுறையில் அவ்வளவாகச் செய்து வரவில்லையென்றும், பிற்பாடு க்ஷத்ரியர் பண்ணுவதும் குறைந்து பிராம்மணர் மட்டுமே பண்ண ஆரம்பித்ததாகவும் சொல்கிறார்கள். க்ஷத்ரியர்களுக்கென்று மட்டுமே புஜபலம், வீர்ய விஜயம் முதலியவற்றைத் தருகிற யஜ்ஞங்கள் இருக்கின்றன. ராஜஸூயம், அச்வமேதம் முதலியவற்றைச் சக்கரவர்த்திகளே பண்ணியிருக்கிறார்கள். இப்படியே தன தானிய ஸம்ருத்தி (செழிப்பு) க்காக வைச்யர்களுக்கென்றே சில யஜ்ஞங்கள் உள்ளன. யாகத்தை நடத்திக் கொடுக்கும் ஹோதா, உக்தாதா, அத்வர்யு, பிரம்மா எல்லாரையும் பிராம்மணர்களாக வைத்துக் கொண்டு, யஜமானனாக க்ஷத்ரியனோ வைசியனோ இருந்து யாகம் செய்யவேண்டும். (அந்தக் காரியங்களையும் இந்த இரு ஜாதிகள் செய்வது என்றால் இவர்கள் செய்ய வேண்டிய ரக்ஷணை, வியாபாரம், விவசாயம் முதலியன பாழாகி விடுமே!)

எல்லா யாகங்களையும் எல்லா பிராம்மணர்களும் செய்யவேண்டும் என்றில்லை. இவற்றில் அநேகம் குறிப்பிட்ட ஒவ்வொரு பலனுக்காக இருக்கும். பிள்ளை பிறக்கவேண்டுமென்பதற்காகப் புத்ரகாமேஷ்டி செய்வது என்று ராமாயணத்தில் கேள்வி பட்டிருக்கிறோமல்லவா? அப்படி. இவ்வாறு ஒரு இஷ்டத்தை உத்தேசித்துப் பண்ணுவது காம்ய கர்மா எனப்படும். அது ஒருவர் பிரியப்பட்டால் செய்கிற optional காரியந்தான். இஷ்டமிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஆத்ம சுத்திக்காகவும், லோக க்ஷேமத்துக்காகவும் செய்தே தீர வேண்டிய obligatory கர்மாக்களும் உண்டு. அவற்றுக்கு நித்யகர்மா என்று பெயர். 'நித்ய' என்றால் இங்கே தினந்தோறும் பண்ணுவது என்ற அர்த்தமில்லை.

இப்படிப்பட்ட நித்ய கர்மாக்களாகப் பண்ண வேண்டியவை இருபத்தியோரு யக்ஞங்கள். நானூற்றில் மீதமுள்ளதைப் பண்ணினால் பண்ணலாம். பண்ணாவிட்டாலும் தோஷமில்லை. ஆனால் நாற்பது ஸம்ஸ்காரங்களிலேயே சேர்க்கப்பட்டு விட்ட இந்த இருபத்தியொன்றை ஜன்மாவில் ஒரு தரமாவது செய்யவேண்டும்.

இந்த இருபத்தியொன்றும் ஏழு பாக யக்ஞங்கள், ஏழு ஹவிர் யக்ஞங்கள், ஏழு ஸோம யக்ஞங்கள் என்று பிரியும் என்று முன்பே சொல்லியிருக்கிறேன்.

விவாஹம் அக்னி ஸாட்சியாக அக்னியில் ஹோமத்துடன் தானே நடக்கிறது? அந்த அக்னியிலேயே விவாஹத்தின் போதே ஔபாஸனம் ஆரம்பிக்கப்படுகிறது. பிறகு வாழ்நாள் பரியந்தம் அந்த ஔபாஸனாக்னி அணையாமல் அதை உபாஸிக்க வேண்டும்.

பாக யஜ்ஞங்கள் என்று ஏழு சொன்னேனே, அவற்றையும், கிருஹத்தில் நடக்கும் உபநயனம் முதலான காரியங்களையும் சிராத்தம் முதலியவைகளையும் ஔபாஸன அக்னியைக் கொண்டேதான் செய்யவேண்டும். தகப்பனாருடைய ஔபாஸனாக்னியிலிருந்தே புத்திரனின் விவாஹத்தில் அக்னி வளர்க்கப்படும். இதுவே அப்புறம் புத்திரனின் ஜீவ பரியந்தமும் அவனுக்கு ஔபாஸனாக்னியாகிறது. இப்படி அவிச்சின்னமாக [முறிவு படாமல்] தலைமுறை தலைமுறையாக அதே அக்னி போகும்.

ஒரு தனி மனிதனையும், அவனுடைய ஒரு குடும்பத்தையும் மட்டுமே மையமாகக் கொண்டு அமைகிற – அதாவது ஔபாஸன அக்னி உபயோகிக்கப்படுகிற – எல்லா கர்மங்களுக்கும் 'க்ருஹ்ய கர்மாக்கள்' என்று பெயர். பாக யக்ஞங்கள் ஏழுங்கூட இப்படிப்பட்ட க்ருஹ்ய கர்மாக்கள்தான்.

இவை அநேகமாக ஒரு குடும்ப ஸமாசாரமாதலால் (பலன் நேராக ஒரு குடும்பத்தை உத்தேசித்ததானாலும், அதில் பிரயோகமாகிற வேத மந்திர சப்தம் ஸகல ஜகத்துக்கும் நல்லது செய்யத்தான் செய்யும்) ரொம்ப விஸ்தாரமாயில்லாமல் small scale -ல் இருக்கிறவை.

க்ருஹ்ய ஸூத்ரங்கள் இந்தக் கர்மாக்களை விவரிக்கின்றன. அவை ஸ்மிருதிகளைச் சேர்ந்தவை. ஸ்மிருதிகள் சொல்வதால் இவற்றுக்கு ஸ்மார்த்த கர்மாக்கள் என்றும் ஒரு பெயர் உண்டு.

இப்படியில்லாமல் விசேஷமாக லோக க்ஷேமத்தை உண்டாக்குவதாக (ஒரு குடும்பத்தின் கல்யாணம், திவஸம், இவற்றில்

ஸம்பந்தப்படுவதோடு நின்று விடாததாக) இருக்கிற elaborate -ஆன [விரிவான] மற்ற யக்ஞங்கள் ச்ரௌத கர்மாக்கள் எனப்படும். வேதமான ச்ருதியையை நேர் ஆதாரமாகக் கொண்டு, இவற்றின் procedure [வழிமுறைகள்] சொல்லப்பட்டிருப்பதால் ச்ரௌதம் என்று பெயர் ஏற்பட்டது. இவற்றை விவரிக்கிற சாஸ்திரத்துக்கு ச்ரௌத ஸூத்ரங்கள் என்று பெயர்.

முன்பு ச்ருதிக்கும் ஸ்ம்ருதிக்கும் உயர்வு தாழ்வு கற்பிக்கக் கூடாது என்று சொன்னேன் அல்லவா? அது போலவே க்ருஹ்ய கர்மாவுக்கும் ச்ரௌத கர்மாவுக்கும் இடையிலேயும் தாரதம்மியங்கள் கற்பிக்கக்கூடாது. ஹிந்து மதம் என்று இப்போது சொல்கிற ஸநாதன தர்மத்தின் படி இரண்டும் இரு கண்களாக ரக்ஷிக்கப்பட வேண்டியவை.

விவாஹத்தின்போது ஔபாஸனம் செய்யப்பட்ட அக்னியை இரண்டாகப் பிரிக்க வேண்டும். அதற்கென்று 'அக்னி ஆதானம்' என்று ஒரு சடங்கு உண்டு. இப்படிப் பிரித்ததில் ஒன்றே க்ருஹ்ய காரியங்களை செய்ய வேண்டிய க்ருஹ்யாக்னி (அல்லது ஸ்மார்த்தாக்னி) ஆகிறது. மற்றது ச்ரௌத காரியங்களைச் செய்வதற்கான ச்ரௌதாக்னியாகிறது. அதன் பின் இந்த இரண்டு அக்னிகளையும் சாச்வதமாக ரக்ஷித்து வரவேண்டும்.

இவற்றில் க்ருஹ்யாக்னிதான் ஔபாஸனாக்னி என்றும் பெயர் பெற்று தினமும் அதில் ஔபாஸனம் செய்யப்படுகிறது. இது ஒரே குண்டத்திலிருக்கிற அக்னிதான். அதனால் இதற்கு 'ஏகாக்னி' என்றும் பெயர். ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் க்ருஹ்ய கர்ம விஷயங்களுக்கே 'ஏகாக்னி காண்டம்' என்று தான் பெயர். நான் இதுவரை சொல்லிவந்த ஸம்ஸ்கார ஸமாசாரங்கள், சாஸ்திரோக்த விதிகள் எல்லாமே பெரும்பாலும் ஆபஸ்தம்ப ஸூத்ரத்தை அநுஸரித்ததுதான். ஏனென்றால் அதை அநுஷ்டிக்கிற கிருஷ்ண யஜுர்வேதிகள்தான் தக்ஷிணத்தில் கணிசமான மெஜாரிட்டிக்காரர்கள். இங்கே மைனாரிடியாக உள்ள ரிக்வேதிகள் பின்பற்றுகிற ஆச்வலாயண ஸூத்ரத்திலும், ஸாம வேதிகள் அநுஸரிக்கிற கோபில ஸூத்ரத்திலும் சில விஷயங்கள் கொஞ்சம் மாறுபட்டிருக்கும். ஆனால், இந்த வித்யாசங்கள் க்ருஹ்ய கர்மாக்களில் தானேயன்றி ச்ரௌத

கர்மாக்களில் வித்யாஸமே கிடையாது. ச்ரௌதம் எல்லோருக்கும் பொது.

ச்ரௌத காரியங்களுக்கு முக்கியமாய் இருக்கிற ச்ரௌதாக்னி என்பது மூன்று அக்னிகளாக, மூன்று குண்டங்களில் இருப்பது. அதனால் 'த்ரேதாக்னி' என்று அதற்குப் பெயர். 'த்ரேதாக்னி காண்டம்' என்றே ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் இந்தப் பகுதிக்குப் பேர். இப்படி ச்ரௌதாக்னியை உபாஸிக்கிறவரையே 'த்ரேதாக்னி' என்று சொல்வதுண்டு. 'ச்ரௌதி' என்றும் சொல்வார்கள். ச்ரௌத– க்ருஹ்ய அக்னிகளை உபாஸிக்கிறவருக்கு 'ஆஹிதாக்னி' என்று பெயர். இப்படியே விஸ்தாரமான ஸோமயாகம் முதலானதைப் பண்ணினவருக்கு யஜ்வா, தீக்ஷிதர், மகி என்ற பெயர்கள் ஏற்படுகின்றன. ஸோம யாகங்களுக்குள் விசேஷமான வாஜபேயம் பண்ணினவர் வாஜபேயி எனப்படுகிறார். யாகம் அல்லது யஜ்ஞம் என்பதற்கு க்ரது, மகம் (இதிலிருந்துதான் யஜமானனுக்கு 'மகி' என்று பெயர் உண்டாகிறது) , ஸவனம், இஷ்டி, ஸ்தோமம், ஸம்ஸ்தை என்ற பெயர்களும் உள்ளன. இவற்றில் சிலவற்றுக்கிடையே சில வித்யாசங்களும் உண்டு. 'முத்தீ', 'முத்தீ ஓம்புதல்' என்றெல்லாம் ரொம்பப் பழைய தமிழ் நூல்களில் சிறப்பித்துச் சொல்லியிருப்பது ச்ரௌதாக்னியைத்தான்.

மூன்று அக்னிகள் என்ன என்றால், ஒன்று 'கார்ஹபத்யம்'- அதாவது இல்லத்தின் அதிபதியான க்ருஹபதிக்கு உரியது. இந்த கார்ஹபத்ய குண்டத்திலேதான் அணையாமல் எப்போதும் ச்ரௌதாக்னி எரிந்து கொண்டிருக்க வேண்டும். இது முழுவட்ட வடிவமாக இருக்கும். இதிலே நேராக ஒரு ஹோமமும் கூடாது. இதிலே இருக்கிற அக்னியை பித்ரு காரியம் (இது க்ருஹ்யமான சிராத்தம் இல்லை; இது ச்ரௌதமாக அமாவாஸ்யை தோறும் செய்யும் பிண்ட பித்ரு கர்மா) செய்வதற்காகவும், சில சில்லறை தேவதா ஹோமங்களுக்காகவும் இரண்டாவதான ஒரு குண்டத்தில் எடுத்து வைத்துப் பண்ண வேண்டும். இந்தக் குண்டம் தெற்கே இருப்பதால் இந்த அக்னிக்கு 'தக்ஷினாக்னி' என்று பெயர். இது அரை வட்டமாக இருக்கும். பொதுவாக மற்ற எல்லா தேவதைகளுக்கும் செய்கிற ஹோமங்களை மூன்றாவதான 'ஆஹவநீயம்' என்ற கிழக்குப் பக்கமுள்ள குண்டத்தில்

பண்ண வேண்டும். கார்ஹபத்ய அக்னியிலிருந்தே கிழக்குக் குண்டத்தில் எடுத்து வைத்து ஆஹவநீய அக்னியை உண்டாக்க வேண்டும். ஹவன், ஹவன் என்றுதானே வடக்கே யாகத்தையே சொல்கிறார்கள்? அந்த ஹவனம் அல்லது ஆஹவனத்துக்கு ஆதாரமாக இருக்கப்பட்டதுதான ஆஹவநீயம். இந்த ஆஹவநீய குண்டம் சதுரமாக இருக்கும். தேவதாப்ரீதியாகச் செய்யப்படும் ஸோம யாகம் முதலான எல்லாப் பெரிய வேள்விகளும் ஆஹவநீய அக்னியை க்ருஹத்திலிருந்து யாகசாலைக்கு கொண்டு போய் அங்கே அதில் செய்வதுதான்.

க்ருஹ்யத்தில் ஔபாஸனம் போல, ச்ரௌத கர்மாக்களில் அன்றாடம் இரண்டு வேளையும் செய்ய வேண்டியது அக்னி ஹோத்ரம். முன்பு சொன்ன அக்னி ஆதானமும் அக்னி ஹோத்ரமும் ஏழு ஹவிர்யக்ஞங்களில் முதலிரண்டாகும். அக்னி ஹோத்ரம் செய்பவர்களையே அக்னி ஹோத்ரிகள் என்கிறோம். (இக்காலத்தில் ஹாஸ்யம் என்று நினைத்து, ஸிகரெட் ஊதுவதை அக்னி ஹோத்ரம் என்றும், ரேஸுக்குப் போவதை அச்வமேதம் என்றும் சொல்வது அபசாரமாகும்.)

வஸந்த காலத்தில் (அதாவது ஏறக்குறைய நம் சித்திரை வைகாசி மாஸங்களில்) விவாஹம் செய்வதால் ஔபாஸன ஸித்தியும், அக்னி ஆதானம் செய்வதால் அக்னி ஹோத்ர ஸித்தியும் உண்டாகின்றன.

அக்னிஹோத்ர அக்னி எக்காரணத்திலாவது அணைந்து விட்டால் புணராதானம் என்பதாக மறுபடி ஆதானம் பண்ணி மீண்டும் ஆரம்பிக்கலாம். இப்படியே ஔபாஸன அக்னி அணைந்தாலும், அக்னி ஸந்தானம் செய்து மறுபடி ஆரம்பிக்கலாம். தற்போது அநேகமாக அத்தனை பேர் வீட்டிலுமே ஔபாஸன, அக்னி ஹோத்ர அக்னிகள் இல்லாததால் நான் இவற்றைச் செய்யச் சொல்லும்போது, "எப்படி முடியும்? விவாஹ காலத்திலிருந்து இந்த அக்னிகளை நாங்கள் ரக்ஷிக்காமல் விட்டு விட்டோமே!" என்று நீங்கள் கேட்டுவிடக்கூடாது என்றே இதை - இப்போதுகூட இவற்றை ஆரம்பித்துக் கொள்ள இடமிருக்கிறது என்பதை -- சொல்கிறேன்.

ஔபாஸனத்தில் அக்ஷதையையும், அக்னி ஹோத்ரத்தில் பால், அக்ஷதை, நெய் இவற்றில் ஒன்றையும் ஹோமம் செய்யவேண்டும். (பொதுவாக அக்னி ஹோத்ரத்தில் பாலைச் செய்வதே வழக்கமாயிருக்கிறது.)

கார்ஹபத்ய அக்னியை ச்ரௌதமான பிண்ட பித்ரு காரியத்துக்காக தக்ஷிணாக்னியிலும் வைத்து அந்தக் கர்மாக்களைப் பண்ணி முடிந்த பிறகு இந்த இரண்டு அக்னிகளும் 'ச்ரௌத அக்னி' என்ற உன்னதமான பெயரை இழந்து வெறும் 'லௌகிக அக்னி' யாகி விடும். இவற்றை விஸர்ஜனம் செய்து விடவேண்டும். [அணைத்து விடவேண்டும்]. கார்ஹபத்யம் மட்டுமே விஸர்ஜனமில்லாமல் ஔபாஸனாக்னி போல எப்போதும் எரிந்து கொண்டிருக்க வேண்டும்.

முக்கியமாக ஒவ்வொரு பிரதமையிலும் க்ருஹ்யாக்னி, ச்ரௌதாக்னி இரண்டிலும் க்ருஹஸ்தன் செய்யவேண்டிய உபாஸனைகளாக முறையே ஒரு பாக யஜ்ஞமும் ஒரு ஹவிர் யஜ்ஞமும் உள்ளன.

இந்த பாக யஜ்ஞத்துக்கு ஸ்தாலீபாகம் என்று பேர். ஸ்தாலீ என்று சோற்றுப் பானைக்கு பெயர். ஔபாஸன அக்னியிலே ஸ்தாலியை வைத்து 'சரு' என்கிற பக்குவ அன்னம் செய்வது ஸ்தாலீபாகம். இந்தச் சருவை ஹோமம் செய்ய வேண்டும்.

ஏனைய பலவற்றுக்கு அடிப்படையாக இருப்பதை 'ப்ரக்ருதி' என்பார்கள். இந்த ப்ரக்ருதியைத் தழுவி சில மாறுதல்களுடன் செய்கிற மற்றவற்றுக்கு விக்ருதி என்று பெயர். ச்ராவணி என்கிற ஸர்ப்ப பலி, ஆக்ராஹாயணி முதலான பாக யக்ஞங்களுக்கு ஸ்தாலீபாகம் தான் ப்ரக்ருதி. அடி முதல் நுனி வரை கர்மா செய்ய வேண்டிய கிரமம் சொல்லப் படுவதே 'ப்ரக்ருதி'. அநேக விஷயங்களில் இதையே 'ஷெ' அல்லது ditto போட்டுக் காட்டி மற்ற விஷயங்களை மட்டும் சொல்வது 'விக்ருதி'.

பிரதி பிரதமையும் ச்ரௌதாக்னியில் பண்ணவேண்டிய ஹவிர்யக்ஞத்துக்கு 'தர்ச பூர்ண இஷ்டி' என்று பெயர். தர்சம் என்றால் அமாவாஸ்யை; பூர்ணம் என்றால் பௌர்ணமி. இந்த இரண்டுக்கும் மறுநாளான பிரதமைகளில் செய்யப்படும் இஷ்டியாதலால் (இஷ்டி

என்றால் யாகம்) தர்ச பூர்ண இஷ்டி என்று பெயர். இதை 'இஷ்டி' என்று மட்டுமே சுருக்கியும் சொல்வார்கள். ஹவிர்யக்ஞங்களுக்குள் இதுவே ப்ரக்ருதி, மற்றவை இதன் விக்ருதிகள்.

இப்படியே ஸோம யக்ஞங்களில் 'அக்னிஷ்டோமம்' என்பதுதான் ப்ரகிருதி. 'ஸ்தோமம்' என்றாலும் வேள்வி தான். அக்னி+ஸ்தோமம் என்னும்போது ஸந்தியில் 'ஸ்தோ' என்பது 'ஷ்டோ'வாகிறது. 'ஸ்தாபித' என்பதை இங்கிலீஷில் 'எஸ்டாப்லிஷ்' என்கிறபோது ஸ்தா ஸ்டாவாகிறதல்லவா? சில பாமர ஜனங்கள் ஸ்டார், ஸ்டாம்ப் என்பதை இஷ்டார், இஷ்டாம்ப் என்கவில்லையா? இவை வேதத்திலேயே சில ஸந்திகளில் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒலி மாற்றங்கள் (phonetic changes).

ஏழேழு பாக-ஹவிர்-ஸோம யஜ்ஞங்களில் பாக்கியுள்ளவை பற்றி கொஞ்சம் சொல்கிறேன்.

பாக யஜ்ஞங்கள் சின்னவை. இவை யாகசாலை போட்டுக்கொள்ளாமல் வீட்டிலேயே செய்கிற க்ருஹ்ய கர்மாக்கள். ச்ரௌத கர்மாக்களில் கூட முதல் நாலு ஹவிர் யக்ஞங்களான சாதுர்மாஸ்யம், (நிரூட) பசுபந்தம், ஸௌத்ராமணி இவையும், ஏழு ஸோம யக்ஞங்களும், மற்ற எல்லா யாகங்களும் யாகசாலை தனியாக அமைத்து அதிலேயே செய்யப்பட வேண்டியவை.

யாகசாலைக்கு 'தேவ யஜனம்' என்றும் பெயர். அந்த அமைப்பைப் பற்றி ஸகல விவரங்களும் வெகு நுணுக்கமாக கல்ப ஸூத்ராதிகளில் சொல்லப்பட்டிருக்கின்றன. 'சயனம்' என்று செங்கல் வைத்துக் கட்டவேண்டிய யக்ஞ அமைப்புகள் உண்டு. (பாக யக்ஞங்களுக்கும் ஹவிர் யக்ஞங்களுக்கும் ஹவிர் யக்ஞங்களுக்கும் சயனம் கிடையாது). இவற்றுக்கும் ரொம்ப minute ஆக details [நுணுக்கமான விவரங்கள்] தரப்பட்டுள்ளன. இதிலே கணித விஷயங்கள் உள்ளன என்று முன்பே சொன்னேன். ஹோமம் செய்கிற கரண்டியை எடுத்துக் கொண்டால் அதில் தர்வீ, ஸ்ருக், ஸ்ரவம் என்று பல தினுசு. ஒவ்வொன்றுக்கும் ஒரு அளவு, இன்ன வஸ்துவால் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று இருக்கிறது. இப்படியிப்படி கை முத்திரை பிடிக்க வேண்டும் என்று விதி உள்ளது. எந்த சின்ன விஷயமும் விட்டுப் போகாமல் இப்படி அளவுகள், இன்ன 'மெடீரியல்' என்பது எல்லாம்

சொல்லியிருக்கும். அணு ஆராய்ச்சி, 'ஸ்பேஸ் ரிஸர்ச்' என்று லாபரட்டரியில் செய்கிற போது எப்படி ஒவ்வொரு சின்ன விஷயத்தையும் அதி ஜாக்ரதையுடன் செய்கிறார்களோ அப்படியே (இயற்கைக்கு அதீதமான) ஸூபர்நாச்சுரல் சக்திகளை லோக க்ஷேமத்துக்காக இழுத்துக் கொடுக்கிற யஜ்ஞங்களிலும் இண்டு இடுக்கு விடாமல் ஸகல அம்சங்களையும் ஜாக்ரதையுடன் முறைப்படி செய்ய சாஸ்திரம் விரிவான விதிகளைக் கொடுத்திருக்கிறது.

பாகயக்ஞம் ஏழும் சின்னவை. 'பாக' என்றால் 'சின்ன' குழந்தை மாதிரியான என்று ஒரு அர்த்தம். வெந்த உணவுக்கும் பாகம் என்று பெயர். அதனால்தான் சமையற்கலையையே 'பாக சாஸ்திரம்' என்கிறோம். Paaka என்று சொல்லவேண்டும். Baaga அல்லது Bhaaga என்பது தப்பு. சமைக்கிற இடம் பாகசாலை. அநேகமாக ஸ்தாலீபாகத்தில் அன்னைத்தை ஹோமம் செய்வது போல வெந்த தானியங்களையே பாக யக்ஞங்களில் ஆஹுதி பண்ணுபடியிருக்கிறது. கஞ்சி வடிக்கக்கூடாது. இதற்கு 'சரு ஹோமம்' என்று பெயர். ஆனால் ஔபாஸனத்தில் வேகவைக்காத அட்சதை (வரட்டு அரிசி) தான் ஹோமம். அஷ்டகா என்ற பாக யஜ்ஞத்தில் அடை மாதிரி உள்ள புரோடாசம் ஹோமம் செய்யப்படுகிறது.

பாகயஜ்ஞங்கள் ஏழில் அஷ்டகா என்பது சிராத்தத்தைச் சேர்ந்த பித்ருகர்மா. சுக்லபக்ஷம், கிருஷ்ணபக்ஷம் என்று இருக்கிறதல்லவா? இவற்றில் சுக்லபக்ஷம் [வளர்பிறை] தேவர்களுக்கு விசேஷமானது, கிருஷ்ணபக்ஷம் [தேய்பிறை] பித்ருக்களுக்கு விசேஷமானது. பித்ரு காரியங்களுக்கு 'அபர காரியம்' என்றும் பெயர். அதனால் கிருஷ்ணபக்ஷத்தை அபரபக்ஷம் என்பதுண்டு. இந்த அபரபக்ஷத்தில் அஷ்டமி வருவதால் அது பித்ருக்களுக்கு அதி விசேஷமானது. ஹேமந்தருது [முன்பனிக்காலம்] . சிசிர ருது [பின்பனிக்காலம்] என்கிற மார்கழி, தை மாசி, பங்குனி மாதங்களில் இந்த அஷ்டமிக்களில் அஷ்டகா சிராத்தம் செய்யப்பட வேண்டும். இவற்றில் மாசியில் செய்வதே சிறப்பாக அநுஷ்டிக்கப் பட்டிருக்கிறது. அஷ்டகையின் தொடர்ச்சியாக மறுதினம் செய்வது அன்வஷ்டகை.

ஸ்தாலீபாகம் என்ற பாகயக்ஞத்தைப் பற்றி முன்பே சொன்னேன்.

பாகயக்ஞங்களில் இன்னொன்று பார்வணீ என்பதே சிராத்தங்களுக்கெல்லாம் பிரகிருதி. அது மாஸம் ஒரு முறை செய்யப்படுவதால் 'மாஸி ச்ராத்தம்' என்றும் கூறப்படும். இது ஆபஸ்தம்ப ஸூத்ரப்படி. கௌதம ஸூத்ரப்படி பார்வணம் என்பது ஒவ்வொரு பர்வாவிலும் செய்யும் ஸ்தாலீபாகத்தையே குறிப்பதாகும்.

ச்ராவணீ என்கிற பாகயக்ஞத்துக்கு 'ஸர்ப்ப பலி' என்றும் பெயர். ச்ராவண மாஸத்தில், அதாவது ஆவணியில் பௌர்ணமி ராத்திரியில் சருவாலும், ஆஜ்யத்தாலும் [நெய்யாலும்] ஹோமம் செய்து, பலாச [புரச]புஷ்பங்களையும் இரண்டு கைகளால் ஹோமம் பண்ண வேண்டும். புற்றிலோ வேறு சுத்தமான இடத்திலோ பச்சரிசி மாவால் கோலம் போன்ற சிலவற்றைப் போட்டு ஸர்ப்ப மந்திரங்களைச் சொல்லி பலிபோட வேண்டும். ஆவணியில் ஆரம்பித்ததை விடாமல் தினமும் மார்கழிப் பௌர்ணமி வரை செய்ய வேண்டும்.

மார்கழிப் பூர்ணிமாவில் 'ஆக்ரஹாயணி' என்கிற பாக யக்ஞத்தைச் செய்து, ஆவணியில் ஆரம்பித்த ஸர்ப்பபலியை உத்ஸர்ஜனம் [பூர்த்த] செய்ய வேண்டும். 'ச்ராவணி' போலவே 'ஆக்ரஹாயணி' என்பதும் மாஸத்தின் பெயரால் ஏற்பட்டது. ஆக்ரஹாயணி என்று மார்கழிக்குப் பெயர். 'ஹாயனம்' என்றால் வருஷம். வருஷத்தில் அக்ர மாதமாக [முதல் மாஸமாக] எது இருக்கிறதோ அது 'ஆக்ரஹாயனம்'. இதிலிருந்து மார்கழியை முதல் மாஸமாகக் கொண்டே ஆதியில் நம் வருஷம் இருந்திருப்பதாக ஏற்படுகிறது. ஜனவரி என்ற முதல் மாதம் இப்போதும் மார்கழி நடுவில் தானே வருகிறது? நம்மிடமிருந்துதான் மேல் நாட்டினர் இதைப் பூர்வத்தில் எடுத்துக் கொண்டார்கள். பிறகு நாம் அந்தப் பழக்கத்தை விட்டுவிட்டாலும் அவர்கள் விடவில்லை என்று தெரிகிறது. இதே மாதிரி சித்திரை என்னும் மாஸப் பெயரைக் கொண்டு 'சைத்ரி' என்பதாகவும் 'ஆச்வயுஜி'[ஐப்பசி] என்ற மாஸப் பெயரால் 'ஆச்வயுஜி' என்பதாகவும் இரண்டு பாக யக்ஞங்கள் உள்ளன.

சைத்ரி என்பது நாலு வீதிகள் கூடுமிடத்தில் ஈசானனை உத்தேசித்துச் செய்யப்படுவதால் ஈசானபலி என்றும் கூறப்படும். ஈசானன் என்பதுதான் பரமேச்வரன் [சிவபெருமான்]. மற்ற பாகயக்ஞங்களில் மற்ற தேவதைகளை உத்தேசித்து ஹோமம் செய்யப்படுகிறது.

அவர்கள் த்வாரா [மூலம்] பரமேச்வரனுக்குப் ப்ரீதி ஏற்படும். அது ஸப்கலெக்டர் மூலம் ராஜாவுக்கு வரி கொடுக்கிற மாதிரி. சைத்ரியிலோ நேரே ராஜாவான பரமேச்வரனுக்கு கொடுக்கிறோம்.

ஐப்பசியில் குறுவை நெல் விளைந்து வரும். இதை 'ஆச்வயுஜி' என்ற கர்மாவில் முதலில் ஈச்வரார்ப்பணம் பண்ணிவிட்டு பிறகு மற்றவர்கள் புஜிப்பார்கள்.

இப்படியே நம் தக்ஷிண சீமையில் மார்கழியில் சம்பா நெல் அறுவடையானவுடன் ஆக்ரஹாயணி செய்துவிட்டு அப்புறம் சாப்பிடும்படியாக ஏற்படுகிறது.

இப்படியாக ஏழு பாக யக்ஞங்கள்.

ஹவிர் யக்ஞங்களைப் பார்க்கலாம். இவை பாகயக்ஞங்களைவிட elaborate ஆனவை [விரிவானவை]. ஆனாலும் ஸோம யக்ஞங்களைப் போல் அவ்வளவு பெரியவை இல்லை.

அக்னியில் ஆஹுதி செய்கிற எல்லாவற்றிற்குமே ஹவிஸ் என்று பெயர். 'அவி' என்று திருக்குறள் முதலான தமிழ் நூல்களில் சொல்லியிருக்கிறது. ஆனாலும் குறிப்பாக நெய்க்கு ஹவிஸ் என்ற பெயர் உள்ளது. ஸோமரஸ ஆஹுதி உள்ள யக்ஞங்களைத் தனியாக ஸோம யாகம் என்று வைத்தால், கிருஹ்யமான சின்னவற்றையும் பாகயக்ஞம் என்று தனியாய் வைத்ததால், நாற்பது ஸம்ஸ்காரங்களில் வந்து விடும் ச்ரௌதமான பாக்கி ஏழையும் 'ஹவிர் யக்ஞம்' என்றே ஹவிஸை முன்னிட்டு பெயரிட்டிருக்கிறார்கள்.

முன்னே யாகங்களைப் பற்றிச் சொல்லும்போது யாகத்தைப் பண்ணும் யஜமானன் என்பவனுக்காக ரித்விக்குகள் என்ற புரோகிதர்கள் அதை நடத்திக் கொடுப்பார்களென்றும் இந்த ரித்விக்குகளில் ரிக்வேதத்தால் தேவதைகளை ஸ்துதித்துக் கூப்பிடுகிறவர் ஹோதா, யஜுர் வேதப்படிக் காரியங்கள் செய்கிறவர் அத்வர்யு, ஸாமவேத கானம் செய்து தேவதைகளைப் ப்ரீதி செய்கிறவர் உத்காதா, அதர்வ வேத விதிகளின்படி 'ஸூபர்வைஸ்' செய்கிறவர் பிரம்மா என்றும் சொன்னேனல்லவா?

பாக யக்ஞங்களில் யஜமானனைத் தவிர இந்த நாலு விதமான ரித்விக்குகளில் எவருமே கிடையாது. பிறத்தியார் துணையின்றி ஒவ்வொரு கிருஹஸ்தனும் தானே பத்தினி ஸஹிதமாக செய்ய வேண்டியனவே பாகயக்ஞங்கள்.

ஹவிர்யக்ஞங்களில் யஜமானனைத் தவிர யக்ஞத்தை நடத்தித் தருபவர்களாக ஹோதா, அத்வர்யூ, அக்னீதரன், பிரம்மா என்ற நாலு ரித்விக்குகள் இருப்பார்கள். அதாவது நான் முன்சொன்ன நாலு தினுசான ரித்விக்குகளில் உத்காதாவுக்குப் பதில் அக்னீதரன் இருக்கிறார். ஸாமகானம் செய்பவர்தானே உத்காதா? ஸோம யாகங்களில்தான் ஸாம கானம் உண்டு; ஹவிர்யாகங்களில் இல்லை. அதனால் உத்காதாவும் இல்லை. உத்காதாவுக்குப் பதில்தான் அக்னீதரன் இருக்கிறார். சாதுர்மாஸ்யம், பசுபந்தம், முதலியவற்றில் அதிகப்படி ரித்விக்கும் உண்டு. அந்த விவரங்கள் இங்கே வேண்டாம். காலமே சொல்ல முடியாமல் அவ்வளவு ப்ராசீனமாக ஏற்பபட்டு ஸமீபகாலம் வரை நடைபெற்று வந்த முக்கியமான யக்ஞகர்மாக்களைப் பற்றி ஒரு basic knowledge [அடிப்படை அறிவாவது] இருக்கட்டுமென்றுதான் இவ்வளவாவது சொல்கிறேன்.

ஹவிர்யக்ஞங்களில் முன்பே அக்னியாதானம், அக்னி ஹோத்ரம், தர்சபூர்ணமாஸம் இவைபற்றிச் சொன்னது போதும். ஆக்ரயணம் என்ற இஷ்டி ஐப்பசிப் பூர்ணிமையில் செய்யப்படும் ஹவிர்யக்ஞம். சாமை என்று சொல்லப்படும் 'ச்யாமாகம்' என்ற கடுகு போலிருக்கும் தானியத்தை இதில் ஹோமம் செய்ய வேண்டும். 'சாதுர்மாஸ்யம்' என்ற ஹவிர்யக்ஞம் பல இஷ்டிகளை ஒன்றாக அடக்கினாற் போன்றது. வர்ஷா காலத்தில் [மழைக் காலத்தில்] ஸந்நியாஸி ஒரே இடத்தை விட்டுப் போகாமலிருப்பதற்குச் "சாதுர்மாஸ்யம்" என்று பேர் என்று உங்களில் சில பேருக்குத் தெரிந்திருக்கலாம்.
கிருஹஸ்தர்களான நீங்களே பண்ண வேண்டிய ஒரு ஹவிர்யாகத்துக்கு அதே பேர். மழைக் காலமான சதுர் மாஸங்கள் [நாலு மாஸங்கள்] துறவியானவன் ஒரே இடத்தில் இருப்பதால் 'சாதுர் மாஸ்யம்' என்று பேர் வந்தது. இங்கோ ஒரு கிருஹஸ்தன் நாலு மாஸங்களுக்கு ஒரு முறை, அதாவது கார்த்திகை, பங்குனி, ஆடி ஆகிய மாத ஆரம்பங்களில் இந்த யக்ஞத்தைப் பண்ணுவதால் அதே

'சாதுர்மாஸ்ய'ப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. இந்த யக்ஞத்திலிருந்துதான் கிருஹத்தில் செய்வது போய் யாகசாலையில் பண்ணுபவை தொடங்குகின்றன.

இதற்கு அடுத்த ஹவிர்யக்ஞமான நிரூட பசுபந்தம் (வெறுமே 'பசுபந்தம்' என்றே இதைச் சொல்லுவது வழக்கம்) என்பதிலிருந்துதான் மிருக பலி ஆரம்பிக்கிறது.

பலி என்ற வார்த்தையை நான் இங்கே சொன்னாலும் சாஸ்திரீய பரிபாஷை (technical term) ப் படிப் பார்த்தால் இது பலி இல்லை. அக்னியில் ஹோமமாகப் பண்ணாமல் அப்படியே நேராக அர்ப்பணம் பண்ணுவதுதான் பலி. ஹோமம் பண்ணப்படுவதற்கு ஆஹுதி, ஹவிஸ் என்றெல்லாம்தான் பெயர். ஸர்ப்பத்தின் புற்றில் அப்படியே மாவைப் போடுவது ஸர்ப்ப பலி. பஞ்ச மஹா யக்ஞங்களில் ஒன்றான வைச்வதேவத்தில் சிலதை அக்னியில் மந்திர பூர்வமாகப் போடுவார்கள்; இது ஹோமம். சிலதை மந்திர பூர்வமாக அப்படியே வீட்டிலும் வெளியிலும் ஒவ்வொரு ஸ்தானத்தில் பலவிதமான ஜீவன்களை உத்தேசித்து எறிந்து விடுவார்கள். இது பலி.

இன்னொரு விஷயம் இங்கே சொல்ல வேண்டும் இப்படி மந்திர பூர்வமாக அர்ப்பணம் பண்ணும்போது, தேவதைகளுக்குச் செய்வதற்கே 'ஸ்வாஹா' என்று சொல்ல வேண்டும். பித்ருக்களுக்குச் செய்யும் போது 'ஸ்வதா' என்று சொல்ல வேண்டும். மற்ற ஜீவன்களுக்கு 'ஹந்தா' என்று சொல்ல வேண்டும். அதிகார ஸ்தானத்தைப் பொறுத்து நாம் 'யுவர் மெஜஸ்டி', 'யுவர் ஆனர்' என்று பல தினுஸாகச் சொல்லவில்லையா? அப்படி.

யஜ்ஞங்களில் ஒரு பசுவின் (மாடு இல்லை. ஸம்ஸ்கிருதத்தில் எந்த மிருகமுமே 'பசு' தான்) இன்ன பாகத்தை ஹோமம் செய்ய வேண்டும் என்று இருக்கிறது. இது பலியில்லை; அக்னியில் போடுகிற ஹோமம்தான். பசுபந்தத்தில் ஒரே பசுதான்.

பசுவுள்ள யக்ஞங்களுக்கே யூப ஸ்தம்பம் என்பது உண்டு. மூங்கில் அல்லது கதிரம் என்னும் மரத்தாலான போஸ்டில் பசுவைக்

கட்டுவார்கள். அதற்குத்தான் யூபம், அல்லது யூப ஸ்தம்பம் என்று பேர்.

அடுத்த, கடைசியான, ஹவிர்யக்ஞமான 'ஸௌத்ராமணி'யில் மட்டுமே ஸுரை [கள்] அர்ப்பணம் ஓரிடத்தில் வருகிறது. சில க்ஷுத்ர சக்திகளுக்கு (சில்லுண்டி தேவதைகளுக்கு) அதில் பிரீதியிருப்பதால் அவற்றிடமிருந்து லோக க்ஷேமத்தைப் பெற ஸுரை ஹோமம் செய்யப்படுகிறது. நம் ராஜாங்கம் ரொம்ப strict -ஆக prohibition [மதுவிலக்கு] –ஐப் பின்பற்றினாலும், அந்நிய தேசப் பிரமுகர்கள் வருகிற போது, அவர்களால் நமக்கு ஏற்படக்கூடிய நன்மைக்காக, பரவாயில்லை என்று அவர்களுக்கு மட்டும் மதுவிலக்குக்கு விலக்கு தந்து ஒயின் கொடுப்பது சரியென்றால் ஸௌத்ரமணியில் ஸுரா ஹோமமும் சரிதான். இங்கேயும்கூட ஸுரையானது உத்தமமான தேவதைகளுக்குரிய ஆஹவநீயத்தில் ஹோமம் செய்யப்படாமல், தக்ஷிணாக்னியில் தான் ஹோமம் செய்யப்படுகிறதென்பது குறிப்பிடத்தக்கது. ஹோம சேஷமானதால் மந்திர பூர்வமாக சுத்தியாக்கப்பட்ட ஸுரை கெடுதல் பண்ணாதென்று, மிஞ்சியதை யாகம் செய்கிறவர்கள் பானம் பண்ண வேண்டும். இதன் அளவு கால் அவுன்ஸுக்கும் குறைவானது. ஆகையால் யஜ்ஞம் என்று சொல்லி ஸோமபானம், ஸுரா பானம் என்று இஷ்டப்படி குடித்தார்கள் என்று குற்றம் சாட்டுவது மஹா அக்ரமம். யஜ்ஞசேஷமான மாம்ஸ ஸ்வீகரணத்தைப் பற்றிய புரளியைக் குறித்தும் முன்பே சொல்லியிருக்கிறேன்**.

ஸோம யாகங்களைப் பற்றி சிறிது சொல்கிறேன். இவற்றை 'ஸோம ஸம்ஸ்தை' என்றும் சொல்வதுண்டு. ஸம்ஸ்தை என்றால் என்ன? யாகத்திலே உத்காதா கானம் செய்கிற ஸாமவேத ஸ்தோத்திரத்தின் முடிவுக்குத்தான் 'ஸம்ஸ்தை' என்று பெயர். தேவதா பரமாக உள்ள எல்லாவற்றையுமே ஸ்தோத்திரம் என்று பொதுவில் சொன்னாலும், வைதிக வழக்குப்படி ரிக்வேதத்திலுள்ள ஸ்தோத்திரங்களுக்கு 'சஸ்த்ரம்' என்றே பெயர். இதையே ஸப்தஸ்வரங்கள் உள்ளூர தொனிக்கிற மாதிரி ஸாமவேதத்தில் அமைத்து கானம் செய்கிறபோதுதான் ஸ்தோத்ரம் என்ற பெயர் ஏற்படும். இப்படிப்பட்ட ஸாமவேத ஸ்தோத்ர கானம்தான் ஸோம யாகங்களில் மிகவும்

முக்கியம். பாக-ஹவிர் யக்ஞங்களிலும் மற்ற நூற்றுக்கணக்கான யாகங்களிலும் ஹோமங்கள் குறைச்சலே. ஸ்தோத்ரங்கள்தான் அவற்றில் அதிகம். தேவர்களுக்கு ரொம்பவும் பிரீதியான ஸோமரஸம் ஹோமம் செய்யப்படுவதால்தான் இவற்றுக்கு ஸோமயாகம் என்று பெயர். ஸோம ரஸம் மட்டுமின்றி பசுவும் இவற்றில் உண்டு. இருந்தாலும் இந்த ஹோமங்களை விட ஸாமகானம் தான் இவற்றில் நிறையச் செய்யப்படும். பிறகு ஹோமங்கள் குறைச்சலாகவே செய்யப்படும். அதனால் ஸோமயாகம் ஒருவிதத்தில் ஸாமயாகம்தான்! இந்த ஸாமகானம் ரொம்பவும் பரவசமூட்டுவதாக இருக்கும். ஒரு வித்வான் ஆலாபனை பண்ணிக் கொண்டே போய் தாரஸ்தாயி பஞ்சமத்தைப் பிடித்தவுடன் ரஸிகர்களுக்கு உத்ஸாஹம் உச்சிக்குப் போய் விடுகிற மாதிரி ஸாமகானமான ஸ்தோத்ரங்களின் முடிவான ஸம்ஸ்தை வருகிறபோது யஜ்ஞபூமியில் கூடியிருப்பவர்களுக்கு, அப்படியே தேவலோகமே வந்து இறங்கிவிட்டாற்போல் ஆனந்தம் கரைபுரண்டு போகும். அதனால்தான் ஸோம யஜ்ஞத்துக்கே ஸோம ஸம்ஸ்தை என்று பெயர் ஏற்பட்டு விட்டது.

இப்படிப்பட்ட ஸோம யாகங்களில்தான் ஹோதா, அத்வர்யு, பிரம்மா என்ற ரித்விக்குகளோடு உத்காதா என்ற ஸாமகானக்காரரும் சேர்ந்து பூர்ண யஜ்ஞ லக்ஷணத்தோடு இருக்கிறது. இந்த நாலு பேரில் ஒவ்வொருவருக்கும் உதவியாக மூனறுபேர் இருப்பார்கள். ஆக அத்வர்யு கணத்தில் நால்வர், ஹோதா கணத்தில் நால்வர், உத்காதா கணத்தில் நால்வர், பிரம்மா கணத்தில் நால்வர் என்பதாக ஸோம யாகங்கள் ஒவ்வொன்றிலும் பதினாறு ரித்விக்குகள் இருப்பார்கள்.

ஸப்த ஸோம யக்ஞங்களில் முதலாவதான அக்னிஷ்டோமமே ப்ரகிருதி. மற்ற ஆறும் அதன் விக்ருதிகள். அத்யக்னிஷ்டஹோமம், உக்த்யம், ஷோடசி, வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம் என்பன அவற்றின் பெயர்.

இவற்றில் வாஜபேயத்தை வெகு விசேஷமாகக் கருதிச் செய்வது வழக்கம். வாஜபேய யாகம் முடித்து யஜமானன் ஸ்நானம் செய்து வருகையில் (யஜ்ஞ முடிவில் செய்வதற்கு அவப்ருத ஸ்நானம் என்று

பெயர்) அவருக்கு ராஜாவே ச்வேத சத்ரம் [வெண்பட்டுக் குடை] பிடிப்பான்! அவ்வளவு பெருமை இதற்கு. 'வாஜம்' என்றால் அன்னம்; 'பேயம்' என்றால் பானம். அன்ன பானாதிகளை அதாவது நல்ல தானியச் செழிப்பையும், நீர்வளத்தையும் லோகத்தில் ஏற்படுத்தித் தருவதால் இதற்கு இப்படிப் பெயர். இன்னொரு விதத்திலும் இந்தப் பெயர் பொருந்துகிறது. இந்த யாகத்தில் ஸோம ரஸ ஹோமம், பசு ஹோமம் (23 பசுக்கள்) இவற்றோடு வாஜ [அன்ன] ஹோமமும் உண்டு. அது ஆன பின்பு சேஷான்னத்தால் [மிகுதியுள்ள அன்னத்தால்] யஜமானனுக்கு அபிஷேகம் செய்வார்கள். இதை இந்த யஜ்ஞத்திலேயே சிறப்பான அம்சமாக நினைப்பதுண்டு. வாஜத்தையே [அன்னத்தையே] பேயம் [ஜலம்] போல் அபிஷேகம் செய்வதாலும் வாஜபேயம் என்ற பெயர் பொருந்துகிறது.

பிராம்மணன் சொத்தெல்லாம் ஸோமயாகத்துக்காகத்தான் என்று முன்பு சொல்வார்கள். திரவியங்களுக்காக ஓரளவும் பண்ணி வைக்கிற ரித்விக்குகளுக்கு தக்ஷிணையாக நிறையவும் செலவிட வேண்டும். இப்பொழுது சொத்து ஒன்றையேதான் நினைத்துக் கொண்டு ஸோம யாகத்தை மட்டுமின்றி செலவேயில்லாத ஸந்தியா வந்தனத்தைக்கூட விட்டு விட்டிருக்கிறோம். நாற்பது, ஐம்பது வருஷங்களுக்கு முந்திக் கூட நம்பூதிரிகளில் பத்துக் குடும்பத்தில் ஒன்று வீதமாவது ஸோமயாகம் நடந்து வந்தது. அவர்களில் மூத்தவன்தான் ஸோமயாகம் செய்யலாமென்று இருந்ததால் அவனுக்குத்தான் சொத்துரிமையும் இருந்தது.

"வஸந்தே வஸந்தே" என்று சொல்லியிருப்பதால், தரித்திரர்களாக உள்ள பிராம்மணர்களுங்கூட யாசகம் வாங்கியாவது வருஷா வருஷம் ஸோமயாகம் பண்ணி "ப்ரதி வஸந்த சோமயாஜி"கள் என்று பெயர் வாங்கிய ஒரு காலமும் இருந்தது.

மற்ற ஸோம யாகங்களைப் பண்ணா விட்டாலும் இவற்றில் முதலாவதான ஜ்யோதிஷ்டோமம் எனப்படும் அக்னிஷ்டோமத்தையாவது பண்ணினால் லோகத்தில் வைதிகஸ்ரீ பிரகாசிக்கத் தொடங்கும்.

இந்த இருபத்தியொரு யக்ஞங்களோடு நாற்பது ஸம்ஸ்காரங்களும் முடிந்து விடுகின்றன.
* இப்பகுதியிலுள்ள விஷயங்கள் பல கும்பகோணம் ஸ்ரீ லக்ஷ்மி காந்த சர்மா தம்பதியரும், அக்னிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியாரும் விளக்கி வைத்தவை.

** "வேதம்" என்ற உரையில் "ஜீவஹிம்ஸை செய்யலாமா?" என்ற பிரிவில்.

மற்ற ஸம்ஸ்காரங்கள்

மற்ற ஸம்ஸ்காரங்கள்

இந்த நாற்பதில் சொல்லா விட்டாலும் ஹிந்துக்கள் அனைவரும் கர்ண வேதனம் (காது குத்தல்) , அக்ஷராப்யாஸம் (படிக்க வைத்தல்) ஆகியவற்றையும் மதாநுஷ்டானமாகவே செய்தாக வேண்டும்.

கடைசியில் செய்கிற தஹனமும் இப்படியே நாற்பதில் வராவிட்டாலும், அந்த்யேஷ்டி (அந்திய இஷ்டி-கடைசி வேள்வி) என்பதாக வைதிக மந்திரங்களோடு செய்யப்பட வேண்டியதாகும். அதைச் செத்துப் போனவனே பண்ணிக் கொள்ள முடியாதல்லவா? புத்திரர் அல்லது தாயாதிதாமே பண்ணவேண்டும்? அதனால் இவனது நாற்பது ஸம்ஸ்காரத்தில் வராமல் இவனுக்காகப் பிறர் பண்ணுவதான பித்ரு காரியங்களில் அது வந்து விடுகிறது.

ஆஹிதாக்னியாக இருக்கப்பட்ட ஒருவனுக்கு அவன் ஆயுள் பூராவும் உபாஸித்த க்ருஹ்யாக்னி, த்ரேதாக்னி (முத்தீ) இரண்டையும் சேர்த்து இந்த நாலு அக்னிகளையுமே கொண்டு தஹன ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். இவன் ரக்ஷித்த அக்னியே இவன் சரீரத்தைப் போக்கி ஜீவனைப் புண்ய லோகத்தில் சேர்க்கிறது. த்ரேதாக்னி உபாஸிக்காமல், க்ருஹ்யமாக ஔபாஸனம் மட்டும் பண்ணினவனுக்கு அந்த ஔபாஸனாக்னியாலே தஹனம் செய்ய வேண்டும்.

இவன் ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ளாமலே செத்துப் போனால்தான் இப்படி. துறவியானால் தஹனமே இல்லையே!

தஹன ஸம்ஸ்காரம் அந்த்யேஷ்டி என்றே யாகமாகச் சிறப்பிக்கப்படுவதால் முன்பே சொன்ன மாதிரி* மிகவும் பக்குவமானவர்கள் தவிர பாக்கிப் பேரெல்லாம் ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ளாமலே வாழ்க்கையை முடிப்பது சாஸ்திர ஸம்மதந்தான் என்று தெரிகிறது. எல்லா கிருஹஸ்தருக்கும் ஸந்நியாஸம் compulsory [கட்டாயம்] என்றால் இந்த தஹனகர்மா அவர்களுக்கு இராதே! இது இருப்பதாலேயே ஸந்நியாஸம் 'கம்பல்ஸரி' இல்லை என்றாகிறது.
* "பிரம்மசரியம்" என்ற உரையில் "நைஷ்டிக பிரம்மசரியம், இல்லற வாழ்க்கை" என்ற உட்பிரிவில்.

உடன்கட்டை ஏறுதல்

உடன் கட்டை ஏறுதல்

இதைச் சொல்லும்போது இன்னொன்றும் தோன்றுகிறது. இப்போது பலர் ஸதி,ஸஹகமனம், உடன் கட்டையேறுதல் என்ற பெயர்களில் பதியோடு சேர்ந்து பத்தினியையும் உயிரோடேயே தஹனம் செய்வது வலுக்கட்டாயமாக நடத்தப் பட்டுவந்தது என்கிறார்கள். கொடூரமாக ஸ்திரீகளை சிதையிலே தள்ளிக் கொளுத்தினார்கள் என்று வைகிறார்கள். எங்கேயாவது யாராவது இம்மாதிரி கொடூரமும் பண்ணியிருக்கலாமோ என்னவோ? ஆனால் இது பொது விதி இல்லை. இஷ்டப்பட்டவர்கள் மட்டுந்தான் - பரம பதிவிரதைகளாக இருந்தவர்கள்தான் - புருஷன் போனபின் ஜீவனை வைத்துக் கொண்டு இருக்கமுடியாமல் துடித்துத் தாங்களாகப் பிரியப்பட்டு உடன் கட்டை ஏறியிருக்கிறார்கள். என் பால்யத்தில் கூட இப்படிப்பட்ட பதிவிரதைகளைப் பறறிக் கேட்டிருக்கிறேன். 'ஐயோ உயிரோடு இப்படி அக்னியில் பொசுங்குகிறாயோ!' என்று பந்துக்கள் கதறிய போது, 'அக்னி பொசுக்கவேயில்லை. புருஷனை ஆலிங்கனம் செய்து கொள்கின்ற ஸுகத்தோடாக்கும் சாகிறேன்' என்று சிரித்துக் கொண்டே சொன்னபடி தஹனமாயிருக்கிறார்களாம்.

ஆஞ்ஜநேயரின் வாலில் வைத்த நெருப்பு ஸீதையின் பாதிவ்ரத்யத்தால் [கற்புச் சக்தியால்] அவரை பாதிக்காமலேயிருந்தது. குமாரிலபட்டர் உமிக்காந்தல் அக்னியில் கருகின போது எதிரே நின்ற

நம்முடைய ஆசார்யாளின் ஸாந்நித்யத்தால் அவருக்கு உஷ்ணமே தெரியாமல் ஜில்லென்று இருந்தது*. அநேக பதிவிரதைகளுக்கு அவர்களுடைய பதி பக்தியினாலேயே சிதாக்னி சந்தனமாக இருந்திருக்கிறது. அவர்கள் கட்டியிருந்த புடவை அத்தனை அக்னியிலும் எரியாமலே இருக்கும். அதை எடுத்து வந்து பூஜை பண்ணுவதுண்டு.

இன்னும் உயர்ந்த கற்பரசியானால் பதியின் உயிர் போனவுடனேயே இவர்களது பிராணனும் தானாகப் போய்விடும். கண்ணகி கதையில் பாண்டிய ராணி இப்படித்தான். புருஷன் 'குற்றம் செய்து விட்டோமே!' என்று பிராணத் தியாகம் பண்ணினதும், தானும் உயிரை விட்டு விட்டாள். அஷ்டபதி பாடின ஜயதேவருடைய பத்னி பத்மாவதியைப் பற்றியும் இப்படி ஒரு கதை உண்டு. அவளுடைய பாதிவ்ரத்யத்தைச் சோதித்துப் பார்க்க வேண்டும் என்று ராணி தமாஷுக்காக அவளிடம் ஜயதேவர் எங்கோ போன இடத்தில் மரணமடைந்து விட்டார் என்று சொன்னவுடனேயே அவளுடைய பிராணன் போய் விட்டது. இப்படி யோஜனை போதாமல் அனர்த்தம் பண்ணி விட்டோமே என்று ராணி ரொம்பப் பச்சாதாபப்பட்டபின் ஜயதேவரே கிருஷ்ண பரமாத்மாவின் அநுக்ரஹத்தால் பத்மாவதியை உயிர்ப்பித்தார் என்று கதை.

இம்மாதிரி கற்பிலே உச்ச நிலையில் இருக்கிற ஸ்திரீகள் தான் உடன்கட்டை ஏறினார்களே தவிர, பிறர் வலுக்கட்டாயப்படுத்தி ஸ்திரீகளைப் புருஷர்களோடு போட்டுக் கொளுத்தி விடவில்லை. வலுக்கட்டாயம் செய்யாததோடு இஷ்டப்பட்டு ஸஹகமனம் செய்யப் போனவர்களைத் தடுத்துக்கூட இருக்கிறார்கள். பாண்டுவின் இரண்டு பத்னிகளில் மாத்ரி [இவள் தான் நகுல, ஸஹாதேவர்களின் தாயார்] தன்னோடு பாண்டு சேர்ந்ததால்தானே பூர்வ சாபப்படி சாகும்படி ஆயிற்று என்று வேதனைப்பட்டு பிராயச்சித்தமாக உடன்கட்டை ஏறினாள். இதை அநுமதித்த பெரியவர்களே குந்தியும் உடன்கட்டை ஏறப்போனபோது, "கூடாது, கூடாது. நீ உயிரை வைத்துக் கொண்டு இந்த ஐந்து குழந்தைகளையும் வளர்த்து ஆளாக்குவதுதான் முறை" என்று தடுத்ததாக பாரதத்தில் பார்க்கிறோம்.

அப்பர் ஸ்வாமிகள் அந்தப் பேர் பெறாமல், மருள் நீக்கியார் என்ற பெயரில் பாலராக இருந்தபோது அவருடைய தகப்பனாரான புகழனார் மரணமடைந்துவிட்டார். அப்பொழுது பதிவிரதையான மாதினியார் என்ற அவருடைய பத்தினி உடன்கட்டை ஏறினாள் என்று 'பெரிய புராணம்' சொல்கிறது. இந்த கற்பை விட உசந்ததாயிருக்கிறது, இவர்களுடைய புத்திரி (அதாவது அப்பரின் தமக்கை) காட்டிய பாதிவ்ரத்யம். அவளுக்குத் திலகவதி என்றுப் பெயர். சின்ன வயசுதான். இன்னம் கல்யாணமாகவில்லை.கல்யாணமாகாமலே கற்பு என்பதுதான் விசேஷம்! பல்லவ ராஜாவிடம் சேனாதிபதியாக இருந்த கலிப்பகையார் என்பவருக்கு இவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பதாக நிச்சயம் பண்ணியிருந்தார்கள். ஆனால் புகழனார் இறந்த அதே சமயத்தில் நல்ல வாலிபரான கலிப்பகையும் யுத்த பூமியில் வீர ஸ்வர்க்கமடைந்து விட்டார் என்ற தகவல் வந்தது. உடனே அந்தச் சின்ன பெண், "அவருக்கென்று என்னை எப்போது பெரியோர்கள் நிச்சயம் செய்துவிட்டார்களோ அப்போது அவருக்கு நான் மனைவிதான். எனக்கு இந்த எண்ணம் வந்த பிறகு நான் இன்னொரு ஆடவனுக்கு மாலையிட மாட்டேன். அவர் போய்விட்டதால் நானும் பிராணத் தியாகம் பண்ணிவிடப் போகிறேன்" என்று அதிசயமான கற்பு வேகத்தில் புறப்பட்டு விட்டாள். அப்புறந்தான் அப்பர் ரொம்பவும் அழுது அவளைத் தடுத்து, "அப்பா, அம்மா இருவரும் போனபின் நீயும் இல்லாமல் சின்னஞ் சிறுவனான நான் தன்னந்தனியாக என்ன பண்ணுவேன்? நானும் உன் பின்னாலேயே பரலோகம் வந்துவிடுகிறேன்" என்று பிடிவாதம் செய்தார். வேறு வழியின்றி தம்பியின் பராமரிப்புக்காக பரமத் தியாகமாக அவள் உயிர் வாழுவது என்ற முடிவு செய்தாள். திலகவதி எனற பேருக்கேற்ப மாதர் குல திலகம் என்கிறார்களே, அப்படி வாழ்ந்தாள். பிற்பாடு ஜைனத்துக்குப் போய் தர்மஸேனராகிவிட்ட மருள்நீக்கி மறுபடி சைவத்துக்கு வந்து நாமெல்லாம் கொண்டாடும் அப்பர் ஸ்வாமிகளாக ஆனதற்கு அவள்தான் காரணம். அது வேறு கதை.

ராஜஸ்தானத்து உத்தம ஸ்திரீகள் இந்த ஸஹகமன நெறியை விசேஷமாக அநுஷ்டித்திருக்கிறார்கள்.

நான் சொல்ல வந்தது, கட்டாய உடன்கட்டை கிடையாது என்பது. ஆனால் தாமாக இப்படி பிராணத்தியாகம் பண்ண முன் வருபவரை ரொம்பவும் மதித்து அப்படிப் பண்ண நம் சாஸ்திரம் அநுமதித்திருக்கிறது.

'பதி போனபின் நாம் உயிரை வைத்துக் கொண்டிருக்க முடியாது' என்று நினைக்கும் உயர்ந்த உணர்ச்சி இன்றைக்கும் யாராவது லட்சத்தில், கோடியில் ஒரு ஸ்திரீக்கு இருக்கத்தான் செய்கிறது. அதனால்தான் எப்போதாவது வருஷத்துக்கு ஒரு தரமாவது, ஏதாவது ஊரில் இப்படி ஒரு ஸ்திரீ உடன்கட்டை ஏறினாள்; சட்டம் இடம் தராத போதிலும், பந்துக்கள் தடுத்த போதிலும் கேட்காமல் இப்படிப் பண்ணினாள் என்று பேப்பரில் பார்க்கிறோம். பழைய காலத்து உடன்கட்டைகளைவிட இதுதான் ரொம்ப விசேஷம் என்று எனக்குத் தோன்றுவதுண்டு. பூர்வத்தில் அந்த லட்சியத்துக்கு அநுகூலமான சூழ்நிலை இருந்து பலபேர் அப்படி செய்தார்கள். இதனால் பிறத்தியார் கட்டாயப் படுத்தாவிட்டாலும், இப்படிப் பலபேர் போவதைப் பார்த்து அவர்களுக்கு உத்தம லோகம் ஸித்திப்பதாக சொல்கிறார்களே என்று தாங்களாகவே அரைமனஸாக ஓரிரண்டு பெண்கள் அக்காலத்தில் ஸஹகமனம் பண்ணியிருக்கலாம். இன்றைக்கோ அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லாததால் இத்தனை கலிப் பிரவாஹத்தில், சீர்திருத்த நாட்களில் யாராவது உடன்கட்டை ஏறினால் இதுதான் ரொம்ப genuine [உண்மையானது] என்று நினைக்கிறேன்.

இதே மாதிரி இன்னொன்றைக் கூட நினைப்பதுண்டு. குருகுலவாஸம் வேண்டுமென்று நான் அடிக்கடி சொல்கிறேன் அல்லவா? சதி மாதிரிதான் இதுவும் இப்போதைய சூழ்நிலையில் மறந்தேபோன விஷயமாகி விட்டது. முன்பு ஸர்வ ஸாதாரணமாய் இருந்த குருகுல முறையை இப்போது நடத்துவது அஸாத்தியமென்கிற அளவுக்கு ஆக்கியிருக்கிறோம். இப்படி இருக்கிற நிலையிலேயே இன்னமும் யாராவது ஒரு பையன், இரண்டு பையன் பிக்ஷாசார்யம் பண்ணி குருகுலவாஸம் பண்ணினால் இதுதான் ஆதிகாலத்தில் பண்ணினதை விடவும் genuine என்று நினைப்பதுண்டு.

ஸந்நியாஸம் எல்லோருக்கும் 'கம்பல்ஸரி' இல்லை என்கிற மாதிரியே ஸஹகமனம் பெண்கள் யாவருக்கும் கம்பல்ஸரி இல்லை என்பதற்கு ஒரு அழுத்தமான காரணம் சொல்கிறேன் தர்ம சாஸ்திரங்களில் விதவா தர்மங்கள் என்பதாகக் கைம்பெண்கள் இருக்க வேண்டிய முறைகளைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறது. எல்லோருக்கும் ஸந்நியாஸம் என்றால் தஹன ஸம்ஸ்காரமே சாஸ்திரத்தில் இருக்காது என்ற மாதிரி, விதவைகள் எல்லோரும் புருஷனோடேயே சிதை ஏற வேண்டும் என்று கட்டாயமாக இருந்திருந்தால் விதவா தர்மம் என்று ஒன்று இருக்கவே இடம் இருந்திருக்காது அல்லவா?

மரணமாவது எப்போது வருகிறது என்று எவருக்கும் தெரியாது. பால்யத்திலோ அல்லது கிருஹஸ்தாச்ரமத்திலோ திடீரென்று மரணம் ஸம்பவித்துவிடலாம். அதனால் எல்லோரும் ஸந்நியாஸம் வாங்கிக் கொண்டுதான் சாக வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனபடியால் இவர்களை உத்தேசித்தாவது தஹன ஸம்ஸ்காரம் சொல்லித் தான் ஆகவேண்டும். விதவா தர்ம விஷயம் அப்படியில்லை. புருஷன் போய்விட்டான் என்றால் உடனே ஒருத்தியைச் சேர்த்து கொளுத்தத்தான் வேண்டுமென்பது சாஸ்திர அபிப்ராயமானால் அப்புறம் விதவா தர்மம் என்று ஒன்றை எழுதி வைக்கக் கொஞ்சம்கூட இடமில்லை.
* தெய்வத்தின் குரல்-முதற்பகுதி "முருகனின் வடநாட்டு அவதாரம்" பார்க்க.

ஸம்ஸ்கார லக்ஷியம்

ஸம்ஸ்கார லக்ஷியம்

இத்தனை ஸம்ஸ்காரங்களை (நாற்பதுக்கும் மேலே கூட ஒன்றிரண்டை)ச் சொன்னேன். வாழ்நாள் முழுக்க வேள்வி நடத்தி, அதனால் வாழ்க்கையையே லோக க்ஷேமார்த்தமான வேள்வியாக ஆக்கிவிட்டு ஒருத்தன் சாகிறபோது மந்திரபூர்வமாக ஸம்ஸ்காரம் பண்ணி அதனாலும் லோக க்ஷேமத்தை உண்டு பண்ணும்படி வைத்திருக்கிறது. தஹனம் இறுதி வேள்வி. ஸம்ஸ்காரங்கள் ஒரு ஜீவனை உத்தேசித்து அவனை சுத்தப்படுத்துகிறபோதே அதில் பிரயோஜனமாகிற மந்திர சப்தம் லோகத்துகெல்லாம் நல்ல

வைப்ரேஷனைக் கொடுக்கிறது. தனி ஆளுக்கான கர்மா ஆயினும் ஸமஸ்த ஜீவ க்ஷேமத்தை வேண்டாத கர்மா எதுவுமில்லை. 'ஜகத் ஹிதாய க்ருஷ்ணாய' என்றே எந்தக் கர்மாவும் ஆரம்பிக்கப் படுகிறது. மந்திர ராஜாவான காயத்ரீயிலும், 'என் புத்தியை நல்ல நெறியில் தூண்டு' என்று இல்லாமல் 'எங்கள் புத்தியை' என்பதாக இத்தனை ஜீவர்களையும் உத்தேசித்துத்தான் பிரார்த்திக்கப்படுகிறது. ('எங்கள்' என்று பன்மையில் சொல்லியிருப்பதால் ஒரு பிராம்மணன் பண்ணினாலே நம்மையும் சேர்ந்துவிடும் என்று பிராம்மணர்கள் குதர்க்கம் பண்ணிக் கொண்டு காயத்ரீயை விட்டுவிடக் கூடாது. பிற ஜாதியார், வெளி தேசத்துக்காரர்கள், இன்னம் பசு, பட்சி, பூச்சி, பொட்டு என்ன இருக்குமோ அத்தனையையும் உத்தேசித்து பிரம்ம-க்ஷத்ரிய-வைசியர்கள் இப்படி 'எங்கள்' என்று பிரார்த்திக்க வேண்டும் என்பதே சரியான அர்த்தம்).

நாற்பது ஸம்ஸ்காரங்களில் யஜ்ஞங்கள்தான் பெரும்பான்மையாக இருப்பதை கவனித்திருப்பீர்கள். இவற்றின் பலனைப் பற்றி பிருஹதாரண்யக உபநிஷத்தில் மந்திரம் இருக்கிறது (iv.4.22). 'ஆத்மாவை பிராம்மணர்கள் வேதாப்பியாஸத்தாலும் யஜ்ஞத்தாலும் தானத்தாலும் தபஸாலும் உபவாஸத்தாலும் அறிய முயல்கிறார்கள்' என்று அது சொல்கிறது. இந்த முயற்சி சித்தியானதும், இதெல்லாவற்றையும் விட்டுவிட்டு ஸந்நியாஸிகளாக கிளம்பி விடுகிறார்கள் என்று அது தொடர்ந்து சொல்கிறது. ஆகையால் கர்மாவைப் போக்கிக் கொள்ளவேதான் இத்தனை விஸ்தாரமான யஜ்ஞாதி கர்மாக்கள் என்று ஆகிறது. யக்ஞத்தில் இருக்கிற மற்ற பலன்களைவிட அதுவே கர்மாவை விடுவதற்குப் பழகுகிறதே, அதுதான் விசேஷமானது. அதுவே பெரிய கர்மாவாக இருந்து கொண்டு எப்படிக் கர்மாவை விடுவதற்கும் பழக்கும்?

கர்மாவில் இரண்டு தினுசு. ஒன்று நாம் சொந்த ஆசைகளின் மீது மனஸுக்குப் பிடித்தபடி பண்ணுவது. இது மனஸைத் தெளிவிக்கிறதற்குப் பதில் மேலும் குழப்பிக் கர்ம மூட்டையை இன்னும் பெரிசாகத்தான் ஆக்கும். இன்னொன்று, இப்படி ஆசையில்லாமல், சாஸ்திரம் சொல்கிறது என்பதற்காகவே பண்ணி ஈச்வரார்ப்பணம் செய்வது. இப்படிச் செய்கையில் ஒரு கர்மாவானது

சித்த மலத்தை நீக்கி கர்ம மூட்டையை லேசாக்குவதாகிறது. கர்மாவையே விட்டு விடும்படி ஒரு ஸ்டேஜில் பண்ணிவிடுகிறது. அப்புறம் அப்படி விட்டவன் மூலம் பராசக்தியின் கருணையே லோக க்ஷேமார்த்தம் கர்மா பண்ணவும் பண்ணலாம். ஆனாலும் இவனுக்கு கர்த்ருத்வம் (நான் பண்ணுகிறேன் என்ற doership) இராது.

சித்த மலம் எப்படி நீங்குகிறது? ஆசை, த்வேஷம், லாப நஷ்டம், ஜயாபஜயம் [வெற்றி தோல்வி] இவற்றுக்கு மனஸில் இடமேயில்லாதபடி, பெரிசாக யக்ஞம் என்று இழுத்துப் போட்டுக் கொண்டு அதிலேயே சரீரம், வாக்கு, மனஸ், புத்தி எல்லாவற்றையும் ஈடுபடுத்துகிறபோது இந்த concentration-ஆலேயே [ஒருமுக அடர்த்தியினாலேயே] சித்தமலம் நீங்குகிறது. சித்தம் ஒரே சஞ்சலமாக நாலா திசையும் பாயாமல் ஒன்றிலேயே ஈடுபட்டிருந்தால், பூதக் கண்ணாடியில் ஸூர்ய கிரணம் ஒரு பாயின்டில் கான்ஸென்ட்ரேட் ஆகும்போது, அடியிலே இருக்கிற காகிதத்தில் தீப்பொறி உண்டாகிறதைப் போல் சித்த மலத்தை எரிக்கிற பொறி உண்டாகிறது. காரியமாக நூறாயிரம் ஒவ்வொரு யாகத்திலும் இருக்கும்; மந்திரமாக எத்தனையோ அதில் இருக்கும். தினுசு தினுசாகத் திரவியங்களும் வேண்டியிருக்கும். இதிலெல்லாம் இப்படி அநேகம் இருந்தாலும் இத்தனையும் ஒன்றையே மத்தியாகக் கொண்டு, அதைக் குறித்தே ஏற்பட்டிருக்கின்றன என்ற நினைவு அந்த ஆதாரமான ஒன்றிலேயே கர்த்தாவின் சித்தத்தை ஒருமுகப் படுத்தியிருக்கும்.

ஒரு ராஜா அச்வமேதம் செய்வதென்றால் எத்தனைக் காரியங்கள்? யஜ்ஞ சாலையில் இன்னின்ன மிருகங்களைக் கொண்டுவந்து கட்ட வேண்டும்; புலி முதலானவற்றைக் கூட கொண்டு வரவேண்டும் என்றெல்லாம் இருக்கிறது. இப்படிப் பல வருஷங்கள் ஒரே நினைப்பாக ஓடியாடி ஒருத்தன் காரியம் பண்ணினால் அப்படிப்பட்ட காரியமே சித்த அழுக்கைப் போக்கி, கார்யமற்ற பெரிய நிலைக்குப் போக இவனைத் தயார்ப்படுத்தி விடுகிறது. இப்படியேதான் கோபுரம் கட்டுவது, பெரிதாகக் குளம் வெட்டுவது அல்லது பெரிய அளவில் ஏதோ பொதுத் தொண்டு செய்வது என்று பண்ணுகிறபோது அந்தந்த காரியம் முடிந்து ஏற்படுகிற பலன் ஒரு பக்கமிருக்க, அதைச் செய்யும்

போதே, அறுபது நாழியும் அதே குறியாகச் செய்வதாலேயே ஏற்படுகிற சித்தசுத்திதான் எனக்கு ரொம்ப விசேஷமானதாகத் தோன்றுகிறது.

இப்படி யஜ்ஞாதிகளைப் பண்ணியும் ஒருத்தன் இந்த ஜன்மாவிலேயே காரியத்தை விட்டு ஸந்நியாஸியாகா விட்டாலும் பரவாயில்லை. அவனும் புண்ணிய லோகத்தை அடைந்து, அப்புறம் ஈச்வராநுக்கிரஹத்தால், அந்த ஈச்வரனே காரியமற்ற பிரம்மத்தில் பரமாத்மாவாக ஒடுங்குகிறபோது தானும் ஒடுங்கி ஒன்றாகிவிடுகிறான். ஈச்வரன் மறுபடி வெளிமுகப்பட்டு ஸ்ருஷ்டி செய்தாலும் இவன் அந்த ஸ்ருஷ்டியில் மாட்டிக் கொள்ளாமல் தப்பித்துக் கொண்டு விடுகிறான். அல்லது இன்னொரு விதமாகவும் சொல்வதுண்டு: கிருஷ்ண பரமாத்மா கீதையில் யோக ப்ரஷ்டனானவன் (யோகம் பண்ணியும் ஆத்ம ஸாக்ஷாத்காரம் அடையாமல் இறந்து போகிறவன்) அடுத்த பிறவியில் விட்ட இடத்திலிருந்து ஆரம்பித்து மேலே போகிறான் என்கிறாரல்லவா? யோகம் என்றது யாகம் முதலான கர்மாக்களுக்கும் பொருந்தும்தான் என்று சொல்வதுண்டு. அதாவது இவற்றைப் பண்ணியும் ஸந்நியாஸியாகாதவனும் அடுத்த ஜன்மாவில் பிறக்கும்போதே விவேகியாகப் பிறந்து கர்மாவை விடுகிற அளவுக்குப் பக்குவியாகி ஸந்நியாஸம் வாங்கிக் கொண்டு ஸாக்ஷாத்காரம் அடைகிறான் என்று சொல்வதுண்டு.

இந்த ஸம்ஸ்காரங்கள் இல்லாதவர்கள் தங்கள் தொழிலை ஒழுங்காகச் செய்து, தெய்வ பக்தியோடுகூட ஆலயம் தொழுவது, ஸ்தோத்ரங்கள் படிப்பது முதலானவற்றையும் ஔபாஸனத்தையும் பித்ரு கடன்களையும் பண்ணிக் கொண்டு யோக்கியர்களாக இருப்பதாலேயே ஸத்கதி அடைகிறார்கள்.

அந்தணனின் அன்றாடம்

அந்தணனின் அன்றாடம்

"இத்தனை ஸம்ஸ்காரங்களை இந்தக் கால பிராமணர் செய்ய முடியுமா? செய்ய முடியாததைச் சொல்லி என்ன பிரயோஜனம்?" என்றால், முடியும்-முடியாது என்று நானே பிரித்துக் கொடுத்து விட்டால், அவர்கள் முடியாது லிஸ்ட்டைத் தாங்களும் நீட்டிக்

கொண்டு போய் எதுவும் செய்யாததாகி விடுமே!" என்று நான் யோஜிக்கிறேன். அதனால் இப்போது முடியுமோ முடியாதோ, பிராம்மணர்கள் ரிடையர் ஆன பிறகாவது, அப்புறமும் எக்ஸ்டென்ஷன், வேறு உத்தியோகம் என்று பறக்காமல் அவர்களுக்கான எல்லா அநுஷ்டானங்களையும் செய்யப் பிரயத்தனம் செய்ய வேண்டும் என்ற அபிப்ராயத்தில் சொல்கிறேன்.

சாஸ்திரம் பிராம்மணனுக்குப் போட்டுத் தந்திருக்கிற தினசர்யை (daily routine :அன்றாட அலுவல்) என்னவென்று சொல்கிறேன். ரொம்பவும் கடுமையான ருடீன் தான். ஸூர்யோதயத்திற்கு ஐந்து நாழிகை (இரண்டு மணி) முன்னதாகவே, அதாவது நாலு மணிக்கே எழுந்து விட வேண்டும். 'பஞ்ச பஞ்ச உஷத்காலே' என்பார்கள். 'ஐந்து X ஐந்து' அதாவது இருபத்தைந்தாவது நாழிகையில் என்று அர்த்தம். முதல்நாள் ஸூர்யாஸ்தமனத்திலிருந்து மறுநாள் உதயம் வரையுள்ள முப்பது நாழிகையில் இருபத்தைந்து நாழிகையானபின் என்று அர்த்தம். இதிலிருந்து ஸூர்யோதயம் வரை பிராம்ம முஹூர்த்தம். இப்படி விழித்துக் கொண்டு பல் துலக்கி, பச்சை ஜலத்தில் ஸ்நானம் பண்ணிவிட்டு ஸந்தியாவந்தனம் செய்ய வேண்டும். இது தேவ யக்ஞம். அப்புறம் பிரம்ம யக்ஞம். அதாவது வேத அத்யயனம் பண்ணுவது; இதில் சில தர்ப்பணங்களும் பண்ண வேண்டும். (சில ஸூத்ரக்காரர்கள் இதைப் பிற்பாடு செய்கிறார்கள்) ஒரு பகல் பொழுதை – அதாவது காலம்பற 4 மணியிலிருந்து ராத்ரி 8 மணி வரையுள்ள 16 மணியை – எட்டுப் பங்காக்கினால் இதோடு ஒரு பங்கு முடிந்திருக்கும்.

இரண்டாம் பாகத்தில் அத்யாபனம் என்பதாக வேதத்தை சிஷ்யனுக்கு ஓதுவதில் ஆரம்பிக்க வேண்டும். அப்புறம் பூஜைக்கான புஷ்பங்களைத் தானே பறித்து வர வேண்டும். பிறகு இவனுக்குச் சம்பளம் எனறு இல்லாததால், மூலதனமாகப் போதிய மானியம் இல்லாவிடில், வாழ்க்கைச் செலவுக்காகவும், யஜ்ஞ செலவுக்காகவும் பொருள் ஆர்ஜிதம் செய்யத் தக்க ஸத்பாத்திரங்களிடம் போய் திரவியம் வாங்கி வரவேண்டும். இப்படி தானம் வாங்க (அளவோடு அத்யாவசியத்துக்கே வாங்க) பிராம்மணனுக்கு உரிமை உண்டு. தானம் வாங்கினதில் கணிசமான பகுதியை இவன் யஜ்ஞத்தில் ரித்விக்குகளுக்கு

தக்ஷிணையாக தானம் கொடுத்து விடுகிறான் என்பதை கவனிக்க வேண்டும். பிராம்மணனுக்குரிய ஆறு தொழில்களில் 'ப்ரதிக்ரஹம்' என்பது தனக்கு வாங்கிக் கொள்வது; 'தானம்' என்பது இவன் பிறருக்குக் கொடுக்க வேண்டியது. 'பிராம்மணனுக்கு மட்டும் தானம் வாங்க ரைட்டா? என்கிறவர்கள், அவன் தானம் கொடுக்க வேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறதென்பதையும், முக்கியமாக இப்படிக் கொடுக்கவேதான் அவன் வாங்கினான் என்பதையும் கவனிக்க வேண்டும். அது தவிர இனி சொல்லப் போகிற ஆதித்ய, பூத யஜ்ஞங்களாலும் இவன் தாதாவாக இருக்கிறான். இப்படி ஒரு நாளில் இரண்டாம் பாகமும், மூன்றாவது பாகத்தில் கொஞ்சமும் ஆகியிருக்கிற போது மாத்யான்னிக ஸ்நானம் பண்ணினால் உடனே மாத்யான்னிக ஸந்தி செய்யச் சரியாக இருக்கும். அப்புறம் பித்ரு தர்ப்பணம் முதலியன. பிறகு பூஜை. நெருப்பிலே பண்ணும் ஹோமம், ஜலத்தால் பண்ணும் தர்ப்பணம், பஞ்சேந்திரியங்களால் நுகரப்படும் ஸகல வஸ்துக்களையும் ஈச்வரார்ப்பணம் பண்ணுவதான பூஜை என்ற மூன்றும் செய்யப்பட வேண்டியவை. பூஜையோடு நாலாம் பாகம் முடிந்து, பகல் பன்னிரண்டு மணியாகியிருக்கும்.

இதுவரை செய்த ஹோமத்தினாலும் பூஜையாலும் தேவ யஜ்ஞமும், முன்னே சொன்னபடி பிரம்ம யஜ்ஞமும், தர்ப்பணத்தால் பித்ருயஜ்ஞமும் பண்ணியாயிற்று. பஞ்ச மஹா யஜ்ஞங்களில் பாக்கி இரண்டு மநுஷ்ய யஜ்ஞம் என்ற விருந்தோம்பலும், பூத யஜ்ஞம் என்பதாகப் பிராணிகளுக்குப் பலியும் பிச்சையும் போடுவதுமாகும்.

இந்த இரண்டையும் முக்கியமாகக் கொண்டே பகலின் ஐந்தாவது பாகத்தில் வைச்வதேவம் என்ற கர்மா பண்ணப் படவேண்டும். இதிலே ஹோமம் என்ற அக்னியில் அன்னத்தைப் போடுவதோடு, அதே அன்னத்தை பலியாக, அதாவது அக்னியில் போடாமல், பல இடங்களில் வைக்கவேண்டும். பல தேவதைகளை உத்தேசித்து அக்னியில் ஹோமமும், க்ருஹத்தின் பல ஸ்தானங்களில் பலிகளும் போட்ட பிறகு நாய், காகம் முதலிய மிருக பக்ஷிகளுக்காக வீட்டு வாசலுக்கு வெளியே மந்திரோக்தமாக அன்னத்தை பலி போட வேண்டும். பிச்சைக்கு வருகிறவனுக்காக, சண்டாளனுக்காகவும் பதிதனுக்காகவும் கூட, இதே போல பலியை மந்திர பூர்வமாக

போடவேண்டும். இதுவே பூதயக்ஞம். இதன்பின் மநுஷ்ய யக்ஞமான ஆதித்யம், அதாவது அதிதி ஸத்காரம் அல்லது விருந்தோம்பல். Aathithyam என்பதே சரி. Aadityam என்றால் ஆதித்யனான ஸூர்யனைச் சேர்ந்தது என்றாகும். அது தப்பு. எல்லாரும் ஆதித்யமும் வைச்வதேவமும் ஒழுங்காகச் செய்தால் வேலையில்லாப் பிரச்சனை, பிச்சைக்காரர் பிரச்சனை, திருட்டு என்ற மூன்றின் பாதிப்புமே வெகுவாகக் குறைந்து விடும்.

இதற்குப் பிறகுதான் அதாவது பிற்பகல் ஒரு மணிக்கு மேல்தான் பிராம்மணனுக்குச் சாப்பாடு. அதுவரை காபி, டிபன் கூடாது. மோர், க்ஷீரம் வேண்டுமானால் சாப்பிடலாம். இது நித்யப்படி. இதோடு பாக–ஹவிர்–ஸோம யக்ஞங்களோ மற்ற காம்யமான யஜ்ஞங்களோ சேர்கிற நாட்களில் இன்னும் அதிக நாழியாகும். அச்சமயங்களில் மற்ற கர்மாக்களில் சில அட்ஜஸ்ட்மென்ட்கள் உண்டு. சிராத்த தினங்களானாலும் அதிக நாழியாகும். சிராத்தம் ஆரம்பிப்பதே அபரான்ன காலத்தில்தான். அது என்னவென்று சொல்கிறேன்.

பின்மாலையிலிருந்து முன்மாலை முடியப் பதினாறு மணியை, எட்டுப் பங்காகப் பிரித்தது போலவே, ஸூர்யோதயத்திலிருந்து ஸூர்யாஸ்தமனம் வரையுள்ள பன்னிரண்டு மணியை ஒவ்வொன்றும் ஆறு நாழிகை கொண்ட ஐந்து பாகங்களாகவும் பிரித்திருக்கிறது. இதன்படி ஆறு மணிக்கு ஸூர்யோதயம் என்றால் 8.24 வரை பிராத:காலம். 8.24லிருந்து 10.48 வரை ஸங்கவ காலம். 10.48லிருந்து பகல் 1.12 வரை மாத்யான்னிக காலம் (மத்தியான்னம் என்பது) 1.12லிருந்து 3.36வரை அபரான்ன காலம். 3.36லிருந்து 6 மணி வரை (அதாவது அஸ்தமனம் வரை) ஸாயங்காலம். (அஸ்தமனத்தை ஒட்டினது ப்ரதோஷகாலம். 'தோஷம்' என்றால் இரவு. 'ப்ர' என்றால் முன்னால். இங்கிலீஷ் pre -யும் இதேதான். இரவின் முந்தய காலம் பிரதோஷம்.)

சிராத்தம் அபரான்னத்தில் செய்யவேண்டும் என்றேன். சிராத்தம் முதலான பித்ரு காரியங்களுக்குப் பிறகுதான் பூஜை முதலான தேவ காரியம் செய்யவேண்டும்.

போஜனத்துக்கப் பின் புராணம் படிக்க வேண்டும்.

அதன்பின் பிற ஜாதியாருக்கு அவரவர் வித்யைகளைக் கற்பிக்க வேண்டும். கொஞ்சங்கூட சிரம பரிகாரத்துக்கு பொழுதில்லாமல் மறுபடி ஸாயங்கால ஸ்நானம், ஸந்தியாவந்தனம், ஔபாஸன அக்னி ஹோத்ரம், மற்ற ஜபங்கள், இரவில் வைக்கிற வைச்வதேவம், ஸத்கதா சிரவணம் இவற்றைச் செய்துவிட்டு அப்புறம் போஜனம் செய்து சயனிக்கப் போகவேண்டும். அநேக நாட்களில் இரவில் பலகாரம்தான். ஏகாதசியில் முழுநாளும் பட்டினி.

ஒரு க்ஷணம் விடாமல் கர்மாதான்; tight-work -தான். சாஸ்திரங்களை பிராம்மணர்கள் எழுதி வைத்துக் கொண்டார்கள், ரக்ஷித்தார்கள் என்பதால் ஹாய்யாக வேலையில்லாமல் இருக்க வேண்டும் என்று பண்ணிக் கொண்டுவிடவில்லை. இடுப்பை உடைக்கிற மாதிரி வேலையும், மனஸைத் துளி இப்படி அப்படிப் போகாமல் கட்டிப் போடுகிற நியமங்களையுமே வைத்துக் கொண்டார்கள்.

இப்போது பத்துமணி ஆபீஸுக்குப் போகிறவர்களும் பிராம்ம முஹூர்த்தத்தில் எழுந்து, ஔபாஸன, அக்னி ஹோத்ர, பிரம்ம யக்ஞம் வரையில் பழைய கிரமப்படியே முடித்து, ஸங்கவ காலத்திலேயே (8.24 லிருந்து 10.48) பூஜை மாத்யான்னிகங்களைப் பண்ணி விடலாம். "மாத்யான்னிகம்" என்றே பெயர் இருந்தும் கால நிலைமையை உத்தேசித்து அதை ஸங்கவ காலத்தில் பண்ணலாம் என்கிறேன். சாயங்காலம் ஆபிஸிலிருந்து வந்து சாஸ்திரப்படியே எல்லாம் செய்யலாம். மனமிருந்தால் வழியுண்டு. லீவு நாட்களில் எல்லாவற்றையும் பண்ணலாம்.

காலமே எழுந்தவுடன் ஷி:ப்ட் என்று ஓடுகிறவர்களும் முடிந்தவரையில் செய்ய வேண்டும். மாலையில் சேர்த்து வைத்து காயத்ரீ பண்ண வேண்டும். ஒரு வாரம் காலை ஷிப்:ட் என்றால் என்றால் அப்புறம் ஒரு வாரம் பிற்பகல் ஷி:ப்ட், இரவு ஷிப்:ட் என்று வருகிறதோ இல்லையோ? இவற்றில் முடிந்த அநுஷ்டானங்களையெல்லாம் செய்யவேண்டும்.

செய்யவில்லையே என்ற தாபம் இருக்கவேண்டும்; செய்யவேண்டும் என்ற ஆர்வம் இருக்க வேண்டும். அதற்கே ஒரு வால்யூ உண்டு. கருணாமூர்த்தியான பகவான் இதைக் கவனிக்காமல் போகமாட்டான்.

"ரிடையர் ஆகிவிடப் போகிறோமே!" என்று அழாமல், "எப்போது ரிடையராகி அநுஷ்டானங்கள் எல்லாவற்றையும் பண்ணுவோம்?" என்று எண்ண வேண்டும். ரிடையரான பிறகே அத்யயனத்திலிருந்து ஆரம்பித்து அநுஷ்டானங்களைப் பண்ணினவர்களும் லக்ஷத்தில் ஒருவர் இல்லாமலில்லை.

உலகில் எந்த மதத்தையும்விடத் தொன்றுதொட்டு வந்திருக்கிற இந்த அநுஷ்டானங்கள் நம்மோடு போய்விடாமல் இவற்றால் நாம் பெறுகிற நன்மையையும், லோகம் பெறுகிற நன்மையையும் உண்டாக்குவதற்கே ஸகலப் பிரயத்தனமும் பண்ணவேண்டும்.

வித்யாஸ்தானம்: முடிவுரை

உபவேதங்கள்

உபவேதங்கள்

வேதங்கள் நாலு, வேதாங்கங்கள் ஆறு, உபாங்கங்களான மீமாம்ஸை-நியாயம்-புராணம்-தர்மசாஸ்திரம் என்கிற நாலு ஆக மொத்தம் இந்தப் பதினாலுமே ஹிந்து மதம் என்று சொல்லப்படுகிற ஸநாதன தர்மமான வேத ஸமயத்துக்கு ஆதாரமாக இருக்கப்பட்டவை.

தர்மத்தைச் சொல்லி, ஆத்மாவை சுத்தப்படுத்துவதால் இவற்றை 'தர்ம ஸ்தானங்கள்' என்பார்கள். அதோடு இவை அறிவையும் மனஸையும் வளர்ப்பதால் 'வித்யா ஸ்தானங்கள்' என்றும் பெயர் பெற்றிருக்கின்றன.

ஆத்மாவை நேராக சுத்தப்படுத்தப் பிரயோஜனப் படாமல் உடம்பை ரக்ஷித்து, அறிவைத் தந்து, உணர்ச்சிகளை உண்டாக்கி மனஸுக்கு இன்பம் தருவதாக உள்ள வேறு நாலு சாஸ்திரங்களும் உண்டு. அவை தர்ம ஸ்தானமாக இல்லாமல் வித்யா ஸ்தானமாக மட்டும் இருக்கிறவை. இவற்றைச் சேர்த்தால் வித்யா ஸ்தானங்கள் பதினெட்டு.

இப்படி வித்யா ஸ்தானமாக மட்டும் உள்ள நாலு ஆயுர் வேதம், தநுர்வேதம், கந்தர்வ வேதம், அர்த்த சாஸ்திரம் என்பன. அவற்றை 'உபவேதங்கள்' என்பார்கள்*.

இவற்றில் ஆயுர்வேதம் என்பது வைத்ய சாஸ்திரம் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். அது உடம்பைப் பற்றியும், வியாதிகளைப் பற்றியும், வியாதிகளின் பரிஹாரங்களைப் பற்றியும் அறிவைக் கொடுக்கிற சாஸ்திரம். நேராக ஆத்ம ஸம்பந்தமுள்ளதென்று சொல்ல முடியாதது.

தநுர்வேதம் க்ஷத்ரியர்களுக்கு யுத்த அப்பியாஸத்தைத் தருவது. இங்கே தநுஸ் (வில்) என்பது எல்லா ஆயுதங்களையும் குறிக்கும். தேச ரக்ஷணைக்காக என்னென்ன ஆயுதங்களை எப்படிப் பிரயோகம் பண்ண வேண்டும் என்ற அறிவைத் தருகிற இதுவும் நேராக ஆத்ம சுத்திக்கு ஏற்பட்டதில்லைதான்.

காந்தர்வ வேதம் என்பது ஸங்கீதம், நடனம் முதலான கலைகள். இது கலையறிவைத் தருவது. மனஸின் உணர்ச்சிகளை ஸந்தோஷப்படுவது. 'பொழுது போக்கு' என்ற அளவில் எல்லா மநுஷ்யர்களுக்கும் இது வேண்டியிருக்கிறது. வித்யா ஸ்தானமாக மட்டும் இருக்கிற நாலில் இது ஒன்றுதான் நாதோபாஸனையாகவும், தெய்வபக்தியோடும் அநுஷ்டிக்கப்பட்டால் நேராக ஆத்ம ஸம்பந்தமுள்ளதாகிறது.

அர்த்த சாஸ்திரம் என்பது பொருளாதார சாஸ்திரம் என்று பொருள்படுவது. முக்கியமாக இது ஆட்சிமுறையை, statecraft -ஐச் சொல்வது. இதிலே வரும் உபாங்கங்களான ஸாம, தான, பேத, தண்டத்தில் பேதமும் (பிரித்தாள்வதும்) தண்டமும் (தண்டனை தருவதும்) கொடுமையாக தோன்றினாலும் நடைமுறை வாழ்க்கையில் தவிர்க்க முடியாததால் ராஜாங்கத்துக்கு மட்டும் அநுமதிக்கப் பட்டுள்ளன.

இந்த நாலுமே spiritual life -ஐ (ஆத்மிக வாழ்க்கையை) விட practical living -க்கு (நடைமுறையில் ஜீவனம் நடத்துவதற்கு)த் தான் அவசியமாகின்றன. வாழ்க்கையில் நோய் வருகிறது. எனவே

ஆயுர்வேதம் வேண்டியிருக்கிறது. எதிரி ராஜ்யங்கள் இருப்பதால் தநுர்வேதம் அவசியமாகிறது. எப்போதும் காரியம், அல்லது தூக்கம், சோம்பல் என்றில்லாமல் பொழுது போக்குகள் தேவையிருப்பதால் காந்தர்வ வேதம் இருக்கிறது. ஒரு நாடு என்றால் பிரஜைகளின் ஸமுதாய வாழ்க்கை ஒழுங்காக நடந்தால்தானே முடியும்? அப்படி நடத்தப்பண்ண அர்த்த சாஸ்திரம் தேவைப்படுகிறது. இவை practical necessity -கள் [நடைமுறைத் தேவைகள்.]

அதனால் இவற்றின் பலனும் பிரத்யக்ஷம். மருந்து சாப்பிட்டால் உடனே வியாதி போவது கண்கூடு. ஆயுதத்தைப் பிரயோகித்தால் அது சத்ருவைத் தாக்குவதும் பிரத்யக்ஷம். பாட்டுக் கச்சேரி, டான்ஸ் அநுபவிக்கும்போதே ஆனந்தம் தருகின்றன. அர்த்தசாஸ்திரப்படி நடக்கிற ராஜ்ய விஷயங்களும் பிரத்யக்ஷமாகப் பலன் தந்து, பேப்பரில் அன்றன்றும் அடிபடுவதாகும்.

ஆத்மாவுக்கே ஏற்பட்ட பதினாலு தர்ம ஸ்தானங்கள் இப்படிப் பிரத்யக்ஷமான பலனுள்ளவை அல்ல. அவற்றுக்கு 'அத்ருஷ்ட பலன்' என்பார்கள். 'த்ருஷ்டம்' என்றால் திருஷ்டிக்கு அகப்படுவது. அதாவது பிரத்யக்ஷமானது. அப்படியில்லாதது அத்ருஷ்டம். ஆத்மா பரிசுத்தி அடைவதை நேரில் பார்த்துக் கொள்ள முடியாது. பாப புண்ணியங்கள் ஒருவனை ஸ்வர்க்க நரகங்களுக்கு அழைத்துப் போவதை உடனே பார்த்துக் கொள்ள முடியாது. நாம் பார்க்கிறபோதும் பிறருக்கும் காட்டி ஒப்புக்கொள்ளும்படிப் பண்ண முடியாது! யாகம் செய்தால் ப்ரீதி அடைந்து தேவர்கள் மழை பெய்வித்தாலும் மழைதான் தெரியுமே தவிர, தேவர்கள் தெரிய மாட்டார்கள்! பரம சுத்தர்களுக்குத் தெரிந்தாலும் மற்றவர்களுக்குக் காட்ட முடியாது. அதனால், 'யாகம் பாட்டுக்குச் செய்தார்கள். மழை பாட்டுக்குப் பெய்கிறது. அதன் பலன்தான் இது என்று எப்படிச் சொல்ல முடியும்? இது காக்கை உட்கார பனம் பழம் விழுந்த கதையாய் இருக்கலாம்' என்று கூட ஆக்ஷேபிக்க இடமிருக்கிறது. இப்படியிருந்தாலும் வாஸ்தவத்தில் தர்ம ஸ்தானமான பதினாலுதான் ஆத்மாவுக்கு, மெய்யான சாச்வதமான ச்ரேயஸுக்கு முக்கியமானவை. அவற்றுக்கு வழிகோலவேதான் மற்ற நாலு வித்யா ஸ்தானங்களும்.

"சரீரத்துக்குள்ளே ஆத்மா மாட்டிக் கொண்டிருக்கிறதே! இந்த சரீரம் இருக்கும்போதேதானே பாபத்தைப் போக்கும் புண்ய கர்மாக்களைப் பண்ணினால் ஆத்மாவை அறியலாம்?" என்ற அடிப்படையில்தான் சரீர ரக்ஷணத்துக்கான ஆயுர்வேதம் ஏற்பட்டிருக்கிறது. தனி மநுஷ்யனுக்கு தேகம் ஆரோக்யமாயிருந்தால் ஆத்ம ஸாதனை பண்ண அநுகூலமாயிருக்கும் என்பது போல், ஒரு ஜன ஸமூஹத்துக்கு சத்ருக்களால் ஹிம்ஸை இல்லாவிட்டால்தானே அது தேசரீதியில் ஆத்மாபிவிருதிக்காக நிம்மதியாகப் பாடுபட முடியும்? --- என்றே தநுர்வேதம் ஏற்பட்டிருக்கிறது. வெளியிலிருந்து மட்டுமின்றி உள்ளேயே இப்படிப்பட்ட குழப்பங்கள் ஏற்பட்டு ஒரு தேசத்தின் ஆத்மிக் அபிவிருத்திக்கான சூழ்நிலை கெட்டுப் போகக்கூடாதென்ற அர்த்த சாஸ்திரம் இருக்கிறது. மனுஷ்யனின் மன நெரிசலைப் போக்கி அவனுடைய கலா ரஸனையை வளர்த்து விடுவதும் ஆத்ம க்ஷேமத்துக்கு அவசியம் என்பதனால்தான் காந்தர்வ வேதம் இருக்கிறது.

இப்படி indirect ஆக (மறைமுகமாக) ஆத்மாவுக்கு ஸஹாயம் பண்ணுவதாலேயே இந்த நாலுக்கும் உபவேதங்கள் என்ற உயர்வான பெயர் இருக்கிறது. அர்த்த சாஸ்திரம் நீங்கலாக மற்ற மூன்றின் பெயரிலுமே வேதம் என்று வருகிறது. ஆயுர்வேதம் தநுர் வேதம், காந்தர்வ வேதம். நாலு வேதங்களுக்கு இந்த நாலும் உபவேதம் என்பார்கள்.

ஆகையால் இந்திரிய ஸௌக்கியம், கொலை முதலான தப்புத் தண்டாக்களில்கூட இழுத்து விட இந்த நாலில் இடமிருப்பதாகத் தோன்றினாலும், வாஸ்தவத்தில் நடைமுறை லோகத்தின் தேவைகளை அநுஸரித்தும், முடிவில் ஆத்மாவுக்கே உதவும்படியாகத்தான் இந்த நாலு சாஸ்திரங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்தப் பதினெட்டோடு இப்போதுள்ள அத்தனை ஸயன்ஸ்களிலும், ஆர்ட் [கலை] களிலும் ஒன்று பாக்கியில்லாமல் அத்தனைக்கும் நம்மிடம் பிராசீனமான சாஸ்திரங்கள் இருக்கின்றன. நம் ஆயுர்வேதம் ஒன்றிலேயே நவீனர்களின் physiology [உடற்கூறு இயல்] , Zoology

[உயிரின இயல்], Botany [தாவர இயல்], Medical Science [மருத்துவ இயல்], Chemistry [ரஸாயனம்] இத்தனையும் வந்து விடுகின்றன. இப்படி அநேகம். இவற்றில் Surgery [ரண சிகித்ஸை], கணிதத்தில் ஸைபர் முதலான பல விஷயங்கள் இந்தியாவிலிருந்தே மற்ற எல்லாத் தேசங்களுக்கும் கிடைத்ததாக இப்போது ஸகல தேசத்தாரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

துருக்கர்கள் வந்து நம் தேச வாழ்வில் நிம்மதியைக் கெடுத்து, அந்நியர் ஆட்சி ஏற்பட்டபின் இப்படி ஸகல வித்யைகளிலும் (64 வித்யை என்று ஒரு கணக்கு) நாம் ஆராய்ச்சி பண்ணுவதற்கு ஊக்கமும் மான்யமும் போய் விட்டது. அதற்கு அப்புறம்தான் நாம் ஸயன்ஸில் பின் தங்கியவர்களாகி விட்டோம்.

அதற்கு முன் நாம் கண்டு பிடித்திருந்த அநேக விஷயங்கள் மற்றவர்களுக்குத் தெரியாது. ஆனால் நாம் கண்டு பிடிக்காத ஒன்றே ஒன்று அவர்களுக்குத் தெரிந்திருந்ததால் தான் நாம் தோற்றுப்போய் தினக்ரமேண ஆத்மிகம், ஸயன்ஸ் இரண்டிலும் கீழே போகும்படியாகி விட்டது. அந்த ஒன்று வெடிமருந்து என்பதுதான். பீரங்கிக்குப் பதில் சொல்ல முடியாமல்தான் முகலாய ஆட்சிக்கு ஆளானோம். அதிலிருந்து எல்லாம் இறங்குமுகமாயிற்று – பரமபத ஸோபான படத்தில் பாம்பு வாயில் விழுந்த மாதிரி!

இப்போது நம் சாஸ்திரங்களான பழைய மருத்துவம், சில்பம் முதலியவற்றையே அநுஸரித்தோமானால் நமது சீதோஷ்ணம், நாகரிகம் இவற்றுக்கு அநுஸரணையான இவற்றாலேயே நம்முடைய சாஸ்திரோக்த வாழ்க்கைக்கு திரும்புவதையும் ஸுலபமாக்கிக் கொள்ளலாம்.
* இந்நான்கு உபவேதங்கள் குறித்த உரைகளுக்கு "தெய்வத்தின் குரல்" மூன்றாம் பகுதி பார்க்க.

சுதேசம்-விதேசம்; பழசு-புதிசு

சுதேசம்-விதேசம்; பழசு-புதிசு

பிற தேச ஸமாசாரத்தையெல்லாம் ஒதுக்க வேண்டும் என்று நான் சொல்லவேயில்லை. அதில் நல்லதாக ஆத்மாபிவிருத்திக்கும், லோக க்ஷேமத்துக்கும் உதவுவதாக, நமது genius-கு (தேசபண்புக்கு) உகந்ததாக இருக்கிறவைகளை அங்கீகரித்துப் பயனடையத்தான் வேண்டும். 'வஸுதைவ குடும்பகம்' (லோகம் பூரா ஒரு குடும்பம்) , ஆசார்யாளே சொன்ன மாதிரி 'ஸ்வதேசோ புவனத்ரயம்' (மூவுலகும் நம் தாய் நாடு) , 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதுதான் நம் ஸித்தாந்தம். அதனால் அந்நியம் என்பதாலேயே எதையும் கழித்துக் கட்ட வேண்டாம். காளிதாஸன் ['மாளவிகாக்னி மித்ர'த் தொடக்கத்தில்]

புராணமித்யேவ ந ஸாது ஸர்வம்
ந சாபி காவ்யம் நவமித்யவத்யம்|
ஸந்த: பரீக்ஷ்யான்யதரத் பஜந்தே
மூட: பர: ப்ரத்யயநேய புத்தி:||

என்கிறான். 'நம்முடையது, பழையது என்பதற்காகவே ஒன்றை நல்லது என்று தீர்மானித்து விடக்கூடாது. பிறருடையது புதுசு என்பதற்காகவே ஒன்றைத் தள்ளியும் விடக் கூடாது. பரீட்சை பண்ணிப் பார்த்தே ஏற்க வேண்டியதை ஏற்று தள்ள வேண்டியதை தள்ளி விட வேண்டும். முதலிலேயே முடிவு கட்டி மனஸைக் குறுக்கிக் கொள்வது மூடனின் காரியம்' என்று இதை விரித்துப் பொருள் கொள்ளலாம். அதனால்தான் விதேசமானது, நவீனமானது எதுவுமே நமக்குக் கூடாது என்று சொல்லிவிடவில்லை. ஆனால் இப்போது காளிதாஸன் சொன்னதற்கு நேர்மாறாக, 'நம்முடையது பழசு என்பதாலேயே மட்டம், அது தள்ள வேண்டியது; மேல் நாட்டிலிருந்து வந்ததுதான் modern (புதிசு) என்பதாலேயே அதை அப்படியே யோசிக்காமல் சேர்த்துக் கொள்ள வேண்டும்' என்றாயிருக்கிறது! இதுவும் தப்பு.

ஆகையால் அந்நியமும், நவீனமுங்கூட எங்காவது நமக்குக் கொஞ்சம் தேவையாயிருந்தாலும் பெரும்பாலும் நம்முடையதான பழைய விஷயங்கள்தான் விசேஷமாக, அதிகமாக அநுஸரிக்கத் தக்கன என்று சொல்ல வேண்டியதாகிறது. புதிதில் எவையெல்லாம் வேண்டும் என்று நாம் ஆலாப் பறக்கிறோமோ, அவைகள் வேண்டவே வேண்டாம் என்று அவற்றைக் கண்டுபிடித்த நாடுகளிலேயே பக்குவிகள் விட்டு

விட்டு நம்முடைய யோகம், பஜனை, ஆத்ம விசாரம் முதலியவற்றுக்குக் கூட்டம் கூட்டமாகத் திரும்பிக் கொண்டிருப்பதை முக்யமாகக் கவனிக்க வேண்டும்.

நவீனம் என்று நாம் எதை நாடிப் போகிறோமோ அதிலே கரை கண்டவர்கள் பெரும்பாலும் அது பிரயோஜனமில்லை என்றே உணர்ந்து நம் வழிகளுக்கு வந்து கொண்டிருக்கிறார்களாதலால், நாம் நம்முடைய பழைய வழியைத் தான் ஆதாரமாக வைத்துக் கொண்டு, அதன்படி செய்ய வேண்டும் என்பது தெளிவு. இப்போது செய்கிற மாதிரி, மேல்நாட்டார் கழிசடை என்று ஒதுக்கித் தள்ளுகிறவற்றை நாம் கொண்டாடி எடுத்துக் கொள்வதற்காக நான் புது ஸயன்ஸ்களைப் படிக்கச் சொல்லவில்லை. நம் வழிக்குப் பாதகமில்லாமலே, அதற்கு அநுகூலமாகவே ஏதாவது அம்சங்களில் இந்த ஸயன்ஸ்களின் மூலம் பண்ணிக் கொள்ள முடியுமா என்று தெரிந்து கொள்வதற்கே இவற்றை தெரிந்து கொள்ளவேண்டும். இவை லோக க்ஷேமத்துக்குப் பிரயோஜனப்படுமா என்று தெரிந்து கொள்வதற்காகவே கற்றறிய வேண்டும். அல்லது இவற்றில் தப்பு இருந்தால் அதை எடுத்துச் சொல்லி நாம் திருத்துவதற்கும் இவற்றில் நமக்கு ஆழ்ந்த அறிவு இருந்தால்தானே முடியும்? அதற்காகவாவது, குமாரிலபட்டர் பௌத்த தத்வங்களை கண்டிப்பதற்கே பௌத்த வேஷம் போட்டு அதன் ரஹஸ்ய சாஸ்திரங்களை படித்த மாதிரி நாம் மாடர்ன் ஸயன்ஸைப் படிக்க வேண்டும். அதில் நல்லதாகவும் பல அம்சம் இல்லாமலில்லை.

"களவும் கற்று மற" என்றார்கள். முதலில் நம் ஸமயாசாரங்களால் நல்லொழுக்கங்களைப் பாறை மாதிரி உறுதிப்படுத்திக் கொண்டுவிட்டால், அப்புறம் எதுவும் நம்மைக் கெடுக்க முடியாது என்ற நிச்சயத்துடன் கெட்டதோ, நல்லதோ எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு மற்றவர்களுக்கு நல்லது கெட்டதுகளை எடுத்துச் சொல்லலாம். ஆகையால் knowledge -க்கு (அறிவை வளர்த்துக் கொள்வதற்கு) முன்னால் character (ஒழுக்கம்) அவசியம். இல்லாவிட்டால் அறிவு கெட்டதற்கு apply ஆகி, கெட்டதுகளை வளர்க்கும். முதலில் வரவேண்டிய இந்த ஒழுக்கம் மதாநுஷ்டானத்தால் தான் வரும்.

உபவேதங்கள், மற்ற வித்யைகள், விஞ்ஞானங்கள் யாவும் லௌகிகத்துக்கும் அறிவுக்கும் மட்டுமே பிரயோஜனமானாலும் இவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். Basic -ஆக [அடிப்படையாக] தெய்வபக்தியும், ஸமயாநுஷ்டானங்களும் இருந்துவிட்டால் அறிவுக்கும் மனோவளர்ச்சிக்கும் ஏற்பட்ட விஞ்ஞானங்களையும் கலைகளையும் தெரிந்து கொள்வதுகூட அந்த அறிவையும் மனஸையும் நன்றாக வளர்த்து சுத்தப்படுத்தவே உதவும். அப்புறம் இவற்றைத் தாண்டி ஆத்மாவிலேயே ஆணி அடித்த மாதிரி நிற்க, ஆரம்பத்தில் இவையே உபாயமாயிருக்கும்.

பிறகு போகவே முதலில் வேண்டும்

பிறகு போகவே முதலில் வேண்டும்

உபவேதங்கள் மட்டுந்தானா என்ன? கர்மாக்கள் அத்தனையும் – தர்மசாஸ்திரம் சொன்ன அத்தனை விஷயங்கள், வேதத்தின் கர்மகாண்டத்திலேயே உள்ள அநுஷ்டானங்கள் எல்லாமும் கூட – முடிவிலே அடிபட்டுப் போகிறவைதான். ஆனால் அந்த முடிவிற்குப் போவதற்கே அடிமட்டத்தில் அவை வேண்டும். இத்தனை படிப்பதும், பார்ப்பதும், அறிவும், அநுபவிப்பதும், அநுஷ்டிப்பதும் பரமாத்மாவை தெரிந்து கொள்வதற்கு வழியாகத்தான்.

கற்றதனால் ஆய பயன் என் கொல் – வாலறிவன்

நற்றாள் தொழாஅர் எனின்?

என்று திருவள்ளுவரும் கேட்கிறார். அந்த goal (லக்ஷ்யம்) எந்நாளும் மறக்கக்கூடாது. அதை மறந்து விட்டால், வித்யைகளைப் பயிலுவது மட்டுமின்றி, வைதிக கர்மாக்களும், பூஜையும், க்ஷேத்ராடனம் தீர்த்தாடனம் செய்வதும்கூடப் பிரயோஜனம் இல்லை. எங்கேயும் நிறைந்த பரம்பொருளிடம் மனஸார நாட்டமில்லாவிடில் இவை எதுவும் பிரயோஜனமில்லை என்று அப்பர் ஸ்வாமிகள் சொல்கிறார்.

கங்கை யாடிலென்? காவிரி யாடிலென்?

கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்?

ஒங்கு மாகட லோதநீ ராடிலென்?

எங்கு மீசன் எனாதவர்க் கில்லையே!

அப்பர் ஸ்வாமிகள் சொல்கிற மாதிரியேதான் பகவத் பாதாளும் 'பஜகோவிந்த'த்தில்

குருதே கங்கா ஸாகர கமனம்

என்று கங்கையில் ஆரம்பித்து,

வ்ரத பரிபாலனம் அதவா தானம்

ஞான விஹீன:ஸர்வமதேன

முக்திம் ந பஜதி ஜன்மசதேந

என்கிறார். எங்குமாய் எல்லாமாய் இருக்கிற பரமாத்ம ஞானத்துக்கு ஆசைப்படாமல் கங்கா ஸங்கமத்தில் ஸ்நானம் செய்வதாலும், விரதங்களை அநுஷ்டிப்பதாலும், தானங்கள் பண்ணவதாலும் நூறு ஜன்மா எடுத்த பின்பும் முக்தி கிடைக்காது என்கிறார்.

அப்பரும், ஆசார்யாளும் சொன்ன இதே கங்கையைப் பற்றிய பிரஸ்தாவம் இவ் விஷயமாகவே "மநுஸ்மிருதி" யிலும் வருகிறது. தீர்த்தங்களில் கங்கை மாதிரி, க்ஷேத்திரங்களில் குரு க்ஷேத்ரம். இந்த இரண்டையும் சேர்த்து மநு சொல்கிறார்:

யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதி ஸ்தித:|

தேன சேதவிவாதஸ்தே மா கங்காம் மா குரூன் கம:||

யமனுக்கு வைவஸ்தன் என்றும் பெயர். அவனுக்கே தர்மராஜா என்றும் பெயரல்லவா? அதனால் இங்கே 'யமோவைவஸ்வதோ ராஜா' என்பதற்கு 'தர்மம்' என்று பொருள் கொள்ள வேண்டும். "தர்மம் ஒருத்தனுடடைய ஹ்ருதயத்தில் குடி கொண்டு விட்டாலே போதும். அவனுடைய பாபமெல்லாம் போய் விடுகிறது. அவன் பாப

நிவிருத்திக்காக கங்கைக்கும் குரு க்ஷேத்ரத்துக்கும் ஓட வேண்டியதே இல்லை" என்பது ச்லோகத்தின் கருத்து.

பக்குவம் வந்து விட்டால் சாஸ்திரம் வேண்டாம், க்ஷேத்திரம் வேண்டாம், தீர்த்தம் வேண்டாம். அந்த நிலையில் வேதமே வேதமில்லை, தேவர்களே தேவர்களில்லை என்று உபநிஷத்தே சொல்கிறதே!*

அதற்காக அப்பரும், ஆசாரியாளும், மநுவும் பக்தி, கர்ம அநுஷ்டானங்களை ஆக்ஷேபித்தார்கள் என்று தப்பர்த்தம் செய்து கொள்ளக் கூடாது. இவற்றைச் செய்யும்போதே 'இவற்றை விட்டு விட்டுப் போகிற காலமும் வரவேண்டும் – அல்லது சரியாகச் சொன்னால், இவை நம்மை விட்டுப் போகிற காலமும் வரவேண்டும். அப்படி வந்து நாம் பரமாத்ம ஸத்யம் ஒன்றிலேயே கரைந்து இருக்க வேண்டும்' என்ற எண்ணத்தோடு பண்ண வேண்டும் என்று அர்த்தம்.

"கங்கா ஸாகரத்துக்கு ஏன் போக வேண்டும்?" என்று கேட்ட அதே ஆசார்யாள்தான் ஒரு க்ஷேத்ரம், ஒரு தீர்த்தம் பாக்கியில்லாமல் தேசம் நெடுக ஸஞ்சாரம் பண்ணியும் நமக்கு வழி காட்டியிருக்கிறார். வியாகரணத்தையும் அதையும் இதையும் படித்து என்ன பிரயோஜனம் என்று 'பஜ கோவிந்தம்', 'சிவாநந்த லஹரி' முதலியவற்றில் அவர் சொன்னாலும், அவர் தெரிந்து கொள்ளாத சாஸ்திரமில்லை: 'ஸர்வக்ஞ' பட்டமே பெற்றவர் அவர்.

ஆசார்யாளுக்கு எல்லாக் கலையும் தெரியுமா என்று பார்ப்பதற்காக ஒரு சக்கிலியன் பரீக்ஷை பண்ணினானாம். 'செருப்பு தைக்க வருமா?' என்று அவரைக் கேட்டானாம். உடனே அவர் ஊசியை மூக்கின்மேலே தேய்த்துக் கொண்டு விட்டு, வெகு நேர்த்தியாகச் செருப்புத் தைக்க ஆரம்பித்து விட்டாராம். மூக்குத் தோல் மேல் ஊறும் ஒரு திரவம் ஊசியில் படுவதால் அது செருப்புக்குள் சுலபமாகத் துளைத்துக் கொண்டு போகும் என்பதால் சக்கிலியர் அப்படித்தான் தேய்த்துக் கொள்வார்களாம். அப்படியே பண்ணி அந்தத் தொழிலாளியிடம் 'ஸர்ட்டிஃபிகேட்' வாங்கினதில் ஜகதாசாரியர்களும் பெருமைப் பட்டார்களாம்!

இதே மாதிரி இன்னொரு கதை உண்டு. மாட்டின் முதுகில் ஏதாவது பட்டால் அது சிலிர்த்துக் கொண்டு முதுகில் சுழி சுழியாகப் பரவுமே!அதே மாதிரி ஒரு பெரியவர் ராஜ சபையில் சுழித்துக் கொண்டு காட்டினாராம். ராஜா பீதாம்பரம் போர்த்தினானாம். அதே ஸமயத்தில் ஒரு கோனார் இந்த வித்தைக்கு ஸபாஷ் போட்டுத் தன் மேல் போட்டிருந்த கிழிந்த கம்பளியை எடுத்து அவர் மேல் போட்டானாம். அவர் ராஜாவின் பீதாம்பரத்தைவிட மாட்டோடேயே ஜீவனம் செய்கிற இந்த கோனாரின் கிழிசல் கம்பளிதான் விசேஷமானது என்றாராம்!

இந்த இரண்டு கதைகளிலிருந்து எல்லா வித்தைகளும் தொழில்களும், அவற்றைச் செய்கிற தொழிலாளிகளும் கலைஞர்களும் பெற்றிருந்த உயர்ந்த மதிப்பு தெரிகிறது.

ஒரு நிலையில் எல்லாம் வேண்டும். அப்புறம் அவை போய்விட வேண்டும்.

"யாக்ஞவல்க்ய ஸ்ம்ருதி"யில்

க்ரந்தமப்யஸ்ய மேதாவீ ஞான விஞ்ஞான தத்பர:|

பலாலமிவ தான்யார்த்தீ ஸர்வ சாஸ்த்ரம் பரித்யஜேத்:||

என்று இருக்கிறது. பார்த்துப் பார்த்து ஒருத்தன் நெல்லைப் பயிர் பண்ணுகிறான். அந்தக் கதிர் புஷ்டியாக வளர எத்தனை உண்டோ அத்தனையும் பண்ணுகிறான். அப்புறம் அறுவடை காலத்தில் என்ன செய்கிறான்? போரடித்துத் தான்ய மணிகளை மட்டும் பொறுக்கிக் கொண்டு அந்த கதிரை வெறும் வைக்கோல் என்று தள்ளிவிடுகிறான். இப்படித்தான் ஸர்வ சாஸ்திரங்களையும் படித்தும் அநுஷ்டித்தும் நெல் கதிரைப் போல் நன்றாகப் பேணிய பின், ஞானம் என்கிற பலனான தானியம் உண்டாகி முதிர்ந்த பிறகு, அத்தனை சாஸ்திரங்களையும் வைக்கோலாகத் தள்ளிவிட வேண்டும் என்பது தாத்பரியம்.

தானியமணிக்காகத்தான் இதைப் பயிரிடுகிறோம் என்று ஒரு விவஸாயிக்கு அடியிலிருந்து நினைவிருப்பது போல், நம்முடைய முடிவான பலன் ஆத்ம ஞானந்தான் என்பதை மறக்காமல் ஸகல

சாஸ்திரங்களையும் ஸயன்ஸ்களையும் தெரிந்து கொண்டு, ஸகல அநுஷ்டானங்களையும் செய்ய முயலவேண்டும். இதுதான் நாம் வளர்க்கிற கதிர். அதற்குத்தான் விதையாவது போட வேண்டும் என்றே இவ்வளவு சொல்கிறேன்.

பதினாலு வித்யை, பதினெட்டு வித்யை பற்றிச் சொன்னதெல்லாம் இதற்குத்தான். இந்த பதினெட்டு வித்யைகளும் த்வைத, அத்வைத, விசிஷ்டாத்வைத, சைவ ஸித்தாந்த வித்யாஸங்களில்லாமல் ஹிந்துக்கள் என்ற பெயருள்ள அனைவருக்கும் பொதுவானவை. இவற்றிலே முதல் நாலு வித்யைகளான வேதங்களில் வருகிற உபநிஷத்துக்களுக்கு இந்த ஒவ்வொரு ஸித்தாந்த ஆசாரியரும் பண்ணின வியாக்யானங்களில்தான் வித்யாஸங்கள் வருகின்றன. அஷ்டாதச [பதினெட்டு] வித்தைகள் வித்யாசமில்லாமல் எல்லோருக்கும் பொதுவானவையே.

இவற்றில் வராவிட்டாலும் 'யோகம்' என்று ஒன்று இருக்கிறது. கர்மா, பக்தி, ஞானம் எல்லாமே யோகம்தான் என்றாலும் மனஸை அடக்குவதற்கென்றே அஷ்டாங்க யோகம் என்று ஒன்று இருக்கிறது. ராஜயோகம் என்று அதைச் சொல்வார்கள். அது பதினெட்டு வித்யையில் வராவிட்டாலும் ஸாங்கியம் – யோகம், நியாயம்–வைசேஷிகம், மீமாம்ஸை–வேதாந்தம் என்று இரண்டிரண்டாகப் பிரிந்த ஷட்–தரிசனம் என்ற ஆறு சாஸ்திரங்களில் வருவது.

இது தவிர சைவர், வைஷ்ணவர், சாக்தர் முதலியவர்களின் வழிபாட்டுக்கு ஆதாரமாக தந்திர சாஸ்திரங்கள் என்பனவும், ஆகம சாஸ்திரங்கள் என்பனவும் உள்ளன. நம் தேசத்தின் மத வாழ்வுக்கும், ஸமுதாய வாழ்வுக்கும் மையக் களமாகியுள்ள கோவில் நிர்மாணம், ஆலய வழிபாட்டு முறைகள் முதலியன ஆகமங்களில் இருப்பவையே ஆகும்**.

இவற்றில் எவ்வளவுக்கெவ்வளவு தெரிந்து கொள்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நம் மத அறிவு விசாலமாகும். நம் சாஸ்திரங்கள் மஹா சமுத்திரம் மாதிரி இருக்கின்றன. முடியுமட்டில் இவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு பக்கம் சாஸ்திர நம்பிக்கையுள்ள கட்டுப் பெட்டிகள், மறுபக்கம் நவீனக்கல்வி படித்தவர்கள் என்று பிரிந்திருப்பதே தவறு. சாஸ்திரங்களில் நம்பிக்கை மட்டுமல்லாமல், நாமே எல்லா சாஸ்திரங்களையும், வித்யைகளையும் படித்தால் கட்டுப்பெட்டிகளாக இருக்க வேண்டியதேயில்லை. அதனால் அவற்றையும் படித்து, மாடர்ன் ஸயன்ஸ்களையும் படித்து, இந்த ஸயன்ஸிலும் நிறை அம்சங்கள் நம் சாஸ்திரங்களில் இருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதே மாதிரி ஸயன்ஸ்காரர்களும் சாஸ்திரங்களைப் படித்து புரிந்து கொள்ள வேண்டும் என்பது என் ஆசை. இதற்காக பகவானைப் பிரார்த்தனை பண்ணுகிறேன். ஒன்றுக்கொன்று 'காம்ப்ளிமென்டரி' யாக பழசும் புதிசும் இட்டு நிரப்பிக் கொள்ள வேண்டும்.

நானும் சரி, மற்றவர்களும் சரி எவ்வளவு பேசினாலும் லெக்சரால் கல்சர் (கலாசாரம்) வளராது. படிப்பதாலும் வளராது. நமக்கென்று காரியத்தில் பின்னி வைத்திருக்கிற அநுஷ்டானங்களைப் பண்ணினால்தான் சித்த சுத்தி ஏற்பட்டு, நாம் படிப்பதில் ஸாரம் எது என்று புரிந்து கொண்டு அதைக் கிரஹித்துக் கொண்டு கல்சரை வளர்க்க முடியும். பிற தேச விஷயங்களில் எதை எடுத்துக் கொள்வது என்று பரிசீலித்து முடிவு செய்வதற்கு அஸ்திவாரமாக முதலில் நம் சாஸ்திரப்படி வாழ முயற்சி பண்ண வேண்டும்.

இக்காலத்தில் ஆஹாரம், விஹாரம், வாஹனம் எல்லாமே மாறித்தான் விட்டது. அத்தனையும் நம் பண்பாட்டுப்படி மாற்ற முடியுமா என்று மலைப்பாயிருந்தாலும், கொஞ்சம் strain பண்ணிக்கொண்டாவது [சிரமப்படுத்திக் கொண்டாவது] சிலதையாவது மாற்ற ஆரம்பிக்கத்தான் வேண்டும். நம் மதத்துக்கு ஆதாரமான ஆசாரங்கள், ஆஹார சுத்தி முதலியவை, பழக்கத்தில் இருந்தால்தான் போஷிக்கும். முதலில் லெக்சராகவும் அப்புறம் லைப்ரரியில் புஸ்தகமாகவும் மட்டும் இருந்தால் வெறும் வறட்டுப் பெருமை தவிரப் பிரயோஜனமில்லை.

நான் சொல்கிறபடி மாறுவது ஒன்றும் பெரிய கஷ்டமில்லை. ஒரே ஒரு அம்சத்தை மட்டும் நாம் பிடிவாதமாக மாற்றிக் கொண்டு

விட்டால் இது ஸாத்யம் தான். "பணம் தான் பிரதானம்" என்பதே அந்த அம்சம். பணமே குறி என்று நாம் இறங்கின பிற்பாடுதான் ஆசாரங்கள், வித்யா ஞானம் எல்லாமே போய்விட்டன. நம் தேசத்தில் பணம் முக்யமாய் இருந்ததேயில்லை. லௌகிக வாழ்க்கையை ஆத்ம அபிவிருத்திக்கு உபாயமாக மட்டும் வைத்துக் கொள்வதுதான் நம்முடைய தேசாசாரம்.

வித்யை பணத்தையும் கொடுக்கும் -- 'அர்த்தகரீ ச வித்யா' என்று சொல்லியிருக்கிறது. நாமோ நமக்குப் பணத்தைத் தருவது மட்டுமே வித்யை, பணம் சம்பாதிப்பதற்கே வித்யை -- "அர்த்தகரீ ஏவ வித்யா" என்று பண்ணிக் கொண்டிருக்கிறோம். இந்த எண்ணம், பணப் பேராசை போய் விட்டால் சாஸ்திரோக்தமான ஆசாரங்களோடு வாழ்ந்து எல்லா வித்யைகளையும் சாஸ்திரங்களையும் ஆர்வத்தோடு படித்து, விவேகத்தோடு ஸாரத்தைக் கிரஹித்துக் கொண்டு நாமும் வளர்ந்து நம் பண்பாட்டையும் வளர்த்து வாழ்விக்க முடியும். இப்படி நம் தேசம் பூர்வத்தில் இருந்தபடி லோகத்துக்கு வழி காட்டியாக இருப்பதற்கு எல்லோரும் அடக்கத்தோடு பகவானைப் பிரார்த்தனை பண்ணிக் கொண்டு, நம்மாலான பிரயத்தனங்களைப் பண்ணுவோம்.

* ப்ருஹதாரண்யகம் IV.3.22.

** ஷட்தரிசனங்கள் குறித்து இந்நூலிலேயே ஆங்காங்கு விவரங்கள் உள்ளன. "தெய்வத்தின் குரல்" ஐந்தாம் பகுதியில் "ஸ்ரீ சங்கர சரிதம்" என்ற பேருரையிலும் அவை பேசப்படும். 'யோகம்' குறித்தும், 'ஆகமம்' குறித்தும் ஸ்ரீ மஹா பெரியவர்களின் விரிவுரைகள் பிற பகுதிகள் உருவாகையில் இடம் பெறும்.

ஜாதிமுறை

நவீனர்களின் கருத்து

ஜாதி முறை*

நவீனர்களின் கருத்து

நம் மதத்தில் பிராம்மணர், க்ஷத்ரியர், வைச்யர், சூத்ரர் என்று நான்கு வர்ணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த வர்ணங்களை நாம் ஜாதி என்கிறோம்.

வாஸ்தவத்தில் ஜாதி வேறே, வர்ணம் வேறே, வர்ணங்கள் மேலே சொன்ன நாலுதான். இதற்குள்ளேயே ஒவ்வோன்றிலும் பல ஜாதிகள் இருக்கின்றன. நாலாம் வர்ணம் ஒன்றிலேயே முதலியார், பிள்ளை, ரெட்டி, நாயக்கர், நாயுடு, கவுண்டர், படையாட்சி என்கிற மாதிரி எத்தனையோ ஜாதிகள் இருக்கின்றன.

இருந்தாலும் பொது வழக்கில் வர்ணம் என்று சொல்லாமல் ஜாதி என்றே சொல்லுவதால், நானும் இந்த இரண்டிற்கும் வித்யாஸம் பார்க்காமல் வர்ணத்தையும் ஜாதி என்றே சொல்லிக்கொண்டு போகிறேன்.

நான்கு ஜாதிகளுக்கும் (அதாவது வர்ணங்களுக்கும்) சாஸ்திரங்களில் வெவ்வேறு விதமான கர்மாக்களையும் ஆசாரங்களையும் விதித்திருக்கிறது. இதனால் ஒரே மதஸ்தரிடையிலேயே ஏகப்பட்ட வித்தியாஸங்கள் உள்ளன. ஒருவர் சமைத்ததை இன்னோருத்தர் சாப்பிடக்கூடாது. ஒருத்தரோடு ஒருத்தர் கல்யாணம் பண்ணிக் கொள்ளக்கூடாது. ஒருவர் செய்யும் காரியத்தை மற்றொருவர் செய்யக்கூடாது என்று இப்படி எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன.

நாலு வர்ணம் என்று பெயரளவில்தான் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஆயிரக்கணக்கான பிரிவுகள் இருக்கின்றன. இன்னும் பல பிரிவுகள் உண்டாகிக் கொண்டே இருக்கின்றன. இப்படி, இந்த ஹிந்து மதமானது ஒரு விசித்ரமான மதமாக இருக்கிறது.

லோகம் முழுவதற்கும் பொதுவாக இருந்தது இந்த ஒரே மதம் என்று அவ்வளவு பெருமைப்படும் படியான நம் மதத்தில் ஒன்றுக்கொன்று ஒரே வித்தியாசமாக இருப்பதைப் பார்த்தால் இந்தக் காலத்தவருக்கு ரொம்பச் சிறுமையாக, அவமானமாக இருக்கிறது. மற்ற மதங்களிலும் இத்தைச் செய்ய வேண்டும் என்ற விதிகளும், இத்தைச் செய்யக்கூடாது என்ற நிஷேதங்களும் உண்டு. ஆனால் அந்த

மதங்களிலுள்ள எல்லோருக்கும் ஒரே விதமான விதிகள், ஒரே விதமான விலக்குகளே உண்டு. Ten Commandments [பத்துக் கட்டளைகள்] என்றால் அது கிறித்துவ மதத்தில் அத்தனை பேருக்கும் தான் பொது. சிலருக்கு அவை உண்டு, சிலருக்கு இல்லை என்று இல்லை. குரான் விதிகளும் இப்படியே. நமக்குள்ளேயோ ஒரே மதமாக இருந்தாலும் விதிகளும் நிஷேதங்களும் பல வகைகளாக இருக்கின்றன. ஒரு காரியத்தை ஒருவன் செய்தால் தர்மமாகிறது. அதையே வேறோருவன் செய்தால் அதர்மம் என்கிறோம். ஒருத்தன் பூணூல் போட்டுக் கொண்டு வேதம் சொன்னால் தர்மம், இன்னொருத்தன் இதைப் பண்ணினால் அதர்மம். வேதம் சொல்கிறவன் ஸ்நானம் பண்ணி வயிற்றைக் காயப்போடாவிட்டால் அதர்மம். மற்றவன் ஸ்நானம் பண்ணவேண்டுமென்றில்லை. உபவாஸமிருக்க வேண்டும் என்றில்லை. இப்படி ஏகப்பட்ட வித்தியாசங்களோடும் நம் மதம் உயிரோடிருப்பதை பார்த்தால் ஒன்று தோன்றுகிறது. ஒரு பெரியவர் ஒரு பெரிய ஆச்சரியத்தை சொல்லுகிறார். நாமெல்லாம் மரணமடைவது ஆச்சரியமில்லை. இந்த உடம்பில் ஒன்பது ஓட்டைகள் இருந்த போதிலும் அவற்றின் வழியாக உயிரானது வெளியே போகாமல் நிற்கிறதே. அதுதான் பெரிய ஆச்சரியம். என்று அவர் சொல்லுகிறார்.

நவத்வாரே சரீரே (அ)ஸ்மின் ஆயு: ஸ்ரவதி ஸந்ததம் |

ஜீவதீத்யத்புதம் தத்ர கச்சதீதி கிம் அத்புதம் ||

அதைப்போலப் பலவிதமான ஸந்தேஹங்களுக்கும் வித்தியாசங்களுக்கும் இடமான இந்த மதமானது எவ்வளவோ யுகங்களாக இன்னும் உயிருடன் இருக்கிறதே என்பதை நினைத்துதான் ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது!

வேதத்தை விட்டால் சிலருக்குப் பாபம், வேதம் சொன்னால் சிலருக்குப் பாபம் என்பதைப் போல இவ்வளவு வித்தியாசங்களும் பக்ஷபாதங்களும் ஏன் நம் மதத்தில் மட்டும் இருக்கின்றன என்று தோன்றுகின்றது. இந்த விஷயங்களையெல்லாம் நாம் சொல்லிக் கொள்வது அவமானமாக இருக்கிறதென்று நாம் நினைக்கிறோம். இவை தொலைந்தால் நல்லதென்று நாம் நினைக்கிறோம். இந்த

வித்தியாசங்கள், பல நல்ல அம்சங்களுடைய நமது மதத்துக்குக் களங்கமாக இருக்கின்றன என்று பலர் சொல்லுகிறார்கள். இப்படிப் பலபேருக்கு இந்த விஷயங்கள் மனதில் உறுத்திக்கொண்டே இருக்கின்றன. சில பேர் ஏதாவது தெரிந்து சமாதானப் படுத்திக் கொள்கின்றார்கள். சில பேர் சில ஸமயங்களில் இந்த மாதிரி வித்தியாசங்களைப் பார்த்து ஆத்திரமடைந்து நாஸ்திகர்களாகி, இவற்றை எடுத்துக் காட்டி உறுத்தி உறுத்தி சொல்கின்ற போது அப்படிப் போகாத நமக்கு மனஸ் ரொம்பவும் கஷ்டப்படுகிறது.

இம்மாதிரி ஸமயங்களில் உள்ளூர மதாபிமானம் உள்ளவர்கள், இந்த வர்ண தர்மத்தை மட்டும் எடுத்துப் போட்டுவிட்டு, எல்லா ஜாதிகளையும் ஒன்றாக்கிவிட்டு, மற்ற மதஸ்தர்களைப் போலவே நாமும் ஆகிவிட்டால் நன்றாக ஆகிவிடும் என்கிறார்கள். "வேதமோ, ஈச்வர ஆராதனமோ எல்லாவற்றையும் எல்லோருக்கும் ஒன்றாக்கி விடலாம். வெவ்வேறு ஆசாரம், அனுஷ்டானம் என்பதே வேண்டாம்" என்கிறார்கள். இன்னும் கொஞ்சம் அதிகமாகப்போய் "நம்முடைய பூர்விகர்கள் கொள்கையே இதுதான். ஜீவாத்மாவும் பரமாத்மாவுமே ஒன்று என்று சொன்ன நம் மூல புருஷர்கள் ஜீவர்களுக்குள்ளேயே இத்தனை பேதம் சொல்லியிருப்பார்களா? அவர்களும் சரி, கீதையில் கிருஷ்ண பரமாத்மாவும் ஸரி, ஜீவர்கள் தங்கள் தங்கள் குணத்துக்கு ஏற்றபடி தொழில்களை நாலுவர்ணமாகப் பிரித்துக்கொண்டு செய்வதைத்தான் சொன்னார்களை தவிர பிறப்புப்படி ஜாதித்தொழில் வருவதாகச் சொல்லவில்லை" என்றெல்லாம் சொல்லி நம் மதத்தில் களங்கம் என்று இவர்களுக்குத் தோன்றுகின்ற பாரம்பரியமான ஜாதிமுறையை மூலத்தில் நம் மதத்தில் இல்லாமல், பிற்பாடு சேர்ந்து விட்ட தப்பான விஷயந்தான் என்கிறார்கள்.

இதையெல்லாம் இப்போது கொஞ்சம் அலசி, ஆலோசித்துப் பார்ப்போம்.

* ஜாதி முறைகளை ஏற்படுத்தும் வர்ண தர்மம் குறித்த விரிவான விளக்கத்தை "தெய்வத்தின் குரல்" முதற் பகுதியில் "வைதிக மதம்" என்ற பிரிவிலுள்ள உரைகளில் காண்க. இவ்விரண்டாம் பகுதியிலும் இது தொடர்பான விவரங்கள் விரவி வந்துள்ளன.

வேதம், கீதை இவற்றின் கருத்து

வேதம், கீதை இவற்றின் கருத்து

வேதத்திலேயே பிறப்பால் ஜாதி என்பதில்லை என்கிற வாதத்தை முதலில் பார்த்து விடலாம். மூலம் வேதமாச்சே. அதனால் இவ்விஷயத்தை முதலில் தெளிவாக்கிக் கொண்டுவிட வேண்டும். இப்படி வாதம் பண்ணுவது, ப்ரௌடா விவாஹந்தான் [பெண்கள் வயதுக்கு வந்த பிறகு விவாஹம் செய்வதுதான்] வேத ஸம்மதமானது என்று வாதத்தைப் பற்றி சொன்னேனே, அதே மாதிரியானது. அதாவது, Context - ம் Continuity- ம் [சந்தர்ப்பத்தையும், தொடர்ச்சியையும்] பார்க்காமல் ஏதோ ஒரு பாகத்தை மட்டும் பார்த்து, அதுவே பொது விதி என்று விபரீதமாக அர்த்தம் பண்ணிக் கொள்வதைச் சேர்ந்ததுதான் இது.

பிறப்பைக் குறித்தே ஜாதி, குணத்தைக் குறித்ததல்ல என்பதற்கு அழுத்தமாக ஒரு Proof (நிரூபணம்) சொல்கிறேன். மூன்று வயசில் செய்கிற சௌளம் (குடுமி வைத்தல்) , ஐந்து அல்லது ஏழாம் வயதில் பன்னுகின்ற உபநயனம் முதலானதுகளே ஜாதியைப் பார்த்து அதன்படி பண்ணுகிற ஸம்ஸ்காரங்கள்தான். இப்படி அதி பால்யத்திலேயே வெவ்வேறு ஜாதிகளுக்கான ஸம்ஸ்காரங்களில் வித்தியாசமிருப்பதால், குணத்தைப் பார்த்தே ஒருத்தனின் தொழில் நிர்ணயிக்கப்படுவதுதான் மூலசாஸ்திரங்களின் நோக்கம் என்பது அடியோடு அடிபட்டுப் போகிறது. அத்தனை சின்ன வயசுக்குள் ஒருத்தனின் குணத்தை நிர்ணயம் பண்ண முடியுமா?

கீதை விஷயத்தைப் பார்க்கலாம். "ஸமதர்சனம்" (எல்லாவற்றையும் சமமாகப் பார்ப்பது) என்று கீதையில் (V.18) சொல்லியிருப்பது வாஸ்த்தவம். இதனால் ஜாதி வித்யாசமில்லை என்று அர்த்தம் பண்ணுவது அனர்த்தம்தான். கிருஷ்ண பரமாத்மா எந்த நிலையில் இந்த ஸமத்துவம் வருகிறது என்கிறார்? அந்த Context ஐப் பார்க்கவேண்டும். ஸகல கார்யங்களும், லோக ஸ்ருஷ்டியும், ஈஸ்வரன் ஸ்ருஷ்டிகர்த்தா என்பதுங்கூட அடிபட்டுப் போய் ஆத்ம நிஷ்டனாக இருக்கிற ஞானியின் நிலையே அது என்கிறார். கர்மாவைவிட்டு ஸந்நியாசியாகி ஒருவன் முடிவான நிலைக்குப் போகிறபோது அவனுக்கு எல்லாம் சமமாகி விடுகிறது என்றார். வேத

உபநிஷதங்களும் இதையே சொல்கிறது. உச்சியான அந்த நிலையில்தான் ஸமம். காரிய லோகத்தில் இல்லை. காரியம் பண்ணுகிற நமக்கும் அல்ல. ஸம தரிசனம், சம சித்தம், ஸம புத்தியின்படி யோகியின் பார்வையில்தான் பகவான் சமத்துவத்தை சொன்னாரேயன்றி, அவனால் பார்க்கப்படுகின்ற இந்த லோகத்தில் ஸம காரியத்தவம் என்று அவர் தப்பித் தவறிக்கூட கூறியதில்லை.

"ஜாதி வித்தியாசமே இல்லை என்று பகவான் சொல்லவில்லை. ஆனால் பிறப்பின்படியன்றி, குணத்தின்படி கர்மாவைப் பிரித்துத் தரும் சதுர்வர்ணத்தைத் தாம் ஸ்ருஷ்டித்ததாகத்தான் சொல்கிறார். 'சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம் குணகர்ம விபாகச:' என்றே சொல்லியிருக்கிறார்"* என்கிறார்கள்.

சரி, ஆனால் எத்தனை வயசுக்கு மேல் இப்படி குணத்தை அறிந்து அதை அநுசரித்து அதற்கான வித்யையைப் பயின்று அதற்கப்புறம் தொழிலை அப்பியாசம் பண்ணுவது? முக்கியமாக பிராம்மணர்களின் தொழிலை எடுத்துக் கொண்டால், இவன் ஏழெட்டு வயஸுக்குள் குருகுலத்தில் சேர்ந்தால்தானே அப்புறம் பன்னிரண்டு வருஷங்களில் தன் தொழிலுக்கானவற்றை படித்துவிட்டுப் பிறகு அவற்றில் தானே அநுஷ்டானம் பண்ண வேண்டியதைப் பண்ணவும், பிறருக்குப் போதிக்கவேண்டியதை போதிக்கவும் முடியும்? குணம் form ஆன பிறகு (ஓர் அமைப்பில் உருவான பிறகு) தான் தொழிலை நிர்ணயிப்பது என்றால், கற்க வேண்டிய இள வயசு முழுதும் பலபேர் தொழிலை தெரிந்து கொள்ளாமல் வீணாவதாகவும், அப்புறம் சோம்பேறியாக ஒரு தொழிலுக்குப் போகப் பிடிக்காமல் இருப்பதாகவுமே ஆகும். அப்படியே கற்றுக் கொண்டு தொழிலுக்குப் போகும் போதும் ஸமூகத்திற்கு அவனால் கிடைக்கின்ற பிரயோஜனத்தில் வெகுவான காலம் நஷ்டமாகியிருக்கும். க்ஷணகாலம் கூட வீணாக்காமல் ஒழுங்காக, விதிப்படி கர்மா பண்ணிக்கொண்டே இருக்க வேண்டும் என்று திருப்பி திருப்பிச் சொல்லும் பகவான் இதை ஆதரித்துப் பேசியிருப்பாரா?

"அப்படியானால் அவர் 'தியரி'யில் [கொள்கையளவில்] குணப்படித் தொழில் என்றாலும், 'ப்ராக்டிஸில்' [நடைமுறையில்] பிறப்பால் தொழில் என்பதைத்தான் ஆதரித்தாரா?" என்றால், பாலிடீஷியன்கள்

[அரசியல்வாதிகள்] போல பகவான் கொள்கை ஒன்று, காரியம் இன்னோன்று என்று இருப்பவர் அல்ல.

சரி, அவருடைய வாழ்க்கையில் நாம் என்ன பார்க்கிறோம். "நான் யுத்தம் பண்ண மாட்டேன். பந்து மித்ரர்களின் ரத்தத்தைத் சிந்தி ஸாம்ராஜ்யாபிஷேகம் பண்ணிக் கொள்வதைவிட, ஆண்டிப்பரதேசியாக பிக்ஷை எடுத்துச் சாப்பிடுவது எத்தனையோ மேல்" என்று சொல்லிக்கொண்டு தேர்த்தட்டில் உட்கார்ந்து ஸத்யாக்ரஹம் பண்ணி விட்ட அர்ஜுனனிடம் அவர் சொன்னார் "நீ க்ஷத்ரிய ஜாதியில் பிறந்தவன். யுத்தம் பண்ணுவதுதான் உன் ஸ்வதர்மம். எடு வில்லை போடு சண்டையை" என்றுதான் அவனை விடப் பிடிவாதம் பிடித்து அவனை யுத்தம் பண்ண வைத்தார்.

இங்கேயாவது ஒரு மாதிரி ஸமாதானம் சொல்லலாம். "அர்ஜுனன் மஹாரதன், மஹாவீரன். ஆனதால் அவனுக்கு பந்து மித்திரர்களைக் கொல்ல வேண்டியிருக்கிறதே என்ற பாசத்தால் Momentary -ஆக [தற்காலிகமாக] த்தான் யுத்தத்தில் வெறுப்பு உண்டாயிற்று. உள்ளூர அவனுடைய குணம், மனோபாவம், தன்னுடைய வீரத்தைக் காட்டுவதில்தான் இருந்தது. அதனால்தான் பகவான் யுத்தத்திலேயே தூண்டிவிட்டார். ஆனபடியால் அவர் ஸ்வதர்மம் என்று சொன்னது ஜாதி தர்மம் என்று ஆகாது. அவனுடைய சொந்த குணத்தை, இயற்கையான மனோபாவத்தைத்தான் ஸ்வதர்மம் என்று சொல்லி, அவனுக்கு எடுத்துக் காட்டினார்" -- என்று சுற்றி வளைத்து அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம்.

அப்படியானால் தர்மபுத்ரர் விஷயம் என்ன? சண்டையே கூடாது. ஸமாதானமாகவே போய்விட வேண்டும் என்றுதானே அவர் ஆரம்ப காலத்திலிருந்து இருந்து வந்திருக்கிறார்? தங்கள் ஐந்து பேருக்கும் ஐந்து வீடு கொடுத்து விட்டால் போதும், ராஜ்ஜியத்தில் பாதி தர வேண்டும் என்று இல்லை என்கிற அளவுக்கு ஒரேடியாக இறங்கிவந்து விட்டார் அல்லவா அவர்? அவரையும் அவருக்காக தூது போன பகவானே யுத்தத்தில்தானே இழுத்து விட்டார்? இதற்கு முந்தியும் தர்மபுத்திரரை எல்லா சிற்றரசர்களும் வென்று, ஸார்வபௌமராகும்படி பண்ணி, அவருடைய ராஜஸூய யாகத்தை பகவான்தானே முன் நின்று

நடத்தி வைத்தார்? தர்மபுத்ரர் இதற்கெல்லாமா ஆசைப்பட்டவர்? அவருடைய குணம், மனோபாவம் ஆகியன கொஞ்சங்கூட இந்த யுத்தம், ஸார்வ பௌமப் பதவி இவற்றுக்கு ஆசைப்படாததுதானே? அவரையும் பரமாத்மா க்ஷத்ரிய தர்மத்தைத்தான் அநுஷ்டிக்கப் பண்ணினார் என்றால், அவர் ஸ்வதர்மம் என்கிற போது அவரவர் ஜாதி தர்மத்தைத்தான் சொன்னார் என்று அர்த்தமாகும். பிராம்மணராகப் பிறந்ததும் க்ஷத்ரிய தர்மப்படி யுத்தத்தில் இறங்கிய த்ரோணாச்சாரியார் மாதிரியானவர்கள் பெரியவர்கள் என்பதால் பகவானாக அவர்களை நிந்திக்க மாட்டாராயினும், பீமஸேனன் போன்றவர்கள் அவர்களை ஜாதி தர்மம் விட்டதற்காகப் குத்திக் காட்டிப் பேசிய போதெல்லாம் பகவான் ஆக்ஷேபித்ததில்லை. அதனால் பிறப்பால் ஏற்படுகின்ற ஜாதி தர்மமே அவர் சொன்ன ஸ்வதர்மம் என்று உறுதியாகிறது. "அப்படியானால் ஏன் குண கர்ம விபாகச: என்றார்?" என்றால்--

* **கீதை** IV.13

பிறப்பாலேயே குணமும் தொழிலும்

பிறப்பாலேயே குணமும் தொழிலும்.

இந்த ஜாதி மதமேதான் உள்ளூர அவரவருக்குப் பாரம்பரியமாக ஏற்பட்ட குணமாகவும் இருக்குமாதலால் குணத்தால் சதுர்வர்ணம் பிரிவதாக பகவான் சொன்னதும், பிறப்பால் இப்படி ஜாதியாகப் பிரிவதும் ஒன்றேதான், ஒன்றுக்கொன்று முரணானதல்ல. தியரி, ப்ராக்டீஸ் என்று வெவ்வேறு விஷயங்களைச் சொல்கின்ற தோஷம் பரமாத்மாவுக்கு ஏற்படவில்லை.

பரசுராமர், த்ரோணாச்சாரியார் இவர்கள் பிராம்மணராயினும் க்ஷத்ரிய குணத்தோடு இருந்தார்களே. விச்வாமித்திரர் புஜபல பராக்ரமத்தோடும் ராஜஸ குணத்தோடும் இருந்துவிட்டே அப்புறம் பிரம்மரிஷி ஆனாரே என்றால் இதெல்லாம் கோடியில் ஒன்றாக இருந்த exception கள் (விதிவிலக்கு) தான். எந்த ரூலானாலும் எக்ஸப்ஷன் உண்டோ இல்லையோ? பொதுவாக வெளிப்பட வேறு குணம் தெரிந்த போது கூட உள்ளூரப் பிறப்பாலான ஜாதித் தொழிலுக்கேற்ற குணந்தான்

இருக்கும் என்ற அபிப்ராயத்திலேயே பகவான் காரியம் பண்ணினதாகத்தான் தெரிகிறது.

அதெப்படி பிறப்பே குணத்தைத் தொழிலுக்கேற்றதாக அமைத்துக் கொடுத்தது என்றால், Individuality யுடன் [தனித்தன்மையுடன்] Heredity[பாரம்பரியம்] என்பதும் சேர்ந்தேதான் ஒரு மனுஷனை உருவாக்குகிறது என்று ஸைக்காலஜியும் சொல்கிறதல்லவா? ஒருத்தனின் குணம் உருவாகும் முன்பே அவன் தலைமுறை தத்துவமாக வந்த ஒரு தொழிலின் சூழ்நிலையிலேயே வளர்ந்து தானாகவும், கற்றுக் கொடுத்துத் தெரிந்து கொண்டும் அந்தத் தொழிலை எடுத்துக் கொண்டதால் குணமே தொழிலை அநுஸரித்து ஏற்பட்டது. 'நமக்கு என்று ஏற்பட்ட தொழில் இது' என்று அவரவரும் துராசையோ, போட்டியோ இல்லாமல் நிம்மதியாகப் பிரிந்திருந்து தொழில்களைச் செய்து கொண்டு மொத்த ஸமூஹம் ஒற்றுமையாக இருந்த காலத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலையில் பிறந்து, அதிபால்யத்திலேயே அந்தத் தொழிலைப் பார்த்து அதிலே ஒரு பற்று, aptitude உண்டானதால், பிறப்புப்படி செய்வது குணப்படி செய்வதாகவும் ஆயிற்று. இப்போது சீர்திருத்தங்கள் என்ன சொன்னாலும், பழைய ஏற்பாட்டில்தான் திறமை, குணம் இவையும் தொழிலோடு அநுஸரனையாகக் கலந்து இருந்தன. ஒருத்தன் தன் குணத்துக்கு அநுஸரனையாகத் தொழிலைச் செய்தான் என்றால் அது பழைய தர்மப்படி செய்த போதுதான் இருந்தது என்பேன். இப்போது இதைத் தலைகீழாக மாற்றித் திரித்துப் பேசுகிறார்கள்.

இப்போது மனோதத்துவத்தை ரொம்பவும் ஆராய்ச்சி செய்கிறவர்கள்கூட என்ன சொல்கிறார்கள்? ஒருத்தனின் குணத்தை, திறமையை, மனோபாவத்தை நிர்ணயம் பண்ணுவதில் heredity -க்கும் [பாரம்பரியத்துக்கும்] அவன் இருக்கிற environment -க்கும் [அதாவது] சுற்று வட்டாரத்துக்கும் மிகுந்த முக்கியத்துவம் இருக்கிறது என்கிறார்கள். பழைய நாளில் பாரம்பரியப்படிதான் அப்பன், பாட்டன், முப்பாட்டன் தொழிலை ஒவ்வொருவனும் பண்ணினான். இரண்டாவதாக, ஒவ்வொரு தொழில்காரரும் ஒரே கிராமத்தில், அக்ரஹாரம், பண்டாரவாடை, சேரி, சேணியர்தெரு, கம்மாளர் தெரு என்று, தனித்தனியாக, ஒவ்வொரு சமூகமாக வசித்தபோது

என்வைரன்மென்டும் [சுற்றுச் சூழ்நிலையும்] ஸாதகமாக இருந்தது. இந்த இரண்டு அம்சங்களும் அழுத்தமான விதத்தில் ஒருத்தனுடைய குணத்தை அவனுடைய பரம்பரைத் தொழிலுக்கு மிகவும் ஏற்றதாகச் செய்து வந்தன.

இந்த விஷயத்தை நான் சொல்வதைக் காட்டிலும் காந்தி சொன்னதை எடுத்துக் காட்டினால் சீர்திருத்தக்காரர்கள் ஒத்துக் கொள்வீர்கள். காந்தி இப்படி சொல்கிறார்.

"கீதையானது குணத்தையும் கர்மாவையும் பொறுத்தே ஒருத்தனின் வர்ணம் (ஜாதி) அமைகிறது என்று தான் சொல்கிறது. (அதாவது பரம்பரையால், பிறப்பால் அமைகிறது என்று சொல்லவில்லை) ஆனால் குணமும் கர்மாவும் பிறப்பின் மூலம் பாரம்பரியமாகப் பெறப்படுகின்றனவையே"*

ஆகையால் கிருஷ்ண பரமாத்மா கொள்கை ஒன்று, காரியம் வேறொன்று என்று முரணாகப் பண்ணவில்லை யென்பது சீர்திருத்தவாதிகள் எல்லோரும் தலைவராக ஒப்புக்கொள்ளும் காந்தியின் வார்த்தையாலேயே உறுதியாகிறது. நவீனக் கொள்கைக்காரர்கள் தங்கள் இழுப்புக்கு வேத சாஸ்திரங்களையும் கிருஷ்ண பரமாத்மாவையும் இழுத்து வளைக்கக்கூடாது.

கிருஷ்ணர் "நான் சொல்கிறேன்; நீ கேள்" என்று அடித்துப் பேசுகிறவர்தான். ஆனால் அவரே ஜனங்கள் எப்படி காரியம் பண்ணவேண்டும் என்கிறபோது "நான் இப்படிச் சொல்கிறேன் என்று சொல்லாமல் சாஸ்திரம் எப்படிச் சொல்கிறதோ அதுவே பிரமாணம்" என்று அழுத்திச் சொல்லியிருக்கிறார். அவர் காலத்திலிருந்த சாஸ்திரப்படி ஜாதிகள் பிறப்புப்படிதான் பிரிந்திருந்தன என்பது பாரத, பாகவத, விஷ்ணு புராணாதிகளிலிருந்து நிச்சயமாகத் தெரிகிறது. பிறப்பால் ஜாதி என்கிற சாஸ்திரங்களே கிருஷ்ணர் காலத்துக்குப் பிறகுதான் வந்தது என்றுகூட இக்கால ரிஸர்ச் காரர்கள் சொல்லக்கூடுமாதலால் இவ்விஷயத்தைச் சொல்கிறேன். கிருஷ்ண பரமாத்மாவின் காலத்தில் வர்ணாச்ரம விபாகங்களைச் சொல்கிற சாஸ்திரங்கள்தான் தர்மப் பிரமாணமாக இருந்தன என்று பாரத, பாகவத, விஷ்ணு புராணாதி க்ரந்தங்கள் ஸந்தேஹத்துக்கு

இடமில்லாமல் சொல்கின்றன. இவ்வாறாக பிறப்பின்படியே வர்ணவிபாகம் செய்யும் சாஸ்திரங்கள் அநுஷ்டிக்கப்பட்ட காலத்தில்தான் பகவான் ஸ்பஷ்டமாக,

ய:சாஸ்திர விதிம் உத்ஸ்ருஜ்ய வர்ததே காமகாரத:|

ந ஸ ஸித்திம் அவாப்நோதி ந ஸுகம் ந பராம் கதிம் ||

தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யா கார்ய வ்யவஸ்திதௌ |

ஜ்ஞாத்வா சாஸ்த்ர விதாநோக்தம் கர்ம கர்த்துமிஹார்ஹஸி ||

"எவன் சாஸ்திர விதியை மீறி சொந்த ஆசைகளின் வசப்பட்டு தொழிலை எடுத்துக் கொள்கிறானோ அவனுக்கு ஸித்தியில்லை, ஸுகமில்லை, கதி மோக்ஷமும் இல்லை. எந்தத் தொழில் செய்யலாம். எது கூடாது என்று வரையறுத்துக் கொள்வதற்கு சாஸ்திரம்தான் பிரமாணம். இப்படி சாஸ்திரோக்தமான வழியை உணர்ந்து அதன்படி தொழில் செய்வதற்கு உரியவனாகவே இருக்கிறாய்" என்று சொல்லியிருக்கிறார்**. இதனால் அவர் பிறப்புப்படி ஜாதி என்பதைத்தான் நிர்த்தாரணம் பண்ணுகிறார் [வலியுறுத்தி நிலைநாட்டுகிறார்] என்பதில் லவலேசமும் ஸந்தேஹமேயில்லை.

* "The Gita does talk of Varna being according to Guna and Karma but Guna and Karma are inherited by birth"

** கீதை XVI.23-24.

குணப்படித் தொழில் தேர்வு நடைமுறையில் இல்லை

குணப்படி தொழில் தேர்வு நடைமுறையில் இல்லை

"சரி, வேதமும் கிருஷ்ண பரமாத்மாவும் ஜாதி தர்மத்தைச் சொன்னால் சொல்லிவிட்டுப் போகட்டும். அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அது பக்ஷபாதமாகத்தான் இருக்கிறது. அவரவர், குணப்படி, மனோபாவப்படி தொழிலைத் தேர்ந்தெடுத்து நடத்துவதற்குத்தான் வசதி செய்து தரவேண்டுமே தவிர, ஜாதிப்படி செய்ய வேண்டும் என்று வைக்கக்கூடாது. இந்த வித்தியாஸத்தைத் தொலைத்துவிட வேண்டும்" என்று சொல்லலாம்.

இருக்கட்டும். இந்த குணம், மனோபாவம் என்பதற்கும் நவீன 'ஸெட்'-அப்பில் ஒருத்தர் எடுத்துக் கொள்ளும் தொழிலுக்கு என்ன சம்பந்தம்? நன்றாக யோசித்துப் பார்த்தால் இது இந்த காலத்தில் வேண்டுமென்றே மிகைப்படுத்திச் சொல்கிற விஷயமாகத்தான் இருக்கிறது. இந்தக் காலத்தில் எல்லோருக்கும் ரொம்ப ஸ்வதந்திரம் வேண்டியிருக்கிறது. எல்லோருக்கும் தாங்கள் பெரியவர்கள் என்ற எண்ணம் ஏற்பட்டியிருக்கிறது. அதனால்தான் தங்கள் தங்கள் மனோபாவத்தை மதிக்க வேண்டும் என்கிறார்கள். அது ஸமூகத்திற்கு உதவுகிற நல்ல மனோபாவமா, கெட்டதனால் நல்லதாக்கிக் கொள்ளவேண்டுமே, அதற்காக ஓரிடத்தில் ஸ்வதந்திரத்தை விட்டுக் கொடுத்துக் கட்டுப்பட்டிருக்க வேண்டுமே என்பதை எல்லாம் நினைக்காமல் எல்லோரும் எல்லாவற்றுக்கும் ஸ்வதந்திரம் கேட்கிறார்கள். இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

மனோபாவம் அல்லது குணத்துக்கும் தற்காலத்தில் ஒருத்தன் விரும்பும் வேலைக்கும் எந்த அளவுக்கு ஸம்பந்தம் இருக்கிறது என்று பார்த்தால் நூற்றுக்கு தொண்ணூறு சம்பந்தமேயில்லை. ரொம்பக் கொஞ்சம் பேர் விஷயத்தில்தான் குணத்துக்கும் தொழிலுக்குமிடையே சம்பந்தமிருக்கும். ரொம்பவும் வைராக்ய குணமுள்ளவன் எந்த வேலையிலும் ஒட்டாமலிருப்பான். துருதுருவென்று ப்ளான் போட்டு யோஜனை பண்ணுகிற ஸ்வபாவமுள்ளவனுக்கு மெஷின் மாதிரி வேலை செய்வதான தொழில்கள் பிடிக்காமலிருக்கும். ஆர்மிக்கு [தரைப்படைக்கு] த்தான் போவது, நேவிக்கு [கடற்படைக்கு] த்தான் போவது என்று சில பேருக்கு ஒரே ஆர்வம் இருக்கும். இன்னும் சிலபேர் கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலும் ஸைதன்யத்தில் சேருவதில்லை என்று இருப்பார்கள். எழுதுவது, பாடுவது, சித்திரம் போடுவது என்கிறவற்றில் ஆசை உள்ளவர்கள் வேறு எந்த வேலையிலும் பிடிமானம் வைக்க மாட்டார்கள்.

இப்போது நான் சொன்ன இத்தனை பேரும்–அதாவது தங்கள் இயற்கை மனோபாவப்படிதான் தொழில் பண்ணுவது என்று இருக்கிற அத்தனை பேரும்- மொத்தமுள்ள ஜன சமூகத்தில் கால்வாசிகூட

இருக்கமாட்டார்கள். பத்து பெர்சன்ட் (சதவிகிதம்) கூட இருக்க மாட்டார்கள்.

இங்கே என்னை ஒரு மடத்துக்குள் உட்கார்த்தி வைத்திருக்கிறது என்றாலும் என்னிடம் எல்லா தினுசு ஜனங்களும் வந்து அவரவர் பிரார்த்தனையை, ஆசையைச் சொல்லிவிட்டுத்தானே போகிறார்கள்? இதிலிருந்து எனக்கு தெரிவது, விசேஷமாக ஒருத்தனும் தொழிலைக் குணத்தோடு சம்பந்தப்படுத்தவில்லை என்பதுதான். ஒரு அப்பாக்காரர் வருகிறார். "பையனுக்கு எஞ்சினியர் காலேஜிலும் மனுப்போட்டிருக்கிறது. பி.காமும் போட்டிருக்கிறது. எஞ்சினியரிங் கிடைக்காவிட்டால் பி.காம் சேர்த்தாக வேண்டும். எஞ்சினியரிங்கே கிடைத்துவிட்டால் சிலாக்கியம். அநுக்ரஹம் பண்ணவேண்டும்" என்கிறார். பி.காம் படித்தால் படிக்கிற 'ஆடிட்' வேலைக்கும், எஞ்சினியரிங் படித்து சர்வே, கிர்வே பண்ணுவதற்கும் கொஞ்சமாவது சம்பந்தம் இருக்கிறதோ? ஆனால் இந்தப் பையன் இந்த இரண்டுக்கும் தயாராக இருக்கிறான். இன்னொரு பையன் வருகிறான். "இன்டர்மீடியட் ரொம்ப ஹை யாகப் பண்ணிவிட்டேன். மெடிகல் காலேஜில் சேரலாமா, எம்.ஏ. படித்துவிட்டு ஐ.ஏ.எஸ். எழுதலாமா என்று தெரியவில்லை" என்கிறான். வைத்தியத் தொழிலுக்கும் கலெக்டர் வேலைக்கும் என்ன சம்பந்தம்? குணத்தை வைத்து தொழில் என்றால் மெடிக்கல் காலேஜுக்குப் போகிறவன் எப்படி எம்.ஏ. ஐப் பற்றி நினைப்பான்?

ஒருத்தர் வக்கீலாக இருக்கிறார். அல்லது இண்டஸ்ட்ரி [தொழிற்சாலை] வைத்திருக்கிறார். அப்புறம் ஏதோ ஒரு கட்சியில் சேர்ந்து மந்திரியாகி விடுகிறார். மந்திரியாகி இருக்கிறவர்களில் வக்கீலாக இருந்தவர், அதிகாரியாக இருந்தவர், ப்ரொஃபஸராக இருந்தவர், டாக்டராக இருந்தவர் என்று பல தொழில்களில் இருந்தவர்களைப் பார்க்கிறோம். மந்திரித் தொழிலுக்கு எந்த குணங்கள் இருக்க வேண்டுமோ அது எப்படி இந்தத் தொழில்களுக்கும் வேண்டும் என்று சொல்ல முடியும்?

இப்படி பெரிய லெவலில்தான் என்று இல்லை. "ஸினிமாக் கொட்டகையில் டிக்கட் கொடுத்துக் கொண்டிருந்தேன். இப்போது

மிலிட்டரியில் சேர்ந்திருக்கிறேன், ஆசீர்வாதம் வேண்டும்" என்று ஒருத்தன் வருகிறான். ஹோட்டல் சர்வராக இருந்து பெட்டிக்கடை வைத்திருக்கிறேன்" என்று இன்னொருத்தன் வருகிறான். இந்த இரண்டு தினுஸான வேலைகளுக்கு என்ன சமபந்தம்?

இன்னொன்று கூடச் சொல்லலாம். இப்போது ராஜாங்கமும் அபேத வாதத்தை [ஸோஷலிஸத்தை] முக்கியமாகச் சொல்வதாகத்தான் ஆகிவிட்டது. அவனுக்கும் ஸ்வபாவப்படியும், படிப்பு முலான தகுதிப்படியும்தான் வேலை தரவேண்டுமேயன்றி ஜாதிப்படி இல்லை என்பதும்தான் சர்க்காரின் கருத்தும். ஆனால் இவர்களே பெரிய உத்தியோகத்திற்காகப் பரீக்ஷை வைக்கிறபோது, ஒரு பரீக்ஷையை எழுதினவர்களில்தான் சில பேரை ஐ.ஏ.எஸ் என்று செலக்ட் செய்கிறார்கள். சில பேரை போலிசுக்கு அனுப்பி வைக்கிறார்கள். கலெக்டர் வேலைக்கும், போலீஸ் ஸுப்பிரன்டு வேலைக்கும் மனோபாவ ரீதியில் பார்த்தால் என்ன சம்பந்தம்? டெக்னிகல் ஸப்ஜெட்டாக இல்லாத வரையில் ஒரு டிப்பார்ட்மென்ட்காரர்களை சம்பந்தமே இல்லாத வேறே டிபார்ட்மென்ட்களுக்கு மாற்றுகிறார்கள்.

குணம், மனோபாவம் என்று பார்த்தால் அவற்றுக்கு ஆதரவாகச் சொல்ல இங்கெல்லாம் ஒன்றுமெயில்லை.

ஆகவே பெரும்பாலும் ஜனங்கள் தங்கள் குணத்தைப் பார்த்து அதற்கு அநுஸரணையான தொழிலாக ஒன்றை எடுத்துக் கொள்ளவே இல்லை. தங்களுக்கு பிடித்த தொழில் கிடைக்காவிட்டாலும், கிடைத்த தொழிலுக்கு எப்படியோ அட்ஜட்ஸ் செய்து கொள்கிறார்கள்.

பொதுவாக எதிலே ஜாஸ்தி பணம் கிடைக்குமோ, அஸௌகர்யம் குறைவோ, அந்தத் தொழிலுக்குத்தான் எல்லோரும் ஆசைப்பட்டு போட்டி போடுகிறார்களே யொழிய, குணம், மனோபாவம், அது இது என்பதெல்லாம் அநேகமாகப் புரளிதான். ஜாஸ்தி வருமானமும் குறைச்சல் சிரமமும் உள்ள தொழிலுக்குப் போவேன் என்பதே ஸ்வதர்மம் என்றால் பரிஹாஸத்துக்கு இடமல்லவா?

குணத்தைக் கொண்டு காரியத்தை தேர்ந்தெடுத்துக் கொள்வது என்று நவீனர்கள் சொல்வது வெற்றுச் சவுடாலாகத்தான் நிற்கிறது.

நம்முடைய பூர்விகர்கள் கச்சிதம் பண்ணிக் கொடுத்திருக்கும் ஏற்பாட்டிலோ கார்யமே ஒருத்தனுக்கு இயற்கையாகவும் பாரம்பரியமாகவும் உண்டான குணத்தை அவனுடைய ஆத்மாபிவிருத்திக்கும், வெளிலோகத்தின் க்ஷேமத்திற்கும் ஏற்றபடி ஒரு ஒழுங்கில் ரூபப்படுத்திற்று. காயத்ரி அநுஷ்டானம், கத்தியைச் சுழற்றுவது [சுற்றுவது], Knack [நுணுக்கம்] தெரிந்து வியாபாரம் பேசுவது, மெய்வருந்த உழைப்பது என்ற நாலு விதமான கார்யங்களே அததற்கான ப்ரஜையின் குணத்தை அந்தந்த துறையில் நன்றாகப் பிரகாசித்துத் தன்னையும் சுத்தி செய்து கொண்டு, ஸமுதாயத்தின் ஒட்டுமொத்த க்ஷேமத்திற்கும் உதவும்படியாக ரூபப்படுத்தியது. காயத்ரி அநுஷ்டானக்காரனும் எப்படி மெய்யை வருத்திக் கொண்டானென்று அப்புறம் சொல்கிறேன்.

அதிக ஸௌகர்யம் கூடாது

அதிக ஸௌகர்யம் கூடாது.

இப்போது ஆசைப்படுகிறபடி எல்லோருக்கும் ரொம்ப வசதி, ஸௌகர்யம் பண்ணித்தருவது என்பது முடிவே இல்லாமல் துராசைகளைப் பெருக்கி விடுகிற ஏற்பாடுதான். எல்லோருக்கும் கார், பங்களா, ரேடியோ, டெலிபோன் இருக்கிற அமெரிக்காவில் ஜனங்கள் திருப்தியடைந்து விட்டார்களோ? இல்லை. அங்கேதான் நம்மைவிட ஜாஸ்தி அதிருப்தி; அதனால் ஜாஸ்தி கொலை அல்லது தற்கொலை, மயக்க மருந்து சாப்பிட்டுவிட்டுத் தன்னை மறந்து கிடப்பது என்று இருக்கிறது. எல்லோருக்கும் கார் என்றாலும், இன்றைக்கு இருக்கிற கார் நாளைக்கு இல்லை. புதுப்புது மாடல்கள் இன்னும் ஜாஸ்தி ஸௌகர்யங்களோடு வந்தபடி இருக்கின்றன. எனவே இப்போது சேர்ந்துள்ள டாலர் போதவில்லை. அந்தப் புது மாடலுக்காக இன்னும் ஸம்பாதிக்க வேண்டும். அப்புறம் அதைவிட விலை ஜாஸ்தியாக, இன்னும் ஜாஸ்தி ஸௌகர்யங்களோடு இன்னோரு மாடல் வரும். அப்புறம் வீட்டுக்கு வீடே பறப்பதற்குகூட பிளேன்கள் வந்தாலும் வரும். இப்படியேதான் முதலில் வெறும் குடிசை. அப்புறம் ஓடு போட்டது. அப்புறம் சிமென்ட் சுவர். ஓட்டுக் கட்டிடம். அதற்கப்புறம் சிமென்டிலேயே நைஸ் ரகங்கள். சாணி போட்டு மொழுகின தரை காரையாகி, ஸிமென்டாகி, அப்புறம் மொஸைக், அதைவிட இன்னும்

வழுவழுப்பான ரகம் என்று மாறிக்கொண்டே இருக்கிறது. இதற்கு முடிவே கிடையாது. துணியை எடுத்துக் கொண்டாலும் நாளுக்கு நாள் புதுப்புது தினுசுகள். எல்லாவற்றையும் வாங்கியாக வேண்டும். இப்போது இருப்பதே ஸௌகர்யமாக இருந்தாலும் நம்முடைய புத்தி சாதூர்யத்தால் இதைவிட ஸௌகர்யமான சாதனங்களைக் கண்டுபிடித்துக் கொண்டேபோய், எப்பொதும் நாம் இருப்பது அஸௌகர்யம்தான் என்று ஆக்கிக் கொண்டு, அதைவிட ஸௌகர்யத்திற்காக தவித்தபடி இருப்போம். திருப்தியோ, நிம்மதியோ இல்லாமல் மேலே மேலே ஸம்பாதனம் பண்ணிக் கொண்டேதான் போவோம். நெருப்பிலே பெட்ரோலை விட்டு அணைத்துவிடலாம் என்று நினைக்கிற மாதிரிதான், புதுப்புதி சாதனங்களைக் கண்டுபிடித்து ஆசையைப் பூர்த்தி செய்து விடலாம் என்று நினைப்பது.

இது நம் பூர்விகர்களான மஹரிஷிகளுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் மநுஷ்யனின் அத்யாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்கு அதிகமாக போகவே கூடாது என்று வைத்தார்கள். ஸமீப காலத்தில் காந்தி இதையேதான் வற்புறுத்திச் சொல்லிக் கொண்டிருந்தார்.

எல்லாரையும் ஒரு மாதிரி டாம்பீக வாழ்க்கைக்கு ஆசைப்பட வைப்பது என்ற--இந்த நூற்றாண்டில் "முன்னேற்றம்" எனப்படுகின்ற--முயற்சிகள் இருக்கிற வரையில், தனியாக எவனுக்கும் திருப்தி இராது; சமூக ரீதியிலும் போட்டி, பொறாமை, வயிற்றெரிச்சல் போகவே போகாது. வர்ணாச்ரம தர்மப்படி எகானாமிகல் லெவலில் [பொருளாதாரத்தில்] பிராம்மணனும் மற்றவனும் ஸமம்தான். ஜாதி வித்தியாசமின்றி அத்தனை பேருக்கும் ஒரே மாதிரியான எளிய வாழ்க்கையைத்தான் சொல்லியிருக்கிறது. இப்படி எளிமையில் ஸமமாக இருப்பதுதான் ஸாத்யமுமாகும். இந்த நிலையில் தன் ஜீவனும் திருப்தி அடைகிறான். ஆத்ம க்ஷேமம் அடைகிறான். ஸமூஹத்திலும் ஒருத்தனைப் பார்த்து இன்னொருவனுக்கு வயிற்றெரிச்சல் உண்டாக இடம் இல்லாமல் போகிறது.

பணமும் வசதியும் எந்தத் தொழில்காரருக்கும் அதிகம் இருக்கக் கூடாது. இவற்றைவிட முக்கியமானது இவை எவற்றை உத்தேசித்து

ஏற்பட்டனவோ, ஆனால் இவற்றாலேயே எதை நேராகப் பெற முடியவில்லையோ, அந்த ஆத்ம திருப்திதான், மன நிறைவுதான் மனிதனுக்கு வேண்டியது. திருப்தனாக இருந்தால்தான் ஆனந்தமாக பகவத் தியானம் பண்ண முடியும். அப்படிப் பட்ட மனசில்தான் பரம சத்தியமான வஸ்து எதுவோ அது தெரியும். அதனால்தான் நம் சாஸ்திரப்படி ரொம்பவும் எளிய வாழ்க்கையையே விதித்திருக்கிறது. ஓரளவுக்கு மேல் ஸௌகர்யங்கள் அதிகமாகி விட்டால் அப்புறம் இந்திரிய சுகத்துக்கு மேலான விஷயங்களுக்குப் போகவே முடியாது. அதே மாதிரி, உழைப்பு இல்லாமல், சிரமமே படாமல் சுக ஜீவியாக இருந்தாலும் புத்தி கண்டதை நினைத்துக் கெட்டுதான் போகும். ஆகையினால் ஆத்மிகமாக உயர வேண்டுமானால் அஸௌகர்யமும், சிரமமும் கடும் உழைப்பும் வேணத்தான் வேண்டும். என்ன நிலைமையையும் ஸௌக்கியமாக பாவிக்கிற மனப்பான்மை அப்போதுதானே வரும்?

ஒரு பெரிய தப்பபிப்ராயம்

ஒரு பெரிய தப்பபிப்ராயம்

இப்போது ஏற்பட்டிருக்கிற ஒரு பெரிய தப்பபிப்ராயம் என்னவென்றால் சாஸ்திரோக்தமான வர்ணாஸ்ரம தர்மத்தில் பிராமணனுக்குத்தான் ஸௌகர்யம் ஜாஸ்தி, வருமானம் ஜாஸ்தி, சிரமம் குறைவு என்ற எண்ணம். இது சுத்தப் பிசகு.

நம் சாஸ்திரம் பண்ணிக் கொடுத்துள்ள ஏற்பாட்டில் பிராமணன் சரீரத்தால் உழைத்த உழைப்பு ஒரு குடியானவனின் உழைப்புக்குக் குறைச்சலானது அல்ல. பிராமணனின் கர்மாநுஷ்டானங்களைப் பற்றித் தெரியாததால் அவன் மற்றவர்களை பிழிய பிழிய வேலை வாங்கிவிட்டு, தான் ஹாயாக உட்கார்ந்து சாப்பிட்டான் என்று இந்தக் காலத்தில் தவறாக நினைக்கிறார்கள். பிராமணனானவன் காலம்பர [காலை] நாலு மணிக்கே முழித்துக் கொண்டு, மழைநாளாலும், பனிநாளானாலும் பச்சைத் தண்ணீரில் ஸ்நானம் செய்ய வேண்டும். அதிலிருந்து அவனுக்கு ஓயாத கர்மாநுஷ்டானம்தான். ஸந்தி, பிரம்மயக்ஞம், ஔபாசனம், தேவ பூஜை, வைச்வ தேவம், இது தவிர இருபத்தியொரு யஜ்ஞங்களில் ஏதாவது ஒன்று என்றிப்படி சக்கையாக

உழைத்தாக வேண்டும். ஹோம ஜ்வாலையிலும், புகையிலும் நாலுநாள் உட்கார்ந்து பார்த்தால் தெரியும், எத்தனை சிரமம் என்பது. இவனுக்கு எத்தனை வ்ரதாநுஷ்டானங்கள்? உபவாஸம் என்று எத்தனை நாள் வயிற்றைக் காயக் காயப் போட்டாக வேண்டும்? எத்தனை ஸ்நானம்?

இந்த சிரமங்கள் மற்ற ஜாதியினருக்கு இல்லை. ஒரு குடியானவன் விடிந்தெழுந்ததும் வயறு நிறைய ஜில்லென்று பழையது சாப்பிடுகிற மாதிரிச் செய்ய பிராமணனுக்கு 'ரைட்' கிடையாது. தன் 'ரைட்'டுக்காகவும் ஸௌகர்யத்துக்காகவும் பிராம்மணன் தர்ம சாஸ்திரங்களை எழுதி வைத்துக்கொள்ளவே இல்லை. அப்படி இருந்தால் இத்தனை கடுமையான விதிகளை, rigorous discipline -களைத் தனக்கே போட்டுக் கொண்டிருப்பானா? அவன் போஜனம் பண்ணுகிற போது பகல் 1 மணி 2 மணி ஆகிவிடும். (சிராத்தம், யாக தினங்களில் 3 மணி 4 மணி ஆகும்) குடியானவன் இரண்டாந்தரங்கூடச் சாப்பிட்டு விட்டு வயலோரத்தில் ஏதாவது ஒரு மரத்தடியில் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்கிற சமயத்தில் தான் பிராம்மணனுக்கு முதல் சாப்பாடே! அதுவும் எப்படிப்பட்ட சாப்பாடு? அந்தக் குடியானவன் சாப்பிடுகிற மாதிரி மிகவும் எளிமையானதுதான். குடியானவன் தேக புஷ்டி தருகிற பழையது சாப்பிடலாம். இவன் புது அன்னம்தான் சாப்பிட வேண்டும் என்பது தவிர அதிக வித்தியாசம் இருக்கக் கூடாது. குடியானவன் குடிசைக்கும் பிராம்மணன் குடிசைக்கும் வித்தியாசம் கிடையாது. இரண்டு பேருக்கும் ஒரே மாதிரி நூல்துணிதான். குடியானவனாது நாளைக்கு என்று நாலு காசு மீத்து வைத்துக் கொள்ளலாம். பிராம்மணன் அப்படி வைத்துக் கொள்ளக் கூடாது. பிற்பாடு கொடுக்கலாம் என்று இப்போது கடன் வாங்கி கொஞ்சம் தாட்பூட் செலவு பண்ணக்கூட பிராம்மணனுக்கு 'ரைட்' கிடையாது.

மஹாபாரதத்தில், யக்ஷ ப்ரச்னத்தில், பிராம்மணன் எத்தனை எளிமையாக இருந்தான். அவன் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது.

பஞ்சமே (அ)ஹனி ஷனி ஷஷ்டே வா சாகம் பசதி ஸ்வேக்ருஹே|

அந்ருணீச (அ)ப்ரவாஸீ ச ஸ வாரிசர மோததே||

ஒரு நாளில் பகல் பொழுதை எட்டுப் பங்காக்கினால், அதில் ஐந்தாவது அல்லது ஆறாவது பங்கில்தான் பிராம்மணன் கர்மாநுஷ்டானம் எல்லாம் முடித்துச் சாப்பிடுவான். அதன்முன், நாஸ்தா, கீஸ்தா எதுவும் கூடாது. இதுதான் "பஞ்சமே அஹனி ஷஷ்டே வா". அந்த வேலையில்கூட என்ன சாப்பாடு? சக்கரைப் பொங்கலும் பாதாம்கீருமா? அல்லது தேஹ புஷ்டி தரும் மாம்ஸாதிகளா. இல்லை. "சாகம் பசதி" என்றால் ஏதோ ஒரு கீரையைப் பிடுங்கி வேக வைத்துத் தின்ன வேண்டும் என்று அர்த்தம். ஏதோ ஒரு முள்ளிக் கீரையோ, பசலைக் கீரையோ, பொன்னாங்கண்ணியோ ஆற்றங்கரையில் யாருக்கும் சொந்தமில்லாமல் முளைத்திருப்பதை மட்டும் சமைத்துச் சாப்பிட வேண்டும். பிராம்மணன் நதி தீரத்தில் வசிக்க வேண்டும் என்று வைத்ததற்கு காரணமே அப்போது தான் அவன் அடிக்கடி ஸ்நானம் செய்ய முடியும் என்பது ஒன்று. இன்னொரு காரணம் அங்கே தான் பணம் காசே வைத்துக் கொள்ளக் கூடாத இவன், விலை கொடுக்காமலோ, யாசிக்காமலோ நாலு கீரையைப் பிடுங்கி வேக வைத்து ஜீவனை ரக்ஷித்துப் கொள்ளலாம் என்பது. "யார் இந்தப் பார்ப்பான், பிடுங்கித் தின்ன வந்தான்?" என்று யாரும் அதட்ட முடியாதபடி வாழ வேண்டும் என்று அர்த்தம். கடன் வாங்கக் கூடாது, கடன் வாங்கலாமென்றால் போக்யங்கள், லக்ஷரிகளில் மனஸ்போகும். அதற்கு இடமே கொடுக்கக்கூடாது. இதுதான் "அந்ருணீ" என்றது. தரித்திரமும், அபரிக்ரஹமும் (அத்யாவசியத் தேவைக்கு அதிகமாக ஒரு புல்லைக்கூட வைத்துக் கொள்ளாமலிருப்பதும்) தான் பிராம்மண லக்ஷணமானதால், கடனும் வாங்கக்கூடாது என்று இருக்கிறது.

இப்போது சர்க்காரிலிருந்து ஆரம்பித்து பெரிய பெரிய தொழிலதிபர்கள் உள்பட எல்லோருக்கும் கடன்தான். சாஸ்திரம் சொன்னபடி, கடன் இல்லாமலும், பிறகு ஏவுதலுக்கு ஸலாம் போடாமலும் தன் தர்மத்தைச் செய்து கொண்டு இப்போது யாராவது இருக்கிறார்களா என்றால் அது நரிக்குறவர்கள்தான் என்று தோன்றுகிறது.

கடைசியில் சொன்ன "அப்ரவாசம்" என்பதற்குத் தன் ஊரைவிட்டுப் போகக்கூடாது என்று அர்த்தம். மானமோ, அவமானமோ, கஷ்டமோ, நஷ்டமோ நமக்கேற்பட்ட தர்மத்தைச் செய்துகொண்டு ஊரோடு கிடக்க வேண்டும். இப்போது இங்கிலாந்தில் ஸெட்டில் ஆகிறோம், அமெரிக்காவில் ஸெட்டில் ஆகிறோம் என்று வெறும் பணத்துக்காக ஆசாரங்களை விட்டுப் பறந்து கொண்டு, இதைப் பெருமையாக சொல்லிக் கொண்டிருக்கின்றோமே! இதை சாஸ்திரத்தில் ரொம்பவும் நிஷித்தமாக [இழுக்காக] ச் சொல்லியிருக்கிறது.

இந்த மாதிரி எல்லா ஜாதியாரும் நன்றாக உழைப்பது, எல்லா ஜாதியாரும் பரம எளிமையாக வாழ்வது என்று ஏற்பட்டு விட்டால் ஜாதி-த்வேஷமும், ஜாதிகள் போய்விட வேண்டும் என்ற பேச்சும் வரவே வராது. இப்போது ஒரு ஜாதிக்கு ஜாஸ்தி பணம்-ஸௌகரியமும், இன்னொன்றுக்கு தரித்திரம்-உழைப்பும் வரும்படியாக ஜாதிமுறை அமைக்கப்பட்டிருக்கிறது என்ற நினைப்பு ஏற்பட்டிருப்பதால்தான் இந்தச் சீர்திருத்தம் எனப்படுகின்ற அபிப்ராயங்கள் வந்திருக்கின்றன.

எளிமையும் உழைப்பும்தான் திருப்தி தருவது. சித்த சுத்தி தருவது. ஆயிரம் பதினாராயிரம் வருஷங்களாக நம் தேசத்தில் இப்படித்தான் நடந்து வந்திருக்கின்றது. வர்ணாச்ரமத்தைச் சொன்ன சாஸ்திரங்கள் இவற்றையும் வலியுறுத்தியிருப்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

குணம் அல்லது மனோபாவம் என்பதை வைத்து இக்காலத்திலும் தொழிலைத் தேர்ந்தெடுக்கவில்லை என்று சொன்னேன். இப்போது பணம், வசதி இவற்றை மட்டும் பார்த்து வேலை தேடுவதில்தான் அத்தனை கஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. எல்லோரும் எல்லா வேலைக்கும் வந்து விழுந்து போட்டியும், பொறாமையும் வேலையில்லாத் திண்டாட்டமுமாக ஆகியிருப்பதற்கு இதுதான் காரணம்.

ஆதியில் பிறப்பினால் தொழிலை நிர்மித்துக் கொடுத்தபோது, அதிலேயே தன்னால் ஒவ்வொருவனுக்கும் ஒரு aptitude, அதை சுலபத்தில் கற்றுக் கொண்டு செய்கிற திறமை எல்லாம் ஏற்பட்ட மாதிரி இப்போது இல்லை. பிதுரார்ஜிதச் சொத்துபோல அப்போது

பெருமிதத்தோடு, பிடிமானத்தோடு ஒவ்வொருவனும் தன் தொழிலை எடுத்துக் கொண்டதனால் அதில் நல்ல செய்நேர்த்தி இருந்தது. இப்போது inefficiency [திறமையின்மை] யைத்தான் எல்லாத் துறைகளிலும் பார்க்கிறோம்.

ஸம வாய்ப்பு விஷயம்

ஸம வாய்ப்பு விஷயம்

குணம், மனப்பான்மை வைத்துத் தொழில் என்பது வெறும் புரளி என்கிற மாதிரியே தான் equality of opportunity [எல்லோருக்கும் ஸமமான வாய்ப்பு] இருக்க வேண்டும் என்பதும். இது நடைமுறை சாத்தியமே இல்லை. திருஷ்டாந்தமாக மெடிகல் ஸீட், எஞ்சினியரிங் ஸீட் இவ்வளவு தான் என்று நிர்ணயம் பண்ணிவிடுகிறார்கள். இதெல்லாவற்றையும்விட மிகக் குறைவாகத்தான் அடாமிக் ஸயின்ஸ் [அணு விஞ்ஞானம்] மற்றும் அநேக புதுப்புது specialised subject-களில் அட்மிஷனை நிர்ணயிக்கிறார்கள். இவற்றுக்கு ஒரே மாதிரி தகுதியுள்ள புத்திஸாலிகள் போட்டியிடும் போதே அவர்களின் அநேகரை ஸெலக்ட் பண்ணாமல், மற்றவர்களைத்தான் பண்ணுகிறார்கள். அப்படிப் பண்ணுவதுதான் நடைமுறை ஸாத்யம். பெரிய அதிகாரப் பதவிக்குப் பரீக்ஷை வைக்கிற போதும் இப்படியேதான் ஒரே க்வாலி:பிகேஷன் உள்ளவர்களிலேயே பலரை நிறுத்தும்படியாகிறது. வைத்யம் பண்ணவும், புது விஞ்ஞான விஷயங்களில் ஆராய்ச்சி பண்ணத் தெரிந்து கொள்ளவும் ஆசைப் படுகின்ற எல்லோருக்கும் அதாவது அதற்கான நல்ல தகுதி பெற்ற எல்லோருக்கும் சான்ஸ் கொடுக்கத்தான் வேண்டும் என்று வாதம் பண்ணினால் அது சரியாயிருக்குமா? இந்த தேசத்துக்கு இத்தனை டாக்டர் இருந்தால் போதும், ஸ்பெஷலிஸ்ட் இருந்தால் போதும், ஸயன்டிஸ்ட்களும் அதிகாரிகளும் இவ்வளவு போதும் என்பதால் ஒரு அளவோடு நிறுத்திக் கொண்டு, தகுதியுள்ள மற்ற எல்லாரையும் தள்ளும்படியாகிறது என்பதை எல்லாருமே ஒப்புக் கொண்டு பேசாமலிருக்கிறோம். இதே போலத்தான் தேவ சக்திகளை லோகத்துக்கு அநுகூலம் பண்ணித்தர ஜனங்களில் இத்தனை சதவிகிதம் மட்டும் கர்மாநுஷ்டானம் பண்ணினால் போதும்;

பாரம்பரியமாக வந்திருக்கிற இவர்கள் போதும், இதற்கு மேல் அவசியமில்லை, அப்படி செய்தால் மற்றவர்கள் செய்ய வேண்டிய காரியங்கள் கெட்டுப் போகும் என்று வர்ண விபாகம் பண்ணி வைத்திருக்கிறது. ஃப்ரெஞ்ச் ரெவல்யூஷன் [பிரான்சுப் புரட்சி] கொண்டு வந்துவிட்ட அநேக அபேதவாதங்களை சாஸ்திர விஷயத்தில் பொருத்த வேண்டுமென்று, யோசிக்காமல் கோஷம் போடுகிறோம் – அவை நம் லௌகிக லெவலிலேயே ஸாத்யமில்லை என்பதைப் பார்த்தும் புரிந்து கொள்ளாமலே!

ஐக்கிய சக்தி

ஐக்கிய சக்தி

"சரி, இப்படி தனித்தனியாக ஜாதிகள் பிரிந்திருந்தால் மொத்த ஸமூஹத்தில் கட்டுக்கோப்பு எப்படியிருக்கும்?" என்றால் அது (ஸமூஹக் கட்டுக்கோப்பு) இருக்கத்தான் செய்தது. த்வேஷத்தில் பிரிந்திருக்கிற இன்றைவிட அன்றைக்குத்தான் ஸமூஹ ஐக்கியம் இருந்தது. எப்படியிருந்தது என்றால் அத்தனை பேருக்கும் இருந்த பொதுவான மத உணர்ச்சியாலும் சாஸ்திர நம்பிக்கையாலுந்தான். ஊருக்கே பொதுவாக, ஊருக்கே மத்தியமாக இருந்த ஆலயத்தால்தான். அத்தனை ஜனங்களும் ஈச்வர ஸந்நிதானத்தில் அரன்குடி மக்களாக ஒன்று சேர்ந்திருந்தார்கள்; வழிபாடுகளில், உத்ஸவாதிகளில் அத்தனை ஜாதியாரும் கலந்து கொண்டார்கள்; அவரவரும் ஒவ்வொரு விதத்தில் கைங்கர்யம் செய்தார்கள்.

ஆசௌசம் [தீட்டு] ஏற்பட்டுவிட்ட ஒரு ச்ரௌதிகள் மேலே பட்டால்கூட ஸ்நானம் செய்தவர்களே ரதோத்ஸவத்தில் பஞ்சமர்களோடு தோளோடு தோள் இடித்துக் கொண்டு வடம் பிடித்து இழுத்தார்கள்; திரும்பி வீட்டுக்கு வந்ததும் ஸ்நானம் செய்யாமலே சாப்பிட்டார்கள். ஏனென்றால் சாஸ்திரத்தில் அப்படியிருக்கிறது. மனஸில் த்வேஷமில்லாமல் ஐக்யமாயிருந்து தொழிலில் மட்டும் பிரிந்திருந்த காலம் அது. அப்போது ஜாதி முறையால் ஐக்கியமில்லாதிருந்ததாகக் கதை கட்டினாலும், வேத சாஸ்திர நம்பிக்கையும் கோவிலும் அன்றைக்கு ஸமூஹத்தை நன்றாக ஐக்கியப்படுத்தியது. இப்போது ஐக்கியம், ஐக்கியம் என்று

சொல்லிக்கொண்டே த்வேஷப் பிரசாரத்தால் ஜனங்களைப் பரஸ்பர சத்ருக்கள் மாதிரிப் பிரித்திருக்கிறது!

இதனால்தான் அநேகமாக இப்போது 'வேதமும் வேண்டாம்; கோயிலும் வேண்டாம்' என்பது 'ஜாதி வேண்டாம்' என்பதோடு சேர்ந்திருக்கிறது.

வேதம் வேண்டாம், கோயில் வேண்டாம் என்பதுதான் ரொம்பவும் உச்சநிலையில் வேதமே சொல்வது. ஞானம் வந்த நிலையில் வேதம் வேதமில்லை; தீண்டாதவனில்லை என்று உபநிஷத்தே சொல்கிறது. அப்படி நிஜமாகவே இல்லையாக்கிக் கொள்வதற்காகவே அப்படிப்பட்ட ஞானம் வருகிற வரையில் வேதம் வேண்டும், கோயில் வேண்டும், ஜாதி வேண்டும் என்கிறது. ஒரே அபேதமாகி விடுவதற்கே முதலில் இத்தனை பேதமும் வேண்டும் என்கிறது.

இந்த லோக வாழ்க்கையை விட்டு விடுதலைக்கு ஓயாமல் பிரயாஸைப்படுகிறவனுக்கு முடிந்த முடிவில் எல்லாம் ஒன்றாகி விடுவதை வேதத்தில் சொல்லியிருக்கிறது; கிருஷ்ண பரமாத்மாவும் சொல்லியிருக்கிறார். முடிந்த முடிவில் காரியமே இல்லை. "தஸ்ய கார்யம் வித்யதே" [கீதை III. 17]

காரியம், தொழில் என்று ஏற்பட்டுவிட்ட இந்த நடைமுறை லோக வாழ்க்கை விஷயத்தில் அந்த அபேத தத்வத்தைச் சொல்லி, இதனால் எந்த பேதமும் காரியலோகத்தில் கூடாது என்பது தப்பான வாதம். காரிய லோகத்திலும் இந்த ஸம்பாவனையானது நம் மனஸில் அன்பு என்கிற ரூபத்தில் ஸகல ஜாதியிடமும், ஸகல பிராணிகளிடமும் கொஞ்சங்கூட ஏற்றத் தாழ்வில்லாமல் ஸமமாக நிறைந்து நிரம்பி இருக்க வேண்டும் என்றுதான் சாஸ்திரங்கள் சொல்கின்றன. அதாவது அன்பிலேதான் அபேதம். காரியத்தில் அபேதம் இல்லை. 'எல்லாம் ஒன்று என்கிற பாவனை, உள்ளுணர்ச்சி எப்போதும் இருக்க வேண்டும்; அதனால் ஏற்படுகிற நிறைந்த ப்ரேமை இருக்க வேண்டும். ஆனால் காரியத்தில் வித்யாஸம் பார்க்கத்தான் வேண்டும்' என்பதே சாஸ்திரங்களில் சொல்லியிருப்பது.

பாவாத்வைதம் ஸதா குர்யாத்; க்ரியாத்வைதம் ந கர்ஹிசித் என்று சொல்லியிருக்கிறது. அதாவது 'எல்லாம் ஒன்று என்ற அத்வைதம்

பாவனையில் எப்போதும் இருக்க வேண்டும்; காரியத்தில் ஒருபோதும் அல்ல' என்று அர்த்தம்.

லோக வாழ்க்கையில் இப்படி பேதப்படுத்தினால்தான் ஒழுங்கும், சீரான போக்கும் இருக்கும். அப்போதுதான் குழப்பமில்லாமல், மனக்கலக்கமில்லாமல் ஆத்ம சிந்தனையை வளர்த்துக் கொள்ள முடியும். லோக வாழ்க்கை பொய் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே, இப்படி அதை ரொம்பவும் நிஜம் மாதிரி ஒழுங்குப்படுத்தித் தர வேண்டும் என்பதுதான் ஸநாதன தர்மத்தின் ஏற்பாடு.

அதிலே நாலு வர்ணம் என்று வைத்தது இன்னம் கவடுவிட்டுப் பிரிந்து கலந்து பல ஜாதிகளாயின. ஸப்த ஸ்வரங்களே பலவகையாகச் சேர்ந்து எழுபத்திரண்டு மேளகர்த்தா ராகங்களும், மற்ற கணக்கில்லாத ஜன்ய ராகங்களும் உண்டானது போல், நாலு வர்ணத்துக்கு ஆதாரமான தத்வமே மேலும் பல ஜாதிகளாகப் பிரித்துக் கொடுத்தது. இவ்வளவு பிரிவுகளையும் அவற்றுக்குரிய தர்மங்களையும் பற்றி ஸம்பிரதாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

பிற மதங்களில்

பிற மதங்களில்

மற்ற மதங்களும் இப்படிப்பட்ட வித்யாஸங்களைப் பின்பற்றி வந்தால் நமக்கு இது குறையாகத் தோன்றாது. அவர்கள் நம்மை பரிஹஸித்து இந்த பேதத்தைக் குத்திக் காட்டுவதாலேயே நம்மவர்களுக்கும் இது தப்பாகத் தோன்ற ஆரம்பித்து விட்டது. ஆனால் நன்றாக ஆலோசித்துப் பார்த்தால் மற்ற எல்லா மதத்தையும்விட நம்முடைய மதமொன்றே ஆதிகாலத்திலிருந்து சிரஞ்சீவியாக இருந்து வருவதற்கும், நம்முடைய நாகரிகமே உலகத்தின் மற்ற நாகரிகங்களை விட மகோன்னதமாக இருந்து வருவதற்கும் காரணம் மற்ற மதங்களில் இல்லாத இந்த வர்ணதர்மம் தான் என்று தெரியும்*.

மற்ற மதங்களில் ஜாதி தர்மம் என்று மூல நூல்களில் இல்லாவிட்டாலும், பிற்பாடு அவைகளிலும் ஒன்று சேர முடியாத பல

பிரிவுகள் ஏற்பட்டுத்தான் இருக்கின்றன. இவர்கள் ஒருத்தருக்கொருத்தர் விவாஹ ஸம்பந்தம் செய்து கொள்ளாமல் தனித்தனி ஜாதி மாதிரிதான் இருக்கிறார்கள். இப்படி முஸ்லீம்களில் ஸியா, ஸுன்னி, அஹமதியா என்று பிரிந்திருக்கிறார்கள். அது தவிர இங்கே பட்டாணி, லப்பை என்று இருப்பவர்கள் கூட பரஸ்பர விவாஹ ஸம்பந்தம் செய்வதில்லை. கிறிஸ்துவர்களில் காதலிக், பிராடெஸ்டென்ட், கிரீக் சர்ச் என்ற பிரிவினர்களும் இப்படியே. ஆனாலும் Division of Labour [தொழில் பாகுபாடு] என்ற உன்னத தத்வத்தின் மீது ஒரு லெவலில் மட்டும் பிரிந்திருந்து இன்னொரு லெவலில் ஐக்கியமாயிருக்கிற நம் ஜாதி முறையை, இம்மாதிரியில்லாமலே பிரிந்திருக்கிற அவர்கள் நிந்தித்துப் பேசுகிறார்கள். அதற்கு பதில் சொல்லக்கூட நமக்குத் தெரியவில்லை.

* குறிப்பாக "தெய்வத்தின் குரல்" முதற்பகுதியில் உள்ள "காரியத்தில் பேதமும் மனோ பேதமும்", "இங்கு மட்டும் இருப்பானேன்?" என்ற கட்டுரைகளைப் பார்க்கவும்.

ஹிந்து மதத்தின் சிரஞ்சீவித்வம்

ஹிந்து மதத்தின் சிரஞ்சீவித்வம்

மற்ற மதங்களில் எல்லோருக்கும் பொதுவாக வைத்த தர்மங்களை, அறநெறிகளை நம் மதத்திலும் எல்லோருக்கும் விதித்ததோடு அவரவர் தொழிலைப் பொறுத்து அதற்குத் தனியான விசேஷ தர்மங்களை வைத்து ஒன்றோடொன்று கலந்துவிடாமல் ஸமூஹத்தைப் பிரித்து வைத்ததுதான் நம் நாகரிகத்தின் சிரஞ்சீவித் தன்மைக்கு உயிர்நிலை.

நம்முடைய மதம் எவ்வளவோ யுகங்களாக நீடித்து வாழ்ந்து வந்திருக்கிறது. ஏதோ ஆதாரம் இருந்துதான் இந்த மதம் இவ்வளவு நாள் பிழைத்திருக்கிறது. எந்த மதமும் இவ்வளவு தீர்க்காயுஸோடு இருந்ததாகத் தெரியவில்லை. நம்முடைய மதத்தை நான் நம்முடைய கோயிலைப் போல நினைத்திருக்கிறேன். நம்முடைய கோயில்கள் மற்றவர்களுடைய சர்ச் அல்லது மஸூதியைப் போல சுத்தமாக இல்லை. மற்ற மதஸ்தர்களுடைய கோயில்களோ வெள்ளையடித்து

சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய கோபுரங்களில் முளைத்திருக்கும் மரங்களுக்குக் கணக்கேயில்லை. அவ்வளவையும் தாங்கிக் கொண்டு நமது கோயில்கள் நிற்கின்றன. ஆனால் மற்ற மதத்தார்களின் கோயில்களில் இரண்டு மூன்று வருஷத்திற்கு ஒரு முறை ரிப்பேர் செய்யா விட்டால் தாங்காது. நம் கோயில்கள் அப்படியில்லை. அவை கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கின்றன. பல ஆயிரம் வருஷத்திற்கு முன்பாக நம்முடைய பெரியோர்களா பலமாக அஸ்திவாரம் போட்டிருக்கிறார்கள். ஆகையால் தான் அவ்வப்போது ரிப்பேர் இல்லாமலே நம் கோயில்கள் நீடித்து நிற்கின்றன. நாம் கோயில்களில் பல ஆபாஸங்களைச் செய்கிறோம்; அபசாரங்கள் செய்கிறோம்; இவ்வளவுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டு நம்முடைய கோயில் நிற்கிறது. லோகத்திற்குள் மிகப் புராதனமான கோயில்கள் இந்தியாவில்தான் இருக்கின்றன என்று எல்லோரும் சொல்கிறார்கள். சீமையில் இருந்து நம்முடைய கோயில்களைப் படம் பிடிப்பதற்காகவென்றே பல பேர் வருகிறார்கள். நம்முடைய அலக்ஷியத்தால் அழிவதற்குரிய காரணங்கள் பல இருந்தும் அவை இப்படி நெடுங்காலமாக அழியாமல் நிற்கின்றன. அவற்றை இடித்து விடலாமென்றாலோ அதுவும் சிரமமாக இருக்கிறது. கட்டுவதற்கு எவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டுமோ அதைவிட இடிப்பதற்கும் படவேண்டும்.

நம்முடைய மதமும் இப்படித்தான் இருக்கிறது. நமக்குத் தெரியாமல் ஏதோ ஒன்று (மற்ற மதங்களில் இல்லாத ஏதோ ஒன்று) இதைத் தாங்கிக் கொண்டு நிற்கிறது. அதனால்தான் எவ்வளவோ வித்யாஸங்கள இருந்தாலும் இந்த மதம் அழியாமல் நிற்கிறது.

அந்த ஏதோ ஒன்று வர்ணாச்ரம தர்மந்தான். மற்ற மதங்களில் எல்லாருக்கும் ஒரே தர்மம் இருக்கிறது. அதனால் தான் அவைகள் அதிகப் பெருமை அடைந்திருக்கின்றன என்று நாம் நினைக்கலாம். ஆனால் அவை ஒரு ஸமயம் ஒரே அடியாக ஏறி நிற்கும். ஒரு ஸமயம் இருந்த இடம் தெரியாமற் போனாலும் போய்விடும். ஒரு காலத்தில் புத்த மதம் இருந்த தேசத்தில் பிற்பாடு கிறிஸ்துவ மதமும், கிறிஸ்துவ மதம் இருந்த தேசத்தில் இஸ்லாமும், இஸ்லாம் இருந்த தேசத்தில் கிறிஸ்துவமுமாக இப்படிப் பல மாறுதல்கள்

ஏற்பட்டிருப்பது சரித்திர பூர்வமான உண்மை. எகிப்து, கிரீஸ், சைனா முதலிய தேசங்களில் ரொம்பவும் பூர்வத்தில் இருந்து உயர்ந்த நாகரிகங்களை உண்டு பண்ணின மதங்கள் இப்போது இல்லவேயில்லை. இத்தனை மாறுதல்களையும் பார்த்துக் கொண்டு, வெளியிலிருந்தும் உள்ளேயிருந்துமே எண்ணி முடியாத தாக்குதல்களை தாங்கிக் கொண்டு நம் ஹிந்து மதம் மட்டும் "சாக மாட்டேன்" என்று இருந்து வருகிறது.

ஒரு பனைமரம் இருந்தது. அதன்மேல் ஓர் ஓணான் கொடி கிடுகிடுடென்று படர்ந்தது. சில மாதத்திற்குள் பனை மரத்திற்கு மேல் வளர்ந்து விட்டது. அப்பொழுது அந்த ஓணாண்கொடி, "இந்தச் சில மாதமாக இந்த பனைமரம் ஓர் அங்குலம் கூட உயரவில்லையே! இது உபயோகம் இல்லாதது" என்று சொல்லி சிரித்தது. பனைமரம் சொல்லிற்று: "நான் பிறந்து பதினாயிரம் ஓணான்கொடியைப் பார்த்திருக்கிறேன். நீ பதினாயிரத்து ஓராவது கொடி. ஒவ்வொரு கொடியும் இப்படித்தான் கேட்டது. எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை" என்று! இந்த மாதிரிதான் நம் மதமும் பிற மதங்களும் இருக்கின்றன.

நம் மதத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வேறு விதமான தர்மங்கள் இருந்தாலும் இந்த தர்மாநுஷ்டாங்களில் ஸமமான பலன்தான் உண்டாகிறது.

சலுகை இல்லை

சலுகை இல்லை

தர்ம சாஸ்திரங்களை பிராம்மணர்களின் ஸ்வய நலத்துக்காகவே எழுதி வைத்துக் கொண்டார்கள் என்று சொல்வது எவ்வளவு தப்பு என்பது அந்த ஜாதிக்கே மிகக் கடுமையான நியமமும், ரொம்ப எளிமையான வாழ்க்கையும் விதிக்கப்பட்டிருப்பதிலிருந்து தெளிவாவது மட்டுமில்லை; தர்ம சாஸ்திரங்களின் நிஷ்பக்ஷபாதத்துக்கு இன்னொன்றும் இதைவிடப் பெரிய சான்றாக இருக்கிறது. ஸகல கலைகளையும், வித்யைகளையும் பிராம்மணன் கற்றாலும் பிறருக்குத்தான் அவற்றை போதிக்கலாமே தவிர, வைதிகாநுஷ்டானங்களைப் போல கஷ்டமாயில்லாததும், அதிகப் பண

லாபம் தருவதுமான அந்தக் கலைகளில் ஏதொன்றையும் தானே தொழிலாக நடத்தக் கூடாது என்று கட்டிப் போட்டிருப்பதைத்தான் சொல்கிறேன்.

இப்போது எல்லாரும் எல்லாவற்றிலும் ஸமம், முக்யமாக நீதிக்கு முன் அனைவரும் ஸமம் என்றெல்லாம் நிறைய கோஷம் போட்டாலும், சட்டசபை, பார்லிமென்ட், கோர்ட் என்று எதை எடுத்தாலும் அததைச் சேர்ந்தவர்கள் தங்களை மற்ற பொது ஜனங்களோடு ஸமமாக வைக்கக் கூடாது என்று privileges (சலுகையான உரிமைகள்) எழுதி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களை யாராவது ஏதாவது [கண்டனமாகச்] சொன்னால் contempt charge [அவமதிப்புக் குற்றம்] என்று கொண்டு வந்துவிடுகிறார்கள். இப்படி நான் சொல்வதைக் கூட contempt என்று கொண்டு வரக்கூடும். இதே மாதிரி தங்களுக்கு அலவன்ஸ் வேண்டும், ரயில் பாஸ் வேண்டும் என்றெல்லாம் மற்றவர்களுக்கில்லாத சலுகைகளைத்தான் ஜனநாயக அபேதவாதிகளும் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இதற்கெல்லாம் மாறாகத் தங்களையே வறுத்தெடுத்துக் கொண்டு கட்டுப்பாடுகளை வைத்துக் கொண்டவர்கள்தான் தர்ம சாஸ்திரங்களை ரக்ஷித்த ஜாதிக்காரர்கள். வேறொருத்தனால் இவர்களுக்கு அநாசாரம் வந்தால்கூட அவனுக்குத் தண்டனை இல்லை; தாங்கள்தான் ஸ்நானம் பண்ணி பட்டினி கிடக்க வேண்டும் என்ற அளவுக்குத் தங்களையே கஷ்டப்படுத்திக் கொண்டதைத்தான் சாஸ்திரங்களில் பார்க்கிறோம்.

பிராம்மணனுக்குப் பதினெட்டு வித்தைகளும் தெரிய வேண்டும். லோகத்திற்கு வேண்டியவைகளெல்லாம் தெரிய வேண்டும். ஸங்கீத வித்தையான காந்தர்வ வேதம் தெரிய வேண்டும். கிருஷி சாஸ்திரம் [உழவு] தெரிய வேண்டும். அது ஜ்யோதிஷத்தில் ஸம்ஹிதை என்னும் பிரிவில் வந்து விடும். வீடு கட்டத் தெரிய வேண்டும். இப்படி எல்லாத் தொழில்களையும் தெரிந்து கொண்டு அந்த அந்த வித்தைகளுக்கும் ஏற்ற ஜாதியினருக்கு அந்த அந்த வித்தையைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இவனே அவற்றில் ஒரு விருத்தியிலும் [தொழிலிலும்] நுழையக் கூடாது. வேத அத்தியயனம்தான் பண்ண வேண்டும். வேறே தொழில் நடத்தி அதிக லாபம் ஸம்பாதிக்க வரக்கூடாது.

தநுர்வேதம் விச்வாமித்ரருக்குத் தெரியும். விச்வாமித்ரர் யாகம் பண்ணினார். அதை ஸுபாஹு, மாரீசன் என்னும் ராக்ஷஸர்கள் வந்து கெடுக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது அவர், "எனக்குத்தான் தநுர்வேதம் தெரியுமே! நானே இவர்கள் போரில் அஸ்திரங்களைப் போடுகிறேன்" என்று எண்ணிப் போடவில்லை. ராம லக்ஷ்மணர்களைக் கூட்டிக் கொண்டு வந்தே அந்த ராக்ஷஸர்களை தொலைக்கச் சொன்னார். வழியிலே இவரேதான் அவர்களுக்கு அஸ்திர-சஸ்திர வித்தை உபதேசித்தார்!

ஆகையால் பிராம்மணன் வேத அத்யயனத்தை மாத்திரம் ஜாக்கிரதையாக ரக்ஷித்து வர வேண்டும். ஆனால் மற்ற எல்லாவற்றையும் அவன் தெரிந்து கொள்ள வேண்டும். 'கத்தி சுற்றத் தெரியுமா?' என்றால் 'தெரியும்' என்று சொல்ல வேண்டும். 'சிகித்ஸை முறை தெரியுமா?' என்றால் 'தெரியும்' என்று சொல்ல வேண்டும். 'சித்திரம் எழுதுவாயா?' என்றால் 'எழுதுவேன்' என்று சொல்ல வேண்டும். வர்ணாச்ரம தர்மத்துக்குத் தக்கபடி அந்த அந்தத் தொழிலாளியைச் சிஷ்யனாக்கிக் கொண்டு அந்த அந்த வித்யையைச் சொல்லிக் கொடுத்து அவன் தரும் குரு தக்ஷிணையைக் கொண்டு ஜீவிக்க வேண்டும். குரு தக்ஷிணை கொஞ்சமாக இருந்தாலும் திருப்தி அடைய வேண்டும்.

அப்படி எங்கேயானும் ஓரிரண்டு இடங்களில் ஒரு ஜாதிக் காரனுக்கு தனிச் சலுகை கொடுத்திருக்கிறது என்று தோன்றும்படியிருந்தாலும் அதற்கு நியாயமான காரணம் இருக்கும். டிக்கட் கொடுக்கும் இடத்தில் டிக்கெட் கொடுப்பவனை மட்டும் தனி ரூமில் வைத்து, மற்றவர்கள் வெளியிலிருந்து வாங்கிக் கொள்வது ஸமத்வமாகாது என்று எல்லாரும் உள்ளே புகுந்துவிட்டால் டிக்கெட் கொடுப்பவன் என்ன செய்வான்? மற்றவர்களுக்குந்தான் ஒழுங்காக டிக்கெட் கிடைக்குமா? ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் கடமைகளைச் செய்யச் சில சௌகரியங்கள் இருக்க வேண்டும். ஒரு பொது குடும்பத்தில் ஒருவருக்கு வியாதி உண்டானால் அவருக்குச் சில ஸௌகரியங்கள் செய்து கொடுக்கிறோம். மற்றவருக்கும் அப்படி வேண்டுமென்பது நியாயமா? எல்லாருக்கும் பொதுவான தர்மங்களும் நம் மதத்தில்

நிறைய இருக்கின்றன. கடமையைச் செய்வதற்குச் சில ஸௌகரியங்கள் வேண்டுமல்லவா? வாஸ்தவத்தில் அவை ஸௌகரியங்களல்ல; சலுகையுமல்ல. அவர்களுக்குள்ள அந்த விசேஷ தர்மம் ஸமூஹத்துக்குப் பயன்படுவதற்கே வேண்டியவைதாம் இந்த சில வசதிகள். இதை எல்லாரும் அங்கீகாரம் செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்கள் செய்வது தங்களுக்காக மட்டுமல்ல; எல்லோருக்கும் ஸௌக்யம் உண்டாவதற்காகவே அவர்கள் தங்கள் விசேஷ தர்மங்களை அநுஷ்டிக்கிறார்கள்.

ஹ்ருதயத்தில் அன்பும் ஒற்றுமையும் இருக்க வேண்டும். எல்லாம் ஒரே ஜாதி என்று சேருவதால் மட்டும் ஒற்றுமை வந்துவிடாது. ஒன்றாகக் கல்யாணம் பண்ணிக் கொண்டும், ஒரே ஜாதியாகக் கட்டிப் புரண்டு கொண்டும் இருக்கிற மேல் நாடுகளில் இருக்கிற பரஸ்பரப் போட்டியும் த்வேஷமும் கொஞ்சமா நஞ்சமா? நம்முடைய சாஸ்திர தர்மப்படி ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் காரியங்களைச் செய்து கொண்டு மற்றவர்களுடைய காரியங்களும் நடக்கும்படி செய்து மனஸில் ஒற்றுமையாகவே இருந்து வந்தார்கள். மாமனாரிடம் மருமகள் பேசுவதில்லை; மரியாதைக்காக அப்படி இருக்கிறாள்; அது த்வேஷம் ஆகுமா? நமக்கு ரொம்பவும் நெருங்கிய நம் ஜாதிக்காரரான ஒருவருக்கே ஏதாவது தீட்டு வந்துவிட்டால் நாம் அவர் தொட்டுச் சாப்பிடுவதில்லை. அவரைத் தொடுவதில்லை; அதனால் த்வேஷம் உண்டா? இந்த மாதிரி உள்ளவைகளை த்வேஷமென்று சொன்னால் அது நம் பார்வையில் உள்ள தோஷம்தான். நமக்குள்ள மனக் கலக்கத்தினால் நம்முடைய தர்மங்கள் தப்பாகத் தோன்றுகின்றன.

அனைத்தும் அனைவர் பொருட்டுமே!

அனைத்தும் அனைவர் பொருட்டுமே!

பிராம்மணன் கொடுக்கும் வைச்வதேவத்தில் பஞ்சமனுக்கும் வீட்டு வாசலில் பலி போட வேண்டும் என்று சாஸ்திரம் சொல்கிறது. வேதத்தில் சொன்ன ஸகல கர்மமும் "லோகா:ஸமஸ்தா:ஸுகினோ பவந்து" (உலகிலுள்ள உயிர்க்குலம் முழுவதும் இன்பம் அடைய வேண்டும்) என்ற லட்சியத்துக்காக ஏற்பட்டதுதான். வேத சப்தமும் யஜ்ஞமும் எல்லார் நலனுக்காகவும்தான்.

ஒரு க்ஷத்ரியன் அரசாள்வது, போர் செய்வது, police [காவல் பணி] செய்வது எல்லாம் ஸமஸ்த ஜனங்களின் நன்மையின் பொருட்டே யாகும்.

வைச்யன் வியாபாரம் பண்ணி லாபத்தை எல்லாம் தனக்கே மூட்டை கட்டிக் கொள்கிறான் என்று நாம் நினைத்தால் தப்பு. அவனும் பெரிய சமூக சேவை செய்கிறான்.

வைச்யர்கள் செய்யவேண்டிய தருமத்தை பகவான் கீதையில் ஒரு ச்லோகத்தில் சொல்லியிருக்கிறார்: 'கிருஷி கௌரக்ஷ வாணிஜ்யம் வைச்யம் கர்ம ஸ்வபாவஜம்' என்று [கீதை XVIII.44]. வைசியர்களுக்கு இங்கே முக்கியமான மூன்று காரியங்கள் சொல்லியிருக்கிறது.'கிருஷி' என்றால் பூமியை வைத்துக் கொண்டு உழுது சாகுபடி செய்து ஜனங்களுக்கு உபயோகப்படுத்த வேண்டியது. அடுத்தது பசுவை ஸம்ரக்ஷிக்க வேண்டியது. மூன்றாவது, வியாபாரத்தினால் ஜனங்களுக்கு உபகாரம் செய்யவேண்டியது ஒரு வைசிய தர்மம். பசுவை நன்றாக ஸம்ரக்ஷணை செய்து அதன் கன்றுக்குக் கண்டு பாக்கியுள்ள பாலை யஜ்ஞங்களுக்கும் ஜனங்களுக்கும் உபயோகப் படுத்த வேண்டும். அவ்வளவு புஷ்டியாகப் பசுவை ஸம்ரக்ஷிப்பது இன்னொரு முக்கிய தர்மம். வியாபாரமானது வைச்யர்களுக்கு மூன்றாவது முக்கியமான தர்மம். அதாவது வெகு தூரமான தேசங்களில் விளையும் கோதுமை, பெருங்காயம், குங்குமப்பூ போன்ற ஸாமான்களை ஓர் இடத்தில் சேகரித்து ஜனங்களுக்கு விற்று உபகாரம் செய்வதே ஒரு தர்மம். ஒரு மனிதனுக்கு லட்சக்கணக்கான பணம் இருந்தும் பயிர் முதலியவை இல்லாத பாலைவனத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தால், இந்த பணத்தைக் கொண்டு மாத்திரம் அவன் ஜீவிக்க முடியுமா? அதே மாதிரி நெல் ஏராளமாக விளையும் தேசத்தில் நெல்லை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்றவை இல்லாமல் ஜீவிக்க முடியுமா? ஆகையால் வியாபாரம் என்பது பல இடங்களில் கிடைக்கும் ஸாமான்களை ஓர் இடத்தில் சேகரித்து ஜனங்களுக்குக் கிடைக்கப் பண்ணும் பெரிய உபகாரம் என்று தெரிகிறது. இது வைசியருக்கு முக்கிய தர்மமாக ஏற்பட்டிருக்கிறது. வைசியர்கள் தமக்கு வியாபாரம் வேண்டாமென்றிருப்பது பாபம். அதே மாதிரி ஒரு பிராம்மணன் கர்மாநுஷ்டானத்தை விட்டுவிட்டுக் கண்ட

தொழிலைப் பண்ணிக் கொண்டு பணம் ஸம்பாதித்தால் அதுவும் பாபம். வியாபாரத்தை அவரவர்கள் லாபத்தை உத்தேசித்துச் செய்கிறார்கள் என்று நினைக்கக் கூடாது. ஏனென்றால் ஒரு ஸமயம் ஒரு வாரம் ஹர்த்தால் ஏற்பட்டுக் கடைகள் மூடப்பட்டிருந்ததால் அப்பொழுது ஒரு ஸாமானும் கிடைக்காமல் ஜனங்கள் படும் சிரமம் சொல்லி முடியாது. ஆகையால் வியாபாரம் பொது பிரயோஜனத்தை உத்தேசித்ததே தவிர சொந்த பிரயோஜனத்தை மட்டும் உத்தேசித்ததல்ல. வைசியர்கள் வியாபாரத்தைத் தங்கள் லாபத்துக்காகச் செய்கிறோமென்று எண்ணாமல் ஸமூஹ நலனுக்காக பகவானால் ஏற்படுத்தப்பட்ட காரியத்தைச் செய்கிறோமென்று நினைத்து செய்ய வேண்டும்.

நாலாம் வர்ணத்தவரின் அநுகூல நிலை

நாலாம் வர்ணத்தவரின் அநுகூல நிலை

நாலாவது வர்ணத்தவரின் தர்மம் மற்ற எல்லா விதமான சரீர உழைப்பையும் பண்ணுவது. மற்றவர்களுக்கு உள்ள status (அந்தஸ்து) , சௌகரியம் இவர்களுக்கு இல்லை என்று தோன்றும். ஆனால் இவர்களுக்கு ஆசாரக் கட்டுப்பாடுகளை ரொம்பக் குறைத்து ஸ்வதந்திரமாக விட்டிருப்பதையும் கவனிக்க வேண்டும். இவர்கள் மற்ற எல்லாரைக் காட்டிலும் திருப்தியாக, பகவானுக்குக் கிட்டத்தில் இருந்து வந்தார்கள். "கலியுகம் மட்டம் இல்லை; நாலாவது வர்ணத்தவர்கள் மட்டம் இல்லை. கலிதான் ரொம்பவும் உசத்தி; நாலாவது வர்ணத்தவர்கள்தான் ரொம்ப உசந்தவர்கள் – "கலி:ஸாது சூத்ர:ஸாது" என்று ஸாட்சாத் வியாஸாசாரியர்களே சொல்லியிருக்கிறார். ஏன்? மற்ற மூன்று யுகங்களிலும் தியானம், தபஸ், பூஜை என்று ரொம்பவும் கஷ்டப்பட்டாலே அடைய முடிகிற பகவானை நாம ஸங்கீர்த்தனத்தாலேயே கலியில் எளிதில் அடைந்து விடலாம். அதனால் "கலி:ஸாது" என்கிறார். பிராம்மணன், க்ஷத்ரியன், வைச்யன் என்ற மற்ற மூன்று வர்ணத்தவர்களுக்கும் கர்வம் உண்டாக இடம் இருக்கிறது. தங்களைப் பற்றி அவர்களுக்கு இப்படி ஒரு அஹங்காரம் உண்டாகிவிட்டதானால் அப்புறம் ஆத்மா கிடைக்கிற வழியேயில்லை. 'நமக்கு புத்தி வன்மை இருக்கிறது' என்று பிராம்மணனும், 'நமக்கு அதிகார சக்தி இருக்கிறது' என்று க்ஷத்ரியனும்,

'நமக்கு பண பலம் இருக்கிறது' என்று வைசியனும் அஹங்காரப் பட்டுக் கொண்டு தப்பாக போவதற்கு இடமிருக்கிறது. நாலாவது வர்ணத்தவனுக்கு இப்படி இல்லை. அடக்க குணத்துக்கு இடமாக இருக்கிறவன் அவன். "அடக்கம் அமரருள் உய்க்கும்" என்று வள்ளுவர் கூடச் சொல்கிறார் அல்லவா? அதனால் அவன் ஸ்வாமிக்குக் கிட்டேயே இருக்கிறான். அஹங்காரம் வந்துவிடக் கூடாது, அதை அழித்து ஜீவனை பகவத் பிரஸாதத்துக்கு உரியவனாகப் பண்ண வேண்டுமென்பதற்காகத்தான் மற்ற மூன்று வர்ணத்தாருக்கு வேதத்திலும் வேத காரியங்களிலும் மூன்று grade -களில் அதிகாரம் கொடுத்திருக்கிறது. அந்த வைதிக கர்மாநுஷ்டானங்களைப் பண்ணுவதானால் அதற்கு நிரம்ப ஆசாரங்கள், ஸ்நான-பான-ஆஹார நியமாதிகள் உண்டு. இந்த நியமம் என்ற பத்தியம் இருந்தால்தான் வேத மந்திரம் என்ற மருந்து வேலை செய்யும். ஆசாரம் தப்பினால் அபசாரம். அது பெரிய பாபம். அதற்காகக் கஷ்டம் அநுபவித்தாக வேண்டும். அதனால் எப்போதும் அவர்கள் கண்குத்திப் பாம்பாக ஆசாரங்களை அநுஷ்டித்தாக வேண்டும். நாலாவது வர்ணத்தவனுக்கு இப்படி இல்லை. அவனுக்கு நியமங்கள் ரொம்பவும் குறைச்சல்தான். அவன் செய்கிற உழைப்பே அவனுக்கு சித்த சுத்தி, அதுவே அவனுக்கு வேத கர்மாநுஷ்டானம், ஸ்வாமி எல்லாமும்! இப்படி அவனுக்கு எளிதில் ஸித்தி ஏற்படுகிறது. இதனால்தான் "சூத்ர:ஸாது" என்று வியாஸரே இரண்டு கைகளையும் உயரத் தூக்கிக் கொண்டு சபதம் பண்ணினார்.

அவனுக்கு வயிறு ரொம்ப ஆகாரம் கிடைக்காவிட்டால், அவனுக்கு மானத்தை ரக்ஷிக்கத் துணி கிடைக்காவிட்டால், அவனுக்கு மழை வெயிலிலிருந்து காப்பாக ஒரு குடிசை இல்லாவிட்டால் அது சமூஹத்துக்கு பாபம்; ராஜாங்கத்துக்கு பாபம். இந்த வசதிகளைப் பண்ணித்தர வேண்டும். இதே வசதிகளை - இவற்றுக்குத் துளிக்கூட அதிகமில்லாமல்தான் - பிராம்மணர்களும் பெற்றிருந்தார்கள் என்று முன்னே சொன்னதை திருப்பிச் சொல்கிறேன். அதாவது பொருளாதார லெவலில் பக்ஷபாதம் செய்ததாகச் சொல்லவே கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

மரியாதைக் குறைவல்ல;அஹம்பாவ நீக்கமே!

மரியாதைக் குறைவல்ல; அஹம்பாவ நீக்கமே!

"அது சரி, ஆனால் 'ஸ்வய மரியாதை என்ன ஆவது?' என்று சோஷலிசம் சொல்கிற சீர்திருத்தக்காரர்கள் கேட்டால் அவர்கள் தங்கள் கொள்கைக்கு தாங்களே ஆக்ஷேபம் தெரிவிப்பதாகத்தான் ஆகிறது. இவர்கள் என்ன சொல்கிறார்கள்? Dignity of Labour (உழைப்பின் கௌரவம்) என்று நிறையப் பேசுகிறார்கள். ஒரு வேலை கூடத் தாழ்த்தியில்லை என்கிறார்கள். காந்தி கக்கூஸைக் கூடத் தாமே கழுவுவது என்று வைத்துக் கொண்டிருந்தார். ராஜகோபாலாச்சாரி பிரதம [முதன்] மந்திரியாக இருந்தபோதுகூடத் தாமே துணி தோய்த்துக் கொண்டார். இந்த டிக்னிடி ஆஃப் லேபரை காட்டுவதற்காகத்தான் வருஷத்தில் ஒரு நாள் மேயர் மாதிரியானவர்களே துடைப்பக் கட்டையை வைத்துக் கொண்டு தெருவைப் பெருக்குகிறார்கள். இதைப் பேப்பரில் ஃபோட்டோ பிடித்துப் போடுகிறார்கள். ஆகையால் சரீரத்தால் உழைத்துச் செய்கிற தொழில் ஸ்வயமரியாதைக்குக் குறைச்சல் என்று இவர்களே இன்னொரு பக்கத்தில் சொன்னால் அது ஒன்றுக்கொன்று முரண்தான்.

என்னைக் கேட்டால் 'status', 'ஸ்வயமரியாதை' என்றெல்லாம் சொல்வதைவிட, அஹங்காரம் என்ற வார்த்தையைச் சொல்லிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும். பிராம்மணனுக்கும் க்ஷத்ரியனுக்கும் வைசியனுக்கும் ஏற்படக்கூடிய அஹங்காரம் மற்றவனுக்கு ஏற்படவில்லை என்கிற angle -ல் [கோணத்தில்] இதைப் பார்த்தால், வியாஸர் சொன்னமாதிரி நாமும் "சூத்ர:ஸாது" என்றுதான் முடிவு கட்டுவோம். இப்போது அபேதவாதத் தலைவர்கள் சொல்கிற மாதிரிதான் சாஸ்திரங்களிலும் எல்லா விதமான காரியங்களும் உசந்தவை என்று ஸமமாகச் சொல்லியிருக்கிறது. இவர்கள் லௌகிக (material) மட்டத்தில் மட்டும் இருந்துகொண்டு சொல்வதையே சாஸ்திரத்தில் ஆத்மாபிவிருத்திக்கு உரியதாக (spiritual -ஆக) ச் சொல்லி அதிலே பக்தியையும் கலந்து கொடுத்திருக்கிறது. அதாவது, 'லோக க்ஷேமத்துக்காகப் பல தினுஸான காரியங்கள் நடக்க வேண்டியிருப்பதால் அவற்றுக்குள் உயர்த்தி–தாழ்த்தி என்பதே இல்லை. அவரவரும் தங்களுக்கு லபித்த தொழிலை ஈச்வரார்ப்பணமாகச் செய்தால் சித்த சுத்தி பெறலாம்' என்கிறது.

ஈச்வரார்ப்பணம் என்கிற போது பக்தி வந்துவிடுகிறது. சித்த சுத்தி என்பது ஆத்ம ஞானத்தில் கொண்டு சேர்க்கிறது.

ஆகவே 'டிக்னிடி ஆஃப் லேபர்' என்று பார்த்தாலும் சரி, சித்த சுத்திக்காக ஈச்வரார்ப்பணம் பண்ணப்படவேண்டியதே கர்மா என்று பார்த்தாலும் சரி – இரண்டு விதத்திலும் 'ஸ்வயமரியாதை' என்கிற வார்த்தை அடிபட்டுப் போய் விடுகிறது. அஹம்பாவமில்லாமல் செய்தால் 'நமக்கு இந்த ஆசாரம் இருக்கிறதே, அல்லது இல்லையே', 'இந்த அநுஷ்டானம் இருக்கிறதே, அல்லது இல்லையே' என்ற குறைகள், கோபதாபங்கள் உண்டாகாது. இந்தத் தொழிலுக்கு இந்த ஆசாரம், இந்த ஆஹாரம்தான் சரி என்று ஒப்புக் கொள்ளத் தோன்றும். பிராம்மணன் க்ஷத்ரியனையும் வைசியனையும் போல ஸௌக்கியங்களை அநுபவித்தால் மந்திர சக்தியே இராது. ஒரு தொழிலாளி பிராம்மணனைப் போல உபவாஸம் இருந்தால் அவனால் உடலுழைப்புப் பண்ணவே முடியாது.

ஒரு சின்ன விஷயம் விஷயம் ஒருத்தர் சொன்னார். 'சாஸ்திரத்தில் பிராம்மணன் வெள்ளை வஸ்திரமும், க்ஷத்ரியன் சிவப்பு வஸ்திரமும், வைச்யன் மஞ்சள் வஸ்திரமும், நாலாம் வர்ணத்தவன் நீல வஸ்திரமும் உடுத்த வேண்டும் என்றிருக்கிறது. முதலில் இதெல்லாங்கூட மட்டம் தட்டுகிற அபிப்ராயமே எனக்குத் தெரிந்தது. அப்புறம்தான் எனக்கு அதிலுள்ள நியாயம் புரிந்தது' என்றார். நான்கூட அப்போது இதைப் பற்றி நினைத்துப் பார்த்ததில்லை. ஆகையால், "இதிலே என்ன நியாயமிருக்கிறது? என்று கேட்டேன். "வெள்ளை வஸ்திரமாயிருந்தால் கொஞ்சம் ஏதாவது கறை பட்டாலும் தெரிந்துவிடும். பிராம்மணன் யஞ்ஞாதிகள் பண்ணுகிறபோது எந்த திரவியத்தையும் சிந்தாமல், வீணாக்காமல் ஜாக்கிரதையாக செலவழிக்காவிட்டால் அவனுடைய வஸ்திரமே காட்டிக் கொடுத்து விடும். பிறரை உபத்ரவித்துப் பணம் வாங்கக் கூடாத அவனுக்கு இந்த ஜாக்கிரதையும் சிக்கனமும் வேண்டும் என்றே வெள்ளை வஸ்திரம். க்ஷத்ரியன் யுத்தம் செய்கிறவன்; ரத்தம் சிந்துகிறவன். சிந்தப் பண்ணுகிறவன். இது தவிர்க்க முடியாதது. ஆனால் துணியைப் பாழாக்கிப் பயமுறுத்துகிற மாதிரி இது தெரியக் கூடாது என்றே சிவப்பு வஸ்திரமாக வைத்திருக்கிறது. வைசியர்கள் மண்டியில் பல

ஸாமான்களை கையாண்டாலும் மஞ்சள்தான் சட்டென்று துணியில் ஒட்டிக் கொண்டு குபீரென்று தெரிவது. அவர்களுக்கான பசு ரக்ஷணையைப் பார்த்தாலும் மாட்டுக்கு நிறைய மஞ்சள் பூச வேண்டியிருக்கிறது. இந்த மஞ்சள் ஒட்டிக் கொண்டு தெரியாமலிருக்கத்தான் மஞ்சள் கலரிலேயே வஸ்திரம். நிலத்தில் புழுதியில் வேலை செய்கிறவர்களுக்கு நீல வஸ்திரமானால்தான் அழுக்கு தெரியாது. இந்தக் காலத்தில் கூட ஃபாக்டரிகளில் தொழிலாளர்களுக்கு நீல யூனிஃபாரம் தான் கொடுத்திருக்கிறார்கள். எனவே அந்த ஜாதிக்கு நீலம் வைத்ததும் நியாயம்தான்" என்றார். யோசித்துப் பார்த்தால் இப்படி ஒவ்வொரு வித்யாஸத்திலும் நியாயம் தெரியும். அவரவருக்கு ஸௌக்கியமானதை உத்தேசித்து சாஸ்திரம்; "சாஸ்த்ராய ச; ஸுகாய ச" என்பதன் அர்த்தம் புரியும். இப்படி பலவற்றில் அர்த்தம் புரிவதாலேயே புரியாதவற்றிலும் உள்ளூர அர்த்தம் இருக்கவேண்டுமென்று தெரியும்.

"ஒருத்தன் செய்தால் தர்மமாக, புண்ணியமாக இருப்பதே இன்னொருத்தன் பண்ணினால் பாபமாக ஆகிறது என்று சொல்வதெப்படி?" என்று இப்போது புத்திசாலிகளும் புரிந்து கொள்ளாமல் கேட்கிறோம். முன்னாளில் பாமர ஜனங்களும், இப்படிக் காரியங்களை மாற்றிக் கொண்டால் ஸமூஹத்துக்காக மொத்தத்தில் நடக்க வேண்டியவை எல்லாம் ஏறுமாறாவதால் இது அதர்மந்தான், பாபந்தான் என்று புரிந்து கொண்டு சாஸ்திரப்படியே செய்து வந்தார்கள். ஈச்வர ஸந்நிதானம், உத்ஸவம், பொதுத்தொண்டு தவிர பாக்கி விஷயங்களில் ரொம்பக் கலந்து கொண்டால் ஆஹாரம் முதலான எல்லா விஷயங்களிலுமே மாறிப் போகத் தோன்றும். ஒவ்வொரு ஆசாரமும் அந்த ஜாதியின் தொழிலுக்கு உதவுவதால், இப்படி ஒரேடியாக கலப்பது முடிவில் ஸமூஹ நன்மைக்கான தொழில் முறையையே கெடுக்கும் என்று அறிந்திருந்தார்கள். அதிலே ஒரு நிறைவு, ஸௌக்கியம் இல்லாமலா இத்தனை மெஜாரிட்டி ஜனங்கள் ஆயிரம் பதினாயிரம் வருஷங்கள் ஆக்ஷேபமில்லாமல் அநுஸரித்தார்கள்? பிற்பாடும் தன்னால் இங்கே இந்த வாதங்கள் வந்திருக்காது. வெள்ளைக்காரன் வந்தது, அதனால் பிராம்மணர்களுக்கு ராஜமானியங்கள் போனது, அதே சமயம் அவர்களுக்கு வெள்ளைக்கார ஆட்சியில் உத்யோகங்கள் கிடைத்தது, மெஷின்களும் நகர

வாழ்க்கையும் ஏற்பட்டுக் கைத்தொழிலும் கிராம வாழ்க்கையும் நசிந்தது, இதனால் மற்றவர்கள் தொழிலுக்குக் கஷ்டப்படும்போது இவர்கள் மட்டும் நகத்தில் அழுக்குப்படாமல் சம்பாதித்தது, இதனால் ஏற்பட்ட போட்டி – இப்படி சாதுர்வர்ண [நான்கு வர்ண] ஏற்பாட்டின் அஸ்திவாரத்தில் ஆட்டம் கொடுத்திருக்கிற சமயத்தில் வெள்ளைக்காரன் புதிய ஸமத்வக் கொள்கைகளையும், ரேஸ் தியரி [இனக் கொள்கை] யையும் கொண்டு வந்து விட்டதால் தான் சாஸ்திர நம்பிக்கையுள்ள பொது ஜனங்களின் மனசு மாறிவிட்டது. ஈச்வராநுக்ரஹத்தில் அது பழையபடி மாறினால், பிராமணனிலிருந்து பஞ்சமன் வரை ஒவ்வொருத்தனும் செய்கிற காரியம் அவனவனுக்குச் சித்த சுத்திக்கான ஸாதனம்; அதே சமயத்தில் ஒவ்வொருவன் செய்வதும் லோக க்ஷேமத்தை உத்தேசித்துத்தான் என்று புரிந்துவிடும். இதையெல்லாம் அலசி ஆலோசனை பண்ணிப்பார்த்தால், நம்முடைய மதத்தில் மட்டும் இருக்கிற வர்ண தர்மத்தைப் பற்றி, நமக்குக் குறைவும் அவமானமும் ஏற்படுவதாகவும் ஆரம்பத்தில் சொன்னேனே, அது அப்படியே மாறி, இந்த ஏற்பாட்டில் பெருமையும் இதை வகுத்துக் கொடுத்தவர்களிடம் மரியாதையும் உண்டாகும்.

நான் சொல்வதன் நோக்கம்

நான் சொல்வதன் நோக்கம்

கைத் தொழில்கள் போய் ஆலைத் தொழில்களும், ஸமூஹம் சின்ன சின்னதாக வாழ்ந்த கிராம வாழ்க்கை போய் நகர வாழ்க்கை உண்டாகி, தேவைகளும் தொழில்களும் கணக்கில்லாமல் பெருகி, வாழ்முறையே சன்ன பின்னலாக ஆகிவிட்ட இப்பொழுது பழையபடி பாரம்பரியத் தொழிலையே ஏற்படுத்துவதென்பது அஸாத்யமாகத் தான் தோன்றுகிறது. க்ஷத்ரியர்கள்தான் மிலிடரியில் இருக்கலாம், வைசியர்தான் வியாபாரம் பண்ணலாம், நாலாம் வர்ணத்தார் தொழிலாளிகளாக உழைப்பது தவிர வேறே செய்யக்கூடாது என்றால் இப்போது நடக்கிற காரியமா? அப்படி நடத்தப் பண்ணுகிறது முடியக் கூடியதா? இந்தப் பிரத்யக்ஷ நிலைமை எனக்குத் தெரியாமலில்லை. பின்னே ஏன் வர்ண தர்மத்தை இப்படி நீட்டி முழக்கி ஸ்தோத்ரம் பண்ணுகிறேன் என்றால் இரண்டு காரணமுண்டு:

ஒன்று – இப்போது நாம் எப்படியிருந்தாலும் சரி, பழைய வழிக்கு நாம் போகவே முடியாவிட்டாலும் சரி, "அந்த வழி ரொம்ப தப்பானது; அது சில vested interest -களால் (சுயநல கும்பல்களால்) தங்கள் ஸௌகரியத்துக்காகவே பக்ஷபாதமாக உண்டாக்கப்பட்ட அநீதியான முறை" என்று இப்போது எல்லாரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே, இப்படிச் சொல்வது சரியே இல்லை என்று உணர்த்துவது. அவனவனும் சித்த சுத்தி பெறவும், ஸமூஹம் கட்டுக்கோப்புடன் க்ஷேமத்தை அடையவும், கலாசாரம் வளரவும் தர்மத்தைப் போல் ஸஹாயமான ஸாதனம் எதுவுமில்லை என்று புரிந்து கொள்ள வைப்பது ஒரு காரணம்.

இதைவிட முக்கியமான காரணம் இப்போது க்ஷத்ரிய, வைச்ய, சூத்ர ஜாதிகளின் தொழில் முறை கலந்தாங்கட்டியாக ஆகியிருந்தாலுங்கூட, எப்படியோ ஒரு தினுசில் ராஜ்ய பரிபாலனம் – ராணுவ காரியம், பண்ட உற்பத்தி – வியாபாரம், தொழிலாளர் செய்ய வேண்டிய ஊழியங்கள் ஆகியவை நடந்து கொண்டுதான் இருக்கின்றன. தேசத்தின் practical necessity -யாக (நடைமுறைத் தேவைகளாக) அன்றாட வாழ்வுக்கும் ராஜாங்கம் நடத்துவதற்கும் இந்தக் காரியங்கள் நடந்தே ஆகவேண்டியிருப்பதால், கோணாமாணா என்றாவது நடந்து விடுகின்றன. ஆனால் இவற்றுக்கெல்லாம் பூர்த்தியை உண்டாக்குவதான பிராம்மண வர்ணத்தின் காரியம் மட்டும் அடியோடு எடுபட்டுப் போய்க் கொண்டிருக்கிறது. ஸகல காரியங்களுக்கும் ஆதாரமாக இருக்கிர தர்மங்களை எடுத்துச் சொல்லியும் வாழ்ந்து காட்டியும் பிரசாரப்படுத்துவது, வேதங்களைக் கொண்டு தேவ சக்திகளை லோகக்ஷேமார்த்தமாக அநுக்கிரஹம் பண்ணவைப்பது, தங்களுடைய எளிய தியாக வாழ்க்கையால் பிறருக்கும் உயரந்த லட்சியங்களை ஏற்படுத்துவது, ஸமூஹத்தின் ஆத்மிக அபிவிருத்தியை உண்டாக்குவது, கலைகளை வளர்ப்பது – என்பதான பிராம்மண தர்மம் போயே போய்விடுகிற ஸ்திதியில் இருக்கிறோம், இது ஸூக்ஷ்மமானதால், practical neccesity என்று எவருக்கும் தெரியவில்லை. மற்ற மூன்று வர்ணங்களின் தொழில் நடக்காவிட்டால் நமக்கு வாழ்க்கை நடத்துவதற்கே முடியாது என்பதுபோல இது தோன்றவ்ல்லை. ஆனால் வாஸ்தவத்தில் வாழ்க்கைக்கு அர்த்தம் தந்து அது நிறைவான வாழ்க்கையாவதற்கு

வழி செய்வது இதுதான். இதை விட்டு விட்டு மற்றவற்றில் மட்டும் கவனம் வைக்கிறோம். அவற்றில் உயர்வை அடைந்தால் prosperity, prosperity (ஸுபிக்ஷம்) என்று பூரித்துப் போகிறோம். ஆனால் ஆத்மாபிவிருத்தியும், கலாசார உயர்வுமில்லாமல் லௌகிகமாக மட்டும் உயர்ந்து என்ன பிரயோஜனம்? இந்த உயர்வு உயர்வே இல்லை என்று அமெரிக்கர்களுக்கு இப்போது ஞானம் வந்திருக்கிற மாதிரி நமக்கும் ஒரு நாள் வரத்தான் செய்யும். அதனால், மற்ற ஜாதிக் குழப்பங்கள் எப்படியானாலும், தேசத்தின் ஆத்மாவைக் காப்பாற்றிக் கொடுக்க பிராம்மண ஜாதி ஒன்று மட்டுமாவது, ஒழுங்காக ஸகல ஜனங்களுக்கும் வழிகாட்டிகளாக இருந்து கொண்டு, எளிமையாக, தியாகமாக வாழ்ந்து கொண்டு, வைதிக கர்மாக்களைச் செய்து லோகத்தின் லௌகிக-ஆத்மிக க்ஷேமங்களை உண்டு பண்ணிக் கொண்டு இருக்கும்படியாக செய்யவேண்டும். இந்த ஒரு ஜாதியை நேர்படுத்திவிட்டாலே மற்ற ஜாதிகளில் ஏற்பட்டிருக்கிற குழப்பங்களும் தீர ஆரம்பித்துவிடும். எந்த தேசத்திலும் இல்லாமல் தர்ம ரக்ஷணத்துக்கென்றே, ஆத்மாபிவிருத்திக்கென்றே யுகாந்தரமாக ஒரு ஜாதி உட்கார்ந்திருந்த இந்த தேசத்தில் அது எடுபட்டுப் போய் ஸகலருக்கும் க்ஷீணம் உண்டாக விடக்கூடாது என்று, இந்த ஒரு ஜாதியை உயிர்பித்துக் கொடுப்பதற்காகத்தான் இவ்வளவும் முக்யமாகச் சொல்கிறேன். தங்களுக்கு உசத்தி கொண்டாடிக் கொண்டு, ஸௌகர்யங்களை ஏற்படுத்திக் கொண்டு, ஹாய்யாக இருக்கிறதல்ல நான் சொல்கிற பிராம்மண ஜாதி, ஸமூஹ க்ஷேமத்துக்காக அநுஷ்டானங்களை நாள் பூரா பண்ணிக் கொண்டு, எல்லாரிடமும் நிறைந்த அன்போடு, பரம எளிமையாக இருக்க வேண்டியதே இந்த ஜாதி. இதை குல தர்மப்படி இருக்கப் பண்ணிவிட்டால் நம் ஸமூஹமே தர்ம வழியில் திரும்பிப் பிழைத்துப் போய்விடும் என்கிற உத்தேசத்தில் தான் இத்தனையும் சொல்வது.

ஸர்வரோக நிவாரணி

ஸர்வரோக நிவாரணி

ஜாதிமுறையினால் பிரிந்திருந்ததால் முன்னே தேசத்தில் ஒருத்தருக்கொருத்தர் விரோதமாக இருக்கவே இல்லை. இப்போது தான் ஸ்டேட்டுக்கு ஸ்டேட் [மாநிலத்துக்கு மாநிலம்]) குத்துப்பழி

வெட்டுப் பழியாக எல்லைத் தகராறு, ஆற்று ஜலப் பங்கீட்டுத் தகராறு எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. முன்னே காசி யாத்ரீகனுக்காக இங்கே செட்டிப் பிள்ளைகள் சத்திரம் கட்டி வைத்துச் சாப்பாடு போட்டார்கள். இங்கிருந்து காசிக்கும் பத்ரிநாத்துக்கும் போகிறவனுக்காக ஸேட்ஜி தரம்சாலா [தர்மசாலை] வைத்திருந்தான். அதாவது ஈச்வர பக்தியால் எல்லாரும் ஒன்று சேர்ந்து இருந்தார்கள். இப்போது அதுபோய் பாலிடிக்ஸ், புத்தி வாதம் ஆகியன அதிகமாகி விட்டதால்தான் எல்லாமே கோளாறாகி இருக்கிறது.

அதனால் கடைசியில் எல்லாவற்றுக்கும் மருந்தாக, ஸர்வரோக நிவாரணியாக, தேசத்தில் பக்தி வளரவேண்டும் என்றுதான் பிரார்த்தனை பண்ணவேண்டும்.

"ஜாதி ஒழியனும், ஜாதி ஒழியனும்" என்று ஓயாமல் சொல்லிக் கொண்டிருப்பதால், இன்னும் ஜாஸ்தி துவேஷம்தான் உண்டாகிக் கொண்டிருக்கிறது. முப்பது, நாற்பது வருஷமாக இந்தப் பிரசாரம் பண்ணி வந்தாலும்* ஒரு எலக்ஷன் என்று வருகிறபோது இப்போது பார்த்தாலும் ஜாதிதான் முன்னால் நின்று, ஒரு கம்யூனிட்டிக்காரன் இன்னொருவனை அடிப்பது, கத்தியால் குத்துவது என்கிற அளவுக்குப் போய்க் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இது பிராம்மண–அப்பிராம்மண ஜாதித்வேஷம் இல்லை. பிராம்மணனை நல்ல வேளையாக பாலிடிக்ஸிலிருந்து ரொம்ப தூரத்துக்கு வெளியே தள்ளியிருக்கிறது. இவனாக விலகாவிட்டாலும் மற்றவர்களாவது இப்படிக் கழுத்தைப் பிடித்துத் தள்ளியிருக்கிறார்களே என்று கொஞ்சம் ஆறுதலாயிருக்கிறது. அதனால் இப்போது நடக்கிற சண்டை மற்ற ஜாதிகளுக்குள்ளேயே தான்! தெலுங்கு தேசத்தில் கம்மாவுக்கும் ரெட்டிக்கும் சண்டை; கன்னட தேசத்தில் லிங்காயத்துக்கும் இன்னொரு ஜாதிக்கும் சண்டை என்கிற மாதிரி சாஸ்திரங்களில் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத விபரீத ஜாதிச் சண்டைகளையெல்லாம் 'ஈக்வாலிடி' முழக்கம் ரொம்ப ஜாஸ்தியாகவுள்ள இப்போதுதான் பார்க்கிறோம். இங்கே (தமிழ்நாட்டில்) ஒரு ஜில்லாவில் படையாட்சி, இன்னொன்றில் செங்குந்தர் என்று இப்படி ஒவ்வொரு ஜாதிக்காரர்களையே பார்த்து அபேட்சகராக நிறுத்துகிறார்கள். Candidate [வேட்பாளர்] களுக்கிடையே அரசியல் கொள்கையையெல்லாம்

விட்டுவிட்டு, இந்த ஜாதி அடிப்படையிலேயே போட்டா போட்டி நடப்பதைப் பார்க்கிறோம்.

* 1965 ல் கூறியது.

ஒழியணும் மறைந்து வளரணும் வளரட்டும்!

"ஒழியணும்" மறைந்து "வளரணும்" வளரட்டும்!

ஆகையால் 'ஒழியணும்' என்ற கோஷம் உள்ள மட்டும் ஒன்றும் வாஸ்தவத்தில் சரியாகாது. தமிழ்ப் பண்பாட்டையும், திருவள்ளுவர் முதலானவர்கள் அன்பையும் அருளையுமே போற்றிச் சொன்னதையும் ஒரு பக்கம் ஓயாமல் சொல்லிக் கொண்டே, இப்படி 'ஒழிக' கோஷம் போடுவதும், தெருவெல்லாம் எழுதி வைப்பதும் நம் தமிழ் தேசத்துக்குக் கொஞ்சம் கூட ஏற்றதல்லவே என்று என் மனஸுக்கு ரொம்பவும் கிலேசமாக இருக்கிறது. 'ஒழியணும்' என்பதை விட்டு 'வளரணும்' என்று ஆரம்பித்தோமானால் அத்தனை பேதமும், த்வேஷமும், சண்டையும் போய்விடும். 'ஜாதி ஒழியணும்' என்பதற்குப் பதில் இனிமேல் பழையபடி 'பக்தி வளரணும்'; 'கோயில் வளரணும்' என்று ஆரம்பித்து அதற்கானதை ஸகல ஜனங்களும் சேர்ந்து பண்ணினால் ஆதி காலத்திலிருந்து இந்த தேசத்தை ஒரு குடும்பமாகப் பின்னி வைத்து வந்திருக்கிற ஈச்வர பக்தி இப்போதும் நம்மை ஒன்றாக்கிக் காப்பாற்றும். பக்தி வந்து விட்டால், ஜாதி த்வேஷம் போயே போய்விடும். இத்தனை காலமாக இப்படித்தான் இருந்தது. ஜாதி இருந்தது. ஆனால் அதனால் த்வேஷம் இல்லாமலே இருந்தது. 'ஜாதியில் தப்பில்லை; அதனால் த்வேஷமிருப்பதுதான் தப்பு' என்பதைப் புரிந்து கொள்ளாமல், எலி இருக்கிறது என்பதற்காக வீட்டையே கொளுத்தினமாதிரி இப்போது ஜாதியையே எடுத்துவிட வேண்டும் என்று ஆரம்பித்ததில் பழைய நல்ல தொழில் பிரிவினையும், திருப்தியும், சாந்தமும், அடக்கமும், ஸமூஹ ஸௌஜன்யமும் பாழானது தவிர, த்வேஷம் நன்றாகக் கப்பும் கிளையுமாக வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இப்போதாவது விழித்துக் கொண்டு 'அழியணும்' என்கிற எண்ணத்தை விட்டுவிட்டு, 'பக்தி வளரணும்' 'சகலரும் ஒன்று சேர்ந்து பண்ணுகிற சமூகத் தொண்டுகள் வளரணும்' என்று முயற்சி செய்ய ஆரம்பித்தால்,

ஜாதி த்வேஷம் என்பதை ignore [அலக்ஷ்யம்] பண்ணினதாகிவிடும். அதை ரொம்பவும் லக்ஷ்யம் பண்ணி, எதிர்ப்புச் சண்டை போட்டால்தான் அதுவும் பதிலுக்குப் பதில் ஜாஸ்தி வீரியம் அடைகிறது! இப்படிச் செய்யாமல் மற்ற நல்ல விஷயங்களிலேயே கவனத்தைச் செலுத்தி அதை ignore செய்தோமானால், தானே இருந்த இடம் தெரியாமல் போய்விடும். 'மருந்து சாப்பிடுகிறபோது குரங்கை நினைத்துக் கொள்ளாதே' என்றால் தப்பாமல் அந்தக் குரங்கு நினைவுதான் ஒவ்வொரு தரமும் மருந்தை எடுக்கிற போது வரும் என்கிற மாதிரி, "ஜாதி ஜாதி என்று த்வேஷம் கூடாது" என்று சொல்கிற போதே ஜாதியினால் உயர்வு தாழ்வு உணர்ச்சியையும் ஞாபகப்படுத்திக் கொண்டேதான் போகிறோம்!

அதனால் ஸகல ஜாதியாரும் சேர்ந்து கோயில் திருப்பணி, அல்லது தூர்ந்த ஏரியில் மண் வாருவது என்கிற மாதிரியான பெரிய காரியங்களை எடுத்துக் கொண்டு, ஓயாமல் பொதுத் தொண்டுகளில் ஈடுபட்டிருந்தால் தன்னால் அன்பும் ஸமூஹ ஸௌஜன்யமும் ஏற்பட்டுவிடும். இப்போது காரியம் இல்லாமிருப்பதால்தான் எதையாவது நினைத்துக் கொண்டிருக்கத் தோன்றுகிறது. இதிலிருந்துதான் விதண்டாவாதம், வம்பு, தும்பு, 'ஒழிக' சண்டை எல்லாம் உண்டாகின்றன. 'ஒரு சண்டை பூசல்' என்று கிளப்பி விட்டால்தான் ஸ்வாரஸ்யமாயிருக்கிறது. கிளர்ச்சி ஆர்ப்பாட்டம், புரட்சி என்று கிளப்பிவிட்டால்தான் தங்களைச் சுற்றி 'ஜே' போடப் பத்துப் பேர் சேர்கிறார்கள் என்பதால் இம்மாதிரி செய்கிறார்கள். இதற்கெல்லாம் பொழுதேயில்லாதபடி காரியங்களில் ஈடுபட்டிருந்தால் எல்லாம் சரியாகி சாந்தமாகிவிடும். தொண்டைத் தண்ணீர் வற்ற 'ஒழிக' கூச்சல் போட்டுக் கொண்டு, கால் வலிக்க ஊர்வலம் வருவதற்குப் பதில் இந்த man-power- ஐ [மனித சக்தியை] ஏதாவது ஆக்கரீதியான திசையில் திருப்பி விட்டால் எத்தனையோ வளர்ச்சி ஏற்படும். எல்லாவற்றையும் விடப் பெரிய வளர்ச்சி ஸமஸ்த ஜனங்களிடையும் உண்டாகிற அன்புதான். அநுஷ்டானங்கள் பண்ணுவது, கோவிலுக்குப் போவது, உபந்நியாஸத்துக்குப் போவது. லீவு நாளானால் ஸகல ஜாதியாரும் சேர்ந்து நாள் முழுக்க தெய்வப்பணி, ஸமூஹப் பணி செய்வது என்று 'டைட்'டாக டைம் டேபிள் போட்டுக் கொண்டு பண்ண ஆரம்பித்துவிட்டால் இந்த 'ஒழிக',

'வீழ்க' வுக்கெல்லாம் அவகாசமேயில்லாமல் எல்லாரும் வளர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

ஜாதியில் உயர்வு-தாழ்வு நிச்சயமாக இல்லை. மகான்கள் - அப்பர், நம்மாழ்வார், சேக்கிழார், நந்தனார், கண்ணப்பர் மாதிரியானவர்கள் - எந்த ஜாதியிலும்தான் தோன்றியிருக்கிறார்கள். ஆசார்யாளே கண்ணப்பரை ['சிவானந்த லஹரி'] யில் ஸ்தோத்திரம் பண்ணியிருக்கிறார். எவனொருவனும் தான் இன்னொருவனைக் காட்டிலும் உசந்தவன் என்று நினைக்கிறதே பாபம் என்று சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. மஹான்களும் இப்படித்தான் நமக்கு வழிகாட்டியிருக்கிறார்கள். "நாயினும் கடையேன்", 'நாயடியேன்' என்றெல்லாந்தான் அவர்கள் தங்களைச் சொல்லிக் கொள்கிறார்கள். இந்த மனப்பான்மை சுதந்திர யுகத்தில் போய்விட்டதுதான் கோளாறு. பழைய அடக்க மனோபாவம் நமக்கு வரவேண்டும். வந்து விட்டால் காரியத்தில் ஜாதி இருக்குமே தவிர, மனஸில் எள்ளளவும் பேதம் இராது. வாழ்க்கை முறையிலும் பொருளாதார ரீதியிலும் பேதம் இல்லாமல் எல்லாரும் எளிமையாக இருந்து விட்டால் கொஞ்சம் கூடப் பொறாமை, வயிற்றெரிச்சல் இருப்பதற்கு இடமில்லாமல் போகும்.

அந்த மாதிரி நிலையை உடனே ஏற்படுத்துவதற்கான தைரியமும், தியாக புத்தியும் நமக்கு இருந்தாலும் இல்லா விட்டாலும், அப்படிப்பட்ட ஒரு ideal- ஐயாவது [லக்ஷ்ய நிலையையாவது] நாம் புரிந்து கொண்டால், கொஞ்சம் கொஞ்சமாக வழி திறக்க இடமுண்டாகும். இதற்குப் பராசக்தி அநுக்ரஹம் செய்ய வேண்டும்.

மங்களாரத்தி

முதலுக்கு முதல் : முடிவுக்கு முடிவு.

மங்களாரத்தி

முதலுக்கு முதல்; முடிவுக்கு முடிவு

இந்த ராமேச்வரம் ஸ்ரீ சங்கர மண்டபத்தில்* மத்யமான ஸ்தம்பத்தின் உச்சியில் நடுநாயகமாக ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் எழுந்தருளியிருக்கிறார். பின்னால் இருக்கிற நூல் நிலையம் வெறும்

ஹாலாக இல்லாமல் ஸரஸ்வதிதேவியைப் பிரதிஷ்டை செய்ததால் ஸரஸ்வதி மஹாலாக, மஹா (ஆ) லயமாக இருக்கிறது.

ஆசார்யாளின் முதுகுக்குப் பின்னால் ஸரஸ்வதி இருக்கலாமா என்றால் இப்படி இருப்பதிலேயே ஒரு ரஸம் இருக்கிறது. பிரம்மாவின் அவதாரமான மண்டன மிச்ரரை ஆசார்யாள் வாதத்தில் ஜயித்தபின், அவருடைய பத்னியும் ஸரஸ்வதி அவதாரமுமான ஸரஸவாணியையும் ஜயித்தார். மண்டனமிச்ரர் உடனே ஸந்நியாஸம் வாங்கிக் கொண்டு ஆசார்யாளின் பிரதான சிஷ்யர்களில் ஒருவரான ஸுரேச்வராசாரியரானார். ஸரஸவாணியோ வாதத்தில் தோற்றுப்போனவுடன் ஸரஸ்வதி ரூபத்தை அடைந்து, பிரம்ம லோகத்துக்கே கிளம்பிவிட்டாள். ஆனாலும் ஆசார்யாள் பூலோகத்தில் ஒரு நல்ல இடத்தில் அவளை இருக்கும்படியாகப் பண்ணி அவளுடைய ஸாந்நித்யத்தால் ஜனங்களுக்கு வித்யாப் பிரகாசத்தை உண்டாக்க வேண்டுமென்று நினைத்தார். அதனால் ஆகாசத்தில் கிளம்பியவளை வனதுர்க்கா மந்திரத்தில் கட்டி மேலே போக முடியாதபடி பண்ணினார்.

"அம்மா! நான் தேச ஸஞ்சாரம் புறப்படுகிறேன். நீயும் என்னோடு வரவேண்டும். எது உத்தமமான இடம் என்று தோன்றுகிறதோ அங்கே உன்னை சாரதா பீடத்தில் ஸ்தாபனம் பண்ண ஆசைப்படுகிறேன். அங்கேயிருந்து கொண்டு நீ லோகத்துக்கெல்லாம் அநுக்ரஹம் செய்து கொண்டிருக்க வேண்டும்" என்று ஆசார்யாள் ஸரஸ்வதியைப் பிராத்தித்துக் கொண்டார்.

"அப்படியே செய்கிறேன். ஆனால் ஒன்று. நான் உன் பின்னாலேயேதான் வருவேன். நீ என்னை திரும்பிப் பார்க்கக்கூடாது. பார்த்தால் அந்த இடத்திலேயே ஸ்திரமாகக் குடிகொண்டு விடுவேன்" என்று ஸரஸ்வதி இவருக்கு ஸம்மதமாகச் சொல்லும்போதே ஒரு 'கண்டிஷ'னும் போட்டு விட்டாள். அதற்கு ஆசார்யாளும் ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று.

ஆசார்யாள் புறப்பட்டார். பின்னால் ஸரஸ்வதி தேவியும் தொடர்ந்து சென்றாள். அவளுடைய பாதச் சிலம்பு "ஜல், ஜல்" என்று சப்தமிடுமாதலால் அவள் பின்தொடர்கிறாள் என்று ஆசார்யாளுக்குத்

தெரியும். அவர் திரும்பிப் பார்க்க வேண்டிய அவசியமேயில்லாதிருந்தது.

ஞானக்கண் படைத்த ஆசார்யாளுக்கு எதுவும் தன்னால் தெரியாமல் போகாது. ஆனால் மநுஷ்யர் மாதிரி அவதாரம் செய்தால் இப்படியெல்லாம் கொஞ்சம் செய்வதுண்டு.

இப்படியே ஆசார்யாள் ஸஞ்சாரம் பண்ணிக் கொண்டு வரும்போது துங்கபத்ரைக் கரையில் சிருங்ககிரி (சிருங்கேரி) என்ற இடத்தில் பூர்ணகர்ப்பிணியாக இருந்த ஒரு தவளைக்கு மேலே வெயில் படாமல் ஒரு பாம்பு குடை பிடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். பாம்புக்குத் தவளை நமக்கு சர்க்கரைப் பொங்கல் மாதிரி; பார்த்த மாத்திரத்தில் பாய்ந்து பிடித்துத் தின்றுவிடும். இங்கேயோ ஒரு பாம்பே தவளைக்கு குடை பிடித்தது! பகையே இல்லாமல் இத்தனை அன்பு நிறைந்திருக்கிற உத்தமமான இடத்திலேயே ஸரஸ்வதியைப் பிரதிஷ்டை பண்ணிவிடலாமா என்று நினைத்தபடி ஆசார்யாள் நடந்து கொண்டிருந்தார்.

அப்போது சட்டென்று "ஜல்,ஜல்" சப்தமும் நின்றுவிட்டது. ஸரஸ்வதி ஏன் வரவில்லை? என்ன ஆனாள்? என்று திரும்பிப் பார்த்தார்.

அந்த இடத்திலேயே ஸரஸ்வதி நிலைகுத்திட்ட மாதிரிப் பிரதிஷ்டையாகி விட்டாள்.

ஓசை கேட்காதற்குக் காரணம் என்னவென்றால், அது துங்கபத்ரையின் மணல் கரை. மணலிலே பாதம் புதைந்த நிலையில் அவள் நடந்து போக வேண்டியிருந்ததால் சிலம்போசை கேட்கவில்லை.

"இதுவும் நல்லதுதான். நாம் நினைத்ததும் ஸரஸ்வதியின் நிபந்தனையும் ஒன்றாக ஆகிவிட்டன" என்று ஆசார்யாள் ஸந்தோஷப்பட்டுக் கொண்டு அங்கே சாரதா பீடத்தை அமைத்தார்.

"உன் முதுகுக்குப் பின்னால் உன்னைத் தொடர்ந்து வருவேன்" என்று ஸரஸ்வதி சொன்னதற்கு பொருத்தமாகவேதான் இங்கே [ராமேச்வர சங்கர மண்டபத்தில்] ஆசார்யாளுக்குப் பின்னால் ஸரஸ்வதியின் சிலை பிரதிஷ்டையாயிருக்கிறது.

ஒரு புஸ்தகம் எழுதினால் அதில் முதலில் குரு வந்தனம், அப்புறம்தான் பிள்ளையார் ஸ்துதிகூட, மூன்றாவதாகவே ஸரஸ்வதி ஸ்துதி என்று க்ரமம் இருப்பதைப் பார்த்தாலும் ஸரஸ்வதிக்கு முன்னால் ஆசார்யாள் இருப்பது பொருத்தமே.

"அது ஸரி, அப்படியானால் எல்லாவற்றுக்கும் கடைசியில் மங்களம் என்று முடிக்கிற ஸமயத்தில் ஸ்தோத்திரம் செய்யப்பட வேண்டிய ஆஞ்ஜநேய ஸ்வாமி இங்கே வாசலிலேயே ஆசார்யாளுக்கும் முந்தி எடுத்த எடுப்பிலே இருக்கிறாரே! இது எப்படி பொருந்தும்?" என்று தோன்றலாம்.**

அந்த ஆஞ்ஜநேய ஸ்வாமி தாமாகவே முதலில் வந்து விட்டவர். புதிதாக இங்குள்ள மற்ற மூர்த்திகளைச் செய்தது போல அவரைச் செய்யவில்லை. இந்த இடத்தில் அவர் ஆதியிலிருந்தே இருக்கிறவர். அவர் இருந்த இடத்திற்குத்தான் இப்போது ஆசார்யாளும் வந்து சேர்ந்திருக்கிறார்.

ஆஞ்சநேயரிடம் ஆசார்யாள் வந்து சேர்ந்ததில் ஒரு பொருத்தம் தெரிகிறது.

ஸ்ரீ ருத்ரத்தை கனம் என்ற கிரமத்தில் சொல்கிறபோது நம் ஆசார்யாளின் நாமமான "சங்கர" என்பது பதின்மூன்று முறை வருகிறது. பதின்மூன்று unlucky [துரதிருஷ்ட] நம்பர் என்பது நம் சாஸ்திரப்படி தப்பு. நல்லதையெல்லாம் செய்கிறவர் என்று பொருள்படுகிற 'சங்கர' நாமம் பதின் மூன்று முறை வருவதும் இதற்கு ஒரு சான்று.

ருத்ராம்சம் தான் ஆஞ்சநேயர். அவர் எப்போது பார்த்தாலும் பதின்மூன்று அக்ஷரம் கொண்ட "ஸ்ரீ ராம் ஜய ராம் ஜய ஜய ராம்" என்ற மந்திரத்தையே ஜபித்துக் கொண்டிருப்பவர். பதின்மூன்று நல்லது என்பதால் 'தேரா அக்ஷர்' என்று வடநாட்டில் இதை விசேஷித்துச் சொல்கிறார்கள். இந்த திரியோதசாக்ஷரியையேதான் ஹநுமார் ஸமர்த்த ராமதாஸராக அவதரித்த போதும் ஸதா ஸர்வ

காலமும் ஜபம் பண்ணிக் கொண்டு, அதன் சக்தியாலேயே சிவாஜியைக் கண்டு ஹிந்து ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கச் செய்தார்.

ருத்ர கன பாடத்தில் பதின்மூன்று தரம் சொல்லப்படும் (பரமேச்வராதாரமான) சங்கரர், ருத்ராம்சமாக வந்து பதின்மூன்று அக்ஷரத்தையே சொல்லிக் கொண்டிருக்கிற ஆஞ்ஜநேயரிடம் வந்து சேர்ந்திருப்பது பொருத்தம்தானே?

அந்த ஆஞ்சநேயரை இங்கே பின்னுக்குத் தள்ளிவிடக் கூடாது என்றுதான் முன்னாடியே வைத்திருக்கிறது.

அவர் எப்படியிருக்கிறார்? ஒரு கையை மேலே தூக்கி விரித்து கொண்டிருக்கிறார். இது அபயஹஸ்தமாக இருப்பதோடு மட்டுமில்லை. 'நில்' என்று கையை உயர்த்தி ஆக்ஞையிடுகிற மாதிரியும் இருக்கிறது. எதிரே பெரிய ஸமுத்ரம் இருக்கிறதல்லவா? அது இந்த ராமேச்வர க்ஷேத்ரத்தில் அலையைக் குறைத்துக் கொண்டு குளம் மாதிரி அடங்கியிருப்பதற்கு என்ன காரணம்? அந்த ஸமுத்ரத்துக்குத்தான் 'மேலே வராதே, நில்!' என்று கையை தூக்கி ஆஞ்சநேய ஸ்வாமி உத்தரவு போடுகிறார். அதற்கு ஸமுத்ர ராஜாவும் ஆயிரம் பதினாயிரம் வருஷமாக அடங்கி வந்திருக்கிறான்.

அதனால் அவர் நேரே ஸமுத்ரத்தைப் பார்த்துக் கொண்டு – அவருக்கும் ஸமுத்ரத்துக்கும் குறுக்கே வேறு எந்த மூர்த்தியும் வராமல், இப்படி வாசலிலேயே இருப்பது தான் நமக்கு க்ஷேமம். எல்லாவற்றுக்கும் முடிவிலே வருகிறவர் எல்லாவற்றுக்கும் முன் வரவேண்டிய ஆசார்யாளுக்கும் முன்னே வரலாமா என்பதற்கு நியாயம் சொல்கிறேன்.

ஸரஸ்வதி, "உனக்குப் பின்னால் நான் இருப்பேன்" என்று சொன்னதால் அவள் வாக்கை மதிப்பதுதான் அவளுக்குப் ப்ரீதி என்று இங்கே அவளை ஆசார்யாளுக்கு பின்னால் வைத்திருக்கிறதோ இல்லையோ?

இதே மாதிரி ஆசார்யாள், "எனக்கு முன்னால் நீ எப்போதும் பிரகாசித்துக் கொண்டிரு, அப்பா" என்று ஆஞ்சநேய ஸ்வாமியை வேண்டிக்கொண்டிருக்கிறார்.

"ஹநுமத் பஞ்சரத்னம்" என்று ஆசார்யாள் ஆஞ்சநேயர் மீது ஐந்து ச்லோகங்கள் கொண்ட ஒரு அத்புதமான ஸ்துதி செய்திருக்கிறார். ஸ்தோத்திரிக்கப்பட்டவர் ருத்ராம்சம்! ஸ்தோத்திரிப்பவர் சிவ அவதாரம். ஒரே வஸ்துதான்! இப்படியிருந்தும் இரண்டு பேரும் விநயத்துக்கு வடிவமாக இருந்தவர்கள். மஹாசக்திமான்களாக இருந்தும், மஹாபுத்திமான்களாக இருந்தும் எப்போதும் அடக்கமாக இருந்த இருவர் இவர்கள். இவர்களில் ஆஞ்சநேயரை ஆசார்யாள் விநயத்தோடு வேண்டிக்கொண்டு ஸ்தோத்திரம் செய்கிறார். அதில் ஒரு ச்லோகத்தில் "புரதோ மம பாது ஹநுமதோ மூர்த்தி" என்று வருகிறது.

மம–எனக்கு; புரதோ – முன்னால்; ஹநுமதோ மூர்த்தி:– ஆஞ்சநேய ஸ்வாமியின் உருவம்; பாது– பிரகாசிக்கட்டும்!

தனக்கு முன் ஆஞ்சநேயர் ஜொலித்துக் கொணடிருக்க வேண்டும் என்று ஆசார்யாளே வேண்டிக் கொண்டிருப்பதால், அவருக்கு முன் ஸ்தானத்தில் இங்கே ஆஞ்சநேயர் இருப்பதுதான் பொருத்தம். அதுதான் அவருக்குப் ப்ரீதி.

ஆரம்பமும் முடிவும் ஒன்றுதான்; ஆதியும் அந்தமும் ஒன்றுதான்; நாம் தேடிக்கொண்டே போகிற பரம்பொருள் கடைசியில் எல்லாத் தேட்டகத்துக்கும் முதல் நினைப்பாக இருக்கிற 'நான்' என்பதாகத்தான் முடிகிறது. இதுதான் அத்வைதம். ஆகையால் கடைசியில் வரவேண்டிய ஆஞ்சநேய ஸ்வாமி இங்கே முதலில் வரும் குருவுக்கும் முன்னால் வருவதே அத்வைதத்துக்கு விளக்கமாகத்தான் இருக்கிறது. 'தாஸோஹம்' (அடிமையாக இருக்கிறேன்) என்று ஸ்ரீராமசந்திரமூர்த்தியிடம் தாஸனாக இருந்தே, 'ஸோஹம்' என்கிற (பரமாத்மாவே நான் என்று உணருகிற) அத்வைத பாவத்தை அடைந்தவர் ஆஞ்சநேயர் என்று சொல்வதுண்டு. இதனால் அவரே முதலுக்கு முதலாகவும் முடிவுக்கு முடிவாகவும் இருப்பவர்தான்.

ஆஞ்சநேய ஸ்வாமியின் தூக்கிய கைக்குக் கட்டுப்பட்டு ஸமுத்ரம் அடங்கி நிற்கிறது. நாம் ஸம்ஸார ஸமுத்ரத்தில் தவிக்கிறவர்கள். நம் மனஸ் அலையடங்காமல் ஓயாமல் அடித்துக் கொண்டேயிருக்கிறது. ஆஞ்சநேய ஸ்வாமிதான் மனோஜயம் பண்ணினவர்; இந்திரியங்களை ஜயித்தவர். "ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்டம்" என்று சொல்லியிருக்கிறது. தூக்கிய கையோடு அவர் நிற்பதை தரிசனமும், தியானமும் பண்ணினோமானால் அவர் நமக்கு அபயம் தருவதோடு இந்த ஸம்ஸார ஸமுத்ரத்தை, மனஸின் அலை கொந்தளிப்பை அடக்கி ஸௌக்யமும் சாந்தியும் தருவார்.

சுபம்

* ராமேச்வரம் அக்னி தீர்த்தக் கரையில் ஸ்ரீ மஹாபெரியவர்கள் 1963-ல் நிர்மாணித்த ஸ்ரீ சங்கர மண்டபம்.

** ஸ்ரீ ராமேச்வர சங்கர மண்டபத்தில் நுழைவாயிலிலேயே ஆஞ்சநேய மூர்த்தி விளங்குகிறார்.